தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண் 74

நலங்கு மெட்டு இராமாயணம்

C

தமிழ்நாடு அரசு
1992

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண்: 74

நலங்கு மெட்டு இராமாயணம்

பதிப்பாசிரியர்:
டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்,
எம். ஏ.(தமிழ்), எம்.ஏ.(ஆங்), பி. எட், டிப். வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சேப்பாக்கம்,
சென்னை - 5.

பொதுப் பதிப்பாசிரியர்:
நடன. காசிநாதன், எம். ஏ.,
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை - 113.

©

தமிழ்நாடு அரசு
1992

விலை ரூ 30/-

TAMIL NADU GOVERNMENT ORIENTAL
MANUSCRIPTS SERIES NO. 74

NALANGU METTU RAMAYANAM

Edited by
Dr. S. SOUNDARAPANDIAN,
M.A.,(Tamil), M.A.(Eng.), B.Ed., Dip. Skt., Ph.D.,
Curator,
Government Oriental Manuscripts Library,
Chepauk,
Madras-5.

General Editor:
Natana. Kasinathan, M.A.,
Director,
Department of Archaeology,
Madras-113.

C

GOVERNMENT OF TAMIL NADU
1992

PRICE: Rs. 306/-

GENERAL EDITOR'S NOTE

Government Oriental Manuscripts Library, a research institute of international importance, preserves manuscripts in 13 languages enabling intensive studies in these languages namely, Tamil, Telugu, Marathi, Sanskrit, Malayalam, Urdu, Persian, Arabic, Kannada, Oriya, Pali, Sinhalese and Burmese. In addition to these rare manuscripts, the library keeps printed books in twelve languages namely, Tamil, Telugu, Kannada, Malayalam, Sanskrit, Hindi, Urdu, Arabic, Persian, Bengali, Marathi and English.

The present book **Nalangu Mettu Ramayanam** had been edited and placed before you only to proclaim the musical strength of Tamil language. The whole story of Ramayana has been sung in mellifious, melody, a musical tune called Nalangu Mettu. Such a magnificent musical treatise has been published never before.

Our heartiest thanks are due to Dr. Avvai Natarajan, M.A.,Ph.D., Secretary to the Government. Tamil Development-Culture Department and Mr. Natana Kasinathan, M.A., Director, State Department of Archaeology for their pains taken for this publications. Dr. Muthaiyan. M.Com., Ph.D., Registrar, Tamil University, Tanjore, Mr.S. Palaniappan, Assistant Registrar and Pulavar C. Elangovan, Assistant Director, Publication Department, Tamil University have helped much in printing this neat volume.

Dr.S. Soundarapandian,
M.A., M.A., B.Ed., Dip. Skt., Ph.D.,
Curator,
Government Oriental Manuscripts Library,
Chepauk.Madras-5.

முன்னுரை

நலங்குமெட்டு இராமாயணம் என்ற இந்தச் செய்யுள் நூலுக்கு ஆதாரமானது, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள தாள் சுவடி (ஆர். 6839) ஆகும்.

இந்நூலின் ஆசிரியர், கோ. கிருஷ்ணன் என்பவராவார்; இவர் உடுமலைப்பேட்டையில் வழக்கறிஞராகப் பணிபுரிந்தவர். இவருடைய பேரர் கொச்சியில் வழக்கறிஞராக இருந்த சி.எஸ். கிருஷ்ணசாமி ஐயராவார்; கிருஷ்ணசாமி அவர்களிடமிருந்தே நலங்குமெட்டு இராமாயண மூலச்சுவடி, இந்நூலகத்திற்கு 1931 இல் பெறப்பட்டது. இந்நூலின் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகவோ, 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகவோ இருக்க வேண்டும்.

நூலாசிரியருக்கு இந்த நூலை எழுதி முடிக்கப் பதின்மூன்று மாதங்கள் ஆயினவாம்! இதனை இந்நூலிலேயே (உரு: 4046) குறித்துள்ளார்.

இந்நூல், கதைப்போக்கில், கம்பராமாயணத்தைப் பின்பற்றிச் செல்கிறது.

இந் நலங்குமெட்டு இராமாயண நூலில், இராமகாதை பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் ஈறாக, முழுவதும், சீராக தொடர்பு கெடாதவாறு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, இராமாயணக் கதையை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் தமிழில் எத்தனையோ தோன்றியுள. குலசேகர ஆழ்வார், பத்துப் பாசுரங்களில் இராமாயணத்தைச் சுருங்கச் சொன்னார், பாலபாரதி, இராமசெயத் திருப்புகழ் எழுதினார்.

இராமாயணக் கதையைக் குறிப்பிட்ட மெட்டில் பாடிய தமிழ் இலக்கியங்களும் சில அச்சில் வெளிவந்துள. குசலவ வாக்கியம் எனும் நூல் உத்தரகாண்டக் கதையை 'லாவி' மெட்டில் பாடுகிறது. இதில் அடிகள், கண்ணிகளாக அமைந்துள.

தக்கை இராமாயணம் என்பது 'தக்' எனும் தாளத்திற்கு ஏற்பப் பாடப்பட்ட கம்பராமாயணமே; கி.பி. 600ஐ ஒட்டி வாழ்ந்த

திருமலை அச்சுதப்ப நல்லதமபிக் காங்கேயன் இதனைப் பாடுவித்தான். பாடிய புலவர், பத்தர் பாடி எம்பெருமான் ஆவார்.

'புல்லாணி எம்பெருமான் நலங்கு' என்றொரு நூலும், அகீக. நூலகத்தில் கூவப்யாக உள்ளது. நலங்கு வகை இலக்கியத்திற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

நலங்கு மெட்டு இராமாயணம் என்ற இந்த நூல், நலங்கு மெட்டில் பாடத்தகுந்தது; இதற்குரிய இராகம், சங்கராபரணம்.

நலங்கு மெட்டு எனிய மெட்டு, பெண்கள் பாடுவதற்கு ஏற்றது.

பெண்கள் பாடுவதற்காக இந்த மெட்டில் எழுதியதாக ஆசிரியரே (அவையடக்கம் 5) நவின்றுள்ளார்.

எனவே, பெண்கள் பாடுவதற்கு ஏற்றவகை இலக்கியமான அம்மானை போன்ற இலக்கிய வகையோடு, இந்த நலங்குமெட்டு இராமாயணமும இணைத்து ஆயப்படவேண்டும்.

நலங்கு என்பது தமிழகத்தில் இன்னும் பின்பற்றப்பட்டு வரும் ஒரு திருமணச் சடங்கு.

திருமணம் முடிந்ததும், மாப்பிள்ளை, பெண் இருவரிடையே கூச்சத்தைச் சிறிது அகற்றவும், துன்பங்கள் சூழ்ந்தாலும் வாழ்வைச் சீராக நடத்திச் செல்லவேண்டும் என்பதைக் கற்றுத்தரவும், ஒருவர் பற்றிய தீச்செய்திகளை மற்றவர் அறியுநேரிடின் கடைப் பிடிக்கவேண்டிய நிதானத்தை எடுத்துரைக்கவும், நலங்குச் சடங்கு பயன்படுகிறது எனலாம்.

"நலங்கிட வாருமையா" என்று, மணமகள், மணமகனைப் பாடி அழைப்பாள். மணமகன், மணமகள் பாதங்களில் செவ்வண்ணம் தீட்டுவான். பழங்காலத்தில், செம்பஞ்சுக்குழம்பைத் தீட்டுவார்களாம்; தற்காலத்தில் மஞ்சளையும் குங்குமத்தையும் கலந்து வண்ணம் பூசுகிறார்கள்.

'நலங்குப் பாட்டு' என்பது, நலங்கிட அழைக்கும் மணப்பெண் பாட்டாகவும், அந்த இடத்தில் குழுமியுள்ள பிற பெண்கள் பாடும் பாட்டாகவும் அமைகிறது.

வடமொழி மந்திரம் எதுவும் தலங்கின்போது உச்சரிக்கப்படுவதில்லை; இது நலங்கு தூய தமிழ் மரபின்பாற்பட்டது என்பதற்கு ஓர் அடையாளமாகலாம்.

இவ்வாறாக, மக்கள் அனுபவத்தில் இருந்து வரும் ஒரு மெட்டில், இராமாயணக் கதை முழுவதையும், பிழையில்லாது, தமிழில், பாடியுள்ளது என்பது போற்றத்தக்கதுதானே?

இந் நலங்குமெட்டு இராமாயணத்தின் கதையில் ஏதேனும் புதுமை உண்டா?

உண்டு! சீதை இலங்கையிலே பிறந்தவள் என்ற செய்தியைத் தருகிறது இந்நூல்!

"இலக்குமி, சீதையாக இலங்கையிலே பிறந்தவள்; இலங்கை அரக்கன் 'தசகண்டன்' அக்குழந்தையை எடுத்தான்; அப்போது, 'இக்குழந்தையை வளர்த்தால் இலங்கை அழியும்! என அசரீரி ஒலித்தது. அதனால், ஒரு பெட்டியில் சீதையை வைத்துக் கடலில் விட்டான் தசகண்டன். அப்பெட்டி, ஜனகன் தேசத்திற்கு வந்து, நிலத்தில் புதைந்து விட்டது. பிறகு, ஜனகனின் ஆட்கள் உழும்போது அப் பெட்டியைக் கண்டனர். ஜனகன் வந்து பெட்டியைத் திறந்து பார்த்தபோது, உள்ளே சீதை இருந்தாள்!" (நலமெழிரா 186-196).

மேலே கண்டது, இந்நூலின் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் ஆகும். மேற்கண்ட கதை இந்நூலாசிரியரின் கற்பனை அன்று; இவருக்குமுன்பே கூறப்பட்டு வந்ததே.

மேற்கண்ட சீதை கதை, வால்மீகியிலோ, கம்பனிலோ இல்லாதது என்பது அறியத்தக்கது.

கம்பராமாயணம், பாலகாண்டம், கார்முகப் படலத்தில், உழுபடைக் காலில் சீதையிருந்த பெட்டி ஜனகனுக்குக் கிட்டியதாகச் சதானந்த முனிவர் கூறுகிறார்; அவ்வளவே; முன் வந்தது போல, இலங்கையில் பிறந்ததாகக் குறிப்பு இல்லை.

இந்நூலாசிரியர், ஒவ்வொரு காண்டத்திற்கும் சமமான அளவு தொடைகளை ஒதுக்கவில்லை.

உள் தலைப்புகள் யாவும் தாள் சுவடியிலேயே இருந்தன.

தொடைச் சீர்களில் முவகைச் சீர்களே மிகுதி, எனினும், நாலசைச் சீர்களும் வந்துள. 'புறங்கள் பார்த்தாள்','பெருக்கிக்கொண்டாள்','மறித்துக்கொண்டாள்' என்பன போன்ற நாலசைச் சீர்களைக் காணமுடிகிறது.

இந் நலங்குமெட்டு இராமாயண நாவின் இலக்கியப் பண்புகளை ஆயும்போது, நீதிகளை நோடியாகச் சொல்லும் பண்பு இருப்பது புலனாகிறது. எடுத்துக்காட்டாக,

தடமறிந்து நடக்குமட்டும் தாய்தந்தை முறையுண்டு
தடம்விட்டு நடப்பாராயின் தள்ளுதற்கு நியாயமுண்டு
(நல. இரா. அயோ. 290)

என்ற இடத்தைச் சுட்டலாம்.

பாத்திரங்களின் மன நிலைகளைத் துல்லியமாகக் காட்டியுள்ளது இந்நூலின் தனிச்சிறப்பு.

அவ்வாறான பாத்திர மனநிலைகளையும், காப்பியப் பின்புலத்தையும், காப்பியப்போக்கையும் தீட்டிக்காட்டும் போது, சில இடங்களில் நூலாசிரியருக்கே உரிய தனித்தன்மையைக் காண இயலுறிறது; கண்டு துய்க்கவும் இயலுகிறது. கீழ்வரும் மூன்று சான்றுகள் இதற்கு அரணாகின்றன:

(1) இராமன், சீதை, இலக்குவன் ஆகிய
மூவரும், வனவாசத்தில், காட்டுமிருகங்களை
வேட்டையாடி உண்டதாகக் காட்டப்படுகிறது
(அயோ. 691).

(2) தன் தாய் கைகேயியைப் பரதன்,
'உள்ளும் வெளி எங்குமவன் உள்ளவினை நெண்ணும் என்னைத்
தள்ளினையே படுகுழியில் தாயாவையோ பேயாவையோ'
(அயோ. 912)

(3) இராவணன், அசோகவனத்தில், சீதையைப் பார்த்துக் கூறுகிறான்: (அயோ 912)

"என்னைக் கண்டு லச்சைக்கொண்டு இழுத்திழுத்துச் சேலையினால் உன்னுடைய ஸ்தானாதிகளை உள்ளடக்கி மறைப்பதென்ன"

பாத்திரங்களின் கூற்றுகளில் வரும் சில சொற்கள், கதைப் போக்கில் காட்டப்படும் சில பொருள்கள், உணவுகள் ஆகியவற்றில் 'காலமுரண்' காணப்படுகிறது. எளிய மாந்தரும் படித்து இன்புறுவதற்காக எழுதப்பட்டதாகையால் இப்படி வந்து போலும்.

வழக்குச் சொல்லாட்சிகள் இந்நூலில் பயிலுவதையும் இவண் குறிப்பிடலாம்.

'அடர்த்தி' என்பதற்காக, 'அடத்தி' (கிஷ்.226) என்றே எழுதப்பட்டுள்ளது.

சில விகாரமான சொல்லமைப்புகள் இருப்பதையும் சுட்ட வேண்டும்.

சென்றனர் என்பதற்குப் பதிலாகச் 'சென்றனர்கள்' என வந்துள்ளது (கிஷ். 730); சேர்ப்பிப்பேன் என்பதற்குப் பதில், 'சேர்த்துவேன்' (கிஷ். 749) என எழுதப்பட்டுள்ளது; இரண்டை என்பதற்கு பதிலாக,' இரண்டுகளை' (சுந். 677) என்று ஆளப்படுகிறது. இவ்வாறு பல காட்டலாம்.

ஆசிரியர் காலத்தில் உள்ள எளிய உவமைகளைப் பல இடங்களில் காண்கிறோம்.

"ஆனையது இருக்கையிலே அணிப்பிள்ளை அரசு செய்வது போல இருக்கும் நான் ஆட்சி செய்தல்" எனப் பரதன் ஓரிடத்தில் கூறுகிறான்.

இந்நூலில் உள்ள வடசொற்கள் குறிப்பிடத்தக்கன. ஆசிரியருடைய வடமொழி அறிவை இவை காட்டுகின்றன. இயன்ற அளவுக்கு இந்நூலில் வரும் வடமொழிச்சொற்களுக்குப் பொருள் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளது. இதற்கு உதவியவர், அகீசுநூ. வடமொழிப்புலவர் உயர்திரு எஸ்.சேஷாத்திரி அவர்கள் ஆவார்.

மிகச்சிறந்த காப்பிய நுணுக்கங்களை நாம் இந்நூலில் பெறாவிடினும், இராமாயணத் தத்துவங்கள் ஒரு சிறிதும் பழுதுபடாமல் வந்துள என்பது அறியத்தக்கது.

பொதுவாக, நலங்கு மெட்டு இலக்கியத்தைக் காப்பாற்றவும், தமிழிசை இலக்கியத்தைக் காப்பாற்றவும், இராமாயணக் கதையில் ஓர் இலக்கிய உருவைக் காக்கவுமே இப்போது இந்நூல் பதிப்பிக்கப்படுகிறது.

டாக்டர் எஸ்செளந்தரபாண்டியன்
பதிப்பாசிரியர்

நலங்கு மெட்டு இராமாயணம்

(இராகம்: சங்கராபரணம்)

நலங்கு மெட்டு

கடவுள் வணக்கம்

1. நலங்குஜக தீசனுக்கு நலங்குஜக தீகவரிக்கு
நலங்குரகு ராமனுக்கு நலங்குசீதா லட்சுமிக்கு

மகதேவன் புத்திரனே மகாசக்தி புள்ளவனே
இகபரத்தில் யாவருக்கும் இன்பந்தரும் கணபதியே

துலங்கும்நல்ல நலங்குமெட்டில் தூயராமா
யணஞ்சொல்ல
உலகிலெனக் கருளைத்தங் துதவிசெய்ய
வேண்டுமையா!

ஆதிபர சிவப்பொருளை அகிலஜக காரணமே
சோதிமய ரூபியேநான் சொல்லுமிந்த ராமன்கதை

---

2. மகதேவன் – மகாதேவன் – சிவன்

ஆதியுடன் அலங்காரமாய் அமைந்திடவே
யனுக்கிரகித்து
போதமெனக் களித்திடமெய்ப் பொருளேயருள்
புரிந்திடுவாய்—

பரசிவத்தின் ஒளிச்சக்தியாம் பார்வதியே
பணிந்தேனம்மா
அரிராமன் கதையைநலங் காகச்சொல்ல
வாக்களிப்பாய்

சேஷன்மேல் பள்ளிகொள்ளும் ஜெகதீசா
உலகைக்காக்க
ஆசைகொண்டு ராமனாக அவதரித்து லீலைசெய்த

அந்தக்கதை தனைநலங்காய் அடியேனான்
சொல்லுதற்கு
வந்தருள வேண்டுமென்று வணங்குகிறேன்
உனதுபாதம்

பாக்யந்தரும் லட்சுமியே பாரில்சீதை யாகவந்து
ஆக்கினைசெய்யும் ஸ்ரீராமர் அவருடனே
வாழ்ந்திருந்து

நடத்தியதை நலங்குமெட்டில் நாலுரைக்க
வேண்டியுன்னை
அடைக்கலமா யடைந்தேனம்மா அருள்வாக்குத்
தந்திடுவாய்!

நாராயணன் நாபிதனில் நான்முகனா யோங்கிவந்து
தாராணமாய் சிருஷ்டிதரும் தனைநடத்தும்
பிரம்மதேவா

---

7. சேஷன் - ஆதிசேடனாகிய பாம்பு

வணங்கியுன்னை அடுத்தேனையா வல்லபன்ஸ்ரீ
ராமன்கதை
குணமுடனே நலங்காகவே கூறுதற்கு அனுக்கிரகிப்பாய்

சரஸ்வதியே சத்வகுண சர்வபரிபூரணியே
அவிவந்து ராமனாக அவதரித்து வெகுவிதமாய்

லீலைசெய்த மகிமைகளை லகுநடையில் நலங்குமெட்டு
போலவேநான் சொல்லுதற்கு போதந்தந்து
வாக்களிப்பாய்

15. ஷண்முகனே யுன்னைவந்து சரணடைந்தே
னெனக்கருள்செய்
மண்ணுலகில் ரகுராமன் மகிமையுடன் லீலைசெய்த

அந்தக்கதை சந்தமுடன் எந்தன்வாக்கில் விந்தையாக
வந்திடவே சொந்தங்கொண்டு முந்திநின்று
அருள்புரிவாய்!

வாயுசுதனாகவந்து வையகத்தில் பலமிகுந்து
காயசித்தி தனையடைந்து கர்த்தன்ராமன் தூதனாகி

மூவுலகும் பிழைத்திடவே முயற்சிசெய்த மாருதியே
நாயுதந்து ராமாயண நலங்குமிக நன்றாகவே

அமையும்படி யனுக்கிரகித்து ஆதரிக்க வேண்டுமென்று
நமஸ்கரித்தே னுனதுபாதம் நயந்துவந்தே
யருள்புரிவாய்!

அவையடக்கம்

20. இராமபத்தன் கிருஷ்ணனென்று இராச்சியத்தி
லெனையுரைப்பார்
சாமளனை நம்பியுள்ள சத்பக்தன் நானுரைப்பேன்

முறைப்படியே படித்தறியேன் முன்பின்னுள்ள
நிலையறியேன்
குறித்தறியேன் லட்சணங்கள் குணமறியேன்
அணுவுந்தானே

ஜகதீசன் கதையைச்சொல்ல சித்தந்தனி
லாசையுண்டாய்
அகந்துணிந்து ஆரம்பித்தேன் ஆண்டவனால்
தூண்டுதலாய்

குற்றங்குறை மிகவிருக்கும் குணதோஷங் கண்டறியும்
சுற்றவர்க ளெந்தன்மீது கருணைகொண்டு
க்ஷமித்திடவே

சந்திகளைப் பொருந்தவுள்ள சமயங்களில்
எழுத்துப்பிழை
சிந்துமது செப்பும்பெண்கள் செம்மையாகப்
பாடுதற்கே!

---

20. சாமளன் - கிருஷ்ணன்

23. க்ஷமித்தல் - மன்னித்தல்

பாலகாண்டம்

சூரிய குலமாகிய இட்சுவாகு வம்சம்

1. கங்கைமுதல் நதிகள்பாயும் கடல்சூழும் உலகதனில்
மங்களஞ்சே ரயோத்தியெனும் மகிமையுள்ள
நகரந்தனை

இராஜதானி யாகச்செய்து இரவிகுலத்தோ ரிவ்வுலகை
நேசமுடன் பரிபாலத்த நேர்மையைநான் என்ன
சொல்வேன்

இட்சுவாகு வம்சமது எங்குமிகப் புகழுள தது
பட்சங்கொண்டு யாவருக்கும் பரமசுகம் தருவதுவாம்

வருணாசிரம முறைகளெல்லாம் வழுவின்றி வழங்கிவர
தருமங்களைக் காத்துவந்தார் தரணியிலே
ரவிகுலத்தார்

5. பொன்னகரும் உவமைசொல்ல பொருந்தாதே
அயோத்திக்குத்தான்
என்னசொல்வேன் அந்நகர்க்கு இணையில்லை
எங்குமம்மா!

செந்திருவா ழந்நகரில் ஜெகமெங்கும் கொண்டாட
சுந்தரன்றான் தசரதன்றான் சுகமாக இருந்துகொண்டு

---

2. இரவிகுலம் - சூரியகுலம்

4. தரணி - உலகு

6. ஜெகம் - உலகு

சத்தியசீ லமுந்தையும் தவந்தானங் களிற்சிறந்து
எத்திசைமன் னரும்வணங்க ஏகசக்ரா திபதியாய்

விக்கிரமத்தோ டிந்திரனுக்கு வெகுகஷ்டங்
களையொழித்த
உக்கிரமிகும் பலமுடையோன் ஓதுதெய்வ
பக்தியுள்ளோன்

கோசலைகைக் கேசிசுமத் திரையென்னுங் குணமிகுந்த
தோஷமிலாப் பெண்களிவர் தொல்லுலகில் உத்தமிகள்

10. மூவர்களாம் அவர்களேயாம் முறையாகப்
பத்னிகளாய்
அவர்களுடன் வாழ்ந்துகொண்டு அறுபதினா
யிரவருஷம்

தசரதன் புத்திரரில்லாக் குறை கூறல்

உலகாண்டுங் கதியளிக்க உத்தமராம் புத்ரரின்றிப்
பலவாறு கவலைகொண்டு வசிஷ்டமுனி பதம்பணிந்து

குலகுருவே மகரிஷியே குறையனைக்கு உள்ளதெல்லாம்
நிலைபெறவே கதியைத்தரும் மக்களில்லா
நெடுந்துயரம்

வருத்துகின்றன குறையொன்றே வளருதையா அதுநீங்க
திருத்தமுடன் வகையனைக்குத் தெரிந்துசொல்வீ
ரென்று கேட்டான்

கேட்டவுடன் தவமுனிவன் ஞானதிருஷ்டி கொண்டறிய
நாட்டமுட னிருக்கையிலே நடந்ததெல்லாம்
சொல்கேனிங்கு

11. பரத்வாதம்

தேவரெல்லாம் மகமேரு கிரிதனிலே திரண்டுவந்து
பாவிகளாம் அரக்கர்பயம் பரிகரிக்க வேண்டுமென்று

பாலாழி நடுவிலென்றும் பணியணைமேற்
பள்ளிகொள்ளும்
மேலான மாதவனை மிகவுமெண்ணி முறையிடுவார்

மாயவனே கேசவனே மகிமையுள்ள ஆனிடவனே
தீயவனாம் ராவணன்செய் தீமைகளை
யென்னசொல்வோம்

இந்திரனைச் சிறையிலிட்டான் எம்முலகைக்
கொள்ளையிட்டான்
எந்தயேவல் செய்யவுமே ஏவுகிறான் எங்களையும்

சூரியனை லங்கைவிட்டுத் துரத்தியோடத்
துரத்திவிட்டான்
பாரில்மக ரிஷிகள்தவம் பலியாமல் அழித்துவிட்டான்

புஷ்பகத்தைக் குபேரனிடம் போர்புரிந்து பறித்துக்
கொண்டார்
அஷ்டதிக்கும் கொடுங்கோல் அதிகாரஞ்
செலுத்துகிறான்

அழியாத வரங்கள்பெற்ற அகந்தையினால்
அரக்கர்செய்யும்
ஒழியாத கொடுமைகளை ஒழித்தருள் வேண்டுமையா!

அநிலே வருணமுகுந் தாவெனவே யணியணியாய்ச்
சிர சிந்தை கூப்பிநின்று சிரமங்களெல்லாம்
முறையிட்டே

---

15. பரிகரித்தல் - தவிர்த்தல்

ஜெயவீர கருடன்மீது திருமகனோ டே
பயமொழிவீ ரரக்கரைநாம் பரிகரிப்போம்
பாரில்வந்து

தசரதற்குப் புத்ரராவோம் தரணிதனை யாதரிப்போம்
புசபலத்தா லெவ்வுலகும் புகழும்படி லீலைசெய்வோம்

25. என்றுசொல்லி அபயந்தந்து எம்பெருமா னானஅரி
நின்றவிடந் தனில்மறைந்தான் நேராக பிரம்மதேவன்

வானவரைப் பார்த்துசிரி சொல்வான் வனசரராய்
உமதும்சங்கள்
தானவரை வெல்லுதற்குத் தரணிதனிற் கர்த்தனுக்கு

உதவிசெய்ய உதிக்கச்செய்து உலகுதனி லிருக்கச்
செய்வீர்
விதம்விதமாய்ப் பழங்களுடன் வெகுபேரை
யென்றுரைக்க

அந்தவிதந் தேவர்செய்தார் அவைகளெல்லாம்
வசிஷ்டரிவி
சிந்தையிலே யறிந்துகொண்டு செப்புகிறார்
அரசனிடம்

பூபதியே தசரதரே புனிதருமைப் போலுமுண்டோ?
ஸ்ரீபதியே யுமதுகுலத் திருமகனா யவதரிக்க

30. போகின்றா ராதலினால் புண்ணியரே அச்வமேத
யாகந்தனைச் செய்யுமென்றார் யக்ஞமதைச்
செய்திடவே

---

24. புசபலம் - தோள் வலிமை

அரசன்மிக ஆசைகொண்டு அனைவருடன்
ஆலோசித்துச்
சிறப்பாக நடத்துதற்குச் செய்தானாக்ஞை அதன்பிறகு

புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்யச் சுமந்தரர் தூண்டுதல்

அமாத்தியராம் சுமந்தரர்வந்து அரசருக்கு
ரகசியமாய்ச்
சமாசார மொன்றுரைத்தார் சந்தோஷ முண்டாகவே

கிருதயுகத்தில் சுவர்க்கந்தனில் கேட்டேனையா
சனத்குமாரர்
அருமைமக்கள் நான்குபெயர் அரசருமக் குண்டாகவே

புத்திரகா மேஷ்டியாகம் பொறுப்புடனே ரிஷ்யசிங்கர்
உத்தமராம் ரிஷியைக்கொண்டு உசிதமாக
நடத்துவீரென்று

35. அவருரைத்தா ரதன்படியே அனுகூல காலமிது
சவரணையா யாகஞ்செய்து சத்புத்ரரை
யடையுமென்றார்

அந்தச்சேதி கேட்டரசன் ஆனந்தக் கடல்படிந்து
மந்திரியை ஸ்துதித்துவர்க்கு மரியாதை மிகவுஞ்செய்து

---

32. அமாத்தியர் - அமைச்சர்

34. புத்திரகாமேஷ்டி யாகம் - பிள்ளைப்பேற்றிற்காகச் செய்யப்படும் வேள்வி.

தசரதன்போய் ரிசியசிங்கரை அழைத்து வருதல்

அந்தப்படி ரிசியசிங்க அருந்தவராம் முனிவர்தம்மை
முந்தியழைத் திடவெண்ணி மோகமுடன்
பிரயாணமானார்

அந்தராஜன் கன்னிகையாம் அழகுள்ள சாந்தைதனை
முந்திரோம பரதராஜன் முறையாகத்
தனதுபெண்ணாய்

அடைந்துரிசிய சிங்கருக்கு ஆசையொடு
தாரைவார்த்துத்
திடமாகத் தம்பதிகள் திருப்தியுடன் வாழ்ந்திடவே

40. அருகில்வைத்து ஆதரிக்கும் அந்தரோம பரதனிடம்
வருகின்ற தசரதரை வழிகொண்டு ரோமபாதன்

தேடிவந்து உபசரித்துத் தேகமிகப் புளகங்கொண்டு
கூடிவந்து கிருகமடைந்து கோலாகல மிகவுஞ்செய்தான்

தசரதரை மகளுமவள் மணவாளனும் வந்துகண்டு
இசைவாக மரியாதைகள் எல்லாஞ்செய்தா ரதன்பிறகு

வந்தசோரி யறிந்துராஜன் வாஞ்சையுடன் மருமகனைச்
சிந்தைமகிழ்ந் தனுப்பித்தரச் சித்தங்கொண்டு
மகளுடனே

அனுப்பித்தந்தான் அழைத்துக்கொண்டு அகமகிழ்ந்து
தசரதனும்
தனதுநகர் வந்தடைந்து தருமவிதிப் படியச்வ

தசரதன் அச்வமேத யாகஞ் செய்தல்

மேதயாகம் செயத்தொடங்கி மேதினியைச் சுற்றிவர
நீதமுடன் அச்வந்தன்னை நேராக அவிழ்ந்துவிட்டான்

வருஷமொன்று சுற்றியச்வம் வந்துசேர அதன்பிறகு
கருமயோக மாகும்யாகக் காரியங்கள்
தொடங்கிச்செய்து

அநேகவிதத் தானஞ்செய்து அவபிர்தஸ ...
மனோச்சாக மிசுவடைந்து மறுநாளே தசரதன் தான்

புத்திரகாமேஷ்டி யாகம்

யோகமிகும் ரிசியசிங்க யோகிபுத்திர காமேஷ்டி
யாகமதைச் செய்திடவே யத்தனங்கள் செய்தனனே

சுருதிவிதிப் படியனைத்தும் சுத்தமுடன் அமைத்துக்குல
குருவாகும் வசிஷ்டருடன் கூடிப்பல ரிஷிசுனுமாய்

இருந்துகொண்டு ரிசியசிங்க மகரிஷியா லியற்றியாக
தருமமெல்லாம் நடக்கையிலே தகுதகவென்
றோர்பாத்திரம்

யாககுண்டந் தனிலிருந்து யாருங்கான வெள்ளிப்படவே
மோகமுடன் தசரதன்றான் முன்னின்று வாங்கிக்
கொள்டான்

அந்தவொரு பாத்திரத்தில் அமிர்தம்போன்ற
பாயஸந்தான்
விந்தையாக யிருந்துதம்மா வெகுருசியா யுள்ளதம்மா

---

45. அச்வம் - குதிரை

47. மனோச்சாகம் - மன மகிழ்ச்சி

யாகபலன் பாயசமா யடைந்ததனை யெடுத்திரண்டு
பாகஞ்செய் தோர்பங்கை பட்டஸ்திரி கௌசலைக்கும்

மற்றொன்றைக் கைகேசிக்கும் மகிழ்வுடனே
அரசன்தரச்
சுத்தமுடன் கொண்டவர்கள் சுமுத்திரைக்கு
அன்புடனே

55. தமதுபங்கை இருகூறாய்த் தானேசெய்து கொடுத்துமிக
அமைதியுடன் மூவருமாய் அருந்தியுள்ளங் களித்தனரே

தேவியர்மூ வருமுண்ண தேவானந்த மூலமாக
மூவர்திரு கர்ப்பமதில் முறையாய்நின்றான்
ஜகம்பிழைக்க

உம்பர்கள்பூ மனமொழிய உயர்முனிவர் தயரொழிய
அம்புவியோர் சுகமடைய அரக்கரெல்லாந் திகிலடைய

பத்தினிகள் கர்ப்பிணிக ளாயிருந்தே பார்புகழ
உத்தமராம் புத்திரரை உசிதமாகப் பெற்றெடுத்தார்

சித்திரையில் புனர்பூசம் சேர்நவமி கூடியதாம்
சுத்தமுள்ள தினந்தனிலே சூழ்ந்துவருங் கிரகங்களிலே

60. சூரியன்குரு சனிசெவ்வாய் சுக்கிரனும் உச்சந்தனை
ஏறிநிற்க சுவட்சேத்திரத்தில் இருக்கச்சந்த்ரன்
புதன்மேஷத்தில்

தினகரனோ டிருக்கும்நல்ல தினந்தனிலே கடகலக்னம்
அனுகூலமா யுதித்துவர அந்தவேளை யரியுதித்தார்

---

57. உம்பர் - தேவர்

சுவாமி அவதாரம்

நான்குபுத்ர ராயுதித்து நவரத்னம் போல்விளங்கும்
மேன்மையுள்ள குழந்தைகளின் மேனிகளை யென்ன
சொல்வேன்

பலீகிர்த ஓமஞ்செய்து பலவிதமாய்த் தானஞ்செய்து
குலாசாரப் படியனைத்தும் குறித்துச்செய்தான்
ராஜனப்போ

நாமகரணஞ் செயுந்தினத்தில் நான்குதிக்கு
களிலுமுள்ளோர்
நேம்முடன் வந்துசேர நேர்மையுடன் ஓலைவிட்டார்

65. தேச(மன்னர்) அறிந்துமகித் தேட்டங்கொண்டு
யாவருமே
ஆசையுடன் ஓடிவந்தார் அரசன்மைந்தர் களைப்பார்க்க

கண்டெல்லோரும் களிப்படைந்தார் கடவுளரே
யுதித்தா ரென்றார்
எண்டிசையோர் பலமடைந்தார் எல்லோருஞ்
சுகமடைந்தார்

வசிஷ்டரந்தக் குழந்தைகட்கு வரிசையாகப் பேர்களிட
உசிதமாக ஆலோசித்து உள்ளமதில் நிச்சயித்தார்

நாமகரணஞ் செய்துவைத்தார் நான்குபிள்ளை
களுக்குந்தானே
ராமலட்சு மணன்பரதன் சோமனொக்கும்
சத்துருக்கன்

---

63. பலீகிர்த ஓமம் - குழந்தை பிறந்தவுடன், தீய கிரகங்கள் நீங்குவதற்காகச் செய்யப்படும் ஓமம்.

64. நாமகரணம் - பெயர் சூட்டல்

இந்தவிதம் பெயர்களிட்டார் எவருமொப்பத்
தவமுனிவர்
சுந்தரராம் குழந்தைநான்கும் சுகமுடனே வளர்ந்து
வந்தார்

மணிகளைப்போல் விளங்குமக்கள் மன்மதனைத்
தோற்கடிக்கும்
குணமுடைய மேனியுடன் குலாவிக்கொண்டு
விளையாடி

வருவதைக்கண் குளிரக்கண்டு வாஞ்சையுடன்
முத்தமிட்டு
இருகணிலும் ஏற்றிக்கொண்டு இன்பங்கொள்வர்
பெற்றவர்கள்

குழந்தைகளின் புத்திகளைக் குறித்துச்சொல்லத்
தானாமோ?
அழகையுந்தான் அறிந்துசொல்ல ஆராலு
மாய்விடுமோ?

வயதைந்தில் அருங்கல்வி வைதிகமா யப்பசித்து
நயமாகக் கற்பிவித்தார் நானாவித வித்தைகளும்

கல்வியிலே முயன்றுமக்கள் கலைஞான முடிபறிந்து
வெல்லரிய நிபுணர்களாய் விளங்கினார்கள்
அவர்களுக்கு

சாஸ்த்ரப்படி உபநயனம் சரியாகச் செய்துவைத்து
வாஸ்தவமா யுள்ளவேத வழிகளையும் பழக்கிவைத்தார்

ஆனைபரி யேற்றங்களும் ஆயுதவில் வித்தைமுதல்
சேனைமன்னர் தொழில்களிலும் சிறப்படைந்தார்
நால்வர்களும்

---

71 வாஞ்சை - அன்பு

அண்ணன்தம்பி யெனுமுறையின் அன்புகூர்க
ளிடத்திலன்றி
எண்ணவுண்டோ உலகிலெங்கும் இல்லையவ்வா
றைக்கி யமத்யம்.

ஸ்ரீராமன் தம்பிகள்மேல் சினேகங்கொண்டு
நடக்குமொரு
பிரேமையைத்தா னெவ்வுலெல்ல பிரபஞ்சத்தனி
லரிதாகுமே

கனிஷ்டராக உள்ளவர்கள் கால்தொழுது
தமயன்மாரை
மனமுவந்து பக்திசெய்யும் மரியாதை யென்னசொல்ல

80. அந்தநான்கு பேர்களுந்தான் அவரவர்கள்
சுகத்தையெண்ணார்
முந்திபிராதாக் களின்சுகத்தை மோசமுடன் தேடிச்
செய்வார்

அறிவுமவர் அமரிக்கையும் அன்பையுமே
யெண்ணியெண்ணி
குறித்துச்சொல்வோ ரெவர்களுமே குற்றமற்றோ
ரெனப்புகழ்ந்து

மலைகளைப்போல் தோள்வளர்ந்து மட்டில்லாப்
பலமிருந்து
உலகில்நிக ரொருவரின்றி உத்தமர்கள் திருக்கையிலே

---

80. பிராதாக்கள் - உடன்பிறந்தோர்.

81. அமரிக்கை - அமைதி

விசுவாமித்ரர் வந்து இராமலட்சுமணரை யழைத்துப் போதல்

தவமுனியாம் விசுவாமித்ரர் தசரதனார் சபைக்குவர
அவரையுப சரித்தழைத்தே அர்க்யாதிகள் கொடுத்து
மன்னன்

ஆசனத்தி லிருத்தியையா அருந்தவரே வந்தகாரியம்
நேரமுடன் பேசுமையா நிச்சயமா யதன்படியே

85. செய்திடுவேன் பிசகேனையா செப்புமென்று
கேட்டவுடன்
தைரியமாகச் சொல்லுகிறார் தவமுனியும்
பிரியங்கொண்டு

இராவணனா லேவப்பட்டு இராட்சதராம் மாரீசன்
பாவிசுபா.வுங்கூடிப் பாதகிதா டகியுடனே

வந்தெந்தன் யாகமது வழங்காம லழிக்கின்றான்
அந்தப்பாவி கணையொழிக்க ஆகுமென்னா னானா
லுமே

யாகஞ்செய்யும் வேளையிலே யார்க்குஞ்சாபம்
தரலாகாது
ஆகையினா லுனதுமகன் ஆனராமன் வந்தவரை

வென்றெந்தன் வேள்விதனை விமரிசையாய்
நடக்கச்செய்வான்
நன்றடைவான் என்றுமிக நற்கீர்த்தி
தனைப்பெறுவான்

90. இராமனின்றி எவராலும் இராட்சதரை
வெல்லப்போகா
சாமளனாம் ராமன்சக்தி சாதுக்களா லறிந்து
கொள்வீர்

ஆகையினா லவனையென்னோ டனுப்புதற்குத்
திடப்படுவீர்
சோகங்கொண்டு சொல்மறந்தால் சுத்தங்கெடுங்
கண்டுசெய்வீர்

என்றுமுனி சொன்னதைக்கேட் டேக்கங்கொண்டு
ராஜனப்போ
ஒன்றுந்தோன்றா திருந்துமி கவுள்ளமெலிந்
துரைக்கின்றான்

தாயைவிட்டுப் பிரிந்தறியாத் தனையனையா ஸ்ரீராமன்
ஆயுதங்கை பிடிக்கவின்னும் அறியாத குழந்தையையா

நரரூனைத் தேடியுண்ணும் நஞ்சக்கொப்பாம் அரக்கர்
முன்னே
திருமகனை யனுப்பமனம் திடமில்லை
யென்னசெய்வேன்?

95. நான்வருவேன் ராட்சதரை நாசஞ்செய்வேன்
யோசனையும்
ஏனுமக்கு வேண்டாமையா எழுந்திருமென்
றரசன்சொன்னான்

அந்தமொழி கேட்டவுடன் அருந்தவத்தோன்
கண்சிவப்ப
வந்தபெருங் கோபங்கண்டே வசிஷ்டமுனி
சொல்லுகிறார்

மன்னவரே ராமனுக்கு மகயோகக் காலமிது
பின்னமில்லை கௌசிகர்பின் பிரியமுட னனுப்பு
மென்றார்

குருமொழியைக் குனமாகவே கொண்டரசன்
கௌசிகர்பின்
அருமைமகன் ஸ்ரீராமனை அனுஜன்லட்சு மணனுடனே

அனுப்பித்தர மனந்துணிந்தான் அருகழைத்து
மக்களுக்குத்
தனுசுமுத லனைத்துந்தந்து தழுவிக்கட்டி முத்தமிட்டு

100. முனிவருடனேயனுப்புதற்கு மோகமுள்ள மக்களிட
மனவுறுதி தனையுங்கண்டு மகிழ்ந்துமிக
அரசனைப்பால்

பத்னிகளின் சம்மதமும் பாங்காகப் பெற்றுக்கொண்டு
சத்புத்ரர்க்கு இதங்கள் சொல்லிச் சந்தோஷமா
யனுப்பித்தந்தான்

மக்களிரு வோருடனே மகரிஷியும் மகிழ்ந்தேகி
இக்கரையை வந்தடைந்தார் இன்பமுடன் சரயூந்தி

அக்கரையில் மக்களுக்கு அருமையுள்ள மந்திரமாம்
தக்கபடி பசிதீர்க்கும் தந்திரத்தை யுபதேசித்து

அங்கிருந்து மறுகாலை அரணியத்தில் நடந்துவந்து
கங்கைக்கரை தனையடைந்தார் கண்டவரை
மகரிஷிகள்

105. அன்புடனே வந்தடுத்து அர்க்யாதிகள் தந்துமிக
இன்பமாகக் கலந்துபேசி இருக்கச்செய்தா ரான்றவரை

---

98. அனுஜன் - தம்பி
101. சத்புத்ரர் - நல்லமகன்
105. அர்க்யாதிகள் - அர்க்யம் முதலியவை - மரியாதைக்கு உரியவர்கள் வந்தவுடன், அவர்களுக்கு செய்யப்படும் பூசை முதலியவை.

அடுத்ததினம் ஓட்மேறி அக்கரைக்கு மூவரும்போய்
அடர்ந்தவன மொன்றிருக்க அதைக்கண்டு ரகுராமன்

இந்தவனம் பயங்கரமாய் இருக்குமொரு காரணத்தை
எந்தனுக்கு விளங்கச்சொல்வீர் என்றுகேட்டான்
மகரிஷியை

வனத்தின்மூலம் ஆதியொடு வகையறிய முனியுரைத்து
மனவுறுதி கொண்டிங்கே மற்றவரும் வருவதில்லை

தாடகி சுபாகு வதம் முதலியவை

தாடகியாம் ராட்சஸியின் தலைக்கொழுப்பைச்
சொல்லவுண்டோ
தேடிவந்து உபத்திரவித்துத் தின்றிடுவள் யாரையுமே

அவளிந்த வனந்தனிலே அகங்கொழுத்தே
யிருந்துகொண்டு
தவமுனிவர் சுருமங்கட்குத் தடைசெய்து வருகின்றாள்

வழியில்நம்மை மறிப்பாளவள் வல்லரக்கி
யவளைக்கொல்வாய்
இழிவுடைய அவளொழிந்தால் எல்லோருஞ்
சுகமடைவார்

என்றுரைக்கக் கேட்டுராமன் என்னசெய்வோம்
பெண்ணவளை
கொன்றிடுதல் குற்றமாமே கொல்லுவதெவ்வா
றெனப்பயந்தான்

அந்தஜாடை ரிஷியறிந்து அரக்கியின்மே விரக்கங்
கொள்ளும்
சிந்தைதனை விட்டொழிப்பாய் செப்புமெந்தன்
வாக்கைக்கேட்பாய்

கூளிகளும் காளிகளும் கொடும்பூதப் பேய்களொடு
ஆளிசிங்கம் யானைகளும் அவளைக்கண்டாவ்
பறந்திடுமே

115. எத்தனையோ பிராணிகளை இரக்கமின்றி வதைத்துத்
தின்றாள்
சத்துக்களா யுள்ளபல தபசிகளும் இரையானார்

கொழுப்பில்லா வுடலென்றென்னைக் கொல்லாமல்
விட்டிருப்பாள்
இழுக்குடைய பாதகிமேல் இரக்கமுந்தான்
கொள்ளலாமோ?

மாதர்குண மணுவுமில்லா மாபாவி தாடகியாம்
நீதிகெட்ட பாதகிக்கு நீதரும மெண்ணலாமோ?

மந்தரையாம் பெண்ணைஇந்திரன் மனதார
வதைசெய்தான்
நிந்தனையே அவனுக்கில்லை நீதியென்றே யெவருஞ்
சொல்வார்

கியாதியெனும் பெண்ணையுந்தான் கேசவனார்
வதைபுரிந்த
நியாயமதை யறிந்தவ்வாறு நீயுமிப்போ
துணிந்துசெய்வாய்

120. குருவாகும் என்வாக்கை கொஞ்சமும்நீ மிஞ்சப்போகா
தருமமெண்ணுஞ் சமயமல்ல வருந்தீங்கு கண்டு
ஆய்வாய்

கொல்லவரும் பிடாரியைநீ வெல்லுவது
நியாயமன்றோ?
சொல்லுமெந்தன் பேச்சினிடை சூட்சுமங்கண்டு
நீ நடப்பாய்

காரியகா ரணமறிந்து காரியஞ்செய்தால்
கனமடைவாய்
தேறியுன்னில் ஆலோசித்துச் செய்வாயென்றார்
விசுவாமித்திரர்

முனிவர்சொன்ன வாக்கியங்கள் முழுவதையும்
இராமன்கேட்டு
தனதறிவி வாலோசித்துத் தாடகியைக் கொல்லுவது

உசிதமென்றே நிச்சயித்தான் உள்ளமதில் அதுவுமன்றி
எசஸடைந்த விசுவாமித்திரர் எண்ணிச்சொன்ன
திருமொழிக்கு

125. எதிர்மொழியும் பேசவுண்டோ எமதுதந்தை இவர்
மொழியே
மதியென்று மதித்துச்செய்ய மனமுவந்து ஆக்ஞை
செய்தார்

பிதுருவாக்யம் பெரிதேயல்லால் பின்னடைதல்
பெருமையல்ல
அந்தரோகி தாடகியாம் அரக்கியைநாம்
அதம்செய்வோம்

என்றுமிக வுறுதிகொண்டு எடுத்துவில்லைத்
தவனிசெய்தான்
நின்றதனைக் கேட்டரக்கி நேராக ஓடிவந்தான்

அட்டகாசந் செய்துவரும் அரக்கியின்மேல்
வரக்கணைகள்
விட்டான்போய் ராட்சளியை வெஞ்சரங்கள்
துளைக்கக்கண்டான்

---

124. எசஸ் – புகழ்

126. பிதுருவாக்யம் – தந்தை சொல்

கண்டவயங் காக்கும்வெல்லாக் கடுஞ்சாகம் போற்சீறி
எண்டிசையும் நடுங்கக்கர்ச்சித் தெதிர்வந்தே
தாடகிதான்

குட்டிநரப் பூச்சிகளுக் கிவ்வளவு கொழுப்போவென்
றெட்டிமலை களைப்பிடுங்கி யெறிந்துவந்தாள்
வல்லரக்கி

மலைகளெல்லாம் பொடிபடவே மாட்டியவைப்
பூட்டிராமன்
பலவிதமாய்த் தாடகியும் பரிதவிக்க அடித்துவிட்டான்

அந்தவுடன் அரக்கிமிக ஆத்திரமா யலறிக்கொண்டு
விந்தையாயும் விகாரமாயும் விளங்குங்கோரைப்
பற்களுள்ள

பெருவாயைத் திறந்துகொண்டு பேயரக்கி தாடகிதான்
கருநீல மலைபோலக் கடுகிவந்தாள் முனிவன்கண்டு

கண்ணில்பொறி சிதறவரும் காதகியை அதட்டஅவள்
என்னிச்சற்று நின்றவளாய் எடுத்தாளொரு
மாயவித்தை

கபடமா யிருந்துகொண்டு கல்மாரி மிகப்பெய்தாள்
விபரீதந் தரும்படியாய் விமலன்ராமன் அதைத் தடுத்து

மறைந்திருக்கும் ராட்சஸியின் மாயமதை யறிந்தவனைக்
குறித்துச்சென்று பற்றும்படி கொட்டிவிட்டான்
அம்புகளை

135. விமலன் - தூயவன்

அம்புகள்போய் வம்புசெய்து அரக்கிதனை
அறுக்கையிலே
பம்மியவள் ஓடிவந்தாள் பார்த்துராமன்
கோவங்கொண்டு

கோதண்டத்தை வளைத்ததிலே குரூரபானங்
களைத்தாடுத்து
பாதகியின் கால்கைகள் பதறிவிழ அறுத்தெறிந்து

எடுத்துவிட்டான் அர்த்தசந்த்ர இதழ்களனையால்
தூடித்தரக்கி
படுத்துவிட்டாள் மடிந்துமண்ணில் பர்வதம்போ
லதன்பிறகு

140. வானவர்கள் ராமனிடம் வந்துமிகக் கொண்டாடித்
தானவரை யொழிப்பதற்குத் தாடகையைத்தற்பலியாய்

ஆக்கினதற் கங்கலித்து அநேக சஸ்தரமெல்லாம்
பாக்கியவான் ராமனுக்கும் பாகமுள்ள அனுஜனுக்கும்

அனுக்கிரகிக்க வேண்டுமென்று அன்புடைய
முனிவர்தம்மை
அனைவர்களும் வேண்டிக்கொண்டு அவ்விடம்விட்
டேகினார்கள்

அதன்பிறகு முனிவர்மிக அகங்கனிந்து முகமலர்ந்து
இதமுடனே ராமனுக்கும் இளையோனுக்கும்
அஸ்திராதிகள்

---

139. பர்வதம் - மலை

141. அஸ்தரம் - மந்திரசக்தியுடன் ஏவப்படும் ஆயுதம் முதலியவை
சஸ்தரம் - ஆயுதம்

முழுதும் நன்றாக யுபதேசித்தார் முறையாகக்
கிரகித்தமக்கள்
வழுவின்றி யறிந்துகொண்டார் வல்லபரா
மிருவர்களும்

145. அஸ்தரங்களை யடக்கியாளும் ஆந்தரியமும்
அறிந்துகொண்டார்
விஸ்தரித்து நுணுக்கங்களை வெகுவாகத்
தெரிந்துகொண்டார்

அதன்பிறகு விசுவாமித்ரர் ஆசிரமத்தை
யடைந்துயாகம்
இதமுடனே நடக்கையிலே எதிர்த்துவந்தார்
ராட்சதர்கள்

அவர்களிலே மாரீசன்மேல் அஸ்திரத்தை
ராமனெய்தான்
அவனையந்த அஸ்திரந்தான் அடித்துக்கொண்டு
சமுத்திரத்தில்

விழும்படியாகச் செய்தது வெகுகஷ்ட
மடைந்தவன்றான்
அழுதுகொண்டே ஓட்டமிட்டான் அவனிருக்கும்
லங்கை நகர்

கொடியவனாம் சுபாகுமீதும் கோதண்ட பாணிராமன்
அடித்தானொரு அஸ்திரத்தை அதினாலவன்
ஆவிவிட்டான்!

150. வந்தமற்ற அரக்கரையும் வதைசெய்தான்
ராமச்சந்தரன்
சிந்தைமகிழ் வுடன்முனிவர் செய்தார்தம் யாகமதை

---

145. ஆந்தரியம் - நுணுக்கம்

முனிகளெல்லாம் பயமொழிந்தார் முனிவிசுவா
மித்தரர்முகம்
இனிமையுட னானதன்றி இமையவர்பூ
மழைபொழிந்தார்

மகரிஷியை வணங்கிநிற்கும் மக்களிரு வரையும்பார்த்து
அகமகிழ்ந்து விசுவாமித்தரர் அன்புடனே
யனுக்கிரகித்தார்

இராம லட்சுமணாளை யழைத்துக் கொண்டு விசுவாமித்ரர் மிதிலைக்கு வருவது

மிதிலைநகர் அரசனான மேன்மையுள்ள ஜனகராஜன்
விதிப்படியோர் யாகஞ்செய்ய விரும்பியதற்
கெவரும்வர

அழைத்தபடி ரிஷிகளெல்லாம் அனுஜனுடன்
ராமனையும்
அழைத்துக்கொண்டு வரும்வழியில் அதிசயமா
யிருப்பதெல்லாம்

155. கண்டுகேட்பான் ரகுராமன் கருத்துடனே
விசுவாமித்தரர்
விண்டறிய விரித்துரைத்த விசேஷங்கள் மிகவுமுண்டு

கங்கைநதி வந்துசேர்ந்து சுதியளிக்கும் அதன்மகிமை
சங்கையற ஆதியொடு சகலமுந்தான் முனியுரைத்தார்

பிதுருக்களெல்லாங் கடைத்தேற பிரேமையுடன்
பகீரதன்றான்.
அதிககாலம் தபசிருந்து ஆகாச மார்க்கமாக

156. சங்கை - ஐயம்

157. பிரேமை - அன்பு

சுவர்க்கந்தனி லிருந்தயிந்த சுத்தகங்கை யிங்குவர
அவள்செய்த முயற்சிகளை அறிந்துசொல்ல
ஆமோவென்று

அந்தவர லாறுஞ்சொன்னார் அங்கிருந்து
மறுதினத்தில்
விந்தையுள்ள ஓடமேறி விசுவாமித்தரர் முதலானோரும்

160. அக்கரைக்கு வந்துசேர்ந்தார் அங்குள்ள
ரிஷிகளெல்லாம்
தக்கபடி யுபசரித்துத் தங்கினார்கள் (அன்பு) கொண்டு

அருகியொரு நகரிருக்க அதைக்குறித்து ரகுராமன்
விரும்பிக்கேட்டான் விநயமுடன் விசுவாமித்தரர்
அதுவுஞ்சொல்வார்

இதுவிசால நகரமேயாம் இட்சுவாகு என்றொருவன்
இதிலிருந்து அரசுசெய்தான் இப்பொழுது
அவன்குலத்தில்

அரசுசெய்யும் சுமதிமகி அறிவுடையோன் இந்நகரில்
அரக்கரன்னை திதியென்பவன் அவள்பார்த்தா
கசியபரால்

இந்த்ராதி தேவர்களை எதிர்க்குஞ்சக்தி யுள்ளபுத்திரன்
தந்திடவே வரமடைந்து தரித்திருந்தாள் கர்ப்பமதை

165. அவளுடைய சக்களத்தி அதிதிபெற்ற மக்களான
தேவர்களி லிந்திரன்வந்து தேகமதில் புகுந்தந்த

கர்ப்பமேழாய்க் கண்டஞ்செய்த கதைமுதலா
யதற்குமுன்னில்
அற்புதமாய்ப் பாலாழியில் அமிர்தமுண்டா
னதுஞ்சொன்னார்

அதன்பிறகு அந்நகர்க்கு அனைவர்களும்
வரவெதிர்கொண்
டதிகவிசுவா சத்துடனே அழைத்துப்போனான்
சுமதிராஜன்

குசலப்பிரசனா திகள்செய்தான் குணமுடைய
இருவர்களும்
தனதற்குப் புத்தரரென்று தானறிந்து மகிழ்ந்துமிக

உபசரித்தான் சுகங்கள்தந்து உண்மையுடன்
அதற்கவனை
உபசார மிகவுரைத்து உளமகிழ்ந்தார்
வந்தோரெல்லாம்

170. அங்கிருந்து மிதுலைநகர் அடைந்திடவே வருகையிலே
தங்குமொரு ஆசிரமத்தைத் தடத்தில்கண்டு
அதையும்ராமன்

அகலிகையின் சாபவிமோசனம்

விவரங்கேட்க விளங்கும்படி விசுவாமித்தரர்
விரித்துரைப்பார்
தவமுனியாம் கௌதமரின் தங்குமிட மாமிதுவே

அவர்மனைவி யாகவுள்ள அகலிகையை இந்திரன் வந்து
கவடகமாய்க் கலந்திடவே கண்டுமுனி இந்திரனை

சபித்ததன்றி அவனிடத்து சங்சுஞ்செய்த பத்னியையும்
சபித்திடவே அவள்வேண்ட சாபவிமோ
சனமுஞ்செய்தார்

168 குசலப்பிரசனம் - நலம் விசாரித்தல்

172 கவடகம் - வஞ்சனை

173. சங்கம் செய்த - புணர்ந்த

எவருமறி யாமலிங்கே இருந்துவாயு தனைப்புசித்துத்
தவஞ்செய்து வரக்கடவாய் தருமசீலன் ராமனிங்கு

வருவானப்போ சாபமது வழியோடு ஒழியுமேபார்.
வருவேனுனை யடைவேனென்று வாக்குரைத்து
இமயமலை

தன்னைநாடி அவர்போனார் தருமமதைக்
கைவிடுத்தோம்
என்னசெய்வோ மென்றேங்கி இருந்த அகலிகையாள்

தவஞ்செய்து உன்வரவில் தாகங்கொண் டிருக்கின்றாள்
அவள்மீது கருணைகொண்டு அவள்சாப மொழிப்பா
யென்றார்

ரகுபதிகேட் டங்குசெல்ல ரம்பைபோல உருவெடுத்து
சுகமுடனே யகலிகையாள் சோபிதமாய்
விளங்கிநின்றாள்

அவ(ரருகே) லட்சுமணர் அடிவணங்கி நிற்கையிலே
அவள்பார்த்து, ஸ்துதித்துமிக ஆதரவா யுபசரித்தாள்

முனிவரான கௌதமரும் முன்வந்து நின்றுமிக
மனமகிழ்ந்து அனுக்கிரகித்தார் மக்களிரு வரையும்
பார்த்து

பத்தினியை யருகழைத்து பரிசுத்த மான்வளே
சுத்தமடைந் ததினாலே சொல்லவுனைக்
குறையினிமேல்

ஏ துமில்லை யென்றுரைத்து இஷ்டமுடன்
முனிவர்களை
ஆதரித்து அர்க்யாதிகள் அவரவர்க்கு முறைப்படியே

178. சோபிதம் - அழகு

தந்துமிக வுபசரித்தார் தருதியாக அவர்களுமே
சிந்தைமகிழ் வுடன்முனியை கேமலாபம் மிகவுங்
கேட்டார்.

அதன்பிறகு அவரிடத்து அனைவர்களும் விடைபெற்று
மிதுலைநகர் தனைநோக்கி மிச்சமுள்ள வழிநடந்தார்

சீதை யவதரித்த வரலாறு

185. ஜெகத்துக்கெல்லாம் கேமந்தர ஜனகனுக்குப்
புத்திரியாய்
மகலட்சுமி வந்துதித்த வரலாறு மிங்குவைப்பேன்

இராமனுக்குப் பத்தினியாய் இரவிகுலத்தில்
வாழ்வதற்குக்
காமங்கொண்டு லட்சுமிதேவி சுமலமதில் குழந்தையாக

அவதரித்தாள் லங்கையிலே அரக்கனான தசகண்டன்
தவமிருந்து பெற்றவன்போல் தயவுடனே
யெடுத்துவந்தான்

இக்குழந்தை தனைவளர்த்தால் இலங்கைநகர்
அழியுமென்று
தக்கவொரு வாக்குண்டாக தசகண்டன் அதைக்கேட்டு

மீதிகொண்டு குழந்தையினை பெட்டியொன்றில்
வைத்ததனை
மோதும்அலை கடலிற்போட மொழிந்தபடி
செய்துவிட்டார்

183. கேமலாபம் , கேமாலாபம் - நலத்தைப்பற்றிய பேச்சு

185. கேமந்தர , கேமந்திர - நன்மைதருபவன்

186. சுமலம் - தாமரை

187. தசகண்டன் - பத்துத்தலைகளை உடையவன்

பெட்டியது மிதந்துவந்து போர்பெற்ற ஜனகன்தேசம்
ஒட்டிக்கரை தனையடைந்து உள்ளடங்கி நிலந்தனிலே

இருக்கராஜன் வேள்விசெய்ய இடமொன்று
குறித்ததிலே
கிருமிகளைப் போக்குதற்குக் கிர்த்தியஞ்செய்ய
ஆக்ஞைசெய்தான்

எல்லைகட்டி யிசைந்தநல்ல ஏருங்கட்டி யுழுகையிலே
புல்லுமுதல் சகலமும்போய்ப் பூமிதனில் பதிந்துவரும்

ஏர்முனைக்குத் தடையுண்டாக ஏதிந்தத்
தடையென்றதைப்
பார்த்திடவே பரிசோதித்தார் பளபளென்றோர்
பெட்டிகண்டார்

அந்தச்சேதி தனைவந்து அரசனுக்கு அறிக்கையிட
சிந்தை மகிழ்ந்துவுடன் சீக்கிரமா யங்குவந்து

பெட்டித்தனைக் கண்டரசன் பெருமையுட
னெடுத்ததனை
இட்டமுடன் திறந்துபார்க்க என்னசொல்வேன்
இருகண்களும்

கூசும்நல்ல தேஜசுள்ள குழந்தையிளங் கன்னிகைதான்
வாசமலர் வீசுவுள்ளே மகிழ்ந்திருக்கக் கண்டானம்மா

கண்டுபரா பரியேசெங் கமலமதில் வாழ்திருவோ
அண்டர்தொழும் அம்பாளோ? ஆரோவென்
றதிசயித்து

---

191. கிர்த்தியம் - வேள்வி

196. தேஜஸ் - ஒளி

ஞானவிழி கொண்டுமன்னன் நாடுகையில் ஜகன்மாதா
வானமக லட்சுமியே வந்தாளென் றுறுதிசெய்தான்

இருகரத்தால் கன்னிகையை எடுத்துமுத்தங் கொடுத்து
மன்னன்
பெருகுமனக் களிப்புடனே பிரியமாக
அரண்மனைக்குக்

200. கொண்டுவந்து பத்நியிடன் கொடுக்கப்பட்ட
மகிஷியவள்
கண்டுமிகக் களிப்படைந்து கண்மணியாம்
பெண்மணியை

கைவிலங்கிக் கண்ணிலொற்றிக் கண்டதில்லை
இப்படியும்
வையகத்தில் குழந்தையுண்டை வென்றுமிக வதிசயித்து

கண்ணொளியைப் பறிக்குமிந்தப் பொன்னொளியை
யென்னசொல்வேன்
மண்ணுலகில் இக்குழந்தை வந்தவிதம் தெரியச்
சொல்வீர்!

என்றுகேட்க அரசனப்போ எடுத்துவந்த
சேதியெல்லாம்
ஒன்றுவிடா மலுரைத்து உண்மையாக நமதுகுலம்

சபலமாகச் செய்வதற்குச் சர்வபரி பூரணியாம்
சுபங்கள்தரும் லட்சுமியே சுட்டிவந்தாள் மகளாக

205. என்றரசன் சொல்லக்கேட்டு இன்பங்கொண்டு
ராஜன்பத்னி
நின்றுமுத்தங் கொடுத்தணைக்க நேராக
ஸ்ரீனிரண்டில்

---

193. மகலட்சுமி - மகாலட்சுமி

பால்சுரந்து ஒழுகக்கண்டு பட்சமுடன் குழந்தையந்தப்
பாலுண்ணத் தந்துமிகப் பரிபாலித்துச் சீர்கள்செய்து

சானகமான் சுன்றையொக்கும் சண்மணியாம்
திருமகட்கு
ஜானகியாம் சீதையுமென் றெண்ணிப்பெயர்
ஜனகனிட்டான்

ஜானகியின் அழகுதன்னை ஜனங்களெல்லாம்
வந்துகண்டு
ஆனஜகன் மோகினியோ வென்றுமகிழ்ந் ததிசயித்தார்

கண்ணிமைபோல் காக்குந்தந்தை தாய்சுற்மனம்
குளிக்கமகள்
பெண்களுடன் விளையாடிப் பெருமையுற்று
யிருக்கையிலே

சுற்பகமே வருகஇன்பக் கடலமுதே நீவருக
அற்புதமே வருகஎங்கள் அருந்தவப்பே றேவருக!

கதியளிக்க வந்தஎங்கள் சண்மணியே வருகஎன்று
அதிவிருப்பா லழைக்குந்தந்தை அன்னையர்முன்
மகள்சிரித்து

அங்கமெங்கும் நகைகள்கொஞ்ச மங்களமாம்
மொழிகள்கொஞ்ச
எங்கும்வீசும் ஒளிகள்கொஞ்ச பைங்கிளிபோ
லோடிவந்து

பெற்றவர்மேல் விழுமவர் பிரம்மானந் தக்கடலில்
உற்றவர்போல் மனமகிழ்வார் உலகன்னை
யிவ்விதமாய்

மன்னவனும் அவன்பத்னியும் மனங்களிக்க விளையாடி
சொன்னமணிப் பதுமைபோல் சுகமாக வளருகையில்

215. கைகளினால் கண்கள்மூடிக் கன்னிகைகள் ஆடுகையில்
கைக்கடங்காக் கண்ணியென்று கமலாட்சி ஜானகியை

ஒதுக்குவார்கள் பெண்களெல்லாம் ஒளித்தேக
முள்ளசீதை
அதுக்குஇரு ளுள்ளவொரு அரைதனிலே
வருவாளாயின்

ஒளிவரவும் இருளொழியும் உருவறியா
திருந்துபெண்கள்
விளையாட உதவாதென்று விலகுவார்க ளதுவுமன்றி

ஜானகியாள் தேகந்தன்னில் சந்தனாதிச் சுகந்தவாடை
தானுதித்து வீசுமொரு தன்மையினால் அவளுடனே

சேர்ந்துவிளை யாடினாக்கால் ஜனங்களெல்லா
மறிந்துவந்து
பார்த்திடுவா ராகையினால் சேர்த்தோமென்பார்
பெண்களெல்லாம்

220. அதுவுமன்றி ஜானகியாள் அறிவுமிக உள்ளவளாம்
மதியுடனே விளையாடி மக்னஞ்செய்வாள் மற்றவரை

முடியாத காரியங்கள் முடித்திடுவாள் கைபலத்தால்
தடுக்கப்போகா தவளையாரும் தன்வசமே
கொள்வாளென்று

---

220. மக்னஞ்செய்வாள் - திகைக்கச் செய்வாள்

இந்தவிதங் குறையுரைப்பார் எல்லோரும்
அதைக்கேட்டு
எந்தனெழுத் தென்றுசீதை எண்ணித்தன்னில்
சலிப்படைந்து

அந்தக்குறை களையுரைப்பாள் அன்னைதந்தை
கள்கேட்டு
சிந்தைமகிழ்ந் துந்தனைப்போல் ஜகத்திலில்லைப்
பெண்களம்மா

சொல்லுங்குறை புகழென்றறி சோகப்பட
வேண்டாமம்மா
இல்லையுன்னில் குறையணுவும் இருப்பதெல்லாம்
பெருமையம்மா

225. உன்னைப்போலச் சௌந்தரியம் உள்ளபெண்க
ளுலகிலுண்டோ?
என்னசொல்லேஷம் மகிமையுள்ள என்மகளே
யென்பாரவர்

பூர்வமொரு காலந்தனில் புரமெரித்தோன்
தந்தவில்லை
நீர்மையுள்ள ஜனகன்முன்னோர் நியமத்தொடு
வைத்திருந்தார்

சீதைவிளை யாடையிலே சிறுவிரலா லதைத்தள்ளச்
சேதிகேட்டு அரசனப்போ சீதைசக்திக் கதிசயித்து

இவளையுந்தான் அடக்கியாள இவ்வுலகில்
புருஷனுண்டோ?
சிவன்வில்லை யெடுத்தவளாம் சீதைசக்திக்
கிணையாகவே

226. புரமெரித்தோன் - சிவன்

எவனொருவன் அந்தவில்லை எடுத்துவளைத்
திடுவானோ
அவனுக்கிந்தச் ஜானகியை அளிப்பேனென்று
பிரதிக்ஞைசெய்தான்

திங்களிளம் பிறைபோலச் செல்வமுடன்
வளர்ந்துவந்து
மங்கையிளம் பருவமுற்றாள் மயில்போன்ற
ஜானகியாள்

சீதையின் சௌந்தரியம்

நாகமலை போல்விளங்கும் நளினாட்சி தன்கூந்தல்
ஊகங்கொண்டால் மதிமுகத்தை யொட்டுங்கரு
முகிலையொக்கும்

பன்மொழியாள் நெத்தியதோ பாலசந்திரன்
போல்விளங்கும்
விண்ணிலிந்த்ர தனுசையொத்து விளங்குமம்மா
புருவங்களும்

தாமரைப்பூ நடுவிளரு தண்ணீலம் பூத்ததுபோல்
பூமகள்தன் வேல்விழிகள் பொலிந்தழகு செய்யுமம்மா!

மூக்கழகை நோக்கினல்ல வண்முகத்தின் முகைநாணும்
வாக்குநய முள்ளவாயும் செங்குமுத மலரையொக்கும்

பவளமணி தனைமிகவும் பரிகசிக்கும் அதரங்கட்கு
உவமைசொல்ல எவ்வுலகிலும் ஏதுமிலை யுண்மையாக

---

229. பிரதிக்ஞை - உறுதி எடுத்தல்

232. தனுசு - வில்

பல்லழகுக் கிணையாகப் பார்தனிலே
சொல்லவென்றால்
நல்லமுத்துச் சரமேயொக்கும் நன்னிலத்தில்
வேறிலையே

தோடணிந்த செவிகள்வள்ளை துளிரிலையைத்
தோற்கடிக்கும்
ஏடவிழ்பூங் கருங்குழலான் இன்முகத்தை
உவமைசொல்லில்

கடலிலெழுந் தெள்ளமுதோ களங்கமிலாச் சந்திரனோ?
மடலவிழ்செந் தாமரையோ? மதன்பார்க்குந்
தர்ப்பணமோ?

எதுக்கினிதான் சொல்லப்போகும்
இளங்கொடியாள் திருமுகத்தை
அதிலாவண்ய மமைத்தபிரம்மா அவர்சக்தி யதிசயமே

240 கரும்புபோலத் திரண்டநல்ல தோளழகும் கரமும்
அரும்பிச்சென்தா மரைமலர்கள் அழகுபிச்சை
கேட்குமம்மா!

அமிர்தம் வைக்கும் பொன்குடமோ அழகியதா மரை
முகையோ
இமயமலைச் சிகரங்களோ வென்றுபிரமை
தருங்குசங்கள்

அண்டமெல்லாம் பெற்றவயி றாலிலைபோ
லழகுசெய்யும்
உண்டிலையோ வெமையங்கு ஒளிருமவள்
றுண்ணிடையே

235. அதரம் - உதடு

238. தர்ப்பணம் - கண்ணாடி

மங்கையிரு துடைகட்கிணை மதகரியின்
துதிக்கையுந்தான்
செங்கதலி குலங்களையும் செப்புவது உவமையாமோ?

மெய்த்தவத்தோ ரிருதயத்தை மேவியுள்ள மெல்லடியை
எத்திறத்தா லறிந்துசொல்ல ஏழையென்னா
லாகுமம்மா

245. மற்றுமுள்ள அங்கங்களும் மனதறிந்து சொல்வதற்கு
கற்றறிந்தா ராருமுண்டோ கர்த்தனன்றி எங்குந்தானே

பொன்னொளிபோல் மின்னுமவர் பூம்பதத்தாள்
மென்னடையை
வண்ணச்சிறை யன்னம்பல வந்துவந்து சூழ்குமம்மா

சித்திரமணிப் பொட்டணிந்த சீதைசொல்லும்
இன்மொழிபோல்
சுத்தம்வரக் கிளிகுயில்கள் சொல்லிச்சொல்லிப்
பழகுமம்மா

பொற்குடத்தை நவமணியால் அலங்கரித்தாப்
போலவேயாம்
அற்புதசுந் தரிக்கணிந்த ஆபரணம் அழகுசெய்யும்

மன்மதன்செங் கரும்பினாலே வானமிர்தில்
தொட்டெழுதும்
மின்னொளிபோல் விளங்குஞ்சித்திரப் பதுமைபோல்
விளங்கினளே

250. சுடர்விளக்கின் மத்தியிலே சுந்தரியாம் ஜானகியாள்
உடுவினங்கள் மத்தியிலே உள்ளபூர்ணச்
சந்திரன்போல்

243. கரி - யானை

250. உடு - நட்சத்திரம்

பிரகாசித்து விளங்குவளே பிரபஞ்சங்களி லவள்போல
சிருஷ்டியுந்தா னுண்டாமோ செப்பவுண்டோ
அழகுகளை

பா ... கற்கண்டுடன் பழரசங்கள்
கலந்ததுபோல்
சு ... பேசும் அருமொழிகள் ருசிக்குமம்மா!

ஜகன்மோகினி போல்விளங்கும் ஜானகியின் நிலைமை
தனை
ஓக்களையா லறிந்தரசன் முறைமையாக ஆலோசித்து

சீதைக்கு வரன்தேட யத்தனம்

மகளுக்கிப்போ மணம்புரியும் தகுதியுள்ள பருவமென்று
சகஜமாக வரன்தேடச் சங்கல்பஞ் செய்கின்றான்

155. மகதேவன் வில்வளைக்கும் வல்லபனைக் கண்டறிய
ஜகமெங்கும் அறியும்படி, செய்தானம்மா
விளம்பரங்கள்

பிரகரஞ்செய்த சேதிகேட்டுப் பிரபஞ்சந்தனி
லுள்ளமன்னர்
சிரத்தையுடன் பறந்துவந்து சிவன்வில்லை யெடுப்பதற்கு

சவுரியங்கள் பேசிவில்லைச் சமத்தாக எடுக்கச் சென்று
பவுர்ஷங்கள் கெட்டொழிந்து பலனின்றி யோடினரே!

நிரணியாளும் அரசரெல்லாம் தலைகுனிந்து .... மேல்
நுனையுள்ள ஜனகராஜன் கவலைகொண்டு
என்னசெய்வோம்

157. சவுரியம் - வீரம்; பவுர்ஷம் - பராக்கிரமம்.

அருமையான புத்திரியை ஆனவொரு தீர்ப்பனான
மறுமகனை யடைவதற்கு மார்க்கமேதோ அறியிலையே

ஈசனிந்தக் கவலைதந்து ஏனென்னை வருத்துகிறான்
நேசங்கொண் டவனெந்தன் நெஞ்சுக்குறை தீர்ப்
வேனென்பர்

என்றுவேண்டி யசந்திருந்தான் இந்நச்சேதி
யறிந்துசீதை
என்செய்வே னெனையாள இசைந்தவொரு
கணவருந்தான்

கிடைக்குவுண்டோ பாக்கியமும் கிருபையுமுண்டா
கடவுளுக்கு
உடம்பெடுத்துப் பெண்ணாகவே யுலகில்வந்தால்
சுகம்வேண்டாமோ?

ப்புவந்தனை யடைந்திருந்தும் பார்த்தாவை யடையாமல்
இருக்குங்குறை யென்னசொல்ல வென்றுசீதை
தன்னுடைய

சகியைப்பார்த்துச் சொல்லுகிறாள் சமர்த்தராக
என்னையாள
இகத்திலுந்தா னொருவருண்டோ என்செய்வே
னென்னெழுத்து

இப்படியு மிருக்குமோபார் எத்தனைநாள் மன்மவருந்தி
ஒப்புமொரு புருஷருக்கு ஊரெங்குந் தேடித்தேடி

ஆகுமோபா ரதிர்ஷ்டந்தனை அறிந்துசொல்வோ
ராருமில்லை
பாகுமின்றிப் பாபஞ்செய்த பலனாமோ பெண்ணாக

வந்திங்கு வருந்துமென்னை வகையுடனே மணம்புரிய
அந்தமுடன் அரசனுண்டோ அறிந்துசொல்வாய்
சகியேயென்றாள்

சீதைதனைச் சகியும்பார்த்துச் சித்தமிகக் களித்திடவே
போதமுடன் சொல்லுகிறாள் பூமகளே
வருந்தவேண்டாம்

நான்கண்ட சுனவுதனை நானுரைப்பேன்
பெண்மணியே
ஏனுனக்குக் குறைவேண்டாம் என்றவளுஞ்
சொல்லுகின்றாள்

270. தசரதனாம் ராஜனொரு ரவிகுலத்தி லுதித்தவனாம்
திசைசுளெல்லா மாளுவோனோம் தீரனுமாம்
அவன்றனக்கு

மாதவனே மகனாக மாதேகே ளுலகுதனில்
நீதிதனைக் காத்திடவே நினைத்தேவந் தவதரித்து

இராமனென்னும் பேர்கொண்டு இராட்சஸரை
நிக்கிரகிக்கச்
சாமளனாம் சர்வக்ஞன் சகந்தனிலே இப்பொழுது

விசுவாமித்திர முனியுடனே வில்வளைத்து
உனையடைய
நிசமாக வருவதாக நினைவுதனில் கண்டேனென்றாள்

இவ்விதமாய் ஜானகியும் எதிர்பார்த்து ஆவல்கொண்டு
அவ்விதமா யிருக்கையிலே அரசன்செய்யும் யாகசாலை

272. நிக்கிரகிக்க - அழிக்க; சர்வக்ஞன் - எல்லாமறிந்தவன்

வந்துசேர்ந்தார் முனிவருடன் வல்லபராம்
இருவர்களும்
சுந்தரராம் அவரைக்கண்டு சொக்கிநின்றார் யாவருமே

வசதியுள்ள ஸ்தலமதனை வந்தவர்க்கு வசிப்பதற்கு
விசுவாசமாய்த் தந்தரசன் வேணபடி யுபசரித்து

இராம லட்சுமணா ரின்னாரென்று ஜனக மகாராஜன் தெரிந்துகொள்ளுவது

குசலப்பிரசனந் தனைக்கேட்டுக் கூடவந்த
இருவர்களாம்
புஜபலமுள் ளோர்களான புத்திரரா ரெனக்கேட்டான்

தசரதற்குப் புத்திரரிவர் தரணியிலே இவர்க்கொப்பாக
இசைந்தவரைக் காணவுண்டோ? ஈசன்வில்லைப்
பார்ப்பதற்கு

இங்கவரை யழைத்துவந்தேன் என்றுவிசுவா
மித்ரர்சொல்ல
கங்குகரை யில்லாமலே களிப்படைந்தான்
ஜனகராஜன்

அரக்கர்களை வதைத்துயாகம் ஆனதையும்
அகலிகையாம்
சிறப்படைந்த சேதியையும் செப்புகையில்
சதானந்தராம்

விசுவாமித்திரர் சரித்திரங்களைச் சதாநந்தர் ஸ்ரீராமனுக்குச் சொல்வது

கௌதமரின் புத்ரர்கேட்டுக் களிப்படைந்து ஸ்ரீராமன்
கௌரவத்தை மிகப்புகழ்ந்து கிருபையுள்ள ராமனிடம்

விசுவாமித்திரர் சரித்திரங்களை விரித்துரைக்கத்
தொடங்கியவர்
விசுவாசமாய்க் கூறினதை விவரமாக இங்குரைப்பேன்

கூத்திரிய வம்சத்தினில் ஜனித்தவராம் விசுவாமித்திரர்
சத்தியமாய் ராஜ்யபாரம் சரியாகச் செய்துவந்து

பூமிதனைச் சுற்றிவரும் பொருட்டாகச் சகலருடன்
நேமமாகப் புறப்பட்டு நெடுந்தூரம் யாத்ரைசெய்து

285. கடைசியாக வசிஷ்டர் தனைக் காணவந்தார்;
வசிஷ்டமுனி
நடத்தியஆ திதியத்தை நாவினாலே
சொல்லப்போமோ?

அவரிடத்தி லுள்ளதொரு அருமையான காமதேனு
நவநவமாய் பட்சியங்களும் நானாவிதப் பழங்களுடன்

அன்னாதிகள் அறுசுவையோ டபரிமித மாய்ச்சொரிய
இன்னமுதோ வென்றவரும் எடுத்தெடுத்துப்
புசித்தாரம்மா

காமதேனு மகிமைதனைக் கண்டிந்த விசுவாமித்திரர்
தாமதனை யடையுதற்குத் தாகங்கொண்டு முனிவரிடம்

அந்தப்பசு வேண்டுமென்றும் அபிப்பிராயந்
தனைச்சொல்லித்
தந்திடவே கேட்டுக்கொண்டார் தடுத்துச்சொன்னார்
வசிஷ்டமுனி

285. ஆதித்தியம் - விருந்து; தாம்பல் மரியாதை

290. அப்படியா வென்றுமித ஆக்கிரகமாய்ப் பசுவையிவர்
எப்படியும் அடைவேனென்று இழுத்துவர
ஆக்ஞைசெய்தார்

அந்தப்படி பிடித்திழுக்க ஆத்திரமா யுதறிப்பசு
வந்துவசிஷ் டரைவணங்கி வாக்குறுதி
வாங்கிக்கொண்டு

தனதுதேகந் தனிலிருந்து தாஷ்டிகமாய் வெகுபேரை
நினைத்தபடி சிருஷ்டிசெய்து நெருங்கியுத்த மிகநடந்து

விசுவாமித்திரர் படைகளெல்லாம் விழுந்துவிட்ட
கோலங்கண்டு
எசமடைந்த நாமுங்கூட இவ்விதமாய்ப் பின்னடைய

நேரிட்டதே யென்றிவர்தான் நெஞ்சக்குறை
மிகவுங்கொண்டு
கோரித்தவஞ் செய்யப்போனார் குரூரமாக
வடதிசையில்

295. அக்கரையோ டங்குசெய்த அருந்தவத்தை
யென்னசொல்ல
உக்கிரமான தபசதுபோல் உலகிலெங்குஞ்
செய்வாருண்டோ?

இவருக்கருள் செய்திடவே இவர்முன்னே எழுந்தருளி,
சிவபெருமான் வர அவரை சிரேஷ்டமுள்ள
அஸ்தராதிகட்

---

291. தாஷ்டிகமாய் - வலிமையுடன்

297. அந்தர்த்தானம் - மறைதல்

கலுக்கிரகத்தைச் செய்யுமென்றார் அவ்விதமா
யருள் பரலும்
அனுக்கிரகித்து அந்தர்த்தானம் ஆனதின்மே
லங்கிருந்து

வசிஷ்டரிடம் வந்தவரின் மனதிலுள்ள ஆசிரமத்தைப்
பொசுங்கச்செய்தார் அந்தமுடன் போதமுள்ள
வசிஷ்டமுனி

எதிரில்லா அவர்மீதாம் எடுத்துவிட்டா ரஸ்திரங்களை
மதியுடனே பிரம்மதண்ட மகிமையினா லடக்கக் கண்டு

300. பிரம்மாஸ்திரந் தனைத்தொடுக்கப் பெருமையுட
னதைவசிஷ்டர்
பிரம்மபலத் தால்விழுங்கி பிரபலமாகக்
கோபங்கொண்டு

இருக்கையிலே விசுவாமித்திரர் என்னசெய்வோ
மென்றுமிக
பரிதபித்தார் மனம்வாடி பார்த்தவரும்
நடுங்கிக்கொண்டு

இருக்கையிலே தேவரெல்லாம் இரக்கங்கொள்ள
ஸ்துதித்திடவே
உரியபடி சாந்தங்கொண்டார் உடனேயிந்த
விசுவாமித்ரர்

பிர்ம்மபலம் தனக்குமுன்னே பின்னடையும் மற்றபலம்
பிர்ம்மபலந் தனையடைதல் பெருமையென்று
நிச்சயித்து

தென்திசையில் போயிருந்து திடமனதாய்த்
தவஞ்செய்ய
அன்புகொண்டு பிர்ம்மதேவர் அங்குவந்து [illegible]

305. என்றுபெயர் தந்துவிட்டு இருப்பிடத்தை நாடியவர்
சென்றிடவே விசுவாமித்ரர் சித்தமதில் குறைகொண்டு

பிரம்மரிஷிப் பட்டம்பெறப் பெருந்தவமே
செய்துதொடங்கி
நிர்மலமாம் மனதுட்னே நேர்முக நிஷ்டைசெய்தார்

அந்தவேளை அவரிடத்து அரசனான திரிசங்கு
சிந்தைநொந்து முறையிடுவான் சீர்கெட்ட
சேதியெல்லாம்

சரீரத்தோ டடையசுவர்க்கம் சத்கதியை நாடியொரு
இசைந்தமகஞ் செய்யுதற்கு எண்ணியெந்தன்
குலகுருவாம்

வசிஷ்டரைநான் வேண்டிக்கொண்டேன் வகையில்லை
யென்றுரைத்தார்
இசைந்தவராம் அவர்புத்ரரரை எதிர்பார்த்துப்
போயடுத்து

310. என்வ..வச் சொன்னேனையா எடுத்தெறிந்து
பேசினார்கள்
நன்மைதரு வோரையினி நாடுவானென்
றுரைத்தேனையா

அதற்காக அவர்களென்னை அலங்கோலஞ்
செயநினைந்து
கதியிழக்க நீசனாகக் கடுஞ்சாபந் தந்துவிட்டார்

உண்மைவந்தடுத்தேனையா உயர்ந்தகதி எனக்களிப்பாய்
தம்மைவிட எனக்குதவி தரணியிலே இல்லையென்றான்

கதறிமிக முறையிட்டு, காலில்விழுந் தலறுமவன்
அதிகசத்தம் நிஷ்டையிலே அமர்ந்திருக்கும்
விசுவாமித்ரர்

கேட்டுநிஷ்டை விட்டெழுந்து கிருபையுடனே
அவனைத் தேவ
கூட்டமதில் சேர்ப்பேனென்று குறித்தவாக்
குரைத்தாரப்போ

315. அந்தப்படி செய்வதற்கு அருமையான யாகஞ் செய்ய
வந்திடவே யழைப்பித்தார் வந்தார்கள் வெகுபேர்கள்

வசிஷ்டபுத்திரர் நிந்தித்ததாய் வந்துரைக்கக்
கேட்டிருந்த
விசுவாமித்திரர் அவர்க்குச்சாபம் விதித்ததன்மேல்
யாகமதைச்

செய்கையிலே தேவாரல்லாம் சேர்ந்துகொண்டு
யாகமதின்
கைங்காரியத்தை மதிக்காமலே கடந்திருந்த
காரணத்தால்

இப்படியே திரிசங்குதனை எழுப்புவேனான்
சுவர்க்கமதை
ஒப்பியடைந் திடுவதற்கு உண்டோதடை
பார்ப்போமென்று

தபசின்பலங் கொண்டவனை தாட்டிவிட்டா ரவனேகி
விபவமுள்ள சுவர்க்கந்தனை விரைவாகப் போயடைய

320. அங்குள்ள தேவரெல்லாம் அவனைப்பார்த்து,
சண்டாளன்
இங்குவர நியாயமில்லை என்றுசொல்லித்
தள்ளிவிட்டார்

தலைகீழாய்க் குதிக்கொண்டு தயவுசெய்வீ
ரென்றுசொல்லி,
பலவிதமாய் முறையிட்டுப் பிரார்த்தித்தான்
கண்டிவரும்

நில்லென்று வாக்குரைத்தார் நின்றுவிட்டா
னந்தரத்தில்
வல்லபராம் விசுவாமித்திரர் வகையுடனே
அவனுக்கங்கு

சுவர்க்கமொன்று உண்டுசெய்து சுகப்படவே
நிலைபோக்கி
வெகுமதை ஒப்பச்செய்து எழுந்தருளி மேற்குத்திசை

தனில்வந்து தவஞ்செய்தார் தங்கைமகன் சுனச்சேபன்
தனக்குவரும் தீங்குரைத்துத் தண்டனிட்டு முறையிடவே

325. மக்களைப்போ யுதவச்சொன்னார் மறுதளித்தா
ரவர்களுக்குத்
தக்கசாபந் தந்துவிட்டுத் தன்மருமான் பிழைப்பதற்கு

இரண்டுமந்திர முபதேசித்து இதமுஞ்சொல்லி
அனுப்பஅவன்
குறைவின்றிக் காக்கப்பட்டார் குணமடைய
விசுவாமித்திரர்

தவஞ்செய்தார் ஊர்வசியைத் தந்திரமாய்
இந்திரன்விட
இவர்கள்முன் வந்தாளவள் இச்சைகொண் டவளுடனே

போகஞ்செய்து பிறகுமிக புத்தியீன மென்றறிந்து
வேகமாக அவளைவிட்டு வெகுகாலந் தபசுசெய்தார்

பிர்ம்மாவந்து ரிஷியென்னும் பேர்தந்தார் அதிலுமிவர்
திர்ப்த்தியின்றி வடதிசையில் தீரமதில் வந்துதவம்

330. செய்கையிலே அதைக்கலைத்துச் சீலமதைக்
கெடுப்பதற்கு
மெய்மினுக்கும் ரம்பைவந்தாள் மிகவுங்கோபங்
கொண்டவளைச்

சாபமிட்டு அதையுமெண்ணிச் சலிப்படைந்து
மனம்வருந்திக்
கோபமதை விட்டொழித்துக் குரூரமாகத்
தபசுசெய்தார்

நான்முகனார் வந்தருளி நயந்துமிக ரிஷியென்னும்போர்
தான்கொடுத்தார் அதிலும்திருப்தி
தனைக்கொள்ளாமல் கீழ்த்திசையில்

வெகுகாலம் தபசிருந்து வெகுவாக ஒளியடைய
அகமகிழ்ந்து, பிரம்மதேவர் அங்குவந்து வசிஷ்டருடன்

பிரம்மரிஷிப் பட்டந்தந்தார் பெருமையுடன்
அகமகிழ்ந்து
தருமசீலந் தனையடைந்து கருமபந்தங் களுமொழிந்து

335. சத்தியமா யுள்ளநல்ல உத்தமமாம் நிலையினது
நித்தியானந்தம் பெருகவுள்ள நிஷ்டாபர
ரிவராகினான்

இவரைப்போல் மனவுறுதி எவர்க்குமுண்டோ
எங்குந்தானே
தவமுனியில் இவர்சிறந்த தன்மையுள்ளோ
ரென்றுரைத்தார்

ஸ்ரீராமன் தனுர் பங்கஞ் செய்ததும்
யாவரும் மகிழ்ந்ததும் யாகம் நடந்ததும்

இரகுபதிகேட் டதிசயித்தான் இராஜனான
ஜனகனிடம்
மக ரிஷியாம் விசுவாமித்திரர் மனமுவந்து சிவன் தனுசை

எடுத்துவரச் சொன்னபடி இராஜனாக்களு
செய்யப்பலர்
சடுதியாக வில்லதனை ஜாக்கிரதையாய்க்
கொண்டுவந்தார்

அரன்வில்லை இராமச்சந்திரன் அலட்சியமாய்ப்
போயெடுத்துத்
துரிதமாக வளைத்திடவே துண்டிரண்டாய் விழுந்தது

340. கண்டெல்லோரும் மெய்மறந்து களிப்படைந்து
கண்டதில்லை
அண்டங்களும் இவன்பலத்தால் ஆடுமென்று
அதிசயித்தார்

ஆரோவொரு சிறியபிள்ளை அரன்வில்லை
யொடித்தானென்று
ஊரிலுள்ள மற்றவரும் ஓடிவந்து பார்த்துச்சொல்வார்

சிங்கங்கள்போல் விளங்குமிந்த சிறுவர்கள்பே
ரழகுக்கிணை
எங்குமில்லை ஜானகியாள் என்னதவஞ்
செய்தாளென்றார்

தேவர்களோ மானிடராய்த் திருமேனி
கொண்டாரென்று
மேவியெங்கு மதிசயித்தார் மின்னிடையாள்
சுந்தரியாம்

சீதையிந்தச் சேதிகேட்டுச் சித்தமிகக் குளுந்தவளாய்
வேதனையை விட்டொழித்து விரகங்கொண்டு
இராகவனைப்

345. பார்த்திடவே ஆசைகொண்டாள் பவனிவந்தான்
ரகுராமன்
நேர்ந்ததப்போ கண்டுகொண்டாள் நிலத்திலிந்தப்
புருஷன்போல

காணவுண்டோ வென்றுமிகக் களிப்படைந்தாள்
கண்குளிர்ந்தாள்
ஆனவத்தை யெண்ணிமிக அதிசயித்தாள்
அகமகிழ்ந்தாள்

யாகமது விதிப்படியே யாவுஞ்செய்து குறைவின்றிப்
பாகமுடன் யாகமதைப் பரிபூர்ணஞ் செய்ததன்மேல்

ஆலோசித்தான் ஜனகராஜன் அனைவருடன்
மனங்கலந்து
கோலாகல மாகவேதான் காலோசிதங்
களையெண்ணிச்

செய்தவொரு பிரதிக்ஞைதனை ஸ்ரீராமன் நிறைவேற்றி
வையகத்தி லெனக்குமிக மகிமைதந்தான்
அகமகிழ்ந்தேன்

நான்கு பெண்கட்டும் சேர்த்து விவாகம் நடத்த ஜனக மகாராஜன் வரன்களை நிச்சயித்து லக்ன பத்திரிகைகள் அனுப்புவது

350. எனதுபெண்கள் இருவரோடு எனதுதம்பி குஜத்வஜன்
ஆனவனுக் கிரண்டுபெண்கள் ஆனநான்கு
பெண்களிலே

---

348. காலோசிதம் — காலத்திற்கு ஏற்றவை

சீதையை ஸ்ரீராமனுக்கு, சிறியமகள் ஊர்மிளையைப்
போதமுள்ள அனுஜனுக்கும் பொருந்துவார்க
ளருந்ததிபோல்

தம்பிபெண்க ளிருவர்களில் சத்குணியாம்
மாண்டவியோ
தம்பியான பரதனுக்கும் தகுதியுள்ள சுருதகீர்த்தியைச்

சத்துருக்கன் தனக்குமென்று சகலருடன் அகமகிழ்ந்து
உத்தமனாம் ஜனகராஜன் உறுதிசெய்தான்
தாரைவார்க்க

அதன்பிறகு விசுவாமித்திரர் அபிப்பிராயப்
படிஜனகன்
இதமாகத் தசரதற்கு எல்லாச்சேதி களையுங்கண்டு

355. சோதித்து வைத்துநல்ல சுபலக்னந் தனையுங்கண்டு
நீதியுடன் லக்னபத்திரம் நேராக எழுதிவைத்துத்

தகுதியுள்ள போர்களிடம் தந்துமிக உபசாரம்
அகமகிழ்ந்தே யுரைத்தேனென்று அறிக்கையிட்டு
அழைத்துவர

அனுப்பித்தந்தான் அவ்விதமாய் அவர்களேகித்
தசரதராம்
கனமுடைய அரசர்தம்மைக் கண்டுதந்தார்
மணப்பத்திரிகை

---

352. சத்குணி – நற்குணம் உள்ளவள்

355. லக்னபத்திரம் – திருமண நிச்சயப் பத்திரிகை

ஜெனகன்சொன்ன படியனைத்தும் செம்மையாக
உரைத்தார்கள்
மனமகிழ்ந்து தசரதனும் மந்தராலோ சனைசெய்தான்

விசுவாமித்திர ரிஷ்டப்படி விவாகங்களை நடத்துவது
உசிதமென்றார் யாவர்களும் உளமகிழ்ந்து
உண்மையாக

360. குலகுருவாம் வசிஷ்டர்முதல் கூடியுள்ள
பெரியோர்கள்
குலகோத்திர பொருத்தாதிகள் குணமாக
அமைந்ததென்று

அகமகிழ்ந்து மிகவுரைத்தார் அவ்விதமாய் மணம்புரிய
மிகவுமாவல் தேவிகட்கு இருப்பதையும் மேன்மையுள்ள

தசரதனார் அறிந்துகொண்டு தாகமுடன் மணம்புரிய
எஸ்ஸுள்ள சுமந்தரர்க்கு எண்ணிச்செய்தா
ராக்ஞைதனை

மக்களுக்கு மணம்நடத்த மனமொப்பி நிச்சயித்த
இக்கருத்தைத் தேசமெங்கும் எட்டும்படி கட்டளைசெய்

பந்துமித்திரர் யாவரையும் பட்டணத்தி
லுள்ளோரையும்
வந்திடவே அழைப்பாயென்றார் அந்தப்படி சுமந்தரர்
செய்தார்

365. தேசமெல்லாம் சேதிகேட்டு திரண்டுவந்தார்
வெகுபேர்கள்
நேசங்கொண்டு அயோத்திநகர் நிறைந்ததம்மா
கூட்டமெங்கும்

தருமசீலன் ராமனுக்கும் தம்பிகட்கும் நடக்குமண
அருமையான காட்சிதனை அனைவர்களும்
பார்க்கவந்தார்

சகலருடன் தசரதன் விவாகத்துக்காக மிதுலைக்கு வருவது

திருமணங்கள் நடத்திகத் திர்ப்த்தியடைந்
திடுவோமென்று
பெருமைமிகுஞ் சுற்றங்களும் பெருஞ்சேனா
சைன்யங்களம்

மந்திரிமார் முதலாக மற்றுமுள்ள இஷ்டமித்திரர்
சொந்தங்கொண்டு வந்தவர்கள் சூழ்ந்துவர
ரதங்கள்மீதில்

பலவிதமா யுள்ளநல்ல பரிசுத்த வாகனங்கள்
வலுவாக வந்ததம்மா மகராஜன் பிரயாணமானான்

370. அடுத்தடுத்து மார்க்கந்தனில் அங்கங்கு உள்ளவர்கள்
கொடுத்துக்கண்டு உபசரித்தார் கோரியதை
வேண்டுமட்டும்

செழிப்புடனும் களிப்புடனும் சேனைகரை புரண்டுவர
வழிகளெல்லாம் நடத்திக்கொண்டு வந்துசேர்ந்தார்
மிதுலைநகர்

தசரதர் முதலாகிய எல்லோரையும் ஜனகமகாராஜா எதிர்கொண்டுவந்து அழைத்துப் போய் விவாகம் நடத்தியது

சகலருமாய் வருவதற்குச் சமாசாரம் வந்தவுடன்
அகமகிழ்ந்து அவர்களைப்போய் அழைத்துவர
எதிர்கொண்டு

ஜனகன்வந்து உபசரித்து வேமலாபந்
தனைக்கேட்டு
அனைவரையும் அழைத்துக்கொண்டு அன்புடனே
அவரவரும்

அனுகூலப் படியிருக்க அதிகசுகந் தருமிடங்கள்
இனங்களோடு வசிக்கத்தந்தான் எல்லோரும்
களிப்படைந்தார்

375. சாங்கியதே சந்தன்னைச் சத்தியமா யுற்றபடிப்
பாங்குடனே யாண்டுவரும் பரமசாது குஜத்வஜனாம்

ஜனகனிட சோதரனும் ஜனங்களுடன் வந்துசேர்ந்தார்
இனத்தாரு மற்றுமுள்ள எல்லோரும் வந்துசேர்ந்தார்

தேசமன்ன ரனேகர்வந்தார் திரண்டுவந்தார்
முனிவர்களும்
ஆசையுடன் வேதியர்கள் அநேகம்பேர் கூடிவந்தார்

பரதனிட மாதுலனாம் பட்சமுள்ள யுதாஜித்துவும்
பாரிந்துவந்தான் தந்தைபார்க்க பரதன்தன்னை
யழைத்துப்போக

நடத்துகின்ற முகூர்த்தங்கட்கு நானாவித
வஸ்துக்களும்
குடங்குடமாய்த் தயிர்பாலும் குறைவின்றி
யாவுந்தானே

380. வந்துகொண்டே யிருப்பதோடு வாழைகமு
குமுதலாய்ப்
பந்தலிலே அலங்கரிக்கப் பலருமவர் அலங்கரித்தார்

---

378. மாதுலன் - மாமன்

நிச்சிதார்த்த மெனுஞ்சூடங்கும் நேராக நடந்ததன்மேல்
அச்சுதனாம் ராமனையும் அனுஜரையும் முறைப்படியே

குறித்தநல்ல தினந்தனிலே கோலாகல மாகத்தானே
சிறப்புடனே யழைத்துவந்து சீர்கள்செய்யத்
தொடங்கினார்கள்

நகரமெல்லாம் ஒளிவீச நவமணியா லிழைத்துநெடும்
சிகரமுள்ள மாடங்களும் கூடங்களும் சித்தரித்தார்

வீதியெங்கும் தோரணங்கள் விதவிதமாய்க்
கட்டிப்பந்தல்
ஜாதிமல ராலமைத்தார் தங்கமணிக் கால்கள்நட்டு

385. முத்துப்பந்தல் சித்திரப்பந்தல் முறைமுறையா
யமைத்தெங்கும்
கொத்துமலர் மாலைகட்டிக் குலைவாழை கமுகுகளை

அணிஅணியாய்க் கட்டிரத்ன ஆலவட்டம் சாலநட்டு,
பணிகளிட்ட பாவைகட்டிப் பலவர்ணக்
குடைகள்நட்டார்

நடனமிடுஞ் சாலைகளும் நளிர்மலர்ப்பூஞ்
சோலைகளும்
கடிமலர்த்தேர் களுமமைத்துக் சுனமாட வீதியெல்லாம்

கொடிகள்கட்டிப் பன்னீரைக் குடங்குடமாய்த்
தெளித்துகந்தப்
பொடிகள்கொட்டிக் கோலமிட்டுப் பொரிசுள் தூவி
யழகுசெய்தார்

---

383. கந்தப் பொடி - வாசனைப் பொடி

வேதியெல்லாம் சந்தனத்தால் மெழுகிக்கும்பக்
கலசம்வைத்துச்
சோதிமணித் தீபமேற்றிச் சோபனமாய்க்
காரியஞ்செய்தார்

390. காண்பதற்கோ ராயிரமாம் கண்கள்வேண்டு
மெனச்செய்து
தூண்கள்சொர்ணத் தாலமைத்துச் சொற்பவழக்
கொடுங்கையிட்டு

மரகதத்தா லுத்திரமும் மாணிக்கப் போதியையும்
விரிந்தநல்ல வைரமதால் விட்டங்களுஞ் சட்டங்களும்

கோலமுட னமைத்துரத்னக் கும்பங்களும் பம்பவைத்து
நீலமணி யாணியிட்டு நித்திலத்தா லோரஞ்செய்து

வெள்ளியினால் தளமமைத்து விவிதமணித்
தரையமைத்துத்
தெள்ளுமுத்துச் சரங்கள்கட்டித் தேமலர்மா
லைகள்தூக்கிப்

படிக்கமணித் தீபமேற்றிப் பளபளென்னுஞ் சாலர்கட்டி
அடர்நிலைக்கண் ணாடிகட்டி அழகுவச்சிரப்
படிக்ளிட்டார்

395. குடைபிடிக்கும் பதுமைகளும் குடமெடுக்கும்
பதுமைகளும்
அடரும்வெண்சா மரைவீசும் அழகுமணிப்
பதுமைகளும்

தீபங்கையி லேந்திநிற்கும் சித்திரப்பூம் பதுமைகளும்
தாபம்நீங்கப் பனிமலரைத் தாவிக்கொட்டும்
பதுமைகளும்

பன்னீரை இறைக்கும்நல்ல பசும்பொன்மணிப்
பதுமைகளும்
வண்ணவண்ணப் பதுமைகளும் வகைவகையாய்
அமைத்து வைத்தார்

மின்னுகின்ற பொன்னொளியும் விளங்கும்நவ
மணியொளியும்
என்னசொல்வேன் சூரியன்போல் எங்கும்வீசி
ஜ்வலிக்குதம்மா!

அலங்கரித்த மண்டபத்தில் அணிமுல்லை
மல்லிகையாம்
நலங்கொழிக்கும் மலர்கள்கொண்டு நவநவமா
யழகுசெய்தார்

400. சுகந்தபரி மளங்கள்வாடை சுத்தியெங்கும் வீசுமம்மா
வகைவகையாய் வீசுமந்த வாசனைசு
ளென்னசொல்வேன்

இந்தவித மநேகமாக எங்குமலங் காரஞ்செய்து
சுந்தரரும் புத்திமிகச் சூட்சுமமு முள்ளமண

மக்கள்தனை மணையில்வைத்து மங்களஸ்நா
னாதிகளும்
தக்கபடி செய்துவைத்துத் தகதகவென் றொளிவீசும்

பட்டாடை தரிக்கச்செய்து பலவிதமாம்
நகைகளெல்லாம்
இட்டார்கள் மக்களுக்கு என்னசொல்வேன்
அலங்கிருதத்தை?

---

403. அலங்கிருதம் - அலங்காரம்

மணம்புரிய அமைத்தநல்ல மண்டபத்தின் அதிசயமாம்
குணங்களெல்லாம் காணுதற்குக் கோடிகோடிக்
கண்கள்வேண்டும்

405. மண்டபத்தின் மத்தியிலே மணபீடம் விளங்குவதைக்
கண்டவர்கள் இந்தவிதம் காட்சியுண்டோ
யெங்கேனுமென்றார்

வதுவரர்க ளெல்லோரையும் வகையுடனே யழைத்தந்த
அதிசயமாம் பீடத்திலே அழகாக இருக்கச்செய்தார்

ஒளியுலகின் பெண்கள்நாண ஒளிவீசும் ஜானகியின்
களையைக்கண்டு பிரமித்தாரம்மா கண்கள்கொண்டு
பார்த்தவர்கள்

மாணிக்கச் சுடர்போல மாதேவி ஜானகியாள்
காணுமொரு அதிசயமும் கண்டுமிக மனங்களித்துப்

பொன்சிலையோ? மான்கொடியோ? பூங்கிளையோ?
பூமகளோ?
என்சொல்வோம் ஜானகியை என்றுபல ரதிசயித்தார்

410. மரகதத்தின்முன் ஒளியடங்கும் மாதவன்முன்
மிகவுமம்மா
கருதிச்சொல்லில் பெருகுமது கமலாட்சன் ஸ்ரீராமன்

சூரியனோ குணமலையோ சுகக்கடலோ அபயந்தரும்
நாரணனோ வென்றுமிக நயந்துசொன்னா
ரழைக்கண்டு

கண்ணொளிகள் தம்மைக்காக்கும் கண்ணிமைக
ளொதுங்கி நிற்கப்
பெண்ணரசாம் சீதையையும் பெருமான்ஸ்ரீ
ராமனையும்

406. வதுவரவர்கள் – மணமக்கள்

பார்த்துமனம் திர்ப்த்திகொள்வார் பசிதாகங்
களைமறப்பார்
சீர்பெறவே யனுக்கிரகிப்பார் ஸ்ரீராமனை
மிகஸ்துதிப்பார்

அனுஜரையு மவர்களுக்கு அமைந்தநல்ல
பெண்களையும்
மனங்கொண்டு பார்த்துமிக்க மகிழ்ந்துகொண்டார்
சகலருமே

415. இந்திரசபை தனையும்மிக இகழ்ச்சிசெய்யும் படியாக
அந்தமுள்ள மண்டபத்தில் அனைவர்களும்
அறிந்திடவே

சீதையைஸ்ரீ ராமனுக்கும் சிறுபெண்களை
யனுஜர்கட்கும்
ஒதும்வேத விதிப்படியே உண்மையாகத் தாரைவார்த்து

மேதினியில் புகழடைந்தான் மெஞ்ஞான ஜனகராஜன்
பேதமிலாத் தசரதனும் பெருமையுடன்
கலந்துகொண்டான்

மங்களவாத் தியமுழங்க வானவர்பூ மழைபொழியப்
பொங்கும்அக்னி சாட்சியாகப் பொருந்துமிகச்
சிறந்தான்

மாங்கல்யாதி தரித்துடனே மனதைக்கிய
பாணிக்கிரகம்
பாங்குடனே நடந்துமணம் பரிபூர்ண மானதன்மேல்

420. பெண்களெல்லாம் கூடிக்கொண்டு பெருமையுடன்
சுபகரமாய்
நன்மைதர ஆரத்திகள் நயமுடனே யெடுத்துவந்து

சோபனம்ஸ்ரீ ராமனுக்குச் சோபனம்பூ மகள்தனக்கு
சோபனம்சீ தாபதிக்குத் திருமகட்குச் சோபனமே

ஜானகிதன் மணாளனுக்குச் சகலசத்வ குணாளனுக்குத்
தீனர்கள் தம் தயாளனுக்குத் திவியகசச் சோபனமே

கற்பகப்பூங் ஜாடிதனக்குக் கனஜனகன் மகள்தனக்கு
அற்புதமாம் சுந்தரிக்கு அநந்தசுப சோபனமே

நீலமேக வண்ணனுக்கு நிகிலலோக ஈசனுக்குக்
காலங்கண்ட மெய்யனுக்குக் கர்த்தனுக்குச் சோபனமே

425. நிகலஜகக் காரணிக்கு நித்யகல்யா ணதேவிக்கு
அகிலஜக ரட்சணிக்கு அன்னைக்குச் சோபனமே

சோபனங்கள் பாடிநல்ல துலங்குமணி ஆரத்திகள்
தீபமதால் மக்களுக்குத் திர்ஷ்டிபரி காரஞ்செய்து

கஞ்சமலர்ச் கண்ணனுக்குக் கருமேக வண்ணனுக்கு
அஞ்சலெனுந் தீபனுக்கு அழகனுக்கே மங்களமே

தனமுதலாய்ச் சகலபாக்யந் தருவதற்கு உரியவளாம்
கனமுடைய லட்சுமிக்குக் கமலாட்சிக்கு மங்களமே

பக்தர்கள் சகாயனுக்குப் பவளச்செவ் வாயனுக்கு
முக்தர்கள் நேயனுக்கு முதல்வனுக்கு மங்களமே

430. மெய்ப்பொருளை விளக்குகிற மெய்யறிவைத் தருவதற்கு
வையகத்தி லருள்செய்ய வகிப்பவட்கு ஜயமங்களம்

---

421. சோபனம் - மங்களம்

424 நிகிலலோகம் - அனைத்துலகு

தசரதன் தன் புத்ரனுக்குத் தானவர்பூண்
டொழிப்போனுக்குப்
புஜபலத்தில் நிகரில்லாத பூபதிக்கு ஜயமங்களம்

ஜனகராஜன் புத்திரிக்கு ஜகத்தில்சுபந் தருபவட்கு
மனக்குறையை யொழிப்பவட்கு மகலட்சுமிக்கு
ஜயமங்களம்

கௌசலயாள் மைந்தனுக்குக் கனராமச் சந்தரனுக்கு
எவ்வுலகும் துதிப்போனுக்கு ஏகனுக்குச் சுபமங்களம்

இரகுராமன் பத்தினியாய் இரவிகுலத்தில் வாழவந்த
மிசுவுங்குண பூஷணிக்கு மின்கொடிக்கு மங்களமே

435. அகலிகையை யாதரித்து அனைவர்மெச்ச
வில்பொடித்து
மகலட்சுமியை மணம்புரிந்த மாதவனுக் குமங்களம்

புண்ணியமே பெண்ணுருவாய்ப் பூமிதனில்
தோன்றியதென்
றெண்ணும்படி யுதித்தவளாம் ஈசுவரிக்கு மங்களமே

இவ்விதமாய் மணமக்கள் எல்லோர்க்குஞ் சுபம்பெருகச்
செவ்வையாகப் பாடினார்கள் சீருடனே
பெண்களெல்லாம்

மங்களங்கள் பாடியபின் மரியாதைப் படியெழுந்து
சங்கமதில் அவரவர்க்குச் சாஸ்திரப்படி
வணங்கிமக்கள்

---

431. பூபதி - மன்னன்

அணுக்கிரகங்கள் பெற்றுக்கொண்டார் அதற்கப்பால்
சந்தாதிகள்
அனைவருக்குள் தந்தாரம்மா ஜனங்களெல்லா
மானந்தித்தார்

440. வேதியர்க்கு வெகுவிதமாய் வேண்டுதல்லாந்
தானஞ்செய்து
சாதிமுறைப் படிக்கெவர்க்கும் சரியாக உணவுதந்தார்

விருந்துசெய்த விமரிசையை விரித்துவைக்கில்
மிகப்பெருகும்
அரிதாகும் அவ்விதமாய் ஆதித்தியஞ் செய்பவர்கள்

காரட்சாரங் கலந்துநல்ல காய்கறிகள் பாகமதை
ஆருமுண்டு அதிசயிப்பார் அருசுவையின்
ருசியைக்கண்டு

விமரிசையாய்ச் செய்தநல்ல வெகுட்டாத பட்சியங்கள்
அமிர்தமென்றே நம்பத்தரும் அந்தருசி விந்தையம்மா

பழவர்க்கங்கள் பால்தயிர்கள் பலவிதமாம்
பதார்த்தங்கள்
வழங்கிச்செய்த வைபவம்போல் வையகத்தி
லெங்குமில்லை!

---

442. காரட்சாரங்கலந்து - உப்பு, காரம் முதலியன நன்கு சேர்க்கப்பெற்று

443. பட்சியம் - பட்சணம்

445. வயிறுகொண்ட மட்டுமுண்டு மறுப்படியும்
ருசிநினைவால்
நயந்துகேட்பார் பதார்த்தங்கள் நாக்குதனைத்
தீட்டிக்கொண்டு

ஆரானாலும் பேதமின்றி அவரவரி னிஷ்டப்படித்
தாராளமாய்க் கேட்டமட்டும் தந்துமிக வுபசரித்து

சகலரையுந் திர்ப்த்திசெய்தார் சதிரூஞ்சல்
நலுங்குகளும்
வெகுசிறப்பாய் நடந்துதம்மா வேதியரா சீர்வாதமும்

நாகவல்லித் தினந்தனிலே நன்றாக நடந்ததோடு
தாகங்கொண்டு வந்தவர்க்கும் தகுந்தமற்ற
போர்களுக்கும்

எடுத்தெடுத்துக் கொடுத்ததைநான் என்னசொல்வே
னவ்விதமாய்
ஊடுகரையுங் கொடுப்பாருண்டோ உலகுதனில்
யாருமம்மா

450. ஊர்கோலம் நடத்தியதாம் உச்சவமோ
என்னசொல்வேன்
தேர்குதிரை யானைகளில் தெருவெங்குஞ் சுற்றிவந்தார்

பகலைப்போல் ஒளிவீசும் பலவிதமாம் தீபங்களோ
மிகவுமுண்டு தெருக்களதோறும் திவாகரனை
மீறுமம்மா

---

451. திவாகரன் - சூரியன்

வாணங்களும் பிருகுகளும் வகைவகையா
யெடுத்துவிட்டார்
காணுமம்மா பாணமொன்று கால்நொடியில்
கோடியாகும்

கிளம்புமம்மா பாணங்கள்தான் கிறுகிறென்று
சுற்றியப்பால்
வெளிதனிலே வெடிக்குமம்மா வீரர்கள்போல்
யுத்தஞ்செய்யும்

சைனியங்கள் காணுமம்மா சண்டைசெய்யும்
சாமர்த்தியமாய்ப்
பொய்ப்போரைப் போரெனவே பொருந்தக்காட்டி
மயக்குமம்மா

455. எத்தனையோ அற்புதங்கள் எதிரில்காட்டும்
பாணங்களின்
வித்தைகளைச் சொல்லவுண்டோ? வெகுநேர்த்தி
நேர்த்தியம்மா

அந்தவொரு காட்சிதனை ஆருங்கண்டு மிகப்பிரமித்து
இந்தவிதங் கண்டதில்லை என்றெல்லோரு
மதியசித்தார்

மணம்புரிந்த சம்பந்திகள் மகிமைகளைச்
சொல்லவுண்டோ
குணமிகுந்த போர்களம்மா குவலயத்தி லவதரித்தே

வதுவரர்க ளவ்விதமாய் வாய்த்திடுமோ எங்கேனும்
பதிபத்நிக ளானதன்மேல் அதிகதேஜ ஸடைந்தனரே

---

452. பிருகு - மத்தாப்பு வகை

திருமணங்க ளானதன்மேல் தேர்குதிரை யானையுடன்
பரிஜனங்கள் ஸ்திரிதனங்கள் பலப்பலவும்
வரிசைதந்தார்

தசரதன் பிரயாணஞ் சொல்விக் கொண்டு எல்லோருடன் அயோத்திக்கு வருவது

460. பெண்களுக்குப் பெற்றவர்கள் பிரியமாக
இதமுரைத்துக்
கண்மணியா மவர்களெல்லாம் கணவரிஷ்டப்
படிநடக்க

தருமமெல்லா முபதேசித்தார் தலையில்கொண்டார்
பெண்களெல்லாம்
விரும்பிச்சொன்ன மதியைவிட்டு விலகோமென் றுறுதி
சொன்னார்

ஜாமாதா நால்வரையும் ஜனகராஜன் முறைப்படியே
க்ஷேமாதி மங்களமாய்ச் சீர்பெறுக அனுக்கிரகித்தார்

மாமன்மாமி முதலோரை மாதவனும் தம்பிகளும்
நாமகோத்ரா திகளைச்சொல்லி நமஸ்கரித்தா
ரப்பொழுது

வெகுமதிகள் மிகவுந்தந்து விசுவாசமாய்ப்
பெண்கள் தம்மை
அகமகிழ ஆதரிப்பீர் அதைக்கேட்டு மகிழ்வோமென்று

465. அத்தைமாமன் மார்கள்சொல்லி யனுக்கிரகித்தா
ரதன்பிறகு
உத்தமராம் ஜனகராஜன் உளமகிழ்ந்து ஒடிவந்து

---

459. பரிஜனம் - வேலையாள்; ஸ்திரி தனம் - ஸ்ரீதனம்

462. ஜாமாதா - மாப்பிள்ளை

தசரதற்கு உபசாரமாயத் தயவுசெய்து வந்தெனக்குக்
குசலந்தர மணம்புரிந்தீர் குற்றமேதா கிலுமிருந்தால்

கூமிக்கவேண்டு மென்றுமிக ஜனகராஜன்
கேட்டுக்கொண்டான்
சமபுத்தி யுள்ளநல்ல சாந்தியுள்ள அவரைப்பார்த்து

தசரதராம் அரசர்சொல்வார் தரணியிலே
உம்மைப்போல
நிஜமறிந்த போர்களுண்டோ? நேசமுள்ளோர்
தானுமுண்டோ?

எனதுமக்கள் நால்வருக்கும் இசைந்தபெண்க
ளிவ்வுலகில்
இனங்களிலே யுண்டோவென்று மனந்தனிலே
யெண்ணங் கொண்டு

470. இருக்குமென்மே லன்புகொண்டு எழுதிவிட்டீர்
லக்னபத்தரம்
தருமபுத்தி மிகவுமுள்ள பரமசாது உம்முடைய

சம்பந்தம் சிலாக்யமென்று சகலருமே மிகவுரைத்தார்
நம்பிநானும் பிரியங்கொண்டு நாடிவந்தேன்
மணம்புரிய

பொருந்தியுள்ள பெண்களைநீர் வருந்தித்தந்தீர்
மக்களுக்கு
அருந்ததிபோ லுள்ளபெண்கள் அகமகிழ்ந்தேன்
தந்ததற்காய்

மணஞ்செய்த விமரிசையை மனதிலெண்ணிச்
சொல்லவுண்டோ
குணமாகச் சாலமும்நீர் குறைவின்றிச் செய்தீரையா

467. கூமிக்க - மன்னிக்க

தரணிதனி லும்மைப்போலத் தகுந்தவொரு சம்பந்தம்
இருக்குமென்று சற்றுந்தானே எண்ணுதற்கு
இல்லையையா!

475. மனமகிழ்ந்தேன் மகவுந்தானே மக்களுடன் நானுங்கூடி
அனைவருட னயோத்திசேர அனுமதிப்பீ ரென்று
கேட்டார்

ஜனகன்கேட்டு மிகக்களித்துத் தசரதரை யுபசரித்துக்
கனமடைந்தேன் மனமகிழ்ந்தேன் இனமடைந்தே
னென்றுசொல்லி

அனுமதித்து அனுப்பித்தந்தார் அனைவருடன்
தசரதரும்
மனமகிழ்ந்து அயோத்திநகர் மார்க்கந்தனைப்
பற்றிக்கொண்டு

வரும் வழியில் பரசுராமன் வம்புசெய்யக் கையிலொரு
பருவில்லைப் பிடித்துக்கொண்டுப் பரந்தாம
னெதிரில்வந்து

பதட்டங்கொண்டு அதட்டியவன் பார்த்தவர்கள்
நடுநடுங்க
மதமீறிச் சொல்லுகிறான் மாதவனைப்
பார்த்துநேராய்

480. உன்திறத்தை யறியவந்தேன் ஜனமுள்ள
வில்லொடித்தாய்
என்வில்லை வாங்கியதில் ஏற்றுநாணைப்
பார்ப்போமென்று

---

474. தரணி - உலகு

கொடுத்தான்வில்லைக் கோபமுடன் கோதண்ட
பாணிவாங்கிச்
சடுதியிலே நாணேற்றிச் சரமொன்றை யதிற்கோர்த்து

வழியிதற்கு என்னசொல்வாய் வாய்திறந்து
மொழியுமென்றான்
இழிவடைந்தான் ஏக்கங்கொண்டான் என்னசெய்வோ
மென்றுமிக

பரசுராமன் பரிதபித்துப் பாதுகாக்க வேண்டும்ராமா
அறியாம லுனைவந்து அலட்சியமாய்ப்
பேசிவிட்டேன்

சகலஜகக் காரணனும் சர்வக்ஞனு மாகியவுன்
மகிமைகளை யாரறிவார் மாதவனே கூமித்திடுவாய்

485. ஊசிக்கண்ணா லாகாசத்தின் உண்மைதனை
யறியவெண்ணும்
நீசரைப்போல் நானுமானேன் நினைவுகெட்டுப்
பழிசுமந்தேன்

அகண்டபர பிர்மமேநீ, ஆனந்த வடிவேநீ
இகபரத்தில் யாவருக்கும் இன்பந்தரும் ஈசனேநீ

நிர்க்குணமா யிருந்தெங்கும் நிர்மலமாய்ப் பரவியுள்ள
பரம்பொருளைப் பகைக்கப்போமோ பதறிச்செய்தேன்
மதியிழந்து

சகுணமூர்த்தி யாயிருந்தும் சர்வசக்தி தனைக்காட்டி
மகிமையுடன் லீலைசெய்யும் மாதவனே யாதரிப்பாய்

488. சகுணமூர்த்தி - நற்குணங்கள் பெற்ற உயர்ந்தவர்

உன்னையன்றி யோரணுவும் ஒருநொடியுஞ்
சலிக்கவுண்டோ?
அன்னைதந்தை போலவேநீ அகிலங்களை யாதரிக்க

490. வந்திருக்கும் அந்தவொரு அந்தரங்க மறியாமல்
சிந்தையிலே அகந்தைகொண்டு செப்பிவிட்டேன்
தப்பியுன்னை

துஷ்டர்கிளை நிக்கிரகித்துச் சிஷ்டர்களைப்
பரிபாலிக்க
இஷ்டங்கொண்டு உதித்தவனே அஷ்டலட்சுமி
பதியேயுந்தன்

மகிமையெல்லா மறிந்தேனிப்போ மதமொழிந்த
காரணத்தால்
அகந்தையெல்லாம் விட்டொழிந்தேன்
அடிபணிந்தேன் ஆத்திரமாய்

வந்ததெந்தன் அறிவீனம் வைகுந்த நாதாகேள்
எந்தனிட மிருந்தகலை உந்தனிடஞ் சேர்ந்ததிப்போ

பதினாறு கலையிலொன்றாம் பலத்தைக்கொண்டு
உலகையெல்லாம்
கதறும்படி யடித்தேனையா கையிளைத்தேன்
உனதுமுன்னிப்

495. அகங்கரித்தே னிதுவரையில் ஆருமெதி ரில்லையென்று
மகிமையுள்ள உன்னிடத்து மதமடங்கி மதியடைந்தேன்

தொகுத்தசர உக்கிரங்கண்டால் துடிக்குதையா
ஆவிமிக
நடுங்கியுனைப் பணியுமென்மேல் நட்புவைத்துக்
காத்திடுவாய்

அருமையாக நானடைந்த அருந்தவத்தின்
பயனெல்லாம்
தருவேனுந்தன் சரத்திற்கிரை தயவுசெய்வாய்
பயமொழிப்பாய்

ஸ்ரீராமா வெள்றுமிகச் சித்தம்நொந்து முறையிட்டுப்
பிரீதிகொள்ள மிகவுங்கோரிப் பிரார்த்தித்தான்
பரசுராமன்

கோரிவந்து பேரழிந்து கொதிக்கமனம் மிகநொந்து
ஆருமின்றிப் பாதுகாக்க அகம்வருந்தும் அவன்மீது

500. கருணைகொண்டு ஸ்ரீராமன் கதறியழும் பரசுராமன்
பரிதாபந் தனைப்பார்த்துப் பட்சங்கொண்டு
சரத்திற்காக்ஞை

செய்தானம்மா பரசுராமன் செய்ததவப்
பயனையெல்லாம்
கைக்கொள்ள அந்தப்படி செய்தந்தச் சரமுடனே

அதன்பிறகு ராமனிட அன்புக்காகப் பரசுராமன்
துதித்தான்மிகப் பறந்தானப்பால் தோற்றவனாய்ச்
சேட்டைவிட்டுப்

பரசுராமன் வந்தவுடன் பயந்துமிக மூர்ச்சையாகி
இருந்தவராம் தசரதரை இராமன்வந்து உபசரித்துப்

பரசுராம னோடிப்போனான் பயம்விடுவீ
ரென்றுரைக்க
அருமைமகன் றனைத்தழுவி அதிசயித்தான்
தசரதன்றான்

---

498. பிரீதி – அன்பு

505. புகழடைந்தான் ஸ்ரீராமன் சுகமடைந்தான் தசரதனும்
அகமகிழ்ந்தா ரனைவர்களும் திகிலொழிந்தார்
மன்னவரும்

சுவர்க்கம்போ லலங்கரித்துச் சோபிதமாய் விளங்குகிற
அற்புதமாம் அயோத்திநகர் அனைவர்களும்
வந்துசேர்ந்தார்

வீதியெல்லாம் ஊர்கோலம் வெகுசிறப்பாய்
நடத்தியப்பால்
வேதியர்கள் கூடியுள்ள மேன்மையுள்ள மண்டபத்தில்

கிரகப்பிரவேச மெனுஞ்சடங்கு கிரமமாக நடத்திமிகத்
திர்ப்த்திகொண்டா ரனைவர்களும் சீர்கள்செய்தார்
விதவிதமாய்

மங்களமாய்த் தம்பதிகள் மனைதனிலே
யிருந்துகொண்டு
குங்குமாதி கந்தங்களால் குணமுடனே நலங்குமிட்டார்

510. சதிரூஞ்சல் நடந்தவொரு சந்தோஷஞ்
சொல்லவுண்டோ
மதிமயங்கும் பெண்கள்வந்து அதிசயமாய்க்
கானஞ்செய்தார்

சுபகரமா யுள்ளதெல்லாம் சுட்டிச்செய்தார் திட்டமாக
விபவமுடன் வாழ்ந்திருந்தார் அகமகிழ்ந்து
மக்களெல்லாம்

மனைவிகளோ டிருந்துமக்கள் மகிமையுடன்
சுகமடைய
கனமுடனே பெற்றவர்கள் கண்டுமிகக்
களிப்படைந்தார்

பரதனிட மாமன்மிகப் பிரார்த்தித்த படியினாலே
கருமமவ னிஷ்டப்படிக் கண்மணியா மக்களிலே

சத்துருக்களைப் பரதனோடு சகாயஞ்சேர்த்து
யுத்தாஜிதுவை
சித்தமகிழ்ந் திடச்செய்து சீருடனே யனுப்பவர்

515. கேகயநா டடைந்தாரந்தக் கேகயட்த சஅரசன்
பாக்யம்பெற்றே னென்றுமிகப் பட்சத்தோடு
பேரன்மாரை

அனைத்துமுத்தங் கொடுத்துக்கொஞ்சி ஆனந்த
மடைந்தானம்மா
இணைபிரியா திருப்பவராம் இளையவர்க
ளிருவர்களும்

சுகமாக அங்கிருந்தார் அகமகிழ்ந்து மிகவுமவர்
மகிமையுடன் பாட்டனுக்கும் மற்றவர்க்கும்
மகிழ்ச்சிதந்து

அயோத்யா காண்டம்

ஸ்ரீராமன் லட்சுமணனோடு அற்புதமான புத்தி சக்திகளைக் காட்டி அயோத்தியில் சுகித்திருந்தது

அருமைமக்கள் நால்வர்களில் அனுப்பித்தந்த
இருவர்களைக்
கருதிமனக் குறையடையும் கருணையுள்ள தசரதரை

அடுத்தடுத்துக் குறையொழித்து அவர்மனது
களிக்கச்செய்யத்
தடமறிந்து நடந்திடுவார் தயாபரனும் லட்சுமணனும்

அவர்களினால் அகங்குளிர்ந்து அரசன்மிக
வரிசையுடன்
எவருமகிழ்ந் திடவரசு இதமாகச் செய்துவந்தான்

மகலட்சுமியாம் சீதையுடன் மனங்களித்துத்
தினந்தினமும்
சுகமடைவான் ஸ்ரீராமன் அகமகிழ்வாள் ஜானகியாள்

பதிபத்னிகள் அவர்களைப்போல் பாரிலாரு
மிருப்பாருண்டோ?
மதிமிகவு முள்ளஅவர் மகிமைதனைச்
சொல்லவுண்டோ?

ஐக்யமத்யம் அதிகரித்து அதைவெறுக்கும்
பாவனையாய்
ஐக்யமில்லா லீலைசெய்ய ஆரம்பித்து மிகவுமவர்

---

6. ஐக்யமத்யம் - ஒற்றுமை

மனம்நொந்து வாடுவார்கள் மறுபடியும் கூடுவார்கள்
ஜனங்களெல்லாம் மகிழும்படி மனமொற்று
வாழுவார்கள்

அனுஜனும் ஸ்ரீராமனுமாய் அனுதினமும்
மனங்களித்துக்
கனமுடனே செய்வார்கள் காரியங்கள் தேறிநன்றாய்

எத்தனையோ வீரர்களாய் எதிர்த்துவரும்
போர்கள்தம்மைக்
கத்தும்படி வதைப்பான்ராமன் கண்டவரும்
மகிழ்வாரம்மா

10. இளவரசன் போலராமன் இருந்துகொண்டு
யாவருக்கும்
அளவில்லாச் சுகங்கள்தந்து ஆதரித்து வருகையிலே

தேசமெங்கும் ராமன்சக்தி தெளிவறிந்து அவனைவந்து
ஆசையுடன் அடுத்தெல்லோரும் அனுகூலம்
அடைவதையும்

இராஜ்யதந்திர மிகவறிந்து இராஜ்யபாரம்
வகிப்பதற்கு
பூஜ்யன்ராமன் என்றுலகம் புகழ்வதையும்
பொறுமையையும்

மரியாதை யுடன்மிகவே மகிமைதனை யடைவதையும்
அறிந்துவெகு சந்தோஷத்தை அடைந்தான்ராஜன்
தசரதனும்

இளவரசுப் பட்டமதை இராமனுக்குத் தருவோமாயின்
உளமகிழ நமக்குமுண்டு உலகினரும் மகிழ்ந்திடுவார்

ஸ்ரீராமனுக்கு யுவராஜ பட்டங்கட்டத் தசரதர் யத்தனஞ் செய்தல்

15. என்றெண்ணி யடுத்துள்ள எல்லாதேச மன்னர்களும்
அன்றேவர அழைப்பிவித்து ஆலோசனை
செய்கையிலே

அரசர்முத லனைவர்களும் அவ்விதமாய்ச்
செய்வதுவோ
பரமசுக மென்றுரைத்தார் பரந்தாமன்
றனையழைத்துப்

பட்டங்கட்டுங் கருத்துரைத்துப் பலவிதமாய்
அரசாங்கச்
சட்டதிட்ட முறைகளெல்லாம் சரியாக
விரித்துரைத்துப்

பரதனுக்குப் பட்டங்கட்டப் பண்ணியுள்ள
வாக்குத்தத்தக்
கருத்துஞ்சொல்லி யவனில்லாத காலமதி லுனக்குமுடி

சூடுவதே உசிதமெனும் சூட்சுமமுஞ் சொல்லுகையில்
நாடும்ராமன் மனமறிந்து நயந்துசொல்வான்
அரசன்பின்னும்

20. உன்மனதை யனுசரிக்கும் உத்தமனே பாதனன்றோ?
இன்பந்தரு மரசென்று எண்ணியவ னிஷ்டங்கொள்ள

நேருமாயின் அதுமிகவும் நேரான காரியமல்ல
ஆருமொப்பா ரனுசிதமாய் ஆமந்தக் காரியமே

மூத்தவனீ யிருக்கையிலே முறையல்ல இளையவன்றான்
இத்தரையை யாளுவது ஏற்காது மனுஸ்மிருதிக்கு

ஆகையினால் சித்திரையும் அனுகூலப் பூசமதும்
பாகமுடன் சேரும்நாளைப் பட்டங்கட்டப்
பொருந்தியதாம்

நீயுமுந்தன் பத்தினியும் நேமமுடன் இன்றிருப்பீர்
சாயங்கால மானதன்மேல் சயனியாமல் விழித்திருப்பீர்

25. என்றரசன் ஆக்ஞைசெய்தான் இராமன்கேட்டு
மணமருண்டு
நன்றுசெய்யத் தந்தையெண்ணி நாடிச்சொன்னா
ரிவ்விதமாய்

வாக்குத்தத்தந் தனைவழுவி வாஞ்சையுடன்
தந்தைசொல்லும்
நாக்குறுதிப் படிநடந்தால் நாட்டிலப கீர்த்திவரும்

பரதனிங்கு இருக்கையிலே பட்டங்கட்டல்
பெருமையாகும்
கருத்தைவெளி யிடுவோமெனில் மறுத்திடுவார்
தந்தையென்று

எண்ணியப்பால் ஸ்ரீராமன் எழுந்துதந்தை
பதம்பணிந்து
மண்ணுலகை யாளுந்திறம் மட்டெனக்கு ஆனாலுமே

சுட்டளையின் படிநடப்பேன் கனவிலும்நான்
பிசகுசெய்யேன்
இட்டப்படி யாகட்டுமென் றிவ்வாறு சொல்லியப்பால்

30. அங்கிருந்து அன்னையிடம் அந்தச்சேதி
தனைச்சொல்லி
மங்களமாய் ராமன்வந்தான் மாதாவை நமஸ்கரித்து

---

24. சயனியாமல் - தூங்காமல்

25. ஆக்ஞை - ஆணை

தந்தையாக்ஞை தனைச்சொன்னான் தாய்கேட்டு
மிகமகிழ்ந்தாள்
மைந்தனுக்கு க்ஷேமங்கோரி மனதொப்பி
யனுக்கிரகித்தாள்

தனதுகிரகம் வந்துசேர்ந்தான் தர்மசீலன் ஸ்ரீராமன்
மனைவியோடுஞ் சேதிசொன்னான் மகிழ்ந்தாள்சீதை
மிகவுமம்மா

விரதநியமம் தொடங்குதற்குச் சிரத்தையுட னிருந்தான்
ராமன்
சுருதிஸ்மிருதியின் படிவசிஷ்டர் விரதசங்கல்பஞ்
செய்துவைத்தார்

பக்தியுடன் பத்னியோடு பரந்தாமன் விரதமிருந்தான்
சக்தியுள்ள சர்வேசன் சங்கல்பப் படிநடந்தான்

35. அந்தியிலும் பகல்தனிலும் அனைவர்களும்
நினைவுதனில்
குந்தகங்கள் வராமைக்காகக் கோரினார்கள்
தெய்வந்தன்னை

நகரமெங்கும் அலங்கரித்து நாகசர முதலாகச்
சுகமுள்ள வாத்யகோஷம் சோபிதாய் விளங்குகையில்

முடிசூடும் காட்சிதனை மோகமுடன் காணுதற்குக்
கடுகிவந்தார் ஜனங்களெல்லாம் கணக்கின்றி
அயோத்திநகர்

---

33. விரதசங்கல்பம் - விரத ஆரம்பம்

36. சோபிதமாய் - அழகாய்

ஸ்ரீராமனுக்குப் பட்டங்கட்டுவதைக் கூனி கலைத்தல்

தசரதரின் பத்னிகளில் தாஷ்டிக முள்ளவளாம்
எசஸடையும் கைகையம்மா ளிடந்தனிலே
ஊழியஞ்செய்யும்

அங்கஹீன மிகவுமுள்ள அகங்காரிக்கும் கூனியவள்
எங்கும்வாத்ய கோஷமாக இருக்கக்கேட்டு அந்தமுடன்

40. உப்பரிகை மீதிலேறி ஊரினலங் காரமெல்லாம்
அப்பொழுதே பார்த்தாளம்மா அதைக்குறித்து
அந்தக்கூனி

ரகுபதிக்கு உபமாதா அகந்தையிலா ஸ்திரியவளை
வகைசொல்வா யாடம்பர வரலாறை
யென்றுகேட்டாள்

கபடமில்லா உபமாதா காரணத்தை விரித்துரைத்தாள்
விபரீத மெண்ணிக்கொண்டு விரைவாகக் கைகையிடம்

வந்தவன்மேல் கோபங்கொண்டு வருங்கெடுதி
யறியாமல்
இந்தவிதம் அசந்திருப்போர் எங்குமில்லை
பங்கமுண்டாம்

என்வார்த்தை கேட்பாயம்மா எண்ணியுன்னில்
பார்ப்பாயம்மா
நன்மைசொல்வேன் நானுனக்கு நட்பாயந்த
விதமாகவே

45. இராமனுக்குப் பட்டங்கட்ட இராஜனான
உன்புருஷன்
சீமையெங்கு மறிந்திடவே செய்கிறானே யத்தனங்கள்

பரதனுக்குப் பட்டங்கட்டிப் பார்ப்பதுந்தன்
பெருமையம்மா
தெரிந்துசெய்வாய் காரியத்தைத் தீர்க்காலோ
சனையுடனே

மெய்மறந்தால் மிகவுமம்மா மேதினியி லலைந்திடுவாய்
கைபலம்போம் கண்டுகொள்வாய் சுமலாட்சி
என்றுரைத்தாள்

நடக்குமந்தக் காரியத்தை நாயகிகை கேசிகேட்டு
அடங்காத மகிழ்ச்சிகொண்டோர் ஆபரணந்
தனையெடுத்து

கூனியவள் தனக்குத்தந்து கோரிக்கைப் படிநடக்க
ஏணிந்தப் பேதபுத்தி எண்ணலாமோ? விட்டுவிடு!

50. சொந்தமகன் றன்னைவிடச் சோதரியின் மகன்ராமன்
எந்தனுக்குப் பிரியமுள்ளோன் இவனைவிட்டுப்
பரதனுக்கு

முடிசூடக் கோருவது முறையாமோ? குறையன்றோ?
தடந்தப்பிப் பேசவேண்டாம் தருமமல்ல இதுவுமன்றிச்

சத்தியமுள்ளோன் சாந்தமுள்ளோன் சகலகுணச்
சம்பன்னன்
உத்தமனாம் ராமனாலே உண்டாமோ குறையணுவும்

குடும்பமெல்லாம் அவனாலே குணமடையும்
சனமும்பெறும்
நடப்பானெந்த னிஷ்டப்படி நானேதா
யென்றிருப்பான்

---

52. சகலகுணச் சம்பன்னன் - சகல குணங்களையும் கொண்டவன்.

தாயைவிட என்னிடத்துத் தயவுமிக உள்ளவனே
காயமுள்ள மட்டுமவன் காப்பானவன் தப்பானவன்

55. பக்தியுள்ள புத்திரனடி சக்தியுள்ள மித்திரனடி
முக்திதரும் ஈசனைப்போல் முன்னின்று காப்பானடி

கண்ணில்கண்டால் போதுமடி சுவ்டமெல்லா
மொழியுமடி
மண்ணுலகில் ராமனாலே மனக்குறைகள் தீருமடி

மனதிலந்த ராகவனைத் தினமுமெண்ணில்
பாபமெல்லாம்
தனைப்போல நீங்குமடி தயாபரனே ராமனடி

இவன்வழியாய்ச் செல்வானடி என்மகனாம் பரதனடி
அவனிவனைப் பகையானடி அன்பிவன்மேல்
கொள்வானடி

உயிர்க்குயிரா யுளவனடி உத்தமனாம் ராமனடி
பயமொழிக்குந் தீரனடி பரிசுத்த சீலனடி

60. பட்டங்கொண்டு ஸ்ரீராமன் பாரையாளும்
பாக்கியத்தை
ஒட்டிமன மகிழ்ந்திடவே இட்டங்கொண்
டிருக்கிறேனான்

உன்மதியைக் கேட்டால்மிக உபத்ரவங்கள் நேருமடி
என்மனதாய் ராமனுக்கு ஏதுங்குறை செய்வேனடி

சிலகாலம் போனதன்மேல் ஸ்ரீராமன் பரதனுக்கு
உலகரசு தருவானடி ஒருகுறையுஞ் செய்யானடி

இந்தவிதங் கைகைசொல்ல எரிச்சல்கொண்டு
மிகவுமந்த
மந்தரையாம் கூனிசொல்வாள் மறுபடியும்
இணங்கும்படி

உணர்விழந்த பெண்ணேகேளாய் உனக்குமினிப்
பாக்யமுண்டோ?
மணமுடனே வாழ்ந்துவந்தால் மட்டுப்படும்
மகிமையினி

65. இப்படியும் மகிழ்வாருண்டோ இழிவடைவாய்
விழித்தறிவாய்
தப்பிப்போக வேண்டாமம்மா தலைகீழா யாகுமம்மா

சக்களத்தி மைந்தனாலே சௌக்யமுண்டா மென்று
நம்பும்
அக்கருத்தைக் கொண்டுவீணாய் ஆனந்தங்
கொள்ளவேண்டாம்

உன்னழகைக் கண்டுமன்னன் உன்மீதே
மோகங்கொண்டு
இன்னமுந்தா னிருப்பதிலே ஈரிஷையைக்
கொண்டவளாம்

கௌசலயாள் மனமகிழக் காரியங்கள் நடக்கின்றதே
பவ்வியங்களா யவளுக்குநாம் பணிவிடைகள்
செய்யநேரும்

இப்பொழுது இருப்பதுபோல் இராமனுக்குன் மீதன்பு
எப்பொழுது மிருக்குமென்று எண்ணவேண்டா
மிதுநிஜமே

---

67. ஈரிஷை - பொறாமை

உன்மனம்போல் நடப்பதற்கு உன்மகனே யாவதல்லால்
நன்மைசெய்வான் ராமனென்று நாடுவதால்
கேடுக்கும்

பட்டங்கட்டு மட்டுமுன்மேல் பட்சமுள்ளோன்
போலிருப்பான்
பட்டங்கட்டி லெட்டிநிற்பான் கட்டோடு உனை
மறப்பான்

அடக்கம்போல இருப்பவர்கள் ஆதிக்கம் வந்தவுடன்
கடுகடுப்புக் கொள்ளுவார்கள் கஷ்டநஷ்டப்
படுத்துவார்கள்

பேதமுள்ள பேரைநம்பிப் பிரியங்கொள்ளும்
பேதைகட்குப்
பாதையுண்டாம் வேதனைகள் பலிக்குமம்மா
பலவிதமாய்

நீதியெண்ணி நீநடந்தால் நேராமோ வாழ்வுனக்கு
பாதிவிர்த்தியந் தனைக்கொண்டு பதிமனதை
யனுசரிக்க

சமயமன்று இப்பொழுது சண்டித்தனம்
மிகவும்வேண்டும்
அமைதியைநீ கொள்ளுவாயின் அலைந்துந்துபோய்
நலமிழந்து

தன்வயிற்றி லுதித்தவனால் தாகந்தீரும்
போகமுண்டாம்
அன்பர்களா யாதரவு அடையப்போமோ கடுகளவும்

---

74. பாதிவிர்த்தியம் - கற்பு

பெற்றமகன் றன்னைவிட்டுப் பிரேமைகொள்ளும்
போர்களெல்லாம்
உற்றபடி கெட்டலைவார் சற்றுஞ்சுக மிலையவர்க்கு

ஆதரவா யுள்ளமகன் அலைந்திடவே துணிகிறாயே
பாதுகாக்கான் ஸ்ரீராமன் பட்சம்விட்டுக் கட்சியெடு

இந்தவேளை ராமனுக்கு இராஜ்சியத்தைத்
தந்துவிட்டால்
பிந்தியவன் மகனரசு பெறுவானன்றி வருமோபாராய்

80. அசனார்த்தி யாகவேதான் ஆவனம்மா பரதன்
கேளாய்
எசஸடையானீ நிஜமாகவே எண்ணிப்பாராய்
கண்துறந்து

பரதன்பர தேசியாகிப் பகுகஷ்டப் படுவானே
அருமைமகன் பரிதவிக்க அகுமம்மா உலகங்கொள்வாய்

இனத்தைவிட்டேன் வீணாக இராமன்மீதேன்
பட்சங்கொண்டாய்
மனத்துணிவை விட்டுவிடு மாதவனை மறந்துவிடு

இராமனைநீ நம்பவேண்டாம் இரகசியத்தை
யறிந்துரைத்தேன்
தாமதமே செய்யவேண்டாம் தன்னைமறந்
தாடவேண்டாம்

பரதனுக்குப் பட்டங்கட்டும் பாக்கியமே
பெறுவாயம்மா
அரைநொடியும் அசட்டைசெய்ய ஆகாதம்மா
அறிந்துசெய்வாய்

80. அசனார்த்தி - உணவு உண்பதில் விருப்பம் உள்ளவன்

81. பகுகஷ்டம் - மிகுந்த கஷ்டம்

85. பதினாலு வருஷமட்டும் பரந்தவனந் தனில்வசிக்க
விதித்துராமன் றனையனுப்ப வேண்டுமென்று
கோரிமன்னன்

முன்னுனக்குத் தந்தவரம் முடிவுபெறா
திருப்பதைக்கேள்
உன்னுடைய பெருமையெண்ணி உரைக்கவந்தேன்
மறக்கவேண்டாம்

மன்னவனை நம்பவேண்டாம் மகிழவேண்டாம்
அகந்துணிந்து
சொன்னபடி கேட்டிடுவாய் பின்னம்வரும்
கண்டுகொள்வாய்

பரதனுக்குப் பட்டமாகிப் பதினாலு வருஷமானால்
உரியபடி அவனைவிட்டு ஒதுங்காது அரசென்றுமே

பரதன்செய்யும் ஆளுகையைப் பார்த்தறிந்தா
லதன்பிறகு
கருதவுண்டோ ஸ்ரீராமனைக் கழித்திடுவார்
ஜனங்களெல்லாம்

90. கோருதற்கு மார்க்கமில்லை கோலமதை
மாற்றிக்கொண்டு
தாறுமாறாய் நகைகளெல்லாம் தரைதனிலே
எறிந்துவிட்டு

நீயுஞ்சோக அரைதனிலே நிலத்தின்மீது
படுத்திருப்பாய்
செய்யும்ராஜன் காரியத்தைச் சீர்கெடுக்கத்
துணிந்திருப்பாய்

எதுதந்தாலும் வாங்கவேண்டாம் என்வாக்கின்
படிகேட்பாய்
மதிமயங்கி மோசம்போனால் மகத்தான கஷ்டம்வரும்

காலங்கண்ட அரசனம்மா கண்தாரை விடுவானம்மா
நீலவர்ணன் ராமன்மீது நேசமுள்ள புருஷனம்மா

ஜாலஞ்செய்வான் சரஸமுடன் சுவாதீன
மாகவேண்டாம்
சூலோசிதங் கண்டுசெய்வாய் காரியத்தை
வென்றிடுவாய்

95. பிடிவாதந் தனைவிட்டுப் பேசவேண்டாம் ஆசை
வேண்டாம்
தடுத்துவிடு மறுத்துரைத்தால் தயவணுவும்
கொள்ளவேண்டாம்

இந்தவிதம் எத்தனையோ எண்ணிச்சொன்னாள்
மந்தரைதான்
அந்தவேளை தேவரெல்லாம் அடிபணிந்து
சரஸ்வதியை

வேண்டிக்கொண்டார் கைகேயிவாக்கில் விரைவாய்ச்
சென்று கூனிவாக்கைத்
தாண்டாமல் நடந்திடவே தயாபரியே அருள்புரிவாய்

அந்தவிதஞ் செய்வாயாயின் அரக்கரெல்லாம்
ஒழிந்திடுவார்
வந்துதவி செய்திடவே வானவர்கள் கோரினார்கள்

உலகமெல்லாம் காப்பதற்கு உருவெடுத்து வந்தராமன்
பலவிதமாய் லீலைசெய்யப் பண்ணுவோநா
முதவியென்று

100. வாணிவந்து கைகேயம்மாள் வாக்குதனி
விருந்துகொண்டு
கோணல்முறை யுரைத்தவளாம் கூனிவாக்கை
நம்பிக்கொண்டு

காரியஞ்செய்யக் கைகேயிட கருத்துதனை மாற்றிவிட
நேரென்று கூனிவாக்கை நினைத்துவிட்டாள்
கைகேயியப்பால்

கூனிசொன்ன படியேதான் கோலங்கொண்டு
குறையுங்கொண்டு
தானிருக்கும் நிலையினாலே தாகமதைத்
தீர்த்துக்கொள்வேன்

இல்லையெனில் பிராணந்தனன் இழந்திடுவே
னுறுதியென்று
சொல்லிவிட்டுப் படுத்திருந்தாள் சோகமுடன்
கைகேயம்மா

கல்லுந்தானுங் கரைந்திடுமே கலைப்பவர்க்குச்
செவியைத்தந்தால்
வெல்லப்போமோ அதன்பிறகு வேறுபட்ட மனமதனை

105. பெண்கள்மனம் அசையுமென்று பேசும்சாஸ்திர
விதிப்படியே
உண்மையாகக் கைகேயுமே உணர்விழந்தாள்
போதனையாள்

அந்தவேளை யவளிடத்து ஆசைகொண்டு மூடிசூடும்
இந்தச்சேதி சொல்வோமென்று இராஜன்வந்து
பார்க்கையிலே

அந்தப்புரம் தனைவிட்டு அலங்கோலமாய்ப்
படுத்திருக்கும்
சுந்தரியைக் கண்டரசன் சொல்லுகிறான்
பெண்ணரசே

இப்படியும் வரிசைகெட்டு இருப்பதுண்டோ
குறையுரைப்பாய்
தப்புசெய்தோர் ஆராயினும் தண்டிப்பேன்
கண்டிதமாய்

உன்குறையை யுரைப்பாயாயின் உண்மையாக
அதையொழிக்க
அன்புள்ள ஸ்ரீராமன் அவன்மீது சபதமாகக்

110. காத்திருக்கும் என்னிடத்துக் கருத்துரைப்பாய்
விரித்துமாதே
தேற்றுமென்மே லன்புடனே தெரியச்சொல்வா
யென்றுகேட்டான்

அதுகேட்டு கைகேயம்மாள் அரசன் வாக்கை
யுறுதியாக்கிப்
பதிமனது நோகும்படிப் பயமின்றிப் பேசுகிறாள்

பூர்வமெனக் கிரண்டுவரம் புத்தியொடு தந்தீரன்றோ
தாருமந்த வரங்களிப்போ தடையின்றி யெனக்குடனே

அதிலொன்று பரதனுக்கு அளிப்பீர்பட்டம்
மற்றொன்று
பதினாலு வருஷமட்டும் பரந்தாமன் வனந்தனிலே

இருக்கும்படி ஆக்ஞைசெய்வீர் இப்பொழுதே
அட்டியின்றித்
தருவதற்குப் பின்னடைந்தால் தரியேனுயிர்
விடுவேனென்றாள்

கைகேயி சொன்ன வார்த்தையைக் கேட்டுத் தசரதர் மிகப்பயந்து பதிலுரைப்பது

115. இந்தவிதம் பத்னிசொல்ல இராஜன்கேட்டு
மனமருண்டு
நிந்தனைக்கு ஹேதுவான நினைவுகொண்ட
கைகேயிதன்னைப்

பார்த்துச்சொல்வான் வார்த்தைகளைப் பரிதபித்துத்
துடிதுடித்துச்
சார்த்தகமா யுள்ளநல்ல சரியான மார்க்கம்விட்டுத்

தூர்ப்புத்தி தனைக்கொண்டு தூரதிருஷ்டி தனைமறந்து
அற்பரைப்போ லகங்கரித்து அறிவின்றி யலப்புகிறாய்

உனையடைந்தே னிதுவரையில் ஒருகுறையும்
நானறியேன்
எனதுமனம் வருந்தும்படி ஏன்துணிந்தா யிப்பொழுது

பெற்றவளை விடஉன்மேல் பிரேமைமிக வுள்ளராமன்
குற்றமுனக் கேதுசெய்தான் குறித்துரைப்பா
யதனையிப்போ

120. பர்தன்றனை விடராமன் பகுவிதத்தி லுனக்கிதங்கள்
தருபவனென் றேமகிழ்ந்து தயவுடனே யாதரித்த

நீயேயிந்த விதம்நினைத்தால் நியாயமல்ல நிந்தனையே
தாயேநீ யென்றிருக்கும் தயாபதன்மேல்
கிருபைகொள்வாய்

பரதனுந்தான் என்னசொல்வேன் பரமபக்தி
ராமனிடம்
உரியவனே அவனைப்போல உலகிலுண்டோ
உத்தமனும்

---

116. சார்த்தகம் - நன்மையுடன்கூடி

தேசத்தனை ராமனுண்டால் திர்ப்திகொள்வான் .
பரதன்மிக
ஆசைகொள்ளான் தேசமாள அவன்மனதும் நீயறிவாய்

எங்கும்புக முள்ளவனாம் எவர்குமின்பந் தருபவனாம்
இங்கிதமாய் நடப்பவனாம் எதையும்நன்றா
யறிந்தவனாம்

125. அருமைமகன் ராமனென்று அறியாயோ சரியாகத்
தருமந்தனைக் கடப்பதிலே வருமேபார் குறைமிகவும்

மற்றிரண்டு பத்னிகளை மறந்துன்மே லன்புவைத்துச்
சற்றுமவர் திர்ப்தியின்றிச் சலிப்படையச் செய்துவந்த

அந்தக்குறை தனைநினைக்க ஆவிமிகநோகுதடி
இந்தவிதம் உனதுமனம் இருக்குமென்று அறியேனடி

தாஷ்டிகமாய் நீயிருக்கும் தன்மைதனை யெண்ணாமல்
ஜேஷ்டபார்யை களிருந்த சித்தசுத்தி தனையும்பாராய்

ஆதரித்து யென்னையவர் அன்புடனே யுபசரித்துப்
பாதிவிர்த்திய தருமந்தனைப் பரிபாலித்து
வருமுறையைப்

130. பற்றுவதே யுனதுகடன் பாபமாகு மெனதுமனம்
சற்றும்நேராகச் செய்வாயாயின் சகலசுஷ்ட
மனுபவிப்பாய்

பதிமனதைப் பற்றாதவள் பதிவிரதையென்
றாவதுண்டோ?
சதிமோசஞ் செய்தெனக்குச் சங்கடத்தைத்
தருவதுந்தன்

---

128. ஜேஷ்டபார்யை - மூத்த மனைவி

தருமமல்ல கண்டுசெய்வாய் தருமமல்ல ரவிகுலத்தில்
அரிதாகும் உனதுநடை கபவாதம் வருமுனக்கு

இராமன்வனம் போவானாயின் எந்தனாவி
அந்தவுடன்
தாமதமே யில்லாமல் தாட்டிவிடு மென்றறிவாய்

நீநானென்று பேசவுண்டோ நினைக்கவுண்டோ
பேதம்நம்மில்
நானேநீ யென்றெந்தன் நடையைக்கொண்டா
னுனக்குக்கதி

135. கிடைக்குமல்லா லெனைப்பகைத்தால் கேடுண்டா
முனக்குமிக
அடுக்காத நினைவுவிட்டு ஆத்திரத்தை
யடக்கிக்கொள்வாய்

வரமுனக்குத் தந்ததுண்டு வாக்குத்தப்ப நியாயமில்லை
கருத்திலன்பு கொண்டுதந்தேன் களிப்புடனே
யதன்பலனை

கொடுக்கப்பெற்றால் குணமடைவாய் ஜாதிக்கமனஞ்
செய்துபெற்றால்
இடம்பொருளு மேவல்முதல் எல்லாம்போம்
இழிவடைவாய்

நமஸ்கரித்து வேண்டுகிறேன் நான்சொல்லு
மதிகேட்பாய்
சமபுத்தி கொண்டிந்தச் சாகஸத்தை விட்டுவிடு

எனக்கடங்கி யெதுவுஞ்செய்வாய் இதமெனக்கு
என்றுஞ்செய்வாய்
மனந்துடிக்கச் செய்யவேண்டாம் மறுதளித்துப் பேச
வேண்டாம்

தசரதர் சொன்னதைக்கேட்டு இணங்காமல் கைகேயி பிடிவாதமாய்ப் பதிலுரைப்பது

இந்தவிதம் அரசன்சொல்ல இணங்காமல் கைகேயி
தந்தவரந் தனமைறுக்கத் தந்திரங்கள் பேசுகிறீர்

எந்தவித மானாலுமே ஏன்க்குத்தந்த வரங்களைநீர்
இந்தவேளை என்னுடைய இஷ்டப்படி தந்திடுவீர்

அதற்குத்தடை சொல்வீராயின் அசத்தியவாதி
யென்றும்மை
மதித்திட்வே யாகும்பாரீர் மாறிப்பேசும் வாக்கைவிடும்

இல்லையெனி லுமதெதிரில் எனதுயிரை
விடுவேனிப்போ
சொல்லுமிந்த வாக்கைநம்பும் சோகமதால் ஆவதில்லை

உமதுவம்சந் தனிலொருவர் உரைத்தவாக்கின்
படிநடக்கச்
சமநிறையாய்ப் புறவுக்காகச் சரீரந்தனை
யறுத்துந்தந்தார்

சத்தியகுலந் தனிலுதித்துச் சத்தியங்கெட்டோ
னென்னுபெயர்
இத்தலத்தி லடைவதிலே ஏதுசுகஞ் சொல்லுமென்றாள்

கைகேயியைப் பார்த்துத் தசரதர் கதறியுரைப்பது

கேட்டுமிகப் பரிதபித்துக் விலேசமிகக் கொண்டரசன்
வாட்டமுடன் சொல்லுகிறான் வாய்விட்டுக்
கதறிக்கொண்டு

இப்பரத்தில் சுகமடைய என்னியுன்னை
மணம்புரிந்தேன்
அகம்நொந்து வாடுதற்கு ஆயிற்றிப்போ என்விதியை

என்னசொல்வேன் ஏதுசெய்வேன் எவ்விதமாய்
மனஞ்சகிப்பேன்
தன்னைமறந் தாடிவீணாய்த் தலைகீழாய் நடக்கிறாயே

இப்படியும் பத்னியுண்டோ இணக்கமில்லா
மனைவியுண்டோ
ஒப்பியெந்த னிஷ்டப்படி உள்ளவளென்
றேயிருந்தேன்

என்னைவிட்டு உனக்குமொரு இச்சையுந்தா
னிருக்கப்போமோ
முன்னும்பின்னும் யோசியாமல் முறைதப்பிப்
பேசுகிறாய்

நீசொன்ன படிநடந்தால் நிலையாது என்னுயிர்தான்
ஆசையுடன் மகனுடனே அரசாண்டு சுகித்திருப்பாய்

புருஷராலே யாண்டுவந்த பூமிதனை நீயாண்டு
இருவாரந்தன் பத்னிகட்கும் இடையூறுகள்
செய்திடுவாய்

நான்போயி நீயிருந்து நாட்டிலேதும் பெருமைபெறத்
தானுண்டோ அதையும்பாராய் தாகங்கொண்ட
படிநடந்தால்

பரத்திலுமே யுனக்குச்சுகம் பிராப்தமாமோ அறியாமல்
சீரழியத் துணிகிறாயே சின்னபுத்தி தன்னைக்
கொண்டு

உன்மனம்போ லுன்மகனும் உள்ளவனா
யிருப்பானாயின்
என்பிராணன் போனதன்மேல் எனக்குச்செய்யும்
வினைகளேதும்

அவன்செய்ய வேண்டாமடி அவனும்நீயும்
வாழ்ந்திடுங்கள்
குவலயத்தி லெனையடுத்த கூட்டங்களள
யோட்டிடுங்கள்

அரசனிந்த விதமுரைத்தும் அணுவேனும் கைகேயி
இரக்கமின்றி யிருந்துவிட்டாள் என்செய்வோ
மென்றரசன்

காலடியில் கைகேயிமுன்னே கதறிக்கொண்டு
வீழ்ந்துவிட்டான்
கோலமதை யென்னசொல்வேன் குவலயத்தில்
யாருங்கண்டால்

சகிக்கவுண்டோ வகிக்கவுண்டோ சற்றுசமா
தானமுண்டோ
தகுதியற்ற தரைதனிலே தன்னைப்போல மெய்மறந்து

160. இருப்பவரைப் பார்த்துக்கைகேயி ஏவிந்த
வருத்தமையா
அருமைமகன் பரதனுக்கு அபிஷேக முடிசூட்டி

அசுண்யத்திற்கு ராமனையும் அனுப்புதற்கு
அட்டிசெய்தால்
துரிதமாக ஆவிவிடத் துணிந்திடுவேன் தொல்லுலகில்

நிலைகெட்ட அரசனென்று நிந்தனைக்கு ஆளாவீர்
குலத்தையொத்த சத்தியங்கொள்வீர் குற்றஞ்செய்த
லழகேளவன்றாள்

அரசன்கேட்டு ஆவிநொந்து அறியாம்
லுனையடைந்தேன்
கருணையென்ப தேதுமிலாக் காதகியே
யென்றுரைப்பான்

உக்கிரமுள்ள உனதுகையை ஒற்றுமையாய்ப்
பிடித்ததுதான்
அக்கினிதனைப் பிடித்ததுபோல் ஆயிற்றடி
என்கொடுமை

165. ஆரிடத்துச் சொல்வேனடி ஆசையெல்லா
மொழிந்ததடி
தேறுதலு மில்லையடி தீபோலக் கொளுத்துதடி

வனம்போவென்று சொன்னவுடன் வதிலேதுஞ்
சொல்லாமல்
மனந்துணிவான் போவதற்கு மறுக்கானே ஸ்ரீராமன்

என்வாக்கை மீறியன் இருப்போனன்
றுரைப்பானாயின்
நன்மையுண்டு அவன்சொல்லான் நாம்சொன்ன
படிநடப்பான்

தருமபுத்தி யுள்ளவன்மேல் தயவுசெய்து நீயாக
வர்மம்விட்டு முடிசூட்டில் வாழ்த்துமுன்னை
யுலகமெல்லாம்

என்றுசொல்வி யழுகையிலே இடித்தபுளி
போல்கைகேயி
ஒன்றுஞ்சொல்லா திருந்துவிட்டாள் உள்ளமிக
நொந்தரசன்

170. பலயுகம்போ லன்றிரவைப் பாவித்துக் கடத்திவந்தான்
விலகிரவு யுதிக்கரவி வெகுபேர்கள் முடிசூடும்

பட்டங்கட்ட நிச்சயித்த தினங் காலை வசிஷ்டர் முதலியவர்கள் வந்து தசரதரை அழைத்து வரும் படி சுமந்தரரை யனுப்புவதும் அவரிடத்து ஸ்ரீராமனை யழைத்துவரும்படி கைகேயி சொல்லியனுப்பித் தருவித்து வனம்போகச் சொல்வதும்

காட்சிதனைக் காணுதற்குக் கடுகிவந்தார் சடுதியாக
மாட்சிமையாய் வசிஷ்டமுனி மற்றுமுள்ள பேருடனே.

அரண்மனைக்கு வந்திடவும் அங்குவந்த சுமந்தரரை
அரசரைப்போ ழைத்துவர ஆக்ஞைசெய்தா
ரவ்விதமாய்

சுமந்தரர்வந்து பார்க்கையிலே சோகமுள்ளோர்
போலரசர்
தமதுநிலை தனைமறந்து தரைதனிலே படுத்திருக்கக்

கண்டுமிகக் கவலைகொண்டு கைகேயம்மா
ளிடம்நெருங்க
அண்டிவரு மவரைப்பார்த்து அபிஷேக முடிசூட்டும்

களிப்பினாலே இரவுதனில் கண்விழித்து அரசர்மிகக்
களைப்படைந்து இருப்பதோடு காணுதற்கு
ஸ்ரீராமனைப்

பிரியங்கொண்டு மிருக்கின்றார் பிரேமையுடன்
ராமனைநீர்
அரைநொடியி லிவ்விடமே அழைத்துவாரு
மென்றுரைத்தாள்

அதுகேட்டு சுமந்தரர்மிக அகமகிழ்ந்து ராமனிடம்
இதுசேதி சொல்வதற்கு எண்ணியவள் வெளியில்வந்து

பார்க்கையிலே அரசர்பலர் பணிந்துவந்து தசரதரைப்
பார்க்கமிக ஆவல்கொண்டு பிரார்த்தித்தார்
மறுபடியும்

அரண்மனைக்குள் சுமந்தரர்போகி அறிவித்தார்
அதைக்கேட்டு
அரசன்சொன்னான் ராமனைப்போய்
அழைத்துக்கொண்டு வாருமென்று

180. அந்தப்படி போயழைக்க ஆசையுடன் ஸ்ரீராமன்
வந்துபார்க்கத் தந்தைமுகம் வாடியவர் வருத்தங்கண்டு

கவலைகொண்டு கால்தொழுது கைகேயியையும்
வணங்கிராமன்
வெருக்கென்ன தீங்தோவென்று எண்ணியப்பால்
தாயைப்பார்த்து

யாருக்கென்ன வந்ததம்மா யான்செய்த பிழையென்ன
காரணத்தை யானறியேன் கண்டாலென்னை
யன்புடனே

ஆலிங்கனஞ் செய்துகொண்டு ஆனந்தங்
கொள்ளுமையன்
கோலமிந்த விதமாகக் கொண்டதென்ன
சொல்லுமன்றான்

ஒருவருக்கு மேதுமில்லை ஒன்றுமில்லை அரசருக்கு
கருத்தைச்சொன்னா லுனதுமனம் கசந்திடுமென்
றெண்ணியவர்

183. ஆலிங்கனம் – கட்டியணைத்தல்.

185. சொல்வதற்கு மயங்குகிறார் சொன்னபடி
நடப்பாயாயின்
சொல்வேனா னென்றுரைத்தாள் சுவாமிகேட்டுத்
தாயைப்பார்த்தது

எனதுயிரை யிழந்திடவும் எனக்காக்கை
செய்வாராயின்
மனமுவந்து அதன்படியே மாறாமல் நடப்பேனம்மா

தந்தைமனப் படிநடவா தனபருக்கு மகிமையுண்டோ?
உந்தன்வாக்காய் ஐயன்மனம் உள்ளதைநான்
கண்டுகொண்டால்

அதன்படியே நடப்பதற்கு அணுவேனும் பிசகேனென்று
பதமலரைப் பணிந்துரைத்த பரந்தாமன் றனைப்
பார்த்துப்

பாதகியாம் கையேயியவள் பயமின்றிச் சொல்லுகிறாள்
மாதுருபிதுரு வாக்யங்களை மாறிப்பேசா மகனே
கேளாய்

190. தேவாசர யுத்தமதில் செய்தவொரு உதவிக்காக
ஆவலோடு எனக்கரசர் அளித்தாரப்போ இரண்டுவரம்

இப்பொழுது அந்தவரம் எனதிஷ்டப் படிதரவே
ஒப்பிவிட்டாது ருன்னிடத்து உரைத்திடப்பின்
னடைகின்றார்.

பரதனிந்த உலகையாள்வான் பதினாலு வருஷமட்டும்
பரந்தவனந் தனிலேநீ பாசம்விட்ட முனிவரைப்போல்

---

189. மாதுரு பிதுரு வாக்யம் - தாய் தந்தை சொல்

கனிவர்க்கா திகள்புசித்துக் காலமதைக் கழித்துஜடா
ஜினந்தரித்து இருக்கவென்று செய்தாராக்ஞை
அவ்விதமாய்

நடந்திடுவா யிப்பொழுதெ நாடுவிட்டென்
றுரைக்கைகேயி
படபடப்பாய்ச் சொன்னாளம்மா பக்தியுடன்
ராமன்கேட்டு

195. அந்தவிதம் செய்திடுவேன் அட்டியில்லை தட்டியில்லை
தந்தையாக்ஞை பெரிதெனக்குத் தலையிற்கொண்டு
நடப்பேனம்மா

எங்கிருந்தா லுமெனக்கு இஷ்டமம்மா
இழிவுமுண்டோ?
உங்களிஷ்டப் படிநடந்தாய் உலகில்புக
முடைவேனம்மா

எடுத்தஜன்மம் சார்த்தகமாம் இகபரத்தில்
சுகமுண்டாம்
கொடுத்தவாக்ஞைப் படிநடப்பேன் கொஞ்சமும்நான்
பின்னடையேன்

தாயேநான் வனம்போவேன் தபசிகள்போ
லுமிருப்பேன்
ஆயாச மில்லையம்மா அணுவளவும் நிச்சயமாய்

உம்முடைய அனுக்கிரகத்தால் ஒருகுறையு மின்றியிலே
செம்மையாக வனந்தனிலே வேமந்தனை
யடைவேனம்மா

193. ஜடாஜினம் - சடாமுடியும் தோலாடையும்

தபசிகள்போல் வசிப்பதற்குத் தாகமுந்தா
னுண்டெனக்கு
உபகாரஞ் செய்தாக உள்ளமதில் கொண்டேனம்மா

அரசனாகப் பரதனாக ஆவலுந்தா னுண்டெனக்குப்
பரதனைநான் பேதமாகப் பாவிக்க வில்லையம்மா

ஐயனுக்கு அவ்விதமாய் அபிப்பிராய மிருக்குமதை
ஐயன்வாக்கால் சொல்லாமல் ஆயாசங் கொண்டுகீழே

படுத்துமனம் வருந்துவதேன் பாபமேதும் நானறியேன்
கொடுக்குமாக்ஞைப் படிநடக்கும் குமாரனன்றோ
நானவர்க்குத்

தகுந்தரத மனுப்பியிப்போ தம்மிதனை மைப்பிவிப்பீர்
சுகமுடனே வந்தவனே சூடுமுடி தரித்துக்கொண்டு

இருக்கத்தடை யேதுமில்லை இப்பொழுதே
வனம்போவேன்
அருவருப்புக் கொள்ளவேண்டாம் ஆயாசப்
படவேண்டாம்

என்றுராமன் சொல்லக்கேட்டு இரக்கமின்றிக் கைகேயி
நன்றுசெய்யப் பரதனுக்கு நாடவுன்னைக்
கோரவில்லை

மடத்தைவிட் டோடுவோர்க்கு மனதிலிச்சை நந்தவன
இடத்துக்காக இருப்பதுண்டோ ஏனுனக்குக்
கவலைவேண்டாம்

செய்வதெல்லாஞ் செய்துகொள்வேன் சீக்கிரமாய்
நீநடப்பாய்
ஐயமுனக் கேதும்வேண்டாம் அரசர்வாக்கால்
சொல்லமாட்டார்

சொல்வதைக்கேட் டரசரேதும் சொல்லாம
லிருப்பதினால்
சொல்லுமெந்தன் வாக்கேயவர் சொன்னதாக
? ஆரும்பாராய்

210. நீயிருக்கு மட்டுமவர் நிலத்தைவிட்டுக்
கிளம்பமாட்டார்
வாயும்பேசார் வருத்தங்கொள்வார் வனத்துக்குநீ
போனவுடன்

அழுகையும்போம் அகங்குளிரும் ஆகையினால்
அட்டியின்றி
வழிகேள்வாய் வனம்போக வார்த்தைபேச
வேண்டாமென்றாள்

இராஜனிதைக் கேட்டிந்த இராட்சஸியைப் பத்னியாக
ஆசைகொண் டடைந்ததெந்தன் அறிவீன
மென்றெண்ணி

அலறுகையில் அவரைராமன் ஆதரித்து உபசரித்து
நிலந்தனிலே கிடப்பதையும் நினைத்துமிக
வருத்ததங்கொண்டு

தேசம்விட்டுப் போகுமெனக் காசையுந்தா
மனதுமில்லை
பாசம்ஐயன் மீதிலுண்டு பட்சமுண்டு அன்னைமீதும்

215. அவர்களைநீர் அன்புடனே ஆதரிக்க வேண்டுமம்மா
தவஞ்செய்து பெற்றவளாம் தாயாரையும் சீதையையும்

கண்டுபேசி வருவதற்குக் காலஞ்சற்றுக்
கொடுக்கவும்மை
அண்டிமிக வேண்டுகிறேன் அனுமதிக்க
வேண்டுமென்று

கோரிக்கைகேயி சம்மதமும் கொடுக்கப்பெற்று
ரகுராமன்
ஆறுதலோ டங்கிருந்து அன்னையிடம் வந்துநிற்க

அபிவிருத்தி தனைக்கோரி அன்னையொரு
விரதஞ்செய்து
சுபகரமா யிருந்தளெம்மா சுவாமிநிற்கக் கண்டாளம்மா

கண்டவனை மடியில்வைத்து காய்ட்சையொடு
முத்தமிட்டு
எண்டிசையும் புகழுடையும் என்மகனே கண்மணியே

220. அரசளிப்பா ராசரின்று அதைக்கொண்டு
அமரிக்கையாய்
வரிசையுடன் அரசுமுறை வழுவாமல்
செலுத்தென்றாள்

சொன்னதுடன் அமிர்தான்மை சுகமாகப்
புசிக்கச்சொன்னாள்
அன்னைதனை ஸ்ரீராமன் அடிவணங்கிச்
சொல்லுகிறான்

அன்னமினிப் புசிப்பதற்கு அதிர்ஷ்டமெனக்
கில்லையம்மா
உன்னிடத்து வந்தகாரியம் உள்ளபடி சொல்வேனம்மா

சிந்தைநொந்து வாடும்படிச் சேதிசொல்ல
வந்தேனம்மா
எந்தனைப்பெற் றணுவளவும் இன்பமுனக்
கில்லையம்மா

---

219. காய்ட்சை - ஆசை

220 அமரிக்கை - அமைதி

ஸ்ரீராமன் வனம்போகும் சேதியை கௌசலையிடத்தில் சொல்வதும், அவள் கேட்டு மனம் வருந்தி, அவளுக்கும் ஸ்ரீராமனுக்கும் சம்பாஷணை நடப்பதும், ஸ்ரீராமர் நியாயங்களைச் சொல்லிச் சமாதானப்படுத்துவதும்

அரசரிட ஆக்ஞைதனை அறியச்சொல்வேன்
கேளுமம்மா
பரதனுக்கு ராச்சியத்தின் பட்டந்தந்து
வனத்திலென்னை

225. ஈரெழு வருஷக்காலம் இருக்கும்படி யாயிற்றென்று
கூறுமொழி கேட்டவுடன் கூவென்று கதறிக்கொண்டு

மிரண்துமூர்ச்சை யடைந்ததாயை வெருவிதமா
யுபசரிக்க
எழுந்தன்னை சொல்லுகின்றாள் ரங்கிரங்கிப்
பரிதவித்து

என்மகனே என்வயிற்றில் ஏன்வந்து பிறந்தாயடா
நன்மைசெய்யாப் பாவியான நான்மலடி யாயிருந்தால்

இந்தக்கஷ்ட மில்லையப்பா என்றுமனைக் கில்லைசுகம்
உந்தனாலே கஷ்டமெல்லாம் ஒழியுமென்று
நினைத்திருந்தேன்

பட்டஸ்திரியா யிருந்தும்நான் பகுவிதமாய்
மனம்வருந்திப்
பட்டதெல்லாம் போதாதென்று பரிதவிக்க
ஆனேனிப்போ

230. எத்தனையோ தவங்கள்செய்தேன் ஏதும்பய
னின்றியிலே
அத்தனையும் வியர்த்தமாகி அலைந்திடவே
ஆயிற்றிப்போ

சிறியவர்கள் பரிகசிக்கச் சின்னப்பட ஆயிற்றிப்போ
குறிக்கவுண்டோ என்னைப்போலக்
கொடுத்துவையாய்ப் பாவியைத்தான்

உனைப்பிரிந்து உயிர்தரித்து ஒருநொடியு
மிருக்கவென்றால்
கனவிலுமே யாமோவென்னால் கருத்துமிக
வருத்துதப்பா

உயிரைப்போக்க வுறுதிகொண்டு ஒருவழியு
மதற்கறியேன்
தயிரியமு மில்லையப்பா தலைவிதியை யென்னசொல்ல

கண்மணியே குலவிளக்கே கற்பகமே யெனைப்பிரிய
எண்ணம்வேண்டா முன்னுடனே என்னையும்நீ
யழைத்துப்போவாய்

235. ஊரிலுள்ள போர்களுன்னை ஒருநிமிஷம்
பிரியாரென்னில்
கோரிப்பெற்ற நானுன்னைக் கொஞ்சமுந்தான்
பிரியவுண்டோ?

அரசனைக் கில்லாவிடினும் அருகிருந்தால்போதுமப்பா
அரண்யத்திற்குப் போகும்படி ஆக்ஞைசெய்ய
நியாயமென்ன?

என்னசெய்தாய் குற்றமப்பா உன்னைவனம்
போகச்சொல்ல
மன்னவரு மிவ்விதமாய் மனந்துணிதல் கனமதாமோ?

பிராணனைப்போ லுன்னையெண்ணிப் பரிபாவித்த
போர்களிப்போ
குரோதங்கொண்டு வனமனுப்பும் கொடுமைசெய்யத்
துணிந்தனரே!

பெருமைதரும் புத்திரன்மேல் பிரேமையணு வில்லாமல்
கருதியுனை வனம்போகக் கசந்துரைத்தல்
இசைந்ததாமோ?

240. வேதசாஸ்திர மறிந்தநல்ல விவேகியென்று புகழடைந்த
நீதியுள்ள அரசருமே நேர்தப்பி நடப்பதென்ன?

முறைதப்பி யாப்பதினால் மூவுலகும் பழிக்குமெனும்
குறைதன்னை யெணணாமல் குணந்தப்பிச்
சொன்னதென்ன?

பெண்மதியைப் பற்றுவோர்கள் பேதையாவா
ரென்றுமொரு
உண்மைப்படி யரசர்செய்தால் உலகினரு
மொப்புவரோ?

என்குறையை யெண்ணியெண்ணி யேங்குவதுதான்
அழுதாலென்ன?
நன்மையுண்டோ பாவியெந்தன் கருமவினைக்
கென்னசெய்வேன்?

உடலிலுயிர் படுமவஸ்தை உள்ளபடி யாரறிவார்?
விடியுங்கால மெனக்கேதில்லை மேலுமில்லை
கீழுமில்லை

245. ராசனுமே இரக்கமின்றி இவ்விதமாய்ச்
செய்துவிட்டான்
ஆசையெல்லாம் ஒழிந்ததப்பா ஆவிபோனால்
போதுமப்பா

பரிதபிக்க என்னைவிட்டுப் பரதேசிபோல் நீபோனால்
அரைநொடியு முயிரைவைக்க ஆகாதப்பா
வென்றழுதாள்

அங்கிருந்த லட்சுமணன் அடங்காத விசனமுடன்
கருத்துரைப்பான் அன்னையிடம் கண்சிவப்பாய்
ரோஷத்தோடு

ஏனம்மா வருந்துகிறாய் இப்பொழுதே அண்ணனுக்குக்
கானகம்போம் காரியத்தை நான்தடுப்பேன் அரசுமுடி

ஆடையென்னா லாகுமம்மா சோகம்வேண்டாம்
என்னைவெல்ல
நாடுதனில் யாருமில்லை நான்சகியேன் இப்படியும்

250. அரசனுக்கு மதிகெடுமே அவனையும்கை கேயியையும்
பறக்கடிப்பேன் பரதனுக்காய்ப் பரிந்துவரும்
போர்களையும்

அடிப்பேனிப்போ துடிக்கும்படி அண்ணனைவிட்
டரசினது
முடிசூடப் பரதனுக்கு முறையுண்டோ பார்த்திடுவோம்

காமாதுரங் கொண்டரசன் கண்டபடி
சொல்லவுந்தான்
ஆமோ அதை யனுசரிக்க அண்ணனுந்தான்
துணியலாமோ?

அண்ணனுக்கு வருவதெல்லாம் அடியேனுக்கு
வந்ததாகும்
மண்ணுலகில் அண்ணன்கொள்ளும் மார்க்கமேயென்
மார்க்கமென்று

சத்தியமாய்ச் சொல்லுகிறேன் சக்திதனைக்
காட்டுகிறேன்
குற்றமென்ன செய்ததண்ணன் சற்றுமில்லை
சத்தியசீலன்

---

253. காமாதுரம் - காம மிகுதி

255. வனம்போக நியாயமென்ன வழிதப்ப ஹேதுவென்ன
மனம்போன படிசொல்ல மனுஸ்மிருதியில்
விதியுமென்ன?

ஆகையினால் அஞ்சேனம்மா அரசளிப்பேன்
அண்ணனுக்கு
சோகமெல்லாம் விட்டுவிடு துணிவனிப்போ வென்று
ரைத்தான்

அன்னையிந்த வார்த்தைகேட்டு ஆறுதலைச்
சற்றடைந்து
என்னருமை மகனேராமா இவ்விதமாய்ச் செய்வதுமே

உசிதமப்பா என்னைவிட்டு ஓரிடத்தும்
போகவேண்டாம்
இசைந்ததம்பி சொல்வதெல்லாம் இதமாகக்
காணுதப்பா

தந்தைசொல்லைத் தள்ளிவிட்டுத் தாயின்சொல்லை
யேற்பதுவே
உந்தனுக்குத் தருமமப்பா உரைக்குமெந்தன் வாக்கைநீ

260. மீறுவதா லுனக்குவரும் மிகக்கஷ்ட மென்றறிவாய்
கூறுமொழி தனைக்கேட்டுக் குணமடைவா
யென்றுரைத்தாள்

உரைத்ததெல்லாம் ராமன்கேட்டு உண்மைதில்
வருத்தங்கொண்டு
தருமந்தனை யறியாமல் தாயும்மாம் தம்பியுமாய்

அன்புகொண்டு சொல்லுகிறார் அறிவடையச்
சொல்லுவோம்நாம்
என்றவரைப் பார்த்துரைப்பான் இவ்விதமாய்
ராமச்சந்திரன்

காரணகாரிய மறிந்தால் அதறவுண்டோ பதறவுண்டோ
நாரிகட்குத் தருமமெல்லாம் நாயகரின் ஆக்ஞைதனை

மனதிற்கொண்டு மகிழ்வதுவே மகிமையாகும்
அதைமறந்தால்
கனங்குறையும் கற்பழியும் கதியொழியும் மதியழியும்

265. பார்த்தாவை மீறியேதும் பத்னிகட்குப் பேசவுண்டோ?
கர்த்தனிட்ட கட்டளைபோல் கணவன்சொல்லைக்
காப்பதுவோ?

பத்னிகளின் கடமையாகும் பதிலதற்குச்
சொல்லவந்தால்
பத்னிதருமங் கெடுவதோடு பாபமுண்டாஞ்
சாபமுண்டாம்

மணம்புரியும் வேளையிலே மனைவியர்கள் தமதுமனம்
கணவருக்கே யென்றுதந்து கலந்துகொண்டு பிறகந்த

மனதைத்தம திஷ்டப்படி மாற்றுதற்கு எள்ளளவேனும்
நினைக்கப்போமோ நியாயமாமோ நிந்தனையே
வந்திடுமே

தெய்வச்செய லன்றியிலே திரணமுந்தான்
அசையவுண்டோ
கைவசமா யிருப்பதுவும் கண்மறையும் வேளைவந்தால்

270. அவரவரின் விதிப்பயனை அனுபவித்தே தீரவேண்டும்
குவலயத்தில்தைவெல்லக் கூடாது யாராலும்

கைகையம்மா ளென்மீதில் கருணைமிக வுள்ளவளே
செய்தநன்மை கணக்குமுண்டோ சிறிதுமவள்
எனக்குத்தீங்கு

---

270. குவலயம் – உலகு

செய்யமனந் துணியமாட்டாள் செவியிலாரோ
உரைத்திடவே
வையகத்தி லவள்மனது வஞ்சகமாய் மாறுதற்கு

வினைப்பயனுங் கூடியிந்த விதமாகச் செய்ததாகும்
சினங்கொண்டு நாமெதுவும் செய்வதற்கு
முடிந்திடுமோ?

ஈசனைநாம் எதிர்க்கவுண்டோ ஈசன்செயல்
தடுக்கவுண்டோ
ஈசனரு ளில்லாமல் எதையுந்தா னடையவுண்டோ

275. அணுவையுமே யாளுதற்கு ஆண்டவனார்
அருள்வேண்டும்
துணைசெய்யும் அவனைவிட்டுத் துணிவதெல்லாம்
அறிவீனம்

என்னாலும் எவராலும் எதுஞ்செய்ய ஆய்விடுமோ
எந்நாளும் கடவுளுக்கே எதுவும்வச மென்றறிவீர்

பதியருகி லிருக்கையிலே பதட்டத்தோடு
கைகையம்மாள்
மதியிழந்து பேசுவதால் மயக்கமென்றெ காண்கின்றது

எனக்குத்தந்த ஆக்ஞையுங்கள் எல்லோர்க்குந்
தந்ததாகும்
அனைவர்களும் அதைக்கடக்க ஆகாது ஒருக்காலும்

தந்தைமொழி யெதுவானாலும் தலையில்கொண்டு
அதன்படியே
முந்திச்செய்தா லுண்டுகதி மோசம்வரும் மீறினாக்கால்

280. இந்தவிதம் ராமன்சொல்ல ஏங்கிமிக அழுதாளன்னை
சிந்தைநொந்து ருகவேண்டாம் செப்புகிறேன்
கேளுமம்மா

என்னிஷ்டப் படிநடக்க ஏதுந்தரும மில்லையம்மா
உன்னைவிட்டுப் போவதற்கு உறுதியுந்தா
னில்லையம்மா

பத்தும்நாலுங் கடத்திவந்து பாங்குடனே
பணிவிடைகள்
சித்தசுத்தி யோடுஞ்செய்வேன் சீக்கிரமாய் வந்திடுவேன்

அனுக்கிரகித்து அனுப்புமம்மா அரணியத்தி லெனக்
கணுவும்
நினைக்கவேண்டாம் குறையணுகா நேராக
வருவோனன்றான்

அனுஜனிந்த வார்த்தைகேட்டு அதிகமாகக்
கோபங்கொண்டு
தனதுகைகால் பரபரக்கத் தன்னைமீறிப் பேசுகிறான்

285. அண்ணாயே னுமக்கிந்த அஞ்ஞானம் விடுவீரதைக்
கண்ணான மகனென்று கருணையென்ப தில்லாமல்

மோகவச மாகியையன் முறைதப்பி யுரைப்பதைநீர்
ஊகங்கொண்டு அறியாமல் உட்படுதல் அழகல்லவே

தம்பதிக ளிருவர்களும் தமக்குள்ளே பேசிக்கொண்டு
நம்பும்படி வரங்களுக்காய் நாக்குறுதி செய்ததுபோல்

கற்பித்துப் பேசுகிறாள் கணிசமாகக்
கொள்ளவேண்டாம்
அற்பபுத்தி யுள்ளவர்கள் அவர்கள்வாக்கை
நம்பவேண்டாம்

உலகமொப்ப நடப்பவரை உபசரிக்க வேண்டுமண்ணா
கலகஞ்செய்யும் பேரையெல்லாம் கண்டிக்க
வேண்டுமண்ணா

290. தடமறிந்து நடக்குமட்டும் தாய்தந்தை முறையுண்டு
தடம்விட்டு நடப்பாராயின் தள்ளுதற்கு நியாயமுண்டு

தருமவழி தனைமறந்து தனதுநிலை தனையும்விட்டு
நிர்நிமித்தம் அரசர்சொல்லும் நேரில்லா வாக்கின்படி

நடப்பதற்குக் கடமையில்லை நாட்டிலுள்ளோ
ரொப்பவில்லை
தடமறிந்து சொல்வோரைத் தாற்பரியங்
கேட்கவில்லை

அரசாங்கக் காரியங்கள் அனைவரையும் வரவழைத்து
சரியாகச் சபைகூட்டி சகலருக்குந் திருப்தியாக

செய்துவந்த முறைப்படியே செய்தும்மை வனமனுப்ப
ஐயனாக்ஞை செய்ததுண்டேல் அதுவொருக்கால்
ஞாயமாகும்

295. பெண்மதியைக் கேட்டுக்கொண்டு பேசுமையன்
வாக்கிலேதும்
சுண்யங்கொள்ள நியாயமில்லை கட்டுப்பட
வேண்டாமண்ணா

---

288. கற்பித்து - கற்பனை செய்து

291. நிர்நிமித்தம் - காரணம் இல்லாது

காலதேச வர்த்தமானம் கண்டுசெய்ய
வேண்டுமண்ணா
நாலுங்கண்டு செய்யாவிடில் நகைத்திடுமே யுலகெங்கும்

கடவுள்செய்கை யென்றுசொல்லும் கதைகளெல்லாம்
இளைத்தவர்க்கே
கடவுளென்ன செய்யக்கூடும் கைபலத்தோர்
முன்னிலையில்

அதையுந்தானே பார்த்திடுவோம் அபஜயமும்
வந்திடுமோ
இதையுமொரு காரணமாய் எடுத்துரைக்க
வேண்டாமண்ணா

என்னைவெல்ல யாருமில்லை என்னெதிரில்
வருவோரில்லை
அன்னைமனம் வருந்தவிட்டு அரண்யத்திற்குப்
போகவேண்டாம்

300. தாருமெனக் காக்ஞைதனை தரிக்கச்செய்வே
னுலகையெல்லாம்
பாருமிப்போ எனதுசக்தி பயப்படவே நியாயமில்லை

உமக்குமுடி சூடுமட்டும் உள்ளமெனக் காறாதண்ணா
இமைப்பொழுதில் சூட்டுவேனே எனக்காக்ஞை
தந்திடுமே

என்றுதம்பி பறப்பதையும் ஏங்கியன்னை யிருப்பதையும்
நின்றுராமன் கண்டுமிக நினைவுதனில்
கவலைகொண்டு

ஏதிவர்கள் இவ்விதமாய் இணங்காமல் வருத்திநம்மை
மதிமயக்கந் தருகின்றாரே மார்க்கமென்ன
வென்றுசற்று

யோசித்து அதன்பிறகு யோக்யமல்ல இனியிருந்தால்
பேசுவாளே கைகையம்மாள் ஏசுவாளே யென்றெண்ணி

305. மாதாவைப் பார்த்துரைப்பான் மகிமையுள்ள தாயே
கேள்
வாதாடும் தம்பிவாக்கு வகைமோசஞ் செய்யுமம்மா

மக்களுக்கு ஆக்ஞையிட மற்றவரைக் கேட்டிடவும்
தக்கதில்லை தருமமில்லை தம்பியதை யறியவில்லை

குழந்தைப்பிள்ளை தம்பிசொல்லைக் குணமாக்கிக்
கொள்வேனாயின்
இழிவடைவேன் எனக்கதிலே இஷ்டமில்லை
வனம்போவேன்

இதுவரையில் தந்தைவாக்கை ஈஷத்து மீறாமல்
மதியென்று நம்பியந்த வாக்கின்படி நடந்துவந்தேன்

நீதியென்று மநீதியென்றும் நினைப்பதற்கு
நியாயமில்லை
வேதவிதி போலவேயாம் விதிக்குந்தந்தை
யாக்ஞையம்மா

310. நஷ்டலாபம் தந்தைக்கல்லால் நாமதனை
யெண்ணவேண்டாம்
இஷ்டப்படி அவருரைப்பார் இணங்குவது நமதுகடன்

ஆதரித்தார் அறிவளித்தார் அநேகவிதச் சுகமளித்தார்
போதந்தந்தார் வேதமதின் பொருளறிய அருமையாகப்

பாதுகாக்க வுள்ளவர்கள் பட்சிக்க நியாயமுண்டு
சாதிக்க வுள்ளவர்கள் சலிப்படைய நியாயமல்ல

308. ஈஷத்து - கொஞ்சம்

இன்பந்தர வுள்ளவர்கள் எடுத்துரைக்கும்
ஆக்ஞையினால்
துன்பந்தரு மென்றுநம்பித் தூஷிப்பது புத்தியல்ல

இஷ்டப்படிச் சுகமளித்தால் எண்ணிமிகப் புகழுவதும்
கஷ்டந்தரும் வேளையிலே கடிந்துமிகப் பேசுவதும்

315. அற்பருக்கே யடுக்குமம்மா அடியேனுக்கு
அடுக்காதம்மா
கற்பிவித்த பரமகுரு கட்டளையை மீறிப்போகா

கஷ்டசுகம் இரண்டையும் கலந்துசம பாகங்கொள்ள
இஷ்டங்கொண்டு சொல்லியதாய் இருக்குமம்மா
மறுக்கப்போகா

அதிபால்யத்தில் விசுவாமித்ரர் அழைத்துப்போக
விட்டதையும்
இதுவரையில் வெகுசுகமாய் இருக்கும்படி வைத்ததையும்

எண்ணிப்பார்க்கில் சுகதுக்கம் இரண்டையும் சமமாக
எண்ணிச்சாந்தி யடையுதற்கே இருக்குமென்று
நம்பலாமே.

ஆகையினா லெனக்குத்தீங்கு நேயனெண்ணிச்
சொன்னதல்ல
தாகங்கொண்டு எசலடைய தந்தஆக்ஞை யென்றறிவீர்

320. எந்தன்கூட வருவதற்கு எண்ணுவது தருமமல்ல
இந்தவேளை பார்த்தாவிடம் இருப்பதுவே யுசிதமம்மா

பார்த்தாலைப் பிரிவதினால் பாபமுண்டாம்
சாபமுண்டாம்
சிரத்தையொடு பதிசிசுருஷை செய்துகொண்டு
பதிவிரதையாய்

இங்கிருக்க வேண்டுமம்மா இன்னுஞ்சொல்வேன்
கேளுமம்மா
அங்கந்தனைக் கொண்டுதானே அஞ்ஞானம்
வருத்துமம்மா

பிறக்குமுன்னே எனக்குமச் நம் பிரேமையென்ப '
தேதுசொல்வீர்
கருமவசத் தாலுதித்த காயமதைக் கண்மறையும்

பேதபுத்தி யாலேயிந்தப் பிரபஞ்சமெல்லாம்
காணுமம்மா
போதங்கொண்டால் நிலையாமல் புவிகளெல்லாம்
மறையுமம்மா

325. அபிமானங் கொள்ளுதற்கு அஞ்ஞானம் காரணமே
தபசிகள்போல் சீலமுள்ள தாமுந்தாகப்
பாதைகொண்டு

நிலையில்லா வாழ்வையொரு நிலைப்பால
நம்பிவீனாய்ப்
புலங்களிலே புத்திகொண்டு புலம்புவது
பெருமையாமோ?

சாரமுள்ள மட்டுமுண்டு சகலமுமே யொழிந்தால்தேகம்
குறித்தறியப் போமோயிந்தக் குவலயத்தில்
வாழ்வைச்சற்றும்

321. சிசுருஷை - பணிவிடை

உள்ளதெல்லாம் ஆத்மாவொன்றே உலகமெல்லாம்
மித்தையம்மா
கள்ளப்புலன் களினாலே கலகங்கள் விளையுமம்மா

புலங்கள்விட்டுப் புத்திதனைப் போதகமாக
நிலையாக்கில்
பலநினைப்பு ஒழியுமம்மா பரமார்த்தம் விளங்குமம்மா

330. விவேகங்கொண்டா லன்றியிலே விளங்காது
ஆத்மநிலை
அவிவேக மீறிநிற்கும் அகமுள்ள மட்டுமம்மா

ஜீவபாவங் கொண்டவர்கள் சிரமப்படுவா ருலகுதனில்
ஆவலெல்லா மடக்குவோர்கள் ஆனந்த மடைவார்கள்

மனதைவச மாக்கிக்கொள்ளும் மர்மமதை
யறிந்தவர்கள்
வினைப்பயனை வெல்லுவார்கள் விட்டுவிடு
மவரைப்பந்தம்

தோற்றுமிந்த ஜகத்தில்பல தோஷங்கள் காணுமம்மா
ஆற்றுமம்மா அறிவுகொண்டால் அபேதநிலை
யெட்டுமம்மா

போனவழி மனதைவிட்டால் புலங்களினால்
மலங்களுண்டாம்
ஆனமட்டும் அடக்கியாண்டால் அஞ்ஞானம்
தொலையுமம்மா

335. மோட்சந்தனைத் தடுக்குமம்மா மோகமெனுந் தாகமது
காட்சியெல்லாம் மோட்சமதாய்க் காட்டுமம்மா
சாட்சியாகில்

329. பரமார்த்தம் - மெய்ப்பொருள்

333. அபேதநிலை - சமநிலை

சகலத்திற்கும் ஆதாரம் சத்தியமா யுள்ளா ஆத்மா
சுகமயா யுள்ளதது சோதித்தால் விளங்குமது

அனுசந்தானஞ் செய்துபர மாத்மஞானமடைந்தவர்க்கு
மனமயக்க மில்லையம்மா மனக்குறையு மில்லையம்மா

விஷயங்களை நம்பிக்கொண்டு விசனப்பட
லாகாதம்மா
நிசமாக வுள்ளதல்ல நீநானென்னும் பேதமம்மா

நீநானென்னும் தோற்றமெல்லாம் நினைவிலன்றி
அறிவிலில்லை
நானாலிதப் பேதமெல்லாம் நஷ்டமாகும்
சுவரூபத்தனில்

340. தேகம்வந்த காரணத்தால் தேகியென்று அகங்கரித்துப்
போகமதை நாடிவீணாய்ப் பூமியிலே கஷ்டசுகம்

கலந்திருக்கும் அவஸ்தைதன்னைக் காலமெல்லாம்
நம்பிக்கொண்டு
நிலையின்றி யலைவதுவே நினைவினது தன்மையாகும்

தேகபந்த மொழியாவிடில் தேகியெனும் அபிமானி
வேகங்கொள்ளும் விசனப்படும் வெகுஜன்மந்
தனையெடுக்கும்

பிரேமையுண்டாம் பிராந்தியினால் பிரித்தறிந்தா
லொதுங்குமது
குரோதாதி குணங்கள்தந்து கொடுமைசெய்யும்
பிராந்தியம்மா

337. அனுசந்தானம் - தியானம்

343. பிரேமை (பிரமை) - பிழையாக உணர்தல்;
பிராந்தி - மோகம்

மத்தியிலே வந்தது மதிமோசம் செய்யுமது
நித்தியநிலை தனிலேயது நிற்காம லழியமம்மா

345. ஆத்மநிலைக் கழிவில்லை அதையாளும் பேர்களில்லை
சாத்வீகக் குணமிருந்தால் சரியாக விளங்குமது

அறிவினாலே ஆராய்ந்தால் ஆத்மாவாக மிஞ்சுமம்மா
குறித்தறியாப் பேர்களெல்லாம் குறைப்படுவார்
மறைப்படைந்து

கருமவசந் தனைத்தழுவிக் காயமது தோன்றிவந்து
தருமந்தனை யனுசரித்துத் தாகமெல்லா
மொழித்திடவே

ஜன்மம்வரும் ஜீவர்கட்குச் சலனமில்லா
மனதடைந்தால்
தன்மயமாய் விளங்கவுண்டு தத்துவத்தை
யறிந்துகொள்வீர்

தனதுநிலை யறிவதற்கே தரணியிலே யுதித்துவந்தோம்
மனமடக்கி யாளாவிடில் மகத்தான கஷ்டம்வரும்

350. அறிவிழந்தா லந்தகாரம் அனுசரித்து அஞ்ஞானம்
விரிந்துவெகு வேற்றுமைகள் விளங்கச்செய்து
வேதனைகள்

தந்துவிடு ஆகையினால் தத்வார்த்த ரகசியத்தைச்
சிந்தையிலே கொள்ளுமம்மா சின்மயத்தை
யெண்ணுமம்மா

---

345. சாத்வீகம் - சாந்தம்

351. சின்மயம் - ஆன்மமயம்

அஞ்ஞானம் தனைவிடுத்து ஆத்மஞானம் தனையடுத்து
மெஞ்ஞானந் தனையடைந்து மேன்மைபெற
வேண்டுமம்மா

உள்ளபொருள் தனையடைய உழைப்பதுவே
கடமையம்மா
தள்ளுமம்மா மனக்கவலை தைரியத்தைக்
கொள்ளுமம்மா

துக்கசுகந் கலந்துள்ள தொல்லுலகில் நிலையாக
தக்குமோதா எனதுவுமம்மா தம்மில்சற்று யோசியுமே

355. வந்ததெல்லாம் தாங்கவேண்டும் வழிகொண்டே
நடக்கவேண்டும்
அந்தரங்கம் அறியவேண்டும் ஆறுதலை
யடையவேண்டும்

வேதாதி சாஸ்திரமெல்லாம் விதிக்குதம்மா
தந்தைசொல்லை
ஆதாரமாய்க் கொண்டதனை அனுசரிக்க
வேண்டுமென்று

இந்தவித முந்திச்சிலர் ஈஷத்துந் தயவின்றி
தந்தைவாக்குப் பிடிநடந்தார் தருமமென்றே
புகழ்வாரதை

நானுமந்த வழிநடந்தால் நாலுடையேன் நன்மைமிகுக்
கானகத்தி லுமதருளால் கஷ்டமெல்லாம் விலகுமம்மா

இந்தவித மகனுரைத்த இதமான வாக்யங்களைச்
சிந்தையிலே கொண்டன்னை சித்தசுத்தி மிகவடைந்து

360. வாரிக்கட்டி முத்தமிட்டு வாஞ்சையொடு
அனுக்கிரகித்துக்
கோரிநல்ல ரட்சைகட்டிக் குனமுடைய
எல்லாஞ்செய்து

அனுமதித்தாள் வனம்போக அனுஜனப்பா
லடங்கிவிட்டான்
மனந்துணிந்தான் தானுங்கூட வனம்போவே
னென்றுதானே

சுமித்திரையை வணங்குராமன் சோகமின்றி
யனுமதித்தாள்
அமைதியுள்ள ஸ்திரீயவளே அறிவில்மிகச் சிறந்தவளே

மற்றுமுள்ள தாய்மார்க்கு மனதைரிய மிகவுரைத்து
உத்தமனாம் ஸ்ரீராமன் உடனேயந்த விடத்தைவிட்டுச்

சீதையிடம் வந்துசேர்ந்தான் ஸ்ரீராமன் முகந்தன்னை
மாதரசாம் சீதைகண்டு மனநிலைமை மாறுதலாய்

இருக்கும்போலே அறிந்துகொண்டு என்பிராண
நாயகரே
வருத்தமென்ன மனதுதன்னில் வாஸ்தவத்தைச்
சொல்லுமென்றாள்

பிராணசகி மனம்பதறப் பீதிகொண்டு
சொல்லுமென்று
பிரார்த்தித்த ஜாடைகண்டு பிரேமையொடு ஸ்ரீராமன்

கண்ணேபெண்ணே கலங்கவேண்டாம் காரணத்தைச்
சொல்வேனிப்போ
எண்ணமதி லேனுனக்கு ஈஷத்தும் அஞ்சவேண்டாம்

---

360. ரட்சை - காப்பு

வனம்போகும் சேதியை ஸ்ரீராமர் சீதையிடம் சொல்வதும் அதைக்கேட்டுத் தானும் வருவதாகச் சீதை வாதிப்பதும் அதற்குக் கடைசியாய்ச் சுவாமி இணங்குவதும்

பரதனுக்குப் பட்டந்தந்து பதினாலு வருஷமென்னை
அரண்யந்தனி லிருக்கும்படி ஆக்ஞைசெய்தா
ரரசரிப்போ

அந்தப்படி போவேனான் அரண்யவாசஞ் செய்துவந்து
உந்தனுடன் வாழ்ந்திருப்பேன் உமதுமாமி
மார்களுக்குப்

370. பணிவிடைகள் செய்துகொண்டு பரதனிட ஆதரவில்
குனமுடனே அடக்கந்தனைக் கொண்டுடம்ப
மில்லாமல்

இருப்பாயென்று ராமன்சொல்ல ஏனிந்தப்
பேதயெண்ணம்
சரியல்ல வும்மைவிட்டுச் சற்றுமிங்கு நிற்கவுண்டோ?

நாயகரே உமைப்பிரித்து நானிருக்கேன் ஒருநொடியும்
காயத்திற்கு உயிரைப்போல் கணவரான நீரெனக்குப்

பிராணனாக இருக்கையிலே பிரிந்துபோக
இருப்பதென்ன?
திராணியுனக் கில்லையெனில் தேடிமனம்
புரிந்ததென்ன?

நீரிருக்கு மிடமெனக்கு நேர்த்தியுள்ள சுகஸ்தலமாம்
ஊரிலெனக் கேதுகாரியம் உம்முடனே நான்வருவேன்

375. உமக்குந்தந்த கட்டளையில் ஓர்பாதி எனக்குமுண்டு
தமதுதேகந் தனிலேநான் தருமமாகப் பாதியன்றோ?

என்னைவிட்டுப் போவேனென்று எப்படித்தான்
சொல்லக்கூடும்?
அன்னைதந்தை முதலோரால் ஆவதென்ன
எனக்கையா?

பாக்யம்வேண்டாம் சுவர்க்கம்வேண்டாம் பாரிலெனக்
கேதும்வேண்டாம்
ஆக்குமும்மை யடுத்தாலென்னை அகமகிழ
வென்றுரைத்து

கண்ணில்தாரை பெருகமிகக் கலங்கும்சீதை
தனைப்பார்த்து
எண்ணிராமன் சொல்லுகிறான் ஏனுனக்கு
இந்தப்பிரமை

வேண்டாமெந்தன் பிராணப்பிரியே வெருகவ்டம்
வனத்திலுண்டு
தாண்டாம லெனதுவாக்கு தனைக்கொண்டு
இங்கிருப்பாய்

380. சிம்மமுண்டு புலிகளுண்டு சீறிவரு மிருகங்களுண்டு
ஒம்மையது வந்தடுத்து நானாவித இம்சைசெய்யும்

கல்லில்முள்ளு மிகவுமுண்டு காலில்படும் வழிதனிலே
அல்லும்பகல் காற்றுமிக அடித்திடுமே கோரமாக

படுக்கவிட மேதுந்து பாதுகாக்க இனமுமேது?
நடுக்கங்கொள்வ எல்லாமுண்டு நாகமுண்டு
நரிகளுண்டு

பானஞ்செய்ய நீரிதே பசிதீர்க்க வுசிதமாக
ஆனதொன்றுங் கிடையாதங்கு அறியாமல்
தனிகிறாயே

கானகமிலே இருளைக்கண்டால் கலங்கிமனம்
வருந்துவாயே
ஏனுனக்கு வனவாசம் ஏற்காது பெண்ணரசே

385. ஒரு நிமிஷம் நீசுகிக்க ஒண்ணாது வனவாசம்
தெரியாமல் பேசுகிறாய் தீங்குடைவாய் வருவாயானால்

நகரம்விட்டு நகருவது நன்மையன்று நாரிகட்குச்
சுகமில்லை வனவாசம் சோகந்தரும் மிகவும்பாராய்

ஆசைகொண்டா லலைந்திடுவாய் அரண்யமுனக்
குரியதல்ல
நேசங்கொள்வாய் யென்வாக்கை நிராகரிக்க
வேண்டாம்பெண்ணே

உனைப்பிரிந்து நாநிருக்க ஒருநொடியும் மனஞ்சகியேன்
மனுவாதி ஸ்மிருதிகளொடு மகிமையுள்ள வேதங்களும்

பிதுருவாக்கிய பரிபாலமை பிள்ளைகட்கு
முக்கியமென்ற
விதிப்பதோடு அதைக்கடந்தால் விலகிவிடும்
புண்யமெல்லாம்

390. அதுவுமின்றி யதோசுதியை யடைந்திடவே
யாகுமென்று
இதமாக வுரைக்கும்போ நு எப்படிநான்
அதைக்கடப்பேன்

ஆசையினால் போய்வருவேன் அதுவரையு மிங்கிருந்து
தாகமெல்லா மென்மீதுவைத்து தருமமாக நடப்பா
யென்றான்

சீதைகேட்டு மிகவுந்தானே சித்தம்நொந்து
பதியைப்பார்த்து
நாதனேயென் நாயகனே நான்வருந்த வனைப்பிரிந்து

போவதற்கு நினைப்பீராயின் போக்குவேனான்
பிராணன்தனை
ஆவலோடு உனையடைந்த அதிர்ஷ்டந்தனை
என்னசொல்ல?

புருஷரைப்போ லுருவெடுத்துப் புத்தியெல்லாம்
ஸ்திரீயைப்போல்
இருக்குமும்ம குணமதனை எனதுதந்தை யறியாமல்

395. என்னையும்ம கையில்தந்த என்குறையை
என்னசொல்வேன்
மன்னவரென் நும்மையெண்ணி மகிழ்ந்திருந்தே
னறியாமல்

பாகுபலம் உமக்கிருந்தால் பயப்படவும்
நியாயமுண்டோ?
சோகமது ஏன்வருமோ சூரரென்றோ நீர்நிஜமாய்

பருவமுள்ள பத்னிதன்னைப் பலரிடத்தில்
இணங்கச்செய்யும்
அருவருப்பு உள்ளவர்போல் ஆவிரே எனைப்பிரிந்தால்

சகியாமல் சொல்லிவிட்டேன் ட்சமித்தென்னை
பழைத்துப்போவீர்
அகமகிழ்வே னும்முடனே அரண்யவாசம்
நானும்செய்வேன்

வனத்துக்கென்னை யழைத்துப்போக வாக்குத்தத்தம்
முந்தியொரு
தினந்தனிலே செய்ததையும் சித்தந்தனி
லெண்ணிப்பாரீர்

400. கைரேகை பார்ப்பவரும் காலங்கண்ட ஜோசியரும்
ஐயமின்றி யுரைத்ததுண்டு அரண்யவாசம் சிலகாலம்

உண்டெனக்கு என்றபடி ஒற்றுமையும் நோர்ந்ததிப்போ
கண்டுசொன்ன அவர்வாக்கைக் கனப்படுத்த
வருவேன்நானும்

இகத்திலும்மைப் பிரிந்திடாமல் இருந்துமக்குப்
பணிவிடைகள்
தகுதியாகச் செய்வதுவே தருமமாகும் எந்தனுக்கு

உமதுநிழல் போலவென்னை உள்ளமதில்
கொள்ளுவீரே
இமைப்பொழுதும் உமைப்பிரிந்தால் இழிவடைவேன்
இதுநிஜமே

உயிருடலைப் பிரிதல்போல உமைப்பிரியுங் காரியமாம்
வியர்த்தமப்பா வெனதுதேசம் வேண்டாமையா
யழைத்துப்போவீர்

405. எந்தலோக மடைந்தாலுமே எனக்குப்பழி நீரென்றே
சிந்தையிலே கொண்டவள்நான் ஸ்ரீராமா பிரிதலாகா

எனதுகையைப் பிடிக்கையிலே என்னசொன்னீர்
எண்ணிப்பாரீர்
மதைதிய எப்பொழுதும் மாறாமல் என்னுடனே

வாழ்வதற்குப் பிசகேனென்று வாக்குறுதி
செய்ததைத்தான்
தாழ்வடையத் துணிவதும்ம தருமமல்ல யோகியுமே

தருமபத்னி தனைப்பிரிந்து தனியாகப் புருஷன்செய்யும்
கருமமெல்லாம் சபலமாமோ காணீரோ விதிகளைநீர்

எதுசெய்தாலும் என்னைவிட்டு எப்படித்தான்
பலனடைவீர்
பிதுர்வாக்யப் படிநடக்கும் பெருமையுள்ள விரதநியமம்

410. நானுங்கூட இருந்துதானே நடக்கவேண்டும்
அதைமறந்து
ஏனென்னை விட்டுப்போக எண்ணினீரோ
நானறியேன்

அரண்யந்தனி லிருக்குங்காலம் அலரெனாடியா
யாய்விடுமே
வருவேனாகில் நானுங்கூட வாடாமல் சுகமடைவீர்

என்னையெண்ணி நீர்வருந்தி எண்ணியும்மை
நான்வருந்தி
என்னசுக மடைந்திடுவோம் இதையும்நன்றாய்
ஆலோசியும்

சற்குருவாம் உன்னைவிட்டுச் சற்றும்பிரிந்
திருப்பதினால்
சித்தசுத்திக் கானியுண்டாம் சீரழிய ஏதுவுண்டாம்

பெண்களுக்குச் சுதந்தரமுண்டோ பிரியவுண்டோ
கணவரைத்தான்
உண்மையாக உரைத்ததன்மேல் உமதிஷ்டப்
படிநடப்பீர்

415. நமதழகைக் கண்டவுடன் நரிபுலிகள் முதலியவை
நமஸ்கரித்து ஓடுமல்லால் நாடவுண்டோ நம்மையவை?

பக்தியுடன் உபசரிப்பேன் பணிவிடைகள்
மிகவுஞ்செய்வேன்
சக்தியுள்ள உம்முடனே சரஸவல்லா சங்களொடு

மகிழ்ந்திருப்பேன் மிகவுமையா மனமிறங்கி
அழைத்துப்போகிச்
சுகமடைவீர் என்றுரைத்துச் சொரிந்தாள்கண்ணீர்
நிலம்படிய

413. ஆனி (ஹானி) - தீங்கு

பிதாப மடைந்துராமன் பட்சத்தோடு பத்னிதன்னை
வருவாய்நீ வருந்தவேண்டாம் வனத்துன்னை
அழைத்துப்போக

சுடமையுண்டு சாரியமுண்டு காலதேச வர்த்தமானப்
படியுன்னை யழைத்துப்போனால் பலனடையு
முலகமெல்லாம்

420. உன்மனதை யறியவேண்டி உரைத்தேனான்
உபசாரமாய்
என்மனத்தி லுன்னைவிட்டு எங்கும்போக
இஷ்டமில்லை

யாத்திராதான முதலாபக யாவித்துஞ் செய்திடவே
சாத்திரப்படி நடந்திடுவாய் சர்வகுண பூஷணியென்

றுரைக்கராமன் கேட்டுச்சீதை உளம்கிழ்ந்தாள்
மனங்குளிர்ந்தாள்
அருகில்நிற்கும் தம்பியப்போ ஆலோசித்தான்
பத்னிக்கிந்த

விதமாகில் நமதென்னம் வீணாமோ வெனமயங்கிப்
பதமலரை வணங்கிறின்று பக்தியொடு ராமனையும்

சீதையையும் பார்த்துச்சொல்வான் சித்தமென்மேல்
வைத்தெனையும்
ஆதரித்து அழைத்துப்போவீர் அரண்யத்திற்கென்
றறிக்கையிட்டான்

425. தாய்மாரை விட்டுவிட்டுத் தம்பியேநீ வந்துவிட்டால்
தாய்மார்க ளுதவியின்றித் தத்தளிப்பார் சித்தம்வாடி

தந்தைகைகேயி வசமானார் தாய்மாரைக்
கைகேபெம்மாள்
எந்தவித மாலோலுமே இழுத்துக்கொள்வா
ளவளிஷ்டமாய்

அப்பொழுது நமதுதாய்கள் அலைந்திடுவார்
குலைந்திடுவார்
எப்படிநீ வருவேனென்று எண்ணுகிறாய்
சொல்லுகிறாய்

இங்கிருந்து தாய்களுக்கு இணங்கிச்செய்வாய்
பணிவிடைகள்
தங்கியிரு யென்றுராமன் தம்பிதனைப்
பார்த்துச்சொன்னான்

பரதன்மன மறிந்திருந்தும் பாடியெண்ணங்
கொள்வானென்று
கருதுவது தகுதியாமோ காப்பானவன் நமதுதாய்கள்

430. கண்கலங்கச் செய்யமாட்டான் கைகேயிவச
மாவானாகில்
எண்ணிப்பாரீர் தாய்களுக்கு என்னகுறை பாக்யமிக

இருக்கும்போது அவர்களுக்கு என்னாலே யாவதென்ன
வருவேனும்ம கூடவேநான் வனவாசஞ்
செய்வேனண்ணா

காய்கிழங்கு முதலாகக் கனிவர்க்கம் புசித்திடவே
போயவைகள் தேடிவந்து பொற்பாதம் பூஜைசெய்வேன்

அரண்யத்தில் மிகவுண்டு ஆபத்துக ளானதினால்
இருவராக இருப்போமாயின் ஏதுங்கஷ்ட நேரிடாது

மதினியுடன் போவதினால் மார்க்கங்களில் வருமிடரை
ஒதுக்குவேனான் உழைப்பேன்மிக உதவிசெய்வேன்
ஊழியன்போல்

435. வருவதெந்தன் கடமையண்ணா வந்தாலென்னா
ஏண்டுதவி
பரமபக்த னென்னைவிட்டுப் பரந்தவனம்
போகலாமோ?

உமதுபாத பூஜைசெய்து உளங்களித்தால்
போதுமண்ணா
நமஸ்கரித்து வேண்டுகிறேன் நான்வருவேன்
அழைத்துப்போவீர்

அண்ணாவுமக் குபசரித்தால் அதுவேமோட்ச
சித்தியென்று
எண்ணமுள்ள என்னைவிட்டு எங்கும்போக
லாமோபாரீர்

உமதிஷ்டப் படியழைத்து உலகுக்கெல்லாம்
சுகந்தருமோர்
நிமித்தமாக நானும்வந்தேன் நினைத்துப்பார்ப்பீர்
அழைத்துப்போவீர்

அன்னைதந்தை களைமறந்து அனைத்தும்நீரே
யென்றிருக்கும்
என்னைவிட்டுப் பிரிவதுமக் கேற்காது எண்ணிப்பாரீர்

440. இதுவுமன்றி உதவிசெய்வா யென்றீரே வனம்போக
அதன்படியே உதவிசெய்வேன் அரண்யத்திற்கே
வந்துமக்கு

அந்தப்படி நடந்தனது அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு
எந்தனுக்கு ஆவல்மிக இருக்குதென்று லட்சுமணன்

லட்சுமணன் கோரியபடி அவனையும் அழைத்துக்கொண்டு சீதையோடு ஸ்ரீராமன் தசரதரிடம் வருவது

இந்தவிதம் வேண்டுகையில் இராமன்கேட்டு
மனமகிழ்ந்து
சொந்தங்கொள்வா ராருந்தானே தகுமடைய
வந்தெங்குமே

கஷ்டப்படுங் காரியத்தில் கலந்துகொண்டு
சிரமப்படவே
இஷ்டமுள்ளோர் மிகவரிது இவனைப்போலத்
தம்பியுண்டோ?

வருவானாகில் வனந்தனில் வருங்கஷ்டங்
களையொழிப்பான்
பரமபக்தி கொண்டுசெய்வான் பணிவிடைக
ளென்றெண்ணி

445. வந்திடுவாய் நீயுமென்று வாஞ்சையுடன்
ராமன்சொல்லச்
சிந்தைமிக மகிழ்ந்துதம்பி ஸ்ரீராமனை
வணங்கிநின்றான்

அந்தவேளை ஸ்ரீராமன் அனுஜன்றனைப்
பார்த்துச்சொல்வான்
முந்தித்தந்தார் வருணதேவன் முக்கியமான
அஸ்திராதிகள்

வசிஷ்டரிட மிருக்கத்தந்தேன் வாங்கிவரச்
சொன்னதாக
வசிஷ்டரிடம் போய்க்கேட்டு வாங்கிக்கொண்டு
வருவாயென்றான்

அந்தப்படி வாங்கிவந்தான் அதன்பிறகு ஸ்ரீராமன்
வந்திடவே பிராமணரை வரவழைக்க
ஆக்ஞைசெய்தான்

வசிஷ்டபுத்ரர் முதலானோர் வந்துசேர்ந்தார்
வெகுவேதியர்
திசைதனிலே யிருந்துதானே திரள்திரளா யவர்களுக்கு

450. ஆரிவாரித் தந்தானம்மா வந்தவர்கள்
திருப்திகொள்ளக்
கோரிவந்த தீர்ஜடருக்குக் கோதானம் மிகவுந்தந்தான்

அடுத்தவர்க்கு மநேசுந்தந்தான் அசுமசிழ்ந்தா
ரெல்லோரும்
சடுதியாகப் பிரயாணமானான் சாமிதம்பி சீதையுடன்

தெருவுதனில் வருமவரைத் தேட்டமுடன்
பார்ததெவரும்
உருகிமனம் நொந்ததோடு ஊரைவிட்டும் ராமனோடு

போவதற்குத் துணிந்துவிட்டார் புண்ணியவான்கள்
மூவருமாய்த்
தீவிரமா யரசரிட திருவாக்கைப் பெறுவதற்கு

மூவருமாய்த் தசரதரை வந்து காண்பதும் வனத்துக்குப் புறப்படுவதும்

அங்கிருக்கும் அரண்மனையை அடைந்தவர்க்கு
அறிக்கையிட
ரவிகுலத்தில் பரம்பரையாய் ராஜருக்கு மந்திரியாம்

---

450. தீர்ஜடர் - இருடிகள்

சுமந்தரரிடஞ் சொல்லஅவர் சோகமுடன்
போயுரைத்தார்
தமதுபத்னி யாவரையும் தருவிக்க அரசர்சொன்னார்

அவர்சுள்முந்நூற் றைம்பதுபேர் அங்குவரச்
செய்தவுடன்
அவிடத்திற்கு மக்களையும் அழைந்தபடி மூவருமாய்

வருகையிலே அரசன்கண்டு வாஞ்சையொடு
எழுந்துநின்று
அருமைமகன் ராமனைப்போய் ஆவிங்குனஞ்
செய்வதற்கு,

அடியெடுத்து வைத்திடவும் அசந்துமூர்ச்சை
யாகிமண்மேல்
திடீரென்று விழுந்துவிட்டான் திருவாளனும்
தம்பியுமாய்

எடுத்துமிகு வுபசரித்து இருத்தினார்க ளாசனத்தில்
கொடுத்தாக்ஞைப் படிநடக்கக் கோலங்கொண்டு
வந்தேனையா

தடுத்துமிகச் சொன்னேனையா தம்பியுடன்
சீதையுமாய்
அடுத்தென்னோ டரண்யத்திற்கு அழைத்துப்போகக்
கோரிவந்தார்

அவர்களுமாய்ப் போய்வரவே ஆக்ஞைதாரு
மென்றுராமன்
விவரந்தனைச் சொன்னவுடன் விசனமிகக்
கொண்டராசன்

ரகுராமா என்னசெய்வேன் ராட்சசியாம்
கைகேயியினால்
வகைமோசம் போனதொரு வழிதப்பி நடக்கலாஞேன்

சோகமிகப் பெருகுதப்பா சொல்லுதற்கு மில்லையப்பா
பாகமிலாப் பாவியினால் பாவியானேன் ஞானமப்பா

உத்தமனா யுள்ளவுன்னை ஊரைவிட்டுப்
போகச்சொல்ல
சித்தமில்லை புத்திகெட்ட சத்துருவாம் பத்தினிக்குத்

465. தந்தவர மென்னையிப்போ தலைகீழாய் நடந்திடவே
வந்துதப்பா வலவந்திக்க எந்தன்விதி
யென்னசொல்வேன்

அபீஷ்டவரந் தருவதெல்லாம் ஆபத்தாய் முடிவதோடு
அபாக்யசாலி யாகவுமே ஆக்கிவிடு மென்றறிந்தேன்

என்னைமீறித் துள்ளுகிற இரக்கமில்லா
மனைவியினால்
என்னைவிட்டு நீபிரிந்தால் என்னுயிரை விட்டிடுவேன்

ஆதரிக்கும் மகனைவிட்டு அரைநொடியும்
பிரியப்போமோ
நீதிகெட்ட படுபாவி நினைத்துச்செய்தாள் மோசமிகச்

சகலகுணச் சம்பன்னனாம் சாமிராமா உன்மகிமை
மிகவுங்கண்டு மனங்களித்து மெச்சினவள் பச்சம்விட்டு

470. வனமனுப்பக் கோரினளே வஞ்சியாம் கைகேயி
எனதுமனம் கொதிக்குதப்பா என்னசெய்வேன்
ஸ்ரீராமா

என்னுடைய வாக்கின்படி எண்ணியவள் கோரினாலும்
என்னுடைய மனமதற்கு ஈவுத்துந் துணியவில்லை

---

466. அபீஷ்டவரம் - விரும்பிய வரம்

எனதுமன மறிந்துசெய்வாய் இஷ்டப்படி நீநடப்பாய்
உனைத்தடுக்க நான்துணியேன் ஒருவருனைக்
குறையுரையார்

புத்திமிக மயங்குதப்பா போதமெனக் கில்லையப்பா
இத்தலத்தை யாணடுகொண்டு இங்கிருப்பா
யென்றுரைத்து

அகமகிழ்ச்சி தந்ததற்காய் அபீஷ்டவரந் தந்ததினால்
அகந்துணிதல் தருமமல்ல அந்தவாக்கை மீறுதற்கு

மனமுவந்து தந்தவரம் மாறிப்பேசல் நியாயமல்ல
கனமல்ல பேச்சுத்தப்பில் காலமெல்லாம் தூஷிப்பரே

தமதுவாக்கைப் பரிபாலிப்பேன் தாயினிஷ்டப்
படிநடப்பேன்
உமக்குப்புகழ் தருவேஎனையா உருகிமனம்
நோகவேண்டாம்

அரண்யவாசம் செயவதினால் அடையக்கூடும்
எசனீபோல்
அரசுமுறை நடத்துவதால் அடையப்போகா
தென்றறிவீர்

நாடுதனை யாண்டுகொண்டு நற்கீர்த்தி
பெற்றாலென்ன
காடுதனை யாண்டுகொண்டு கனந்தன்னைப்
பெற்றாலென்ன

480. எதுவுமெனக் கொப்புமையா ஏன்வருத்தம்
வேண்டாமையா
மதியுள்ள பரதனென்போல் மகனும்மை யாதரிப்பான்

வேதனையை விட்டுவிடும் விரைவிலெனக்
காக்குந்தாரும்
போதமுள்ள ஐயாவென்று பொற்பாதம்
பணிந்துகேட்டான்

அரசனந்த வார்த்தைகேட்டு அருள்பரனைத்
தழுவிக்கட்டிப்
பரிதிபித்துச் சொல்லுகிறான் பாவியென்போ
லாருமுண்டோ?

கனவிலுந்தா னுனைப்பிரியக் கால்நொடியும்
மனம்வருமோ
எனதுகண்ணே என்மகனே எப்படிநான்
சகித்தேனப்பா

வனம்போலவே னென்றுரைத்த வார்த்தைதனைக்
கேட்டவுடன்
எனதுரோமக் கால்களெல்லாம் எரியுதப்பா
என்னசெய்வேன்

485. இனியெந்தன் வாக்கைக்கேட்டு இங்கிருக்க
உனக்குச்சற்றும்
மனமில்லை யென்றறிந்தேன் மாதவனே ஸ்ரீராமா

பாக்கியமே பிள்ளையாகப் பார்தனிலே
எனக்குவந்தாய்
ஓக்கிரதையாகப் போய்வருவாய் தம்பியோடும்
சீதையோடும்

பயமிகவுந் தோற்றுதப்பா பாரிலாசை விட்டேனப்பா
உயிரொழியும் நிற்காதப்பா உத்தமனே யென்றழுதான்

வந்தவுடன் ராமன்கையில் அன்னைகைகேயி
மரவுரியைத்
தந்துசொன்னாள் வனம்போகத் தாட்சண்ணிய
மில்லாமல்

இருகரத்தால் வாங்கிராமன் இடுப்புதனில்
தரித்துக்கொண்டான்
கருமவிதி யென்னசொல்லக் கர்த்தனுக்கும்
கஷ்டமுண்டோ?

490. அனுஜனுக்கும் ஜானகிக்கும் அவ்விதமே மரவுரியை
மனந்துணிந்து தந்தாளம்மா மதங்கொண்ட கைகேயி

இளையவனாம் லட்சுமணன் ஏந்திக்கையில்
வாங்கிக்கொண்டு
அளித்தஅந்த மரவுரியை அரைதனிலே
தரித்துக்கொண்டான்

சீதைகையில் வைத்துக்கொண்டு சிந்தித்தாள்
ராமன்கண்டு
மாதரசாம் சீதைக்கந்த மரவுரியை மேல்தரித்தான்

அந்தவுடன் ஆத்திரமாய் அமாத்தியராம்
சுமந்தரர்தான்
இந்தவிதங் கொடுமைசெய்ய ஏன்துணிந்தாய் கைகேயி

பார்த்தாவை வதைபுரியும் பாதகிபோல் நீயுமாவாய்
தர்மம்கெட்டுக் கடந்துகெட்ட தாய்க்குணமே
நீவகித்தாய்

495. அனைவர்சுளும் ராமனோடு அரண்யத்திற்கே
போய்விடுவோம்
மனமகிழ்வாய் மானங்கேட்டு மகனுடனே அரசுசெய்து

நீதிகெட்ட வுனக்கினிமேல் நேர்ந்திடுமே கஷ்டமிகப்
பாதிவிர்த்தியந் தனைக்கடந்த பாவியாகப்
பவிப்பாயென்று

இந்தவித மவருரைத்தும் ஈஷத்தும் இணங்காமல்
அந்தக்கைகேயி யிருந்துவிட்டாள் அதன்பிறகு
அவளைப்பார்த்து

வசிஷ்டமுனி சொல்லுகிறார் வஞ்சகமாக
அஞ்சிநிற்பாய்
விசனப்பட நேரிடும்பார் வேண்டாமிந்தத்
துணிச்சலாக

வனத்துக்குஸ்ரீ ராமன்போனால் வையகத்தைச்
சீதையாள
மனுஸ்மிருதியில் நியாயமுண்டு மரவுரியைச்
சீதைக்கும்நீ

500. தந்தந்தன் அறிவீனம் தருமந்தனை எண்ணிப்பாராய்
முந்திப்பிந்தி யுள்ளதெல்லாம் முறையாக
அறிந்துபாராய்

பத்னியோடும் தம்பியோடும் பரந்தாமன்
வனம்போனால்
சத்யவந்தன் பரதனோடு சத்துருக்கனும்
ராமனைப்போல்

வேஷங்கொண்டு வனம்போவார் வேதனையை
மிகவடைவாய்த்
தேசமெங்கும் ஏசுவார்கள் தெரியாமல் துணிகிறாயே

மோசம்போவாய் கண்டுகொள்வாய் முறையறிந்து
கடமையைச்செய்
ஆசையெல்லாம் நிராசையாகும் அலைந்திடுவா
யென்றுரைக்கப்

பேசாமல் இருந்தாள்கைகேயி பெருமூச்சுக்
கொண்டரசன்
கூசாமல் எனதுமனம் கொதிக்கச்செய்த பாதகிக்கு

505. கொடுக்கமாட்டேன் பாத்யமெல்லாம் கொண்டுபோக
ராமனுக்கு
எடுத்தெடுத்துத் தாட்டிவிடும் ஏதுமிங்கில்
லாமல்செய்யும்

சுமந்தரரே யென்றுரைத்த சொல்லைக்கேட்டுக்
கைகேயி
உமதெண்ணம் நியாயமென்று உள்ளதெல்லாம்
பரதனுக்கே

அசமஞ்சனை யரண்யத்திற்கு அனுப்பும்போ
தேதுமின்றி
வசித்திடவே செய்ததுபோல் வாசஞ்செய்ய
ராமனையும்

அனுப்புமென்றாள் ராமன்கேட்டு ஐயாஎனக்
கேதும்வேண்டாம்
வனத்திலுள்ள பதார்த்தங்கொண்டு வாழ்வதுவே
போதுமென்றான்

அதன்பிறகு மகனைப்பார்த்து அரசன்சொல்வான்
நாளைக்காலை
உதித்ததன்மேல் வனம்போவாய் உள்ளபோக
மெல்லாமின்று

510. அனுபவித்தா லெனக்குச்சற்று ஆறுதலுண் டாகுமப்பா
மனங்கொண்டு இன்றளவும் மாதாபிதா அனைவருடன்

கூடிஇங் கிருப்பாயென்று கோருந்தந்தை
தனைப்பார்த்து
நாடிப்பாரும் ஒருநொடியும் நானிங்கு
இருக்கப்போமோ?

சிறியதாய்க்குத் தந்தவாக்குச் சிதறிப்போகும்
அதுவுமன்றிக்
குறித்தபோகம் நாளைபுண்டோ குற்றஞ்செய்யத்
தூண்டுமென்றோ?

ஆசையினால் இப்பொழுதே அனுஞைதாரு மென்று
கேட்டான்
தேசுந்தன்னை மறந்தான்ராஜன் தேவிமார்கள்
கதறினரே

தாய்மார்கள் யாவரையும் தண்டனிட்டு
ராமன்சொல்வான்
வாய்விட்டுக் கதறவேண்டாம் வனவாசஞ் செய்துவிட்டு

515. வந்திடுவேனுங்களுக்கு வலங்கிச்செய்வேன்
பணிவிடைகள்
தந்திடுவீர் அனுமதியைத் தைரியமாய் என்றுரைத்தான்

அந்தவுடன் அவருக்கெல்லாம் அடிவணங்கிக்
கௌசலைக்கு
முந்திவந்து நின்றாள் சீதை மோகமுடன் தழுவிக்கட்டிக்

கண்மணியேஎ யென்னரசே கணவன்மனம்
சுலங்காமல்
எண்ணிச்செய்வாய் கட்டமைகளில் ஈஷத்தும்
குறைவின்றி

---

513. அனுஞை – விடை

நடந்துமிக நலம்பெறுவாய் நாளுமுந்தன் நாயகனைக்
கடந்துசெய்யுங் காரியத்தைக் கனவிலுமே
எண்ணவேண்டாம்

பதிமனது வருத்தஞ்செய்யும் பாவிகள்போல்
நடக்குமந்த
மதியுள்ள பேர்களுக்கு மகத்தான கஷ்டம்வரும்

520. தன்வந்தனா யிருக்குமட்டும் தாங்கியப்பால்
பதியைச்சற்றும்
கனஞ்செய்யாப் பெண்களுண்டு கடந்துரைக்கும்
பெண்களுண்டு

போதமுள்ளோ னானாலுமே எபொருளில்லாக்
கணவன்றனை
ஆதரிப்போ ருலகுதனில் அரிதாவார் அகங்கரிப்பார்

அடக்கும்நாணம் அச்சமென்ப தசைவேனு மில்லாமல்
படபடப்பாய்ப் பேசுவார்கள் பதியைப்பார்த்து
நிந்தனையாய்

பதியின்வழி மதியில்கொண்டு பக்திசெய்யும்
பெண்களுக்குக்
கதியுண்டாம் கனமுண்டாம் களிப்புண்டாம்
காலமெல்லாம்

பார்த்தாவே தெய்வமென்று பாவித்து நடப்பவர்க்கு
கர்த்தனரு ளாலுண்டாகும் கைகூடும் சகலபாக்யம்

525. ஒருவருக்கு மதியுரைக்கும் உள்ளறிவு மகிவுமுள்ள
பரிசுத்த ஜானகியே பரிபாக மடைந்தவளே

உனக்கும்புத்தி சொல்லவுண்டோ உன்னில்குறை
காணவுண்டோ?
அனைவர்களும் புகழும்படிக் கனமாக
நடப்பாயென்றாள்

மாமிதனைப் பார்த்துச்சீதை மரியாதை மிகவுஞ்செய்து
தாமுரைத்த மதியின்படி தப்பாமல் நானடப்பேன்

சொன்னதெல்லாம் மனதில்கொண்டேன் சூட்டுமங்க
ளறிந்துகொண்டேன்
என்னுடைய கணவரிட இஷ்டப்படி நானடப்பேன்

பூர்ணபலந் தருவதெல்லாம் பூமியிலே பார்த்தாவன்றி
ஆர்தருவார் தாய்தந்தையும் அற்பபலன் தான்தருவார்

530. கணவர்மனங் கண்டுசெய்வேன் கனவிலும்நான்
பிசகுசெய்யேன்
குணமடைய அனுக்கிரகிக்குக் கோருகிறே
னென்றாளம்மா

அயோஜனுந்தாய் மார்களுக்கு அடிபணிந்தான் சுமித்தி
ரையப்போ
தனதுமகன் தனைத்தழுவித் தயவுடனே
புத்திசொல்வாள்

தசரதரே ராமனென்றும் ஜானகியே நானென்றும்
வசிக்கும்வனம் அயோத்தியென்றும்
மனதில்கொள்வாய் எனது வாக்கை

சற்றுந்தானே மீறாமல் சமத்துடனே ராமனுக்கு
உற்றபடி பணிவிடைகள் உள்ளமகிழ்ந் திடச்செய்தால்

எந்தன்மனம் குளிருமப்பா இந்தப்படி நடப்பதுவே
உந்தனிட கடமையாகும் உண்மையாக
நடப்பாளென்றாள்

535. அந்தப்படி நடப்பேனென்று அன்னைமனம்
திருப்திகொள்ள
தந்துவாக்குப் பணிந்தான்மகன் தயவுடனே
யனுக்கிரகித்தாள்

அரசனாக்ஞைப் படிசுமந்தார் அசுவங்களைக்
கட்டிரதம்
துரிதமாகக் கொண்டுவந்தார் தோஷமில்லாத்
தசரதன்றான்

நவரத்ன மயமான நகைகளுடன் ஆடைகளும்
வெருங்கண் டதிசயிக்க எல்லாந்தந்தார் சீதைக்கப்போ

ஆயுதாதி அஸ்திரமிக அன்புடனே மக்களுக்குத்
தூயமன முடையராஜன் தோரணமாய்த் தந்தானம்மா

அவரடியைப் பணிந்தவராய் அனுஞைபெற்று
ரதத்திலேற
எவருங்கண்டு மனமசந்து ஏங்கினார்கள் தாங்காமலே

540. ரதம்போகும் வழியதனை ராஜனுடன் தேவிகளும்
பதகமன மாகுத்தானே பற்றிவந்தார் சற்றுத்தூரம்

பின்தொடர்ந்து விசனத்தோடு பெற்றவர்கள்
வரராமன்
சென்றிடவே துரிதமாகச் செய்யுமென்றான்
சாரதியும்

சொன்னபடி சுமந்தரர்செய்தார் சோகமுடன்
ராஜனப்போ
என்னைப்பிரிந்தேகும்படி ஏனையா வேகமாக

---

536. அசுவம் - குதிரை

இரதந்தன்னை யோட்டுகின்றீர் இராமன்கூட
நானுந்தானே
அதிகதாரம் வருவோனன்று அரசன்சொன்னான்
அலறிக்கொண்டு

தூரயாத்திரை செய்பவரைத் தொடர்ந்துபோக
லாகாதையா
நேரிநிற்பீ ரென்றுரைத்தார் தெரிந்தமந்திரி
மார்களப்போ

545. அந்தப்படி அரசன்நின்றான் அநேகம்போர்கள்
ராமனுடன்
முந்திப்பிந்தி யோடினார்கள் முறையிட்டுக்
கதறிக்கொண்டு

இரதமதுதான் மறைந்தவுடன் இராஜன்மிகச்
சோகமுடன்
மதிமயங்கி விழுந்துவிட்டான் மனைவியராம்
கௌசலையும்

விரதங்கெட்ட கைகேகியும் விரைவாக அரசன்கைகள்
இரண்டையும் பிடித்தெடுத்தார் இராஜனப்போ
கைகேகியை

உதறித்தள்ளிச் சொல்லுகிறான் உறவாட வருகிறாயே
மதிகெட்ட பாதகியே சதிசெய்தாயே பதியாமெனை

என்னைத்தொட உனக்கணுவும இல்லையடி சுதந்தரமே
உன்னைக்கண்டா லெரியுதடி உள்ளமிக வருந்துதடி

550. இன்றோடு உனக்கெனக்கும் இருந்தசொந்தம் விட்டுதடி
என்றுன்னை யடைந்தேனோ அன்றேயெனக்
சாபத்தாக

வந்தவளா மென்றறிந்து வருத்தப்படு மெனைவந்து
சொந்தமாகக் கைதொடவும் சுத்தமாகப்
பாத்தியமில்லாப்

பாதகியே சாதகியே பதைக்குதடி நெஞ்செனக்கு
வேதனையை யென்னசொல்வேன் விலகென்றான்
அந்தவுடன்

எட்டிநின்றாள் கைகேயி இராஜனப்போ ஆசிரதாளை
இட்டுக்கொண்டு போவீரென்னை இந்நமுள்ள
கௌசலையாள்

அரண்மனையில் சேர்த்துமென்றான் அப்படியே
சேர்த்தினார்கள்
தருமசீலன் ஸ்ரீராமன் றன்னையெண்ணி
விதனப்பட்டான்

555. அப்பொழுது நகரமெல்லாம் அழுததோடு
அழுக்கடைய
எப்பொழுது மில்லாத இருள்மூடி இருந்ததம்மா

பார்த்தியுள்ள கோசலையைப் பார்த்தரசன்
சொல்லுகிறான்
சக்தியெல்லாம் ஒடுங்கியிந்தச் சங்கடத்தை யனுபவிக்க

ஆனேனே ஸ்ரீராமன் அரணியத்தை அடைவேனென்று
நானேதும் அறிந்திலேனே நான்செய்தேனோ
பாபமிகப்

புத்தியென்ன பொறுமையென்ன புகழென்ன
மகிமையென்ன
சுத்தமென்ன சூட்டுமென்ன சொல்லும்வாக்கின்
அழகுமென்ன?

மேனியென்ன மேன்மையென்ன மேதினியோர்
மகிழ்வதென்ன
நானவனா லடைந்தபலன் நன்மையென்ன
இன்பமென்ன?

560. சக்தியென்ன சரஸமென்ன சகலகுண சம்பத்தென்ன
பக்தியென்ன பட்சமென்ன பரமார்த்த ஞானமென்ன?

அரசுமுறை களிற்சிறந்த அரிதான அபிப்பிராயங்கள்
விரித்துரைப்பா னெனக்குமவன் விவேகமுள்ள
பிள்ளையவன்

என்வாக்கை வேதவாக்காய் எண்ணியவன் நடப்பவனே
அன்பவன்போல் யாருங்கொள்ளார் அவனைப்போல்
மதலுமுண்டோ?

உயிரெனக்கு அவனேயாவான் உள்ளபடி
சொல்லுகிறேன்
பயமில்லை யவனிருந்தால் தயிரியமில்லை
யவன்பிரிந்தால்

உயிர்க்குயிராம் ஸ்ரீராமன் ஊரைவிட்டுப் போகும்படி
தயவின்றிப் பாபிகைகேயி தடமெடுத்தாள் சுபடமாக

565. வஞ்சகத்தால் என்னைமீறிச் சஞ்சலத்தால் நானையல
நெஞ்சுறுதி கொண்டாளவள் நேசம்விட்டுச்
செய்தாளவள்

நினைத்தால்மிகப் பதறுதெந்தன் நெஞ்சமிக அஞ்சுதடி
என்ன
வினைவசமு மிவ்விதமாய் வினையலாமோ செய்வேன்?

சுண்ணொளிகள் போயிற்றடி கருத்தும்நிலை
யில்லையடி
மண்ணுலகின் வாழ்வினிமேல் மாறும்போலச்
சாணுதடி

உனதுகையால் தடவியென்னை உபசரிப்பாய்க்
கௌசலையே
எனைவிட்டு நிமிஷமும்நீ எங்கும்போக வேண்டாமடி

இந்தவிதம் அரசன்சொல்ல என்பிராண நாயகரே
சிந்தைநொந்து வாடவேண்டாம் செய்தவினைப்
பயனுக்குநாம்

என்னசொல்வோ மென்றுசொல்லி யிதமாத
உபசரித்துத்
தன்னைமீறி விசனங்கொண்டு தத்தளித்தாள்
கௌசலையும்

இராமன் வனம் போனதை யெண்ணிக் கௌசலை விசனப்படும்போது சுமித்திரை தேற்றுதல்

பார்த்தாவி னருகிருந்து பரிதபிக்க லாகாதம்மா
சிரத்தையுடன் அவருக்கிப்போ சிஷ்ருஷை
செய்வதுநாம்

சுடமையம்மா சுதறவேண்டாம் கணவர்மனம்
மிகவருந்தும்
கொடுமையாக முடியுமம்மா கூக்குரலை விட்டுவிடும்

பரிதபிக்கும் பிரானேசரைப் பாதுகாப்போம்
ஆதரித்து
வருவதுண்டோ அழுவதினால் கருதிப்பாரும் கலங்க
வேண்டாம்

திரிலோக நாதனம்மா திருமகனாம் ஸ்ரீராமன்
தருமங்களை யாதறிக்கத் தரணியிலே யுதித்தானம்மா

நாராயணன் ராமனாக நடனஞ்செய்ய வந்தானம்மா
ஆராலும் அவன்மகிமை அறியவுண்டோ
குறித்தணுவும்

சூரியனுக் கொளிதருவான் சூட்சுமமா யாவற்றிலும்
இருள்தேவி யாதரிப்பான் எங்குமவன் விளங்கிநிற்பான்

அவனன்றி அசைவதுண்டோ அணுவாகிலும்
அகிலந்தனில்
எவனுமில்லை அவனைவெல்ல தவப்பொருளே
ராமனம்மா

அவனுக்கேதும் குறைவருமோ அலைவதுண்டோ
வனத்திலவன்
குவலயத்தி லவனுக்கேதும் குணமாகக் கூடுமம்மா

ரவிகிரணந் தாக்காதம்மா ராமனுக்கு வாயுதேவன்
சவரனையா யுபசரிப்பான் சகலவிதச்
சௌக்கியமுண்டாம்

580. சீதாதேவி லட்சுமியே ஜெகத்திலவள் அயோநிஜையே
வேதார்த்த மறிந்தவர்க்கு விளங்குமம்மா இக்கருத்து

அரண்யவாசஞ் செய்வதற்கு அனுப்பியதால் ராமனுக்கு
வருமெஸசு மிகவுமம்மா வையகமே பிழைக்குமம்மா

தேவரெல்லாம் மகிழ்வாரம்மா திருமகனால்
வரும்பெருமை
தவமுனிவ ரறிவாரன்றித் தரணியிலே யாரறிவார்?

மதிப்புடைய அரசனான மாயாவி சம்பராசுரன்
அதமானான் ராமனாலே அந்தச்சேதி அறிவீரன்றோ?

அப்பொழுது பிரம்மாவந்து அஸ்தராதிகள் ராமனுக்கு
இப்புவியில் தந்தையும் எண்ணிப்பார்க்கில்
வருந்தவுண்டோ?

585. விசனந்தனை விட்டுவிடும் விவேகங்கொண்டு
தேறுமம்மா
தசரதராம நமதுபர்த்தா தயங்குகிறார் மயங்குகிறார்

அவர்மனது ஆறும்படி அறிந்துசெய்வோம்
பணிவிடைகள்
கவலைவேண்டா மென்றுரைத்தாள் கனமுள்ள
சுமித்திராதேவி

இந்தவிதஞ் சொன்னதெல்லாம் இதமென்றே
கௌசலையாள்
சிந்தைதனில் எண்ணிநின்றாள் சித்தசுத்தி
தனையடைந்தாள்

பத்தினிகள் இருவருமாய் பர்த்தாவை யுபசரித்து
எத்தனையோ தேறுதலை எண்ணிச்சொன்னார் இது
நிற்க

ஸ்ரீராமனைத் தொடர்ந்து ஜனங்கள் போவதும் அவர்களை யறியாமல் சுவாமி கங்காதீரம் போவதும்

வேகமாக ரதம்போக வெருபோர்கள்
அதைத்தொடர்ந்து
தாகமுடன் ஓடிவந்தார் தளர்ந்தசில ஸ்திரீயர்கள்

அசுவங்களைக் கூவிச்சொல்வார் அவசரந்தா
னேதுமில்லை
வசமில்லை எங்களாலே வழிநடக்க வூகையினால்

மெதுவாக நடப்பீரென்று மிகவுமவர் வேண்டுகையில்
முதிர்ந்தராம் அவர்சொல்லும் மொழியைக்கேட்டு
ரதம்நிறுத்தி

இறங்கிவந்த ராமனிடம் எங்களையேன் வருத்துகிறாய்
தருமம்விட்டோம் யாசம்விட்டோம் தாகம்விட்டோம்
சுகத்திலுமே

அந்தப்பாபம் உனைச்சேரும் வூகையினா லெங்களுடன்
வந்திடுவாய் நகரத்திற்கு வாழ்ந்திடுவாய்
அரசுகொண்டு

உன்னைவிட்டுப் பிரிந்தாலுடன் உயிரொழிப்போம்
மன்னவரோ யினியுதவார் மகுட்த்திற்கு உரியவனாய்

இருக்கும்நீ வனம்போனால் எங்களையா ரதரிப்பார்
ஒருநிமிடம் சகிக்கமாட்டோம் உன்னைவிட்டு
ஒதுங்கமாட்டோம்

ஆவெல்லாம் உன்மீதுவைத்தோம் அடுத்துன்னை
நாடிவந்தோம்
நீவசிக்கு மிடமயோத்தி நீபுசிக்கு முணவமிர்தம்

ஆனம்பி அனைவர்களும் அரணியத்தில்
வசிப்போமன்றிப்
போகமாட்டோம் நகரத்திற்குப் போகமெல்லாம்
வெறுத்திடுவோம்

என்றுசொன்னார் ஜனங்களெல்லாம்
இராமச்சந்திரன் கேட்டவர்க்கு
அன்புடனே சொன்னானம்மா ஆறுதல்கள்
மிகவுமம்மா

அடுத்துவந்த அன்பர்களே அடியேன்சொல்லைக்
கேட்டிடுவீர்
தடுத்தென்னை மீறிப்பேசல் தருமமல்ல தயவுசெய்வீர்

600. தந்தைக்குள்ளே அடங்கியுள்ள தயைனான்
நானவரின்
அந்தரங்கப் படிநடக்க அணுவுந்தானே பிசகுப்போகா

அவரிஷ்டப் படிநடந்து அனுக்கிரகத்தைப்
பெறுவேனாகில்
தவப்பயனே அடைவேனையா தருமமவ்வா
றிருக்குதையா

அரசுமுறை நான்நடத்த ஆக்ஞையில்லை ஆகையினால்
வருவதற்கு ஆகாதையா வந்தவழி பாருமையா

பரமகுரு தந்தைவாக்கைப் பரிபாலித்தல் கடமையையா
கருமபிரஷ்டன் போலவாக்கும் கடந்தாலந்த
வாக்கதனை

என்னுடைய கடமையெண்ணி எங்கேனும்
நான்போனால்
உன்னுடனே வருவோனன்று ஊராரும்
தொடரலாமோ?

---

603. கருமபிரஷ்டன் - கடமை தவறியவன்

605. முகிழ்சுவா மித்ரர்கூட முன்னொருக்கால்
போகையிலே
எனைநாடி வந்தவரார் ஏனிப்போ தொடருகிறீர்?

அவரவரின் கருமபலன் அவரவர்கள் அனுபவிப்பார்
குவலயத்தி லுள்ளவர்கள் கூடிப்பங்கு
கொள்வதுண்டோ?

கஷ்டப்பட் வந்தேனென்று கருணைகொண்டு
வந்தீர்நீங்கள்
காஷ்டமென்னை விட்டுப்போமோ கலந்தென்னோடு
வந்தால் நீங்கள்

சீதையுடன் தம்பியையும் சேர்த்துக்கொண்டு
போவதற்கும்
ஏதெனக்குச் சுதந்தரமுண்டோ இராஜராக்ஞை
தந்தாரண்றோ?

ஆசையினால் உங்களைநான் அரண்யத்திற்கு
அழைத்துப் போகத்
தாகமெனக் கிருந்தாலும் தந்தையாக்ஞை
யெனக்கிலையே

610. ஆளுவோரை அசட்டைசெய்து அரண்யத்திற்கு
வருவீரானால்
நாளையது கஷ்டமாயும் நஷ்டமாயு முடிந்திடுமே

கட்டளையின் படியாவேன் கானகத்தில்
வசித்திருப்பேன்
அட்டியின்றி வந்திடுவேன் அளித்தகெடு
வானதின்மேல்

தருமசீலன் பரதன்வந்து தரணிஞனைக் கருணையோடு
அரசாள்வான் அவனுடைய ஆஞகையில்
இருப்பீர்நீங்கள்

என்குணத்தைப் போலுன்னவன் எல்லோர்க்குஞ்
சுகந்தருவோன்
மன்னவராம் தந்தையைப்போல் மகிமையுள்ள
புருஷனவன்

என்னைப்போல அவனையெண்ணி எல்லோரும்
நடந்துகொள்வீர்
நன்னிலத்தி லவனைப்போல நல்லவர்க
ளாருமுண்டோ?

615. அடுத்தவனைச் சுகப்படுவீர் அதைவிடுத்து வீணாகத்
தொடர்ந்தென்னை வருவதினால் தொந்தரவு நேரி
டுமே

பிதுர்வாக்யப் பரிபாலனம் பெரிதெனக்கு
அதைவிடுதல்
விதிவிலக்குக் கடந்ததாகும் வெகுகஷ்ட மெனையடுக்கும்

என்மீது கிருபைகூர்ந்து எல்லோரும் நகர்சேர்ந்து
கன்மங்களைச் செய்துகொண்டு கனமாக
வாழ்ந்திடுங்கள்

இந்தவிதஞ் சொல்லிக்கொண்டு எல்லோரும்
வழிநடந்து
சுந்தரியாம் சீதையோடும் சூழ்ந்தமற்ற பேர்களுமாய்

தமசாந்திக் கரையில்வந்து தங்கினான்ஸ்ரீ
ராமச்சந்தரன்
சமமான யிடந்தனிலே சாயங்கால மாயிற்றப்போ

620. அனுஷ்டானாதி செய்துகொண்டு அன்றிரவு உபவாச
தினமாகக் கொண்டிருந்தான் திருவாளன் ஸ்ரீராமன்

உதிர்ந்தழை சருகுகளை ஒன்றுசேர்த்து
அவைகளினால்
அதிகபுத்தி யுள்ளவராம் அமாத்தியரும் தம்பியுமாய்

படுக்கைதந்தார் அதில்ராமன் பத்னியொடு
சயனஞ்செய்தான்
அடிமைகள்போல் சுமந்தரரும் அனுஜனுமாய்
விழித்திருந்து

இராமனது மகிமையெல்லாம் இராமுழுதும்
பேசிக்கொண்டு
தாமவரை யாதரித்தார் தம்பதிகள் நித்திரைசெய்தார்

பஞ்சபஞ்சு உஷக்காலத்தில் படுக்கைவிட்டு
விழித்தெழுந்தார்
சஞ்சலத்தைச் சற்றடைந்தான் சாமிராமன்
ஜனங்களுக்காய்

625. வந்திருக்குஞ் சனங்களெல்லாம் வழிநடந்த
சிரமத்தினாலே
விந்தையாக நித்திரைசெய்தார் வேளையிது நாம்பிரிய

அனுகூலச் சமயமென்று அறிந்துடனே ரதமேறி
வனந்தனிலே சென்றவர்கள் வடக்குத்திக்கை
வழிகாட்டி

ஓட்டமாகப் போய்விடவும் உதித்ததன்மேல்
ஜனங்களெல்லாம்
தாட்டிவிட்டான் ராமனென்று தடங்கொண்டு
போவோமென்று

சகலருமாய்ச் சேர்ந்துகொண்டு சற்றுதூரம்
போகையிலே
தகுதியாக ரதம்போன தடந்தெரியா தசந்துமிக

மனம்வருந்தி யாவருமாய் மறுபடியும் நகரடைய
வனத்தைவிட்டுத் திரும்பியவர் வந்துசேர்ந்தா
ரயோத்திநகர்

630. ஊரெங்கும் அழுகைக்குரல் உண்டாகி
ராமன்றன்னைக்
கோரிக்கோரி விசனப்பட்டார் குறையடைந்தார்
தமதுமக்கள்

வனம்போனாப் போலவேதான் வருத்தங்கொண்டார்
யாவருமே
தினையளவுந் திருப்தியின்றித் திகிலடைந்து
மனம்வாடினார்

போனரதம் வேகமாகப் புனிதநதி சிலதுதாண்டிக்
கானகத்தில் வழிதனிலே கண்டதேசம் கோசலையாம்

நகர்மீது போகையிலே நகரிலுள்ளோர் பறந்துவந்து
அசம்வாடிப் பின்றொடர்ந்தார் அவர்களுக்கு
ராமன்மிக

அன்புடனே சொன்னானம்மா ஆயாசம்
வேண்டாமென்று
நன்மொழியால் பலவிதமாய் நாடியவர்
தெளிந்தாரப்பால்

635. திரும்பியவர் போனார்ரதம் தீவிரமாய்க்
கங்கைக்கரை
விரும்பிவந்து அடைந்ததம்மா வேடனான குகனறிந்து

ஸ்ரீங்கிபேர நகரிலுள்ள சினேகிதரோ டோடியவன்
தங்கிராம னிருக்குமிடம் தாகங்கொண்டு வந்தவுடன்

ஆலிங்கனஞ் செய்துகொண்டு அவனுடைய
யோகக்ஷேமம்
கூலங்கிரி ஷ மாகக்கேட்டான் குணமிருந்த ஸ்ரீராமன்

வந்தசேதி குசன்கேட்க வரலாறை ராமன்சொன்னான்
அந்தவுடன் மெய்மறந்து அரசந்துகீழே விழுந்தெழுந்து

இப்படியும் நேரலாமோ? என்சொல்வேன் உலகிலிது
ஒப்பவுண்டோ தப்பல்லவோ செப்பும்சாஸ்திரம்
எப்படிதான்

640. இப்புவியில் விளங்குமையா ஏனிதனை யோசியாமல்
அப்பவை ராக்ஞைசெய்தார் அறிவிலவர் சிறந்தவராய்

இருக்கும்போது பயானதுவோ இருக்குமென்று
நம்பவேண்டும்
அரசரிட கட்டளையை அதிக்கிரமிக்க நியாயமில்லை

கடமையவ்வா றிருந்தாலுமே கானகத்தில் தாமிருந்து
கொடுமைசெய்யும் கஷ்டங்களைக் கொண்டிருக்கூ
ஆமோவென்று

சிந்திக்கின்றேன் செல்வமுள்ள ஸ்ரீராமா உமக்குமிந்தத்
தொந்தரவு நேர்ந்ததற்காய்த் துடிக்குதையா என்மனது

பரதேசிபோ லாகிவந்து பரந்தவனந் தனில்திரியக்
கருமவிதி நேர்ந்ததுதான் கஷ்டம்கஷ்டம் சகிக்கலையே

645. பாக்கியமே வுருவெடுத்துப் பார்தனிலே வந்தராமா
ஆக்கினையை யாதரிக்க அரண்யத்திற்கு வரலாயிற்றே

என்னசெய்வே னென்றுமிக ஏங்கியப்பால் அந்தகுகன்
தன்னுடைய நகர்தனிலே தாராளமாய் வந்திருந்து

எங்கிருக்கும் போர்சுர் தம்மை ஆண்டுகொண்டு
சூழப்படவே
பங்களவாக் களித்திடவே மாதவனை
வேண்டிக்கொண்டு

அருந்துதற்கு யோக்யமுள்ள அநேகவிதப்
பதார்த்தங்களை
வரவழைத்துத் தந்தானம்மா வாஞ்சையொடு
குகவடியான்

விரதநியமாய் கொண்டுவந்தேன் வேண்டாமிந்தப்
பதார்த்தங்கள்
தருமந்தனைக் காக்கவந்து தப்பிவந்து நடக்கலாமோ?

650. கொடுத்ததெல்லாம் பார்த்துமனம் குளிர்ந்தேனதே
போதுமப்பா
கொடுத்திடுவாய் அரசரிட குணமுள்ள அசுவங்கட்கு

தந்திடுவா யுணவதினால் தந்ததுபோ லாமெனக்குச்
சந்தோஷ மிகவுமுண்டு சத்பக்தனே யென்றுராமன்

சொன்னபடி அசுவங்கட்குச் சுகமான உணவுதந்தான்
என்னசொல்வேன் குகனைப்போல எங்குமில்லை
இஷ்டர்கள்தான்

உபசரித்தார் ராமனுக்கு உதிர்ந்ததழை சயனந்தந்து
தபசிகள்போல் அதில்ராமன் தம்பதியோ டுறங்கினனே

காவலாக நானிருப்பேன் கண்விழித்து நீரிருக்கத்
தேவையில்லை யிவ்விடத்தில் தேவரீரும்
நித்திரைசெய்ய

655. வேண்டுமென்று லட்சுமணனை வேண்டிக்கொண்ட
குகனைப்பார்த்து
தூண்டுகிறாய் படுப்பேனாயின் தூக்கங்கொள்ளா
தென்றுரைத்தான்

அண்ணன்வன மிருக்குமட்டும் அனுஜனான
லட்சுமணன்
கண்ணுறக்கங் கொள்ளமாட்டான் கர்த்தனையும்
சீதையையும்

பாதுகாப்பான் இராத்திரியும் படுக்கைகொள்ளான்
அடிமைபோலச்
சாதிப்பான் காரியங்களைச் சத்பக்தன்
இவனைப்போல

ஆருமில்லை யென்றுமிக அதிசயித்தான் குகவடியான்
பெருமையுள்ள சுமந்தரரும் பேசிமிகக்
களிப்படைந்தார்

அடுத்ததினங் காலையிலே அங்கிருந்து தென்கரையை
அடைந்திடவே ஓடமொன்று அழைப்பிவிக்க
வேண்டுமென்று

660. குகனிடத்து ராமன்சொல்லக் கொண்டுவர
ஆக்ஞைசெய்தான்
தகுதியுள்ள ஓடமது தட்சணமே வந்ததப்பா

அந்தவேளை சுமந்தரரிவந்து ஆக்ஞையென்ன
நானுங்கூட
வந்திடுவேன் ராமாவென்னை வனத்துக்கே
யழைத்துப்போக

வேண்டுமென்று கோரியவர் வெகுவிதமாய்
முறையிடவே
ஆண்டவனாம் ஸ்ரீராமன் அதற்குப்பதில்
சொல்லுகிறான்

---

657. சத்பக்தன் - உண்மையான பக்தன்

என்னுடனே வருவதுமக் கேற்காது கைகையம்மாள்
தன்னுடைய இஷ்டமதைத் தாண்டியெங்கோ
போவோமென்று

வருத்தப்பட நேருமையா வனத்திலேநான் வசிக்குமிந்தக்
கருத்தைச்சொல்லித் தந்தையையும் காப்பாற்றி
வந்திடுவீர்

665. எத்தனையோ மந்திரிகள் இருந்தாலும்
உம்மைப்போலச்
சித்தசுத்தி யுள்ளவரும் செம்மையாகத் தெரிந்தவரும்

இல்லையையா இப்பொழுது இராச்சியத்தைக்
கட்டியாள
வல்லபராம் நீர்நகரில் வாசஞ்செய்ய வேண்டுமையா

வனவாசம் ஆனதன்மேல் வந்திடுவோம்
அயோத்திக்கென்று
அனைவருக்குந் சொல்லுமையா அன்புடனே
தந்தையிடம்

பரதன்றனை வரவவைத்துப் பட்டந்தனைத்
தந்தவனால்
உரியதர்மங் குறைவின்றி உலகையாளச்
செய்யச்சொல்வீர்

வனத்துக்கென்னை யனுப்பினதில் வருத்தமுண்டு
ஐயனுக்கு
மனஞ்சகியாத் தந்தைக்கெந்தன் மனக்கருத்தைச்
சொல்லுமையா

670. பெற்றதந்தை மனம்வருந்தப் பிரிந்துவந்த குறையை
யெண்ணிப்
உற்றபடி எனதுமனம் உருகுமொரு உண்மைதனை

ஆரறிவார் ஆருடனே அகநிலையை நானுரைப்பேன்
பாரிலெந்தன் பெற்றவர்கள் பரிந்துபிக்க விட்டுவந்தேன்

அந்தக் குறை தனைநினைத்தால் அங்கமெல்லாம்
பொங்கு தையா
வந்தகஸ்டம் சகிக்கவுண்டோ வையகத்தி
லேனுதித்தேன்

பெற்றவரை யாதரியாப் பிள்ளைகட்கும்
பெருமையுண்டோ?
சற்றுமுண்டோ இகபரத்தில் செவிக்கியாதி
போகமுந்தான்

மக்களுள்ள போர்களுக்கு மனமகிழ்ச்சி யுண்டென்பார்
தக்கமகன் நானிருந்தும் தந்தைகஷ்டப் படலாயிற்று

675. தந்தைதனை யாதரிக்கத் தம்பியிடம்
மிகவுஞ்சொல்வீர்
எந்தனாலே தந்தைக்கணு இல்லையையா சுகமதுதான்

பெற்றெந்தன் அன்னைதனைப் பிரேமைவைத்து
ஆதரித்து
மற்றுமுள்ள யாவருக்கும் மனக்குறையே யில்லாமல்

இராச்சியபாரம் நடத்திக்கொண்டு இரவிகுலத்தைப்
பெருமை செய்ய
ஆசையுடன் சொன்னேனென்று அருமைத்தம்பி
பரதனிடம்

சொல்லுமென்று ராமன்சொன்னான் சுமந்தரரப்போ
சோகங் கொண்டார்
வல்லபனாம் ஸ்ரீராமன் வாஞ்சையொடு ஆறுதல்கள்

மிகவுரைத்சொல்லித் தேற்றிமேல் மேதாவி சுமந்தரரும்
அகந்துணிந்தார் நின்றிடவே அதன்பிறகு குகனைப்
பார்த்து

680. ஆலம்பாலை ஜடைதரிக்க அழைப்பிவிப்பா
யென்றுரைக்க
கோலங்கொள்ள ஆலம்பாலைக் கொண்டுவரச்
சொன்னானவன்

அந்தப்பாலைக் கொண்டுராமன் அனுஜனொடு
ஜடைதரித்துப்
பந்தமற்ற முனிவரைப்போல் படிந்தகோலம்
கொண்டானம்மா

அன்னன்தம்பி இருவரையும் அப்பொழுது
பார்த்தவர்கள்
கண்ணில்தாரை பெருகமிகக் கதறினார்கள் மதிமயங்கிச்

சகலபாக்கியங் களுமிருக்கச் சாமிராமன் வேண்டாமல்
வெகுதுணிவாய்த்துறவியைப்போல்
வேஷங்கொண்டான் ஆசையோடு

அந்தக்கோலங் கொண்டதன்மேல் அதுவுமிகப்
பார்ப்பதற்குச்
சுந்தரமா யிருந்ததம்மா சொல்லப்போமோ அழகுதனை

685. அதன்பிறகு குகனைப்பார்த்து அன்புடனே ஸ்ரீராமன்
இதமாகச் சொல்லுகிறான் எனதிஷ்டனே
கேளாயென்று

வனவாச மானவுடன் வந்திடுவோம் நகரடைவோம்
உனதுதேசம் ஆண்டுகொண்டு உள்ளபடி
நடந்துகொண்டு

இருப்பாயென்று சொல்லிவிட்டு இருவருடன்
ப்ராமனுமாய்
வரும்போது ஓடமதில் வந்ததை ஜானகியாள்

ஸ்ரீராமன் கங்கா நதியைத் தாண்டித் தம்பியோடும் சீதையோடும் தென்திசை நோக்கிப் போவது

கங்கைகரைத்து தனக்குச்செய்து கருத்துடனே
பிரார்த்தனைகள்
மங்களத்தைத் தருவதற்கு மட்டில்லாமல்
செய்துகொண்டாள்

தென்கரையை வந்தடைந்து தேடியொரு வழியடைந்து
அன்புள்ள சீதையின்முன் அனு ஜனும்பின் ராமனுமாய்

690. நடந்துவெகு தூரம்வந்து நாடியொரு மரத்தடியில்
இடமிதுவே இன்றிருக்க இசைந்ததென்று அங்கிருந்தார்

அடித்தார்சில மிருகங்களை ஆகாசமாய்க்
கொண்டங்கு
விடியுமட்டு மிருந்தாரம்மா வேறுயாரு மில்லையம்மா

அம்ஸதூளி காதல்பத்தில் அநேகவிதச்
சௌக்கியத்தோடு
தம்பதியோ டுறங்கும்ராமன் தரைதனியே
சயனங்கொண்டான்

அசந்துநித்திரை கொள்ளாமல் ஆண்டவன்ஸ்ரீ
ர்ராமன்
விசனங்கொண்டா னப்பொழுது விநயமுள்ள
தம்பியொடு

தம்பியேகே ளென்னசொல்வேன் தரணியிலே
இதுவரையில்
கொம்புடனே வாழ்ந்துவந்தோம் சுகமிகவே
யனுபவித்தோம்

695. ஊழியங்கள் செய்பவரும் உபசரிக்கும் மற்றவரும்
வாழும்நல்ல போகங்களும் வழியோடு
ஒதுங்கிற்றுபார்

எத்தனையோ பாக்கியங்கள் இருந்தாலும் இந்தவேளை
அத்தனையும் நமக்கிலையே அரணியத்தில் சுஷ்டப்பட

நேர்ந்ததுபா ரிவ்விதமாய் நேருமென்று
நினைத்ததில்லை
யார்சகிப்பா ரிந்தக்கஷ்டம் அதிர்ஷ்டயீன
னென்னைப் போல

ஆருமுண்டோ தம்பியேபார் அனுபவிக்க
லாகுமோபார்
காருண்யம் சற்றுமின்றிக் கானகத்தை யடையும்படித்

தந்தைநம்மைத் துரத்திவிட்டார் தயவின்றித்
துணிந்துசெய்தார்
அந்தக்குறை தனையெண்ணில் ஆவிமிகத் தவிக்குதடா

700. நலைதனியே எழுதிவிட்டான் தயவின்றிப் பிரமனுமே
விலகாது விதிவசத்தை வெல்லவுண்டோ வல்லமையால்

எழுதாக்குறைக் கழுதாலுண்டோ ஈசனரு
ளெனக்கிலையே
உழுதமட்டும் பலனடைவார் உலகில்யாரும்
அதைமீறியோ

அனுபவிக்கப் போகாதென்னும் அருள்பரனார்
விதியோவந்து
எனையுமிப்போ தழுவிற்றடா என்னசெய்வேன்
ஞானகியும்

சுகப்படவே யெனையடைந்தாள் சோகப்பட
அவளுமானாள்
மகிமையைனக் கிருந்தென்ன மனைவிதனைச் சுகத்தில்
வைத்து

ஆதரிக்க ஆகாமலே அசமஞ்சன்போல்
நானும்வந்தேன்
மாதரசாம் சீதைக்கிப்போ மனவருத்த மிக்குமன்றோ?

705. பெண்களெல்லாம் சுகப்படவே பிரபஞ்சந்தனி
லாவாரன்றிக்
கண்கலங்க அவரைச்செய்தால் சுஷ்டமதைச்
சகிக்கமாட்டார்

எனதுசுஷ்ட மெனக்கருவும் எண்ணமதி லில்லையடா
மனையவளின் சுஷ்டமொன்றே மனந்தனியே
யுருத்துதடா

காமமொன்றே முக்கியமாய்க கருத்தில்கொண்டு
நமதுதந்தை
கேமந்தரும் புத்திரைச் சீர்கெடுத்து வனம்போக

அனுப்பினது நியாயமென்று அதைநினைத்து
ஆவதில்லை
மனம்நொந்து வாடுவோராம் மாதாக்களை யாதரிக்க

இந்தட்சணம் அவரிடம்போய் இணங்கியவர்
மறைப்படிநீ
தந்தவரை யுபசரித்தல் தர்மமென்றான் தம்பிகேட்டு

அண்ணன்மனம் நொந்ததுக்காய் அனுஜன்மிகப்
பரிதபித்துக்
கண்ணில்தாரை பெருகவவன் கமலாட்சன் ஸ்ரீராமனை

நோக்கிச்சொல்வான் எனதண்ணா நோகவேண்டாம்
தேசுமது
பாக்கும்தப்பும் பாதையுண்டாம் பலனதினா
லேதுமில்லை

வந்துவிட்டோம் மனந்துணிந்து வருந்துவதேன்
வந்தாலுமே
எந்தக்கஷ்டம் வந்தாலுமே ஏனதற்கு அஞ்சவேண்டும்

உம்மைவிட்டு ஒருநொடியும் ஒதுங்குவென்னா
லாகாதண்ணா
இம்மையிலும் மறுமையிலும் எனக்குக்கதி
நீர்தானண்ணா

ஆசையினா லுமைப்பிரிய அகந்துணியே
னென்றுரைத்த
பாகமுள்ள தம்பிமீதுபட்சமிகக் கொண்டான்ராமன்

மறுகாலை யெழுந்துமுவர் மார்க்கந்தன்னைப் பற்றிக்
கொண்டு
இருந்தியாம் யமுனைசங்கை இணங்கும்சந்தி
தனையடுத்த

பரத்வா ராச்சிரமத்தைப் பார்த்தங்கு வந்தந்த
அருந்தவத்தோர் தம்முடைய அடிவணங்க அவர்கண்டு

அகங்குளிர்ந்து அனுக்கிரகித்து அறுசுவையோ
டுணவுதந்து
சுகமுள்ள ஸ்தலமதிலே சுவஸ்தமாக வசித்திடலாம்

இருப்பதற்கு இவ்விடமே ஏற்றதென்று அவருரைக்க
அருகில்சில ஊர்களுண்டு ஆகையினா
லொதுங்கிச்சற்று

இருந்திடவே நல்லவொரு இருப்பிடத்தைக் குறித்திடவே
கிருபைசெய்வீ ரென்றவரைக் கேட்கராமன் முனிவர்
சொல்வார்

720. இரண்டுகாதஞ் சென்றாலங்கு இருக்குமொரு
சித்திரகூட
பருவதமே வசிப்பதற்குப் பாங்குள்ள
ஸ்தலமாமென்றார்

அவரிடத்தி லனுஜைபெற்று அங்கிருந்து
வந்துசேர்ந்தார்
தவமுனியாம் வால்மீகி தங்குமிட மாகவுள்ள

சித்திரகூட பருவதத்தைச் செப்பவுண்டோ
அதன்பெருமை
முத்திபெறும் முனிவர்களும் முறையறிந்த சித்தர்களும்

வசிக்குமந்த ஸ்தலந்தனிலே வால்மீகி ரிஷியைக்கண்டு
உசிதமாக வணங்கஅவர் உபசரித்துத் திர்ப்திகொண்டு

அனுக்கிரகித்து அவர்களுக்கு அருகிலொரு
ஸ்தலங்குறித்தார்
மனமகிழ்ந்தார் மூவர்களும் மாதாபிதா
போலெண்ணினார்

725. அவ்விடத்தில் அனுஜானாரு ஆசிரமத்தை
யாரம்பித்துச்
செவ்வையாகக் கட்டிவைத்தான் ஸ்ரீராமன்
வாஸ்துசாந்தி

முதலியவை செய்ததிலே மூவருமாய் வசித்துக்கொண்டு
விதிப்படியே நடந்துவந்த விமரிசையை
என்னசொல்வேன்

முனிவரோடு ஸ்ரீராமன் முறையாகக் கலந்துகொண்டு
கனதுநித்திய கருமங்களைத் தப்பாமல்
நடத்திக்கொண்டு

அனுஜன்செய்யும் பணிவிடையும் அடியாள்செய்யும்
உபகாரமும்
மனமகிழப் பெற்றுக்கொண்டு மகிமையுட
னிருந்தானங்கு

சித்திரகூட பருவதத்தில் ஸ்ரீராமன் வந்திருக்கும்
உற்றசேதி வனந்தனிலே உள்ளவராம் அரக்கரெல்லாம்

730. தெரிந்துகொண்டார் ராமனிட திறமையையும்
கண்டுகொண்டார்
பரபரப்பு மிகவுங்கொண்டார் பயமுங்கொண்டார்
தைரியமின்றி

இங்கிவ்வாறு இருக்கையிலே இராமன்தம்பி
சீதையோடு
கங்கைநதி தாண்டியப்பால் கால்நடையாய் மூவருமாய்

ஸ்ரீராமன் சித்திரகூட பருவதத்தி லிருப்பதைத் தெரிந்துகொண்டு சுமந்தரர் அரசரிடம் வந்து சொல்வதும், அதைக் கேட்டு அரசர் சோக மீறிக் கண்ணீருண்டு கஷ்டப்பட்டுக் கதி யடைவதும்

போகுமொரு கோலங்கொண்டு புத்திவச மில்லாமல்
சோகங்கொண்டார் குகனுடனே சுமந்தரரும்
மிகவுமம்மா

அலறிமிக அழுதவர்கள் அதன்பிறகு மதியடைந்து
பலவிதமா யாலோசித்து பக்தன்குக னிஷ்டப்படி

குகனூரில் சுமந்தரர்வந்து குறித்திரண்டு நாளிருந்து
மகரிஷிக ளிருக்கும்நல்ல மலையாள சித்திரகூடம்

735. சேர்ந்தங்கு மூவருமாய்ச் சேஷமமாக இருப்பதாகச்
சாரணர்கள் வந்துசொன்ன சமாசார மறிந்துகொண்டு

ரதத்தைக்கட்டி அயோத்திவந்து ராஜன்முன்னே
வந்திடவும்
அதிகதுர்க்கங் கொண்டரசன் அலறிமூர்ச்சை
போய்விழுந்தான்

பத்தினிக ளிருவருமாய்ப் பக்தியுட னெடுத்திருத்தி
எத்தனையோ உபசரித்தார் இராஜன்சற்றுத்
தெளிவடைந்தான்

பதியைப்பார்த்துக் கௌசலையாள் பரிதவித்துச்
சொல்லுகிறாள்
மதியுள்ள புத்திரரை மனமொப்பி வனமனுப்பிச்

சோகமடைந் தாவதென்ன? சுமந்தரர்சொல்லும்
சேதியெல்லாம்
தாகங்கொண்டு கேட்டுச்சற்றுத் தைரியங்கொள்ளு
மென்றுரைத்தாள்

740. ஜ்ஷ்டபாரியை இவ்விதமாய்ச் செப்பியதைக்
கேட்டரசன்
ஜ்ஷ்டபுத்திரன் ராமனைப்போல் ஜகத்திலில்லை
சுமந்தரரே

மக்களென்ன சொன்னாரையா மருமகளு
மென்னசொன்னாள்
அக்கரையோ டெனக்கவர்கள் அபிப்பிராயஞ்
சொல்லுமென் நான்

வந்தனங்களெல் லோர்க்குஞ்சொன்னான்
வாஞ்சையுட னுமைநினைத்துச்
சிந்தைமிகக் கலங்கிராமன் செப்பினதைக் கேளுமையா

என்னசெய்வே னதுதந்தை எப்படித்தான்
மனஞ்சகிப்பார்
அன்னையுந்தான் சகிக்கவுண்டோ அவர்சுட்குநான்
மகனாய்வந்து

அலையஅவர் களைப்பிரிந்தேன் ஆசையெல்லாம்
நான்மறந்தேன்
விலகாத விசனந்தந்தேன் விட்டுவந்தேன் சுட்டப்பட

745. நான்பிறந்து பெற்றவர்க்கு நானேதுஞ் செய்ததில்லை
ஏனிந்த ஜன்மங்கொண்டேன் என்மனதில்
கவலைகொண்டேன்

அவரெனக்காய் வருந்தவிட்டு அரணியத்தை
நானடைந்தேன்
சிவனிட்ட சுட்டளைக்குச் செய்யவுண்டோ
வெரானாலும்

விசனமின்றி இருக்கச்சொன்னான் வெகுதைரியஞ்
சொல்லச்சொன்னான்
இசைந்ததம்பி பரதனுக்கு இதஞ்சொன்னாள் வெகுவாக

உமதுமீதில் லட்சுமணன் உள்ளமிகு
நொந்துசொன்னான்
நமதுமக்க ளென்றுசற்றும் தயவில்லாத தந்தைமனம்

கல்லென்றே கண்டுகொண்டேன் கனவிலுமே
எனக்குத்தந்தை
அல்லஅவர் ராமனேயாம் அருமைத்தந்தை
யாவனன்றாள்

சீதைகண்ணில் தாரைகண்டேன் செப்பவில்லை
யேதுமவள்
மாதரசாம் அவளுடனே மக்கள்கங்கை
தாட்டிப்போனார்

சித்திரகூட பருவதத்தில் சேர்ந்ததிலே வசிக்கின்றாராம்
உத்தமரைப் பிரிகையிலே உள்ளமிக
நொந்தேனென்று

கண்கலங்கிச் சுமந்தரர்சொன்னார் சுதந்திராஜன்
அவரைப்பார்த்து
உண்மையாக மோசம்போனேன் ஊரிலுள்ளோர்
யாவருடன்

கலந்துநன்றா யோசியாமல் கண்மூடித் தனமாக
நலமில்லாக் காரியஞ்செய்து நானடைந்தேன்
குறைமிகவும்

சொல்லியினி யாவதில்லை சோகமென்னை
விடுவதில்லை
வல்லமையு மெனக்கில்லை வழிதுறையுந் தெரியவில்லை

செப்புமெந்தன் வாக்கைக்கேளீர் சீக்கிரமாய்
வனம்போவீர்
இப்பொழுதே யழைத்துவாரீர் எம்மக்களைப்
பிரிந்திருக்க

ஆகாதென்னா லரைநிமிஷம் ஆகையினால்
தயவுசெய்வீர்
போகாவிடி லிப்பொழுதே போய்விடுமென் ஆவியையா

எனையாகிலும் வரித்து இட்டுக்கொண்டு
போய்விடுவீர்
மனவருத்தந் தீருமையா மக்களைநான் பார்த்தவுடன்

இரண்டிலொன்று செய்யாவிடில் என்பிராணன்
நிற்காது
பெருமையுள்ள சுமந்தரரே புறப்படுமென்
றேயுரைத்தார்

அப்பொழுது கௌசலையாள் அதிகமாகத்
துக்கங்கொண்டு
இப்பொழுதே மகனிடத்து என்னைக்கொண்டு
போய்விடுவீர்

760. இங்கிருந்தா லெனதாவியை இழந்திடுவேன்
சுமந்தரரே
அங்கமதை வைத்திருக்க ஆகாதென்று
அவளுஞ்சொன்னாள்

சுமந்தரர்கேட்டுக் கோசலையைச் சோகமது
வேண்டாமம்மா
இமைப்பொழுதும் ராமனுக்கு ஏதுங்கஷ்ட
மில்லையம்மா

தைரியமே கொள்ளுமம்மா தசரதரைப் பாருமம்மா
தெய்வச்செய லென்றெண்ணித் தேறுமம்மா
வென்றுரைத்தும்

விசனந்தனில் மூழ்கிவிட்டாள் விவேகந்தனை
மறந்துவிட்டாள்
தசரதரைப் பார்த்துச்சொல்வாள் தயவின்றிப்
புத்திரனை

அரண்யத்திற்கு அனுப்புதற்கு அகந்துணிந்தீர்
அறிவிழந்தீர்
அருமைமகன் ராமனென்று அறியீரோ தெரியீரோ?

765. பெருமைதந்த ராமனுக்குப் பெரியகஷ்டம் நீர் தந்தீர்
பரிதவிக்க என்னைச்செய்தீர் பட்டந்தந்தீர் பரதனுக்கு

அவனுமவன் தாயும்நீரும் அகங்குளிர்ந்து வாழ்ந்திடுவீர்
எவருங்கண்டு இழிவுசெய்ய எங்களைநீர் ஒதுக்கிவிடும்

தர்மந்தனைக் கைவிட்டுத் தர்மசீலன் ராமனைநீர்
நிர்நிமித்தம் வனமறுப்ப நியாயமுண்டோ
கொடுமையன்றோ?

அனுகூல மகனுக்குநீர் ஆபத்துத் தந்ததுதான்
கனமாமோ கைகேசி கருத்தின்படி நீர் நடந்தீர்

பரதனிந்த ராச்சியத்தைப் பட்டங்கட்டி
யாண்டொருக்கால்
தருவோனன்று சொன்னாலுமே தடுப்பான்ராமன்
தரிக்கமாட்டான்

770. ஒருவர்தொட்ட விஷயந்தனை ஒருக்காலும் கைப்பற்றக்
கருந்துக்கொள்ளான் ஸ்ரீராமன் கண்டுகொள்வீ
ரதுவுமன்றி

நீருந்தானே ராமன்முன்னே நின்றகோணை
வெல்லவுண்டோ
ஆருமவன் பலத்தைக்கண்டால் அடங்கிமிக
ஒடுங்குவரே

மலைகளெல்லாம் பொடிபறக்க மாட்டியம்பைப்
பூட்டுவனே
உலகிலவன் சக்திதனை யொருவருந்தா
னறியவுண்டோ?

தருமமதை யெண்ணியவன் தமதுவாக்கின்
படிநடந்தான்
கருணையின்றிச் செய்துவிட்டார் காரியமெல்லாங்
கெடுத்துவிட்டார்

சுந்தரியாம் கைகேகியின் சுவாதீன மானதற்கு
வந்ததெல்லா மொன்றுமில்லை வையகமே நிந்திக்குமே

775. அடங்குவோர்க்கு அடிமையாதல் அழகாமோ
அதினாலே
கெடுமன்றோ காரியங்கள் கேவலமாய்ப்
பலிக்குமன்றோ?

பெண்ணைநம்பிப் பேச்சுத்தந்து பெருமையெல்லாம்
போக்குடித்துக்
கண்ணில்தாரை விட்டழுதால் மண்ணுலகில்
மதிப்பதுண்டோ?

அடங்குவுள்ள பெண்களுக்கு ஆதிக்கியந் தருவதினால்
நடத்தைகெடும் அவர்களினால் நஷ்டகஷ்ட
மிகவும்வரும்

அதிகாரி கைகேயினால் அடிமைகளாய்
நாங்களானோம்
விதிவசத்தை யென்னசொல்வோம் வேடுதையா
நெஞ்சுமிக

அஞ்சியஞ்சி யனுபவித்தோம் அகமெலிந்து
மிகவாடினோம்
நெஞ்சுக்குறை யென்னசொல்வோம் பஞ்சைகள்போ
லானோமிப்ப

780. எண்ணியெண்ணி நானழுது என்னபல ன
டைந்திடுவேன்
பெண்ணென்று நானுதித்துப் பெருமையில்லாக்
கருமியானேன்

பிள்ளையில்லாப் பேர்களுமே பெருமைகொள்வா
றிவ்வுலகில்
பிள்ளையெனக் கிருந்துமிப்போ உள்ளமிக
நோகலானேன்

பார்த்தாவா யுமையடைந்தோம் பணிவிடைக
ளடங்கிச்செய்தோம்
கர்த்தனைப்போ லுமைநினைத்தோம் காலமெல்லாங்
கஷ்டப்பட்டோம்

மனையவளை யாதரித்து மனச்சுகங்கள்
தருவாரென்பார்
இனமுள்ள மனைவிகட்கு என்னசுகஞ் தந்தீரையா?

இந்தவிதம் மனக்குறைகள் எத்தனையோ
கௌசலையாள்
சிந்தைநொந்து சொன்னாளம்மா அந்தவார்த்தை
தனைக்கேட்டு

785. அரசன்மிக விசனப்பட்டு அன்புள்ள கௌசலையும்
வருத்தமாகச் சொல்லும்படி வாய்த்ததென்று
மிகமயங்கி

பட்டஸ்திரியாம் இவள்மீது பட்சமின்றி கைகேயி!
மேல்
இட்டமெல்லாம் வைத்திருந்தும் இவளணுவுஞ்
சலிப்பின்றி

எத்தனையோ பட்சங்கொண்டு எண்ணிச்செய்த
பணிவிடைகள்
அத்தனையும் நினைக்கையிலே உத்தமிமேல்
குற்றமில்லை

வரையறையைக் கடந்திவளும் வார்த்தைசொல்லும்
தோரணையால்
குறைமிகவும் மனதில்கொண்ட குணந்தானென்று
ராஜனெண்ணி

பத்தினியே உத்தமியே பரிதவிக்கப் பேசிவிட்டாய்
எத்தனைதான் குறைதந்தாலும் என்னைக்குறை நீகூறல்

790. அடுக்காதுனக் சுதினாலே அனுகூலம் விளையாது
துடுக்கான வார்த்தைகளைத் தூரத்தள்ளி
யெனையடுப்பாய்

கஷ்டப்படும் வேளையிலே கழுகுபோலக்
கொத்துதற்கும்
இஷ்டப்படும் குணமதனை ஏன்வகுத்தாய் நீயுந்தானே?

மகிமைதரும் மகன்வனத்தில் மகத்தான கஷ்டப்பட
அகந்துணிந்தே யனுப்புமொரு அறிவீனன்போல்
நானுமானேன்

எனதாவி ராமனென்று எப்பொழுதும் நம்பியுள்ள
எனதுள்ள மிகக்கொதிக்க என்மகனைப் பிரிந்தகுறை

நினைத்துநினைத் துருகும்வேளை நீயும்குறை கூறலாகிக்
கனமழிந்தேன் நினைவிழந்தேன் மனமசந்தேன்
விதிவசத்தால்

795. மிகப்பலவா னாயிருந்து மகிமையுடன் புகழடைந்து
அகமகிழ்ந்தேன் சுகம்டைந்தேன் நிகரற்றில்
நிகரில்லாத

கதியளிக்கும் புத்திரரையும் உதவியாக நானடைந்தேன்
சதிசெய்யும் கைகேயினால் சகலத்தையும்
இழந்தேனிப்போ

அனைவர்களு மெனையினிமேல் அலட்சியமா
யெண்ணும்படி
மனையவளா லாயினேனே மனக்கொதிப்பு
சகிக்கலையே

இந்தவேளை நீயுமிக எடுத்தெறிந்து வருத்தப்படச்
சிந்திவிட்டாய் சொந்தம்விட்டு உந்தன்புத்தி மந்தமாகி

பார்த்தாவே தெய்வமென்று பாவித்து நடப்பதுவே
தருமபத்னி விரதமாகும் தடமறிந்து நடப்பாயென்றான்

800. கேட்டிதனைக் கிலேசங்கொண்டு கேவலமாய்ப்
பேசிவிட்டோம்
வாட்டங்கொண்ட மனத்தாபம் வழிதப்பச்
செய்ததென்று

எண்ணுகிறாள் மோசம்போனோம் ஏற்காத
வாக்குரைத்தோம்
கண்ணயில்லா மதிகொண்டு கடிந்துரைத்தோம்
கணவரைநாம்

துடைக்குலமா யிருக்கும்நாம் அதிக்கிரமித்துப்
பேசினது
அடுக்காத காரியமே அறிவிழந்து சொன்னோமே

புத்திரரின் பெருமையெல்லாம் புருஷருக்கே
யாவதல்லால்
சர்றுமுண்டோ நமக்குதிலே சாஸ்திரப்படி யேதுமிலை

நஷ்டலாபம் நாயகர்க்கே நாமதனை யெண்ணலாமோ?
இஷ்டமவர் கொள்வதையே இணங்கிச்செய்தல்
நமதுகடன்

805. இந்தவித முள்ளநல்ல ஏற்றதர்மந் தனைமறந்து
வந்தபடி பேசினது நிந்தனைக்கே ஏதுவென்று

பயந்துமிகக் கௌசலையாள் பர்த்தாவின் அடிபணிந்து
தயவுசெய்வீர் அறியாமல் தப்புச்செய்தேன் மதிமயங்கி

புத்திரசோக பாதையினாற் புத்திகெட்டுப்
பேசிவிட்டேன்
சித்தந்தன்னிற் கொள்ளவேண்டாம் சினேகங்கொள்வீ
ரெந்தன்மீது

பதியைமீறும் பத்தினியவள் பதிவிரதையா
யாவதுண்டோ?
கதியென்று அவளுக்குண்டோ? கஷ்டமின்றிச்
சுகமுமுண்டோ?

உமதுமன மறிந்துமக்கு உபசரிக்கும் கடமையெண்ணிச்
சமையுடனே நடந்துவந்தும் சற்றதனை
மறந்துசொன்னேன்

810. வாயாலே பிதற்றியும்மை வந்தபடி பேசினதில்
ஆயாசங் கொள்வீராயின் அலைந்துபோவேன்
கதியிழந்து

சஞ்சலத்தால் முறையைவிட்டுச் சாந்தகுணந்
தன்னைவிட்டு
மிஞ்சியும்மைச் சொன்னேனையா அஞ்சுதையா
மனமிப்போது

செய்தபிழை தனைப்பொறுப்பீர் சினேகங்கொண்டு
ஆதரிப்பீர்
கைவிடவே யெண்ணவேண்டாம் காப்பாற்று
மென்றழுதாள்

இந்தவிதம் பரிதபித்து ஏங்கியழும் பத்தினிபோல்
அந்தரங்க அபிமானம் அரசன்கொண்டு செப்புகிறான்

மனங்கலங்கிச் சொன்னதன்றி மனதாரச்
சொன்னதன்று
உனதுமனம் நானறிவேன் உன்னைக்குறை
சொல்லவுண்டோ

815. கனமழிய மனம்வருந்தக் காரணமொன்
றுண்டுசொல்வேன்
எனதுசெய லாலேயிந்த இம்சைப்பட ஆனேன்கேளாய்

பூர்வந்தனில் வேட்டைக்காகப் போயிருந்தேன்
வனந்தனிலே
பார்த்திடாமல் ஒருவர்மீது பாணந்தனை
யெய்துவிட்டேன்

அதினாலே அவர்இறந்தார் அவர்தாயும் தந்தையுமாய்
மதியின்றிச் செய்தஎன்மேல் மகத்தான
வருத்தங்கொண்டு

எனக்கும்புத்திரசோகமுண்டாய் என்பிராணன்
போகுமென்று
மனம்நொந்து சொல்லிவிட்டு மரணமானார்
அவர்களுமே

அந்தச்சாபம் பலித்ததிப்போ ஆவிமிக
நோகுதிப்போ
எந்தனுக்கு வாழ்வினிமேல் இல்லையடி இவ்வுலகில்

தேகுந்தனில் உணர்ச்சியில்லை திருஷ்டியுந்தான்
தெரியவில்லை
சோகுமொன்றே மீறுதடி சொல்லச்சக்தி யில்லையடி

பாதகிகை கேசியென்னைப் பரிதபிக்கச் செய்தாளே
காதகியை நினைக்கையிலே கஷ்டமிகப் பெருகுதடி

கருணையுள்ள ராமனைநான் கண்டாலிப்போ
கஷ்டம்நீங்கும்
கருமவினைப் பயனாலே காட்டுக்கவன் போகலாச்சு

ஹாராமா ஹாசீதே ஹாலட்சுமனா ஹாகௌசலே
நேரானசுமித்திரையே நினைவிலையே
இனிப்பிழைத்தேன்

இந்தவிதஞ் சொல்லியப்பால் ஏதும்பேசா
திருந்துவிட்டான்
அந்தியப்போ நிசிவேளை அனைவர்களும்
அசந்துவிட்டார்

கடைசியாக அரசன்சொன்ன காலமதே அவனுடைய
சடத்தைவிட்டுச் ஜீவாத்மா சுதியடைந்த சமயமம்மா

அடுத்திருந்த பேர்களெல்லாம் அசந்துநித்திரை
செய்துவிட்டார்
படுத்திருக்கும் அரசன்நிலையாக்கவில்லை
யாருமப்போ

உதிக்குமுன்னே உபசாரங்கள் உரைப்போரெல்லாம்
அவர்தொழிலை
விதிப்படியே செய்கையிலே விழித்தெழுந்தார்
பத்னிமார்கள்

அரசன்தேகந் தனைப்பார்த்தார் அசைவின்றி
இருக்கக்கண்டார்
கருத்திலிடி விழுந்ததுபோல் கலங்கிமிகக் கதறினார்கள்

அரசன் கதியடைந்ததற்காய்ப் பத்னிகள் பிரலாபிப்பதும், வசிஷ்டர் பரதனை யழைப்பிப்பதும்

கைகேயிகேட்டு ஓடிவந்து கண்கலங்கி விசனப்பட்டாள்
கைவசமாய்ச் செய்துகொண்டு கணவர்தனைக்
கொண்றவளே

830. பரியாசஞ் செய்வாரடி பார்த்தவர்க ளுன்னைமிகச்
சிரிப்பாரடி விசனப்பட்டால் சீமையெங்கும்
பழிப்பாரடி

மனங்களித்துச் சுகப்படுவாய் மனம்வருந்த
உனதுகையில்
அனைவரையும் அடிமையாக்கி ஆவிவிட்டுச்
சுவர்க்கத்திற்கு

பறந்துவிட்டார் பார்த்தாவுந்தான் பாதகியே
மகனுமென்னைப்
பிரிந்திடவே செய்துவிட்டாய் பேசவுண்டோ
உன்னைக் குறை

மிலையொந்து ஆவதில்லை விதவைகளாயானோமே
நீகாதிக்குதடி மனமெனக்குக் கொஞ்சமுந்தான்
இரக்கமின்றி

இப்படியுஞ் செய்வாருண்டோ
எவருந்தான்பிரியமுண்டோ
ஒப்பவுண்டோ உலகமுந்தான் உன்செயலை
நினைத்துப்பாராய்

835. வயிற்றெரிச்சல் சகிக்கவுண்டோ வாய்திறந்தால்
ஏசினியுண்டோ
தயிரியமு மெனக்குண்டோ தருமமென்ப
துனக்குண்டோ

இந்தவிதம் கௌசலையாள் ஏங்கிமிகக்
குறையுரைத்தாள்
குந்தியங்கு கைகேசி குனிந்ததலை யாயிருந்தாள்

அதன்பிறகு கௌசலையாள் ஆராத விசனத்தினால்
பதியுடனே சகமனம் பண்ணுவானென் றவனைக்கட்டி

அலருகையில் அமாத்தியரும் அருகிருந்த மற்றவரும்
பலவிதமாய்த் தைரியஞ்சொல்லிப் பக்குவமா
யொதுக்கிவிட்டு

அரசனது தேகமது அழியாமல் காப்பதற்குப்
பெரியநல்ல பாத்திரத்தில் பிரேதந்தனைத் தைலமதில்

840. போட்டுவைத்தே யதன்பிறகு போதுமுள்ள
ரிஷிகளொடு
கூட்டமாகச் சபைசேர்த்துக் குறித்துநன்றா
யாலோசித்தார்

அரசனில்லா ராச்சியத்தில் அனேகவிதக்
குறைகளுண்டாம்
பரதனைநாம் வரவழைப்போம் பட்டாபிஷேகன்
கூட்டிக்கொண்டு

அரசுமுறை நடத்துவதேஅனுகூல மாகுமென்று
கருதியெல்லோர் தீர்மானித்தார் கனமுள்ள
வசிஷ்டமுனி

தேர்ந்தநல்ல தூதர்களாம் திறமையுள்ள
இருவர்களைப்
பார்த்தவர்க்கு ஆக்ஞையிட்டார் பரதனைப்போய்
அழைத்துவர

குதிரைகளில் வேகமாகக் குறுக்குவழி தனில்போவீர்
நதிகானல் மலைகள்தாண்டி நகரான கேகயனாம்

845. இராஜனது பட்டணத்தை இராத்திரியே
போயடைந்து
நேசமிகப் பாராட்டி நிமிஷமங்கு நிறுத்தாமல்

வந்திடுவீர் அழைத்துக்கொண்டு வரலாறை
யெவளவேணும்
தந்திடாமல் மதியுடனே தாஷ்டிகமாய்ச் சந்தோஷமாய்

பேசுவீர்கள் பின்னுங்கேளீர் பிரேமையுடன்
மந்திரிகளும்
ஆசையுடன் நானுஞ்சொன்னேன்
அழைத்துக்கொண்டு வந்திடவே

இந்தவிதஞ் சொல்வதோடு இங்கெவருஞ்
சௌக்கியமென்றே
அந்தப்படி யுரைத்தவனை அழைத்துக்கொண்டு
வருவீரென்று

பரதனுக்கும் மற்றவனுக்கும் பலவிதமாம் பகுமானம்
தருவதற்கு அநேகர்தந்தார் தட்சணமே
பிரயாணமானார்

850. வாயுவேக மாகஅவர் வழிகடந்து நகரடைந்தார்
ஆயிற்றப்போ அஸ்தமனம் அகலிக்கப்பா லிருந்தாரவர்

கோட்டைவாசல் சுற்றியதால் கோரியந்த
வாசல்தன்னை
தாட்டிநகர்க் குள்ளேசெல்ல தடமில்லாம லிருந்தாரவர்

அந்தத்தினம் ராத்திரியில் அகோரமாகத் தசரதற்கு
வந்ததுபோல் கெடுதிகளை வகைவகையாய்க்
கனவுதனில்

பரதன்கண்டு மனமருண்டு படுக்கைகொள்ளா
திருந்ததன்மேல்
அருணோதய மானவுடன் அன்புள்ள சிநேகிதர்கள்

வந்துபார்க்க முகந்தனிலே வாட்டங்கண்டு
குறையைக்கேட்டார்
சிந்தைமிக நொந்தவனாய்ச் செப்புகிறான் கனவுதனை

855. ஐயனுக்குக் கெடுதிவரும் அபசகுன மகவுங்கண்டேன்
தெய்வச்செய லெவ்விதமோ தெரியலையே
யென்றுரைத்தான்

அந்தவேளை தூதர்வந்து அறிக்கையிட்டார்
வரவைச்சொல்லி
எந்தன்தந்தை தமயனுடன் எனதுதம்பி லட்சுமணனும்

தருமசீல முள்ளவராம் தயவுள்ள பெரியதாய்கள்
இருவர்களுஞ் சகிதமாக எல்லோரும் கூடமந்தானா

---

851. தடம் - வழி

853. அருணன் - சூரியன்

தெரிந்தவள்போல் பாவங்கொண்டு தினையளவும்
அறிவின்றி
எரிச்சல்முகந் தனில்காட்டி இரக்கமின்றி
யிருப்பவளாம்

தனதுமனப் படிநடந்து தன்காரியம் பெரிதாயெண்ணி
அனைவரையும் அவமதித்து அகங்காரிக்குஞ்
சண்டியான

860. எனதுதாயும் சேமமந்தானா என்றுகேட்கத்
தூதரப்போ
அனைவர்களும் சுகமேதான் அட்டிசெய்ய
வேண்டாமென்றார்

துணிமணிகள் கொணர்ந்ததையும் தூதர்தர
வாங்கிக்கொண்டு
குணமுடைய பரதனினி கொஞ்சமுந்தான் தாமசிக்க

ஆகுமோவென் றவசரமாய் அனைவருடன் அனுமதியை
வேகமாகப் பெற்றுக்கொண்டு விசாரத்தோடு
பிரயாணமானான்

தூதர்களை யனேகவிதம் தாண்டிக்கேட்கும்
காரணத்தை
ஏதுமிலை யென்றேயவர் இவ்விதமாய்ச் சாதித்தார்கள்

போதமுள்ள பரதனப்போ புத்தியினா லாலோசித்து
ஏதோவுண்டு கெடுதியென்று எண்ணிக்கொண்டான்
மனந்தனிலே

865. எத்தனையோ சீர்கள்தந்து உத்தமரை யனுப்பித்தர
அத்தனையும் பெற்றுக்கொண்டு அங்கிருந்து
வருகின்றார்கள்

பரதன்முக வாட்டங்கண்டு பட்சமுள்ள சத்துருக்கள்
கருதிச்சொல்வான் அண்ணனுக்குக் கஷ்டப்பட
வேண்டாமண்ணா.

வந்ததெல்லாம் அனுபவிப்போம் மாட்டோமென்றால்
விட்டிடுமோ
இந்தவேளை மனங்கலங்கி ஏன்வருந்த வேண்டுமென்று

ஆறுதல்கள் மிகவுஞ்சொன்னான் அதைக்கேட்டுப்
பரதனிப்பால்
தேறுதலை யடைந்துவந்தான் திடமனதாய்த்
தடமதிலே

ஏழுராத்திரி கடந்துவந்தார் எட்டாம்நாள்
காலையிலே
வாழும்நல்ல அயோத்திநகர் வந்துசேர்ந்தார்
அந்நகரோ

870. கவலையின்றி யிருக்கக்கண்டார் கவலைமிக
மனதில்கொண்டார்
அளவில்லா அபசகுனம் ஆனதையுங் கண்டதன்மேல்

இராஜகிரகம் வந்துசேர்ந்து இராஜன்றனைப்
பார்க்கையிலே
ஜ்ராஜனிங்கு இல்லையென்றார் ஆசையுடன்
அவனைப்பார்க்க

தாயின்கிரகம் வந்தாரம்மா தண்டனிட்ட
மகனையவள்
காயமெல்லாம் தடவித்தந்து கண்மணியே
யென்றெடுத்து

872. கிரகம் - வீடு

மடியில்வைத் துக் கொஞ்சிக்கொண்டு மாமனோடு
பாட்டனுமே
திட்டமாக இருக்கின்றாரா தேசமெல்லாம்
சௌக்கியந்தானா

வெகுமதிகள் என்னதந்தார் விவரமாகச்
சொல்லென்றாள்
அகங்குளிர அதற்குவிடை அன்புடனே சொல்லிமகன்

875 அருமைதந்தை யெங்கேயென்று ஆவலோடு
கேட்டதற்குத்
தரணிதனை விட்டொழிந்தார் தந்தையென்று
தாயுரைத்தாள்

வெட்டுண்ட மரமதுபோல் வீழ்ந்தமண்ணில்
புரண்டுமகன்
மட்டில்லா விசனத்தோடு மனம்நொந்து சுதறினனே

வேண்டாமப்பா விட்டுவிடு விசனப்பட்டா
லாகுமுண்டோ
மாண்டவர்க்கு அழுவதெல்லாம் மதியீன மாகுமென்றா

அறிவுடைய நீயுங்கூட அஞ்ஞானி போலமனக்
குறைகொண்டு புலம்பலாமோ குறித்தறிவா
யென்றுரைத்து

எடுத்தவனை முத்தமிட என்தாயே என்குறையை
எடுத்துச்சொல்லில் பெருகுமம்மா என்தமயன்
தம்பியுமே

880. தந்தைகடன் தீர்த்தவர்கள் தரணியிலே புகழடைந்தார்
எந்தனுக்குப் பாக்யமில்லை என்விதியை
என்னசொல்வேன்

தந்தையைப்போ லெனக்கினிமேல் நமயனாவன்
அவனைக்கண்டால்
சிந்தைகுளிர தீருமம்மா ஸ்ரீராமன் சுப்பான்மா

அரசருயிர் விடுகையிலே அவர்வாக்கில் வந்ததொரு
அருமையான வார்த்தைதனை அறியச்சொல்வா
யென்றுகேட்டான்

ஹாராமா ஹாசீதே ஹாலட்சுமனா வென்றதோடு
தீராத விசனத்தோடு தேகந்தனை விடுகிறேனே

அருமைமகன் ஸ்ரீராமன் அரணியத்தை விட்டுவந்தால்
இருப்பவர்கள் பார்த்துமிக இன்பந்தனை
யடைவாரென்றும்

கொடுத்தவனவாப் பாவியானேன் குறையடைந்தே
னென்றுசொல்லி
படுக்கைதனில் முறையிட்டுப் பிராணன்விட்டா
ரென்றுரைத்தாள்

இதுகேட்டுப் பயந்துமகன் என்னசெய்தான்
ராமனம்மா
மதியுடனே எவருக்கேனும் மரணம்வரச்
செய்ததுண்டோ

பிறர்மனைவி கைப்பிடித்துப் பெருமைதனை
யிழந்ததுண்டோ
குறைவுவர என்னசெய்தான் குற்றமதைச்
சொல்வாயென்றான்

ஸ்ரீராமன் வனம் போனதற்குள்ள காரணத்தைக் கைகேயி சொல்வதும், அதைக் கேட்டுப் பரதன் கோபிப்பதும்

குற்றங்குறை யேதுமிலை குணங்கெட்டுச் செய்ததிலை
உற்றபடி நடந்ததெல்லாம் உரைப்பேன்கேளா
யென்றுசொல்வாள்

யுவராஜிய பட்டமதை யுனதுதந்தை ராமனுக்கு
அவசரமாய்த் தருவதற்கு ஆசைகொண்டு யத்தனித்தார்

890. இரண்டுவர முனதுதந்தை எனக்களித்தார் பூர்வத்திலே
ஒருவரத்தா லுனக்குப்பட்டம் ஒருவரத்தால்
ராமன்வனம்

ஜெடைதரித்து ரிஷிகள்போலச் செல்லும்படி
வேண்டுமென்றேன்
தடுத்துச்சொல்ல வகையில்லாமல் தந்தாருந்தன்
தந்தை யென்றாள்

கேட்டானிந்த வார்த்தைகளைக் கெடுத்தாளே
பாவியென்று
வாட்டங்கொண்டான் வயிறெரிய வஞ்சகிமேல்
கோபங்கொண்டான்

நன்சிவந்தான் கடும்புலிபோல் காதகியைப்
பார்த்துச்சொல்வான்
எண்ணிச்செய்தாய் துரோகமிக எனைக்கெடுத்தாய்
படுபாவியே

அப்பன்போன விசனமது ஆராம விருக்கையிலே
செப்பினையேமனங்கொத்திக்கச் சீர்கெடுத்த சேதிதனை

விரணந்தனிலேட் சாரந்தனை விட்டதுபோல்
வாக்குரைத்தாய்
அரைநொடியு மிந்தக்கஷ்டம் அனுபவிக்க
லாகுமோநான்

குலநாசஞ் செய்யவந்த குரூரநெஞ்ச முள்ளவளே
நலமீழ் யாக்கினையே தருமமெல்லாம்
போக்கினையே

நெருப்பைமலஞ் செய்வதுபோல் நேர்ந்ததடி
தந்தையுன்னை
கருதிமனஞ் செய்ததுதான் சாதகியே பாதகியே

சுகமெல்லா முனக்குத்தந்து சுமித்திரையும்
கௌசலையும்
அகம்வாடச் செய்துவந்த அரசரைநீ சொல்லலாமோ

வெகுகாலம் அரசாண்டு வெகுநியாயங் கலையறிந்து
மிகுபுத்தி யுள்ளவரும் மேன்மைமிக அடைந்தவரும்

ஆகியயென் தந்தையுமே அண்ணன்புத்தி
தனைக்கேட்டு
பாகந்தனை யடைந்துவகை பரிபாலனஞ் செய்தாரடி

அந்தப்படி யிருக்கையிலே அறியாப்பிள்ளை
யாகியநான்
சந்தவிதம் அரசுகொண்டு இவ்வுலகை யாளப்போகும்

நானரசு கொள்வேனாயின் நாட்டிலுள்ளோ
ரெனக்கடங்கத்
தானுமுண்டோ அறியாமல் தாஷ்டீகம் ஏன்செய்தாய்

---

895. விரணம் - புண்; ட்சாரம் - மூங்கில் குச்சி

ஆனைநிற்கும் ஸ்தலந்தனிலே பூனைநிற்கும்
போலலவோ
நானரசு செயநினைத்தல் நாணங்கெட்ட தொழிலா
குமோ

சிங்கம்நிற்கும் வனந்தனிலே சிறுநரிக்குச்
செயலுமுண்டோ
அங்கம்துடி துடிக்குதடி பங்கம்வரச் செய்தாயடி

905. மாதாபிதா குருதெய்வம் மற்றுள்ள சகலமுந்தான்
சீதாயதி தானெனக்கு ஜெகத்தில்வேறு இல்லையடி

மரவுரியை அவன்தரிக்க மணியாடை நானுடுத்தி
அரசுசெய்யத் தகுமோநான் அருகனுந்தா
னாவேனோநான்

கல்லுமுள்ளில் அவனடந்து கால்வருந்த ரதம்பரிமேல்
செல்லுவது தகுமோநான் ஜெகத்திற்கது ஏற்குமோபார்

காய்கிழங்கு அவனருந்த பாவிநல்ல கறியமுதை
ஆய்ந்தருந்தத் தகுமோநான் ஆருக்குத்தான் சகிக்குமிது

பாரையிலும் கூரையிலும் படுக்கஅண்ணன்
பாவிமெத்தை
ஏறிச்சுகம் பெறத்தகுமோ என்னசெய்வேன்
அண்ணனிட

910. திருவடிக்குச் சேவைசெய்யும் செல்வமொன்றே
பெரிதெனக்கு
அரசுசெல்வம் லட்சியமில்லை அழகுமில்லை வழுவா
குமே

சாயுஜ்ய மோட்சமதும் சகலவித பாக்யங்களும்
நேயங்கொண்டா லண்ணன்பாதம் நிச்சயமாய்க்
கிட்டுமடி

உள்ளும்வெளி யெங்குமவன் உள்ளவனென் றெண்ணுமென்னை
தள்ளிவைத்தே படுகுழியில் தாயானவயோ பேயானவயோ

அண்டகோடி களையாளும் ஆதாரப் பொருள்போல
கண்டவரும் வணங்குவரே கர்த்தன்ஸ்ரீ ராமனையே

தேசமான எந்னைக்கோரித் தேசம்விட்டு அண்ணன்போக
ஆசையைநீ கொண்டதற்கு அறிந்திடவே நியாயஞ்சொல்வாய்

915. என்னைவிட அண்ணன்மீது எத்தனையோ அன்புகொண்டு
பன்னிப்பன்னிப் புகழுவையே பாவியிப்போ துரத்தினையே

அண்ணனைப்போல் நானுனக்கு ஆவேனோ உபசரிக்க
கண்ணுக்கொப்பா யுனைநினைத்துக் காப்பவனே அண்ணனன்றோ

உன்மனதின் படிநடந்து உனக்குத்திருப்தி தருவதுவே
தன்னுடைய கடமையென்று தலையில்கொண்டு நடந்தவனே

பெற்றதாயை விடவன்மேல் பிரேமைவைத்து நடத்திவந்த
குற்றமற்ற அண்ணனுக்கு கொடுமைசெய்தாய் படுபாவி

---

911. சாயுஜ்யம் - மோட்சம்

தானமும்சத் குணமடக்கும் தருமந்தனை நிறைந்தகுண
வானைவனம் போகச்சொல்ல மனமுனக்கு
வந்துதையோ

920. ஆகிருந்தும் ஆர்போயும் ஆவதென்ன எந்தனுக்குப்
பாரிலண்ணன் ஒருவனுண்டேல் பாதகியே போதுமடி

அரசிருந்து வாழ்வதிலும் அண்ணன்பணி
சுமந்திருத்தல்
பரமசுகமெனக்கென்று பாதகியே அறிகிலையே

நேற்றிருந்தோர் இன்றைக்கில்லை நிலையில்லா
வாழ்விதற்கோ
சூத்திரங்கள் பலசெய்தாய் சுகமுண்டோ
துரோகியேபார்

புருஷனைக்கொன் றேசுகுண புத்திரனைப் பதினாலு
வருஷம்வனம் வசிக்கச்செய்த வஞ்சகியே மாபாவி

உத்தமிகள் பொய்தாய்கள் உலகின்தர்ம
முணர்ந்தவர்கள்
சுத்தமுள்ள பத்தினிகள் சோகம்படச் செய்தனையே

925. என்மீது பிரமாணன்வைத்து என்னைமிக ஆதரித்த
நன்மைசெய்யுங் கௌசலைக்கு நானென்ன
சொல்வேனடி

ஏகபுத்ரன் றலைபடைத்தாள் ஏதுஞ்சுக மவளறியாள்
தேகமினி யவள்விடுவாள் திருமகனைப் பிரிந்ததினால்

பகவுங்கூடத் தனதுகன்றைப் பாரா லிருக்கையிலே
விசனமிகக் கொள்ளுமன்றோ விவேகமுள்ள
மனிதர்களில்

எப்படித்தான் சகிக்கப்போகும் ஈஷத்தாய்
கருணையின்றித்
தப்புச்செய்வாய் தலைகுனிவாய் தயவில்லா
நீயெனக்குத்

தாயென்று சொல்லமனம் வந்திடுமோ சண்டாளி
பேய்நிகரா முன்வயிற்றில் பிறந்துநானும் பலியானேன்

930. இராஜ்ஜியத்தை யாளுவதற்கு இராமச்சந்திர
னிருக்கையிலே
ஆசையெனக் கதில்வருமோ ஆமோவென்னா
லாளுதற்கு

பாத்தியமுள்ளோன் தானிருக்கப் பள்ளிப்பிள்ளை
யென்னைக்கோரச்
சாத்திரமுறை தானுமுண்டோ சண்டாளி சகிக்கலையே

எனக்குச்சக்தி இருப்பதாக எண்ணினாலும் ஈத்தும்
எனக்கஷ்ட மில்லையடி என்மனதை யறியாமல்

எனக்காகச் செய்ததெல்லாம் இப்பொழுதே
நிஷ்பலமாம்
உனக்குக்கஷ்டந் தருவதற்கு உள்ளமிகத் துணிவேனடி

அரசனாக ஆகேனடி அண்ணனைப்போ
யழைத்துவந்து
அரசனாக அவனையாக்கி அவனடிமை யாவேனடி

935. அதுவுமன்றி அவனைப்போல அரசியத்தை
அடைவேனடி
சதிசெய்த வுனக்குமிகச் சங்கடத்தைத் தருவேனடி

பதிலோக முனக்குமுண்டோ பாதகியே காதகியே
கதியுனக்கு இல்லையடி கடுநரகம் அடைவாயடி

எப்பவுந்தா னுன்னைக்கண்டால் எரிச்சலெனக்
குண்டாமடி.
அப்பொழுது அண்ணன்கண்டு அன்புடனே
எனக்குப்புத்தி

சொல்வதையும் நீயறிவாய் சொன்னபடி
அண்ணன்வழிச்
செல்வேனென்றும் நீயறிவாய் சீரெல்லாம்
ஏன்கெடுத்தாய்

அண்ணனுக்காய்ப் பயந்துன்மேல் அன்புள்ளோன்
போல்நடித்த
எண்ணமுந்தான் விட்டுவிட்டேன் ஏதினிமே
லிரக்கங்கொள்வேன்

940. என்னசெய்தாய் கைகேசி இன்றுமுதல் நீயெனக்கு
அன்னையென்று சொல்பவரை அடியோடு
நாக்கறுப்பேன்

தாயென்றுனைப் பார்க்கமாட்டேன் தமயனுக்கா
யஞ்சுகிறேன்
தாயறிந்தோ வியைவனத்தில் தரத்தினையே
துணிச்சலாக

சத்குலத்தில் ஜனித்திருந்தும் சாகஸங்க ளுள்ளவளாய்ச்
சத்குணங்க ளேதுமின்றிச் சத்துருவா யெனக்கானாய்

தேசம்விட்டு ஓட்டுவேன்பார் திரிந்துகஷ்டப்
படவுஞ்செய்வேன்
தேஷமுள்ள பாவியேநீ தொலைந்திடுவா
யெங்காயினும்

பிரிந்திருந்த காலந்தனில் பிரியமெல்லாம்
அண்ணன்மீதே
இருந்ததைநா னென்னசொல்வேன் எவ்விடத்தோ
போயினனே

945. எங்குசென்று தேடுவேனான் எந்தவனம் ஓடுவேனான்
அங்கமின்னம் வைத்திருக்க ஆமோநான்
பாவியானேன்

கண்டென்னோடும் பேசுவானோ கண்கொண்டும்
பார்ப்பானோ
துண்டனென்று தள்ளுவானோ துரோகியென்று
துரத்துவானோ

அவனைக்கண்டால் போதுமெந்தன் ஆசையெல்லாந்
தீர்ந்திடுமே
பவமொழியும் பாவம்நீங்கும் பரிசுத்தன் ஆவேனப்பால்

அண்ணனென்றா லவ்விதமாய் அண்ணனுண்டோ
ஜகந்தனிலே
கண்ணொளிபோ லுள்ள அண்ணன் கமலபாதம்
பூசைசெய்யும்

அந்தபாக்யந் தனையடைய அருந்தவத்தைச்
செய்வதன்றி
வந்தபாக்யந் தனையும்வேண்டேன் இதுநிச்சயந்
தப்பமாட்டேன்

950. இந்தவித மனேகமாக ஏசிவிட்டான் பேசிவிட்டான்
அந்தவேளை கைகேயியம்மாள் அடங்கிவிட்டா
ளொடுங்கிவிட்டாள்

சோகத்தாலும் கோபத்தாலும் சொன்னகூர
வாக்கினாலும்
தேகந்நனை மறந்துமகன் செய்கையின்றி
மூர்ச்சைபோனான்

நன்றியுள்ள பரதனப்பால் நான்குநாழி
சுழித்தெழுந்தான்
என்றுகூடி மந்திரிகள் ஓர்புறத்தில் நிற்கக்கண்டான்

மறுபடியும் அகோரமாக வந்துதம்மா பரதனுக்குப்
பொறிபரக்கக் கோபமது புண்யசீலன்
தாயைப்பார்த்து

என்னுயிரே அண்ணனென்று எப்பொழுதும்
நம்பியுள்ள
என்னுடைய கருத்துதனை ஏனறிய வில்லையடி

955. அன்புள்ள அண்ணனைநீ அரண்யத்திற்கு அனுப்பினது
என்மனதை வருத்துதடி ஏனிந்தக் காரியஞ்செய்தாய்

தருமமில்லை தயவுமில்லை தலைகொழுத்துக்
குலங்கெடுத்தாய்ப்
பரமதுரோகி யுன்முகத்தைப் பார்ப்பவரும்
துரோகியாவார்

மனவருத்தந் தந்துனக்கு மானபங்கம் வரும்படியாய்
மனதுமிகத் துணியுதடி மாபாவி மதிகெட்டாயே

என்னையாரும் பழித்திடவே ஏன்செய்தாய்
துஷ்கிருத்தியம்
உன்னுடைய நடத்தையெண்ணி உருகுதடி மனமிகவும்

என்விதிக்கு எவரைநொந்தும் எனக்கேதும் ஆவதில்லை
என்றுறுதி கொண்டுமகன் எழுந்தானப்பால்
பெரியதாயைப்

960. பார்த்திடவே போகையிலே பாதம்நடை கொள்ளாமல்
நேர்தப்பிப் போவதுடன் நினைவுதனில்
பயமுங்கொண்டு

என்னசெய்வேன் பெரியதாய்முன் எவ்விதமாய்
முகங்காட்டி
அன்னையவள் மனமொப்ப ஆறுதலும்
என்னசொல்வேன்

உண்மைதனை விளங்கச்செய்ய ஒருவரையும்
நானறியேன்
கண்மணியாய் வளர்த்திவளைக் காணமனம்
அஞ்சுதென்று

பரதன்கவு சலையினிடம் பரிந்துசென்றா னப்பொழுது
விரதங்கெட்ட கைகேயி விவேகங்கொண்டா
ளாவேசம்விட்டு

**கைகேயி தன்னுடைய செய்கையை யெண்ணித்
தன்னைத்தான் நொந்துகொண்டு வியசனப்படுவது**

தன்செயலை நினைந்துவெட்கித் தத்தளித்தாள்
சித்தம்நொந்து
கன்மவிதி தனைநொந்து கண்கலங்கிப் புலம்புகிறாள்

965. முறைகடவா மைந்தனிப்போ முறைகடந்து
பேசினதைக்
குறைசொல்ல நியாயமுண்டோ குற்றம்நம்ம மீதிலேயே

என்னசெய்கை செய்துவிட்டோம் ஈனப்புத்தி
தனைக்கேட்டுப்
பின்னைவருங் கேடுகளை யறியாத பேதையானோம்

பிள்ளைகுணம் அறிவதெல்லாம் பெற்றவளே
யெனுமொழிக்கு
எள்ளளவும் பாத்திரமின்றி இவ்வுலகில்
நாமேயானோம்

உறுதிசெய்தோம் மகனுக்கென்று உளங்களித்தோம்
மகன்கருத்தைச்
சிரிதுமறி யாமல்கெட்டோம் சீசீயேன்
பெண்பிறந்தோம்

குடிகெடுத்தாள் கைகேயியென்று குவலயத்தில்
பழிநிலைக்க
கொடியவளா யாகிவிட்டோம் கூனியினாற்
குணமழிந்தோம்

970. பர்த்தாவே தெய்வமென்று பகர்ந்திருக்க அதைமறந்து
பர்த்தாவைக் கொன்றவளாய்ப் பழிசுமந்தோம்
பார்தனிலே

பெருக்கும்அன்பால் கணவனுக்குப் பக்திசெய்யும்
பெண்கள் கண்டு
சிரிக்கவுடம் பெடுத்தஜன்மம் சீசீநா மேனெடுத்தோம்

கணவன்மன ஐக்கியம்விட்டுக் காரியம்செய்தல்
சுற்பாமோ
இணைபிரியாப் பிராணேசரை ஏன்பகைத்தோம்
மதியிழந்து

எல்லையில்லா அன்புவைத்து எத்தனையோ
சுகமளித்தார்
நல்லவராம் அவருக்குநான் நன்றியில்லாக் காரியஞ்
செய்தேன்

அன்புவிட்டு அகந்துமிந்தோம் அகந்தையினால்
அறிவழிந்தோம்
சன்மார்க்கந் தனைவிடுத்தோம் சாகஸங்கள்
மிகவுஞ்செய்தோம்

975. எந்தவேளை எதுவேண்டினும் அந்தரங்க
அன்புகொண்டு
தந்துதவி செய்தவர்க்குச் சிந்தைநோவு
செய்துவிட்டோம்

புத்திரசோகஞ் சகியாமலே புருஷன்பட்ட கஷ்டந்தனை
மித்திரயேதங் கொண்டதினால் சுத்தமாக
அறியீவில்லை

துடிக்கஅவர் மனஞ்சகித்தோம் துரோகிநம்மைச்
சித்திரவதைப்
படுத்தினாலும் போமோநம்மைப் பாபமிது
விட்டசையா

இப்படியுஞ் செய்வாருண்டோ ஏதுங்சுதி
நமக்குண்டோ
தப்புச்செய்தோம் தலைகொழுத்துத் தாறுமாறாய்ப்
பலித்திடவே

வாழ்வைவீணாய்ப் போக்கிக்கொண்டோம்
வாய்திறக்க வகையுமில்லை
பாழ்த்தோம்நாம் பத்தினியோ பாபிகளில் பாபிநாமே

980. தருமமெல்லா முணர்ந்தவராம் தயைமிகுந்த
சற்குணராம்
பர்த்தாவைப் பறிகொடுக்கப் பதறிச்செய்தோ
மதியிழந்து

அற்பர்புத்தி கேட்பவர்க்கு அனர்த்தம்வரும்
எனுஞ்சொல்லைச்
சொற்பனத்தும் மறக்கலாமோ துற்புத்திகேட்
டறிவழிந்தோம்

பெற்றமகன் றனைவிடவும் பெரியபக்தி செய்தமகன்
உத்தமன்ஸ்ரீ ராமனுக்கு உலகறியத்
துரோகம்செய்தோம்

மகனைவிட்டுக் கௌசலையாள் மனம்வருந்திக்
கஷ்டப்பட
அசுந்துணிந்து காரியஞ்செய்தோம் அநியாயஞ்
செய்துவிட்டோம்

சக்களத்தி கலகமின்றிச் சமபுத்தி கொண்டல்லா
மக்களையும் வளர்த்தவளே மகிமையுள்ள ஸ்திரீயவளே

985. அவளைப்போல உத்தமியும் அகிலந்தனில்
காணவுண்டோ
தவமிகுந்த சுமித்திரைபோல் தரணியிலே
சொல்லவுண்டோ

கணவர்மனம் கண்டறிந்து கணவர்வழி
தொடர்ந்திருந்து
கணவருக்கு இன்பந்தந்த கற்படையோ ரவரேயாவர்

அவரைப்போல நானுமின்றி அநியாயக் காரியானேன்
சிவனேநான் சீரழியச் சிருஷ்டித்தாயே வினைவசத்தால்

விசனந்தனை வெளியில்விட்டு வீறிட்டு
அழுவோமெனில்
அசட்டுத்தனம் செய்துவிட்டு அழுகிறாயோ
வென்றவரும்

---

988. விசனம் - வருத்தம்

அதட்டுவாரே மிரட்டுவாரே அருமைமகன்
ராமனிப்போ
விதனத்தனை விலக்குவனே வீணாசுத் துரத்தினோமே

990. அவனைக்கண்டு அகமகிழ்ந்த அதைமறந்து
சதிசெய்தும்
அவனம்மை அன்னையென்ப தறுமறக்கான்
அன்புகொள்வான்

வனம்போகச் சொன்னவுடன் வருத்தமின்றிச்
சம்மதித்து
வனம்போனான் ஸ்ரீராமன் மகனவன்போ
லாருமாகார்

பெற்றமகன் பரதனுந்தான் பேசுவானோ
ராமன்முன்னே
குற்றஞ்செய்த பாபிநம்மைக் கொஞ்சமுந்தான்
கோபம்கொண்டு

இவனைநம்பி லிழிவடைவோம் இராமனாலே
மனங்குளிர்வோம்
சவரணையாய்க் காப்பானவன் சர்வபரி பூர்ணனவன்

உண்மையுட னுபசரித்து உளமகிழச் செய்யுமெந்தன்
கண்மணிஸ்ரீ ராமன்மீது கருணையின்றிக்
கலகஞ்செய்தோம்

995. உயிர்க்குயிரா யுள்ளவனாம் உத்தமன்ஸ்ரீ ராமன்மீது
தயவின்றிச் செய்தநம்மைத் தரணியெங்கும்
பழித்திடுமே

கண்டவுடன் கண்குளிரும் கருணையுந்தான் மிகவளரும்
உண்டவனால் சகலசுகம் உணர்விழந்து
காரியஞ்செய்தோம்

உயிர்பிரிய் உளந்துணியும் உவமைபோல
நாம்நட ந்தோம்
செயலிவ்வாறு நேரலாமோ ஸ்ரீராமன் பிரியலாமோ

கானகம்தான் போனாலுமே கனப்படுவான் ரகுராமன்
மானம்கைவிட்டுச் சீரழிய மார்க்கம்நாமே
தேடிக்கொண்டோம்

மமதைகொள்வோம் நாமிகவே மாதவனா
லொழியுமிது
இமைப்பொழுதும் அவன்பிரிந்தால் எத்தனையோ
மனம்வருந்தும்

1000. எவரும்நம்ம இஷ்டப்படி இணங்கிடவே எதுவுஞ்
செய்வோம்
தவப்பொருள்போ லுள்ளராமன் தடத்தைவிட்டு நாம்
விலகோம்

பிரிந்திருந்தான் பெற்றமகன் பிரியமவன் மீதியில்லை
தருமசீலன் ராமன்மீதே தாகமெல்லாங்
கொண்டிருந்தோம்

பரதன்நம்ம குணமறிந்து பட்சமில்லா திருப்பதைநாம்
தெரிந்திருந்தும் அவனாலே திருப்தியுண்டா
மென்றுநம்பி

அரசுமுடி அவனுக்கிட ஆசைகொண்டு
மோசம்போனோம்
திருணமாக அவன்பேசத் தீங்குசெய்தோம்
தெரியாமலே

ஸ்ரீராமன் செய்தநன்மை செப்பவுண்டோ
அநேகமன்றோ
பிரீதியுள்ள மகனவனே போரின்பச் சுகந்தருவான்

1003. திருணம் - துரும்பு

வனமவனைப் போகச்சொன்ன வாய்க்கொழுப்பை
யென்னசொல்ல
மனத்துணிவு மென்னசொல்ல மாயவச மாகினோமே

எண்ணியெண்ணி யுருகிறோமே எவரறிவார்
நமதுகுறை
மண்ணில்நா மாயிருப்பதிலே மகிமையில்லை
சுகமுமில்லை

கதியனைக்குத் தருபவனாம் கருணையுள்ள ஸ்ரீராமா
மதியிழந்து உனைப்பிரிந்து மகிமைகெட்டு
மயங்குகிறேன்

நீயிருக்கு மிடமெனக்கு நிர்மலமாம் நிலையெனக்கு
நேயமுன்மேல் விட்டுவீணாய் நெஞ்சுக்குறை
மிகவடைந்தேன்

ஆதாரமா யுள்ளவுன்னை அலட்சியமா
யெண்ணியதால்
வேதனைகள் மிகவடைந்தேன் வெந்துநொந்து
போனேனப்பா

உன்னைக்கண் டுளங்களிக்க உண்டோவினி யெனக்குப்
பாக்யம்
என்னையென்னை யெனறடுத்து எனைக்காப்பாயோ
ஸ்ரீராமா

கொடுமையிலுங் கொடுமையென்போல் குவலயத்தில்
செய்வாருண்டோ
ம்டமையினால் செய்தேனப்பா மாதவனே
ட்சமித்தருள்வாய்

என்றுகைகேயி பலவிதமாய் ஏங்கிமிகப் பரிதபித்தாள்
சென்றமகன் கௌசலையைச் சீலமுடன் போயணைத்து

1011. க்ஷமித்தல்-மன்னித்தல்

பரதன் கௌசலையைக் காண்பதும், அவளுரைத்த வாக்கைக் கேட்டுச் சகியாமல் வியசனத்தோடு சபதமுரைப்பதும்

அம்மாவென் றலருகையில் அவன்கருத்தை
யறியவெண்ணிச்
சிம்மாசன முனக்கேயாம் சீமையாண்டு சுகப்படுவாய்

உன்சுருத்தின் படியேசெய்தாள் உனதன்னை கைகேசி
என்மகனும் வனஞ்சேர்ந்தான் என்னையுமே
சுமித்திரையுடன்

1015. வனத்திற்கே யனுப்பிவிட்டு வாழ்வாயென்றாள்
கௌசலையாள்
மனமிகவும் உருகிமனம் மாதாவின் பாதந்தனில்

திடீரென்று விழுந்துமிகத் திகிலடைந்து செப்புகிறான்
துடிக்குதம்மா மனமிகவும் துரோகியல்ல நானணுவும்

ஆயுள்மீது சபதமம்மா அறியேனம்மா நானேதும்
தாயவளாம் பேயவளே தலையில்கல்லைப்
போட்டாளம்மா

அண்ணன்பாத சேவைசெய்யும் அடியேனைக்
குறையுரைக்க
எண்ணலாமோ மண்ணுலகில் அண்ணனையே
நம்பினவன்

அடிமைசெய்ய உரியவனான் ஆளுதற்கு அருகனல்ல
படுபாவி கைகேசி பாபமெண்ணங் கொண்டுசெயதான்

1019. அருகன் - தகுதியானவன்

1020. மீளாத பழிக்காளாய் மிகவுமென்னைச்
செய்துவிட்டாள்
கோளேதும் அறிந்ததுண்டேல் கொடுநரகில்
வீழ்வேனம்மா

இராமத்துரோகம் தெரிந்திருந்தால் இரவுரவாதி
நரகஞ்சென்று
கோமர்த்தனஞ் செய்தவர்போல் கொடியதுன்ப
மனுபவிப்பேன்

பெற்றவரை மனம்வருந்திப் பிதற்றுவோம்
பிறர்ஸ்திரீயைப்
பற்றுவோரும் போம்நரகில் பாவிநானும்
வீழ்வேனம்மா

கொண்டவனைத் துரோகஞ்செய்யும் கோதயரும்
குலஸ்திரீயை
விண்டவளை வருத்துவோனும் விழும்நரகில்
விழக்கடவேன்

செய்தநன்றி மறப்பவரும் தெய்வநிந்தை செய்பவரும்
பொய்சொல்லித் திரிபவரும் போம்நரகில்
போவேனம்மா

சிசுவைவதை செய்தவனும் சிறந்தமறை வேதியரை
நசித்தவனுந் தொல்லுலகில் நண்பனது ரகசியத்தை

முறையோடு காப்பதற்கு மறந்தவனும் முதிர்ந்தவரைக்
குறைசொல்லத் திரிபவனும் கூடும்வழி
நானுஞ்சொல்வேன்

கன்றுக்குப்பால் விடாமல்பசு சுறப்பவனும் காதகனும்
நின்றுகொண்டே மலஜலங்கள் நீக்குவோனும்
போங்கதியே

1021. கோமர்த்தனம் - பசுவைக்கொல்லுதல்

உபயசக்தி களிலுறங்கும் உணர்விழந்த பேதைகளும்
தபசுக்கிடர் செய்பவரும் தன்னைமறந் திருப்பவரும்

நீதிதனைச் செலுத்தவந்து நியாயம்விட்டுத் தீர்ப்பவரும்
வாதஞ்செய்ய வந்துநின்று வஞ்சகமாய்ப் பேசுவோனும்

ஊர்சிறகையைக் கொள்பவரும் உண்மைவிட்டுச்
செல்பவரும்
சீரழியக் கெடுப்பவரும் சேருங்கதி நான்சேருவேன்

அன்புள்ள பெற்றவர்மேல் அடங்கொண்டு
சாதிப்போரும்
தன்பெருமை தலைக்கேறித் தலைசீழாய் விழுபவனும்

பொதுநன்மை செய்பவரைப் பொல்லாப்புக்
காளாக்கும்
சதிமோசக் காரர்களும் சடுதிகோபங் கொள்பவரும்

உலகந்தருமந் தனைக்கடந்து உபத்திரவமே செய்பவரும்
குலநடையை விட்டொழித்துக் கோலங்கெட்டுத்
திரிபவரும்

போங்கதியில் போவேனம்மா பூமிவாழ்வும்
பொருந்தாதம்மா
தாங்கமாட்டேன் விசனமதை தாயேயென்
றழுதுரைத்து

பின்னுஞ்சொல்வேன் கேளுமம்மா பெற்றகட்கன்
கைகேயிக்குண்டு
அன்னைநீயே யன்றியிலே அவளெனக்கு ஆகாளம்மா

பாலியமுத லெனையெடுத்துப் பலவிதமா யாதரித்துத்
தாலாட்டிச் சுகங்கள்தந்த தாயேயுனை மறவேனம்மா

1029. உபயசந்தி - காலை, மாலை

உன்மனது வருந்தக்கண்டு ஒருநொடியும் சகியேனம்மா
என்மனதில் வஞ்சகமே எள்ளளவு மில்லையம்மா

உனதுமனப் படிநடப்பேன் உலகவாழ்வை
மிகவெறுப்பேன்
வனத்திலுள்ள ஸ்ரீராமன் வருமளவும்
மனங்கொதிப்பேன்

1040. இந்தவிதம் பரிதவித்து எத்தனையோ அன்புடனே
சிந்தைநொந்து சொன்னானம்மா சீல்முள்ள
மகன்பரதன்

சொன்னஅந்தப் பரதன்வாக்கைச் சுத்தமுள்ள
கௌசலையாம்
அன்னைகேட்டு அதிசயித்து அருமைமகன்
பரதன்றன்னைக்

கட்டிக்கொண்டு மடியில்வைத்துக் கதற்வேண்டாம்
கண்மணியே
சுட்டியுன்னைச் சொன்னதெல்லாம் சோகத்தினா
லென்றறிவாய்

பரிதபிக்க வேண்டாமப்பா பாபமேது மறியாத
தருமசீல னுன்னைக்குறை தப்பிச்சொன்னே
னிப்பொழுது

அறிந்தேனடா உன்மனதை ஆதரிக்கு முனைப்பார்த்து
அறியாமல் சொல்லிவிட்டேன் அருமெலிய
வேண்டாமப்பா

1045. இந்தவிதஞ் சொன்னதன்மேல் இருவர்களும் பரிதபித்து
வந்தகவ்டந் தன்னையண்ணி வாய்விட்டுக் கதறிவெகு

1040. சீலம் - எழுக்கம்

நேரமட்டும் விசனப்பட்டார் நேசமுள்ள
சுமித்திராதேவி
ஆறுதலை யடையுமம்மா அருமைமகன் மனம்விடுவான்

மகனழுகும் வேளையிலே மகனைக்கட்டி நீருமிசு
அகமெலிந்தால் மகனுக்கது ஆபத்தாய் முடியுமம்மா

விசனப்பட்டா லாவதென்ன விட்டுவிடும்
வேண்டாமம்மா
எசலைடையும் புத்திரனே என்வாக்கைக் கேளாயப்பா

விதிவசத்தை வெல்லப்போமோ வேதனையா
லாவதுண்டோ
மதியுள்ள பரதனேநீ மனம்வருந்த லாகாதப்பா

1050. கருமபந்தந் தனைத்தழுவிக் காயமதை யெடுத்துவந்த
மருமமதை யறிந்துபாராய் மனதைவசங்
கொண்டிருவாய்

சுகதுக்கங் கலந்துவரும் சோகமேதான் மீறிவரும்
ஜகவாழ்வை நம்பலாமோ சித்தசுத்தி
கொள்வாயென்றாள்

அந்தவாக்கைக் கேட்டவர்கள் ஆறுதலைச் சற்றடைந்து
சிந்தைநொந்தார் மறுபடியும் சித்தம்வச மில்லாமலே

விதிப்படியே செய்யவேண்டும் விசனமதைத்
தள்ளுமென்றார்
மதிகொண்டு பரதனப்போ மனந்தெளிந்து
எழுந்துவந்து

தசரதர் தேகத்தை யெடுத்துச் சுத்திசெய்து அவரைப் பார்த்து மக்களிருவரும் புலம்பி அப்பால் தகனவினை செய்து, உபசுவீகாரம்

தலைந்தனி லிருந்தெடுத்துத் தந்தைதேகந்
தனைத்துடைத்து
மெய்யெல்லாஞ் சுத்திசெய்து மேலான சயனந்தனிப்

படுக்கைவிட்டு அலங்கரித்துப் பலவிதமாய்
வாசனைகள்
கொடுத்துநன்றாய்க் கோலஞ்செய்தார் குணமுள்ள
மக்கள்பார்த்துக்

கதறிமிக விசனப்பட்டுக் கண்ணீரை மிகச்சொரிந்தார்
மதிமயங்கிக் கஷ்டப்பட்டார் மகன்வரதன்
எண்ணியெண்ணித்

தந்தைதனைப் பார்த்துச்சொல்வான் தயைமிகுந்த
ஐயாவே
எந்தனிடம் போனீரையா எனக்கதனைச்
சொல்லுமையா

அன்புடனே வளர்த்தெடுத்து அருமையுடன்
காத்துமிப்போ
அன்பிலார்போ லாகிவிட்டீர் ஐயாவே என்னசெய்வேன்

மழலைச்சொல்லால் வையவுள்ளம் மகிழ்ந்துகையா
லடிக்கமுத்தம்
அழைத்துத்தந்த அன்புக்குமே அறிந்துசெய்ய
ஏதுமுண்டோ?

சிரசில்மக்கள் கால்படவே தேகமெங்கும்
புளகங்கொள்ளும்
அரியஅன்பு தனக்குமுண்டோ ஐயாவே செய்வதற்கு

பெருதலொன்று தாயின்கடன் பிதாவினாலே
சம்பன்னராய்
வருவாரெனில் ம க்கள்கடன் வாயில்சொல்லப்
போமோஐயா

உந்தனுக்கு மைந்தனாகி உள்ளபடி என்கடனைத்
தந்திடவே ஏதுஞ்செய்யாப் பாவியானேன் தந்தையே
நான்

கல்வியும் நல் லறிவுகளும்கனநடையும் படியச்செய்த
நற்தந்தையாம் உமைப்பிரிந்து நானெவ்வாறு
சகிப்பேனையா

இராமாராமா வென்றுவாக்கில் இராப்பகலும்
சொல்லியும்ம
காமாதி களையொழிக்கும் காரியமெங்கு
போயிற்றையா?

அண்ணன்ரா மன் றனைப்பிரிந்து அரைநொடியும்
விலகாத
எண்ணந்தனை விட்டுவிட்டு எப்படிநீர் சென்றீரையா?

என்மகன்ஸ்ரீ ராமனைநான் எப்பொழுதும்
பார்த்திருந்தால்
நன்மையுண்டு இன்பமுண்டு கன்மபந்த மொழியவுண்டு

என்றுமிக மகிழ்ந்துரைப்பீர் என்முதலாய் மக்கள்மீதும்
அன்புமிக உள்ளவரே ஆவிவிட்டேன் போனீரையா

மக்களும்ம பிராணனென்று மதித்திருந்த உம்முடைய
அக்கருத்தை மறந்ததோடு துக்கந்தந்து போகலாமோ?

1070. பெண்மதியை யவுசரித்தால் பிரமாதமுண்டா
மென்பதைநீர்
உண்மையிலே யறிந்திருந்தும் உடன்பட்டேன்
உயிரிழந்தீர்

பேராசை கொண்டவளைப் பெண்டாக நீரடைந்து
ஆராத விசனந்தனில் அழிந்துயிர் விடலானீரே

நாகரீமாக்கும் பெண்ணுக்குநீர் நாக்குறுதி தந்ததுதான்
தேகம்விட வுமையும்நாங்கள் தெருவிலலைந்
திடச்செய்தது

அடங்காத மனைவியினால் ஆபத்து விளையுமனெும்
கொடுமையான வாக்கியத்தின் குணமுமக்கும்
வாய்த்ததையோ

பிறரிஷ்டப் படிநடக்கப் பேசித்தரும் வாக்கியத்தை
உரியதர்மங் களைக்கெடுத்து உபத்திரவங்கள்
தருமென்பரே

1075. அடங்கியுள்ள பேர்களுக்கு ஆதிக்கந் தருவதினால்
கெடுதியுண்டாம் தடமுந்தப்பும் கீர்த்தியும்போம்
கிலேசமுண்டாம்

என்னும்நியாயம் நீரறிவீர் எவரையுமே
அடக்கியாள்வீர்
மன்னவரே யும்மைப்போல மகிமைபெற்றோர்
ராருமில்லை

வெளியில்புலி போலவாகி வீட்டில்சிறு நரிபோலாகும்
எளியநடை யுள்ளவர்போல் எழுத்துமக்கு
மிகுந்துளையோ

வந்தகஷ்டம் விதிவசமோ தந்தசோகம்
தலையெழுத்தோ?
எந்தனையுங் குறைதழுவி வெந்துபோகச் செய்கின்றதே

பாபமேதும் நானறியேன் பாபமெனை வந்தடுக்க
சாபமுண்டோ நானறியேன் சங்கடத்தை
என்னசொல்வேன்?

1080. என்னைச்சுட்டிக் கைகைகேட்டால் என்மனதை
யறியாமல்
சொன்னபடி இணங்கலாமோ? செகத்தினால்
மடியலாமோ?

எனக்குச்சேதி தந்ததன்மேல் எதுவுஞ்செய்வே
னென்றுசொல்லி
மனையவளை யடக்குஞ்சக்தி மன்னவரே
யுமக்கிலையோ?

அந்தப்படி செய்திருந்தால் அனர்த்தங்கள்
விளையவுண்டோ?
எந்தன்மனம் அறியீரோ எனக்குண்டாமோ
அரசிலிச்சை

உரியவளை யொதுக்கிவிட்டு சுருதியெனக் கரசளிக்கத்
தருமமுண்டோ அனுவளவும் கருமவிதிக்
கென்னசெய்வேன்?

அருமைபத்தி யுடனண்ணனை அனுதினமும்
பூஜிப்போனாய்
இருக்குமெனக் கரசுதனில் எள்ளவும்
மனஞ்செல்லுமோ?

என்னசெய்வேன் ஏதுசெய்வேன் என்குறையை
எங்குரைப்பேன்
அன்னைசெய்த காரியத்தால் அகமெலிந்தேன்
மிகவும்நொந்தேன்

பூவுலகோர் உமதரசைப் புகழ்வதைக்கேட் டதிசயித்துத்
தேவரும்தம் மூலகையாளத் தேடியும்மை
வேண்டினரோ?

இந்தவிதம் பரதன்சொன்னான் இளையவனும்
பலவிதமாய்ச்
சிந்தைநொந்து முறையுரைத்தான் சேவமூள்ள
மற்றவரும்

அழுதடங்கி யானதன்மேல் அரசன்தேகந்
தனையெடுத்து
குலமுறையின் படிநடத்திக் கொடுத்தார்வெகு
தானதர்மம்

பனிரெண்டுநாள் காரியங்கள் பாங்தமாகச் செய்தமறு
தினஞ்தனிலே அஞ்சயனம் செய்திடவே சென்றங்கு

சாம்பலிலே விழுந்துமக்கள் சங்கடங்கள்
பொறுக்காமல்
தேம்பித்தேம்பி யழுதார்கள் தேகமெல்லாம் புழுதிபட

புரண்டுமிக வருந்தினமேல் புனிதவினை
யனைத்துஞ்செய்து
அரண்மனைக்கு வந்துசேர்ந்தார் அனைவருடன்
மக்களுமே

சுபசுவீகாரஞ் செய்துகொண்டார் சுகம்பெருக
மங்களமாய்
உபமான மின்றியிலே உணவுதந்தார் யாவருக்கும்

1090. பாங்தம் - முறை; சஞ்சயனம் - அஸ்தி கரைத்தல்

அந்நாளினம் பரதனோடு அவன்தம்பி சத்துருக்கன்
அந்நகர்புரம் தனிலிருக்க அப்பொழுது சத்துருக்கன்

பரதன்றனைப் பார்த்துச்சொல்வான் பாபிகளா
யானோமே
வருமோயிந்தக் கஷ்டங்கள்தான் வனத்துக்கண்ணன்
போகலாமோ?

வருங்காலக் குறியறிவான் வல்லமையோ மிகவுமுண்டு
கரைத்திடுவான் கன்மனதும் கனம்பெறுவான்
இமைறிந்து

அன்னைகைகை மனங்கலைக்க ஆகாதோ
அண்ணனாலே
சொன்னபடி கேட்டிருப்பள் சுட்டியண்ணன்
உரைத்திருந்தால்

அண்ணாநம்ம லட்சுமணனும் ஆலோசனை
செய்யாமல்
கண்ணான ஸ்ரீராமன் கானகத்தை யடையச்சொன்ன

அரசரோடு போர்புரிந்து அவரைவென்று
அண்ணனுக்கு
அரசுதனை யாசிக்காமல் அசட்டைசெய்தா
ரென்றுரைத்தான்

அப்படியுஞ் செய்வானவன் அண்ணனுக்காய்ப்
புயந்திருப்பான்
ஒப்பமாட்டான் அண்ணனென்று உள்ளடங்கி
நடந்தில்பான்

தமயன்முன்னே தலைகுனியும் தம்பியைத்தான்
குறையுரைக்க
நமதுமனம் துணியவுண்டோ? நாடிப்பாராய்
உண்மையாக

எனக்குப்பட்டம் வேண்டுமென்று எண்ணிக்கைகை
கோரியதால்
தனக்கதிலே பிரியமெனும் தாற்பரியம்
அண்ணன்சொல்லான்

தனக்காக வேண்டியதைத் தான்கோரி யடையானவன்
மனமறிந்து செய்தாலுண்டு வாக்கினாலே
கேளானவன்

கைகைமனப் படிநடக்கக் கங்கணத்தைக்
கட்டிக்கொண்டு
மெய்வருந்த வுழைப்பானண்ணன் மீறமாட்டான்
அவள்வாக்கை

1105. அதுவுமன்றி ஐயன்வரம் அளித்திருந்த காரணமும்
விதிவசமுங் கூடியதால் விபரீதம் நடந்துதென்று

பரதன்கொல்லக் கேட்டுத்தம்பி பலவிதமாய்ச்
சிந்தைகொண்டு
அருமையான ஸ்ரீராமன் அலையும்படி யாயிற்றென்று

இந்தவிதம் கவலைகொண்டு இருவருமா யிருக்கையிலே
சுந்தரியோ லபினயித்துச் சோபிதமாய் நகையணிந்து

வந்தவளாம் கூனிதனை வாசலிலே யிருந்ததாதர்
அந்தத்துரோகி தனைப்பிடித்து அந்தட்சணம்
சத்துருக்கன்

முன்னிலையில் விட்டிவளே மோசஞ்செய்த
பாவியென்று
சொன்னவுடன் உக்கரங்கொண்டு சூரனான
சத்ருக்கன்

தலைமயிரைப் புரட்டியவளைத் தலைகீழாய்ப்
புரட்டிமிக
அலங்கோலஞ் செய்தடித்தான் அலறியவள்
கதறினளே

இந்தச்சேதி கைகைகேட்டு இரக்கங்கொண்டு ஓடிவந்து
முந்திநின்று வேண்டாமடா முறையல்ல
வென்றுரைத்தாள்

அவளைக்கண்டு சத்துருக்கன் அகோரமாகக்
கோபங்கொண்டு
எவர்சொன்னாலும் விடுவதில்லை இருவரையும்
வதைத்திடுவேன்

உங்கள்செய்கை தனக்குப்பலன் ஒருநொடியில்
தருவேனென்று
அங்கமிகத் துடிக்கச் சொன்னான் அவனைப்பார்த்து
நடுநடுங்கி

கொன்றிடுவான் நம்மையிவன் கொடுமைசெய்வான்
மிஞ்சிடுவான்
என்றுமகன் பரதன்காலில் என்னைக்காப்பா
யென்றவழி

விழுந்தாள்கைகை யப்பொழுது விவேகமுள்ள
பரதன்சொல்வான்
இழிவாகும் ஸ்திரீவதைதான் ஏற்காது வேண்டாமடா

காதகியாம் கைகேகியைக் கதறும்படி வதைப்பேனான்
ஆதரவாய் நம்மைக்காக்கும் அண்ணன்மனம்
நோகுமென்று

விட்டுவிட்டேன் அவ்விதமாய் விலகுவாயென்
றண்ணன்சொல்லக்
கட்டுப்பட்டுப் பரதனுக்குக் கையோங்காமல்
விலகினனே

சத்துருக்கன் விலகிடவே சடுதியாகக் கைகைகூனி
அத்தலத்தை விட்டோடியே அடைந்தாரவர்
கிரகமதனைப்

பரதனாலே உயிர்பிழைத்தோம் பரும்புலிபோல்
சத்துருக்கன்
அறைந்திடவே வந்தவொரு அகோரநிலை
தனைநினைத்தால்

1120. துள்ளுதாவி யென்றுமிகத் துட்டவெரி
யென்றெண்ணியே
உள்ளம்நொந்து மிகவாடினார் உத்தமன்ஸ்ரீ ராமனுக்கு

பயந்துமக்கள் நடப்பதையும் பார்த்துமிக
அதிசயித்தார்
தயவுள்ள ஸ்ரீராமன் தாட்சண்ணியத்தை
எண்ணிவிட்டார்

ஆதரிப்பேன் அவனேயாவன் அடிப்பாரிவர்
உழைப்பார்மிக
வேதனையை மிகத்தருவார் சூதுசெய்தோ
மென்றுநம்மை

என்னசெய்வோம் மதியிழந்தோம் மானக்கேடும்
வந்துதிப்போ
மன்னவரு மில்லையிப்போ மற்றெவரும் மதியாரிப்போ

ஸ்ரீராமா வென்றுமிகச் சித்தசுத்தி கொண்டவனைப்
பிரேமையுடன் தியானஞ்செய்து பெருமூச்சுக்
கொண்டிருந்தார்

இந்தச்சேதி சுமித்திரைகேட்டு இரக்கங்கொண்டு
புத்திரரை
அந்தவுடன் அழைப்பனுப்பி அன்புடனே
புத்திசொல்வாள்

கௌசலையும் நானுமென்று கைகைதம்னை
யெண்ணிநீங்கள்
பௌவியர்களாய் நடந்திடுவீர் பரந்தாமன்
றனைப்போல

உங்களையன் அண்ணனுமாய் உயர்த்தியாகக்
கொண்டவளைப்
பங்கமின்றி யாதரித்தார் பாதுகாப்பீர் நீங்களுமே

ஆதரிக்க உள்ளவரை அதட்டுவதும் மிரட்டுவதும்
நீதியல்ல நியாயமல்ல நீங்கள்மிக அறிவுடையோர்

அவளைநீங்கள் அவமதித்தால் அண்ணன்மனம்
நோகும்பாரீர்
குவலயமே வாழும்பாரீர் கூனிகைகை இருவர்செய்த

காரியங்கள் மூவுலகால் கனப்படவே ஆடும்பாரீர்
தேறியநற் காரியமென்று தெரிந்துகொள்வீ
ராகையினால்

அடிப்படைக்குத் துணியவேண்டாம் அனுசிதமாய்
முடியும்பாரீர்
துடுக்கான காரியமது தோஷமுள்ள செய்கையது

பெற்றவரைக் குறையுரைத்தல் பிள்ளைகட்குப்
பெருமையல்ல
உற்றதொரு தருமமல்ல உதாசீனஞ் செய்யவேண்டாம்

1126. பௌவியம் - அடக்கம்

மக்களுக்குக் கடமையெல்லாம் மாதாபிதாக்
களைக்காத்தல்
தக்கசாஸ்திர முறையறிவீர் தயவுடனே யாதரிப்பீர்.

சாந்திதனையடைந்திடுவீர் சமபுத்தி தனைக்கொள்வீர்
ஆந்தரியம் அறிந்துசெய்வீர் அபிவிருத்தி
யடைவீரென்றாள்

1135. தாயுரைத்த வாக்யங்களைத் தனையர்கேட்டுத்
தலையிற்கொண்டு
தாயேயுந்த னிஷ்டப்படி தவறாமல் நடப்போமம்மா

சோகபாதை தனில்மூழ்கிப் பாகந்தப்ப நேர்ந்ததம்மா
வேகமுள்ள கோபமெல்லாம் விட்டுவிட்டோ
மென்றுரைத்தார்

மறுகாலை பிருதுசொல்லும் மனிதர்வந்து
பரதன்றனைக்
குறித்துமிக ஸ்துதிக்குக்கேட்டுக் கோவென்றே அ
முதவரை

**ஸ்ரீராமனைப்போய் அழைத்துவந்து மகுடஞ்
சூட்ட வேண்டுமென்கிற தாகத்தோடு
பிருதுகளோடு சகலரையும் அழைத்துக்கொண்டு,
பரதன், ஸ்ரீராம னிருக்கு மிடந்தேடிச் சித்திரகூட
பருவதம் வருவது**

என்னைஸ்துதி செய்யவேண்டாம் ஏற்காது
எனக்கதுதான்
மன்னவன்ஸ்ரீ ராமனாவன் மகிமையெல்லாம
அவனுக்கேயாம்

1134. ஆந்தரியம் – காலம்

தலையிருக்க வாலாடுதல் தகுதியல்ல தருமமல்ல
உலகையாள வருவான்ராமன் உரைத்திடுவீர்
அவனுக்கெல்லாம்

அவனுடைய அடிமையென்று அறிந்துகொள்வீ
ரெனைநீங்கள்
குவலயத்தை யாளுதற்குக் கூடாதென்னார்
லென்றுரைத்து

போய்ராமனை யழைத்துவரப் புதைகானல்
வழிகள்சுத்தம்
ஆய்விடவே செய்யுமென்று ஆஞ்ஞைசெய்தா
னவ்விதமாய்ச்

செப்பனிட்டுச் சேதிதந்தார் சீமையாள ராஜனின்றி
எப்படித்தா னிருக்கபோகும் என்றெண்ணி
வசிஷ்டமுனி

இராஜசபை தனில்வந்து இராஜாங்க முறைப்படியே
தேசந்தனி லுள்ளோரையும் தெரிந்தவராம் சகலரையும்

பரதனையும் வரவழைத்துப் பலநியாயங்
களையுரைத்துத்
தருமங்களை நிலைநிறுத்தத் தரணியிலே
அரசன்வேண்டும்

அரசரான தசரதரோ அடைந்தார்சுவர்க்கம்
அவருக்கப்பால்
உரியவனாம் ஸ்ரீராமனோ ஊரிலில்லை யிப்பொழுது

எண்ணிப்பார்க்கில் பரதனேயாம் இராஜனாக
வாகவேண்டும்
மண்ணுலகை யாளுதற்கு மற்றெவரைக் குறிக்கக்கூடும்?

ஆலோசனைகள் பரதனே!கேள் ஆளுகையை நீவகிப்பாய்
பாகமுடன் பரிபாலிப்பாய் பாரரையென்று
முனியுரைத்தார்

நேத்திவெகு நேத்தியிது நீருமிவ்வா றுரைக்கலாமோ?
சாத்திரத்தின் முறையுமுண்டோ? தாமுரைக்கும்
வாக்கியத்திற்கு

ஊரிலண்ணன் இலாவிடினும் உரியபாத்ய
மவர்க்கிலையோ
காரணகா ரியமறிந்து கற்பிவிக்கும் தமதுவாக்கில்

1150. வரலாமோ இவ்விதமாய் வழுவிநானும்
நடப்பதுண்டோ?
பரமபக்தன் ராமனுக்குப் பரதனென்று
எவருஞ்சொல்வார்

சகலமும்நீர் அறிந்திருந்தும் சலிப்பான
வார்த்தைசொன்னீர்
இகபரத்தில் எனக்குக்கதி இல்லாமல் போகும்படி

ஏனுரைத்தீர் எனக்கரசு எப்படித்தா னேற்குமையா
ஆனையது இருக்கையிலே அணிப்பிள்ளை
அரசுசெய்தால்

சிரித்திடுமே யுலகெங்குமே சீரழிவேன் நான்மிகவே
பரியாசமா யாகுமையா பாடமென்னைச் சேருமையா

அண்ணன்பாதம் வணங்குவதே அரியதவ மாமெனக்கு
எண்ணமில்லை எனக்கரசு ஏற்காது அண்ணனேயாம்

1155. அரசாள வேண்டுமையா அழைத்துவர
எண்ணியேநான்
அரணியத்தின் வழியைச்சுத்தம் ஆக்கிவைத்தே
னென்று கண்ணில்

தாரைமிகப் பெருகச்சொல்லித் தன்கருத்தை
வெளியிடவே
காருண்ய முள்ளஅவன் கருத்தறிந்து
வசிஷ்டர்சொல்வார்

உன்கருத்தை நானறிவேன் உலகமெல்லாம் அறிவதற்கு
உன்வாக்கால் வரவேண்டுமென் றுரைத்தேனப்பா
வென்றுரைத்தார்

கேட்டெவரு மகிழ்ந்துகொண்டு கிருதக்ஞனிவன்
போலுமுண்டோ?
கேட்டதில்லை பார்த்ததில்லை கிருபையிவன்போ
லாருமில்லை

பண்டங்களைக் கண்டவுடன் அண்டியதை
யடைவாருண்டு
கண்டக்காயை விண்டுதரச் சண்டைசெய்வோர்
தானுமுண்டு

1160. ஞாதியாக உள்ளவர்கள் நீதிதனைப் பாரார்கள்
வேதவிதி தனைக்கடப்பார் மேதினியில்
பொருள்சேர்ப்பார்

தன்பெருமை தனையெண்ணித் தன்சுகத்தைத்
தான்பார்ப்பார்
அன்புகொள்வ தரிதாகுமே அண்ணன்தம்பி
களுக்குள்ளே

பங்காளியா யுள்ளவர்கள் பாக்கியத்தைப்
பெறுவதற்குச்
சிங்காரமாய்ப் பேசுவார்கள் சீரழியப் பிடுங்குவார்கள்

1158. கிருதக்ஞன் - உண்மையறிந்தவன்

1160. ஞாதி - தாயாதி.

நீநானெனும் பேதங்கொண்டு நினைத்துத்தீங்கு
செய்வோருண்டு
தானாகவரும் பாக்யத்தைத் தள்ளித்தர்மம்
பார்ப்போருண்டோ?

உத்தமர்க்குள் ளுத்தமனா யுள்ளவனே பரதனாவன்
இத்தரையில் இவனுக்கொப்பாய் எங்குமில்லை
சத்தியசீலன்

1165. உலகையாளுஞ் சுதந்திரத்தை யுமிக்கரிபோ
லெண்ணியிவன்
குலத்தைமிகப் பெருமைசெய்தான் நிலத்தில்வெகு
புகழடைவான்

தருமாஃமா பரதனேயாம் தரணியிலே இவனரிதே
பரமபக்தி ராமனிரடம் பரதனுக்கென் றேயறிந்தோம்

ஆகையினால் இவனுரைக்கும் அபிப்பிராயம்
நியாயமென்று
மோகமுடன் சபையிலுள்ளோர் மொழிந்தார்சு
ளவ்விதமாய்

அமாத்தியரில் முக்கியரும் அருந்தவத்தோ ராயுமுள்ள
சமாதிநிலை கண்டறிந்த சக்தியுள்ள வசிஷ்டமுனி

தந்துவிட்டா ரனுமதியைத் தருமசீலன் பரதனப்பால்
சந்துவுடி மிகவடைந்து சகலருடன் அண்ணனிடம்

1170. போவதற்குப் பிரியங்கொண்டு போதமுள்ள
சுமந்தரரிடம்
நாவசைத்தான் அந்தவுடன் நகரிலுள்ளோர்
யாவருக்கும்

சேதிதந்தார் சேனைகளைச் சீக்கிரமா
யழைப்பிவித்தார்
வேதியரும் மற்றவரும் வெகுபோர்கள் வந்துசேர்ந்தார்

வாகனங்கள் வரவழைத்தார் வகைவகையாய்
மிகவுமம்மா
சோகந்தனை விட்டொழித்துச் சுவாமிதனை
யழைத்துவர

முந்திக்கைகை வந்துநின்றாள் மோகமுடன்
மற்றதாய்கள்
வந்திடவே பிரியங்கொண்டார் வாகனங்கள்
தனிலேறினார்

வசிஷ்டர்முதல் சகலருமாய் வாகனங்கள்
தனிலேறினார்
இசைந்தமக்க ளிருவர்களும் இரதந்தனிலே
ஏறிக்கொண்டார்

1175. அதன்பிறகு எல்லோருமாய் அங்கிருந்து
பிரயாணமாகி
இரதகஜாதி சைன்யமுடன் இரகுராமன் றனையழைக்க

புறப்பட்டு வந்துசேர்ந்தார் பிரபலநதியாம் கங்கைக்
கரையதிலே தங்கினார்கள் சுதியளிக்கும் அந்நதியில்

தந்தைக்காகச் செய்தார்மக்கள் தர்ப்பணத்தை
யப்பொழுது
வந்துசேர்ந்தான் குகவடியான் வணங்கிநின்று
பரதனிட

கருத்தறியச் சொல்லுகிறான் கரைபுரண்ட
சேனையுடன்
வருவதொரு காரியத்தின் மகையைச்சொல்வீ ரென்று
கேட்டான்

கேட்டதொரு குறிப்பறிந்து கிலேசமிகப்
பரதன்கொண்டு
வாட்டத்தோடு சொல்லுகிறேன் வஞ்சகமே
நானறியேன்

1180. எந்தன்குரு பிரியனேகேள் என்குறையை
யென்னசொல்வேன்
வந்திருக்கும் கஷ்டமதால் வருந்துகிறேன் மனமிகவும்

இராமனைநான் தந்தையாக இராப்பகலும்
நம்பினவன்
கோமளனாம் அவனரசு கொள்ளுதற்கு
அழைக்கவந்தேன்

அண்ணனைநான் அங்கத்தோடு அழைத்துப்போக
வந்தேனிப்போ
எண்ணமெனக் குள்ளதிது ஏதும்பிச கில்லையென்று

இந்தவிதம் பரதன்சொல்ல இவனைப்போலத்
தருமந்தனைச்
சிந்திப்ப ராருமில்லை சீலம்நல்ல சீலமுள்ளோன்

தானாக வந்ததான தரணியாளும் பாக்கியத்தைத்
தானேதும் அடையாமல் தமயனுக்கே தருவாருண்டோ?

1185. இப்படித்தா னிருக்கவேண்டும் என்றுகுகன்
மனமகிழ்ந்து
அப்பொழுது பரதனிடம் அனுஜன்சொன்ன
வார்த்தைகளை

1179. கிலேசம் – வருத்தம்

குகனுரைப்பான் எவ்வாறெனில் குவலயத்தில்
ராமனுக்குச்
சுகமின்றிப் போனதொரு சோகமதால் வருந்துகிறேன்

பரதன்பட்டங் கட்டிக்கொண்டு பருவிதமாய்ச்
சுகப்படுவான்
பரம்பொருள்போ லுள்ளராமன் பரதேசிபோல்
வந்துவிட்டான்

உரியதொரு சுதந்தரத்தை உதாசீனஞ் செய்துவிட்டு
அரணியத்தி லனையவந்தான் அறியாய
மென்னசொல்ல

சொன்னாலுங் கேட்பதில்லை சுயபுத்தியா
லறிவதில்லை
என்னாலே யானமட்டும் எடுத்துரைத்தேன்
சருத்துரைத்தான்

1190. அவனைமீறி நடப்பதற்கு அதிகாரம் நமக்கிலையே
இவனைப்போலச் சாந்தமுள்ளோன் எங்குமில்லை
யென்றுரைத்தான்

பரதன்கேட்டுப் பரிதபித்துப் பட்சமுள்ள
லட்சுமணனும்
சரியாக என்மனதைச் சற்றுந்தானே அறியலையே

நிர்த்தோஷி யாயிருந்தும் நிந்தனைக்கே யாளாகக்
கருமபந்த மிருக்குமென்று கதறிமூர்ச்சை
போனானம்மா

1187. பரவிதம் - பலவிதம்

1192. நிர்த்தோஷி - களங்கமற்றவர்

அவனைப்பார்த்துச் சத்துருக்கன் அதிகமாக
விசனங்கொண்டான்
இவர்களைக்கோ சலையாள்வந்து இதங்கள்சொல்லித்
தேற்றினளே

மற்றுமுள்ள சேதியையும் மனமுவந்து குகனுரைத்தான்
உற்றபடி பரதன்கேட்டு உள்ளம்நொந்தான்
எல்லோருமாய்

1195. அந்தத்தினம் அங்கிருந்து அதன்மறுநாள்
கங்கைதாண்டி
வந்தடைந்தார் பரத்வாஜ மகரிஷியின் ஆசிரமத்தை

அந்தமுனி தனைக்கண்டார் அவர்மிகுவே ஆவலோடு
தந்தஅர்க்கியா திகளைக்கொண்டு தங்கினார்கள்
அன்றவ்விடம்

பரதனிட கருத்தறியப் பரத்வாஜர் அவனைப்பார்த்து
வருவதென்ன ஸ்ரீராமன் வனத்திலுந்தா னிருப்பதிலே

இஷ்டமுனக் கிலையோவென் றேகேட்க பரதனிப்போ
கஷ்டங்கஷ்டம் இவ்விதமாய்க் காதில்கேட்கத் தாயவ
ளால்

ஆனெனையா அறியேன்தோஷம் அண்ணனெந்தன்
பிராணனையா
ஏனையா எனைப்பார்த்து இப்படியுஞ்
சொல்லலாகுமா?

1200. தாய்தந்தை குருதெய்வம் சகலமுமே எனக்கண்ணன்
ஆய்விடுவா னென்றெண்ணியே அழைத்துவந்து
முடிசூட

ஆசைகொண்டு வந்தேனையா அவ்விதமா
யிருக்கையிலே
பேசிவிட்டீ ரென்னைமிகப் பேதபாவங்
கொண்டுதானே

சொன்னவார்த்தை தனைக்கேட்டுச் சோகந்தனில்
மூழ்கிவிட்டேன்
என்னசொல்வேன் என்எழுத்தை எவரறிவார்
என்குறையை

இருக்குஅண்ணன் இடத்தைச்சொல்வீர் இப்பொழுதே
போவேனையா
தருமசீலன் அவனைக்கண்டால் தாகமெல்லா
மொழியுமென்று

பெருகக்கண்ணீர் சொரிந்துரைத்தான் பேசுமவன்
வார்த்தைகளை
அருந்தவத்தோர் கேட்டுமிக அதிசயித்து மிகமதித்து

செப்புகிறா ருத்தமனே செருத்திலுன்னைப்
போலுமுண்டோ?
அப்பனையும் மீறியுள்ள அந்தரங்க முள்ளவன்நீ

உலகில்மிகப் புகழடைவாய் உயர்ந்தநல்ல கதியுமுண்டு
பலகுறைகள் உனைச்சொல்லப் பலித்ததென்று
அஞ்சவேண்டாம்

குணந்தன்னைக் குவலயத்தில் குறித்தறிதல்
குறையும்பாராய்
மணம்பெருத லுலகுதனில் மட்டாகும் சுட்டிப்பாராய்

உன்மனதை நானறிவேன் உலகமதை யறியாதப்பா
அன்புடனே அண்ணனைநீ அழைக்கவரும்
கருத்துதனை

சகலருமே யறிந்துகொள்ள சத்பக்தனே கேட்டேனப்பா
அகமெலிய லாகாதப்பா அவ்விதமாய்க் கேட்டதற்கு

1210. ஸ்ரீராமன் பரம்பொருளே சீதைபரா சக்தியாவளன்
சிரேயகண்டாம் ராமனைநீ சேவித்தால் ஆவலோடு

சருவாந்திரி யாமியாக சகலபூதங் களிலும்ராமன்
இருப்பானவன் சாட்சியாக இந்தவொரு ரகசியத்தை

அறிந்தவர்கள் மகத்துக்களே அறிவுமய மாவாரவர்
விரிந்தஜகந் தனில்ராமனை வெகுபேர்கள்
அறியமாட்டார்

பக்தியுனக் கவனிடத்துப் படிந்திருக்கும் நிலைமையது
முக்தியருள் தனைத்தரும்பார் சக்திமிகப்
பெருகிடும்பார்

அவனருளைப் பெறுவதற்கே அருந்தவத்தோர்
முயலுகின்றார்
குவலயத்தில் ஸ்ரீராமனைக் கோருவோர்கள்
குணமடைவார்

1215. நித்தியமாய் மங்களத்தை நீயடைவாய் ரகுராமனால்
சத்தம்பிரம்ம நிலையவனே ஜோதிமயம் ஜானகியே

காரணார்த்தம் இருவராகக் காயங்கொண்டு
வந்தவராம்
ஆரறிவார் அவருடைய ஆந்தரிய மிகவுண்டு

1210. சிரேயசு - நன்மை

1211. அந்தர்யாமி - மறைந்திருப்பவர்; சருவாந்தரியாமி - எங்கும் மறைந்திருப்பவர்

1212. மகத்துகள் - மகான்கள்

அருள்பரனைத் தமையனாக அடைந்தஉந்தன்
பெருமைதனைக்
கருதிச்சொல்ல வாக்குமுண்டோ மருமங்கண்டு
மகிழ்வாயென்றார்

முனிவரிட வாக்கைக்கேட்டு மனமகிழ்ந்தான்
பரதாழ்வான்
தனக்குராமன் தமையனாகத் தரணியிலே வந்தவொரு

பாக்கியத்தை யெண்ணியெண்ணிப் பரமானந்தக்
கடல்படிந்தான்
சீக்கிரமாய்ப் போய்ப்பார்க்கச் சித்தங்கொண்டா
னப்பொழுது

1220. பரதன்றனைப் பார்த்துச்சொல்வார் பரிசுத்த
முனிவரான
பரத்வாஜர் கேளாயப்பா படைசூழுடன் பலபோர்களை

அழைத்துக்கொண்டு வந்திருக்கும் அரியபக்தன்
உனக்கிப்போது
வழங்குவேனான் ஆதித்தியம் வந்தவர்கள் புசித்திடுவீர்

வனத்திலுள்ளோன் தரும்விருந்து வகையோடு
இருக்குமென்று
நினையார்க ளாருமப்பா நீயவ்வாறு நினையாமலே

தந்தைக்கொண் டகமகிழத் தயவுசெய்வா
யென்றுரைக்க
அந்தவார்த்தை தனைக்கேட்டு அதிசயத்தஉப்
பரதன்தன்னில்

1221. ஆதித்யம் – விருந்து

காய்கிழங்கு புசிக்குமிவர் அறியமுதுக் கேதுசெய்வார்
ஆய்விடுமோ முனிவராலே ஆதித்திய மென்றெண்ணி

1225. போதுமையா மகரிஷியே புசித்தேனையா நீரெனக்கு
ஆதரவாய்த் தந்தகனி அதுவேபோது மென்றுதானே

பரதன்சொல்ல மறுபடியும் பரத்வாஜர்
மிகவும்வேண்டச்
சரியென்று ஒப்புக்கொண்டான் சகலருக்கும்
விருந்தளிக்க

விகவகர்மா முதலாக வேண்டியுள்ள சகலரையும்
வசமாகி வருவதற்கு மனந்தனிலே ஸ்மரித்திடவே

சகலருமே வந்துசேர்ந்து சகலவித மாகவுள்ள
இகபோக வஸ்துக்களை இஷ்டப்படி சிருஷ்டிசெய்தார்

வசிப்பதற்குக் கட்டடங்கள் வகைவகையா
யுண்டுசெய்தார்
உசத்தியுள்ள உப்பரிகள் உண்டுசெய்தார் நட்சத்திர

1230. மண்டலத்தை முட்டும்படி மற்றசாலை களுமமைத்தார்
கண்டவுட னதிசயிக்கக் கனமான கிணர்குளங்கள்

நவரத்னப் படிகளுடன் நன்றாக அமைத்துவைத்தார்
திவியமாக அலங்கரித்த தெருவுகளும் அருவிகளும்

தோட்டங்களும் தோப்புகளும் தோரணையாய்க்
கோபுரங்கள்
ஆட்டபாட்டம் நடத்தநல்ல அழகான மாடங்களும்

இந்தவிதம் அநேகமாக எண்ணிச்செய்தார்
அலங்காரமாய்
அந்தவிதம் நகரந்தனை ஆருங்காணா ரெங்குமம்மா

பசியாற்றும் பதார்த்தங்களைப் பலவிதமாய்ச்
சமைத்துவைத்தார்
இசைந்தநல்ல பட்சியங்கள் எத்தனையோ
விதமடைத்தார்

1235. பாயசங்கள் பலவிதமே பழவர்க்கங்கள் அளவிலையே
காய்கறிகள் கணக்கிலையே சுட்டித்தயிர்
கொட்டுமெங்கும்

பாலும்நெய்யும் நதிபோலப் படிந்தெங்கும் ஓடுமம்மா
மேலணிய நகையுடைகள் மிதமீறிக் காணுமம்மா

மரங்களிலே யிருந்தஉமிக மதுரமான தேன்சொரியும்
அறிந்துசொல்ல ஆகாதந்த ஆதித்தியம் அதிசயமே

ராஜகிரகம் போலவுள்ள ரம்மியமான அரண்மனையும்
வாசஞ்செய்யச் சுண்டதங்கே வந்ததிலே
பரதன்பார்க்கச்

சிம்மாசன மொன்றுகண்டான் ஸ்ரீராமனுக் காகுமிது
நம்மாலே யாவதெல்லாம் நமஸ்கரித்து இதைப்பணிதல்

1240. உரியதாகு மென்றதனை உண்மையான பக்தியோடு
சிரசாஷ்டாங்கத் தெண்டனிட்டுச் சிறியவொரு
ஆசனத்தில

இருந்துமந்திரி மார்கள்முதல் எல்லோருமாய்ப்
புசித்துமிக
அருமையான ஆதித்தியமென் றதிசயித்தார்
அனைவர்களும்

எத்தனையோ விமரிசையும் இன்பமாகப் பெருகியதாம்
சுத்தமுள்ள விருந்ததற்குச் சொர்க்கமோகந்
தோற்குமம்மா

கொடிகளெல்லாம் குமரிப்பெண்ணாய்க் கூடிவந்து
குணமுடனே
அடிமைகளா மிருந்துசெய்தார் அன்புடனே
பணிவிடைகள்

பலபெண்கள் ஒருவருக்குப் பணிவிடைகள்
செய்வாரெனில்
உலகிலந்த உபசாரத்தை உள்ளபடி சொல்லப்போமோ?

1245. குதிரையானை களுக்குமிகக் கொண்டமட்டும்
உணவுதந்தார்
அதிசயமாய்த் தேவஸ்திரீகள் அங்குவந்து
நடனஞ்செய்தார்

வாத்தியங்கள் முழங்கியதை வந்தவர்கள் கேட்டுமிக
நேத்திநேத்தி யென்றுரைத்து நினைவெல்லாம்
அதிலேவைத்தார்

உடுகரையோ மிகவுமுண்டு உணவுகொண்டு
யாவருமாய்
வெடியுமட்டும் நித்திரைசெய்து வெடிந்ததன்மேல்
பார்க்கையிலே

ஏதுமின்றி வனமாகவே இருக்கக்கண்டு
சேனையெல்லாம்
மதிமயங்கி அவரவர்க்கும் மரியாதை செய்தவராம்

மாதரைங்கே மற்றுமுள்ள மாளிகைகள் தானுமெங்கே
மீதியுள்ள காட்சிகளும் மேலான வஸ்துக்களும்

1250. அமிருதம்போலப் புசிக்கவுள்ள அறுசுவையோ
டன்னமெங்கே
குமுகுமென்று வீசம்நல்ல குங்குமகந் தாதியெங்கே

1250. குங்கும சுந்தாதி - குங்குமம் முதலிய மணப்பெருள்கள்

இருந்தெல்லாம் காணாமல் எவ்விதமாய்ப்
போயிற்றென்று
கருதியெல்லோர் சுண்டபடி தாடுமேடு தனைநாடித்

தலைவிரித்து அலைந்தாரம்மா தாகங்கொண்டு
திரிந்தாரம்மா
மலையேறிப் பறந்தாரம்மா மானயீன மறந்தாரம்மா

வெறிபிடித்தோர் போல் ஜனங்கள் வெளிதனியே
யோடியோடி
பரிகொடுத்தோர் போலலையும் பரிதாபந்
தனைப்பரதன்

கண்டுமிகக் கவலைகொண்டு கருனையுள்ள
முனிவரிடம்
அண்டிமுறை யிடவுமவர் அருள்கொண்டு
பார்த்தாரப்போ

1255. மயக்கம்விட்டு ஜனங்களெல்லாம் மனதிலச்சங்
கொண்டுநின்றார்
பயமொழிந்து பரதனப்போ பணிந்தந்த மகரிஷியைப்

பார்த்துச்சொல்வான் மகரிஷியே பரமார்த்த
மறியாமல்
நீருரைத்த வாக்கியத்தை நினைவில்சற்று
ஐயங்கொண்டு

எப்படித்தான் விருந்தளிப்பார் என்றெண்ணினே
னதையறிந்து
ஒப்பும்படி செய்தீரிப்போ உமதுசக்தி அதிசயமே

மதியீனத்தால் நினைத்தற்கு மக்கனஞ்செய்தீர்
மனக்குறையை
ஒதுக்கியென்னை யாதரித்தீர் உளமகிழ்ந்தே
னென்றுரைத்தான்

சுமித்ராதேவி பிடித்துவரச் சோகமுடன்
கௌசலையாள்
நமஸ்கரித்தாள் முனிவர் தம்மை நமஸ்கரித்தாள்
சுமித்திரையும்

1260. வந்துசைகை முனிவர் பாதம் வணங்கியது
மொதுங்கிநின்றாள்
இந்தஸ்திரீகள் யாவரதை எனக்குரைப்பா
யென்றுமுனி

கேட்டதற்குப் பரதன்சொல்வான் கிர்சமாயு மனதுமிக
வாட்டமாயு மிருப்பவளே வனவாசஞ் செய்பவனாம்

அண்ணனுக்கு அன்னையையா அவளோடு
நின்றுகொண்டு
எண்ணமிக வுபசரிக்கும் இவளெந்தன் தம்பியன்னை

ஒதுங்கிநிற்கும் பாதகியே உள்ளயென்னை
நோசுச்செய்ய
மதத்தோடு ராமன்வன் வாசஞ்செய்ய அனுப்பினவள்

மரணந்தந்தாள் பர்த்தாவுக்கு மனமகிழ்ந்து எனக்குரசு
ருவதற்குப் பிரியங்கொண்டாள் தாயென்பார்
எனக்கிவளை

1258. மக்கனம் - மூழ்கடித்தல்

1261. கிர்சம் - மெலிந்த

1265. தனதுகாரியம் பெரிதாயெண்ணித் தலைகீழாய்
விழுமிவளே
அனைவருக்கு மிடர்செய்யும் அநியாயக்
காரியென்றான்

தாயைநிந்தை செய்யவேண்டாம் தரணியிலுன்
தாயின்செய்கை,
தூயமனத் தோர்களெல்லாம் துதித்திடவே
யாகும்பாராய்

மூவுலகோர் பிழைப்பதற்கு மூலமாக உனதன்னை
நாவுதனில் சரஸ்வதியே நாடிவந் திருந்துசொன்ன

வாக்கென்று நம்பிமிக வாழ்த்துவாயே பிறவிகளை
ஆக்குமவள் வாக்குமிக அனுகூலத்தை நிச்சயமாய்

யுவராஜ்யப் பட்டமதை யுனக்குத்தர வுனதுதந்தை
அவர்வாக்கில் சொன்னதுண்டு அவ்விதமாய் அவரா
லேயே

1270. செய்யாவிடில் தோஷமுண்டு செய்வாராகில்
ராமனுக்கு
மெய்யாக என்றுமில்லை மேதினியை யாளுதற்கு

ஆசையினால் தெய்வச்செயல் அனுகூலமாய்ப்
பலித்ததென்று
ஹாசமதா லறிந்துகொள்வாய் உன்தாயை
நோகவேண்டாம்

என்றுசொன்னார் பரத்வாஜர் இதமாகப் பரதன்தை
நன்றுசொன்னா ரென்றுநம்பி நமஸ்கரித்து ஸ்ரீராமன்

இருக்குமிடந் தெரிந்துகொண்டு எல்லோருமா
யங்கிருந்து
வருகின்றார் ரீரீமனுள்ள வனமான மலையைநாடி.

வருகையிலே ஆலம்பாலை வரவழைத்துப்
பரதன் ஜாடை
தரித்துக்கொண்டு மரவுரியும் தரித்துசித்திர கூடமலை

அடிவாரம் வந்துசேர்ந்தான் அனைவருடன் அன்று காலை
அடர்ந்தவனந் தனிலிருக்கும் அதிசயங்கள் ஸ்ரீராமன்

பத்தினிக்குக் காட்டிக்கொண்டு பசிநேர மிருந்ததன்மேல்
சுத்தமுடன் ஸ்நானஞ்செய்து சுசிருசியா யாசிரமத்தில்

அக்கினிஹோத்திரஞ் செய்துகொண்டு அங்கிருக்கும் வேளையிலே
தக்கபெருங் கூச்சலுண்டாய், தம்பிதனைப் பார்க்கச்சொன்னான்

அவனங்கொரு மரத்திலேறி அடிவாரந் தனைப்பார்த்து
விவரந்தனை யறிந்துகொண்டு விபரீதம் வந்ததென்று

எண்ணிவந்து தமயனிடம் இவ்விதமாய்ச் சொல்லுகிறான்
அண்ணாநம்மைக் கெடுப்பதற்கு ஆவல்கொண்டு பரதனிங்கும்

சேனையோடும் வந்துவிட்டான் சீக்கிரமா யம்புகொள்வீர்
நானவனை வதைபுரிவேன் நாடியிப்போ ஒருநொடியில்

அவனைவென்று வந்துமது அடிபணிவே னிதுநிஜமே
இவனைச்சற்று மிஞ்சவிடேன் என்சக்தி பாருமென்றான்

அச்சுதனாம் ஸ்ரீராமன் அனுஜன்சொன்ன வார்த்தை
கேட்டான்
அட்சணத்தில் அமர்புரிய அவனுக்குள்ள
துணிவுகண்டான்

தம்பிகோபந் தணியும்படி தந்திரமாய்ச்
சொல்லவேண்டும்
நம்பிவிட்டான் மனதிலிவன் சம்பவிக்கும்
கெடுதியென்று

ஆகையினால் அனுஜனுக்கு ஆந்தரியஞ்
சொல்வோமென்று
தாகங்கொண்டு ஸ்ரீராமன் தம்பியெந்தன்
வாக்கைக்கேளாய்

1285. பரதனுக்கு நம்மிடத்துப் பாபமெண்ண முண்டாகாது
பரமபக்தி யுள்ளவனாம் பரிசுத்த நடையுடையோன்

தருமவழி தனையடுப்பான் தாயின்வழி
தனைவெறுப்பான்
சருகுபோ லெனைநினைப்பான் சகலமும்நா
னென்றிருப்பான்

பரிசுத்தராம் தந்தைதன்னை பரதன்வந்து
பார்த்துச்சேதி
தெரிந்திருப்பா னதினாலே திர்ப்திபின்றி அவரிடத்து

அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஆசையோடு
நம்மைவந்து
கலைப்படுத்தி யழைத்துப்போகக் கருதியவன் வ
ருவானடா

அரசுமுடி அவர்வகியான் அடிமைபோல
அவனடப்பான்
பரிசுத்த மனமுடைய பரதனைநீ டாழியுரைக்கும்

1290. வாக்கைக்கேட்டு மிகவுமெந்தன் மனதுபரி தபிக்குதடா
நாக்குநிலை யுள்ளவரும் நன்னடையில் படிந்தவரும்

அவனைப்போல எங்குமில்லை அரியபச்தன் பரதனடா
கவலைகொள்ள வேண்டாமடா கஷ்டப்வர
மாட்டாதடா

ஏதொருக்கால் பேதயெண்ணம் இருந்தாலும் அதற்காக
வேதனைநாம் கொள்ளலாகா வென்றவனை
யாவதென்ன?

அவன்முதலா யுள்ளவெந்தன் அனுஜர்களின்
சுகத்தைவேண்டி
விவகார சுருமாதிகள் வேண்டுமனெக் கில்லாவிடில்

அவைகளினா லெனக்கேதும் ஆகத்தக்க தில்லையடா
குவலயத்தில் பிராதாக்கள்மேல் குரோதங்கொள்ள
லறிவீனமே

1295. அண்ணன்தம்பி யவர்களுக்குள் அன்யோன்யம்
வேண்டுமடா
கண்ணிமைபோல் பரஸ்பரமும் காக்கவேண்டும்
கபடமாகா

சரீரந்தனை விட்டிடலாம் சகோதரன்மேல்
கையெடுத்தல்
பெரியகுற்ற மாகுமடா பேதயெண்ணம்
கொள்வதென்ன?

பரதன்மீது பகையைக்கொண்டு பழிப்பதெல்லா
மெனைப்பழித்து
உரைத்ததுபோ லாகுமென்று உள்ளமதில்
கொண்டிருப்பாய்

தேசந்தனி லாசையுனக் கிருக்குதென்று நானறிந்தேன்
பாசமதில் வைத்துநிற்பாய் பரதனென்னை
யனுசரிப்பான்

அரணியவாச மாகுமட்டும் அவனுடைய உதவிகொண்டு
இருப்பேனடா உன்னுடைய இஷ்டப்படி செய்திடலாம்

1300. என்றுராமன் சொன்னவுடன் ஈனபுத்தி
ஏனடைந்தோம்
என்றுதம்பி பயந்துகொண்டு இணங்கியப்பால்
பேசிவந்து

பின்புறத்தில் நின்றிருந்தான் பேசாம
லொடுங்கிக்கொண்டு
அன்புள்ள பரதன்சித்திர கூடமலை யடிவாரத்தில்

வந்திறங்கிச் சேனையங்கு வசிக்கச்செய்து வசிஷ்டரிடம்
முந்திச்செல்வேன் தம்பியுடன் முக்கியமந்திரி
சுமந்தரருமாய்

தாய்களையீர் அழைத்துவரத் தயவுசெய்வீ
ரென்றுகேட்கப்
போய்ச் சேர்வாய் மந்திரியென்று போதமுள்ள
வசிஷ்டர் சொன்னார்.

அந்தப்படி மூவருமாய் அங்கிருந்து மலையேறி
வந்துசேர்ந்தார் ஸ்ரீராமர் வசிக்குமிடந் தனையடுத்து

அப்பொழுது முகுராமன் ஆசிரமத்தி லிருக்கக்கண்டு
இப்படியு மிருக்கும்படி எழுதிவிட்டான் தேவனென்று

பரதன்மிக விசனத்தோடு பரபரப்பா யோடிவந்து
கருணையுள்ள ஸ்ரீராமன் காலடியில் வீழ்ந்துமிகக்

கண்ணீரைப் பெருகவிட்டுக் கதறியழும் பரதன்றனை
எண்ணிராமன் பார்த்தானம்மா இருக்குமவன்
கோலந்தனை

சத்துருக்கன் ஓடிவந்து சுவாமிராமன் பாதந்தனில்
சித்தம்நொந்து வீழ்ந்தானம்மா ஸ்ரீராமன் மனங்கலங்க

விரைவாக ஓடிவந்து வீழ்ந்துமண்ணில் விம்மிவிம்மிப்
பரிதபிக்கும் பிராதாக்களின் பரிதாபம் சகியாமல்

1310. எடுத்தவரை மடியில்வைத்து எந்தன்கண் மணிகளேநீர்
துடித்துமனம் நோவதென்ன? துக்கப்பட
நியாயமென்ன?

உங்களிட நிலைமைகண்டு உருகுதென்தன் மனமிகவும்
அங்கமுந்தான் பொங்குதிப்போ அனல்போல
ஆகையினால்

விசனந்தனை விட்டிடுங்கள் வேண்டிக்கேட்கும்
வினாக்களுக்கு
இசைந்தநல்ல விடையுரைப்பீர் என்றுசொல்லிப்
பரதன்றனைப்

பார்த்துக்கேட்பான் ஸ்ரீராமன் பரிதபித்து
வந்ததென்ன?
ஆருங்கட்கு இடர்செய்தார்கள், அதையெனக்குச்
சொல்வாயிப்போ?

தந்தைதாய்கள் க்ஷேமந்தானா? தருமமெல்லாம்
நடக்கின்றதா?
உந்தன்ராஜ்ஜிய பாரந்தனில் உள்ளபடி
கடமையெல்லாம்

சரியாக நடக்கின்றதா சமத்தாக இருக்கின்றையா?
விரித்தக்கேட்கும் வினாக்களுக்கு விடையுரைப்பா
யென்றுராஜ

தருமமெல்லாங் குறித்துக்கேட்ட தமயன்றனைப்
பரதன்பார்த்துத்
தருமமெனக் குள்ளதெல்லாம் தமதுபாத
சேவையொன்றே

இடரெங்கட்கு உள்ளதெல்லாம் எங்களைநீர்
பிரிந்ததொன்றே
இடம்பொருளும் ஏவல்களும் எங்களுக்கு
அவசியமில்லை

என்னையொரு மன்னவன்போல் எண்ணிராஜ
தருமங்கேட்டால்
என்னசொல்வேன் நானதற்கு ஈஷத்தும்
யோக்யனென்று

அதர்மத்துக்கே ஆளாகினேன் அரசரான நமதுதந்தை
கதியடைந்தா ருமைப்பிரிந்த காரணத்தா
லவருக்கிப்போ

செய்யத்தக்க கடமைகளைச் செய்யுமென்று
சொன்னவுடன்
ஐயனேஎன் னரசேயென்று அலறிக்கொண்டு
ஸ்ரீராமன்

மனந்துடித்து விசனப்பட்டு மகிமையுள்ள ஐயாவே
எனைப்பிரிந்த காரணத்தால் ஏனிழந்தீர்
உயிரையையா?

வனவாச மானவுடன் வந்துமது பாதச்சேவை
மனங்குளிரச் செய்வதற்கு மனதில்மிக ஆவல்கொண்டு

இருந்தவனா மெனைமறந்து எங்குபோனீர்
தந்தையேநீர்
கருமவிதி யுமைப்பிரிந்தேன் கஷ்டந்தந்தேன் உமக்குமிக

அரண்யத்திற்கு வருகையிலே அடைந்தகஷ்டம்
ஆரறிவார்
கருதியும்ம கவலைகொள்வேன் கால்நொடியும்
மறந்ததில்லை

1325. வினைவசத்தால் நான்பிரிய வேதனையால் நீரொழிய
எனதுஜன்மம் வீணடைய ஏனுமக்கு மகனாய்வந்தேன்

என்மடியில் தலையைவைத்து என்கண்ணால்
பார்க்கையிலே
அன்புடைய ஐயாவும்ம அவிதேகந் தனைவிடுதல்

பெருமையென்பார் தருமமென்பார் பிரிந்ததினால்
எனக்கந்தப்
பெருமையில்லை தருமமில்லை வருங்குறையோ மிகவா
குமே

அந்தியகாலந் தனிலேயும்ம அருகிருக்கப்
பிராப்தமின்றி
வந்தகுறை யாரதையா எந்தன்விதி யென்னசொல்வேன்

இந்தவிதம் புலம்பிராமன் எத்தனையோ
குறையடைந்தான்
அந்தநிலை கண்டறிய ஆருமில்லை அகிலந்தனில்

1330. விசனமதில் மூர்ச்சையானான் வெகுபாங்கா யுபசரிக்க
அசந்தராமன் தெளிந்தெழுந்தான் அப்பொழுது
லட்சுமணனும்

சீதையுமே சுதறக்கண்டு சீக்கிரமா யவர்களைப்போய்
ஆதரவாய் மனந்தேற்றி அதன்பிறகு ஸ்ரீராமன்

தந்தைசுதி யடைவதற்குத் தனதுசையால்
வினைகளெல்லாம்
அந்தவேளை செய்துவந்து ஆசிரமத்தி லிருந்தானம்மா

விசஷ்டருடன் அன்னையரும் வந்தமற்ற பேர்களுமாய்
உசிதமாக வந்துசேர்ந்தார் உண்மையாக அவர்களுக்கு

வந்தனாதி செய்துராமன் வாஞ்சையோடு
உபசரித்தான்
அந்தினம் அனைவர்களும் அங்கிருந்தார்
சௌக்கியமாக

1335. மறுதினத்தில் ஸ்ரீராமன் மகரிஷிகள் முதலாக்
குறித்தங்கு வந்தோரும் கூடியெல்லோர் களுமிருக்கப்

பரதன்தனை யழைத்துச்சொல்வான் பட்சத்தோடு
தம்பியேகேள்
மரவுரியைத் தரித்ததென்ன மாறிவேஷங்
கொண்டதென்ன?

1337. தந்தைசுவர்க்கம் அடைந்ததினால் தரணிதனை
யாளுவது
உந்தனுக்குக் கடமையாகும் ஊரைவிட்டேன்
வந்தாயிங்கு

தந்தைபோன விசனமதால் தைரியத்தை விடலாமோ?
இந்தஜக வாழ்வெல்லாம் என்றும்நிலை
யாவதுண்டோ?

ஆருக்குமே மரணமது அடுத்துவரும் அதைவெல்ல,
சோரிச்செய்ய வகையுமுண்டோ குவலயத்தில் சகஜமது

1340. ஆத்மஞான மடைவதுமே அழிவில்லாப் பாக்கியமாம்
சாத்வீகக் குணமதினால் சாதிக்கக் கூடுமது

மனவுறுதி வேண்டுமப்பா மனஸ்தாப மாகாதப்பா
வனவாசஞ் செயுமெனக்காய் வருத்தப்பட லாகாதப்பா

அரசுமுடி சூடிக்கொண்டு ஆளுகையை
நடத்திக்கொண்டு
தரணிதனி லெசஸடைவாய் தம்பியென்று
சொல்லக்கேட்டுப்

பரதன்சொல்வான் ராமனிடம் பாபமேதும்
நானறியேன்
கருதிச்செய்தாள் பாதகியாம் காதகியென் தாயவளே

தந்தையவள் வசமாகித் தப்பிதமே செய்துவிட்டார்
அந்தச்செய்கை யுசிதமென்று அனுசரிக்க
லாகாதண்ணா

1345. எந்தனுக்கு ராச்சியந்தர என்னநீதி சொல்லுண்ணா
தந்தையைநான் குறைகூறல் தகுதியல்ல ஆகையினால்

இனிநடக்க வேண்டியதை எண்ணிச்செய்ய
வேண்டுமண்ணா
கனக்குறைவு அடைந்ததந்தை கனப்படவே\
செய்வதுநாம்

கடமையாகு மானதினால் கருணைகொண்டு
வந்தரசை
அடைந்துநீதி தனைக்காத்து ஆதரிக்க
வேண்டுமண்ணா

குதிரைசெய்யுங் காரியத்தைக் குணமில்லாச்
சழுதைசெய்தால்
மதிக்கவுண்டோ வுலகிலென்று மனக்குறையோ
டுரைத்தானம்மா

தம்பிசொன்ன வாக்கைக்கேட்டுத் தமயன்ஸ்ரீ
ரகுராமன்
சம்பவித்த காரியங்கள் சாதுவென்று சொல்லுகிறான்

1350. அணுவளவும் தந்தையைநாம் அபவாதம்
சொல்லப்போகா
குணமாக வாகும்பாராய் குறித்தையன்
செய்ததெல்லாம்

உனதுதாயின் கர்ப்பதில் உதிப்பவர்க்கே அரசளிக்கத்
தனதுமனம்இருக்குதென்று தந்தைமுன்னே
சொன்னதுண்டு

அதுவுமின்றி வரமிரண்டு அன்னைபெற்றாள்
அரசரினால்
அதையுமெண்ணித் தந்தைசெய்தார் அவரைக்குறை
கூறலாமோ?

ஆளுகையை யுனக்குத்தந்தார் அரண்யவாச
மெனக்குத்தந்தார்
அளித்தாக்ஞைப் படிநடந்து அவரைக்கனப்
படுத்துவதே

தருமமாகு மிதுவுமன்றித் தாயைக்குறை கூறவேண்டாம்
அருமையாகப் பெற்றெடுத்த அபிமான மிருக்குமப்பா

1355. மனிதக்குணப் படிநடந்த மாதாவை நிந்தித்தால்
உனக்குதினால் பயமுண்டாம் உலகநிந்தை
தானுமுண்டாம்

தந்தைதந்தார் பாகஞ்செய்து தரணியாளும்
பொறுப்புனக்கு
எந்தனுக்கு வனவாசம் இசைந்ததென்று குறித்தபடி

நடப்பதன்றி வேறுவிதம் நடப்பதெல்லாம்
நடக்காதப்பா
சடுதியாக நகரடைந்து சகஜமாக அரசுசெய்து

வருவாயென்று ராமன்சொன்ன வார்த்தைகளைப்
பரதன்கேட்டுக்
கருத்தில்மிக வருத்தங்கொண்டு கண்ணீரைப்
பெருகவிட்டு

சித்திரகூட பருபதத்தில் வந்து ஸ்ரீராமனைப் பரதன் அழைக்க, இராமனதை மறுத்துப் பேச, பரதன் மறுபடியும் பிடிவாதமாய்ப் பிரார்த்தித்துச் சுவாமி கொடுக்கும் பாதுகையைப் பிரதிநிதியாய்க் கொண்டு போதல்

அண்ணன்சொல்லு மபிப்பிராயத்தை ஆர்தடுத்துப்
பேசப்போகும்
மண்ணுலகி லண்ணனிட மனதைவசங் கொள்வதற்கு

1360. ஆகாதென்று நம்பிக ஆலோசித்தான்
கவலைகொண்டான்
போகாம லிங்கிருந்து போராடிப் பார்ப்போமென்று

என்னசெய்வேன் வேண்டாமண்ணா என்மீது கிர்பை
செய்வீர்
அன்னையுந்தான் கோருகிறாள் ஆகையினால்
நகர்வருவீர்

நியாயஞ்சொன்னால் அதையாரும் நிராகரிக்கப்
போகாதண்ணா
கியாதியுள்ள உம்முடைய கடமைதனைச்
செய்யுமண்ணா

அதையுரைப்பேன் கேளுமண்ணா அனுக்கிரகிக்க
வாருமண்ணா
விதிமுறையாய்ப் பாருமண்ணா வேண்டுமெனை
யாளுமண்ணா

எனக்குள்ளதைத் தாருமண்ணா இருக்கில்பாத்யங்
கொள்ளுமண்ணா
மனப்படியே செய்யுமண்ணா மனக்கருத்தைக்
கேளுமண்ணா

இவரசு எனக்குத்தர எண்ணியையன் சொன்னபடி
அளித்திடாமல் அடைந்தார்சுதி அவர்ஸ்தானம்
உமக்காயிற்று

எனக்குரிய இவரசை யிப்பொழுதே யெனக்குத்தர
மனமுவந்து வாருமண்ணா மறுக்கப்போமோ
இதையுந்தானே

கடமைதனை யெண்ணிப்பாரீர் காலஞ்சென்ற
நமதுதந்தை
நடத்திவந்த அரசுதனை நானடையப்
பாத்யமுண்டோ?

அதுதேஷ்ட புத்திரராம் அண்ணாவுமக்
குரியதாகும்
விதியான ஸ்மிருதியின்படி வேறெவரும்
அருகராகார்

சக்கரவர்த்தி யாயிருந்து சகலதேசங் களையாண்டு
பக்குமதில் நானிருக்கப் பட்சங்கொண்டு இளவரசு

1370. தருவதற்கே வாருமென்று தமயன்றனை
வேண்டிக்கொண்டான்
பரதன்புத்தி சூட்சுமத்தைப் பலருங்கண்டு
அதிசயித்தார்

தம்பிவார்த்தை ராமன்கேட்டுத் தன்னில்மிக
மகிழ்ந்துகொண்டு
தம்பிதனைப் பார்த்துரைப்பான் தயவுடனே
தன்கருத்தை

நீசொல்லும் நியாயமது நேராக உள்ளதுவே
வாசஞ்செய்யத் தந்தைசொன்ன வருஷமெல்லா
மிங்கிருந்து

வந்திடுவேன் அதன்பிறகு வரும்வரையில் ஆளுகையோ
உந்தனிடம் இருக்கவேண்டும் என்றும்பதில்
சொல்லவேண்டாம்

தாய்தந்தையர் திருவாக்கைத் தலையில்கொள்ளும்
தவத்தைவிடத்
தூயதவம் வேறுமுண்டோ தொல்லுலகில் மக்களுக்கு

1375. சத்தியமே தவமாக சாதித்தே நம்குலத்தார்
எத்திசையுங் கீர்த்திபெற்றார் யானுமந்த
வழியில்நிற்பேன்

மன்னவர்க்கு மகிமையெல்லாம் மனப்பூர்வ சங்கல்பம்
பின்னம்வார திருக்குமட்டும் பிசகுவரி லெச்சுப்போமே

தந்தைவாக்குந் தெய்வவாக்குத் தருமசசை மிகவுமது
வந்தவாக்கின் புண்யபலன் அறிந்துரைக்கப்
போகாதிப்போ

தந்தைவாக்கின் படிநடக்கத் தைரியமுண்டு
எனக்கதினால்
வந்திடுமோ குறையணுவும் மயங்கவேண்டாம்
பயமும்வேண்டாம்

பதினாலு வருஷங்களும் பதினாலு நாட்களாக
நதிகானல் களில்கழித்துன் நன்முகத்தை
வந்துகாண்பேன்

1380. தம்பிசத்துருக் கனும்வசிஷ்டர் தருமகுணச் சுமந்தரரோ
டம்புவியை நீதியுடன் அரசாண்டு சுகித்திருப்பாய்

என்வாக்கை மீறாமலே இணங்குவாயென்
றுரைக்கராமன்
இன்மொழியைக் கேட்டுந்தம்பி ஏங்கிநின்றான்
அப்பொழுது

கைகையம்மாள் கண்கலங்கிக் கஷ்டப்படும்
நிலைமைகண்டு
மகிமையுள்ள ஸ்ரீராமன் மனக்குறையைத் தீர்ப்பதற்கு

ரகசியமா யழைத்துக்கேட்டான் ரகுராமர்
என்குறைகள்
மிகவுமுண்டு சொல்லுதற்கு மெலிந்துபோனேன்
அலைந்துப்போனேன்

சுகமளிக்கும் மகனேகேளாய் சொல்புத்தியைக்
கேட்டுமிக
வகைமோசம் போனேனப்பா வாழ்விழந்து
போனேனப்பா

1385. அப்பனேயென் னருமைமைந்தா அபகீர்த்திக்
ளாளானேன்
தப்புசெய்தேன் பெண்மதியால் உயவுசெய்தென்
பிழைபொறுப்பாய்

எப்பவும்நான் உனைப்பிரிந்து இருந்தறியேன்
ஒருநொடியும்
அப்படிநான் இருந்திருக்க அநியாயஞ் செய்துவிட்டேன்

எள்ளளவும் பேதமின்றி எடுத்துனைநான்
வளர்த்தவளே
கள்ளயெண்ணங் கொண்டகூனி சுலைத்திடவே
அறிவழிந்தேன்

பெற்றமகன் றனைமறந்து பிரேமையுந்தன்
மீதில்வைத்தேன்
சற்றுமுன்மே லிரக்கமின்றிச் சண்டாளி யாகியநான்

வனம்போக உனையனுப்பி வாழ்ந்திடவே
நினைத்ததைநான்
மனதிலெண்ணி யுருகுறேனே மாபாவி யாகினேனே

1390. உனக்குப்பட்டங் கட்டுவதை உரைக்கக்கேட்டு
மகிழ்ந்தேனப்பா
வினைவசத்தால் புத்திகெட்டு விஷமஞ்செய்தேன்
விபரீதமாய்

எனதுசெயல் தனைநினைத்து ஏங்குகிறேன் பரிதபித்து
அன்புகொள்வாய் ஆதரிப்பாய் அயோத்திவந்து
அரசுகொள்வாய்

மகனென்றுனை அழைக்கமிக மனமெனக்குக் கூசுதப்பா
நகைத்திடுவா ருலகினரும் நாணங்கெட்ட
வேலைசெய்தேன்

விசுவாமித்திரர் கோபத்துக்காய் விட்டுன்னைப்
பிரிந்திருந்த
விசனமுன்தா னிருக்குதப்பா வெகுவாக என்மனதில்

உன்னைவிட் டினியிருந்தால் உயிர்தரியேன்
இழந்திடுவேன்
என்னைவிட்டுப் பிரிந்திருக்கு எண்ணவேண்டாம்
கண்மணியே

1395. உனதுதம்பி மார்சுள்கையில் ஒப்புவிக்க
வேண்டாமப்பா
கனமழிப்பார் கையெடுப்பார் கண்கலங்க
மகிவுஞ்செய்வார்

தாயென்றெனை யெண்ணாரப்பா தண்டித்திடத்
துணிவாரப்பா
நேயமவர்க் கில்லையப்பா நெஞ்சுறுதி மிகவுமப்பா

பட்டபாடு போதும்ப்பா பிரானந்தப்பி வந்தேனப்பா
கட்டங்கட்ட மவர்களிட சாப்பெனக்கு
வேண்டாமப்பா

இந்தவிதங் கைகைசொல்ல இராமன்கேட்டு
விசனப்பட்டுச்
சொந்தங்கொண்டு சொல்லுகிறான் சோகங்கொள்ள
வேண்டாமம்மா

தாயேயுந்தன் விசனமென்னைத் தகிக்குதம்மா
அகம்வருந்த
நீயேயென்னை வளர்த்தெடுத்த நேசமுள்ள
தாயென்பதை

1400. மறுத்திடவும் மனம்வருமோ? மாதாவே யுனைப்பிரிந்து
இருப்பதுவோ அரைநொடியும் என்தாயே உனதிஷ்டம்

எப்படியோ அப்படியே இணங்கிடுவேன் உனதுமனம்
ஒப்பும்படி உழைத்திடவே உதித்தேனம்மா உலகுதனில்

என்றுசொல்ல கைகையப்போ எத்தனையோ
மனமகிழ்ந்து
இன்றுசெய்யு மென்மகனே நான்சொன்ன
படிநடப்பாய்

அயோத்திநகர் நீவருவாய் ஆளுகையை நீவகிப்பாய்
தயவுடனே யாதரிப்பாய் தாகமெல்லாம்
நீயொழிப்பாய்

வனவாசம் போதுமப்பா வந்திடுவா யென்றழைத்தாள்
மனமகிழ்ந்து அன்னைசொல்லும் வாக்கைக்கேட்டு
ராமன் சொல்வான்

1405. அவ்விதமாய்ச் செய்வதற்கு அணுவளவு மெனக்குத்தடை
எவ்விதமு மில்லையம்மா என்வாக்கைக் கேளுமம்மா

உனக்கெசசை யுண்டுசெய்து உலகின்கஷ்ட
மொழித்திடவே
எனக்குவளம் போகஆக்ஞை ஈந்ததென்று பிறகறிவாய்

தேவரெல்லாம் உனைப்புகழ்வார் தேசமெங்கும்
உனைமகிழும்
ஏவியவுன் னிஷ்டப்படி இராஜாசெய்த ஆக்ஞைப்படி

நடப்பதினால் உலகுக்கெல்லாம் நன்மையுண்டு
இன்பமுண்டு
கொடுத்தாக்ஞைப் படிநடப்பேன் கோரியப்பால்
வந்தடுப்பேன்

இதுவுமன்றி இன்னமுங்கேள் எதுவுந்தானே
யொழுங்குமீறிச்
சுதந்தரமாய்ச் செய்யப்போமோ சூட்சுமத்தை
யறிந்துபாராய்

1410. எனதுதந்தை யுனக்குத்தந்த இரண்டுவரம் பயன்படவே
எனக்களித்த ஆக்ஞைதனை ஈடேற்ற வந்தேனம்மா

அதுபோல அரசருனக் களித்ததுண்டேல் வரமேதும்
அதைக்கொண்டு நீயுரைத்தால் அதுஒருக்கால்
நியாயமாகும்

புருஷன்வாக்கை மீறிச்சொல்லப் பூமிதனில்
பத்னிகட்குத்
தருமமில்லை யாகையினால் தாயேஅவர் வாக்குதனை

அனுசரித்து நாடைக்கும் அந்தவழி தன்னைமீற
எனக்குமதி கூறுவது ஏற்காது உனக்கனுவும்

உன்னையினி யாருங்குறை உரைக்கமாட்டார்
இதைநம்புவாய்
என்னைப்போல உன்னையெண்ணி எவரும்நன்றாய்
உபசரிப்பார்

எனதுதாயே யென்றுராமன் இவ்விதமா யாறுதல்கள்
மனமுவந்து சொல்லக்கேட்டு மாதாமிக மனந்தெளிந்து

சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுச் சம்மதித்து
அனுக்கிரகித்து
உத்தமனே ஸ்ரீராமா உன்னினைவே கொண்டிருப்பேன்

வனவாச மானவுடன் வந்தென்னை யாதரிப்பாய்
உனதுகிருபை யிருக்குமாயின் ஒருகுறையு
மில்லையென்றாள்

அதன்பிறகு அன்னையாலும் ஆகவில்லை யென்றறிந்து
விதியைநொந்து பரதன்மிக வேதனையை
யடைந்துவிட்டான்

பூபாலன் ஸ்ரீராமன் புத்திதனைச் சோதித்திட
ஜாபால ரிஷியவன்றன் சத்யநிலை பார்ப்போமென்று

1420. வேதமென்றும் சாஸ்திரமென்றும் வீண்சுதையை
நம்பிக்கொண்டு
ஏதுஞ்சுக மில்லாமல் இருக்கலாமோ வனந்தனிலே

தர்மமில்லை தவங்களில்லை சத்தியமில்லை
யசத்தியமில்லை
சர்வமும்பொய் உலகவின்பம் ஒன்றேதா னுள்ளதுவே

தேகபோகம் ஒன்றினாலே திர்ப்திதனை யடைவதன்றி
ஆகமாதி முறைகளினால் அடைவதொன்று
மில்லைப்பாராய்

கல்விதனைக் கற்றவர்கள் கண்டபடி சாஸ்திராதிகள்
கல்பிவித்தார் காலட்சேபம் கஷ்டமின்றிச் செய்வதற்கு

அவைகளைநீ நம்பிக்கொண்டு அன்னைபிதா
வாக்கின்படி
தவமுனிபோல் வனந்தனிலே தங்கிநிற்க நியாயமில்லை

1425. தடத்தில்வந்தோர் போலவாவர் தந்தைதாய்கள்
முதலானோர்
கடத்தைத்தள்ளிப் பார்க்கையிலே கானவுண்டோ
சம்பந்தந்தான்

சிறிதுமில்லை பயனென்பது சிரார்த்தாதிகள்
செய்வதினால்
அறிந்துபாரா யொருவருக்கு அன்னமிட்டால் நமதுபசி

நீரவுண்டோ வீண்பிரமையைத் திடமாகக்
கெள்வதென்ன
கோருந்தம்பி மனப்படியே குவலயத்தை
யாண்டுகொண்டு

சகலருக்குஞ் சவுக்கியந்தந்து சாட்சாத்தா யுள்ளஎல்லா
சுகங்களையு மனுபவிப்பாய் சொல்லும்பர
சுதியென்பதை

நம்பவேண்டாம் நஷ்டமுண்டாம் நானாவிதக்
கஷ்டமுண்டாம்
தம்பியின்மேல் கருணைகொள்வாய் தந்தைவாக்குப்
பயனற்றதே

1430. ஆதலினால் மரவுரியை அவிழ்த்தெறிந்து
அயோத்திசென்று
மேதினியை அரசாண்டு சுகிப்பதுவே
மேன்மையென்றார்

அந்தரிஷி வாக்கைக்கேட்டு அதிசயித்துச் ஸ்ரீராமன்
இந்தப்படி நமதுமுன்னே ஏனுரைத்தார்
அயோக்கியமாய்

மித்தியாவாதஞ் செய்வதற்கு மிகவுமிவர்
துணிந்ததற்குச்
சத்துருவா யெண்ணுவார்கள் சத்தியவந்த
ராகவுள்ளோர்

கோபமிகப் பெருகும்படி குணங்கெட்டுப் பேசிவிட்டார்
தாபத்தை யடக்கிக்கொண்டு தகுந்தநியாயங்
களைக்காட்டி

இவர்வாக்கை யவமதித்தல் ஏற்குமென்று
ராமனெண்ணி
அவரைப்பார்த்துச் சொல்லுகிறான் அறிவுள்ள
ஜாபலரே

1435. என்மீது அன்புகொண்டு எடுத்துரைத்த சுருத்துகளை
நன்றாகக் கேட்டேனையா நானுரைப்பேன்கே
ளுமையா

சாஸ்தராதிகள் முதலாகச் சகலமும்பொய்
யாகுமெனில்
நாஸ்திகமே தேறுமன்றோ நற்றவமேன் செய்யுகின்றீர்

தரணிதனில் நீருங்கூடத் தாகங்கொண்டு தவஞ்செய்து
அருமையான யோகசித்தி அடைந்ததெல்லாம்
உண்மையன்றோ?

உண்மையெனில் சாஸ்தராதிகள் உண்மையல்ல
வென்றதெந்தத்
தன்மைகொண்டோ சொல்லுடையோ ஜாபால
மகரிஷியே

அல்லவெனில் இப்பொழுதே அருந்தவத்தை
விட்டொழித்து
நல்லதென்ற விஷயசுகம் நாடியதில் சேர்ந்திடுமே

1440. ஜகமாகக் காண்பதெல்லாம் ஜடமாக விளங்குதன்றோ
மகிமையுள்ள ஞானமது ஜகத்தினொரு பாசமாமோ

நாஸ்திகரா யுள்ளவர்கள் நானெனு முணர்ச்சிதனை
வாஸ்துவமாய் அணுக்கள்கூடி மனதாயு
மாயிற்றென்பார்

அணுக்களெல்லாங் கூடினக்கால் ஐம்பொருளா
யாகுமன்றி
இணங்கியவை மனமாக எப்படித்தான் பவித்திடுமோ?

சேதனமும் அசேதனமும் ஜெகந்தனிலே அறிகையிலே
சேதனமா யாளுவது சித்தென்றே முடியுமன்றோ?

அசேதனமா யுள்ளதென்றும் அசேதனமாய்
நிற்குமல்லால்
இசைத்ததிலே ஞானமது எப்படித்தா னுண்டாகுமோ?

1445. மூக்காலமும் ஜடஞ்சடமே முன்னுமில்லை
பின்னுமில்லை
எக்காலமும் அசேதனத்தில் இல்லைபாரீர்
அறிவென்பது

அறிவென்பது காரணமாம் ஐம்பொருள்கள்
காரியமாம்
குறித்தறியும் அறிவதுதான் கூடும்பொருள்
பாகமாமோ?

சகலவிதப் பெருமைகளும் சத்துச்சித்தா யுள்ளதற்கே
மகிமையுண்டோ அணுக்களுக்கும் வையகமாய்க்
காண்பதற்கும்

காரியமாம் பொருள்தனையே காரணமாய்க்
கொள்ளுவது
தேறுமென்று நம்புவது தெரியாதபோர்களாவர்

பிரிந்துள்ள அணுக்கள்தம்மைப் பேதநிலை
தனைமாற்றி
ஒருமைப்படச் சேர்த்துதற்கு உள்ளதொன்று
மதிவிலையே

1450. ஆகையினால் அணுக்கள் கூடி அறிவாக
வாகாதென்னும்
ஆகமதே சித்தாந்தம் உசிதமன்று நாஸ்திகமே

ஜகத்தைநோக்கி அதிலிருந்து சித்திபெற
வேண்டியேதான்
ஜகமமைக்கப் பட்டிருத்தல் செம்மையாக விளங்கிடுமே

பயன்கருதி யமைக்கவல்ல பரம்பொருளொன்
றுளதென்றே
உமர்ந்தஞான முள்ளோரெல்லாம் உள்ளபடி
யுரைக்கின்றாரே

உரைத்தபடி பலரிஷிகள் உயர்தவத்தால்
பரம்பொருளை
வருத்தமின்றி யடையச்செய்யும் மகிமையுள்ள
சுருதிகள்தம்மை

தொன்றுதொட்டு நம்பிவந்த தோரணையை
விட்டொழித்து
இன்றுரைத்த உமதுவாக்கை எவ்விதமாய் நம்பலாகும்

1455. திரிந்துவருஞ் செகந்தனிலே தேகந்தனில் தேகியாகிக்
கருமங்களைச் செய்துவரும் காரணத்தைக்
கண்டறிந்தால்

ஜென்மாந்தரம் நிலைபெறுமே சீலம்நல்ல வழிபடவே
கன்மங்களைக் கடந்தவே கண்டுசெய்து கதியடைய

மூர்த்திகளும் லோகங்களும் முறையாக விருக்கையிலே
சார்த்தகமா யமைக்கவுள்ள சத்கருமம்
வேண்டுமன்றோ

இசுத்தைநம்பில் பரமுமுண்டு இல்லையெனில்
இசுமுமில்லை
மகிமையுள்ள பரத்தைவேண்டி மனச்சுத்தி
வேண்டியதே

மனதடக்கி யாளுதற்கு மார்க்சமதைப் பற்றுதற்கு
நினைத்துச்செயும் சத்சுருமம் நிலத்தில்மிசு
அவசியமன்றோ?

1460. சுருமபந்தம் தொடர்ந்ததினால் சுாயபந்தம் வந்ததன்றி
வருவதுண்டோ ஜன்மமுந்தான் வாஸ்தவத்தி
லெண்ணிப்பாரீர்

பூர்வஜன்ம பலனைக்கொண்டு பூமியிலே யுதித்துவந்த
நேர்மைதனை யுறுதிசெய்ய நியாயங்கள் மிசுவுமுண்டு

பலவிதமாய் ஜென்மங்கொண்டு ப்ராப்தமாகும்
தொழிலைக்கொண்டு
உலகில்ஜீவ கோடியெல்லாம் உழைத்துவரும்
உண்மைபாரீர்

சாத்தியமில்லாச் சுாரியங்கள் சரியாக நடந்துவரும்
சூத்திரமாம் விந்தைபாரீர் சூத்திரதாரி தனையும்பாரீர்

பரவெளியில் அண்டகோடி பறந்தோடும் சக்திபாரீர்
இருந்திடம் அரைநொடியும் இல்லாத விதமும்பாரீர்

1465. அவைகளுக்கு ஆதாரத்தை ஆராய்ந்துந் தான்பாரீர்
குவலயத்தில் சுகதுக்கங்கள் கூடிவரும் குணமும்பாரீர்

1459. சத்சுருமம் - புண்ணியச் செயல்கள்

சுதந்தரமா யிருக்கவுண்டோ சுட்டியதை
யெட்டிப்பாரீர்
அதந்தரமா யலையும்போது ஆதரிக்கும்
பொருளைப்பாரீர்

காயந்தந் தனையொழிக்கக் கஷ்டப்படும் நிஷ்டைபாரீர்
மாயமாசு வாழ்வொழியும் மர்மமதை யும்மில்பாரீர்

நிஷ்டைசெய்து தேர்ந்தவர்கள் நிர்மலமாம்
நிலையடைந்து
இஷ்டப்படி தேஜோமய இருப்பாசு நின்றிருக்கும்

அந்தவொரு அனுபவமும் அசத்தியமாய்
நினைக்கலாமோ
இந்தஜசு வாழ்வுதனில் இன்பமுண்டென்
றெண்ணலாமோ?

1470. அகண்டபரி பூரணமாய் ஆனந்த வடிவாயுள்ள
சுகநிலையாய் மிஞ்சுவதும் சொர்க்காதி போகங்களும்

நிலைபெறவே காட்டும்பல நிர்த்தோஷ யாகாதிகள்
உலகுதனில் அசத்தியமெனில் உண்மையிலே
ஒன்றுமில்லை

அழியுஞ்சசு வாழ்வைநம்பி அசுந்துணிதல் அறிவாமோ?
இழிவடையச் செய்யுமந்த எண்ணமதை விட்டுவிடும்

அரசருக்கே அடுக்குமந்த அசுந்தையான எண்ணமையா
எச்சுபெற உள்ளவர்க்கு ஏற்காது அந்தக்கொள்கை

இசுபரத்தை நம்பிக்கொண்டு இவ்வுலகில்
நானுதித்தேன்
பகிமைதரும் வேதசாஸ்திர மார்க்சுந்தனைக்
காக்கவந்தேன்

இடரொழித்து இன்பந்தர எண்ணிவந்தேன்
உண்மையாக
நடந்தையிலே யதைமறந்து நானடக்கப்
போமோபாரீர்

உலகுக்கெல்லாம் வந்திருக்கும் உபத்திரவத்தை
யூன்றிப்பாரீர்
காலஞான முள்ளவும்ம சருத்துதனி லுருத்துப்பாரீர்

தேவரிவி பிதுருக்களெனும் தேறியுள்ள கூட்டங்களை
ஆவலொடு பக்திசெய்து அனுக்கிரகத்தைப்
பெறுவதென்னும்

பூர்விகமா யுள்ளநல்ல புனிதவினை களைச்செய்து
சேர்ந்தார்கள் சத்கதியை ஜெகத்தில்பல
ரென்றுரைக்கும்

தொடர்ந்துவரும் வாக்கியத்தைத் தோலுஞ்சொல்லித்
தள்ளலாமோ?
படிந்துவரும் வழக்கந்தனைப் பற்றாமல் விடவுமாமோ?

நடந்தேறி வருமாசாரம் நாடெங்கும் ஒப்பும்பாரீர்
தடுத்ததனைப் பேசுவது தப்பிதமாய் முடியும்பாரீர்

பரநிலையே யில்லையென்று பரிந்துரைக்கத்
துணிவதெல்லாம்
பரிசுத்தர்க்கு ஆகாதையா பாமரர்க்கே அடுக்குமையா

பேதமுள்ள பிரபஞ்சந்தனில் பித்தந்தலைக் கேறும்படி
வேதசாஸ்திரம் பொய்யென்றீரே விதிவிலக்கைத்
தாண்டினீரே

அனிருதம்பேசும் போர்கள்தம்மை ஆரும்நிந்தை
செய்திடுவார்
இனமறிந்து பேசுவோரை எவருங்கனஞ் செய்திடுவார்

இதுவுமன்றிப் பின்னுங்கேளீர் எனக்குரைத்த
மதியதனை
இதமென்று நம்புதற்கு இல்லையையா
அதையுஞ்சொல்வேன்

1485. அரசுமுடி தனைவகித்தால் அதன்பிறகு வேதசாஸ்திரத்
தருமமெல்லாம் குறைவின்றியே தரணியிலே
நிலைபெறவே

காக்குமொரு கடமைக்குநான் கட்டுப்பட
வேண்டுமென்றோ
நீக்கிவிட்ட வேதசாஸ்திரம் நெஞ்சில்கொண்டு
நடக்கப்போமோ?

வனவாசம் முடிந்தபின்பும் வந்தரசு கொள்வோமெனில்
மனந்துணிய வில்லையையா மகரிஷியே
வுமதுவாக்கால்

எனதுவம்சப் பெருமையெண்ணி எனக்குரைக்கும்
மதியைவிட்டு
மனம்போன படிபேசியே மனவருத்தந் தனைத்தந்தீரே

வாக்குத்தப்பிப் பிழைப்பதிலே வருவதுண்டோ
கனமனுவும்
நாக்குநிலை தப்பினக்கால் நஷ்டகஷ்டம் வந்திடுமே

1483. அனிருதம் – பொய்

சத்தியத்தில் நிற்பவர்க்குச் சகலவித
சௌக்கியமுண்டாம்
உத்தமரென் றுலகஞ்சொல்லும் உயர்ந்தகதி
தானுங்கிட்டும்

ஆசிரமத்தின் தருமந்தனை அவமதிக்க மாட்டேனையா
நேசங்கொண்டு அந்தவொரு நோ்மைதனில்
நிற்பேனையா

மதியின்படி வேஷமின்றி மாறிக்கோலங்
கொண்டதென்ன?
அதிசயமாய்க் காணுமும்ம அகநிலையை நம்பலாமோ?

சொல்லுமையா வென்றுராமன் சுமுகமாகக்
கேட்டவரின்
வல்லமையை யறிவோமென்று மனதிலவெல்
கொண்டிருந்தான்

முனிவரந்த ஜாபாலர் மொழிந்தராமன்
வாக்கைக்கேட்டுக்
சுனமழிய வாக்குரைத்தோம் சுமலாட்சன்
பழுக்குத்தந்தான்

ஜகதீசன் போலவுள்ள ஸ்ரீராமன் வாக்கைமீற
வகையுண்டோ யாருக்குமே வாஸ்தவத்தைச்
சொன்னானவன்

கொடுத்தமுதல் தனக்குலாபம் கட்டித்தந்தான்
ஸ்ரீராமன்
தடுக்கப்போமோ வந்ததெல்லாம் தலையில்கொண்டே
தீரவேண்டும்

இந்தவித மெண்ணிமுனி இராமன்றனைப்
பார்த்துரைப்பார்
உந்தன்நிலை கண்டேனப்பா உலகிலுண்போ
லில்லையப்பா

பரிபாக மடைந்தவுந்தன் பக்திநிலை
யென்னசொல்வேன்
தருமகுண பூஷணனே தயவுசெய்வாய் எந்தன்மீது

பரதனிட பரிதாபத்தைப் பார்த்துமிக
இறக்கங்கொண்டு
பரைத்தேனல்லால் என்கருத்து உள்ளபடி யவ்வாறல்ல

1500. நாஸ்திகத்தைச் சிலசமயம் நானுரைப்பேன்
ஆஸ்திகத்தை
வாஸ்தவமென் றுறுதிசெய்யும் வல்லபரைக் கண்டறிய

அதினாலே தோஷமில்லை அறிவினது பெருமையது
உதித்திடுமே யுலகறிய மதித்திடுவா ராருமப்பா

சத்தியத்தை யசத்தியங்கொண்டு சாதிப்பதே
சக்தியாகும்
முத்திநிலைத் தத்துவரும் மித்தையினால் சித்திபெறும்

ஆகையினா லனுசிதமாய் அகந்துணிந்து
சொன்னேனென்று
வேகங்கொள்ள லாகாதப்பா வெற்றுரைத்தார்
முனிவரப்பால்

வசிஷ்டமுனி சொல்லுகிறார் வாஞ்சையுடன் ஸ்ரீராமா
நிஜமாக உனதுபுத்தி நிச்சயத்தை யறியவெண்ணி

1505. முனிவனிந்த ஜாபாலா மொழிந்ததற்கா யவர்மீது
மனவருத்த மாகாதப்பா மகரிஷிமே லன்புகொள்வாய்

இரவிகுலத்தில் ஜேஷ்டபுத்திரன் இராஜாங்கந்
தனைவகித்துக்
குவலயத்தை யாண்டுவந்த குலமுறையை
விரித்துரைத்து

அதன்படியே நீயும்வந்து அயோத்திநகர்
தனையடைந்து
அதிகாரந் தனைவகித்து அரசாண்டு வருவதுவே

சுடமையப்பா என்வாக்கைக் கனப்படுத்தி யதன்படியே
நடந்திடுவா யென்றுரைத்தார் நாதனதைக் கேட்டுச்
சொல்வான்

உமதுவாக்கைக் கேட்பதற்கு உண்டெனக்குக்
சுடமையையா
தமதுவாக்கை விடயெனக்குத் தந்தைவாக்கு
முக்கியமையா

1510. ஆதலினால் தமதுவாக்கை அனுசரிக்கு நியாயமில்லை
பேதங்கொள்ள லாகாதையா பெருமையுள்ள
குருவேயென்றான்

அதைக்கேட்டு வசிஷ்டமுனி அதுவுமொரு
நியாயமென்று
மதியிலெண்ணி அவரிருந்தார் மவுனமாகு அதன்பிறகு

வெகுசொல்லிக் கேளாமலே இராமச்சந்திரன்
செய்யுமொரு
அவனுடைய பிடிவாதத்தை அறிந்துதம்பி பரதனப்பால்

ஆண்டவனே யருள்பரனே அகண்டமூர்த்தே ஸ்ரீராமா
வேண்டுகிறேன் உம்மைமிக விட்டுவிடும் பிடிவாதத்தை

பரிதபிக்க எனைச்செய்து பலனடைவ தேதுசொல்வீர்?
உரியதும்ம சுதந்தரத்தை உதாசீனஞ் செய்வதென்ன?

1515. என்னையும்நீர் பரீட்சைசெய்ய ஏன்துணிந்தீர்
ஞானதனை
என்னவிதம் நிர்வகிப்பேன் ஏழையென்னை
யாழம்பார்த்து

ஆவதுண்டோ அண்ணாவே அடியேன்மேல்
கிருபைபுரிவீர்
பாவிமேதும் அறியாத பக்தனெனை யாதரிப்பீர்

இந்தவிதம் முறையிட்டும் இணங்காமல் போனதினால்
அந்தக்குறை தனைக்கொண்டு ஆத்திரத்தை
மிகவுங்கொண்டு

இவ்டப்படி இணங்காவிடில் இழந்திடுவோ
முயிரையென்று
சுவ்டமான காரியஞ்செய்யக் கண்டிப்பாய்த்
துணிந்தான்தம்பி

சுமந்தரரே சகியேனையா சோகபாதை மீறுதையா
நிமிஷமுந்தான் அட்டியின்றி நீர்போவீர்
தர்ப்பைதனை

1520. இப்பொழுதே கொண்டுவரும் இரைத்ததனைப்
படுத்திலே
தப்பாமல் மறியல்செய்வேன் தமயனப்பால்
வருவாரன்றி

எந்தன்மீது கருணைகொள்ளார் என்றுரைத்தான்
பரதனப்போ
அந்தவேளை ராமன்முகம் பார்த்துநின்றார்
அமாத்தியர்தான்

நமதுவாக்கைக் கேளாரிவர் நாமேபோய்க்
கொணர்வோமென்று
நிமிஷமதில் கொணர்ந்தானம்மா நிலத்திலதை
இறைத்தானம்மா

படுத்தானம்மா தர்ப்பையின்மேல் பாவசத்தை
வாக்கில்சொல்லிக்
சுடுத்தமுதல் கண்டுராமன் கஷ்டகஷ்ட மென்றுரைத்து

இசைந்ததம்பி இவ்விதமாய் ஏற்காத
காரியஞ்செய்தான்
விசனமனதச் சகியாமல் வேதனையை மிகவடைந்து

1525. கெடுத்தான்நம்ம நனநிலையைக் கேவலமாய்ச்
செய்துவிட்டான்
அடுக்காத காரியத்தைத் துடுக்காகச் செய்துவிட்டான்

தனதுநிலை தான்மறந்தான் தருமமுறை
தனைக்கடந்தான்
கனமழியக் காரியஞ்செய்தான் சுருமவிதிக்
கென்னசெய்வேன்?

குலத்திலில்லாக் காரியத்தைக் குறித்துச் செய்தான்
கொடுமையிது
சலிப்படையச் செய்தானென்று சங்கடத்தை
மிகவடைந்து

இவனுடைய மனதிடத்தை எவ்விதமாய்
மாற்றுவோமென்
றவனுடைய நிலைமைகண்டு அஞ்சிராமன்
ஆலோசித்து

பரதன்றனைப் பார்த்துச்சொல்வான் பாப்பம்டா
இந்தக்காரியம்
வருங்குறைவை யறியாமல் வழுவிச்செய்தாய்
வேண்டாமடா

1530. என்னுடைய விதிவசத்தை எவருடனே முறையிடுவேன்
உன்னுடைய துணிவைக்கண்டு உருகுதடா மனமிகவும்

எனதுமனப் படிநடந்து எனக்குத்திர்ப்பி தரும்நீயே
எனைமீறவும் தானாயிற்று எனைமறியல் செயலாயிற்று

துடிக்குதடா மனமிகவும் துணிச்சலுனக் காகாதடா
நடுங்குதடா தேசுமுந்தான் நான்சொன்ன
படிநடப்பாய்

என்னிடத்து மறியல்செய்து என்னபலன் நீயடைவாய்?
என்னுடைய வார்த்தைகேட்டால் என்னகுறை
நீயடைவாய்

ஷத்திரியர்க்கு அடுக்காதடா சாகஸடாம் காரியமடா
சுத்தமுள்ள தம்பியேநீ சோகந்தர வேண்டாமடா

1535. மறியல்மிகுத் தோஷமடா மறியல்தோஷம் போவதற்குக்
குறித்தெனையும் ஜலத்தையும்நீ குணமுடனே
எழுந்துதொடு

இந்தவிதம் ராமன்சொன்னான் எழுந்துதம்பி
யந்தப்படி
வந்துசெய்து அண்ணன்பாதம் வணங்கிநின்று
சொல்லுகிறான்

மதியிழந்து மறியல்செய்ய மனந்துணிந்தேன் மாதவனே
விதிவசமே சதியாயிற்று கதிக்குமது தடையாகுமே

அனுக்கிரகித்து ஆதரிப்பீர் அறிவிழந்து
துணிந்தேனண்ணா
எனதுநிலை நான்மறந்து இழிவான காரியஞ்செய்தேன்

கோபமென்மேல் கொள்ளவேண்டாம் குறையுந்தானே
மடையவேண்டாம்
சாபமெனக் கிடவேண்டாம் சத்பக்தனா
னென்றுரைத்து

1540. கோருகிறான் ஸ்ரீராமனைக் குவலயத்தில் தந்தைவாக்கு
ஆருக்குமே யங்கீகாரம் ஆகுமென்று
அறிந்துகொண்டேன்

நீர்செய்யும் வனவாசம் நேராக நான்செய்வேன்
ஆர்செய்தா லென்னநம்ம ஐயானாக்ஞை சபலமாமே

தேசந்தனை யாளுதற்கு தேவரீரை யாவருமாய்
ஆசைகொண்டு கோருகிறார் ஆகையினா லவ்விதமாய்

செய்வதிலே தோஷமில்லை ஜெகத்திலுள்ளோர்
களுமொப்புவார்
ஐயமின்றி அவ்விதமாய் அனுமதிக்க
வேண்டுமென்றான்

அந்தவேளை ஸ்ரீராமன் ஆலோசிக்கும் குறியறிந்து
வந்துவிட்டார் தேவலோக மகரிஷிகள் ராமனிடம்

1545. பரதன்றனைப் பார்த்துரைப்பார் பக்தனுனைப்
போலுமுண்டோ
சுருதுமுந்தன் எண்ணப்படி சுத்தன்ராமன்
செய்வானாகிப்

சுடனாகும் கைகேயரன் கட்டாமல் நின்றதினால்
தடையாகும் சுவர்க்கப்பிராப்தி தந்தைக்கப்பா

வாசஞ்செய்தே வருவானப்பா வதிலிதற்குச்
சொல்லவேண்டாம்
தேசமுந்தன் வசந்தனிலே திருவாளன் வருமளவும்

வைத்திருப்பா யென்றுசொன்னார் வசிஷ்டமுனி
யப்பொழுது
மெய்தானப்பா அண்ணன்காலால் மிதிக்கப்பட்ட
பாதுயை

வாங்கிக்கொண்டு போயதற்கே வைபங்கள்
செய்ததனைத்
தாங்கிமிக உபசரித்துத் தரணியாளும் சுதந்தரத்தை

1550. அதன்பெயரால் கொண்டுசெல்வாய் ஆளுகையை
யென்றுரைத்தார்
மதியுள்ள பரதன்கேட்டு வதிலதற்குச் சொல்லுதற்கு

ஏதுமிலை யென்றெண்ணினான் எல்லோரும்
ஒப்புக்கொண்டார்
ஏதனப்போ திர்ப்திகொண்டான் நன்றியுள்ள
பரதாழ்வான்

இந்தவித மானதன்மேல் இளையவனாம் லட்சுமணனை
வந்துகுட்டி முத்தமிட்டு வாஞ்சையுடன் விசனத்துடன்

என்னருமைத் தம்பியேகேள் எப்படித்தான் நீசகிப்பாய்
உன்னையுமே யெண்ணிமிக உருகுதடா மனமெனக்கு

வனவாச முனக்குந்தானே வரலாமோ கண்மணியே
மனதுமிகத் துடிக்குதடா மகிமையெனக் கில்லையடா

1547. வதில் - பதில்

வனவாசம் நீங்கள்செய்ய வாழ்வெனக்கு
வேண்டுமோடா
உனக்காக நானிருப்பேன் உண்மையாக நீயெனக்காய்

அயோத்திசென்று அண்ணனிட அரசுமுறை நீநடத்தித்
தயவாக ஆதரிப்பாய் தரணியிலே புகழடைவாய்

என்றுரைக்க அனுஜன்கேட்டு எனக்கணுவும் ஏற்காது
கன்றுதாயைப் பிரிந்தாலுமே கருணையுள்ள
அண்ணனைநாந்

விட்டிருக்க மனமெனக்கு ஒட்டாதண்ணா அதுவுமன்றி
சுட்டியுனக் கிளவரசு சூடும்பாத்ய மிருக்கையிலே

ராஜரசு நடத்தவந்தால் நாட்டிலுள்ளோ
ரொப்பாரதை
ஏனிந்தப்படி யுரைத்தாய் இளையவனை
யழைத்துப்போவாய்

சொன்னவுப சாரம்போ தும் சுகமடைந்தேன்
அகங்குளிர்ந்தேன்
என்னையர சாளும்படி எப்படித்தான் சொல்லக்கூடும்?

முறைதப்பிச் செய்வதற்கு மோகங்கொள்ள
லாகுமோபார்
குறையணுகும் நடையாமோ குலநடையை மீறலாமோ?

அண்ணனுக்கு நீயுரைத்த அந்நியாயம் எனக்குமுண்டு
என்னிப்பாரா யென்றுரைத்தான் இதைக்கேட்டுப்
பரதன்மிக

1553. பாத்யம் - உரிமை

வருத்தங்கொண்டு இவனும்நம்ம வார்த்தைப்படி
நடக்கமாட்டான்
வருவதெல்லாம் அனுபவிப்போம் கருமபந்த
மென்றசந்து

பளபளெனும் இரண்டுநல்ல பாதுகைகள்
ராமன்முன்னே
விளங்கும்படி பரதன்வைத்தான் விநயமுடன்
அதன்பிறகு

1565. தருமசீலன் ஸ்ரீராமன் தன்னில்மிக மகிழ்ச்சிகொண்டு
அருமைத்தம்பி வைத்தஅந்த அழகான பாதுகையில்

கிழக்குத்திக்கைப் பார்த்துக்கொண்டு கிருபையுடனே
ஏறிநின்று
பொழங்கித்தந்தான் பாதுகையைப் பொறுப்புடனே
பரதன் வாங்கிச்

சிரசுதனில் வைத்துக்கொண்டு செப்புகிறான்
அண்ணனிடம்
வருஷம்பதி னாலுக்கப்பால் வராதிருந்தால்
உயிர்விடுவேன்

இதுநிச்சய மென்றுரைத்து இராமன்பாதம்
தனைவணங்க
அதற்குப்பதி லுரைத்துராமன் அனுக்கிரகித்தா
னதன்பிறகு

தம்பிமார்க ளிருவரையும் தனியாக
அழைத்துச்செல்வான்
அம்பவித்த காரியத்தால் சலிப்பணுவும்
கொள்ளவேண்டாம்

1564. பாதுகை - காலணி

கருதியன்னை செய்ததல்ல கருமவிதிப் படியாயிற்று
மருமமதை யறியாமல் மாதாவை வருத்தலாமோ?

உன்னைவிட எந்தன்மீது உறுதியான அன்புடைய
அன்னையென்னை யரண்யத்திற்கு அனுப்பமனம்
துணியமாட்டாள்

நன்மையேதோ யிருக்கவேண்டும் நானிங்கு வருவதிலே
கன்மவினைப் படிகடவுள் கருணைகொண்டே
செய்திருக்கும்

என்மீதும் சீதைமீதும் எண்ணிச்சொன்னேன் சபதமாக
என்தாயாம் கைகேதனை ஏதும்நீங்கள்
சொல்லவேண்டாம்

அவளைமிக அன்புடனே ஆதரிக்க வேண்டும்பாரீர்
சவரணையாய் வாழ்ந்துவந்தாள் சங்கடத்தைத்
தரலாகாது

1575. நொந்துபோனா ளன்னைமிக நோகச்செய்து
ஆவதென்ன?.
எந்தனுக்காய் அவளிடத்து எவரும்அன்பு
கொள்வீரானால்

திர்ப்திமிக உண்டெனக்குத் தெரிந்துசெய்வீ
ரென்றுரைத்தான்
அருமைத்தம்பி இருவர்களும் அந்தப்படி
யொப்புக்கொண்டார்

சத்துருக்கனை ஸ்ரீராமன் சந்தோஷமாய்த்
தழுவிக்கட்டி
முத்தமிட்டுக் கொஞ்சிமிக மோகமுடன்
அனுக்கிரகித்தான்

அன்னையரை ஸ்ரீராமன் அன்புடனே வந்துகண்டு
என்னுடைய கவலைகொண்டு ஏங்கவேண்டாம்
தாய்மார்களே

எந்தனுக்குக் குறையேதும் எப்பொழுதும் நேரிடாது
வந்திடுவேன் உங்குள்முன்னே வாழ்ந்திடுவேன்
சுகமாகவே

1580. அதுவரையில் தம்பிமார்கள் ஆதரிப்பா ரன்புடனே
மதியுள்ள மக்களவர் மனமறிந்து செய்வாரவர்

என்வாக்கை மீறமாட்டார் என்வழியை
விடவுமாட்டார்
நன்மைசெய்வா ராருக்குமே நன்றியுள்ள மக்களவர்

அவருடனே நீங்கள்செல்வீர் அயோத்தியிலே
வசித்திருப்பீர்
சிவனருளால் வனவாசம் சீக்கிரத்தில்
முடித்துக்கொண்டு

வருவேனென்று சொன்னானம்மா வாஞ்சையுடன்
தாய்மார்கள்
அருமையான மகனேயென்று அழுதடங்கி
யனுக்கிரகித்தார்.

அதன்பிறகு வசிஷ்டர்முதல் அனைவரையும்
பார்த்துராமன்
இதமாக உபசரித்து எல்லோர்க்கும் முறைப்படியே

வாக்குறுதி தந்தானம்மா வைகுந்த நாதன்ராமன்
பாக்கியவதி ஜானகியைப் பரதன்வந்து அடிபணிந்து

பாதம்நொந்து வருந்துமம்மா பசிதாகம்
பொருந்துமம்மா
சீதமணல் தாக்குமம்மா தேகமிக இளைக்குமம்மா

பயங்கரமாய்க் காணும்மம்மா பரந்தவனந் தனிலெங்கும்
தயிரியத்தைக் கொண்டிருப்பாய் தாயேநீ அஞ்சாமலே

உன்குறையை அறிந்தாலண்ணன் உள்ளமிக
நொந்திடுவார்
இன்மொழியா லவர்மனது எப்பொழுதும்
குளிர்ந்திருக்க

செய்வாயென்று நம்புகிறேன் செப்பவுண்டோ
வாயெனக்கு
தெய்வஞ்செய்த வஞ்சனைக்குத் தேறுதலே
இவையெனக்கு

1590. இந்தவிதம் சொன்னானம்மா இலக்குமியாம்
ஜானகியாள்
அந்தவார்த்தை களுக்கெல்லாம் ஆதரவாய்ப்
பதிலுரைத்து

அனுக்கிரகித்தாள் அதன்பிறகு அனுஜனும்ஜா
னகியும்வந்து
மனமுவந்து தேவிமாரை வணங்கியனுக்
கிரகமடைந்தார்

பரஸ்பரமும் உபசாரங்கள் பாங்காக நடந்ததன்மேல்
பர்தன்வந்து ஸ்ரீராமன் பாதந்தனைப் பூஜைசெய்து

அனுமதியைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து
யாவருடன்
மனமுருகும் நிலையோடு மலையைவிட்டு இறங்கிவந்து

பரிவாரங்கள் சூழ்ந்துவரப் பாதுகையைச்
சிரசில்கொண்டு
கருதிநகர் வந்தடைந்தான் கண்கலக்க
மென்னசொல்வேன்

1595. அரண்மனைக்குள் சென்றுபார்த்தான் அரைநொடியு
மங்கிருக்கப்
பிரியமின்றி வெளியில்வந்து பித்தனைப்போல்
தத்தளித்து

நந்திகிராமந் தனிலேவந்து நாட்கழிக்க எண்ணியவன்
அந்தக்கிராமந் தனையடைந்து அனுஜன்முதல்
சகலருமாய்

இருக்கையிலே பாதுகைக்கு எத்தனையோ
பெருமைசெய்து
அரசமுடி அதற்களித்து அடிமைபோல அவனிருந்து

சத்துருக்கன் றனைக்கொண்டு சகலவிதக் காரியங்கள்
சுத்தமாகச் செய்துகொண்டு சுசிருசியா
யிருந்துகொண்டு

இராமனையே தியானஞ்செய்து இராப்பகலும்
பக்திகொண்டு
காமாதி மோகமெல்லாம் கட்டோடு விட்டொழித்து

அரைநொடியை யநேகயுக மாகயெண்ணி நாட்கழித்து
விரதங்கொண்டே யிருந்தானம்மா விவேகமுள்ள
பரதாழ்வான்

சித்திரகூட பருவதத்திலிருந்து ஸ்ரீராமன் தண்டகாரண்யம் போவது

இந்திவித மிங்கிருக்க இராமச்சந்திரன் வசிக்குமந்த
விந்தையான பருவதமாம் மேன்மையுள்ள சித்திரகூட

மலைதனியே சிலகாலம் மாதவனாம் ஸ்ரீராமன்
நலமாக வைத்துக்கொண்டு தங்கியதி லிருந்தானம்மா

சுசிருசியாய் - தாய்மையாக

இராமனங்கே வசிப்பதிலே இராட்சதராம்
கரதூஷணாள்
காமரூபங் கொண்டுசெய்யும் காரியங்கட்கு
இடஞ்சாலன்று

அங்குள்ள முனிவர்கட்கு அநேகவித இம்சைதந்தார்
தங்களுக்கு அரக்கராலே சங்கடங்கள் வருவதெண்ணி

1605. இரகசியமாய் அவர்களுக்குள் இராமனையும்
பார்த்துக்கொண்டு
முகவாட்டந் தனையுங்கொண்டு முனிவர்பேசும்
ஜாடைகண்டு

கேட்டவரை யறிந்துகொண்டான் கிர்பையுள்ள
ஸ்ரீராமன்
நாட்டங்கொண்டு மாலோசித்தான் நாமிப்போது
செய்வதற்கு

ஏதுமிலை யென்றிருந்தான் இருக்குமந்த
முனிவரெல்லாம்
பாதைதனைப் பொறுக்காமல் பருவதமாம்சித்திரகூடந்

தன்னைவிட்டு வேறிடம்போய்த் தங்கிவிட்டா
ரதன்பிறகு
தன்னில்ராமன் ஆலோசித்தான் தானுமந்த
பருவதத்தில்

இருப்பதினால் பரதன்முதல் எல்லோரும் அடுத்தடுத்து
வருவார்க ளாகையினால் வனத்தில்வெகு தூரம்போக

1610. நிச்சயித்துத் தம்பியொடு நேராக ஆலோசித்து
அச்சுதனாம் ஸ்ரீராமன் அரணியத்தை நாடியப்பால்

சித்திரகூட மலையைவிட்டுச் சீதையுடன் தம்பியுமாய்
அத்திரிமக ரிஷியவரின் ஆசிரமத்தை வந்தடைந்தான்

அந்தரிஷி கண்டுமிக அகமகிழ்ந்து உபசரித்தார்
அந்தரிஷி பத்தினியாம் அனுசூயை தனைவணங்கக்

கணவருக்குப் பணிவிடைகள் கருத்துடனே செய்துமிக
வணங்கியவ ரிஷ்டப்படி வழுவாமல் நடந்துகொண்டு

பாதிவிர்த்திய தருமந்தனைப் பாங்காக ஆதரித்து
நீதிநெறி தனையறிந்து நிர்மலமாம் சித்தத்தோடு

1615. ஜெகங்களெல்லாம் சுகமடைய செய்துதவம்
சித்திபெற்று
இகபரத்தில் இணையில்லை இன்பம்பெறும்
பாக்கியவதி

ஆகவுள்ள அனுசூயை அகமகிழ்ந்து ஜானகியைத்
தேகமெல்லாம் தடவித்தந்து திர்ப்த்தியுடன்
சொல்லுகிறாள்

சீதையேயென் கண்மணியே செப்பவுண்டோ
வுன்மகிமையைப்
போதமுள்ள உனதுபர்த்தா பொற்பாதப்
பூடையொன்றே

போதுமென்று நம்பிவந்த புத்தியைத்தான்
என்னசொல்வேன்
பேதமின்றிக் கணவருக்குப் பீரீதியுடன் வணங்கியவர்

மனதுக்கின்பந் தருபவனே மகிமையுள்ள
மனைவியாவள்
உனதுபர்த்தா ஏதுமின்றி ஊரைவிட்டு வந்தவரை

பின்றொடர்ந்து வந்ததிலே பெருமைமிக
அடைந்தாயம்மா
நன்மையுனக் குண்டாமம்மா நாடெங்கும் புகழுமம்மா

பொருளுக்காகப் பதியினிட்டம் பூமியிலே வெகுபெண்கள்
பிரியந்தனைக் காட்டுவார்கள் பிறகுபேதங்
கொள்ளவார்கள்

இஷ்டப்படி செய்யுமட்டும் இணங்கியவர்
வணங்குவார்கள்
கஷ்டம்வரும் வேளையிலே கைவிடவே துணியுவார்கள்

கையிளைத்த வேளையிலே கடிந்துரைப்பார்
கணவன்றனைத்
தெய்வத்திற்கும் அஞ்சாமல் தீங்குசெய்வோர்
தானுமுண்டு

உன்னைப்போல உலகுதனில் உத்தமியை நானறிவேன்
அன்னைபார பரியேவந்து அவதரித்தாப்
போலாகுவாய்

உனக்குப்புத்தி சொல்வதற்கு ஒருவருமே இல்லையம்மா
எளதுவாக்கில் உலகநடை எடுத்துரைப்பேன்
பின்னுங்கேளாய்

கணவன்காகயின் தோரணையைக் கண்டபின்பு
கொள்ளும் பெண்கள்
கூடாக்கின்றி யுண்டுலகில் காதகிகள் பாதகிகள்

பதிதனாயும் பதியிருப்பான் பத்னியதைப் பாராட்டியே
பதிதானல்ல செய்வாளாயின் பாதிவிர்த்திய
பங்கம்வரும்

என்னமுறை பதியினிடம் இருந்தாலும் அதைமனைவி
தன்னுடைய மனதில்கொள்ளல் தகுதியன்று
அவனிஷ்டத்தை

அனுசரிக்கும் மதியதுவே அழகாகும் மதியளிக்கும்
அனைவருமே புகழவாகும் ஆனந்த போகந்தரும்

1630. இவைகளைநீ மறக்காமலே இணங்கிபதி இஷ்டப்படி
தவறாமல் நடப்பாயென்று தயவுடனே
சொன்னாளம்மா

சீதைகேட்டுக் களிப்படைந்து செப்புகிறா ளென்தாயே
ஆதரவா யுரைத்ததெல்லாம் அறிந்தேனம்மா
மனந்தனியே

குறையுள்ள பார்த்தானவயும் குணமாகக் கொண்டுமிக
மரியாதை செய்வதற்கு மனஸ்மிருதியு மிருக்கையிலே

சகலகுன சம்பன்னரும் சர்வக்ஞனு மாகியஎன்
மகிமையுள்ள மணவாளரை மறக்கவுண்டோ
எக்காலமும்

இகபரத்தில் சகலபாக்யம் எனக்குண்டாம்
அவரருளால்
சுகம்பொருந்த அவருடைய சொல்லமகே போதுமம்மா

1635. அவரையுமே அவமதித்தால் அடையவுண்டோ
கதியனுவும்
தவப்பொருளே யவரெனக்குத் தத்துவத்தைச்
சொன்னேனம்மா

எவருமவர் மனவாளரை இகழ்ச்சியெய்தார்
இழிவடைவார்
குவலயத்தில் பர்த்தாவேசத் துருவாவர் எனும்கருத்தை

அறிவேனம்மா அதுவுமன்றி அரண்யம்வரும்
தூணமதில்
குறிதெனக்கு மாமியாரும் நுறைவின்றிப்
புத்திசொன்னார்.

மனமனெக்குச் செய்கையிலே மாதாவு மதியுரைத்தார்
கணவரிட கருத்தறிந்து காரியஞ்செய்யத் தேறியதாய்

ஆகையினால் அடக்கமாயும் அறிவுடனும்
நடப்பேனென்றாள்
தாகமுடன் அனுசூயை தன்கருத்தைச் சொல்லுகிறாள்

1640. உள்ளைராமன் மணம்புரிந்த உண்மைதனை
விரித்தெனக்கு
இன்னபடி என்றுரைப்பாய் என்றுகேட்டா
ளப்பொழுது

ஆதிமுதல் நடந்ததெல்லாம் அப்படியே சீதைசொல்லிப்
பாதமதைப் பணிந்தாளம்மா பரமபக்தி
கொண்டுதானே

அனுசூயை நவநவமாய் ஆடைகளுங் கந்தாதிகளும்
மனமுவந்து தந்தாளம்மா மாதேவி சீதைவாங்கித்

தரித்துக்கொண்டாள் அன்றிரவு தயாபரனாம்
பதியுடனே
இருந்துமனச் சுகமளடந்தாள் எத்தனையோ
பெருமையுடன்

மறுகால் யங்கிருந்து மறுபடியும் தென்திசையை
குறித்துச்சொல்ல ஸ்ரீராமன் கோரியத்திரி
முனிவர்தம்மை

வணங்கியனு மதிகேட்டான் மனமுவந்து
அனுக்கிரகித்தார்
குணமுடைய ரிஷிகள்பலர் கூடிவந்தா ரப்பொழுது

வரவைக்கேட்டு வணங்கிராமன் மனக்கருத்தை
யுரையுமென்றான்
தருமமெல்லாங் காக்கவந்த தயாபரனே
அரக்கர்செய்யும்

உபத்திரவங்கள் மிகவுமப்பா உன்கிர்பையா
லொழியுமென்று
தபசிருந்தோம் உன்னைநாடித் தயவுசெய்து
ஆதரிக்க

வேண்டுமென்று கோரினார்கள் வினயமுடன்
அவர்களுக்கு
ஆண்டவனாம் ஸ்ரீராமன் அபயந்தந்து அதன்பிறகு

அடந்ததண்ட காரண்யத்தை அடுத்துவந்தான்
அனுஜன்சீதை
யுடனேதான் அந்தவனம் உள்ளநிலை கண்டுமிக

இப்படியும் வனங்களுண்டோ இதிலேதானே
ஜனங்களுண்டோ
எப்படித்தான் வசிக்கப்போகும் இந்தவனந்
தனியேயென்று

எண்ணியதில் நடந்துவந்தார் ஏதும்பய மில்லாமல்
கண்ணியமாய் மூவருமாய்க் கானவிலே
ஜாக்கிரதையாய்

1651. கானல் - காடு

ஆரண்ய காண்டம்

இராமலட்சுமணாள் சீதையோடு தண்டகாரண்யத்தில் பிரவேசித்துச் சில முனிவர்களுடைய வாசஸ்தலத்தைக் கடந்து போகையில் விராதன் எதிர்ப்ப அவளை வதைத்தவனுக்குக் கதி தருவது

1. அந்தவனந் தனிலந்நேகர் அருந்தவங்கள்
செய்துகொண்டு
சந்துஷ்டியா யிருந்தாரம்மா சாதுக்களை
முனிவர்கள்தான்

அவர்களிட வாஸ்தலம் அடுத்துராமன் அநுஜன்சீதை
மூவருமாய் வரக்கண்டு முனிவரெல்லாம் அசுமகிழ்ந்து

எதிர்கொண்டு வந்தழைத்து இருப்பிடமே கூட்டிவந்து
அதிகவுப சாரஞ்செய்து அர்க்கியாதிகள் தந்ததோடு

அருமையான கனிவர்க்கங்கள் அருந்தத்தந்து
ஸ்துதித்தாரம்மா
பிரியமிகக் கொண்டுராமன் பிரேமையுடன்
அவர்களுக்கு

---

1. சந்துஷ்டி - மகிழ்ச்சி

2. வாஸஸ்தலம் - இருப்பிடம்

5. உபசாரம் மிகவுஞ்சொன்னான் உண்மையாக
மனமகிழ்ந்து
தபசிகளாம் முனிவரெல்லாம் நங்கியன்று
அங்கிருக்கக்

கேட்டுக்கொண்ட படியிருந்து கிழக்கில்ரவி
யுதித்திடவே
தாட்டுதற்கு அங்கிருந்து தடங்கண்டு போனாரம்மா

போகையிலேஎதிரிலொரு புதைகானல்
தனைக்கண்டார்
மேகம்நீரைக் கொண்டுகூடி மேலிருக்கும்
நிலைமைபோல

அந்தவனம் மிகவிருண்டு அகோரமாக இருந்ததம்மா
வந்ததிலே புகுந்தாரம்மா வனமிவ்வாறு எங்குமில்லை

சீறிவரும் புலிகரடி சிம்மமுத லனேகவித
கூறுந்துஷ்ட ஜந்துக்களின் கூட்டமதில் கோடியம்மா

10. வருமிவரை அவைகளெல்லாம் வழிதனிலே
கண்டொதுங்கித்
திரியுமல்லால் பக்கந்தனில் தீண்டுதற்கு
நெருங்காதம்மா

புதுமையிவ்வா றெங்குமுண்டோ பூமிதனில்
மனிதர்களை
வதைபுரியுஞ் சந்துகளும் மதிகொண்டு விலகிடுமோ?

வருபவரின் வடிவங்கொண்டு மனமகிழ்ந்து ஓடுமம்மா
அருப்புதமாம் சுந்தரரை ஆதரித்தே திரியுமம்மா

---

6. ரவி - சூரியன்

7. ஜந்துக்கள் - விலங்குகள்

பயமின்றிப் போகையிலே பார்க்கமிகப் பயங்கரமாய்த்
தயவில்லா நெஞ்சுடைய தானவனாம் விராதனவன்

எதிரில்வரக் கண்டாரம்மா எத்தனையோ
சிம்மாதிகள்
வதைபுரிந்து தூக்கிக்கொண்டு வந்துமுன்னே
நின்றானம்மா

15. சிம்மநாதஞ் செய்தானம்மா சீறியுமே பார்த்தானம்மா
கும்மிதட்டி யசைந்தானம்மா கொலைபுரிவே
னென்றானம்மா

சேஷ்டைமிகச் செய்தானம்மா ஸ்ரீராமனைப்
பழித்தானம்மா
தாஷ்டிகமாய் வந்தானம்மா ஜானகியை
எடுத்தானம்மா

சபதங்கள் மிகவும்பேசிச் சாகஸங்கள் மிகவுஞ்செய்து
விபரீதம் வருமென்று வெகுவிதமாய் மிரட்டியவன்

ஓடுங்களென் றதட்டிச்சொன்னான் உத்தமன்ஸ்ரீ
ராமனப்போ
நாடியவன் மார்பைப்பார்த்துத் தேடிநல்ல
பாணங்களைப்

போட்டவுடன் மார்பிலவை போயதனைப்
பிளந்துமுயிர்
தாட்டாமல் துடிதுடித்தான் தகுந்தபடி ஜானகியை

20. ஓரிடத்தில் வைத்துவிட்டு ஓடிவந்தான் சீலமுடன்
தேரியதாம் பாணங்களால் தீவிரமாய்ச் சூலமதைத்

துண்டுதுண்டா யாக்கிவிட்டுத் தொடுத்தார்
சரமாரியாக
அண்டியந் தப் பாணமெல்லாம் அவன்மீது
விழுந்திடவும்

உதறிவிட்டு அஸ்த்தரங்களால் ஒருக்காலும்
என்னையாரும்
வதைபுரியக் கூடாதென்றும் வரலாறுஞ் சொல்லிவிட்டு

அவசரமா யோடிவந்து அனுஜனையும் ராமனையும்
அவன்தோளில் வைத்துக்கொண்டு ஆத்திரமா
யோடினனே

வதைபுரியச் சமயமிது வாய்த்ததென்றே
எண்ணிக்கொண்டு
மதியுள்ள இருவர்களும் வாளைக்கையி
லெடுத்துக்கொண்டு

25. அடித்தாரவன் தோளிரண்டு அறுந்துவிழ அதினாலே
சடுதியாக அலறிக்கொண்டு தரைதனிலே
வீழ்ந்தானம்மா

அட்டகாசம் அடங்கியவன் ஆவிமிகத் துள்ளியப்பால்
சட்டதிட்டப் படிநடக்கும் சாதுவாக வானானம்மா

அறிவுகொண்டு ஸ்ரீராமனை அநேகமாக
ஸ்துதித்ததோடு
குறித்துரைத்தான் குபேரனாலே குரூரஜன்மம்
வந்ததையும்

விரித்துரைத்துக் கதியடைந்தான் விமலன்ராமன்
ஜானகியைப்
பரிந்துவந்து தழுவிக்கொண்டு பட்சத்தோடு
தைரியஞ்சொன்னான்

அங்கிருந்து வருகையிலே ஆகாச மார்க்கந்தனில்
தங்கியொரு ரதம்வரவே தாகங்கொண்டு
பார்த்தாரதை

30. அதிலிருந்த ஒளியுடலோர் அநேகர்களில் சிறந்தநல்ல
பதவியுள்ளோ னொருவன்வந்து பாதம்நிலம்
கொள்ளாமலே

தவமுனியாம் சரபங்கர் தங்குமொரு ஆசிரமத்தில்
அவரைப்போய்க் கண்டுபேசி அப்பொழுதே
மேல்கிளம்பி

போகக்கண்டு முனிவரான போதமுள்ள சரபங்கரை
வேகமாக வந்துகண்டு வினயமுடன் வணங்கிராமன்

வந்தவரா ரென்றுகேட்டான் மகரிஷியாம் சரபங்கர்
வந்தவன்தே வேந்திரனப்பா வந்தென்னைப்
பிரம்மலோகம்

அழைத்துப்போகப் பிரம்மாவினால் அனுப்பப்பட்டு
வந்தானப்பா
உழைத்தடைந்த தவப்பலனை உனக்குத்தர இங்கிருந்து

35. வருவேனென்று கேட்டுக்கொண்டேன் மனமகிழ்ந்து
சென்றானவன்
தருவேனப்பா தவப்பலனைத் தயாபரனே
வாங்கிக்கொள்வாய்

தேவேந்திரன் சரபங்க மஹரிஷியை வந்து கண்டதன் மேல் ஸ்ரீராமன் அந்த ரிஷியைக் கண்டு அவருடைய தவப் பயனை யடைந்ததும், அந்த ரிஷி சுதி யடைந்ததும், பிறகு சுதீட்சணரை வந்து கண்டு தவப்பயனடைந்ததும், ரிஷிகளுக்கு அபயந் தந்ததும் சீதை, யதை யாட்சேபிப்பதும், ஸ்ரீராமனதைத் தடுத்துச் சொல்வதும், பிறகு பஞ்சாட்ஸர சிருக்குமிடத்தில் ராமன் வசிப்பதும்

என்றுமுனி சொன்னவுடன் ஏனெனக்கு
நீர்கொடுப்பேன்
என்றுரைக்க அவசியமில்லை எல்லாப்பலன்
என்னைவந்து

அடைந்ததென்று ராமன்சொல்ல அகமகிழ்ந்து
முனிவரப்பால்
கடத்தையக்னிக் கிறையுந்தந்து உடனேயொளி
வடிவாகியே

சுதியடைந்தா ரதன்பிறகு கருணையுள்ள ஸ்ரீராமனைக்
சுதியாக வந்தடைந்தார் கண்கலங்கி முனிவர்பலர்

துஷ்டர்களை நிக்ரகித்துச் சிஷ்டர்களைப் பரிபாலிக்க
இஷ்டங்கொண்டு வந்தராமா எங்கள்குறை
கேட்டிடுவாய்

அரக்கர்செய்யும் அழிம்புகளை அனுபவித்து
நொந்தோமப்பா
அரைநொடியு மினிச்சகியோம் ஆதரிக்க
வேண்டுமப்பா

அரக்கர்பூண்டை யொழிப்பதற்கு அகந்துணிந்தால்
பிழைப்போமப்பா
இருக்குமனக் குறையுரைத்தோம் இஷ்டப்படி
செய்வாயென்றார்

அபயமவர் களுக்களித்து ஆதரிப்போ மென்றுரைத்து
நியமமொன்றை யெதிர்பார்க்கும் நியாயமதைச்
செய்தானம்மா

கூடியவ ரோடுராமன் குணமிருந்த சுதீட்சணரைத்
தேடிவந்தான் அவராசிரமம் தெரிந்தவரை
வணங்கிநின்றான்

கண்டவரும் மிகமகிழ்ந்து கனப்படுத்தி யுபசரித்து
என்டிசையும் எசஸடையும் இராமாவென்று
அனுக்கிரகித்து

45. தேவேந்திரன் வந்தழைத்தான் தேவன்பிரம்மா
ஆஞ்ஞைப்படி
ஆவலோடு நான்செய்த அருந்தவத்தின் பலனுக்கு

தருவதற்கே இருந்தேனப்பா தயவுசெய்து
வாங்கிக்கொள்வாய்
அருந்தவத்தின் பலனையென்று அவரும்சொன்னார்
ஸ்ரீராமன்

கிரகித்துக்கொண்டான் தவப்பலனை கிருபையுடனே
யதன்பிறகு
திர்ப்திகொண்ட சுதீட்சணரின் திருவடியை
வணங்கஅவர்

அனுக்கிரகித்து அனுப்பித்தந்தார் அங்கிருந்து
வருகையிலே
மனக்கவலை சீதைகொண்டு மாதவனைப்
பார்த்துரைப்பாள்

என்பிராண நாயகரே எல்லாம்நீ ரறிந்தவரே
நன்மையெண்ணி நானுரைப்பேன் நடப்பீரும்ம
இஷ்டப்படி

50. கூலங்கிர்ஷ மாயறிந்து கொள்ளுங்காரியம்
குணமடையும்
காலதேசம் அறிந்துசெய்தால் கஷ்டமில்லை
கனமடைவோம்

முனிவரைப்போல் விரதங்கொண்டால் மூன்றுதர்ம
முண்டவையில்
மனதடக்கி யாள்வதொன்று மற்றொன்று சத்யநிலை

இரக்கமுட னெவ்வரையுமே இம்சிமாம லிருப்பதொன்று
தருமமாகும் இம்மூன்றும் தவமுனிக்கு முக்கியமன்றோ?

அவரைப்போல நடந்திடவே அன்னைபிதா
ஆஞ்ஞைப்படி
குவலயத்தில் விரதங்கொண்டு கோரிவந்தீர்
வனத்திற்குநீர்

சத்தியநிலை யும்மிடத்துச் சரியாக இருப்பதோடு
உத்தமமாம் ஜிதேந்திரியத்துவம் உம்மிடத்தே விளங்கக்
கண்டேன்

55. தயவென்ப தொன்றுமட்டும் தம்மிடத்துக்
குறைவுபோலப்
மயமொன்று உதித்ததினால் பரிந்துமிகச்
சொல்லவந்தேன்

அரக்கரைநீர் வதைபுரிய அகந்துணிந்து அபயந்தர
இரக்கமின்றித் துணியலாமோ எவ்விதமாய்
அரக்கர்மீது

---

50. கூலங்கிர்ஷம் – நன்றாக, அறிவுடன் கூடிய

கையெடுக்க நியாயஞ்சொல்வீர் கஷ்டநஷ்டம்
பார்த்துச்செய்வீர்
வையகத்தில் முறைதப்பி வாக்குறுதி சொல்லலாமோ?

அரக்கர்மிகச் சூதுள்ளவர் அநேகவிதம்
தந்த்ரஞ்செய்வர்
கருதிவெகு கொடுமைசெய்வர் கண்டுசெய்வீர்
காரியத்தை

அரக்கரைநீர் பகைத்துக்கொண்டால் அதினாலே
நானும்மைப்
பிரியலாகும் பிறகதினால் பிரேமையுள்ள
நீரெனக்காய்க்

60. கஷ்டப்பட வந்துவிடும் கலகங்கள் மிகவிளையும்
துஷ்டர்கள்மேல் கையெடுக்கத் துணிவதற்குர்
சமயமல்ல

சத்தியத்திற்குக் கட்டுப்படும் சாந்திதனை யடைந்துள்ள
உத்தமரே இப்பொழுது ஒதுங்குவதே உசிதமையா

அரண்யவாச மானதன்மேல் அரசுமுறை
தனைக்கொண்டு
அரக்கர்தம்மை நிக்கிரகிக்க அகந்துணித லழகாகுமே

நானிருக்குஞ் சமயந்தனில் நடத்துமொரு முறைப்படியே
தானிருக்க வேண்டுமந்தத் தந்திரத்தை யனுசரியும்

பெண்ணைக்கூட அழைத்துக்கொண்டு
பெரும்படையை வெல்லப்போக
எண்ணுவோர்கள் தானுமுண்டோ ஏனிந்தப்
பிரமையுமக்கு?

65. இருப்பவர்க ளிருவர் நீங்கள் எனைக்காக்க
வொருவர்வேண்டும்
அரக்கரோடு போராட ஆமோமற் றொருவரினால்

நாற்புறமும் அரக்கர் சூழ்ந்தால் நாதரேநீ
ரேதுசெய்வீர்
போர்புரிய முடியாதையா நேரறிந்து நீங்குமையா

ஆயுதங்கள் கையிற்கொண்டு ஆளுதற்குக் காலமல்ல
நேயங்கொள்வீ ரென்வாக்கில் நின்றிடுவீ ரரக்கர்மீது

ட்சாத்திரம்வேண்டாம் சாமியென்று ஜானகியாள்
வேண்டிக்கொண்டாள்
சாத்திரத்தின் முறையுட்னே சாமிசில
நியாயஞ்சொல்வான்

மாதரசே நீயுரைத்த மதுரமான வார்த்தைகேட்டேன்
நீதிமுறை தனைவழுவி நெருங்கமாட்டே னரக்கரிடம்

இரக்காமெனக் கில்லையென்று எவருஞ்சொல்லார்
குவலயத்தில்
கருணையுடன் காரியங்கள் கண்டுசெய்வோன்
நானென்பரே

நியாயமின்றிக் கருணைகொண்டு நடப்பவர்கள்
குறைப்படுவார்
கியாதியுண்டாம் நியாயங்கொண்டு கிருபைகொண்டு
நடப்பதிலே

ஐயனெனை யரண்யத்திற்கு அனுப்புகையில்
அஸ்தராதிகள்
கையில்தந்த காரணத்தைக் கருதிப்பார்க்கில்
வனத்திலுமே

சூத்திரியதருமம் நடத்துவதே சாதுவென்று
நினைத்தெனக்கு
உத்தரவு தந்ததாக உறுதியாக நம்பலாமே

தந்தையாஞ்ஞைப் படிநடத்தல் தருமமாகும்
அதைமறந்து
உந்தனிஷ்டப் படிநடத்தல் ஒருக்காலும் நியாயமன்று

75. எவரேனும் எவருக்கேனும் ஏதேனும் இடர்செய்தால்
அவரெனக்குப் பகைவரென்று அகந்துணிந்து
அவரையெல்லாம்

நிக்கிரகிக்கக் கடமையுண்டு நியாயமுண்டு
வுபாயமுண்டு
உக்கிரமுள்ள பாணமுண்டு உறுதியுண்டு ஒழித்திடவே

எத்தனையோ முனிவர்களை இம்சைசெய்யும்
பாதகராம்
குற்றமுள்ள அரக்கர்களைக் கொல்லுவது நியாயமாமே

அருந்தவத்தோர் என்னைவந்து அபேட்சிக்கையில்
அவர்களுக்கு
வருந்துயர மொழிக்காவிடில் வந்திடுமே பாபமிக

ஆசையினா லாலோசித்தே அவர்களுக்கு
அபயந்தந்தேன்
ஊகங்கொண்டு பார்த்தாவது உசிதமென்றே
காணும்அந்த

80. வாக்குத்தத்தப் படிநடப்பேன் வந்ததெல்லாம்
அனுபவிப்பேன்
நாக்குறுதி பெரிதெனக்கு நாயகியே நீயெனக்குப்

பிராணனாக வுள்ளவளே பட்சமுடன்
உனைக்காப்பேன்
குரோதங்கொண்டு அரக்கரேதோ கொடுமைசெய்வா
ரென்றெண்ணிப்

பயப்படவே வேண்டாமெந்தன் பத்தினியே உத்தமியே
தயவுன்மேல் மிகவுமுண்டு தம்பியுனைக்
காக்கவைப்பேன்

அரக்கரெனைச் சூழ்ந்துகொண்டு அவர்கள்கையா
லானமட்டும்
சரமாரி யெய்தாலுமே சரமொன்றால் தடுத்தவரை

மடித்திடுவேன். இதுநிஜமே மயங்குமாட்டேன்
பயங்கொள்ளேன்
படுபாவிகள் அரக்கரைநான் பழுக்கப்பார்ப்பேன்
கழித்திடவே

85. சொன்னேன்நான் விவகாரத்தைச் சொல்வேனினி
தத்துவத்தை
என்னிலுண்டோ செயலணுவும் எண்ணியதைப்
பார்த்துரைப்பாய்ப்

பரசிவமும் சக்தியுமாய்ப் பாரைக்காக்க வந்திருக்கும்
கருத்தறிந்த போர்களுன்னைக் கபடியென்றே பேசவரே

இருப்பிடத்தி லின்பமாக இருக்குமென்னி லுனதருளே
கருதியெல்லாக் காரியங்கள் கண்டொருங்கச்
செய்யுமொரு

உண்மைப்படி யாலோசிப்பாய் ஒருகுறையும்
வருவதுண்டோ?
என்னையுமே மயக்குகிறாய் என்னிலுன்னை
யொளிக்கின்றாய்

உன்னுடைய சக்திகொண்டு உலகில்நான்
லீலைசெய்யும்
அந்நிலைமைப் படியென்னை அடுப்பதுந்தன்
கடமையாமே

90. அரக்கர்கள்மேல் ஏகையெடுக்க ஆதாரமாய் நீயிருக்க
மருமமதை யெண்ணிப்பார்த்து மவுனமாக
இருப்பாயென்றான்

அதன்பிறகு வழிநடக்க அங்குபஞ்சாட் சரரிருக்க
அதையடுத்துப் பலமுனிவர் ஆசிரமங்கள் தானிருக்க

அங்கங்கு வசித்துவந்தார் அவ்விதமாய் வருஷம்பத்து
தங்கிவன வாசஞ்செய்து தாமாக மறுபடியும்

சுதீட்சனரின் ஆசிரமத்தைச் சுகமுடனே வந்தடைந்து
அதிலுஞ்சில நாளிருந்து அங்கிருந்து அகஸ்தியமகா

ஸ்ரீராமன் அகஸ்தியமகா முனியை வந்து காண்பதும் அவர் குறித்த பஞ்சவடி தீரத்தில் வந்து வசிப்பதும்

முனிவர்தம்மைக் காண்பதற்கு மோகங்கொண்டு
வரும்வழியில்
கனமுடைய அவர்பிராதா கண்டவரின் ஆசிரமத்தில்

95. அங்கிருக்க வேண்டிக்கொண்டார் அவ்விமா
யிருந்ததன்மேல்
சென்றார்கள் மறுகாலை சீருடைய அகஸ்தியமுனி

ஆசிரமத்தை நாடிவரும் அப்பொழுது அனுஜனிடம்
நேசத்தோடு ராமன்சொல்வான் நினைவுடனே
கேளாய்தம்பி

இல்வலன்வா தாபியென்று இருவரிந்த ஐகந்தனிலே
நல்வினைசெய் வோர்சுள்போல நடித்துக்கொண்டு
வேதியரை

புசிப்புக்காக அழைத்தவர்க்குப் போசனமாய்
வாதாபியைப்
பசிக்குத்தந்து புசிக்கச்செய்து பிராணனுடன்
வெளியிலவன்

வரும்படியாய்ச் செய்தந்த வேதியரை வதைபுரிந்து
அருந்திதிர்ப்தி யடைந்துவந்து அகஸ்தியராம்
மகரிஷியை

100. அழைத்தவர்க்குப் புசிப்புத்தர அவருமவ்வா
றாய்ப்புசித்து
இழந்தவுயிர் பொருந்தாமலே இருக்கும்படி
ஏப்பம்விட்டு

வாதாபியை வயிறைவிட்டு வாராமல்
ஜீர்ணஞ்செய்தால்
வாதாபியென் றில்வலன் வாயிற்சொல்லி பலதடவை

அழைத்துமவன் வராததினால் ஆத்திரங்கொண்டா
னப்பொழுது
கொழுப்புள்ள அவனைமுனி கோபத்தோடு
பார்த்திடவே

எரிந்துபோனான் இல்வலனும் இவர்சக்தி மிகவுமுண்டு
அருமையாக காணுதுபார் அவரெல்லை
நனில்மிருகங்கள்

வயிரக்குணத் தனைவிட்டு மனங்கலந்து நேசத்தோடு
பயமின்றி யடுப்பதுபோல் பாரிலெங்கும்
காணவுண்டோ?

105. மிருகங்கள்குணம் மாறுதற்கு மேன்மையுள்ள
முனிவரிட
அருந்தவமே காரணமாம் அவருடைய ஆசிரமம்பார்

அவரைநீ முந்திக்கொண்டு அவரிடத்து என்வரவை
விவரப்படி சொல்வாயென்றான் வினயமுள்ள
தம்பிசென்று

முனிவர்தம்மை வணங்கிச்சென்றான் மோகமுடன்
சிஷியந்தன்னை
அனுப்பியவர் வரவழைத்து அர்க்கியாதியா லுபசரித்து

ஆதரித்து அருமையான அஸ்திராதிகள் மிகவுந்தந்தார்
நாதனெல்லாம் வாங்கிக்கொண்டு நானிருக்க
நல்லவொரு

இருப்பிடத்தைச் சொல்லுமென்றான் இசைந்தநல்ல
கோதாவரிக்
கரைதனிலே எழித்துமற்ற காலமதைக் கழித்திடலாம்

110. அந்தநதிக் கரைதனிலே ஆலவிருட்சம் ஐந்துண்டு
அந்தப்பஞ்ச வடிதீரம் அனுகூலம் வசிப்பதற்கு

என்றுரைக்க ராமன்கேட்டு எழுந்தவரை
வணங்கிநிற்கச்
சென்றங்கு வசிப்பாயென்று செப்பிமுனி
யனுக்கிரகித்தார்

அங்கிருந்து வரும்வழியில் ஆலவிருட்ச மொன்றின்கீழ்த்
தங்கியொரு கழுகுதுதான் தனியாக பிர்கத்கடமாய்

112. பிர்கத்கடமாய் - இறகை விரித்துக்கொண்டு

இருக்கக்கண்டு இதுவுமொரு இராக்ஷஸனோ
வென்றுராமன்
கருத்துதனி லெண்ணியந்தக் கழுகைப்பார்த்துச்
ஸ்ரீராமன்

கழுகைப்போ லுருவங்கொண்டு கானலிலே
ஏகாங்கியாய்
வழிதனிலே யிருக்குமுந்தன் வரலாறைச்
சொல்வாயென்று

115. நயமாகக் கேட்டதற்கு நாடியந்தக் கழுகறிந்து
தயவுடனே ராமாவுந்தன் தந்தைக்குநான் நேசனேயாம்

என்னைச்சொல்வார் ஜடாயுவென்று என்தமயன்
சம்பாதி
உன்னைக்கண்டு மனமகிழ்ந்தேன் உரைப்பேனெந்தன்
வாக்கைக்கேட்பாய்

உனதுதந்தை யெந்தன்மீது வுள்ளவொரு அன்புதனை
என்னவென்று சொல்வேனப்பா என்பிரான்
னேசரவர்

ஜகத்திலவர் சிறந்தவரே சித்தசுத்தி யுள்ளவரே
மகிமைமிகு வுள்ளவரே மரியாதை யறிந்தவரே

சகுணமூர்த்தி தனைவணங்கிச் சகலபாக்யந்
தனையடைந்தார்
சுகமடைந்தார் மிகவுமவர் சொர்க்கபோகந்
தனைமறியே

120. மக்களில்லாக் குறையதினால் மகத்தான
குறையடைந்தார்
தக்கமக்கள் நால்வர்களை தரணியிலே அவரடைந்தார்

நீயவர்க்கு மகனாக நேர்ந்தவொரு பாக்கியத்தை
நேயமுடன் கேட்டுநானும் நெஞ்சில்மிக
மகிழ்ந்தேனப்பா

அவர்கதியை யடைந்ததையும் அதற்குள்ள காரணமும்
விவரப்பட அறிந்தேனப்பா விதிவசமென் றேயுரைத்து

உலகசிர்ஷ்டி முதலாக உள்ளமற்ற வுண்மைகளும்
குலமுறையும் அருணனிட குமரென்றா னென்பதையும்

விரித்துரைத்து அன்புடனே வேணபடி யுபசரித்து
வருவீரெந்தன் கூடவேதான் வடவிருட்சம் ஐந்திருக்கும்

125. இடமேயாம் இருப்பதற்கு இசைந்ததாகும்
போவோமந்த
இடமதிலே யிருக்கும்வரை என்னாலே யானமட்டும்

உதவிசெய்வே னுண்மையாக உன்பத்னி
தனையுங்காப்பேன்
எதுவுஞ்செய்வே னிளைப்படையேன் என்றுரைத்த அத
னுடனே

பஞ்சவடி தீரம்வந்து பரிசுத்த இடங்குறித்துக்
கொஞ்சுமொழிச் சீதையுடன் கூடியங்கு வசித்திடவே

ஆசிரமமொன் றுண்டுசெய்ய ஆஞ்ஞைசெய்தான்
ஸ்ரீராமன்
நேசமுடன் தம்பிமிக நேர்த்தியான ஆசிரமத்தைக்

கட்டிவைத்தான் அவ்விடத்தில் காலமதைக்
கழித்துக்கொண்டு
திட்டமாகக் கதித்திருந்தார் திர்ப்த்தியுடன் மூவருமாய்

ஒருநாள்காலை ஸ்நானஞ்செய்ய உதிக்குமுன்னே
எழுந்துமூவர்
வருகையிலே லட்சுமணன் வாய்திறந்து
சொல்லுகிறான்

பனிமிகவே படியுமிந்தப் பனிகாலந் தனிலுந்தானே
மனவுறுதி யுடனேநம்ம மார்க்கந்தனை யனுசரித்து

பரதனேதுஞ் சுகமின்றியே பக்திகொண்டு
நடப்பானவன்
தருமபுத்தி யவனைப்போலே தரணியிலே
யார்க்குமுண்டோ?

என்னைவிட அவனேயுமட் கெற்றதம்பி யாவனல்லா
என்னகுறை யவனுக்கங்கு ஏதும்வேண்டா
மென்றொழித்துத்

தரைதனிலே படுப்பானவன் தங்களையே
நினைப்பானவன்
உருகிமனம் நோவானவன் உலகவின்பம் தேடானவன்

தரித்திரத்தா லெனதுநடை தங்களைப்போ
லிருக்குதென்பார்
அருமைப்பிதா அவனைப்போல ஆகேநா னென்றுஞ்
சொல்வார்

பர்த்தாவும் புத்திரனும் பரமசாது வாயிருக்கத்
துற்புத்தி யுள்ளகைகை தோன்றிவந்தாள் நம்குலத்தில்

அவளையெண்ணி லெனதுமனம் ஆறாமல்
தவிக்குதம்மா
இவளும்பெண்ணா லேதுதித்தாள் என்றுரைத்தான்
லட்சுமணன்

தம்பிவாக்கை ராமன்கேட்டுத் தன்மனதில்
வருத்தங்கொண்டு
சம்பவித்த காரியத்தில் சலிப்படைய வேண்டாமடா

தாயைநிந்தை செய்வதெல்லாம் தப்பிதமா யாகுமடா
நீயுங்குறை கூறுவது நியாயமல்ல நொந்துபோனாள்

நினைத்தாலென்னை மகிழுமவள் நெஞ்சுறுதி
கொண்டென்னை
வனம்போகச் சொன்னதினால் வாக்கிற்குறை கூறினை
யோ?

எடுத்தஜன்மம் சபலமாக என்னைவன மனுப்பமனம்
உடையவளா யானாளன்றி உண்டோகுற்ற
மவள்மீதிலே

அவளைப்போல மற்றுமுள்ள அன்னையர்க
ளெனக்காவரோ?
குவலயத்தி லெனக்கெசஸு கொடுப்பவளே யாவளவள்

உலகமெல்லாம் பிழைப்பதற்கு உதித்தவனாம் கைகை
செய்கை
நலந்தரவே யாகுமென்று நாளாகத் தெரியுமடா

தயவின்றித் தம்பிமார்கள் தாயவளைச் செய்தவொரு
பயங்கரமாம் காரியத்தால் பரிதபித்து மிகவுரைத்தாள்

மக்களிலே எனைமட்டுமே மகனென்று நம்பிக்கொண்டு
துக்கங்கொண்டே யிருப்பானவள் தாரயாத்திரை
வந்ததற்காய்

போயவளைக் காணுமட்டும் புலம்பியவள்
அழுவாளன்றி
நேயங்கொண்டு மகனிடத்து நெருங்கமாட்டா
எிதுநிஜமே

நீயுரைத்த வார்த்தைகேட்டு நினைவெல்லாம்
பரதன்மீது
பாயுதடா மிகவுமிப்போ பரிதாபம் மீறுதடா

அவனைக்காண வேண்டுமென்று ஆவல்மிகத்
தூண்டுதடா
அவனையெண்ணி மிகவருந்த ஆனேனிப்போ
கஷ்டமடா

மனம்புழுங்கி வருந்துமவன் வையகத்தைக் சுட்டியாள
நினைவுநேராய் நிற்காதடா நினைத்தால்மனம்
வருந்துதடா

150. இலட்சுமணா வென்றுரைத்து இராமன்மிக
விசனப்பட்டுப்
பட்சமுள்ள தம்பியோடும் பத்னியோடும் நதியில்வந்து

நீராடும் வேளையிலே நினைத்துச்சீதை ராமன்மீது
தாராளமாய் நீரிறைத்துத் தத்தளிக்குச்
செய்துவிட்டாள்

காதுமூக்குக் கண்களிலே சுருதிஜல மிறைக்குமொரு
பாதைதனைப் பொறுக்காமல் பத்தினியை ஸ்ரீராமன்

மிகவும்வேண்டுஞ் சமயந்தனில் மீசையுள்ள
மணவாளரே
முகநட்பில் மோசம்போகேன் முழுதும்பார்ப்பேன்
பழுக்கவும்மை

சக்திதனைக் காட்டுமென்று சரஸலீலை
செய்ததன்மேல்
பக்திகொண்டு உபசரித்தாள் பர்த்தாவை
கூமித்திடவே

பத்னியவள் சக்திதனைப் பரந்தாமன் கண்டவனில்
அத்யந்தம் மகிழ்ந்துகொண்டு அதிசயித்தான்
அதன்பிறகு

ஸ்நானஞ்செய்து அநுஷ்டானாதி சகலநித்தியக்
கருமங்களும்
ஆனதன்மேல் ஆசிரமத்தை யடைந்தங்கு வசித்திருக்க

ஸ்ரீராமனை சூர்ப்பநகி வந்து கண்டு கவர்ந்திடக் கோருவதும், காது மூக்கறுபட்டு கரனிடம் போயவள் முறையிடுவதும் கர தூஷணாதிகளோடு ஸ்ரீராமன் யுத்தஞ் செய்து வெற்றியடைவதும்

அந்தவிடம் வந்துசேர்ந்தாள் அரக்கியான சூர்ப்பநகி
அந்தமுள்ள ஸ்ரீராமன் அழகைக்கண்டு அதிசயித்து

பெண்கள்மனம் கொள்ளைகொள்ளும் பேரழகை
யென்னசொல்வோம்
கண்மணியா மிவனைப்போலக் கண்டதில்லை
யெங்குந்தானே

இப்படியும் புருஷனுண்டோ இவனைக்கண்டு கூடாமல்
எப்படித்தா னிருக்கக்கூடும் என்றுமிக மனங்கலங்கி

விரகதாபந் தனில்மூழ்கி மிகவுமவள் மோகங்கொண்டு
ஒருநொடியுஞ் சகியோமென்று உள்ளமதில் நிச்சயித்து

வந்துராமன் முன்னேநின்று வாஞ்சையுடன்
சொல்லுகிறாள்
இந்தவிடந் தனிலேவந்து இருக்குமுங்கள்
வரலாறென்ன?

சொல்லாயென்று கேட்டவளாம் சூர்ப்பணகி
தலைப்பார்த்து
வல்லவனாம் ஸ்ரீராமன் வரலாறை யுரைத்தன்மேல்

அநேசுமாசு விளங்குமவள் ஆரென்று அறிந்திடவே
விகாரமுள்ள அவளைப்பார்த்து விவரஞ்சொல்வா
யென்றுகேட்டான்

மாயஞ்செய்யும் சூர்ப்பணகி மன்மதன்போல்
விளங்கும் ராமன்
காயமதைக் கண்டுகுளிரக் கண்டுமிகக் களிப்புடனே

165. சூர்ப்பணகி என்பாரென்னைச் சூரனான
ராவணனாம்
போர்மிகுத்த இலங்கேசன் பிரியமுள்ள என்தமயன்

அவனையன்றிப் பிரபலமுள்ள அண்ணன்மார்க
ளெனக்குண்டு
அவர்களிலே விபீஷணனாம் அவனொருவன்
தருமசீலன்

உன்னைக்கண்டேன் மனமகிழ்ந்தேன் உன்மீது
மோகங்கொண்டேன்
என்னுடனே கலந்திருந்து இன்பந்தனை யனுபவிப்பாய்

திவ்வியரூபங் கொள்ளுவேனோன் திர்ப்திமிகத்
தருவேனான்
எவருமெனக் கிணையில்லை எத்தனையோ
கனப்படுவாய்

உன்னழகுக் கிசைந்தவளாட உள்ளவளே நானாவேன்
என்னசொல்வேன் இடைகுறைந்த இழிவுள்ள சீதைமீது

இச்சையாமோ இவளுனக்கு ஏற்றவளென்
றெண்ணவேண்டாம்
பட்சமுடன் பத்தினியாய்ப் பக்கமதில்
சேர்க்கவேண்டாம்

நானும்நீயும் கூடியிங்கே நன்றாக வாழ்ந்திடுவோம்
ஏனுனக்குச் சீதையின்மேல் இச்சைவேண்டாம்
விட்டுவிடு

இவளுனக்கு இன்பந்தர ஈஷத்து மாகமாட்டாள்
அவளைத்தம்பி யுடனேயிப்போ ஆகாரமாய்க்
கொள்வேனென்றாள்

அதைக்கேட்டுப் பரிகாசமாய் அவளைப்பார்த்து
ஸ்ரீராமன்
இதம்போலச் சொல்லிடுவான் என்வாக்கைக்
கேட்டிடுவாய்

எனக்குச்சீதை மனைவியாக இருக்கும்போது அவ
ளுடனே
உனையும்நான் அடைவதிலே உபத்திரவங்கள்
மிகவிளையும்

எனதுதம்பி பார்யையின்றி இருப்பதினா லுனக்கவனே
மனமொப்பும் புருஷனாவன் மகிழ்ந்தவனை
யடைவாயென்றான்

அந்தப்படி தம்பியிடம் அவள்சென்று விரும்புகையில்
எந்தனைநீ யடைவாயாயின் என்னைப்போல
நீயுந்தானே

அடிமைத்தொழில் செய்யவாகி அலைந்திடுவாய்
மனம்வருந்த
இடிபடுவா யெழுபெரு முதும் இழிவடைவாய்ச்
சுகமின்றியே

அண்ணனைநீ யடைவதுவே அழகாகும் சுகமுந்தரும்
எண்ணியுன்னை யடைந்தாலண்ணன்
இருக்கவுண்டோ சீதையப்பால்

ஆசையினா லென்னைவிட்டு அண்ணனைப்போ
யடுப்பாயென்று
போகச்சொன்னான் லட்சுமணன் பொறிபறக்கச்
சூர்ப்பணகி

(சுவடியில் இல்லை)

கோபங்கொண்டு ராமனையே கோரிவந்து
ஏனெனக்குத்
தாபம்வரச் செய்கிறாய்நீ தகுதியற்ற சீதைதனை

விழுங்கிவேன்பா ரென்றுசொல்லி வெகுதுடுக்காய்
ஓடிவந்தாள்
அழுதாளப்போ சீதையம்மா அரக்கிதனைத்
தடுத்துராமன்

தம்பிதனைப் பார்த்துச்சொல்வான் தலைகொழுத்த
அரக்கிதனை
நம்பியுந்தா னனுப்பலாமோ நாணங்கெட்ட
யிவளையிப்போ

மானபங்கஞ் செய்வாயென்றான் மனந்துணிந்து
தம்பிவந்து
ஏனிந்தக் குற்றஞ்செய்ய எண்ணினாயென் றவளுடைய

காதுமூக்கு களையறுத்தான் சுறிக்கொண்டு
அவளோடிச்
சேதந்தன்னைச் செய்தாரென்று ஜெனஸ்தானந்
தனிலிருக்கும்

அண்ணன்காரன் பாந்தனில் அலறிக்கொண்டு
போய்விழுந்து
கண்ணில்தாரை பெருகச்சொன்னாள் காதகியாம்
சூர்ப்பணகி

கரனவளைப் பார்த்துங்கேட்டும் கண்சிவப்பக்
கோபங்கொண்டு
அருமைத்தங்கை தனையிந்த அலங்கோலஞ்
செய்தவர்கள்

பாம்புப்புத்தில் கையைவைப்போர் படுமவஸ்தைப்
படுவாரன்றோ?
தேம்பியழத் தங்கைதனைத் தீங்குசெய்த மனிதர்களின்

ருதிரந்தனைச் சூர்ப்பணகி ரோஷந்தீர உண்ணத்தர
பதினாலா யிரமரக்கர் பஞ்சவடி தீரம்போக

190. கட்டளையைச் செய்தானந்தக் கரனுடைய
ஆஞ்ஞைப்படி
அட்டியின்றி அனைவர்களும் அங்கிருந்து
அரக்கியுடன்

பஞ்சவடி தீரம்வந்து பார்க்கையிலே ஸ்ரீராமன்
கொஞ்சமுமே அச்சமின்றிக் குதூகல மாகவவன்

இருக்கக்கண்டா ரப்பொழுது இளையவனைச்
சீதைதனைக்
கருத்துடனே காக்கவைத்துக் கையிலம்பு
கொண்டுராமன்

அரக்கர்முன்னே வந்துநின்று அவரைப்பார்த்துச்
சொல்லுகிறான்
அரைநொடியி லுங்களிட ஆயிசெல்லாம்
கொள்ளைகொள்வேன்

எத்தனையோ பிராணிகளை இம்மைசெய்த பாவிகளே
இத்தரையி லுங்களுக்கு இனியுண்டோ வாழ்வணுவும்

195. அரக்கர்பூண்டை யொழிப்பதற்கு அரண்யவாசஞ்
செய்யவந்தேன்
ஒருநொடியி லுங்களைநான் ஒழித்திடுவே
னென்றுரைத்தான்

இந்தவாக்கைக் கேட்டரக்கர் இவனுடைய
தைரியமென்ன?
முந்திவந்து நின்றுபேசும் முசுக்குறியின் கோபமென்ன?

ஷேர்த்துவந்து நிற்கும்நம்ம இராட்சதரின்
படைகள்முன்னே
குதித்துவந்து நிற்கின்றானே கோரியுத்தஞ்
செய்வதற்குக்

கொல்லும்வேங்கைப் புலிகள்முன்னே குணங்கெட்டு
வந்துநின்று
வல்லாள சுண்டன்போல வாயில்மிகப் பேசுகிறான்

சூரனைப்போல் நிற்குமிவன் சுண்டுவிர லால்மடிவான்
போரிலிவன் என்னசெய்வான் புத்திகெட்ட
மனிதனென்று

200. நிச்சயித்து அவனைப்பார்த்து நீயுமெங்கள்
முன்னேவந்து
அச்சமின்றி நின்றுவிட்டாய் அதட்டியுமே பேசுகிறாய்

அம்புகையில் கொண்டுவந்தால் அமர்புரிய
எங்களோடு
சம்பவிக்குங் காரியத்தைச் சற்றும்நீ யறியலையே

சமுத்திரத்தை யெதிர்த்திடுமோ சாக்கடையின்
நீருலகில்
சமுசியமே வேண்டாமடா சடுதியிலே மடிவாயடா

உளியினாலே மலைபொளியும் உவமைதனை
யெண்ணிவந்தாய்
உரியைப்போல உன்னிடத்தில் உள்ளசக்தி
பார்ப்போமிப்போ

சுந்தரனாய்க் காணுமுந்தன் சூரத்தனங் காட்டுவாயே
சிந்திரத்தங் சுக்கும்படி செய்வோமுனைச்
சிட்சையிப்போ

205. எங்களையும் வெல்லுதற்கு எவருமுண்டோ மூவுலகில்
தங்கியெங்கள் முன்னேநிற்கத் தைரியமாய் வந்தவுந்தன்

வல்லமையைப் பார்த்திடவே வந்தோமடா
வென்றுரைத்து
வெல்லும்நல்ல சூலங்களை விட்டெறிந்தார் ராமர்மீது

சூலங்களைப் பாணங்களால் சுட்டெரித்து
வொழித்துவிட்டுக்
கோலங்கொண்டு நாராசக் கொடுங்கணைகள்
மிகவும்விட்டு

அரக்கர்கள்மார் பிளக்கச்செய்தான் அந்தவுடன்
ஆவிவிட்டு
அரக்கரெல்லா மடிந்தழிந்தார் அதைக்கண்டு
சூர்ப்பணகி

---

202. சமுசியம் - ஐயம்

பயந்துமிகச் சோகங்கொண்டு பறந்தோடிக்
கரனிடத்துத்
தயவுடனே அனுப்பித்தந்த சைன்யமெல்லாம்
ஒருநொடியில்

இராமன்விட்ட பாணங்களால் இரத்தங்கக்கி
மடிந்ததண்ணா
சாமளனாம் ராமனிட சக்தியைப்போல் கண்டதில்லை

அவன்முன்னே நின்றவனோ டமர்புரியத்
துணிபவர்கள்
குவலயத்தி லாருமிலை குரூரனவ னென்றுரைக்கச்

சொல்லியவள் முறையிடவும் சோகப்படும் அவளைமிக
நல்லவார்த்தை சொல்லிக்கரன் நானிருக்க
வருந்துவதேன்?

எனதுசக்தி கொஞ்சமாமோ? என்னைவெல்வோர்
தானுமுண்டோ?
உனக்குத்தீங்கு செய்தவரின் உயிரைவாங்க
எண்ணவேணும்

தடையுண்டோ தைரியங்கொள்வாய் தாரைகண்ணில்
வேண்டாமம்மா
எடுப்பேன்படை இப்பொழுதே என்றுரைத்துத்
தூஷணனை

டார்த்துச்சொல்வான் தம்பியேநம் படைகளுட
னிப்பொழுதே
போர்புரியப் போவதற்குப் பொருந்தியெல்லாஞ்
சேகரிக்க

வேண்டுமென் றாஞ்ஞைசெய்தான் விரைவில்தம்பி
சேகரித்துத்
தூண்டிடவே யாவருடன் துணிந்துயுத்தஞ் செய்வதற்கு

வருகையிலே அபசகுனம் வகைவகையாய்க்
கண்டுமதைக்
கரனேதுங் கவனியாமல் காலமது நெருங்கியதால்

வந்துசேர்ந்தான் ராமனிடம் வானவர்கள்
முதலானோர்
அந்தயுத்தம் பார்ப்பதற்கு ஆவல்கொண்டு ஆகாயத்தில்

விமானங்களில் வந்துநின்றார் வெகுபேர்கள்
அப்பொழுது
அமாத்தியரைக் கரனழைத்து அணிவகுக்க
யாஞ்ஞையிட்டான்

220. அந்தப்படி யவர்கள்செய்தார் அப்பொழுது ஸ்ரீராமன்
சிந்தைமகிழ்ந் தன்புடனே செப்புகிறான் தம்பியுடன்

எதிரிகட்கு அபசகுனம் எத்தனையோ
காண்பதைப்பார்
அதிகமாக நம்முடைய அனுகூலக் குறிகளும்பார்

யுத்தஞ்செய்து வெல்லுதற்கு யோக்யதையோ
உனக்குமுண்டு
சிந்தைதனில் நானேயுத்தம் செய்யஆவ லிருப்பதினால்

பக்கமதில் உள்ளவொரு பருவதத்தின் தனிக்குகையில்
தக்கபடி சீதையுடன் தங்கியதில் ஜாக்கிரதையாய்

இருந்தவளைப் பாதுகாப்பாய் எதிர்த்தென்னை
நாடிவரும்
அரக்கருடன் போர்புரிந்து அவரைவென்று
வருவேனென்றான்

225. அந்தப்படி சீதையுடன் அனுஜனந்தக் குகைதனிலே
வந்திருந்தா னதன்பிறகு வகையுடனே ஸ்ரீராமன்

அர்க்கர்முன்னே வந்துநின்றான் அதைக்கண்டு
கொடியவனாம்
கரனென்பவன் ரதத்தில்வந்து கணக்கில்லாப்
பாணங்களை

விட்டானவன் கூடவந்து வெகுபேரும் ஆயுதங்கள்
விட்டெறிந்தார் ராமன்மீது வெகுகோபத்
தோரணையாய்

அத்தனையும் அறுத்துத்தள்ளி அரக்கரெல்லாங்
கொழுப்படங்கி
ரத்தங்சுக்கி விழும்படியாய் ராமன்வெகு
பாணம்விட்டான்

அவைகளினா லநேகர்மாண்டார் அப்பொழுது
தூஷணனாம்
அவன்மிகவே ஆத்திரமாய் அடுத்துராமன்
முன்னேவந்து

230. படைகளோடு சேர்ந்துயுத்தம் பண்ணுகையில்
ராமன்மீது
படும்படியாய் அம்பெய்தான் பாணம்ராமன்
மேல்விழவும்

கண்டுதப்போ ரத்தக்காயம் கருணையுள்ள தேவரதைக்
கண்டுமிகப் பரிதபித்தார் காதகராம் ராட்சஸர்மேல்

கூருள்ள பாணங்களைக் குறித்தெடுத்து ராமன்மிக
வாரிவிட்டா னவைகளினால் வஞ்சகனாம்
தூஷணன்றாள்

படைகளுடன் மடிந்தானம்மா பார்த்துக்கரன்
கோபங்கொண்டு
சடுதியாக ரதமேறி சாமிராமன் முன்னேவந்தான்

திரிசிரசெனும் அரக்கனவன் தீவிரமா யோடிவந்து
சித்தமாக எனச்சூந்தந்தால் சிறுமனிதன் ராமனைநான்

வதைபுரிந்து வருவேனெந்தன் வல்லமையைப்
பாரென்றான்
உதவியெல்லாந் தந்தவனை யுடனேயுத்தஞ் செய்வதற்கு

அனுப்பித்தந்தான் திரிசிரசு ஆவலோடு ராமனோடு
தனதுசக்தி முழுதுங்காட்டித் தந்திரமா யுத்தஞ்செய்து

வருகையிலே அவனுடைய வலுமையெல்லாம்
அடக்கிராமன்
துரிதமாக ரதத்துடனே துரோகியவன் சாரதியை

மடியச்செய்தான் அரக்கன்பார்த்து மனிதனிவன்
சக்திமிக
உடையவனென் றுள்ளமதில் உறுதிமிகக்
கொண்டானப்போ

240. அவனுடைய சிரசுமூன்றும் அறுந்துவிழப் பாணங்களை
எவருங்கண்டு பயந்திடவே எடுத்துவிட்டான் ஸ்ரீராமன்

பாணங்கள்போய் பனங்குலைபோல் பாவியந்தத்
திரிசிரசின்
காணுந்தலை மூன்றையுமே கண்டதுண்டஞ்
செய்திடவே

விழுந்தானவன் தரைதனிலே வெருஅரக்கர்
பயந்தோடினார்
குழப்பங்கொண்டு அரனவரைக் கூட்டிவரத்
தகுந்தவரை

அனுப்பித்தந்தாள் போயவர்கள் அழைத்துவந்தார்
ரதன்பிறகு
மனதில்மிகக் கோபங்கொண்டு மனிதன்முன்னே நம
துபடை

ஓடவுந்தானாயிற்றென்று உள்ளமிக நொந்துகொண்டு
தேடிராமன் முன்னேசுரன் தேரேறிப் படைகளுடன்

245. வந்துநின்றான் அவனுடனே வாக்குவாதங் கள்மிகவே
அந்தவேளை ராமன்செய்து அகோரமாக
யுத்தஞ்செய்தான்

இருபுறமும் நடந்தயுத்தம் இன்னவித மென்றுரைக்க
ஒருவராலு மாகாதென்று உள்ளபடி சொல்லுகிறேன்

அரக்கன்படை மடிந்துதம்மா அவன்மிகவே
யாக்கிரகமாய்க்
கருதிச்சில பாணங்களால் கையில்ராமன்
கொண்டவில்லைக்

கத்தரித்து யெறிந்ததோடு கலசங்களைப்
பிளந்தெறிந்தான்
உத்தமன்ஸ்ரீ ராமனப்போ உறுதியுள்ள
அகஸ்தியர்தந்த

வைஷ்ணவாஸ்திரங் கையிற்கொண்டு
வகைவகையாய்ப் பாணங்களை
விஷ்ணுவைப்போல் வேகமாக விட்டானவை
அரக்கனிட

250. ரதங்குதிரை சாரதியை ரத்தங்கக்க அறுத்துத்தள்ளி
உதவியேது மில்லாமலே ஒருவனாகக் கரனிருக்க

செய்ததம்மா ராமனையும் செல்லடைக்கண்போ
லரக்கன்பாணம்
மெய்யெங்கும் துளைத்துரத்தம் மிகவுங்காணச்
செய்ததம்மா

அத்தனையு முதறிராமன் ஆணவத்தை
மிகவுங்கொண்டு
சுத்தமாகத் தேகந்தனைச் சொஸ்தமாக்கிச்
கொண்டரக்கன்

கைவில்லை யொடித்தெறிந்து சுண்கலங்க
மிகவுஞ்செய்தான்
தெய்வச்செய லென்றெண்ணித் திரும்பவுமே
மனந்துணிந்து

இந்தக்கதைக் கிரையாகவே இப்பொழுதே
செய்வேனுனை
எந்தவித முயிர்பிழைப்பாய் என்றுரைத்து
உடனேயந்தக்

255. கதையைக்கையிற் கொண்டரக்கன் கரகரவென்
றேசுற்றி
அதிவிசையாய் ராமன்மீது அடித்தானது
பொரிபறக்கச்

சீறிக்கொண்டு வருகையிலே ஸ்ரீராமன் அதையடக்கத்
தேறியுள்ள பாணங்களைத் தெரிந்தெடுத்து
விடவுமவை

துண்டுதுண்டாய்ச் செய்ததந்தத் துரோகிவிட்ட
கதையதனைக்
கண்டவர்கள் கவலைகொண்டான் கர்த்தன்ராமன்
அவனைப் பார்த்து

என்னசெய்வாய் வாய்திறக்க இனியுமுண்டோ
வழியுனக்கு
உன்னியினி யொருநொடியில் உயிர்வாங்க
இருக்கிறேனான்

உத்தமரை வருத்தியநீ உலகுதனில் இருக்கப்போகா
எத்தனையோ தீங்குசெய்தாய் எல்லோரும் வருந்திடவே

260. முனிவர்களைக் கொடுமைசெய்தாய் முறையாயவர்
கதியடைந்து
அனைவர்களு முனதுகதி அறிவதற்கே ஆகாயத்தில்

வந்துவிமா னந்தனிலே வானவரோ டிருப்பதைப்பார்
எந்தன்கையி லடங்கியநீ இனிப்பிழைக்க
வகையுமுண்டோ?

தேசுமினி யுனக்குச்சொந்தம் செப்புவதற் கில்லையடா
ஆசையினா லுனைவதைப்பேன் அட்டியிலை
யென்றுரைத்தான்

இந்தவிதம் உரைத்ததெல்லாம் இராட்சஸனாம்
சுரன்கேட்டுச்
சிந்தையிலே அச்சங்கொண்டு செய்வதினி
யென்னவென்று

வெகுவிதமா யாலோசித்து வேதனையை மிகவடைந்து
மகிமையெல்லாம் போயிற்றென்று மனதில்மிகக்
குறையடைந்து

265. சண்டான்ரணக் காட்சியையும் கருத்தில்மிக
ரோஷங்கொண்டான்
மண்டிபோட்டான் எழுந்துநின்றான் மாதவன்மேல்
விழுவதற்கு

ஓடிவந்தான் அவனைவெல்ல ஓரடிபின் வாங்கியப்பால்
தேடியிந்த்ரன் தந்தநல்ல திறமையுள்ள அஸ்திரத்தை

இராமனெய்தான் அதினாலே இரணகளத்தில்
சுரன்மடிந்து
சாமளன்ஸ்ரீ ராமன்முன்னே சரீரந்தனை
விட்டொழிந்தான்

தேவர்புஷ்ப மாரிபெய்தார் திர்ப்தியவர்
மிகவடைந்தார்
பாவிகளாம் அரக்கரெல்லாம் படுகளத்தில்
மடியக்கண்டு

தவமுனிவர் மனமகிழ்ந்தார் தயாபரனை
மிகஸ்துதித்தார்
அவர்களிட அனுக்கிரகத்தை அடிபணிந்து
ராமன்பெற்றான்

270. வானவர்கள் மகிழ்ந்தேகினார் வனத்திலுள்ளோர்
துயரொழிந்தார்
தீனர்களை யாதரிக்கும் திருவாளனைச் சீதையுடன்

வந்துநின்று பணிந்தான்தம்பி வசிக்குமிடம்
போனாரப்பால்
சிந்தைமிக மகிழ்ந்துசீதை ஸ்ரீராமனை ஆவலோடு

தழுவிக்கட்டி முத்தமிட்டாள் தயாபரனாம் ரகுராமன்
அளவில்லாத ஆனந்தத்தை அடைந்தானம்மா
அப்பொழுது

மனமகிழ்ந்த காரணத்தால் மாதவன்ஸ்ரீ ராமனுக்கு
சுனைநீர்போல் ரக்தம்பொங்கிச் சுகமடைந்தான்
மிகவுமம்மா

அரணுமம்பா ளிருவர்களும் ஆசையோடு பேசியுள்ள
மர்மமந்து பயன்படவே மாதவனை ஜானகியாள்

275. ஆலிங்கனஞ் செய்தாளென்று அறிந்துசொல்வோர்
தானுமுண்டு
நீலவர்ணன் உமையவள்போல் நினைப்பவர்கள்
தானுமுண்டு

சுரனுடனே வந்துயுத்தக் களந்தனிலே சேராமல்
இருந்ததெல்லாம் பார்த்தறிந்த இராட்சஸனாம்
அகம்பனென்றான்

ஸ்ரீராமன் கையால் கர தூஷணாதிகள் மடிந்த சேதி முதலியவைகளை அகம்பனன் இராவணனிடத்தில் வந்து சொல்வதும், அவன் கேட்டுச் சீதையைத் திருட மாரீச னுதவி கோருவதும், அவனுரைத்த மதியைக் கேட்டுத் திரும்புவதும்

எடுத்தானோட்டம் இலங்கைநோக்கி இலங்கேசனை
வந்துகண்டு
கொடுத்தான்சேதி கேட்டதனைக்
கோபங்கொண்டான் அரக்கர்மன்னன்

அவனையந்த அகம்பனனும் அடைக்கலமா
யடைந்துரைப்பான்
விவரப்பட ராமன்சக்தி வெருவென்னுங் கருத்துதனை

குவலயத்தில் ராமனைப்போல் குணமுள்ள
புருஷனில்லை
எவருமவன் முன்னேவந்து எதிர்ப்பவர்கள்
தானுமில்லை

280. எல்லையில்லாப் பலமுடையோன் எமனுக்குமே
நமனவனே
இல்லையையா அவனைவெல்வோர் என்றுரைக்கக்
கேட்டவுடன்

இலங்கேசன் முகத்தில்மிக எரிச்சல்கொண்டு
சொல்லுகிறான்
புலம்புகிறாய் என்முன்னே புத்திகெட்ட அகம்பனனே

என்னெதிரில் எமனுமக்கினி எவரும்வந்து
உயிர்பிழையார்
இன்னமுமென் சக்திதனை ஏனறிய வில்லையென்றான்

பெருமைமிகப் பேசுமிந்தப் பேதையேதும் ராமன்சக்தி
தெரியாமலலப்புகிறான்தெரியச்சொல்வோ மென்றந்த

அகம்பனன் சொல்லுகிறான் ஐயாவென் ராசரேநீர்
வகையறிந்து வலுவையெண்ணில் வாழ்ந்திடுவீர்
தாழ்வடைவீர்

285. புருஷனென்றால் ராமனைப்போல் புருஷனுண்டோ
வுலகிலெங்கும்
அருமையான அங்கங்களும் அழகுமென்ன
சொல்வேனையா

பார்க்கப்பதி னாயிரங்கண் படைத்தாலும்
போதாதையா
ஆர்க்குமவன் மேனிகண்டால் ஆனந்தஞ் சனிக்குமையா

வல்லமையோ சொல்லவுண்டோ? வறுத்தெடுப்பான்
எதிர்த்தவரை
வெல்லவரும் எவரையுமே விளையாட்டா
யவனொழிப்பான்

கையிலம்பு கொண்டுநின்றால் காலனுந்தா
னெதிர்க்கவுண்டோ?
செய்யுமவன் புந்தமதில் ஜெயமவனே யடையுவனே

ஐந்துதலை நாகம்போல அவன்பாணஞ் சீறிவந்து
கொய்திடுமே உயிரொழியக் கொடுமைமிகச்
செய்திடுமே

போரிலவன் செய்கைகண்டு பொறுக்காம லோடுகிற
ஆருக்குமே அவனெதிரில் அம்புகொண்டு
நிற்பவன்போல்

காணுமையா மனமிகவே கலங்குமையா
அவனைப்போல
ஆணவந்தா னாருக்குண்டு அதுமிகவும் அதிசயமே

அவனுக்கொரு தம்பியுண்டு அவன்பெயரோ
லட்சுமணன்
அவனுடைய சக்தியையும் அழகையுநா
னென்னசொல்வேன்

நெருப்புங்காற்றுங் கூடியுள்ள நேர்மைபோல
விளங்குமந்த
இருவர்களின் மகிமைதனை எவர்களுமே
அறியவுண்டோ?

போர்புரிந்து அவரைவெல்லப் போகாதையா
ஒருக்காலும்
போர்மிகுந்த அரசரேயென் பேச்சைக்கேட்டால்
வெல்வீரையா

295. ராமனுக்குச் சீதையென்று ரதிதேவி போலொருவள்
கோமளமா யுள்ளபத்னி கூடவுண்டு அவனுடனே

அந்தப்பெண்மேல் அவன்மிகவே ஆசைகொண்டு
பிரியாமல்
சுந்தரியா மவளுடனே சுகமடைந்து வருமவனை

நிமிஷமந்தப் பெண்பிரிந்தால் நிலத்திலவ
னுயிர்தரியான்
உமதுபுத்தி யுக்தியினால் உபாயமாகப்
பெண்ணவளைக்
கொண்டுவந்து விடுவீராயின் குணமடைவீ
ரென்றுரைத்து
அண்டியவன் பதம்பணிந்தாள் அகம்பனனாம்
அரக்கனம்மா

தேடிநல்ல யோசனையைத் திறமாகச்
சொன்னானென்று
நாடியதைச் சற்றுநேரம் நயந்துதன்னி லிலங்கேசன்

300. யோசிக்கையில் சனத்குமார யோகியொரு காலந்தனில்
ஆசையுடன் பிரம்மலோகம் அடையுமொரு வழிதமக்கு

விஷ்ணுவந்து ராமனாக விளையாடும் போதவர்க்கு
உஷ்ணம்வரச் செய்வதுவே உபாயமென்று
சொன்னதொரு

அந்தவாக்யம் நினைவில்வர அகமகிழ்ந்தா
னிலங்கேசன்
சந்தியிது சுதியடைய சாமியைப்போய்ப்
பகைப்போமென்று

ரதத்திலேறி மாரீசனாம் ராட்சதனை யுதவிகொள்ள
அதிவேகமா யவனிருக்கும் ஆசிரமமாம் கடற்கரையில்

வந்துசேர்ந்தான் அவனைமிக மனமுவந்து மாரீசன்
தந்துணவு உபசரித்துத் தயவுசெய்து வந்ததொரு

305. காரியத்தைச் சொல்லுமென்றான் கருணையோடு
அவனைப்பார்த்துக்
கோரிராமன் பத்தினியைக் கொண்டுவர உனதுதவி

வேண்டியேநான் வந்தேனென்று வெகுகளிப்பாய்ச்
சொல்லக்கேட்டு
மாண்டுபோக வழிதேடும் மதியீன னிவனென்றெண்ணி

மாரீசன் மிகப்பயந்து மனமுவந்து வாஸ்தவத்தை
நேராகச் சொல்லுகிறான் நினைக்கவேண்டாம்
ராமன்பகை

மோசம்வரும் கண்டுகொள்வீர் முறையில்லாக்
குறையடைவீர்
ஆசைராமன் பத்தினிமேல் ஆசையதால்
ஆபத்துண்டாம்

மரணமுமக் குண்டுசெய்யும் மர்மமிதைச்
சொன்னவரார்?
தருமமல்ல கெட்டுப்போவீர் தலைசீழாய்ப் பலித்திடுமே

குலங்களெல்லாம் நாசஞ்செய்யும் கொள்ளிதலைக்
கொள்வாருண்டோ?
நிலத்தின்வாழ்வு ஒழியுமையா நினைக்குங்காரிய
மாகாதையா

இராட்சதற்குக் காலனாக இராமனைநீ
ரென்னுமையா
ஆட்சேபனை செய்யவேண்டாம் அவன்பகையைக்
கொள்ளவேண்டாம்

ஒருநொடியில் உலகமெல்லாம் ஒன்றுமின்றிச்
செய்வானவன்
இருந்தபடி மறுபடியும் இருக்கவுமே செய்வானவன்

பூமிக்கிடர் நேரிடாமல் பொறுப்புடனே
தாங்கிக்காப்பான்
இராமன்பகை யேற்குமொரு இராசத்வேஷ
மாகாதையா

புதையிலுள்ள சிம்மந்தனைப் போயெழுப்பி
ரோஷந்தந்து
அதமாகும் காரியம்போல் ஆகுமையா ராமன்பகை

315. சிரழியும் பேரழியும் செல்வமெல்லாந் தானழியும்
சோரும்நல்ல சுதியொழியும் குலமொழியும் நலமழியும்

இருக்குஞ்செல்வம் நிலைத்திருந்தால் இதொன்றே போ
துமையா
எரிக்கும்கனி தனில்விழுந்து ஏன்மடிய வேண்டுமையா

ஆசையினால் லங்கைசேர்ந்துஅகமகிழ்வீர்
சுகமடைவீர்
போகமிப்போ திருப்பதுவே போதுமையா
யென்றுரைத்தான்

அரக்கர்மன்னன் கேட்டிதனை அகந்தைதனை
விட்டொழித்துத்
திரும்பிவிட்டான் லங்கைநகர் சேர்ந்துசுக
மாயிருந்தான்

சூர்ப்பணகி வந்து இராவணனிடத்து முறையிட்டுப் போதிப்பதும் அதைக் கேட்டிலங்கேசன் மறுபடி மாரீசனிடம் போய் உதவி கோருவதும் அவன் வாக்கை யடக்கி உதவி பெறுவதும்

அரக்கரெல்லாம் இராமன்கையால் சுதமான
வேளையிலே
அருகிலொரு புறத்தினின்று அறிந்தவளாம் சூர்ப்பணகி

மடிந்தவர்க்காய்ப் பரிதபித்து மனம்நொந்தாள்
மிகவுமவள்
துடிதுடித்தாள் துணையுமின்றி துணிந்ததன்மேல்
துக்கம்விட்டு

பழிக்குப்பழி செய்வதற்குப் பலவிதமா யாலோசித்து
வழிகொண்டாள் லங்கைநகர் வந்துசேர்ந்தா
ளந்தப்பாவி

அதன்பிறகு சபைதனிலே அரக்கர்மன்ன
னிருக்கையிலே
சதிசுரி சூர்ப்பணகி சங்கடத்தோ டோடிவந்து

வந்தகுறை முறையிடுவாள் வாய்விட்டுக்
கதறிக்கொண்டு
எந்தன்கதி மனிதராலே இந்தவிதமா யாயிற்றண்ணா

ஜனஸ்தானம் பாழாச்சு சிறுமனிதர் ஜயிக்கலாச்சு
கனமுனக்கு அழியலாச்சு கேலியென்னைச்
செய்யலாச்சு

தண்டகாரன் யந்தனிலே தவமுனிவர் அகங்கரித்துக்
கொண்டவர்கள ளிஷ்டப்படி குறைவின்றிக் கடமை
களை

நடந்த நற்குத் துணிந்துவிட்டார் நாடெங்கும்
உன்கீர்த்தி
குடத்திலிட்ட விளக்குப்போலக் குணமின்றிப்
போச்சுதண்ணா

தமயனாக உனைப்படைத்த தலைவிதியை
என்னசொல்வேன்
நிமிஷமிந்தக் கொடுமைதனை நீசகிக்க லாமோபாராய்

சக்கரவர்த்தி யாயிருந்து தரணிதனை யாண்டுவந்த
தக்கவொரு தசரதன்றன் தனயர்களா மிருவர்களே

இராமலட்சு மணர்களென்று இரவிகுலத்தி
லுதித்துவந்த
கோமளமா யுள்ளவர்கள் குணங்களைநா
னென்னசொல்வேன்

330. அவர்களைப்போ லைக்கியமுள்ளோர் அலிலந்தனி
லாருமில்லை
தவமுனிபோல் வேஷங்கொண்டு தங்கியவர்
வனந்தனிலே

இருக்கின்றார்கள் ராமனுக்கு இசைந்தற்புதச்
சுந்தரியாய்த்
தருமபத்னி தானுமுண்டு தரணியிலே
அவளுக்கொப்பாய்ப்

பெண்களையே கண்ட்தில்லை பிரபஞ்சத்தனில்
உன்மையாகக்
கண்மணியாய்க் கொண்டவளைக் கால்தொழுது
வணங்கலாமே

சீதையென்றழைக்குமந்தச் சீருள்ள பெண்ணவளை
ஆதரிக்கும் ராமனிட அழகுக்கவ ளழகேயொப்பும்

அவள்பாதங் கண்டவுடன் அருமையான பரமபதம்
எவருக்குமே கிடைக்குமென்று எண்ணும்படி
இருக்கின்றாளே

335. அவளைப்பத்னி யாகவேதான் அடைந்தவளின்
ஆலிங்கனம்
எவர்க்குண்டோ அவர்சுகம்போல் இந்திரனுக்கு
மில்லையண்ணா

சுகங்களெல்லாம் திரண்டுதித்த சுந்தரியெ
அவளாவாள்
தகதகவென் றொளிவீசும் தன்மையுந்தா
னென்னசொல்வனே

வீசுமண்ணா வாசனைகள் விதம்விதமாய் அவளுடலில்
ஆசைகொள்வாய் அவளைக்கண்டால்
அரைநொடியும் நீவிலகாய

மோகினிபோ லுள்ளசீதை முகங்கண்டு மோகமுடன்
தாகங்கொள்வா யென்றுனக்குத் தந்திடநா
னெடுக்கப்போனேன்

இராமன்சொல்லைக் கேட்டனுஜன் இராட்சஸியென்
றெண்ணாமல்
சீமையெங்கும் அறிந்திடவே சின்னமென்னைப்
படுத்திவிட்டான்

340. கரன்முதலோ ரிடந்தனிலே கதறிச்சொன்னே
னவர்களெல்லாம்
துரிதமாக ஓடிவந்து தோரணையா யுத்தஞ்செய்தார்

எத்தனையோ பாடுபட்டார் சுத்தும் பலனின்றி
அத்தனைபேர் களுமடிந்தார் அந்தராமன்
ஒருவன்கையால்

அபாரமிதப் பாணங்களாய் அவன்பிடித்த அம்பினின்று
குபீரென்று கிளம்புவதே குறித்தறியக் காணுதண்ணா

எடுத்துவிடும் கரவேகம் இன்னவித மென்றறிய
அடுத்திருந்து பார்த்தாலுமே ஆகாதண்ணா எவரா
லுமே

பாணங்கண்ணில் காணுதண்ணா
ப்ராணன்கொள்ளை போகுதண்ணா
ஆனவமோ ராமனிடம் அமைந்திருக்கும் அதிசயத்தை

345. என்னசொல்வேன் மனிதனைப்போல் இருக்குமந்த
மன்மதனை
உன்னுடைய வல்லமையை உகித்தெந்த விதத்திலுமே

ஜெயித்தந்தச் சீதையைநீ சீக்கிரமாய்க் கொண்டுவர
முயற்சிசெய்ய வேண்டியிப்போ முன்வைப்பாய் வல
துகாலை

இருக்கின்ற பாக்கியத்தின் இன்பமதில்
மோகங்கொண்டு
தருமமெல்லாம் விட்டொழித்துத் தன்பெருமை
யெண்ணாமலே

இருக்கிறாயே உனக்கினிமேல் இராஜாங்கம்
தக்காதண்ணா
கருதிப்பார்த்துக் காரியஞ்செய்தால் கனப்படுவா
யென்று ரைத்தான்

இலங்கேசன் கேட்டுமிக எண்ணங்கொண்
டாலோசித்து
உலகில்ராமன் சக்திமிக உயர்ந்ததென்றே
தீர்மானித்தான்

பத்துத்தலை படைத்துவந்து பார்தனிலே
பிரதாபம்பெற்று
யுத்தமதில் பின்னடையா யோக்யதைவீ
ணாயிற்றிப்போ

தந்திரமாய்ச் சீதைதனைத் தஸ்தரித்து வருவதுவே
அந்தரங்க வுறுதியென்று அப்பொழுது நிச்சயித்தான்

எழுந்துரதத மேறியவன் எண்ணிக்கடல் தனைக்கடந்து
பழையபடி மாரீசன் பர்ன்னசாலை வந்துசேர்ந்தான்

தவமுனிபோல் வேஷங்கொண்டு தனிஸ்தலத்தி
லிருந்துகொண்டு
சிவனேசுதி யென்றிருக்கும் சேஷ்டைவிட்ட மாரீசன்

கண்டுநம்ம காலைச்சுற்றிக் சுடிக்கும்பாம்பு போலிவன்
அண்டிநம்மை வந்துவிட்டான் ஆபத்து
விளையுமென்று

மனதில்மிகக் கவலைகொண்டு மரியாதையா
யுபசரித்து
எனைநாடி மறுபடியும் இங்குவந்த காரியமென்ன

சொல்லுமையா வென்றுகேட்டான் சூரனான
இராவணனை
வல்லபனாம் இலங்கேசன் வாய்திறந்து
சொல்லுகிறான்

எனதுதங்கை சூர்ப்பணகி என்னிடத்து வந்துமிக
மனம்வருந்திக் சுதறிச்சொன்னாள் மனிதர்தன்னை
மானபங்கம்

---

351. தஸ்கரித்து - அபகரித்து

செய்ததையும் அருமையாகச் சொன்ஸ்தானந் தனிலிருந்த
கைபலத்த தம்[illegible]கள் கரன்முதலா
யுள்ளொரெல்லாம்

மடிந்ததையுங் கேட்கையிலே மனமிகவே துள்ளுதடா
கொடுமைசெய்த மனிதரைநான் கொல்லாமல்
விட்டுவிட்டால்

360. இனியென்னை யார்மதிப்பார் எங்கும்புகழ்
பெற்றுமிகக்
கெனமடைந்த பெருமையெல்லாம் கேவலமா
யாருமன்றோ?

மனிதர்செய்த காரியத்தை மனதிலெண்ணிப்
பார்க்கையிலே
இனியவரை வெல்லாமல் இருந்துலகில் வாழ்வதிலே

சுகமேது மில்லையடா சொல்லுவார்க ளென்னைமிக
சொந்தனிலே இழிவாகச் சீரழிந்து பிழைக்கலாமோ?

பிராணனைநான் பாராட்டிப் பயந்துநின்று
ஆவதென்ன?
திராணியுள்ள மட்டும்பார்ப்போம் தைரியத்தை
விடலாகுமோ?

அபஜயத்தை யடைந்தாலுமே அழிவில்லாக்
கதியடைவோம்
சுபமடைய நியாயமுண்டு சொல்வேனதைக்
கேட்டிடுவாய்

365. தந்தையினால் துரத்தப்பட்டுத் தரணியிலே
ட்சத்திரியரில்
நிந்தனைக்குப் பாத்திரராகி நினைவுகெட்ட ராமலட்சு

மணர்களைநான் வெல்லுதற்கு மனந்துணிந்து
வந்துவிட்டேன்
இணையில்லா எல்பலமும் இளைத்துப்போக
நியாயமுண்டோ?

அவர்களுமே பலமிருந்த ஆண்மையுள்ள பேராயினும்
அவரைவிட்டுச் சீதையைநாம் ஆக்கிரமித்து
வருவோமாயின்

விசனமதால் அவர்கள்நம்மை வெல்லுதற் காகாதடா
அசந்துபோவார் அவர்களைநான் அதிக்கிரமிக்கக்
கூடுமடா

உனதுதவி இருக்குமாயின் ஒருகுறையும் இல்லாமல்
எனதுகாரியம் வெல்லுமடா இப்பொழுதே
அட்டியின்றி

370. வந்துசொன்ன மான்வடிவாய் வனந்தனிலே
சீதையின்முன்
உந்தன்சக்தி களைக்காட்டி ஒடியோடித் திரிவாயாயின்

ஆசைகொள்வா ளுனைப்பிடிக்க அக்கருத்தை
யவளுரைப்பாள்
நேசங்கொண்டு அவளிஷ்டத்தை நிறைவேற்ற
இருவர்களும்

விலகிப்போவார் அப்பொழுது விரைவாகச்
சீதையைநான்
இலங்கைநகர் கொண்டுவர இணக்கமுண்டாம் நீயந்த

விதமாகச் செய்வதற்கு வேண்டியுன்னைத்
தேடிவந்தேன்
மதமிருந்த மாரீசனே மனந்துணிந்து வருவாயென்றான்

அந்தவார்த்தை கேட்டுக்கேட்டு அகமெலிந்து மாரீசன்
வந்ததுநம் வாழ்வுக்கிடர் வஞ்சகனா லுயிரொழிவோம்

375. ஆனமட்டுஞ் சொல்லிப்பார்ப்போம் அனுகூல
நியாயங்களை
ஈனனதைக் கேட்டொருக்கால் இணங்கலாமென்
றெண்ணிக்கொண்டு

அரக்கர்மன்னன் றனைப்பார்த்து அன்புகொண்டு
மவீசன்
சரியல்ல ராமனைநீர் ஜயிக்கமாட்டீர் நிச்சயமே

அவனுடைய சக்திகளை அறியாமல் பேசுகிறீர்
எவருந்தானே அவனைக்கண்டால் எடுப்பார்கள்
ஒட்டமிக

வனத்துக்கவன் வந்தவொரு வகையறிந்தால்
குறையுரையீர்
சனமுடைய அவன்தந்தை கைகசிக்குத் தந்தவரம்

பயன்படவே தந்தவாக்கைப் பரிபாலிக்க வந்தவனாம்
தயவுடனே யுத்தமரைத் தாகந்தீர்த்துக் காப்பவனாம்

380. தர்மஞ்சத்திய மிரண்டுங்கூடித் தரணியிலே ராமனாக
நிர்மலமாம் மனதுடனே நேராகு யாவருக்கும்

நன்மைசெய்ய வந்தவனை நாம்பகைக்கத்
தான்போமோ?
என்வாக்கைக் கேளுமையா ஏணிந்தத்
துணிவுவேண்டாம்

உமதுதங்கை சீதைதனை உபத்திரவிக்கப்
போனதினால்
தமதுமனஞ் சகிக்காமல் தண்டித்தார் மனிதரையா

அவளுக்காகப் பரிந்துவந்து அமர்புரிந்த அரக்கர்களை
அவர்களென்றார் அதற்காக ஆத்திரங்கொள்ள
லாகாதையா

விசுவாமித்திரர் யாகமதை விக்னஞ்செய்யப்
போனேனையா
புஜபலத்தில் தீரனான பூபாலன் ராமனப்போ

385. எய்தவொரு பாணமது என்னைமிகப் பிராணஹிம்சை
செய்ததைநான் நினைக்கையிலே சித்தமிகத்
தபிக்குதையா

அதன்பிறகு வனந்தனிலே அவன்பாணந் தனைக்கண்டு
வதைக்கும்நம்மை யென்றஞ்சி வந்துவிட்டேன்
இந்தவிடம்

எதைக்கண்டாலும் ராமன்போல இருப்பதோடு
ரகுரத்வனி
மதியைமிக வருத்துதையா மனந்துணியேன் வருவதற்கு

சாகுமனந் துணியவேண்டாம் சத்தியங்கெட்டு
நடக்கவேண்டாம்
சோகப்பட்டே யழியவேண்டாம் சொல்லுமெந்தன்
பேச்சைக்கேளீர்

மாதரசாம் சீதைதானே மகலட்சுமி என்றறிவீர்
சீதைபார்த்துச் சாபமிட்டால் ஜெகமெல்லாம்
அழிந்திடுமே

390. அக்கினியைத் தழுவிக்கட்ட ஆசைகொள்வோ
ராருமுண்டோ?
தக்கும்பொரு ளல்லசீதை தாகங்கொண்டேன்
அலைகின்றீரோ?

---

384. விக்னம் - இடையூறு

திருட்டுவேலை செய்வீராயின் தெருவுதனில்
இழுத்ததினால்
வருமுமக்குக் கஷ்டநஷ்டம் வையகத்தில் பழிநிலைக்கும்

பராக்கிரமத்தா லிவரையில் பாரிலும திஷ்டப்படி
சராகமாக எதையுமேநீர் சற்றுங்குறை வில்லாமல்

அடைந்துவந்தீர் இப்பொழுது அதைமறந்து மதியிழந்து
தடந்தப்பி ஜானகியைத் தள்ளுகரித்தல் அழகாகுமோ?

எதிரில்நின்று யுத்தஞ்செய்து எதிரிகளை
வென்றதன்மேல்
உதவியின்றி யிருக்குஞ்சீதை யுமதுவச மாகலாமே

395. அந்தமுறை தப்பிச்செய்தால் அபவாதம் வந்திடுமே
எந்தனையு முதவிக்காக ஏன்முைக்க வேண்டுமையா

பிரியாள்சீதை பதியைவிட்டுப் பிரிந்தாலும்
பாதிவிர்த்திய
தருமம்விட்டு நடக்கமாட்டாள் தத்துவத்தைச்
சொன்னேனையா

அரக்கரெல்லாம் ஒழிவதற்கு ஆகுமையா உமதுகாரியம்
தருமபுத்தி கொள்வீராயின் தானவர்கள்
வாழ்வாரையா

உலகையெல்லாம் பெற்றசீதை உனக்குடங்கா
ளிமைப்பொழுதும்
இலங்கைநாசஞ் செய்திடுவாள் எண்ணமவள்
மீதில்வேண்டாம்

நானும்நீரும் பிழைப்பதற்கு நாடியும்மில் பார்ப்பதோடு
தானவரில் விபீஷணரும் ஏகுந்தமற்ற அறிவுடையோர்

---

392. சராகமாக - ஆசைப்பட்டபடி

இருக்கின்றார் அவருமக்கு இதமுரைப்பார்
கேட்டுச்செய்வீர்
வருங்கேடு அறிந்துகொண்டு வந்தவழி செல்லுமையா

முன்பட்டபுண் ணின்னமுமே முழுதுமாறா
திருக்கையிலே
என்னைவந்து அழைக்கலாமோ என்றேங்கி
முறையிடவும்

சினங்கொண்டான் இலங்கேசன் செப்புகிறான்
மாரீசா
எனக்கும்புத்தி சொல்லலாமோ ஏனுனக்குப்
புத்தியில்லை

செப்பச்சொன்ன காரியத்தைச் செய்வதுந்தன்
கடமையடா
வையகத்தி லென்னைமீறி வார்த்தைசொல்லிப்
பிழைப்போருண்டோ?

நான்நடக்க யோசனையை நாடியுனைக் கேட்கவில்லை
ஏனென்னை யலட்சியமாய் எண்ணிமதி கூறவந்தாய்

அரசன்வாக்கைக் கேளாமல் அவமதிப்பாய்ப் பேசுவது
சரியல்ல உனக்கதினால் சங்கடங்கள்
விளையும்பாராய்

எதிரிகளை வெல்லுதற்கு எனக்குச்சக்தி யிருந்தாலும்
எதிரிகளின் பலங்குறைய எத்தனமும் வேண்டும்பாராய்

பதுங்கிவெல்லுங் காரியத்தால் பாடுமிகக்
குறையும்பாராய்
சதியால்வெல்லும் காரியமே சரியான வழிநமக்கு

அதருமமுறை யனுசரித்தல் அரக்கருக்குத் தருமமாகும்
விதிவிலக்கின் தருமமெல்லாம் விட்டொழித்தல்
சட்டமாகும்

தருமமெண்ணி நாம்நடந்தால் தானவர்கள்
பூண்டொழியும்
மருமமதை யறியாமல் மதிகெட்டுப் பேசுகிறாய்

410. களவுசூது கள்ளுண்ணல் கருணையில்லாக்
குணமுமேயாம்
அளித்திடும்பார் பாக்கியத்தை அரக்கருக்கென்
றறிந்துகொள்வாய்

இதுவரையில் அகிர்த்தியங்கள் எத்தனையோ
செய்தேனான்
அதினாலே நானடைந்த ஐசுவரிய மிசுவுமுண்டு

என்னைக்கண்டா லெமனுக்குமே இருக்குமடா
பயமிசுவும்
சொன்னபடி மூவுலகும் சுவாதீன மாமெனக்குத்

தேவரெல்லா மெனக்கேவல் செய்யுமொரு குணமறிந்து
ஆலோலோடு வந்திடுவாய் அழைத்தபடி நடப்பதற்குக்

காரணமும் காரியமும் கண்டுசெய்யும் மிண்டனான
சூரனெனைப் பகைப்பவர்க்குச் சொந்தமாகா
தவர்தேசுமே

415. சோதரனென்றே யெனைப்புகழ்வார் தாசனென்றே
யெனைப்பணிவார்
ஆசைகொண்டே யெனைச்சேருவார் நேசங்கொண்டே
பயனடைவார்

---

411. அகிர்த்தியம் – செய்யத்தகாதவை

கடமையெண்ணிக் காரியஞ்செய்வேன் கைகூடிப்
பலனடைவேன்
இடம்பொருளும் ஏவல்களும் எனைப்போல
எவருக்குண்டு

மக்கள்பல மெண்ணுகையில் மயங்கவந்தான்
நியாயமுண்டோ?
தக்கவீரர் கணக்கேயில்லை தாராளமாய்
வெற்றியுண்டாம்

தம்பிகும்ப கர்ணனுக்குத் தானவர்கள் மிகவுண்டு
அம்புவியா லென்பெருமை ஆருக்குண்டு
அதையும்பாராய்

ஊசிக்கண்ணா லாகாசத்தை உற்றறியும்
உவமைதனை
ஈசனென்னை மனிதர்வெல்லா ரென்றுரைத்த
லொக்கும்பாராய்

420. இருக்குமொரு நிலையறிந்து எண்ணுவோனே
கண்ணுளவன்
வருங்காரியம் அவனறிவான் வல்லமையும்
மிகப்பெறுவான்

எத்தனையோ அனுபவங்கள் எனக்குண்டு
அதைக்கொண்டு
சித்தந்துணிந் தெனையுஞ்செய்வேன்
ஜெயம்பெறுவேன் பயமின்றியே

சிவனருளே மிகவடைந்து சீருடனே
வாழுமெனை
எவரும்வந்து ஜயிப்பதுண்டோ ஏனுனக்கு
வீண்பிரமையே

திருடும்பொருள் தக்குமெனும் திடமெனக்கு
மிகவுமுண்டு
அரணவத்தைத் தாண்டிவர ஆகாது மனிதராலே

சீதையைநாம் கொண்டுவந்தால் ஸ்ரீராமனும்
லட்சுமணனும்
வேதனையால் மடிவாரன்றி வென்றிடவும்
வருவதுண்டோ?

425. நமதுமர்மம் அவரறியார் நமதுநகர் தானறியார்
மமதைகொள்ள அவருக்கேதும் மார்க்கமில்லை
நிச்சயமே

எனதாஞ்ஞைப் படிநடந்தால் எத்தனையோ
சுகப்படுவாய்
உனைக்கோரி வந்தவனை உதாசீனமா
யெண்ணிக்கொண்டு

பலவிதமாய்ப் பிதற்றுகிறாய் பயப்படவும்
மிரட்டுகிறாய்
உலகிலெந்தன் சௌரியத்தை யுணராம லஞ்சுகிறாய்

பலந்திருமோ சுளர்நிலந்தான் பாகமின்றிப்
பேசுமுந்தன்
நலமில்லா வார்த்தையென்னால் நஷ்டப்பட ஆகுமடா

சத்திரத்தி லுண்பதற்குத் தகுதியற்ற தாத்தையன்
உத்தரவும் தேவையுண்டோ ஒருவரைநான்
கேட்பதென்ன

430. சொன்னபடி செய்வாயாயின் சுகப்படுவாய் எனதுதேசம்
உன்னைப்பாதி யடையச்செய்து ஒருகுறையு மில்லாமல்

ஆதரிப்பே னில்லாவிடில் அதஞ்செய்வே னிப்பொழுதே
வாதஞ்செய்தா லாவதில்லை வந்திடுவா யிஷ்டப்படி

மிருகவடிவைக் கொள்ளுவாயே மின்னொளிபோல்
விளங்கிச்சீதை
இருக்குமிடந் தனையடுத்து இனங்களோடு சஞ்சரித்து

வருவாயாயின் சீதைகண்டு வனமிருகமென்
றாசைகொண்டு
சுருதியுன்னைப் பிடித்துத்தரக் கலவன்றனை
யவள்கோருவாள்

அந்தப்படி யுனைத்தொடர்ந்து அடவிதனில்
வருவான்ராமன்
சுந்தரியைப் பிரிந்தவன்றான் தொலைதூரம்
போகச்செய்து

435. அந்தராமன் த்வனிபோல அலறிக்கொண்டு
மடிந்தேனென்று
எந்தன்தம்பி லட்சுமணா என்பிராணப் பிரியேயென்று

கூவிச்சொல்லி மறைந்திடுவாய் குரல்கேட்டுச்
சீதையப்போ
கோவென்றே யழுவாளவள் குரல்கேட்டு லட்சுமணன்

சீதைதனைத் தனியேவிட்டு ஸ்ரீராம னிருக்குமிடம்
வேதனையோ டோடுவானே வேளையந்த வேளையிலே

ஜானகியைக் கொண்டுவரச் சாதகமா யாகுமடா
ஆனதினா லந்தப்படி அட்டியின்றிச் செய்வதற்கு

வந்திடுவா யென்றுசொன்ன வஞ்சகனாம் ராவணனை
இந்தவிதம் போதனையை எவருரைத்தார் ராவணனே

440. அரசனுக்கு அறிவுவர அமாத்தியரே ஆவரென்பார்
உரியவராம் மந்திரிகளோ உனக்குக்கேடு செய்பவராய்

ஆகிவிட்டா ராகையினால் அறிவிழந்து சகலருடன்
சாகுமனந் துணிந்துவிட்டாய் சங்கடத்தை
யென்னசொல்வேன்

இந்தவிதம் மாரீசன் எத்தனையோ சொல்லிவிட்டு
இந்தப்பாவி நம்மைவிடான் இராமனம்பால்
பிராணன்விட்டால்

சிறந்தகதி யடைந்திடுவோம் சீரழியு மிந்தப்பாவி
குறித்துநம்மைக் கொலைபுரிந்தால் குணமடையோம்
குறைவடைவோம்

ஆகையினா லிவன்மனதை அனுசரித்து நடப்பதுவே
ஆகுமென்று துணிந்துகொண்டு உரைக்கின்றான்
ராவணனுடன்

445. சோரிக்கையை நிறைவேற்றக் கூடவேநான்
வருவேனையா
காரியங்கை கூடியேநீர் கனப்படுவீ ரென்றுரைக்க

அரக்கர்மன்னன் கேட்டுமிக அகங்களித்து மாரீசனை
மரியாதை மிகவுஞ்செய்து மட்டில்லா
ஸ்துதியுஞ்செய்து

அழைத்துக்கொண்டு ராமனிட ஆசிரமத்தை
யடுத்துவந்து
அழகியமான் வாவவ்கொண்டான் அரக்கனான
மாரீசன்

மாரீசன் மான் வடிவங்கொண்டு சீதை முன் வருவதும் அதைப் பிடித்துத்தரச் சீதை கோரியபடி பிடித்துவர இராமன் போவதும், பிறகு சீதையைவிட்டு இலட்சுமணன் பிரிவதும்

மான்வடிவில் கொண்டானம்மா மாரீசன் அற்புதமாய்
மான்போலக் காணுந்தேகம் மதிமயக்கும் எவரையுமே

நயமுள்ள பொன்னொளியும் நவரத்ன மணியொளியும்
உயர்ந்தநல்ல சுடரொளியும் ஒதுங்குமம்மா
மானின்முன்னே

450. விட்டுவிட்டு ஜ்வலிக்குமம்மா விதம்விதமா
யுதிக்குமம்மா
எட்டுத்திக்கும் எதிர்க்குமம்மா என்னசொல்வேன்
மான்பிரபையை

கண்ணழகும் காதழகும் கால்களுள்ள கனவழகும்
எண்ணிச்சொல்லப் போகாதம்மா எங்குமில்லை
மானவ்வாறு

விந்தையுள்ள மானதுதான் வெளியில்சீதை நிற்கையிலே
வந்ததம்மா சீதைமுன்னே வண்ணவண்ண ஒளிகள்வீச

எதிரில்வரும் மறைந்தோடும் இனங்களோடு கூடிநிற்கும்
குதித்துத்தாவும் அதிசயமாய்க் குணமுடனே
யடுத்துவரும்

சீதையைதைக் கண்டாளம்மா செய்கையின்றி
நின்றாளம்மா
மேதினியில் இப்படியும் மிருகங்களுண்டோ
வென்றுமிக

---

450. பிரபை - ஒளி

அதிசயித்தாள் அதைப்பார்த்து அகமகிழ்ந்தாள்
மிகவுமம்மா
அதன்பிறகு ராமனையும் அனுஜனையும்
அழைத்திடவே

அவர்கள்வந்து பார்த்தாரம்மா அவர்களிலே
ஸ்ரீராமன்
உவமைசொல்லக் கூடாத உருவமுள்ள மானைக்கண்டு

தன்னில்மிக மகிழ்ந்தானம்மா தம்பியப்போ
சொல்வானம்மா
என்னிந்த மானைக்கண்டு இப்படியும்
பிரமிக்கலாமோ?

காலதேச வர்த்தமானம் கண்டறிவீர் காரியம்வேறு
சீலங்கெட்ட அரக்கரிட செய்கையிது நம்பவேண்டாம்

வனமிர்கமே யல்லயிது வஞ்சகமாய் மாரீசன்
எனுமரக்க னிவ்வாறு எத்தனையோ சமயங்களில்

ரூபங்கொண்டு மகத்துக்களை ரொம்பவுமே
இம்சைசெய்யும்
பாபியிப்போ நம்மிடத்தும் பதம்பார்க்க வந்தவனே

இப்படியு மிர்கமிருக்க எங்கேனும் கண்டதுண்டோ?
ஒப்பும்படி பிர்மிக்கச்செய்வான் உண்மையாக
நம்பலாகா

என்றுசொன்னான் சீதையப்போ என்பிராண
நாயகரே
இன்றுகானு மிந்தமான்போல் எப்பொழுதுங்
கண்டதில்லை

இந்தமிர்கந் தனைப்பிடித்தால் இதைவைத்து
விளையாடி
சிந்தைமகிழ்ந் திடவாகும் சிக்காவிடில் கொன்றாலதன்

சருமம்நமக் காசனமாம் சாமியதைப் பிடித்துத்தரக்
கருணைசெய்ய வேண்டுமென்று காண்டசையோடு
சொல்லிப்பின்னும்

465. இதற்காகத் தங்களைநான் ஏவுவது தருமமன்று
அதிகதாகம் மானின்மீது ஆசையினால்
சொன்னேனென்றான்

தம்பிதனை ராமன்பார்த்துத் தகதகவென் றிருக்குமான்
அம்புவியி லரிதாசையால் ஆசைகொண்டாள்
ஜானகியாள்

நீயுரைத்த படிஅரக்கன் நினைவுடனே வந்தாலுமே
மாயஞ்செய்யுங் கொடியவனை வதைபுரிதல்
அவசியமே

ஆசையினால் தொட்டுந்துபோவேன் அகப்படாமல்
அலக்கழித்தால்
நானதனைக் கொன்றிடுவேன் நாடியதைக்
கொணர்வேனடா

வந்திடுவேன்.சீக்கிரத்தில் வரும்வரையில் சீதையைநீ
இந்தவிடந் தனிலிருந்து ஏதுங்குறை வாராமலே

470. ஆதரிக்க வேண்டுமடா அரக்கரிங்கு வருவாரடா
சீதைதனை நீபிரிந்தால் சிரமப்படுவோம் சீரழிவோம்

என்றுராமன் சொல்லியம்பு எடுத்துக்கவ சமுந்தரித்து
நின்றோடித் திரியுமானை நேராகப் பிடிப்பதற்குப்

போகையிலே வஞ்சகமான் புதைமுதலாய்ப்
பலவிடங்கள்
வேகமாகச் சுற்றிக்கொண்டு வெகுதூரம் போகையிலே

அலைந்தசந்தான் ராமன்மிக அகப்படாமல் நம்மையிது
அலைக்கழிக்குங் காரணத்தால் அதைக்கொல்வோ
மென்றெண்ணிப்

பிர்ம்மாஸ்திரப் பிரயோகஞ்செய்தான் பிறகதுபோய்
அந்தமானின்
மர்ம்மஸ்தானந் தனைப்பிளக்க மானுருவம்
விட்டரக்கன்

475. தானவனா யாகியவன் தரணியிலே விழுந்தானம்மா
ஈனனவன் அதன்பிறகு இவ்வாறு சொன்னானம்மா

ஆசீதே லட்சுமணா அதமானே னென்றுராமன்
பேசுந்த்வனி போல்கதறி பிராணந்தனை
விட்டானம்மா

அரக்கன்வாக்கைக் கேட்டுராமன் அனுஜனோடு
ஜானகியும்
பரிதபிக்க நம்மைப்போலப் பாவித்வனி
செய்துவிட்டான்

அதினாலே என்னசுவிடம் அமைந்திடுமோ
வென்றுராமன்
மதியிலெண்ணி வரும்வழியில் மானொன்றைப்
புசிப்புக்கர்க

வதைத்தெடுத்து வருகின்றான் வஞ்சகனாம் மாரீசன்
சதிவாக்கைக் கேட்டுமிக ஜானகியாள் மனந்துடித்து

480. பதியின்வாக் கென்றேநம்பிப் பார்த்தாவை இழந்திடவும்
சதிகாரர் அரக்கனினால் சம்பவிக்கு மென்றெண்ணியே

ஆத்திரத்தை மிகவுங்கொண்டாள் அறிவதனைத்
தானிழந்தாள்
உத்தமன்ஸ்ரீ ராமனுக்கு உயிர்ச்சேதம் வருமென்று

பாதுகாக்கப் போகும்படி பத்திச்சொன்னாள்
லட்சுமணனை
வேதனையேன் வேண்டாமம்மா விட்டுவிடுங்
கட்டமில்லை

இப்படிநீர் வருத்தப்பட ஏதுந்தீங்கு ராமனுக்கு
இப்புவியில் சம்பவிக்க ஏதுமில்லை நிச்சயம்

இராட்சதரின் மாயமிது இரகசியத்தை
யறிந்துகொள்வீர்
ஆட்சேபனை யில்லையம்மா அண்ணனிப்
போவருவாரம்மா

485. சோகப்பட வேண்டாமம்மா சொல்லும்பேச்சைக்
கேளும்மா
ஊகங்கொண்டு தேறுமம்மா ஒன்றுங்குறை
யில்லையம்மா

இந்தவிடந் தன்னைவிட்டு எங்கும்போக
வேண்டாமென்று
முந்தியண்ண னெனைச்சொன்ன மொழிதன்னை
மறக்க லாமோ?

நான்போக வேண்டாமம்மா நடுக்காட்டி
லும்மைவிட்டு
நான்போனால் விபரீதம் நடக்குமம்மா நிச்சயமாய்

வனந்தனிலே நீர்தனியாய் வசிக்கும்படி விடலாமோ?
எனதுதவி இப்பொழுது இருக்கவேண்டு
மென்றுரைத்தான்

சீதையந்த வார்த்தைகேட்டுச் சித்தமிக நொந்தவளாய்ப்
பாதகமாய் முடியுமென்று பக்குவந்தப்பிப் பேசிகிறாள்

490. எத்தனைநாள் தபசிருந்தாய் என்னைநீ யடைவதற்கு
உத்தமராம் பிராணநாதர் உயிரிழந்தால் அந்தவுடன்

என்பிராணன் போகுமல்லால் இமைப்பொழுதும்
நிற்காது
உன்மனத்தைக் கண்டுகொண்டேன் உசிதமல்ல
உனக்கிதுபார்

தமயன்போகி தான்பிழைக்கத் தர்ணியிலே
யென்னுவோர்க்கு
அமைந்திடுமோ சுகமனுவும் தறியாமல்
துணிந்துவிட்டாய்

அண்ணனிடம் அன்புகொண்டு ஆதரிப்போன்
போலிருந்து
எண்ணமெல்லாம் வஞ்சகமாய் இருந்ததிப்போ
வெளியாயிற்றே

பரதனிட போதனையோ பாவியெந்தன் தலைவிதியோ
பிரிந்தண்ணன் மீதில்சற்றும் பிரேமையில்லா
நெஞ்சுடைய

495. சயமாதா புத்திரனே சகஜமடா வுலகிலிந்த
அபவாதம் கேட்டதுண்டு அப்படியே நீயுஞ்செய்தாய்

உனதுமுன்னே யெனதுயிரை ஒருநொடியி
லொழித்திடுவேன்
எனதிஷ்டப் படிநடக்க ஈஷத்துந் தப்பாமலே

போவென்று சொல்லிச்சீதை புத்திசெட்டு மாரடித்து
கோவென்றே யலறுமந்தக் கொடுஞ்செயலைப்
பார்த்துத்தம்பி

மிகவுமவன் அச்சங்கொண்டான் மிதமீறி
விசனங்கொண்டாள்
திகிலடைந்தான் ஜானகியாள் செப்பியதாம்
வாக்கைக்கேட்டு

சுவலைமிகக் கொண்டுரைப்பான் கடமைதனை
மறந்திந்த
அவசரத்தைக் கொண்டுவீணாய் அலைந்திடவே
யாவதற்குத்

500. துணிந்தவுன்னைப் பிரிந்திடுவேன்
துரோகஞ்செய்வோன்
உளர்விழுந்தே நானுமிப்போ ஒதுங்குகிறேன்
உன்னைவிட்டு

இந்தவிசஞ் சொல்லிவிட்டு ஏங்கிமிகப் பரிதபித்து
அந்தவனத் தெய்வங்களை ஆதரிக்க வேண்டுமென்று

கோரிக்கொண்டான் லட்சுமணன் முறையுடனே
சென்றுவிட்டான்
காரியங்கை கூடிற்றென்று சுண்டுகொண்டு
இலங்கேசன்

இராவணன் சீதையினிடம் வந்து தகாத வார்த்தை சொல்லுவதும், சீதை உல்லங்கனஞ்செய்வதும் அப்பாலவன் சீதையைப் பலாத்காரமாய்க் கொண்டு போவதும், ஜடாயு கண்டு யுத்தஞ் செய்து அறுபட்டு விழுவதும்

சீதைமுன்னே வந்துநின்றான் திருதண்ட
சன்யாசிபோல்
சீதைகண்டு சிறந்தநல்ல சீலமுள்ள தேகியென்று

எண்ணியார்க்கியா திகளைத்தந்து எங்குவந்தீ
ரென்றுகேட்டு
உண்மையாக உபசரித்தாள் உத்தமியாம் ஜானகியாள்

510. அரக்கனப்போ சீதையின்மேல் ஆசைக்கொண்டு
பேசுகிறான்
அருமையான கந்தரியே அரணியத்தில் ஒருவனாக

இருக்குமொரு காரணத்தை எனக்குரைக்க
வேண்டுமென்றான்
விரித்தெல்லாச் சேதியையும் விளங்கச்சொன்னாள்
சீதையம்மா

துறவிபோல வந்தவனாம் துரோகியந்த ராவணனை
வரலாறைச் சொல்லுமென்றாள் வைதேகி யப்பொழுது

பார்த்தவனுஞ் சொல்லுகிறான் பாரிலுன்போ லா
ருமிலை
மாரழகும் மற்றழகும் மன்மதன்தே வியையொக்குமே

---

1. உல்லங்கனம் - தாண்டுதல்

508. திரிதண்டம்-முக்கோல்

இலங்கைநகர் அரசனென்று எனைச்சொல்வா
ரெங்குமிக
உலகிலெனை வெல்லுவோர்கள் ஒருவருமே
யில்லைபாராய்

515. எனதுபெயர் ராவணனே எசஸ்மிக அடைந்தவனே
கனமடைந்த புருஷனானே கைபலத்த சூரனானே

உனதழகைக் கண்டுமிக உளமகிழ்ந்தேன்
மனங்குளிர்ந்தேன்
எனையடைந்தா லுனக்குமிக இன்பமுண்டு
நன்மையுண்டு

பலபேர்கள் பெண்களென்னைப் பரிந்தடைவார்
வருந்திவந்து
குலஸ்திரீகள் பலபேர்கள் கூடியென்னை
வாழுகின்றார்

எனக்கடங்கி யுள்ளஸ்திரீகள் எத்தனையோ
பேர்கெல்லாம்
உனக்குடிமை செய்யச்செய்வேன் ஒன்றென்னோடு
வாழ்ந்திடுவாய்

கண்ணிமைபோல் காப்பேனுனை கைவிடவே
மாட்டேனென்றும்
பெண்ணேயெந்தன் பேச்சைக்கேளாய்
பிரியங்கொண்டு வந்திடுவாய்

520. கனமாக உபசரிப்பேன் கால்தொழுது பணிந்திடுவேன்
மனிதன்ஸ்ரீ ராமனாலே மனச்சுகமும் வந்திடுமோ?

பெருமையுள்ள புருஷனெந்தன் போர்சொன்னால்
நடுங்குஞ்சகம்
அருமையான புருஷனென்று அறிந்துகொள்வாய்
சுந்தரியே

எனக்கெதுவும் வசப்படுமே எனையாரும்
பகைக்கமாட்டார்
அனைவர்களும் இங்குவந்து ஆஞ்ஞைப்படி
ஏவல்செய்வார்

உனதுபாதங் கண்டவுடன் ஊசிக்காந்தம் போலதுவே
எனதுமனந்த தனையிழுத்து என்னையுந்தன்
அடிமையாக்கி

கலந்திருக்குங் காரணத்தைக் கண்டறியேன்
விண்டறியேன்
நிலம்படிந்த உனதுபாத நினைவினிமேல்
மறக்கமாட்டேன்

525. பாதமொன்றைப் பார்த்தாலுமே பரமசுகம்
நானடைவேன்
மீதியேதும் நான்வேண்டேன் மின்கொடியே ஜானகியே

மகலட்சுமிபோய் விளங்குமெந்தன் மனச்சுகமே
ஜானகியே
இப்பரத்தின் இன்பமெல்லாம் இணையாமோ
உனக்கணுவும்

உன்பாதந் தனைப்பணிந்தால் உத்தமமாம்
கதியுண்டாம்
என்மனதை யனுசரித்தால் இன்பமுண்டாம்
எத்தனையோ

உனைப்பிரிந்தா லுயிர்விடுவேன் உறுதியிது
வாசையினால்
எனதுமனப் படிவருவாய் ஏதுந்தடை
சொல்லவேண்டாம்

பத்தினியா யடைந்திடவும் பாதபூசை செய்திடவும்
புத்தியென்னைத் தூண்டுமொரு புதுமைதனை
என்னசொல்வேன்

530. தேடிவந்தேன் நாடிவந்தேன் திரஸ்கரிக்க
வேண்டாமென்னைக்
கூடிவாழக் கோருவதே குணமென்று சொன்னானம்மா

மதிகெட்ட அரக்கனிட வாய்மொழியைச் சீதைகேட்டு
விதிவசத்தை நொந்துகொண்டாள் வேதனையை
மிகவடைந்தாள்

அனுஜனைநாம் குறையுரைத்த அந்தப்பாவம்
இந்தவிதம்
மனக்கொதிப்பைத் தந்ததென்று மாதேவி மிகமயங்கி

கேட்டமொழி சுளைநினைத்துக் கெடுத்தானே
பாவியென்று
சேட்டைசெய்ய வேண்டாமடா சீரழிந்து நாசமாவாய்

அடுக்காத வார்த்தைகளை அகந்துணிந்து
சொல்லிவிட்டாய்
படுபாவி யுனைப்பார்த்தால் பதறுதடா மதிமிகவும்

535. தகாதயெண்ணங் கொண்டதற்குத் தண்டிப்பார்
ஸ்ரீராமன்
வகாரவார்த்தை யேனுரைத்தாய் வெட்டுண்டே
பட்டுவிழாய்

எனதுமனந் துடிக்குதடா இழிவடைந்து போவாயடா
உனதருந்தை யொழியுமடா உன்குலமுந் தொலையுமடா

ஜெகந்தனியே சிம்மந்தனைச் சிறுநரியும்
சிநேகங்கொண்டு
சுகமடையத் தானுமுண்டோ சுட்டெரிக்கும் கற்புநிலை

தரணியிலே யுனைப்போலத் தலைதெரியா
தாடினோர்கள்
அரைநொடியி லழிந்துபோன அந்தச்சேதி யறியா
யோ?

போய்விடுவாய் பிறர்ஸ்திரீமேல் புத்திதனை
வைத்துவீணாய்
நாய்போல அலையவேண்டாம் நாயகரைப்
பகைக்கவேண்டாம்

540. கண்டறிந்து ஒதுங்கிப்போனால் கனப்படுவாய்
சுகப்படுவாய்
அண்டிலெனை யுனக்குமிசு ஆபத்து விளையுமடா

இந்தவித மநேசுமாசு எடுத்தெறிந்து நிந்தனையாய்ச்
சிந்தைநொந்து சீதைசொன்னாள் சீலங்கெட்ட
இலங்கேசன்

இங்கினிமே லிருக்கப்போகா இராமலெட்சு
மணர்வருவார்
பங்கமுவரு மென்றெண்ணிப் பயந்தானம்மா
அதன்பிறகு

நாலுதிக்கு சுளைப்பார்ப்பான் நடுக்கங்கொண்டு
தானிற்பான்
காலமீறிப் போகுமென்று கருத்திலெனை எனித்
தன்னுடைய

நிஜரூபந் தனையெடுத்தான் நெருங்கிவந்தான்
பலவந்தமாய்ப்
புஜபலத்தைக் காட்டியவன் பூமியொடு போர்த்தெடுத்து

545. ஜானகியை ரதத்தின்மீது சண்டாளன்
வைத்துக்கொண்டு
கானகத்தின் எண்திசையும் கண்கொண்டு பார்த்துக்
கொண்டு

அச்சங்குண மிகவுங் கொண்டு ஆத்திரத்தால்
வேர்வைகொண்டு
பஞ்சையவன் சென்றுவிட்டான் பறந்துதம்மா
ரதமிகவே

அரக்கனச்சங் கொண்டுவந்து ஆருமில்லா வேளையிலே
திருடியவோர் காரணத்தால் தேவரெல்லாம்
நிச்சயித்தார்

இதுவரையில் அச்சமின்றி இலங்கேசன் எங்கும்சென்று
உதிக்குமாசைப் படியடைந்தான் உள்ளஅவன்
பலத்தைக்கொண்டு

பெண்களையும் பொருள்களையும் பேதையிப்போ
ஜானகியே
உண்மையாப் பயந்தெடுத்தான் உபேட்சைசெய்தான்
தன்பலத்தை

550. தன்பலத்தை மீறினவன் தயாபரனாம் ராமனென்று
தன்மனதி லுள்ளவெண்ணம் தானவனே
காட்டிவிட்டான்

பயந்தவனா மிவனுக்கினிப் பலமுண்டோ
நலமுமுண்டோ
தயிரியமே யில்லாத தானவனாம் இலங்கைராமன்

வென்றிடுவான் நிச்சயமே விலகும்நம்ம கஷ்டமெல்லாம்
என்றவர்கள் உறுதிகொண்டார் இதுநிற்க
மேலுரைப்பேன்

பூனையின்வாய்ப் பட்டபசுங் கிளிபோலப்
புலம்பிக்கொண்டு
கானமயில் போன்றசீதை கண்ணில்தீரை
பெருவாக்கில்

ஐக்கியமுள்ள நாதனையும் அனுஜனையும்
அழைத்தலறிக்
கையைப்பிசைந் தென்னசெய்வேன் காதகன்கை
வசமானேனே

555. பிராணந்தனை விடுவோமெனில் பிராணநாதர்
தவிப்பாரோ
குரூரமுள்ளோன் கொடுமைசெய்யக் குற்றம்செய்தோம்
பெண்மதியால்

கணவருக்கு அடங்காத காதகிபோல் நானுமாகி
உணர்விழந்த யானேயிந்த உபத்திரவமாய்ப்
பலித்ததிப்போ

ஆசைகொண்டேன் மான்பிடிக்க ஆபத்தாய்
முடிந்தது
பேசுதற்கு வாயுமுண்டோ பெண்வார்த்தை
கேட்பாருண்டோ?

ஸ்ரீலமேகன் எனதுவாக்கை நிக்கிரகித்துத் தள்ளாமல்
நாலுமறிந் தவருங்கூட நான்சொன்ன படிநடந்து

அவருமிக வருத்தப்பட ஆயிற்றிந்த அநியாயம்
எவர்சகிப்பார் என்செய்வேன் எனைக்காப்போ
ராருமிலை

560. அறியுமிகும் அனுஜனிந்த அனர்த்தம்வரு மென்றறிந்து
குறித்துச்சொன்னான் கோபங்கொண்டோம்
கொள்ளைகொண்டா னரக்கனிப்போ

ஆதரவை இழந்துவிட்டு அழுவதினா லாவதுண்டோ
விதிவசமும் இவ்விதமாய் விளையுமென்று அறியேனே

மரியாதை தன்னமறந்து மாமியான கைகையம்மாள்
அறியாமல் செய்ததினால் அவரடைந்த சுதியறிந்தும்

பேதையாகி நானுமிகப் பிசகுசெய்தேன் பேசியென்ன?
வேதனையை யனுபவிக்க வேண்டியானேன்
ஜெகந்தனிலே

மதிமோசம் போனேனென்று மனக்குறையை
மிகவுங்கொண்டு
அதிகமான துக்கத்தோடு அலறிக்கொண்டே
சீதைபோனாள்

மார்க்கந்தனில் ஜடாயுமன்னன் மரத்தடியி
லிருக்கச்சீதை
பார்த்தவனைக் கூவிச்சொன்னாள் பாதகனாம்
இராவணன்றான்

பலவந்தமா யெனையெடுத்தான் பதுங்கிவந்து
திருடனாகக்
குலமழிப்பார் ராமனென்று சொஞ்சமுன்தா
னறியாமல்

என்னைவிட்டு ஸ்ரீராமனும் இளையவனும் பிரியும்படி
கன்னமிடும் படுபாவி சூதுசெய்தான் சூதுமிக

எனையெடுத்துப் போகுஞ்சேதி என்கணவர்
அறியும்படி
மனமிரங்கி யுதவிசெய்வீர் மாமனைப்போ லுள்ளவரே

அந்தவொரு உபகாரம் அறிந்துசெய்தால் போதுமையா
வந்திடுவா ரெனைமீட்க வஞ்சகனை வதைபுரிவார்

570. நானங்கெட்ட வேலைசெய்தான் நாடெங்கும்
பழித்திடவே
ஆணவங்கள் பேசுகிறான் அசத்திவன்போ
லாருமுண்டோ?

என்னைவந்து திருடினது இழிவென்று அறியாமல்
தன்னைமிகப் பெருமைகொண்டு தாறுமாறாய்ப்
பேசுகிறான்

இந்தவிதஞ் சீதைமுறை யிடுவதெல்லாஞ் சடாயுகேட்டு
இந்தவிடம் சீஷதகுரல் ஏதென்று பார்த்தாரம்மா

இரதந்தனிலே வைத்துக்கொண்டு இராட்சதன்
இலங்கேசன்
மதங்கொண்டு போகக்கண்டு மார்க்கந்தனி
லவனைவந்து

தடுத்துக்கொண்டு ஜடாயுபல தருமங்களைச்
சொல்லிராமன்
கொடுமைசெய்வா னுன்னுடைய குலமுழுதும்
நசித்திடுமே

575. ஆகையினால் ஜானகியை ஆக்கிரமித்த
லாகாதென்றான்
வேகமாக ஜடாயுவோடு வில்லெடுத்து யுத்தஞ்செய்ய

இலங்கேசன் வந்துநின்று எடுத்துவிட்டான்
பாணங்களைப்
பலவிதமா யவைகள்வரப் பட்சிராஜன்
அவைகளெல்லாம்

பொடிப்பொடியாய்ப் போகச்செய்து புடைத்தானந்த
ராவணனை
அடித்தஅடி சகியாமல் அசந்துநின்று அரக்கனப்பால்

மறுபடியு மநேகசர மாரியாகப் பெய்ததெல்லாம்
குறித்திறகி னாலடித்துக் கொய்துகொய்து
தள்ளிவிட்டார்

பாணங்கள்வீ ணானதன்மேல் பத்துத்தலை மீதில்வந்து
ஆனவத்தோ டரக்கன்தேகம் அத்தனையும்
சித்திரவதை

செய்வதுபோல் ஜடாயுமன்னன் செய்துவிட்டா
ரப்பொழுது
மெய்யெங்கும் ரக்தவெள்ளம் வெகுவாகப்
பெருகக்கண்டு

அரக்கன்மிகத் துடிதுடித்து ஆச்சரிய மிகவடைந்து
அரிதிவனை யடக்குவது அதிவீர
னென்றெண்ணினான்

செய்தபொரு கொடுமையாலே சித்தமிக நொந்தரக்கன்
கையசந்து நின்றானம்மா காலமதில் ஜடாயுராஜன்

ரதசாரதி முதலாக ரதத்திலுள்ள அரக்கர்களும்
குதிரைகளும் மறந்திடவே கொத்திக்கொத்தி
நாசஞ்செய்தான்

---

583. ரதசாரதி - இரதம் ஓட்டுவான்

சீதைகீழே இறங்கினமேல் சீறிவந்து இரதமதனை
மோதியிற காலடிக்க முறிந்துசுக்காய்ப் போயிற்றம்மா

585. ரதம்பொடியாய்ப் போனதன்மேல் ராவணனை
மறுபடியும்
சதைகளெல்லாம் கொத்திக்கொத்திச் சங்கடத்தை
மிகவுந்தந்தார்

இருப்துகை களையுங்கொண்டு எட்டிப்பிடித்
திடவருவான்
துரிதமாகக் கைகளெல்லாம் துண்டம்துண்டம்
ஜடாயுசெய்வான்

மூக்குக்காது களைக்கொத்துவார் முதுகிலேறித்
தலைகொத்துவார்
தூக்கிவிண்ணி லெறிந்திடுவார் துடித்திடவே
யடித்திடுவார்

சேதப்படும் அங்கமெல்லாம் திரும்பவுமே
முளைத்திடவே
போதமுள்ள ஜடாயுகண்டு பொல்லாத அரக்கனென்று

இடித்திடுவா ரடித்திடுவார் புடைத்திடுவார்
படுத்தரக்கன்
துடித்திடவே கொடுத்திடுவார் அடுத்தடுத்து
இடித்துரைப்பார்

590. பட்டபாடு போதுமென்று பாதகனும்
நினைத்துவிட்டான்
கட்டந்தந்த ஜடாயுமன்னன் கடசியாக
அரக்கன்முன்னே

வந்துநின்று சொல்லுகிறார் வஞ்சகனே யாகாதடா
இந்தவேலை யால்மிகவும் இழிவடைவாய்
அழிந்திடுவாய்

சத்தியத்தை யெண்ணியேநீ ஜானகியை விட்டுவிடு
உத்தமரை வருத்துவதில் உண்டோபார் பெருமையடா

இராஜனாக விருந்துகொண்டு மோசஞ்செய்யுங்
காரியத்தை
ஆசரிக்க லாகாதென்று அநேகமாகச் சொல்லுகையில்

வில்லெடுத்துப் பாணங்களை வெகுவாக
அரக்கன்விட்டான்
வில்லுடனே பாணங்களும் விழுந்திடவே
ஜடாயுமன்னன்

595. அடித்துவிட்டு அரக்கன்மீது ஆத்திரமாய்ப்
பறந்துவந்து
திடீரென்று குதித்தானம்மா திடுக்கிட்டு விழுந்தரக்கன்

இசுவெடுத்து இம்சைப்பட்டு இருந்தப்பால்
எழுந்துவந்து
மசம்பிடித்த நாயைப்போல மனந்துணிந்து
கத்திக்கொண்டு

இறகுகளைக் கால்களுடன் இரக்கமின்றி
யறுத்துவிட்டான்
அரக்கனந்த விதஞ்செய்ய அதிபலவான்
ஜடாயுமன்னன்

பொதீரென்று விழுந்தாரம்மா பூமியிலே சக்தியின்றி
உதவியின்றி வருத்தப்படும் உத்தமராம் அவரைவந்து

சீதைகையால் தடவித்தந்து ஸ்ரீராமன் வருமளவும்
வாதையின்றி யிருப்பீரென்று வாழ்த்திமிக
அனுக்கிரகித்துப்

---

594. அசரித்தல் - பின்பற்றல்

600. பார்த்தாவை நினைத்துமிகப் பரிதபித்து
விசனப்பட்டாள்
கர்த்தன்செயல் தனைநினைந்து கண்ணில்மிகத்
தாரைவிட்டான்

ஜானகியால் சாபமிட்டால் சாம்பலாக
அரக்கனாவான்
ஏனவிதஞ் செயவிலையென் றெண்ணிக்கேட்டால்
சொல்வேனதை

அகிர்த்தியஞ் செய்யும்ராட்சஸர்கள் அநேககோடி
இருக்கையிலே
அகங்கொழுத்த அவரையெல்லாம் அதஞ்செய்வே
னென்றுராமன்

கொண்டிருக்குஞ் சங்கற்பம் குறைவடையும்
அதுவுமன்றி
துண்டனிலங் கேசன்மட்டும் தொலைவதினா
லரக்கர்கொட்டம்

அடங்காதென்றே ஜானகியாள் அடங்கிநின்றாள்
மீறாமல்
தடமறிந்த பெண்ணாதலால் தன்பெருமை
காட்டவில்லை

605. ஜானகியை அரக்கனப்பால் சடுதியாக வந்தெடுத்துப்
போறானம்மா விண்வழியாய்ப் போகும்போது
ஜானகியாள்

நீசனந்த ராவணனை நிந்தனைகள் மிகவும்பேசி
ஏசிவிட்டான் இழிவடைய இவ்விதமாய்ப் போகையிலே

சிலநகைகள் நழுவிக்கீழே சிதறியேதான் விழுந்ததம்மா
மலையொன்றைக் கீழேகண்டான் மலையிலைந்து
குரங்கைக்கண்டான்

குரங்குகளால் குணமடையக் கோரியொரு
காரியஞ்செய்தான்
தரித்திருந்த நகைகளிலே தட்சணமே சிலதெடுத்துக்

கட்டியொரு துணிதனிலே கானுமந்தக் குரங்குகளைச்
கட்டிச்சீதைத் போட்டுவிட்டுச் சோகமுடன்
போனாளம்மா

610. அரக்கன்லங்கை சேர்ந்தானம்மா அந்தப்புரந் தனிலே
சீதை
இருக்கும்படி விட்டுவிட்டு எட்டுவீரர் களையழைத்து

உதவிகளைச் சேர்த்துக்கொண்டு உடனேபோய்
ஜனஸ்தானம்
முதலாயுள்ள ஸ்தலங்களிலே முறையாக வாசஞ்செய்து

சீதையை லங்கைக்குக் கொண்டுவந்த மேல், மண்டோதரியும் விபீஷணனும் இராவணனுக்கு நீதி யுரைப்பதும், அப்பால் வசப்படும்படி, சீதையை இராவணன் கேட்பதும், சீதை நிந்திப்பதும், சீதையை அசோகவனத்தில் வைப்பதும்

மனிதர்செய்யுங் காரியத்தின் மர்மந்தனை
யறிந்துவந்து
தினந்தோறுஞ் சொல்லுமென்று திட்டஞ்செய்து
அனுப்பித்தந்து

பட்டஸ்திரீயாம் மண்டோதரி பக்கமதில் வந்தரக்கன்
இட்டப்படி யெனக்கொருபெண் எத்தனையோ
அழகாகவே

கிடைத்தாளென்று சொன்னானதைக் கேட்டந்த
மண்டோதரி
அடுத்துவந்து பார்த்தானந்த அருமையான
பெண்ணவளை

615. கண்ணில்தாரை பெருகுமிகக் கதறிக்கொண்டு
இருக்கக்கண்டு
எண்ணமிகக் கொண்டாளம்மா இவ்விதமாய்த்
தன்மனதில்

பாதிவிர்த்திய தேஜுதான் பார்த்ததில்லை யிவ்வாறு
ஏதிவள்மேல் நமதுபர்த்தா எண்ணங்கொள்ளல்
அறிவீனமே

அண்டமெல்லாம் பெற்றவளாம் அன்னையைப்போல்
விளங்குகிறாள்
குண்டம்போலக் கொளுத்திநம்ம குலநாசஞ்
செய்திடுவாள்

ஆகையினா லிவளையிங்கு அரைநொடியம்
நிறுத்தப்போகா
தாகமிவள் மீதில் கொண்டால் தலைகீழாய்ப்
பலித்திடுமே

இப்பொழுதே இவளையிந்த இலங்கைவிட்டுத்
தாட்டுதற்கு
ஒப்பும்படி கணவரிடம் உரைப்போமென்று வந்துமிக

620. நயமாக அன்புடனே நமஸ்கரித்துப் பிராணநாதா
படமிகவும் தோணுதிப்போ பதிவிரதையாம்
ஜானகியைக்

சண்டவுடன் கலங்குதெந்தன் கருத்துமிக
வருத்தங்கொண்டு
உண்டோயிந்த உத்தமியின் உள்ளம்வாடச்
செய்யலாமோ?

அவளாக இனங்கினக்கால் அவளோடு வாழ்ந்திடுவீர்
அவளுக்கிஷ்ட மில்லாவிடில் அவள்மனதை
வருத்தவேண்டாம்

இஷ்டமில்லா துத்தமியை இம்சைசெய்தா லதினாலே
கஷ்டமிக வந்திடுமே சண்டெதையுஞ் செய்திடுமே

உமக்குத்தெரி யாததுண்டோ? உமைச்செயிப்போ
ருலகிலுண்டோ?
தமக்குப்புத்தி சொல்லுதற்குத் தருமமுண்டோ
எனக்கணுவும்

625. சீதைமனம் நோகுமாயின் ஜெகதீசன் கிர்பையொழியும்
வேதமெல்லாம் சுரை சண்ட விவேகமதைக்
கொண்டுபார்த்துச்

சித்தம்போல் செய்யுமென்று செப்பும்பத்னி
தனைப்பார்த்து
உத்தமியே நீயுரைத்த உண்மையெல்லாம்
நியாயமேதான்

ஜெகதீசன் கிருபையினாலே சீதைவந்தன் வசமானாள்
சுகமடைவேன் சாகவதமாய்ச் சோகமெனை
விட்டொழியும்

வெகுபாடு பட்டவளை வேண்டிமிங்கு
கொண்டுவந்தேன்
அகந்துணியேன் விடுவதற்கு ஆலிபால அவளெனக்கு

எத்தனையோ ஜகத்தினிலே இருந்தாலும்
பயனுண்டோ?
முத்திபெறும் காரியத்தை முற்றிச்செய்ய
வேண்டுமன்றோ?

630. இகபரத்தி லெனக்குச்சுகம் இந்தச்சீதை தந்திடுவாள்
மகிமையுள்ள இவளாலே மனங்குளிர்ந்து
வாழ்ந்திடுவேன்

தவஞ்செய்து ஞானமடைந்த தவப்பயனே சீதையாவாள்
அவள் பாதக் காட்சியினால் அகமகிழ்ந்து
சுகம்பெறுவேன்

எந்தன்பிராணனவளாகவே இருக்கின்றபோ
லென்செய்வேன்
அந்தச்சீதை யன்றியிலே அரைநிமிஷம்
இருக்கமாட்டேன்

யத்தனங்கள் யாவுஞ்செய்வேன் இசையாவிடி
லவள் சிரிப்பையால்
உத்தமமாம் சுதியடைவேன் உயிர்போனாலும்
அவளைவிடேன்

ஆசையினா லவளைப்பற்றி அணுவளவுங்
கவலைவேண்டாம்
சோகமதை விட்டுவிட்டுச் சுவஸ்தசித்தங்
கொண்டிருப்பாய்

635. எனதுமனப் போக்குரைத்து இணங்குவதே யுன்கடமை
மனவருத்தம் விட்டிடுவாய் மாதரசே என்றுரைத்தான்

ஈசன்செயல் படிநடக்கும் எதுவுந்தானே
என்னசெய்வோம்
ஆசைகொண்டு மிகவுரைத்தோம் அங்கீகாரஞ்
செயவிலையே

இனியுஞ்சொல்ல வழியுமில்லை எழுத்தின்படி
நடக்குமல்லால்
வினைவசத்தை வெல்லவுண்டோ? வென்றுபத்னி
விலகினளே!

எட்டியிலே கட்டுத்தேமாங் கனிவிளைந்தா லெனவ
சுரா
துட்டகுலந் தனிலுதித்த தோஷமிலா விபீஷணனும்

ஏவியங்கள் சிலதுகண்டு இலங்கைக்கேதோ
நாசமென்று
தோஷம்வரும் கூறறிந்து தூரதிருஷ்டி கண்டுசேர்ந்து

640. அண்ணன்செய்த அழிம்புதனை அறிந்தவனில்
மனம்வருந்தி
எண்ணிச்சில புத்திசொல்ல யத்தனித்துத் தமயனிடம்

போயவனை வணங்கியப்பால் பொறுமையுடன்
அருமையண்ணா
நேயங்கொண்டு நெருங்கிவந்தேன் நினைத்துச்சில
வார்த்தை சொல்ல

அறிவுமக்கு நானுரைக்க அகந்துணிந்து வரவில்லை
குறித்தெனது கருத்துவைப்பேன் குணகிராகியஞ்
செய்தென்னில்

---

639. ஏவியம் - பின்பு நடக்க இருப்பதை முன்பே தெரிவிக்குத்தக்க சில செயல்கள்

642. குணகிராகியம் (குணகிராஹ்யம்) - நற்குணத்தை எடுத்துக்கொள்ளல்

அறிவீன மிருக்குமாயின் அதற்காகச் சுமிப்பீரென்று
மரியாதை மிகவுஞ்சொல்லி மனமுவந்து செப்புகிறான்

இராமன்பகை வேண்டாமண்ணா இராட்சதற்குக்
காலனவன்
சாமளனாம் நீலவர்ணன் சர்வபரி பூரணனே

645. கொல்லும்யானை முன்னேவந்து கல்லெறிவோர்
தானுமுண்டோ?
வல்லவனை மனிதனென்று வகைமோசம்
போவதுண்டோ?

உலகமெல்லாம் பெற்றெடுத்த உத்தமியே சீதையண்ணா
இலங்கைநகர் சுட்டெரிப்பாள் இவள்தமக்கு
ஏற்காதண்ணா

பெண்ணாசை கொண்டுவினாய்ப் பேரறிவும்
பெருந்தனமும்
மண்ணாளுஞ் செல்வங்கல்வி மற்றுமுள்ள
பெருமைகளும்

பெரியதவஞ் செய்தடைந்த அரியவரம்
அனைத்தையும்நீர்
பரியும்பஞ்சா யாக்கிவிட வெண்ணலாமோ
வேண்டாமண்ணா

தருமமல்ல ராமபத்னி தனையெடுத்தல் தயவுசெய்து
வருகம்விட்டென் வாக்கைக்கேட்பீர் என்றுரைத்தான்
வணங்கியம்மா

650. நம்பியுந்தன் வாக்கைக்கேட்டேன் தயவுகொண்டு
உரைக்கவந்தாய்
அம்புவியில் ராமன்சக்தி அறிவேனம்மா சரியாகவே

அவனும்நானும் ஆசைகொண்டு அவதரித்த ரகசியத்தை
எவரறிவார்இவ்வுலகில் எனக்கெல்லாந் தெரியுமடா

எடுத்தஜன்மம் சபலமாக எண்ணியேபோய் ஜானகியை
எடுத்துவந்தே னதினாலே எனக்கேதுங் குறைவருமோ?

அவளெனக்கு ஆத்மசுகம் அளிப்பதற்கே யுள்ளவளாம்
இவளைவிட்டு எனக்கெங்கும் இன்பமண்ணு வில்லையடா

மும்மீர்த்திக ளெந்தன்போரில் முன்னிற்கத்
தான்போமோ
எம்மாத்திரன் ராமனென்னை எதிர்த்திடவுந் தானா
டுமோ?

655. புஜவலிமை சுகலைசொல்லும் மார்பின்பலம்
புறங்காட்டின்
கஜங்கள்சொல்லும் அஸ்திரபலம் சுடுமையென்று
யாருஞ்சொல்லார்

சிறுமனிதர் ஜெயிப்பாரெனிப் சிரியாதோ
உலகமெல்லாம்
அறிவுடனே யாராய்ந்து அடங்கிநிற்பா
யென்றுரைத்தான்

கேடுவரு முன்னேமதி கெட்டுவரு மென்பதுபோல்
அடுக்குநாசம் வருகுறியே அண்ணனிடம் காணுதென்று

விபீஷணன் கண்டுகொண்டு விலகிப்போனான்
அதன்பிறகு
அபிலாஷை மிகவுங்கொண்டு அரக்கன்வந்தான்
சீதையிடம்

கொஞ்சுமொழி கோகிலமே குறைதீர்க்குஞ் சானகியே
அஞ்சியுன்னை வணங்குகிறேன் அன்போடு பேசுவாயே

660. ஆசையினி ராமன்மீது அணுவளவும் ஆகாது
நேசமெனைக் கொள்வாயாயின் நேராக
வாழ்ந்திருப்பாய்

தேசம்விட்டுத் துரத்தப்பட்டுத் திறமையின்றித்
திரிபவன்மேல்
பாசம்வைத்து வீணாயெனைப் பகைப்பதினால்
சுகமுமுண்டோ?

இந்தவிடந் தேடிவந்து எனைவென்று உனையடைய
அந்தராம னாலேசற்றும் ஆகாதென் றறிந்து
கொள்வாய்

என்பலமும் பெருமையுந்தான் ஈதுத்தும் அறியாமல்
உன்மனது போனபடி உருகிமனம் வருந்துவதில்

உண்டோசுகங் கண்டறிவாய் உலகவின்பம்
என்னாலடைவாய்
எண்டிசையு மெனக்கடங்கும் எவருமெலை
வணங்குவரே

665. ஆகையினால் சொன்னபடி அடங்கிநடந் திடுவாயே
சோகமதை விட்டுவிட்டுச் சுகப்படுவாய் என்னுடனே

இல்லையெனில் ஏவுவேன்பார் இம்சைசெய்ய
ராட்சிகள்
சொல்லுவார்கள் கண்டுகொள்வாய் கூக்குரலை
விட்டுவிடு

பாவியிவ்வா றுரைக்கச்சீதை பாவிமுகம் பாராமல்
நோவுடையோன் போலுளறி நொந்துபோக
வேண்டாமென்று

திரணத்தைக்கிள்ளிப் போட்டதன்மேல்
திர்ஷ்டிதனைச் செலுத்திக்கொண்டு
வருத்தப்பட்டுச் சாவாயடா வாயுனக்குப் புழுக்குமடா

இராமர்வந்து கையெடுப்பார் இராமாஸ்தர
முனைவதைக்கும்
தாமதமே யில்லையடா தலைகொழுத்துத்
திரியாதேடா

670. யாருமிலா வேளையிலே யதிபோல வந்தென்னை
வாரிக்கொண்டு வந்ததுந்தன் வாழ்வொழியக்
காரணமே

பிறருடைய மனைவிகள்மேல் பிரியங்கொண்டோ
ரடைந்தசுதி
அறியாம லலப்புகிறாய் அழிந்துபோவாய்
பாவியென்று

அநேகவிதத் தூஷணையாய் அலட்சியமாய்ப்
பேசிடவே
சினங்கொண்டா னரக்கனப்போ செய்தாஞ்ஞைக்
கண்டிதமாய்ச்

சானகியே வுனைபிறந்து சாகஸங்கள் மிகச்செய்கிறாய்
ஞானதனைப் பொறுத்துனக்கு நயந்துபனி
ரெண்டுமாதம்

கெடுக்கொடுத்தே னதற்குள்ளாகக் கிரமமாக வசமாகி
நடந்துகொண்டால் பிழைத்திடுவாய் நானதன்மே
லுனைக்கொன்று

போனானந்தப் பாவியம்மா புத்திகெட்ட
அரக்கியர்கள்
ஆனமட்டும் தந்திரங்கள் அனேகவிதஞ்
செய்துபார்த்தார்

எதற்குஞ்சீதை யஞ்சாமலே எண்ணமெல்லாந்
தன்னுடைய
பதியின்மீது வைத்துக்கொண்டு பாதிவிர்த்தியங்
காத்துவந்தாள்

685. அரக்கியர்கள் முடுக்குகள் தான் அன்னைமுன்னே
சாயாமல்
கருத்தில்மிகக் கவலைகொண்டு கல்நெஞ்ச
முடையவளாம்

இந்தப்பெண்ணும் வசமாமோ இலங்கேசன் அனுபவிக்க
வந்திடவே மாட்டானிந்த வைதேகி யென்றுரைத்தார்

விவேகமுள்ள உத்தமியாம் விபீஷணனார்
மனைவியவள்
அவளுடைய மூத்தமகள் அநலையெனும் கருணிதனை

அசோகவனத்தி லிருக்கிற சீதையை விபீஷணனார் மகளாகிய அநலை வந்து தேற்றுவதும், அவளிடத்து மனக்குறையைச் சீதை சொல்லி, பலவிதமாய்ப் புலம்புவதும்

அனுப்பித்தந்தாள் சமயம்பார்த்து ஆறுதலை
மிகவுமவள்
மனமுவந்து சொல்லிவந்தாள் மனதுசற்றுத்
தைரியங்கொண்டு

அவளுடைய அகழிலையை அறிந்துகொண்டாள்
ஜானகியாள்
உவமையில்லா துத்தமியென் றுள்ளமதில்
நிச்சயித்தான்

690. சீதையந்த அநலைதனைச் சினேகங்கொண்டு
அவளிடத்தில்
வேதனையைச் சொல்லுகிறாள் விசனமது
பொறுக்கமல்

கண்ணில்தாரை பெருகிடவே கானமயி
லேங்குதல்போல்
மண்ணில்சுந்த லலைந்திடவே மாதேவி
புலம்பிச்சொல்வாள்

என்னென்று சொல்வேனம்மா என்விதியை
யநலையேகேள்
சின்னஞ்சிறு வயதிலிந்தச் சிறுமைக்காளா யாகினேனே

மாமனையு மிழந்துநல்ல மாமியையும் பிரிந்துவந்தேன்
சாமிகுரு நாதர்வனம் சஞ்சரித்து வருந்துவதைப்

பார்க்கும்விதி யிருந்துதம்மா பார்த்தாவையும்
பிரியலாச்சு
ஆர்க்குமிசு வெளிதாச்சு அரக்கியர்கள் காவலாச்சு

695. நானிருந்த பெருமையென்ன? நானடைந்த
சுகங்களென்ன?
நானிவ்வா றானதென்ன? நான்செய்த தீவினையோ?

என்பிராண நாதரென்னை எங்கெங்கு தேடிநொந்து
தன்னுயிரைப் போக்குவரோ? தலைவிதிஎவ் வாறா
குமோ?

பெண்களிலே சீரழிந்த பெண்களைநீ என்னைப்போல
மண்ணுலகில் கண்டதுண்டோ மனக்கொதிப்பை
என்னசொல்வேன்?

நாதனைநா னினியடைய நற்பாக்கிய
மெனக்குண்டோ?
ஆதரவை யிழந்திந்த அலங்கோல மாகினேனே

இணைபிரியாப் பட்சிகள்போல் இருந்தோமே
பிராணநாதா
கணைதொடுக்கும் வேடுவன்போல் காதகன்வே
றாக்கினனே

700. பத்தியுட னுபசரித்துப் பணிவிடைகள் செய்துமக்கு
இத்தரையில் சுகந்தருவோர் எவராவர் இனியுமக்கு

701. (மூலச் சுவடியிலேயே விடுபட்டுள்ளது)

702. நாயகத்தின் பணிவிடையில் நற்காலங் கழிப்பதுவே
நாயகிகட் குரியதவம் நாளுமன்றோ நாயகரே

மனம்நொந்து வாடவேண்டாம் மனமுவந்து
என்னைவந்து
கனமாகச் சிறைமீட்கக் கையெடுப்பீர் அரக்கர்மீது

உத்தமனே லட்சுமணா உன்வாக்கை மீறியதால்
இத்தனைசே டெனக்குவந்து இம்சைப்பட லாகிற்றப்பா

705. குரூரமாக வுனைச்சொன்னேன் குடிலமாக
எனக்காயிற்று
குரோதங்கொண்டு சொல்லவில்லை குணந்தப்பிச்
சொன்னேனப்பா

பரதாவுந்தன் பரிதாபத்தைப் பார்ப்பதற்கு ஆகாமல்
இருதயத்தி லடைந்தகுறை இன்னமெனக் காறலையே

நாதனுடன் வந்துந்தன் நன்முகத்தைப் பார்த்தந்த
வேதனையை யொழித்திடவே வெகுவுறுதி
கொண்டிருந்தேன்

பாலியென்னைப் பதுங்கிவந்து பரிதபிக்க எடுத்துவந்து
ஏவிச்சிறை தனில்வைத்தான் என்னசெய்வே
னுன்னைவந்து

ஆவியுடன் பார்ப்பதற்கும் அநுக்கிரகத்தைச்
செய்வதற்கும்
தேவனருள் எனக்குமுண்டோ தெரியலையே
என்னசெய்வேன்

மாமிமாரே உங்களைநான் மறுபடியுந் திரும்பிவந்து
க்ஷேமமுடன் காணுவேனோ ஜென்மம்வீ ணாகுவேனோ

பிரேமையுடன்கூர்த்தெடுத்துப் பிரபலர்கையில்
பாங்காய்ததந்து
சிரேசையே கோருமெந்தன் சீருள்ள பெற்றவரே

ஆவிநொந்து துள்ளுவீரே அரைநொடியும்
பிரானன்றனைப்
பாவியெந்தன் கதியறிந்தால் பறக்குமன்றி
இருக்கவுண்டோ?

ஏதுவழி எனக்குரைப்பாய் என்தாயே அநலையேநீ
போதுமினி யுலகவாழ்வு போக்குவேனா
னுயிரையென்று

இவ்வண்ணம் புலம்பியழும் என்தாயை அநலையவள்
மைவண்ணக் கண்துடைத்து மனந்தேறச்
சொல்லுகிறாள்

சபமுமக்கே யாகுமென்றன் சொப்பணத்தில்
ராவணனுக்
சபசகுனங் கண்டேனம்மா ஆனதினால் மனந்தேறி

இருப்பீர்ஸ்ரீ ராமனும்மை இலங்கைவந்தே சிறைமீட்க
ஒருக்காலும் ஐயமில்லை உறுதியிது நம்புமென்றாள்

வருவாரென்ற மொழியமுதம் மாதேவி
செவியில்கேட்டுக்
கருகும்பயிர் தழைத்ததுபோல் களித்திருந்தாள்
சுமலாட்சி

சீதைதனை ராவணன்போய்ச் சிறையெடுத்த
செய்கைதனை
ஆதரித்துப் பேசுகிற அக்கருத்தைச் சொல்வேன்கேளீர்

அகண்டபரி பூரணமாய் ஆகுமொரு நிலைதனிலே
சுகமயமாய் மிஞ்சுஞ்சக்தி சுவரூபமாய் ஜானகியைப்

720. பாவித்து இலங்கேசன் பரமாத்மா போல்கண்ட
பாவினையைக் கொண்டடக்கியப் படுவதற்கே
களங்கமற்று

எடுத்தானென்பார் சிலபோர்கள் இதைப்பலபோர்
ஒப்பமாட்டார்
தடுத்துச்சொல்வா ரவனுக்குந்தத் தடம்படியா
தென்றுதானே

அங்கப்பற்றை யொழியாமலே அடையும் பிரம்ம
லோகமதில்
தங்கும்பிராப்தி யொன்றேயல்லால் தசகண்டனுக்
கில்லையருள்

பரமாத்ம வடிவமாகப் பவிக்குமொரு பாவனைக்கு
உரியவனே யல்லவெனும் உறுதிகொண்டே
ஜானகியாள்

திரஸ்காரித்தா னென்றுரைப்பார் சிலபோர்க
ளுலகுதனில்
பரமபக்தி மகிவுங்கொண்டு பாதபூஜை செய்வதற்கே

725. சீதைதனை யெடுத்தானென்பார் சிலபோர்கள்
ஜகந்தனிலே
வாதஞ்செய்வா ரிவ்வாறு வையகத்தில் பலவிதமாய்

எந்தவித மானாலுமே எடுத்துவந்த காரியத்தால்
வந்ததெல்லாம் அரக்கனுக்கு வையகத்தில் நிந்தனையே

சீதைமன வருத்தத்தினால் தேகந்தனை இழந்திடாமல்
பாதுகாக்க வேண்டுமென்று பலமுயற்சி
அரக்கன்செய்தான்

728. (சுவடியில் விடுபட்டது)

729. அந்த ஒரு காரணத்தை ஆதாரமா யதலைகொண்டு
வந்துவந்து ஜானகிக்கு மனக்குறையைத் தீர்ப்பாளம்மா

730. இந்தசேதி யரக்கன்கேட்டு இதுவும்நல்ல உதவியென்று
சந்துவுடி யடைந்துவந்தான் சாதுவான அநலைமிகத்

தயிரியம்மாய் அடுத்திருந்து ஜானகிக்கு ஆறுதல்கள்
பயம்விட்டுச் சொல்லிவந்தாள் பக்குவமாய்த் தக்கபடி

அவளுடைய தேற்றுதலால் அன்னைசீதை
காலந்தள்ளித்
தவஞ்செய்து வந்திருந்தாள் தயாபரனை
மனதிலெண்ணி

இங்கிவ்வாறு இருக்கையிலே எடுத்துரைப்பான்
இராமனிட
சங்கதியை விவரப்படச் சரியாக விளங்கும்படி

லட்சுமணன் எதிரில் வரக்கண்டு ஸ்ரீராமன் அவனைக் கண்டித்துப் பிறகு அவனை யழைத்துக்கொண்டு வந்து பார்க்கச் சீதையைக் காணாம லலைந்து தேடி வருகையில் ஜடாயுவைக்கண்டு சேதியறிந்து அவருக்குக் கதி தருவது

வேகமாக ராமன்வர மெலிந்தெதிரில் லட்சுமணன்
சோகமுடன் வருமவனைச் சொல்லென்று
காரணத்தைச்

735. சாமிகேட்கத் தேவிசொன்ன கடும்வாக்கைச் சகியாமல்
பாமரனா யறிவிழந்து பதறிவந்தே னென்றுரைத்தான்

ஸ்திரியின்வாக்கைக் கேட்கலாமோ செப்பியென்
வாக்குதனைத்
திருமணமாகத் தள்ளலாமோ திர்ப்தியில்லாக்
காரியஞ்செய்தல்

முன்னும்பின்னு முள்ளதெல்லாம் முறையாக
யோசியாமல்
என்னகாரியஞ் செய்துவிட்டாய் இப்படியுஞ்
செய்யலாமோ?

ஜானகியை இதுவரையில் ஜாக்கிரதையாய்ப்
பாதுகாத்துக்
கானலிலே தனியாகக் கண்கலங்க விட்டுவிட்டு

வந்துவிட்டா யென்னசெய்வேன் வைதேகி
தனைப்பார்க்க
எந்தனுக்குப் பிராப்தியினி இருக்குமென்று
தோற்றவில்லை

740. இந்தவிதஞ் சொல்லிவிட்டு எண்ணிதன்னி
லாலோசித்தான்
வந்தவனாம் தம்பிமீது வருத்தப்பட நியாயமில்லை

தம்பியின்மீ துரைப்பதற்குத் தப்பிதமே இல்லையென்று
நம்புதற்கு நியாயமுண்டு நாம்நினைத்தோம்
வருவான்வென்று

சடுதியிலே நினைவுக்கொரு சலனம்வரி லறிவடங்கிக்
கடமையெல்லாங் கைநழுவக் காரணமா
மென்றெண்ணி

அங்கிருந்து யிருவருமாய் அவசரமா யோடிவந்து
மங்கைசீதை தனைப்பார்க்க மாதேவி இல்லையம்மா

எங்குந்தேடி யலைந்துவிட்டு என்னசெய்வோ
வென்றுமிகக்
கங்குகரை யில்லாமல் கண்ணில்தாரை விட்டழுதார்

745. ஒருவர்முகம் ஒருவர்பார்ப்பார் ஒன்றுந்தோணா
மலிருப்பார்
கருதிப்பின்னும் தேடப்போவார் கதறியுமே
யழுவாரம்மா

தேடித்தேடித் திரிந்தெங்கும் திருமகளைக் காணாமல்
கூடியந்த இருவர்களும் குணங்கெட்டுப்
பிர்மித்தாரம்மா

எண்ணமிகக் கொண்டாரம்மா ஏங்கியேங்கி
யழுதாரம்மா
பெண்ணரசே பைங்கிளியே பிரிந்தாயோ
வென்றுராமன்

சீதைதனை நினைந்துருகிச் சித்தம்வச மில்லாமல்
ம்ாதரசே ஜானகியே மறந்தாயோ என்னையிப்போ

உனைப்பிரிந்து ஒருநொடியும் உயிருடனே நானிருக்க
இனியாமோ ஜானகியே எங்குபோனா
யென்னைவிட்டு

750. என்னைச்சற்று அலைக்கழிக்க எண்ணிமறை வாகவேநீ
நின்றிருந்தால் வந்துவிடு நிமிஷமும்நான் சகியேனடி

என்மனது வருந்தவிட எள்ளளவு
மெண்ணங்கொள்ளாத
தன்மையுள்ள உத்தமியே தப்பிப்போன விதமறியேன்

பரதனைநான் நினைந்துமன(ம்) பாதைப்படும்
வேளையிலே
சரஸமுடன் மனதையாற்றும் சகலகுண பூஷணிலே

உயிருடனே இருக்கின்றயோ உயிருக்குமே
ஹானியுண்டோ
மயிலையொக்கும் குயிலேநான் மனம்வாட
எங்குபோனாய்

உன்னுடனே வாழ்ந்ததன்மேல் உலகிலொரு
பெண்ணைக் கண்டால்
கண்ணெடுத்துப் பார்த்திடவும் கருத்திலாவ
லுதித்திடுமோ

755. உன்னைப்போ லுத்தமியும் உலகிலெங்கும் நானறியேன்
என்னைப்பிரிந் தேன்போனாய் ஏற்குமோபார்
நியாயமாகக்

குணங்களென்னில் குறையுரைக்கக் கூசுதெந்தன்
மனமிகவும்
வணங்கிச்செய்த பணிவிடைகள் நினைக்கமனம்
வருத்துதையோ

வஞ்சகமா யெவரேனும் வலவந்தமா யெடுத்திருந்தால்
பஞ்சுபஞ்சாய்ப் பறக்கடித்துப் பாழாக்குவேன்
குலமுழுதும்

என்றுபல விதந்தவித்து வனத்திலுள்ள எதையுங்கண்டு
நின்றுகேட்பான் ஸ்ரீராமன் நிலவரமாய்ச்
சொல்லச்சொல்லி

மயிலினமே குயிலினமே மற்றுமுள்ள பட்சிகளே
தெரியமாய்ச் சொல்லுமெந்தன் ஜானகியாம்
மடமானை

760. எங்கேனும் கண்டதுண்டோ இருக்குமிடஞ்
சொல்வீர்களின்
உங்களுக்குப் புண்யமுண்டு உரைத்திடுவீர்
விரித்தெனக்கு

மிருகங்களே விருட்சங்களே மின்கொடியைக்
கண்டீர்களோ?
பெருகும்வன தேவதைகாள் பேசுமென்று பித்தன்போல

வாக்குதனி லலப்பிக்கொண்டு மறுபடியும்
ஆசிரமம்போய்
ஏக்கங்கொண் டிருக்கையிலே இளையவனைப்
பார்த்துராமன்

---

761. விருட்சம் - மரம்

என்னசெய்வே னிருந்தனிமேல் ஏ தும்பய னில்லையடா
என்னுடைய பத்னிதனை இராட்சதர்கள்
புசித்திருப்பார்

இல்லையெனி வெங்குபோவாள் இப்படியும்
பலித்திடுமோ
எல்லையில்லாச் சக்திநமக் கிருந்தென்ன
பயனடைந்தோம்

765. ஐயனாஞ்ஞைப் படிவந்த அரண்யவாசம் முடியலையே
ஐயன்கட னிருக்கையிலே ஆவிதனை நான்விடவே

ஆரும்போலக் காணுதடா அயோத்திநகர் நீசென்று
தாசமுள்ள அன்னையர்க்குத் தண்டனிட்டே
னென்றுரைத்து

வருத்தப்படா திருக்கச்செய்து வகையுடனே
யவரைமிகக்
கருத்துடனே யாதரிப்பாய், காலமிங்கு
போக்குவேனான்

ஆபத்தேதோ விளையுமென்று அஞ்சிச்சீதை
யென்னிடத்துத்
தாபங்கொண்டு சொன்னபடி தப்பாமல்
நேர்ந்ததிப்போ

உயிருடனே யவளிருந்தால் ஒருநொடியி லவளைநான்
கைபலத்தா லடைந்திடுவேன் காரணத்தை
யறியேனென்று

770. வெகுவிதமாய்ச் சொன்னானம்மா விசனத்தோடு
ஸ்ரீராமன்
அகிலஜகக் காரணனாம் அவனுமொரு மனிதன்போல

நடனஞ்செய்த பாவனையை நானுரைக்குத்
தானுமுன்டோ
உடம்பெடுத்த கருமபந்தம் உள்ளவர்போல்
காட்டினனே

பரம்பொருளும் பாரில்வந்து பந்தப்பட்டு
அஞ்ஞானிபோல்
இருந்துலீலை செய்வதெனில் எவரதனை
யறிந்துரைப்பார்

அலறியழும் வேளையிலே ஆண்டவன் ஸ்ரீராமனிட
நிலைமைதனைப் பார்த்துவிட்டால் நீங்காதென்றும்
பரிதாபம்

மொழிகளெல்லாம் வழுவிற்றம்மா முகமிகவும்
வாடிற்றம்மா
விழியில்சுடர் குறைந்ததம்மா விசனமிகப்
பெருகிற்றம்மா

775. இந்தவிதம் ராமன்மிகச் சிந்தைநொந்து வாடுகையில்
அந்தவொரு நிலைமைகண்டு அனுஜன்மிகப் பரிதபித்து

விசனமதை விட்டொழித்து விவேகமதைத்
தானடைந்து
அசந்திருக்கும் தமயன்றனை ஆலிங்கனஞ்
செய்துகொண்டு

தேகந்தனைத் தடவித்தந்து தேறுதலை யுரைப்பதற்குப்
பாகமுட னாரம்பித்தான் பக்தியுடன் லட்சுமணன்

நமதுசெய லேதுமிலை நடப்பதெல்லாம் தெய்வச்செயல்
மமதைகொள்ள வேண்டாமென்று மனதைவசங்
கொள்ளும்படி

எனக்குநியாயம் மிகவுரைத்தீர் ஏனிப்போ வருந்துகிறீர்
மனக்குறையை விட்டொழிவீர் மனத்துணிவு
மிகவுங்கொள்வீர்

780. போனதைநா மெண்ணிக்கொண்டு புலம்புவதி
லாவதில்லை
ஆனமட்டும் முயற்சிசெய்தால் அகப்படுவாள்
சீதையண்ணா

சீதைதனை வதைபுரியச் சித்தந்துணி வோருமுண்டா?
ஆதரவா யவரைக்காப்பார் அதிக்கிரமிப்பார்
அரக்கருமே

கண்டவுடன் கால்தொழுவார் கருணைகொண்டு
காத்திடுவார்
தண்டிக்க மாட்டாரண்ணா திருமகளாம் ஜானகியைக்

காட்டிலுள்ள வியாக்கிராதிகள் கண்டுமிக்க
கண்குளிர்ந்து
ஒட்டமிடும் சீதைதனை ஒன்றுந்தீங்கு செய்ததில்லை

மதினியிடம் வந்துமிக வாஞ்சையோடு விளையாடிக்
குதித்தோடும் மான்களோடு கோகிலாதி பட்சிகளும்

785. சீதையில்லாக் குறையைக்கொண்டு சித்தமிக வாடியவை
வேதனையால் கண்ணீர்சொரியும் விதங்களையும்
பார்த்திடுவீர்

பகுத்தறிவில் லாதஜந்து பரிதபித்து வாடுமாயின்
தகுதியுள்ள நினைவுடையோர் தயவுகொள்ள
திருப்பதுண்டோ?

மாரீசன் செய்கைகளை மனதினிலே கொண்டறிந்தால்
கோரிச்சில அரக்கராலே குறித்தவனை அனுப்பவந்து

சுபடஞ்செய்தா னென்றேதான் காணுதண்ணா
ஆகையினால்
அபகரித்து யிருப்பாரந்த அரக்கரைநாம் தேடிக்கண்டு

வென்றிடுவோம் வாருமென்று வேண்டுகையில்
ஸ்ரீராமன்
நின்றவனி லாலோசித்து நினைவுவசங்
கொண்டெழுந்து

790. அங்கிருந்து இருவருமாய் அரணியத்தில் தேடுதற்கு
எங்குபோவோ மென்றவர்கள் எண்ணுகையில்
மான்கள்கூடி

தெற்குத்திக்கி லோடியவை திரும்பிவந்து
ராமன்முன்னே
தெற்குத்திக்கை நோக்கிநிற்கும் செய்கைகளின்
குறிப்புகளால்

அறிந்துகொண்டார் ஜானகியை அரக்கராரோ
பலவந்தமாய்க்
குறித்ததெற்குத் திசைதனிலே கொண்டுபோனா
ரென்றுநம்பி

வரும்வழியில் அடையாளங்கள் வகைவகையாய்க்
கண்டதோடு
அரக்கர்சிலர் ரதமொடிந்து அதமாகிக் கிடக்கக்கண்டு

அம்பொடிந்துங் கிடந்தனால் அரக்கர்களில்
வழக்குண்டாய்ச்
சம்பவித்த திறக்குமுன்னே சுதறும்படி அதமாக்குவேன்

தேவரெல்லாம் பயந்திப்போ சீதைக்கேதுந் தீங்கின்றி
ஆவலோடு கோருமெந்தன் அபிப்பிராயப் படியிப்போ

கொண்டுவந்து விடாபிடியோ கோபமது வீணாமோ?
அண்டமெல்லாம் அழிந்திடவே அஸ்திரத்தை
எய்வேனென்று

அம்பில்நாணை ஏற்றிவிட்டான் அதைக்கண்டு
சீக்கிரமாகத்
தம்பிவந்து தயவுசெய்வீர் தருமமல்ல சொல்லக்கேளீர்

ஒருவன்குற்றஞ் செய்வதற்கு உலகையெல்லாம்
நாசஞ்செய்யச்
சுருதுவது நியாயமல்ல கண்டுசெய்வீர் காரியத்தை

800. காலனைப்போல் விளங்குமும்மைக் கண்டாலே
கதறுஞ்சகம்
சீலமிகச் சிறந்தவரே சினங்கொள்ள லாகாதண்ணா

என்னைச்சில வேளையிலே ஏனுனக்குக் கோபமென்று
முன்னும்பின்னு மறிந்துசெய்ய முறையாகச்
சொன்னீரன்றோ?

ஆத்திரத்தை விட்டொழித்து அமரிக்கையை\
மிகவுங்கொண்டு
சாத்திரத்தின் முறைப்படியே சரியாகச்
செய்யவேண்டும்

விபரீதக் கருத்துதனை விட்டும்மி லாலோசித்து
அபராதி தனைக்கண்டு அம்பெடுப்பீ ரவன்மீதிலே

திருட்டுவேலை யொருவன் செய்தால் தேவருந்தா
னேதுசெய்வார்
துரிதமாக வெளியாகுமே துஷ்டனைநாம்
தொலைத்திடுவோம்

805. தேவர்முதல் சகலருமே தேவரீரை யனுசரிப்பார்
அவர்களையும் உபத்திரவித்தல் அனுசிதமா
யாகுமண்ணா

ஆகையில் கோபந்தனை அடக்குமென்று
வேண்டிக்கொள்ள
வேகமாக வந்தகோபம் விட்டொழித்தான் ஸ்ரீராமன்.

அதன்பிறகு இருவருமாய் அடுத்தவிடந் தனில்வரவே
அதிலேயொரு கழுகிருக்க அரக்கனென்
றெண்ணிக்கொண்டு

அதன்மீது பாணமெய்ய அதையடுத்து ராமன்வந்தான்
அதமானே னரக்கனாலே அம்பென்மே
லெடுக்கவேண்டாம்

திருடனைப்போல் இலங்கேசன் சீதைதனை
வந்தெடுத்துப்
பரிதபிக்கக் கொண்டுபோனான் பார்த்தவனைத்
தடுத்துயுத்தம்

810. செய்கையிலே அவனுடைய தேர்குதிரை சாரதியும்
கைபலத்த அரக்கரையும் கண்டதுண்ட மாக்கியந்தப்

பாதகனைத் துடிதுடிக்கப் பலவிதமாய்
இம்சைசெய்தென்
நீதிகெட்ட அந்தப்பாவி நெடுநேரங் கஷ்டப்படச்

செய்ததற்கா யெனநிற்கும் இரண்டுகாலுஞ்
சேதஞ்செய்து
கைபலத்தோன் போலவன்றான் கண்கலங்க
ஜானகியை

ஆகாச மார்க்கமாக அதிவேகமாய்க்
கொண்டுபோனான்
தேதாலசிய மிகுந்தமையால் திடந்தப்பிப்
போனேனென்று

சொன்னஜடா யுவையணைத்துச் சோகமிகக்
கொண்டுராமன்
தன்னிமித்தம் ஜடாயுவுக்குச் சங்கடங்கள் வந்ததற்காய்

815. பரிதபித்தா னப்பொழுது பார்த்தவனை
ஜடாயுமன்னன்
கருணையொடு சொல்லுகிறார் கதறவேண்டாம்
ஜானகியை

அரக்கன்வந் தபகரித்த அந்தவேளை விந்தமாகும்
திருட்டுமுதல் நஷ்டமின்றித் திரும்பவுன்னைச்
சேரும்படி

செய்யத்தக்க காலமென்றும் சீதையுடன் க்ஷேமமாக
வையகத்தில் வாழ்வாயென்றும் வாழ்த்தியவ
ராவிவிட்டார்

தந்தையைப்போ லவரையெண்ணி தகனவினை
முழுதுஞ்செய்து
அந்தமிலாக் கதியைத்தந்து அவரைக்கரை
சேர்த்ததன்மேல்

வருகிறார்கள் தென்மேற்கு வழியைப்பற்றி
இருவருமாய்க்
கரெளஞ்சாரண்யந் தாட்டினதும் கடுகிவந்தாள்
அயோமுகியாம்

இராமலெட்சுமணர்கள் தென்மேற்குத் திசை நோக்கிப் போகையில் அயோமுகியை அங்கஹீனஞ் செய்வதும் கபந்தன் வதமும்

820. அரக்கியவள் லட்சுமணனை ஆலிங்கனஞ்
செய்துகொள்ளக்
கருதிமிக வேண்டுகையில் கத்திக்கொண்டு அவளுடைய

காதுமூக்கு ஸ்தனங்களெல்லாம் சுதறும்படி
அறுத்தெறிந்தான்
காதகியாம் அவள்மிகவும் கண்ணில்தாரை
பெருகிடவே

ஓடிப்போனா ளதன்பிறகு ஒருவனத்தை யடுத்துவரக்
காடதுதான் பயங்கரமாய்க் கண்டுதம்மா லட்சுமணன்

பயந்தண்ண னிடந்தனிலே பரிந்துசொல்வா
னிவ்விடத்தில்
தயிரியமே எனக்கில்லை தங்கள்மனம் எப்படியோ?

ஏதோதீங்கு வரும்போல எண்ணுகிறே னென்றுமிக
வேதனையோ டுரைத்தானம்மா வீரனான ஸ்ரீராமன்

825. தயிரியத்தைச் சொல்லிக்கொண்டு தடந்தனிலே
வருகையிலே
பயங்கரமாய் முண்டமென்று பார்த்தார்கள்
எதிரிலம்மா

தலையுமில்லை கால்களில்லை தருந்தமற்ற ரூபமில்லை
உலகில்யாரும் கண்டவுடன் ஓடும்படி விகாரமாக

இருக்குமந்தக் கோரஜந்து எத்தனையோ பிராணிகளை
இருகைகள் காதவழி எட்டிவிட்டுப் பிடித்துக்கொண்டு

குட்சியிலே யுள்ளவாயில் கொண்டுவிழுங் கிடுமம்மா
பட்சித்திட அவ்விதமாய்ப் பலமாய்ராம லட்சுமணரை

பிடித்துக்கொண்ட வுடனேதம்பி பிரமித்துச்
சொல்வான் அண்ணனிடம்
தடுப்பதற்கு வகையறியேன் தந்திரமாய் நீர்மட்டுமே

தப்பிவித்துக் கொண்டுபோவீர் தரணியைநீர்
ஆண்டிடுவீர்
இப்படிநான் பிரானன்விட்டால் என்னையென்றும்
மறக்கவேண்டாம்

இதுவரையில் எத்தனையோ இம்சையெல்லாம்
வந்துதண்ணா
அதுகளெல்லாம் விலகியேநாம் அகமகிழ்ந்தோம்
சுகமாகவே

இதுவோநம்மை விடவுண்டோ இதைவெல்ல
வகையுண்டோ
அதன்வசமா யாகிவிட்டேன் அதென்னை
விழுங்குமண்ணா

உழைத்துநமக்குப் பணிவிடைகள் உள்ளபடி
செய்வதற்கு
எழுத்தினிமேல் எனக்கிலைபோல் இருக்குதண்ணா
என்செய்வேன்?

நீரொதுங்கிப் போனாலெந்தன் நெஞ்சுசற்று
ஆறுமண்ணா
பாரும்நல்ல யுக்தியென்று பரிதபித்துச்
சொல்லுகையில்

ஏனிந்தப் பயங்கொண்டாய் எடுப்பாய்கையில்
கத்திதனை
நான்வலது கையறுப்பேன் நாடியேநீ இடதுகையை

அறுப்பாயென்று ராமன்சொன்னான் அவ்வாறு
இருவருமாய்
அறுத்தெறிந்தார் கைகள்ரெண்டும் அந்தமுண்டம்
அதன்பிறகு

திவியரூபங் கொண்டெழுந்து திருவாளனை
நமஸ்கரித்துத்
தவப்பொருளே ஸ்ரீராமா தயவுவைத்துக் கதியளித்தாய்

இராமாவுந்தன் வரவுக்காக இராப்பகலுந்
தபசிருந்தேன்
காமாதிக ளொழிந்திடவே கருணைகொண்டு
சுடமொழித்தாய்

அசுரன்தலு வென்பாரென்னை அரக்கனாக
வானேனப்பால்
எசஸுடந்த இந்திரனால் இந்தக்கோல மானேனையா

840. சுபந்தனென்று பெயரடைந்து காடுதனில் ஜந்துக்களை
அபகரித்துத் தின்றிடவே அவனெனக்குக்
கைகள்தந்தான்

அதைக்கொண்டு இதுவரையில் அநேககோடி
ஜந்துக்களை
வதைபுரிந்து புசித்துவந்தேன் வையகத்தில் பாவியாகி

இந்திரனைப் பணிந்துகேட்டேன் எனக்குக்கதி
எப்போவென்று
அந்தவுட னவனெனக்கு அன்புகொண்
டனுக்கிரகித்தான்

இந்தரூபத் தோடிருப்பாய் இராமனவந் துனக்குக்கதி
தந்திடுவா ரென்றுரைத்தான் தாகங்கொண்
டவ்விதமாய்

வருவாயென்று காத்திருந்தேன் வனத்தில்வந்து
எனக்குநல்ல
அருமையான பதம்பெறவே அனுக்கிரகித்தா
யாசையினால்

845. எனதுதேகந் தனைத்தகனம் இப்பொழுதே நீசெய்தால்
கனமடைவேன் மனமகிழ்வேன் கண்டுசீதை
தனையடைய

மார்க்கங்களும் நாலுரைப்பேன் மகிமையுள்ள
ஸ்ரீராமா
பார்க்கவுன்னைக் கிடைத்ததினால் பாபமெல்லாஞ்
தொலைந்ததென்று

ஸ்தோத்திரஞ்செய்து கேட்டுக்கொண்டான்
சுவாமியப்பால் அவனுடைய
ஸ்தூலதேகந் தகனஞ்செய்து சுத்தனாக ஆக்கிவிட்டார்

அடுத்தவனைத் தேடியொரு அதிசயமாய் விமானமது
சடுதியாக வந்ததம்மா சந்தோஷமா யதிலிருந்து

சொல்லுகிறான் ரகுராமா சொல்லுமென்தன்
வாக்கைக்கேளாய்
வல்லவனாம் உனையழிக்க வையகத்தி லாருமில்லை

850. ஜானகியை யடைவதற்குச் சற்றுந்தானே வருத்தமிலை
ஏனுனக்குக் கவலைராமா என்வாக்கின் படிநடப்பாய்

சீதைதனை நீயடையச் செப்புகிறேன் யுக்தியொன்று
ஆதரவா முனக்குதவே அதன்படியே நடந்திடுவாய்

சுக்கிரீவ னென்றொருவன் சூரனல்ல வானரன்றான்
தக்கநான்கு மந்திரியோடு தங்கிரிய மூகமெனும்

அடுத்திருக்கும் பருவதத்தில் அகமெலிந்தே
இருக்கின்றான்
இடம்பொருளும் ஏவல்களும் இணங்கவுண்டு
அவனுக்கையா

அவனுடைய தமயன்வாலி அவன்மீது
கூரத்திரங்கொண்டு
குவலயத்தில் அவனைமிகக் கொடுமைசெய்தான்
அதினாலே

855. வாலியண்டா திருக்குமந்த வசதியுள்ள பருவதத்தில்
காலமதைக் கழித்துக்கொண்டு கஷ்டப்படும்
நன்றியுள்ள

சுக்கிரீவன் சினேகங்கொண்டு சோகம்போக
அவனைச்செய்தால்
தக்கபடி யவனுனக்குச் சகாயஞ்செய்வான் மிகவுமையா

சகலமர்மம் அவனறிவான் ஜானகியை
யொருநொடியில்
சுகமுடனே நீயடைய்ச் சொன்னபடி அடிமைசெய்வான்

அக்கினிசாட்சி யாகவேநீ அவனுடைய
சினேகங்கொண்டால்
விக்கினமேது மில்லாமல் வெகுமுயற்சி செய்தவனே

கஷ்டமுனக் கில்லாமலே காலங்கண்டு
காரியஞ்செய்வான்
இவ்டப்படி சுகம்பெறுவாய் இவ்விதமாய்
நடப்பாயென்று

860. சொல்லியவன் சுவர்க்கஞ்சேர்ந்தான் சுவாமியப்பால்
ரிசியமூக
நல்லமலை தனையடைய நாடித்தம்பி யோடுவந்தான்

வரும்வழியில் மதங்கரிஷி வாசஞ்செய்யும் ஆசிரமம்
அருமையான காட்சியொடு அதிருக்கும் நிலைமைதனை

---

854. கூரத்திரம் - கோபம்

கண்டுமிகக் களிப்படைந்து கண்டதில்லை யிந்தவிதம்
உண்டோயெங்கும் ஆசிரமம் உலகிலிது அரிதெனவே

மகிழ்ந்தார் ராமலட்சுமணர் மதங்கமுனி ஆசிரமத்தில்
மகிமையுள்ள ரிஷியைப்போல் வாசஞ்செய்யும்
பெண்ணாகிய

சபரியெனுஞ் சகலகுணச் சம்பன்னி வணங்கிமிக
உபசரித்தா ளுணவுக்காக உள்ளநல்ல கனிவர்க்கங்கள்

865. தந்துமிக அபிமானித்தாள் தரணியிலே எழுகடலும்
அந்தவிடந் தனிலேவந்து அமைந்திருக்க
அதையுங்கண்டார்

அப்பொழுது சபரிமிக அன்புடனே ஸ்ரீராமனை
இப்புவியி லுன்மகிமை எவரறிவார் பரம்பொருளே

உலகிலுனக் கணுவளவும் ஒட்டுதலுஞ் சற்றுமுண்டோ?
துலங்கும்அறி வாகவுள்ள தோஷமிலா நித்தியமே

சத்தாமாத்திர மிருந்துகொண்டு சகலஜகக்
காரணமாய்
நித்தியானந்த வடிவாயுள்ள நிர்மலமே பரப்பிர்மமே

ஆதியந்த முனக்குண்டோ ஆசாபாசஞ் தானுமுண்டோ
மீதியுனை யன்றியுண்டோ மேலான சத்சுதியே

870. தத்துவக்குப்பை கலைக்கடந்த தனிப்பொருளே தயா
பரனே
உத்தமமாம் கதியளிக்கும் உன்பாதக் காட்சிகண்டேன்

உன்னுடைய அருள்சக்தியால் உண்டாகும்
விவகாரங்கள்
என்னென்று நானுரைப்பேன் ஏழையென்னா
லாகாதையா

இச்சாமாத்திரம் விரிந்தடங்கும் எத்தனையோ
ஜகங்களுன்னில்
சச்சிதானந் தப்பொருளாய்ச் சாந்தவத மாகவுள்ள

பரிபூர்ண வஸ்துவேயுன் பாதங்கண்ட போர்களுக்குக்
கருமபந்தப் பாதையுண்டோ கஷ்டமுண்டோ
நஷ்டமுண்டோ

மகரிஷிகள் இருதயத்தில் வாசஞ்செய்யுங் கேசவனே
சுகமயமா யுள்ளவுனைச் சுட்டியிப்போ காணும்படி

875. என்னெதிரில் வந்தெனக்கு இன்பகதி தருவதற்கு
உன்னைநாடித் தவமிருந்தேன் உண்மையாக
இதுவரையில்

இப்புவியின் ஆசைதனை ஈஷத்துங் கொள்ளாமல்
ஒப்பித்தவஞ் செய்வதற்கே உள்ளந்துணிந்
திங்குவந்தேன்

மதங்கமுனி சிஷியர்களை மனமுவந்து பக்திசெய்தேன்
இதமாக எனக்கவர்கள் எண்ணிச்சொன்னார்
ஸ்ரீராமன்

வருவானப்போ கதிதருவான் வசித்திருப்பா
யதுவரையில்
கருதியவன் வரவுக்காக வென்றுசொன்னார்
கருணையோடு

அந்தப்படி அருள்புரிய ஆதரவாய் வந்துகாட்சி
தந்தற்காய் மகிழ்ந்தேனிப்போ தயாபரனே
யுந்தன்முன்னே

830. நேசுந்தனை யக்கினியில் தியஜித்துவிட்டு
உன்னருளால்
சோகமிலாக் சுதியான சுகநிலையை யடைவேனென்று

சொல்லியந்தப் படிசெய்து சுட்டியவள் சுதியடைந்தாள்
எல்லையில்லா மகிமையுள்ள இராமனவள் பக்திக்காக

அதிசயித்தான் மிகவுமம்மா அனுஜனுமே
மனமகிழ்ந்தான்
அதன்பிறகு அவ்விருவர் அவ்விடத்தை விட்டுநீங்கி

வரும்வழியில் அதிசயமாய் வனமொன்றைக்
கண்டதற்கு
அருகில்பம்பா சரசிருக்கு அதையுங்கண்டார்
ஆவலோடு

சரசிருக்கும் அதியசித்தைச் சலியாமல் பார்த்தவர்கள்
உரியபடி இவ்விதமாய் உலகிலெங்குங் கண்டதில்லை

885. இப்படியும் சரசெங்கும் இருப்பதில்லை யெனமகிழ்ந்து
சொப்பனத்தும் மறக்கப்போகா சுசிருசியா
யிருக்குதென்று

பரஸ்பரமும் பேசிக்கொண்டு பரமானந்த
மடைந்ததோடு
கருதியங் குள்ளபல காட்சிகளைக் கண்ணுற்று

---

880. தியஜித்து - தியாகம் செய்து

883. சரஸ் - தடாகம்

பார்த்துக்கொண்டே யிருந்தாரம்மா பரந்தாமன்
லட்சுமணனைப்
பார்த்துச்சொல்வான் தம்பியிதைப் பார்த்தவுடன்
சோகமெல்லாம்

பறந்தோடிப் போயிற்றடா பரிசுத்த ஸ்தலமிதுவே
அருமையான ஸ்தலமடைந்தோம் அகமகிழ்ந்தோம்
மிகவுமிப்போ

நவரத்னங்கு விழைத்ததுபோல் நவநவமாய்ப்
படிக்கட்டுகள்
சவரணையாய்க் கட்டியுள்ள சம்பிரதாயம்
எங்குமில்லை

890. அடிநிலைமைக் கண்ணில்காண அமலமாக ஜலமிதிலே
படிந்திருக்கும் நிலைமைபாராய் பரிசுத்த ருசியுடனே

நிர்மலமா யிருப்பதினால் நீர்ப்பிராணி இதிலில்லை
கர்மபந்த மொழியுமிதைக் கண்டவுடன் அண்டாமலே

புனிதனாக்கும் இதிலேநாம் பொருந்தஸ்நானஞ்
செய்வோமாயின்
மனமகிழச் சுகமடைவோம் மட்டில்லா
மகிமையுண்டாம்

இந்தவிதஞ் சொல்லியந்த இருவர்களுஞ் சரசுதனில்
வந்திறங்கி ஸ்நானஞ்செய்து வசதியான ஸ்தலந்தனிலே

அனுஷ்டான முறைகளெல்லாம் ஆகமத்தின் படிநடத்தி
வனந்தனிலே யுள்ளகனி வர்க்காதிகள் ராமனுக்கு

895. அனுஜன்தரப் புசித்தானம்மா அதின்பிறகு ஸ்ரீராமன்
வனமெல்லாஞ் சுற்றிப்பார்த்து மனமகிழ்ந்து
தம்பியொடு

சொல்லுகிறான் லட்சுமணா சுகமளிக்கும் இந்தவனம்
எல்லையிலே வந்தபின்பு இதைவிட்டுப் போவதற்கு

மனமணுவு மில்லையடா மனக்களிப்பு மீறுதடா
தினமதனைக் கழிக்கிலிங்கே திர்ப்த்தியுண்டாம்
மிகவுமடா

கண்டவுடன் பசிதீர்க்கும் கனிகளுமே மிகவுமுண்டு
உண்டதுபோ லாக்குமடா உட்புகுந்தால்
இதில்யாரையும்

துஷ்டமிர்க மொன்றுமில்லை தோஷந்தரும்
பிராணியில்லை
கஷ்டமில்லை நஷ்டமில்லை இஷ்டசித்தி கூடுமிதில்

900. தேவலோக வனமுமிந்தச் சிறந்தவனந்
தனக்கிணையோ?
ஆவலுடன் தேவருமே அகமகிழ வருவாரிங்கு

உலகிலுள்ள புஷ்பங்களும் உயர்ந்தயெல்லாக்
கனிகளோடு
நிலத்திலுண்டாம் பலவிதமாய் நோர்த்தியான
வஸ்துக்களும்

செழித்தோங்கி வருவதைப்பார் செல்வமெல்லாம்
பொருந்துமிகத்
தழைக்கும்வனச் சிறப்பும்பாராய் தரணியிலே
யிதுபோலுண்டோ?

மகத்துக்களா யுள்ளநல்ல மகரிஷிகளிலிருந்து
சுகமடைய வுள்ளதடா சொல்லப்போமோ
இதன்மகிமை

அருள்செய்ய வுள்ளவர்கள் அலுக்கிரகித்தா லிந்தவனம்
பெருமைபெற்றே யிருக்குமடா பேசுமிந்த வாக்குநிஜம்

905. வனத்தைவந்து மிதித்தவுடன் மனக்குறைக
ளொழியுமாயின்
வனப்பெருமை குறித்துரைக்க வாக்குண்டோ
சேஷனுக்கும்

குற்றமுள்ளோ ரித்தலத்தைப் பற்றிவந்தால் சித்தமாகு
அற்றுவிடுங் குற்றமெல்லாம் சித்தசுத்தி
மெத்தவுண்டாம்

துற்குணத்தைப் போக்கிநல்ல சுசிருசியைத் தருமிந்த
அற்புதமாம் வனவாசம் ஆருக்குந்தான்
கிடைத்திடுமோ?

பூர்வபுண்யப் பாக்கியத்தால் பொருந்திற்றடா
நமக்கிதுபார்
நேர்ந்தநல்ல ஞானிகளே தேடத்தக்க ஸ்தலமிதுபார்

சொல்லச்சொல்லிப் பின்னுமென்னைச் சுட்டிவனந்
தூண்டுதடா
எல்லையில்லை சொல்லுதற்கு என்றுராம
னுரைத்துநின்றான்

910. விருட்சாதி யழகுகளை வெகுநேரம் லட்சுமணனும்
திருஷ்டிகொண்டு பார்த்துமிகத் திர்ப்பத்தி
கொண்டான் இவ்விதமாய்

இருவர்களும் மனங்களித்து இருந்தாரம்மா அன்றங்கு
பரமசுகந் தரும்வனத்தின் பாங்குதனை
யென்னசொல்வேன்

கிஷ்கிந்தா காண்டம்

பம்பா தீர்த்தத்தில் ஸ்ரீராமன் சீதையின் மேல்
விரகங்கொண்டு பிரலாபிப்பதும், லட்சுமணன்
தேற்றுவதும், பிறகு சுக்கிரீவனை நாடி வருகையில்
அவன் அனுமாரை யனுப்புவதும் அவர் வந்து
இராம லட்சுமணாளை யழைத்துப்போய்
சுக்கிரீவனிடம் விடுவதும், அப்பால்
அக்கினிசாட்சியாய் சினேகங் கொள்வதும்
சீதையின் நகைகளைப் பார்த்து ராமன்
விசனப்படுவதும்

1. பம்பாதீரக் காட்சிகளைப் பார்த்தன்மேல் ஸ்ரீராமன்
அம்பாளாம் ஜானகிமேல் ஆசைகொண்டு காமமீறி

விரகதாபம் தனில்மூழ்கி வெகுவிதமாய் மனம்நொந்து
உரியஞானந் தனைமறந்து உரைக்கின்றான்
தம்பியிடம்

இந்தப்பம்பா தீரமதில் இருக்கும்புஷ்பா
திகளைக்கொண்டு
எந்தன்மனம் காமன்வசம் இப்பொழுது ஆயிற்றடா

எத்தனையோ விநோதமாக இருக்குமிந்த வனந்தனிலே
சத்தஞ்செய்யுங் கிளிமுதலாய்ச் சகலவிதப் பட்சிகளின்

---

1. தீரம் - கரை

வாக்குதொனியைக் கேட்கையிலே வைதேகி
நினைப்புண்டாய்
ஏக்கங்கொள்ளச் செய்யுதடா என்புத்தி வசமின்றியே

உத்தமியாம் ஜானகியை ஒருநொடியும் பிரிந்தறியேன்
சுத்தமுள்ள அவளுடைய சுகமிப்போ வேண்டுமடா

அவள்பிரிந்த சோகமது அதிகமாக இப்பொழுது
இவடந்தனில் பாதிப்பதை யென்னசொல்வேன்
எழுதாக்குறை

அழுதாலுண்டோ வென்பதுபோல் ஆயிற்றடா
என்சுதிதான்
நழுவிப்போன ஜானகிமேல் நாட்டமிக ஊட்டுதடா

சீதையில்லா வேளையிலே சிலாக்கியமுள்ள
வனத்தில்வந்து
வேதனையைப் படும்படியாய் விளைந்தென்தன்
விதிவசத்தால்

ஜானகியைப் பறிகொடுத்த சங்கடத்தோ டிருக்கையிலே
ஏனென்மேல் மன்மதனும் இரக்கமின்றி
யவன்சக்தியைக்

காட்டிப்பானந் தொடுக்கலாமோ? கருணைசற்றும்
வேண்டாமோ?
ஆட்டியென்னை வாட்டுகிறான் அவனுக்கிது
நியாயமன்று

புண்பட்ட மனமதனைப் புடம்போட்டாப்
போலவேதான்
கண்முன்னே காண்பதெல்லாம் கருத்தைமிக
வருத்துதடா

வைதேகி தனைநினைந்து மனம்நொந்து உருகும்படி
செய்ததிந்தப் பம்பாதீரம் செப்பவுண்டோ
மனக்குறையை

ஏனிங்கு வந்தேனடா என்மனது துடிக்குதடா
ஆனமட்டும் அடக்கினாலும் அதிக்கிரமித்தே போ
குதடா

15. சீதையுடன் வந்தாலன்றிச் சித்தமிங்கு ருசிக்காதடா
மாரரசாம் அவளிருந்தால் மனமிகவும் சுகப்படுமே

வசந்தகாலப் பயனடைய வாயுவுந்தான் குளிரவந்து
இசைந்தடிக்கும் வாடையோடு என்மனதை
வருத்துதடா

சுகமாக வுள்ளதெல்லாம் சுகவீன மாகுதிப்போ
அகங்குளிரச் செய்வதெல்லாம் அகம்வருந்துச்
செய்யுதிப்போ

வனத்தில்சீதை என்னுடனே வாழ்ந்துவந்த
விதங்களைநான்
நினைத்துப்பார்க்கி லிப்பொழுது நெஞ்சுக்குறை
மிஞ்சுதடா

ஜானகியோ டிங்குவந்தால் சகலசுக மனுபவிப்பேன்
ஜானகியைப் பிரிந்துவந்து சங்கடத்தி லழுந்துகிறேன்

20. நானிந்தப் படிவருந்த ஜானகியும் வருந்துவளே
ஏனிந்தக் கஷ்டமெங்கு ளிருவருக்கும் வந்துதடா

விதிவசமு மிவ்விதமாய் விளைந்திடுமென் றறியேனே
மதிமோசம் போனதினால் மகத்தான கஷ்டமாச்சு

பெண்டிழந்து தபிக்குமென்னைப் பித்தனென்று
கண்டதில்லை யிந்தவிதம் கனவிலுமே கஷ்டங்கஷ்டம்

தந்தைவாக்கைப் பரிபாலிக்கத் தருமமுண் டென்றுநம்பி
வந்துவன வாசஞ்செய்தால் இந்தக்கஷ்டம்
வருவதுண்டோ?

காலம்போக்க வந்தேன்வனம் கபடஞ்செய்தான்
அரக்கனெனை
வேலைமிக வளர்ந்ததோடு விசன்மிக நேர்ந்ததிப்போ

25. விசனத்தோடு வேலைசெய்தால் வெற்றிபெறத்
தானுமுண்டோ
இசைந்துவரும் போர்களுக்கும் இன்பமுந்தான்
ஜனிக்கவுண்டோ?

சுக்கிரீவன் றனைநம்பிச் சோகமெல்லா
மொழியுமென்று
பக்கம்போகி லவனாலே பலிதமுண்டோ அறியேனே

ஆசைவார்த்தை கபந்தன்சொன்னான்
அகமகிழ்ந்தோம் மிகவும்தில்
பேசுவோர்க ளனேகருண்டு பிடிப்புள்ள வாக்காகுமோ

உயிருடனே இருக்கவினி ஒருக்காலு மாகாதடா
தயிரியமே யில்லையடா தம்பியெனைப் பிரிந்துநகர்

தனையடைவாய் சுகப்படுவாய் தாய்சுளையும்
ஆதரிப்பாய்
அனைவரிடம் நானிவ்வாறு ஆனதையு
முரைத்திடுவாய்

30. இதுவரையி லனுபவித்த இன்பமதே போதுமடா
எதுவும்வெறுப் பானதன்மேல் இருக்கவுந்தா
னாகுமோடா

மனைவிதனைப் பிரிந்ததன்மேல் மனச்சுகமு
மடைவதுண்டோ
மனம்வெறுத்துப் பிழைப்பதிலே மகிமையென்ப
தனுவுமுண்டோ?

இந்தவிதம் பரிதவித்து எண்ணியெண்ணிப்
புலம்புகையில்
சிந்தைதெளிந் திடத்தம்பி செப்புகிறான்
ராமன்முன்னே

தயிரியமும் முயற்சியுந்தான் தளரவிட லாகாதண்ணா
ஜெயமடைவோம் பயமேயில்லை சீராக ஆமெதுவும்

ஏனிந்த மனக்குழப்பம் எண்ணிமனந் துணிந்திடுவீர்
போனதெல்லாம் நினைப்பதிலே புத்திமிக
மயங்குமண்ணா

35. செய்யத்தக்க காரியத்தைச் சீராகச் செய்வோமாயின்
ஜயமின்றி ஜயமடைவோம் அகம்வருந்த
வேண்டாமெண்ணா

சீதையெங் கிருந்தாலுமே கூணந்தனிலே
யடைந்திடலாம்
வேதனையை விட்டொழித்து விரைவாக முயற்சிசெய்ய

வேண்டுமிப்போ பின்னடைந்தால் விபரீதம்
விளையுமண்ணா
தூண்டுமெந்தன் வாக்கின்படி தூரதிஸ்டி
கொண்டுடனே

வாருமென் றநேகமாக மனந்தேற்றிச் சொல்லுகையில்
தேறுதலை யடைந்துராமன் தெளிவடைந்து
அதன்பிறகு

அங்கிருந்து அனுஜனோடு ஆவலுடன் சுக்கிரீவன்
தங்கியுள்ள ஸ்தலமடையத் தடங்கொண்டு
வருகையிலே

40. பருவதத்தி லிருந்துகொண்டு பார்த்தானந்த சுக்கிரீவன்
இருக்குமிடம் தனிலும்வந்து இம்சிக்க இருவர்களா

அனுப்பிவிட்டா னண்ணனென்று அதிகமாகக்
கவலைகொண்டு
மனமருண்டான் மிகவுமம்மா மந்திரிகளுந் தான்
பயந்தார்

சுக்கிரீவன் சொல்லுகிறான் துணிந்துவரு மிருவர்களும்
பக்கமதில் நெருங்குகின்றார் பதறுதெந்தன் மனமிகவும்

கலங்கிமனங் கஷ்டப்பட்சு காலனைப்போல்
தோன்றுகின்றார்
உலகிலந்த மனிதர்களை ஒருவருந்தான்
ஜயிக்கவுண்டோ

அம்புங்கையு மாகவரும் அவரைக்கண்டால் உயிரதனை
நம்பவுண்டோ பறந்திடுமே நமக்கினிமேல்
வாழ்வேயிலை

45. நாடிநம்மை வருகின்றாரே நாமெங்கு போகவுண்டு
தேடிவரு மிவர்கள்முன்னே தேகந்தனை விடுவதன்றி

மிஞ்சவழி யில்லையென்று மிகவுமம்மா சுக்கிரீவன்
அஞ்சிக்கண்ணீர் சொரிந்துதோடு அமாத்தியரை
யழைத்துக்கொண்டு

அந்தமலை தனிலேயுள்ள அந்தரங்கக் குகைதனிலே
வந்திருந்து ரகசியமாய் வார்த்தைசொல்லு
மவனைப்பார்த்து

மந்திரிகளி லொருவரான மதிமையுள்ள
அநுமாரப்போ
இந்தப்பயம் வேண்டாமையா இங்கெவரும்
வருவாரில்லை

என்றுரைக்கச் சுக்கிரீவன் எவரிவர்க ளென்றறியச்
சென்றவரைக் கண்டுபேசிச் சீக்கிரமாய் வந்திடுவாய்

50. வேறுபடுவர் கொண்டுபோவாய் வினயமாக
நடந்துகொள்வாய்
குறித்தவரை விவரங்கேட்பாய் குணமுடனே
வருவாயென்றான்

பிரமசாரி ரூபங்கொண்டு பிறப்பட்டுப் போயனுமான்
தருமசீல திருவரையுந் தண்டனிட்டு வணங்கிநின்று

எங்கிருந்து வருகிறீர்கள் என்னகாரிய மிங்குவந்த
சங்கதியை விவரப்படச் சத்துக்களே சொல்லுமென்று

பேசுமவன் வாக்கைக்கேட்டு பிரியமாக ஸ்ரீராமன்
ஆசையுடன் சொல்லுகிறான் அனுஜனுடன் இவ்வாறு

நவவிதமாம் வியாகரணம் நான்குவேதம் முதலாக
இவன்படித்தே யிருக்கவேண்டும் இவ்வாறு
கண்டதில்லை

55. வாக்குநய மென்னசொல்ல வழுவின்றிப் பேசுமிவன்
நாக்குச்சுத்தம் போலெவரும் நாட்டிலுண்டோ
பேசுவோர்கள்

சாந்தமென்ன சக்தியென்ன சாரமென்ன தீரமென்ன
ஆந்தரியந் தனையறிய அனுசரிக்கு முறையுமென்ன

இந்தவிதஞ் சொல்லுகையில் இராமன்முகக் குறியறிந்து
சந்துஷ்டி மிகவடைந்து சத்பக்தி கொண்டனுமான்

தன்வரவை யுரைத்ததோடு தன்பேரும் தந்தைபேரும்
இன்னதென்று குறித்துரைத்தான் இராமன்கேட்டு
மிகமகிழ்ந்து

தேடிப்போகும் பொருளெதிரில் தென்படுமோ
ருண்மைபோலக்
கூடிநேசங் கொள்வதற்கே கோரிசுக்கிரீ வனனுப்ப

60. வந்தவனாம் அனுமானிடம் வரவைச்சொல்வா
யென்றுராமன்
தந்தானாஞ்ஞை யந்தப்படி தம்பிசொல்வான்
அனுமனிடம்

உமதுவாக்கைக் கேட்டுமிக உளங்களித்தோம்
மிகச்சுகித்தோம்
எமதுதந்தை தசரதராம் எங்கும்புகழ் பெற்றவராம்

உலகையெல்லா மிகவுமவர் உட்படுத்தி யரசாண்டார்
குலமவர்க்கு ரவிகுலமே குற்றமற்ற புருஷரவர்

அவருக்கிந்த ஸ்ரீராமர் அருமையான ஜேஷ்டபுத்திரர்
இவருக்குநான் தம்பியையா என்னையிவர்
சிஷ்யனென்பார்

வனத்தில்சில காலமட்டும் வாசஞ்செய்ய
வேண்டுமெனும்
மனக்கருத்தைத் தந்தைசொல்ல மார்க்கமதை
யாதரித்து

65. வந்தோமையர் அண்ணனுக்கு வைதேகி யெனும்பத்னி
சுந்தரியா யுள்ளதேவி சுட்டிவண்ணன் கூடவந்தாள்

அண்ணனுக்கும் தேவிக்குமாய் அடிமையாக
நாலிருந்து
எண்ணியெல்லா ஏவல்களும் இஷ்டப்படி
செய்துவந்தேன்

இப்படிப்படி நாட்கடத்தி இருந்தோமையா வனத்தினிலே
வந்தரக்கன் இலங்கேசன் வைதேகியைத்
திருடிக்கொண்டு

போனானையா அதன்பிறகு பொறுக்காமல்
விசனத்தோடு
நானுமெந்தன் நமயனுமாய் நாடிவந்தோம்
மார்க்கம்பற்றித்

தனுவென்னுங் கபந்தனுக்குத் தமயந்தந்தார் சிறந்தகதி
மனமகிழ்ந்து அவனுரைத்தான் வானரனாம்
சுக்கிரீவன்

70. சினேகங்கொண்டால் சீதைதனைச் சீக்கிரத்தி
லடைவீரென்று
தனுவாக்கின் படிவந்தோம் தம்மைக்கண்டு
மனமகிழ்ந்தோம்

சருவஞ்ஞராம் ஸ்ரீராமர் சாதுவான சுக்கிரீவனைச்
சரணமடைந் திடவேண்டிச் சரஸமாக வந்தாரென்று

சுருத்துரைக்கும் வேளையிலே சுண்டலக்குங்
கொண்டான்தம்பி
வருத்தப்பட வேண்டாமையா வல்லபராம் உங்களுக்கு

ஒருவிட உதவியினால் உலகிலேது மாவதற்குக்
கருதவந்த காவசியமுண்டோ கனமுள்ள மகத்துக்களே

சுவ்டந்தனி லழுந்திமிசுக் கண்கலங்கி வாடும்படி
துஷ்டனான வாலியாலே துரத்தப்பட்ட சுக்கிரீவர்

உதவியின்றி வருந்துகிறார் உணர்விழந்த தமயன்வர்வி
பதிவிர்தையாம் சுக்கிரீவரின் பத்னியையும்
கிரகித்துக்கொண்டு

கொடுமைமிசச் செய்வதினால் கொஞ்சமுமே
சுகமின்றித்
தடுமாறும் சுக்கிரீவர்மேல் தயவுகொள்ளு
வேண்டுமையா

உங்களிட வரவறிந்தால் உள்ளமிக மகிழ்ந்துவந்து
தங்களையே அடைக்கலமாய்த் தலைவணங்கி
நடப்பாரையா

ஆகையினால் எந்தன்தோளில் அகமகிழ்ந்து
ஏறுமென்று
தாகமுடன் அனுமன்கோரித் தன்கவரூபம்
காட்டிநின்றான்

அனுமன்தோளி லேறிக்கொண்டார் அந்தவுடன்
இருவர்களும்
மனமகிழ்ந்து குதித்தோடிய மலையேறிச் சுக்கிரீவர்முன்

விட்டுராமன் சேதியெல்லாம் விவரமாசு
அனுமானப்போ
சுட்டிச்சொன்னான் சுக்கிரீவன் சோகமெல்லாம்
ஒழியும்படி

அனுமன்வாக்கைக் கேட்டுமிசு அகமகிழ்ந்து
சுக்கிரீவன்
மனிதவடி வெடுத்துவந்து மாதவனை வணங்கிநின்று

அன்புடனே சொல்லுகிறான் அறிந்தேனையா
அனுமார்சொல்ல
நன்மைசெய்யும் உத்தமரே நானுங்கள் அடிமையையா

சர்வஜ்ஞரே ஸ்ரீராமா சரித்திரமெல்லாம் வாயுசுதர்
விரித்தெனக்குச் சொன்னாரையா விசனமினி
வேண்டாமையா

நேசங்கொள்வோம் பரஸ்பரமும் நெஞ்சுக்குறை
களையொழிப்போம்
தோஷமின்றி வாழ்ந்திடுவோம் துணைவராகக்
கலந்துகொள்வோம்

85. அக்கினிசாட்சி யாகச்சினேகம் அடைந்தாலது
அழியாதையா
சக்கியங்கொள்வோ மவ்விதமாய்ச் சம்மதிக்க
வேண்டுமென்றான்

அந்தப்படி ஸ்ரீராமன் அனுமதித்தான் பிறகனுமான்
சிந்தைமகிழ்ந் தக்கினியைச் சீக்கிரமாய்
வளர்த்தானம்மா

சுக்கிரீவனும் ராமனுமாய்ச் சுசியுடனே யுசிதமாக
அக்கினியை வலஞ்செய்து ஜுவலோடு சக்கியஞ்செய்யக்

கிழக்குமுக மாயிருந்து கிரமமாக ஹோதிகள்
வழக்கப்படி செய்ததன்மேல் வாக்குறுதி
செய்துகொண்டார்

அதன்பிறகு ஒற்றுமையாய் அவரவரின் கஷ்டசுகம்
இதமாகப் பேசிக்கொண்டு இருந்தார்கள்
மறுநாலையில்

90. சுக்கிரீவன் ராமனிடம் சொல்லுகிறான் சுவாமிகேளீர்
அக்கிரமமாய் ஜானகியை அரக்கன்கொண்டு
போகையிலே

நகைகளெல்லாம் துணியில்கட்டி நானிருக்கும்
இடம்நோக்கி
அகம்நொந்து போட்டாள்சீதை அவைகளைநான்
ஜாக்கிரதையாய்

எடுத்துவைத்தே னென்றுரைத்தான் இதைக்கேட்டு
ஸ்ரீராமன்
உடனேயதைப் பார்ப்பதற்குச் சடுதியாகக் கொண்டுவர

வேண்டுமென்று கேட்டுக்கொண்டான் விரைவாகச்
சுக்கிரீவன்
ஆண்டவன்ஸ்ரீ ராமன்முன்னே அந்தநகை
மூட்டைதனைக்

கொண்டுவந்து வைத்தானம்மா கோரியதை
யவிழ்த்துராமன்
கண்டானம்மா நகைகளெல்லாம் கருத்தில்சீதை
நினைவுகொண்டு

65. விசனமதில் மூழ்கிராமன் வீழ்ந்துமண்மேல்
புரண்டழுது
சுசங்கிமனம் நொந்தானம்மா கண்தாரை மிகப்பெருக

அழுதடங்கி யதன்பிறகு அனுடன்றனைப்
பார்த்துரைப்பான்
பழிசெய்த பாபியந்தப் பத்துத்தலை யரக்சனாலே

சீதைமனம் நொந்ததினால் சிறந்தநகை களையெல்லாம்
மாதரசாம் அவளிந்த மலையின்மீது எறிந்துவிட்டாள்

எறியுமந்த வேளையிலே இருந்தஅவள் மனக்குறையைக்
கருதியிப்போ பார்க்கையிலே கலங்குதடா மனமிகவும்

இந்தநகை யாவும்பாராய் எனதுபத்னி
நகைகள்தானோ
உந்தன்மனக் கருத்துரைப்பாய் உள்ளபடி
யென்றுரைத்தான்

தம்பியதைப் பார்த்துரைப்பான் தன்கருத்தை
யன்புடனே
நம்பிச்சொல்லத் தெரிந்ததண்ணா நானிந்த நகை
களிலே

பாதசரங் களையறிவேன் பணிந்தடியை
வணங்குகையில்
சீதைகாலி லிருந்ததுண்டு சேஷமுள்ள நகையறியேன்

ஆகையினா லறிந்துரைக்க ஆகாதென்றான்
லட்சுமணன்
மோகமீறி ஸ்ரீராமன் முறைதப்பிக் கண்கலங்கிக்

கண்குளிர்ச்சி தருவதெல்லாம் கண்டவுடன்
எந்தனுக்குக்
கண்ணொரிச்சல் மிகவுந்தந்து கஷ்டப்படச்
செய்கின்றதே

அசோகந்தரும் பொருள்களெல்லாம் அகம்வருந்தச்
செய்கின்றதே
விசாரப்பட்டு மனமுருக வேளையுந்தான்
கூட்டிற்றிப்போ

சீதையைநான் பார்க்கவுண்டோ திர்த்தியைநான்
அடையவுண்டோ
போத்மெல்லாம் இழந்தேனிப்போ புத்திமிக
மயங்குதிப்போ

ஆபரணங் களையெறிந்து அகம்வருந்திப் போகையிலே
தாபமிகக் கொண்டிருப்பள் தபித்திருப்பள்
உபத்திரவத்தால்

எனையடைந்தும் அவள்வருந்தில் எனச்சகினா
லிழிவன்றோ?
மனம்சகிக்கத் தானுமுண்டோ மகத்தான
கஷ்டமன்றோ?

வல்லவனை யடைபவட்கு வரிசையுண்டு
மிகவுமென்பார்
இல்லையெனக் கந்தப்பாத்யம் இவ்வுலகில்
எள்ளளவுமே

பாரியையை யாதரிக்கப் பலமிருந்தும் பலமிலையே
காரியங்கள் விபரீதமாய்க் கண்டுகண்டு வருமேயாயின்

110. எதைநம்பி மனங்களிப்பேன் எவ்விதமா
யுயிர்தரிப்பேன்
மதியுமில்லை கதியுமில்லை மற்றமுள்ள சுகமுமில்லை

என்னசெய்வே னென்றுமிக ஏக்கங்கொண்டு
பரிதபித்தான்
மன்னவரே யிந்தவிதம் மனம்வருந்த வேண்டாமையா

விசனமதில் மூழ்கிவிடில் வெகுகஷ்டம் வந்திடுமே
அசையும்படி மனதைவிடில் ஆபத்து விளைந்திடுமே

நானுந்தானே யும்மைப்போல நஷ்டகஷ்ட
மடைந்தவனே
ஆனாலும் அதைமனதில் அணுவளவும் எண்ணாமலே

அனுகூலக் காலமது அடுத்துவரு மென்றெண்ணி
மனதைவசங் கொண்டிந்த மலைதனிலே
வசிக்கின்றேனே

115. வானரனாம் நானுங்கூட வந்ததெல்லாஞ்
சகித்துக்கொண்டு
ஆனமட்டும் மனமடக்கி ஆண்டுவந்தேன் சருவஞ்ஞராம்

நீரிந்தப் படிசோக நிலையைக்கொண்டால்
பலங்குறையும்
ஆருமக்குச் சொல்லப்போகும் அறிவுமயம்
நீரேயன்றோ?

இஷ்டப்படி முயற்சிசெய்ய இருக்குமென்னை
நம்புமையா
கஷ்டமெல்லா மொழிந்திடவே காரியங்கள்
செய்வேனையா

தைரியமே கொள்ளுமையா தானவரை
வெல்வோமையா
வைரிதனை வதைபுரிந்து வைதேகியைச் சுகமாகவே

சீக்கிரத்தி லடைவீரையா சித்தமிக மகிழ்வீரையா
ஆக்கிரகமா யரக்கர்மீது அம்பெடுக்கத் துணியுமையா

120. அரக்கன்குலம் பறக்கடித்து அனுகூல மடைந்திடலாம்
வருவதெல்லாம் யினிச்சுகமே வம்புக்கிட
மில்லையையா

எடுக்குங்காரியம் வென்றிடுவோம் இளைக்கமாட்டோ
மிதுநிஜமே
படுபாவி அரக்கனுக்குப் பயப்படவே நியாயமில்லை

கஷ்டமெல்லா மினியொழியும் கவலைகளுந்
தானொழியும்
அஷ்டலட்சுமி யும்மைவந்து அடைந்துவிட்டாள்
சத்தியமாய்

118. வைரி - பகைவன்

ஆகையினால் அசுந்துணிந்து அறிவுநிலை
கொள்ளுமென்றான்
சோகம்விட்டான் ஸ்ரீராமன் சுத்தமனங்
கொண்டுரைப்பான்

சுக்கிரீவனால் ஸ்ரீராமன் தேறுத லடைந்த மேல், ராமன் கேட்க, சுக்கிரீவன் தனக்கு வந்த கஷ்டங்களையும் செய்யவேண்டிய பரிகாரத்தையுஞ் சொல்வதும், இராமன் சக்திகளைக் காட்டுவதும், அப்பால் வாலியோடு சுக்கிரீவன் யுத்தஞ் செய்து திரும்புவதும், மறுபடி யுத்தஞ் செய்கையில், இராம பாணத்தால் வாலி அதமாவதும், இராமனைக் குறை சொல்லிப் பிறகு ஸ்துதிப்பதும்

மதிமோசம் போனேனையா மனமுவந்து
சொன்னீரையா
உதித்துதையா தெளிவெனக்கு உம்முடைய
வாக்கியத்தால்

125. இவ்விதமாய் இதமுரைப்போர் எவருமிலை யுமதுமனம்
செவ்வையாக நானறிந்தேன் கேமமுண்டாம்
நிச்சயமாய்

என்னாலே யாகத்தக்க தேதுசொல்வீர் அதையுமக்கு
முன்னாலே செய்வேனையா மொழியுமையா
வென்றுரைத்தான்

அதைக்கேட்டுச் சுக்கிரீவன் அகமகிழ்ந்து
சொல்லுகிறான்
இதுவரையில் பட்டகஷ்டம் என்னசொல்வேன்
மன்னவரே

எனதண்ணன் வாலியைநீர் இப்பொழுதே
வதைபுரிந்தாய்
கனமடைவதே மனமகிழ்வேன் சுவ்டமெல்லா
மொழியுமென்று

சுக்கிரீவன் வேண்டிக்கொண்டான் சுவாமியதைக்
கேட்டுரைப்பார்
அக்கரமஸ்த னெனும்வாலியை அநஞ்செய்வே
னொருநொடியில்

130. பயமுமக்கு வேண்டாமையா பாபியெனும்
அவனும்மைத்
தயவின்றி நடத்தியதாம் சங்கதியை இங்குரைப்பீர்

கேட்டதன்மேல் சேட்டையுள்ள கிர்பையுமில்லா
வாலியைநான்
வாட்டிவதை புரிந்திடுவேன் வழிகொண்டோ
நானடப்பேன்

சொன்னவாக்கின் படிநடப்பேன் தொல்லுலகின்
தருமமெல்லாம்
முன்னுதாக ஆலோசித்து முறையாகச் செய்திடுவேன்

ஆகையினால் உரையுமென்று அன்புடனே
இராமன்கேட்கத்
தாசமுடன் சுக்கிரீவன் தன்குறையைச் சொல்லுகிறான்

பிரம்மபுத்திரர் ரிட்சரெ ஜ செனும்பெயரை
புடையவரே
தர்மமாக வானரர்க்குத் தருதியுள்ள அரசராகிக்

135. கிஷ்கிந்தா புரிநகரைக் கிருபைபெற ஆண்டுவந்தார்
நிஷ்காரிஷை யாய்நடந்து நிலத்திலிமிகப் புகழடைந்தார்

135. நிஷ்காரிஷை - உறுதி

அவருடைய மூத்தமகன் அதிபலவான் வாலியையா
அவருடைய இளையமகன் அடியேனானையா
கேளுஞ்சொல்வேன்

தந்தைக்கப்பால் வாலிமுடி தரித்துக்கொண்டு
அரசாண்டு
எந்தனையு மாதரித்து எசமடைந்து வந்தானையா

அவனுடைய பகைவனான அரக்கன்மா யாவிவந்து
எவருந்தனக் கெதிரிலையென் றெண்ணியுத்தஞ்
செய்திடவே

வரும்படியா யழைத்ததினால் வாலிமிகக்
கோபங்கொண்டு
புறப்பட்டான் யுத்தஞ்செய்யப் பின்றொடர்ந்தேன்
நானுங்கூட

140. அரக்கனொரு பிலத்வாரத்தை அடைந்ததிலே
யோடிப்போனான்
வரும்வரையி லிருக்கவென்னை வாசலிலே வைத்துவாலி

அந்தத்வாரந் தனில்நுழைந்து அரக்கரோடு
போர்புரிந்தான்
அந்தயுத்த முடிவறியேன் அபரிமித மாசுரத்தம்

த்வாரந்தனில் வந்துதையா நமயன்வர வில்லையையா
த்வேஷமுள்ளோர் அண்ணனுக்குத் தீங்குசெய்தார்
அதினாலே

அண்ணனத மானாலென்றும் அரக்கரென்னை
வதைப்பாரென்றும்
எண்ணியந்தப் பிலத்வாரத்தை இறுகநன்றாய்க்
கல்லடைத்துப்

பயந்துவந்து நகரடைந்தேன் பலருடனே மந்திரிகள்
நயமாக ஆலோசித்து நானரசு செய்வதற்கு

முடிசூட்டினா ரதனைக்கொண்டு முறையாக
நடத்திவந்தேன்
அடித்தரக்கர் களைவதைத்து அன்னனப்பால்
வந்துசேர்ந்து

மந்திரிகளைச் சிட்சைசெய்து மாச்சரியங்
கொண்டென்னைத்
தொந்தரைகள் செய்யவந்தான் துரிதமாசு
அவனைவிட்டு

இந்தமலை தனிலேவந்து இருக்கின்றேன் அதுமுதலாய்
அந்தப்பாவி யென்பத்தினியை அடைந்தழும்பு
செய்யுகிறான்

துந்துபியென் றோரரக்கன் தோன்றியவன்
மகிஷம்போல
வந்துசமுத் திரராஜனை வலவந்தமா யுத்தஞ்செய்ய

அழைத்தானந்த ராஜனஞ்சி ஆகாதப்பா
சண்டைசெய்ய
இலளத்தவனான் இமயமலை எதிர்த்துயுத்தஞ்
செய்யுமென்றான்

அந்தமலை தனைநாடி ஆகிரகமா யரக்கன்சென்றான்
எந்தனாலே யாகாதப்பா எதிர்த்துயுத்தஞ்
செய்வான்வாலி

அவனிடத்துப் போவெனவே அப்படியே ஓடிவந்து
அவசரமாய் யுத்தஞ்செய்ய அழைத்தானையா
வாலிதனை

உடனேவாலி இந்திரன்தந்த ஒளிமிகுந்த மாலையையை
எடுத்தணிந்து எதிரில்வந்தான் இடுத்துத்தள்ளை
அரக்கன்வந்தான்

வாலியப்போ அரக்கன்கொம்பை வலுவாகப்
பிடித்திழுத்து யடித்தான்
நாலுபுறம் சுழற்றியப்பால் நசிக்கும்படி யடித்தான்மேலே

அலறிக்கொண்டு அரக்கன்மாண்டான் அவனுடலைக்
சுழற்றிவாலி
பலமாக விட்டெறிந்தான் பருதூரம் போய்விழவே

155. அந்தத்தேகம் மதங்சுமுனி ஆசிரமத்தின் எல்லையான
இந்தமலை தனில்வீழ்ந்து இரக்தமவர் மேல்விழவும்

அந்தமுனி யறிந்துகொண்டு அப்பொழுதே
தந்தார்சாபம்
இந்தயெந்த னாசிரமத்தின் எல்லையான ஒருயோசனை

தூரமட்டும் வாலியுமே தொடர்ந்தஅவன் கூட்டமுமே
கோரிவந்தா லவருயிர்கள் கூடுவிட்டுப் பறந்திடவே

சாபந்தந்தார் அதுமுதலாய் சாமியந்த வாலியான
பாபியிங்கு வருவதில்லை பயந்தேயவன் ஒதுங்குகிறான்

அந்தவொரு சாரணத்தால் அவனண்டா ஸ்தலமாகிய
இந்தவிந் தனிலேவந்து இருக்கின்றேன் இதுவரையில்

160. சூரனையா வாலிமிகத் தொல்லுலகி லவனைவெல்லக்
கருதியெதிர்ப் போர்களில்லை கைபலத்த தீரனையா

இந்திரன்தந்த மாலிகையை எடுத்தணிந்து
யுத்தஞ்செய்யும்
அந்தவாலி முன்னிலையில் ஆர்வந்தாலும்
அவர்பலத்தை

ஆக்கிரமித்து வாலியதை அடையும்படி செயுமாவிகை
ஜாக்கிரதையாய் யுத்தஞ்செய்வான் சகலரையும்
ஜெயிப்பானவன்

செய்யாத காரியமவன் செய்வானையா பயமின்றி
மெய்யாக அவனைவெல்ல மேதினியி லாருமில்லை

அவனுடனே யுத்தஞ்செய்வோர் அபஜயமே
அடைவாரன்றி
அவனைவதை புரிவோரிலை ஆகையினால் நீரவனை

165. ஜெயித்திடவு மாமோவென்று சித்தமதி
லையங்கொண்டு
பயத்துடனே பேசுகையில் பார்த்தனுஜன்
சொல்லுகிறான்

என்னுடைய தமயன்சக்தி எள்ளளவு மறியாமல்
என்னென்னமோ பேசுகிறீர் ஏனுமக்கு மனதிலையம்

என்னிச்சொல்லுங் காரியத்தை இப்பொழுதே
முடித்துமக்கு
அண்ணன்பலங் காட்டுவரே அறிந்துகொள்ளு
மென்றுரைத்தான்

துந்துமியின் தேகமது தொலைதூரம் போய்விழவே
எந்தன்முன்னே செய்யவேண்டும் என்றுரைத்தான்
சுக்கிரீவன்

காலின்கட்ட விரலினாலே சாதம்பத்துப் போய்விழவே
நீலவர்னன் ராமன்தள்ள நிமிஷந்தனில் பறந்ததம்மா

170. அங்கேழு காலவிருட்சம் அந்தபல முள்ளவைகள்
எங்குமந்த மரங்கள்போல நில்லையம்மா
இரும்புக்கொப்பாம்

அந்தமரங் களைப்பிடுங்கு ஆவல்கொண்டு பலதடவை
வந்துவாலி பிடித்திழுத்து வல்லமையை
மிகவுங்காட்டிப்

பட்டான்வெகு பாடவைகள் பலிதமின்றிப்
போயிற்றென்று
விட்டானப்பால் வாலியெனும் விவரந்தனை
ராமன்கேட்டு

அந்தமரங் களிலேயொன்றை அம்பில்பாணங்
கொண்டடிக்க
அந்தமரங் களையெல்லாம் அந்தபாணந்
துளைத்திடவே

சுக்கிரீவன் கோரியதால் சுவாமியந்த மரங்களேழைப்
பக்கமதில் போய்ப்பார்த்துப் பதமுள்ள
பாணமொன்றை

175. கோதண்டத்தில் வைத்திழுத்துக் குறிபார்த்து
விட்டுவிட்டான்
மோதியொரு மரத்தில்பாணம் முந்திவந்து பட்டவுடன்

மற்றமர வோர்களெல்லாம் வசப்படவே மரங்களாலும்
உற்றபடி நேராக எற்றுநிற்க அவைகளையும்

துளைத்துதம்மா பாணமது தொல்லுலகோ ரதிசயிக்க
இளைத்துதம்மா மரங்களேழும் இராமன்பாணச்
சக்திபாரீர்

ஒன்றுக்கொன்று நேரின்றியே உள்ளதான
மரங்களெல்லாம்
நின்றிடவே நேராக நினைத்துப்பாணந் தொடுப்பா
ருண்டோ

பாணஞ்செய்த விநோதந்தனைப் பார்த்தெல்லோரும்
பிர்மித்துநின்று
ஆனவந்தா னென்னசொல்வோம் அபரிமிதம்
இராமன்சக்தி

180. இப்படியும் பாணமுண்டோ இதையெதிர்ப்போ
ராருமுண்டோ
தப்பவுண்டோ வாலியினி தலையெடுக்கான்
ராமன்கையில்

அதமாவான் நிச்சயமாய் அவன்பயமே
யொழிந்திடுமென்
றதிகதைரியங் கொண்டுமிக அகமகிழ்ந்து ஸ்ரீராமனை

சுக்கிரீவன் வணங்கிமிக ஸ்தோத்திரஞ்செய்தான்
ஆஸ்தையோடு
தக்கபடி யவனைராமன் தழுவிக்கட்டிச் சந்தோஷித்து

அதன்பிறகு மேல்நடக்க லோசித்து ஸ்ரீராமன்
இதமாகச் சொல்லுகிறான் இவ்விதமாய்ச் சுக்கிரீவனை

பார்த்தெந்தன் சிநேகிதரே பட்சமுள்ள சுக்ரீவரே
நீர்சொன்ன அபிப்பிராயத்தின் நேர்மைதனை
யனுசரித்து

185. வாலியின்மேல் கையெடுக்க வருவேனையா
இப்பொழுதே
காலமதில் அவனுடனே கலந்துயுத்தஞ் செய்யுமையா

இந்திரன்தந்த மாலிகையை எதிர்த்துநானே
யுத்தஞ்செய்வேன்
அந்தவொரு மாலிகையை அவமதித்த லாகாதையா

182. ஆஸ்தை – விருப்பம்

இந்திரன்வாக்கை யாதரித்தல் ஏன்னுடைய
சுடமையையா
அந்தப்படி நடவாவிடில் ஆருமெனைச்சு
குறையுரைப்பார்

ஆகையினால் நீரவனை அழைத்துயுத்தஞ் செய்யுமையா
வேகமுள்ள பாணங்கொண்டு விழுந்திடவே
வாலியைநான்

அதஞ்செய்வே னென்றுரைத்த அந்தவாக்கைச்
சுக்கிரீவன்
இதமென்று நம்பிராமன் இஷ்டப்படி
யொப்புக்கொண்டான்

190. அதன்பிறகு அங்கிருந்து அனைவர்களும் கூடிவந்து
மதங்கொண்டு சுக்கிரீவன்மேல் மாச்சரிய மூள்ளவாலி

இருக்கும்கிஷ்கிந் தாபுரிக்கு எல்லோரும் அருகில்வந்து
ஒருவனாசுச் சுக்கிரீவனை ஒதுங்கவிட்டு மற்றவர்கள்

பக்கந்தனி லுள்ளவொரு பாங்குள்ள வனந்தனிலே
தக்கபடி மறைந்திருந்தார் தாஷ்டிகமாய்ச் சுக்கிரீவன்

சிம்மநாதஞ் செய்துயுத்தம் செய்வதற்கு அழைத்தவுடன்
நம்மையிவன் அழைப்பதற்கு நாடினது அதிசயமென்

றெண்ணிவாலி மாலிகையை எடுத்தணியா தோடிவந்து
கண்ணெதிரில் நின்றுகொண்டு கர்ச்சிக்கும்
சுக்கிரீவனை

195. கொழுப்புமிக வாயிற்றோடா சொல்லுவேனென்
றறியா யோடா
பழுக்கப்பார்ப்பே னுன்னையிப்போ பறக்குமுந்தன்
பிராணனென்று

சொல்லியுத்தஞ் செய்தானம்மா சொல்லப்போமோ
அந்தவிதம்
மல்லயுத்தஞ் செய்வோரில்லை மனங்கலங்கும்
யாருங்கண்டால்

இருவர்களு மொரேவிதமாய் இருந்ததினால்
பாணமதை
இருவர்களி லெவர்மீதிலே எய்வோமென்று ஸ்ரீராமன்

எண்ணிமிகக் கவலைகொண்டு இருந்துவிட்டான்
எய்யாமலே
அண்ணனோடு யுத்தஞ்செய்து அசந்தானம்மா
சுக்கிரீவன்

எடுத்தானோட்டம் ரிசியமுகம் இருக்குமிடந்
தனைநோக்கிப்
படபடப்புக் கொண்டவாலி பட்டணம்போய்ச்
சேர்ந்தானம்மா

200. இரகசியமா யிருந்தவர்கள் இராமனுடன்
சேர்ந்துகொண்டு
மகிவுந்தானே விசனங்கொண்டு வேகமாக
மலைக்குவந்தார்

சுக்கிரீவன் லச்சைகொண்டு சோகமுடன் ராமனிட
பக்கமதில் வந்துநின்று பாராமல் தலைகுனிந்து

உம்மைநம்பிப் போனேனையா உபத்திரவந்தை
யடைந்தேனையா
எம்மனதை வருந்தச்செய்து என்னபயன்
அடைவீரையா

பட்டதெல்லாம் போதுமென்று பயந்திருந்த
என்னைவந்து
சுட்டப்படச் செய்துவிட்டீர் கண்கலங்கிக்
கதறச்செய்தீர்

சிநேகங்கொண்டேன் சீரடையச் சிரமப்படவே
செய்துவிட்டீர்
தீனனென்னைக் கருணையின்றித் தெருவில்விட்டீர்
தருமமாமோ

205. உள்ளபல மெல்லாஞ்சொன்னேன் உமதுகையா
லாகாதனில்
எள்ளளவுந் துணியேனையா எண்ணியுத்தஞ்
செய்வதற்குக்

கிளப்பிவிட்டீர் உதைக்கப்பார்த்தீர் கீர்த்தியுண்டோ
சொல்லுமையா
சுளைத்துமிகக் கஷ்டப்படக் ஆட்டித்தந்தீர்
வாட்டங்கொண்டேன்

மாலிதையை யணியாமல் மறந்துவந்தான் வாலியையா
மாலிகையைப் பூண்டிருந்தால் மரணந்தனை
யடைந்திருப்பேன்

இந்தவிதம் முறையிடவே இராமச்சந்திரன்
சுக்கிரீவனைச்
சிந்தைநொந்து வாடவேண்டாம் செப்புகிறேன்
கரணத்தைக்

கேட்டாலென்னைக் குறைகூறாய் கிரமமென்றே
நம்பிக்கொள்வாய்
போட்டால்பாணம் மோசமென்று புத்தியிலே
பட்டுநின்றேன்

வாலியைநான் கண்டதில்லை வந்துயுத்தஞ்
செய்கையிலே
கோலமுடன் ரூபமுந்தான் கொஞ்சமுமே பேதமின்றி

இருவர்களு மொரேவிதமாய் இருக்கக்கண்டு
வாலியைநான்
சரியாகத் தெரிந்தவன்மேல் சரத்தைவிடப்
பயந்துகொண்டு

நின்றுவிட்டே னன்றியிலே நினைத்துமக்குச் சதிசெய்ய
என்றுமெனக் கெண்ணமில்லை இஷ்டரான
உமதுமீதில்

பாணமது வீழ்ந்தாலந்தப் பாபமெனைச் சேருமையா
கோணலாக முடியுமையா குவலயத்தோர்
பழிப்பாரையா

உபகாரஞ் செய்வதற்கே ஒதுங்கிநின்றேன்
உண்மையாக
அபகாரஞ் செய்யுமெண்ணம் அணுவளவு
மில்லையையா

நேசரும்மை மோசஞ்செய்ய நினைத்ததில்லை நிச்சயமே
ஆசையுட னுமக்குதவி அன்புடனே செய்யவந்தேன்

மனதில்குறை கொள்ளவேண்டாம் மறுபடியுங்
குறிப்புடனே
மனதில்துணிந்தே யுத்தஞ்செய்வீர் மர்மங்கொண்டு
வாலியைநான்

அதஞ்செய்யே னிதுநிசமே ஆயாசம் வேண்டாமென்று
அதிகமாக விவரஞ்சொல்லி ஆறுதலைச்
செய்ததன்மேல்

சொன்னதெல்லாம் நியாயமென்று சுக்கிரீவன்
நம்பியப்பால்
தன்னிலுள்ள மனக்குறையைத் தள்ளியுத்தம்
மறுபடியும்

செய்வதற்குத் துணிந்தானம்மா ஸ்ரீராமன்
அப்பொழுது
ஐயமின்றிச் சுக்கிரீவனை அறிந்துகொள்ளத் தக்கதாகச்

220. சுக்கிரீவன் சுழுத்துதனில் சோபிதமாய் விளங்கிடவே
தக்கபுஷ்ப மாலையொன்று தரித்திடவே கொண்டுவர

சுட்டளையைச் செய்தானம்மா சால்நொடியில்
லட்சுமணன்
இட்டப்படிக் கஜபுஷ்பம் எடுத்துவந்து மாலைகட்டி

அணிந்ததன்மே லழைத்துக்கொண்டு அனைவர்களு
டங்கிருந்து
குணமுடனே வந்துசேர்ந்தார் குறித்துயுத்தஞ்
செயுமிடமே

வரும்வழியில் அதிசயமாய் வனமொன்று
இருக்கக்கண்டு
அரிதான வாத்தியங்கள் அதில்முழங்க
அதையுங்கேட்டு

அந்தவன மகிமைதனை அறிந்திடவே ஸ்ரீராமன்
எந்தனுக்குச் சொல்லுமென்று இஷ்டனான
சுக்கிரீவனைப்

225. பார்த்துக்கேட்டா னந்தவுடன் பக்தியொடு சுக்கிரீவன்
வார்த்தைசொல்வான் ராமனிடம் வனமகிமை
யறிந்திடவே

சத்துக்களா யுள்ளநல்ல சப்தஜனா ளெனும்ரிஷிகள்
சுத்தமுடன் தபசுசெய்த சோலையிது மிகவடத்தி

சகலவிதக் கனிவர்க்கங்கள் சகலவிதப் புஷ்பங்களும்
வகைவகையா யிதிலேயுண்டு வந்ததெந்தப்
பிராணிகளும்

உள்புகுந்தால் திரும்பியப்பால் உயிருடனே
வெளியில்வர
எள்ளளவும் ஆசையில்லை இதிலந்த ரிஷிகளெல்லாம்

எழுநூறு வருஷக்காலம் இணங்கிமிக அருந்தவத்தை
ஒழுங்காகச் செய்துவந்து உடலோடு
சுவர்க்கஞ்சேர்ந்தார்

230. அதன்பிறகும் அவர்களிந்த அருமையான வனந்தனிலே
அதிகப்பிரியங் கொண்டுவந்து அனுபவிப்பார்
சுகமிகவே

அந்தவித மிப்பொழுதும் அதிசயங்கள் விளங்குமிதில்
வந்திருப்பா ராகையினால் வாத்தியங்கள்
முழங்குதையா

மகத்துவமுள்ள வனமிதனை வணங்குவோர்க்கு
மனங்குளிரும்
சுகமிகவே கூடுமையா சூரத்துவமும் பெருகுமையா

வனத்தைநோக்கித் தம்பியொடு வணங்குமையா
வென்றுரைத்தான்
மனமுவந்து ஸ்ரீராமன் வணங்கினனே தம்பியொடு

முன்போல ஸ்ரீராமன் முதலோரும் மறைந்திருக்க
என்முன்னே யுத்தஞ்செய்ய இப்பொழுதே
வருவாயென்று

சவுரியங்கள் மிகவும்பேசிச் சண்டைசெய்யச் சுக்கிரீவன்
அவசரமாய் இராக்காலத்தில் அழைத்திடவும்
வாலியவன்

மனைவிகளோ டுறங்கும்நல்ல மாளிகையில் சுகப்படவே
மனங்களித்தே யிருக்கையிலே மறுபடியும் தம்பிவந்து

அட்டகாசஞ் செய்யுமொரு அந்தச்சந்ததந்
தன்னைக்கேட்டு
இட்டங்கொண்டு மறுபடியும் பட்டபாடு
போதாதென்று

அமர்புரிய வந்தழைக்கும் அவன்கொழுப்பை
யடக்குதற்கு
மமதையுள்ள வாலியப்போ மகத்தான
கோபங்கொண்டு

யுத்தஞ்செய்ய வேண்டுமென்று யுவதிகளை
விட்டெழுந்தான்
பத்தினியாம் தாரையப்போ பர்த்தாவைத்
தடுத்துரைப்பாள்

என்பிராண நாயகரே ஏனிந்தத் துணிச்சல்வேண்டாம்
தன்பலத்தைக் கொண்டழைத்தான் தம்பியென்று
நம்பிக்கொண்டு

துணிகின்றீர் யுத்தஞ்செய்யத் தோஷம்வரும்
உதவியோடு
குணமடைய வந்தவனாம் குறித்துரைப்பேன்
பின்னுங்கேளீர்

அயோத்திநகர் அரசர்களாம் அண்ணன்தம்பி
இருவர்களாம்
உயர்ந்தபல சாலிகளாம் உலகில்மிகச்
சிறந்தோர்களாம்

ராமலட்சு மணர்களென்று ரவிகுலத்தி லுதித்துவந்து
சீமையெங்கும் அடக்கியாண்டு சீர்படுத்த வந்தவராம்

ரிசியமுகப் பருவதத்தில் ரெண்டுபேருங் கூடிவந்து
வசிப்பதாக மகனங்குதன் வந்தனெக்குச்
சேதிசொன்னான்

245. அவர்கள் பலங் கொண்டுவந்து அழைக்கின்றா
னுனதுதம்பி
அவன்மீது ட்சாத்தரம்வேண்டாம் அவனுமக்கு
அடங்கினவன்

மீறியும்மை யேதுஞ்செய்யான் மிகவும்மைப்
பணிந்திடுவான்
கூறுமெந்தன் வாக்கைக்கேட்டால் குணமடைவீர்
மணம்பெறுவீர்

சுக்கிரீவனைப் போலத்தம்பி சொல்லவுண்டோ
ஜகந்தனிலே
துக்கப்படச் செய்யாமல் துணைசெய்வீர்
அவனுக்கிப்போ

இதுவரையி லவனைமிக இம்சைசெய்தீர் போதுமது
அதிகமாகக் கொடுமைசெய்து ஆவதென்ன
அறிந்துபாரீர்

தம்பியைநீ ரழைத்துவந்து தயவுடனே இளவரசு
நம்பித்தந்து ஆதரித்தால் நாளும்நன்றி மறவானவன்

250. உம்மிடத்து யுத்தீஞ்செய்து உபத்திரவங்கள்
மிகவடைந்து
தம்மிடத்து யுத்தஞ்செய்யத் தைரியமாய் மறுபடியும்

---

245. ட்சாத்தரம் - கோபம்

வருவதுண்டோ குறித்தறிவீர் வலுவுடனே வந்தவனே
இருந்திடுவீர் போகாமல் எதிர்ப்பதற்குச் சமயமல்ல

சொன்னபடி கேளுமையா சூட்சுமங்கண்டு
நடப்பீரையா
என்னையாளும் பிராணேசரே என்றுமிக
வேண்டிக்கொண்டான்

அந்தவார்த்தை களைக்கேட்டு அவளைப்பார்த்து
வாலிசொல்வான்
எந்தன்மீ தன்புனக்கு இருக்குதென்று அறிந்தேனடி

தருமாத்மா ராமனடி தருமந்தப்பி நடவானடி
மருமமெல்லா மறிவேனடி மண்டைவிதி தப்பாதடி

255. எனக்கிளைத்த தம்பிவந்து என்னுடனே போர்புரிய
மனந்துணிந்து அழைக்கையிலே மனமசந்து
நானிருந்தால்

ஜகமெங்கும் சிரிக்கும்படிச் சீரழிய வாகுமடி
மகிமையப்பா லில்லையடி மானங்கெட்ட
பிழைப்பாமடி

எவருடைய பலத்தைக்கொண்டும் என்னைத்தம்பி
வெல்லமாட்டான்
குவலயத்தில் எந்தன்முன்னே கோரியாரும்
வரவுமாட்டார்

கருதியென்னை யழைக்கையிலே கஷ்டம்வரு
மென்றெண்ணி
இருந்துவிட்டா லெனக்கெசசு இல்லையடி
உயிரையெண்ணி

ஒருக்காலும் பின்னடையேன் உசிதமல்ல பயப்படுதல்
நரியைக்கண்டு சிம்மமது நடுங்கிநின்று
அடங்குமோபார்

260. தம்பியைநான் வதைபுரியேன் தண்டித்துத்
துரத்திடுவேன்
நம்பெந்தன் வாக்கையென்று நயந்துரைத்தா
னதன்பிறகு

புருஷன்ஐய மடைவதற்குப் பொறுப்புடனே
வினைகள்செய்து
பரிதபித்துத் தாரைமற்ற பத்னிகளை
யழைத்துக்கொண்டு

அந்தப்புறம் போனாளம்மா அதன்பிறகு
வெளியில்வாலி
வந்துசுக்கிரீ வனுடனே மல்லயுத்தஞ் செயத்தொடங்கி

நாடுநகர் நடுங்கிடவே நாலுதிக்கும் ஒடியுத்தம்
காடுமேடு எங்குஞ்சென்று கடினமாகச் செய்கையிலே

சுக்கிரீவன் பலங்குறைந்தான் சுவாமியதைக்
கண்டுடனே
தக்கநல்ல பாணமதைத் தட்சணமே விடவுமது

265. வாலிமார்பில் படவுமவன் வலுவிழந்து
விழுந்தான்மண்ணில்
நாலுதிக்கும் பார்த்தானம்மா நாடிவாலி யாருமில்லை

துடித்துமிகப் பரிதபித்துத் தொடுத்தவரார்
பாணமென்று
படபடப்பாய்ப் பேசிக்கொண்டு படுத்துக்கீழே
கிடந்தானம்மா

மாலிகையின் மகிமையினால் மரணந்தனை
யடையாமல்
வாலிநல்ல களையுடனே வருத்தங்கொண்டு
பேசுகையில்

அடுத்தவன்முன் ஸ்ரீராமன் அனுஜனோடு
வந்துநின்றான்
சுடந்தவனைப் பேசுகிறான் கண்கலங்கி வாலியம்மா

ஏனென்மேல் பாணந்தனை எய்தாயடா ஸ்ரீராமா
நானுனக்குப் பகைவனாயின் நாடியெனை
வதைத்திடலாம்

270. எனைக்கொன்றா லுனக்குதினால் என்னபய
னுண்டுரைப்பாய்
உனதுசக்திக் குழகிதுவோ ஒளிந்துபாணந்
தொடுத்துதான்

வேதசாஸ்தரா திகளறிந்து விதிவிலக்கின் படிநடக்கும்
போதமுள்ளோ னாயிருந்தால் புத்தியீன மாசுத்தாலே

என்மீது கையெடுக்காய் எதிரில்நின்று
யுத்தஞ்செய்வாய்
உன்திறத்தை யறிவேனப்போ ஒளிந்திருந்து
கெடுத்தாயடா

ட்சத்திரியனா யிருந்துமிந்தச் சதிமோசஞ் செயலாமோ
உத்தமனென் னுலகிலுன்னை ஒருவருந்தான்
சொல்லுவரோ?

தருமமெல்லாங் கைவிடுத்தாய் தடந்தப்பி நீநடந்தாய்
வருவதுண்டோ புகழினால் வஞ்சகமேன்
நெஞ்சுகொண்டாய்

என்னுடனே வேறொருவன் எதிர்த்துயுத்தஞ்
செய்கையிலே
என்னைவதை நீபுரிதல் ஏற்குமோபார் தருமமாக

இந்தவிதம் நேருமென்று என்மனைவி சொன்னதற்கு
அந்தப்படி நினைக்கவேண்டாம் அக்கிரமமாய்
ராமனேதும்

செய்யானென் றுறுதிசொன்னேன் செப்பினது
பொய்யாயிற்று
மெய்யாயிற்று தாரைவாக்கு மிகவும்பாபம் சேருமுனை

சீதைக்காகச் சுக்கிரீவனை சிநேகங்கொண்
டெனைவதைத்தாய்
ஏதவன்றா னுனக்குதவி என்போலச் செய்யமாட்டான்

அரக்கனனெக் கடங்கியுனை அடிபணியச்
செய்திடுவேன்
பிரியங்கொண்டு உனக்குவெகு பெருமையெல்லாம்
நான்தருவேன்

அரைநொடியில் ஜானகியை அரக்கனுந்தன்
வசஞ்செய்ய
இருக்குதடா சக்திமிக என்னிடத்தில் அறியிலையே

தருமார்த்த மிரண்டும்விட்டுத் தாகம்காமந்
தனிலேகொண்டு
கருமஞ்செய்யு முனக்குநல்ல கதியுண்டோ நரகமன்றி

இந்தவிதம் பலவகையாய் இகழ்ந்துரைத்தான்
ராமன்கேட்டு
அந்தவாலி தனைப்பார்த்து அறிவடையச்
சொல்லுகிறான்

அழியாத கதியடைய அம்புன்மே லெய்தேனடா
பழித்தென்னைச் சொல்வாயாயின் பாபமுனைச்
சேருமடா

வழியோடு செய்திருக்க வாயில்நிந்தை யாகாதடா
இழிவான கதியடைவாய் என்னைக்குறை கூறினக்கால்

285. வரமடைந்த பெருமையினால் வரம்புகடந்
திளையோனைப்
பரிதபிக்க இம்சைசெய்து பாபமற்ற அவன்பத்தினியை

கைப்பற்றிய உன்னுடைய காரியத்தை
எண்ணிப்பாராய்
செய்கையது குற்றமன்றோ செம்மையாக
யோசித்துப்பார்

அசுமுடையோ னெவனாயினும் அடக்குவது
எனக்குத்தர்மம்
இகத்திலுன்னை ஜெயிப்பதற்கு எவருமில்லை
யென்றுமிக

அகந்தையுள்ள வுன்னைவந்து அடுப்பதிலே
பயனடைவேன்
பகைவனைப்போ லெண்ணியுன்னைப் பரமபதஞ்
சேர்த்திடவே

எண்ணிச்செய்தே னெனக்கதினால் இன்பமுண்டு
நன்மையுண்டு
அண்ணனான உனக்குக்கதி அளித்திடவே
யுனதுதம்பி

290. அனுகூலஞ் செய்தானென்று அறிந்துகொள்வாய்
இதுவுமன்றி
மனமுவந்தே யிந்திரன்தந்த மாலிகையைக் கனப்படுத்த

மறைத்தேனன்றி யுன்னைவெல்ல மாட்டாமோ
பலமெனக்குக்
குறித்தறிவா ராருமுண்டோ குவலயத்தி லெனதுசக்தி

தந்திரங்கள் பலவுமுண்டு தரணியிலே அமர்புரிய
அந்தரியங் கண்டறிந்தால் அலப்பமாட்டாய்
பலவிதமாய்

உனதுசெய்கை யுன்மனதில் உறுத்தும்படி
இருக்கையிலே
எனைக்குறையுஞ் சொல்லலாமோ ஏன்வீணாய்ப்
பேசுகிறாய்

எனதுநடை தனைத்தழுவும் எல்லாவேத சாஸ்திரங்கள்
நினைத்தபடி சிர்ஷ்டியாதிகள் நிமிஷமதில்
செய்திடுவேன்

295. என்னுடைய நிலைமைதனை எண்ணியறி யாதவர்கள்
என்னைக்குறை கூறுவார்கள் இன்பமின்றி
யலையுவார்கள்

பரமார்த்த ரகசியங்கள் பார்த்தறிந்து கதியடையக்
கருமபந்தம் ஒழிப்பதற்குக் கால்தொழுவா
ரென்னைவந்து

பந்தமெல்லாம் ஒழித்தவர்க்குப் பரமபதம்
நான்தருவேன்
உந்தன்பந்தம் ஒழிவதற்கு உள்ளறிவை
யொட்டிப்பாராய்

மரணக்காலந் தனிலேபல மனக்குறைகள்
சொல்வோர்க்குக்
கருமபந்தந் தொலையாதடா கண்டுண்ணில்
திர்ப்திகொள்வாய்

ஜகந்தனிலே நடப்பதெல்லாம் ஜகதீசன்
ஆஞ்ஞையன்றோ
அகங்காரிக்கும் உன்னாலே ஆவதுண்டோ
அதையும்பாராய்

300. இருக்கும்பலந் தனைநம்பி எத்தனையோ பேருலகில்
வருங்கேடு அறியாமல் வகைமோசம் போவாரடா

கருத்தடக்கத் தெரியாமலே காமாதுரங்
கொண்டலைவும்
கருமிகள்போல் அகங்காரித்தால் கஷ்டப்பட
வேண்டுமடா

ஐம்புலன்கள் தம்மைநம்பி அறிவிழந்தே னுளறுகிறாய்
வையகத்தின் வாழ்வைநம்பி வகைமோசம்
போகவேண்டாம்

கைபலத்தை நம்பிக்கொண்டு கருவப்படும்
போர்களெல்லாம்
செய்வதொன்று மில்லையடா சீரழிந்து மடிவாரடா

உலகவின்பஅணுவையுமே அசைப்பதற்கு ஆகாதடா
எவராலும்
வணங்கியீச னருளடைவாய் வாய்மிரட்டா
லாவதென்ன?

305. அகந்தையெல்லாம் ஒழியுமடா அந்தியகாலம்
நெருங்கிவிட்டால்
மிகவுங்கஷ்டம் வந்ததன்மேல் ஈர்சைகொள்ள
லறிவீனமே

---

301. காமாதுரம் - காம ஈடுபாடு

305. ஈர்ஷை - பொறாமை

அநித்தியமாந் தேகந்தனை அடைந்தசுத்வதைக்
கொள்வோர்கள்
இனமறியார் கனமழிவார் ஈவுத்துஞ் சுகமடையார்

உலகவின்பந் தன்னைநாடி உளமகிழும் போகளுக்குப்
பலவிதமாய்க் கஷ்டம்வரும் பார்த்துன்னில்
தெளிந்திடுவாய்

சாந்திதனை யடைந்துநல்ல சமதிர்ஷ்டி
கொண்டவர்க்கு
ஆந்தரியம் விளங்குமடா ஆனந்தங் கூடுமடா

பேதபுத்தி தனைவிடுவாய் போரின்பந் தனைநாடுவாய்
ஆரிக்கும் எனைக்கூடுவாய் அனுக்கிரகிப்பேன்
சுதியடைவாய்

310. தன்னையறி யாமல் வீணாய்த் தத்தளிக்க
வேண்டாமடா
உன்னைநீ யறிந்துகொண்டு உளமகிழ்வாய் நித்தியமாய்

நிலையில்லா வாழ்வதனை நித்தியமா
யெண்ணிக்கொண்டு
அலையவேண்டாம் அருள்புரிவேன் அகண்டாகார
விர்த்தி கொள்வாய்

தேடிவரும் பாக்கியத்தைத் தியஜித்துவீணாய்
அறிவிழந்தால்
பாடுனக்கு மிகவுமுண்டாம் பட்சத்தோடு
சொல்லுமெந்தன்

வாக்கைக்கேட்டு வழிபடுவாய் வாலியென்று
ராமன்சொல்ல
நோக்கிநல்ல தெளிவடைந்து நுண்ணறிவு
கொண்டுவாலி

அருள்பரனே ஸ்ரீராமன் அகண்டபரி பூரணனே
பரமபக்தி தொண்டவனைப் பணிந்தா லுண்டு
சுதிநமக்கு

315. ஆதரிக்க வுள்ளவனை ஆக்கிரமித்துப் பேசினது
நீதியல்ல நியாயமல்ல நினைவழிந்து பேசிவிட்டோம்

தாய்தந்தை குருதெய்வம் சகலமுமே அவனாவன்
வாய்மீறிச் சொன்னதெல்லாம் மதியீன மென்றுமிகத்

தன்னைத்தானே நொந்துகொண்டு தலைவணங்கி
ஸ்ரீராமனை
உன்னுடைய மகிமையெல்லாம் உணராம
லுளறிவிட்டேன்

ஸ்ரீராமனா சரணமையா ஜெகதீசா சரணமையா
நாராயணா சரணமையா நான்செய்த
பிழைபொறுப்பாய்

சாமளனே சத்குருவே சத்பொருளே சாந்தமூர்த்தே
காமக்குரோதாதிகளொழித்த கர்த்தனேயென்
கண்மணியே

320. உத்தமனே நித்தியனே பக்திகொண்டேன் சித்தமதில்
சுத்தனாக்கி முத்திதந்தாய் வித்தைதந்தாய்
குற்றம்போக

அகங்காரித்தேன் மகிவுமையா ஆணவத்தை
நிலையென்றெண்ணி
இகபோகம் அழியுமெனும் எண்ணமணு வில்லாமல்

தேகந்தனை யபிமானித்துத் தேசியாக விவகரித்து
ஊகமின்றி மோகங்கொண்டு உலகில்வீணாய்க்
கெட்டலைந்தேன்

ஒழித்துவிட்டாய் பந்தமெல்லாம் உள்ளறிவும்
விளங்கச்செய்தாய்
அழியாத கதியளித்தாய் ஆதரித்தா யன்புகொண்டு

மறைந்துபாணந் தொடுத்தாயென்று மதியீனத்தா
லுரைத்தேனையா
குறித்துந்தன் சக்திதனைக் கொஞ்சமும்நா னறியாமல்

325. மாலிகையின் மகிமைதனை மனதில்கொண்டு
அகங்குளிர்த்தேன்
மாலிகையின் மகிமையுந்தன் மகிமையின்முன்
மறையுமையா

அண்டத்தின்முன் அணுவுபோல ஆமெந்தன்
பலமெல்லாம்
கண்டறிந்தே லுனதுசக்தி கடவுளரே நானடிமை

அறியாம லலப்பிவிட்டேன் அன்புகொண்டு
ட்சமித்திடுவாய்
குறித்துரைக்க வுன்னிடத்துக் குற்றமேது
மில்லையையா

நம்பினேநீ யாதரிக்கத் தயவுகொண்ட காரணமே
அம்புவியின் பந்தமெல்லாம் அடியேனை
விட்டொழியே

செய்தனையா தம்பியெந்தன் ஜென்மபந்த
மொழித்தவனாம்
கைவிடாமல் அவனைக்காப்பீர் காருண்யக் கடவுளரே

330. என்னைவெல்ல யாருமில்லை என்றகர்வ
மொலிடுமிகச்
சின்னப்புத்தி யடைந்திருந்தேன் சின்மயனே
அறிவடைந்தேன்

ஜகதீசா உனதுபாத தரிசனத்தால் தெளிவடைந்தேன்
சுகவாக்காய் நீயெனக்குச் சொன்னதெல்லாம்
உண்மையையா

சுநியபலித்துக் கறைசேர்க்குக் சுருணைகொண்டு
சரந்தொடுத்தீர்
மறிகொண்டு உம்முடைய மகிமையெல்லா
மறிந்தேனிப்போ

இகத்திலெனக் கேதுமினி இச்சையில்லை
யொழிந்துதையா
சுகமடைவேன் உமதருளால் சுத்தனாவேன் நித்தியமாய்

பாசமெல்லாம் ஒழிந்துதையா பரம்பொருளே
யருளுடனே
நேசங்கொள்வீ ரினியெனக்கு நெஞ்சுக்குறை
யேதுமிலை

335. தம்பியையுன் படுத்திவிட்டேன் தத்தளித்தே
மெலிந்தானவன்
நம்பியும்மை வணங்கினவன் நன்றாக ஆதரிப்பீர்

அய்சுதனைத் தங்களிட அடைக்கலமாய்த்
தந்தேனையா
பங்கமின்றி யவனைக்காத்துப் பரிபாலிக்க
வேண்டுமையா

இத்தவிதஞ் சொல்லுகையில் இளைப்படைந்து
மயக்கங்கொண்டான்
அந்தவேளை தாரைவந்து அலறிக்கொண்டு
மேல்விழுந்து

பலவிதமாய்ப் புலம்பியவன் பதியுடனே சகமனம்
மலிந்துசெய்யத் துணிந்துவிட்டாள் மாருதியாம்
அனுமான்வந்து

தத்துவங்கள் மிகுவுரைத்துத் தைரியத்தை
யடைந்திடவே
எத்தனையோ சொன்னதோடு ஏதுமறி யாதவனாம்

340. அங்கதனை அன்புடனே ஆரணைக்க நீரிருந்து
மங்களமாய் முடிசூட்டி மகிமையுடன் அவனரசு

செய்தவனைப் பார்த்துமிக்க சித்தந்தனில்
மகிழ்ந்திடுவீர்
மெய்மறந்தே விசனங்கொண்டு மெலிந்திடவே
யாகா தம்மா

ஆகையினால் வருந்தவேண்டாம் ஆறுதலை
யடையுமென்று
தாகங்கொண்டே சொன்னதெல்லாம் தடுத்துவிட்டுத்
தாரைசொல்வாள்

மகனைக்கொண்டு நானினிமேல் மகிழ்ந்திடவே யே
தும்மிலை
அகந்துணியே னுயிர்தரிக்க அரசரெந்தன்
பிராணேசரைப்

பிரிந்திருக்க மாட்டேனையா பிரேமையுடன்
அங்கதனைச்
சரியாக ஆதரிக்கச் சக்தியுள்ளோன் சுக்கிரீவனே

345. எனக்கினிமேல் வாழ்வுமுண்டோ எனைத்தடுப்போர்
யாருமுண்டோ
மனஞ்சலித்தே விருப்பதலிலே மகிமையுண்டோ
சொல்லுமென்றாள்

அந்தவுடன் பிரஞ்ஞைகொண்டு அழைத்தான்வாலி
சுக்கிரீவனை
வந்தவனும் முன்நின்றான் வாய்திறந்து
வாலிசொல்வான்

சுக்கிரீவனை யனுக்கிரகித்து வாலி கதியடைந்தமேல்
சுக்கிரீவனும் தாரையும் விசனத்தால்

தேகாபிமானத்தைவிட்டுப் பேசுவதும், அவர்களைக்
கரை யேற்றுவதும், தாரையைச் சுக்கிரீவன்

சுவீகரிப்பதும், அவனுக்கும் அங்கதனுக்கும் அரசுமுடி
சூடுவதும், அதை ஸ்ரீராமன் கேட்டு மகிழ்வதும்

உன்னைமிக வுபத்திரவித்தேன் உருகிமனம்
நொந்துபோனாய்
என்னசெய்வே னதையெண்ணி இப்பொழுது
வருந்துகிறேன்

உடன்பிறப்பை யுபத்திரவித்து உளங்களித்தேன்
அகங்கொழுத்துக்
கொடுமைசெய்த பாவியென்மேல் குற்றமுண்டு
பொறுத்துக்கொள்வாய்

அயரபுத் திரனைப்போல அங்கதன்மே
லன்புகொண்டு
அவனைமிகப் பாதுகாப்பாய் அவனேயுந்தன்
மகனாவனே

350. என்னரசு நீயடைவாய் இளவரசு மகனுக்காக்கி
உன்னுடைய பெருமையெண்ணி உண்மையாக
நடந்துகொள்வாய்

இரகுராமர் காரியத்தில் இராப்பகலும்
சினத்தைக்கொண்டு
தருதியாக முயற்சிசெய்வாய் தப்பவேண்டாம்
ஒப்பும்படி

நடந்தவர்க்கு உதவிசெய்தால் நன்மையுண்டு
மென்மேலும்
தடமறிந்து நீநடப்பாய் தரணியிலே புகழடைவாய்

நீடூழி வாழ்ந்திருப்பாய் நிகிலஜகக் காரணரும்
வாடாமல் ஆதரிப்பார் வரிசைமிக அடைவாயடா

நடந்ததெல்லா மிப்பொழுது நன்மையாக முடிந்துதடா
சுடமொழியைச் செய்தவன்மேல் கருணைமிக
வந்துதடா

355. சவுரியத்தை விர்த்திசெய்யும் சங்கடத்தைப்
போக்கிவிடும்
எவரும்வந்து எதிர்த்துநின்றால் இழுத்துக்கொள்ளும்
அவர்பலத்தை

இந்தவிதம் மகிமையுள்ள என்கழுத்தில் அணிந்துள்ள
அந்தமுள்ள மாலிகையை அணிந்துகொண்டு
சுகப்படுவாய்

என்றுசொல்லத் தந்தானதை இருகரத்தால் சுக்கிரீவன்
நன்றுசெய்யும் அதனைவாங்கி நமஸ்கரித்துத்
தரித்துக்கொண்டான்

அதன்பிறகு அங்கதனை அருகழைத்துக் கண்மணியே
இதமுனக்குச் சொல்லுகிறேன் என்வாக்கின்
படிநடப்பாய்

360. உன்னுடைய சிறியதந்தை உனக்குவனே தந்தையென்று
எண்ணியவ னிஷ்டப்படி எப்பொழுதும்
நடந்துகொள்வாய்

ஸ்ரீராமச் சந்திரரும் சீராக வுனைக்காப்பார்
நேராக வாழ்ந்திடுவாய் நிலத்தில்புக முடைந்திடுவாய்

என்னையெண்ணி விசனம்வேண்டாம் எதுக்கும்நீ
யஞ்சவேண்டாம்
மன்னவராம் ஸ்ரீராமரை மறக்கவேண்டா
மென்றுரைத்து

ஆவிதனை விட்டானம்மா அந்தவுடன் அனைவர்களும்
கோவென்றே கதறினார்கள் குறையுடனே மனங்கலங்கி

தாரைமிகப் புலம்பியள் தலையிலுமார் பிலுமறைந்து
மீறியுள்ள சோகமதால் மேல்விழுந்து பாலதனை

365. ஆலிங்கனஞ் செய்துகொண்டு அகமெலிந்தே
யழுததன்றி
கோலங்கெட்டே யினியுயிரைக் கொண்டிருக்கப்
போகாதென்று

அனுமரணஞ் செயத்துணிந்தாள் அவள்மகனோ
விசனமதால்
மனமுருகி மெய்மறந்தான் மற்றுமுள்ள பத்தினிகள்

பதிமரண மடைந்ததற்குப் பரிதபித்து மிகுமனம்
கொதித்தவர்கள் புரண்டழுதார் கோலங்கெட்டு
நாற்புறமும்

சகலருமாய்ப் பரிதபிக்கும் சங்கடத்தைக் கண்டவுடன்
அகம்நொந்து சுக்கிரீவன் அண்ணன்முன்னே
வந்துநின்று

அனுசிதமாம் காரியத்தை அறியாமல் செய்துவிட்டேன்
மனதொப்பி யுன்னைச்சொல்லி மனந்துணிந்தேன்
மதியிழந்து

---

369. அனுசிதமாம் காரியத்தை - செய்யத்தகாத செயலை

370. என்னசுக மடைந்தேனிப்போ இரக்கமில்லாப்
பாவியானேன்
அன்னைதந்தை சகலமும்நீ ஆகுவையே போயினையே

உன்னைப்போல அண்ணனுண்டோ உனக்கினையா
யொருவருண்டா
என்னிடத்துக் குறையைக்கண்டு என்மீது
ட்சாத்திரங்கொண்டாய்

சகியாம லுன்னைமிகச் சத்துருவா யெண்ணினதும்
பகைதீர்க்க வுந்தன்மீது பாணம்போடச்
செய்துதந்தான்

அறிவீனமென் றறிந்து ஆவிமிகத் துடிக்குதிப்போ
குறித்தறியாப் பாவிநானே கொள்ளைகொண்டேன்
உன்னுயிரை

என்மீதில் பகைகொண்டும் எனைவதைக்க
மனமின்றியே
அன்புங்கூட இருந்ததென்று அறிந்திருத்தும்
மோசம்போனேன்

375. வாழ்வு போலவெண்ணி வையகத்தில் அபகீர்த்தி
சூழ்ந்திடவே யுனைவதைக்கச் சொன்னேனே படுபாவி

பிறந்தவனை வதைபுரிந்து பிரபஞ்சத்தில்
வாழ்ந்தானென்று
குறைசொல்ல ஆளானேன் குற்றமிகச் செய்துவிட்டேன்

என்னுயிர்தா னிருந்தினிமேல் ஏதுபயன் தருமெனக்கு
உன்னுடனே நானுமிப்போ உயர்விடுவே
னென்றுரைத்து

வந்துராமன் பாதந்தனை வணங்கிநின்று
சொல்லுகிறான்
எந்தனுக்கு வாழ்வுபோதும் இப்பொழுதே
உயிர்விடுவேன்

அருமையான அண்ணன்னைநான் அகந்துணிந்தே
சொல்லச்சொன்ன
தெரியாமையை என்னசொல்வேன் தேசமெங்கும்
பழித்திடுமே

380. தேசந்தனி லாசையில்லை தேகம்விடத்
துணிந்துவிட்டேன்
தோஷமுள்ள பாவியானேன் தொல்லுலகை
வெறுத்தேனிப்போ

அக்கினியி லிறங்கியங்கம் அழித்திடவே
யாஞ்ஞைதாரும்
தக்கமற்ற வானரர்கள் தங்கள்காரியம் சாதிப்பார்கள்

ஏதுங்குறை யில்லாமலே இணங்கியெல்லா
முயற்சிசெய்து
சீதையும்ம வசமாகச் செய்வார்கள் நட்புமென்றான்

அந்தவேளை தாரையுமே அகமெலிந்து ராமனிடம்
வந்துநின்று வணங்கிச்சொல்வாள் வாழ்விழந்தேன்
தாழ்வடைந்தேன்

என்பிராண நாயகர்போல் இப்பொழுதே நானுமுயிர்
அன்புள்ள கணவரைப்போய் அடைந்திடவே
மனந்துணிந்தேன்

385. ஆகையினா லென்மீதும் தம்புசெய்து
ரத்தெடுத்தால்
சோகமிக ஒழியுமென்று சொல்லிமிக விரஹப்பட்டாள்

இவ்விதமா யிருவர்களும் ஏங்கிநின்று புலம்பக்கேட்டுச்
செவ்வையாக ஆலோசிப்பீர் செப்புமெந்தன்
வாக்கைக்கேட்டீர்

என்றரா மன் சொல்லுகிறான் இப்படியுந்
துணியலாமோ
நன்றுசெய்யும் அங்குதனை நாடிமனந் தெளிந்திடுவீர்

அருள்பரனை யன்றியிலே ஆவதில்லை யெதுவும்பாரீர்
கருணையுள்ள சுடவுள்செயல் காலமதை யனுசரிக்கும்

போனவரை யெண்ணிக்கொண்டு புலம்புவது
புத்தியல்ல
ஏனிந்த மனவருத்தம் எழுத்துப்படி யாமெதுவும்

390. சரீரந்தனைப் பற்றிக்கொண்டு சம்பந்தந்
தொடருமல்லால்
சரீரமது ஒழிந்ததன்மேல் சற்றுமுண்டோ
பற்றுதல்தான்?

இருப்பவர்க்குள் கலந்திருந்து இசுபந்தங்
களையொழித்து
அருமையான சுதியடைதல் அறிவாகும் குறித்தறிவீர்

கருமபயந் தனைத்தழுவிக் காலமதை அனுசரிக்கும்
மருமந்தனை அறியாமல் மயங்கலாமோ மனந்தெளிவீர்

அவரவரின் இச்சைப்படி அடையவுண்டோ
சுதியென்பதைக்
குவலயத்தின் குணங்குவெண்ணில் குறைப்படவும்
நியாயமுண்டோ

துக்கமாகக் கலந்திருக்கும் கொல்வலியின்
தோரணையின்
சிக்கியதி லழுந்துகையில் சித்தசுத்தி யிருக்குமாயின்

395. பந்தபாதை யொதுங்கும்பாரீர் பரமசுகம்
பலிக்கும்பாரீர்
இந்தப்படி யில்லாவிடில் இம்சைப்பட வேணடும்பாரீர்

கஷ்டநஷ்டம் வருகையிலே சலங்குவோர்கள்
கதியடையார்
அஷ்டலட்சுமிக் கதிகாரியும் அலைந்திடுவான்
காலம்வந்தால்

தேகம்விடத் துணிந்துவந்து தேம்பிநீங்க ளழுவதைநான்
ஊகங்கொண்டு பார்க்கையிலே உங்கள்வசம்
தேகமிலை

பிராரப்தம் உள்ளமட்டும் பற்றிநிற்கும் தேகமது
பிரேமையினா லாத்திரப்பட்டால் பிசகாக
முடிந்திடுமே

நேகபந்துக் களைநம்பி திர்ப்தியடை வோர்களில்லை
மோகங்கொண்டா லவர்கள்மீது மூக்திதனைத்
தடுக்குமது

400. உயிருள்ள மட்டுமேதான் ஒற்றுமையைப் பாராட்டி
நயமாகக் கலந்திருக்க நியாயமுண்டு அதன்பிறகு

சென்றவர்கள் கதியடையச் செய்யத்தக்க
வினைகளினால்
நன்றிதனைக் காட்டிக்கொண்டு ஓடுபடுவே
கடமையாரீர்

398. பிராப்தம் - பூர்வ வினை

ியுடன் சென்றவர்க்குப் பண்ணத்தக்க
முறைகளெல்லாம்
ியுள்ள மட்டுஞ்செய்து சரியாக நடந்துவந்தால்

ரவரின் இஷ்டசித்தி அடைந்துகும்
பெறுவாரன்றிக்
குவலயத்தில் விசனத்தினால் கூடொழிந்தால்
கேடெய்தும்

ஈசனுக்குத் திர்ப்தியாக எப்பொழுதும் நடந்துவந்தால்
ஆசையெல்லாம் நிறைவேறும் அடைந்திடலாம்
நற்கதியை

405. உங்களுக்கு உலகப்பற்று ஒழியவிது காலமல்ல
அங்கமின்னும் தொடர்ந்திருக்கும் ஆதலிக்க
வேண்டுமதை

கடவுளிட்ட கட்டளையைக் கடப்பவர்க
ளுலகிலுண்டோ
இடம்பொருளே வல்லவெல்லாம் இருக்கும்போது
மறுக்கலாகா

பதியுடனே சுதியடையும் பிரபஞ்சியுள்ளோ
ருலகிலுண்டு
மதியில்குறை யேதுமிலா மங்கையர்க்கே யடுக்குமது

அந்தவித முன்னவர்கள் ஆவிதனை யொழிப்பதற்கு
எந்தவிதத் தொந்தரவும் இருக்காது பறக்குமுயிர்

பரிபாக மில்லாமலே பதறிச்செய்யுங் காரியத்தால்
வருவதெல்லாம் சுகக்குறைவே வலவந்தமாய்
உயிரைப்போக்க

ஆகாதது அனுசிதமே அகிலஜக தருமமல்ல
போகாதி களில்மிகவும் புத்தியுள்ள போர்கள்நீங்கள்

நற்கதியை யடையும்வாலி நாடிச்சொன்ன
மொழிகளெல்லாம்
சற்குருவின்வாக்கெனவே சரியாகக்
கிரகித்துக்கொண்டு

மகனங்கதன் றனைக்காத்து மகிமைதன்னை
யடைந்துநல்ல
இகபரத்தில் சுகங்களெல்லாம் ஏற்றபடி அனுபவிக்க

வேண்டுமென்று ஸ்ரீராமன் விரித்துரைக்கக்
கேட்டவர்கள்
ஆண்டவரே யுமதருளால் அஞ்ஞானந் தனைவிடுத்து

அறிவடைந்தோ மெனப்புகழ்ந்து ஆறுதலை
மிகவடைந்தார்
குறித்துரைத்தான் லட்சுமணன் குலதருமப் படிவாலிக்கு

415. செய்யத்தக்க வினைகளெல்லாம் செய்யுமென்ற
படிசுக்கிரீவன்
ஐயனிட ஆஞ்ஞைபெற்று அதன்பிறகு முறைப்படியே

பல்லக்கின்மேல் வாலிதேகம் பாங்காக எடுத்துவைத்து
நல்லகதி யவனடைய நதிக்கரைக்கு வரிசையுடன்

கொண்டுபோனார் கூட்டமுடன் குறங்குகளும்
மனிதர்களும்
என்படிசையி லிருந்துவந்த எல்லோரு மாகத்தானே

தகனவினை முழுதுஞ்செய்து தானாதிகள் மிகவுந்தந்து
அகமகிழ யாவருக்கும் அறுசுவையோ டன்னமிட்டுச்

சமஸ்காராதிச் சடங்குகளும் சரியாக வேதசாஸ்திரச்
சம்மதமாய்ச் செய்துகர்மம் சாத்குண்ய மானதன்மேல்

420. துக்கமெல்லா மொழித்துவிட்டுச் சுசிருசியா
யிருந்துகொண்டு
சுக்கிரீவனும் அங்கதனும் சுபசுவீகார்
செய்துகொண்டார்

அங்கதனோ டனைவரையும் அழைத்துவந்து
ராமனிடம்
மங்களமாய்ச் சுக்கிரீவன் வணங்கிநிற்க
அவனைப்பார்த்து

சோதரனாம் வாலிமிகச் சுகப்பட்வே கதியடைய
வேதவிதிப் படியனைத்தும் விமரிசையாய்
நடப்பிவித்தீர்

உம்மைப்போல் உடன்பிறந்தோர் உலகில்மிக
அரிதாவர்
இம்மையிலும் மறுமையிலும் இன்பமுண்டா மும்மக்குமிக

அரசுமுடி தரித்துக்கொண்டு அங்கதனுக் கிளவரசு
தரித்துச்சுகம் பெறுவதோடு தாரையோடு யாவரையும்

425. இதமுடனே யாதரிப்பீர் இப்பொழுது மழைக்காலம்,
உதவாது யுத்தஞ்செய்ய ஒதுங்கிமழைக்
காலம்போனால்

அதன்பிறகு படையெடுப்போம் அரக்கன்மீ
தென்றுரைக்க
இதைக்கேட்டுச் சுக்கிரீவன் இஷ்டப்படி
நடப்பேனென்றான்

---

419. சாத்குண்யம் - நல்லபடியாக அமைதல்

அந்தவுடன் அனுமான்வந்து அடிபணிந்து ராமனிடம்
சிந்தைமகிழ்ந் துரைக்கின்றான் ஸ்ரீராமா
கருணைகொண்டு

அடுத்தவராம் சுக்கிரீவரை யாதரித்தீர் பாதுகாப்பீர்
கொடுத்தீர்சுகம் அவருக்கினி குறைவேது
மில்லையையா

கஷ்டமெல்லாம் ஒழிந்ததையா கருணைகொண்
டெழுந்தருள்வீர்
கிஷ்கிந்தை நகரில்வந்து கிரமமாக முடிசூட்டி

430. சுக்கிரீவரைக் கனப்படுத்த சுவாமிதயை செய்வீரென்று
முக்கியமந்திரி கேட்டானம்மா முகமலர்ந்து
ராமன்சொல்வான்

எனக்கேயந்தப் பிரியமுண்டு என்னசெய்வேன்
அவ்விதமாய்
மனமுவந்து நடப்பதற்கு மார்க்கமிலை
சொல்வேன்கேளீர்

எனதுதந்தை யாஞ்ஞைப்படி ஈரேழு வருஷக்காலம்
வனந்தனிலே யிருந்துகொண்டே வசிக்கவேண்டும்
அந்தக்காலம்

இருக்குதின்னு மாசையினால் எனையழைத்த
படிநகர்க்கு
வருவதற்கே யாகாதையா வனந்தனிலே
இருப்பேனையா

அனைவரையு மழைத்துக்கொண்டு அகமகிழ்ந்து
நகரடைந்து
ஜனங்களோடு இனங்களையும் சேர்த்துக்கொண்டு
நேராகவே

சாஸ்திரப்படி முடிதரித்துச் சகலரையும்
திர்ப்திசெய்வீர்
வாஸ்தவமாய்ச் சுபம்பெருகும் வானரர்க்கு
மிகவுமென்றார்

கேட்டெல்லோரும் மிகமகிழ்ந்து கிஷ்கிந்தா
நகரடைந்து
கூட்டங்கூடி யாலோசித்துக் குறித்தார்கள்
பட்டங்கட்ட

நல்லதினம் பார்த்தமைத்தார் நகரையெல்லாம்
அலங்கரித்தார்
சொல்லவுண்டோ எல்லையுண்டோ சுக்கிரீவன்
விமரிசைகள்

நாலுதிக்கி லுள்ளோரெல்லாம் நயந்துவரச்
சேதிதந்தார்
சீலமுள்ள சுக்கிரீவன் சேதியொன்று கேட்டானப்போ

அந்தப்புறந் தனிலிருக்கும் அன்புடைய தாரைமிகச்
சிந்தைபாடி யிருப்பதாகச் சீக்கிரமா யவளிடத்து

வந்தவளை யுபசரித்து வாஞ்சையோடு சொல்லுகிறான்
எந்தன்குல வழக்கப்படி என்னுடனே வாழ்ந்திருப்பாய்

சிந்தைக்குறை வேண்டாமடி சிநேகங்கொண்டே
சுகிப்பாயடி
அந்தரங்க மாயிருந்து அனுபவிப்பாய் இஷ்டப்படி

உந்தன்மனம் வாடக்கண்டு உருகுதெந்தன் மனமிகவே
எந்தன்மனச் சுகமேநீ ஏன்வருந்த வேண்டுமடி

உன்னைவிட்டா லெனக்கிந்த உலகில்வாழ்வே
யில்லையடி
என்னைச்சேர்த்து வாழ்வாவாயின் ஏதுங்குறை
யில்லையடி

எந்தன்பிராணச் சகியாகவே எண்ணியுனை
யாதரிப்பேன்
முந்திச்செய்வேன் உனக்கெதுவும் மோகனாங்கி
யுனைமறவேன்

445. கொண்டவளை யண்டியுன்னைக் குறைப்படவே
செய்யேனடி
கண்டுகண்டு களிப்பேனுனைக் கண்மணியே
கலந்திருப்பாய்

என்மனதை யறிந்தென்னோடு இஷ்டப்படி கலந்திருந்து
நன்மைமிக வடைந்ததெல்லாம் நாடிப்பாராய்
கூடிவாழாய்

பழையசினேகந் தனைமறந்து பராமுகமேன்
கொள்ளுகிறாய்
அழகில்மிகச் சிறந்தவளே ஆசைதீர்க்கும்
அமுதப்பெண்ணே

உன்மனது கலங்குமாயின் உயிர்விடுவேன்
இப்பொழுதே
என்மனது வருந்தும்படி எண்ணவேண்டாம்
பைங்கிளியே

உன்னுடனே வாழ்வதற்கே உயிர்வைப்பே
னாகையினால்
சொன்னபடி கேட்டிடுவாய் சுவாதீனப் பட்டிடுவாய்

இருக்கும்நல்ல யவ்வனத்தை ஏன்வியர்த்தஞ்
செய்யவேண்டும்
பரிபூர்ணச் சுகமளிட்பேன் பார்த்தாவாய்ச்
சுவீகரிப்பாய்

அண்ணன்போன பிறகுன்னை அடையவெனக்
குரிமையுண்டு
என்னியெனைச் சேருதற்கு இணங்குவதே
குணமதாகும்

ஜரையுனக்கு என்றுமில்லை சகலகுணங் களுமுண்டு
அரைநொடியும் புருஷசுகம் அன்றியிலே
இருக்கப்போகா

போகமதை யனுபவிக்கப் பொருந்தியுள்ள
தேகங்கொண்டு
தாகமதை வியர்த்தமாக்கித் தத்தளித்தா லென்னசுகம்

குறையைக்கொண்டு மனஞ்சலித்துக் கோலமழிந்
திருப்பதற்கு
அரைநொடியு மாகாதுன்னால் அறிந்துபாராய்
சுந்தரியே

அண்ணனைப்போ லென்னையெண்ணி
அன்புகொள்வா யுன்னைமிக
கல்யாணமைபோல் சுரப்பேனடி கமலாட்சி
கலங்கவேண்டாம்

இந்தவித மதேசுமாக இதங்கள்சொல்லிச் சுக்கிரீவன்
வந்துகையைப் பிடித்துக்கொண்டு வாய்திறந்து
பின்னுஞ்சொல்வான்

---

450. விபரீத்தம் - வீண்
452. ஜரை - மூப்பு

அனுவளவுங் கருணையின்றி அகம்வருந்தச்
செய்வதினால்
குணமுண்டோ குறித்தறிவாய் கோகுலமே பாக்கியமே

விசனமெல்லாம் விட்டொழிப்பாய் வேண்டியெனைத்
தொட்ட
வசப்படுமென் வாக்கைக்கேளாய் வர்மம்விட்டு
மனங்கலப்பாய்

கைபிடிப்பேன் கருணைகொள்ளக் கால்பிடிப்பேன்
சீலங்கெட
மெய்மறப்பேன் விசனமதால் மின்கொடியே
யென்றுரைத்து

460. கண்ணில்தாரை பெருகவிட்டுக் கதறிமிக
அழுதானம்மா
எண்ணிப்பார்த்தான் தாரையப்போ என்னசெய்வோ
மென்றவளில்

முன்னிவனைக் கலந்திருந்து மோகங்கொண்டோம்
சுகமடைந்தோம்
இன்னமுந்தான் கலந்திருக்க என்னதடை
யொன்றுமில்லை

ஆதியிலே பேதமின்றி அடைந்தவொரு காரணமே
நீதியாகும் இவனுக்குநாம் நேராக இணங்குவதில்

இருவருக்கும் நெஞ்சுக்குறை ஈஷத்தும் இல்லாமல்
உரியபடி சுகம்பெருகும் உள்ளபோக மெல்லாமுண்டு

மோகங்கொண்டு வேண்டுகிறான் முறைகள்சொல்லித்
தூண்டுகிறான்
தாகங்கொண்டு வாடுகிறான் தன்னைமறந்
தாடுகிறான்

இணங்காவிடில் மனம்விடுவான் இவனைச்சேர்ந்தால்
நமக்குமிகக்
குணமுண்டு மணமுண்டு துணையுண்டு தோஷமிலை

ஆகையினால் அவமதித்தல் ஆகாதென்றே
துணிந்துதாரை
வேகமாக அவனைக்கட்டி விநயமுடன் முத்தமிட்டு

கருணையோடு சொல்லுகிறான் கதறவேண்டாம்
அதரபானம்
பிரியமுடன் தருவதற்குப் பின்னடையேன்
பிராணநாதா

சொன்னதெல்லாம் கேட்டேனையா சோகமெல்லா
மொழிந்தேனையா
என்னையாள உமக்குரிமை இருக்குதென்று
மறிந்தேனையா

முறைப்படியே யெனையடைவீர் மோகங்கொண்டே
யாதரிப்பீர்
குறையேதும் மனதிலில்லை கூடியும்மை
வாழ்வேனையா

பட்டங்கொண்டு அரசராவீர் பத்தினியா
யெனையடைவீர்
சட்டதிட்ட பாடியாளுவீர் சகலபாக்கியங்
களைப்பெறுவீர்

சலிப்பணுவும் வேண்டாமையா சந்தோஷங்
கொள்ளுமையா
வலதுகையைத் தந்தேனையா வாழ்வேனும்மைக்
கூடியென்று

உறுதிசொல்லி உறவாடி உளமகிழச் செய்தானம்மா
குறித்தபடி கோரிக்கையைக் கூடிற்றென்று சுக்கிரீவன்

மிகவுமனக் களிப்படைந்து வெளியில்வந்து அதன்பிறகு
தகுதியுள்ள மந்திரிகளைத் தருவித்து
ஆஞ்ஞைசெய்தான்

அபிஷேக முடிசூடும் அந்தவொரு உச்சவத்தைச்
சுபகரமாய் நடத்துமென்று சொன்னானம்மா
அவ்விதமாய்ச்

475. சித்தஞ்செய்தார் மந்திரிகள் சீராகக் காரியங்கள்
எத்தனையோ விமரிசையாய் எண்ணிச்செய்தார்
கண்ணியமாய்

வேதியரும் முனிவர்களும் வெகுபேர்கள்
வந்துசேர்ந்தார்
நீதிசாஸ்திரப் படியனைத்தும் நேராக
அமைத்துவைத்தார்

சுபம்பெருகக் கோலங்கொண்டார் சுக்கிரீவனும்
அங்கதனும்
சபைதனிலே வந்துநின்றார் சகலருமே
ஸ்துதித்தாரம்மா

ஜகச்சோதி போலவுள்ள சபைதனிலே இரண்டுநல்ல
மகிமையுள்ள சிம்மாசனம் மனங்களிக்க வுள்ளதம்மா

ஆராய்ந்து வைத்திருந்த அனுகூல லக்கனமது
நேராகக் கூடிவந்த நிமிஷமதில் இருவரையும்

480. அரிதான ஆசனமாம் அழகியசிம் மாசனத்தில்
இருத்திப்பண்ய தீர்த்தங்களால் இதமுள்ள மந்திரிகள்

எல்லோரும் முறைப்படியே எண்ணிவந்து அபிஷேகம்
உல்லாசமாய்ச் செய்தாரம்மா உசிதமான
வஸ்தராதிகள்

தரித்துநகை சுருமணிந்து தகுந்தரத்னக் கிரீடமதை
உரியபடி தரித்ததன்றி உள்ளபடி ஓமாதிகள்

வெகுசீராய் நடத்தித்தானம் விமரிசையாய்த் தந்துமிகச்
சுகமடைந்தார் யாவருமே சொல்லவுண்டோ
திர்ப்திதனை

அங்கதனுக் கிளவரசு அளிக்கக்கண்டு அதினாலே
கங்குரை யில்லாத கண்குளிர்ச்சி யடைந்தாள்தாரை

485. இந்தச்சேதி ராமன்கேட்டு எத்தனையோ
திர்ப்திகொண்டான்
மந்திரிகளோ டரசுசெய்து மகிழ்ந்திருந்தான்
சுக்கிரீவன்

அரசர்களில் சுக்கிரீவன்போல் அரசரெங்கு
மில்லையம்மா
உரியபடி யவனுடைய உத்திரவை மீறினக்கால்

சிரசாஞ்ஞை செய்திடுவான் சிட்சையிலே
பட்சங்கொள்ளான்
இருதயத்தி லிரக்கமின்றி எமனுக்கெமன்
போலிருப்பான்

வானரர்கள் பிழைசெய்தால் வாலறுப்பான்
காதறுப்பான்
ஈனம்வரு மென்றெவரும் ஒடுங்கிமிக அடங்குவார்கள்

மன்னிப்பெனும் கருணையணு மனதில்கொள்ளான்
இனங்களெல்லாம்
சொன்னபடி நடப்பார்கள் சுக்கிரீவன் ஆக்ஞையம்மா

490. தருமமுறைப் படிநடந்தால் தலையில்கொண்டு
ஆதரிப்பான்
சரியாக நடப்பவர்க்குச் சகலவிதச் சுகமளிப்பான்

திராகுமுனை போலவேதான் திர்வ்டிவைத்துத்
தீர்மானிப்பான்
கராராக நடக்குமவன் கட்டளையே சட்டமம்மா

தருமராஜன் கட்டளையைத் தரணியிலே
மிகப்புகழ்வோர்
கருதிச்சொல்வார் சுக்கிரீவன் கட்டளையை
மிகமகிழ்ந்து

அதிகாரந் தனைவகித்து அரசாள வருவாரெல்லாம்
மதியில்பார பட்சமின்றி மனவுறுதி மிகவுங்கொண்டு

494. சுவியரசன் சுக்கிரீவன்போல் காரியங்கள்
செய்வாராயின்
குவலயத்தில் துஷ்கிர்த்தியங்கள் கொஞ்சமுமே
மிஞ்சாதம்மா

இரிசியமுக பருவதத்தில் வனத்திலுள்ள விநோதங்களைப் பார்த்து ஸ்ரீராமன் சீதையை நினைத்துக்கொண்டு விசனப்படுவதும், லட்சுமணன் சமாதானப்படுத்துவதும், குறித்த காலத்தில் வராத சுக்கிரீவனைப் போய் லட்சுமணன் கடிந்துரைப்பதும் படைகளோடு சுக்கிரீவன் ராமரிடம் வருவதும் சீதையைத் தேட நான்கு திக்குகளிலும் வானரர் போவதும்

495. இரிசியமுக பருவதத்தில் இரகுராமன் தம்பியொடு
வசித்திருந்தான் அப்பொழுது வனத்திலுள்ள
பலவிதமாம்

---

494. துஷ்கிர்த்தியம் - கெடுதல்

விநோதங்களைப் பார்த்துப்பார்த்து வெகுகளிப்பு
அடைந்ததோடு
மனோதுக்கங் கொண்டான்ராமன் மாதரசாம்
ஜானகியை

எண்ணியெண்ணி வருந்துகையில் இளையவனாம்
லட்சுமணன்
அண்ணனுக்கு மிகவுஞ்சொல்வான் ஆறுதலை
யன்புடனே

ஆடிமாதந் தொடங்கியப்பால் ஐப்பசிமா தம்வரையில்
கூடியுள்ள நான்குமாதம் குரூரமழை பெய்கையிலே

வருஷாகால நிலைமைகளை வன்னித்து ராமன்மிகப்
பரிதபிப்பான் ஜானகியைப் பாராத குறையைக்கண்டு

500. அருகிருந்து தம்பியப்போ அண்ணனிட மனமறிந்து
உருகிமனம் நோகவேண்டாம் உமக்கினிமேல்
குறையொழியும்

வருவானினிச் சுக்கிரீவன் வானரரை யனுப்பிச்சீதை
இருக்குமிடம் அறிந்திடுவான் எடுப்போம்படை
அரக்கன்மீது

சோபமெல்லாம் விட்டொழியும் சுபம்பெருகும்
அகமகிழும்
போகப்பாக்கியம் அடுத்திருக்கப் புலம்பவேண்டாம்
அண்ணாவென்று

சொல்லிவரும் தைரியத்தால் சோகப்பாதை
தனையொழித்து
வல்லபனாம் ஸ்ரீராமன் வசித்திருந்தான் மழைக்காலம்

கழிந்தெங்கும் சஞ்சரிக்கக் கார்த்திகையும் பிறந்ததம்மா
வழிகொண்டு சுக்கிரீவன் வரவுக்கெதிர்
பார்த்திருந்தார்

505. விடியசுகந் தனில்மூழ்கி வெகுபோர்கள் ஸ்திரீகளுக்கு
வசமாகிச் சுக்கிரீவன் வாக்குத்தத்தந் தனைமறந்து

காமலீலை தனிற்காலம் கழித்துவந்தான்
அனுமான்கண்டு
நாமினிமேல் அசந்திருந்தால் நஷ்டகஷ்டம்
வருமென்றெண்ணிச்

சடுதியாகச் சுக்கிரீவனைச் சரஸமுடன் அழைத்துவந்து
அடுக்காத செய்கையினால் ஆபத்து விளைந்திடுமே

சினேகங்கொண்டு சத்தியஞ்செய்து செப்பினதை
மறந்துவிட்டால்
அநேகதோஷம் வருமுமக்கு அனர்த்தங்கள்
மிகவுமுண்டாம்

ஆபத்தெல்லாம் போக்கியும்மை ஆதரித்த ராமனுக்குக்
கோபம்வரும் படிநடந்தால் குற்றமாமே யுற்றுப்பாரீர்

510. நிமிஷமொரு யுகமதுபோல் நினைத்துராமன்
வருந்துகையில்
உமக்குச்செய்த நன்றியைநீர் ஒருக்காலும்
மறக்கலாமோ?

சிற்றின்பம் சீரழிக்கும் சித்தசுத்தி கொண்டறிவீர்
சற்றுமினித் தாமதித்தால் சாமிராமன் பகைவருமே

பிழைக்கவழி யில்லையப்பால் பெருமையெல்லா
மொழியும் பாரீர்
உழைக்கவேண்டும் ராமனுக்காய் உண்மையாகப்
பொறுப்புடனே

வானரராம் வீரர்களை வரவழையும் அதிவிரைவாய்
ஜானகியைத் தேடிக்கண்டு சடுதியாக வரும்படியாய்

அனுப்புமென்றா னதைக்கேட்டு ஆக்ஞைசெய்தான்
சுக்கிரீவன்
வனமுதலா யெங்குமுள்ள வானரர்க ளிருவாரத்தில்

இங்குவந்து சேராவிடில் இழந்திடுவா ருயிரையென்று
அங்கதனை யழைத்துச்சொல்லி அந்தப்புரந்
தனையடைந்தான்

சிறியதந்தை யாக்ஞைதனைச் சிரசுதனில்
வகித்துக்கொண்டு
குறித்தெல்லோரும் வந்துசேரக் குணமடைய வீரர்கட்கு

அங்கதனும் ஆக்ஞைசெய்தான் அந்தப்படி வந்துசேர
எங்குஞ்சேதி சொல்லிவிட்டார் இவ்விதமா
யிருக்கையிலே

சரத்காலம் தொடங்கியதும் ஜாக்கிரதையாய்ச்
சுக்கிரீவன்
வருவதாகச் சொன்னபடி வரவிலையே
யென்னசெய்வேன்

மழைக்காலம் நான்குமாதன் மனஞ்சலித்து இருந்திங்கு
பொழுதுபோக்கி வந்ததுபோல் பொறுக்கவினி யா
சுலையே

தம்பியேகேள் மனமிகவும் தத்தளித்து வாடுதடா
நம்பினேனான் சுக்கிரீவனை நட்டாற்றில்
விட்டதுபோல்

கைவிட்டான் கலங்கும்படி கருணைக்கொண்டு
அவனைக்காக்கச்
செய்தநன்றி மறந்தானடா சீக்கிரமா யிங்கிருந்து

போயவனைக் கண்டுசொல்வாய் புத்தியோடு
சொன்னவாக்கை
நேயமுடன் இப்பொழுதே நிறைவேற்ற மனமிருந்தால்

வந்திடுவா யில்லையெனில் வாலியைப்போல்
சுதியடைவாய்
உந்தனிஷ்ட மறியச்சொல்வாய் உண்மையாக
வென்றுகேட்டு

வருவாயென்று ராமன்சொன்ன வார்த்தைகேட்டு
லட்சுமணன்
துரிதமாகக் கோபங்கொண்டு சொல்லுகிறான்
அண்ணனிடம்

525. நன்றிகெட்ட சுக்கிரீவனை நாசஞ்செய்வே
னிப்பொழுதே
அன்றுரைத்த வாக்கழிந்தான் அவன்மீது
இரக்கங்கொள்ளேன்

போனாலவன் நமக்குதவி போகாது அங்கதனோ
நானாவித முயற்சிசெய்வான் நம்மைமிக
அடுத்திருப்பான்

அவனைக்கொண்டு காரியசித்தி அடைந்திடுவோம்
திடமுடனே
அவிவேகி சுக்கிரீவன்மேல் அம்பெடுப்பே
னென்றுரைத்தான்

அந்தவார்த்தை கேரட்டுராமன் அனுஜன்றனைப்
பார்த்துரைப்பான்
இந்தவிதம் துணிவதிலே இழிவடைவோம் வழியதல்ல

காமாதுரப் பேய்பிடித்துக் கடமைதனை
மறந்திருப்பான்
நாமாக முந்தவேண்டாம் நான்சொன்ன படிசெய்வாய்

530. ஆத்திரத்தை விட்டுவிட்டு அமரிக்கையை
மிகவுங்கொண்டு
காத்திருக்கும் எங்களிட காரியத்தைச் சொன்னபடி

செய்யமன மிருக்குமாயின் சீக்கிரமாய் வந்திடுவாய்
கையெடுப்போம் இல்லாவிடில் கண்டுகொள்வா
யென்றுரைத்து

மனமறிந்து வருவாயென்று மாதவனாம்
ராமன்சொல்ல
நினைத்துப்பார்த்தான் லட்சுமணன் நேர்வழியைச்
சொன்னானண்ணன்

அந்தப்படி செய்வோமென்று அண்ணன்பாதம்
பணிந்துதம்பி
வந்துசேர்ந்தான் கிஷ்கிந்தைமுன் வானமக்கள்
பயந்தோடினார்

கையிலம்பு கொண்டுவந்து காலனைப்போல்
விளங்குகிற
ஐயந்தம்பி லட்சுமணனை அங்குதங்கண்
டச்சங்கொண்டு

535. அடிவணங்கி நிற்கையிலே அவனைப்பார்த்து
லட்சுமணன்
சடுதியாகச் சுக்கிரீவனைச் சற்றிங்கு அழைத்துவர

வேண்டுமென்று சொன்னவுடன் வேகமாக
மந்திரிகளைத்
தூண்டியவர் கூடச்சென்று சுக்கிரீவனைப்
போய்வணங்கிக்

காலதேச வர்த்தமானம் கண்டுசெய்யுங் காரியங்கள்
நீலவர்ணன் தம்பிவந்து நிற்கின்றான் நகரின்முன்னே

அவனிருக்கும் முகக்குறியை அறிந்துமிகப்
பயந்தேனையா
எவருங்கண்டா லவனையிடபோ எமனென்றே
நினைப்பாரையா

கோபமிகக் கொண்டுவந்து குரூரமாக நிற்கும்வன்
தாபமிகத் தந்திடுவான் தாங்களிப்போ அசந்திருக்க

ஆகாதையா அவரைக்கண்டு அனுசரித்துக் கோபமது
போகும்படி யுபசரித்துப் பொறுப்புடனே அவர்மனது

ஆறும்படி செய்யாவிடில் ஆபத்தே வந்திடுமென்
றறிந்துகொள்ளு மென்றுரைத்தும் அணுவளவும்
கவனியாமல்

போதைமிகக் கொண்டதினால் புத்திவச மில்லாமல்
ஏதும்பதில் சொல்லாமல் இருந்துவிட்டான் சுக்கிரீவன்

சொரணைவரச் செய்ததன்மேல் சுக்கிரீவ
னெழுந்துவந்தான்
தருமபுத்தி யுள்ளநல்ல தகுதியான மந்திரிகள்

சூழ்ந்திருக்க ஆசனத்தில் சுக்ரீவ னிருக்கையிலே
ஆழ்ந்தபுத்தி யுள்ளவராம் அனுமானப்போ
மனமுவந்து

புயங்களுக்கு வசப்படுவோர் புத்திகெட்டே
யலைந்திடுவார்
நலங்கருதிச் சொல்லுகிறேன் நாடிமனந்
தெளிந்துபாரீர்

அரசுமுறை அணுவளவும் அறியாமல் மெய்மறந்து
இருப்பதொடு சத்தியஞ்செய்து இராமரிடஞ்
சொன்னவாக்கை

மறந்துமிக மயக்கங்கொண்டு மதியுமிழந்
திருக்கலாமோ
குறித்தறிவீர் நேசருக்குக் கொடுத்தவாக்குத் தத்தமதை

ஆவலொடு செய்வீராயின் அனுகூல மிகவடைவீர்
நாவில்சொன்ன வார்த்தைதப்பில் நாதன்பகை
வந்திடுமே

போகப்பாக்யம் வந்தவழி புத்திகொண்டே பாருமையா
தாகங்கொண்டே ராமருக்குத் தந்தவாக்கும்
முந்திப்பாரீர்

550. சத்தியங்கெட்டால் சகலமும்போம் சங்கடங்கள்
மிகவிளையும்
உத்தமராம் ஸ்ரீராமரை உதாசீனஞ் செய்யலாமோ?

உமதுமனம் அறியாமல் உமதுமீதில் கையெடுக்கார்
நமஸ்கரித்து வணங்கிச்செய்தால் நாளுமும்மை
யாதரிப்பார்

அம்புகையில் கொண்டுவந்து அதிகோபத்
தோடுராமன்
தம்பிவந்து நிற்கையிலே தாமவரை யழைத்துவந்து

உபசரித்துக் கோபமது ஒதுங்கச்செய்து
உதவிசெய்தால்
சுபம்பெருகும் நிச்சயமாய்ச் சொன்னபடி
செய்யுமென்றான்

அந்தப்படி லட்சுமணனை அழைத்துவர அங்கதனை
சொந்தங்கொண்டே யனுப்பித்தந்தான் சொன்னபடி
போயவனும்

555. அடிவணங்கி யன்புடனே அழைத்திடவும் லட்சுமணன்
தொடர்ந்தானம்மா அவனுடனே தோரணையாய்
நகருக்குள்ளே

நவரத்ன மயமாகவே நகரெங்கு மிருக்கக்கண்டு
குவலயத்தி லிந்தநகர்க் கொப்பாக எங்குமிலை

கற்பகங்கள் மிகவுங்கண்டோம் கனவனங்கள்
அதிகங்கண்டோம்
நற்பவழக் கட்டங்கள் நான்குதிக்கும்
மிகவுங்கண்டோம்

அதிசயமே பட்டணமே அழகாக வுள்ளதென்று
மதியில்மிகத் திர்ப்திகொண்டு மாளிகைகள்
யாவையுமே

பார்த்துக்கொண்டு போகையிலே பளபளென்று
ஜ்வலிக்குமொரு
தோர்ந்ததான அரண்மனையும் தெரியக்கண்டு
லட்சுமணன்

560. சூரியனில் கேதுதித்தான் சொல்லென்று கேட்டதற்குச்
சூரியனென் றெண்ணவேண்டாம் சுக்கிரீவர்
அரண்மனையாம்

என்றங்கதன் சொன்னவுடன் இப்படியுங்
கிரகமுண்டோ
என்றுமிக அதிசயித்தான் இளையவனாம் லட்சுமணன்

அதன்பிறகு அரண்மனைக்குள் அழைத்துக்கொண்டு
போகையிலே
விதம்விதமா யேழுகட்டு வீடுகளைக் கடந்ததன்மேல்

அநேகம்ஸ்திரீகள் வசிக்கும்நல்ல அந்தப்புற
மொன்றுகண்டு
இனியந்த விடம்விட்டு எட்டியபடி வைப்போமாயின்

மரியாதைக் குறையடுக்கும் மாதர்க ளிருக்குமிடம்
தருமமல்ல போவதென்று தடைப்பட்டு
நின்றுவிட்டான்

565. அம்மட்பச்சற்றுத் த்வனிசெய்தான் அதைக்கேட்டுச்
சுக்கிரீவன்
நம்பிவிட்டான் உயிரிழந்தோம் நாமினிமேல்
பிழைப்பதில்லை

ருத்திரனைப்போல் விளங்குகிறான் ரொம்பவுமே
சீறுகிறான்
உத்தமனாம் ராமனைநாம் உதாசீனஞ் செய்ததினால்

வந்ததிந்தக் சுஷ்டமென்று வருந்துகையில் தாரைவந்து
சிந்தைநோக வேண்டாமையா செப்புமையா
காரணத்தை

அச்சங்கொள்ள வேண்டாமென்று ஆறுதலைச்
சொல்லுகையில்
பட்சமுள்ள பத்தினியே பறக்குதடி ஆவியிப்போ

வந்துவிட்டான் லட்சுமணன் வதைத்திடுவா
னிப்பொழுதே
எந்தன்வாழ்வு ஒழிந்ததடி இன்றோடே யென்றுரைத்து

570. மறுபடியுஞ் சொல்லுகிறான் மாதேயென் கண்மணியே
அறியாமல் ராமனைநான் அசட்டைசெய்தே
னாகையினால்

கஷ்டமிப்போ வந்ததடி காப்போர்க ளாருமிலை
இஷ்டபத்னி யாகியநீ இப்போதே லட்சுமணன்முன்

போயவனைக் கண்டுபேசிப் பொறுத்திடுவாய்
பிழையையென்று
வாயுபசா ரங்சுள்சொல்லி வணங்கினக்கால்
வழிபடுவான்

அந்தப்படி செய்வாயென்று அவனுரைத்த படிதாரை
வந்துலட்சு மணனடியை வணங்குகையில்
பெண்ணின்முன்னே

உக்கிரமதைக் காட்டுவது உசிதமல்ல வென்றெண்ணித்
தக்கபடி சாந்தங்கொண்டு தலைகுனிந்து
நின்றிருந்தான்

575. அவனைப்பார்த்துத் தாரைமிகு அன்புடனே
சொல்லுகிறாள்
குவலயத்தில் உத்தமர்சுள் கோபங்கொள்ள
லாகாதையா

என்னுடைய பர்த்தாவின்மேல் ஏனுமக்குக்
கோபமையா
என்னசெய்தா ரவருமக்கு என்னிடத்துச்
சொல்லுமென்றாள்

அதைக்கேட்டு லட்சுமணன் அவளறியச்
சொல்லுகிறான்
பதியின்மீது பட்சமுள்ள பத்தினியே
சொல்வேன்கேளாய்

அண்ணனாலே உதவிபெற்று அதைமறந்தா
னுனதுபர்த்தா
எண்ணிச்செய்தான் சத்தியமும் ஏனதையும்
மறந்தானவன்

சொன்னவாக்குத் தப்பிப்போனான் சுகம்பெரிதா
யெண்ணிவிட்டான்
மன்னவன்ஸ்ரீ ராமச்சந்திரன் மனம்நோக
நடந்துகொண்டான்

580. பத்தினியின் கடமையெல்லாம் பதிமனதைக்
கண்டறிந்து
சுத்தமுடன் அவனடக்கச் சொல்லுவது தருமமன்றோ?

கணவன்காம வெறிகொண்டு கடமைகளை
மறந்திருந்தால்
குணமடையச் செய்பவளே குற்றமற்ற பத்னியாவள்

உன்கடமை தனைமீறி உன்கணவ னுடனேநீயும்
நன்மைதனைக் கைவிடுத்து நடந்துகொண்டாய்
மதியிழந்து

ஆதரித்தே ரலையவிட்டு அகங்காரிக்கும் உன்கணவன்
வேதனையைக் கொள்வானிப்போ விடமாட்டேனென்
றுரைத்தான்

தாரையதைக் கேட்டவுடன் தப்பிதத்தை ட்சமியுமையா
ஆருந்தானே காமன்வசம் ஆனால்மதி கெட்டிடுமே

585. வெகுகாலம் வாழ்விழந்து வெகுகஷ்டப் பட்டணுவும்
சுகமின்றி யிருந்தவராம் சுக்கிரீவர் ராமனாலே

நித்தியசுகம் மிகவடைந்தார் நேசந்தனை
மறக்கமாட்டார்
உத்தமராம் ராமருக்கு உழைத்திடவே யுள்ளமுள்ளோர்

விட்டசுகந் தொட்டதினால் விவேகமற்று
மோகங்கொண்டார்
சட்டதிட்ட மறிந்தவர்க்கும் சகஜமையா காமவெறி

இந்தக்குலை மறிந்திருந்தால் ஏதுமக்குக் கோபமுந்தான்
வந்திடுமோ சற்றுந்தானே வகையறியாக் கோபமதைத்

தள்ளியேநீர் பாருமையா தயவுடனே கேளுமையா
கள்ளமெண்ண மில்லையையா கணவருக்குக்
கருணைகொள்வீர்

590. எனதுபர்த்தா சொன்னபடி இராமருக்கு உதவிசெய்ய
வனந்தனிலே இருக்குமெல்லா வானரரை
யழைத்துவரத்

தகுந்தவரை யனுப்பிவிட்டார் தடையினிமே
லேதுமிலை
அகந்துணிந்தே யுங்களுக்கு அடிமைசெய்யக்
காத்திருக்கும்

பர்த்தாவின்மேல் பட்சங்கொள்வீர் பாதுகாப்பீர்
ஆதரிப்பீர்
கர்த்தன்ராமன் காரியத்தைக் கணவர்செய்வார்
கருணைகொள்வீர்

அன்புள்ள நேசரெல்லாம் அந்தப்புரந் தனில்வரலாம்
என்கூட வருவீரிப்போ என்பிராண நேசருள்ள

ஸ்தலத்திற்சென்று அழைத்தாளம்மா சகஜமாக
லட்சுமணன்
நலங்கருதி யவள்கூட நடந்துவந்தான் அந்தப்புரம்

595. எத்தனையோ ஸ்திரீகளெல்லாம் இணங்கியேநின்
றுபசரிக்க
அத்தனைபேர் மத்தியிலே ஜனகத்தி லிருந்துகொண்டு

சுக்கிரீவன் விளையாடிச் சுகப்படுமோர்
நிலைமைதனைப்
பக்கம்வந்து லட்சுமணன் பார்த்துமிக
ஆத்திரங்கொண்டான்

அழிந்தானதைச் சுக்கிரீவன் அவசரமா யெழுந்துவந்து
மரியாதை யெதிரில்நின்றான் மணவாளக்
கோலத்தோடு

மகத்தான கோபங்கொண்டு மானங்கெட்ட சுக்கிரீவா
சுகம்பெரிதா யெண்ணிக்கொண்டு
சொன்னசொல்லை மறந்துவிட்டாய்

நன்றிகெட்டு நடந்துகொண்டாய் நாடெங்கும்
பழிக்குமுன்னை
அன்றுரைத்த வாக்கழித்தாய் அழிந்துபோவாய்
ராமன்கையால்

600. பிரம்மகத்தி முதலாகப் பெரியகுற்றஞ் செய்பவர்க்கும்
தர்மம்சாஸ்திரந் தனிலேயுண்டு தப்புவிக்கப்
பிராயச்சித்தம்

விசுவாச பாதகத்தை விலக்குதற்குச் சாஸ்திரத்தில்
நிசமாக வகையேயிலை நீமிகவும் கிர்தக்ஞனே

சொன்னவாக்குத் தப்பிப்போனாய் சுத்தமூடன்
போலவானாய்
இன்னமுமே லச்சையின்றி இருக்கிறாயே மதியிழந்து

என்னுடை அண்ணனிடம் எண்ணிச்சொன்ன
வாக்குறுதி
இன்னமுந்தான் நிறைவேற்றாமல் இருக்கின்றாயே
ஈனன்போல

601. கிர்தக்ஞனன் - கிர்தக்ஞன் - நன்றியுள்ளவன்

மஞ்சள்வாடை மிகவும்வீச மங்கையருக் கடிமையாகிப்
பஞ்சையைப்போல் அஞ்சுமுனை மிஞ்சிவிடேன்
கெஞ்சினாலும்

605. கண்ணில்மை சூழ்த்தில்மாலை கன்னமெல்லாம்
மின்னுமஞ்சள்
உண்ணுவதோ மதுபானம் உசிதமோபா ரிவ்விதமாய்

அடக்கம்நாணம் அச்சமின்றி அந்திபக லேதுமின்றி
அடுக்கும்பெண்சுள் மாயையிலே அறிவிழந்தே
யலையலாமோ?

உனக்குநல்ல சுதியுண்டோ உன்மனதின்
துணிவுகண்டேன்
உனதண்ணன் போலநீயும் உயிரிழப்பாய் நிச்சயமே

மனதறிய வந்தேனடா மதியுடனே பதிலுரைப்பாய்
உனதுகோலங் காணக்காண உவ்ணமிக மீறுதடா

என்றுமிக லட்சுமணன் இழிவாகப் பேசுகையில்
ஒன்றும்பதில் சொல்லாமலே உருகிமனம்
நொந்தவனாம்

610. நின்றிருந்தான் சுக்கிரீவன் நீதியுள்ள லட்சுமணனைக்
கன்றுதாய் யடுப்பதுபோல் காப்பீரென்று தாரைவந்து

நமஸ்கரித்துச் சொல்லுகிறாள் நயமுடனே
பயந்துநின்று
தமையடுத்த சுக்கிரீவர்மேல் தயவுகொள்வீர்
பயமொழிப்பீர்

அடிமையாக உழைக்கவுள்ள அன்புமுள்ள சுக்கிரீவரை
இடித்திடித்துப் பேசுவதில் என்னபயன்
எண்ணிப்பாரீர்

காலந்தப்ப நேர்ந்ததெல்லாம் காரியத்தை நிறைவேற்ற
நாலும்வேண்டு மாகையினால் நாளொதுங்க
லாயிற்றையா

எதிரிபலங் கண்டறிந்து எதிர்ப்பதல்லோ துணிவாகும்
அதிபலவான் ராவணனை அதிக்கிரமித்து
யுத்தஞ்செய்ய

615. பலங்கள்மிக வேண்டுமையா பலவிடங்கள்
தன்னிலுள்ள
பலமுடைய வீரரெல்லாம் குலங்களோடு வந்துசேரச்

சரத்காலம் தொடங்கியமேல் சத்பக்தி மிகவுங்கொண்டு
உரியபடி உலகெங்கும் உள்ளவராம் வானரர்க்குச்

சேதிதர அனுமாரிடம் செம்மையாக ஆலோசித்துச்
சூதணுவும் அறியாத சுக்கிரீவர் ஆஞைசெய்து

அனுப்பிவிட்டார் தகுந்தவரை அவர்கள்சென்று
அழைத்துவர
நினைத்துத்தந்த கெடுயின்றோடு நீங்குதையா
வந்திடுவார்

வந்தெல்லோரும் சேர்ந்ததன்மேல் வலுமிகுந்து
மனமுவந்து
எந்தன்பார்த்தா வந்திடவே இருக்கின்றார் சித்தமாகப்

620. பக்தியுள்ள சுக்கிரீவரைப் பயப்படவே மிரட்டுகிறீர்
சக்திக்கழ காகாதிந்தச் சாகசத்தை விட்டுவிடும்

அடங்கியுள்ள பேர்களின்மேல் அதிகாரந்
தனைக்காட்டிக்
கடிந்துமிகப் பேசுவது கனமல்ல கருணைகொள்வீர்

சொன்னவாக்கைத் தப்பிப்பேசில் சுக்கிரீவரைச்
சொல்லுமையா
புன்னைதந்தை போலவெண்ணி ஆண்டவன்ஸ்ரீ
ராமனையே

நம்பியுள்ள அவரைவீணாய் நடுங்கும்படி பேசுவது
அம்புவியில் அரசருக்கு அழகாமோ அறிந்துபாரீர்

உள்ளமறி யாமல் வந்துஉதாசீனம் பேசுகிறீர்
கள்ளமில்லாச் சுக்கிரீவரைக் கண்சிவந்தே ஏசுகிறீர்

625. உள்ளசுக மனுபவிக்க ஒட்டாமல் தட்டிப்பேச
எள்ளளவும் நியாயமுண்டோ ஏழையென்றே
யாழம்பார்த்தீர்

அனுபவத்தில் முதிர்ந்தவர்கள் ஆதியந்தங்
கண்டுரைப்பார்
மனதுவச மில்லாதபோர் மமதைகொண்டே
பேசுவார்கள்

சக்தியுள்ள போர்களெல்லாம் சகலமுமே
தெரிந்தவர்போல்
பக்தியுள்ள போர்களையும் பட்சம்விட்டுப் பேசுவார்கள்

ஆணவத்தின் முறுக்குகளை அமர்புரிய எதிர்ப்பவர்கள்
காணும்படி கையெடுத்துக் காட்டுவதே கனமாகுமே

ஆராய்ந்து பார்த்தறிந்து அதன்பிறகு
துணிந்துரைத்தல்
நேரான காரியமாம் நினைத்தும்மில் பார்த்துரைப்பீர்

630. எதிரியைப்போ லெண்ணிக்கொண்டு எடுத்தெறிந்து
பேசிவிட்டீர்
பதிலுரைக்க மாட்டாமல் பயந்துகொண்டு
வருந்துகிறார்

இஷ்டப்படி செய்திடலாம் எதிர்ப்பவர்க ளாருமிலை
கஷ்டப்படச் செய்வேனென்று கைகாட்ட
வேண்டாமையா

கஷ்டநஷ்ட மறியாமலும் கருணையென்ப தில்லாமலும்
துஷ்டனென்றே யெண்ணிமிகத் துணிந்துசொன்னீர்
துடிக்கும்படி

சிரசாக்ஞை செய்வேனென்று சித்தந்துணிந்
துரைத்ததினால்
பரிதபிக்கும் பதிமுகத்தைப் பார்த்தால்மனம்
பதைக்குதையா

என்பதியை இகழ்ந்துமிக ஏங்கும்படி பேசியதால்
அன்புகொள்ள வேண்டியேநான் அடிவணங்கி
நியாயஞ்சொன்னேன்

—

635. சொன்னதெல்லாம் தயவுகொள்ளச் சொன்னநன்றி
யவமதித்துச்
சொன்னதில்லை மன்னவரே முன்னும்பின்னு
மாலோசித்துக்

குணமடைய வுள்ளவழி கொண்டுசெய்யுங்
காரியத்தைத்
துணைசெய்யும் உங்களுக்குத் தொண்டரையா
சுக்கிரீவர்

ஆதரித்த பேர்கள்தானே அழித்திடுவே
னென்றுவந்தால்
நீதியாமோ நேராமோ நேசங்கொள்வீர் ஆசிரதர்மேல்

உக்கிரமாக நீரிருக்கும் உண்மைதனைக்
கண்டுரைத்தேன்
துக்கமது சகியாமலே சொன்னேனையா கூமித்திடுவீர்

நேசமிக நெஞ்சிலுள்ள ஆசையுடன் உழைக்கவுள்ளத்
தோஷமில்லா என்பதியை சொல்லவேண்டாம்
குறையனுவும்

640. காரணகா ரியமுரைத்தேன் காலிலுமே விழுந்தழுதேன்
நாரியெனக் காகவேண்டி நட்புக்கொள்வீ
ரென்றுரைத்து

மறுபடியும் வணங்கித்தாரை மறைவில்சென்றாள்
லட்சுமணன்
அறிவுகொண்டு ஆலோசித்து அமரிக்கையை
மிகவுங்கொண்டு

ஆறுதலை யடைவதற்கு அநேகவித நியாயங்களைத்
தாரைமிக அறிவோடு தந்திரமா யெடுத்துரைத்தாள்

பெண்களிலே இவள்மிகவும் பேர்பெற்ற் பெண்ணாவள்
உண்மையாகக் கணவருக்கு உழைப்பவரில் இவளரிதே

வாக்குநய மென்னசொல்வோம் வசனமெட்டு
மென்னசொல்வோம்
ஜாக்கிரதையாய்ப் பேசுகிற சமயோசித
மென்னசொல்வோம்

இவளுடைய மொழிகளினால் இருந்தகோபம்
பறந்ததிப்போ
எவருமிவள் வாக்கைக்கேட்டால் இன்பங்கொள்வா
ரென்றுமிக

அதிசயித்தான் லட்சுமணன் அந்தரங்கந்
தனையறிந்தான்
கொதிக்கமனம் கண்ணீர்பெருகக் குனிந்துநிற்கும்
சுக்கிரீவன்மேல்

கருணைகொண்டு சுண்துடைத்துக் காரணத்தை
யறிந்தேனையா
பரமபக்தி யுள்ளநேசர் பாரில்நீரே யாகுவீரே

சேனைகளைச் சேகரிக்கச் செய்தவொரு முயற்சிதனை
நானறியேன் ஆகையினால் நான்மிகவும்
கோபங்கொண்டேன்

அறியச்செய்யா திருந்ததினால் அண்ணன்மனக்
குறையறிந்து
துரிதமாக ஓடிவந்தேன் துலங்குமும்ம
கோலங்கொண்டேன்

மனவருத்தம் மிகவுங்கொண்டேன் வந்தபடி
பேசிவிட்டேன்
மனையவளா முமதுதாரை வாஸ்தவத்தைச்
சொன்னதினால்

கோபமெல்லா மொழிந்ததையா குணமிகவே
யடைந்தேனையா
பாபமில்லா பக்தரேநீர் பரிதபிக்க வேண்டாமையா

அன்புமும மீதில்மிக அண்ணனுக்கு இருக்குதையா
நன்மைசெய்யும் அண்ணனுக்கு நாடிச்செய்வீர்
நன்றிதனை

வாருமையா வென்றழைத்த வாக்கைக்கேட்டுச்
சுக்கிரீவன்
தேறுதலை மிகவடைந்து திர்ப்திகொண்டு அந்தவுடன்

மாலையாதி கொண்டிருந்த மணக்கோலந்
தனையெல்லாம்
நீலவர்ணன் தம்பிமுன்னே நீக்கிவிட்டு நேராகவே

655. சுலந்துமிக உறவாடிக் கனவானே லட்சுமணா
உலகில்ஸ்ரீ ராமருக்கு ஒருவரிட உதவியினால்

ஆகவுண்டோ சாரியங்கள் ஆனால்நான் வருவதிலே
தாகமிக வுண்டெனக்குத் தானவர்கள் ராமன்கையால்

அதமாகுங் காட்சியெல்லாம் அறிந்துமிக
மனங்களித்துப்
பதமலரை வணங்கியவர் பாதபூஜை செய்வேனையா

எப்பொழுதும் ராமரைநான் ஈஷத்தும் மறவேனையா
ஒப்பும்படி யவருக்குநான் உழைப்பேனையா
உள்ளவரை

கஷ்டமெல்லா மொழித்தென்னைக் காப்பாற்றிய
ஸ்ரீராமரை
இஷ்டதெய்வம் போலவெண்ணி எப்பொழுதும்
பூஜைசெய்வேன்

660. ஆண்டவனும் அருள்பரனும் அகிலாண்ட
கோடியெல்லாம்
தூண்டியாளும் பொருளேராமன் துணைசெய்யும்
தேவனவன்

ஆவியைப்போ லுள்ளராமன் ஆதரவை விட்டுவிட்டுப்
போதவுண்டோ எங்காயினும் பொறுப்புடனே
நடப்பேனையா

இந்தவிதஞ் சொல்லிக்கொண்டு இருக்கையிலே
அனுமாரவர்
வந்துரைத்தார் படைகளோடு வானரராம்
வீரரெல்லாம்

சித்தமாக வந்துவிட்டார் சீக்கிரமாய் ராமரிடம்
அத்தனைபேர் களையுமிப்போ அழைத்துக்கொண்டு
போவோமென்றார்

கேட்டுமிகச் சுக்கிரீவன் கிர்தார்த்தனானோ
யெனமகிழ்ந்து
கூட்டமெல்லாம் வந்துபார்த்து ஊட்டந்தந்து
வுபசரித்து

665. இனையவனை யழைத்துக்கொண்டு இருவருமாய்ப்
பல்லாக்கில்
களிப்புடனே உட்கார்ந்து கவிகளெல்லாஞ் சூழ்ந்துவர

அங்கிருந்த ரிசியமுக அருமையான பருவதத்தில்
தங்கியுள்ள ராமனிடம் தளங்களுடன் வந்துசேர்ந்து

வணங்கிநின்றா ரிருவருமாய் வாஞ்சையோடு
சுக்ரீவனைக்
குணமுடனே தழுவிக்கொண்டு குறித்துச்சொல்வான்
ஸ்ரீராமன்

---

664. கிர்தார்த்தன் - அடையவேண்டிய சிறப்பைப் பெற்றவன்

எதிர்பார்த்தேன் வருவீரென்று எல்லோருடன்
வந்ததினால்
அதிசுதிர்ப்தி கொண்டேனையா ஆனாலுஞ்
சொல்வேன்கேளீர்

தருமார்த்த சாமமென்று தரணியிலே மூன்றுவிதச்
சருமமுண்டு அரசரதைக் காலோசிதங் கண்டுகொண்டு

670. அனுசரித்து நடந்துகொண்டால் அனுகூல
மிசுவுமுண்டாம்
மனதைவசங் கொள்ளாமல் மமதைகொண்டால்
கனமழிந்து

தீங்குமுண்டா மாசையினால் தெரிந்துகொண்டு
நடந்துவந்தால்
தாங்குவார்கள் யாவருமே தருமமெண்ணி
நடக்கவேண்டும்

இதைமறந்தால் மதியிழந்து இம்சைப்பட நேருமையா
அதிகபுத்தி யுள்ளவரே அறிந்துசெய்வீர்
காரியமென்றார்

இசுபரத்தின் இன்பமெல்லாம் எனக்குண்டாம்
உமதருளால்
சகலபாக்யந் தந்தீரையா சற்றுமும்மை மறவேனையா

படைகளெல்லாம் வந்துவிட்டார் பார்த்தவர்க்கு
ஆக்ஞைசெய்வீர்
தடையின்றி எங்கும்போவார் தகுந்தபடி.
முயற்சிசெய்வார்

675. சீதையுள்ள விடமறிந்து சீக்கிரமாய் வந்திடுவார்
போதமுள்ள வீரரிவர் புத்திசொல்லி யனுப்புமென்று

சுக்கிரவ னுரைக்கக்கேட்டுச் சூட்சமபுத்தி யுள்ளராமன்
தக்கபடி யவரவர்க்குத் தாமேசொல்லி
யனுப்புமென்றான்

அந்தபடி சுக்கிரீவன் அழைத்துச்சொல்வான்
தளகர்த்தரை
எனதாக்ஞைப் படிநடப்பீர் எல்லளவும் பிசகாமலே

சொல்லுமொரு கெடுவுக்குள்ளே சுத்தியெங்கும்
பார்த்துவந்து
எல்லையில்லாப் பலமுடைய இராமர்பத்னி சீதையுள்ள

இடமதனைச் சொல்லாவிடில் இழந்திடுவீர்
பிராணந்தனைத்
தடமறிந்து நடந்துகொள்வீர் தண்டிப்பே
னில்லாவிடில்

680. மாதமொன்று கெடுக்கொடுத்தேன் மாதேவி
தனைக்கண்டு
நாதன்மனங் குளிரும்படி நான்தப்பாமல் வந்திடுவீர்

நன்மைசெய்த ராமனுக்கு நானடிமை யென்றறிவீர்
என்கடனைத் தீர்ப்பதற்கு எல்லோரு முழைத்திடுவீர்

ஒவ்வொரு திக்கிலுமே உள்ளஸ்தலங் களையெல்லாம்
இவ்விதமென் றெடுத்துரைப்பேன் எல்லோருங்
கேட்பீரென்று

கிழக்குத்திக்கு மேற்குத்திக்கு கிரமமாக வடக்குத்திக்கு
முழுதுமுள்ள உலகதனில் முறையாக உள்ளபல

பருவதங்கள் பட்டணங்கள் புரிகத்த ஸ்தலங்களோடு
அரிதான விடங்களையும் அறிந்துகொள்ள
விரித்துரைத்தான்

685. அதன்பிறகு அவரவர்க்கு ஆக்ஞைசெய்த திக்குகளை
அதிசீக்கிரம் அடைந்துதேட ஆரம்பித்தா ரவரவரும்

புறப்புடுமுன் சுக்கிரீவன் பின்னுஞ்சொல்வான்
அனுமானிடம்
பிரியமுள்ள மந்திரியே பெருமைபெற
நடந்துகொள்வாய்

அரக்கனுள்ள தெற்குத்திசை அனைத்தையும்போய்த்
தேடிச்சீதை
இருக்குமிடங் கண்டறிந்து என்னிடத்து
வந்துரைப்பாய்

காரியத்தைச் சாதித்தென்னைக் கனப்படுத்தும்
பொறுப்புள்ளோர்
ஆருமுண்டென் றெயுரைப்பார் ஆனாலும்
உன்னைப்போலப்

புத்தியுடன் சக்தியுமே பொருந்தியுள்ளோர் அரிதாமே
சித்தசுத்தி யுள்ளநீயே சீதைதனைத் தேடிக்காண்பாய்

690. உன்வரவை நம்பியேநான் உறுதியாக இருப்பேன்பார்
என்னிஷ்டப் படிநடந்து இராமகாரியஞ் சாதிப்பாயே

உனையனுப்புங் காரியத்தில் ஒருகுறையும் வருவதில்லை
எனதுமனங் கண்டறிந்து என்னைமிக ஆதரிக்கும்

உனக்கேதுஞ் சொல்லவேண்டாம் உனக்குநிக
ரொருவரில்லை
அனைவருக்கும் பெருதமைதரும் அனுமானே
யென்றுரைத்தான்

அனுமானிடஞ் சுக்கிரீவன் அன்புடனே
சொன்னதெல்லாம்
மனதினிலே வாங்கிக்கொண்டான் மாதவன்ஸ்ரீ
ராமனப்போ

சுக்கிரீவன் சொல்லியதாம் சொற்களினா லனுமான்மிக
அக்கறையா யுழைப்பானென்று அவனிடத்து
அன்புகொண்டு

695. வீரருக்குள் வீரரான வினயமுள்ள அனுமாரை
சாரமாகக் கிரகித்துக்கொண்டு சர்வபரி பூரணன்ஸ்ரீ

இராமானந்த அனுமாரிடம் இரகசியங்கள் சிலதுட்னே
ஷேமசமா சாரமெல்லாம் சீதையுடன் சொல்லும்படி

காரியங்கை கூடச்செய்யும் சுனமுடைய அனுமாரே
கோரித்தருங் கணையாழியைக் கொண்டுபோவீ
ரடையாளமாய்

சீதையும்மைக் கண்டவுடன் செப்புமும்ம வாக்கையவள்
ஆதரவா யெண்ணியென்னால் அனுப்பப்பட்டீ
ரொன்றுநம்பி

உம்மிடத்து மனங்கலந்து உண்மையாக
நடந்துகொள்வாள்
செம்மையாகச் சேதிகொண்டு சீக்கிரமாய்
வருவீரென்று

700. சொல்லித்தந்தார் மோதிரத்தைச் சுவாமிகையால்
வாங்கியதை
நல்லமன முளவனுமான் நமஸ்கரித்து
விடையும்பெற்றுக்

கிளம்பினார்கள் வீரரெல்லாம் கிரமமாக அவரவர்க்கு
விளம்பியதாம் திக்குநோக்கி விரைவாகப்
படைகளுடன்

ஆரியனொளி மறைந்ததம்மா சுற்றியெங்கு
மிருண்டதம்மா
கோரிவிண்ணில் பார்க்கையிலே கோடிகோடி
வானரர்கள்

போகுமொரு வேகமதைப் புத்திகொண்டு
சொல்லுதற்குத்
தாகமிக வுண்டெனக்குத் தள்ளாது சொல்லுதற்கு

அதன்பிறகு ஸ்ரீராமன் அன்புடனே சுக்கிரீவனை
எதுகொண்டு விரித்துரைத்தீர் எல்லாத்திக்கின்
நிலைமையென்றார்

705. சுக்கிரீவன் சொல்லுகிறான் சுவாமியந்தச் சேதிகேளீர்
திக்கெங்கும் போயலைந்தும் சிரமமடைந்தேன்
ஒருசமயம்

வாலியென்மேல் பகைகொண்டு வதைப்பேனென்று
துரத்துமொரு
காலமதி லுலகையெல்லாம் கண்டேனையா
ஓடியோடிக்

கூடவந்தோர் களிலேநல்ல குணமுடைய மாருதிதான்
நாடிச்சொன்னா ரிந்தமலை நாமிருக்கத் தகுதியாகும்

வாலியிங்கு வருவதேது மதங்கமுனி சாபந்தந்த
காலமுத லென்றுரைத்தான் சுருதிநானும் மந்திரிகளும்

இந்தமலை வந்தோமென்று அந்தச்சேதி
தனையுரைத்தான்
சுந்தரனாம் ஸ்ரீராமன் சொன்னதைக்கேட்
டதிசயித்தான்

திக்குகளின் ஸ்திதிகளை ஸ்ரீராமன் கேட்டதுக்குச் சுக்கிரீவன் தானறிந்த காரணத்தைச் சொல்லியபின், மூன்று திக்குகளில் சென்ற வானரர்கள் வந்து சேதி சொல்வதும், தென்திசை யேகிய வானரர் ரிட்சபிலத்தில் தாகாதிகளைத் தீர்த்து வெளிப் படுவதும் சம்பாதியால் ஜானகியிருக்குமிடமறிந்து அனுமாரைப் பிரார்த்திக்க, அவர் லங்கைக்குப் போகச் சித்தமாவதும்

710. அனுகூலச் சேதிகொண்டு அனைவர்களும் வந்துசேர
மனதில்மிக ஆவல்கொண்டு மாதவனா ரிருந்தாரம்மா

எல்லாத்திக்கும் போனவர்கள் எத்தனையோ
சவுரியங்கள்
உல்லாசமாய்ப் பேசிக்கொண்டு ஓரிடமுந் தப்பாமலே

எங்குஞ்சுத்திப் பார்த்துக்கொண்டு இடருகளை
யொழித்துக்கொண்டு
தங்களாலே யானமட்டும் தாகங்கொண்டு தேடிவிட்டுக்

கெடுப்படிக்கு வந்துசேர்ந்தார் கிழக்குமேற்கு
வடக்குத்திசை
அடுத்துச்சென்ற பேர்களெல்லாம் அனுமார்தான்
சீதைதனைக்

கண்டுசேதி வந்துரைப்பார் காரியத்தைச் சாதிப்பார்
எண்டிசையும் போவாரவர் இருப்பறிந்து வருவாரவர்

715. நாமவர்போல் சேதிதர நமக்குப்பிராப்தி
இல்லையென்று
க்ஷேமமாக வந்தவரைச் சேதிகேட்டான் சுக்கிரீவன்

பட்டணங்கள் பருவதங்கள் பலவிடங்கள் பாரெங்கும்
திட்டமாகப் போயலைந்தோம் திருமகளைக்
காணோமென்றார்

மோனமாக எங்குஞ்சென்று முயற்சியோடு தேடிவந்த
வானரரின் கூட்டங்களை வையகத்தோ
ராருங்கண்டார்

பரதனுள்ள விடமும்வந்து பார்த்தாரம்மா வானரர்கள்
தருமசீலன் ராமனென்றே தம்மில்மிக நம்பினார்கள்

வாக்கில்ராமா ராமாவென்று வழங்கிவரும்
பக்திகொண்டு
நாக்கில்ராம நாமஞ்சொல்வோன் நமதுராம
னல்லவென்று

720. எண்ணினதும் இளையவன்போல் இருந்தவொரு
மனிதனையும்
கண்ணில்கண்டோ மென்றுரைத்தார் கபிகளம்மா
ராமன்கேட்டுத்

தம்பிகளை யெண்ணியெண்ணித் தத்தளித்தான்
சித்தம்நொந்து
தம்பியும்சுக் ரீவனுமாய்த் தைரியஞ்சொல்லித்
தேற்றினார்கள்

போனவரில் தென்திசையார் போயெங்கும்
அலைந்துதேடி
ஜானகியைக் காணாமல் சலித்திருக்கும் வேளையிலே

அசுரனாக வுள்ளவொரு அகங்கொழுத்த சூரன்வந்து
மசைபிடித்தோன் போலெதிர்த்து மண்டிபோட்டான்
மறித்துக்கொண்டு

சீதைதனைக் காணாமல் சித்தந்தனில் குறைகொண்டு
இருக்குமொரு சமயந்தனில் இந்தப்பாவி
வந்தானென்று

725. சுருத்தில்கோபங் கொண்டங்குதன் காதசுனாம்
அசுரன்றனைக்
சுருத்தைமுஷ்டி கொண்டடித்தான் க்கிரத்தஞ்
சிந்திச்சூரன்

அழ்மானான் அதன்பிறகும் அநேகமலை
வனங்களெல்லாம்
நிதமும்போய்த் தேடிப்பார்த்தார் நேசங்கொண்டு
ஆசையோடு

சீதையெங்கும் காணாமலே சித்தமிக நொந்ததோடு
பாதைமிக வுண்டாயிற்றுப் பசிதாகம் பொறுக்காமல்

மரத்தடியி லிருந்துகொண்டு மயங்கியெல்லோ
ரிருக்கையிலே
பறந்துவரக் கண்டாரப்போ பட்சிவர்க்கும்
வெகுவாசுவே

நீராடி வருமவைகள் நிலத்தில்ரிட்ச பிலத்தினின்று
தாராளமாய் வருவதினால் தாமுமந்தப்
பிலத்தில்சென்றால்

730. தாகசாந்தி யாகுமென்று தம்மிலெண்ணி
ஜாக்கிரதையாய்
ஜாகமுடன் பிலத்துவாரத்தில் ஒன்றுசேர்ந்து
சென்றனர்கள்

730. பிலம் - சுரங்கம்

இருள்மூடி யிருக்குமதில் எல்லோரும் போகையிலே
இருள்நீங்கி யொளிகாண எத்தனையோ நேர்த்தியாக

நகரொன்று கண்டதம்மா நான்குபக்கம் காசுகளும்
வகைவகையாய்க் கனிகளுள்ள வனங்களுந்தா
னிருந்ததம்மா

தேஜசுள்ள தபசியைப்போல் திவ்யரூப ஸ்திரீயொருவள்
வசிக்கக்கண்டு அவள்பாதம் வணங்கிநின் றவளிடத்து

அனுமான்சொல்வான் யாரம்மாநீர் அழகியதாம் நக
ருமேது?
எனக்கதனைச் சொல்லுமென்றான் இஷ்டங்
கொண்டே சொல்வானவள்

735. விசுவகர்மா சிருஷ்டிசெய்து வெகுகால மிதிலவனே
வசித்துக்கொண்டு ஹேமையுடன் வாழ்ந்துவந்தான்
இந்திரன்வந்து

அவனைவதை செய்துவிட்டான் அதன்பிறகு
ஹேமையவள்
இவடந்தனி லிருந்துவந்து என்னையிங்
கிருக்கச்சொல்லிக்

கதியடைந்தா ளதுமுதலாய்க் காலந்தனைக்
கழித்துக்கொண்டு
அதிகபக்தி தனைக்கொண்டு அருந்தவத்தைச்
செய்துகொண்டு

இருக்கின்றே னெனதுபெயர் என்னவெனில்
சுவயம்பிர்டையே
அரிதான இடமிதிலே யாரும்வர லாகாதையா

தடங்கொண்டு வந்ததொரு சங்கதியைச்
சொல்லுமென்று
அடுத்துநிற்கும் அநுமாரை அவள்கேட்க
அனுமார்சொல்வார்

ஸ்ரீராமன் பத்தினியாம் சீதாதேவி தனைராவணன்
ஆருமிலா வேளையிலே அபகரித்துப் போனானம்மா

சீதைதனைத் தேடவந்தோம் சீமையெங்கும்
சுத்திப்பார்த்தோம்
மாதரசாம் சீதையம்மாள் வசிக்குமிடந் தெரியவில்லை

பசிதாகம் பொறுக்காமலே பறந்துவந்தோ மிவ்விடத்து
அசதிமிக வாகையினால் அருந்தத்தந்து சீதையுள்ள

ஸ்தலமதனைத் தெரிந்திருந்தால் சற்றுக்கிர்பை
கொண்டுரைப்பீர்
அலைந்துமிக நொந்தோமென்று அனுமார்சொல்லக்
கேட்டந்தப்பெண்

பரிதாபம் மிகவடைந்து பசிதாகங் களைத்தீர்க்க
அருந்தும்நல்ல பலாதிகளை அளித்தாளம்மா
அன்புடனே

745. ஜானகியைத் திருடிப்போன சங்கதிக்காய் விசனப்பட்டு
நானறியேன் ஜானகியாள் நன்விலத்தி லிருக்குமிடம்

செம்மையாக வெங்குந்தேடிச் சீதைதனைப் பாருமையா
அம்மன்சீதை யிருக்குமிடம் அறிந்துகொள்வீ
ரென்றுமிக

அனுக்கிரகித்து வானரரை அரைநொடியில்
வெளியில்தாட்ட
மனதிலெண்ணி யெல்லோருக்கும் மனமுவந்து
சொல்லுகிறாள்

திருப்பிப்போக மார்க்கமது தெரியாதையா வுங்களுக்கு
அரைநிமிஷம் சுன்கள்மூடி அப்படியே இருப்பீராயின்

இந்தவிடம் விட்டுமுந்தி இருந்தவிடம் சேர்த்துவேனான்
அந்தப்படி செய்யுமென்று அவளுரைத்த
படிசெய்தார்கள்

750. மூடிக்கண்ணைத் திறக்குமுன்னே முன்னிருந்த
விடத்தில்வந்து
கூடினார்கள் வானரர்கள் நாடிக்கண்ணைத்
திறந்துபார்த்தார்

அதிசயித்தார் ஆனந்தித்தார் அதன்பிறகு விதித்தகெடு
மதியிலெண்ணிப் பார்த்தாரம்மா மனதிலட்சங்
கொண்டாரம்மா

வந்துகாரிய மாகாமலே வந்துகெடு தாட்டியமேல்
சொந்தங்கொண்டு போனாலந்தச் சுக்கிரீவன்
நிக்கரகித்துச்

சித்திரவதை செய்வானவன் கத்தும்படி
கொல்வானவன்
மற்றதொன்றுங் கேளானவன் சுற்றியெங்கு
பார்ப்போமினி

---

754. பிராயோபவேசம் - உணவு உண்ணாமல் உடம்பைவருத்தி உயிர்விடுதல்.

பிராயோப வேசஞ்செய்து பிராணனைநாம்
போக்குவதே
சிரேஷ்டமென்று விசனத்தோடு செப்பினானங்
கதனம்மா

755. தாரனிந்த வார்த்தைகேட்டுத் தைரியமாய்
நாமெல்லாம்
கோரியென் பிலத்வாரத்தில் கூடிச்சென்று
சுகப்படுவோம்

வாருமென்றே யழைத்தானம்மா வாலிமகன்
சம்மதித்தான்
தீரனான அனுமானப்போ செப்புகிறான் இப்படியே

எங்குபோனா லும்விடாது இராமலட்சு மணர்பாணம்
உங்களைவந் துபத்திரவிக்கும் ஒருக்காலும்
தப்பமாட்டீர்

இதுவுமன்றிக் கூடவந்த எல்லோருஞ் சம்மதியார்
இதமுள்ள இனத்தாரை எவரும்விடத்
துணியமாட்டார்

நீமட்டும் நகரடைவாய் நெசங்கொள்வான்
சுக்கிரீவனும்
காமம்தாரை மீதிலுண்டு கருணையுந்தன் மீதிலுண்டு

760. அன்புடனே அங்கதனை ஆதரிப்பான் அவமதித்தான்
நன்மைசெய்வா னென்றுரைத்தான் நாடியப்போ
அங்கதனும்

பதிலுரைப்பான் மாருதியே பாபியந்தச்
சுக்கிரீவன்போல்
சதிகாரன் எவனுமில்லை சத்தியம்சௌச
மவனுக்கில்லை

தமயன்பெண்டைத் தானடைந்து தம்மில்மிக
மகிழுகிறான்
நமஸ்கரிக்க வேண்டியவன் நன்றிகெட்டே கூடுகிறான்

மானமில்லை லச்சையில்லை மரியாதை களுமில்லை
ஈனனவன் என்னையவன் ஈவுத்தும் ஆதரியான்

சுகமவனா வில்லையையா சோகமிகத் தருவானையா
மகத்தான பாபியவன் மமதையுள்ள கோபியவன்

765. கற்பழிக்கும் காதகனே கருணையில்லாப் பாதகனே
அற்பப்புத்தி யுள்ளவனே அறிவிழந்த அசத்தவனே

ஸ்ரீராமன் காரியத்தில் சிரத்தையில்லா திருந்தவனே
தீராம லவனிடத்துத் திரிந்தேனையா மனங்கலந்து

அப்பன்சொல்லை யொப்பியேநான் அவனிடத்து
அன்புவைத்தேன்
எப்படித்தான் செப்பக்கூடும் தப்புகளை அப்படியே

மனமறிந்த வும்மிடத்து மனக்கருத்தைச்
சொன்னேனையா
இனியுயிரை வைத்திருக்கேன் இப்பொழுதே விடுவதற்கு

தடையில்லை யென்றங்கதன் தர்ப்பைதனைப்
பரப்பியதில்
படுத்துவிட்டார் மற்றவரும் பிராணன்விடத்
துணிந்துகொண்டு

770. அவனைப்போல அவருஞ்செய்து அனைவர்களும்
புலம்புகையில்
எவரிங்கு வந்தாரென்று எண்ணியங்கோர் பருவதத்தில்

இருக்கின்ற சம்பாதி எனுங்கழுகு எழுந்துபார்க்கக்
குரங்குகளென் றறிந்தவரைக் கொன்றுபசி
தீர்ப்போமென்று

ஆசைகொண் டிருக்கையிலே அங்குதன்ஸ்ரீ
ராமச்சந்தரன்
தேசம்விட்டு வனத்தில்வந்த சேதியெல்லாஞ்
சொல்லிக்கொண்டு

இராமர்பத்னி ஜானகியை இராட்சசனாம்
ராவணன்போய்க்
காமங்கொண்டு திருடியவன் சுகனமார்க்கம்
போகையிலே

அவனைவந்து தடுத்தவனோ டமர்புரிந்த
ஜடாயுமன்னர்
அவனாலே யதமானா லும் அவர்நல்ல கதியடைந்தார்

775. அவரைக்குரை ராமன்சேர்த்தான் அவரேயாம்
புண்யசாமி
குவலயத்தில் நாம்பிறந்து குணமுண்டோ
வென்றுரைக்கக்

கேட்டுமிக விசனங்கொண்டான் கிர்த்தரனான
சம்பாதி
கூட்டுமாக இருக்குமந்தக் குரங்குகளைப்
பார்த்துக்கேட்டான்

எனதுதம்பி ஜடாயுவையா என்னவானான்
விவரஞ்சொல்வீர்
எனைப்பிரிந்து மிகவுமவன் எத்தனையோ காலமாச்சு

---

776. கிர்த்தரன் - கழுகு

எனதிறகு சூரியனால் எரிந்துபோக விழுந்தேனிங்கு
எனதுதம்பி பிரிந்தானப்போ இருப்பிடமே
அறியேனப்பால்

அவனைப்போலத் தம்பியுண்டோ அவன்ஸ்திதியே
தெரியாமல்
இவடந்தனி லிருந்துகொண்டு எங்கும்போக
வகையில்லாமல்

780. தங்கியிந்த விந்தியமலை தனிலேயே வசிக்கின்றேன்
சங்கையின்றி வரலாறெல்லாம் சரியாகச்
சொல்லுமென்றான்

சேதியெல்லாம் விவரப்படச் செப்பினார்
கதைக்கேட்டு
வேதனையை மிகவடைந்து விம்மிவிம்மி அழுதடங்கித்

தம்பிகடன் தீர்ப்பதற்குத் தர்ப்பணாதி செய்திடவே
நம்பியந்த வானரரை நயந்துவேண்ட அவர்கள்வந்து

கடற்கரையில் சேர்த்தினார்கள் கருத்துடனே
தம்பிக்கெல்லாம்
நடத்தியமே லிருப்பிட்மே நட்புக்கொண்டு
சேர்த்தினார்கள்

அதன்பிறகு ஜடாயுவொரு ஆதித்தனை
யடுத்துச்சென்று
மதமழிந்த விதந்தனையும் மகரிஷியாம் நிசாரர்தான்

785. மனமுவந்து சொன்னபடி மாதவன்ஸ்ரீ ராமனுக்குத்
தனதுதவி நேரும்போது தனக்கிறகு வளருமென்ற

விர்த்தாந்த முழுதுஞ்சொல்லி விசுவாசங்
கொண்டவந்தக்
கிர்த்தரனை வானரர்கள் கேட்டுக்கொண்டார்
சீதையிப்போ

இருக்குமிட மறியச்சொல்ல இஷ்டங்கொண்டே
யவனுஞ்சொல்வான்
கருதியதைச் சொன்னாலன்றிக் கஷ்டமென்னை
விட்டிருமோ?

நானேசொல்ல விருந்தேனையா நயந்தும்நீங்கள்
கேட்டீரையா
ஆனால்கேளுஞ் சொல்லுகிறேன் அன்னைசீதை
இருக்குமிடம்

கருத்துதனை நிறுத்திக்கேளீர் கவலையெங்கும்
வேண்டாமையா
அருமையான லங்கையென்று அரணவத்தின்
மத்தியிலே

790. இருக்குதந்த நகரேதான் இராவணக்கா தகன்வசிக்கும்
இருப்பிடமென் றறிந்துகொள்வீர் இங்கிருந்து
நூறுகாதம்

அந்தநகருள்ள துவாம் அதிலசோக வனமொன்றுண்டு
அந்தவன மத்தியிலே அந்தச்சீதை தன்னைத்தானே

அரக்கியரைக் காவல்வைத்து அங்கிருக்கத்
திட்டஞ்செய்து
இருக்கின்றா னரக்கனையா என்பார்வைக்
கெட்டுதிப்போ

பட்சிகளின் நேத்திரச்சுடர் பரிசுத்தம் போலெதற்கும்
அட்சிச்சுட ரிராதுபாரீர் ஆகையினால் நானறிவேன்

கர்ப்பஸ்தான நிலைமையையும் கர்ப்பமுண்டாம்
விதந்தனையும்
அற்புதமா யெடுத்துரைத்து அதன்பிறகுஞ்
சொல்லுகிறான்

795. தீரர்களி லுங்களைப்போல் தீரரெங்கு மில்லையையா
ஆருமுங்கள் முன்னிலையில் அண்டமாட்டார்
கண்டோடுவார்

சீதைதனைக் கண்டுமிக ஜெயத்துடனே வந்திடுவீர்
நாதனம்பால் அரக்கரெல்லாம் நாசமாவார்
அதன்பிறகு

ஆகையினால் வேகமாக அரணவத்தைத் தாண்டுதற்குத்
தாகங்கொள்வீர் காரியங்கள் தடையின்றிக் கைகூடும்

என்றுரைத்த சம்பாதிக்கு இறகிரண்டும்
முளைத்ததம்மா
அன்றுரிஷி சொன்னபடி யாயிற்றென்று அகமகிழ்ந்து

அந்தவுடன் சம்பாதி அனைவர்களும் அனுமதிக்க
முந்திவாசஞ் செய்தஸ்தல மோகங்கொண்டே
பறந்துவிட்டான்

800. அதன்பிறகு வானரர்கள் அனைவர்களும்
கூடிக்கொண்டு
குதித்தார்கள் மிகவுமம்மா குறிப்பறிந்த களிப்பினாலே

உயிரிழக்க உறுதிகொண்டோம் உயிர்ப்பிச்சை
சம்பாதித்துந்தான்
பயமொழியத் தயவுசெய்தார் பாதுகாத்தார்
பட்சங்கொண்டு

இராமனுக்குச் சகாயஞ்செய்வோர் இராச்சியத்தில்
மிகவுமுண்டு
சாமளனாம் இராமன்காரியம் சரியாக
நிறைவேறுமென்

றகமகிழ்ந்தார் மிகக்குளிர்ந்தார் முகமலர்ந்தார்
வகையறிந்தார்
சுகமடைந்தார் திகிலொழிந்தார் புகழுடைய
மிகத்துணிந்தார்

வந்துசேர்ந்தா ரதன்பிறகு வானரர்கள் சமுத்திரக்கரை
அந்தவிடந் தனிலிருந்து ஆலோசித்தார் லங்கைபோக

805. அனைவர்களும் கெடுக்கடந்த அதைரியத்தாலும்
அலைச்சலாலும்
மனவுறுதி மட்டாகி மனக்கவலை மிகவுங்கொண்டு

இருக்கையிலே யவரைப்பார்த்து எவர்களிந்தச்
சமுத்திரத்தைச்
சரியாகத் தாண்டிவரச் சக்தியுள்ளோர்
சொல்லுமென்று

அங்கதன் கேட்கையிலே அவரவரும் பயந்துமிகத்
தங்கள்தங்கள் சக்திகளைத் தனித்தனியாய்ச்
சொன்னாரம்மா

அங்கதனாம் யுவராஜன் அரணவத்தைத்
தாண்டுவேனான்
இங்கதன்மேல் வந்துசேர எனக்குச்சக்தி
இல்லையென்றான்

இந்தப்படி பின்னடைந்து எல்லோருஞ் சொன்னதிலே
சிந்தையிலே கவலைகொண்டு செய்வதென்ன
வென்றங்குதன்

810. ஆலோசித்தான் அறிவுடைய அனுபவங்கள் மிகவுடைய
காலோசிதப் படியோசித்துக் கனமடைய நினைவுடைய

நானும்நன்றாய்க் கண்டறிந்த நஷ்டகஷ்டங்
களில்படிந்த
காலமெல்லாம் கண்டறிந்த கரடிஜன்மங்
கொண்டுவந்த

முதிர்ந்தவராம் ஜாம்பவந்தம் முறையறிந்த பெரியவரை
மதியுரைக்குக் கேட்டானம்மனமுவந்து
சொல்வாரவர்

இஷ்டசித்தி நிறைவேற இருக்குதையா மார்க்கமொன்று
கஷ்டமில்லை நஷ்டமில்லை காரியத்தைத்
தெரிசெய்யப்

புத்தியிலும் சக்தியிலும் பொறுமையிலும்
அருமையுள்ள
எத்தனையோ பெருமையுள்ள சித்தசுத்தி மிகவுமுள்ள

815. உத்தமராம் அனுமாரை உபசரிப்போம் சுபம்பெருக
இத்தரையில் அவராலேயே எல்லாங்கை கூடுமையா

மருமமெல்லாம் அவரறிவார் மாதவனாம்
ஸ்ரீராமனுக்குப்
பிரியமுடன் உழைத்திடவே பிரபஞ்சந்தன்
னுதித்துவந்தார்

தன்னுடைய பலமறியார் தருந்தபடி யுபசரித்துச்
சொன்னாலவர் பலமிருமே களுவிலெல்லாம்
சாதிப்பாரே

ஆகையினால் அனுமாரை அடுத்துரைப்போக்
வாருமென்று
தாகமுடன் எழுந்தாரம்மா தனியாக ஓரிடத்து

மவுனமாக விருக்குமந்த மாருதியை வந்துசூழ்ந்து
விவரமெல்லாஞ் சொன்னதோடு வெகுவிதமா
யுபசரித்துப்

820. புகழ்ந்தாரம்மா கேட்டனுமான் புத்தியிலே
ஆலோசித்து
மகிழ்ந்துரைப்பான் மயங்கவேண்டாம்
மனந்துணிவேன் நானேபோவேன்

சீதையைநான் கண்டறிந்து சேதிதனைக்
கொண்டுவந்து
ஆதரிப்பே னுங்களைநான் அகமகிழ்வீ
ரென்றுரைத்தான்

அந்தவுடன் ஜாம்புவந்தர் அனுமாரைப்
பார்த்துரைப்பார்
இந்தவேளை யும்மையன்றி எவருமில்லை போய்வரவே

ஜனித்தவுடன் சூர்யனைச் சீக்கிரமாய்ப் போய்ப்பிடிக்க
நினைத்துச்சென்று இந்திரனால் நீரடைந்த தீங்குக்காக

மனவருத்த மிகவுங்கொண்டு வாயுதேவன் தனதுநிலை
அனைவருக்கு மில்லாமல் அவஸ்தைப்படச்
செய்கையிலே

825. சகலமான தேவரோடு சதுர்முகரும் கூடிவந்து
சுகமடையச் செய்தமக்குச் சுட்டிவெகு சக்திதந்து

சுத்தவீர னாக்கியதைச் சொல்லவென்றால்
விரியுமன்றோ
உத்தமரே நித்தியமாக உள்ளவரே உம்மாலே

ஆகாத காரியமுண்டோ அனுமாரே யென்றுமிக
மகாவேசங் கொண்டுரைத்தார் முன்னின்று
வெகுவாகப்

புகழுகையில் மகிழ்ந்தனுமான் போதமுள்ள
பெரியவராம்
மகிமையுள்ள ஜாம்புவந்தர் மனங்களிக்க
மறுபடியும்

சொல்லுகிறான் நம்புமையா சுவாமிராமன்
காரியத்தை
அல்லும்பகல் தப்பாமலே அடிமையாக
இருந்துசெய்வேன்

830. உறுதியிது யென்றுரைத்தான் உளமகிழ்ந்தா
ரனைவர்களும்
அழிவுநிலை கொண்டனுமான் அரணவத்தைத்
தாண்டவெண்ணி

விசுவரூபங் கொள்ளுதற்கு விரித்திசெய்தார்
தேகமதைத்
தசகண்டன் லங்கைநகர் தனையடைந்தே
மென்றெண்ணினார்

சுந்தர காண்டம்

**மகேந்திரகிரியி லேறிச் சமுத்திரத்தை யனுமான்
தாண்டி லங்கை வந்து, லங்கணியை வென்று
நகருக்குள் சென்று, பலவிடங்களில் தேடி
ஜானகியைக் காணாமல் பரிதபித்து,
அசோகவனத்தைக் கண்டு, ஆண்டவன் முதலிய
தெய்வங்களை வேண்டி, அசோகவனத்திற்குள்
ளனுமான் வந்தது**

1. நினைத்துமகேந் திரத்தலேறி நினைவுவசங்
கொண்டுசூழி
முனையில்சுவாசஞ் செலுத்தியதை முறையாயாண்டு
அறிவுகொண்டு

பலமாக அழுத்தமலை பாதாளஞ் சேர்ந்தததை
மலையில்வாசம் செய்பவரும் மற்றுள்ள பிராணிகளும்

பட்டபாடு மிகவுமுண்டு மட்டில்லாமல் மடிந்ததுண்டு
கட்டப்பட்டு வித்தியாதரர்கள் சுகனமதில்
சென்றதுண்டு

கிளம்பிவிட்டான் விண்ணிலம்மட கீர்த்திபெறும்
மாருதிதான்
மளமளவென் றவனுடனே மரங்களெல்லாம் வேருடனே

பிடுங்கிக்கொண்டு தொடர்ந்துவரப் பெருங்காற்றுங்
கூடிவரக்
கடலிலலை புரண்டுவரக் கவியனுமான் தாண்டிவர

கடலரசன் கண்டுமிகக் களிப்படைந்து இளைப்பாற்றுந்
நடமதிலே யனுமானுக்குத் தங்குதற்கு உதவிசெய்ய

மைநாக மலைதன்னை மனமுவந்து
போகச்சொன்னான்
செய்திடுவே னுதவியென்று சீக்கிரமாய்க் கிளம்பியது

அனுமான்முன் வந்துநிற்க அதையொதுக்கிச்
சென்றானவன்
உனக்குதவி செய்யவந்தேன் உபேட்சைசெய்ய
லாமோவென்று

மனக்குறையைச் சொல்லக்கேட்டு மைநாசனைக்
கையிற்தொட்டு
அனுகூல மடைந்துவந்து அபேட்சைப்படி
நடப்பேனிப்போ

10. ஒருநொடியும் தாமதிக்க உதவாதென் றுரைத்தவனைப்
பிரியமாகக் கேட்டுக்கொண்டு பெருங்கடலைத்
தாண்டிப்போனான்

தேவரெல்லாம் மாருதியின் திறமைதனை யறிந்திடவே
அவனைப்போய்த் தடுக்கும்படி அனுப்பித்தந்தாய்
நாகமாதர்

சுரசையெனும் ஸ்திரீயவளைச் சொன்னபடி வந்தவனும்
மறித்துக்கொண்டாள் வாய்திறந்து மாருதியை
விழுங்கப் பார்த்தாள்

அந்தவேளை தேகமதை அதிகவிர்த்தி
யனுமான்செய்தான்
எந்தனைநீ வெல்லப்போமோ வென்றுரைத்துச்
சுரசையும்

பெருவாயைப் பெருக்கிக்கொண்டான் பிறகனுமான்
அணுவாகிக்
கருதியவள் வாயிற்சென்று காதின்வழி
யோடிவிட்டான்

15. மலைபோல விர்த்தியாகி மறைந்தனுமா னணுவாகி
துலங்காமல் போனதினால் தோரணையாய்
வந்தவளாம்

சுரசைநான்கு புறங்கள்பார்த்தாள் தொலைதூரம்
அனுமான்சென்ற
வரலாறைக் கண்டறிந்தாள் வல்லாள கண்டமுனிவன்

சமத்துள்ள குரங்கிவனே சாமர்த்திய முள்ளவனே
நமதுசக்தி இவன்முன்னே நடக்காதென்று
லச்சைகொண்டு

சுரசையவ ளிருப்பிடமே சொல்லாம
லோடிப்போனாள்
அருமையான சக்தியென்று அனுமாரைப்
புகழ்ந்தார்தேவர்

அதன்பிறகு மார்க்கந்தனில் அரக்கியான
சிம்கிகைதான்
மதத்துடனே இருந்துகொண்டு மாருதியின்
நிழலைக்கையால்

20. பிடித்திழுத்தான வனையவள் பெருவாயில் போட்டுக்
கொண்டாள்
சடுதியாக விழுங்கிவிட்டாள் சமர்த்தனான
அனுமானப்போ

அவள் வயிற்றைக் கிழித்தவளை அதமாக்கி
வெளியில்வந்து
சுவரவமாய் மறுபடியும் சகனமாக்க மாகவந்து

சுடல்தன்னைத் தான்டித்தெற்குக் கரையிலுள்ள
சிறந்த
கொடுமுடிக ளுள்ளலம்ப மலைதனிலே குதித்தானம்மா

குதித்ததன்மேல் லங்கைநகர் கொடிமுதலாஞ்
சிறப்புகளை
மதிகொண்டு பார்த்தனுமான் மனக்கவலை
மிகவுங்கொண்டான்

பட்டணத்தை வைத்திருக்கும் பாங்குதனால்
தசகண்டன்
மட்டில்லாப் பலமுடையோன் மர்மமிக அறிந்தவனாம்

25. இங்கிவனை வெல்ல வந்த இசுராமரா லு
மாகாதென்று
சங்கைகொண்டான் பிறகுடனே சரியல்ல நாமிதனை

யோசிக்கு நியாயமிலை யோக்கிதையை மீறியெண்ணல்
மோசமாசு முடிந்திடுமே முறைப்படிநாம் ஜானகியைக்

கண்டறிந்து போகவந்தோம் கடமைதனை மறந்தையம்
கொண்டுவீணாய்க் கவலைப்படக் கூடாதென்
றுருதிகொண்டான்

ஆதித்தன் அஸ்தமித்தான் அதற்கெதிரிற்
பூர்ணசந்திரன்
மேதினிக்குச் சுடரைத்தந்து மேனோக்கிக்
கிளம்பிவந்தான்

செய்வதினி யென்னவென்று சித்தமதில்
நினைத்தனுமான்
மெய்குறுக உருவெடுத்து மெதுவாகச் செல்வோமென்று

30. சிறுரூபங்கு ரூபங்கொண்டு சிறந்தலங்கை வடவாசலைக்
குறித்ததிலே நடந்துபோனான் குரூரமுள்ள
லங்கணிகண்

டாபடாடீ குரங்கேயிங்கு ஆசைகொண்டு வந்ததென்ன?
கூறிவிடி லாவிதங்கும் இல்லையெனிற்
கொல்வேனென்றான்

நகரிருக்கும் அலங்காரத்தை நான்கண்டு
மிகமகிழ்ந்தேன்
வெகுசிறப்பா யுள்ளநகர் விநோதமெல்லாஞ்
சுற்றிப்பார்க்க

வந்தேனென்று சொன்னவுடன் வல்லரக்கி
லங்கணிதான்
தந்தாளொரு குட்டனுமான் தலைதனிலே யதன்பிறகு

இவள்சொழுப்பை யடக்கியப்பால் இலங்கைக்குள்ளே
செல்வோமென்று
அவளுடைய மண்டையிலே அடித்தான்முஷ்டி
கொண்டனுமான்

35 அலறிக்கொண்டே விழுந்தாளவள் அனுமாரைப்
பார்த்துரைப்பாள்
இலங்கைநகர் ரக்ஷியுமினி என்னைவென்ற காரணத்தால்

சூரனுனைப் போலவெங்கும் சூரனைநான்
கண்டதில்லை
தீரனுந்தன் கைனாலே தீர்ந்ததென் சக்தியெல்லாம்

இந்தலங்கை தனைக்காக்க என்னைக்காவல்
வைத்தபிர்மா
தந்தாக்ஷைப் படிலங்கை தனைக்காத்தே
னிதுவரையில்

இங்குவந்து குரங்கொன்று என்னைவெல்லுங்
காலமதில்
பங்கம்வரு மிலங்கைக்கென்று பரிந்துரைத்தார்
பிரமதேவர்

அந்தப்படி யாயிற்றிப்போ அரக்கர்குல மொழியுமினி
உந்தனிஷ்டப் படிநடக்க ஒரு தீடையு
மில்லையென்றாள்

40. சாஸ்திரத்தின் முறைப்படியே சத்துருவின்
இருப்பிடத்தை
ஆஸ்தையோடு அடையவந்தோர் அனுசரிக்கும்
மார்க்கம்போல

இலங்கைநகர் மதிலைத்தாண்டி இடதுகாலை
முந்திவைத்துச்
சிலதூரம் போயனுமான் சித்தமதி லாலோசித்து

அந்தந்த விடந்தனிலே ஆருமறி யாதிருக்க
தந்திரமாய்ப் போவோமென்று தகுந்தபடி
ரூபங்கொண்டு

---

40. ஆஸ்தை – ஆவல்

எங்குஞ்சுற்றிப் பார்க்கையிலே எத்தனையோ
வாத்தியங்கள்
அங்கங்கு முழங்கயாரும் அவரவரின் ஸ்திரீகளோடு

கலந்திருந்து கானஞ்செய்து களிப்படைந்து
கழிப்பதையும்
பலபோகள் மெய்மறந்து பானஞ்செய்து குதிப்பதையும்

45. சைன்யங்களின் பலங்களையும் சகலவித
ஸ்திரீகளையும்
ஐயமின்றிக் கண்டறிந்து அகமகிழ்ந்தான் மிகவனுமான்

திங்கள் பிரை எங்கும்நன்றாய்த் தெரியும்படி
விளங்கியதால்
அங்கங்குள்ள பலவிதமாம் அதிசயங்க
ளெல்லாங்கண்டான்

எத்தனையோ நேர்த்தியாக இருக்கும்லங்கா
நகரையெல்லாம்
சுத்திச்சுத்திப் பார்த்துவந்தான் சூட்சுமமாய்
வாயுசுதன்

அர்த்தராத்திரி வரையுஞ்சுற்றி அலைந்துஞ்சீதை
யகப்படாமல்
சிரத்தையுள்ள அனுமான்மிகச் சித்தமிதிற்
சுவலைகொண்டு

மறுபடியும் பார்ப்போமென்று வருகையிலே யிதாகக்
குறித்தெதிரில் கண்டதொரு கோட்டையதை
யடுத்துவந்தான்

50. அரக்கர்மன்னன் ராவணனும் அவனுடைய
இனத்தாரும்
இருக்கும்வாசல் தானடைத்து எத்தனையோ காவலோடு

காக்கப்பட்டு வருமதனைக் கண்டலுமா னதற்குள்ளும்
ஜாக்கிரதையாய்ச் சென்றுபார்த்தான் சாலமான
விடங்களையும்

கும்பகர்ணன் வீடும்பார்த்தான் குரூரனிந்திர
ஜித்தன்வீடும்
தம்பிவிபீ ஷணாவீடும் தகுந்தமந்திரி மார்கள் முதல்

அனைவர்களு மிருக்குமிடம் அனைத்தையும்
பார்த்தன்மேல்
மனமகிழ்ச்சி மிகவுந்தரும் மன்னன்ரா வணன்வசிக்கும்

அரண்மனையின் மத்தியலே அழகான புஷ்பகமும்
இருக்கக்கண்டு அதிசயித்தான் இப்படிநாம்
கண்டதில்லை

55. இதிலொருக்கால் சீதாதேவி இருக்கலாமென்
றேயெண்ணி
அதற்குள்ளும் போய்ப்பார்த்தான் அற்புதமா
யிருந்தது

ஒருயோசனை நீளமம்மா அரையோசனை யகலமம்மா
பெரிதான விமானமம்மா பிரமதேவர் சுகப்படலே

விசுவகர்மா புத்தியெல்லாம் வெகுவாகச்
செலுத்திநன்றாய்த்
திசைகளெங்கும் நினைத்தபடி தீவிரமாய்த் தானாகலே

சஞ்சரிக்கும் சக்தியோடும் சகலவித
செளக்கியத்தோடும்
நஞ்சுக்குறை தீர்க்கும்படி நேர்த்தியாக அமைந்ததம்மா

அதன்மீது குபேரன்மிக ஆசைகொண்டு பிர்மாவை
மதியிலெண்ணித் தபசிருந்தான் மனமுவந்து
பிர்மாவந்து

அருள்செய்து கொடுத்தாரந்த அருமையான
புஷ்பகத்தை
அரக்கன்தச கண்டனதை அறிந்துவந்து
ஆக்கிரமித்தான்

கைபலத்த ராவணனால் கைப்பற்ற விட்டுவிட்டுச்
செய்வதென்ன வென்றிருந்தான் சிவனையெண்ணிக்
குபேரனம்மா

அரக்கனுக்குத் தமயனவன் அரும்பொருளாம்
திரவியங்கள்
இருக்குமம்மா அவன்பொக்கிஷ இருப்புதனில்
எத்தனையோ

பணக்குவியல் கணக்கேயில்லை துணைசெய்யும்
பணங்களெல்லாம்
குணமுடனே கொழிக்குமம்மா குபேரனிடம்
குறைவின்றியே

பதரையவன் பார்த்துத்தொட்டால் பணமாகக்
குவியுமம்மா
உதித்தவன் பணம்பெருகும் உபாயத்திற்கென்
றுரைப்பாரம்மா

65. அவனைவென்று இலங்கேசன் அடைந்தானம்மா
புஷ்பகத்தைத்
தவமிருந்த பலத்தினாலே தலைகொழுத்துப்
பிடுங்கிக்கொண்டான்

அதிலுள்ள விசித்திரங்களை அறிந்துரைக்கப்
போகாதம்மா
எதுவுமிணை யில்லையம்மா பெரும்போகங்
கொள்வாரம்மா

மாணிக்கம் ரத்னவொளி மங்குமம்மா அதனெதிரில்
காணவென்றால் வேண்டுமம்மா கணக்கில்லாக்
கண்ணுமம்மா

எத்தனையோ அறைகளுண்டு எங்கும்நல்ல
சுகங்களுண்டு
சுத்தமுள்ள வுபகரணம் சோபிதமாய் மிகவுமுண்டு

நடனசாலை நாட்டியசாலை நானாவிதப் பண்டசாலை
படனசாலை பக்குவசாலை பரிசுத்த நிஷ்டைசாலை

70. யோகசாலை போகசாலை யோக்யதைகள்
அறியுஞ்சாலை
மோகசாலை யூகசாலை முறைமுறையய மந்திரிசாலை

அஸ்தரசாலை சஸ்திரசாலை ஆயுதங்கள் உள்ளசாலை
வஸ்தரசாலை வகைவகையாய் வைவங்கள்
உள்ளசாலை

நீதிசாலை வாதசாலை நெஞ்சுக்குறை தீர்க்குஞ்சாலை
நாதமுள்ள வாத்யசாலை நானாவிதக் கானசாலை

அரசுமுறை நடத்துஞ்சாலை ஆலோசனை
செய்யுஞ்சாலை
தருமசாலை தானசாலை தத்துவார்த்தம்
அறியுஞ்சாலை

வேதசாலை போதசாலை விநோதமிக விளங்குஞ்சாலை
ஆதரவாய்க் குளிர்ச்சிதரும் அழகான பதுமைசாலை

---

69. படனசாலை - படிக்கும் அறை

71. அஸ்திரம் - மந்திரத்தைப் பயன்படுத்திப்போடல்,
சஸ்திரம் - ஆயுதப்பயன்பாடு

75. பானசாலை போனசாலை பரமசுகந் தருஞ்சாலை
தேனைவிட மதுரமுள்ள தெவிட்டாத பட்சியசாலை

தனித்தனியாய் ஸ்திரீகள் சாலை தருந்தபதினி
மார்கள்சாலை
மனைவிகளோ டுறங்குஞ்சாலை மற்றஸ்திரீகள்
நெருங்குஞ்சாலை

தனசாலை தான்யசாலை தருந்தரசை யுள்ளசாலை
மனமகிழ்ச்சி தருஞ்சாலை மங்களங்கள் பெருகுஞ்சாலை

எத்தனையோ சாலையுண்டு எண்ணியதைச்
சொல்லப்போமோ?
அத்தனையும் சொன்னமயம் அரிதான ரத்னமயம்

இந்தநல்ல புஷ்பகத்தில் ஏன்சீதையை வைக்கவில்லை?
அந்தவொரு காரணத்தை அறியச்சொல்வேன்
கேளுமம்மா

80. எப்பொழுதும் துக்கங்கொண்டு இருக்குஞ்சீதை
யடுக்குமிடம்
சொப்பனத்தும் எவர்களையும் சோகப்படத்
தூண்டுமம்மா

புஷ்பகத்தின் மகிமையெல்லாம் பூமகளின் சோகமதால்
நிஷ்பலமாய்ப் போகுமொரு நிமித்தமென்றே
யறிந்திடுவீர்

குறையையவள் மனதிற்கொண்டால் குவலயமே
கொண்டழுமே
உரியபடி யவள்மனது உருகாம லிருக்குமாயின்

ஜகமெங்கும் மகிழுமம்மா செழித்தோங்கும் ஜகமம்மா
சுகமடையும் உயிர்களம்மா சோகமெல்லாம்
ஒழியுமம்மா

விசனந்தரும் இடந்தனிலே மின்கொடியாள்
ஜானகியாள்
வசிப்பாளாயின் அந்தவிடம் வைபவத்தால்
சிறப்படையும்

85. அந்தவொரு புஷ்பகத்தில் அந்தியிலே விந்தையாகச்
சுந்தரிகளேகரோடு சுகித்திருந்தான் தசகண்டன்

அனுமானந்தப் புஷ்பகத்தின் அறைகளெல்லாம்
புகுந்துகுடி
அநேகஸ்திரீக ளுடனரக்கன் அசந்துறங்கும்
இசைந்தநல்ல

அந்தப்புரம் வந்துசேர்ந்தான் அதைப்பார்த்து
அதிசயித்தான்
இந்தவிடம் தனில்சீதை இருப்பாளென்று
மன திலெண்ணிப்

படுத்திருக்கும் ஸ்திரீகள்தம்மைப் பார்த்துக்
கொண்டே வருகையிலே
உடையின்றிக் கிடப்பவரும் உடைநழுவிக் கிடப்பவரும்

உடையவிழ்த்துத் தலைக்குவைத்து உறங்குவோரும்
அவருடைய
துடையில்தலை வைத்துக்கொண்டு தூங்கிச்சுக
மடைபவரும்

90. கைகால்கள் பரப்பிக்கொண்டு கால்மாடு
தலைமாடாய்
மெய்மறந்து குடிவெறியால் மேலுங்கீழுங் கிடப்பவரும்

ஒருஸ்திரீயை மற்றொருவன் உற்சாகமாய் முத்தமிட்டுப்
பிரியமாகக் கட்டிக்கொண்டு பிரஷ்டருண்டு
கிடப்பவரும்

அபக்கன்மிகப் பிரியங்கொள்ளும் அழகான
ஸ்திரீமுகத்தை
அபக்கன்முத்த மிடவருவான் அப்பொழுது அவனதர

பானஞ்செய்வோ மென்றவளின் படிக்கைதனில்
மற்றொருவன்
நானும்நீயும் முகங்களொட்டி நாயகிநா யகரைப்போல

அணைந்துகொண்டு படுத்திருக்க ஆசையென் றவ்வாறு
இணைந்தணைந்து கிடப்பவரும் இராவணனைச்
சூழ்ந்துசிலர்

95. கைகால்கள் பிடித்துவிட்டுக் கண்ணசந்து கிடப்பவரும்
செய்தலீலை சிரமத்தினாலே சீர்கெட்டுக் கிடப்பவரும்

தன்னழகில் திர்ப்திகொண்டு தன்னைமன்னன்
வந்தடுக்க
உன்னதமாம் சயனந்தனில் உறங்கிச் சுகப் படுபவரும்

அலங்காரக் கோலங்கொண்டு ஆனந்த மேற்கொண்டு
நலங்கிட்டு மகிழ்ந்துவிட்டு நானாவித மாலையிட்டுக்

கொஞ்சிமிகக் குலாவிவிட்டுக் கூடிமகிழ்ந் திடவழைத்து
நெஞ்சுக்குறை மிகவுங்கொண்டு நிலத்தில்படுத்
துறங்குவோரும்

சுகந்தபரி மளங்கள்வீசும் சொகுசான சுந்தமதை
அகமகிழ்ந்தே பூசுதற்கு ஆசைகொண்டடுத்துவந்து

சமயங்கிடை யாமல்மிகச் சலிப்படைந்து
மயங்கினோரும்
நமஸ்கரித்து வேண்டியுமே நட்புக்கொள்ளாக்
காரணத்தால்

முகநிஷ்டூரஞ் செய்ததன்மேல் மோகதாப
மிகவுங்கொண்டு
அகம்வாடி வெறுப்படைந்து அணிந்தநகை
யெடுத்தெறிந்து

மனக்குறையோ டசந்தவரும் மன்மதனை
மிகவும்நொந்து
நினைவடங்கிக் கிடப்பவரும் மனம்புழுங்கிப்
படுப்பவரும்

பலவிதமாய் விகாரமாகப் படுத்திருக்கக் கண்டனுமான்
அலங்கோல மாயிருக்கும் அந்தப்புரந் தனிலேவந்து

இந்தஸ்திரீக ளெல்லோரையும் ஏன்கண்டோம்
நமக்கதினால்
வந்திடுமே தோஷமென்று மனதிலச்சங்
கொண்டதன்மேல்

ஆனாலும் இவர்கள்மீது ஆசைகொண்டு பார்ப்பதான
ஈனப்புத்தி யிலைநமக்கு எவ்விதமாய்த் தோஷமண்டும்?

பெண்பாக வுரமடக்கிப் பெருமைபெரும் ஆணவத்தை
உண்மையாகக் கொண்டிருக்கும் உறுதிநமக்
கிருப்பதன்றி

இந்திரியங்கள் வசப்படவே இச்சையெல்லாம்
வென்றிருக்கும்
அந்தரங்க முடைநம்மை அணுகாது தோஷமென்று

நிச்சயித்துத் தசகண்டன் நித்திரைசெயு மிடம்வந்து
அச்சங்கொண்டா னவனைப்பார்த்து அதற்கப்பா
லடுத்தநல்ல

சயனத்தனில் படுத்துறங்கும் சௌந்தரிய மிகவுமுள்ள
உயர்ந்தவஸ்தர நகையணிந்த ஒரு ஸ்திரீயைப்
பார்த்தானம்மா

110. இந்தவிதம் ஸ்திரீகளுண்டோ இவளழகைச்
சொல்லவுண்டோ?
அந்தமுள்ள சுந்தரியே அரிதான பெண்ணிவளே

யவ்வனமும் தேஜசுந்தான் இவளுக்கே பொருந்தியதே
இவ்விதமா யிருக்குமிவள் இராமபத்னி சீதையென்று

தன்னில் மிக மகிழ்ந்தானனுமான் தைரியங்கொண்டு
குதித்தாடி
அன்னையென்றே நம்பியப்பால் அக்கருத்தை
மாற்றிக்கொண்டான்

சாமிதனைப் பிரிந்திருக்கும் சமயந்தனில் உல்லாசமாய்
நேமமெல்லாம் விட்டொழித்து நித்திரைசெய்யுங்
காரணத்தால்

சீதையிவ ளல்லவென்று சித்தமதில் நிச்சயித்து
நர்தன்பத்னி இவளென்று நாம்நினைத்தோம்
மதியிழந்து

115. ஸ்ரீராமன் றனையடைந்த ஸ்திரீயுந்தானே
பிறரிடத்துத்
தாராளமாய் மனங்களித்துத் தன்னைமறந்
துறங்குவளோ ஒருவரையே

சீதையன்றி யெவராயினும் சித்தமிகக் கலங்கியிந்தப்
பாதகன்பாக் கியத்தைக்கண்டு பார்த்தாவை
மறந்திடுவார்

ஸ்ரீராம ரொருவரையே சீதைமனம் பற்றுமன்றி
ஆரானாலும் கண்ணெடுத்து அவள்பாராள் நிச்சயமே

பதியின்சீலம் போலவேதான் பத்னியவள்
தானிருப்பாள்
விதிவிலக்காம் தருமந்தனை விட்டேதும்
தொட்டுச்செய்வாள்

அழகிளவள் சிறந்ததிதனால் அன்னையென்
றெண்ணிவிட்டோம்
இழிவுடைய அரக்கன்பத்னி இவளாவ
ளென்றெண்ணியே

120. சீதையிவ ளாதமாட்டாள் ஜெகந்துதிக்கும் சீதைக்கிவள்
பாதபூசை செய்வதற்கே பாத்திரமென் றுறுதிகொண்டு

மனதில்மிக வருத்தத்தோடு மாதவன்ஸ்ரீ ராமர்பத்னி
இனங்களான பெண்களுள்ள இடத்தைவிட்
டெங்கிருப்பாள்

இனியெங்கு தேடுவோம்நாம் என்னசெய்வோம்
எங்குந்தேடி
மனஞ்சலித்தோ மினிநமக்கு மார்க்கமென்ன
வென்றனுமான்

மனதிலெண்ணி வெளியில்வந்து மகத்தான
விசனங்கொண்டு
இனிச்செய்வ தேதுமிலை இராமர்பத்னி
பிராணன்றனை

விட்டிருப்பா ராகையினால் வெகுவிடங்கள் சுற்றிமிகக்
கட்டப்பட்டோம் காணவிலை காரியமெல்லாம்
வீணாயிற்று

125. வசமாகாள் சீதையென்று வஞ்சகனாம்
அரக்கனெண்ணி
நிஜமாக ஜானகியை நெஞ்சிரக்க மில்லாமலே

வதைபுரிந்தும் இருக்கக்கூடும் மனவருத்தஞ் சகியாமல்
உதவியேது மில்லையென்று உயிரிழந்து மிருக்கக்கூடும்

அரக்கன்கொண்டு வருகையிலே அரணவத்தைக்
கண்டுசீதை
பரிதபித்து வீழ்ந்ததிலே பிராணனைவிட்
டிருக்கக்கூடும்

ப்ராணனுட னிருந்திருக்கில் பார்த்தவிடங்
களிலிருப்பாள்
துரோகியினா லிம்சைப்பட்டுத் துணிந்தாவி
விட்டிருப்பாள்

இந்தச்சேதி ராமர்கேட்டால் எப்படித்தான்
மனஞ்சகிப்பார்
அந்தவுட னுயிர்விடுவார் அவ்வாறே
அனுஜன்செய்வான்

130. பரதன்முதல் சகலருமே பரிதபித்தே உயிரொழிப்பார்
பிரியமுள்ள சுக்கிரீவனும் பின்னுமுள்ள சகலருமே

ஒருநொடியு முயிர்தரியார் உலகினாசை
யொழித்திடுவார்
பரிதபிக்கச் செய்தவொரு பாதகனாம் ராவணனை

கட்டிவானில் கொண்டுபோவோம் கர்த்தன்முன்னே
விட்டிடுவோம்
அட்டியின்றி அவரிவனை அதஞ்செய்வா
ரென்றெண்ணினான்

மோதிரத்தைத் தந்துநம்மை முக்கியமாய் நம்பிராமர்
சீதைதனைப் பார்த்துவரும் சேதிதனைச்
சொல்வேனென்று

ஆவல்கொண் டிருப்பாரவர் அன்னைதனைக்
காணேனென்று
பாவிநாம் வாக்கில்சொன்னால் பரிதபிப்பார்
பிராணன்துள்ள

135. கெடுக்கடந்து போனதோடு கிடைக்கவில்லை
சீதையென்று
நடந்ததெல்லாஞ் சொன்னாலுமே நம்மைவிடான்
சுக்கிரீவன்

சொன்னபடி யாக்ஞைசெய்வான் சுவாமிமிகக்
குறைப்படுவார்
அன்னைசீதை யின்னவிதம் ஆனாளென்று
தெரியலையே

இந்தவிதம் பலவாறு எண்ணிமிக விசனப்பட்டு
வந்தகாரிய மாகவில்லை வழியுமில்லை யெனநினைத்து

மறுபடியு மாலோசித்து மனக்குறையே
மிகவுங்கொண்டு
குறித்துரைத்தான் சம்பாதி குரூரமுள்ள அரக்கியரின்

காவலிலே சீதையைநான் காணுகிறேன் லங்கையிலே
போவீராயின் காணுவீர்கள் பொழுதுபோக்க
வேண்டாமென்றான்

அவன்வாக்கை நம்பிவந்தோம் அலைந்தலைந்து
பாடுபட்டோம்
விவரமேதும் புரியவிலை விட்டுப்போக மனமுமில்லை

காணேனென்று போயுரைத்தால் கஷ்டமிக வந்திடுமே
ஆணவத்தோ டிங்குவந்தோம் அந்தப்படி
போயுரைத்தால்

அழகாமோ நமக்கதினால் அவமதிப்பே வந்திடுமே
இழிவடைந்து மிகுப்பதிலே என்னசுக மாகையினால்

விடுவோமுயி ரெனத்துணிந்தால் விரத்துவக்
கானியுண்டாம்
மடயனென்று மூலகஞ்சொல்லும் மானங்கெட்ட
பிழைப்பாயிற்று

கோரிநம்மை யனுப்புங்காரியம் குறைவின்றிச்
சாதிப்போம்
ஆருமதைக் கண்டுரைப்பார் அதிசயித்தே மிகமதிப்பார்

விசாரித்தெங்குங் கண்டறிவான் விலகினதைத்
துலங்கச்செய்வான்
அசாத்தியகாரியம் அரைநொடியில் ஆகச்செய்வான்
அனுமானென்பார்

நலங்கருதி வந்தோமிங்கு நாடித்தேடி யலைந்தோமிங்கு
நலாமெதுவோ தெரியலையே தாயிருக்கும் தத்துவமே

துலங்கும்நல்ல அறிவுடனே தூரதிருஷ்டி
கொண்டுந்தானே
பலவிதமா யாலோசித்துப் பார்த்தனுமா னதன்பிறகு

சோதித்த தலங்களையே சோதிப்போம் மறுபடியும்
நாதன்பத்னி யிருக்குமிடம் நாமறிவோ மென்றெழுந்து

அவைகளையும் நிலவறைகள் அனைத்தையும்
போய்ப்பார்த்து
எவடத்திலும் காணாமலே ஏங்கியொரு விடத்தில்வர

150. எதிரிலொரு வனத்தைக்கண்டு இருக்குமதன்
நிலைமைகண்டு
அதையும்பார்ப்போ மென்றெண்ணி ஆவலோடு
அனுமானப்பால்

பக்தியோடு ராமனையும் பட்சமுள்ள அனுஜனையும்
சக்தியுள்ள பானுவாதி சகலவிதக் கிர்கங்களையும்

சிருஷ்டிஸ்திரி லயங்களெல்லாம் செய்கின்ற
தேவரையும்
பரிசுத்தராம் தந்தையையும் பரப்பிரம்ம வஸ்துவையும்

மனதிலெண்ணி நமஸ்கரித்து மகிமையுள்ள
தேவர்களே
அனைவர்களும் எனக்கிப்போது அனுக்கிரகிப்பீர்
அன்னைசீதை

இருக்குமிடங் கண்டுகொள்ள வென்றுமிகப்
பிரார்த்தித்து
அருமையான வனமதனை அடுத்துவந்தா னாவலோடு

155. அங்கிருந்து கிளம்பியந்த அசோகவன மதில்சுவற்றில்
தங்கியப்பால் வனத்தினுள்ளே தாராளமாய்த்
தாவித்தாவிப்

பாய்ந்தனுமான் பார்த்துக்கொண்டு பலவிடங்கள்
சுற்றிக்கொண்டு
தாயிருக்கு மிடங்காணத் தாகங்கொண்டே
தேடிவந்தான்

எங்குஞ்சுத்திப் பார்த்தனுமான் இருக்குமந்த
வனத்தினது
சிங்காரங் களைக்கண்டு சித்தமதில்
திர்ப்திகொண்டான்

அசோகவனக் காட்சிகளை யனுமான்கண் டதிசயிப்பதும், ஜானகியைக் கண்டு பிரமித்து நிச்சயிப்பதும், யாருமறியாமல் சிம்சிபா மரத்தில் அனுமானிருப்பதும், இராவணன் வந்து சீதையைப் பிரார்த்திப்ப்தும் அவனைச் சீதை திரஸ்கரிப்பதும், அரக்கியர்கள் சீதையைக் கொடுமை செய்வதும், அதைத் திரிசடை தடுப்பதும் சீதை உயிர்விடத் துணிவதும்

அருமையான அசோகவிருட்சம் அணியணியா
யிருக்கக்கண்டான்
கருத்துள்ள வருத்தம்போக்கும் காட்சிகளை
மிகவுங்கண்டான்

விருட்சங்கள் சொர்ணம்போல விளங்குமவை
களில்மிகவும்
உருசியுள்ள பழவர்க்கங்கள் உருண்டுதிரண்
டிருப்பதையும்

160. புஷ்பவகை கணக்கின்றிப் பூத்திருக்கும் காட்சியையும்
அஷ்டலட்சுமி வசிப்பதுபோல் அசோகவன
மிருப்பதையும்

இன்பந்தரும் பொருள்களங்கு இருந்துநவ நிதிகளது
தன்மையொடு விளங்கிக்கொண்டு தாகமெல்லாந்
தீர்ப்பதையும்

ஒளிமிகுவே வீசும்நல்ல உயர்ந்தஓதா இரகங்களையும்
எளிதில்சுகம் பெருகச்செய்யும் ஏற்றவாச
ஸ்தலங்களையும்

கண்டவுடன் காய்ட்சையுடன் கண்குளிரக் காணவுள்ள
மண்டபங்க ளிருப்பதையும் மற்றவிநோ தங்களையும்

மிருகங்களெல்லாம் அகமகிழ்ந்து மிகமதத்தோ
டிருப்பதையும்
கிரவுஞ்சபட்சி அன்னபட்சி கருடனாதிச் சகலவிதப்

165. பட்சியெல்லாம் விருட்சங்களில் பதுங்கியவை
யுறங்குகையில்
அச்சமயம் அனுமான்வரும் அந்தவொரு
தோரணையால்

விழித்தெழுந்து பலதிக்கிலும் விநோதமாகப்
பறப்பதையும்
அழகாக அலைகளெல்லாம் அருமொழியால்
த்வனிப்பதையும்

படிக்கட்டுகள் ரத்னங்களால் பாங்காக அமைத்துமிகத்
திடமாக வுள்ளநல்ல தெப்பக்குள அழகையுமே

மாருதிகண் டதிசயித்து மனங்களித்து இப்படியும்
ஆகும்வனம் வைப்பதுண்டோ அருமையிது
வென்றெண்ணி

வனமத்தியி லிருக்குமொரு வாளிப்புள்ள
சிம்சிப்பாவாம்
மனமகிழ்ச்சிக் கிடமான மரமொன்றைக்
கண்டானம்மா

விளக்கின்றி மரத்தடியில் விளங்கும்வெகு
வெளிச்சங்கண்டு
பளபளென்றே ஒளிவீசும் பதுமைக்கொப்பாம்
பெண்ணைக்கண்டான்

தேவஸ்திரியோ அப்ஸரஸ்திரியோ திருமகளோ
அருமைப்பெண்ணோ
ஆவலோடு மூவுலகும் ஆராதிக்கும் அம்பாளோ?

இந்தப்பெண்ணின் அருளடைந்தால் இருவினைகள்
தொலையுதன்றி
வந்திடுமே பரமபதப் பாக்கியமென் றறிசயித்தான்

பாதம்நிலம் படிந்திருக்கப் பார்த்தனுமா னதன்பிறகு
மாதரசு மனிதப்பெண்ணாய் மனதில்கொண்டு
மரமதிலே

வந்திருந்து பார்த்தானம்மா வைதேகி முகம்வாடிச்
சிந்தைமிக நொந்தவனாய்த் தேம்பித்தேம்பி
யழுதுகொண்டு

அழுக்குவஸ்திரம் தரித்துக்கொண்டு அணிந்தநகை
யொளியடங்கி
அழுதகண்ணீர் நிலம்படிய அரக்கியராம் அவருடைய

காவலிலே இருக்குமந்தக் கண்மணியாம் ஜானகியைப்
பாவமிலை வாயுபுத்திரன் பார்த்துமிக
வேர்த்தானம்மா

சீதைதனைக் கண்டவுடன் சித்தசுத்தி மெத்தவாகிப்
பாதந்தனை மனதிலெண்ணிப் பக்திசெய்து
அதன்பிறகு

ஸ்ரீராமன் தேவியென்று சித்தமதி லுறுதிகொண்டு
பிரேமைகொண்டான் பெருமைகொண்டான்
பேரானந்த மிகவுங்கொண்டான்

ஈனனிட காவலிலே இருக்குமிந்த வுத்தமியின்
தீனதசை யென்னசொல்வேன் திருவுளத்தின்
செய்கையென்று

180. மனதில்மிகக் குறையடைந்தான் மாபாவி யரக்கன்மீது
சினங்கொண்டான் மிகவுமம்மா சிட்சிக்கவுந்
துணிந்தானம்மா

நம்மிடத்து ராமர்சொன்ன நகைகளெல்லா
மிருக்குதிங்கு
அம்மனிவள் ஜானகியே அதிலேதும் ஐயமில்லை

கண்ணொளியைப் பறிக்குமொரு காந்தியுள்ள
ஜானகிபோல்
மண்ணுலகு விண்ணுலகு மற்றுலகு எங்குந்தானே

பெண்களுண்டோ வென்றுமிக பிரமித்தனுமா
னதிசயித்துக்
கண்மணியாம் ஜானகியாள் கர்த்தருக்கே
தருந்தவளாம்

இந்தச்சீதைப் பாதங்கண்டோர் இன்பமுள்ள
கதியடைவார்
சுந்தரிகளெம்போரிந்தச் சுந்தரியின் காலழகை

கண்டுலச்சை கொள்ளுவார்கள் சுற்புமிக
ஜ்வலிப்பவளைக்
கொண்டுவந்த அரக்கன்மிகக் கொடும்பாவி யாருவனே

இந்தச்சீதை விசனமதால் இராவணன்வாழ்
வொழிந்திடுமே
அந்தப்பாவி யழிவதோடு அவன்குலமும் நசித்திடுமே

ஜானகிமே லாசைகொண்டு சாமிபகை
தேடிக்கொண்ட
மானங்கெட்ட அரக்கன்மிக மதிமோசம் போனவனே

சீதையெனு மக்கினியைச் சிரசிற்கொண்டு மகிழுமிந்தப்
பேதையான தசகண்டன் பிழைக்கவுண்டோ
இனியுலகில்

கால்தொழுது பணியவுள்ளோன் சுவலிலே
இருக்கச்சீதை
காலமது நேர்ந்ததுதான் கஷ்டங்கஷ்டண்
சகிக்கவுண்டோ

190. பெண்களுக்குச் சௌந்தரியம் பெரியதீங்காய்ப்
பலிக்குமெனும்
உண்மைப்படி ஜானகிக்கும் உபத்தரவங்கள்
பலிக்கலாமோ?

பட்டணத்தி லுள்ளபல பாக்கியங்கள் தம்மைவிட்டு
இட்டமெல்லாம் பார்த்தாவிடம் இருக்குஞ்சுகம்
போதுமென்று

அந்தப்பாக்யம் ஒன்றைநாடி ஆசைகொண்டு -
அரணியத்தில்
வந்தகஷ்டம் வந்தாலுமே ஈஷத்தும் அஞ்சாமலே

அலுபவிக்கத் துணிந்துவந்த அருந்ததியை மீறியுள்ள
கனமுடைய சீதைகண்ணீர்க்கடும்விஷமாம் அரக்கனுக்கு

எப்பொழுதும் ராமரையே எண்ணிஅவர்க்குக்
காயமதால்
ஒப்பிப்பக்தி செய்யுமிந்த உத்தமியாம் சீதாதேவி

195. மகலட்சுமிபோல் விளங்குகிறாள் மாதரசாம்
இவளைத்தானே
அகந்துணிந்து திருடிவந்த அரக்கனிட கொழுப்படக்க

ஐயன்பாணம் ஒன்றேபோதும் அரக்கர்பூண்டும்
ஒழிந்திடுமே
வையகத்தில் தருமந்தப்பும் வஞ்சகர்க்கு அவர்நெஞ்சமே

நஞ்சாக முடிமெனும் ந்யாயம்போல ராவணனும்
அஞ்சாமல் செய்தபாபப் பலனைமிக அனுபவிப்பான்

சித்தமெல்லாம் ராமருக்குச் சீதையின்மே
லுள்ளதுபோல்
உத்தமியாம் ஜானகிக்கும் உண்மையாக ராமர்மீதில்

பிரியமெல்லாம் வைத்தெதிலும் பிரியமின்றி
யிருக்குமொரு
தருமபுத்தி யென்னசொல்வோம் தரணியிலே
இவளரிதே

250. இருவருக்கு முள்ளமனம் இசைந்தசிநேக ஐக்கியத்தால்
தரித்துயிரை யாதரித்துத் தாகங்கொண்டு மறுபடியும்

கலந்திடுவோ மென்றுநம்பிக் காயமதை
வைத்துக்கொண்டு
நிலந்தனிலே யிருப்பாரன்றி நிமிஷமுயிர் தரியார்களே

அருமையான ஜானகியை அடைந்தராமன்
மனந்தனிலே
திரிலோக பாக்கியங்கள் திரணமாக எண்ணலாகும்

வைதேகி நிமித்தமாக வையகங்கள் யாவையுமே
கைபலத்தால் ரகுவீரர் கதறியழச் செய்யத்தகும்

அதினாலே ஸ்ரீராமனை ஆருங்குறை கூறவுண்டோ
மதியிழந்த ராவணன் மாதவர்முன் நிற்கவுண்டோ

205. கணவன்சக்தி யறிந்தவளும் காரியங்கள் தெரிந்தவளும்
குணதோஷ முணர்ந்தவளும் குவலயத்தில் சிறந்தவளும்

ஜானகியே யாகையினால் சகலவித உபத்தரவங்கள்
ஆனமட்டுஞ் சகித்துக்கொண்டு அரக்கியர்க்குள்
ளடங்கிநின்று

இருக்கின்றா ளானாலுமே எண்ணிலிவள்
ஜகத்தையெல்லாம்
அரைநொடியில் தகித்திடுவாள் அபரிமிதம்
இவள்சக்தியே

இதுவுமன்றி லோகமெல்லாம் இரட்சிக்கும் நிமித்தமாக
உதித்தவள்போல் காணுகிறாள் ஒருவராலும்
இவள்மகிமை

அறியவுண்டோ இவளையாள ஆருமுண்டோ
ராமனன்றி
மரியாதை பெறத்தகுந்த மாதேவி சீதையிப்போ

210. தரைதனிலே யிருந்துகொண்டு தத்தளித்து வாடுவதை
அரைநொடியும் சகிக்கநம்மால் ஆகலையே சாமிமிகச்

சமபுத்தி யுள்ளவராம் சாத்வீக மிகுந்தவராம்
மமதையவர் கொள்ளச்செய்த மாபாவி ராவணனை

வதைத்திந்த வைதேகியை வகையுடனே சிறைமீட்டு
அதிகசுக மடைந்திடுவார் ஐயமிலை யென்றனுமான்

இந்தவித மெண்ணிக்கொண்டு எவருமறி யாமல்தானே
அந்தவிருட்சந் தனிலிருந்தான் அறிவுடனே
ஜாக்கிரதையாய்

இந்தப்படி இருக்கையிலே இலங்கேச னாக்ஞைப்படி
அந்தவேளை யரக்கியர்கள் அநேகம்போர் கழுதைமுகம்

215. ஆனைமுகம் குதிரைமுகம் ஆளிமுகம் ஆட்டின்முகம்
பூனைமுகம் பன்றிமுகம் பொல்லாத புலியின்முகம்

இந்தவிதம் விகாரமுகம் எத்தனையோ பேதத்தோடு
விந்தையான அங்கஹீனம் வெகுவாக வுள்ளவர்கள்

நாற்புறமுஞ் சூழ்ந்திருந்து நயத்தாலும் பயத்தாலும்
வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு வசப்படுத்த
மிகவும் பரார்த்தார்

இந்திரியங் களையடக்கி இராமத்தியானஞ்
செய்துகொண்டு
சிந்தையிலே விசனங்கொண்டு சீதையானாள்
நொந்திருந்தாள்

வெடியுமுன்னே உஷக்காலத்தில் வேதகோஷம்
வாத்யகோஷம்
தொடங்கிச்செய்யு முறைப்படியே தோரணையாய்
நடக்கக்கேட்டு

220. அரக்கர்மன்னன் விழித்தெழுந்து அந்தவுடன்
ஜானகியைப்
பிரியங்கொண்டான் பார்ப்பதற்குப் பெண்கள் சிலர்
சூழ்ந்துவர

வருகின்றான் அசோகவனம் வாழ்த்திப்பெண்கள்
உபசரிக்க
அரக்கன்வரும் கோலங்கண்டு அன்னைசீதை
மிகப்பயந்து

நடுக்கக்கொண் டொடுங்கிமிக நாணங்கொண்
டிருக்கையிலே
அடுத்துவந்தே நின்றரக்கன் ஆசையொடு பேசுகிறான்

அன்னநடை யுள்ளமிக அழகான ஜானகியே
என்னுடனே வாழ்ந்திருக்க ஏனுனக்குப் பிரியமிலை

உன்னுடைய தேகமதில் உள்ள அங்க
வொவ்வொன்றிலும்
என்னுடைய மனமழுந்து என்னைமிக வருத்துதுபார்

225. என்னைக்கண்டு லச்சைகொண்டு இழுத்திழுத்துச்
சேலையினால்
உன்னுடைய ஸ்தனாதிகளை உள்ளடக்கி
மறைப்பதென்ன?

பேதமெண்ணி யெந்தன்மீது பிரியமின்றித்
தலைகுணிந்து
வேதனையோடு யிருக்கவேண்டாம் வெகுசுகங்கள்
நான்தருவேன்

சுண்டுன்னைக் களிப்படைவேன் கால்தொழுதுந்
தான்பணிவேன்
அண்டியுனக் கடிமைசெய்ய அநேகஸ்திரீகள்
தமைத்தருவேன்

சகலபாக்ய முனக்கேதந்து சந்தோஷப் படச்செய்வேன்
அகமிழ்வாய் சுகப்படுவாய் அறியாமல் வருந்துகிறாய்

கண்ணிற்றாரை பெருகவுன்னைக் காணுகையி
லுனைவிடவே
எண்ணமது உண்டானாலும் இழுக்குதுந்தன்
மோகமெனை

எனதுயிர்தா னுள்ளமட்டும் என்னைவிட்டு நீபிரிய
மனந்துணியேன் நிச்சயமே மன்மதன்பா தைமிகவே

அரிதான பொருளடைந்து அதைவிடுவோன்
அறிவிழந்தோன்
பரிதபித்தா லென்னபலன் பார்த்துன்னில்
தெளிந்திணங்காய்

உன்னைசிர்ஷ்டி செய்தபிர்ம்மா உயிருடனே
யிருப்பானாயின்
இன்னுமொரு பெண்ணுனைப்போல் ஏன்சிர்ஷ்டி
செய்யவில்லை?

உன்னவகைக் கண்டவர்கள் உன்னைவிட்டுப்
பிரியவுண்டோ?
என்னகஷ்டம் வந்தாலுமே ஏதுன்னை
விடுவதுண்டோ?

உயிரைவிடத் துணிந்திடலாம் உன்னைவிடத்
துணியப்போகா
சயனத்திற்கு வந்திடுவாய் சந்தோஷமா யென்னிடத்து

என்மனதை யாக்கிரமித்தாய் என்பிராணன் நீயாவாய்
உன்பிரிவு எனக்குண்டானால் உயிரிழப்பே
னந்தவுடன்

என்பிராணன் றனைவிட்டு எப்படிநா னிருக்கக்கூடும்
உன்பிரிவு மவ்விதமென் றுறுதியுள்ள னெனையடைவாய்

உன்னைக்கண்ட புருஷனுக்கு உலகிலொன்றி
லாசையுண்டோ
என்னைக்கண்ட பெண்களுக்கு என்னைவிட
மனமுமுண்டோ?

என்பாக்யம் எனதுபலம் எவருமிலை என்றறிவாய்
உன்மனதின் படியெதுவும் உனக்குத்தந்து
உபசரிப்பேன்

புருஷர்மனம் கொள்ளைகொள்ளும் பொல்லாத
பெண்ணரசே
தருமமாகும் பிறர்மனைவி தனையடுத்த லரக்கருக்கு

240. ஆகையினால் பாப்பமெனக் கணுவளவு
மில்லைபாராய்
தாகந்தீர எனக்குச்சுகம் தந்திடுவாய் சுந்தரியே

சக்தியில்லா ராமனாலே சற்றுமுண்டோ சுகமடைய
பக்திகொண்டு வேண்டுமென்மேல் பராமுகங்
கொள்ளலாமோ?

இலிராமன் றனையடைய இல்லைவகை யென்றறிவாய்
மனதில்ராம த்யானங்கொள்ளல் மதியீன
மாகும்பாராய்

புத்தியுள்ள பெண்கிளியே புருஷனினி ராமனாகான்
பக்தியென்மேல் கொள்வாயாயின் பரமசுக
மடைந்திடுவாய்

உனதுதந்தை ஜனகனிந்த உலகையெல்லாம்
ஆளச்செய்வேன்
இவத்தாராய் உனக்குள்ள எல்லோர்க்குஞ்
சுகந்தருவேன்

அன்புடனே என்னிடத்து ஆசையொடு
நேசங்கொள்வாய்
நன்மைமிக வுண்டுனக்கு நாடியெனைத் தேடிவந்து

அடையும்பெண்க ளநேககோடி அவர்களைப்போல்
நீயுந்தானே
நடப்பதுந்தன் பாக்கியமே நானுன்னைப் பிரியவிடேன்

உபவாச மிருப்பதிலும் உள்ளம்நொந்து மெலிவதிலும்
சுகமுனக்கு ஏதுமிலை சொல்படியே நடந்திடுவாய்

எவ்வனத்தை வீணாக்கி ஏன்காலம் போக்குகிறாய்
எவ்வளவு கனமடைவாய் என்றயனவைப்
பெருவாயாயின்

உனக்குமன மிருந்தலன்றி உன்னைக் கையால்
தொடமாட்டேன்
எனதுமனப் படியினங்க ளெத்தனங்கள்
மிகவுஞ்செய்வேன்

இந்தவிதம் அபக்கன்சொல்ல இதைக்கேட்டுச்
சீதைமிகச்
சிந்தைநொந்து எதன்பிறகு சினங்கொண்டு மத்தியிலே

தும்புகிள்ளிப் போட்டுரைப்பாள் துரோகியேநீ
யழிந்திடுவாய்
துருமபாக்கு வார்த்தைசொல்லித் துள்ளிச்சாவாய்
உள்ளம்நொந்து

என்மனது திரும்புமென்று எதிர்பார்க்க
வேண்டாமடா
உன்குலமும் பெருமைகளும் ஒருநொடியி லழியுமடா

மணம்புரிந்த கணவருக்கென் மனதைத்தத்தஞ்
செய்தவரைக்
குணமுடனே கூடியுள்ள குலஸ்திரீயாம் என்மனதைத்

திரும்பயெங்குஞ் செலுத்தவுண்டோ திருவுளத்தை
மறப்பதுண்டோ?
தரும்நலனைக் கடப்பதுண்டோ தப்பிதமாய்
நடப்பதுண்டோ?

255. தருமமல்ல எந்தன்மீது தாகங்கொள்ள லாகாதடா
அருமையான தவப்பயனை அழித்துவீணாய்
மடியாதேடா

எனதுதேக மல்லவிது இராமருக்குச் சொந்தமடா
நினைவுகெட்டேன் பேசுகிறாய் நீதிதப்பிப்
பிதற்றுகிறாய்

பதிமனதைப் பற்றுவதே பதிவிரதையின் தருமமாகும்
மதிகொண்டு விலகிவிடு மமதையெல்லாம் விட்டுவிடு

உன்னுடைய பத்னியின்மேல் ஒருவர்தாகங்
கொண்டடுத்தால்
உன்னிலுண்டாம் மனக்கொதிப்பை உணர்ந்தவ்வாறு
என்னுடைய

சற்புநிலை கலையாமல் காப்பதுந்தன் கடமையடா
அற்பபுத்தி கொண்டுவீணாய் அழைவதெல்லாம்
பாப்பமடா

260. சகலவிதச் சுகங்களெல்லாம் சாரமில்ல யென்றெந்தன்
மகிமையுள்ள கணவரோடு மனங்கலந்து
வாழுமென்னை

வஞ்சகமாய்த் திருடிவந்து வயிறெரியச் செய்தாயே
மிஞ்சமாட்டாய் ராமன்பாணம் மீறியுன்னை
வதைக்குமடா

கைபலத்தோன் பொருளைநீ களவாடல் தக்குமோடா?
மெய்மறந்தேன் மோசம்போனாய் மேதினியில்
பழிநிலைக்க

வல்லபனாய் நீயிருந்தால் வஞ்சகமாய் மானைவிட்டு
எல்லையில்லாப் பலமுடைய எனதுபார்த்தா
என்னைவிட்டுப்

பிரியச்செய்து லட்சுமணனும் பிரிந்தோதூங்கச்
சூதுசெய்து
துறவியைப்போல் வேஷங்கொண்டு துரோகஞ்செய்யத்
துணிந்துவந்து

265. என்னைக்கள வாடினையே எத்தனையோ
பெருமைசொல்லி
மன்னவனா யெண்ணிக்கொண்டு மகிழ்கின்றாயே
மானங்கெட்டு

பெண்கள்முன்னே பெருமைசொல்லிப்
பிதற்றுவதும் அழகாமோ?
கண்மணியென் கணவர்முன்னே கையெடுத்தால்
தெரியுமடா

நானினில்லா வேளையிலே நாய்போல வந்தெடுத்த
நீதிகெட்ட காதகனே நிமிஷமுன்னைப் பஸ்மஞ்செய்ய

சக்தியெனக் குண்டுமிக சாமியாக்ரூ யில்லையடா
பக்திபங்கம் வருமென்றெண்ணிப் பாதகனே
விட்டேனடா

கற்புநிலை கொண்டுலகைக் கதறச்செய்வேன்
பதறியெழ
நற்புத்தி சொல்வோர்தம்மை நாடியறி
வடைந்துபாராய்

270. பிறருடைய மனைவிகள்மேல் பிரேமைகொள்வல்
தருமமென்று
கருதிச்சொன்னாய் பாதகனே கடவுளரை
மறந்துவீணாய்

எவனானாலும் கடவுளரை எதிர்த்துவெல்லப்
போகாதடா
தவப்பயனை யடைந்தபலம் தங்காமல் ஒதுங்குமடா

கருமபல னெவரையுமே கட்டுமடா துட்டனேகேள்
பரம்பொருளாம் கடவுளர்க்குப் பயந்தடங்க
வேண்டுமடா

தோரணையாய்த் துள்ளுவோர்கள் தொல்லுலகி
லிருந்தகருண்டு
காருண்யக் கடவுளரால் கவ்டப்பட்டு மடிவாரப்பால்

வேதமோதும் வேதியனே விவேகங்கொண்டு
தெளிந்துபாராய்
வேதந்தனில் தருமமுண்டோ வேறொருவன்
மனையியின்மேல்

275. ஆசைகொள்ளு லேசமுமே அதையறிந்து மதியடைவாய்
நீசனைப்போ லுளறுவது நேரல்ல நீதியல்ல

ஒதுவது வேதந்தனை ஒழுகுவது அதைக்கடந்தால்
பாதகமாய் முடியுமடா பார்த்துள்ளில் நலிவாயடா

அரணிடத்துப் பக்திவைதத்து ஆராதிக்கும் சீலமுள்ள
அரக்கனேகே ளென்னையந்த அரனென்றே
பாவிப்பாயே

அரனம்பா ளிருவர்களும் அகிலந்தனி லவதரித்து
வருவாரெனும் வசனமொன்று வையகத்தி
லுரைப்பதுண்டு

அவர்களிப்போ வந்ததுபோ லாகுமடா ஸ்ரீராமன்
குவலயத்தி லென்னுடனே கூடிவாழும் நிலைமையடா

280. மருமமதை யறியாமல் மயங்குகிறாய் மடிந்திடவே
சருகுருவென் றெண்ணியென்னைச் சரணசேவை
செய்திடுவாய்

கைபலத்தை விட்டுவிட்டுக் களவாடும் உந்தனையும்
வையகத்தி லரக்கனென்று வாக்கில்சொல்ல
நியாயமுண்டோ?

அரக்கர்குண மணுவுமின்றி அசக்தியுள்ள மனுவுமின்றி
தருமமென்ப தவஞ்செய்த வரலாறைச் சற்றுணர்வாய்

அகிர்த்தியஞ்செய்தால் அருள்கடவுள் ஆக்ஞையினா
லழிவோமெனும்
திகிலுனக்கு வேண்டுமடா தெரியாம லலையாதேட்டா

285. இந்தநகர் தனிலுனக்கு இல்லையடா இதமுரைப்போர்
வந்துபுத்தி சொல்வோருக்கு வசப்படவு மாட்டாயடா

இராமலட்சு மணர்களம்பு இராட்சதர்பூண்
டொழிக்குமட்டா
காமங்கொள்ள லாகாதடா கஷ்டப்பட்டு மடிவாயடா

உலகிலின்னு மிருக்கமனம் உள்ளவனா யிருப்பாயாயின்
துலங்கும்நல்ல அறிவடைவாய் தோஷயெண்ணந்
தனைவிடுவாய்

வேதசாஸ்தர உண்மைப்படி விதிவிலக்கின்
வழிகொண்டென்னை
நாதன்பாதந் தனில்விட்டு நமஸ்கரித்து அவருடைய

நேசங்கொண்டால் நாசமிலை நேராகப்
பிழைத்திடுவாய்
மோசம்போக வேண்டாம்நல்ல முறையறிந்து
நடப்பாயென்று

290. சொல்லிச்சீதை நடுக்கத்தோடு சோகப்படும்
வேளையிலே
நல்லெண்ண முள்ளவரும் நாயகன்ரா வணன்கூட

அங்குவந்து நிற்பவரும் ஆகியஅப்ஸர ஸ்திரீகள்
மங்கைசீதை தனைப்பார்த்து மயங்கவேண்டா
மென்றுஜாடை

உதட்டினாலும் கண்களாலும் உண்மையாகச்
செய்தார்கள்
அதினாலே சீதைசற்று ஆறுதலை அடந்தாளப்போ

சீதைசொன்ன வார்த்தைகளைச் செவியில்கேட்
டிலங்கேசன்
மாதரசா மவளுரைத்த மதியெல்லாம் மனதில்கொண்டு

ஆலோசித்தான் மிகவுமவன் அந்தரங்கந்
தனையறிந்தான்
காலோசித கருமபந்தக் கட்டவனை மற்றுபடியும்

தழுவிமிக மதிகெடுத்து ஜானகிமேல் மோகமது
விழும்படியே செய்ததம்மர விட்டுதம்மா
ஜானமெல்லாம்

அரக்கன்மிக ஆத்திரங்கொண்டே அதன்பிறகு
அடங்கிநின்றான்
பிரியமாகப் பேசுகிறான் பெண்ணரசே ஜானகியே

உன்னைமறந் துதாசீனமாய் உரைத்தாயே யதற்காக
உன்னைச்சித்திர வதைபுரிதல் உசிதமாகும்
நியாயமாகப்

பிராணவதை செய்வேனென்று பயமின்றிப்
பேசினையே
குரோதங்கொண்டே லெந்தன்மீது கொன்றிடுவேன்
நிச்சயமாய்

என்னையாரும் அலட்சியமாய் எண்ணிப்பேசிப்
பிழைத்ததுண்டோ
உன்னுடைய நிலைமையெண்ணி உயிரைத்தக்க
வைத்துக்கொள்வாய்

அதஞ்செய்வே னிப்பொழுதே ஆனாலுந்தன் மீதன்பு
அதிகம்மா யெனக்கிருக்கும் அந்தவொரு காரணத்தால்

பின்னடைந்தே னுன்னைமிகப் பிரேமையுட னாதரித்து
இன்னமுந்தான் பார்ப்போமென்று எண்ணியுன்னை
விட்டேனிப்போ

இந்தரனெந்தன் போர்தனிலே இம்சைப்பட்டு
நொந்துபோன
அந்தச்சேதி அறியாமல் அலப்புகிறாய் ஸ்ரீராமன்

என்முன்னே வந்துநின்று எதிர்த்திடவுஞ்
சக்தியுண்டோ
உன்சுணவன் பெருமையைநீ உயர்த்திமிகப் பேசுகிறாய்

ஒருவருஷங் கொடுத்தகெடு ஒழிந்ததெல்லாம் போகமீதி
இரண்டுமாத மிருப்பதினால் இதற்குள்ளாக
இணங்கிப்போய்

305. அதுகடந்தா லுன்னையப்பால் அரிந்துபாசுஞ்
செய்துன்பேன்
மதியுடனே யென்னுடனே வாழ்ந்திருப்பாய் சுகமாகவே

வீணாக வாழ்வையெல்லாம் வியர்த்தமாக்கி
வீம்புசெய்தால்
காணாத சாக்யமெல்லாம் காணவுண்டோ
வென்றுரைத்தான்

அந்தவார்த்தை கேட்டுச்சீதை அதிகமாக
விசனங்கொண்டு
நிந்தனையாய் ராவணனை நினைத்துச்சொல்வா
னிவ்விதமாய்

என்னைச்சொன்ன வார்த்தையெல்லாம் இராமரைநீ
சொன்னதாகும்
உன்னையது யறுக்குமடா உன்குலத்தைப்
பொசிக்குமடா

பாபியெண்ணங் கொண்டென்னைப் பார்க்குமுந்தன்
விழிகளெல்லாம்
சாபமதால் பிதுங்கிக்கீழே சற்றுநேரந் தனில்விழலாம்

310. நாக்கறுந்து விழுமுனக்கு நாசகாலம் நெருங்கியதால்
போக்குகிறா யுயிரைவீணாய்ப் புத்திகெட்டே
சுத்துகிறாய்

குலைக்கும்நாய் கடிப்பதுண்டோ கொடுக்கின்றிக்
கொட்டவுண்டோ
தலைகொழுத்தே னாடுகிறாய் தட்டுவாணிப் பயலே
மூடா

என்னையொன் றுஞ் செய்வதற்கு ஏதுன்னா
லாகாதடா
அன்னையென்றே நம்பியென்னை அடிபணித
லடுக்குமடா

எந்தவித மானா லுமே இங்குவந்து வுன்னைராமர்
சிந்திரத்தங் கக்கவதைச் செய்திடுவார் சீக்கிரத்தில்

இந்திரனை ஜெயித்தேனென்று இறுமாந்து
மகிழுகிறாய்
அந்தவிதம் ராமரோடு அமர்புரிந்தால் தெரியுமடா

315. சத்தியமே தவமாகச் சாதித்து வரும்ராம
பத்திரரைப் பகைத்துக்கொண்ட படுபாவி
மாண்டிடுவாய்

தேகமதி லாசையிலை திரணமாக நினைத்ததனைப்
போகமெல்லாம் த்யஜிப்பேனென்று புலம்பிச்
கொண்டு சொல்லிச்சீதை

பெருமூச்சு தனைவிட்டுப் பெருமைதரும்
நகைகளெல்லாம்
தரியாம லெறிந்துவிட்டுத் தத்தளித்தால் மனம்வாடி

பார்த்தரக்கன் இவள்நமக்குப் பயப்பட்டு வசமாகாள்
கார்த்துக்கார்த்துச் சலித்தோமிவள் கல்நெஞ்ச
முள்ளவளே

316. த்யஜிப்பேன் - விட்டுவிடுவேன்

தேகக்கிலேசஞ் செய்கிறாளே திர்ப்தியின்றித்
துடிக்கிறாளே
போகமெல்லாம் த்யஜிக்கிறாளே புலம்பிமிக
அழுகிறாளே

320. மோகமிகத் தருகிறாளே முறைதப்பே னென்கிறாளே
தாகம்ராமன் மீதில்வைத்துத் தபசியைப்போ
லிருக்கிறாளே

வசப்படுவா ளென்றெண்ணி வாஞ்சையொடு
பேசினாலும்
இலசயாம லெதிர்க்கிறாளே என்னசெய்வோ
மென்றுமிகச்

சிந்தித்தா னதன்பிறகு சீதைவச மாவதற்கு
அந்தவிடந் தனிலுள்ள அரக்கியர்க்கு
ஆக்ஞைசெய்தான்

சாமபேத தானதண்ட சதுர்விதமாம் உபாயங்களால்
காமமென்மேல் கொண்டுவந்து கலந்திடவே ஜானகியே

மனங்கலைத்துத் திரும்பினக்கால் மாியாதை
மிகவுஞ்செய்வேன்
எனதாக்ஞைப் படிநடந்து என்னைத்திர்ப்தி
செய்வீரென்றான்

325. அரக்கன்பத்னி தான்யமாலை அந்தவேளை
வந்தரக்கன்
பிரியப்படத் தழுவிக்கொண்டு பிரேமையுடன்
சொல்லுகிறான்

ஜானகிமே லாசைகொள்ளும் சபலமதை விட்டுவிடும்
எனமுள்ள பெண்ணவளால் என்னசுக மடைந்திடுவீர்

இவள் மீது மோகங்கொண்டு ஏன்வீணா யலைகின்றீர்
அவளுடனே வாழுவது அழகல்ல ஆகையினால்

என்னுடனே கலந்தெல்லா இன்பங்களை யனுபவிப்பீர்
மன்னவரே யென்றுரைத்தாள் மாபாவி யரக்கனதைக்

கேட்டுமிகச் சிரித்ததன்மேல் கிலேசத்தோடு
வனத்தைவிட்டுத்
தாண்டிப்போனான் அந்தப்புறம் தன்னில்குறை
மிகவடைந்து

330. ஏகஜடை முதலாகத் தனையோ அரக்கியர்கள்
சோகப்படுஞ் சானகியைச் சூழ்ந்துகொண்டார்
சுட்டிவந்து

கூரமாகப் பார்த்துமிகக் கொடுமைசெய்யத்
தொடங்கியவர்
பிராணன்போக இம்சைசெய்வோம் பட்சிப்போ
மென்றுரைத்து

அடிக்கவரு வார்கள் சிலர் இடிக்கவரு வார்கள்சிலர்
கடிக்கவரு வார்கள் சிலர் துடுக்கமாய்ப்பேசு
வார்கள்சிலர்

இம்சைசெய்தா லன்றியிவள் இணங்காளென்
றுரைப்பார்சிலர்
சம்சயமே வேண்டாமிகச் சண்டியிவ ளென்பார்சிலர்

மென்னிதனைப் பிசைந்துதின்று மிரதமவளே
யானாளென்று
மன்னவனோ டுரைத்திடவலை மகிழ்ந்துவம்பே
மென்பார்சிலர்

335. இவள் மாம்சம் வெகுருசியாய் மிரதமவளே
யானாளென்று
இவள் வந்த நாள் முதலாய் ஆபத்துண்டா
மென்பார் சிலர்

படுத்தவேண்டாம் ஜானகியாள் பார்த்தாவாய்
ராவணனை
அடைந்துவிட்டால் நமக்குமிக ஆபத்துண்டா
மென்பார் சிலர்

அதற்காகப் பயந்துகொண்டு அடங்கிச்சீதை
தலைவணங்கி
உதவிசெய்வோர் போலிருந்து உறவாடும் போர்கள் சிலர்

ஈசஸடைந்த ராவணனை ஏனடைய மாட்டேனென்று
விசனங்கொண்டாய் சீதையென்று வினயமாகச்
சொல்வோர் சிலர்

புலஸ்தியபிரம்மா போனான் புத்திசக்தி மிருந்தவனாம்
இலங்கேசன் நனையடைந்தால் என்னகுறை
யென்பார் சிலர்

340. கணவனையே நினைத்துக்கொண்டு சுலங்குவதில்
பயனிலையே
குலமுடனே ராவணனைக் கூடிவாழ்வா
யென்பார் சிலர்

அரக்கர் மன்னன் தருஞ்சுகத்தை அனுபவிக்கப்
பாக்யமின்றிப்
பரிதபிக்கு மிவளுக்கினிப் ப்ராணன் தக்கா
தென்பார் சிலர்

தேசப்ரஷ்டனானராமன் திறமையுள்ள னாகுலப்
ஆசையவன் மீதிற்கொள்ளல் அழகாமோ
என்பார்சிலர்

பாதிவிர்த்திய மென்பதான படாத்தியத்தை
விட்டொழித்து
ஆதரிக்கும் ராவணனை அடைந்திடுவா
யென்பார்சிலர்

எத்தனையோ பெண்கள்வந்து இன்பமிக வனுபவித்துச்
சித்தமிக மகிழ்வதுபோல் செய்வாய்சீதை
யென்பார்சிலர்

345. மன்னவனாம் ராவணனை மதிப்பின்றிப் பேசினவள்
சொன்னபடி கேட்கமாட்டாள் சுறுக்குதட்டு
மென்பார்சிலர்

அடியாமாடு படியாதென்பார் அதுபோல
இவளுமாவள்
கொடுப்பேன்மண்டை பிளக்கவென்று குட்டவரு
வார்கள்சிலர்

எத்தனைநா ளிவளுடனே இவ்விதமாய்ப் போராடிக்
கத்திக்கத்தித் தொண்டையெல்லாம் காச்சுதென்று
சொல்வார்சிலர்

சீதையவள் வசப்படவே சித்தம்நோகச் செப்பினக்கால்
வேதனைகள் தருங்காட்சி வெகுவாகச் சொப்பனத்தில்

கண்டுமிக மிரண்டோமென்று கண்தாரை
விடுவோர்சில்ர்
துண்டனிலங் கேசனுக்காய்த் துணிந்துபேசு
வோர்கள்சிலர்

350. இந்தப்படி யநேகவிதம் எண்ணியவர் சொல்லுகையில்
சுந்தரியாம் ஜானகியாள் சொல்லுகிறாள்
சோகத்தோடு

என்னைவதை புரிந்திடலாம் ஈஷத்தும் தயவுகொண்டு
பின்னடைய வேண்டாம்நீங்கள் பிராணன்போக்க

என்னுடைய கணவரிடம் எண்ணிச்சொன்ன
குறைகளோடு
இன்னுங்றை யிருந்தாலுமே என்மனது
அவரையேதான்

பற்றிப்பக்தி செய்யுமல்லால் பரபுருஷ னிடத்திலெந்தன்
சித்தமது செல்லாது ஸ்ரீராமர் ஒருவரையே

பரமகுரு வாகக்கொண்டு பாதபூஜை செய்வேனன்றி
அரைநொடியும் அவர்நினைவு அன்றியிலே
இருக்கமாட்டேன்

355. மனுஷியஸ்திரீயும் ராட்சஸனை மனஸ்கரித்து
அடைவதுண்டோ?
இனமில்லை மனமில்லை இணங்கேனென்றும்
இதுநிஜமே

சுற்பழியும் ஸ்திரீகள்போலக் கருத்துள்ளவ
ளாகேனான்
சொற்படிநான் கேட்பேனென்று சொப்பனத்தும்
நினைக்கவேண்டாம்

உலகவாழ்வை யொழிப்பதற்கு உறுதிமிகச்
செய்துகொண்டேன்
பலவிதமாய்ப் பயப்படுத்திப் பயனேதும்
அடையமாட்டீர்

இந்தவித முரைக்கக்கேட்டு இராட்சசிகள்
கோபங்கொண்டு
தொந்தரைகள் செய்வோமென்று தோரணையாய்
மிரட்டினார்கள்

அப்பொழுது சீதைமிக அலறிக்கொண்டு புலம்புகிறாள்
இப்படிஎன் தலைவிதியும் இருக்குமென்று நானறியேன்

360. ஆவிதனை விடுவேமெனில் அதற்கும்வகை புரியவிலை
பாவிநான் பெண்ணாய்வந்து படுங்கஷ்டம்
போதும்போதும்

ஹாராம ஹாலட்சுமண ஹாகௌசலே ஹாசுமத்திரே
நேராயென்ன யாதரித்தீர் நிலத்திலிப்போ கஷ்டமிக

அனுபவிக்க ஆனேனெந்தன் அதிர்ஷ்டந்தனை
யென்னசொல்வேன்
மனம்புழுங்கி யுருகிறேனே மனக்குறைதீர்ப் பாரிலையே

என்னசெய்வே னென்றுமிக ஏங்குகையி லரக்கியர்கள்
மகதேவி ஜானகியை மனத்தேற்றிச் சொல்லுகிறாள்

365. அரக்கியரே வாருமிங்கு அன்னையிடம்
நெருங்கவேண்டாம்
வருமவளை யுபத்ரவித்தால் மகத்தான கஷ்டம்பாரீர்

நாரிகளில் சிறந்தவளாம் நலினாட்சி ஜானகியைக்
கோரியவள் சுற்பழிக்கக் கொஞ்சமுமே
எண்ணவேண்டாம்

கனவுகண்டே னிப்பொழுது காரியம்வே
திருக்குதென்றாள்
அனைவர்களும் அவளைவந்து அடுத்தந்தக்
கனவுதனைச்

சொல்லுமென்றா ரப்பொழுது சொல்லுகிறாள்
திரிசடையாள்
வல்லபனாம் ராமன்வந்து வைதேகியை யடைவதற்கு

வெள்ளைவஸ்திரம் தரித்துக்கொண்டு வெகுகளிப்போ
டானையின்மேல்
கொள்ளும்நல்ல கோலத்தோடு குணமுடைய
தம்பியொடு

370. வந்துசீதை தனையெடுத்து மாதவன்ஸ்ரீ ராமச்சந்திரன்
சிந்தைமகிழ்ந் தவன்மடியில் சீருடனே
வைத்துக்கொண்டு

ஆகாச மார்க்கந்தனில் அவர்போகும் வேளையிலே
கோதிக ளொழிந்துசீதை சூரியனையும் சந்திரனையும்

கைகளினால் பரிசஞ்செய்து களிப்படையக்
கண்டேனப்பால்
வையகத்தி லொருபெரிய மலையினுச்சி தனில்சீதை

இருந்துகொண்டு மகிழ்ந்திருந்தால் எத்தனையோ
பெருமையுடன்
அரிதான புஷ்பகத்தில் அவளைராம் லட்சுமணர்கள்

வைத்துக்கொண்டு வடதிசையின் வழிநோக்கிச்
செல்லக்கண்டேன்
ஜெயித்திடுவான் ராமன்வந்து சீக்கிரமாய் ராவணனை

375. இதுவுமன்றி அரக்கர்மன்னன் எண்ணெயிலே
மூழ்கியப்பால்
மதமொழிந்தே தெற்குத்திசை மார்க்கமதில்
கழுதையின்மேல்

போக்கண்டே னதன்பிறகு புத்திகெட்டே
யவன்நரகில்
வேகமாகத் தலைகீழாய் விழுவுங்கண்டேன் ராமனிட

தூதனென்று குரங்கொன்று தோரணையாய்
வந்திலங்கை
சேதப்படக் கொளுத்தியப்பால் செய்கையெல்லாஞ்
செய்யக்கண்டேன்

ஆகையினால் அரக்கர்குலம் அழியுமென்றே
அறிந்துகொள்வீர்
சோகப்படும் சீதையினிச் சுகப்படுவாள் அகமகிழ

இந்தவிதஞ் சொல்லக்கேட்டு எல்லோரும்
விலகினார்கள்
வந்தசுவட்டந் தனைநினைத்து வைதேகி புலம்புகிறாள்

380. ஸ்திரீஜன்ம மெடுத்துவந்து சீர்கெடவே
யலையலானேன்
பிரேமையுள்ள பர்த்தாவைப் பிரிந்ததினால்
வருந்தலானேன்

பதியைவிட்டுப் பிரிந்தவுடன் ப்ராணண்போகா
திருக்கின்றதே
சதிசெய்த ராவணனைச் சாமிவதை புரிவதெப்போ?

பாதகனோ டிருக்கப்போமோ பர்த்தாவின்
சொத்தான
சீதையெனு மென்னுடைய சித்தத்தையும் தேகந்தையும்

அன்னியர்க்குத் தருவ்துவே அதர்மமாகும்
கதியும்போகும்
என்னருமைப் பர்த்தாவுக்கு எண்ணப்போமோ
வஞ்சகத்தை

நானிருக்கு மிடமொருக்கால் நாயகர்க்குத் தெரியாதோ
ஈனன்ரா வணனொருக்கால் இரர்மரையும்
அனுஜரையும்

385. வஞ்சகத்தால் வதைபுரிந்து வயறெரியச் செய்தானோ
நெஞ்சுமிகத் தபிக்கும்படி நிராதரவா யாகினேனே

ஒருவராலே தீங்கடைய வுண்டோயென் பர்த்தாவும்
தருமசீலன் லட்சுமணனும் சவுக்கியமாக வேயிருப்பார்

என்னைவிட் டொருநொடியும் இருக்கமனந் துணியாத
என்னுடைய பர்த்தாயிப்போ என்னைமறந்
திருப்பதினால்

இனியென்னை யடைவதற்கு இஷ்டமின்றி விட்டுவிட்டு
வனவாச மானவுடன் வந்தவழி சென்றுநகர்

தனையடைந்து இஷ்டமுள்ள தகுந்தபெண்கள்
தமையடைந்து
மனங்களித்துச் சுகிப்பதற்கு மனந்துணிந்தே
நின்றனரோ?

390. நெருங்கியுள்ள மட்டுமேதான் நேசக்கட்டு
என்பதுபோல்
பிரிந்திடவே எனைமறந்து பிரேமைதனை விட்டனரோ

அனுபவிக்கு மெனதுசுஷ்டம் அவரறியக் கடமையென்ன
தனதுபத்னி யென்றுசற்றும் தயவின்றி
யிருப்பதென்ன?

அப்படியும் நினைக்கப்போகா அதுகிரதக்கனன்
குணமாமே
எப்படியும் கிர்தக்ஞரென்று என்பதியைப் புகழுவரே

உயிருடனே இருந்திருந்தால் ஒருக்காலும் எந்தன்மீது
தயவின்றி இருக்கமாட்டார் தடமறிந்து வந்திடுவார்

என்னைப்போல் லங்கையெல்லாம் என்றழுமோ
அறியேனே
இன்னுமுயிர் வைப்பதிலே ஏதுஞ்சுக மில்லையென்று

395. ஆவிவிடத் துணிந்தெழுந்து அசோகவிருட்சக்
கிளையொன்றை
தாவிக்கையால் பிடித்துக்கொண்டு தலைமயிரின்
ஜடையைக்கொண்டு

பிராணனைவிடச் சீதை யத்தனிக்கையில் சுப சகுனங்கள் காண்பதும், அதினால் சீதை சற்றாறுதல் கொண்டு உயிரொழிக்கப் பின்னடைவதும் ஸ்ரீராமசரித்திரத்தை மரத்திலிருந்தே அனுமார் சொல்லி இறங்கிவந்து சீதையுடன் சம்பாஷித்துக் கணையாழி தந்து, விசுவரூபங் காட்டிச் சூடாமணி பெற்று விடையும் பெற்று, அசோகவனத்தை யழித்து எண்ணாயிரம் கிங்கரரை யெதிர்ப்பது

யத்தனித்தா னந்தச்செய்கை யார்சகிப்பார் கோரமது
சித்தமிகக் கலங்குதம்மா செப்பமன மில்லையம்மா

அந்தவேளை ஜானகிக்கு அநேகசுபம் பெருகுதற்கு
முந்திக்குறி கண்டுதம்மா முறையாகத் தேகமதில்

இடதுகண்ணோ டிடதுபுஜம் இடதுதுடை
இவைமூன்றும்
படபடவென் றேயடித்துத் துடித்ததம்மா சீதைகண்டு

அலுகூலச் சகுனங்கள் ஆகுமொரு தோரணையால்
மனக்குறைகள் தீருதற்கு மார்க்கமேதோ காணுமென்று

400. நின்றுசற்று ஆலோசித்தாள் நினைவைவசங்
கொண்டதன்மேல்
நன்றுசெய்யும் ஸ்ரீராமனை நாடித்யானஞ்
செய்ததன்மேல்

சூரரச்செய்கை தனையொழித்தாள் குணமடைவோ
மெனமகிழ்ந்தாள்
பிரார்த்தித்தாள் தெய்வங்களை பர்த்தாவை
ஸ்துதித்துநின்றாள்

இந்தவிதம் சீதையுயிர் இழந்திடவே யத்தனித்த
அந்தவேளை யனுமான்மிக ஆலோசித்தான்
இனியசந்தால்

வந்துவிடும் சுஷ்டநஷ்டம் வைதேகி தனைக்கண்டு
சிந்தைக்குறை தீரும்படி செப்புவோம்நாம் ஆறுதலை

அரக்கியரும் உறங்கிவிட்டார் அன்னைமுன்னே
போவோமென்று
கருதியப்பால் நம்மைக்கண்டு காதகன்ரா வணனென்று

405. எண்ணிவிட்டா லென்னசெய்வோம் இங்கிருந்தே
ராமரிட
கண்ணியமுள்ள சரித்திரத்தைக் காதில்படச்
சொல்வோமென்று

அயோத்திநகர் தனிலிருந்து அகிலஜகந் தனையாண்ட
தயவுள்ள தசரதற்குத் தனயரான ஸ்ரீராமர்

தந்தையாக்ஞைப் படிநடக்கத் தம்பியோடும்
பத்னியோடும்
வந்துசேர்ந்து வனந்தனிலே வசித்துக்கொண்டு
வருகையிலே

இராவணனாம் அரக்கன்வந்து இராமரையும்
தம்பியையும்
தீவிரமாய் விலகச்செய்து திருடிவந்தான் ஜானகியை

அதன்பிறகு ஸ்ரீராமர் அனுஜரோடும் விசனத்தோடும்
மதியுள்ள சுக்கிரீவர் வாசஞ்செய்யும் ரிசியமூக

410. பருவதத்தைவந்தடைந்தார் பரந்தாமர் சுக்கிரீவரைக்
கருதிநேசங் கொண்டவர்மேல் காருண்ய
மிகவுங்கொண்டு

உதவிக்காகப் பரஸ்பரமும் ஒற்றுமையாய்ச்
சத்தியஞ்செய்து
அதிகநேச ராகிமிக அன்யோன்ய மடைந்ததன்மேல்

சுக்ரீவனை இம்சைசெய்த சூரன்வாலி தனைவதைத்துத்
துக்கமின்றி வாழ்ந்திடவே துணைவனான
சுக்கிரீவனைக்

கிஷ்கிந்தைக்கு அரசனாக்கிக் கீர்த்திபெற்றா
ரதன்பிறகு
நிஷ்கருணை செய்தாரிந்த நிலத்திலெங்கும் வானரர்கள்

போயலைந்து ஜானகியை பொறுப்புடனே
தேடிக்கொண்டு
வாமிதாவாம் ஒருமாதத்தில் வந்துசேர ஆக்ஞை
செய்தார்

415. அந்தப்படி நான்குதித்தும் அநேகம்போர்கள்
தேடிப்போனார்
இந்தத்தெற்குத் திக்குதனில் என்முதலாய்ச்
சிலரையெல்லாம்

அனுப்பித்தந்தா யந்தப்படி அநேகவிடங் களில்தேடி
மனமசந்து வந்தோமொரு மலையடிவா ரந்தனிலே

உயிரொழிக்க எல்லோருமாய் உறுதிசெய்தோ
மதன்பிறகு
தயவுள்ள ஸ்ரீராமன் சரித்திரத்தைச் சொல்லுகையில்

உத்தமராம் ஜடாயுமன்னர் உயிரொழிந்த சேதியையும்
அத்தருணம் பேசினதை அவருடைய தமயனான

சம்பாதி கேட்டிதன்மேல் சங்கடத்தை மிகவடைந்து
அம்பாள்சீதை தன்னைத்தேடி அலைந்துவந்த எங்களுக்கு

420. விவரஞ்சொன்னான் லங்கையிலே விநோதமான
வனந்தனிலே
சிவனேசுதி யென்றுசீதை சித்தமிசு நொந்திருக்கும்

இரகசியத்தைச் சொல்லக்கேட்டு இராமர்பத்னி
தனைத்தேடி
அசுந்துணிந்தே வானரரில் அனுமாரெனும் நானிங்கு

கடல்தாண்டி வந்துமிகக் கருத்துடனே
லங்கையெல்லாம்
இடமொன்றும் விடாமல்பார்த்து இந்தவனம்
வந்துசேர்ந்தான்

தேடியிதில் பார்க்கையிலே தேவியான ஜானகியை
வாடிமனம் நொந்திருக்க வனந்தனிலே
கண்டேனென்று

மதுரமான வாக்குரைத்து மவுனமாக இருந்தானப்பா
இதென்ன ஆச்சரியம் என்றுசீதை பிர்மித்துப்பார்க்க

425. சிறுகுரங்கொன் றிருக்கக்கண்டு சித்தமதி
லாலோசித்தாள்
குறித்துக்காணும் குரங்கதினால் குணமுண்டோ
வென்றுபின்னும்

கனவிதுவே நிசமல்ல கனவுதனில் குரங்குகண்டால்
இனத்தார்க்குக் கஷ்டமுண்டாம் என்பார்கள்
ஜகந்தனிலே

நித்திரையும் நமக்குண்டோ நேர்ந்திடவும்
கனவுண்டோ
மித்தியையின்றி இந்தவாக்கு மெய்யாகப் பலித்திடவே

வேண்டிக்கொண்டாள் வைதேகி வெகுவாகத்
தெய்வங்களை
ஆண்டவன்ஸ்ரீ ராமதூதன் அப்பொழுது கீழிறங்கிக்

கைகூப்பி வணங்கிநின்று கலங்குவதேன் மாதரசே
வையகத்தி லும்முடைய வரலாறை யறியச்சொல்வீர்

430. சுவர்க்கலோக ஸ்திரீபோலச் சோபிக்கும் என்தாயே
இவடந்தனில் வந்ததென்ன ஏங்கிமனம் நோவதென்ன?

நிலத்தில்பாதம் படுவதினால் நீர்தேவ ஸ்திரீயல்ல
குலத்தில்மிகச் சிறந்தநல்ல குவலயத்தை யாளுமொரு

அரசரிட மனைவியென்று அறிகின்றே னாகையினால்
பரிதபிக்க நியாயமென்ன பரிந்துரைக்க வேண்டுமம்மா

---

427. மித்தியை - பொய்

வனவாசம் செய்வதற்கு வந்தவராம் ஸ்ரீராமர்
மனைவிதனைத் தசகண்டன் மாயஞ்செய்து
கொண்டுவந்த

சேதிதனைக் கேட்டதுண்டு சீதையெனும் ராமர்பத்னி
பாதிபிர்த்திய முள்ளநல்ல பரமசாது வென்றுராமர்

435. என்னிடத்தில் சொன்னபடி இருக்குமும்ம
லட்சணத்தால்
அன்னைசீதை நீரென்றே ஐயமின்றி நம்புகிறேன்

அச்சீதை நீரானால் அடியேன்மேல் கிருபைகூர்ந்து
எந்தனிட முரையுமென்று இவ்வாறு கேட்கச்சீதை

மனங்களித்துச் சுகமடைந்து மனமுவந்து
சொல்லுகிறாள்
எனது சேதி சொல்லுவேன்கேள் இதமுரைத்த
உன்னிடத்து

நானேயாம் ராமர்பத்னி நாட்டிலென்னைச்
சீதையென்பார்
நானாவித இம்சைப்பட நானான கதையைக்கேளாய்

பதியுடனே வனத்தில்வந்து பணிவிடைகள் செய்தவரை
விதிப்படியே யுபசரித்து விநயமாக நடந்துவந்தேன்

440. மான்போல உருவெடுத்து மாரீசன் வந்துநிற்க
நானந்தச் சூதறியேன் நம்பிவிட்டேன் மானென்றே

சுவர்ணம்போல விளங்கியதாம் சூதான மானதுதான்
நவரத்ன ஒளிவீச நான்கண்டு பிரமித்தேனப்போ

அதிசயமாம் மானதனை அயோத்திநகர்
கொண்டுபோக
உதித்துதெனக் காவல்மிகுப் பதியினிடமுரைத்தேனதை

அவரந்த மான்பிடிக்க அதைத்தொடர்ந்து
போனதன்மேல்
அவர்வாக்குப் போலவேதான் அந்தப்பாவி மாரீசன்

கதறியவோர் சத்தங்கேட்டுக் கணவருக்குக் கஷ்டமது
சதிசெய்யும் அரக்கரினால் சம்பவித்த தென்றுநம்பி

445. மதியிழந்தேன் விதிவசத்தால் மனந்துணிந்தேன்
அனுஜரையும்
பதறிச்சொன்னேன் எனைப்பிரிய பாபியெனைப்
பிரிந்தாரவர்

அந்தவேளை யரக்கனனை ஆக்கிரமித்துக்
கொண்டுவந்து
இந்தவனந் தனிலேவைத்து என்னைப்பார்த்து
சொன்னான்பாவி

ஒருவருஷங் கெடுக்கொடுத்தேன் உடன்படவே
கெடுக்கடந்தால்
அறிந்துன்னைச் சமைத்துண்பேன் அறிந்துநடந்
திடுவாயென்றான்

இரண்டுமாத மிருக்குதந்த எண்ணித்தந்த வாயிதாவில்
அரக்கனப்பா லெனைவதைப்பான் ஆகையினால்
நானேயுயிர்

விடுவதற்குத் துணிந்துவிட்டேன் வேறுவழி
இல்லையென்று
உடலையினி யொழிப்பதுவே உத்தமமென்
றழுதுரைத்தாள்

பார்த்துச்சீதை அச்சங்கொண்டு பாதகனே
வந்துவிட்டான்
சீர்கெடுத்துச் சூதாகத் திரும்பவுமே குரங்குபோல

உருவெடுத்தோன் மாரீசன்போல் உளம்மகிழ்ந்தோ
மிவனைநம்பி
அரக்கனிவன் றானென்று அழுதுரைத்தாள்
நிந்தையாக

460. அனுமான்கண்டு மனமருண்டு அடுத்ததுதான்
அனுசிதமே
நினைவுகெட்ட வேலைசெய்தோம் நினைத்தாளன்னை
கபடனென்று

ஆருமறி யாதுரைக்க அன்னையிட்ம்
நெருங்கினோம்நாம்
தாறுமாறா யுரைத்தாளன்னை தப்பிதமென்
செய்தோமென்று

பின்வாங்கி நின்றுகொண்டு பேசுகிறான் தாசனவன்
அன்புடனே அடிபணிந்து அம்மாநீர்
வருந்தவேண்டாம்

பாதகனென் றேநினைத்துப் பயப்படவே
வேண்டாமம்மா
நீதிநெறி தவறாத நிலையுள்ள பக்தனம்மா

தேடியோடி வந்தேனம்மா திரிந்தலைந்தும்
அசந்தேனம்மா
நாடியும்மைக் கண்டேனம்மா நல்வரவாய்
வந்தேனம்மா

465. கூடியும்மை வாழும்ராமர் குறைதீர்க்க வந்தேனம்மா
வாடியும்மை நோகுமும்ம மனந்தேற்ற வந்தேனம்மா

ஐயனாசுளுப் படிவந்த அரியபசுதன் நானம்மா
மெய்யுரைக்கு மென்னைக்கண்டு மிரளவேண்டாம்
சற்றுமம்மா

பக்தர்களில் நான்மிகவே பரிசுத்த பக்தனம்மா
சக்தியுண்டு சமத்துமுண்டு சற்றசந்தேன்
குற்றஞ்சொன்னீர்

என்னில்குறை கண்டுரைப்போர் எவருமிலை
யென்றிருந்தேன்
அன்னையேநீ ரென்னுடைய அறிவீனத்தைக்
குறித்தறிந்தீர்

பதட்டப்பட லாகாதம்மா பக்தன்சொல்லைக்
கேளுமம்மா
சதியெண்ண மில்லையம்மா சத்பக்தன் நானம்மா

470. பரஸ்பரமும் பேசுதற்குப் பலவிஷய முண்டம்மா
தருணமிதில் நம்பாமல் தாயேகாலம்
போக்கவேண்டாம்

இப்படிநீர் அனுமானித்தால் எப்படித்தான்
குறையொழியும்
தப்பெண்ண மில்லையம்மா தானவனா னல்லவம்மா

உமதுவாசஸ் தலமறிந்து உடன்வந்து சொல்லும்படி
தமதுபர்த்தா ஆக்ஞைசெய்தார் தாண்டிவந்தேன்
சமுத்திரத்தை

இரகுராம ரென்னிடத்து இரகசியங்கள் மிகவுரைத்துச்
சகஜமாக அனுப்பித்தந்த தத்துவத்தை
யறியுமென்றான்

அனுமான்சொல்லும் வார்த்தைகளும் அவன்முகத்தா
லவன்கருத்தும்
நினைவில்சற்று ஜானகிக்கு நீசனிவ னல்லவெனும்

475. நிச்சயத்தைத் தந்துதம்மா நினைவுவசங் கொண்டுசீதை
அச்சமின்றிப் பட்சங்கொண்டு அனுமானைப்
பார்த்துரைப்பாள்

சொல்வாய்ராம லட்சுமணரின் சொரூபமதின்
லட்சணங்கள்
நல்வரவாய் வந்தவனே நானறிய விவரமாக

நேசங்கொள்ளச் சுக்கிரீவனை நேர்ந்தவொரு
காரணமும்
ஆசைகொண்டு கேட்குமெனக் கதையும்சொல்வா
யென்றுரைத்தாள்

சாமிதம்பி இருவர்களின் சரியான லட்சணங்கள்
சாமுத்திரிகா சாஸ்திரப்படி தாயறிய விரித்துரைத்துச்

சுக்கிரீவன் சக்கியங்கொண்டு சுகமடைய
அவனைச்செய்து
திக்கெங்கும் தேடிவரத் தெரிந்துவெரு வீரர்களை

480. வானரரோ டனுப்பித்தந்த வரலாறும் சம்பாதியால்
ஜானகியின் இருப்பிடத்தைச் சரியாய்ச்சொல்ல
அறிந்ததையும்

வாயுபுத்ரன் அனுமானெனும் வாஸ்தவமாம்
தன்பெயரும்
தாயினிடம் விரித்துரைத்து தண்டனிட்டான்
கண்டுசீதை

பர்த்தாவா லனுப்பப்பட்டுப் பரமபக்தி கொண்டுவந்த
சிர்த்தையுள்ள தூதனென்று சித்தமதில் நிச்சயித்தாள்

அதன்பிறகு ராமர்தந்த அங்குளீகந் தனையெடுத்துப்
பதமலரைப் பணிந்தனுமான் பக்தியுடன் தந்தானம்மா

சீதையதைக் கையில்வாங்கிச் சித்தமதில்
மகிழ்ந்துகொண்டு
நாதனெந்தன் நாயகரை நானடைந்தே
னெனப்புகழ்ந்து

485. கண்ணிலொற்றி அங்குமிங்கும் காங்கையுடன்
வைத்துக்கொண்டு
எண்ணியிந்த மோதிரத்தால் எல்லாச்சுக
முண்டாமென்று

நம்பிச்சீதை முன்னொருக்கால் நாயகரோ
டிணக்கமின்றிச்
சம்பவித்த இடரொழிந்துச் சகலசுகந் தந்துதிந்த

மோதிரத்தின் மகிமைதனை மொழிவோமென்
றேநினைத்துச்
சீதைமிக அன்புடனே செப்புகிறாள் அனுமானிடம்

பிரேமையுடன் கலகஞ்செய்யப் பிரியங்கொண்டு
கணவரிடம்
குரோதகுணந் தனைக்காட்டிக் குலாவுதலை
விட்டிருப்போர்

போலிருக்க ஆசைகொண்டேன் புத்திசொன்னார்
சாபமிக
சீலங்கெடும் நம்முடைய சிநேகபங்கம் நேருமென்று

பிடிவாதஞ் செய்தேனென்று பிரேமையினால்
கலகஞ்செய்ய
இடந்தந்தா ரதினாலே இருவர்களும் மனம்பிரிந்து

சிலகால மிருந்துமிகச் சிரமமடைந்தோம்
அதைநினைக்கில்
கலங்குதையா மனமிகவும் கண்டிப்பாய்
நடந்துகொண்டோம்

இருவர்களும் கூடிவாழ ஏதினிமே லில்லையென்றே
கருத்துதனில் கனைத்துமிகக் கண்கலங்கி
நொந்துபோனோம்

ஏனிந்தக் காரியஞ்செய்தோம் என்றுமிகக்
கவலைகொண்டு
நானிருக்கும் வேளையிலே நாயகர்கை விரல்தனிலே

இருந்தயிந்தக் கணையாழி இளைக்கத்தேகம்.
அதினாலே
இறுகியுள்ள குணங்குறைந்து என்கண்ணில்
படும்படியாய்

விழுந்துதிந்தக் கணையாழி விரைந்தோடி
யெடுத்தேனிதை
நழுவிப்போன மோதிரத்தை நானெடுக்க நாதர்கண்டு

என்கையைப் பிடித்துக்கொண்டு என்னோடு
வாதஞ்செய்து
அன்புகொண்டார் ஐக்கியமானார் ஆகையினா
லிப்பொழுதும்

அந்தப்படி சாமியைநான் அடையச்செய்யும்
எந்தன்கையில்
தந்தஞான கணையாழி தாராளமா யென்றுரைத்து

பர்த்தாவை நினைத்துக்கொண்டு பரிதபித்து
மறுபடியும்
கர்த்தனெந்தன் கணவரைநான் காணும்பாக்ய
மென்றுகூடும்?

நாதனில்லா விடமெனக்கு நரகமாகக் காணுதையா
பாதபூஜை நானவர்க்குப் பண்ணிச்சுக
மடைவதெப்போ?

சீதையென்றே யெனையழைத்துச் செப்புமொரு
அமிர்தவாக்கை
ஆதரவோ டன்புடனே அவர்சொல்லக்
கேட்பதெப்போ?

பணிவிடைகள் செய்தவரை பாங்குடனே யுபசரித்துக்
குணமுடனே நான்மகிழக் கூட்டிவைக்கும்
காலமெப்போ?

கண்ணிலெந்தன் கணவரைநான் காணும்பாக்ய
மொன்றேபோதும்
மண்ணுலகி லெனக்கெதிலும் மனதிலிச்சை
யில்லையையா

பதிமுகத்தைக் கண்டுமிகப் பரமானந்தச் சுகமடைவேன்
விதிவசத்தால் பிரிந்தேனையா வேதனையை
யென்னசொல்வேன்

எனைநாதர் அடைந்ததன்மேல் இருவருமா
யிருந்தவொரு
அன்னியோன்யந் தனைக்கண்டு அதிசயிப்பா
ரெல்லோருமே

எவர்கண்ணோ பட்டுதையா இந்தப்படி பிரிவதற்கு
அவர்மீதும் குற்றமிலை அனுபவிக்கும் வேளையிது

கணவர்தம்மைப் பிரிந்தவர்க்குக் கனமில்லை
இனமில்லை
மணமில்லை குணமில்லை மற்றுமுள்ள சுகங்களில்லை

என்னைவிட் டொருநொடியும் இருந்தறியா
ரெனதுபர்த்தா
மன்னவர்ஸ்ரீ ராமரென்னை மனதிலெண்ணி யுருகுவரே

சோகமதால் நாதர்மிகச் சுகமிழந்து வருந்துவதால்
தேகமிக இளைத்ததுண்டோ தெரிந்திடவே
சொல்வாயதை

என்னைப்பிரிந் திருப்பவராம் எனதுபர்த்தா ஸ்ரீராமர்
என்னையவர் நினைவுதனில் எண்ணுவது
தானுமுண்டோ?

510. உண்டென்னில் இதுவரையில் உள்ளஞ்சுகித்
திடத்துணிவு
கொண்டிருக்க நியாயமென்ன குறித்தறியச்
சொல்வாயதை

இராமலட்சு மணர்கள்மனம் இராட்சதரை வதைபுரிய
தாமதமா யிருக்குமொரு தன்மைதனை
யறியச்சொல்வாய்

சக்தியவர்க் கில்லையென்று சற்றுமெண்ண
நியாயமிலை
பக்தியுள்ள யெந்தன்மீது பராமுகமே காரணமாம்

நாதனாரை தனைக்கடந்து நானேதும் நடந்ததில்லை
பாதபூஜை செய்தவரைப் பணிந்துவந்தேன்
திர்ப்தியாக

மதிமோசஞ் செய்யவந்த மான்பிடிக்க ஆசைகொண்டு
பதியினிடந் சொன்னதுந்தான் பாபமாமோ
சற்றாயினும்

மனக்கருத்தைக் கணவரிடம் மனமுவந்து சொல்வதுவே
மனையவளின் தருமமென்று மனுஸ்மிருதியுங்
கூறுமன்றோ

பெண்கள்மனங் கலங்குமென்று பேருலகி
லாருஞ்சொல்வார்
கண்கலங்கப் பெண்களாதல் கணவர்குறை
யென்றுஞ்சொல்வார்

பெண்கள்சொல்லும் வார்த்தைகளில் பிசகிருக்கு
மென்றறிதல்
கண்மணியாம் சாமிக்கது கடமையன்றோ
கண்டறிவாய்

அரக்கர்மீது கையெடுத்தால் அனர்த்தமுண்டா
மென்றறிந்து
அரணியத்தி லுள்ளமட்டும் அம்புகையில்
வேண்டாமென்றேன்

அரக்கர்மீது கையெடுக்க அருந்தவத்தோர்க்
கபயந்தந்தேன்
பிரியவுனை நேரிடினும் பேச்சுத்தப்பே
னென்றுரைத்தார்

520. அந்தப்படி பிரிவாயிற்று ஆரைக்குறை
சொல்வேனிப்போ
எந்தன்விதிப் பயனன்றே யெண்ணியெண்ணி
வருந்துகிறேன்

என்வாக்கைத் தடுத்துப்பார்த்தா இஷ்டப்படி
செய்யாமல்
அன்புகொண்டு மான்பிடிக்க அவர்போன
காரணத்தால்

கஷ்டமெல்லாம் வந்துதையா கணவரைநான்
குறைகூறல்
இஷ்டப்படல் தருமமல்ல இம்சையினால்
சொன்னேனையா

பிராணநாதர் குரலைப்போலப் பாபிசெய்த
த்வனிகேட்டுப்
பிராணகானி வருமென்றெண்ணிப் பரிதபித்த
சமயந்தனில்

பெண்மதியா லறிவிழந்து பேசிவிட்டேன்
அனுஜரைநான்
உண்மையவர் அறிந்தெனக்கு உரைத்தார்வெகு
தைரியத்தைத்

525. தடுத்தவரைக் கடுத்துரைத்தேன் தயங்கியவர்
மயங்கியப்பால்
நடந்துவிட்டார் எனைப்பிரிந்து நாதரிடம் போவதற்கு

அனுஜரென்னால் மதிமயங்கி அனாதரணை
செய்துவிட்டு
எனைத்தனியாய் விட்டுவிட்டு ஏன்போனார்
நியாயமாமோ

பரிதபிக்கும் பெண்கள்மிகப் பதறிச்செய்வார்
காரியமெனும்
கருத்தறிந்த லட்சுமணர் கடமைதனை மறக்கலாமோ?

புருஷருக்கு மனவுறுதி பூஷணமென் றேயுரைக்கும்
தருமந்தனைக் கைவிடுத்தார் தப்பிதமாய்
நடந்துகொண்டார்

எனையறியா தோரிடத்தில் எனக்கருகி லவரிருந்து
எனக்கேதுங் குறையணுகா திருக்கும்படி காக்கலாமே

530. என்விதிக்கு எவரையும்நான் எண்ணிக்குறை கூறுவதில்
நன்மையில்லை அன்பொழியும் நானுரைத்தேன்
மதியிழந்து

குறையவரைக் கூறினது குற்றமாக முடியுமென்மேல்
அறியாம லுளறிவிட்டேன் அவரென்மேல் அன்புளரே

விலகிவிடும் உதவியெல்லாம் வேளைவந்தா
லென்றுரைக்கும்
உலகவாக்கியப் படிநடந்தால் ஒருவரையும் நோ
கலாமோ

இப்படிநான் சுஷ்டப்பட இமைப்பொழுதும்
அவர்சகியார்
ஒப்புமையா கன்மவினை ஒட்டிவிட்டால் கட்டப்பட

அனுபவங்கள் வரும்பொழுது அனுபவித்தே
தீரவேண்டும்
மனம்வருந்தி லாவதில்லை மதியீன மாகுமது

535. என்விதியை நோவதிலும் ஏதுபயன் நானடைவேன்
கன்மவினை தனைத்தழுவி காரியங்கள் நேருதையா

வந்தகுறை சிந்தவுண்டோ வையகத்தில் மெய்யாகவே
சுந்தரியாய்ப் பிறப்பதெல்லாம் சோகப்படக்
காரணமே

சின்னஞ்சிறு வயதுதனில் சீரழியக் காரணமாய்
என்னழகே பலித்ததையா என்னசொல்வேன்
ஈசன்செயல்

உயிரைவைக்கு இஷ்டமிலை ஒருநொடியி
லத்னைத்தானே
நயந்தொழிக்குத் துணிந்திடுவேன் நாயகருமவ்
வாறுசெய்வார்

அவருக்காக என்னுயிரை ஆதரித்து வருவதன்றிக்
குவலயத்தி லெனக்குசை கொஞ்சமுந்தா
னில்லையையா

540. நிமிஷமொரு யுகமாக நினைத்திங்கு வருத்தத்தோடு
உமதுபத்னி யிருக்கின்றாளென் றுரைத்திடுவாய்
ராமரிடம்

சீக்கிரமாய் வந்தென்னை சிறைமீட்க வேண்டுமென்று
வாக்கில்மிகப் பிரார்த்தித்து வணங்கச்சொன்னே
னென்றுரைப்பாய்

இனிமேலும் தாமசித்தால் இம்சைமிக
அடைந்திடுவேன்
அனைவருடன் வந்திங்கு அரக்கர்களை வதைத்தெந்தன்

கஷ்டமெல்லா மொழிக்கச்செய்வாய் கால்தொழுதே
னென்றுரைப்பாய்
இஷ்டபத்னி யாருமென்மேல் இரக்கங்கொள்ள
வேண்டுமென்பாய்

காரணகா ரியமறிந்த கனவானே யனுமானே
ஆரும்மிலை யுன்போல அகிலந்தனில் அறிவுள்ளோர்

545. புத்தியுள்ள வந்தனுக்கே பொறுப்புமிக இருப்பதினால்
மற்றபடி யுள்ளதையும் மனமுவந்தே
சொல்லாயென்றாள்

அனுமானிதைக் கேட்டுரைப்பர்ன் அம்மாநீர்
வருந்தவேண்டாம்
நினைத்தும்மை ஸ்ரீராமர் நீங்காத விசனமதில்

அமிழ்ந்துமிக வருந்துகிறார் ஆகாரம் அல்பமம்மா
உனதுபேரைச் சொல்லிச்சொல்லி உருகுகின்றா
ரெப்பொழுதும்

ஆகையினா லெனதுதோளில் அன்னையேநீ
ரெழுந்தருளும்
வேகமாகச் சாமிமுன்னே விடுவேனும்மைக்
கடல்தாண்டி

அந்தப்படி செய்யுமென்றான் அன்னைகேட்
டுரைக்கின்றாள்
எந்தனைநீ யெடுத்தேக ஏதுனக்குச் சக்தியுண்டோ?

550. குரங்குமதி தனைக்காட்டிக் கொண்டுபோவே
னென்றாயே
அரைநொடியும் நம்புவதற்கு ஆமோவுன்
வார்த்தையென்றாள்

அந்தவுடன் மரத்தடியை அனுமான்விட்டு
வெளியில்வந்து
சுந்தரியாம் சீதைபார்க்கச் சோபிதமாய் விசுவரூபம்

கொண்டுநின்றான் கண்டுசீதை குரங்கின்சக்தி
மிசுவுமேயாம்
அண்டங்களைக் கையில்கொண்டு அம்மானை
யாடுவானே

இவனுக்கினை யெங்குமிலை இவனைவெல்வோ ரா
ருமிலை
சிவனுடைய நந்திக்கினை செப்பலாமென் றதிசயித்துப்

போதுமையா கண்டேனென்றாள் போதமுள்ள
அனுமானப்போ
மாதரசாம் ஜானகிமுன் மறுபடியும் சிறுகுரங்காய்

555. வந்துநிற்க அவனைமிக வாழ்த்திச்சீதை
புகழ்ந்துகொண்டு
சிந்தைமிகக் களிப்புடனே செப்புகிறாள்
அவனைப்பார்த்து

அந்தரங்க அபிமானத்தால் அந்தப்படி நீருரைத்தீர்
எந்தனைநீ ரெடுத்துப்போனால் இங்கிருந்து
வந்தரக்கர்

கடல்தாண்டும் வேளையிலே கபடமாகப் போர்புரிந்து
கொடுமைசெய்வா ரவரைவென்று கூடுமோநீ
ரெனைக்காக்கக்

காலதேசா திகளறிந்து காரியஞ்செய்தால் கனப்படுமே
நாலுங்கண்டு செய்யாவிடில் நஷ்டகஷ்டம் வந்திடுமே

சாமியன்றி யெவரையும்நான ஸ்பரிசஞ்செய்யக்
கூடாதையா
பாமரனும் எனைவந்து பர்ணசாலை யுடனெடுத்தான்

560. அதுவுமன்றி யென்னைமீறி ஆக்கிரமித்தா
னென்செய்வேன்
மதியிழந்த அரக்கனெனை மனம்நோகச்
செய்தெடுத்தான்

அபலமான என்னையந்த அதிபலவா னெடுக்கையிலே
கபடமுள்ள அவனைவெல்லக் கைபலந்தா னேதெனக்கு

எனதுதேகம் எனதிஷ்டப் படியிருக்கத் தக்கதன்று
மனைவியரா யுள்ளோர்கள் மணவாளர் பொருளாவர்

மனம்வாக்குக் காயமெல்லாம்
மற்றவரைச் சற்றும்பற்றில்
அனர்த்தமதாம் கற்பழியும் அபவாதம் மிகவிளையும்

பெண்களுக்கு வருங்குறையும் பெருமைகளும்
கணவருக்காம்
கண்மணியா மெனதுபர்த்தா கட்டளையைச்
சற்றறிவீர்

565. கண்டுவரச் சொன்னாரன்றி கொண்டுவரச்
சொன்னதுண்டோ
எண்டிசைக்கும் ஈசரான என்பிராண நாதர்வந்தே

என்னைச்சிறை மீட்கவேண்டும் எவருடனும்
நான்வருதல்
என்னருமைப் பர்த்தாவுக்கு இழிவான காரியமாகும்

அரண்யந்தனில் வசிக்கும்பல அருந்தவத்தோர்
இஷ்டப்படி
அரக்கர்களை யொழிப்பேனென்று அளித்தார்வாக்கு
ஸ்ரீராமர்

அந்தப்படி யவராலேயே அரக்கரெல்லாம்
கொண்டுபோதல்
முந்தியென்னைக் கொண்டுபோதல் முறையல்ல
குறையதுவாம்

பிறபுருஷரிடந்தனிலே பேசவுந்தா னெந்தனுக்குத்
தருமமிலை யான்ஸ்பர்த்தா தகுந்தவரென்
றும்மையிங்கு

அனுப்பித்தந்த காரணத்தால் அவரிஷ்டம் படிதானே
மனங்கலந்து பேசினேன்நான் மற்றபடி பேசவுண்டோ?

அதுவுமன்றி திருட்டுவேலை அரக்கனுக்குத் தகுமன்றி
மதியுள்ள பேர்களுக்கு மரியாதை யாகாதது

அடுக்காத காரியமென்று அகிலமெல்லாம்
உரைக்குமதை
நடக்கப்போகா தவ்விதமாய் நாடியும்மி லாலோசியும்

இருப்பதெல்லாம் இரண்டுமாதம் இதற்குள்ளே
யெனைமீட்கக்
கருதியெல்லாஞ் செய்யச்சொல்வீர் காரியங்கள்
நேராகவே

ரனைநினைத்து எந்நேரமும் ஏங்கிமனம் மிகவருந்தி
எனதுபர்த்தா இருப்பாராயின் இராட்சதரை
வெல்லமாட்டார்

575. மனக்சுவலை தனையொழித்து மனவுறுதி
மிகவுங்கொண்டு
எனதுமீதி லிரக்கங்கொண்டு எல்லோருடன் துரிதமாக

வரச்சொல்வீர் மறக்கவேண்டாம் வரவையெதிர்
பார்த்துக்கொண்டு
ஒருமாதக் காலமட்டும் உயிரைவைத்து ஆதரித்து

வருவேனந்தக் காலந்தப்பில் வையகத்தி லெனதாசை
திருணமாக வேண்டாமென்று திருத்தமாகச்
சொல்லுமையா

அரக்கன்செய்கை தனையறிந்து அவனுடைய
தம்பியான
பரமசாது வாகவுள்ள பாபயெண்ண மேதுமிலா

உத்தமராம் விபீஷணர்போய் உரைக்கின்றார்
அடிக்கடியே
சுத்தங்கெட்ட தமையனுக்குச் சுவாமிராமர்
பகைவேண்டாம்

580. அரக்கர்குலம் நசித்துவிடும் அறிவுடனே ராமரிடம்
பரிதபிக்கும் ஜானகியைப் பக்திகொண்டே
விட்டிடுவாய்

இராமருன்னை யாதரிப்பார் இராட்சதர்கள்
பிழைத்திடுவார்
காமமதை விட்டொழிப்பாய் சுனப்படுவா
யென்றுரைத்த

புத்திதனைக் கேளாமலே போங்காலம் நெருங்கியதால்
சித்தமிகத் துணிந்தென்னைச் சிரமப்படுத்தி
வருத்துகிறான்

விபீஷணரின் பத்னியான விவேகமுள்ள உத்தமிதான்
சுபமெனக்கு மிகவுங்கோரிச் சோகப்பட
வேண்டாமென்று

அவளுடைய மகளான அனலையெனும் மனங்கலந்த
குவலயத்தி லரிதான குணங்களுள்ள பெண்ணினிடம்

585. வர்த்தமானஞ் சொல்லிவிட்டு வாஞ்சையுடன்
தைரியத்தைச்
சிரத்தையுடன் கொடுத்துவரும் சிநேகமதா
லிதுவரையில்

அந்தவொரு ஆதரவால் ஆவிதனை வைத்துக்கொண்டு
வந்தகஷ்டந் தனைச்சகித்து வருகின்றே
னென்றுரைத்தாள்

அனுமான்கேட்டு ஜானகியின் அபிப்பிராயம் வெ
குசரியே
மனதுவசம் மிகவுமுள்ள மாதரசாம் சீதையைப்போல்

பெண்களெங்கு மில்லையிவள் பெருமையுள்ள
பெண்ணாவள்
உண்மையாகப் பர்த்தாமேல் உள்ளதான பக்திதனை

என்னசொல்வே னென்றனுமான் இருதயத்தில்
திர்ப்திகொண்டு
இன்னுஞ்சொல்வேன் கேளுமம்மா இராமர்சொன்ன
ரகசியங்கள்

590. சித்திரகூட பருவதத்தில் ஸ்ரீராமர் வசித்திருந்து
அத்தலத்தை விட்டுவந்த அதுமுதலாய் விஷயங்களை

ஜானகியாள் கேட்கச்சொன்னான் சரியென்று
ஒப்புக்கொண்டாள்
நானினிமேல் போய்வரவே நாடியாக்ஞை தாருமம்மா

இராமலட்சு மணர்களோடு இராஜரான
சுக்கிரீவர்க்கும்
காமங்கொண் டென்னுடனே கலந்துவந்த
வானரர்க்கும்

மற்றுமுள்ள சகலருக்கும் வர்த்மானங்
களையுரைப்பேன்
சற்றுமினி அட்டியின்றிச் சகலருடன் சேனைகளை

அழைத்துக்கொண்டு வந்திடுவார் அரக்கர்களை
யொழித்திடுவார்
வழிகொண்டு ஸ்ரீராமர் வந்தும்மைச் சிறைமீட்பார்

595. சோகமெல்லா மொழியுமம்மா சுகங்கள்மிகப்
பொருந்துமம்மா
தேகந்தனை விடுவதற்குத் திடப்படுத லாகாதம்மா

சத்தியத்தில் நின்றிருக்கும் சர்வபரி பூரணியாம்
உத்தமியே யுமக்குக்குறை ஒன்றுமிலை யுறுதியிது

நிமிஷமிங்கு நானிருக்க நேரமில்லை போய்வருவேன்
நமஸ்கரித்தேன் அனுக்கிரகிக்க நாதன்முதல்
சகலருக்கும்

சேதியேதா கிலுமிருந்தால் செப்புமம்மா
வென்றுகேட்கச்
சீதைமிக மனமயங்கிச் செப்புகிறாள் அனுமானிடம்

உத்தமரே உம்மைக்கண்டு உளமகிழ்ந்தேன்
நீர்போனால்
சித்தமிக வருந்துமையா சிரமப்படுவேன் மிகவுமையா

600. சேஞமையா எனதுவாக்கைக் கிரமமாகத்
தோற்றுமாயின்
நாளையொரு நாளிருப்பீர் நானதனால்
மனமாறுவேன்

நீர்பிரிந்தால் மறுபடியும் நிர்ப்பந்தப் படுகையிலே
பார்த்துப்பார்த்து நாற்புறமும் பரிதபித்து அ
ழுவேனையா

விடியும்வேளை யன்றியிலே விலகிடுமோ
கஷ்டமெல்லாம்
சடுதியாகப் போய்வருவீர் சகலயத்னம் நீரேசெய்வீர்

சாமியிடஞ் சொல்லுமையா சமாசார மொன்றுண்டு
நாமிருவர் சித்திகூட நன்மலையி லிருக்கையிலே

காகாசுரன் என்னைவந்து கண்கலங்க இம்சைசெய்து
ஆகாச மார்க்கமாக அவன்போகும் வேளையிலே

605. பிரம்மாஸ்திரந் தனைத்தொடுக்கப் பிரபஞ்சமெங்குஞ்
சுற்றியவன்
தருமசீல ரும்மைவந்து தப்புவிக்க மிகவுங்கோரிக்

காரணமாக அவனடையச் சாமியேநீ ரவன்கண்கள்
இரண்டிலொன்றைச் சேதம்செய்து என்னைமிக
ஆதரித்த

அந்தவொரு அன்பிருந்தால் அநேகநாளாய்
அரக்கனைநீர்
வந்துவதை புரியாமல் வருத்தப்பட விட்டதென்ன?

என்றுகேட்டே னென்றுரைப்பீர் எனதுபர்த்தா
அறிந்திடவே
நன்றுசெய்யும் லட்சுமணர்க்கும் நன்றியுள்ள
சுக்கிரீவர்க்கும்

மற்றுமுள்ள வானரர்க்கும் மனமுவந்து
குசலஞ்சொன்னேன்
உற்றபடி யவரவர்க்கு உபசாரமுஞ் சொன்னேனென்று

610. சொல்லுமையா வென்றுரைத்துச் சூடாமணி
தனையெடுத்து
எல்லையில்லாப் பலமுடைய என்பிராண நாதரிடம்

கொடுத்தவரை நமஸ்கரித்தேன் குசலமுமே
சொன்னேனென்று
அடுத்துரைப்பீ ரழைத்துவந்து ஆதரிப்பீ ரானாலொரு

அனுமானந் தோன்றுதையா அதற்கென்ன
செய்யலாகும்
அனுமாரே யும்மைப்போல அனைவர்களும்
அரணவத்தைத்

தாண்டிலங்கை வரவுமுண்டோ தடமுந்தானே
வேறுண்டோ
ஆண்டவரும் அனுஜருமாய் அரக்கர்நகர்
வருவதுண்டோ

இதற்குவகை சொல்லுமென்று எண்ணியம்மன்
கேட்கையிலே
மதியுள்ள அனுமான்சொல்வான் மாதாவே
ஐயம்வேண்டாம்

615. வானரராம் வீரர்களில் வலுக்குறைந்தோன் நானம்மா
தானவரை வெல்லுதற்குத் தைரியமுள்ளோர்
மிகவுமுண்டு

நாதரையும் தம்பியையும் நான்தோளில்
கொணர்வேனம்மா
மாதேயும்ம மனமகிழ மாறாமல் விடுவேனம்மா

அதற்காகக் கவலைவேண்டாம் அரக்கரெல்லாம்
மடிந்திடவே
அதிசீக்கிரம் சகலருடன் ஐயன்வந்து கையெடுப்பார்

சந்தேக மில்லையம்மா சந்தோஷங் கொள்ளுமம்மா
சிந்தைக்குறை தள்ளுமம்மா சித்தமாக வருவாரம்மா

இந்தவிதம் அனுமான்சொல்ல என்தாயாம்
ஜானகியாள்
அந்தவார்த்தை களைக்கேட்டு ஆறுதலை
யடைந்துரைப்பாள்

620. மற்றுமொரு சேதியுண்டு மறவாம லதையுஞ்சொல்வீர்
சித்திரகூட பருவதத்தில் சீரான சோலைதனில்

விளையாடும் வேளையிலே வேர்வையினா லென்திலகம்
துளியுமின்றி யழியக்கண்டு சுவாமியென்மே
லன்புகொண்டு

பொட்டிட்டு முத்தமிட்டுப் பூரித்து மகிழ்ந்தாரவர்
சுட்டியிந்தச் சேதியையும் சொல்லுமையா பதியினிடம்

அலுமானே யுமையனுப்ப அணுவளவும் மனமிலையே
திலங்சுழித்து எவ்விதமாய்த் திடங்கொள்வேன்
வசித்திங்கு

நீர்போகா விடிலெனக்கு நீங்காது சுவ்டமெல்லாம்
பார்த்துக்கொள்வீர் பதியினிடம் பரிதபிக்கும்
ஸ்திதியுரைப்பீர்

அட்டியேதுஞ் செய்யாமலே அழைத்துக்கொண்டு
வந்துவிடும்
இட்டப்படி எனக்குதவி எல்லோருஞ் செய்திடுவீர்

எனதுசுவ்டந் தனையொழித்தால் எல்லோர்க்கும்
புண்யமுண்டு
கனவானே போய்வரலாம் என்றுகண்ணீர்.
சொரிந்துரைத்தாள்

அலுமானப்போ தையிரஞ்சொல்லி அன்னையேநீ
ரினியணுவும்
மனம்வருந்த வேண்டாமென்று மதுரவாக்குத்
தந்தெழுந்து

நமஸ்கரித்தா னாக்ஞைபெற்றான் நாதன்றனை
மனதிலெண்ணி
சமயமதில் பின்னுஞ்செய்யச் சங்கதிதா
னுண்டோவென்று

வனத்திலொரு விடத்திலவன் வந்திருந்தே
யாலோசித்தான்
நினைத்துவந்த காரியமெல்லாம் நேராக
நிறைவேறிற்று

630. அரக்கன்பலம் அவன்கருத்து அறியவெண்ணிச்
சுக்கிரீவர்
கருதிக்கேட்டால் கொல்வதென்ன கண்டரக்கன்
ஸ்திதியறிந்து

போவதுதா னுசிதமென்று புத்தியிலே
நினைத்தனுமான்
ஏவுமாசை தனைக்கொண்டான் என்னசெய்வோ
மென்றெண்ணினான்

சாமதான பேதங்கட்குச் சற்றுந்தானே
இணங்கமாட்டார்
நாமிந்த அரக்கரிட நகர்தனிலே தண்டவழி

ஏன்றுகொண்டால் வென்றிடலாம் உள்ளமுந்தா
னறிந்திடலாம்
என்றனுமான் நிச்சயித்து எடுத்தான்விசுவ ரூபமம்மா

அசோகவனந் தனிலேசீதைக் காதரவா யுள்ளவொரு
விசாலமுள்ள விருட்சமொன்றை விட்டுவிட்டு
வனமுழுதும்

635. அழித்தெறிந்து வெளியாக்கி அந்தவனக்
கோட்டைவாசல்
வழியிலுள்ள தோரணத்தில் வந்தனுமான் குந்தினனே

பட்சிகளும் மிருகங்களும் பறந்தோடிக் கத்திக்கொண்டு
அட்சணத்தி லலையும்போது அரக்கியர்கள்
விழித்தெழுந்தார்

வனமெல்லா மழிந்திருக்க வாயுசுதன் தோரணத்தில்
மனங்கலங்க சுவரூபத்தோடும் மதத்தோடு
மிருக்கக்கண்டு

அரக்கியர்கள் பயந்துவந்து ஆரிந்தக் குரங்கென்று
தெரிந்திடவே சொல்வாயென்று சீதைதனைக்
கேட்டாளம்மா

அரக்கர்ஞ தறிவாரார் அவனாரோ நானறிவேன்
பரிதபிக்கு மெனைவந்து பாதிக்க வேண்டாமென்று

640. சீதைசொன்னா ளரக்கியரில் சிலரோடி ராவணனாம்
பாதகனைக் கண்டுசேதி பணிந்துரைக்கக் கேட்டவனும்

பொறிபறக்கக் கோபங்கொண்டு பொல்லாத
குரங்குதனை
அரைநொடியி லிழுத்துவர ஆக்ஞைசெய்தா
னவ்விதமாய்

கிங்கரரென் ணாயிரம்பேர் கிட்டிவந்து தட்டிப்புஜம்
எங்கேயந்தக் குரங்கென்று எதிர்த்துநின்றா
ரவரைக்கண்டு

சிம்மநாதா திகள்செய்து சீறிக்கொண்டே
யெழுந்தனுமான்
நம்மையிவர் வெல்லவுண்டோ நாமிவரை
வதைப்போமென்று

தோரணத்தின் மீதிலொரு துணைக்கருவி
யிருப்புலக்கை
நேருளதா யிருக்கக்கண்டு நினைத்ததனைக்
கையிற்கொண்டு

545. இருக்குமொரு நிலைமைதனை யெதிர்த்துவந்த
அரக்கரெல்லாம்
கருதிப்பார்த்தார் காலன்போலக் கண்டுமிக
அண்டாரம்மா

கிங்கரர்கள் அங்கிருந்து கிலியடைந்து மறுபடியும்
சங்கரிப்பான் அரக்கனென்று சண்டைசெய்யத்
தொடங்கியவர்

மா நதிமே லாயுதங்கள் மளமளவென்
றெடுத்துவிட்டார்
தாறுமாறா யவைகள்விழத் தடுத்தெறந்து கையிலுள்ள

எண்ணாயிரம் கிங்கரரையும், ஜம்புமாலியையும்,
சப்தமந்திரி மக்களையும், பஞ்ச சேனாபதிகளையும்,
அரக்கராலயத்தை யழித்ததற்காக எதிர்த்த
அரக்கரையும், அட்சய குமாரனையும்,
படைகளையும் அனுமான் அதஞ்செய்ததும்,
இந்திரஜித்தன் போட்ட பிரம்மாஸ்திரத்தில்
கூட்டுப்பட்டு, இராவணன்முன் அனுமான்
வருவதும், அவனுக்கும் அரக்கனுக்கும் சம்பாஷனை
நடப்பதும் லங்கையைக் கொளுத்துவதும்
திரும்புவதும்

இருப்புலக்கை தனைக்கொண்டு இடுப்பொடிய
அடித்தவரை
அரைநொடியில் அதமாக்கி அகமகிழ்ந்து மறுபடியும்

தோரணத்தின் மீதில்வந்து தோரணையா
யிருந்துகொண்டான்
ஆருங்கண்டு பயந்திடவே அகோரமான ரூபத்தோடு

அரக்கனிந்தச் சேதிகேட்டு ஆக்கிரகத்தை
மிகவுங்கொண்டு
பிரியமுள்ள மந்திரியாம் பிரகஸ்தனிட புத்திரனாம்

ஜம்புமாலி தனையனுப்பி ஜயித்துவர
ஆக்ஞைசெய்தான்
அம்புவியில் பலமிகுந்த அவன்வந்து அனுமான்மீது

பாணங்களை மிகவும்விட்டு ப் பலவிதமா
யுபத்திரவித்தான்
ஆனவத்தோ டிருப்புலக்கை அதைக்கொண்டே
அவனையுமே

மண்டைபிளந் திடவடிக்க மாண்டானவன் அதன்பிறகு
அண்டிச்சிலர் அரக்கனிடம் அறிக்கையிட்டார்
அலறிவந்து

அதைக்கேட்டுத் தசகண்டன் ஆயாசம்
மிகவுங்கொண்டு
மதியுள்ள சப்தமந்திரி மக்கள்தமை யனுப்பித்தந்தான்

பவர்வத்தோ டவர்கள்வந்து பலவிதமா யுத்தஞ்செய்ய
அவர்களையும் வதைபுரிந்தான் அனுமானம்மா
கேட்டரக்கன்

வஞ்சகாதி சூதில்மிக வல்லபராம் சூரரான
பஞ்சசேனா பதிகள்தம்மைப் பாங்குடனே
யுத்தஞ்செய்ய

அனுப்பித்தந்தான் அரக்கர்மன்னன் அவர்கள்வந்து
வெகுமுறுக்காய்
மனந்துணிந்தே யனுமான்மேல் மாட்டிவிட்டார்
பாணங்களை

அதுகளுக்கு சுகப்படாமல் ஆகாச மார்க்கந்தனில்
அதிவேகமா யோடியோடி அலக்கழித்தே யதன்பிறகு

பருவதமொன் றைப்பிடுங்கிப் பாதகாரம் அரக்கர்மீது
துரிதமாகப் போட்டானம்மா தொலைந்தார்கள்
அரக்கரம்மா

660. அந்தந்தச் சண்டையிலும் அநேகரத கஜங்களெல்லாம்
வந்ததையும் சேனையையும் வதைத்துத்தள்ளி
யொழித்தானம்மா

அரக்கருக்கு முக்கியமான ஆலயமொன் றிருக்கக்கண்டு
அரிதாமிந்த ஆலயத்தை யழித்தெறிந்தான் அடியோடு

அதிலிருந்த அரக்கரெல்லாம் அதட்டிவர
அவர்களையும்
மிதித்துவதை புரிந்துவிட்டு மிகவுமுக்கிரங்
கொண்டனுமான்

வந்திருந்தான் தோரணத்தில் வாட்டமின்றி
நாட்டங்கொண்டு
இந்தவிதம் நடந்ததெல்லாம் இராவணன்கேட்
டதிசயித்து

எதிரில்நிற்கும் வல்லபனாம் இளையமகன் அட்சயனை
மதியிலெண்ணிப் பார்த்திடவும் மகன்மிகவும்
உற்சாகமாய்த்

தந்தைதனைத் தண்டனிட்டுத் தளங்களோடும்
ஜயத்தைத்தரும்
விந்தையுள்ள ரதமேறி விரைவாக எதிர்த்துவரக்

கண்டனுமான் கர்வங்கொண்டு கடுகிவரும்
அட்சயனைச்
சண்டைசெய்ய வருவானோ சமர்த்தனா
யிருப்பானென்று

எண்ணித்தேகந் தனைவளர்த்தி எதிர்த்துநின்றா
ரைக்கண்பார்த்து
மண்ணுலகில் குரங்குநம்மை மதிக்காமல்
எதிர்ப்பதுதான்

ஆச்சரிய மென்றெண்ணி ஆகாச மார்க்கமதில்
மாச்சரியங் கொண்டரக்கன் மனந்துணிந்தே
ரதத்துடனே

சஞ்சரித்தல் பாணங்களைச் சரமாரி யாய்விடவே
வெஞ்சரங்க ளனுமான்மீது விழுந்துரத்தங்
கண்டுதம்மா

670. உதறிவிட்டான் தேகந்தனை ஒன்றுமிச்ச மில்லாமல்
சிதறிக்கீழே பாணமெல்லாம் சிந்திவிழக் கண்டரக்கன்

குரங்குபல மென்னசொல்வோம் குறித்துவிட்ட
பாணமெல்லாம்
அரைநொடியில் வியர்த்தமாக்கி அகங்கரித்துத்
திரியுமதை

வெல்லுவது கஷ்டமென்று மீவகுவிதமா யாலோசித்து
வல்லமையை மிகவுங்காட்டி வருவித்தான் மறுபடியும்

பாணங்களை யரக்கன்மகன் பலவிதமா யனுமான்மீது
பாணமொன்றும் படாமல்தானே பறந்துலவந்து
ரதத்தினது

குதிரைகளைப் பிடித்தான்கையில் குடல்சரிந்து
விழுந்துதவை
ரதமுங்கூடத் தலைகீழாய் ரணகளத்தில் விழுந்துதம்மா

675. அரக்கன்கையி லம்புகொண்டு அதிவேகமா
யோடிவந்து
சுருதிவிட்டான் பாணங்களைக் கணக்கின்றி
யனுமான்மீது

கவ்டனுமான் இவன்மிகவும் காரணகா
ரியமறிந்தோன்
மண்டைபிளந் திடவிவனை மர்மங்கண்டு
ஜயிப்போமென்று

பாணங்கட்குத் தப்பிக்கொண்டு பாதகனை
வதைத்திடவே
ஆனவத்தோ டனுமான்வந்து அரக்கன்கால்க
ளிரண்டுகளை

கைகளினால் பிடித்துக்கொண்டு கரகரவென்
றேசுழற்றி
மெய்சிதற அடித்திடவும் மிர்தமானான் அட்சயனும்

படைகளையும் வதைத்துனுமான் பயங்கரமாம்
ரூபத்தோடு
முடுக்காகத் தோரணத்தில் முறையாக வந்திருந்தான்

680. நகரங்களி லுள்ளோரெல்லாம் நடுங்கிமிகப்
பயந்ததோடு
லெகுபோர்கள் போனதற்காய் வீறிட்டுங் க்தறினார்கள்

அட்சயனும் மடிந்தானென்று அரக்கர்மன்னன்
கேட்டுமிகப்
பட்சமுள்ள மகன்போன பரிதாபம் சகியாமலே

புலம்பிமிகக் கதறியப்பால் புத்திவச மில்லாமல்
அலைந்தானவன் அகமெலிந்து பலவிதமாய்க்
கவலைகொண்டு

ஒருகுரங்கு வந்துசெய்யும் உபத்திரவத்தைச் சகிப்பதற்கு
அருக்குருக்கே வருத்தமாயின் ஆர்வெல்லப் போமதனை

என்னசெய்வோ மென்றுமிக எண்ணியவன்
ஆலோசித்துத்
தன்னுடைய மூத்தமகன் தந்திரங்கள் மிகவறிந்த

685. இந்திரஜித்தை யழைப்பிவித்து இந்தவுடன்
போவாய்நீ
அந்தவொரு குரங்கதனை அடக்கியென்முன்
கொண்டுவந்து

விடுவாயென் றாக்ஞைசெய்தான் வீரனிந்திர
ஜித்தன்தந்தை
அடிபணிந்து மிகத்துணிந்து அந்தப்படி
செய்வேனென்றான்

மகனைப்பார்த்து லங்கேசன் மறுபடியுஞ்
சொல்லுகிறான்
அகங்கொழுத்த குரங்குபோல அகிலந்தனில்
கண்டதில்லை

விளக்குப்பூச்சி களைப்போல வெகுபேர்கள்
மடிந்தாரடா
சுலுவில்வத மாகாதடா சூட்சுமத்தால் வெல்வாயடா

அங்கந்தனைப் பெருக்குமட்டா அடுத்துவந்து
மடக்குமடா
பங்கப்பட வெளுக்குமடா பதுங்கிவந்து உதைக்குமடா

690. கரத்தினாலே அடித்தாலது சட்டைசெய்ய
மாட்டாதடா
மருமங்கண்ட குரங்கதடா மறந்தசந்தால்
கொல்லுமடா

சூதாக வென்றாலன்றி சுவாதீன மாகாதட்டா
நீதானந்தை வெல்வாயடா நேராக வருவாயடா

எத்தனையோ மகிமையாக இதுவரையில்
புகழடைந்தோம்
அத்தனையும் வீணாயிற்று அவமானம் மிகுவாயிற்று

தேவரெல்லாம் நம்மைக்கண்டால் திகிலடையும்
படிநடந்தோம்
ஆவலுடன் அகிலமெல்லாம் அடக்கியாண்டோம்
அரக்கர்களைக்

கண்டவுடன் ஓட்டமிடும் கவிவந்து கைபலத்தால்
அண்டிநம்மை யவமதித்து அரக்கர்களை
வதைத்ததென்றால்

மூவுலகுஞ் சிரித்திடுமே முகத்திலகங் காட்டவுண்டோ?
தேவரினி நம்மைக்கண்டால் தினையளவும்
அஞ்சமாட்டார்

கண்டுசெய்வாய் சூரியத்தைக் கனப்படவே நீநடப்பாய்
உண்டுவெரு சக்தியடா உன்னிடத்து ஆகையினால்

உனக்கும்புத்தி சொல்வதுண்டோ உனைவெல்வோ
ராமுண்டோ?
எனதுமனப் படிநடக்கும் என்மகனே குரங்கதனைப்

பிடித்துக்கொண்டு வருவாயென்று பேசுந்தந்தை
மனங்குளிர-
கொடுத்தான்வாக்கு இந்திரஜித்தன் குரூரனவன்
அதன்பிறகு

அந்தப்படி பிடித்துவர அங்கிருந்து ரதமேறி
வந்தனுமான் பேரில்மிக வருஷித்தான் பாணங்களை

700. அதுகளுக்கு அசுப்படாமல் அனுமான்மிகத் தந்திரமாம்
கதியுடனே சஞ்சரித்தான் கண்டிந்திர ஜித்தனப்பால்

பிரம்மாஸ்திரப் பிரயோகஞ்செய்தான் பிரம்மதேவ
ராதியிலே
ம்ர்மஞ்சொன்னார் மாருதிக்கு மகிமையுள்ள
எனதஸ்திரம்

ஒருமுகூர்த்தம் உனைக்கட்டும் உட்படவே
வேண்டுமென்ற
பிரமதேவர் வாக்குப்படி பிர்மாஸ்திரந் தனக்கனுமான்

அடங்கிநின்றான் அதன்பிறகு அரக்கர்வந்
தவனைச்சூழ்ந்து
வடக்கயிறுகள் மிகவுங்கொண்டு வயணமாகக்
கட்டினார்கள்

அஸ்திரக்கட்டை யவமதித்து அனுமானைக்
கட்டியதால்
அஸ்திரக்கட்டு அந்தவுடன் அவிழ்ந்துதம்மா
அனுமான்கண்டு

705. அந்தவொரு மருமமதை அரக்கராரு மறியாமல்
பந்தப்பட்ட பாவனையை அந்தனுமான் காட்டினனே

கட்டுப்பட்ட பாவனையைக் காட்டுதற்குக் காரணமோ
கட்டிச்சொல்வேன் கேளுமம்மா சூதுள்ள
இராவணனைக்

கண்டுபேசிக் கருத்தறியக் கவியனுமா னிருந்தானம்மா
கொண்டுபோனா ரக்கரெல்லாம் குரங்குவச
மாயிற்றென்று

போகையிலே வீதியிலே பொல்லாத குரங்குதனைத்
தாகங்கொண்டு வந்துபார்ப்பார் தானவர்கள்
வெகுபேர்கள்

பார்க்குமந்தத் தானவரைப் பரியாசம் மிகவுஞ்செய்து
தோற்குங்குணம் லேசமின்றித் தோரணையாய்ப்
போனானம்மா

710. அஸ்திக்கட்டி லடங்கியுள்ள அவஸ்தையிலும்
அகங்கரித்து
மஸ்தகஜம் போலவரும் மாருதியின் மனவுறுதி

மிகவுமென்று மிரண்டார்சிலர் முகம்கோணி
மறைந்தார்சிலர்
வெகுகொழுப்பென் றுரைத்தார்சிலர் நிகரில்லை
யென்றார்சிலர்

இந்தப்படி பலவிதமாய் எல்லோரும் பேசினார்கள்
வந்துசேர்ந்தான் அரக்கன்முன்னே வானரனாம்
அனுமானம்மா

அரக்கர்மன்னன் அப்பொழுது முறுக்குடனே
நிற்குமந்தக்
குரங்கைப்பார்த்து ஆலோசிப்பான் கருதித்தன்னி
லவ்விதமாய்

நந்தியொரு காலந்தன்னில் நம்மைப்பார்த்துச்
சாபந்ததந்த
அந்தநந்தி தானோவிது அன்றியிலே வேறெதுவோ

715. நம்மைமீறும் குணத்தைக்கொண்டு நமனைமீறும்
மமதைகொண்டு
சிம்மம்போலே தைரியங்கொண்டு நம்மமுன்னே
நிற்குமிது

எதிரியாக நமக்குள்ள எவனோவென் றெண்ணிமிக
மதிமயங்கி யதன்பிறகு மந்திரியாம் பிரகஸ்தன்றனை

பார்த்துரைப்பான் நமக்குமுன்னே பயமின்றி
நிற்குமிந்த
வேர்த்திடவே கோபங்கொள்ள வேலைசெய்த
குரங்கைக்கொளாய்

எங்கிருந்து வந்தவனீ எவரனுப்ப வந்தவனாம்
இங்குவந்த காரியமென்ன ஏனழித்தா யசோகவனம்?

என்றுகேட்பா யென்றுரைத்தான் இராவணேசன்
சொன்னபடி
நின்றிருக்கும் மாருதியை நிஜம்சொல்லென்
றவனுங்கேட்டான்

720. அரக்கனிட பெருமையையும் அவனிருக்கும்
கோலத்தையும்
திரிலோகங் களையடக்கும் தீர்த்துவந்
தனையும்பார்த்து

அரேமான்மிக அதியசத்து அரக்கன்சக்தி தனைமதித்து
மனவுறுதி மிகவுமுள்ள மாபாவி ராவணனை

அவமதித்து வாலைக்கொண்டு ஆசனத்தை
யமைத்துக்கொண்டு
சவரணையா யிருந்துகொண்டு சமத்தாகப் பேசுகிறான்

உன்னுடைய யோக்கியதைக்கு உயர்ந்துள்ள
யோக்கியதையே
என்னிடத்தி லிருக்குதடா எண்ணிப்பாரா
யுன்னைவிட

வியாசுரண முழுதுங்கற்று வேதப்பொருள்
தனையறிந்து
கியாதிமிகப் பெற்றுள்ள கவியனுமான் நானென்றறி

725. பலம்பெருக வுருவெடுப்பேன் பாரிலென்போ
லாருமிலை
துலங்கும்நல்ல அறிவுமுண்டு தோஷமிலை
யென்னிடத்துப்

பேசுவேனான் ஆசைப்படப் பெருமையாக
நானடப்பேன்
நேசமுடன் கேட்பாயாயின் நேராகச்
சொல்வேனெல்லாம்

முகத்தைக்கண்டு கருத்தறியா மூடரைப்போல்
அகங்கரித்து
மகிமையுள்ள என்னிடத்து வார்த்தைபேச மந்திரியை

மத்தியிலே வைத்ததென்ன மதிகெட்டு நடப்பதென்ன
உத்தமரைப் பகைப்பதென்ன உணர்விழந்து
துணிவதென்ன?

கைபலத்தைக் காட்டுவேனான் கலந்துவாதம்
மிகவுஞ்செய்வேன்
பொய்யுரையேன் மெய்யுரைப்பேன் போதமுட
னெதுவுஞ்செய்வேன்

730. தவமிருந்து அருளடைந்த தானவனீ யானாலுமே
தவப்பொருளி னருளெனக்குத் தானாகக்
கிடைத்ததடா

அருளடைந்த பெருமையினால் அகந்தையெனக்
கில்லையடா
பரம்பொருளை நம்பியென்றும் பக்திசெய்வேன்
தருமமாக

அடைந்தநல்ல தவப்பயனை அழிம்புசெய்து
அழித்திடவே
நடக்குமுனக் கருளுமுண்டோ நஷ்டமுண்டாம்
கஷ்டமுண்டாம்

வேதசாஸ்திரம் கரைகண்ட விவேகியென்று
உனையடுத்து
வாதஞ்செய்ய வந்தேனடா வாயுசுதன் நானேயடா

ஆத்திரத்தை விட்டொழித்து அமரிக்கையை
மிகவுங்கொண்டு
சாத்திரத்தின் தருமங்கொண்டு சரியாக நடப்பதற்கு

735. நானுரைப்பேன் நீதிமிக நடந்திடுவா யதன்படியே
தானென்னுமோர் அகந்தைதனைத் தள்ளிஜக
வாழ்வடைவாய்

உலகமெல்லாம் ஆண்டுவந்த உத்தமராம் தசரதரின்
குலத்தைமிக சபலமாக்கக் கோரியிந்த ஜகந்தனிலே

அவருடைய புத்தராக அவதரித்து வந்தவராம்
எவர்களையும் அடக்கியாள எல்லையில்லாப்
பலமுடைய

ஸ்ரீராமர் தூதனாகச் சீதைதனைத் தேடிப்பார்க்க
நாராயணன் போலவுள்ள நாதன்ராமர் ஆக்ஞைப்படி

வந்தேனடா பின்னுங்கேளாய் வைதேகி
தனைக்கண்டேன்
உந்தனிட கருத்தறிய உன்னிடத்து வருவதற்கு

740. அழித்தேனடா அசோகவனம் அடுத்தென்னை
வதைத்திடவே
கொழுத்தசில அரக்கர்வந்து கொடுமைசெய்தா
ராகையினால்

என்னுயிரைக் காப்பதற்கு இராட்சதரைக்
கொன்றேனடா
மன்னவனாம் நீயதனை மனதில்கொள்ள லாகாதடா

அதிசுவீர னென்றுமிக அகங்காரிக்கும் ராவணனே
மதிகொண்டு யோசனைசெய் மாதாவாம் ஜானகியை

ஆருமில்லா வேளையிலே அபகரித்து வரலாமோ
பாரில்மிகக் கீர்த்திபெற்ற பராக்கிரமத்தை
விடலாமோ

சூரனா யிருப்பாயாயின் சோரத்தன மாகுமோடா
வீரத்வ மில்லாவிடில் வீம்புசெய்ய லாகுமோடா?

745. தன்னுடைய நிலைமையெண்ணித் தாகங் கொண்டால்
தக்குமடா
மன்னவன்ஸ்ரீ ராமரிட மகிமையைநீ யறியாயோடா?

அறியாவிடில் திருடுவதேன் அதைச்சற்று யோசியடா
குறித்தறிந்து காரியஞ்செய்தால் குணமடைவாய்
மணம்பெறுவாய்

அழியாத வரங்களெல்லாம் அகந்தையினா லழியுமடா
இழிவான காரியஞ்செய்தால் எங்கும்நிந்தை யடை
வாயடா

அன்னைசீதை தானுனக்கு ஐந்துதலை நாகமடா
என்னுடைய வாக்குக்கேட்டால் ஏதுங்கஷ்ட
மில்லையடா

பயந்துசீதை தனைராமர் பாதந்தனில் விட்டவரின்
தயவுபெற்றால் க்ஷேமமுண்டு தப்பிப்போனால்
மாண்டிடுவாய்

750. வாலிபலம் அறியாயோடா வதையானான் அவனும்ஸ்ரீ
நீலவர்ணன் பாணமதால் நினைத்ததையும்
பார்த்துச்செய்வாய்

குலநாச மாவதற்குக் குறிப்பான காரியஞ்செய்தால்
பலவானைப் பகைக்கலாமோ பாபியாகப்
பாவிக்கலாமோ?

செல்வமெல்லா மொழியுமடாசீரழிந்து மடிவாயடா
நல்வழியை விட்டுவீணாய் நஞ்சுகொள்ள
வேண்டாமடா

வேதசாஸ்திரங் களையறிந்து நீதிமுறை
களைத்தெறிந்து
பாதகத்தை யேனெண்ணினாய் பரம்பொருளை
யேன்பகைத்தாய்?

முடவன்கொம்புத் தேனுக்காக முயற்சிசெய்யுங்
கதைபோல
மடயனேநீ சீதையின்மேல் மனங்கொள்ளல் வீணாமே

755. சிம்மமதைச் சிறுநரிதான் சிநேகங்கொள்ள
விரும்புதல்போல்
அம்மனான ஜானகிமேல் ஆசைகொள்ளல் அறிவீனமே

எரிக்குமக்கினி தனைத்தழுவி இன்பமடை
வோருமுண்டோ
அறுக்கும்வாளைக் கட்டிச்சுகம் அடைவோர்கள்
தானுமுண்டோ?

நஞ்சுக்கடல் தனில்மூழ்கி நன்மையடை
வோருமுண்டோ
பஞ்சையுந்த னிஷ்டமது பலிக்கவுண்டோ அணுவளவும்

பெற்றவளைப் பெண்டாகவே பேதையேநீ
நினைக்கலாமோ
அற்றுவிழுங் குலமுழுதும் ஆசைவேண்டாம்
சீதையின்மேல்

உனதுநெஞ்சே யுனைக்கொல்லும் உத்தமரை
வருத்தவேண்டாம்
கனமழியும் இனமழியும் கதியழியும் மதிகொண்டேபார்

760. சாஸ்திரத்தின் முறைகொள்வாய் சதிமோசந்
தனைவிடுவாய்
வாஸ்தவத்தை யுரைப்பவர்மேல் வைரங்கொள்ளும்
வழிதடுப்பாய்

மரணமுனக் கில்லையென்று மகிழ்வதுந்தன்
மதியீனமே
கருதியுந்தன் வரத்தின்நோக்கம் கண்டுசெய்வாய்
காரியத்தை

எவர்களினால் மரணமிலை என்றுவர மடைந்தாயோ
அவர்களிலே மனிதர்களும் அடவிகுரங்
குகளுமுண்டோ

பிம்மவம்சந் தனிலுதித்துப் பிசகுசெய்தல்
பெருமையன்று
தர்மமன்று தலைக்கொழுப்பைத் தள்ளியுன்னி
லெண்ணிப்பாராய்

சருவேசன் றனைமறந்து சத்தியநிலை தனைத்துறந்து
கருவங்கொள்ளும் போர்களுக்குக் கடவுளரு
ளில்லையடா

765. உண்மையான பக்திகொண்டு உசிதமான
நடையுங்கொண்டு
புண்யபாவ மிரண்டுங்கண்டு போதமெனும்
புத்திகொண்டு

அற்பசுக மாகுமிந்த அகிலசுக வாழ்வதனை
சொற்பனத்தும் மறப்பவர்க்கே சுகம்பொருந்தும்
நிலையாகவே

புலங்களுக்கு வசமாகிப் புத்திகெட்டுக் குற்றஞ்செய்து
அலையும்போர்கள் கதியடையார் அசத்தாவார்
அழித்திடுவார்

தத்துவமாம் குப்பையிலே தடுமாறி மடிபவர்கள்
உத்தமமாம் நிலையடைய ஒவ்வாது வென்னும்பாராய்

நிர்மலமா யுள்ளதொரு நித்தியமா யுள்ளதான
பிர்மநிலை தனில்கூடிய பேரானந்தம் அனுபவிக்கும்

770. ஆத்மநிலை தனைமறந்து அஞ்ஞானந் தனிலுழன்று
சாத்வீகக் குணங்குறைந்து சபலப்பட வேண்டாமடா

தேகமதைக் கொள்வதெல்லாம் தேவனிட அருளடைய
யோகங்கொண் டுழைப்பதற்கே உற்றபடி
யுரைத்தேனடா

தேகபலங் குறைந்துமிகத் தீங்குதரும் சிற்றின்ப
மோகமதைக் கொள்ளுவோர்க்கு முன்னும்பின்னும்
நரகமதே

மனவுறுதி யுள்ளவனும் மர்மமெல்லா மறிந்தவனும்
வினைகளெல்லா மொழிக்கத்தக்க விவேகங்கொள்ள
உரியவனும்

ஆகியநீ இவ்விதமாய் அஞ்ஞானந் தனில்மூழ்கிப்
பாகமற்ற பாபியைப்போல் பாவித்தலுனக்
கழகேயல்ல

775. கக்கிரீவர் நேசங்கொண்ட சுவாமியுன்மேல்
படையெடுப்பார்
தக்குமோபா ருயிருனக்குத் தலைகொழுத்துத்
திரியவேண்டாம்

உயிரைக்காத்து உலகவின்பம் ஒட்டும்படி நடப்பதுவே
உயர்ந்தியான செய்கையாகும் உணர்ந்திடுவாய்
இக்கருத்தை

இவ்டமில்லாப் பெண்ணதனை இம்சைசெய்ய
வாகாதடா
கவ்டப்பட்டு விடுமவளின் கண்ணீரே கொல்லுமடா

சத்துக்களின் வாக்குக்கேட்டால் சகலபாக்யங்
கூடுமடா
உத்தமரை வருத்தினக்கால் உள்ளதும்போம்
உயிரொழியும்

உன்குலத்தின் பெருமையெண்ணி உண்மையான
தருமமென்னிச்
சன்மார்க்கந் தனிலிருந்தால் சௌக்கியமுண்டு
ஐக்கியமுண்டு

780. பதிவிரதையின் பகையினாலே பகையுண்டாம்
விதிவிலக்கைக் கூடப்பதினால் வெகுகஷ்ட
நஷ்டமுண்டாம்

அடைந்தவரன் பலன்களெல்லாம் அருந்தவத்தோர்
மனம்வருந்த
நடந்ததினால் வேரசைத்து நஷ்டப்பட இருக்குதடா

அக்கிரமங்கள் விட்டொழித்து அருள்பரனை
யாராதித்துத்
தக்கபடி மறுபடியும் தயாபரனால் வரமடைந்தால்

உண்டுனக்கு உலகவாழ்வு உண்மையிது கண்விழிப்பாய்
கண்டுசொல்லும் எந்தன்வாக்குக் காக்குமுனை
நோக்கியறி

உயிரைவிட் மனமிருந்தால் உன்னிஷ்டம் படிநடப்பாய்
பயமிருக்கில் ஸ்ரீராமன் பாதந்தனைப் பணிந்தருப்பாய்

785. சுக்கிரீவ ராக்ஞேப்படி சொல்லுகிறே னித்தனையும்
முக்கியமாகக் குணமறிவாய் மோசம்போக
வேண்டாமென்றான்

இந்தவிதஞ் சொன்னதெல்லாம் இராவணனும்
மற்றவரும்
சிந்தைகொள்ளக் கேட்டாரம்மா தந்திரங்கள்
மிகவறிந்த

குரங்கென்றே யதிசயித்தார் குறித்துரைத்த
கருத்துகளை
அரக்கர்மன்னன் விதிவசத்தால் அலட்சியமா
யெண்ணியப்பால்

வலதிடது கண்களிலே வந்துதம்மா கோபாக்கினி
துலங்கிற்றம்மா நெருப்புப்பொறி துஷ்டனவன்
பார்வையிலே

அனுமானைப் பார்த்துரைப்பான் அதட்டிமிக
மிரட்டியவன்
மனந்துணிந்து எனைப்பழித்த மதிகெட்ட
குரங்கேயுனை

790. எமபுரிக்குச் சேர்த்துதற்கு எண்ணிவிட்டேன்
மண்ணுலகில்
நிமிஷமினி யிருப்போமென்று நினைக்கவேண்டா
மென்றுரைத்து

நெருப்புப்பொறி பறக்கப்பல்லை நெறுநெறென்றே
கடித்துக்கொண்டு
குரங்குமிகக் கொழுப்புளதாம் கொன்றிடுங்க
ளென்றாக்ஞை

செய்தானம்மா அரக்கர்மன்னன் சீக்கிரமாய்
வீரர்வந்து
கைகளிரண்டும் பிடித்துக்கொண்டார் கவியனுமான்
ஆலோசிப்பான்

நமதுபலம் அறியாமல் நம்மையிவன் கொல்லச்
சொன்னான்
சமயமதில் நடப்பதெல்லாம் சற்றறிந்தே
துணிவோமென்று

இருந்தானம்மா அப்பொழுது எழுந்துநின்று
விபீஷணனார்
வருமண்ணா குறைமிகவும் வானரத்தைக்
கொல்லவேண்டாம்

795. நீதிதனை யெடுத்துரைக்க நினைத்தென்னை
வைத்திருக்கும்
ஆதரவைக் கொண்டுரைப்பேன் அன்புடனே
கேட்டிடுவீர்

அண்ணாநான் சொல்வதெல்லாம் அறிந்துகொண்டு
துணிந்திடுவீர்
எண்ணிச்செய்யாக் காரியத்தால் இழிவுண்டாம்
வழிகொள்வீர்

கொடுமைசெய்த குரங்கானாலும் சொல்லுவது
தருமமல்ல
அடித்திடலா மில்லாவிடில் அங்கயீனஞ் செய்திடலாம்

தூதாக வந்தவரைத் துணிந்துகொள்ளல் நீதியன்று
வேதாதி சாஸ்திரங்கண்டு விதிவிலக்கின் படிநடப்பீர்

சத்துருக்களை ஜயிப்பதன்றோ சாமர்த்திய
மாகுமண்ணா
இத்தரையில் உம்மைவெல்வோர் எவருமில்லை
யென்றிருக்கும்

800. அந்தயெண்ணம் உண்மையானால் அனுமானை
அங்கயீனம்
சிந்தைமிகச் செய்தனுப்பில் சீக்கிரமா யிவனோடியே

சத்துருக்களைக் கண்டுரைப்பான் சடுதியாக
அவர்வருவார்
எத்தனைபேர் வந்தாலுமே எதிர்த்துயுத்தஞ்
செய்தவரை

வெல்லுவதே உசிதமாகும் வீணிலிந்தக்
குரங்கைக்கொன்றால்
வல்லமைக்கு அழகல்ல வையகத்தோ ரிகழ்ந்திடுவார்

சதீதுருக்களை வைத்திருந்தால் சமயம்பார்த்து
மோசஞ்செய்வார்
எத்தனைநா ளானாலுமே எண்ணிவந்து
பகைதீர்ப்பார்

பகைவர்களை யொழித்துவிட்டால் பயமொழியும்
அகந்துணியும்
தகுதியற்ற குரங்கைக்கொல்வல் தங்களுக்குப்
பெருமையல்ல

805. ஆசையினா லாலோசித்து ஆக்ஞைசெய்யு
மென்றுரைத்தான்
வேசுமாசு வந்தகோபம் விபீஷணனா ருரைத்தநல்ல

சருத்துக்களைக் கேட்டவுடன் கட்டோடு
விட்டொழித்து
அரக்கர்மன்னன் அதன்பிறகு ஆலோசித்தான்
தன்னிலம்மா

தம்பிசொல்லும் நியாயமெல்லாம் தகுதியுள்ள
தென்றறிந்து
நம்பியந்த விதம்நடக்க நயந்தரக்கர் மன்னனப்போ

கிங்கரர்க்கு ஆக்ஞைசெய்தான் கேளுமெந்தன்
வார்த்தைகளை
அங்கயீனஞ் செய்வதற்காய் அனுமான்வாலில்
துணிகள்சுற்றி

எண்ணையிட்டுத் தீக்கொளுத்தி இலங்கைநகர்
வீதியெங்கும்
கண்ணிலெல்லோர் காணும்படி கையிற்பிடித்
திழுத்துக்கொண்டு

போங்களென்று சொன்னானம்மா போதமுள்ள
அனுமானப்போ
தீங்குசெய்ய எண்ணிச்சொன்னான் தெரியாமல்
அரக்கனென்று

பரியாசமாய் நினைத்ததோடு பரமபக்தர்
விபீஷணனார்
தருமஞ்சொன்ன முறைக்காகத் தன்னில்மிக
மகிழ்ந்தானம்மா

அனுமான்வாலில் துணிகள்சுற்ற ஆரம்பித்தார்
கிங்கரர்கள்
மனதிலெண்ணி அனுமான்வாலை வளர்த்திவிட்டான்
வெகுவாகவே

தரித்திருக்கும் ஆடையன்றித் தானவர்கள் வீடுகளில்
இருக்குமெல்லாத் துணிகளெல்லாம் எடுத்துவந்து
சுற்றினார்கள்

எத்தனையோ துணிகள்கொண்டு இழுத்திழுத்துச்
சுற்றினார்கள்
அத்தனையும் போதாமல் அனுமான்வால்
வளர்ந்ததம்மா

உத்தமரா யுள்ளபெண்கள் உடைகளையும் பிடுங்கிவரச்
சித்தந்துணிந் திடுவானென்று செய்யுமிலங் கேசனிட

ஆடையினா லறிந்தனுமான் ஆனகியை
மனதிலெண்ணி
மூடனிவ்விடப் படிநடக்க நாடிவாலைப் பெருக்காமலே

நிறுத்திவிட்டா னதன்பிறகு நீசரான கிங்கரர்கள்
தாரிதமாகத் துணிகள்சுற்றித் தோரணையாய்
எண்ணையிட்டுக்

கொளுத்திவாலைப் பிடித்திழுத்துக் கோட்டைப்
பேட்டை வீதியெல்லாம்
வெளியிலுள்ள யாவர்களும் வேண்டிவந்து
பார்க்கும்படி

கொண்டுவரும் வேளையிலே கண்டுசில அரக்கியர்கள்
துண்டன்சிக்கிக் கொண்டானென்று அண்டிச்சீதைக்
கறிக்கையிட்டார்

820. சீதையந்தச் சேதிகேட்டுச் சித்தமிக நொந்ததன்மேல்
பாதுகாக்க வேண்டுமென்று பார்த்திருந்தாள்
அக்கினியை

பதிபக்தி விதிப்படிநான் பண்ணியவ ரெண்ணப்படி
மதியுடனே நடந்திருந்தால் மாருதிக்குக்
குளிர்ந்திருப்பீர்

அனுஜரோடு எனதுபர்த்தா அன்பென்மேல்
கொண்டுவந்து
மனமுவந்தே கொடியவனாம் மாபாவி ராவணனை

ஜெயித்தென்னைச் சிறைமீட்டுச் சீராகக் காப்பதுதான்
ஐயமின்றி யுண்மையாயின் அனுமானுக்குக்
குளுமைசெய்வீர்

இந்தவிதம் சீதைவேண்ட எண்ணியக்னி பகவானும்
அந்தரங்க அன்புகொண்டு அனுமானுக்குக்
குளிர்ந்திருந்தார்

825. உத்தமிக ளிஷ்டப்படி உஷ்ணசீத தேவர்களும்
சத்தியத்தைக் காப்பதற்குச் சரஸமாக இணங்குவார்கள்

அந்தப்படி குளுமைதந்து ஆதரிக்குங் குணமறிந்து
எந்தனன்னை யனுக்கிரகமென் றெண்ணிச்சீதை
தனைஸ்துதித்து

வாலைமிகச் சுழற்றிக்கொண்டு வருகின்றா
ரனுமாரம்மா
நாலுபுறம் ஜ்வாலையினால் நஷ்டமானார் சிலவரக்கர்

கோட்டைவாச லொன்றிருக்கக் கூட்டமங்கில்
லாதிருக்கக்
கேட்டைதனைக் காட்டவெண்ணிச் சிறியகுரங்
கானானம்மா

சுட்டியுள்ள கயறுகளெல்லாம் கழன்றுகீழே
விழுந்திடவும்
சுட்டிசுவ ரூபங்கொண்டான் ஜ்வாலையையும்
பெருக்கிக்கொண்டான்

830. இருப்புலக்கை யொன்றைக்கண்டான் எடுத்தனைக்
கையிற்கொண்டான்
அரக்கர்கூட்டம் பக்கம்வர அடித்தவரை
வதைத்தானம்மா

தீங்குசெய்ய அரக்கனிட்ட தீயைக்கொண்டே
அவனுடைய
பாங்குள்ள பட்டணத்தைப் பாழாக்க நினைத்தனுமான்

வீடுதோறும் நெருப்புவைத்து விளையாடி வருகையிலே
சூடுச்சகி யாமல்பலர் சுற்றங்களை விட்டோடினார்

குழந்தைகளை யெடுத்துக்கொண்டு கொடுமைசெய்யுந்
தீயைக்கண்டு
அழுதுகொண்டே போயினார்கள் அநேகம்பேர்
ராட்சதர்கள்

உப்பரிகள் மேலிருந்து உஷ்ணந்தனைப் பொறுக்காமல்
அப்படியே குதித்துவந்து அலறியோடிப்
போனாருண்டு

போகவழி யில்லாமலே பொசிங்கினவ ரநேகருண்டு
வேகுமொரு வேகமதால் வீறிட்டு யாண்டோருண்டு

வெந்தும்வேகா திருப்பவர்கள் வைகுபோக
ளவர்களெல்லாம்
இந்தக்கஷ்டம் வந்ததற்கு இலங்கேசனை
நொந்துகொள்வார்

தரித்திருந்து வஸ்திரங்கள் தகித்ததினால்
மானங்கெட்டு
அரையிலொன்று மில்லாமலே அலைவோர்க
ளநேகருண்டு

சீதையெனும் பெண்ணின்கண்ணீர், சீரழிய நமக்கிந்த
வேதனையைத் தந்ததென்று விசனப்படு வோர்களுண்டு

குரங்கின்வாலில் தீயிட்டுக் கொடுமைசெய்ய
விட்டவனாய்
அரக்கர்மன்னன் அறிவீனன் அவன்தொலைவா
ரென்பார்சிலர்

குரங்கின்சக்தி கண்டிருந்தும் கொடுத்துவிடந்
தந்ததனைத்
திரியும்படி விட்டதினால் தீங்குடைந்தோ
மென்பார்சிலர்

குரங்கைச்சொல்ல நியாயமில்லை குணமழிந்த
ராவணனே
பரிதபிக்க நம்மைச்செய்தான் படுபாவி யென்பார்சிலர்

வனக்குரங்கு ஆக திது வையகத்தை யொருநொடியில்
நினைத்துப்பஸ்மம் செய்யுதுமிது நிச்சயமே
என்பார்சிலர்

இந்தப்படி பலவிதமாய் ஏங்கியெல்லோர்
கதறினார்கள்
அந்தமுள்ள லங்கையெங்கும் அக்கினிபற்றி வெந்ததிலே

845. விபீஷணனார் வீடுமட்டும் விட்டுவிட்டா
னனுமானம்மா
உபகாரஞ் செய்பவரென் றுள்ளமதி லெண்ணியம்மா

மந்திரிகள் தந்திரிகள் மற்றுமுள்ள அதிகாரிகள்
இந்திரஜித்து இலங்கேசன் எல்லோர்வீடும்
எரிந்துதம்மா

இப்படியே அனுமானந்த இலங்கையெல்லாம்
அழிந்திடவே
எப்புறமும் முப்புரத்தை எரித்தவன்போ
லெரித்துவிட்டுக்

கடற்கரையில் வந்துவாலைக் கழுவியப்பா
லாலோசிக்கா
மடத்தனமாய்க் கொளுத்திவிட்டோம் மாதரசாம்
ஜானகியும்

அனல்தாக்கிச் சேதப்பட ஆயிருக்கு மென்றெண்ணி
மனதில்மிகக் கவலைகொண்டான் மகிமையுள்ள
சாரணாதி

850. தேவரெல்லாம் கூடிவந்து திரளாக ஆகாசத்தில்
ஆவலொடு நின்றுசொன்னார் அனுமானைப் புகழ்ந்து
கொண்டு

அரக்கன்லங்கை யழித்தவராம் அனுமான்சக்தி
அற்புதமே
தருமசீல முள்ளவனாம் ஜானகிக்கு ஏதுமொரு

தீங்கின்றி யாதரித்த திறமைமிகு அருமையாகும்
ஏங்கிலங்கை தனைக்கொளுத்தி உக்கிரமாக
இருக்கையிலே

புத்திதனை வசங்கொண்டு போதமுடன்
நடந்துகொண்ட
உத்தமராம் அனுமார்போல் உலகிலெங்கு
மில்லையென்று

மிகவுந்தானே ஸ்துதித்துரைத்தார் மேல்நோக்கிப்
பார்த்தனுமான்
அகமகிழ்ந்து அவர்களுக்கு அடிவணங்கி அதன்பிறகு

855. ஜகன்மாதா ஜானகியைத் தாக்கவுண்டோ
அக்கினியும்
மகிமையுள்ள சீதையைநாம் மறுபடியும்
பார்ப்போமென்று

பறந்துவந்து ஜானகியின் பாதமதில் நமஷ்கரிக்க
அறிந்தேனையா உமதுசக்தி ஆச்சரிய மெனப்புகழ்ந்து

சீதைமிக மகிழ்ந்தாளம்மா சிறைமீட்கச் சீக்கிரமாய்
நாதனைநீ ரழைத்துவந்து நன்முயற்சி செய்யுமென்றாள்

அரைநொடியும் அட்டியின்றி அனைவரையும்
அழைத்துவந்து
அரக்கர்களைப் பறக்கடிப்பேன் அதிலேதும்
ஐயமில்லை

தயிரியமா யிருப்பீரம்மா தானவரை
யொழிப்போமம்மா
பயப்படவே வேண்டாமம்மா பரந்தாமர் வருவாரம்மா

அரக்கன்பலந் தனையறிந்தேன் அவன்கருத்துந்
தானறிந்தேன்
தருமமிலை தயவுமிலை தலைக்கொழுப்பு மிகவுமுண்டு

அழியுங்காலம் அடுத்ததிப்போ அதினாலே
யவன்மிகவும்
பழிக்காளாய்ப் பலிக்குங்குறி பார்த்தேனம்மா
அவனிடத்து

வருங்கெடுதி தனையறிந்து வழியோடு நட்க்கும்படி
தருமங்கள் மிகவுரைத்தேன் சற்றுமதை யேற்கவிலை

எனைவதைக்க ஆக்ஞையிட்டான் இளையவராம்
விபீஷணனார்
மனமுவந்து தருமஞ்சொல்லி மறுத்தாரம்மா
மகானுபாவர்

அரக்கனென்னை வதைபுரிய ஆகாதம்மா அவனாலே
பரிதபிக்க அரக்கர்களைப் பண்ணுஞ்சக்தி எனக்குண்டு

ஆனாலும் விபூஷணனார் அன்புடனே
அண்ணனிடம்
நானாவித நியாயஞ்சொல்லி நடந்துகொண்ட
நன்றிதனை

எண்ணுவது என்கடமை யென்றுரைத்தான்
சீதைகேட்டு
மண்ணுலகில் என்னுடைய மனந்தேற்ற அவருடைய

பெண்மக்களும் பாரினையும் பிரேமையுடன்
செய்யும்பல
உண்மையான முயற்சிகளை உரைப்பேனாகில்
பெருகுமையா

உத்தமர்கள் சித்தவிர்த்தி சத்தியத்தில் நிற்குமையா
புத்திகெட்ட மூடருக்கும் போதம்வரச் சொல்வாரையா

பத்தங்கெட்ட பாபிகட்கும் பலவிதமாய்
நியாயஞ்சொல்லிச்
சுத்தமன மடையச்செய்வார் கண்டறிவார்

870. சகலசுக மடைவாரந்தச் சாதுவான விபீஷணனார்
மகிமையுள்ள புருஷரவர் மாதவரின் வழியடுப்பார்

அவருடைய உதவியினால் ஆவியைநான்
வைத்துக்கொண்டு
இவடந்தனி லிருக்கின்றேன் என்றுரைத்தாள்
சீதையம்மா

அனுமானதைக் கேட்டுமிக அகமகிழ்ந்தான்
மிகக்குளிர்ந்தான்
நினைத்தன்னையை வணங்கியப்பால் நேராக
ஆக்ஞைபெற்றான்

அன்னையிடந் தனிலிருந்து அப்பொழுதே
கிளம்பிவந்து
உன்னதமாம் அரிஷ்டமலை உச்சியிலே குதித்துநின்று

ஈசனருள் தனைக்கோரி இருதயத்தை நிலையாக்கி
நாசிவழி தனையடைத்து வாசிவசங் கொண்டனுமான்

875. கிளம்பிவிட்டான் விண்ணிலம்மா கிரியோவெனில்
நிலம்படிந்து
விளங்காமல் புதைந்துதம்மா வெகுஜீவ கோடியதில்

வாசஞ்செய்து வந்ததெல்லாம் வருத்தமிக
அடைந்ததோடு
நாசமான தனேகமுண்டு நடுங்கியோடிப் போனதுண்டு

அந்தமலை தனிலிருந்த அநேகசித்தர் முனிவரெல்லாம்
சிந்தைதனி லெண்ணிவிண்ணில் சீக்கிரமா
யோடினார்கள்

அனுமானந்த மலையினின்று அடித்தபந்து
கிளம்புதல்போல்
கனமான விசுவரூபக் காயத்தோடு சமுத்திரத்தை

தாண்டிவரும் போதவனைத் தாசுங்கொண்டு
மைநாகன்
வேண்டிக்கொண்டான் மிகவுமம்மா விசுவாசமாய்த்
தன்மீது

880. இருந்துசற்று இளைப்பாறி எழுந்தருள வேண்டுமென்று
பிரியத்தோடு தொட்டவனைப் பெருமைசெய்து
வாயுசுதன்

வருகையிலே மகேந்திரத்தை வடதிசையில் கண்டுடனே
தெரியும்படி வானரர்க்குச் சிம்மநாதஞ் செய்தானம்மா

அந்தச்சத்தங் கேட்டவுடன் அங்கதனும் மற்றவரும்
எந்தவேளை வருவானென்று எதிர்பார்த்து
இருந்தோரெல்லாம்

சிந்தைமிக மகிழ்ந்தாரம்மா ஸ்ரீராமனைப்
புகழ்ந்தாரம்மா
வந்தமகேந்திரத்தனிலே வாயுசுதன் குதித்தானம்மா

கண்டேன்சீதை தனையென்று கவிகளெல்லாம்
களித்திடவே
கொண்டார்களானந்தம் குரங்கெல்லா மிகவுமம்மா

அனைவர்களுஞ் சூழ்ந்துகொண்டு அனுமானைக்
கனப்படுத்தி
மனமுவந்தே ஸ்துதித்தாரம்மா மகிழ்ந்துகட்டிச்
சுகித்தாரம்மா

மகேந்திரத்தில் யாவருமாய் மனங்களித்து
இருந்துகொண்டு
மிகப்புத்தி யுள்ளவனாம் மேன்மையுள்ள அனுமானை

நடந்ததெல்லாஞ் சொல்லுமையா நாங்கள்கேட்டுச்
சந்தோஷிக்கச்
சடுதியாக வென்றுகேட்கச் சந்தோஷமாய்
வாயுபுத்திரன்

சீதைதனை மனதிலெண்ணிச் சிரங்குவித்து
நமஸ்கரித்து
ஆதரவோ டனைவரையும் அனுமான்பார்த்துச்
சேதியெல்லாம்

ஆதிமுத லந்தம்வரை அப்படியே சொல்லுகையில்
நீதிகெட்ட அரக்கன்தன்னை நெருப்புவாயில்
கொளுத்திவாத்ய

கோபத்தோடு வீதியெங்கும் கொண்டுபோகச்
செய்ததையும்
தீசன்நகர் முழுதுஞ்சுட்டு நிர்மூலஞ் செய்ததையும்

விவரப்படச் சொல்லக்கேட்டு வெகுகளிப்பை
யடைந்தெல்லோரும்
இவனுடைய சக்திக்கிணை எங்குமிலை
யெனப்புகழ்ந்தார்

அவர்களைப்பார்த் தனுமான்சொல்வான்
அன்னையான சீதையைப்போல்
குவலயத்தில் பெண்களுண்டோ குலஸ்திரீகள்
அவளைப்போலப்

பாதிவிர்த்தியந் தனைக்காப்போர் பார்த்ததில்லை
கேட்டதில்லை
சீதைஸ்ரீ ராமரையே சித்தந்தனில் நினைத்துக்கொண்டு

பரிதபித்துத் துடிப்பதைநான் பார்த்தடைந்த
விசனமதை
விரித்துரைக்கில் சகிக்கமாட்டீர் விரைவாகச்
சிறைமீட்க

895. எத்தனங்கள் செய்வதற்கு என்னவேணும் தாமசித்தால்
உத்தமியோ உயிர்விடவே உறுதிகொள்வா
ளாகையினால்

அரைநொடியும் அட்டிசெய்ய ஆகாதென்
றனுமான்சொல்லப்
ப்ரியத்தோடு அங்கதனும் பேசுகிறான் தாசனாகச்

சீதைமனம் வாடக்கேட்டுச் சித்தமிகக் கொதிக்குதையா
மாதரசை மனம்வருந்த மாபாவி செய்ததற்காய்

இப்படியே லங்கைபோவோம் எல்லோருமா
யரக்கர்களை
எப்படியுஞ் ஜயித்துத்தாயை இராமரிடங்
கொண்டுவந்து

சோர்ப்பதுவே யுசிதமென்று செப்புகையில் ஜாம்புவந்தர்
தீர்க்காலோ சனைசெய்து செப்புகிறா ரொப்பும்படி

கஷ்டப்படுஞ் சீதைக்காகக் கால்நொடியும்
அட்டியின்றித்
துஷ்டர்களைப் போய்ஜயித்துத் துரிதமாகச்
சிறைமீட்டு

ஜானகியை யழைத்துவந்து சாமியிடம் விடுவதற்கு
நானும்பிரியங் கொண்டேனையா நாதனாக்களு
யில்லையையா

நம்மூடைய இஷ்டப்படி நாம்நடக்கப் போகாதையா
அம்மன்சிறை மீட்பதற்கு ஐயனாக்களு வேண்டுமையா

அரக்கர்களை வெல்லுதற்கு அனுமாரே போதுமையா
சுருதியவர் விட்டுவந்த காரணத்தை யறியுமையா

சகலருமாய் ராமரிடம் சடுதியாகப் போயவர்க்கு
மகிமையுள்ள ஜானகியை மாருதிபோய்க் கண்டுவந்த

சேதியெல்லாம் சொல்வோமவர் செய்யுமாக்களுப்
படிநடப்போம்
நாதனிட கட்டளையை நாம்மீறப் போகாதென்றான்

அந்தப்படி நடப்போமென்று அனைவர்களும்
அங்கிருந்து
சிந்தைமிக மகிழ்வுடனே சீக்கிரமாய்க் கிளம்பிவந்து

மதுவனமாம் சுக்கிரீவன் மனச்சுகத்தை யடையநவ
நிதிகளுள்ள சிருங்கார நேர்த்தியான தோற்றமதை

வரும்வழியில் கண்டதிலே மதுபானஞ் செய்வதற்குக்
கருதியெல்லா வானரமும் கட்டளைக்காய் அங்கதனை

வேண்டிக்கொண்டா ரந்தப்படி வேணமட்டும்
புசித்திடவே
தூண்டியாக்ஞை தந்தானம்மா தோரணையாய்
யாவருமாய்

910. வனத்தில்சென்று மதுவையுண்டு மகிழ்ந்துமிகக்
கொட்டமிட்டார்
வனரட்சகன் ததிமுகனாம் வானரன்கண் டதட்டிவந்து

அருமையான வனமிதனை அழிக்குமுங்கள்
கொழுப்படங்கத்
துரிதமாக அரசரிடம் சொல்வேனென்
றுரைத்தானம்மா

சிற்றரச ரதுமதியை சீராதப் பெற்றுக்கொண்டோம்
குற்றமெங்கள் மீதிலில்லை சற்றுமென்றான்
வானரர்கள்

இவரசனதிகாரத்தில் இல்லையிந்த மதுவனமே
அளித்ததுண்டோ சுக்கிரீவர் ஆக்ஞையென்றான்
ததிமுகனும்

அந்தப்படி யாக்ஞைபெற அவசியமிலை யெங்களுக்கே
வந்ததெல்லாம் வரட்டுமென்று வானரர்கள்
மிரட்டிச்சொன்னார்

915. துரத்துவேன்பா ரென்றுரைத்துத் துணிந்துவந்தான்
ததிமுகனும்
பொறிபறக்கக் கோபத்தோடு புலிபோல
உருமிக்கொண்டு

எங்களைநீ தடுப்பதற்கு ஏன்வந்தா யென்றுமிகப்
பங்கப்படப் பேசியப்பால் பழுக்கத்தந்தார்
கொழுப்படங்க

பிடித்தவனைக் கடித்துமிகப் பெருந்துன்பஞ்
செய்தாரம்மா
அடுத்துவந்த அவனுடைய ஆள்களையும்
அடித்துத்தள்ளித்

துரத்திவிட்டார் வானரர்கள் துன்பப்பட்ட
போகளெல்லாம்
அறிக்கையிட ரிசியமுக அருமையான மலையைநாடி

வருகின்றார் இதுநிற்க வைதேகியைத் தேடிப்போன
குரங்குகளில் தென்திசையாரி கொடுத்தகெடுத்
தாட்டிப்பின்னும்

920. வரவிலையே யென்னசெய்வோம் வார்த்தமான
மெவ்விதமோ
பரிதபிக்க நேர்ந்ததென்று பரந்தாமன்
மனந்துடித்தான்

அந்தவேளை வந்துவிட்டார் அம்மானாம் ததிமுகனும்
முந்திப்பிந்தி அவனான்களும் முகம்வாடி அகம்வருந்தி

அரசனான சுக்கிரீவனை அனைவர்களும்
வணங்கிச்சொல்வார்
அருமையான உம்முடைய அகமகிழ்ச்சி தருவதான

மதுவனத்தை இதுவரையில் மனமுவந்து மிகவுங்காத்து
அதிகவிர்த்தி செய்தோமையா அந்தவனம் இந்ததினம்

சீரழியச் செய்தாரையா சிற்றரசன் அங்கதனும்
ஆருமஞ்சச் செய்பவனாம் அனுமானும் பின்னும்பல

925. வானரரும் கொழுத்துவந்து வனந்தனிலே
இருந்துகொண்டு
மானங்கெட அவமிதித்து மார்த்தனமும்
மிகவுஞ்செய்தார்

மதுபானாதி பழங்களெல்லாம் மட்டின்றி
யுண்டவர்கள்
மதிமயக்க மிகவுங்கொண்டு வனத்தில்மிகக்
கொட்டமிட்டார்

வனமதினால லழியுமென்று வணங்கிமிகத்
தடுத்தோமையா
இனங்களெல்லா மொன்றுசேர்ந்து எதிர்த்தெங்களை
யுதைத்தாரையா

சுக்கிரீவ ராக்ஞையென்று சொல்லுவார்க
ளெல்லையின்றித்
துக்கப்படச் செய்தெங்களைத் துணிந்துவன
மழித்ததற்குத்

தகுந்தவிதம் சிட்சைசெய்வீர் தயவசைவு மாகாதென்று
அகம்வாடி முறையிடவும் அந்தச்சேதி கேட்டவுடன்

930. முகமலர்ந்தான் மிகக்குளிர்ந்தான் அகமகிழ்ந்தான்
சுக்கிரீவன்
சுகமடைந்தான் வெகுவாகச் சொன்னவரைப்
பகுமானித்தான்

இந்தவிதம் நடந்ததெல்லாம் இளையவனாம்
லட்சுமணன்
அந்தவேளை கண்டறிந்து அடுத்துவந்து சுக்கிரீவனைக்

கண்டுகேட்பான் மகிழ்வதென்ன? சுவிசுள்வந்
துரைத்ததென்ன?
விண்டதனை விளங்கச்சொல்ல வேண்டுமென்று
கேட்டானம்மா

கபிராஜன் சொல்லுகிறான் காரியங்கை கூடிற்றையா
சுபசேதி வருவதற்குச் சூசனையா மென்றுரைத்து

அனுமான்முத லனைவர்களும் அருமையான
என்வனத்தை
மனந்துணிந்தே யழிப்பதாக மாதுலனாம் கதிமுகனும்

935. வனத்தைக்காக்கும் வானரமும் வந்துரைக்கும்
விதங்களினால்
நினைத்துப்போன காரியத்தை நிறைவேற்றி
வந்திருப்பார்

காரியானு கூலமின்றி கபிகள்வந்து
பிழைப்பதுண்டோ?
தீரனான அனுமானே தேவிதனைக் கண்டிருப்பான்

அந்தவொரு சந்தோஷத்தால் அழித்திருப்பார்
வனத்தையெல்லாம்
இந்தப்படி சொல்லக்கேட்டு இளையவரும் ராஜரூமாய்

சந்துஷ்டி யடைந்திடவே சகலரையும் வேகமாக
வந்திடவே சொல்லச்சொன்னார் வானரர்க்கு
ஆக்ஞைசெய்தார்

தந்தவொரு ஆக்ஞைப்படி கதிமுகனும் மற்றவரும்
வந்துவனந் தனிலிருக்கும் வானவரைக் கண்டவரில்

940. வாலிசுதன் றனைவணங்கி வாஞ்சையோடு
சொல்லுகிறார்
நீலவர்ணன் றனைக்காண நிமிஷமதில் யாவரையும்

அழைத்துக்கொண்டு வரும்படியாய் ஆக்ஞைசெய்தார்
சுக்கிரீவன்
குழந்தாய்நீ யனைவரையும் கூட்டிக்கொண்டு
போவாயென்றார்

மதுபான மயக்கம்விட்டு மற்றவரும் தெளிந்திருக்க
மதியுள்ள வாலிசுதன் மரியாதை செய்தழைத்து

கண்டேன்-சீதையை-யென்று அனுமான் சொல்லிக்கொண்டு ஸ்ரீராமர்முன் குதிப்பதும் லங்கைக்குப் போய்வந்த சேதியைச் சொல்வதும் ஸ்ரீராமர் கேட்டு விசனத்தோடு மனக்குறைகளை யுரைப்பதும், சூடாமணி பெறுவதும், மறுபடி யனுமானைக் கேட்பதும், அவர் பதிலுரைப்பதும்

சாமியாக்ஞை தனைச்சொல்லிச் சகலரையும்
கூட்டிக்கொண்டு
சாமவனம் ஸ்ரீராமன் சந்நிதியை நாடிவரும்

வேளையிலே வாயுசுதன் வேகமாக முந்திவிட்டான்
தோளைத்தட்டிச் சிம்மநாதம் தோரணையாய்ச்
செய்தானம்மா

945. கண்டேன்கண்டேன் சீதையைநான் கவியனுமான்
வந்தேன்வந்தேன்
கொண்டேன்ராமா வுமதருளைக் குணமடைந்தேன்
மணம்பெறுவேன்

ஜகதீசா ஸ்ரீராமா ஸ்ரீபதியே ரகுராமா
அகமகிழ்வீ ரென்றுரைத்து ஆகாச வீதியிலே

வருமந்த மாருதியை மாதவனும் மற்றவரும்
இருந்தவிடந் தனைவிட்டு எழுந்துவந்து
பார்த்தாரம்மா

விசவரூபங் கொண்டனுமான் வேகமாக வரக்கண்டார்
நிசமாகச் சீதையைநான் நேரில்கண்டேன்
கண்டேனென்று

சொல்லிக்கொண்டே வந்தனுமான் சுவாமிமுன்னே
ரூதித்தானம்மா
வல்லவனாம் அவனுடைய வாக்கைக்கேட்டு
மகிழ்ந்தான்ராமன்

950. கண்டேன்சீதை தனையென்று கவியனுமான்
சொன்னதிலே
உண்டுநல்ல சுகமம்மா விண்டறிந்தால் விளங்குமம்மா

அனுகூலந் தனையடைந்த அந்தச்சேதி
முந்திச்சொல்லில்
மனமகிழ்ச்சி மிகவுமுண்டாம் கனமதினால்
மிகிவுமுண்டாம்

அருள்பரனாம் ஸ்ரீராமனை அடிவணங்கி
அனுமான்சொல்வான்
தருமபத்னி யாகுமம்ம ஜானகியாள் சேமமையா

என்றுரைத்த வார்த்தைகேட்டு எம்பெருமான்
மனமகிழ்ந்து
சென்றுவந்த சேதிதந்தீர் சீதையெங் கெவ்விதமாய்

இருக்கின்றா ளதையுரைப்பீர் என்றுகேட்டான்
ராமனம்மா
தருமபுத்தி யுள்ளசீதை தங்கியுள்ள லங்கைநகர்

955. இருக்கும்திசை தனைநோக்கி எழுந்தனுமான்
தெண்டனிட்டுப்
பிரியத்தோடு சொல்லுகிறான் பெருமையுள்ள
தருமசீலன்

அரக்கருள்ள லங்கையிலே அசோகவன மத்தியிலே
பரிதபிக்க அரக்கியர்கள் படுத்தும்இம்சை
தனைச்சகித்து

எண்ணமெல்லா மும துமீதே இருத்தித்தவஞ்
செய்வோர்போல்
கண்ணில்தாரை பெருகவிட்டுக் கலங்கிமனம்
நொந்துகொண்டு

தேசக்கிலேசஞ் செய்தனுவும் திர்ப்தியின்றி
யிருக்குமந்தச்
சோகநிலை சொல்லப்போமோ சுவாமியது
கஷ்டங்கஷ்டம்

இராமராம வென்றுவாக்கில் இராப்பகலுஞ்
சொல்லிக்கொண்டு
நேமமுட னிருக்குமொரு நோர்மைதனை
யென்னசொல்வேன்

960. உம்மைப்பிரிந் திருப்பதிலே ஒருநொடியைப்
பலயுகமாய்
அம்மனெண்ணி மனமுருகி அழுகின்றா
ளெப்பொழுதும்

தன்னையெண்ணி நீர்வருந்தித் தத்தளிப்பீ
ரெனநினைத்து
அன்னைபடுங் கவலையைநான் அறிந்துரைக்கப்
போகாதையா

உமதுமீதி லுள்ளவொரு உண்மையான அன்புக்காக
தமதுயிரை வைப்பதன்றித் தரிக்கமன
மில்லையென்றார்

அன்னைவச மாவதற்கு அரக்கன்தந்த கெடுவுதனில்
இன்னுமுள்ள மாதமெல்லாம் இரண்டேதா
னிருக்குதையா

அதன்பிறகு ஜானகியை அறுத்துரத்தங்
குடிப்பேனென்று
மதிகெட்ட தசகண்டன் மனத்துணிவு கொண்டவனாய்

965. இருக்கின்றான் ஜானகியோ இலங்கைக்குநீர்
வருவதற்கு
ஒருமாதம் மீறுமாயின் உயிர்விடவே துணிந்திடுவள்

ஆகையினால் நிமிஷமேனும் அட்டிசெய்ய லாகாதையா
சோகப்படும் சீதைமீது கவாமிகிர்பை கொள்ளுமையா

கணையாழிதனைக் கொடுத்தேன் கண்ணிலொற்றி
முத்தமிட்டு
வணங்கியும்மைச் சந்தோஷித்தாள் வைதேஹி
மிகவுமையா

எண்ணியெண்ணி யுருகுவதை என்னென்று
சொல்வேனையா
கண்ணிலும்மைக் காணாமல் கதறுகிறா
ளெப்பொழுதும்

அழுக்குவஸ்திரந் தரித்துக்கொண்டு அன்னைகூந்தல்
ஜடையலைய
வழுவுள்ள அரக்கியர்க்குள் வாசஞ்செய்யுங்
கோலமதைக்

970. கண்டாற்மனங் கலங்குமையா கருணைகொள்ள
வேண்டுமையா
சண்டாளத் தசகண்டனைச் சம்கரிக்க வேண்டுமையா

சித்திரகூட மலைதனிலே சிலகாலம் வசிக்கையிலே
குற்றம்செய்த காகாசுரன்மேல் குறித்தஸ்திரந்
தொடுத்ததையும்

திலகமது அழியக்கண்டு தேவரீரே அம்மனுக்கு
வலியவந்து திலகமிட்ட வரலாறு தனையுந்தானே

தம்மிடத்தில் சொல்லச்சொல்லித் தருந்தரூடா
மனியுந்தானே
அம்மனெந்தன் கையிலென்று அதையெடுத்துக்
கொடுத்தானம்மா

வாங்கியதை ஸ்ரீராமர் வட்சசிலே வைத்தணைத்து
ஏங்கியேங்கிக் கண்ணீர்சொரிந்து என்னசெய்வே
னென்றுமிக

975. பரிதபித்துச் சுக்ரீவனைப் பார்த்துரைப்பான்
நேசனேகேள்
தருமபத்னி தனைப்பிரிந்து தத்தளிக்க லாயிற்றையா

எந்தன்பிராண நாயகியும் இம்சைப்பட நேர்ந்தெனக்கு
வந்தகஷ்டஞ் சகிக்கப்போமோ வைதேகி எவ்விதமாய்

மனஞ்சகித்து நிர்வகிப்பாள் மாதரசாம் அவளுடைய
கனநடையை நினைக்கையிலே கருத்துமிக வாடுதையா

புருஷ்பல மில்லாமலே புலம்பியழ ஜானகியாள்
பிரிந்துபோக நேர்ந்ததினால் பிராணன்மிகத்
துன்புதையா

என்மனைவி யெனநினைந்து ஏங்கியதும் செய்வதான
கன்மவினைக் கென்னசெய்வேன் கஷ்டப்பட
லாயிற்றையா

974. வட்சசிலே - மார்பிலே

எத்தனையோ சுகங்களெல்லாம் இருக்கவெந்தன்
மனைவியவள்
அத்தனையும் வேண்டாமென்று அரணியத்தி
லென்னுடனே

இருப்பதுவே சுகமென்று எண்ணிமிக ஆசையோடு
கருதிவந்தா ளிப்பொழுது கஷ்டப்பட ஆனாளையா

தோஷமில்லாப் பத்தினியை தூரோகியான
அரக்கன்வந்து
மோசஞ்செய்தே யபகரித்தான் முறைதப்பித்
தனைமறந்து

பெருமையுள்ள பத்தினியைப் பிரியவிதி யிருந்ததையா
அரக்கனாலே வந்துதித்த அலங்கோலம்
என்னசெய்வேன்

சொல்லியினி யாவதென்ன சோகநில் மூழ்கிவிட்டேன்
இல்லறத்தின் சுகங்களைநான் இனியடைந்து
வாழ்வதுண்டோ

ஆதரிப்போ ரில்லாமலே அலையும்சீதை
தனைநினைத்து
வேதனைநான் படுவதன்றி வேறென்ன
செய்வேனென்று

இந்தவிதம் பரிதபித்து இளையவனைப்
பார்த்துச்சொல்வான்
எந்தனையே நம்பியுள்ள என்பிறப்பே என்னசெய்வேன்

சீதைமிகத் தபிக்கிறாளாம் சித்தம்வாடி
நோகின்றாளாம்
ஏதினிமே லவளுயிரை இழந்திடுவாள் நிச்சயமே

கஷ்டமனுக் கண்டறியாக் கண்மணியாம்
சீதையெந்தன்
இஷ்டப்படி நடந்ததெல்லாம் எண்ணிமிக
வருந்துகிறேன்

சொல்லழகை யென்னசொல்வேன் சுத்தமுந்தா
னென்னசொல்வேன்
வல்லபராம் நம்முடனே வந்துகஷ்டப் படலாகினாள்

990. அவளிருக்கு மிடமெனக்கு அகமகிழ்ச்சி தருமிடமே
குவலயத்தி லவளைவிட்டுக் கொஞ்சமுந்தா
னெனக்குச்சுகம்

இல்லையடா தம்பியென்று இவ்வாறு புலம்பிவிட்டுச்
சொல்லிகிறா னனுமானிடம் சோகத்தோடு ஸ்ரீராமன்

அனுமானே கனவானே அதிசயமே யுமதுசக்தி
மனந்துணிந்தே யொருவராக மாகடலைத்
தாண்டிச்செல்ல

எத்தனையோ காவலெல்லாம் இருப்பவைகள்
தமைத்தாண்டி
உத்தமியைக் கண்டுசேதி உண்மையாகத் தந்துவந்து

எனக்குச்சீதை க்ஷேமமதை இவ்விதமென் றேயுரைத்து
மனதுக்கின்பந் தந்தீரையா மாருதியே வாருமையா

995. உபகார மிகவுஞ்செய்தீர் உமக்குக்கைம்மா
றென்னசெய்வேன்
சுபம்பெருகு முலகுக்கும்மால் சோகமெல்லா
மொழியுமையா

இனங்களில்லா லங்கையிலே இருந்துகஷ்டப்
படுபவளாம்
எனதுபத்னி யிருக்குமிடம் இப்பொழுதே போவதற்கு

ஆசைகொண்டே னாகையினால் அழைத்துக்கொண்டு
போவீரென்று
நேசத்தோடு சொல்லிராமன் நினைத்துப்பின்னுஞ்
சொல்லுகிறான்

என்னிடத்தில் சொல்லும்படி என்னசொன்னாள்
சீதையையா
இன்னமுந்தான் விவரப்பட எடுத்துரைக்க
வேண்டுமென்றான்

அந்தவுடன் அனுமான்சொல்வான் அன்னைசொன்ன
வார்த்தையெல்லாம்
எந்தன்மீது நாதருக்கு எவளவேணும் அன்பிருந்தால்

1000. இத்தனைநாள் வருந்தவென்னை இங்கிருக்க
விட்டுவிடச்
சித்தமுந்தான் வந்திடுமேல் ஸ்ரீராமர் மறந்துவிட்டார்

அவருடைய மனவழியை அனுசரிக்கும் அனுஜருக்கும்
கவலையென்மே லில்லைபோலக் காணுதென்று
சொன்னதோடு

பெண்கள்வாக்கை யனுசரித்துப் பிரபஞ்சத்தனில்
நடப்பதினால்
கண்யங்கெடும் கஷ்டம்வரும் கலகங்கள் மிகவிளையும்

சபலசித்தாள் பெண்களையா சத்தசத்து அறியாரையா
விபரீதம் விளையத்தக்க விஷயத்தையும்
வேண்டுவார்கள்

சுவ்டம்வரும் வேளையிலே கணவரையே
குறையுரைப்பார்
இவ்டபத்னி யானாலுமே சுவ்டப்படி
இணங்கப்போகா

1005. சுந்தரமே யணுவுமின்றிச் சொல்படியே நடக்குவுள்ள
மதியுடையோர் பெண்களென்று மாதவர்தான்
அறியரோ?

அழகுள்ள பெண்ணானாலும் ஆதிக்கம் தருவதினால்
வழிசுடந்தே நடந்துமிக இழிவடையத் தானுமாகும்

குருசிஷியப் பாவனையைக் கொஞ்சமுமே தவறாமல்
இருக்கும்படி மனைவிசுட்கு இதஞ்சொல்லிப்
பழக்கவேண்டும்

போனவழி பெண்கள்மனம் போகும்படி
விடுவதெல்லாம்
மானங்கெட்ட பிழைப்பாமென்று மாதவரேன்
அறியவில்லை

பெண்களுக்கு மதியுரைத்துப் பிரேமையுடன்
ஆதரித்துக்
சுண்மணிபோல் காப்பதன்றோ கணவருக்குக்
சுடமையையா

1010. மணம்புரியும் வேளையிலே மனதைப்பெண்கள்
கணவருக்கு
உணர்வுடனே தந்துவரும் உண்மையையும்
நினைக்கிலையே

கணவர்மனம் தன்மனதாய்க் கருத்தில்கொண்டு
நடக்கும்படி
இணங்கச்செய்தல் கணவருக்கு ஏற்றதரும
மாகுமன்றோ?

புருஷனைப்பெண்தாரைவாங்கிப் புருஷன்தனை
யாருமொரு
தருமம்போல வாருமன்றோ சாமிசெய்த காரியமே

பிரம்மநிலை தனைமறைத்து பிரபஞ்சமாக மீறிநிற்கும்
மாயம்போல் எனைநினைத்து மாதவனார்
நடந்தனரோ?

உலகமதின் இயற்கைபோல உதித்தவள் நா
னல்லவென்று
நலமேதோ கருதியென்னை நாயகர்கை விட்டனரோ?

1015. உண்மையாக நானவரில் உள்ளவொரு அந்தரங்கம்
எண்ணியுந்தான் பிரிந்தனரோ இருக்குமேதோ
காரணமும்

சர்வசுரவரைக்குறை சற்றுஞ்சொல்ல நியாயமிலை
சர்மபய னென்றுரைத்துக் கண்ணீரை விட்டழுதாள்

அறியாமல் சொன்னேனையா அறிவிழந்து
சொன்னேனையா
குறித்துரைத்தேன் விசனமதால் குணமழிந்து
குறைகள்மிக

அவரவரின் விதிவசத்தை அனுபவித்தே தீரவேண்டும்
சிவன்செயலைத் தடுப்பதுண்டோ செய்வதொன்று
மில்லையென்று

தன்னைமிக நொந்துகொண்டாள் தலையழுத்தை
மிகவெறுத்தாள்
மன்னவரே பிழைபொறுக்க மன்னிப்பு
மிகவுங்கேட்டாள்

கருனைகொண்டு தருமமெண்ணிக் கடல்தாண்டிச்
சீக்கிரமாய்
வரும்படியாய் மிகவுஞ்சொன்னாள் வந்தனமோ
சுணக்கேயிலை

வரும்படியாய்க் கணவருக்கும் வாஞ்சையுள்ள
அனுஜருக்கும்
பிரியமுள்ள சுக்கிரீவர்க்கும் பின்னுமுள்ள
யாவருக்கும்

சொல்லச்சொன்னாள் குசலமிகச் சொந்தங்கொண்டு
வரவுஞ்சொன்னாள்
நல்வாக்கு மிகவுஞ்சொன்னாள் நயந்துசொன்னாள்
தயவுகொள்ள

நிலம்படியக் கண்ணீர்சொரிந்த நிலைமைதனை
நினைக்கையிலே
பலவிதமாய்த் துக்கமெனைப் பாதிக்குதே
யென்றனுமான்

தாரைகண்ணில் பெருகச்சொல்லித் தத்தளித்தான்
சித்தம்நொந்து
தேறும்வழி யில்லாமலே தேம்பித்தேம்பி யாவர்களும்

விசனப்பட்டா ரந்தவொரு விதமதனைச் சொல்லுதற்கு
நிசமாக எனக்குமதி வசமில்லை யில்லையம்மா

வெகுநேர மழுதடங்கி விவேகங்கொண்டா
ரனைவர்களும்
மகிமையுள்ள அனுமானப்பால் மறுபடியுஞ்
சொல்லுகிறான்

மலுவுறுதி யென்னைப்போல மற்றெவர்க்கு
மில்லையென்று
நினைத்திருந்தேன் ஜானகியின் நிலைமைதனைக்
கண்டவுடன்

மனவுறுதி யொழிந்துதையா மனக்கவலை
யழிந்துற்றையா
னைநானே மறந்தேனையா என்னசொல்லேன்
பாட்டகவ்டம்

எண்ணில்நம்ம பலங்குறையும் இவளவோடு
விடுவோமதைப
பண்ணத்தக்க சாரியத்தைப் பாங்குடனே
செய்வோமினிச்

1030. சமுத்திரத்தைத் தாண்டிக்கொண்டு சகலருடன்
வருவதிலே
சமுசியமே மிகவுங்கொண்டாள் ஜானகிதான்
அதுநீங்க

நாதருக்கும் ஜானகிக்கும் நாழிகையோர் யுகமதாக
வேதனையா யழுந்திக்கொண்டு வெகுகஷ்டப்
படுகிறார்கள்

சேதியைப்போய் நானுரைத்தால் சீக்கிரமாய்
வந்திடுவார்
தாரும்மை மறப்பதில்லை நானறிவேன் அவர்மனது

ஐயர்மனங் கண்டறிந்து அனுஜருந்தான் வருந்துகிறார்
ஐயங்கொள்ள வேண்டாமம்மா அரணவத்தைத்
தாண்டுவது

வருத்தமல்ல வானரர்கள் வானவழி கொண்டிலங்கை
அரைநொடியில் தாண்டுவார்கள் அதற்காகக்
கவலைவேண்டாம்

1035. வானரரில் பலங்குறைந்த வானரனே நானாவன்
யமனுக்குக் கவலைவேண்டாம் எல்லோரும்
கூடல்தாண்டி

வந்திடுவார் சாமியையும் வாஞ்சையுள்ள அனுஜரையும்
எந்தன்தோளில் கொண்டுவந்து இலங்கைநகர்
விடுவேனம்மா

இருக்குமிடந் தெரியாததினால் இத்தனைநா
ளாயிற்றென்று
உரியதான காரணத்தை உரைத்தேனையா விரித்தனை

நானுரைத்த ஆறுதலை நன்றாகக் கேட்டுச் சீதை
மனமிட இம்சைதனை எண்ணாமல் அச்சம்விட்டுப்

பின்னுமொரு நாளிருக்கப் பிரியங்கொண்டு
சொன்னாளையா
அன்னையே நான் அரைநொடியும் அட்டிசெய்ய
லாகாதென்றேன்

1040. அதைமிகவும் குணமாய்க்கொண்டு அனுமதித்தாள்
போய்வரவே
பதமலரைப் பணிந்துவந்தேன் பரம்பொருளே
யருள் புரிவீர்

தூரிதமாக லங்கைபோகத் துணிந்துசெய்வீர்
காரியங்கள்
அரைநொடியும் அட்டிவேண்டாம் ஆண்டவனே
யென்றுரைத்தான்

சுந்தரகாண்டம் முற்றிற்று.

உயுத்த காண்டம்

**அனுமானை ஸ்ரீராமன் ஆலிங்கனஞ் செய்வதும்,
லங்கைக்குப் போகச் சமுத்திரத்துக்குப்
பாலமில்லையே யென்று ராமன் சிந்திப்பதும்,
சுக்கிரீவன் சமாதானஞ் சொல்வதும்,
இராவணனுடைய பலங்களை
யனுமானுரைப்பதும் படைகளோடு ஸ்ரீராமன்
கடற்கரை வந்து சேருவதும், சீதையை
நினைத்துக்கொண்டு இராமன் விசனப்படுவதும்,
தம்பி தேறுதல் சொல்வதும்**

அனுமான்சொன்ன வாக்கியங்களை ஆவலோடு
கேட்டுமிக
மனங்களித்தான் ஸ்ரீராமன் மாருதியை இருகரத்தால்

ஆலிங்கனஞ் செய்துகொண்டு அன்புடனே
மிகப்புகழ்ந்து
பாலமில்லா அரணவத்தைப் படைகளோடு
தாண்டுதற்கு

மாயிக்கமென்ன வென்றுசற்று மயங்கித்தன்னில்
கவலைகொண்டான்
பாயித்துக்கவி ராஜன்சொல்வான் பயப்படவே
வேண்டாமையா

கொள்ளுமையா தைரியமே குவலயத்தி லெவராயினும்
எள்ளளவும் தைரியம்விட்டால் எதுவும்சித்தி
யாகாதையா

5. அரக்கர்கள்மேல் படையெடுத்து அமர்புரியத்
தொடங்கவேண்டும்
அரணவத்தைத் தாண்டுவது அலட்சியமென்
றெண்ணுமையா

வீரர்களா யுள்ளவராம் வெகுபோர்கள் வானரர்கள்
தேறிமனந் துணிவாரையா தேவரீரோ டரணவத்தைத்

தாண்டிலங்கை தனையடைந்து தானவரை
வெல்லுதற்குத்
தூண்டுகிறார் மிகவுமையா துணிந்துபோக
நிலைகொள்வீர்

சேதுகட்டிச் சமுத்திரத்தைச் சீக்கிரமாய்த்
தாண்டிடலாம்
வேதசாஸ்திரா திகளையெல்லாம் வெகுவாகக்
கண்டறிந்து

மோட்சநிலை தனையறியும் முனிவர்போல் மிகவும்நீர்
சூட்சுமபுத்தி யுள்ளவரே சோகப்பட லாகாதையா

10. தங்களைப்பார்த் தெனக்குமிகத் தைரியமெல்லாம்
குறையுதையா
பங்கம்வரும் இந்தவேளை பயப்படவே யாகாதையா

நான்முதலா யுமக்குப்பல நன்மைசெய்யும் மந்திரிகள்
தானிருக்கக் கவலைப்படல் தகுமோவென்
றறிந்துபாரீர்

---

8. சேது - பாலம்

ஜானகியின் ஸ்திதியறிந்தோம் சக்தியுமே மிகவுமுண்டு
ஏதினிமேல் தாமதித்து இங்கிருக்க வேண்டுமையா

காலதேசா திகளறிந்து காரியஞ்செய்தால் கனப்படுமே
மேலுள்ள காரியத்தில் மிகமுயற்சி வேண்டுமன்றோ!

சகலருக்கும் ஆதாரமாம் சருவக்ஞரா யுள்ளநீரே
முகம்வாடி யிருப்பீரா யின் முயற்சியெல்லாம்
வீணாகுமே

15. எழுந்தருளும் படைகளொடு எல்லோருமாய்ப்
புறப்படுவோம்
ஒழித்திடுவோம் அரக்கர்பூண்டை ஒன்றுக்குமே
அஞ்சவேண்டாம்

சாமியென்று மிகவுமம்மா சமர்த்தனான சுக்கிரீவன்
ராமனிடம் வணங்கிச்சொன்னான் ரகுராமன்
அதன்பிறகு

தெளிவடைந்து பாணங்களால் திடமான சேதுகட்டி
எளிதில்லங்கை சேர்ந்திடலாம் என்றுமகத்
துணிந்துகொண்டு

அரக்கனிட பலமறிய அனுமானைப்
பார்த்துக்கேட்பான்
சரியாக அரக்கனிட சக்தியாதி ஸ்திதிகளெல்லாம்

தெரியச்சொல்ல வேண்டுமென்றான் தேவனடி
பணிந்தனுமான்
விரித்துரைப்பான் மறுமொழிதான் விநயத்தோடு
மனமுவந்து

20. கிரகங்கள்தோறும் லங்கையிலே கிரமமாக
அக்கினிஹோத்திரம்
சிரத்தையொடு செய்வதுடன் சித்தங்கொண்டு
எவருமையா

உரியநல்ல காலங்களில் ஓதுமொரு வேதகோஷ
அருமையான பத்ததிகள் அதிசயமென்
றனுமான்சொல்ல

வேதவழி நடப்பவரை வெல்லவுண்டோ வென்றுமிக
நாதன்மனக் கவலைகொண்டு நாடியம்பைக்
கீழேவைத்த

அந்தக்குறி கண்டனுமான் ஐயமறச் சொல்லுகிறான்
அந்தரங்கம் அறிந்துகொண்டு அம்பெடுப்பீர்
அரக்கர்மீது

தயவில்லை சத்தியமில்லை கவசமில்லை யரக்கரிடம்
பயமுண்டோ வென்றுரைத்தான் பரந்தாமன்
அம்புகொண்டான்

25. குறியறிந்து குணமுரைப்போன் குவலயத்தில் மாருதியே
அறிந்திடவே யரக்கன்பலம் அனைத்துஞ்சொல்வா
னிவ்விதமாய்

அரக்கன்மிகப் பலமுடையோன் அரக்கர்படை
மிகவுமுண்டு
இருக்குதையா குதிரையானை எத்தனையோ
கணக்கின்றியே

ஆயுதங்கள் பலவுமுண்டு அஸ்திராதிக ளநேகமுண்டு
மாயஞ்செய்யும் அரக்கனிடம் மட்டில்லா ரகசியமுண்டு

---

24. சவசம் - சௌசம் - தூய்மை

நகரிருக்கும் அலங்காரத்தை நாவில்சொல்ல
முடியாதையா
அகமகிழ்ச்சி தருவதற்கு அதிசயங்க ளநேகமுண்டு

நவரத்ன மயமேநகர் நாற்புறமும் கோட்டையுண்டு
எவராயினும் நகருக்குள்ளே எதிர்த்துப்போக
முடியாதையா

30. நகரைச்சுற்றி பலமாக நான்குதூர்க்க முறையாயுண்டு
நிகரில்லை லங்கைபோல நினைத்துரைக்க ஜகந்தனிலே

அகழ்முதலாய் நகரைக்காக்க அநேகமான
பிரகாரங்கள்
வகைவகையா யிருக்குதையா வலுவாக லங்கையிலே

பகைவர்வந்து வெல்லுவதற்குப் பாணங்களைத்
தொடுப்பாராயின்
வகையுடனே அவைகளெல்லாம் வலுக்குறைந்து
அடங்கச்செய்ய

கோட்டைவாசல் களையடுத்துக் கொஞ்சமல்ல
அநேகயந்தரம்
போட்டிருக்கும் புத்திமதி பூமியிலே அரிதாகுமே

சேனைகளை யடிக்கடியே சீர்ப்படுத்தும் முறைகளையும்
நானெங்கும் கண்டதில்லை நானாவிதத் தந்திரமுண்டு

35. இவ்விதமா யுள்ளதான இலங்கைநகரி முழுவதையும்
செவ்வையாகச் சுற்றிப்பார்த்துச் சீதையுள்ள
விடத்தில்வந்து

சமயம்பார்த்து ஜானகிக்குச் சந்தேக மில்லாமல்
உமதுசேதி முழுதுஞ்சொல்லி உள்ளந்தெளிந்
திடச்செய்து

அம்மனாக்ஞை பெற்றதன்மேல் அரக்கன்பல
மறிவதற்குச்
செம்மையாக ஆலோசித்துச் செய்தேன்சில
காரியங்கள்

பட்டணத்தி னோர்பாகம் பாழாக்கி யழித்ததோடு
கட்டெரித்தேன் மற்றதையும் சூரரென் றெதிர்த்துவந்த

அரக்கரையும் அவர்படைகள் அனைத்தையும்
அதமாக்கினேன்
பரிதபிக்க லங்கைநகர் பண்ணிவிட்டேவந்தேனையா

40. சங்கையின்றி அரக்கரெல்லாம் சாமியும்ம கையினாலே
பங்கப்பட்டே மடிந்திடுவார் பாவியவர்
பலங்களெல்லாம்

சூரியன்முன் இருளடங்கும் சூட்சுமம்போ
லொழிந்திடுமே
காரணகா ரியமறிந்த கர்த்தரேநீர் ஜெயிப்பீரென்று

இந்தவிதம் அனுமான்சொல்ல எம்பெருமான்
கேட்டுமிகச்
சிந்தைமகிழ்ந் தன்புடனே சிநேகிதனாம் சுக்கிரீவனைப்

பார்த்துரைப்பான் லங்கைதனைப் பாழாக்குவேன்
அரைநொடியில்
போர்புரிய இப்பொழுதே புறப்படுதல் உசிதமையா

இன்றுத்திர நட்சத்திரம் எனக்குதவே சாதகமாம்
நன்றுசெய்யும் தாரையாகும் நல்லலக்னம்
விஜயமிப்போ

45. அனுகூலச் சகுனங்களும் அநேகமாகக் காணுதிப்போ
எனக்குஜயங் கிடைக்குமென்று எண்ணுகிறேன்
நிச்சயமாய்

ஆகையினால் வானரர்கள் அனைவரையும்
அழைத்துக்கொண்டு
வேகமாகப் புறப்படவே வீரர்கட்கு ஆக்ஞைசெய்ய

வேண்டுமென்று சொன்னவுடன் வீரரெல்லாம்
வந்துநின்றார்
ஆண்டவன்ஸ்ரீ ராமனப்போ அவர்களைப்பார்த்
தாக்ஞைசெய்வான்

சகலருமா யிப்பொழுதே சண்டைசெய்யப் புறப்படுவீர்
தருதியான தளங்களோடு தாமசிக்க
வேண்டாமென்றான்

இப்படியே புறப்படலாம் எங்களாலே அட்டியில்லை
சொப்பனத்தும் ஆக்ஞைப்படி சுறுசுறுப்பாய்
நடப்போமென்றார்

50. வந்துநிற்கும் வீரர்களில் வழிகளெல்லாம் செப்பனிட
முந்திச்சிலர் போகச்செய்து முறையாக மற்றவரைச்

சூழ்ந்துதம்மை வரவுஞ்சொன்னார் சுக்கிரீவனும்
ஆக்ஞையிட்டான்
ஆழ்ந்தறிந்து செய்வோனான ஐயனப்பா
லெழுந்தருளிப்

பல்லக்கின்மேல் சுக்கிரீவனைப் பாங்குடனே
வரச்செய்து
வல்லபனாம் அனுமானை வாகனமாய்க்
கொண்டான்ராமன்

அனுஜனான லட்சுமணனை அங்கதன்றன்
தோளில்கொண்டான்
அனைவர்களு மனங்களித்து அங்கிருந்து
புறப்பட்டார்கள்

மலைபோல அலைபுரளும் மாகடலோ
வெனப்பிரமிக்கப்
பலகோடிப் படைகளுடன் பரந்தாமன் பெருமையுடன்

55. வரும்வழியில் வானரர்கள் வல்லமையை
மிகவுஞ்சொல்லி
அரக்கர்களைப் பறக்கடித்து அதருசெய்வோம்
நொடியிலென்று

சபதங்கள் மிகவும்பேசிச் சாமிதம்பி சுக்கிரீவதைக்
கபிகளெல்லாஞ் சூழ்ந்துகொண்டு களிப்புடனே
யாடிக்கொண்டு

காடுமேடு கலைக்கடந்து காட்சியுள்ள மகேந்திரத்தை
நாடிவந்து சேர்ந்தாரம்மா நாதனோடு யாவருமாய்

அங்கிருந்து சமுத்திரத்தை ஆவலோடு
பார்த்தெல்லோரும்
கங்குகரை யில்லாத களிப்படைந்தா ரதன்பிறகு

அணிவகுத்தார் படைத்தலைவர் அதிசயமாய்ச்
சேனைகளைக்
குலாமுடனே படைகளெல்லாம் கூடியங்கு
சுகித்திருந்தார்

60. கடற்கரையி லுள்ளவிருட்சக் காட்சிகளைக்
கண்டுராமன்
உடனேசீதை தினைவுகொண்டு உள்ளமதில்
விரகங்கொண்டு

சொல்லுகிறான் தம்பியோடு சோகமுடன் தத்தளித்து
வல்லபரா யிருந்தும் வைதேகி சுவீட்டப்பட

---

50. கபி - குரங்கு

நேர்ந்ததுதான் விந்தையடா நினைத்தவனை
யுருகுறேனே
பார்த்தவளை மகிழ்வதற்குப் பாக்யமின்றிப்
போயினேனே

ஏற்கனவே ஜானகியாள் இளைத்ததேக மாயிருக்கச்
சீர்கெடுத்த அரக்கனிட சிறையினாலும் மிகவிளைத்து

தூர்ப்பலமா யிருப்பாளவள் துரோகிசெய்த
கொடுமைக்கவன்
மார்மஸ்தலம் பேதித்திட மாபாவியைக்
கொல்வதெப்போ?

65. சகலவிதப் பாக்யங்களைச் சற்றுமல்சியஞ்
செய்யாமலே
சுகமெல்லாம் நானென்றெண்ணி அகமகிழ்ந்தே
வந்தாள்சீதை

அணியத்தி லவளணுவும் அடையவில்லை
சுகமென்பதை
இருக்குங்குறை போதாதென்று இராவணனுங்
கொடுமைசெய்தான்

ஆராய்ப்போ ராருமின்றி அலைந்தாமனம் வாடுகிற
சீதைமனம் களைத்திடவே சிறைமீட்டு அவளுடனே

எந்தக்காலம் கழித்துவாழ்வேன் எவ்வனத்தை
வீணாக்கிச்
சுந்தரியாம் ஜானகியாள் சோகமதில் காலமதைக்

கழித்திடவே ஆயிற்றடா கருத்துமிக வருத்துதடா
வழித்துறையும் அறியேனடா வந்தகஷ்டம் மாறுமோடா

70. என்னசெய்வே னென்றுமிக ஏங்கிராமன் பரிதபிக்க
இன்னமுந்தான் வருந்தலாமோ? எல்லோரும்
படையெடுத்து

வந்துவிட்டோம் அரக்கருக்கு வாழ்வுண்டோ
யினியணுவும்
இந்தவேளை சோகப்பட வேண்டாமண்ணா என்றுமிக

ஆறுதலை யவுமன்சொல்ல அதைக்கேட்டு ஸ்ரீராமன்
தேறுதலை யடைந்திருந்தான் திடமனதாய்ச்
சுகமுடனே

இங்கிவ்வாறு இருக்கலங்கை எரிந்ததுதான் பாழாகித்
தங்குமிட மில்லாமலே தத்தளித்தார் தானவர்கள்

பழையபடி நகரந்தனைப் பாங்காக
அமைத்துக்கொண்டு
வழக்கப்படி யுள்ளமந்திரி மார்களுடன்
அரக்கர்மன்னன்

மந்திரிகளையும் விபீஷணனையும்
வைத்துக்கொண்டு இராவணன் ஆலோசிப்பதும்,
மந்திரிகள் சொல்லும் அபிப்பிராயத்தை
விபீஷணன் தடுத்துரைப்பதும், மறுநாள்
விபீஷணன் இராவணனிடம் போய் அந்தரங்கமாய்
நீதியுரைப்பதும், அதற்கிணங்காமல் இலங்கேசன்
பதிலுரைப்பதும், பிறகு சிந்தித்து நிச்சயிப்பதும்

75. ஆலோசிப்பான் குரங்கொன்று அகந்துணிந்து
வந்துநம்மைக்
கேலியாகூற் செய்யும்படி கேவலமாய்த் தவம்சஞ்செய்து

76. போனதைநூல் நினைக்கையிலே பூமியிலே
யிருந்தென்ன?
மானங்கெட்ட பிழைப்பாயிற்று மந்திரிகளே
செய்வதென்ன?

மிகப்பலவான் ஸ்ரீராமன் மேதினியி லவனுடனே
அகந்துணிந்தே யுத்தஞ்செய்வோர் ஆருமிலை
சீக்கிரமாய்

கடல்கடந்து வந்திடுவான் கவிபடைக ளோடுலங்கை
அடுத்துநம்மை யடுத்திடுவான் அவனுடனே
போர்புரிந்து

ஜெயமடைய மார்க்கமுண்டோ செம்மையாக
ஆலோசிப்பீர்
வயணமாகக் காரியங்களை வலுவறிந்து
செய்யவேண்டும்

80. நாலுங்கண்டு செய்வோமாயின் நலமடைவோம்
பலமிகுமே
காலதேகா திகளறிந்து காரியஞ்செய்ய
வேண்டும்பாரீர்

தெய்வங்களை மறக்காமலே தெரிந்ததரும
மொதுக்காமலே
கைபலமுங் கண்டுசெய்தால் கனப்படுவோம்
மனமகிழ்வோம்

ஆகையினால் பலாபலங்கள் அனைத்தையு
மாலோசித்து
ஊகங்கொள்வீ ரென்றரக்கன் உரைத்தான்மன
வாட்டத்தோடு

79. வயணமாக - வழியாக, முறையாக

மந்திரிகள் கேட்டுரைப்பார் மயங்கவேண்டாம்
மன்னவரே
தந்திரங்கள் மிகவுமுண்டு தருந்தலம் அநேகமுண்டு

இந்திராதி தேவர்களும் எத்தனையோ அசுரர்களும்
சிந்தைமிக நோகும்படி செய்தவதை ஜயித்தநீரும்

85. இந்தப்படி மயங்கலாமோ எவருமும்மை
வெல்வாருண்டோ?
முந்திப்பிந்தி யுள்ளதெல்லாம் முறையாக
அறிந்துபார்க்கில்

பயப்படவே நியாயமில்லை பணிந்தும்மை யடுத்தமது
தயவுக்கெதிர் பார்ப்போர்வந்து தங்களையும்
வெல்வதுண்டோ?

குரங்குகளும் மனிதர்களும் கூடிவந்து ஜயிப்பாரெனில்
பரிகசிக்க இடமேயன்றிப் பாரிலாரும் நம்பவுண்டோ?

இந்திரஜித்தன் பேரைச்சொன்னால் ஈரேழு
லோகமெல்லாம்
அந்தவுடன் பயந்திடுமே அதைமறந்து வருந்தலாமோ?

மகிமையுடன் நீரிருப்பீர் மகனான இந்திரஜித்தன்
கருதியாக யுத்தஞ்செய்வான் தந்திரங்கள்
மிகவறிந்தோன்

90. அவனிருக்கக் கவலைப்படல் அறிவாமோ சரியாரோ?
தவப்பயனை மிகவடைந்த தனயனவன் ஒருவன்போதும்

சிம்மத்தின்முன் சிறுநரியும் சீறிவரு மென்பதுண்டோ?
உம்மெதிரில் மனிதர்வந்து உயிருடனே
பிழைப்பதுண்டோ?

கண்ணிலும்மைக் கண்டவுடன் காதவழி யோடுதற்கு
எண்ணங்கொள்ளு மனிதருக்கு இளைப்போமென்
றெண்ணவேண்டாம்

செல்வமென்ன வரங்களென்ன சேர்ந்திருக்கும்
பலங்களென்ன?
விஞ்முதலாம் அஸ்திரமென்ன வெல்லும்பல
தந்திரமென்ன?

இத்தனையு மிருக்கையிலே ஏழுமக்குக் கவலையையா?
சத்திதனை மறந்துவீணாய்ச் சஞ்சலத்தைக்
கொள்ளவேண்டாம்

95. அஞ்சுதலை விட்டொழியும் அகந்துணிவீர்
மனிதர்களைப்
பஞ்சுபஞ்சாய்ப் பறக்கடிப்போம் பலமிருக்கக்
கலங்கலாமோ?

ஹரிக்கண்ணா ஸகாயத்தை உற்றறியும் ஹாமைபோல
வீசுகிற வானரர்க்கும் வீம்புசெய்யும் மனிதருக்கும்

பின்னடைய போகாதையா பெருமையெல்லா
மொழியுமையா
மன்னவரே யென்றுமிக மந்திரிக ளுரைத்தாரம்மா

பின்னுமுள்ள அரக்கர்களும் பேசுகிறா ரெழுந்துநின்று
மன்னவரே யோசிப்பதேன் மனிதருக்கும் வானரர்க்கும்

என்னபல மிருக்குமையா இப்பொழுதே
அவரையெல்லாம்
சொன்னபடி வதைப்போமையா சோகப்பட
வேண்டாமையா

அனுமான்வந்த சமயந்தனில் அசந்திருந்தோம்
கொட்டமிட்டான்
இனிமேலவ னிங்குவந்தால் இழந்திடுவான்
பிராணன்றனைத்

தங்களையுஞ் செயிப்பதற்குத் தரணியிலே
யொருவருண்டோ
எங்களுக்குத் தாருமாக்ஞை எதிரிகளாம் யாவரையும்

அதஞ்செய்தே வந்திடுவோம் அதைரியப்பட
வேண்டாமென்றார்
மதத்தோடு சொல்லுமந்த மடயர்களைப்
பார்த்தரக்கன்

தம்பியான விபீஷணனார் தடுத்துரைப்பார்,
பேதைகளா
வம்புக்கிட மாகவுள்ள வார்த்தைகளைச்
சொல்லிவிட்டீர்

அனுகூலஞ் செய்வதற்கு அடுத்திருக்கும் போர்களாகீர்
கனங்குறைந்து கஷ்டப்படக் கலகஞ்செய்யும்
மூடராவீர்

இராமன்மீது கையெடுக்க இராமன்செய்த
குற்றமென்ன
நாமவனை ஜயிக்கவென்றால் நடக்கவுள்ள
குறையுமென்ன?

எதுர்விதமாம் உபாயங்களில் சாமதான பேதங்களை
மதியுடனே உபயோகித்து மற்றொன்றாம் தண்டமதை

அனுசரிப்பா ரறிவுடையோர் அந்தக்கிரமந்
தப்பிநீங்கள்
மனந்துணிந்து தண்டோபாயம் மனிதரின்மேல்
செலுத்துதற்குத்

துணிந்துபேசு மொழிகளினால் துன்பந்தனை
யடைவதன்றித்
துணைசெய்ய மாட்டாதென்று சொல்லிவிட்டுத்
தமயன்றனை

நமஸ்கரித்துச் சொல்லுகிறான், "நம்பவேண்டாம்
இவர்கள்வாக்கைச்
சமுசயமே யில்லையண்ணா சங்கடங்கள்
விளையுமல்லவா

110. ஆசையினால் ஜானகியை அரைநொடியும் நிறுத்தாமல்
மோகந்தனை விட்டொழித்து முந்திராமச்
சந்திரனிடம்

சீதைதனை விடுவதுவே சீரான காரியமண்ணா
நீதித்னை யெண்ணிப்பாரும் நேராக நடவுமென்றான்

அரக்கன்மன்னன் அதன்பிறகு அவளவோடு யோ
சனையை
நிறுத்திச்சபை தனைக்கலைத்து நேசத்தோடு
அனைவரையும்

அழுப்பித்தந்தான் மறுபடியும் ஆலோசிப்போ
மென்றரக்கன்
நினைத்துக்கிரகம் வந்தானப்பால் நெஞ்சில்மிகக்
குறைகொண்டு

மறுகாலை விபீஷணனார் மறுபடியும் அண்ணனுக்குக்
குறித்துச்சில இதமுரைக்கக் கோரியவன்
அரண்மனைக்கு

---

109. சமுசயம் - சந்தேகம்.

115. வந்துதச கண்டன்றனை வணங்கிநிற்கக்
கண்டவனும்
அந்தரங்க அன்புடனே அணைக்கிரகித்துப் பக்கமுள்ள

ஆசனத்தி லிருக்கச்சொன்னான் அந்தவித
மிருந்துகொண்டு
நேரத்தோடு தருமங்களை நியாயமாகச்
சொல்லுகிறான்

அருமையண்ணா யெந்தன்மீது அன்புகொண்டு
கேட்டிடுவீர்
தருமமாகச் சொல்லுகிறேன் தங்கள் சேமம்
தனைநாடியே

என்னைப்போல இதமுரைப்பீர் இல்லையண்ணா
தங்களுக்கு
மன்னவரென் றஞ்சியுமாம் மனதின்படி யாவர்களும்

பேசுகிறார் அதினாலே பிரமாதங்களே
விளையுமண்ணா
நாசம்வரும் அரக்கர்கட்கு நன்றாக ஆலோசிப்பீர்

120. காலதேச வர்த்தமானம் கண்டறிந்து சொல்லவந்தேன்
கூலங்கிரஷ மாகப்பார்த்துக் குணங்கொள்ள
வேண்டுமண்ணா

பிரியப்படும் பொருளினாலே பெருகும்கப
மென்றிருந்தால்
கருதியதை யடைந்திடலாம் கனமுமுண்டாம்
அதினாலே

அரிதான பொருளாயினும் அகபந்தனைத்
தருவதானால்
பிரியமதிலாகாதண்ணா பெருங்கஷ்டம்
விளையுமண்ணா

ஸ்திரீயைக்கண்டால் புருஷருக்குச் சித்தமிகக்
கலங்குமண்ணா
பிரேமைகொள்ளும் வேளையிலே பிரித்தறிந்தா
லேதுமிலை

ஏழும்புநரம் போடுகூடி இரக்தமாம்சங்
கலந்துகொள்ள
மலமயமாம் தேகமது மகிமையுள்ள தாமோபாரீர்

125. சக்திசிவ மாகக்காணும் சிவஜகங் களிலும்சற்று
பக்திகொண்டால் நிலைத்திடுமே பந்தமது அந்தரங்கம்

ஞானமக்கு உரைப்பதுண்டோ? நாடிநீரே
யறிந்ததன்றோ?
தானெனுமோர் அகந்தைவிட்டுத் தத்துவத்தில்
சித்தங்கொள்வீர்

ஆனும்பெண்ணாய்க் காணுஞ்சகம் அவித்தைதனி
லழுத்துமென்று
காணுஞ்சக்தி யுமக்கேயுண்டு கண்விழிப்பீ
ருண்மையாகச்

சத்தாசத்தைப் பிரித்தறிந்து சாயுஜ்ய மோட்சமதாம்
நித்தியாநந்த போதமதில் நிற்குஞ்சக்தி யுமக்கிலையோ?

உலகவின்பந் தனில்காலம் ஏதுங்கும்படி
யுழைப்பதெல்லாம்
அலக்கழிப்பாய் ஆகுமண்ணா ஆபத்தாய்
முடியுமண்ணா

130. கருமபந்தம் தனைத்தழுவி கருத்துதிக்கு மெந்நாளும்
தருமமுறை கண்டறிந்து தன்னிப்பந்தம் ஒழியுமண்ணா

வேதசாஸ்திரக் கருத்தறிந்து விஷயப்பற்று தனைமறந்து
ஆதியந்தங் கண்டறிந்து ஐக்கியப்பட வேண்டுமன்றோ?

அத்வைதப் பொருளொன்றையே ஆத்மாக்கள்
கண்டறிந்து
நித்தியசுக மடைவதற்கே நிலந்தனிலே யுடலெடுத்து

வருகின்ற மருமமெல்லாம் மயக்கமின்றி நீரறிவீர்
பரமனருள் ஒன்றேதான் பாதுகாக்கு மென்றறிவீர்

குவலயத்தில் வந்துதித்துக் குணதோஷங் களையறிந்து
நிவர்த்திமார்க்கந் தனைத்தழுவி நிற்பதன்றோ
பகுத்தறிவைப்

135. படைத்ததற்குப் பலனாகும் பிரவிர்த்திமார்க்கந்
தனிலிறங்கிக்
கடத்தைநம்பி மமதைகொண்டால் தடுத்திடுமே
பரகதியைத்

தேகபலந் தனைக்குறைக்கும் தெளிவடைதல்
தனைமறைக்கும்
போகமெனும் உலகவின்பம் பொல்லாத விஷயமது

அநுபவித்து மறைந்தசுக ஆசைதனை விட்டொழித்து
மனதைவசங் கொள்வீராயின் மகிமையுண்டு
சுகமுமுண்டு

சுதிக்கானி வரும்படியாம் காரியத்தைச் செய்யலாமோ?
விதிவிலக்கின் படிநடக்க வேண்டுமண்ணா
தாண்டப்போகா

அருள்பரனாம் ஜகதீசன் ஆக்ஞைதனை மீறிச்செய்தால்
வருவதெல்லாம் துக்கமாக வையகத்தில் நேருமண்ணா

140. ஜீவர்களை யாளுதற்குத் திருவுளமொன் றுண்டன்றோ?
பாவபுண்யக் கருமத்திற்குப் பலந்தருமே யதுநிஜமாய்

அழுவுவுந்தானே அசைவதற்கு அருள்பரனே
காரணமாய்க்
காணுமொரு வுண்மைதனைக் கண்டறிந்து
காரியஞ்செய்வீர்

இணங்கிவரும் பெண்ணின்மீது இச்சைகொண்டா
லின்பமுண்டு
வணங்கேனென்று சொல்லும்பெண்ணைப் பலவந்தம்
செய்வதினால்

சுகமணுவுஞ் சனிக்காதல்லா சோகமதே
விளையுமண்ணா
முகக்கோணல் சுட்டும்பெண்மேல் மோகங்கொள்ள
லாகாதண்ணா

மனங்கலந்தே யுறவாடும் மங்கையரால் மனமகிழும்
நினைவுவேறா யிருக்கும்பெண்மேல் நேசங்கொள்ளல்
லாகாதண்ணா

145. பிராணன்றனை விடுவதன்றிப் பரபுருஷன் மீதுசற்றும்
பிரேமைகொள்ளே னென்றிருக்கும் பெண்ணான
சீதையினால்

சுகமுமக்குக் கிடையாதண்ணா சுவாதீன
மாகாளண்ணா
மகிமையுள்ள பெண்ணவளை மனம்வருத்த
லாகாதண்ணா

உத்தமியைச் சித்தம்நொக யத்தனித்தல் குற்றமண்ணா
எத்தனையோ சுத்தமுள்ள பத்தினியாம் சத்தியந்தப்பா

ஜானகியை ஸ்மரிக்கவேண்டாம் தயவுசெய்து
விட்டுவிடும்
வானவரை வணங்கச்செய்யும் மமதையினால்
வேண்டாமண்ணா

ஆகாத பெண்ணின்மீது ஆசைவைத்தல் அழகேயல்ல
தாகாதி குணங்கள்கொண்டு தடந்தப்பல் முறையுமல்ல

150. அழியும்இன்பந் தனிலிச்சை ஆகாதண்ணா ஆத்மஞான
வழியையது தடுக்குமண்ணா வகைமோசஞ்
செய்யுமண்ணா

எத்தனையோ பாக்கியங்கள் இருந்தாலும் ஜகந்தனிலே
அத்தனையும் இன்பமாமோ ஆத்மபோதம்
போலணுவும்

புலன்களுக்கு வசமானால் புத்திகெடும் சத்தியங்கெடும்
மலமுதிக்கும் அலக்கழிக்கும் நலமொழிக்கும்
குலமழிக்கும்

நினைவைவச மாக்கிக்கொண்டு நிகிலஜகந்
தனில்வாழ்ந்து
தன துநிலை யறியுமொரு தந்திரமே சிந்தைகொள்வீர்

உத்தமமாம் ஆத்மசுகம் உமக்கிதுவே யுதவுமண்ணா
நித்தியமில்லை விஷயசுகம் நீர்வெறுக்கத் தருமண்ணா

155. வேதசாஸ்திரா திகளையெல்லாம் வெகுவாகச்
சிக்கறுத்துப்
போதம்வர அனுக்கிரகித்தீர் பூமியிலே நிலைபெறவே

நீதியெல்லாம் நீருரைப்பீர் நிர்மலத்தை நீர்பிடிப்பீர்
ஆதியந்தங் கண்டடுப்பீர் ஆனாயிப்போ
அஞ்ஞானத்தில்

மூழ்குவதேன் நமதுகுல முறையாமோ அறிந்திடுவீர்
தாழ்வுதருங் காரியத்தைத் தள்ளுமண்ணா
தருமமெண்ணி

விசனமதால் மனங்கொதித்து வெகுசாபந் தருஞ்சீதை
விஷமமக்கென் றேயறிவீர் வேண்டாமவள் விட்டுவிடும்

சீதையிந்த லங்கைவந்து சேர்ந்ததின முதலாக
வேதனைக ளரக்கருக்கு வெகுவாக விளையத்தக்க

160. அபசகுனங் காணுதண்ணா அதைச்சொல்வேன்
கேளுமண்ணா
விபரீதம் விளையுமண்ணா விவேகங்கொண்டு
பாருமண்ணா

ஹோமாக்கினி ஜ்வாலையெல்லாம் ஒடுங்கிப்புகை
மீறுதண்ணா
கோமாதி சுபமடையச் செய்யும்நித்திய விதிகளெல்லாம்

நடத்துமிடங் களிலேவந்து நாகங்கள் சீறிக்கொண்டு
தடுக்குதண்ணா பிராம்மண்யத் தருமஞ்செய்ய
வொட்டாமல்

இந்தவித மநேகமாக ஹேஷியங்கள் காணுதண்ணா
வந்துவிடுஞ் கஷ்டமிக வைதேகியை விட்டுவிடும்

கைபலத்தால் சீதையைநீர் கைப்பற்றில் தோஷமில்லை
செய்தருதாம் வஞ்சகத்தால் சீதையைநீ ரெடுத்துவந்தீர்

165. இதனாலே யுமதுசக்தி இளைத்ததென்று
யாருஞ்சொல்வார்
இதுவரையி லிவ்விதமாய் எப்போதுஞ்
செய்ததுண்டோ?

தலைகுனியும் வேலைசெய்து தைரியப்பட லழகாமோ?
பலமில்லை யென்பதைநீர் பலரறியக் காட்டிவிட்டீர்

ஒருகுரங்கு வந்துசெய்த உபத்திரவத்தை யறிந்துபாரீர்
வருந்தீங்கு விளங்குமண்ணா வல்லபரைப்
பகைக்கவேண்டாம்

வானவர்க ளேகருண்டு வானவர்கள் அம்சமவர்
கானகத்தி லவர்கள்வந்த காரணமு மறிந்துபாரீர்

ஜகதீசனே ராமனாக ஜகந்தனிலே யவதரித்து
மகிமையுடனன் லீலைசெய்யும் மர்மந்தனை யறியாமல்

170. அவனுடைய பகைகொண்டால் ஆபத்தாய்
முடியுமண்ணா
சிவனருளைப் பெற்றோரையும் சிட்சிக்க அருகனவன்

அவன்மனதைப் பரசிவமும் அனுசரித்தே
யருளுமண்ணா
எவருமந்த ஸ்ரீராமனை எதிர்ப்பதற்கே யாகாதண்ணா

அரக்கர்செய்த உபத்தரவத்தை யனுபவிக்க மாட்டாமல்
பரிதபித்தே வானவர்கள் பராபரனை
வேண்டிக்கொள்ள

மதமுள்ள அரக்கரைநாம் மனிதனாக வந்தடக்கி
உதவிசெய்வோ மென்றருளி உதித்துவந்தான் ராமனாக

நேரடைந்த வரத்தினது நேர்மைதனை யனுசரித்துப்
பாரிலீசன் ராமனானான் படைகளாகத் தேவரானார்

175. தவப்பயனை நம்பிக்கொண்டு தைரியப்பட
நியாயமிலை
அவதிப்பட்டே யழியவாகும் ஆலோசிப்பீர்
காலோசிதம்

எவர்களுக்கும் அருள்புரியும் ஏகாந்தப்
பொருளேராமன்
தவமுனிவர் நிஷ்டையிலே தங்குங்கடாக்
கொழுந்தேயவன்

வலுத்தவனாம் ஸ்ரீராமனை வணங்குவதே குணமதாகும்
உலகில்ராம னுதவிபெற்றால் உயர்வடைவோம்
பயமொழிவோம்

இகபரத்தில் யாவருக்கும் இன்பந்தருங் கர்த்தனவன்
சுகமயமே ஸ்ரீராமன் சோகமவன் அடையானண்ணா

இராட்சதரின் கொழுப்படக்க இராமன்வனம்
வந்தானண்ணா
ஆட்சேபனை யில்லையண்ணா ஆந்தரியஞ்
சொன்னேண்ணா

180. கரதூஷணாள் முதலாகக் கணக்கில்லா
அரக்கரெல்லாம்
அரைநொடியி லவன்கையால் அதமானா ரதைப்பாரீர்

இதுவரையில் மனிதரிலே இவ்விதமா யெவராயிலும்
உதவியின்றி ஜயிப்பவர்கள் உண்டோயெங்கும்
கண்டதில்லை

இவன்சக்தி அபாரமண்ணா இவனைவெல்லப்
போகாதண்ணா
குவலயத்தி லிவனுக்கெல்லாம் கூடிவரும் நாடிப்பாரீர்

சாகவதமாம் சுகமளிக்கும் சுவாமியைநாம்
வணங்காவிடில்
நாசமுண்டாம் இலங்கைநகர் நஷ்டப்படும்
கஷ்டம்வரும்

உலகமெல்லாம் பெற்றவளே உருவெடுத்து ஜானகியாய்
நிலத்தில்வந்தா ளென்றெண்ணும் நிச்சயமாய்
நினைவுதனில்

185. பாதபூஜை செய்தவளைப் பணிவதற்கே
யோகியராவோம்
சீதையென்று மாதாமீது சித்தங்கொள்ளல் குற்றமாகும்

அவளருளைப் பெற்றவர்க்கு அநேகபாக்யம்
பெருகுமண்ணா
தவமுனிவர் அவளருளால் தரணிதனை
வெல்வாரண்ணா

மோட்சந்தரும் லட்சுமிமேல் மோகமுமக்
காகாதண்ணா
மாட்சிமையைக் கெடுக்குமது மனதைவசங்
கொள்ளுமண்ணா

இப்பொழுதே ஜானகியை இராமன்வசஞ் செய்திடுவீர்
தப்பவேண்டா மிந்தவாக்குத் தருமமக்குச் சுகமிகவே

என்வாக்கைக் கணிசமாக எப்பொழுதும் ஏற்பதோடு
நன்மைதரு மென்றுநம்பி நடந்துவந்த புண்மைபோல

190. நாவுரைத்தே னுமக்கணுவும் நானினையேன்
கபடமண்ணா
தானென்னும் அகந்தையைநீர் தள்ளிவிட்டுத்
துணிந்துசெய்யும்

என்னையுமே நம்பாவிடில் இதமுரைப்போ ராராவர்
என்னுடைய கோரிக்கையை ஈடேற்ற வேண்டுமென்று

கண்ணில்தாரை பெருகத்தம்பி கால்தொழுது
வேண்டுகையில்
எண்ணிப்பார்த்தா னிலங்கேசன் இவன்சொல்லும்
நியாயமெல்லாம்

உண்மையேதா னானாலுமே ஒருநொடியும்
ஜானகியைக்
கண்ணில்காணா திருந்துயிரைக் காப்பதற்கு
முடியாதென்று

கண்மூடித் தனமாகக் கருத்துக்கொண்டு
தம்பியைப்பார்த்
தெண்ணிச்சொல்வா னிவ்விதமாய் என்னருமைத்
தம்பியேகேள்

195. ஜானகியை விட்டுவிட்டுச் சற்றுமெந்த
னுயிரைக்கொண்டு
நானிருக்க மாட்டேனடா நானென்ன செய்வேனடா

ஜகதீசன் ராமனாக ஜனித்திருந்தா லவனெனக்குச்
சுகந்தருவான் சாசுவதமாய்ச் சோகமெல்லா
மொழியுமடா

சுமபல னென்னையிப்போ சுமலாட்சி ஜானகிமேல்
பிரியங்கொள்ளச் செய்தென்னைப் பித்தனாக்கி
விட்டதடா

நிவாத்திமார்க்கந் தனில்மனது நிற்காமல் அலையுதடா
இவன்செயலை யென்னசொல்வேன் சித்தம்வச
மில்லையடா

அறித்தியந்தேக மென்றுநானும் அறிவேனடா
யிப்பொழுது
மனதிலந்தக் கொள்கைதனை மறந்திடவே தோணுதடா

200. பரமார்த்த மார்க்கந்தனில் பற்றுதலே யில்லையடா
தருமாதரும மறிந்துசெய்யச் சற்றுமன மில்லையடா

ஜானகியை யடைந்தவர்கள் தருமமென்னி
விடுவதுண்டோ?
மானயீனம் பார்ப்பதுண்டோ மதிகொண்டு
நடப்பதுண்டோ?

விடுவதற்கு நினைக்குமனம் விடுவதற்கே இணங்காமல்
தடுக்குதடா மிகவுமென்னைத் தலையெழுத்தின்
படிநடக்கும்

உடலையுயிர் விடுஞ்சமயம் உள்ளமது தெளிவடையும்
தடுக்குமதை மயக்கமது சஞ்சலத்தில் அழுத்துமடா

அந்தவொரு அவஸ்தைக்குநான் ஆளானே
னிப்பொழுது
வந்தகஷ்டம் அனுபவிப்பேன் வைதேகியை
விடமாட்டேன்

205. குரங்குகளை யுதவிபெறும் குணமுடையோன்
வெல்வானெனில்
அரைநொடியும் நம்பலாமோ? அவனம்மை
ஜயிக்கப்போமோ?

ஏனிந்தப் பிரமையுனக்கு என்னையாரும்
வெல்வாரில்லை
ஆனமட்டும் பார்ப்பதன்றி அச்சமெனக் கில்லையடா

மனவுறுதி யில்லாதவர் மனிதருக்குப் பயப்படுவார்
இனங்களொடு மனந்துணிந்து எதிர்த்துயுத்தஞ்
செய்பவனாம்

நாலுங்கூட அஞ்சுவது நன்றாமோ நினைத்துப்பாராய்
வானவரே வானரராய் வந்திருந்தா லென்னபயம்?

மனந்துணிந்து செய்தகாரியம் மத்திமிலே
விடப்போமோ
வினைவசத்தைத் தாழவியெல்லா விவகாரம் நடக்குமடா

நமதுசெய லேதுமிலை நடப்பதெல்லாம் கடவுள்செயல்
சமுசயமே யில்லையடா சங்கற்பம் படிநடக்கும்

வருவதெல்லாம் வந்திடும்பார் வையகத்தி
லெவராயினும்
கருமபந்தந் தனைத்தடுக்கக் கருதுவது வீணாகுமே

எதிர்த்துநிற்கும் குணமதுவே ஏற்குமடா ராட்சதற்கு
துதியதினால் மிகவுமுண்டு தோர்வையிலும்
சொர்க்கமுண்டு

எடுத்தகையை மடக்குவதால் எசலொழியும்
எதிர்ப்பாராகும்
நடுவில்விடுங் காரியங்கள் நாணங்கெட்ட
பிழைப்பாகும்

கனவுசெய்த காரணத்தால் கைபலமே யில்லையென்று
விளங்குமொரு நியாயந்தனை விடீஷணனே
யெடுத்துரைத்தாய்

215. நாரிகளின் விஷயந்தனில் நானாவித முயற்சிசெய்து
காரியத்தைச் சாதிப்பது கனக்குறைவே யாகாதடா

முக்கண்ணனும் பெண்மோகத்தால் முறைதப்பி
நடப்பானடா
அக்கருந்தை யறிந்தவர்கள் ஆட்சேபிக்க மாட்டாரடா

செய்தகாரியம் சாதுவென்று சித்தமதில் நிச்சயித்துக்
கைபலத்தைக் காட்டுவது கடமையடா அரக்கருக்கு

தருமமெல்லாங் கெடுப்பதற்கே தானவர்கள்
உதித்துவந்த
மருமந்தனை அறியாமல் மயங்குவது அறிவீனம்

புலிசாப்பம் போலவேதான் புவியில்நா மாவேமடா
நிலவரமாய்ச் சொல்லுகிறேன் நீயதனை யறியவில்லை

220. அந்தந்த ஜீவர்கட்கு அமைந்துள்ள குணமதனைத்
தந்தவனாம் ஜகதீசன்மேல் தப்பிதமுஞ்
சொல்லலாமோ?

சுபாவந்தனை யனுசரித்தால் சொல்வதுண்டோ
குறையதனை
உபாதிபேதப் படிநடக்கும் உலகின்தர்மம் பலவிதமாய்

அவரவர்க்குத் தருமவிதி ஆண்டனே விதித்திருக்கும்
விவரந்தனை யறியாமல் வீணாகக் கலங்குகிறாய்

சுவரவத்தை யிழந்துயிரைக் காப்பதிலே சுகமில்லை
சிவனருளோ மிகவுமுண்டு சீமானாம் நானுந்தானே

பின்னடைந்தா லுலகமெல்லாம் பேசாதோ யேசாதோ
உன்னியதை யாலோசிப்பாய் உறுதிகொண்டு
எனக்குரைப்பாய்

225. நம்மைராமன் வெல்வானானால் நாராயணன்
அவனேயாவன்
சம்மதமே அவன்கையால் சத்கதியை யடைவதற்கு

இல்லையெனில் ஜானகியாள இணங்கவுண்டு
அவளுடனே
நல்லசுகம் நானடைவேன் நானவளை யேன்விடுவேன்?

சீதையைப்போல் ஜகந்தனிலே செப்பவுண்டோ
பெண்களைத்தான்
பாதபூஜை செய்தாலுமே பரமசுக முண்டாகுமே

சீதையொனக் கூடங்காமலே சீறிச்சீறிப் பேசினாலும்
போதுமடா பரமசுகம் பொருந்துமடா அதினாலேயே

என்னசெய்வேன் அவளைவிட எனக்குமவ
மில்லையடா
உன்னுடைய கருத்தறிந்தேன் ஒருவழியும்
தோன்றவில்லை

230. ஆனாலும் மறுபடியும் ஆலோசிப்போம் அனைவருடன்
நானாகத் துணியமாட்டேன் நாலுபேருஞ்
சொன்னபடி

நடப்போமென்று சொல்லிவிட்டு நயந்துதம்பி
தனையனுப்பி
உடனேமிகக் கவலைகொண்டு உள்ளமதி
லாலோசிப்பான்

என்னசெய்வோம் தம்பிமிசு இதங்களெல்லாம்
வந்துரைத்தான்
சொன்னபடி ஜானகியும் சுவாதீன மாகானென்று

பிடிவாதஞ் செய்கிறாளே பின்னடையா ஸ்ரீராமன்
சடுதியிலே வந்திடுவான் சண்டைசெய்யத்
தொடங்கிவிடுவான்

அவனுடனே அமர்புரிய ஆகாதென்று தம்பிசொல்லும்
விவரமெல்லாங் கேட்கும்போது வேண்டாம்சீதை
யென்றவளை

விட்டுவிடத் துணிவோமெனில் விடமனமும்
வரவிலையே
இட்டப்பட்டுக் கொண்டுவந்தோம் இன்பமுண்டா
மென்றுநம்பித்

தொடங்கியதாம் காரியத்தைத் துணிவின்றி
விட்டுவிட்டால்
மடயனென்று சொல்லுவாரே மகிமையெல்லாம்
போய்விடுமே

இதுவரையில் எஸசடைந்தோம் எவ்வுலகும் நடுநடுங்க
உதவிசுலோ மிகவுமுண்டு ஒருவர்நம்மை
ஜயிப்பாரில்லை

குணமுடனே வாழ்ந்துவந்து குவலயத்தில்
மனிதரைநாம்
வணங்குவது பெருமையாமோ வந்ததெல்லாம்
அனுபவிப்போம்

சீதையைநாம் விடுவோமாயின் ஜீவனையும்
விட்டிடுவோம்
நாதனருள் தானுமிலை நற்கதியும் இல்லையப்பால்

240. நஷ்டமாகும் சகலமுமே நாடிப்பார்க்கில்
யுத்தஞ்செய்தல்
சுவ்டமாகக் கண்டாலுமே காரியசித்தி மிகவுமுண்டு

ஜானகியை வைத்திருந்தால் சண்டையுண்டாம்
அதினாலே
ஆனபடி யானாலுமே அனுகூலம் மிகவடைவோம்

இகத்தில்சுகம் பொருந்தாவிடில் இன்பமுண்டு
பரகதியில்
மகலட்சுமிபோல் வுள்ளசீதை வந்ததன்மேல்
குறையுமுண்டோ?

ஆலகமினால் மனிதரோடு அமர்புரிதல் நமதுகடன்
தாகமதில் கொள்வதுவே தருமமென்று நிச்சயித்தான்

அந்தவேளை பயங்கரோடு அரணவத்தின்
வடகரையில்
வந்துவிட்டான் ராமனென்று வந்துரைத்தார்
சாரணர்கள்

ஸ்ரீராமன் சமுத்திரத்தின் வடகரையில் படை
களோடு வந்திருப்பதாக இராவணன் கேட்டு,
சபைகூட்டி மந்திராலோசனை செய்வதும்,
இராவணனுடைய இஷ்டத்தை யனுசரித்து பேசிய
பிரகஸ்தன் இந்திரஜித்தன் இவர்களை, விபீஸணன்
தடுத்துத் தருமாதிகளை யெடுத்துரைப்பதும்,
அதற்காக அவனை நிந்தித்துத் துரத்துவதும்

245. அந்தச்சேதி கேட்டரக்கன் அப்பொழுதே ரதமேறி
வந்துசேர்ந்தான் வேகமாக மந்தராலோ சனசபைக்கு

சபையில்சிம்மா சனந்தனிலே சட்டமெட்டோ
டிருந்துகொண்டு
உபசரிக்கும் போர்களான ஊழியக்காரர் யாவர்களும்

பிருதுசொல்லி வாழ்த்துமொரு பெருமையினால்
மகிழ்ந்தரக்கன்
இருந்தானம்மா அவனுடைய இருப்பென்ன
சொல்வேனம்மா

அதன்பிறகு நகரிலுள்ள அனைவரையும்
அழைப்பிவிக்க
விதம்விதமாம் வாகனத்தில் வெகுபோர்கள்
வந்துசேர்ந்தார்

கும்பகர்ணன் தானும்வந்தான் குமாரனிந்திர
ஜித்தன்வந்தான்
தம்பிவிபீ ஷணனும்வந்தான் தருந்தமந்திரி
மார்கள்வந்தார்

சகலருமாய் நிறைந்திருக்கும் சபைதனிலே
ராவணனாம்
அகங்கொழுத்த அரக்கனவன் ஆரம்பித்தான்
பேசுதற்கு

அப்பொழுது இளைத்திருக்கும் அங்கத்தோடு
அவனிருந்தான்
எப்பொழுது ஜானகியின் இன்பமது கூடுமெனும்

விரகதாப பாதையினால் வேறெதிலும்
மனஞ்செல்லாமல்
அரைநொடியும் அக்கருத்தில் அழுந்தியுள்ள காரணமே

அன்பர்களே நண்பர்களே அறிவுடைய அரக்கர்களே
நன்மையெண்ணி யெனக்குநீங்கள் நாளுஞ்செய்யும்
உபகாரத்தை

மனதிலெண்ணி வரவழைத்தேந் வந்தீர்க
ளன்புகொண்டு
அனைவர்களும் வந்ததற்கு அகமகிழ்ந்தேன்
மிகக்குளிர்ந்தேன்

இருநினைவா யென்னிலுள்ள எண்ணங்களி
லுங்களுக்குப்
பிரியமுள்ள வழியைப்பற்றிப் பெருமைபெற
வேண்டுமெனும்

ஆசைகொண்டு வுங்களைநான் அழைப்பித்தேன்
சொல்வேன்கேளீர்
மோசம்போகா திருக்கும்படி மொழிந்திடுவீ
ரபிப்பிராயம்

காரணமாகக் கெட்டிடுவீர் கனமடைய உரைத்திடுவீர்
சவரணையா யாலோசிப்பீர் சமத்துடனே
பதிலுரைப்பீர்

அற்புதமாம் பெண்ணொருவள் அகிலங்களில்
அவள்போலச்
சொற்பனத்துங் காண்பதுண்டோ சொக்கும்படி
அழகுள்ளவள்

அரணியத்தில் அயோத்திநகர் அரசன்மகன்
ராமனோடு
பிரியப்பட்டு வந்தவளாம் பெருமையுள்ள
அவள் மனைவி

260. சீதையென்று சொல்வாரிந்த ஜெகந்தனிலே
அவளுடைய
பாதங்களி னழகுக்கிணை பார்க்கவுண்டோ
பெண்களெங்கும்

கண்விரிந்த ஜானகியைக் கண்டவுடன் வேறெதிலும்
எண்ணமது செல்லாது எவர்மனதும் பற்றிவிடும்

ஜகஞ்சோதி போலுங்கள் ஜானகியின் சேதிகேட்டு
அகமிழ்ந்தே போயவளின் அழகைக்கண்டு
பிரமித்துவிட்டேன்

அவள்கணவன் ஸ்ரீராமன் அதிபலவான் அதுவுமன்றி
அவன்தம்பி லட்சுமணன் அவனுமிகப் பலமுடையோன்

ஆலகையினார் பலவார்கள் முன்மேல் அந்தப்பெண்ணை
யபகரிக்கத்
தாகங்கொண்டால் முடியாதென்று தந்திரமாய்
அவர்களைநான்

265. சீதையுள்ள இடத்தைவிட்டுச் செல்லும்படி
செய்ததன்மேல்
ஆதரணை யில்லாமல் அவளிருக்குஞ் சமயந்தனில்

போயவளை யெடுத்துவந்து புத்திமிகச்
சொன்னதின்மேல்
நேயங்கொண்டு வருஷமொன்று நினைத்துக்
கேட்டாள் கெடுக்கொடுத்தேன்

சீதைசொல்லா வாக்கிதனைச் செப்பினதாய்ச்
சபைதனிலே
போதமில்லா அரக்கன்சுத்தப் பொய்யுரைத்துப்
பின்னுஞ்சொல்வான்

அவளிஷ்டப் படிகெடுவு அளித்தவளை வைத்திருக்கு
அவளுடைய கணவனுடன் அவன்தம்பி லட்சுமணனும்

வானரராம் படைகளோடு வடகரையில் வந்திறங்கி
ஜானகியை மீட்பதற்குச் சண்டைசெய்ய
இஷ்டங்கொண்டு

270. இருப்பதாகச் சேதிகெட்டு வல்லோருடன்
ஆலோசிக்க
வாவழைத்தே னுங்களைநான் மதியுடனே
ஆலோசிப்பீர்!

அரணவத்தைத் தாண்டிக்கொண்டு அவர்கள்வர
மார்க்கமிலை
ஒருவேளை வந்தாலுமே உண்டோநம்மை ஜயிப்பதற்கு

அவ்விதமாய் நினைத்துகொண்டு அசந்திருக்க லாகாது
இவ்விடத்தி லொருகுரங்கு எண்ணிவந்து
ஓட்டிசெய்து

அரக்கர்களை மதிக்காமலே அநேகம்பேரை
வதைத்ததைநாம்
கருதிப்பார்க்கில் மனிதராலே கஷ்டம்வர நேரிடலாம்

இந்தப்படி சொல்லுகையில் இளையவனாம்
விபீஷணனும்
அந்தச்சபை தனிலிருக்க அவனைக்கண்டும்
உருக்கத்தோடு

275. அரக்கர்மன்னன் சொல்லுகிறான் ஆராயினும்
என்னைவெல்ல
இருப்பதுண்டோ வெவ்வுலகும் எல்லையில்லாப்
பலமுடையோன்

நானாவே னாகையினால் நானஞ்சேன் யாருக்குமே
ஆனாலும் நீங்களெல்லாம் ஆலோசித்து யுத்தஞ்செய்ய

என்னென்ன வேண்டியதோ எல்லாமிப்போ
நிச்சயிக்கப்
பின்னடையாத் துணிவுடனே பிரயத்தனங்கள்
செய்வதற்கு

ஆலோசித்துச் சொல்லுமென்றான் அப்பொழுது
கும்பகர்னன்
காலோசிதங் கண்டறிந்து கால்தொழுது
தமயன்முன்னே

சொல்லுகிறான் கோபத்தோடு சுத்தமாக உமக்கணுவும்
இல்லையண்ணா யோசனையும் இப்படியுஞ்
செய்யலாமோ?

280. பெருமையெண்ணி நடப்பதினால் பேருண்டு
அதைவிட்டுத்
தருமவழி தனைக்கடந்து தந்திரங்கள் மிகவுஞ்செய்து

மனிதரும்மை வெல்லாரெனும் மமதையை
யறிந்துகொண்டு
தனியாக விருக்கும்பெண்ணைத் தஸ்கரிக்க
லாமேபாரீர்

பயந்தெடுத்து வந்ததினால் பாரிலும்மைப்
பேடியென்பார்
தயிரியத்தை விட்டொழித்துத் தலைகுனிய
நடந்துகொண்டீர்

நெஞ்சுறுதி யில்லாதவர் நினைக்கலாமோ
யுத்தஞ்செய்ய
அஞ்சியவர் அடங்குவதே அறிவாகும்
உண்மைசொன்னேன்

உம்முடைய மனநிலைமை யுள்ளபடி யோசிக்கையில்
செம்மையாக விளங்குதண்ணா ஜெயிக்கமாட்டீர்
மனிதரைநீர்

285. இதுவரையி லுயிர்கொண்டு இருப்பதுமே
தெய்வச்செயல்
சதிசெய்த கார்யத்தால் சங்கடங்கள் மிகவிளையும்

வலுத்தவரைப் பகைப்பதினால் வந்திடுந்தீங்
கென்பதையும்
குலத்தினது பெருமையையும் கொஞ்சமும்நீ
ரெண்ணவில்லை

சீதையைநீ ரெடுத்துவந்த சேதிதனை யந்தவுடன்
ஆதரவா யுள்ளோரெல்லாம் அறிந்திடவே
செய்யாமல்

அடக்கிவைத்தீர் இதுவரையில் அனைகடந்து
போனதன்மேல்
நடுவழியி லாலோசித்தால் நன்மையுண்டோ
நஷ்டமின்றி

மனதிலச மிகவுங்கொண்டு வாக்கில்தைரியங்
காட்டுகிறீர்
சுனமழிய நடந்துவிட்டீர் சைபலத்தை
யொழித்துவிட்டீர்

290. இந்தவிதஞ் சொல்லுகையில் இருக்குமன்னன்
முகக்குறியாம்
அந்தநிலை கண்டுகொண்டு அதன்பிறகு
சொல்லுகிறான்

போனதெல்லாஞ் சொல்லியினிப் பொருந்தவுண்டோ
மனங்கலங்கும்
நானுரைக்குங் கருத்தெண்ணி நடப்பதுதான்
அறிவாரும்

இனிமேலும் சீதையின்மேல் எண்ணமுமக்
கிருக்குமாயின்
ஆனமட்டும் உழைப்பதற்கு அடியேனா லாகுமண்ணா

இப்படியெல்லாஞ் சொன்னேனென்று இப்படனைநான்
ஓயிப்பேனப்பால்
தாமந்தச் சீதையோடு தாராளமாய்ச் சுகப்படுவீர்

மனிதருக்கும் வானரர்க்கும் மடங்கவேண்டாம்
ஒருநொடியில்
அனைவர்களும் அதமாக அவர்களைநான்
அடித்திடுவேன்

295 நானிருக்க உமக்கணுவும் நாடாது குறையண்ணா
ஏனிதற்காய் ஆலோசனை என்றுதைரியஞ்
சொன்னானம்மா

இவ்வண்ணமன் வெல்வானென்று இவன்வாக்கில்
வந்தசொல்லின்
விவரந்தனை யறிந்ததெல்லாம் விபீஷணனா
மொருவனேயாம்

அண்ணன்மனப் போக்கறிந்து அலப்புமந்தக்
கும்பகர்ணன்
எண்ணத்திற்காய் விபீஷணனார் என்னசெய்வோ
மென்றிருந்தார்

மந்திரிகளில் பிரகஸ்தனென்போன் மன்னவனைப்
பார்த்துரைப்பான்
சுந்தரியாம் சீதையோடு சுகப்படுவீர் சுவலைவிட்டுக்

குணமுடனே இணங்காவிடில் குக்குடம்போல்
பலவந்தமாய்
அணைந்தவளைச் சுகமடைய ஆட்சேபணை
யில்லைபையா

300. என்முதலா யிதேகமெல்லாம் இருக்கவும்க்
கேன்சுவலை?
நன்மையுண்டா முமக்குமிக நஷ்டசுவ்டம் வருவதில்லை

இந்திரஜித்தன் கும்பகர்ணன் இன்னும்பல பலவான்கள்
எந்தவேளை யுத்தமென்று எதிர்பார்க்கின்றா
ரெல்லோரும்

வானரரும் மனிதர்களும் வந்துநம்மைச் செய்வதென்ன?
சேனைகளோ மிகவுமுண்டு ஸ்ரீராமன்
ஜயிக்கமாட்டான்

நம்முடைய பலங்களெல்லாம் நாடியும்மில்
அறிந்துபாரீர்
தம்முடனே யுத்தஞ்செய்து தலைதப்பிப்
போவோருண்டோ?

ஆழமறி யாமல்வந்து அரக்கருடன் அமர்புரிய
ஏழையான மனிதராலே எப்படித்தா னாகுமையா

305. ஆகையினால் யுத்தஞ்செய்ய அனைவருக்குஞ் சம்மதமே
தாகங்கொண்ட படிதானே ஜானகியை யனுபவித்துச்

சுகம்பெறுவீ ரென்றுரைத்தான் சுத்தமுடன்
பிரகஸ்தனம்மா
முகமலர்த்தான் அதைக்கேட்டு மூடனான
தசகண்டனும்

அதன்பிறகு பிரகஸ்தன்றனை அரக்கர்மன்னன்
பார்த்துரைப்பான்
மதியுள்ள மந்திரியே மனசுருத்துச்
சொல்லவேண்டுவதாம்

ஆகாச மார்க்கந்தனில் அப்ஸரஸ்திரீ
யொருவள்போனாள்
மோகாவேசங் கொண்டவளை முறைதப்பிப்
பிடித்துக்கொண்டு

அனுபவித்தேன் பலவந்தமாய் அதையறிந்து
பிரம்மதேவர்
எனக்குத்தந்தார் சாபமப்போ இவ்விதமா யினிமேலாக

310. எந்தஸ்திரீ யாகிலுமே இணங்காம
லிருக்கையிலே
சிந்தைநோகப் பலவந்தம் செய்தவளை யனுபவித்தால்

மண்டைநூறாய் வெடித்துமென்றார் வந்துசாப
மதைக்கொண்டு
அண்டிச்சீதை தனைப்பிடித்து அனுபவித்து அனந்திக்க

இல்லையென்று சொல்லியந்த இசைந்தமந்திரி
தனைப்புகழ்ந்தான்
வல்லபன்றா னென்றுமிக மந்திரியும் மகிழ்ந்தானம்மா

கும்பகர்ணன் பேசினதும் குணங்கெட்ட
மந்திரிசொல்லை
நம்பியிலங் கேசன்சொன்ன நாணங்கெட்ட
வார்த்தைகளும்

அனைவர்களும் கேட்டாரம்மா ஆட்சேபிப்போ
ரில்லையம்மா
மனந்துணிந்தே யெழுந்தாரம்மா மகிமையுள்ள
விபீஷணனார்

315. நீர்மூடன் ராவணனை நேராகப் பார்த்துரைப்பான்
தர்மமல்ல என்வாக்கைத் தள்ளுவது எள்ளளவும்

பாவிகளா யுள்ளவர்கள் பலவிதமாய்த்
தூண்டுவார்கள்
ஆவல்கொண் டவர்கள்வழி அனுசரித்தா
லனர்த்தமுண்டாம்

அவர்கள்வாக்குத் தீங்குதரும் அவர்களும்மை
யாதரியார்
இவர்களைநீர் சத்துருவாய் எண்ணுமென்று
சொல்லிவிட்டுப்

பிரகஸ்தன் றனைப் பார்த் துரைப்பான் பேதையேநீ
மந்திரியோ?
நீர்மூடன் நீயேயாவாய் நேர்வழியை விட்டுரைத்தாய்

வருங்கேடு அறியாமல் வக்கணையாய்ப் பேசுகிறாய்
மருமந்தனை யறியாமல் மமதைகொண்டு பேசுகிறாய்

320. அறுகூலஞ் செய்வதற்கு அடுத்திருக்கும்
போர்களெல்லாம்
மனம்போன படிபேசுதல் மரியாதை யாகாதடா

எத்தனையோ பலங்களெல்லாம் இருக்குதென் று
துள்ளுகிறாய்
சத்துருவாம் ஸ்ரீராமன் சக்திதனை யறியாமல்

ஒருநொடியி லுலகையெல்லாம் ஒழித்திடுவான்
மறுபடியும்
அரைநொடியில் ஜகமெல்லாம் அமையும்படி
காட்டிடுவான்

எதிரிபலங் கண்டல்லவோ எதிர்த்தால்நாம்
ஜயமடைவோம்
மதியில்ஸ்ரீ ராமனிட மருமந்தனை யறிமாமல்

துணிந்துரைத்தாய் அரசருக்குத் துணைசெய்வோன்
நீயாகாய்
குணங்கெட்டே பேசிவிட்டாய் குறையடைச்
சொல்லிவிட்டாய்

325. இந்தவித மநேகமாக எடுத்துரைக்கும் வேளையிலே
அந்தவார்த்தை களைக்கேட்டு ஆத்திரங்கொண்டு
இந்திரஜித்தன்

சீறும்நாகம் போலெழுந்து சிற்றப்பா போதுமையா
கூறுமொழி தனைக்கேட்கக் கோபமிக மீறுதையா

அரக்கர்குலந் தனில்பிறந்து அணுவளவும்
சொளரியமின்றி
இருக்குமும்ம ஜன்மமிக இழிவுள்ள தென்றறிவீர்

பெண்மதியைக் கொண்டோடிப் பேசவந்தீர் ஏசும்படி
எல்சாணாம் உடம்பெடுத்து ஏனிதித்தீர் நாணமின்றி

சக்தியற்ற அரக்கருக்கும் சரியாகீர் கடையாவீர்
பக்திகொண்டு மனிதருக்குப் பயப்படவே மிரட்டுகிறீர்

330. இந்திராதி தேவரெல்லாம் எனக்கடங்கி
ஏவல்செய்யும்
இந்தச்சேதி யறிந்திருந்தும் அலப்புகிறீர் அஞ்சும்படி

மனிதரைநாம் வணங்குவது மதியீன மாகுமன்றோ?
கனக்குறைவாய்ப் பேசிவிட்டீர் கஷ்டமிவரு மென்றுமிக

இங்கிருக்கும் அரக்கர்களில் ஏழையா யுள்ளவனும்
சங்கையின்றி மனிதர்களைச் சங்கரித்து வந்திடுவான்

தமயனுக்கும் இதமுரைக்கும் தம்பியென்று
உம்மைச்சொல்ல
இமைப்பொழுதுங் கூடாதையா ஈனமதி தனைவிடுவீர்

அரக்கர்குலப் பெருமையெல்லாம் அழிக்கவந்த
மதியீனரே
பெரும்புலியும் பசுவைக்கண்டு பின்னடையு
மென்பதுண்டோ?

335. சிம்மத்தின்முன் யானையுந்தான் சீறிவரு
மென்பதுண்டோ?
நம்மிடத்து மனிதர்வந்து நாடவுந்தான்
துணிவதுண்டோ?

போதுமையா நீருரைத்த புத்தியெல்லாங்
கேட்டோமையா
சீதைதனை விடுவதற்குச் சிறிதும்நியாய மில்லையையா

எதிரிகளை வென்றையன் இன்பப்படச் செய்யவுண்டு
அதிலேதும் ஐயமில்லை அடக்கும்வாயை
யென்றுரைத்தான்

இந்தவாக்கைக் கேட்டுமிக எரிச்சல்கொண்டு
விபீஷணனார்
சிந்தைமிக நொந்துகொண்டு செப்புகிறார்
அவனைப்பார்த்து

பில்லப்பயன் நீயுந்தானே பேசுகிறாய்
பெருமைகொண்டு
எல்லையில்லா வல்லபரை எதிர்க்குன்னா லாகாதடா

340. சூரியன்முன் பனியொடுங்கும் சூட்சுமம்போல்
ராமன்முன்னே
ஆருமஞ்சி யடங்குவார்கள் அதையறியா துளறுகிறாய்

இந்திராதி தேவரைப்போல் இராமனைநீ
யென்னவேண்டாம்
எந்துலகும் புகழுமொரு ஈசனென்றே
யவனைக்கொள்வாய்

வந்திடுவான் ராமனிங்கு வாழ்வொழியும் லங்கையிலே
அந்தரங்கம் அறியாமல் அகங்கரிக்க லாகாதடா

---

339. பில்லப்பயன் - பிள்ளைப்பையன்

அவனைவெல்லப் போகாதடா அவனெமனே
யரக்கர்க்கடா
குவலயத்தைச் சீர்ப்படுத்தக் குறித்துதித்த கடவுளடா

மனிதனென்று நம்பிக்கொண்டு மமதைகொள்ள
வேண்டாமடா
அனைவரையும ஆளுகின்ற அதிகாரி அவன்தானடா

345. உன்னுடைய கொட்டமெல்லாம் ஒருநொடி
யிலடங்குமடா
பின்னடைவாய் மனிதர்முன்னே பெருமைபேச
வேண்டாமடா

என்னைமிக ஏளனமாய் எடுத்தெறிந்து பேசினது
உன்னுடைய அறிவீனமென்றுணர்ந்தேனடா
மீறவேண்டாம்

மரணகாலீம் அடுத்திருந்தால் மதிகெடுமென்
றுலகில்சொல்வார்
வருந்தீங்கை யறியாமல் வல்லபன்போல் பிதற்றுகிறாய்

இதமுரைக்கு மென்னையுமே இழிவாகப் பேசலாமோ
மதமடக்க வந்திருக்கும் மனிதராலே மடிந்திடுவாய்

துள்ளுமாடு சுமையெடுக்கும் சர்மார்க்கன்
துணையடையான்
கள்ளநினை வுள்ளவனோ கதியடையான்
காலமெல்லாம்

350. ஐயன்நடை கண்டறிந்து அடங்குவதே அறிவாகும்
கைபலத்த ராமனாலே கஷ்டநஷ்டம் மிகவும்வரும்

இந்தவிதஞ் சொல்லியந்த இந்திரஜித்தன் வாயடக்கி
வந்தனத்தைத் தமயனுக்கு வகையோடு செய்துநின்று

அனுக்கிரகிக்கும் ஆதரிக்கும் அருமையான
அண்ணனேநீர்
எனதுவாக்கை மீறவேண்டாம் இஷ்டப்படி
நடப்பவனான்

பிர்மகுலந் தனிலுதித்தோம் பெருமைமிக
நாமடைந்தோம்
தர்மம்முறை தனைவிடுத்தால் தரணியெல்லாம்
பழிக்குமண்ணா

அதையொருக்கா லாலோசிக்க அவசியமில்லை
யென்றாலும்
ஒதுங்கும்நமக் குள்ளதெல்லாம் ஒழியுமிந்த
உலகவாழ்வும்

355. நம்பியிதைத் தொடுத்தகாரியம் நாமொழிக்க
வேண்டுமண்ணா
சம்பவிக்குங் கஷ்டத்திற்கு சம்மதிக்க லாகாதண்ணா

செல்வப்பிள்ளை இந்திரசித்தன் செப்புவதை
நம்பவேண்டாம்
பல்முளையாப் பிள்ளைசொல்போல் பாராட்டித்
தள்ளுமண்ணா

அனுபவங்க ளில்லாதவர் அபிப்பிராயங் களைக்கேட்டு
மனந்குலைய லாகாதண்ணா மகத்தான கஷ்டந்தரும்

அதிபலவா னிந்திரஜித்தன் ஆனாலுமே அனுபவத்தில்
முதிர்ந்தவரா யுள்ளவரின் மொழிகள்போல்
எண்ணவேண்டாம்

மந்திரியாம் பிரகஸ்தன்வாக்கும் மதிப்புள்ள
தாகாதண்ணா
அந்தப்பாவி மதியைக்கேட்டால் அனர்த்தங்கள்
விளையுமண்ணா

360. அனுபவித்தில் முதிர்ந்தவராம் அண்ணன்கும்ப
கர்ணனுமே
மனதிலொன்று வாக்கிலொன்றாய் மாறியவர்
பேசினரே

ஆரம்பத்தில் உமதுசெயல் அயோக்கியமென்று
சொல்லிவந்து
நீரிருக்கும் முகக்குறியின் நிதானங்கண்டு
நினைத்ததன்மேல்

உமதுமனப் போக்கின்படி உரைத்தாரவர்
கருத்துதனை
சமுசயமே யில்லையண்ணா சற்றுரைப்பேன்
கேளுமண்ணா

சிறியவராம் அண்ணன்வாக்கைச் செவிகொடுத்துக்
கேட்டீரன்றோ
அறிந்திருப்பீர் அவருடைய அந்தரங்க
அபிப்பிராயத்தை

இராமனென்னை வென்றிடுவான் இராமனைநான்
ஜயிப்பேனென்றார்
கேடுமதி லுண்டோபாரீர் செம்மையாக ஆலோசித்து

365. மனக்கருத்தை அனுசரித்து வந்துதண்ணா
அண்ணன்வாக்கு
நினைத்துப்பார்க்கி லண்ணனுக்கு நெஞ்சுறுதி
இல்லையண்ணா

முன்னுக்குப்பின் விரோதமாக மொழிந்தவொரு
காரணத்தை
இன்னபடி யென்றறிந்தால் எண்ணமது
விளங்குமண்ணா

என்னைப்போல்க் கண்டிதமாய் எல்லோருஞ்
சொல்லாமல்
மன்னவரே உம்முடைய மனப்போக்கைப் பற்றுகிறார்

உமக்குவரும் கஷ்டசுகம் உற்றபடி யெனக்குமென்றே
சமுத்துமக்கு விருக்குமொரு சுதந்தரத்தால்
சொல்லுகிறேன்

அனுசரிக்கும் மார்க்கமது அனுகூலந் தருமென்னில்
மனப்போக்கைத் தடுப்பதற்கு மனமில்லை
யெந்தனுக்குக்

370. கஷ்டமுமச் சுணவும்வரும் காரியமா
யிருக்குமானால்
இஷ்டங்கொண் டுமைத்தடுக்க எனக்குண்டு பாத்தியமே

பணிவிடையும் பாதுகாப்பும் பரிந்துசெய்ய
உள்ளவனான்
குணமடையச் சொல்வேனண்ணா குறித்ததனைக்
கேளுமண்ணா

தீங்குடுத்து வருகையிலே தெரிந்ததனைத் தடுப்பதற்குப்
பாங்குரைக்கும் என்வாக்குப் பரிபாலிக்கும் உம்மைமிக

ஆதரிக்கும் உமக்கணுவும் பாதகத்தை நானினையேன்
வேதனைகள் விளையுமண்ணா வேண்டாமண்ணா
ராமன்பகை

அகிலலோக நாயகனே அருள்கொண்டு ஜகந்தனிலே
மகிமையுட்ன் லீலைசெய்ய மனிதனாக அவதரித்து

---

367. கண்டிதம் - கண்டிப்பு

375. வந்தவனாம் ஸ்ரீராமன் வணங்கியவன்
கிர்பையடைந்தால்
தந்திடுவான் இகபரத்தில் சகலசுகம் அகமகிழ

அவனன்றி ஜகந்தனிலே ஆவதொன்று
மில்லையண்ணா
தவமுனிவர் நிஷ்டையிலே தங்குகின்ற பொருளவனே

எண்ணிலவன் ஜகந்தனிலே எதுவும்வச மாகுமண்ணா
கண்ணொளிக்குக் காரணமாய்க் கண்டுகொள்வீர்
ஸ்ரீராமனை

இராமன்சக்தி தனையறிந்து இரகசியமாய்
ஜானகியைக்
காமன்கொண் டெடுத்தவொரு கருத்தும்மில்
நிலைத்திடுமே

அஞ்சுங்குண மிருக்கையிலே அமர்புரிந்து
வெல்வதுண்டோ
கெஞ்சும்வழி யன்றியிலே கிடைக்குவுண்டோ
ஜானகியும்

380. அடைந்திருக்கும் பாக்யமெல்லாம் அரைநொடியி
லொழிந்திடவே
திடப்படுத லாகாதண்ணா தயவுசெய்து கேளுமண்ணா

விலையுயர்ந்த பொருள்களைநாம் வெகுமதியாய்த்
தருவதோடு
குலஸ்திரியாம் ஜானகியைக் குணமுடனே ராமனிடம்

ஒப்புவித்தா லுயிர்பிழைப்போம் உண்மையண்ணா
கண்விழிப்பீர்
இப்படிநான் சொல்வதெல்லாம் இதமென்றே
நம்புமண்ணா

உம்முடைய துணிவுகண்டு ஒதுங்கிவிட
எண்ணினாலும்
சம்மதமே யில்லையண்ணா சகோதரவாஞ்
சல்யத்தினால்

உடன்பிறந்தோர்க் கிடருண்டாம் உண்மைதனைக்
கண்டறிந்து
அடுத்தவர்க்கு இதமுரைத்தல் அண்ணன்தம்பி
கடமையண்ணா

385. ஆண்டவன்ஸ்ரீ ராமனிட ஆந்தரியம் அறியாமல்
தூண்டுவார்கள் மதியீனர் துணைவரவ ராகாரண்ணா

இந்தவித மநேகஞ்சொல்லி இராவணனை
மிகப்பணிந்து
சிந்தைமிக நொந்துரைத்தான் சீலமுள்ள
விபீஷணன்றான்

உரைத்ததெல்லாங் கேட்டானம்மா உணர்விழந்த
இலங்கேசன்
சுருதித்தன்னி லாலோசித்தான் சுவலைகொண்டான்
மிகவுமம்மா

ஜானகியை விடுவதற்குச் சம்மதமே யில்லையம்மா
ஆனபடி யாகட்டுமென் றவனெண்ணினான்
ஏனெனிலோ

தசகண்டன் வாழ்வொழியும் தருணமது நெருங்கியதால்
குசலம்பெறச் சொன்னவாக்கைக் குணமாகக்
கொள்ளாமல்

390. கண்சிவப்பக் கோபங்கொண்டு கடுக்டுப்பா
யுறுமிக்கொண்டு
உண்மையுள்ள விபீஷணரை உதாசீனமாய்ப்
பேசுகிறான்

தம்பியாக வந்துதித்த தாயாதிக் காரனே கேள்
அம்புவியில் என்னைவெல்ல ஆருமிலை யென்றறிவாய்

திருவோங்கு சுளை ஜயித்த தீரனான எனைப்பார்த்து
கருதிச்சொன்னாய் மனிதர்களின் காலில்விழப்
புத்திமிக

இந்தப்படி யுரைப்பவர்கள் எவருமிலை யுனையன்றி
வந்துவிடுங் கஷ்டமென்று வகையறியா துளறுகிறாய்

என்மீது அன்புடைய என்பிறப்பு நீயாகாய்
நன்மைசெய்ய உள்ளவனாய் நானுன்னை நம்பிவந்த

395. புத்தியீனந் தனைநினைத்தால் பொங்குதடா
மனமிகவும்
எத்தனையோ அன்புவைத்த என்னைமிக
அவமதித்தாய்

எனக்குத்தீங்கு வருமென்று எண்ணிமிகப் பயப்படவே
உனதுசக்தி தனைக்காட்டி உரைத்ததெல்லாம்
அறிந்தேனடா

உடன்பிறப்பா யுள்ளவரில் ஒருக்காலும் அழகலம்
அடைவதற்கே யாகாதென்று அநேகர்சொல்வா
ருலகுதனில்

அண்ணன்தம்பி யாகவுள்ள அவர்கள்தானே
சத்துருவாவார்
கண்ணைக்கொப்பாய்க் காத்தாலும்மை சுபடமாக
நடப்பாரவர்

செய்தநன்றி மறப்பாரவர் கேடுமந்தர மாட்டாரவர்
வையகத்தி லவருடனே வாழுவது இழிவாகுமே

400. சகந்தன்னை யனுபவிக்கும் சோதரனைக்
கண்டாலவர்
அகம்நோவார் அன்புவிட்டு அரூயைகொள்வார்
நிசமாகவே

ஆனையுமே தாயாதியை அனுசரிக்க மாட்டாதடா
ஈனந்தரு மென்றதுவும் எண்ணியப்பா லொதுங்குமடா

பாக்கியத்தில் பங்கடையப் பரிந்துவந் தடுப்பாரடா
வாக்குநயம் பேசிமிக வஸ்துக்களைக் கிரகிப்பாரடா

அன்புமுண்டோ சூதிகட்கு அவரைநம்பிப்
பிழைப்பதுண்டோ
நன்மையவர் செய்வதுண்டோ நன்றியுண்டோ
அவர்க்கணுவும்

சமயம்வரும் வேளையிலே சற்றுமவர் உதவமாட்டார்
இமைப்பொழுது மவரைநம்பில் இழிவடைய நேருமடா

405. சத்துருக்கள் பட்சத்திலே சார்ந்திருந்து
கெடுப்பாரடா
பத்தியமாய்ப் பிராதாவின்மேல் பட்சங்கொள்ள
மாட்டாரடா

தாயாதி யுள்ளவர்கள் தலையெடுப்ப தரிதாமடா
மாயாவி போலடுத்து மயக்கிக்கனங் குறைப்பாரடா

உன்னைமிக ஆதரித்தேன் ஒருபயனும் நமக்கில்லை
என்னைமிக அலட்சியமாய் எண்ணிச்சொன்னாய்
கனங்குறைய

நாலிருக்கும் பெருமையென்ன நானடைந்த
ஏசலென்ன?
ஈனம்வரு மென்றுரைத்த உன்னுள்ளங் கள்ளமடா

என்னைக்கண்டால் பொறாமைமிக எழும்புதடா
உன்மனதில்
மன்னவனா னென்றுசற்றும் மனதில்பய மில்லையடா

நன்றிகெட்ட தம்பியென்று நன்றாக அறிந்தேனடா
இன்றுமுத லுன்னைப்பார்க்க எனக்குமன மில்லையா

ஜானகியை விடுவேனென்று சற்றும்நீ
யெண்ணவேண்டாம்
நானுன்னை யிதுவரையில் நம்பினது அறிவீனம்

எங்காயினும் தொலைந்துபோவாய் என்னெதிரில்
நிற்கவேண்டாம்
பொங்குதடா உனைக்கண்டால் பொல்லாத
கோபமடா

தம்பியாய்நீ யில்லாவிடில் தலையுனக்கு மிஞ்சாதடா
நம்பப்போகா துன்னையினி நடந்திடுவா யிப்பொழுதே

அங்கமது இடஞ்சல்செய்தால் அறுத்தெறியும்
உவமைபோல
பங்குஞ்செய்யும் உன்னையிப்போ பரித்தியாகஞ்
செய்தேனென்று

பலவிதமா யவமதித்தான் பார்த்தந்தப் பாவிதனை
நலங்கருதும் விபீஷணனார் நமஸ்கரித்து
அப்பொழுதே

மந்திரிகள் நால்வருடன் மனஞ்சலித்து அங்கிருந்து
இந்தப்பாவி இணங்கமாட்டான் என்றெழுந்து
ககனமதில்

வந்துநின்று மறுபடியும் வாஞ்சையினால்
சொல்லுகிறான்
எந்தனைநீ ரெடுத்தெறிந்து இப்படியும் பேசலாமோ

சூடிகேடர் வார்த்தைகளைக் குணமாகக்
கொண்டென்னைச்
சிடுத்துப்பேசித் துரத்திவிட்டீர் சிவன்செயலைத்
தடுக்கப்போகா

காமமீறி யுமைமறந்தீர் கல்மூடித் தனமாக
இராமன்பகை தேடிக்கொண்டீர் இராட்சஸரின்
குலமழிப்பீர்

420. சத்தியத்தில் நிற்குமென்னைச் சமரட்சிக்கும்
திருவுளமும்
சத்தியங்கெட்ட உமக்கிலிமேல் சற்றுமில்லை
யுலகவாழ்வு

அருள்பரனை நம்பியுள்ள அடியேனைப்
பழித்ததெல்லாம்
தருமமல்ல தரணியெங்கும் தப்பிதமென் றேசுவார்கள்

தந்தைகுலப் பெருமைவிட்டுத் தாய்க்குலத்தின்
நடத்தைகொண்டு
பந்தமதில் மூழ்குவது பாபமென்றேன் அறியிலையோ?

இனியுஞ்சொல்வேன் கேட்டிடுவீர் என்னைக்குறை
கூறவேண்டாம்
மனமுவந்து ஜானகியை மாதவன்ஸ்ரீ ராமனுக்கு

தருவீராயின் க்ஷேமமுண்டு தப்பிலும்ம ஒப்பில்லாத
வரமுழுதும் அழியுமும்ம வாழ்வும்போரும்
வாழ்வலடீர்

425. அஞ்சதலை நாகமதை அகந்துணிந்தே எடுத்துவந்து
கொஞ்சதற்குப் பிரியங்கொண்டால் கோரியது
விஷந்தருமே

சூரியனை யெதிர்க்குமொரு சுண்டெலிக்குச்
சகமுண்டோ?
சூரன்ஜக தீசன்ராமன் சூன்யஞ்செய்வான்
அரக்கர்களை

மட்டிகளே தொட்டடுத்தார் சுட்டித்தீங்கில்
கட்டுப்பட்டார்
எட்டுநாளில் சுட்டமது ஒட்டிவரும் திட்டமாக

தருமந்தனை மனதிலெண்ணித் தாயான ஜானகியை
அரைநொடியும் பிறுத்தாமலே அனுப்பித்தந்தால்
பிழைத்திடுவீர்

அதன்பிறகு உமதிஷ்டம் அகமகிழ்ந்து வாழுமையா
மதியீன ரும்மைவிட்டு மனதொப்பிப் பிரிந்தேனையா

430. போய்வருவே னென்றுரைத்துப் புண்ணியவான்
விசனத்தோடு
தாயிழந்த கன்றைப்போலத் தயங்கியொரு
விடத்தில்வந்து

இருந்துகொண் டாலோசிப்பான் என்னசெய்வோம்
நாமினிமேல்
பரிதவிக்கச் செய்துவிட்ட பாவியிடம்
நெருங்கப்போமோ?

இராவணனால் துரத்தப்பட்டு விபீஷணன்
ஓரிடத்தில் வந்தாலோசித்துச் சுக்கிரீவன்
மூலமாய்ச் சமாசாரந்தர, ஸ்ரீராமர் வானரவீரரோ
டாலோசித்து, வீபீஷணனை அங்கீகரிப்பதும்,
இராவணனுடைய பலங்கேட்டறிந்து,
வீபீஷணனை தைரியப்படுத்தி யவனுக்கு
இலங்கையரசு முடிசூட அபிஷேகஞ் செய்வதும்,
அவன் அணைகட்ட வகைசொல்வதும்

பிதாவுக்கொப்பாம் ஜேஷ்டப்பிராதா பிசகுசெய்தா
லவனையுமே
உதாசீனமாய்த் தள்ளுதற்கு உண்டுதர்மம்
சாஸ்திரத்தில்

விதியென்பது அந்தப்படி விலகிவந்தோ மானாலுமே
இதுவரையில் நமக்குத்தீங்கு ஏதுமன்னன்
செய்யவில்லை

தருமந்தப்பி நடந்ததினால் தாகங்கொண்டு
நீதிசொன்னோம்
வருங்கேடு மிகுவுரைத்தோம் வாஞ்சையோடு
கடமையெண்ணி

நன்மைக்காகச் சொன்னதெல்லாம் நாபாசம்
போலவெண்ணிக்
கன்மனதாய் நம்மையண்ணன் கருணையின்றித்
துரத்திவிட்டான்

அவனுடைய ஆதரவில் அநேககாலம் இருந்துவந்தோம்
சிவன்செயலா லவனுடைய சிநேகத்தனை
இழந்துவிட்டோம்

அரக்கரிடம் நெருங்குதற்கு ஆகாதினி வேண்டுமாயின்
பரம்பொருளாம் ராமனிட பாதசேவை யுசிதமாகும்

வேறெங்கும் போவதற்கு விதியில்லை யாகையினால்
காருண்ய முள்ளராமன் கால்தொழுதால்
புனிதனாவோம்

அப்படிநாம் ராமனைப்போய் அணுசரிக்கும் காரியமும்
தப்பிதமா யாருமானால் தருமங்கெட நடப்பதாகும்

440. ஆதரித்து வந்தவனாம் அண்ணனிட பகைவரிடம்
போதல்மிகப் பாவமென்று பூமியிலே
யாருஞ்சொல்வார்

உலகதர்மம் தப்பியிந்த உலகிலுயிர் கொண்டிருந்து
நலம்பெறவும் நியாயமுண்டோ நாணக்கேடா
மாகையினால்

அவ்விதமுஞ் செய்வதற்கு ஆகாது என்னசெய்வோம்
எவ்விதமாய் நடப்பதென்று ஏதும்வகை பிரியலையே

ஜன்மந்தனை யெடுத்துவந்து ஜகத்தில்சீ ரழியலாச்சு
கன்மபய னிப்படியும் கண்கலங்க நேர்ந்ததுவே

ஆகையினா லுயிர்வைத்து ஆவதில்லை பயன்நமக்குத்
தாகங்கொண் டுயிரொழித்தல் தருமென்று
துணிந்தப்பால்

445. ஏனிந்த நினைவுகொண்டோம் எண்ணியுயிர்
விடுவோமானால்
மானஹானி யாவதோடு மதியிழந்தே யலையலாகும்

தருமரணம் தோஷமென்று தொல்லுலகின்
நூல்கள்சொல்லும்
தருமமல்ல ஆத்மவதை தப்பிதமாய் முடியுமது

உயிரொழிக்க யத்தனித்தல் உத்தமமாம்
காரியமன்று
பயந்ததற்கு விலகுவதே பரிசுத்தக் காரியமாம்

தானெனுமோர் அகந்தைவிட்டுத் தன்மயமாய்
மிஞ்சியுள்ள
ஆனந்த வீர்த்திகொண்டு அகண்டாகார நிலையதனை

அடைவதற்கு முறையாயுள்ள அனுபவத்தில்
முதிர்ந்திடவே
எடுத்துமிந்த ஜன்மமதை ஏன்வீணாய்
அழிக்கப்போகும்

450. நிவர்த்திமார்க்கம் பிடிபடவே நிலத்தில்பின்னுஞ்
சிலகாலம்
சவரணையாய் வாழ்ந்தல்லவோ சமபாவம்
அமையவேண்டும்

இந்தவொரு காரணத்தால் இசுவாழ்வி
லச்சைகொள்ளும்
பந்தமது அவசியமென்று பக்தன்விபீ
ஷணனெண்ணினான்

தமயனாலே நிக்கிரகித்த தம்பியென்று ஜகம்பழிக்க
அமைந்தவொரு காரணத்தை அடைந்துலகி
லிருக்கப்போமோ

உயிருடனே யிருப்பதற்கும் உயிரதனை விடுவதற்கும்
தயிரியமே இல்லாமல் தயங்கியப்பால்
துணிந்தானம்மா

---

450. நிவர்த்திமார்க்கம் – விடுபடும் வழி

பரகதியில் சுகமளிக்கும் பரந்தாமன் தனையடைதல்
தருமஹானி யென்றெண்ணுதல் தப்பிதமாய்
முடிந்திடுமே

455. சாகவதமா யுள்ளகுகும் சாமளனாம் ஸ்ரீராமன்
நேசமதால் சித்தித்திடும் நிர்மலமாம் கதியடைவோம்

பரகதியின் தருமந்தனைப் பாரின்தர்மம் பாதிக்காது
தரணிவாழ்வை வெறுக்கும்நல்ல தபசிகட்டுப்
பாபமேது?

என்றுங்கதி யாம்ராமனை இப்பொழுதே யடைவதுவே
நன்றுள்ள காரியமாம் நாட்டிலுள்ளோ ரொப்பவாகும்

இறைவனை யடையாவிடில் என்றுஞ்சுகம்
நாமடையோம்
சென்றவனை வணங்கியேநாம் சேர்ந்தவனோ
டிருந்துகொண்டு

பணிவிடைகள் செய்துவந்தால் பாபமெல்லா
மொழியும்நல்ல
மனம்பெறுவோ மெவ்வுலகும் மனமகிழ்ச்சி
மிகவுண்டாம்

460. எங்குமுள்ள பரம்பொருளே இராமனாக வந்திருக்க
மங்களங்கள் தருமவனை மனங்களித்தே
யடைந்திடலாம்

அவனேபரப் பிரம்மமெனும் அத்வைத பாவனையால்
தவஞ்செய்யும் மகத்துகட்கு ஜன்மபந்தம் நீங்குமன்றோ?

அவனுடனே ஐக்கியமாய் அனுபவிக்கும்
ஆனந்தம்போல்
குவலயத்தி லடையவுண்டோ குற்றமற்ற சுகமனுவும்

தேகபந்த மொழிந்தவுடன் ஸ்ரீராமன்மய மாகமிஞ்சும்
ஜகமதே முடிவென்னும் உண்மைதனை
மறக்கப்போகா

பரமாத்மா வோடைக்கிய பாவனையே கொள்வதுவே
உரியமுறை யென்றுகருதி உரைசுருமுரை நாமடுப்போம்

465. ஆத்மபந்து ஸ்ரீராமன் அங்கபந்து இலங்கேசன்
ஆத்மபந்து அழியாதது அங்கபந்து அழிந்திடுமே.

தேகந்தனைத் தள்ளிப்பார்க்கில் தினையளவும்
அண்ணனிடம்
மோகம்நமக் கேதுமிலை முறையுமிலை குறித்தறிய

அசத்தாயுள்ள தேகந்தனில் அபிமானந்
தனைக்கொண்டால்
விசனப்பட்டே யழிவதற்கு வினையாகப்
பலிக்குமன்றோ

சத்தாமாத்ர மாகவுள்ள சாமளனைச் சேருவதில்
நித்தியானந்தம் பொருந்துமந்த நிர்மலனே
நித்தியபந்து

அநித்தியபந்து தனையொழித்தோம் ஆசைவித்திய
பந்துவின்மேல்
அனுசரிக்கத் துணிந்ததினால் ஆனந்தம்
பெருகிற்றென்று

470. உள்ளில்மிகத் திர்ப்திகொண்டான் தமயன்றனை
மிகப்புகழ்ந்தான்
அன்னைதந்தை ராமனென்று அவனைப்போய்ப்
பணிந்திடவே

அரைநொடியும் தாமசிக்க ஆகாதென்றே
யுறுதிகொண்டு
கருதிமந்திரி மார்களோடு சுகனமதில்
கிளம்பிவிட்டான்

அரணவத்தைத் தாண்டிக்கொண்டு ஐந்துபேரும்
வருகையிலே
கருதிப்பார்த்தான் சுக்கிரீவன் சுவிகளுமே
பார்த்தாரம்மா

அரக்கரிங்கு வருவதினால் அனைவர்களும்
ஜாக்கிரதையாய்
இருக்கவேண்டு மென்றுரைத்தான் இராஜனான
சுக்கிரீவன்

விருட்சங்களும் மலைகளுமாய் வெகுவாக
எடுத்துக்கொண்டு
அரைநொடியில் வந்துவிட்டார் அநேகம்போர்
வானரர்கள்

475. வடகரையிலாகாசத்தில் வந்தவர்கள் நின்றுகொண்டு
உடனேசுக்கிரீவனைப்பார்த்து உரக்கக்கேட்க
விபீஷணனார்

சொல்லுகிறார் இலங்கேசன் சோதரனாம்
விபீஷணனான்
வல்லபராம் ஸ்ரீராமரை வணங்கியடைக் கலமடைய

வந்தேனையா என்தமையன் வஞ்சனையாய்
ஜானகியைச்
சிந்தைநோக எடுத்துவந்த சேதிகேட்டதுமுதலாய்

472. அரணவம் - கடல்

அடுக்காத காரியஞ்செய்தாய் ஆபத்து வினைந்திடுமே
உடனேராம ரிடந்தனிலே உத்தமியாம் ஜானகியை

ஒப்புவித்துச் சரணடைந்தால் உயிர்பிழைப்பா
யில்லையெனில்
தப்பமாட்டாய் ராமன்கையால் தரணியாசை
யிழந்திடுவாய்

480. இந்தவித மேநகமாக இதஞ்சொன்னேன்
அதுகளெல்லாம்
சிந்தையிலே கொள்ளாமலே சினங்கொண்டே
யென்னைமிக

அவமதித்துப் பேசியதோ டாகாதென்று
துரத்திவிட்டான்
எவருங்கதி யில்லையென்று இராமர்பாதம்
பணியவந்தேன்

ஆதரித்துக் காப்பவராம் ஆண்டவர்ஸ்ரீ ராமரிடம்
சேதிதன்னைச் சொல்லியென்னைச் சேர்த்துக்
கொள்ள வாக்குதவி

செய்யுமென்று வேண்டிக்கொண்டான் சித்தமதில்
சுக்கிரீவன்
ஐயமிகக் கொண்டதன்மேல் ஐயனிடம் பறந்துவந்து

செப்புகிறான் நமஸ்கரித்து ஸ்ரீராமா கேளுமையா
தப்புச்செய்த தசகண்டன் தம்பிவிபீஷணனென்று

485. அரக்கனவன் நான்குபேரை அழைத்துக்கொண்டு
தங்களிடம்
பிரியமுள்ளோன் போலவந்து பேசுமதைக் கேளுமையா

தன்னுடைய தமயனான தசகண்டன் வஞ்சகமாய்
அன்னைசீதை தனையெடுத்த அக்கிரமத்தைச்
சகியாமலே

வெருவிதமாய் நியாயங்களை விரித்துரைத்துப்
பிரார்த்தித்தும்
சகஜமாகக் கொள்ளாமல் சலிப்புடனே
கோபங்கொண்டு

துரத்திவிட்டா னானதினால் சுவாமியும்மை
யடைக்கலமாய்க்
கருதியடைந் திடுவதற்குக் காங்ஷைகொண்டு
வந்ததாகச்

சொல்லுகிறான் அவன்வாக்கைச் சுத்தமாக
நம்பப்போகா
நல்லெண்ண முள்ளவனாய் நானவனை
நினைக்கவில்லை

490. அரக்கர்மாய மறிகமுண்டு அண்ணனுக்காய்ச் சூதாக
மருமந்தனைக் காட்டாமலே மாரீசன் போலவந்து

கலந்திருந்து சமயம்பார்த்துக் கருதிநம்மை
மோசஞ்செய்து
நலம்பெறவே வந்திருப்பான் நாமவனைச்
சோக்கப்போகா

ஒருக்காலும் வந்தவரை உண்மையுள்ளோரென்றுநம்பி
வரவழைக்க வேண்டாமையா வஞ்சகரைச்
சிட்சைசெய்து

அனுப்புவதே நியாயமாகும் ஆலோசித்துச்
செய்யுமென்றான்
நினைத்துத்தன்னில் ஸ்ரீராமன் நேசத்தோடு
வானரராம்

வீரர்களைப் பார்த்துக்கேட்பான் விபீஷணனைச்
---சேர்ப்பதிலே
ஆருக்கேனுஞ் சொல்லவுண்டோ ஆட்சேபணை
யென்றானம்மா

495. அங்கதனு மநேகருமாய் அரக்கர்மனங் கண்டறிய
இங்கிருந்து யாரையனுமும் இரகசியமாய்
அனுப்பித்தந்து

பரிசோதித்துப் பார்த்தன்மேல் பாதகமே
யில்லையெனில்
அரக்கர்களாம் ஐவரையும் அங்கீகாரஞ்
செய்வோமென்றார்

சமுசயமே மிகவுங்கொண்டு ஜாம்புவந்தர்
கருத்துரைத்தார்
சமபுத்தி யுள்ளராமன் சகலரையும் கேட்டதன்மேல்

மவுனங்கொண் டிருப்பவராம் மாருதியைப்
பார்த்துக்கேட்பான்
விவரமென்ன நீர்மட்டும் வெளிவிடாமல் கருத்தடக்கி

இருப்பதென்ன சொல்லுமென்றார் இருகரத்தைச்
சிரசில்வைத்து
அருமையான வாக்குடைய அனுமாரப்போ
சொல்லுகிறார்

500. எத்தனையோ விவேகமுள்ள வல்லோருஞ்
சொல்லுகையில்
அத்தனையே ரபிப்பிராயத்தை அடியேனான்
ஆக்ஷேபித்து

பேசுவது நியாயமாமோ பிசகாயும் முடியுமன்றோ
ஆசைகொண்டு பேசுதற்கு அபிப்பிராய முண்டெனக்கு

சர்வக்ஞரா யுள்ளவெந்தன் சாமியேநீ யறியாத
மர்மமுண்டோ மனதுமுண்டோ மற்றவரைக்
கேட்கவுண்டோ?

உலகமுறைப் படிகேட்டீர் உள்ளதைநா
னுரைப்பேனையா
பலவிதமா யுரைப்பார்கள் பாபமற்ற உத்தமரின்

சுபாவமதை யறியாமல் சோதனையுஞ் செய்யாமல்
உபாயமெல்லாம் நீரறிவீர் உமதிஷ்டப் படிசெய்வீர்

505. உண்மைதனை நானுரைப்பேன் உசிதமாக
நீர்கிரகித்தால்
வண்ணியதின் படிசெய்யலாம் இல்லையினில்
விட்டிடலாம்

சமுசியமேன் விபீஷணர்மேல் சத்துக்களி லவரொருவர்
இமைப்பொழுதும்உண்மையன்றி ஈஷத்தும்
பொய்யுரையார்

ஆகமாதி சாஸ்தரமெல்லாம் அறிந்தவைகள்
உரைத்தபடி
தாகங்கொண்டு முறைப்படியே தர்மந்தனில் நிற்பவரே

தெய்வபக்தி மிகவுடையோர் தினையளவும் சூதறியார்
மெய்ப்பொருளை நம்பியுள்ளோர் மிகப்புத்தி
சாலியையா

பாவிகளாம் நிசாசரர்போல் பாவிக்க லாகாதையா
நாவுநினை வோடுகூடி நன்மையெண்ணி
நடப்போரையா

510. கருணையுள்ள புருஷரையா கபடமின்றி
நடப்போரையா
அருமையான பக்தரையா அவரைப்போ லில்லையையா

எண்ணியவர் சிறந்தவரே இதமெவர்க்குஞ் செய்பவரே
அன்னைசீதை மனக்கொதிப்பை யாற்றிப்பாது
காப்பவரே

ஜானகியின் பரிதாபத்தைச் சகியாமல் தமயனுக்கு
ஆனமட்டும் தருமஞ்சொல்லி அடுத்தடுத்து வழிப்படுத்த

அநேகவித முயற்சிசெய்தும் அவனிணங்காக்
காரணத்தால்
மனோகிலேசம் மிகுவடைந்த மகிமையுள்ள
புருஷனையா

ஜானகியின் மனதைத்தேற்ற சமத்துள்ள தன்மகனை
ஜானகியின் அருகில்வைத்து ஜாக்கிரதையாய்க்
காக்கின்றாரே

515. குடும்பத்தோடு யாவருமாய்க் குசலந்தர ஜானகிக்கு
இடரேது மில்லாமல் இராப்பகலும் உழைக்கின்றார்

அரக்கனெனை வதைபுரிய ஆக்ஞைசெய்த வேளையிலே
தருமங்களை மிகுவுரைத்துக் தப்புவித்தார்
கருணைகொண்டு

உலகுதனி லிவருக்கொப்பாய் உத்தமர்க ளரிதாவர்
நலங்குறுது பக்தனென்று நானறிவேன் செம்மையாக

அண்ணனிட நடத்தைகளை ஆட்சேபிக்கும்
காரணத்தால்
எண்ணியண்ணன் துரத்திடவே இங்குவந்தார
ரென்றறிவீர்

தங்களிட திருவருட்குத் தருதியுள்ள சீலமுள்ளோர்
சங்கையின்றி அவரைச்சேர்த்தல் சம்மதமென்
றனுமான்சொன்னான்

இந்தவிதஞ் சொல்லக்கேட்டும் இஸ்டமின்றிச்
சகிக்கிறீவன்
அந்தவிபீ ஷணனைநம்ப லாகாதென்றே
சாதிக்கின்றான்

அவனதற்கு நியாயஞ்சொல்வான் ஐயன்பாதம்
பணிந்தெழுந்து
குவலயத்தில் அரக்கர்மிகக் குணத்தைக்காட்டி
மோசஞ்செய்வார்

அனுமார்சொன்ன வாக்கியப்படி அரக்கன்தம்பி
நிர்த்தோஷிபோல்
நினைக்கும்படி நடந்திருப்பான் நினைவுவேறு
கொண்டிருப்பான்

தமயன்றனைப் பகைத்துக்கொண்டு தம்பியிங்கு
வருவதற்குச்
சமுசியமே யில்லாத சங்கதிதான் வேண்டுமன்றோ?

அண்ணனிட ஆதரவில் அநேககாலம் இருந்ததம்பி
எண்ணியவன் தனைப்பகைத்து இங்குவரச்
சொல்லுமொரு

காரணத்தை யாலோசித்தால் கனவிலுமே
நம்பப்போகா
கோரியேதோ குடிலயெண்ணங் கொண்டேதான்
வந்திருப்பான்

ஜானகிக்கு இவன்மகளைத் தைரியத்துக்கா
யனுப்பித்தந்து
தானுமிகத் தமயனுக்குத் தருமபோதஞ்
செய்பவன்போல்

பாவனைகள் செய்திருப்பான் பலரும்நம்பிப்
பிரமிக்கும்படி
ஏவியண்ணன் சொன்னபடி எதுவுஞ்செய்வான்
கபடமாகச்

சீதையுயிர் விடுவாரென்று சித்தமதி லரக்கனெண்ணி
ஆதரவா யிருக்கும்படி அந்தரங்க மாகத்தானே

தம்பிக்காக்ஞை செய்திருப்பான் தாமிஷ்டன்
போல்நடக்க
நம்பியதை நாம்நடந்தால் நடுவழியில்
மோசஞ்செய்வான்

530. வேம்புதனில் மாம்பழமும் விளைவதுண்டோ
எங்காயினும்
பாம்புகுலந் தனிலுதித்துப் படுவிஷமின் றியிருக்கும்

பிராணியுமே யுலகிலுண்டோ? பாபம்செய்யா
தரக்கருண்டோ
திராணியுள்ளோர் தனைஜயிக்கத் தந்திரங்கள்
மிகவும்செய்வார்

நம்முடைய ரகசியங்கள் நன்றாக அறிந்துகொண்டு
செம்மையாகப் பலஞ்சேர்த்து ஜெயிப்பதற்கே
எண்ணங்கொண்டு

தசகண்டன் தன்னுடைய தம்பியையும் அவனுடனே
இசைந்தநான்கு அரக்கரையும் இங்கனுப்பி
யிருப்பானவன்

ஆசையினால் வந்திருக்கும் அரக்கர்களைச்
சிட்சைசெய்து
போகும்படி துரத்திவிடில் புத்திகொண்டு
நடந்திடுவார்

பகைவனிட மிருந்துவரும் பாபிகளா
வநர்த்தமுண்டாம்
மிகவுமதை நானறிவேன் வேண்டாமையா
தூரத்துமென்றான்

முகக்குறியால் அகநிலையின் உண்மையெல்லாங்
கண்டறியும்
மிகவுஞ்சூட்சும புத்தியுள்ள விவேகியான
அனுமான்சொல்லை

ஆதரித்து மவனமாக அனுஜனவ னிருந்தானம்மா
வாதமெல்லா மானதன்மேல் மாதவனாம் ஸ்ரீராமன்

அவரவரும் மனமுவந்து அபிப்பிராயஞ்
சொன்னதெல்லாம்
விவரப்பட அறிந்துகொண்டு விபீஷணரைச்
சேர்ப்பதிலே

தம்முடைய கருத்ததனைத் தருந்தநியாயங்
கணைக்காட்டிச்
செம்மையாக விளங்கும்படி ஸ்ரீராமன் சொல்லுகிறான்

வந்திருக்கும் ஐந்துபேரும் வஞ்சரா யிருந்தாலென்ன
எந்தனிடம் அவர்கள்சூது ஏதுபய னடையும்பாரீர்

சுண்டுவிரல் தனைக்கொண்டு சுட்டொரிப்பேன்
ஜகத்தையெல்லாம்
அண்டியென்னை வந்தவர்கள் அக்கரமங்கள்
செய்வாரானால்

உயிரவர்க்கு மிஞ்சவுண்டோ ஓடியெங்கும்
மறையவுண்டோ?
தயிரியமும் அடையவுண்டோ தப்பிப்போக
வழியுமுண்டோ?

தமயன்பலம் குறைந்ததென்று தன்னில்மிக நிச்சயித்து
நமதுபக்கம் சேருதற்கு நாடிவந்து மிருக்கக்கூடும்

பிராதாக்களா யுள்ளவரில் பரஸ்பரமும்
ஐக்கியங்கொண்டு
குரோதாதிக ளில்லாமலே குணமுடனே
அன்புவைப்போர்

545. எங்குந்தானே நிலையாக இருக்கமாட்டார்
பேதங்கொண்டு
தங்கள்தங்கள் சுகங்களிலே தாகங்கொண்டு
தீங்குசெய்ய

துணிவதுவே சுபாவமாகும் துணைசெய்யும்
எண்ணமது
அணுவளவுங் கொள்ளமாட்டார் அன்யோன்யம்
அரிதாகும்

தாயாதிப் பகைகொண்டு தரணியிலே வெருபோர்கள்
நியாயவழி தனைவிட்டு நஷ்டகஷ்டந் தருவதுண்டு

அரிதவிதம் விபீஷணன்மேல் அவன்தமயன்
செய்திருந்து
சிந்தைநொந்து நம்மிடத்துச் சேருதற்கு வந்திருப்பான்

என்பிராதாக்கள் மீதெனக்கும் என்மீது அவர்களுக்கும்
அன்பிருக்கும் போலெங்கும் ஆருமிரா ரென்றறிவீர்

550. உங்களைப்போல் சிநேகமுள்ளோர் உலகுதனி
லிருப்பதுண்டோ?
உங்கள்மீது எனக்கிருக்கும் உண்மையன்பும் அப்படியே

அரக்கர்குலந் தனில்பிறந்து அதர்மவழி களைத்துறந்து
தருமமுறை தனிலிருந்து தரணியிலே புகழடையும்

சத்துக்களு மிருந்தாரென்று சரித்திரங்களால்
வினங்குமன்றோ?
சத்தியத்துக்குக் கட்டுப்பட்டோர் தானவரில்
இருக்கக்கூடும்

அநர்த்தங்கள் வராதிருக்க அனைவர்களும்
உரைத்தீரென்று
மனதில்கொண்டே னானாலுமே மயங்கவேண்டாம்
மென்னையாரும்

வஞ்சத்தால் வெல்லுதற்கு வையகத்தி லில்லைபாரீர்
அஞ்சவேண்டாம் ஐந்துபேரும் அடைக்கலமாய்
வந்ததன்மேல்

555. அவரைப்பாது காக்காவிடில் அபயெசஸு வந்திடுமே
எவரானாலும் என்னைவந்து இரட்சிக்க
வேண்டுமென்று

சரணமாக அடைவாராயின் சம்ரட்சணை
செய்வதற்குப்
பிரியங்கொண்டு நடந்திடவே பிரதிக்ஞையுள்ளோன்
நானாவேன்

அடைக்கலமாய் வந்தவரை ஆதரியா திருப்பேனாயின்
அடுத்தவரைக் காப்பேனெனும் அந்தக்கீர்த்தி
போய்விடுமே

சக்தியுள்ள போர்கள் தம்மை சரணமாக
அடைவோரைப்
பக்தியுடன் காக்காவிடில் பாபமாக முடியுமன்றோ?

பூர்வந்தனில் அடைக்கலமாய்ப் புறவொன்று
வந்தடுக்கப்
பார்த்தன்மே லிரக்கங்கொண்டு பாதுகாப்பே
னென்றுரைத்து

560. எனதுமுன்னோர் சுளிலொருவர் எள்ளளவும்
சலிப்பின்றித்
தனதுதேசும் தனையறுத்துத் தந்துதவி
செய்தாரன்றோ?

சரணமென்ற கஜேந்திரனைச் சக்கரதன் ஆதரித்தான்
அரனுந்தானே மார்க்கண்டனை ஆதரித்தா
னதுவுமன்றி

பிரகலாதனைப் பாதுகாத்தான் பெருமாளாம்
ஸ்ரீஹரியும்
கிரமமாக நாலுமிப்போ கிர்பையுடனே யடுப்பவர்க்கு

அபயந்தந்து காப்பதற்கு அணுவளவும் பின்னடையேன்
உபகாரஞ் செய்வதற்கே உதித்துவந்தே னுலகுதனில்

வல்லபராய் நாமிருந்தால் வந்தவர்க
ளென்னசெய்வார்
நல்லெண்ண முள்ளவரோ நம்மைமோசஞ்
செய்பவரோ?

565. அதையும்நா மறிந்திடலாம் அடுத்திருக்கச்
செய்வதினால்
சதியென்ன முள்ளோரா யின் சம்சரிக்கப்
படுவாரன்றோ?

உண்மையாக நம்முடைய உதவிபெற வந்திருந்தால்
கண்கலங்கி யோடும்படி கஷ்டந்தரல் நியாயமாமா?

அண்ணனாலே துரத்தப்பட்டு அகம்நொந்து
வந்திருந்தால்
எண்ணிநாமும் துரத்துவதில் என்னகதி வந்தவர்க்கு

இரகசியமாக உருவெடுத்து இராட்சதர்க ளிங்குவந்து
தருதியாக நம்முடைய தாத்பரியந் தெரிந்துகொண்டு

போவதற்குக் கூடுமன்றோ புத்தியினா லறிந்திடுவீர்
பாவமெண்ண மிருக்குமாயின் பணிந்துநமக்மை
யடுக்கமாட்டார்

570. பகிரங்கமாய் வணங்கிவந்து பாதகத்தை
நினைப்பாராயின்
மிகவுங்கஷ்டப் படுவதோடு மேதினியை யிழந்திடுவார்

அருங்குணம் பஞ்சைகட்கே அடுக்குமல்லால்
நமக்கந்தச்
சஞ்சலமே யணுவுமாகா சாமர்த்திய மிருப்பதினால்

ஒருநொடியில் மனக்கருத்தின் உண்மைதனை
யறியும்நீங்கள்
அருவருப்புக் கொள்ளலாமோ? அழகாமோ
எண்ணிப்பாரீர்

இங்குவாசகள் வந்துநமக்மை என்னசெய்யக் கூடுமந்தச்
சங்கதியை யாலோசித்தால் சற்றும்பயங்
கொள்ளமாட்டீர்

ஆராயினு மென்னைவந்து அடைக்கலமா
யடைந்துவிட்டால்
நேராக அவரைக்காக்க நினைவில்மிக உறுதிகொண்டு

575. இருக்குமெந்தன் கருத்துப்படி எல்லோரும் மனமுவந்து
அரக்கர்களை வரவழைக்க அபிப்பிராயந் தருவீரென்று

இந்தவிதஞ் சொன்னவுடன் எல்லோரும்
திர்ப்திகொண்டு
சந்தோஷமா யலுமதித்தார் சாமியப்போ சுக்கிரீவனை

அனுப்பித்தந்தார் அழைத்துவர அவன்சென்று
விபீஷணரைக்
கனப்படுத்தி யழைத்திடவும் கண்ணில்தூரை
வெள்ளம்போலப்

பெருகமந்திரி மார்களொடு பிரியமுடன்
விபீஷணனார்
சிரசுதனில்கைகூப்பிச் சீக்கிரமா யோடிவந்து

அருள்கடலே அகிலஜக ஆதாரமே நீரேகதி
கருதியும்மை யடைந்தேனையா காப்பாற்ற
வேண்டுமையா

580. கண்ணார உம்மைக்கண்டு களிதீர்ந்தேன்
மலமொழிந்தேன்
எண்ணிவந்து பிறவிப்பயன் இன்றுபெற்றே
னென்றுரைத்து

அழுதகண்ணும் தொழுதகையு மாகவேதான்
ராமன்முன்னே
அழலில்படும் மெழுகெனவே அகமுருகி அன்புருவாய்

நின்றுஜனார்த் தனனடியில் நெடுமரம்போல்
விழுந்தடியேன்
இன்றும்மை வந்தடைந்தேன் என்னையாள
வேண்டுமையா

அரக்கர்மன்னன் இராவணனென் அண்ணனையா
விபீஷணனான்
தருமநிலை தப்பியுள்ள தமயனைநான் பிரிந்தேனையா

சொற்புத்தியைக் கேளாமலே கயபுத்தியு மில்லாமலே
தற்புத்தியா லழியுமண்ணன் பாதுகாப்பி
லென்றுநம்பிக்

கற்புடையோ ரிடுஞ்சாபம் கனமழிக்கும்
குலமொழிக்கும்
நற்புத்தி கேட்பாயென்று நாலுரைத்தேன் நீதிமிக

உலகைக்காக்க வந்திருக்கும் உம்முடைய ரகசியத்தைப்
பலவிதமா யெடுத்துரைத்தேன் பாவியதைக்
கேளாமலே

நாகம்போலச் சீறியென்மேல் நட்புவிட்டுப் புண்படவே
வேகமாக வெறியன்போல வெகுவாக நிந்தைசெய்தான்

போங்காலம் அடுத்ததினால் புத்திகெட்டான்
அவனைவிட்டு
நீங்காதும்ம பதமலரில் நேசம்வைத்தேன் ராகவனே

590. நிரந்தரமா யெனக்குப்பந்து நீரேயா மாகையினால்
பரமாதீவி லைக்கியமாகும் பாவனையைக்
கொண்டடுத்தேன்

பெண்டுபிள்ளை களைவிட்டேன் பிரேமையும்ம
மீதில்வைத்தேன்
அண்டிவந்தேன் அடிமையாக அருள்பரனே என்னைநீர்

ஆதரிப்பீ ரெனப்பணியும் அவர்மீது அருள்கரந்தே
நாதன்பரிந் தெடுத்தவரை நயமுடனே
யலுக்கிரகித்தார்

அசுத்திலையை முசுத்திலையால் அறிந்துகொண்டு
ஸ்ரீராமன்
மிகவும்பரி சுத்தனென்று விபீஷணனை
யொப்புக்கொண்டு

சத்குருவின் பலங்களெல்லாம் சரியாக விளங்கும்படி
அத்தனையுஞ் சொல்லுமென்றான் அறிந்திடவே
விபீஷணனும்

595. சொல்லுகிறேன் கேளுமெந்தன் சுவாமியந்தப்
பாதகனை
இல்லையாரும் வெல்லுதற்கு எங்குந்தானே
துணிந்தவர்கள்

அரக்கர்மன்னன் தனக்கிளையோன் அதிபலவான்
கும்பகர்ணன்
இருக்கின்றான் மகனாகிய இந்திரஜித்தன்
மகிப்பலவான்

அவனுடைய ஜாலங்களை அறிந்தவனோ டமர்புரிய
எவருமில்லை யவனைக்கண்டால் எவ்வுலகும்
நடுங்குமையா

பிரகஸ்தனென்றோர் சேனாபதி பிரபஞ்சத்தி
லவனுக்கிணை
அரிதையா கைபலத்தில் அவன்மிகவுஞ் சூரனையா

பதினாயிரங் கோடியுண்டு படைகளுந்தா
னவைகளோடு
உதவிமிக வுண்டவனை யொருவருமே எதிர்ப்பாரில்லை

600. ஆண்மையுண்டு ஆண்டவரின் அனுக்கிரகமோ
மிகவுமுண்டு
வீண்படவே அத்தனையும் விவேகமுன்யந் தானுமுண்டு

திக்கெங்குஞ் சயித்துமிகத் தீரனென்று பெயரெடுத்துப்
பக்குவமின்றிப் போனதினால் பாபியாகப்
பவித்தானையா

இந்தவிதம் பலங்களையும் இருக்குமற்ற குணங்களையும்
அந்தவிபீ டணனுரைக்க அவைகளெல்லாங்
கேட்டதன்மேல்

ஸ்ரீராமன் ஆலோசித்துச் செப்புகிறான்
விபீஷணன்மேல்
பிரேமைகொண்டு கிருபையுடனே பெருமையாக
இவ்விதமாய்

அஞ்சவேண்டா மாதரிப்பேன் அகங்கொண்ட
அரக்கர் சுளைப்
பஞ்சுபஞ்சாய்ப் பறக்கடிப்பேன் பாதுகாப்பேன்
உம்மைமிக

605. அரக்கரென்னை யதிக்கிரமிக்க ஆகாதென்றே
யறிந்துகொள்வீர்
கருதியும்மைக் கேட்டதெல்லாம் கண்டுகாரியஞ்
செய்திடவே

சூரியசந் திரபகிலம் சுரர்முதலா யுள்ளமட்டும்
பாரிலென்பே ருள்ளமட்டும் பகர்துருவ னுள்ளமட்டும்

சத்தியமா யிலங்கையர சாட்சியுமக் களித்தேனிப்போ
சித்திபெறுங் காயத்தோடு சீராக வாழ்ந்திருந்து

சுகமடை வீர் நித்தியமாய்ச் சொல்லுமெந்தன்
வாக்குகும்பி
அகமகிழ்வீ ருமக்கினிமேல் அச்சம்வேண்டா
மென்றுரைத்தான்

கேட்டுவிபீ ஷணன்மகிழ்ந்து கேசவனைப்
பணிந்துரைப்பான்
வாட்டமெனக் கினியுமுண்டோ வையகத்தி
லுமைப்பகைத்த

610. அரக்கர்களை யொழிப்பதற்கு அடியேனா
லானமட்டும்
பிரியங்கொண்ட யுழைத்தமது பெருமையெண்ணி
நடப்பதிலே

அனுவேனும் பிரகேலனையா ஆவலோடு
உதவிசெய்வேன்
துணைமுடனே நானுங்கூடிக் குரலம்பெற
உழைப்பேனையா

ஆத்மபந்து நீரன்றி ஆராவர் எனக்கையா
சாத்வீகக் குணமிருந்த சத்வபரி பூரணரே

என்றுவிபீ ஷணரருளைக்க இராமரதைக் கேட்டுமிக
அன்புடனே லட்சுமணனை அழைத்துடனே யபிஷேக

முடிசூடக் கடல்ஜலத்தை மேகமுடனே கொண்டுவரச்
சொல்லுத்தானைக்குயந்தப்படி கொண்டுவந்தான்
அனுஜனம்மா

615. அதைக்கொண்டு லங்கைநகர் அரசுமுடி விபீஷணர்க்கு
விதிப்படி தரித்திடவே வேண்டியபி ஷேகஞ்செய்தார்

அப்பொழுது லட்சுமணன் அரக்கர்மன்னன்
வணங்கிவந்தால்
எப்படித்தான் விபீஷணர்க்கு இலங்கைப்பட்டம்
கிடைக்குமென்றான்

அந்தப்படி வருவானாகில் அயோத்திநகர் அரசுமுடி
தந்திடுவே னவனுக்கடா தடையுண்டோ என்றராமன்

சொல்லக்கேட்டு லட்சுமணன் சுவாமிவாக்கை
மீறிப்பேச
இல்லையென்று மௌனமாக இருந்துவிட்டான்
அதன்பிறகு

அபிஷேகம் செய்ததற்கு அனைவர்களும்
மிகமகிழ்ந்தார்
சுபமடையும் விபீஷணரைச் சுக்கிரீவனும் மாருதியும்

அழைத்துக்கொண்டோரிடந்தனிலே அந்தரங்க
மாயிருந்து
வழியென்ன சமுத்திரத்தை வகையோடு தாண்டுதற்குச்

சொல்லுமையா என்றவரைச் சுக்கிரீவன் கேட்கையிலே
நல்லவொரு யோசனையை நாடிச்சொல்வான்
விபீஷணனும்

சமுத்திரராஜன் தனைக்கருதி சாமிதவஞ்
செய்வாராயின்
நமதெண்ணம் நிறைவேற நயந்துதவி செய்வானவன்

அவனுடைய சகாயங்கொண்டு அரணவத்தி
லணைகட்டி
இவடந்தனி லுள்ளோரெல்லாம் இலங்கைநகர்
சேர்ந்திடலாம்

இந்தவிதஞ் செய்வீரென்று இதமாகச் சொல்லக்கேட்டு
அந்தவுடன் சுக்கிரீவனும் அனுமானும் ராமனிடம்

கடலணை கட்ட விபீஷணர் சொன்ன
முறையறிந்து ஸ்ரீராமன் திர்ப்தி கொண்டதும், சிவ
பிரதிஷ்டை செய்ததும், கடலரசனை யாராதித்து,
அவன் வாராமைக்காக அவன்பேரில்
கையெடுத்ததும், அவன் வந்து வணங்கி
யிணங்கினதும், கடலிலணை கட்டினதும்
எல்லோரும் தென்கரை வந்து சேர்ந்ததும்

வந்துரைத்தார் கேட்டுராமன் வழியிதுவே
முறையென்று
சிந்தையிலே நிச்சயித்துத் திர்ப்திகொண்டான்
சொன்னதற்கு

வந்தவொரு நற்பயனும் இணங்கிவரக் கடவுளரைச்
சிந்தையிலே பக்திகொண்டு சீராக ஆராதிக்கும்

உலகுடை தனைக்கருதி உபாசிக்க வேண்டுமென்று
நலங்கோரும் ஸ்ரீராமன் நாடித்தன்னி லாலோசித்து

எடுத்தகாரியம் விக்கினமின்றி இணங்கிநல்ல
பலந்தரவே
கொடுக்கஞ்சிவ னருளுக்காகக் கோரிச்சிவ
பிரதிஷ்டைசெய்ய

ஆரம்பித்து நியமங்கொண்டு அழகியவோர்
சிவலிங்கத்தைத்
தருமவிதிப் படிகொணர்ந்து தாகமுடன் ஆகமாதி

630. சித்தாந்த முறைப்படியே சிவப்பிரதிஷ்டை
செய்துராமன்
சித்தாதி இந்திரியங்கள் சேஷ்டைதனை
யடக்கிக்கொண்டு

அபிஷேகாதி கருஞ்செய்து அர்ச்சனையோ டுபசாரம்
தபசிகளைப் போன்றராமன் தக்கபடி செய்துநின்று

சுழிமுனையில் நினைவைவிட்டுச் சூட்சுமநாடி
வழியில்சென்று
விழித்திருக்கும் சுடரைக்கண்டு விமலநிலை யாகமிஞ்சிப்

பரமார்த்த மாகவுள்ள பரம்பொருளாம் தன்னுடைய
இருப்பாக இருந்தானம்மா வெவரறிவார் அந்தக்காட்சி

நிவாத்திநிலை தனிலிருந்து நிஷ்டைசெய்து
சுகித்திருந்து
விகார நிலையில்வந்து வேறாகச் சிவப்பொருளை

பாவித்தும் துதித்தானம்மா பரந்தாமன் கேளுமம்மா
நாவிலவன் சொன்னதெல்லாம் நானுரைப்பேன்
கேளுமம்மா

அகண்டபரி பூரணனே அருள்செய்யும் ஆண்டவனே
மகிமையுள்ள மகாதேவனே மனோபீஷ்டம்
தனைத்தருவாய்

பரிசுத்தத் தத்துவமே பராபரமாம் நித்தியமே
தூரியநிலை சத்தியமே துணைசெய்வாய் எந்தனுக்கு

உந்தனிட அருளாலே உதித்தேனிந்த உலகைக்காக்க
எந்தனிட நிலைமதைனை எவரறிவார் நீயறிவாய்

அவதரித்த நோக்கமதை ஆதரித்து அருள்புரியச்
சிவப்பொருளே யுன்னைவேண்டிச் செய்தேனிந்த
ஆராதனை

அனுக்கிரகத்தை யெனக்குச்செய்வாய் அகிலமுள்ள
மட்டுமிங்கு
மனமுவந்து வணங்கியுன்னை வணங்கியாரும்
திக்குமற்ற

போர்களுக்கும் இவ்விடசித்தி பெருமைபெறத்
தந்தருள்வாள்
சீர்பெறவே யாதரிப்பாய் சிவப்பொருளே
யென்றுரைத்து

ஈசுவரனா ருளடைந்து இராமச்சந்தர னதன்பிறகு
ஆசையோடு அரணவத்தில் அணைகட்ட உதவிசெய்ய

கருணைகொண்டு வந்திடவே கடலரசன் தனைக்கோபி
தருப்பையின்மேல் தவமிருக்கச் சயனஞ்செய்வான்
ஸ்ரீராமன்

இதுநிற்க அரக்கனுக்கு இரகசியங்களறிந்துரைத்து
உதவிசெய்ய சரணனா யுள்ளவொரு சார்த்தூலன்

வடகரையை வந்துபார்த்தான் வானரராம்
படைகள்மிகக்
கடல்போல இருக்கக்கண்டு கடல்தாண்டிப் பறந்தோடி

இராவணனைக் கண்டுரைப்பான் இராமன்படை
முழுதும்பார்த்தேன்
நாவதனில் சொல்லப்போகா நானாவித வானரரும்

சுடிகளுங் கூடியுள்ள கடல்போன்ற சைன்னியங்கள்
இருக்குதையா வடகரையில் என்னசெய்வே
னென்றுரைத்தான்

இதைக்கேட்டுத் தசகண்டன் என்னசெய்வோ
மென்றெண்ணி
மதிதனிலே நிச்சயித்தான் மனதின்படி நடக்குமொரு

சுகனென்போனை யழைப்பிவித்துச் சுக்கிரீவனை
மனங்கலைக்க
வகையுள்ள வார்த்தைகளை வஞ்சகமாய்ச்
சொல்லும்படி

அனுப்பித்தந்தான் பட்சியாகி அவனேகி
விண்ணில்நின்று
வானரரின் அரசன்றனை வழிபடவே சொல்லுகிறான்

அக்கா மன்னன் ரைத்தபடி ஆதிமுதல் சுடைசிவரை
சரியாகச் சொன்னானம்மா சமத்துடனே சுகனவனே

வானரர்கள் கேட்டவனை வதைத்திடவே
பிடித்திழுத்து
னைமட்டும் அடித்திறகை அறுத்தெறிந்தார்
அலமியலல்

ஆதரிக்க வேண்டுமென்று அருள்பரவலை
மிகவும்வேண்ட
எதிர்த்துக் கொடுமைசெய்ய எண்ணலாமோ
தூதன்றனை

வதைபுரிதல் தருமமல்ல வழிகடந்து நடக்கவேண்டாம்
மதிகொண்டு விடுங்களென்று மாதவனார்
ராக்ஷஸருசெய்தார்

655. அந்தப்படி இம்சியாமல் அவனையங்கு வைத்திருந்தார்
சிந்தையிலே நினைத்தபடி ஸ்ரீராமன் அதன்பிறகு

தகுந்தபடி நியமங்கொண்டு தர்ப்பையின்மேல்
சயனங்கொண்டு
மகிமையுடன் கடல்ராஜனை மனதிலெண்ணி
யாராதித்தான்

மூன்றுதின முபாசனையை முறையாக அனுஷ்டித்தும்
ஏனென்று கேளாமலே இருந்துவிட்டான் கடலரசன்

கோபமவன் மீதில்கொண்டு கொடுமைசெய்யத்
துணிந்தராமன்
தாபந்தரும் பாணங்களைத் தட்சணமே யெய்தானம்மா

அவைகளெல்லாம் அரணவத்தை அல்லோல
கல்லோலமாய்க்
குவலயத்தைப் பிரளயமாக்கும் குணத்துடனே
விளங்கிடவே

660. செய்ததம்மா கடலிலுள்ள ஜந்துக்களோ அரண்டுமிக
மெய்வருந்த இம்சைப்பட்டு மெலிந்ததுண்டு
மடிந்ததுண்டு

இராவணனை ஜெயிக்கவந்த இராமன்சக்தி
பார்ப்போமென்று
வாராமல்தான் இருந்துவிட்டான் வருணனான
கடலரசன்

அதன்பிறகு ஸ்ரீராமன் அரணவத்தின் அரசன்றனை
யதைபுரியப் பிரம்மாஸ்திரம் வகையுடனே
தொடுத்திடவே

தேகாதண்டத்தில் வைத்ததனைக் கோரியபின்
மந்திரத்தை
யேதவிதிப் படி ஜபிக்க வெருவுக்கிரமாய் விளங்கிற்றது

அந்தவேளை புவனமெல்லாம் அதிர்ந்ததோடு
பிசலடித்து
வந்துவிடும் பிரளயமென்று வையகமே நடுங்கிற்றம்மா

565. பரிட்சையினிச் செய்வோமாயின் பிராணன்தக்க
மாட்டாதென்று
கருதியொரு நொடியில்வந்து கடலரசன்
கர்த்தன்பாதம்

வணங்கிச்சொல்வான் பிழைபொறுத்து
வாஞ்சையுடன் ஆதரிப்பீர்
இணங்கியும திஷ்டப்படி எதுவுஞ்செய்வேன்
தடையின்றியே

பிழைசெய்தேன் பொறுத்திடுவீர் பெருமையுள்ள
அருள்பரனே
அழைத்தபடி வராமைக்காக ஆயாசம் வேண்டாமையா

மகிமையுள்ள உம்முடைய மனஸ்தாபம்
கொள்வோர்கள்
இகபரத்தில் கதியிழந்து இம்சைப்பட லாகுமன்றோ

கடலிலணை கட்டுதற்குக் காரியங்கள்
தொடங்கிடலாம்
தடமசையக் கடல்தனிலே தருந்தபடி யுதவிசெய்வேன்

670. விசுவகர்மா புத்திரனாம் வெருசக்தி யுள்ளவனாம்
இசைந்தவிந்த நளனாலே எண்ணமது நிறைவேறுமே

அவன்கையா லெடுத்துவைத்தால் அமிழ்ந்திடாமல்
மிதக்குமெல்லாம்
சவரணையாய் அணையமையும் சமுத்திரசீவ
ராசிகளால்

யதுமிடை யூறின்றி யணிசெய்வே னுதவியெல்லாம்
பாதுகாப்பேன் அணையைமிகப் பக்குவமா
யமையச்செய்வேன்

கருணைசெய்வீ ரெனப்பணிந்தான் கர்த்தனப்போ
இரக்கங்கொண்டு
வருணனேசொல் அஸ்திரத்திற்கு வகையென்று
கேட்டானம்மா

லவணசமுத் திரத்திற்கப்பால் எவர்க்குந்தீங்கு
செய்பவராய்க்
குவலயத்தில் பாமரராம் குணமுடைய கூட்டங்கள்மேல்

675. விடுமையா அஸ்திரத்தை வெருபுண்ய முண்டதினால்
கடவுளரே யென்றுரைத்தான் கர்த்தனந்த
விதஞ்செய்தான்

அஸ்திரம்போய்த் துஷ்டர்களாம் அனைவரையும்
அதமாக்கி
அத்தலத்தைச் செப்பலிட்டு அங்குவிரண
கூபமொன்றை

உண்டுசெய்து நன்மைமிக உதித்திடவே செய்ததம்மா
கண்டுவெகு உத்தமர்கள் களித்தங்கு வசித்திருந்தார்

அதன்பிறகு ஸ்ரீராமரை அடிபணிந்து மறைந்தானந்த
உதவிசெய்யும் கடலரசன் உடனேநான் ஸ்ரீராமரை

வணங்கிச்சொல்வான் சமுத்திரராஜன் வந்துரைத்த
படியென்னில்
குணமுண்டு எனதன்னை கோரினாளென் தந்தையான

680. விசுவகர்மா அவரைமிக வேண்டுமவர் போலொருவன்
இசைந்தமக னென்றுகேட்டு என்னைமக
னாயடைந்தாள்

எனதுகையா லேதொன்றையுமே எடுத்துத்தண்ணீர்
தனில்போடில்
அனைத்துமிதந் திடுமல்லால் அமிழ்ந்திடவே
மாட்டாதையா

அதுவுமன்றிக் கடலரசன் ஆதரவுங் கூடியதால்
அதிகச்சீராய் அமைத்திடலாம் அணையைத்தானே
ஆகையினால்

வேண்டுவதா யுள்ளதெல்லாம் விரைவாகக்
கொண்டுவர
ஆண்டவரே வானரர்க்கு ஆக்ஞைசெய்வீ
ரென்றுரைத்தான்

அந்தவிதஞ் செய்திடவே ஆக்ஞைசெய்ய வானரர்போய்
சிந்தைமகிழ்ந் தநேகமலை செடிவிருட்ச முதலாகக்

685. கொண்டுவந்து சொரிந்தாரம்மா குப்பல்குப்ப
லாகத்தானே
கண்டதுண்டோ அந்தவொரு காட்சியைநா
னென்னசொல்வேன்

எடுத்தெடுத்துக் கடல்தனிலே எறிந்துநலன்
அணைகட்டத்
தொடங்கிவிட்டா னவனுடைய தோரணையே
தோரணையாம்

பத்தனையோ வானரர்கள் எடுத்துவர வாங்கிவாங்கி
அத்தனையுங் கடல்தனிலே அவனெறிவான்
அரைநொடியில்

கைலாவகம் என்னசொல்லுவேன் கூட்டுஞ்சீ
ரென்னசொல்வேன்
வையகத்தில் நளனுடைய வல்லமைபோ லெங்குமிலை

முளையடித்து நூல்பிடித்து முறையாகக் கட்டியணை
தளவரிசை செய்துநன்றாய் தடமமைத்தான்
லங்கைமட்டும்

690. அகலம்பத்து யோசனையாய் ஐந்துநாலி லணைகட்டி
மகிமைபெற்றா னந்தநலன் மாதவனும்
மகிழ்ந்தானம்மா

அனுமான்ஸ்ரீ ராமனையும் அங்கதன்லட்
சுமணனையும்
கனமாகத் தோளில்கொண்டு கடல்தாண்டி
வந்தாரம்மா

சுக்கிரீவன் கிளம்பிவந்தான் சுவாமியொடு கடல்கடந்து
அக்கரையைப் போயடைந்தார் அரக்கன்தம்பி
விபீஷணனோ?

மந்திரிகளை யழைத்துக்கொண்டு மகிமையுடன்
கடல்தாண்டி
முந்திவந்து சேர்ந்துசில முயற்சிசெய்தான் வசிப்பதற்கு

அணைகட்டுங் கார்யத்தில் அமர்ந்தவராம் வானரர்கள்
அணைகடந்து அக்கரையை அடைந்தாரப்பால் மற்றபடை

695. முழுதுந்தானே அணையில்வந்தார் மும்முரமாய்ப் பெருக்கத்தோடு
வழிகொள்ளாம லநேகமாக வானரர்கள் சமுத்திரத்தில்

விழுந்துவிழுந் தேறுவார்கள் விலகவகை இல்லாமல்
அழுந்ததேகம் வருந்துவார்கள் அநேகருமே இவ்விதமாய்ப்

போயடைந்தார் தென்கரையைப் பொறுப்புடனே சகலரையும்
ரேபங்கொண்டே யாதரித்து நேர்ப்படுத்திப் படைகளெல்லாம்

கருவியூக மமைத்துநல்ல கருத்துடனே காப்பவரைத்
தெரிந்தெடுத்தே யங்கங்கு திடப்படுத்தி வைத்துவிட்டுப்

பின்புறத்தில் சுக்கிரீவனைப் பிரகாம விருக்கச்செய்து
அவ்புடைய நம்பியோடு ஜயன் தலைப் புறமிருக்க

700. கண்டுதம்மா அருக்கருக்குக் கஷ்டந்தரும் சூறிகளெல்லாம்
வண்டிசையும் விபரீதமாய் இராமனதைப் பார்த்துமிக

ஸ்ரீராமன் படைகளைச் சீர்ப்படுத்தி லங்கையைப்
பார்த்ததிசயிப்பதும் சுகனை விட்டுவிட,
அவன்போய் இராவணனுக்குச் சேதி சொல்வதும்,
அப்பால் உளவறிந்துவர இரண்டுமுறை
அரக்கனனுப்பியவர்கள் இம்சைப்பட்டுப்
போயுரைப்பதும், அவர்களை இராவணன்
கடிந்துரைப்பதும், இராவணன்
தலைபோல வெட்டுண்ட தலையைச் சீதைக்குக்
காட்டுவதும் சீதை பிரலாபிப்பதும்

களிப்படைந்து லங்கையையும் கண்கொண்டு
பார்க்கையிலே
அளவில்லா அதிசயமாய் அதுவிருக்கும்
நிலைமைகளைக்

குறித்துக்காட்டி யனுஜனிடம் கோதண்ட
பாணிசொல்லி
முறைதப்பி ஜானகியை மோசஞ்செய்து கொண்டுவந்து

வைத்திடுங் கொடுமையென்னி வியாகுலத்தை
மிகவடைந்து
கைபலத்தைக் காட்டும்வேளை கலங்குவது
ஆகாதென்று

மனவுறுதி கொண்டுராமன் மகிமையுட னிருக்கையிலே
நினைத்துரைத்தான் சுகனையினி நிறுத்தவேண்டா
மனுப்புமென்று

705. சுக்கிரீவ னாக்ஞைப்படி சுகனைவிட்டா ரவனோடி
விக்கிவிக்கி யழுதுகொண்டு வேகமாக இராவணன்முன்

வந்தவலை வணங்கிச்சொல்வான் வந்தகஷ்ட
மென்னசொல்வேன்
இந்தப்படி நேருமென்று எண்ணாமல் போனேனையா

தமதாக்ஞைப் படிசென்று தருந்தபடி நயமாக
நமதெண்ணப் படிநடக்க நானுரைத்தேன் சுக்கிரீவர்க்கு

அறிந்ததனை வானரர்கள் அதிவேகமா யோடிவந்து
குறித்தென்னைப் பிடித்துக்கொண்டு கொடுமைமிகச்
செய்ததோடு

இறகறுத்து இம்சைசெய்தார் எனைவதைக்கத்
துணிந்ததோடு
பரிதபித்துக் கதறினேனான் பரந்தாமன் கேட்டுமிக

710. இரக்கங்கொண் டெனையிம்சை ஏதுஞ்செய்யா
திருக்கச்சொன்னார்
கருணைகொண் டுரைத்ததினால் கையெடுக்கா
திருந்தாரந்த

வானரர்கள் பலத்தைத்தானே வாக்கில்சொல்லி
முடியாதையா
போனவரை மிஞ்சவிடார் பொல்லாத வானரர்கள்

அவர்கள்கையில் சிக்கிவிட்டால் அடையுங்கஷ்டஞ்
சகிக்கப்போகா
வெறிவார் அந்தஇம்சை ஈசுவரனே யறிவானையா

கடலிலணை கட்டிக்கொண்டு கடல்தாண்டி
வந்துவிட்டார்
இடம்வசதி யாகவுமே ஏற்படுத்திப் படைகளோடு

வந்துவிட்டா ரிந்தநகர் வைதேகிமே லாசைவேண்டாம்
தொந்தரவு மிகவும்நேரும் சுந்தரியை விட்டுவிடும்

715. சுகமுமக்கு நிலைபெறுமே சொன்னபடி செய்யுமையா
அகந்தையினா லாவதில்லை அலைச்சலுண்டாம்
பலவிதமாய்

ஆகாதையா வெல்லுதற்கு அபாரமையா ராமன்சக்தி
தேகாபி மானங்கொள்வீர் ராமனை நேசங்கொள்வீர்

இல்லையெனி லிப்பொழுதே எதிர்த்துயுத்தஞ்
செய்திடுவீர்
வல்லமையைக் காட்டுமையா வகைமோசம்
போகவேண்டாம்

ஓட்டிசெய்தா லெட்டிவந்து பட்டணத்தைக்
கொட்டமிட்டுச்
சுட்டெரிப்பார் கட்டழுண்டாம் மெட்டுடனே
திட்டமாக

நடந்துகொள்வீர் என்றுரைத்தான் நாய்போல
அவன்மீது
கடுகடுப்பு மிகவுங்கொண்டு கத்துகிறான்
பத்தங்கெட்ட

720. தசகண்ட னிவ்விதமாய்த் தலைகொழுத்துத்
தனைமறந்து
சேயனைப்போல் மமதைகொண்டு மானங்கெட்ட
னனவன்

என்னைவந்து ஜயித்திடவே எவராலும் ஆய்விடுமோ?
உன்னைப்போலப் பயந்தவனும் உண்டோநம்ம
வர்க்கந்தனில்

சீதைதனை விட்டுவிடச் செப்புகிறா யெனக்குப்புத்தி
மாதரசாம் அவளைநான் மனந்துணிந்து
விடுவதுண்டோ?

தேகத்தின்மே லபிமானம் தினையளவு மில்லையடா
மோகமெல்லாம் ஜானகிமேல் மூம்மூரமா யிருக்குது

என்பலத்தை யறியாமல் இராமன்யுத்தஞ்
செய்யவந்தான்
நன்மையவ னடையமாட்டான் நானவனை
வென்றிடுவேன்

மனிதருக்கும் வானரர்க்கும் மயங்கலாமோ
பயந்தானும்
எனதுகீர்த்தி தனைமறந்து ஏனுரைத்தாய்
வணங்கும்படி

ஈனப்புத்தி கொண்டுரைத்தாய் இலங்கேச
னென்னைப்பார்த்து
வானவரும் எனைக்கண்டு வணங்குவரே இணங்கிவந்து

போதுமடா நீயுரைத்த புத்திகெட்டுப்
பிழைப்பதுண்டோ?
ஊரரவோ டிருக்குமெனை ஆரும்வெல்ல மாட்டாரடா

என்னுரைத்து மிகவுமவன் ஏசியப்பால்
அச்சங்கொண்டு
நன்றடைய என்னசெய்வோம் நாமென்று
ஆலோசித்துச்

சுகசாரணரால் என்றிருவர் சொன்னபடி சாதிப்பவர்
வகையறிந்த மந்திரியவர் வந்திடவே யழைப்பிவித்து

அவரைப்பார்த்து ஆக்ஞைசெய்வான் அமாத்தியரே
கேட்டிடுவீர்
விவரமாக நானுரைப்பேன் விவேகத்தோடு
சாரியஞ்செய்வீர்

சுடலிலணை கட்டிக்கொண்டு சுடல்தாண்டித்
தென்கரையில்
படைகளோடு ராமன்வந்து பாங்குடனே
யிருக்கின்றானாம்

அந்தவானரதூதன் அசாத்தியமன்றோ
மனிதருக்கு
இந்தலங்கை வந்தானென்றால் எப்படித்தான்
நம்பப்போகும்?

வந்திருந்தால் அவர் மிகவும் வல்லபரா யிருக்கவேண்டும்
முந்திச்சில யத்தனங்கள் முறையாய்நாம்
செய்யவேண்டும்

ஆகையினால் நீங்கள் சென்று அவ்விதமாய்
வந்ததையும்
தாகங்கொண்டு வந்தவரின் தண்டுகளின் சங்கியையும்

735. மனிதர்களின் பலங்களையும் மற்றுமுள்ள
அஸ்தரசஸ்தர
இனங்களையும் வானரரில் எவர்கள் முக்கிய
ரென்பதையும்

வானரர்போ லுருவங்கொண்டு வரலாறு
முழுமையையும்
தானறிந்து வருவீரென்று தசகண்ட னுரைத்தபடி

குரங்குரூபங் கொண்டவர்கள் கூட்டமதில் போயிருந்து
இருக்குமெல்லா ரகசியங்கள் இன்னபடி யென்றறியச்

சுற்றிச்சுற்றிப் பார்த்துக்கொண்டு சுகசாரணர்கள்
வருகையிலே
உற்றறிந்து விபீஷணனார் உடனேயந்த இருவரையும்

பிடித்துக்கொண்டு துடித்திடவே அடித்துராம
னிடத்திலேதான்
அடுத்தவரைக் கொண்டுவந்து விடுத்தானம்மா
வேகமாக

கண்டவரை வந்தசேதி கர்த்தன்ராமன் கேட்டிடவும்
தெண்டனிட்டுச் சொல்லுகிறார் திகிலடைந்து
சுகஸாரணாள்

தருமப்பிரபு ஸ்ரீராமா சரணமையா ஆதரிப்பீர்
அரைநொடியும் சகிக்கப்போகா அடித்தஅடி
என்னசொல்வோம்

தங்கள்முன்னே நிற்குமிந்தத் தானவராம் விபீஷணரும்
சிங்கம்போலக் காலுமிந்தச் சேனாபதி வானரரும்

சித்தரவதை புரிவதுபோல் ஸ்ரீராமா கொடுமைசெய்து
மொத்திவிட்டார் கத்தும்படி சித்தம்நொந்தோம்
உத்தமனே

எங்கள்மன்ன னாக்கைநெப்படி இங்குவந்தோ
மிருவருமாய்த்
தங்களது பலங்களெல்லாம் தருந்தபடி யறிந்துபோக

கலங்குவிபீ ஷணர்மிகவும் கஷ்டந்தந்தா
ரிஷ்டங்கொண்டு
மண்டை பிளந் துதிரஞ்சிந்த மகத்தான
கொடுமைசெய்தார்

ஏழைகளா யுள்ளவரை இம்சைசெய்தல் நியாயமாமோ?
ஏழேழு ஜன்மங்கட்கும் இந்தயிம்சை போதுமையா

ஆளும்ராஜ னாக்கைநெப்படி அடிமைநாங்கள்
வந்தோமையா
தாளிபறந் திடவெங்களை தொந்தரைகள்
செய்தாலையா

தூதர்களை சிட்சைசெய்தல் தொல்லுலகின்
தருமமாமோ?
ஆதரிப்பீ ரென்றுரைத்து அடிபணிந்து அழுதாரம்மா

ஸ்ரீராமன் கேட்டுமிகச் சித்தந்தனில் வருத்தங்கொண்டு
தாராளமாய்ப் பயமொழிவீர் தலையெடுத்து
நிற்பீரென்று

750. சொன்னபடி யவரெழுந்தார் சுவாமியவர்
களைப்பார்த்துப்
பின்னுஞ்சொல்வார் தூதர்களே பிசகுசெய்தீர்
ரூபம்மாறி

வன்வந்தீர் என்னிடத்து இராட்சதராம் ரூபத்தோடு
தான்வரலாம் அப்பொழுது தண்டிப்போ ராருமிலை

சுபடமாக வேஷங்கொண்ட காரணத்தால்
இம்சைப்பட்டீர்
விபரீதம் விளையத்தக்க வினைசெய்தேன்
கஷ்டப்பட்டீர்

என்னுடைய பலமறிய இஷ்டப்படி நீங்கள்வந்து
சொன்னபடி செய்திடவே சுவாதீன மாவேனால்

மறைத்துவைக்கும் பலத்தைக்கொண்டு மகிமைபெற
இஷ்டமிலை
ரூபித்தெதிரி கண்டறிந்து கூட்டிவரும் பலத்தைவெல்ல

755. மனமுள்ள என்னுடைய மர்மமெல்லா
மறிந்துகொள்வீர்
நினைத்தெவரும் வருத்தமாட்டார் நீங்களெல்லாம்
பார்த்திடுவீர்

இங்குவந்த காரியங்கள் ஏதுங்குறை யில்லாமல்
சங்கையின்றி அச்சமின்றி சரியாகத் தெரிந்துகொள்ள

விபீஷணரே யுங்களுக்கு விவரமாகக் காட்டிடுவார்
உபகார மிகவுஞ்செய்வார் உங்களிஷ்டப் படியறிந்து

திரும்பிப்போவீ ரென்றுரைத்த திருவாளன்
வாக்கைக்கேட்டுக்
கருதியெல்லா மறிந்தோமையா கருணைகொண்டு
விடுவீரென்றார்

ஸ்ரீராமன் அவர்களிடம் செப்புகிறான் நீங்கள் சென்று
விபீஷணரிடனாலுரைக்கும் பேச்சுகளை யுமதரசன்

760. அறிந்திடவே சொல்லுமென்று ஐயனிந்த
விதமுறைப்பான்
குறித்துவந்து வனந்தனிலே குணங்கெட்டு ஜானகியை

வஞ்சகமா யெடுத்தவொரு வல்லமையைக் காட்டுதற்குக்
கொஞ்சமுமே பின்னடையக் கூடாது பலங்களுடன்

நாளையெந்தன் முன்னேவந்து நடத்தியுத்தம் சூரனான
ஆளவனென் றறியச்செய்ய ஆசைமிக வுள்ளவனாய்

இருக்கின்றே னெனவுரைப்பீர் என்றுசொல்லி
யனுப்பஅவர்
பறந்தோடிப் போனாரம்மா பாதகன்றா
வணனிடத்தில்

நடந்ததெல்லாம் சொன்னாரம்மா நாதன்படை
கணக்கின்றி
அடைந்திருக்கும் உண்மையையும் அனைகடந்து
வருவதையும்

765. முக்கியசேனா பதிகளையும் முறையாகப்
படைகளெல்லாம்
தக்கபடி யிருப்பதையும் தகுந்தமற்ற பலங்களையும்

பரந்தாமன் பரிந்துரைத்த பரிசுத்த மொழிகளையும்
பெருமையுடன் அவரிளங்கும் பிரபலமாக
ஆண்மையையும்

விரித்துரைத்து வேண்டாமையா விளையுந்தீங்கு
ராமன்பகை
அரைநொடியு மாகாதையா அவனைவெல்லப்
போகாதையா

பேரழியும் பெருமையாகப் பெற்றவரந் தானழியும்
ஊரழியும் உமதுகுலம் ஒன்றுமிஞ்சா தழியுமையா

வல்லவனை யெதிர்க்கலாகா வருந்தீங்கை
யேற்கலாகா
எல்லையில்லாப் பலமுடைய இராமனைநீர்
வணங்குவதே

770. நன்மையையா வன்மம்விட்டு நாடியும்மி லாலோசித்து
அன்புகொள்ளும் அவனிடத்து ஆதரிப்பான்
என்றுமும்மை

இப்பொழுதே ஜானகியை இராமனிடம் ஒப்புவிப்பீர்
தப்பவேண்டா மென்றுரைத்து தண்டனிட்ட
ஸாரணனைத்

தசகண்டன் பார்த்துரைப்பான் தகிக்கும்படி
கோபங்கொண்டு
எசனஸ்த னைப்பார்த்து இழிவாகப் பேசிவிட்டாய்

எவ்வுலகும் நடுங்குமன்றோ என்பேரைக் கேட்டவுடன்
அவ்விதமா யிருக்கையிலே அபஜயமும்
அடைவதுண்டோ

மூவுலகும் அழிந்தாலும் மோகம்விடேன் சீதையின்மேல்
ஆவதென்ன அவளைவிட்டு ஆவிதனை வைப்பதிலே

775. ஆகையினா லென்னைஜயிப்போர் அகிலந்தனி
லில்லையடா
சோகமலா நானடையேன் சொல்லுமெந்தன்
வாக்கைநம்பி

நடந்துகொள்வா யென்றுரைத்து நாதன்பதை
களைப்பார்க்க
இடமதுவென் றாலோசித்து புறிந்தான்
அரண்மனையின்

உப்பரிகை தனிலிருந்து ஒவ்வொருசே னாபதியும்
ஒப்பும்நல்ல பலங்கொண்டு உறுதியாக இருப்பதையும்

மற்றுமுள்ள போர்களையும் மாதவனார் தம்பியுடன்
குற்றமற்ற தீரத்தோடு குணமாக இருப்பதையும்

விவரத்துடன் சுகஸாரணாள் விளங்கும்படி
யுரைக்கக்கேட்டு
அவசரமாய் அரக்கர்மன்னன் ஆக்கிரகத்தோ
டவரைப்பார்த்து

780. என்னுடைய மந்திரிகளாய் இருந்தும்நீங்கள் எதிரிகளே
என்னைவெல்வா ரென்றுரைத்த ஈனப்புத்திக்
காயுங்களை

இப்பொழுதே வாதபுரிவேன் இரக்கங்கொண்டு
நின்றேன்பாரீர்
தப்பிவிட்டீர் ஒருநொடியில் தலைகாட்டா
தோடுமென்றான்

அந்தவேளை அவர்களுக்கு ஆதியிலே அகஸ்தியமுனி
தந்தசாபம் ஒழிந்ததம்மா தானவரைப் பிரிந்தேகினார்

அதன்பிறகு அரக்கர்மன்னன் அகமகிழ்ந்து மிகப்பயந்து
இதமுள்ள முக்கியமந்திரி இராட்சதனாம்
மகோதரனை

அழைத்துச்சொல்வான் எதிரிகளின் ஆந்திரியங்க
ளறிந்துவர
வழியறிந்த சாரணரை வரவழைப்பா யென்றுதானே

785. அந்தப்படி வந்தழைக்க அரக்கர்களாம் சாரணர்கள்
வந்தரசன் றனைவணங்கி வாய்பொத்தி நின்றிடவும்

அவர்களைப்பார்த் தாக்ஞையிட்டான்
அரைநொடியில் நீங்கள்சென்று
சவரணையா யெதிரிகளின் சகலவித மருமங்கள்

இருக்கும்விதம் கண்டறிந்து என்னிடம் வந்துரைப்பீர்
பிரியமுள்ள சாரணரே பிசகுவேண்டா மென்றானம்மா

அந்தப்படி அவர்கள்போய் ஐயன்படை களைநெருங்கி
அந்தரங்க மாய்த்திரிந்தார் அறிந்தவரை
விபீஷணனார்

பிடித்துக்கொண்டார் வானரர்கள் பிடரிமுறித்
திடவடித்தார்
தடுத்தவரை விடுவீரென்று தயாபரன்ஸ்ரீ
ராமன்சொன்னான்

790. அந்தப்படி விட்டுவிட்டார் அங்கிருந்து
பிழைத்தோமென்று
வந்துசேர்ந்தார் ராவணன்முன் வணங்கிச்சொல்வார்
சாரணர்கள்

எதிரிகளின் பலங்களைத்தான் என்னசொல்வோம்
அவர்மிகவும்
மதியுள்ள சூரரையா மாளாது அவரைவெல்லச்

சீதைதனைத் தந்தவரின் சினேகங்கொள்ளல் உத்தமமே
சேதம்வரும் இலங்காநகர் சீரழியும் கண்டுசெய்யும்

யுத்தஞ்செய்ய மனமிருந்தால் யோசித்துச் சீக்கிரமாய்
மற்றபலங் களைச்சேர்த்து மனந்துணியு மென்றதோடு

பட்டபாடும் உரைத்துமிகப் பரிதபித்து அழுதவர்கள்
கட்டப்பட்டு வந்தாரெனும் கருணையணு வில்லாமல்

795. சொல்லக்கேட்ட வாக்கியத்தால் துடிதுடிக்கக்
கோபங்கொண்டு
வல்லபனாம் ராவணவரை வணங்கிச்சினேகங்
கொள்வதுண்டோ?

ஜகங்களெல்லாம் சுதறடிப்பேன் ஜானகியை
விடமாட்டேன்
அகந்துணிவேன் யுத்தஞ்செய்ய அனுகூலம்
ஞானடைவேன்

உங்களைப்போல் ஞான்பயந்தால் உலகெங்கும்
நகைத்திடுமே
அங்கமப்பால் வைப்பதிலே அணுவஞ்சுசு
முண்டோபாரீர்

அடுத்திருப்பார் பிடுங்கித்தின்பார் ஆபத்துக்
குதவமாட்டார்
மடையர்கள் உங்களிட மனமறிந்தேன் போவீரென்று

இந்தவித முரைத்துவிட்டு எல்லாமந்திரி மார்களையும்
அந்தட்சணம் அழைப்பவித்து அவருடனே
யாலோசித்து

800. அதன்பிறகு நிச்சயித்து அந்தப்புரந் தனில்வந்து
சந்திசெய்து ஜானகியைச் சுவாதீனஞ் செய்யவெண்ணி

வித்யுஜ்ஜிவ னெனுமரக்கன் வெகுமாயம் அறிந்தவனாம்
அத்தியந்தம் பிரியமுள்ள அவனையனுப்பி
துரைப்பானம்மா

அறுபட்ட தலையொன்று அதித்வரையில்
உண்டுசெய்வாய்
கருதிராமன் தலையென்று கண்டவர்கள் நம்பும்படி

அந்தத்தலை தனைக்கொண்டு அசோகவனந்
தனில்வந்து
எந்தன்முன் னிருக்குஞ்சீதை எதிரில்வைப்பா
யென்னுரைத்துத்

தன்கழுத்தில் தரித்திருந்த தகுந்தமுத்துச் சரந்தன்னை
அன்புடனே அவன்கழுத்தில் அணிந்ததன்மேல்
அசோகவனம்

805. வந்துசீதை தனைக்கண்டு வைதேகி கேளென்று
சிந்தைமிக நோகும்படி செப்புகிறான் ஒப்பும்படி

சண்டைசெய்ய உன்புருஷன் சமுத்திரத்தின்
வடகரையில்
தண்டுசுளாம் வானரரைத் தன்னுடனே யழைத்துவந்து

அவன்முதலாய் அனைவர்களும் அசந்துறித்திரை
செய்திருந்தார்
இவடந்தனி லிருந்துபோன எனதுசேனா
பதிபிரசஷ்தன்

உன்புருஷன் தலையறுத்தான் உன்கொழுந்தன்
ஓட்டமிட்டான்
என்சேனா பதிகையால் எல்லோரும் மாண்டாரப்பால்

அனுமாரோடு சுக்கிரீவனும் அங்கதனும் அதமானார்
இனியுந்தன் பிடிவாதத்தால் ஏதுபயன் நீயடைவாய்

810. என்னைப்பார்த்தா வாகவெண்ணி என்னுடனே
வாழ்ந்திடுவாய்
உன்னைநன்றா யாதரிப்பேன் உனக்கடிமை
செய்வனோன்

இன்னமுமேன் ராமனைநீ எண்ணியெண்ணி
வருந்துகிறாய்
அன்னநடை யுள்ளபெண்ணே ஆசைதீர்க்கும்
என்கண்ணே

உன்கணவன் றனைவென்றேன் உயிரிழந்தான்
அவன்றலைபார்
என்றுரைத்து வரவழைத்து மதிமில்லைவத்தான்
சீதைகாணச்

சிரகடனே ராமன்கையில் சீராகப் பிடிக்குமொரு
அரியஅம்பு போலும்வைத்தான் அதைக்கண்டு சீ
தைமிக

அலறிமண்ணில் விழுந்துமூர்ச்சை அடைந்ததன்மேல்
தெளிந்தெழுந்து
நலங்கருதி வந்தவரே நாயகரே யெனைப்பிரிந்து

எங்குபோனீர் என்பாவம் இந்தக்கோலம்
உம்மைச்செய்ய
அங்கம்நான் வைத்திருக்க ஆமோசற்றும் நாஞ்சூங்கூட

வந்திடுவேன் உம்மிடத்து வையகம்பா ழாமெனக்கு
விந்தையிது வுமையரக்கன் வென்றடுதெந்தன்
விதிவசமே

ஆசையொடு ஜயிக்கவந்து ஆவியிழந் திடவானீர்
நேசம்என்மேல் வைத்ததற்கு நீடைந்த கதியிதுவோ

கைகேகி மனப்படியே காரியங்க ளாயிற்றிப்போ
தெய்வமுந்தான் சோதித்தது தலையெழுத்தின்
வாறாயிற்று

ஜோதிஷத்தை மிகவறிந்தோர் சொன்னாரென்
பிராணநாதர்
ஏதுங்குறை யில்லாமல் எத்தனையோ வருஷமட்டும்

தீர்க்காயுஸா யிருப்பாரென்று தெரிந்துரைத்த
வார்த்தையெல்லாம்
பார்க்கும்போது வீணாகவே பயனற்றுப்
போயிற்றிப்போ

வைதவ்யத்தை யடைந்தினிமேல் வையகத்தி
லிருக்கலாமோ?
தைரியத்தை யிழந்தினிமேல் தரணியிலே
யிருக்கலாமோ?

சுணவனில்லாப் பெண்களுக்குக் கணிசமுண்டோ
வரிசையுண்டோ?
துணையுமுண்டோ குணமுமுண்டோ தொல்லுலகில்
அணுவாகிலும்

பதியிழக்கக் காரணமே பத்தினியின் பாபமெனும்
விதியின்படி யென்னிடத்து வெகுபாப மிருக்கவேண்டும்

பதியைக்கண்ணால் பார்த்திருந்தால் பரமசுகம்
சனிக்குமன்றோ
சதிகாரன் பரிதபிக்கச் சங்கடத்தைத் தந்துவிட்டான்

825. சிறைமீட்டார் குறைதீர்ப்பார் க்ஷேமமுடன்
நகரடைவார்
அரசாட்சி தனைச்செய்வார் அனைவரையும்
ஆதரிப்பார்

என்றுநம்பி யிருந்தேனே இந்தவிதம் என்றன்முன்னே
கொன்றதலை வருமாயிற்றே கோதண்டம்
வீணாயிற்றே

நானிருக்கும் இடந்தனிலே நாளுமெந்தன்
பிராணநாதர்
தானிருப்பே னென்றுரைத்த தத்துவமும்
இத்தையாமோ

ஆவிதுடித் திடச்செய்து அநுசிதமாய் அரக்கனிப்போ
நாவில்பேசும் வார்த்தையெல்லாம் நாராசமா
யிருக்கின்றதே

படுபாவி ராவணனே பரிதபிக்கச் செய்தாயே
உடம்பினிமேல் வைக்கமாட்டேன் உலகாசை
யொழிந்ததடா
830. என்கணவர் தேகத்தோடு என்னையுமே
அடக்கஞ்செய்தால்
என்மனது ஆறுமடா இப்பொழுதே அப்படிச்செய்

காதகனே பாதகனே கருநெஞ்ச முடையவனே
வேதனையில் மூழ்கச்செய்தாய் பேருடனே நீயழிவாய்

கட்டெரியும் உனதுகுலம் வெட்டுணியே பட்டுவிழாய்
அட்டியிலை யுதைகொட்டம் மட்டுப்படும் எட்டுநாளில்

நட்டுவாணிக் கழுதையைப்போல் தலைகொழுத்துத்
திரிகிறாயே
கட்டமுனை யணுகுமடா காலமுனை நெருங்குமடா

பெண்டுபிள்ளை யுனக்கிலையோ பிரபஞ்சதர்மந்
தானிலையோ
கண்டபெண்கள் கைபிடிக்கக் கனவிலுமே
யெண்ணலாமோ

835. தெய்வமுனைக் கில்லையோடா திருட்டுச்செய்கை யா
குமோடா
வையகத்தில் வாழ்வையோடா வல்லரக்க னாவை
யோடா

என்னைக்கள வாடியதும் என்பார்த்தா வுறங்குகையில்
உன்னுடைய சேனாபதி உயிர்ச்சேதஞ் செய்ததுவும்

பெருமையாமோ நீயேபாராய் பேதையேநீ
யாண்பிள்ளையோ
பரமசாது என்மனது பதைக்குதடா நீயழிவாய்

மாதர்மனம் நோகச்செய்தல் மகத்தான பாபமன்றோ
நீதிகெட்ட படுபாவியே நினைத்துத்துரோகம்
செய்தாயே

திரணமாக நினைத்தெந்தன் தேகந்தனை
யொழிப்பதன்றி
அரைநொடியும் உயிர்தரியேன் ஆசையென்மேல்
வேண்டாமடா

840. இந்தவித முரைத்துச்சீதை இராமனைப்போ
லுள்ளவொரு
அந்தத்தலை தனைமுகந்து அஸ்தமதால்
தொட்டுப்பின்னும்

தலையிலும்மார் பிலுமறைந்து தத்தளித்துத் தடுமாறிப்
பலவிதமாய் நொந்துருகிப் பாவிநா னேனுதித்தேன்

என்னசெய்வே னெனதுமாமி என்கொழுந்தன்
லட்சுமணனால்
மன்னவர்ஸ்ரீ ராமர்கதி மனமறிந்தால் மார்பிளந்து

உயிரொழிப்பார் பரதர்முதல் உள்ளமற்ற போகுமே
வயிறெறிந்து மடிவாரன்றி வையகத்தி
லிருப்பதுண்டோ?

செய்வதினி யென்னவென்று சீதைமிக மனந்துடித்தாள்
கைபலத்த ராமர்படை கடுகிலங்கை யடுக்கக்கண்டு

அசந்திருக்கப் போகாதென்று பிரகஸ்தன் தூதரை
யனுப்பக்கண்டு, இராவணன்
அசோகவனத்திலிருந்து அவசரமாய் வருவதும்
விபீஷணன் பத்னிவந்து சீதையைத் தேற்றி
அரக்கனுக்கு அவன்தாய் புத்தி சொல்வதையும்,
அதையவன் கேளாததையும் தெரிந்துவந்து சீதைக்
குரைப்பதும், யுத்தப் பிரயத்தனம்செய்ய அரக்கன்
சொல்வதும் விர்த்தமாத்தியன் மதி கூறுவதும்

845. பிரகஸ்தனினி அசந்திருந்தால் பிரமாதமாக
முடியுமென்று
கருதித்தச கண்டன்றனைக் கால்நொடியி லழைத்துவர

அனுப்பித்தந்தான் தூதர்களை அவர்வரவை
அரக்கன்கண்டு
மனமருண்டான் நினைவொழிந்தான் வனமிருந்து
மனைக்குவந்து

அமர்புரிய மந்திரிகளை அழைத்தரக்கன் ஆலோசித்து
நமதுபடை களைச்சேர்ப்பீர் நடத்துவோம்நாம்
யுத்தமென்றான்

இருநிற்க ஜானகியாள் வண்ணியெண்ணி
வருந்தக்கண்டு
மதிமிருந்த ஸரமாவென்னும் மகிமையுள்ள
விபீஷணனார்

பத்தினியாள் மனமுருகிப் பரிதபிக்கும் சீதையிடம்
உத்தமியே வருந்தவேண்டாம் உன்கணவர் உயிருடனே

850. சுகமாகவே யிருக்கின்றார் சோகமுனக் கேனம்மா
மகிமையுள்ள ராமருக்கு மரணம்வர நியாயமில்லை

கதறவேண்டாம் கபடமாகக் காதகன்ரா வணனுன்னை
மதிமயங்கச் செய்தசூது மர்மமெல்லாம் நானறிவேன்

சுடலிலணை கட்டிக்கொண்டு கடல்தாண்டி
வானரராம்
படைகளோடு தென்கரையில் பரந்தாமன் தம்பியோடு

வந்திறங்கிச் சேனைகளை வகையுடனே சீர்ப்படுத்தி
இந்திலங்கே சனைவெல்ல எத்தனையோ முயற்சியோடு

இருக்கின்றார் விசனப்பட வேதுவில்லை யிதுநிஜமே
அரக்கர்மாயம் அநேகமுண்டு அதைநம்பிப்
புலம்பவேண்டாம்

855. தருமந்தனை நிலைநிறுத்தத் தரணியிலே யுதித்துவந்து
அரக்கர்களை யொழிக்கவுள்ள ஆண்டவர் ஸ்ரீ
ராமருக்கு

வருவதுண்டோ தீங்கணுவும் வஞ்சகமா யஞ்சும்படி
கருதமாயத் தலையையுந்தன் கண்ணெதிரில்
வைத்தானம்மா

சருவக்ஞராம் ஸ்ரீராமர் சற்றுமசந் திருப்பதுண்டோ
வருவதெல்லாம் அவரறிவார் வஞ்சகரின் மனமறிவார்

திரிகால ஞானமுள்ள ஸ்ரீராமர் சக்திதனை
அரக்கராலே யறியவுண்டோ அவரைவெல்வோ
ராருமுண்டோ?

உன்கணவர்க் கேதுமிலை உற்றபடி தீங்கணுவும்
என்வாக்கை நம்பம்மா ஏதுனக்குத் துக்கமம்மா

860. அரக்கர்களை யொழித்தும்மை அகமகிழச்
சிறைமீட்டுப்
பிரியத்தோடு உன்னைக்கூடிப் பெருமையாக
அயோத்திநகர்

அவரடைவார் இவ்வுலகை ஆண்டுசெய் புகழடைவார்
குவலயத்தில் அவர்குணங்கள் குறித்தறிவோ ராருமிலை

மேலுஞ்செய்ய வந்தரக்கன் மொழிந்தவாக்கு
மித்தையம்மா
தேவரும்வரும் குறியறிந்து தூதர்பின்னே அவசரமாய்ப்

போனதொரு நிலைமைதனைப் புத்திகொண்டு
பாரம்மா
தானவன்போய் மந்திரிகளைத் தருவிக்கச்
சொன்னானம்மா

யுத்தஞ்செய்ய யத்தனிக்கும் யோசனைக்காய்ப்
போனானவன்
சத்தமது கேட்குதபார் சண்டைசெய்யப் போவாத்யம்

865. இனியரக்கன் மிஞ்சானம்மா எனதுபார்த்தா
அவளைவிட்டு
உனதுபார்த்தா வுடன்கூடி உழைக்கின்றார்
வெல்லுதற்கு

அரைநொடியும் உறக்கமன்றி அடுத்திருந்து
என்பார்த்தா
தருமசீலன் ஸ்ரீராமரைச் சரியாகப் பாதுகாப்பார்

அரக்கர்மாயந் தனையறிவார் அதற்கேற்ற
வழிதொடுப்பார்
மருமமெல்லாம் அறிந்துசெய்வார் மதியுடனே
எதுவுஞ்செய்வார்

கண்டறிந்து சொல்லுகிறேன் கண்கலங்க
வேண்டாமம்மா
சண்டைசெய்ய வந்துவிட்டார் சாமளனின்
படைகளெல்லாம்

இனியரக்கன் றனக்கஞ்சி ஓங்குவதை விட்டுவிடு
மனந்தெளிவாய்த் தைரியங்கொள்வாய் மாபாவி
தொலைந்தானம்மா

870. உனக்குவரும் கஷ்டசுகம் எனக்குமென்றே
நம்பவேண்டும்
மனதிலச்ச மெனக்கில்லை மகிழ்ந்திடுவோம் நாமிருவர்

நன்மையெண்ணி நடப்பவராம் நம்மிருவர் பதிகளுக்கு
என்றுங்குறை வருவதில்லை இதுநிஜமே
யென்றுரைத்துக்

கண்ணீரைத் துடைத்துடலைக் கருணையொடு
தடவித்தந்தாள்
எவ்வாணியப்பால் ஜானகியாள் ஏக்கமதை
விட்டொழித்து

ஸரமாதினைத் தழுவிக்கட்டித் தாயேநீ
சொன்னதினால்
பரிதாபந் தொலைந்துதம்மா பாதுகாத்தாய்
என்னையம்மா

நீவந்து சொல்லாவிடில் நிமிஷமதில் உயிர்விடவே
ஆவல்கொண்டேன் வையகத்தின் ஆசையெல்லாம்
ஒழித்திடுவேன்

875. சுர்த்தரைநான் அடையுமட்டும் காப்பதுந்தன்
கடமையம்மா
பர்த்தாவை யடைவதற்குப் பாக்யமுண்டோ
சொல்வாயம்மா

அரக்கனிப்போ செய்யுங்காரியம் அறிந்துவந்து
சொல்வாயம்மா
தருமமுனக் குண்டுமிகத் தாயேயென் றுரைத்தானம்மா

அந்தப்படி யறிந்துவர அந்தரங்க ரூபங்கொண்டு
தந்திரமாய் ஸரமாசென்று தானவரின் ரகசியங்கள்

அறிந்துவந்து சீதையிடம் அன்புடனே சொல்லுகிறாள்
குறித்தறிந்தேன். அரக்கன்செய்கை குணமறிந்தேன்
அவனுடைய

ராமவலம் கேகசியாள் தன்மகனை யடுத்துவந்து
நேயங்கொண் டுரைத்தாளம்மா நேராக இவ்வாறு

880. மகனேயுந்தன் செய்கையினால் மகத்தான
கஷ்டமுண்டாம்
இசுபரத்தின் சகமுனக்கு ஏதுமிலா தொழியுமடா

உலகமெல்லாம் பெற்றெடுத்த உத்தமிமேல்
சித்தங்கொண்டு
குலநாசஞ் செய்வதுண்டோ கொடுமைசெய்ய
வேண்டாமடா

இராமன்பகை யாகாதடா இராட்சதர்பூண்
டொழிப்பா னடா
காமன்வசம் ஆகாதேடா கஷ்டநஷ்ட முண்டாமடா

வல்லபனாம் ராமனுக்கு வஞ்சகத்தை யெண்ணாதே
வெல்லமாட்டா யவனைச்சற்றும் வேண்டாமடா
யுத்தமது

தலமழியும் பலமழியும் தகுந்தமற்ற சகம்ழியும்
குலமழியும் நலமழியும் குணமழியும் மணமழியும்

885. என்மகனே யுன்னைப்பெற்று எத்தனையோ
பெருமைபெற்றேன்
கன்மவினை யென்னையிப்போ கண்கலங்கச்
செய்யும்போல்

காணுதேநா னென்னசெய்வென் கடிலமன மாகாதடா
ஊனவத்தா லாவதில்லை ஆபத்தே விளையுமடா

எதிரிபல மறிந்திருந்தும் எதிர்ப்பதற்குத்
துணிவதுந்தன்
மதியீன மென்றறிவாய் மாதாவாக்கைத்
தள்ளவேண்டாம்

தந்தைசூலப் பெருமையெண்ணித் தன்னிலைமை
தன்னையெண்ணி
முந்திப்பிந்தி முறைகளெண்ணி முடிவெண்ணி
நடப்பாயடா

சூர்ப்பணகி படுபாவி சொன்னவாக்கைக்
கேட்கலாமோ
வேர்ப்பிடுங்க லாகவுள்ள வேலைதன்னைச்
செய்யலாமோ

890. ஆண்ட வனைப் பகைக்கலாமோ அறிவிழந்து
திரியலாமோ
நாண்டலாமோ தருமந்தனைத் தன்னைமறந்
தாடலாமோ

ஒருருபங்காய் வந்தசுஸ்டம் உற்றறிந்து பாராமல்
கருதுகிறாய் யுத்தஞ்செய்யக் கண்மூடித் தனமாக

அறியாப்பிள்ளை யிந்திரஜித்தன் அவனுரைத்த
அபிப்பிராயம்
சிறிதும்நம்பப் போகாதடா சீரழிய நேருமடா

கும்பகர்ணன் மனக்கருத்தைக் குறித்தறிந்து
பார்த்திடுவாய்
சம்பவிக்கும் கெடுதிதனைச் சபைதனிலே
யுரைத்தானன்றோ?

சத்தியசீலன் விபீஷணன்சொல் உரியாகப் பலிக்குமடா
உத்தமனாம் அவன்வாக்கை உதாசீனமாயாய்
எண்ணலாமோ?

895. இதுமுறைத்த அவனைவீணாய் வெடுத்தெறிந்து
பேசினதும்
துதிபெறவே சொன்னவனைத் துரத்தினதும்
நியாயமாமோ?

உன்மனதை அலைக்கழித்து உபதேசிக்கும் அறிவீனரான
உன்மந்திரிகள் வாக்குதனை ஒருக்காலும்
நம்பவேண்டாம்

தாய்வார்த்தை கேளாதவர் தத்தளிப்பார்
இத்தரையில்
நாய்போல அலைந்திடுவார் நாடியுன்னில்
அறிந்திடுவாய்

என்வார்த்தை தனைக்கேட்பாய் என்மகனே
மீறவேண்டாம்
அன்புகொண்டு நானுரைத்தேன் அதன்படியே
நடப்பாயென்று

பலவிதமாய் மதியுரைத்துப் பரிதபிக்கும் தாயவளை
சலிப்படையப் பேசுகிறான் சண்டாளப் பாவியான

900.1 இலங்கேசன் இவ்விதமாய் என்தாயே
சொல்வேன்கேளாய்
வலுவுடைய என்னையாரும் வையகத்தில்
வெல்வாரில்லை

இதுவரையில் பத்தினையோ பண்ணிச்செய்தேன்
அக்கரமங்கள்
அதுகளினால் நானேதாம் அடைந்ததுண்டோ
குறையணுவும்

நீயுரைத்த படிநடந்தால் நிமிஷமுயிர் தரித்திருக்கும்
தாயேயென்னால் ஆகாதம்மா ஜானகியை
விடமாட்டேன்

உயிரெனக்கு ஜானகியே உற்றபடி சொல்லுகிறேன்
பயப்படவே வேண்டாமம்மா பயனடைவேன்
மிகவும்மம்மா

அறிவுடையார்ப் பிள்ளைகட்கு அன்னைபுத்தி
சொல்லுவார்கள்
அறியும்நல்ல அனுபவமும் அமைந்தயென்போ
லுள்ளவராம்

விவேகிகட்கு அன்னைவாக்கு வீணென்றே
யறிந்துகொள்வாய்
அவிவேகி நானென்றெண்ணி அபிப்பிராயஞ்
சொல்லவந்தாய்

ஒருவர்மதி தனைக்கேட்கும் உள்ளமுள்ளோன்
நானல்ல
அருமையான மதியுடையோன் அகிலந்தனில்
நானேயாவன்

காலங்கண்ட வீரனெந்தன் கைபலத்தை அறியாமல்
நீலவர்ணன் வந்தானம்மா நிமிஷமதில் ஒழிவானம்மா

அஞ்சுகுணம் பெண்களுக்கு அமைந்ததம்மா
அறிஞாலே
சஞ்சலத்தை அடைந்தாயம்மா சற்றும்பயம்
வேண்டாமம்மா

இந்தவிதம் மகனுரைக்க ஏங்கியன்னை விலகிநின்றாள்
அந்தவேளை வானரர்கள் அமர்புரிய ஆரவாரம்

மிகவுஞ்செய்யுஞ் சத்தங்கேட்டு வெருகோபங்
கொண்டரக்கன்
முகத்திலக்னி ஜ்வலித்திடவே மூண்டகண்கள்
சிவந்ததம்மா

மந்திரிகளைப் பார்த்துரைப்பான் மதிகெட்ட
மூடர்களே
வந்துவிட்டார் வானரர்கள் மனந்துணிந்து
யுத்தஞ்செய்ய

மந்திரிகள் போல் மயங்கிக்கொண்டு மான
மில்லாமல்
தொந்திதள்ளி நிற்கின்றீர் துணைவர்தீ ராவீரோ?

அரைநொடியில் படைகளெல்லாம் ஆயத்தப்
படுத்திடுவீர்
வருவேன்யுத்தஞ் செய்வேனென்று வாய்மிரட்டு
மிகவுஞ்செய்தான்

விரித்தமாத்தியன் அவித்தனென்போன் வெருகுலங்
கண்டறிந்தோன்
மர்மந்தர்ம மிகுத்தெரிந்தோன் வர்த்தமானா
திகளைக்கண்டு

915. மிகுமன வருத்தங்கொண்டு விரைவாய்வந்து
ராவணன்முன்
அகந்துணிந்தே சொல்லுகிறான் ஆவலோடு
நாவிலம்மா

கியாதிபெற்ற அரசரேநீர் காலங்கண்டு
காரியஞ்செய்வீர்
நியாயமெல்லாம் நீரறிவீர் நானுரைப்பே
னதையுங்கேளீர்

உமதுபலம் உலகுதனில் ஒருவருக்கும் இல்லையையா
சமயமதில் உமதெண்ணம் சாதிப்பது அரிதையா

காலதேச வர்த்தமானம் கண்டறிந்தே சொல்லுகிறேன்
நீலவர்ணன் தனைப்பகைத்தல் நேரான காரியமல்ல

எதிரியேழை யென்றெண்ணி எதிர்த்திடவே
துணிகின்றீர்
அதிபலவான் ஸ்ரீராமன் அறிந்துகொள்ளும்
தெரிந்தொதுங்கும்

920. ஒதுங்கும்வேளை யாமிதிலே ஒதுங்கவேண்டாம்
தீங்கடைவீர்
நதியொருக்கால் சமுத்திரத்தை நஷ்டஞ்செய்யப்
போமோபாரீர்

அகண்பரி பூரணனே அகிலமெல்லாம் ஆதரிக்க
மகிஷமயுடன் லீலைசெய்ய வந்தவனே ஸ்ரீராமன்

எவருமவன் முன்னிலையில் எண்ணியுத்தஞ்
செய்யப்போகார்
அவனுடைய அந்தரங்கம் ஆரறிவார் அகிலந்தனில்

மண்விண்ணாதி பூதமெல்லாம் மறையுமவன்
வல்லமையால்
கண்முன்னே மறுபடியும் காணுமவன் சக்தியினால்

இகபரத்தில் சுகமளிக்கும் ஈசுவரனே ஸ்ரீராமன்
நிகரில்லாப் புருஷனவன் நிர்மலமாம் கதியுமவன்

925. அவனைவெல்லத் துணிவதுண்டோ அனுகூலம்
அடைவதுண்டோ?
சிவப்பொருளைப் பகைப்பதுண்டோ சீரழிவீர்
பேரழிவீர்

ஜகன்மாதா ஜானகியாம் சக்தியவள் முக்தியவள்
மகலட்சுமி அவளென்று வணங்குவதே யுமதுகடன்

ஆகையினால் அமர்புரிய அகந்துணிய
வேண்டாமையா
மோகம்சீதை மீதும்வேண்டாம் ஊகங்கொண்
டோதுங்குமென்றான்

அனுபவத்தில் சிறந்தநல்ல அமாத்தியர்நீ ரானாலும்
நினைவுவச மில்லாமல் நீருரைத்தீர் வார்த்தைகத்தால்

தேகபலங் குறைந்ததினால் திகிலடைந்து பேசவந்தீர்
தாகங்கொண்டு சொன்னதெல்லாம் சரியாக
நானறிந்தேன்

930. நானடையேன் குறையணுவும் நான் ஐயிப்பேன்
மனிதர்களை
யுனமக்கு மனவருத்தம் வன்றுரைத்தான் தசகண்டன்

இந்தச்சேதி களையெல்லாம் இதமாக வுரமாவந்து
சுந்தரியாம் ஜானகிக்குச் சொல்லிராமர் ஜயமடைவார்'

மாதரசே மயங்கவேண்டாம் மங்களங்கள்
உனையடுக்கும்
ஆதரவை மிகவடைவாய் ஆனந்தங் கூடுமென்று

ஆறுதலை மிகவுரைத்தாள் அன்னைசீதை
அதைக்கேட்டுப்
பரிதாபந் தனைவிட்டுப் பதிந்தினைவு கொண்டிருந்தாள்

இராவணனுக்கு மாலியவான் மதிகூறுவதும்
அவனை இராவணன் உதாசீனஞ் செய்வதும்
நாற்புறங் கோட்டை வாசல்களில் யுத்தஞ்
செய்யத்தக்க அரக்கரை நிச்சயிப்பதும் அவ்வாறே
ஸ்ரீராமனும் செய்வதும் சுவேலா மலையேறி
லங்கையை இராமன் முதலியவர்கள் பார்ப்பதும்
லங்கையிலுள்ள வனங்களில் வானரர்போய்க் கனி
யுண்பதும், இராவணனோடு சுக்கிரீவன்
மல்லயுத்தஞ் செய்து கிரீடங்களைப் பறித்து
வருவதும் அதைச்சாமி ஆட்சேபிப்பிப்பதும்.

யுத்தஞ்செய்ய ஆலைகொண்டு யோசிக்கையதுயில்
ஐயங்கொண்டு
சித்தமதில் அச்சங்கொண்டு சீரிகெட்ட ராவணன்றன்

935. சீறியபாட்டான் மாலியவான் செய்கையெல்லாம்
நன்குணர்ந்து
அறிவுடையோ னாகையினால் அன்புடனே பேரனிடம்

வந்துரைப்பான் சுன்மணியே வலுவறிந்து
நலம்பெறுவாய்
இந்தவேலை யென்வாக்கை ஏற்பதுவே தருமப்பா

அன்புடனே சொல்லுகிறேன் அரசேயென்
அருமைப்பேரா
நன்மையெ ண்ணி நீநடப்பாய் நாராயணன்
ராமனாகு

அவதரித்து வந்திருக்கு மந்தமர்மம் அறிந்து
செய்வாய்
எவருமவன் பகைகொள்ளார் இணங்கியவன்
நேசங்கொள்வார்

அவனைச்சூது செய்யலாமோ அவனைவெல்ல
எண்ணலாமோ
குவலயத்தை ஒருநொடியில் குபீரென்றே
எரிப்பானவன்

940. ஜகத்துக்குவன் காரணனே சித்விளையாட்
டாடுவானே
அகிலமெல்லாம் அவனுடைய ஆக்ஞைப்படி
ஆசையுமடா

ஆதாரப் பொருளவனே அறிவாகி உள்ளவனே
வேதாந்த முடிவிலனே விவேகிகட்கு விளங்குவோனே

மானிடனாய் அவன்வந்த மர்மமதை யறியாமல்
தானென்றகங் கொள்வாயாயின் தலைகீழாய்ப்
பலிக்குமடா

மாதாவே ஜானகியாம் மனமவள்மே லாகாதடா
சீதாபதி ராமனைநீ சிந்தைகொள்ள லுசிதமடா

மனத்துணிவு யார்க்குமுண்டோ மாதவன்முன்
நிற்பதற்கு
இனங்களைக்கொண் டென்னசெய்வாய் இராமனைநீ
வெல்லமாட்டாய்

945. வல்லபனை வெல்வேனென்று வகைமோசம்
போகாதே
செல்லுமோபார் கொல்லைவழி சேதுவொன்றே
போதுமடா

ஆதிமூலப் பொருளதனை அதிக்கிரமித்து
நடக்கப்போமோ
சோதிதனை இருளறுத்துச் சொன்னபடி
யாட்டப்போமோ

வேதசாஸ்தா முடிவறிந்த விவேகியாக நீயிருக்க
நீதியுனைக் காருரைப்பார் நீயேதான் பார்த்தறிவாய்

சகலபோக மனுபவித்தாய் சத்கதியை யடைவதற்கு
இகத்தில்நீ செய்யத்தக்க ஈசனாரா தனைமுறையாய்

நடத்திக்கதி யடைந்திடுவாய் நாளுஞ்சுகம்
பொருந்துமடா
கடத்தைநம்பி வீணாகக் கவ்டப்பட்டே
அழியவேண்டாம்

950. அற்பஇன்பம் தனைநாடி ஆயுள்தனை
அழிப்பதுண்டோ
சற்பழிக்குத் துணிந்துவீணாய்க் கடவுளைப்
பகைப்பதுண்டோ?

பாடபுண்யப் பலனளிக்கும் பரமனாக்களு
துனைக்கடந்து
சாபம்பெற் றழிவதிலே சாபமுண்டோ கோபமன்றோ

ஆதியிலே அறிவிழந்து ஆண்டவனை நான்பகைத்து
வேதனையை அடைந்தேனோ வெருவாக
அதைநினைத்தால்

அவன் கையில் பூர்வந்தனில் அடைந்தகஸ்டம்
இப்பொழுது
நவத்வாரமும் கொதிக்குதடா நடுக்கமுந்தா
னெடுக்குதடா

அவனுடைய வல்லமையை அறியாமல் துணிகிறாயே
எவ்வளவுதான் பலமுனக்கு இருந்தாலும்
பலனடைவாய்

955. ஆணவத்தை விட்டொழித்து ஆராய்ந்து
பார்ப்பாயாயின்
சுபணுமடா ராமன்சக்தி சுடவுளென்றே நம்புவையே

உன்கொழுப்பை யடக்குதற்கே உதித்தவன் ஸ்ரீ
ராமனடா
என்வாக்கை மீறவேண்டாம் எதிர்த்துயுத்தஞ்
செய்யவேண்டாம்

இந்தகரி லபசகுணம் எத்தனையோ காணுதடா
அன்னபட்சி போன்றசீதை அழுங்கண்ணீர் பலனதடா

பந்தியம்போட் டுயிர்விடவே பறப்பதுண்டோ
துடிப்பதுண்டோ
இந்தவிதஞ் செய்யலாமோ வலுனக்குத்
தோற்றவில்லை?

அகமடங்கில் சகமுண்டாம் அறிவுகொண்டால்
மகிமையுண்டாம்
ஜகதீசன்ரா மனைவணங்கில் ட்சேமமுண்டாம்
சாகவதமாய்

960. ஆகையினால் ஜானகியை அரைநொடியும்
பிரிந்தாமல்
வேகமாக ராமனிடம் விட்டவனைப் பணிந்திடுவாய்

இகமுரைத்தே வினியுன்றன் இஷ்டப்படி
செய்வாயென் றான்
மதமுள்ள தசகண்டன் மாலியவான் தனைப்பார்த்து

பொறிபறக்கக் கோபங்கொண்டு புலம்புகிறான்
சிடுசிடுத்து
வருமோசற்றும் அபஜயந்தான் வையகத்தில்
வந்தனுக்குத்

தேவாசுரர் என்னைக்கண்டால் திகிலடைவார்
அதுவுமன்றி
நாவாலே நாணரைத்தால் நடுங்கியதன் படிநடப்பார்

இட்டதுதான் சட்டமாகும் எட்டுத்திக்கும் கட்டுப்படும்
ஒட்டியெந்தன் கட்டளையே திட்டமென்று
சுட்டிச்செய்வார்

965. மன்னவர்க ளென்னெதிரில் மமதைவிட்டுப்
பின்னப்பட்டு
அன்னைபிதா நானென்றே அடிபணிந்து சொன்னபடி

நடப்பதன்றிக் கடப்பதுண்டோ திடமனதோ
டெதிர்ப்பதுண்டோ?
அடங்கொண்டம்பு தொடுப்பதுண்டோ
விடுமென்கணை தடுப்பதுண்டோ?

ஈசனருள் பெற்றவனை எதிர்ப்பவர்க
ளெங்குமுண்டோ?
தேசப்பிரஷ்டன் ராமனெனைத் திடமனதோ
டெதிர்ப்பதுண்டோ?

உள்ளதெல்லாம் ஒழிந்துராமன் ஊரைவிட்டு
வனத்தில்வந்து
எள்ளளவும் மகிமையின்றி இருப்பவனைச் சிறப்பாகுவே

பேசுகிறாய் வேஷமதை லேசமுமே அறியாமல்
ஈசனவ னென்றுளறி மோசம்போகப் பேசுகிறாய்

970. பெண்டிழந்து இதுவரையில் பேசாம லிருந்தராமன்
அண்டியென்னை அதிக்கிரமிக்க ஆமோபா ரறிவுடனே

சுடவுளரா யவனிருந்தால் சுடல்தாண்ட
அனைவேண்டுமோ?
குடத்தின்விளக் காவனன்றிக் குற்றமற்ற ஈசனாகுன்

இதுவரையில் எத்தனையோ இடர்கள்செய்தேன்
உலகத்திலெல்லாம்
அதுசரிக்குச்சாய் ஆக்கைதுண்டோ ஆண்டவனென்
வசமுமன்றோ?

ஜெகன்மாதா சீதையாகில் சிறையிலவ
ளிருப்பதுண்டோ
அகமுருகி யழுவதுண்டோ அவள்சாபம்
அழிவதுண்டோ

எதிரிதனைப் புகழுகிறாய் என்னைமிக இகழுகிறாய்
மதியெனக்கு ஊட்டுகிறாய் மயங்கவழி காட்டுகிறாய்

975. சத்துருவைப் போயடுத்த சதிகாரன் போலுன்னை
சித்தமதில் எண்ணிக்கொண்டேன் செப்பினது
போதுமடா

பகைவனென்றே யுனைநினைப்பேன் பாட்டனென்று
நானினையேன்
வெகுகோபம் உதிக்குதடா விலகிப்போவா
யென்றுரைத்தான்

மாலியவான் கேட்டுமிக மனவருத்தங்
கொண்டதன்மேல்
காலமது நெருங்கியதால் கடிந்துரைத்தான்
மூடனென்று

பேரன்றனை யணுக்கிரகித்துப் புறப்பட்டுக்
கிரகம்வந்து
ஆருரைத்துங் கேளாமலே அழிகின்றானே வழிதப்பியே

என்னசெய்வோ மென்றுமிக ஏக்கங்கொண்
டிருந்தானவன்
மன்னவன்ரா வணனப்பால் மந்திரிகளை
யழைத்துரைப்பான்

980. எதிரிகளைத் தடுத்துவல்ல எத்தனங்கள்
செய்யவேண்டும்
மதியுடனே காரியங்கள் மறவாமல் செய்திடுவீர்

இந்திரஜித்தன் மேற்குத்திக்கில் இருக்கவேண்டும்
வடதிக்கில்
எந்தனோடு சுகசாரணாள் இருக்கவேண்டும்
கிழக்குத்திக்கில்

சேனாபதிபிர சஸ்தன்தெற்கில் சிம்மம்போன்ற
மகாபாரசுவன்
நானாவிதத் தந்திரமுள்ள நமதுமந்திரி மகோதரனோ

டிருந்துங்கள் தனைக்காத்து எதிர்த்துயுத்தஞ்
செய்யவேண்டும்
அரக்கர்களை வானரர்கள் அதிக்கிரமிக்க
லாகாதென்று

சொல்லுங்கள் மத்தியிலே சூரர்வெரு பேரைவைத்து
வெல்லுதற்குப் புத்தியெல்லாம் விவரப்பட
உரைத்ததன்மேல்

985. அந்தப்புரம் தனில்வந்து அனுகூலம்
அடைவோமென்று
சிந்தைமகிழ்ந் திருந்தானம்மா சீலங்கெட்ட தசகண்டன்

அந்தச்சேதி விபீஷணரின் அமாத்தியர்போய்
அறிந்துவந்து
முந்திச்சொன்னார் கேட்டதனை முறையாக
ராமனிடம்

வந்துவிபீ ஷணன்வணங்கி வல்லரக்கன் காரியங்கள்
இந்தவித மென்றுரைத்தார் இராமன்கேட் டந்தவுடன்

சேனைகளைச் சீர்ப்படுத்திச் செப்புகிறா னிப்படியே
ஈனன்படை நாற்புறமும் இருக்குங்கோட்டை
வாசல்களில்

வந்துயுத்தஞ் செய்வதற்கு வகையுடனே
இருக்கினறாரம்
அந்தப்படை களையெதிர்க்க அனுப்பவேண்டும்
நமதுபடை

990. ஆகையினால் கீழ்த்திசையில் அதிபலவான்
நீலனவன்
சேகமுள்ள அங்கதனோ உறுதியுடன் தென்திசையில்

---

985. சீலம் - ஒழுக்கம்

மிகப்பலவான் மாருதியோ மேற்றிசைத் திசை நின்றிருக்கும்
பகைவன்வரும் வடதிசையில் பாங்குடனே நம்பியோடு

நானிருப்பேன் சுக்கிரீவரும் நல்லமைசெய்யும்
விபீஷணரும்
சேனையோடு ஜாம்பவந்தர் சேர்ந்தெல்லாத்
திசைகளுக்கும்

ஆதரவா யிருந்துகொண்டு அமர் புரிய வேண்டுமென்று
நீதியாகச் சொன்னதன்றி நினைத்துப்பின்னும்
சொல்லுகிறார்

வானரர்கள் காமரூபம் வகிக்கவேண்டாம்
அவ்வாறுசெய்தால்
ஊனம்வரும் நமதுபடைக் குபத்திரவங்கள்
மிகவிளையும்

995. ஆகையினால் நமதுபடை அவரவரின்
நிலைமைதப்பி
தேகந்தனை மாற்றவேண்டாம் தெரிந்துகொள்வீ
ரென்றுரைத்து

நகரைநன்றாய்ப் பார்ப்பதற்கு நாடிச்சுவேலா
மலைதன்னைத்
தருதியென்று அதனுடைய தாள்வரையை
யடித்துச்சென்று

தம்பிமுத லானோருடன் தளங்களிலே சிலரும்வர
எம்பெருமான் ஸ்ரீராமன் ஏறியந்த மலைதனிலே

இருந்துகொண்டு லங்கைதனை எல்லோரும்
பார்க்கையிலே
அருமையாக அலங்காரமாய் அந்நகரி இருக்கக்கண்டு

அதிசயித்தார் பழவாக்காதி அநேகமுள்ள
வனங்கள்கண்டு
குதித்துமிகக் களித்தாரம்மா குரங்குகளும் கரடிகளும்

1000. அவர்களெல்லாம் சுக்கிரீவரின் அனுமதியைப்
பெற்றுக்கொண்டு
த்வரிதமாகப் பாய்ந்துவிட்டார் தோரணவாயில்
லங்கைதனில்

இருக்கின்ற வனங்களிலே யெல்லோரும் போய்ச்சோர்ந்து
அருமையான பழங்களெல்லாம் அருந்திமன
மகிழ்ந்தாரம்மா

அரக்கர்மன்னன் அப்பொழுது அழகியவோர்
கோபுரத்தில்
இருந்துகொண்டு சாமரங்கள் இருபுறமும் வீசவேதச்

சத்தரமும் பிடித்திருக்கச் சந்தோஷமா யிருக்கக்கண்டு
இத்தனையுங் கொழுப்புடனே இராமன்முன்னே
இவனிருக்கப்

பார்ப்பதுநம் அறிவீனம் பாபியிந்த ராவணனை
மார்பிளக்க வதைத்தாலன்றி மனம்நமக்கு
ஆறாதென்று

1005. சுக்கிரீவன் மனதிலெண்ணிச் சுவாமிமுத
லாரிடத்தும்
அக்கருத்தைச் சொல்லாமலே அங்கிருந்து கிளம்பிவந்து

அரக்கன்முன் குதித்தவனை ஆக்ரமாய்ப்
பார்த்துரைப்பான்
திருட்டுவேலை செய்தவனே தேகங்கொண்
டிருக்கலாமோ?

ஜகதீசன் ஸ்ரீராமன் சரணச்சேவை செய்யும்பக்தன்
தருதியுள்ள நேசனுமாம் தரணியிலே சுக்கிரீவன்

என்பவனே நானென்றறி இராமர்பத்னி தனைத்திருடி
உன்பெருமை மிகவுமெண்ணி உள்ளமகிழ்ந்
திடுமுன்னை

அதஞ்செய்வே னென்றுரைத்து அவன்மீது
பாய்ந்தவனை
மதிமயங்க அடித்துத்தள்ளி மானபங்கும்
மிகவுஞ்செய்தான்

1010. ஒளிந்தரக்கன் சுக்கிரீவனைத் திடுக்கிடவே
பிடித்துக்குத்தி
மளமளவென் றேசுழற்றி மண்டைபிளந்
திடவெறிந்தான்

சுக்கிரீவன் கவ்டமின்றிச் சூட்சுமமாய்த்
தப்பிக்கொண்டு
பக்கந்தனில் வந்தரக்கன் பாதபிக்கக் கொடுத்தானிடி

அதைத்தடுக்க மாட்டாமலே அரக்கன்மிகத்
துடித்ததன்பேல்
குதித்தெழுந்து வானரனைக் கொடுமைசெய்தான்
அடித்துமிக

அந்தவேளை யங்கிருந்து அதன்பிறகு லாவகமாய்ச்
சிந்தைமிக உறுதிகொண்டு சீறிவந்து அரக்கன்றனை

பிடித்துக்கொண்டு கொடுத்தானம்மா பிடரியெல்லாம்
முறிந்திடவே
தடுமாறித் தத்தளித்தான் தசகண்டன் இகவெடுத்து

அந்தவுடன் அரக்கன்மிக அச்சங்கொண்டு
மதிமயங்கி
இந்தப்பாவி யெங்குவந்தான் இப்படியும்
இம்சிப்பனோ?

என்னசெய்வோ மென்றுமிக எண்ணங்கொண்டு
மறுபடியும்
உன்னைவிடே னென்றுரைத்து ஓடிவந்து வானரனைப்

பிடித்துக்கொண்டான் இருவருமாய்ப் பிரண்டுருண்டு
புகுதவெள்ளம்
உடம்புதனில் பெருகும்படி உக்ரமாக மல்லயுத்தம்

புவனமெல்லாம் நடுங்கச்செய்தார் போரதுபோல்
செய்வோரில்லை
எவருங்கண்டு பயந்துவிட்டார் என்னகஷ்டம்
வருமோவென்று

வானரனை வல்லரக்கன் வாலைப்பிடித்
திழுத்தெறிவான்
ஈனனந்த ராவணனை இடுப்பில்வாலைக்
கொடுத்துக்கட்டித்

தடுக்குத்தலை முட்டவிட்டுத் தவடையிலும்
மார்பிலுமாய்
மலங்சுழிய அடிப்பானம்மா வானரனாம் சுக்கிரீவன்

இந்தவிதம் யுத்தஞ்செய்து இராவணனைத்
தோற்கடித்து
அந்தப்பாவி சிரசுகளில் அணிந்தமணி முடிகள்பத்தும்

பறித்துக்கொண்டு சுக்கிரீவன் பரந்தாமனிடம்வந்து
ஒருநொடியில் குதித்தானம்மா உண்டோ அவன்
போலச்சூரன்?

இந்தப்படி நடந்ததெல்லாம் இராமன் பார்த்து
மனமருண்டு
எந்தன்விதி சரியில்லையோ? என்னசெய்வோ
மென்றிருந்து

சுக்கிரீவனைப் பார்த்துரைப்பான் சொல்லாமல்
போனதுதான்
தக்கதன்று தருமமன்று தசகண்டனை ஜயிப்பதற்கு

1025. முறைதப்பிப் போகலாமோ? மோசம்வர
நடக்கலாமோ?
குறித்தறிந்து செய்யாவிடில் குறைப்படவே
நேருமன்றோ?

அசந்திருக்கும் போர்கள்மீது அமர்புரியச் செல்லுவது
சரஸடையுங் காரியமல்ல ஏனிந்த வேலைசெய்தீர்

உத்தமர்கள் இவ்விதமாய் ஒருக்காலும் நடக்கப்போகா
எத்தனையோ விவேகமுள்ள என்பிராண நேசரேநீர்

இங்குவந்து சேருமட்டும் என்பிராணன் தரித்ததுதான்
கங்குகரை சொல்லவுண்டோ சகஷ்டமிசு
அடைந்தேனையா

உமதுயிர்க்குச் சேதம்வந்தால் உடனேநா
னுயிர்விடுவேன்
சமுசியமே இல்லையையா ஜானகியும் தம்பிகளும்

1030. இருந்தெனக்கா வதுமுண்டோ இன்பமப்பால்
லேசமுண்டோ?
அரைநொடியும் உயிர்தரித்து ஆவதுண்டோ
பயனெனக்கு

1029. சமுசியம் - சந்தேகம்

ஆனால்நான் அரக்கன்றனை அமர்புரிந்து
ஜயித்ததன்மேல்
ஏனிருக்க வேண்டுமென்று என்னுயிரை
யொழிப்பேனையா

உள்ளபல மெல்லாங்கொண்டு உறுதியாக
மனந்துணிந்து
எள்ளளவும் அச்சமின்றி எதிர்ப்பவரோ டவ்வாறே

அச்சமின்றி நாமுஞ்சென்று அமர்புரிதல் அழகாகும்
இச்சையினி யிவ்விதமாய் எப்பொழுதும்
கொள்ளவேண்டாம்

தெய்வபலம் இருந்தினால் திரும்பியும்மைக்
கண்டேனையா
கைபலத்தை யறிந்தேனையா கனந்தந்தீ
ரென்றுரைத்துத்

1035. தக்கபடி யுபசரித்துத் தாவிக்கட்டி
யணைக்கிரகித்தான்
சுக்கிரீவன் சுவாமிமனம் சோகப்பட நடந்ததுதான்

பிசகான காரியமென்று பிறகறிந்து அகம்வருந்தி
மசையனைப்போ லானோமென்று மாதவனை
வணங்கிநின்று

யாருக்குந் தெரியாமல் சுக்கிரீவன் போய்
ராவணனுடன் மல்லயுத்தஞ் செய்ததற்கு ஸ்ரீராமன்
ஆக்ஷேபித்ததைக் கேட்டுச் சுக்கிரீவன்
தன்னைத்தானே நொந்து ஸ்ரீராமரைப் பார்த்து
வணங்கி மன்னிப்புக் கோருவது

நீதிதனை மறந்தேனையா நேர்வழியைக்
கடந்தேனையா
போதுமின்றிப் போனேனையா புத்தியின்றி
நடந்தேனையா

உறதுமனம் வருந்துமென்று உள்ளமதில் எள்ளளவும்
அமைதியுடன் அறியாமல் அதிக்கிரமித்தேன்
விதிவசத்தால்

என்னிமித்தம் மனம்வருந்த ஏனடந்தே னென்றிப்போ
சொன்னதன்மேல் தெரிந்ததெந்தன் சுவாமியதை
ட்சமித்திடுவீர்

1040. அரக்கன்றனை நேரில்கண்டேன் அவனிருந்த
கோலங்கண்டேன்
பரிதவிக்கத் தேவிதனைப் பலவந்தமாய் எடுத்தவொரு

கொடுஞ்செயலை நினைத்துக்கொண்டேன்
கோபமதில் மூழ்கிவிட்டேன்
தடந்தப்பிப் போயவனைத் தண்டித்தே னாசையினால்

மனமிரங்கி ட்சமிப்பீரென்று மாதவனைப்
பிரார்த்தித்தான்
மனமகிழ்ந்து ஸ்ரீராமன் மன்னவிட்டுக் கீழிறங்கி

ஸ்ரீராமன் யுத்தஞ்செய்யத் தொடங்குமுன்
இராவணன் மனமறிந்துவர அங்கதனைத்
தூதனுப்புவது அவன் போய்த்
தெரிந்துவந்துரைத்தமேல் யுத்தந்தொடங்கி
அரக்கரில் முக்கியஸ்தராயுள்ளவரும் இருபுறம்
படைகளும் அநேகமாய் மடிந்தபின் இந்திரஜித்தன்
அங்கதன் கையில் சிக்கிக் கஷ்டப்பட்டு அப்பால்
மறைந்திருந்து அவன் யுத்தஞ் செய்வது

தருமயுத்தஞ் செய்வதற்குத் தகுந்தபடி யத்தனித்து
மருமமெல்லா மறிந்துகொண்டு மயங்காமல்
எதிர்த்துயுத்தம்

செய்திடுமுன் குறித்தபடி சேனைகளை யங்கங்கு
வைத்தவர்கள் சீராக மனந்துணிந்து நிற்கச்செய்து

அரக்கன்வரும் வடவாசலை அடுத்துராமன்
தம்பியொடு
கருதிச்சில படைகளோடு கனமாயந்த வாசலின்முன்

இருந்துகொண்டு யோசித்து இரக்கங்கொண்
டங்கதனை
வாவழைத்து அனுப்பித்தந்தான் வல்லரக்கன் மனமறிய

புந்திமதி கொல்லும்படி போயங்கதன் ராவணன்முன்
பந்தலனபோ கம்பீரமாய் இருந்துகொண்டு
சொல்லுகிறான்

வரக்கனுடன் மனமறிய ஐயனென்னை
அனுப்பித்தந்தார்
இருக்குமுந்தன் பெண்ணந்தனை இப்பொழுதே
யுரைப்பாயென்றான்

அருமுந்தாய் உனதுதந்தை ஆவிதனை அழியாயமாய்த்
தாடதூடிக்கப் போக்கினவன் துன்மார்க்கன்
ராமனுக்குத்

தூதனாக வருவதுண்டோ தூதனவ
னாவதுண்டோ
மேதினியோர் நகைத்திடுவார் வேண்டாமவன்
நேசமப்பா

உன்தந்தையை வதைபுரிந்து உன்சிறிய தகப்பனுக்கு
நன்மைசெய்யு ராமனைநீ நாடலாமோ கூடலாமோ?

பழிக்குப்பழி தீர்ப்பதற்குப் பலமுயற்சி செய்தவனை
ஒழித்திடவே வேண்டுமப்பா உழைக்கலாமோ
அவனுக்காகச்

சிறியதந்தை தனைநம்பில் சீரழிவாய் கூறமிவாய்
ருநித்தறிவாய் ராமனா லும் குணமுண்டோ
குறைவின்றி

எதிர்த்துயுத்தம் ராமன்செய்யான் எங்காயினும்
மறைந்திருந்து
சதிசெய்தே வதைபுரிவான் சரியாக அவனடைவான்

1055. நாடுவழி நடப்பவனைத் தாங்குவது முறையல்ல
கெட்புமெந்தன் வாக்கைக்கேளாய் ஸ்ரீராமன்
சிநேகம்வேண்டாம்

நானுந்தன் தகப்பனுக்கு நண்பனாக இருக்கையிலே
வனந்த ராமனைப்போய் இணங்குகிறாய்
வணங்குகிறாய்

அப்பனைப்போ லெண்ணியென்னை அடுப்பதுந்தன்
கடமையா ம்
எப்பவுமே உன்னைமிக ஏற்றமாக வைப்பேனடா

மனிதர்பலம் எந்தன்முன்னே மட்டமாகும் கெட்டியாக
நினைப்பதுண்டோ எவராயினும் நெருங்கிவென்முன்
வருவதற்கு

மன்குதிரை ராமனென்று மனதில்கொள்வாய்
நாளையதை
கண்முன்னே நான்காட்டுவேன் உன்மையிது
நம்புவாயே

1060. முன்பின்னுள்ள காரியமெல்லாம் முறையாக
அறிந்துசெய்வாய்
என்கையால் மனிதர்நாளை இல்லையென்றே
முடியும்பாராய்

அதன்பிறகு கண்கலங்கி அலைந்திடுவாய் நலமொழிந்து
மதியுரைத்தேன் எந்தன்நேசன் மகனென்று
மனமுவந்து

எனையடுத்தா லுனக்குமிக இன்பமுண்டு நன்மையுண்டு
சுகமுண்டு தனமுண்டு ஜனமுண்டு
நினைவிற்கொள்வாய்

பல்முளையாப் பாலலுன்னைப் பரிதபிக்க
உன்தந்தையைக்
கொல்வதற்குத் துணிந்தவனைக் கொல்வதற்கே
நீதுணிவாய்

சுக்கிரீவனும் எந்தன்கையால் தொலைந்திடுவான்
அதன்பிறகு
தக்கபடி யவனரசு தருவேனடா நீலனுக்கு

1065. எனைஜயிப்போ ரெங்குமிலை என்பெருமை
எவர்க்குமிலை
அனைவரையும் சுட்டியாளும் அரசனெந்தன் வரிசை
கலவா,

அறிந்தவர்க்கு விளங்குமடா அறியாதவன் நீயாதலால்
குறித்துரைத்தேன் என்வாக்கைக் குணமாகக்
கொள்ளென்றான்

அருக்கன்சொன்ன வார்த்தைகளை அங்கதன்கேட்
டாத்திரங்கொண்டு
கருதியப்பால் தெளிவுடனே காதகனைப்
பார்த்துரைப்பான்

தேகந்தனை விடுகையிலே திர்ப்திகொண்டு என்தந்தை
மோகாதி பந்தமெல்லாம் முடிவாக ஒழித்துநல்ல

சக்கதியைத் தந்ததற்குச் சர்வக்ஞராம் ஸ்ரீராமரை
எத்தனையோ ஸ்தோத்திரஞ்செய்து என்னையவர்
கையில்தந்து

ஆதரிக்க வேண்டுமென்று அன்புடனே சொன்னபடி
பாதுகாக்கும் ஸ்ரீராமர் பாதசேவை செய்கின்றேன்

தாய்தந்தை குருதெய்வம் சகலமுமே எனக்ஞராமன்
ஆய்விட்டா னாகையினால் அவரேதான் கதியெனக்கு

இராமர்பலம் கண்டறிந்து இரகசியமாய் ஜானகியைக்
காமங்கொண்டு போயெடுத்த காரணத்தால்
உன்பலத்தை

நானறிவேன் ஆகையினால் நம்பமாட்டேன்
உன்வாக்கை
ஜானகியை விடமனதா சண்டைசெய்யத் தான்மனதா

சண்டைசெய்து வெல்லுதற்குச் சாமர்த்தியம்
உனக்கில்லை
கண்டுசொல்லும் எந்தன்வாக்கைக் காதில்கொண்டு
காரியஞ்செய்வாய்

உனதுவாழ்வோர் நொடிதனிலே ஒழிந்திடவே
இருக்கையிலே
எனக்கேதோ செய்வேனென்று எண்ணுகிறாய்
கண்ணிழந்து

அன்றுண்ண வகையற்றவன் அரசளித்து வரிசையுடன்
நன்றடையச் செய்வேனென்றால் நானங்கெட்ட
பேச்சாகுமே

உயிரொழிக்கும் வேளையிலே உலகைக்காப்பே
னென்பதுபோல்
தயவுடனே யுரைசுருமுந்தன் தலையெழுத்தைத்
தடவிப்பாராய்

யானைதனை யடக்குதற்கு அணிப்பிள்ளை யாலாமோ?
மானங்கெட்ட வேலைசெய்து மமதைகொள்ள லழகா
குமோ?

தடுப்போரில்லா வேளையிலே அடுக்களையில்
றுழைந்துசெய்யும்
துடுக்குள்ள நாய்போலத் துரோகஞ்செய்த பாதகனே

1080. இருக்குமிடம் இரவலாக இருப்பவனும் விருப்பமுடன்
அருமையகும் தருவேனென்றால் ஆரதனை
நம்பப்போகும்?

பூனைதனை யலிபிடித்துப் புசித்திடவே
துணிவதுண்டோ?
தீனதயா பரரான திருவாளரை யெதிர்ப்பதுண்டோ?

யானைதனைப் பூனைவந்து அதஞ்செய்யத்
தூண்டுவதுண்டோ?
புனினியும் அறிவிழந்து இறுமாந்து துள்ளுகிறாய்

புலிவாயில் சிக்கிக்கொண்டு புலம்புவோன்போ
லுள்ளவுந்தன்
குலமுழுதும் நசிக்குமடா குற்றமுள்ள உன்னுடைய

வாக்கைநம்பி நடப்பேனாயின் வாழ்விழந்து
போவேனடா
நீக்குப்போக்குக் கையறியா நீசனைப்போ
லுளறுகிறாய்

ஜகதீசன் ஸ்ரீராமரை ஜயிக்கமாட்டாய் சீரழிவாய்
மகிமையுள்ள அவர்மனைவி மாதரசாம் ஜானகியை

விட்டுவிடில் சுட்டமிலை மெட்டுடனே எட்டுத்திக்கும்
பட்டமது சுட்டியர சிட்டுச்சுகப் பட்டிடுவாய்

இல்லையெனில் வல்லமையில் வல்லையில்லோன்
கொல்வானெனச்
சொல்லும்போது வல்லரக்கன் பல்நெரித்து
நில்லெனவே

அதட்டக்கண்டு சூரனான அங்கதனாம்
அறிவுடையோன்
பதட்டமென்ன பாபியேநீ பற்கடித்து மிரட்டுகிறாய்

மலையையணு மதிக்காவிடில் மகிமைகுறைந்
திடுவதுண்டோ
நலம்பெறவே நானுரைத்தேன் நாய்போல
அதட்டுகிறாய்

இப்பொழுதே உனைவதைப்பேன் இரமனாக்ஞை
இல்லையடா
தப்புசெய்த உனையொழிக்கத் தயாபரரே
கையெடுப்பார்!

பத்துத்தலை பூச்சிபோலப் பாவித்துனை
எனதுதந்தை
கத்தும்படி உனதுகைகள் கவ்வுகங்களில்
அமிழ்த்துக்கொண்டு

கடல்நான்கும் சுற்றிவந்து கட்டியெந்தன்
தொட்டிலிலே
துடிக்கச்செய்த சேதியைநீ சுத்தமாக மறந்தனையோ?

அப்பன்பலம் எனக்குமுண்டு அறிவுமுண்டு ஆசையுண்டு
குப்புறவே விழும்படியாய்க் கொடுத்திடுவேன்
அறையுனக்குச்

செ.ட்கிலிட்டு என்னெய்வாங்கும் சேதியைப்போ
லுனைச்செய்வேன்
அக்கருத்தை அறியாமல் அதட்டுகிறாய் மிரட்டுகிறாய்

1095. மோசஞ்செய்த பாதகனே மீசையுனக் காகாதடா
வாசஞ்செய்ய ஆசையில்லை வாழ்வொழியும்
உனக்கினிமேல்

வந்தகாரிய மாயிற்றடா வருவேன்போய்
என்றானம்மா
அந்தப்படி சொன்னவுடன் அங்கதனைப்
பார்த்தரக்கன்

உனைமறந்தேன் உனறுகிறாய் உனைவதைப்பேன்
இப்பொழுதே
எனையெதிர்த்துப் பேசினவர் இழந்திடுவா
ருயிரையடா

வருகின்ற கேடறியா வானரனே நானுன்னை
அரைநொடியில் அதஞ்செய்வேன் அப்புறம்நீ
செய்வதென்ன?

எனதுகையி லகப்பட்டநீ எங்குபோகக் கூடுமினி
உனதுயிரோ ஒழியுமிப்போ உன்கொழுப்பும்
அடங்குமிப்போ

1100. துள்ளுகிறாய் குரங்கேநீ துணையில்லா வேளையிலும்
எள்ளளவும் பயமின்றி என்னைக்குறை யேலுரைத்தாய்

காலதேச வர்த்தமானம் கண்டறிந்து நடவாமல்
வாலையசைத் தாடியதால் வந்ததடா கஷ்டமென்று

மட்டிப்பயன் துஷ்டனிவன் கொட்டமெல்லாம்
மட்டுப்படக்
கட்டிமிகத் தட்டியப்பால் கட்டுக்கொன்று
விட்டிடுமென் (று)

அரக்கன்மிக ஆக்கிரகமாய் ஆக்ஞைசெய்தான்
அந்தப்படி
தூரிதமதாய்க் கிங்கரர்கள் தோரணையாய் ஓடிவந்து

பிடித்துக்கொண்டார் அங்கதனைப் பேசாம
லிருந்தவனும்
அடித்தெழும்பிக் கிளம்பிவிண்ணில் அரக்கர்களை
உதறிடவும்

1105. பிடரிமுறிந் திடவிழுந்தார் பேச்சுமூச்சுக் களுமின்றி
உடம்புணர்ச்சி தனைமறந்து உதிரஞ்சிந்திக்
கிடந்தாரம்மா

இலங்கேசன் பாரித்தானம்மா இப்படியுஞ்
சூரருண்டோ?
உலகிலவன் தனைஜயிக்க ஒருவருண்டோ
எனப்பிரமித்தான்

அந்தகன்ஸ்ரீ ராமனிடம் அந்தவுடன் வந்தவரை
இங்கிதமாய் வணங்கிச்சொல்வான் இவ்விதமாய்ச்
செவ்வையாக

சாமியந்தப் பாவியின்மேல் சற்றுந்தயை
வேண்டாமையா
பூமியாசை அவனுக்கில்லை போம்வழியே தேடுகிறான்

வணங்கியவன் வருவதில்லை வாழ்வொழியத்
துணிந்தனே
இணங்கிவரும் குணமவனில் எள்ளளவும்
இல்லையையா

1110. பட்டுப்பூச்சி இஷ்டப்படி சட்டைதர ஒட்டிடுமோ?
சுட்டெரித்தால் கட்டப்பட்டுப் பட்டுத்தரும்
அட்டியின்றி

என்பதுபோல் அரக்கனிட எண்ணமது இருக்குதையா
சன்மார்க்கம் அணுவுமிலை சண்டாளப் பாவியவன்

சொல்லவுள்ள வார்த்தையெல்லாம் சொன்னேனையா
பின்னப்படப்
பல்லைக்கடித் தகங்காரித்தான் படுபாவியைப்
பழுக்கப்பார்ப்பேன்

தமதாக்ஞை யில்லாததினால் தண்டியாமல்
பின்னடைந்து
அமைதியுடன் அடங்கிவந்தேன் ஆண்டவனே
என்றுரைத்தான்

சாமிகேட்டு இரக்கம்விட்டுச் சடுதியாக அமர்புரிய
நாமினிமேல் துணிவதுவே நலமென்று நிச்சயித்து

1115. நகரைச்சுற்றி வானரர்கள் நாற்புறமுஞ்
சூழ்ந்துகொண்டு
அகந்துணிந்து யுத்தஞ்செய்ய ஆக்ஞைசெய்தான்
அதன்பிறகு

கோட்டையிலும் பேட்டையிலும் கொத்தளத்துக்
கோபுரத்தும்
சேட்டையுங்கொண் டாட்டத்தோடு
சேனையெல்லாம் நிறைந்துவந்து

ஆரவாரம் மிகவுஞ்செய்தார் அதைக்கேட்டுப்
பயந்தரக்கன்
ஏறிப்பார்த்தான் மாடியின்மேல் இராமன்படை
களையெல்லாம்

எங்கும்ராமன் படைகளாக இருக்கக்கண்டு மிகவுமவன்
சங்கைகொண்டான் அதன்பிறகு சாமர்த்தியந்
தனையெண்ணி

இறங்கிவந்து அரக்கர்படை எல்லோரையும்
வரவழைத்துத்
துரிதமாக அமர்புரியத் தூண்டிவிட்டான் ஈண்டியந்த

1120. அரக்கரெல்லாம் எதிர்த்துநின்று அமர்புரியத்
தொடங்கிவிட்டார்
கருதியிரு புறங்களிலும் கனயுத்தம் நடந்ததம்மா

இருபடையும் பெருங்கடல்போல் எதிர்த்தெதிர்த்து
அடுத்துயுத்தம்
திறமாகச் செய்தாரம்மா தேகந்திரண மாயெண்ணியே

சூலங்கதை பிண்டிமுதல் சொல்லுமெல்லா ஆயுதங்கள்
காலங்கண்டு சொரிந்தார்மிகக் கவிகள்மீது
அரக்கரெல்லாம்

சொரிந்ததெல்லாம் வரும்வழியில் சுபாவங்கெட்டு
விழும்படியாய்ப்
பெருமலைகள் காடுகளைப் பிரபலமாக எடுத்தெறிந்து

விருட்சங்களும் குன்றுகளும் வேருடனே பிடுங்கிவந்து
அரக்கர்கள்மேல் போட்டாரம்மா அவைகளெல்லாம்
தடுத்தரக்கர்

1125. கோட்டைமதில் சுவற்றிலேறிக் குறித்தெறிந்தார்
சூலாதிகள்
போட்டவராம் அரக்கர்களைப் புடைத்திடவே
வானரர்கள்

தாவிமதில் தனில்குதித்துத் தானவரைப்
பிடித்துக்கொண்டு
ஆவிதுள்ளத் தவடையிலே அறைந்துமிக
வருந்தச்செய்து

இடுப்பொடி இம்சித்தார் எடுத்தாரோட்டம்
அரக்கரம்மா
மடுவாயுள்ள அகழோரில மட்டமாகத்
தூர்த்துவிட்டார்

அதன்பிறகு இந்திரஜித்தை அங்குதன்போய்
எதிர்த்துநிற்கக்
கதையொன்றை இந்திரஜித்தன் கையிற்கொண்
டெறிந்தானது

அங்கதன்மார் தனில்படவே அவன்மிகவே
சினங்கொண்டு
பங்கஞ்செய்ய எண்ணியந்தப் பாவிரதம்
பொடியாக்கினான்

1130. அனுமான்ஜம்பு மாலிதனை அதஞ்செய்தான்
ரதத்துடனே
மனந்துணிந்து நளனென்போன் மதமுள்ள
பிரதபலனைக்

கண்கள்பொட்டை யாக்கிவிட்டான் காதகனாம்
பிரகஸனனை
வெண்ணிக்கக்கி வன்வதைத்தான் இராமனக்கினி
கேதுமுதல்

நால்வர்களை அதமாக்கினான் நாடிமைந்தன்
வச்சிரமுஷ்டி
கால்கைகளை ஒடித்தவனைக் கதறித்துங் கக்கும்படி

வதைபுரிந்தான் நீலனவன் வல்லரக்கன் நிடும்பன்தனை
நகச்சக்கரத்தால் சிரசறுத்தான் ரணகளத்தில்
உருளும்படி.

திவிதனெனும் வானரனோ தீயவனாம் அசனிப்பிரபன்
த்வரிதமாக உயிரொழியத் துண்டம்துண்ட
மாக்கிவிட்டான்

1135. சுவேனனை வித்யுன்மாலி சருக்கெனவே
கதையினாலே
விசையாக அடித்ததினாலே வீசினானோர்
பாரங்கல்லை

அந்தக்கல்லால் ஆவிவிட்டான் அரக்கனந்த
வித்யுன்மாலி
இந்தவிதம் அரக்கர்களில் எத்தனையோ
பேர்மடிந்தார்

இருபுறமும் பிணக்குவியல் எவ்வளவோ விழுந்ததோடு
சுரைபுரண்ட வெள்ளம்போலச் சுண்டோடும்
ரத்தப்போக்கும்

அபரிமிதம் அதைநினைத்தால் ஆருமிகப் பயந்திடுவார்
விபரீத யுத்தமதின் விவரந்தனை யுரைக்கப்போமோ

அரக்கன் இந்திரஜித்தனப்பால் அநேகமாக
யானரர்கள்
பரிதபித்துப் பிராணன்விடப் பாரித்தங்கதன் ஓடிவந்து

1140. இந்திரஜித்தைப் பிடித்துக்கொண்டு எலும்பொடிய
நொறுங்குடித்துப்
பந்துவிளை யாடுவோர்போல் பாதகனை
அம்மானையாய்

வீசிவீசி எறிகையிலே வெருகஷ்டம் பட்டரக்கன்
ஆசையினி லேசமிலை ஆவிதக்கா
தென்றெண்ணினான்

அரக்கன்கொட்ட மடங்கியிவ்வா றலங்கோலப்
பட்டதன்மேல்
துரிதமாக நினைவடைந்து துள்ளிவிண்ணில்
கிளம்பிவிட்டான்

அதன்பிறகு ஆலோசித்தான் அடுத்தெதிர்த்து
ஜயிக்கமாட்டோம்
எளியாக மறைந்திருந்தே சண்டைசெய்வோ
மென்றெண்ணிச்

1145. சாமிமீதும் அனுஜன்மீதும் சரமாரி வருஷித்தான்
நாமவனை வெல்வோமென்று நாதனும்பா
ணங்கள்சொரிந்தான்

ஐயன்பாணங் களுக்கரக்கன் அகப்படாமல்
மறைந்திருந்து
கைபலத்தை மிகவுங்காட்டிக் கபடமாகச்
சரங்கள்விட்டான்

அனுஜனுக்கும் ஐயனுக்கும் அங்குமெங்கும் ரக்தக்காயம்
மனஞ்சகிக்கப் போகாதந்த மாயாவி அரக்கன்செய்த

தொடுமையைத்தா னென்னசொல்வேன் புவலயத்தில்
அவ்விருவர்
கடவுளம்சம் ஆகையினால் கண்கலங்கா
திருந்தாரம்மா

கடைசியாக இந்திரஜித்தன் கடினவெண்ணா
மிகக்கொண்டு
சடுதியாக வென்றிடவே சாமர்த்தியங் காட்டுகிறான்

ஸ்ரீராமலட்சுமணன் மீதில் இந்திரஜித்தன்
நாகாஸ்திரம் போடுவதும், அதில் கட்டுண்டு
கிடக்கையில் சுக்கிரீவன் முதலியவர்கள்
விசனப்படுவதும் அப்பால்
இராவணனாக்ஞைப்படி, திரிசடை, புஷ்பகத்தில்
சீதையை வைத்துக்கொண்டுவந்து காட்டுவதும்
சீதை பிரலாபிப்பதும், கருடன் வந்து நாகபாசக்
கட்டை ஒழித்துச் சௌக்கியப்படுத்துவதும்

1150. கருடனாலே பரிகாரம் வரத்தக்க நாகபாசம்
அரக்கனெய்தான் அதனாலே ஐயன்லட்ச
மணாரிருவர்

அசந்துநிலந் தனில்படுத்தார் அதைக்கண்டு
அனுமார்முதல்
விசனங்கொண்டார் யாவருமே வெருவாகக்
கண்ணீர்பெருக

இந்தவிதம் இரவுதனில் இராவணியாம் இந்திரஜித்தன்
தந்திரமாய்ச் சூதுசெய்து தலைமறைவா யிருக்கையிலே

தன்பெருமை மிகுமவன் தானவர்கள் அறியச்சொல்லி
வன்மங்கொண் டனுமார்முதல் வானரவீ ரர்கள்மீது

பாணங்களை மறுபடியும் பதமுளதாய்த்
தொடுத்துவிட்டு
ஆனவத்தோ டகங்களித்து அரக்கர்களை
அழைத்துக்கொண்டு

1155. தந்தையின்முன் வந்தவனைத் தலைவணங்கி
மனிதர்களை
அந்திதனில் அஸ்திரமெய்து அதமாக்கி
வந்தேனென்றான்

கேட்டரக்கன் களிப்படைந்தான் கிலேசங்கொண்ட
வானவரும்
வாட்டங்கொண்ட சுக்கிரீவனும் வந்தகவுட்
தனையெண்ணிக்

கதறியழத் தொடங்கிவிட்டார் கண்டுவிபீ
ஷணர்மிகவும்
சதிகாரன் மாயஞ்செய்த சங்கதியை யறிந்துகொண்டு

மனவருத்தம் மிகவடைந்து மாதவரும் தம்பியுமாய்
நின்றிருப்பி யிருப்பவரை நேரில்நன்றாய்
பார்த்திடவே

முகக்களையும் முகதோட்டமும் முறையாக
இருப்பதையும்
சுகந்தரவே நாடிகளின் சுபாவங்க ளிருப்பதையும்

1160. கண்டறிந்து துண்டனாலே மண்டைவிதி
விம்மெடுக்க
உண்டோசிவன் கொண்டாடுஞ்ச தொண்டையிலே
கண்டசரம்

ஆயுவகைக் காத்ததுபோல் அகிலங்களைக்
காக்கவந்த
தூயவராம் இவர்களுக்குத் துன்பமணு
வருவதுண்டோ?

ஏதுங்குறை யிவருக்கில்லை என்றுறுதி
கொண்டதன்மேல்
ஆதரவாய்ச் சுக்கிரீவனை அணைத்துக்கட்டி
முகந்துடைத்து

வருந்தவேண்டாம் நேசரேநீர் வாராது குறையணுவும்
பரிதபித்தால் பார்த்தவர்கள் பரிகசிக்கு நேருமையா

இந்திரஜித்தன் வஞ்சகத்தால் எத்தனையோ
சூதுசெய்வான்
தந்திரமாய் மாயஞ்செய்து தலைமறைந்து
தப்பிக்கொண்டு

1165. அஸ்திரத்தைத் தொடுத்தானது அருள்பரனை
அனுஜனோடு
சொஸ்தமின்றிச் செய்தாலுமே சூட்சுமமாய்ப்
பார்க்கையிலே

பிராணபயம் ஏதுமிலை பரிசுத்தமாய்ச் சுவாசமது
ஸ்ரீராமர் அனுஜர்சுட்சுச் சீராக நடக்கின்றதைக்

கண்டுகொள்வீர் கண்கலங்கீர் கருத்துதனில்
வருத்தம்வேண்டாம்
அண்டசரா சரங்களுக்கு ஆதாரப் பொருளிவரே

அஸ்திரத்தின் சுட்டொழியும் ஆரோக்யமாய்
எழுந்திடுவார்
இத்தலத்தில் எதிரிகளை எதிர்த்துவென்று
சசஸடைவார்

முகத்தேஜஸ்ஸைப் பார்த்திடுவீர் மோசம்வரும்
குறிகளுண்டோ?
அகங்குளிர்ந்தே ஆனந்திக்கும் அந்தக்குறி
விளங்குதன்றோ?

1170. ஆவியொழிந் திடும்விகாரம் அணுவுமில்லை
இவர்களிடம்
தேவதேவர் இவர்களையும் தீங்கணுகு நியாயமுண்டோ?

மனிதருண பாவங்கொண்டு வையகத்தில் லீலைசெய்து
கனமடைய வந்தவர்க்குக் கஷ்டநஷ்டம்
வருவதுண்டோ?

உறங்கிவிழித் திடுவார்போல் உணர்ச்சியுடன்
எழுந்திருப்பார்
குறையுடையார் குணமடைவார் கோதண்ட
தீட்சாகுரு

இரும்பையுமே செல்லரித்து இளைத்திடவே
செய்வதுண்டோ?
கருமந்தயை பிறைந்தவர்கள் தாழ்வடைய
நேர்வதுண்டோ?

சத்யபரி பாலனரும் சச்சிதானந்த மூர்த்தியும்
உத்தமர்க்குச் சுகமளிக்கும் ஒன்றான சுடரொளரும்

1175. குற்றமுள்ளோர் களைவதைக்கக் குவலயத்தில்
உதித்தவரும்
பற்றனுவும் இல்லாத பரம்பரமாய் விளங்குவோரும்

சூத்ரதாரி யாயிருந்து சூட்சுமமாய் ஆதரித்தும்
ஆத்துமமாய் மிருப்போரும் அகிலமெல்லாம்
ஆளுவோரும்

ஆகியஸ்ரீ ராமருக்கும் அனுஜருக்கும் ஆபத்துண்டோ?
தேகியாவும் விளங்கியவர் திருவிளையாட்
டேதகஞ்செய்வார்

வேதனையும் சோகாதியும் விளைவதெல்லாம்
நமக்கேயன்றி
பேதபடாருள் தனக்குமுண்டோ விவேகங்கொண்
டிருந்திடுவீர்

என்னைக்கண்டு பாவனைசெல் லெண்ணிநம்ம
படைகளெல்லாம்
பின்னடைந்தே யோடுதையா பீதியினால் பாதைக்காக

1180. சுக்கிரீவதேர நீருங்கூடச் சோகப்பட
லாகாதென்று
தக்கபடி அவர்கண்களைத் தண்ணீரை மந்திரித்துத்

துடைத்திடவே சுக்கிரீவர் துணிந்தெழுந்தார்
மனந்தெளிந்து
படைகளெல்லாம் பயப்படாமல் பாங்குடனே
பாதுகாத்து

விபீஷணரார் உரைத்தபடி விவேகங்கொண்டு
வீரதேரோடு
சுபமடைவோ மென்றெண்ணிச் சுவாமியையும்
அனுஜரையும்

சூழ்ந்திருந்து ஜாக்கிரதையாய்ச் சுக்கிரீவன்
பாதுகாத்துத்
தாம்வசெய்ய வருமரக்கர் தலையுடைத்துத்
தடுப்போமென்று

ஜாகரூகராயிருந்தார் சங்கதியிங் கிவ்வாறிருக்க
மோகங்கொண்டு தசகண்டன் முந்திச்சீதை
அறிந்திடவே

1185. இந்திரஜித்தன் சண்டையிலே இராமலட்ச
மணரிருவர்
அந்தச்சூரன் கையாலே ஆவிவிட்டா ரெனுஞ்சேதி
தந்தானம்மா சீதைகேட்டுத் தத்தளித்து வாடினாளே
பந்தனெழுத் திவ்விதமாய் இருக்குமோவெவ்
நலறியம்மா

சோகம்விட்டுச் சீதையினிச் சுவாதீன மாய்விடுவாள்
மேகநாதன் இந்திரஜித்தன் மிகவுஞ்சூர
னென்றெண்ணி

1184. ஜாகரூகராயிருந்தார் - விழிப்புடன் இருந்தார்

ரணகளத்தை ஜானகிக்கு ராட்சசியாம் திரிசடையைக்
குணமுள்ள புஷ்பகத்தில் கூட்டிப்போய்க் காட்டும்படி

உத்தரவு தந்தானம்மா உடனேதிருச் சடையாள்வந்து
சித்தநொந்த ஜானகிக்குச் சேதிசொல்லி
யழைத்துப்போனாள்

1190. புஷ்பகம்போய் ரணகளத்தில் பூமிக்குமே லாகநிற்கு
நிஷ்களமாய் யிருக்குமந்த நிலத்தைச்சீதை
பார்த்தாளம்மா

அனுஜனோடு ஸ்ரீராமன் அங்கமெல்லாம் விரணமாக
நினைவுதப்பி விழுந்திருக்கும் நிலைமைதனைக்
கண்டுமிகப்

பரிதவித்தாள் ஜகம்வெறுத்தாள் அரைநொடியும்
பிரிந்திடாமல்
இருந்தவராம் கணவருக்கு இந்தக்கதி வரலாமோ?

என்னசெய்வேன் என்விதியை எவருடனே
புதைத்தழுவேன்
மன்னவர் ஸ்ரீ ராமரெந்தன் மணவாளரைப்
பிரிந்தினிமேல்

ஆவிதனை வைத்திருந்து அடைவதுண்டோ
சுகமணுவும்
பாரியென்னை அடைந்ததினால் பிராணச்சேதம்
வந்ததன்றோ?

1195. என்னுடைய பாதந்தனில் இருக்கும்பத்ம
ரேகையையும்
பின்னுமுள்ள சாமுத்திரிகா இலட்சணங்கள்
முழுமையையும்

பால்யத்திலே பார்த்தெனக்குப் பார்தன்னை
ஓர்குடையில்
ஆளும்தீரர் கணவராவார் அவர்மிகவும் ஆயுர்விர்த்தி

உள்ளவரா இருப்பாரென்றும் உலகிலவர் எசலடைந்து
எல்லையில்லாப் பலங்களோடு எத்தனையோ
ஆண்டளவும்

அகவமேதா தியாகங்கள் அதிகமாகச் செய்துலகில்
திசைகளெங்கும் சுகமடையச் சீராக இராச்சியபாரம்

நடத்துவாரென் றறிஞர்கள் சொன்னார்கள் நானதனை
நம்பினேனே
திடமுள்ள ஜோசியர்சிலர் தெரிந்துரைத்தார்
உறுதியாகப்

1200. பட்டமகி ஷியாகவே பார்தனிலே வெகுகாலம்
வீட்டுத்திக்கும் மெச்சுமொரு இராஜாதி ராஜருக்குப்

பத்தினியா யிருப்பேனென்றும் பாங்குடனே
சுமங்கலியாய்
உத்தமரில் உயர்த்தியாக ஒன்றுங்குறை இல்லாமலே

வாழ்ந்திருப்பே னென்றுரைத்த வார்த்தைகளும்
பொய்யாமோ?
ஆழ்ந்தறிந்து சொன்னாரன்றோ அதையும்நான்
நம்பினேனே

எத்தனையோ பேரிருந்தும் எனக்கிப்போ யாருமிலை
உத்தமராம் நாயகரும் உயிரிழந்து போயினரே

இளையவராம் கொழுந்தருக்கும் இந்தக்கதி
வந்திடுமோ?
இளைக்குமாட்டார் அரக்கர்களை எதிர்த்துவெல்வா
ரென்றிருந்தேன்

1205. நெஞ்சுறுதி கொண்டபக்கன் நினைத்துத் துரோகஞ்
செய்திடவே
வஞ்சகமா யொளித்திருந்து வகைமோசஞ்
செய்திருப்பான்

அந்தவித மன்றியிலே அரக்கர்வெல்ல
நியாயமுண்டோ?
இந்தவித்தஞ் செய்வதுண்டோ என்கொடுமை
அறிவாருண்டோ?

எனதுமாமி கௌசலையாள் எப்படித்தான்
மனஞ்சகிப்பாள்
நினைத்தினிமே லாவதில்லை நேசம்விட்டுக்
கோசந்தனை

ஒழித்திடுவோ மெனத்துணிந்து உருகிமனம்
நொந்தாளம்மா
அழவில்படும் மெழுகெனவே அன்னைபடும்
விசனமெல்லாம்

திருச்சடையாள் கண்டுமிகத் தேவிதனைக்
கண்துடைத்துப்
பரிதபிக்க வேண்டாமம்மா பதிக்கபாயம்
இல்லையம்மா

1210. மருமமெல்லாம் அறிந்தேனம்மா மாபாவி
இந்திரஜித்தன்
கருமந்தனில் சூதிருக்கும் கபடமதைச் செய்திருப்பான்

உமதுபிராண நாதருக்கு ஒருகுறையும் வருவதில்லை
சமுசியமே வேண்டாமம்மா சத்தியம்நிலை நிற்குமம்மா

சேதமது வந்திருந்தால் சேனைகளாம் வானரர்கள்
ஏதுமனம் வருந்தாமல் இருப்பதுண்டோ
எதிர்த்துயுத்தம்

செய்திடவே யத்தனங்கள் சித்தந்துணிந்
தெத்தனையோ
தைரியமாய்ச் செய்வதையும் தாயேபாரும்
தெளிவடையும்

வைதவ்வியம் அடைந்தவர்கள் வசிப்பற்குப்
புஷ்பகமாம்
தெய்வலோக விமானமது தினையளவும் இடந்தருமோ?

1215. அதுவுமன்றி உமதுபார்த்தா அனுஜருந்தா விருக்குமுக
அதிதேஜஸ்ஸை அறிந்துபாரும் அவருயிர்க்குச்
சேதமுண்டோ?

அசந்திருக்குங் காரணத்தால் அவர்க்கேதோ
வந்ததென்று
விசனப்பட லாகாதம்மா வீண்வார்த்தை
சொல்வேனம்மா

இதுவரையும் உமதிடத்து எள்ளளவும் பொய்யுரைத்து
மதிமயங்கச் செய்ததுண்டோ மனம்வருந்த
நடந்ததுண்டோ?

உமக்குச்சுகம் வருவதற்கு ஒருநொடியும் உண்மையாக
நமஸ்கரித்தே ஜகதீசனை நாடித்தவஞ் செய்கின்றேன்

சொல்லுமெந்தன் வாக்கைநம்பும் சோகமதை
விட்டுவிடும்
அல்லும்பகல் வீணாக அகம்நோக வேண்டாமம்மா

1220. வெட்டவெளி ஆகுமம்மா வெடிந்தவுடன்
அரக்கன்செய்கை
அட்டியில்லை ஆபத்தில்லை ஆரோக்யமா
எழுந்திருந்து

1214. வைதவ்வியம் - விதவை

அரக்கர்களோ டமர்புரிந்து அவர்களெல்லோர்
களைவதைத்துப்
பிரியமாக உமையடைந்து பெருங்கீர்த்தி
தனைப்பெற்று

அயோத்திநகர் தனைச்சேர்ந்து ஆளுகையை
வகித்துக்கொண்டு
தயாபரராம் ஸ்ரீராமர் தரணிதனில் சுகமடைவார்

நம்புமெந்தன் வாக்கையென்று நயமுடனே பயமொழிய
அம்புவியில் உத்தமியாம் அரக்கிதிருச்
சடையுரைத்தாள்

ஜானகிகேட் டதினாலே சந்தேகம் தீராமல்
கானகமான் போலேங்கிக் கைகூப்பித் தெய்வந்தனை

1225. வேண்டிக்கொண்டு திருச்சடையாள் விரித்துரைத்த
படிபலிக்க
ஆண்டவர்தான் அருள்புரிந்து ஆதரிக்க
வேண்டுமென்று

பிரார்த்தித்தான் அதின்பிறகு பரிசுத்த விமானமது
பிரேமையுள்ள திருச்சடையாள் பிரேரேபித்த
படியசோக

வனம்வந்து சேர்ந்ததம்மா வைதேகி அங்கிருந்தாள்
நினைவுகொண்டார் ஸ்ரீராமர் நேரில்தம்பி
கிடக்கக்கண்டார்

அணுவளவும் நினைவின்றி அனுஜனுள்ள
நிலைமையினால்
இணைபிரியா திருந்தவனாம் இலட்சுமணன்
கதியிவ்வாறு

ஆயிற்றேநா னென்னசெய்வேன் ஆரிருந்து
மாவதென்ன?
நேயமுள்ள தம்பியைப்போல் நேரவுண்டோ
பிராதாக்கள்

1230. கடுந்தணுவும் பேசமாட்டான் கனவிலுமென்
இவ்டப்படி
நடப்பதவன் நோக்கமாகும் நானவனைப்
பிரிந்தினிமேல்

அரைநொடியும் உயிர்த்தரிக்க ஆமோநா
னுயிர்விடுவேன்
வருமோஇந்தக் கஷ்டமுந்தான் வையகத்தில்
தருமம்போமோ?

என்னிமித்தம் தம்பியுயிர் இழந்திடவே ஆயிற்றன்றோ?
வன்னச்சிறை அன்னம்போன்ற வைதேகியால்
இனியெனக்கு

ஆவதுந்தா னேதுமிலை அரசளித்தேன் விபீஷணர்க்கு
நாவுறுதி யாமிதனை நானிறைவேற் றாமலிப்போ

உயிரைவிட வானகுறை ஒன்றுளதை நினைத்துமிக
மயங்கும்படி யாயிற்றென்று மாதவனார்
வருந்தியப்பால்

1235. சுக்கிரீவனைப் பார்த்துரைப்பார் சொல்லுமெந்தன்
பேச்சைக்கேளீர்
தக்கபடி எனக்குதவி தவறாமல் செய்தீரையா

ஆனமட்டும் உதவிபெற்றேன் அதுவெனக்குப்
போதுமையா
ஈன்தச கண்டனாலே இம்சைப்படு வீரிவிமேல்

நிமிஷமிங்கு நிற்கவேண்டாம் நீருமது படைகளோடு
தமதுநகர் தனையடைவீர் தடைசொல்ல
வேண்டாமென்று

பலவிதமாய் விசனப்பட்டுப் பரிந்துரைத்து மறுபடியும்
அலுப்புடனே அசந்திருந்தார் அந்தவேளை
விபீஷணனார்

சைன்யமெல்லாஞ் சீர்ப்படுத்திச் சாமிதனை
வந்துபார்த்து
மெய்மறந்தார் விசனங்கொண்டார்
வெறியனைப்போல் புலம்புகிறார்

1240. உலகையெல்லாம் ஆளுமெந்தன் உயிர்க்குயிரே
ஆண்டவரே
நலங்கருதி உமையடைந்தேன் நான்செய்த கருமப்பயன்

உம்மையுமே பிடித்துதையா உலகிலென்போல்
பாவியுண்டோ?
தம்மைவெல்வோ ராருமுண்டோ தருமமுந்தான்
அறிவதுண்டோ?

சத்தியமே உருவெடுத்து ஜகத்தில்வந்த புருஷனன்றோ
உத்தமரே உமக்குமிந்த உபாதிவர நியாயமுண்டோ?

எத்தனையோ ஆசைகொண்டு எம்பெருமான்
பதமலரைச்
சத்தியமாய் நம்பினேனே சற்றும்பயன்
அடையலையே

எட்டிப்பிடித் தேறுவோனை இழுத்தெறியும்
உவமைபோலத்
தட்டிவிட்டான் இந்திரஜித்தன் தலைவிதியை
என்னசொல்வேன்

1245. எனதுயிராம் சாமியேநீர் எங்குபோனீர்
அங்கமெல்லாம்
நினைக்கையிலை பதறுதையோ நிலத்தில்படுத்
திருக்கின்றீரே

உம்மைப்போ லன்புகொண்டு உயிர்த்துணையாய்க்
காப்போராரார்
இம்மையிலும் மறுமையிலும் எவ்வோர்க்கும்
இன்பந்தரும்

புருஷனென்று நம்பினேனே புசிப்பின்றிப் போனேனே
அரும்பொருளே பெரும்பொருளே திரும்பியுயிர்
மறுபடியும்

தரிக்கவுண்டோ என்றுமிகத் தத்தவித்துப்
பரிதபித்தார்
பிரியமுள்ள சுக்கிரீவர் பீதிகொள்ள
வேண்டாமென்று

வந்தணைத்துத் தடவித்தந்து வஞ்சகரை
நான்வதைப்பேன்
சிந்தைநோக வேண்டாமென்று செப்பிமனம்
தேற்றிவிட்டுச்

1250. கவேனனை அழைத்துரைப்பான் சுவாமிதம்பி
இருவரையும்
வசத்தில்கொண்டு கிஷ்கிந்தையில் வைத்திருப்பீர்
அரக்கர்களை

வென்றுவந்து சேருவேனான் வேகமாகச்
செல்லுமென்றான்
நன்றடைய மார்க்கமுண்டு நானதனைச்
சொல்வேனென்று

அந்தச்சமயே னலுமுரைப்பான் அலுமாரை
அலுப்பியிப்போ
வந்திடவே மூலிகைகள் வரவழையும் உயிர்கொள்ளவே

ட்சீராப்திக் கருகிலுள்ள சீரான மலைகளிலே
தாராளமா யிருப்பதான தருந்தசஞ்சீ விகரணி

விசல்லிய காணியெலும் வெருகுகங்கள் தருவதான
உசத்தியான மூலிகைகள் உடனேயிங்கு வருமேயானால்

1255. நாகபாசப் பந்தமெல்லாம் நஷ்டப்படும்
கஷ்டம்நீங்கும்
லேகமதாய்ச் செய்யுமிந்த வேலைதனை
என்றுரைத்தான்

அந்தப்படி அலுமாரை அலுப்புதற்கு யத்தனிக்க
வந்துதையா காற்றொன்று வையகமே புரளும்படி

அதைக்கண்டு யாவர்களும் ஆச்சரியங்
கொண்டிதென்ன?
விதமென்று பயந்தாரம்மா வெருதேஜஸ்ஸாய்க்
ககனமதில்

வந்துவிட்டார் வைநதேயர் வைகுந்தம் தனிலிருந்து
அந்தப்படி வருபவரை அனைவர்களும்
பார்த்துக்கொண்டு

இருக்கையிலே நாகபாசம் இருந்திடமே தெரியாமல்
பறந்துதம்மா பரந்தாமன் பட்சமுள்ள தம்பியொடு

1260. பிரக்ஞைகொண்டு எழுந்தாரம்மா பெருமையுடன்
கருடன்வந்து
நிம்தியெல்லோர் களுமடையத் திருவாளன்
எதிரில்நின்று

இருவரையும் தழுவிக்கட்டி வந்தனனையோ
வாஞ்சையோடு
இறகுகளால் வீசித்தந்தார் இரக்கக்காயம் ஏதுமின்றி

முன்னைவிடத் தேகபலம் மும்மடங்கு விர்த்தியாகிப்
பின்னும்தேகக் காந்திவெகு பிரபலமாக ஆயிற்றம்மா

கருடனைப்பார்த் தையன்கேட்பான் கடவுளர்போ
லிருக்கும்நீர்
இருக்குமிடம் நாமதேயம் என்னவென்று கேட்டதற்குக்

கருடன்சொல்வான் என்னைப்பற்றி இப்பொழுது
கேட்கவேண்டாம்
அருமையான உமதுநேசன் அந்தச்சேதி பின்னறிவீர்

1265. அசந்திருக்க வேண்டாமையா அரக்கர்சூது
மிகவுமுண்டு
தசகண்டனை வெல்வதற்குத் தகுந்தநல்ல
முயற்சிவேண்டும்

உம்மைவெல்ல அவனாலே ஒருக்காலும் ஆகாதையா
செம்மையாக நானறிவேன் சீக்கிரத்தில் அவன்முதலாய்

அரக்கரெல்லாம் உமதுகையால் அதமாவார்
ஜானகியைச்
சிறைமீட்டுச் சிறப்புடனே சீமைதனை அடைந்துவெரு

கீர்த்திதனைப் பெற்றிடுவீர் கிருபாகரனே
போய்வருவேன்
தாருமெனக் கலுமதியைத் தயவுடனே என்றுகேட்டு

பெற்றுக்கொண்டு சென்றாரவர் பெருமாளைச்
சேனையெல்லாம்
உற்றபடி புகுந்துமிக உளங்களித்துக்
கொண்டாடினார்

தூம்ராட்சனும் அகம்பனனும், அனுமானாலும்
வச்சிரதமுஷ்டன் அங்கதனாலும் முக்கிய
சேனாபதியாகிய பிரகஸ்தன் நீலனாலும் யுத்தத்தில்
மடிந்ததும் இருபுறமும் அநேகச் சேனைகள்
மடிந்ததும், இராமன் முதலியவர்கள்
ஜயமடைவதற்காகச் சந்தோஷமும்,
அபஜயத்துக்காக அரக்கன் வருந்துவதும்

மறுபடியும் யுத்தஞ்செய்ய மாதவனா ரனுக்ரூபெற்றுச்
சிரித்தெல்லா வானரரும் கொண்டாட்டம்
மிகக்கொண்டு

கார்னைகள் செய்துகையில் கல்லுமுள்ளு
கடுகொண்டு
தார்ப்பத்தோடு எதிர்த்துநின்று தானவரை அமர்புரிய

வாருமென்று அழைத்தாரம்மா வஞ்சகனாம்
தசகண்டன்
ஊருடைய சத்தமென்று அறிகையிலே வானரர்கள்

மகிழ்ந்துசண்டைக் கழைக்குமொரு மதக்கூச்ச
லென்றறிந்து
நிகிலடைந்தான் மிகவருந்தித் தீவிரமாய்த்
தருந்தவரை

அனுப்பிச்சேதி விவரப்பட அறிந்துகொண்டு
அதிசயித்து
மனிதருக்குக் கருடன்வந்து மலிந்துதவி
செய்யுமானால்

அவரைநாம் வெல்லுதற்கு ஆமோவென் றகம்வருந்திக்
கவலைமிகக் கொண்டரக்கன் கண்கலங்கிக்
கஷ்டப்பட்டான்

சீதையிந்தச் சேதியெல்லாம் திருச்சடையாள்
சொல்லக்கேட்டு
வேதனையை விட்டொழித்து வெகுதைரியங்
கொண்டிருந்தாள்

நினைத்தரக்கன் அதன்பிறகு நெடுநேரம் ஆலோசித்து
மனவுறுதி உள்ளவனாம் மதமிருந்த தும்ராட்சனை

அனுப்பித்தந்தான் அவனுடனே அநேகச்சேனை
கூளும்போனார்
மனந்துணிந்து தூம்ராட்சன் மாருதியை
எதிர்த்துவந்து

வெகுநேரம் யுத்தஞ்செய்தான் வெகுபோர்களிருபுறமும்
திகிலடைந்தும் தீங்குடைந்தும் தேகந்தனை
விட்டொழிந்தார்

1280. வானரரைத் தூம்ராட்சன் வதைக்குமொரு
தோரணையைத்
தானறிந்து கோபங்கொண்டு தட்சணமோர்
கூர்ந்தனை.

எடுத்துவந்து அரக்கனிட ரதத்தின்மீது
அனுமான்போட்டான்
திடுக்கிட்டுக் குதித்தரக்கன் தீவிரமாய்த்
தப்பிக்கொண்டான்

அந்தரதம் பொடிப்பொடியாய் ஆனதொரு சாரதியும்
இந்தலோகந் தனையிழந்து எமலோகந்
தனையடைந்தான்

கதையொன்றை எடுத்தரக்கன் கடுகிவந்து அனுமாரை
அதிபலமாய் அடித்தானதை அலட்சியமாய்த்
தள்ளிவிட்டுச்

சிறுமலையைக் கையிற்கொண்டு சீறியோடி
வந்தனுமான்
குறித்தரக்கன் மீதில்போட்டுக் கொன்றுவிட்டா
னதன்பிறகு

1285. இந்தச்சேதி தனைக்கேட்டு இராவணப்பேய்
மிகப்பறந்து
முந்திநிற்கும் வச்சிரதமுஷ்டன் முகத்தைப்பார்த்து
ஆக்ஞைசெய்தான்

சேனைகளோ டெதிர்த்துப்போவாய் சீக்கிரமாய்
மனிதரையும்
வானரராம் படைகளையும் வதைத்துவந்து
சோர்வாயென்று

அந்தப்படி சேனைகளை அழைத்துக்கொண்டு
போனானந்த
மந்திப்பயன் வச்சிரதமுஷ்டன் மனந்துணிந்து
அங்கதன்முன்

வந்துநின்று யுத்தஞ்செய்து வந்தசேனை
ரதமுதலாய்
முந்திச்சேத மாகத்தந்து முன்னின்று மல்லயுத்தம்

செய்கையிலே வாளைக்கொண்டு சேதித்திட
வந்தானவன்
கைவாகவங் கொண்டங்கதன் கால்தொடியில்
அதைப்பிடுங்கி

1290. அரக்கன்றலை தனையறுத்தான் அந்தச்சேதி
தனையுங்கேட்டுப்
பரபரப்புக் கொண்டெழுந்தான் பாவிலங்கே
சன்மிகவும்

தேவர்களும் கண்டுமிகத் திகிலெய்டையுஞ் சூரனான
ஆவலோடு அமர்புரியும் அகம்பனனை
அழைத்துரைப்பான்

உன்னையன்றி எதிரிகளை ஒருவருந்தான்
வெல்லமாட்டார்
என்னைமனங் களிசிறக்செய்வோர் எவருமில்லை
உன்னையன்றி

எதிரிகளை ஒருநொடியில் எதிர்த்துயுத்தம் செய்தவரை
அதஞ்செய்து வந்திடுவாய் அகங்குளிரச் செய்திடுவாய்

என்றுரைத்தான் கேட்டதனை எத்தனையோ
தைரியமாய்
நின்றுயுத்தஞ் செய்வேனென்று நீசபுத்தி
உள்ளவனாம்

1295. அகம்பனனும் சைன்னியங்களை அழைத்துக்கொண்டு
அனுமான்முன்
மிகத்துணிவாய் வந்தெதிர்த்து மேகம்போல்
கர்ச்சனையும்

நீருண்ட மேகம்போல நிறமுங்கூடி இருக்குமவன்
பாரிலெனை ஜயிப்பாருண்டோ? பார்ப்போமென்
றேயுரைத்துத்

தொடங்கிவிட்டான் அமர்புரியத் தோரணையாய்
அவனுடனே
திடமனதா எதிர்த்தனுமான் தோகுதிரை ஆனைமுதல்

சகலசேனை களுமடியச் சண்டைசெய்தான்
அண்டமெல்லாம்
திகிலடையக் குரூரமாகத் தீயவனாம் அரக்கனோடு

இருபுறமும் பிணக்குவியல் எத்தனையோ
விழுந்துதம்மா
சுருதியொடு சகலவிருட்சம் கையில்கொண்டு
வந்தனுமான்

1300. கொடுத்தானடி மண்டையிலே கொடல்பிதுங்கி
மூளைசிந்தித்
துடித்தரக்கன் மடிந்தானம்மா துதித்திடவே
வந்துநின்று

தேவரெல்லாம் அனுமாரைத் திருப்தியுடன்
கொண்டாடிப்
பாவியந்த அரக்கனிட பயமொழிந்த சந்தோஷத்தால்

ஆவலொடு புஷ்பமாரி அனுமான்மேல்
மிகச்சொரிந்து
மூவுலகுஞ் சுகப்படவே உபகாரஞ் செய்தாயென்றார்

அரக்கர்களில் அகம்பனன்போல் ஆருமிலை
பலவான்கள்
இருக்குமவன் பலத்தைக்கொண்டு இலங்கேசன்
மிகக்குதிப்பான்

அந்தப்படி உள்ளவனை அதஞ்செய்த படியினாலே
வந்துமிக ஸ்துதித்தார்கள் வானவர்கள் அனுமானை

1305. ஐயன்விபீ ஷணன்முதலாய் அனைவர்களுங்
கேட்டுமிக
மெய்மறந்தே ஆனந்தித்தார் மீதிமீறி அதிசயித்து

மிச்சமுள்ள அரக்கரெல்லாம் மிரண்டுருண்டு
லங்கைசேர்ந்து
துச்சன்தச கண்டனுக்குச் சொன்னாரம்மா
கேட்டவன்தான்

மதிமயங்கி மிகத்தயங்கி மகத்தான துக்கங்கொண்டு
விதிவசமே சதியாயின் வேறென்ன செய்வோமென்று

மனதில்மிகக் குறையடைந்து மறுபடியும் துணிந்தரக்கன்
நினைத்தழைத்தான் பிரகஸ்தன்தனை நீபோவாய் யுத்தஞ்செய்யச்

சத்துருக்களை ஜயித்திடுவாய் சாமர்த்தியந் தனைக்காட்டுவாய்
இத்தருணம் பின்னடைந்தால் இழிவடைவோம் அழிவுமுண்டாம்

1310. இதுவரையி லென்னுடைய இஷ்டப்படி எதுவுஞ்செய்யும்
அதிவீர னுன்னைவிட ஆருமிலை வெல்லுதற்கு

உன்வாக்கின் உறுதிகொண்டு உளந்துணிந்தேன் யுத்தஞ்செய்ய
என்பெருமைக் கேதுகுறை இல்லாமல் நீநடப்பாய்

நடத்திவந்தாய் சீராகவே நான்மகிழக் காரியங்கள்
எடுத்தால்கை மடங்கவிடாய் எனக்கெல்லாம் தெரியுமடா

என்னைப்போலப் பலமுடைய எனதுமுக்கியச் சேனாபதி
உன்னையிப்போ யுத்தஞ்செய்ய உறுதிகொண்டு அனுப்புதற்கு

நிச்சயித்தேன் உன்னைப்பார்க்கில் நினைவிலேதோ கவலைகொண்டு
அச்சமுள்ளோன் போல்காணும் அந்தவொரு காரணத்தைச்

1315. சொல்வாயென்று கேட்டதற்குச் சொல்லுகிறான் பிரகஸ்தனம்மா
வில்லெடுத்து யுத்தஞ்செய்வேன் வென்றிடுவேன் எதிரிகளை

கவலையெனக் கேதுமிலை கதறும்படி வதைபுரிவேன்
குவலயத்தில் என்முன்னே கோரிவந்து யுத்தஞ்செய்வோரி

இல்லையென்றே நம்புமையா எல்லோரும் ஆதியிலே
நல்லவொரு யோசனையை நாடிச்செய்யும் வேளையிலே

சீதைதனை ராமனிடம் சேர்ப்பதுவே நன்மையென்று
நீதிசொன்னேன் அதைமறுத்து நீருரைத்த படிதானே

உமதிஷ்டப் படிநடக்க உறுதிகொண்டேன் அறுதியாகத்
தமதாக்ஞைப் படிநடப்பேன் தப்பமாட்டேன் எப்பவுமே

1320. திரும்பிவந்தால் உம்மைப்பார்ப்பேன் திருவடியை நமஸ்கரிப்பேன்
வரவையெதிர் பார்த்திருப்பீர் வல்லவர்முன் போய்வருவேன்

விடைதாரும் என்றுகேட்டு விழுந்தடியைப் பணிந்தெழுந்தான்
மடையனிலங் கேசனந்த மர்மமதை அறியவில்லை

அரக்கர்களில் யுத்தஞ்செய்ய அனுப்பப்படும் போர்களெல்லாம்
திரும்பிவந்தா ரென்பதிலை தெரியுமந்தச் சேதியெல்லாம்

ஆகையினால் பிரகஸ்தன்சற்று அச்சங்கொண்டான்
போவதற்குத்
தாகமிலை போவதற்குத் தசகண்டன்
வதைப்பானென்று

ரதமேறிச் சேனையோடு ரணகளத்தில் நீலன்முன்னே
அதிகஅட்ட காசஞ்செய்து அகங்காரித்து
வந்துநின்றான்

1325. இருபடைகள் கைகலந்து இடித்தடுத்துக் கடிதுரத்தம்
பெருகியாறா யோடிடவே பிரபலயுத்தம் நடந்ததம்மா

வானரரும் ராட்சதரும் வதைபடைந்த விதமுரைக்க
ஆனவர்க ளாருமிலை ஆச்சரியம் யுத்தமம்மா

அரக்கர்சேனை மிகமடிய அதைக்கண்டு
பிரகஸ்தன்மிகத்
தூரிதமாக வில்லெடுத்துத் தூவிவிட்டான்
பாணங்களை

வானரர்கள் மிகமடிந்தார் வலுவுடைய பிரகஸ்தனவன்
ஆனமட்டுஞ் சலியாமல் அமர்புரிந்தான் அதிசயமாய்

நீலனப்போ எதிர்த்துவந்து நின்றிடவும் அவன்மீது
ஆலகால விஷம்போல அடித்தானம்மா சரமாரியாய்

1330. துள்ளிச்சற்றுத் துணிந்துநீலன் தோரணையா
யோடிவந்து
அள்ளிவிட்டான் அரக்கன்மீது அபரிமித
விருட்சாதிகள்

அதுகளெல்லாம் பொடிபடவே அடித்துவிட்டான்
அரக்கனப்பால்
குறித்தேநாடி அவனுடைய சூரமான வில்லதனைப்

பிடுங்கிக்கொண்டான் நீலனம்மா பொறியவொரு
இருப்புலக்கைத்
தடியுடனே வந்தானந்தத் தானவனாம் சேனாபதி

இவனையினி மிஞ்சவிட்டால் இம்சைசெய்வா
னென்றறிந்து
அவன்றலையை மரமொன்றால் அடித்தானம்மா
நீலனதால்

ஆவிவிட்டான் பிரகஸ்தனப்பால் அந்தச்சேதி
ராமன்கேட்டுப்
பாவிகளாம் அரக்கரெல்லாம் படுவதற்கு
அகமகிழ்ந்தான்

1335. வாய்க்கொழுப்புச் சேலையிலே படிந்ததுபோல்
பிரகஸ்தன்சேதி
ஆய்விட்டது சபைதனிலே அவலுரைத்த அபிப்பிராயம்

வருங்கேடு அறியாமல் மந்திராலோ சனைசபையில்
அரக்கனந்தப் பிரகஸதன்சொன்ன அவிவேக
வார்த்தைதனை

நினைத்துவிபீ ஷணர்வந்து நேரிலந்தப் பாவிதனை
மனமகிழ்ந்தே பார்த்தாரம்மா மாபாவி
தொலைந்ததற்குப்

பிரகஸ்தன்பட்ட சேதியையும் பெரும்படைக
ளொழிந்ததையும்
விர்த்தாந்த மறிந்தவர்கள் விவரப்பட வந்துரைக்கத்

தசகண்டன் கேட்டுமிகத் தத்தளித்தான் சித்தம்நொந்து
மனசைபிடித்த நாய்போல மதிகெட்டுப்
பறந்தலைந்தான்

1340. பத்தனைபோர் போனாலுமே இங்கவர்கள்
வருவதில்லை
அத்தனைபோர் களுமடிந்தால் அனுகூலம் நமக்கிலையே

இராவணன் யுத்தத்திற்காக வந்து சுக்கிரீவன்பேரில்
பாணம் போட்டுத் தள்ளுவதும் அனுமாரோடு
குத்துச்சண்டை செய்வதும், அரக்கனை நீலன்
அவமதிப்பதும் லட்சுமணன் பேரில் அரக்கன்
சூலம் போடுவதும், இராமனருளால் லட்சுமணன்
சுகமடைவதும் ஸ்ரீராமன் பாணத்தால்
இலங்கேசன் கஷ்டப்பட்ட டசந்தமேல் தயவுடன்
ராமன் விடுவதும், தசகண்டன் வந்து
மாலியவானிட முறையிடுவதும்

இந்தவிதம் மனம்வருந்தி எரிச்சலப்பால்
கொண்டரக்கன்
முந்திமக்கள் மந்திரிகளும் முறையாகச் சேனைகளும்

வந்துசேர ஆக்ஞைசெய்து வரவழைத்துக்
கொண்டவர்கள்
முந்திப்பிந்திச் சூழ்ந்துவர மோகமுடன் தசகண்டன்

வருகின்றான் யுத்தஞ்செய்ய வஞ்சகனாம் அவனுடைய
பிருதென்ன கிருதென்ன வருங்கோலப்
பெருமையென்ன

ஸ்ரீராமன் பார்த்தவனார் செப்புமென்று
கேட்கையிலே
நேராகப் பதிலுரைப்பார் நேசத்தோடு விபீஷணனார்

1345. அன்னைசீதை தனையெடுத்த அரக்கனிவன்
எனக்கண்ணன்
மன்னவன்ரா வணனிவனே மமதைமிக உள்ளவனே

சூழ்ந்தவனை வருவோரெல்லாம் சூரரான
அவன்மக்களும்
தாழ்வடையா மந்திரிகளும் தண்டுக்கதி காரிகளும்

என்றுரைத்தான் ராமன்கேட்டு இவன்சூர
னென்றறிந்து
இன்றிவனை வென்றிடுவோம் என்றெண்ணித்
துணிந்திருந்தான்

ரணகளத்தில் வந்தானம்மா ராவணனாம் பாவியவன்
துணைவர்களாம் கூட்டத்தோடு தாளியெங்கும்
பரவும்படி

சுபிரா ஜனைக் கண்டானம்மா சுஞ்சிவந்தோர்
பணைந்தனைத்
தபிக்கும்படி விடவதுபோய்த் தாக்குச்சுக்கிரீ
வன்மிகவும்

1350. ஆவிநொந்து கூவியவன் அசந்துகீழே விழுந்தானம்மா
தேவதேவன் ராமனிட திருவடியைப் பணிந்துநம்பி

கேட்டுக்கொண்டான் யுத்தஞ்செய்ய கிருபையுடனே
அலுக்கிரகிக்கத்
தீட்டுவாயென் றுரைத்தான்ராமன் திடமனதாய்
அகமகிழ்ந்து

அம்புகையில் கொண்டனுஜன் அமர்புரிய வருகையிலே
தம்பிவரும் முன்னனுமான் தசகண்டனை
மறித்துக்கொண்டு

உன்னுடனே யுத்தஞ்செய்ய உள்ளமதி லாசைகொண்டு
உன்னைநாடி வந்தேனடா உன்திறத்தை அறிவதற்கு

வில்லெடுத்தான் கல்லெடுப்பேன் வெல்லமாட்டாய்
சொல்லக்கேளாய்
மல்லயுத்தம் நல்லயுத்தம் மனந்துணிவாய்ச்
செய்வோமது

1355. குத்துச்சண்டை செய்துபார்ப்போம் குணமதில்நீ
அடைந்தலப்பால்
சித்தங்கொண்டு மல்லயுத்தம் செய்வோமென்
றுரைத்தானம்மா

அலுமானிஷ்டப் படியரக்கன் ஆரம்பத்தில்
தனதுகையால்
அலுமானைக் குத்துதற்கு அகந்துணிந்து
வந்துநின்றான்

முதலிலலு மான்குத்தினால் வதையொருக்கா
லரக்கனாவன்
பதில்குத்துக் கடனாகவே பலிக்குமது கூடாதென்று

நினைத்தலுமா னவ்விதமாய் நீசன்றனைக்
குத்தச்சொன்னான்
மனத்துணிவு கொண்டரக்கன் மாருதியைக் குத்தும்படி

தனதுகையை ஓங்கிக்கொண்டு தன்னில்மிக
அகங்கொண்டு
நினைத்துவாசி தனையடக்கி நெஞ்சிலீரஞ்
சற்றுமின்றிக்

1360. கொடுத்தானம்மா குத்தொன்று குடல்முதலாய்
அங்கமெல்லாம்
நடுங்கிச்சற்று அசந்திருந்து நாடித்தன்னில்
தெளிந்தலுமான்

பத்துத்தலை களைப்பிடித்துப் பாவிதனைக்
குனியவைத்து
மொத்திவிட்டான் முஷ்டிகொண்டு மூச்சும்பேச்சும்
இல்லாமல்

குப்புறவே விழுந்தானம்மா கொடும்பாவி தசகண்டன்
எப்புறமும் வென்றுமார்பில் இருந்தகஜ தந்தமெல்லாம்

உதிர்ந்துமேலே விழுந்ததம்மா உணர்ச்சியின்றிக்
கிடந்தானம்மா
அதமானா னென்றெண்ணினான் அவன்கூட
வந்தோரெல்லாம்

அரண்டுருண்டு கருண்டரக்கன் அலறிக்கொண்டு
எழுந்தானப்பால்
இருக்குமனு மானைக்கண்டான் ஏங்கிச்சற்று
நின்றிருந்தான்

1365. படுகளத்தில் பயந்திருந்தால் பழிப்புக்கிட
மாகுமென்று
தடபுடலா யனுமானிடம் தட்சணமே வந்துரைப்பான்

குரங்கானாலும் உன்னுடைய குத்தேகுத்து ரூரக்குத்து
ஒருகுத்து நான்சகித்தேன் உலகில்யாரும் சகியாரடா

இத்தன்மை பலமுனக்கு இருப்பதைநான்
இன்றறிந்தேன்
குத்துச்சண்டை மறுபடியும் கோரிச்செய்ய
வாடாயென்றான்

அனுமார்கேட்டுச் சொல்லுகிறார் அரக்கனேயென்
பலந்தன்னை
நினைத்துச்சட வேண்டுமடா நீயெழுந்த காரணத்தால்

இருவருமாய் மறுபடியும் எண்ணிக்குத்துச்
சண்டைசெய்வோம்
வருவாயென்று கேட்டவுடன் வல்லரக்கன்
வெகுண்டுடனே

1370. அவசரமாய் அனுமனை அகந்துணிந்து
அவன்குத்தினான்
எவர்சகிப்பார் அந்தக்குத்து இவ்வுலகில் அனுமானன்றி

அனுமான்சற்று அசந்தானம்மா அந்தவேளை
நீலன்வந்து
மனந்துணிந்தே அரக்கன்முன்னே மதத்தோடு
எதிர்த்தானம்மா

எதிர்த்தஅந்த நீலன்மீது எரிகணைகள்
அரக்கன்விட்டான்
அதையனுமான் கண்டவனோ டமர்புரியச்
சமயமென்று

ஊகையினால் பொறுப்போமென்று அவரிருந்தார்
நீலன்மிகத்
தேகபலத்தை யடைந்ததன்மேல் திடமனது
மிகவுங்கொண்டு

அரக்கன்கொழுப் படக்கியவன் அவமதிப்பை
அடைவதற்குக்
கருதிச்சிறு குரங்காகவே காயந்தனை
எடுத்துக்கொண்டு

1375. அரக்கன்தலை துணில்குறித்து அசைத்தாட்டிச்
சிரகுகளில்
தரித்திருக்கும் முடிகளெல்லாம் தன்கையால்
எடுத்தெறிவான்

சிரசகளை எண்ணிப்பார்ப்பான் செவிகளெல்லாங்
கடித்திழுப்பான்
தரித்தவஸ்திரந் தனைக்கிழிப்பான் தலைமயிரைப்
பிடித்திழுப்பான்

படித்தவில்லில் குதித்தவனைப் பிடுங்கிக்கொண்டு
நொறுங்கடிப்பான்
எடுக்குங்கையை மடக்கடிப்பான் எதிரில்வந்து
பல்லிளிப்பான்

முகத்தைநக்கி முகந்துபார்ப்பான் மூக்குகளைப்
பிராண்டிநிற்பான்
அகம்வருந்த அவமதிப்பான் அகப்படாமல்
அலக்கழிப்பான்

இடுப்பள்ளையில் விரல்விடுவான் இருதுடைகள்
நிமிட்டிநிற்பான்
கிடுகிடென்றே முகங்காட்டுவான் சீறிச்சின்னப்
படுத்திடுவான்

1380. திடுக்கிடவே தலைக்குத்தலை தேங்காயடி
போல்முட்ட
அடிக்கடியே அறைந்திடுவான் ஆருமெச்ச
சேஷ்டைசெய்வான்

காலைவந்து பிடித்திழுப்பான் கண்ணில்பீளை
தனைத்துடைப்பான்
நாலுதிக்கும் குதித்தோடுவான் நாணங்கெடக்
கூத்தாடுவான்

ஆபரணங் களைப்பிடுங்கி அறுத்தறுத்தே
எறிந்திடுவான்
கோபங்கொள்ள முதுகில்வந்து குத்திரத்தம்
பெருகச்செய்வான்

முகத்தில்கைகொண் டடித்திடுவான் மூதேவி
என்றுரைப்பான்
மகிமைகெடக் சுளவாடிய மாபாவி
தொலைவாயென்பான்

அரக்கனந்த வேளையிலே அகம்நொந்து வாடக்கண்டு
பரிதபிக்க வேண்டாமடா படுபாவி என்றுரைப்பான்

1385. இந்தவிதம் அரக்கன்றனை எத்தனையோ
பங்கஞ்செய்த
அந்தநீலன் சமத்துகளை ஐயன்முதல் யாவர்களும்

பார்த்துமிக அதிசயித்தார் பாதகனாம் ராவணனைத்
தோற்சுடித்து அவன்ரதத்தின் த்வஜத்தில்வந்து
மகிழ்ந்திருந்தான்

அவனைப்பார்த்து அரக்கன்சொல்வான்
அலக்கழிக்கும் கொழுப்புடைய
கவியேயுனைக் கால்நொடியில் காலனிடஞ்
சேர்ப்பேன்பாராய்

விடுவேனஸ்தம் அதைத்தடுத்து விலகிக்கொள்வாய்
சமத்துடனே
கொடுமைசெய்தாய் மிகவுமெனைக் கோபங்கொள்ளச்
செய்துவிட்டாய்

உன்னுடைய லாகவத்தை உணர்ந்தேனடா குரங்கேநீ
என்னுடைய அஸ்தரத்திற்கு என்னவழி
சொல்வாயென்று

1390. அபிமந்திரஞ் செய்துவிட்டான் அஸ்திரம்போய்
நீலன்மீது
குபீரென்றே எரிந்துவந்து கொடுமைசெய்ய
விழுந்தான்கீழே

அக்கினியின் மகனான அந்தநீலன் தனையக்கினி
பக்குவமா யிருந்துயிரைப் பிரியாமல் பாதுகாத்து

விட்டுதம்மா இல்லாவிடில் வெருவூட்டப் படுத்தியுயிர்
அட்டியின்றி யுமிழ்ந்திவிடும் அன்புள்ள மகனானதால்

ஆதரித்தா னென்றவரும் ஆச்சரிய மிகவடைந்தார்
நாதன்தம்பி தனைக்கண்டு நாடியவன்
தனையெதிர்த்து

வந்துரதந் தனிலிருந்து வல்லரக்கன் ஏழுபாணம்
சிந்திவிட்டா னலுஜனதைச் சின்னாபின்ன
மாக்கிவிட்டான்

1395. இந்தவிதம் இருவருமாய் எதிர்த்தெதிர்த்துப்
பாணங்களைச்
சந்துவிடா தெய்துவந்தார் சாமர்த்தியமா யதன்பிறகு

நான் முகனார் தந்தவொரு நலமான பாணந்தனைத்
தானெடுத்து விட்டுவிட்டான் தசகண்டன் அதுவந்து

நெற்றிதனில் பட்டுச்சற்று தினைவசந்தான்
லட்சுமணன்
உற்றபடி மறுபடியும் உணர்ச்சிகொண்டே
எழுந்தானம்மா

உத்தமனாம் அவன்மிகவும் உன்னமதில்
கோபங்கொண்டு
சத்துருவின் மீதுவெகு சரமாரி பெய்தானம்மா

திக்பிரமைகொண் டரக்கனப்பால் தேவன்பிரம்மா
கொடுத்தருளும்
தப்புதற்கு விடாததொன்றைத் தன்கையா
லெடுத்துவிட்டான்

1400. அக்கினிஜ்வாலை கக்கிக்கொண்டு அதுவரவே
சுண்டனுஜன்
தக்கசரங் களைக்கொண்டு தடுத்தானது மீறிவந்து

பாய்ந்துதம்மா லட்சுமணன் பரந்தநல்ல வட்சகிலே
போய்ப்படவே லட்சுமணன் பூமியிலே விழுந்தான்தம்பி

அந்தவேளை அரக்கன்வந்து அனுஜன்தனைக்
கொண்டுபோகச்
சந்தோஷமாய் வந்தெடுத்துச் சாத்தியமின்றி
விட்டுவிட்டான்

அனுமானப்போ ஓடிவந்து அரக்கன்மார்பில்
முஷ்டிகொண்டு
நினைத்துத்தந்தான் இடியொன்று நெஞ்சுபதைத்
திடவிழுந்து

குப்புங்குடமாய் ரத்தங்கக்கிக் கூட்டிலுயிர் தத்தளிக்கத்
திடங்குறைந்தான் மூர்ச்சையானான் திருவாளன்
தம்பிதனை

1405. மாருதிவந் தெடுத்துக்கொண்டு மாதவனா
ரிடங்கிடவே
சுருண்டியங் கொண்டுராமன் கண்ணாலே
பார்த்திடவும்

பதிந்தசூலங் கழன்றுதம்மா பாபியிடஞ் சென்றதம்மா
அதுபோன பிறகுராமன் அனுஜன்தனை
அணைத்துக்கட்டிக்

கரத்தினாலே தடவித்தந்தான் காயமெல்லாம்
ஆறித்தம்பி
உரியபடி சுகமடைந்தான் உளமகிழ்ந்தா ரெல்லோரும்

1401. வட்சக - வக்ஷஸ் - மார்பு

அதன்பிறகு அனுமான்மேல் ஐயன்வந் தரக்கன்முன்னே
மதிகெட்ட ராட்சஸனே மாபாவி உன்னையிப்போ

எமபுரிக்கே அனுப்புவேன்பார் என்னைச்சூது
செய்ததற்காய்
நமஸ்கரித்து ஈசுவரனை நம்பினாலும் உன்னைவிடேன்

1410. கைபலத்தைப் பார்ப்போமென்று கர்த்தன்சொல்லக்
கேட்டரக்கன்
எய்துவிட்டான் அனுமான்மீது எத்தனையோ
பாணங்களை

அந்தப்பாணம் அனுமானிட அங்குமெங்கும்
துளைக்கக்கண்டு
வந்ததம்மா ராமனுக்கு வல்லரக்கன் மீதுகோபம்

ஐயன்சில பாணமெய்து அரக்கனிட தேர்குதிரை
கையிலுள்ள வில்முதலாய்க் கண்டதுண்ட மாக்கவிட்டு

அரக்கன்தலை தனிலுள்ள அழகான மகுடங்களைக்
கருதியறுத் தெறிந்தானம்மா கர்த்தனைவை
வியர்த்தமாக

ஐயன்விடும் கணைகளினால் அடுத்துவரும்
அரக்கர்சேனை
மெய்மறந்தே ஓடிவிட்டார் மிரண்டுபல திக்குகளில்

1415. ஒருவனாக ராவணனை ஓடாம லிருக்கக்கட்டிப்
பாதபிக்கச் செய்யும்நல்ல பாலமென்றை
எடுத்துக்கையில்

கோதண்டத்தில் வைத்துராமன் கோபித்தேறி
விட்டுவிட்டானே
பாதகன்மார் பிலதுதான் பட்டுதூளாய் ஓடிச்சென்று

விட்டசரம் பட்டிடவே வீறிட்டு மிகவுங்குத்தி
மட்டில்லா வேதனையால் மரணாவஸ்தை
மிகவடைந்தான்

கண்ணொளியோ மறைந்துதம்மா கால்கைகள்
தளர்ந்துதம்மா
எண்ணும்மனம் ஏங்கிற்றம்மா எட்டுத்திக்குஞ்
சுழன்றுதம்மா

தோன்றித்தோன்றி மறைந்துதம்மா துணைசெய்யும்
மனமதுதான்
ஊன்றிப்பிடித் தாளுதற்கு உள்ளம்வச மில்லையம்மா

1420. குடிவெறியன் போலலப்பிக் குணமிழந்து
மனந்தொலைந்து
இடரிக்கீழே விழுந்திடுவான் ஏங்கியேங்கி
அழுதிடுவான்

வந்துவிட்டான் ராமனென்பான் வதைக்குதென்னைப்
பாணமென்பான்
எந்தனுயிர் இரவலென்பான் எனக்குச்சுதி
இல்லையென்பான்

போதும்போ தும் சீதையின்மேல் புத்திகெட்டு
இச்சைகொண்டேன்
ஆதரிப்போ ராருமிலை ஆவிமிகத் துள்ளுதென்பான்

விரதமில்லை சுகமுமில்லை வீணாகக் கெட்டலைந்து
பரிதபிக்கு ஆனதன்றிப் பலனேதும் அடையவில்லை

பெண்மோகம் பொல்லாது பெருமையெல்லாம்
போமதினால்
கண்ணிருளைத் தந்துவிடும் கதியும்போ மென்றரக்கன்

1425. மசைபிடித்த நாயைப்போல மயங்கிக்கத்தி
அலைந்தானம்மா
எசஸ்பெற்ற அவன்மிகவும் ஏழையாக ஆனானம்மா

நினைவுசற்று வசமாக நினைத்துப்பார்த்தான்
தனதுஸ்திதி
கனமழிந்து அறிவழிந்து கஷ்டப்பட ஆயிற்றென்று

கண்கலங்கி அசைவின்றிக் கால்விரலால் நிலங்கீறி
எண்ணமதில் அச்சங்கொண்டு இருந்தானம்மா
நின்றரக்கன்

அச்சங்கொண்டு நிற்பவன்மேல் அம்பெடுக்க
லாகாதென்று
நிச்சயித்து ஸ்ரீராமன் நிர்மூடனைப்
பார்த்துரைப்பான்

பலங்குறைத்து நலமிழந்து பாதபித்து மிகவுந்துள்ளி
நிலங்கீறி நிற்பவனே நீயறியச் சொல்வேன்கேளாய்

1430. பாதகனா யிருந்தாலும்நீ பாதபிக்கும்
நிலைமைகண்டு
வேதனையை நானடைந்து விட்டுவிட்டேன்
இன்றுன்னை

உன்னையிப்போ ஒன்றுஞ்செய்யேன் உனக்குள்ள
பலத்துடனே
என்னைவெல்லக் கூடுமானால் எண்ணிநாளை
வந்திடுவாய்

போய்வரலா மென்றுரைத்த புண்ணியவான்
வாக்கைக்கேட்டு
நாய்போல ஓட்டமிட்டான் நகரடைய இலங்கேசன்

1425. மசை - வெறி

ரகுபதியின் பாணத்திற்கு ராட்சதர்கள் பயந்துவந்து
பகலிலேயே கோட்டைவாசல் பாங்காகச்
சாத்திவிட்டார்

வடக்குக்கோட்டை வாசலிலே வல்லரக்கன்
வந்துபார்க்க
அடைத்துவாச லிருக்கக்கண்டு அரக்கர்களை
அழைத்தானம்மா

1435. கதவுச்சந்தில் அரக்கர்பார்த்தார் காயமெல்லாம்
வந்துநொந்து
அதிகமான விகாரமாக அரக்கர்மன்னன்
இருக்கக்கண்டார்

மன்னவனே இவனல்ல வாசல்தனைத் திறந்துவிட்டால்
என்னவிபத் துண்டாகுமோ என்றஞ்சி
இருந்துவிட்டார்

சந்துதனில் தலையைவிட்டுச் சகலவித நம்பிக்கையும்
வந்திடவே உரைத்தானம்மா வழிப்படவே
இல்லையம்மா

ஒருதலையைக் காண்பதன்றி உள்ளபத்துத்
தலைகளெல்லாம்
இருக்குதென்று கதவுச்சந்தில் இராட்சதற்கு
விளங்கவில்லை

ஆகையினால் வெகுநேரம் அவஸ்தைப்பட்டான்
இலங்கேசன்
ஊகங்கொண்டு சிலஅரக்கர் உண்மைகண்டு
திறந்துவிட்டார்

1440. அரண்மனையை வந்தடைந்தான் அரக்கர்மன்னன்
திகிலடைந்து
தெருவுதனில் வருகையிலே தேம்பித்தேம்பி
அழுதானம்மா

வீடுவந்த சேர்ந்தமேலும் வீரன்ராமன் பாணமது
நாடிவரு மென்றஞ்சி நடுக்கங்கொள்வான்
அரக்கர்மன்னன்

வந்திடுவான் ராமனம்மை வதைத்திடுவான்
என்செய்வோம்
எந்தவேளை ஆவிபோமோ என்றுமிகப் பரிதபித்தான்

அந்தவேளை மாலியவான் அரக்கனிடம் வந்தானம்மா
சிந்தைநொந்து அவனிடத்துச் செப்புகிறான்
கஷ்டமெல்லாம்

பாட்டனேகேள் பட்டபாடு பலஜன்மம் வரைபோதும்
ஆட்டிவிட்டான் மாட்டிவிட்டான் சேட்டையெல்லாம்
ஓட்டிவிட்டான்

1445. பாணமது வந்துதப்பா பாய்ந்ததது
ஒய்ந்தேனப்பா
ஆனவந்தா னென்னசொல்வேன் அந்தராமன்
தனைஜெயிப்போர்

எவ்வுலகும் இல்லையென்று எண்ணுகிறேன் நிச்சயமாய்
அவ்விதமா யுள்ளவனை ஆண்டவனென்
றுரைத்திடலாம்

விட்டபாணம் சுட்டிவந்து எட்டியென்னைச்
சுட்டெரித்துக்
கொட்டமிட்ட வேளையிலே எட்டுத்திக்கும்
இருண்டுதப்பா

ஆலகால விஷத்தைக்கூட அந்தப்பாணம் கட்டெரிக்கும்
காலனுக்குக் காலன்போலக் காணுதப்பா ஸ்ரீராமன்

ஒருவனாக என்னைவிட்டு ஓடிப்போனார்
கூடவந்தோர்
பிரிந்திடவே அவர்களெல்லாம் பின்துணைக்கு
யாருமிலை

1450. கண்ணில்பாணம் காணுதப்பா கத்திச்சாகக்
கொல்லுதப்பா
எண்ணமிலை பிழைப்போமென்று எவனறிவான்
சிவனறிவான்

எத்தனையோ வீரரெல்லாம் என்னைக்கண்டால்
ஓடுவார்கள்
இத்தரையில் ராமனைநான் எதிர்க்கமன
மில்லையப்பா

பிரமன்முதல் சிலருரைத்த பேச்சின்படி மனிதனிப்போ
கருதிவந்து வெல்லுங்காலம் கண்டுவிட்டோம்
கருமபலன்

இந்தவிதம் வரலாயிற்றே எங்கும்புகழ் பெற்றோமே
வந்துநம்மை வதைக்கின்றானே வல்லபனாம்
ராமனிப்போ

வானரரின் வல்லமையை வாயிற்சொல்லப்
போகாதப்பா
மானங்கெட வானரர்கள் வம்புமிகச் செய்கிறாரே

1455. பெரும்பூதம் போலவந்து பிரமித்திடவே
நொறுக்குகிறார்
அருமையப்பா அவர்சக்தி ஆரும்வெல்லப்
போகாதப்பா

மனிதருடன் வானரரை மசக்கமாக மதித்தவரால்
எனக்குத்தீங்கு வராதிருக்க ஏன்வரத்தைப்
பெறாமல்போனேன்

செய்வதினி ஏதுமிலை சிரிப்புக்கிட மாயிற்றெல்லாம்
மெய்யென்றே நம்புகிறேன் மேல்விழுந்து நீயுரைத்த

சேதியெல்லாம் உண்மையென்று தெரிந்துதப்பா
ஆனாலும்
சீதைதனை விடுவதற்குச் சித்தம்வர வில்லையப்பா

தெய்வபலம் எவ்விதமோ தெரியாது ஆனாலும்
கைபலத்த கும்பகர்ணன் காப்பாற்றில்
பிழைப்போமென்று

கும்பர்கணனை எழுப்பி யுத்தத்திற்கனுப்புவதும்
அவன் யுத்தஞ்செய்து மடிந்ததைக் கேட்டு
இராவணன் புலம்புவதும் அதிகாயன் முதலிய
நான்கு மக்களை அவர்களுக்குதவியாய் இரண்டு
தம்பிமார்களைச் சேர்த்தனுப்புவதும் அவர்களும்
மடிந்ததைக் கேட்டு அரக்கன் விசனப்படுவதும்
இந்திரஜித்தன் தேற்றுவதும்

1460. உறக்கந்தனி லிருக்குமவன் உடனேயெழுந் தமர்புரிய
அறிவிக்கும் பொருட்டவனை அழைப்பிபிக்க
எழுப்பும்படி

தகுந்தவரை அனுப்பித்தந்தான் தட்சணமே
போயவர்கள்
மிகமுயற்சி செய்தாரவன் மேலான் ருகைதனிலே

படுத்துறித்திரை செய்கையிலே பக்கமதில்
நெருங்கினரோ
அடுத்துவரும் போதவரை ஆக்கிரான வாசலிலே

சுவாசமது பிடித்திழுக்கும் சுவாசம்வெளி வருகையிலே
த்வரிதமாகத் தள்ளும்வெகு தூரமட்டும் இவ்விதமாய்

அரக்கர்பலர் பறக்கின்றார் ஆயுதங்கள்
கையிற்கொண்டு
பொறிபறக்க அடித்தார்சிலர் பொல்லாத கூச்சலிட்டு

1465. கூவிச்சத்தஞ் செய்வார்சிலர் குரங்குச்சேஷ்டை
செய்வார்சிலர்
நாவைப்பிடித் திழுப்பார்சிலர் நாசியிலும்
செவிகளிலும்

ஜலமெடுத்து விடுவார்சிலர் சாகஸங்கள்
செய்வார்சிலர்
உலக்கைகொண் டடிப்பார்சிலர் உதட்டைவந்து
கடிப்பார்சிலர்

பதினாயிரம் பேரரக்கர் பலவிதமாய் முயற்சிசெய்தும்
உதிக்கவிலை நினைவுசற்றும் உறக்கமது மீறிற்றம்மா

சுடைசியாக ஆணைகளைக் கணக்கின்றி அவன்மீதில்
அடர்த்தியாக நடத்தினார்கள் அதன்பிறகு
பிரக்ஞையுண்டாய்

அசைந்துருண்டான் அப்பொழுது அறைந்தானை
அரக்கர்சிலர்
மசிந்துபோனார் ரூபமின்றி வல்லரக்கன் கும்பகர்ணன்

1470. பார்த்தெழுந்தான் பலவிதமாம் பட்சியாதிகள்
முழுதுமுண்டான்
பூர்த்தியாகப் பானஞ்செய்தான் போர்செய்ய
மனந்துணிந்தேதன்

அண்ணன்மனங் கண்டறிய ஆளனுப்பித்
தெரிந்துகொண்டு
எண்ணியவனிடம் வரவே எத்தனித்தான் கும்பகர்ணன்

காலமது கிட்டியதாம் காரணத்தால் போர்செய்யக்
கோலமது கொண்டெழுந்து கோலாகல மாகவேதான்

அண்ணன்மனங் களிக்கும்படி அமர்புரிந்து
வென்றிடுவேன்
மண்ணுலகில் என்னைவந்து மனிதர்வெல்ல
விடுவதுண்டோ?

அனுவளவும் ஐயம்வேண்டாம் ஆருக்கும்
அஞ்சவேண்டாம்
குணமடைவேன் குறையடையேன் குவலயத்தி
லென்றுரைத்துத்

தெருவுதனில் பருவதம்போல் வருமரக்கன்
கும்பகர்ணன்
இருக்குமொரு ரூபங்கண்டு இருதப்பெரும் பூதமது

ஆரென்று ஸ்ரீராமன் அறிந்திடவே விபீஷணரைக்
கூறும்படி கேட்டதற்குக் குறித்துரைப்பார்
விபீஷணனார்

என்னுடைய தமயனிவர் இலங்கேசன் தம்பியிவர்
மன்னவனாம் அண்ணனுக்கு மதியுரைத்தார்
இவருமையா

அண்ணன்முகக் குறியறிந்து அவனிஷ்டப் படிபேசி
எண்ணங்கொண்டார் இவர்மிகவும் இங்கிதத்தை
அறிந்தவரே

இலங்கேசர் முதலாக எல்லோரும் வரத்தினது
பலத்தைக்கொண்டு பிரதாபம்பெற்றார் பாரிலிவர்
கைபலத்தால்

1480. தேவாசுரர் முதலாகத் திகிலடையச் செய்தவராம்
நாவாலிவர் சக்திதனை நாலுரைக்கில் பெருகுமையா

வல்லமையோ மிகவுமுண்டு வையகத்தில்
இவர்க்கைவரும்
இல்லையையா நிகராகவே எவருமிலில்லார்
அவர்முன்னே

இலங்கேசர்க் கிருக்கும்பலம் இவர்பலமே முக்கியமாம்
கலபமாக அசாத்தியத்தைச் சொன்னபடி சாதிப்பாரே

ஆறுமாதம் உறங்கியிவர் அகசொன்று விழித்திருந்து
ஆறுமாதம் மறுபடியும் அவ்வாறே உறங்குவாரே

நித்திராபங்கம் வருங்காலம் நிலத்திலிவர்
வாழ்வொழிய
இத்தலத்தில் அருள்வாக்கு இவருக்குண்டு அதுபோலப்

1485. பங்கமுண்டோ வெழுந்துவரப் பார்க்கின்றோம்
இப்பொழுது
தங்கள்கையால் கதியடைவார் சந்தேக
மில்லையென்றார்

இதைக்கேட்டு ஸ்ரீராமன் இவனல்ல சூரனென்றே
மதியிலெண்ணி அமர்புரிய வரவையெதிர்
பார்த்ததோடு

சேனைகளைச் சீர்ப்படுத்திச் சித்தமாக இருந்தானம்மா
ஆனைரதம் சேனையுடன் அண்ணனிடம் கும்பகர்ணன்

1483. அகக - பகல்

வந்துசேர்ந்தான் அவனைக்கண்டு வல்லரக்கன்
இலங்கேசன்
முந்திவந்து உபசரித்து மோகமுடன்
அழைத்துக்கொண்டு

தானிருக்குஞ் சபைக்குவந்து தருந்தவொரு ஆசனத்தில்
ஈனனவன் தம்பிதனை இருத்திச்சிம்மா
சனத்தில்தானும்

1490. சுவரமா யிருந்துகொண்டு கண்ணில்தாரை
பெருக்கிவிட்டான்
அவதியென்ன வந்ததிப்போ அதையுரைப்பீ
ரென்றுதம்பி

வினவஅவன் முகத்தைப்பார்த்து வெட்கமெல்லாம்
போயிற்றடா
எனதருமைத் தம்பியேகேள் என்னசொல்வேன்
என்கஷ்டம்

உன்னுடைய உதவியினால் ஒதுங்குங்கஷ்ட
மென்றழைத்தேன்
என்னுடைய மனங்குளிர இஷ்டப்படி எனக்கிணங்கிச்

சொல்லுமெந்தன் வாக்கின்படி சூரனான நீசென்று
வல்லபனாம் ராமனையும் வானரராம் படைகளையும்

அதமாக்கி வந்திடுவாய் ஆதரித்துக் காத்திடுவாய்
இதஞ்செய்யும் தம்பியேநீ என்னிஷ்டப் படிநடப்பாய்

1495. உன்னைவிட்டா லிலையிப்போ உதவிசெய்யத்
தகுந்தவர்கள்
என்னைராமன் செய்தவொரு இம்சைதனை
என்னசொல்வேன்

அவனையெண்ணில் அச்சங்கொண்டு ஆவிமிகத்
துள்ளுதடா
குவலயத்தி லவனுடைய கொடுங்கனையை
நான்சகியேன்

நீயவனை ஜயித்திடுவாய் நிகருனக்கு யாருமிலை
போயவனை வென்றுமிகப் புகழடைவாய் அகமகிழ

என்னசெய்வாய் தம்பியேநீ இப்பொழுதே
போகவேண்டும்
உன்னைநம்பி உள்ளயெனக் குதவிசெய்யத் தருணமிது

ஆசையினால் அமர்புரிய அகந்துணிவா
யென்றுரைத்துச்
சோகப்பட்டான் இலங்கேசன் சொல்லுகிறான்
கும்பகர்ணன்

1500. இந்தப்படி வருந்துவதேன் எல்லைகடந்
தெண்ணுவதேன்
முந்திப்பிந்தி வருவதெல்லாம் முறையாக
அறியாததேதன்?

கஷ்டம்வரும் வேளையிலே சுணக்கலங்கிப் புலம்புவதில்
இஷ்டமது நிறைவேறுமோ எசஸதினால் வந்திடுமோ

புத்தியுள்ள மந்திரிகள் புகழடையச் செய்திடுவார்
சுத்தமில்லா நினைவுடைய புத்திகெட்ட மந்திரிகள்

குணங்கெடுப்பார் குடிகெடுப்பார் குலங்கெடுப்பார்
நலங்கெடுப்பார்
மணங்கெடுப்பார் இனங்கெடுப்பார் மற்றபாக்கியங்
களைக்கெடுப்பார்

துணைமந்திரிகள் வாக்கைக்கேட்டுத் துன்பமிக
அடைந்துவிட்டீர்
அன்புடனே தம்பிசொன்ன அபிப்பிராயந்
தள்ளிவிட்டீர்

அறிவுள்ள தம்பிசொன்ன அருமொழிகள்
விஷமாயெண்ணிக்
குறித்தவனைத் துரத்தினீரே குடிலமாக ஆயிற்றிப்போ

நீர்நிசொன்ன தம்பியின்மேல் நிஷ்டூரப் படலாமோ?
ஆதியிலே நானுஞ்சொன்னேன் அதுவுமக்கு
உறைக்கிலையே

முந்திச்செய்யுங் காரியத்தைப் பிந்திச்செய்தால்
பலனுண்டோ?
பிந்திச்செய்யும் காரியத்தை முந்திச்செய்தால்
பலனுண்டோ?

அரசரசு இருப்பவர்க்கு ஆத்திரந்தா னாமோபாரீர்
கிரமங்கடந்து நடப்பதிலே கிடைப்பதுண்டோ
கீர்த்திபாரீர்

எண்ணிச்செய்தா லெதுவுந்தானே இடரின்றி
இணங்குமன்றோ?
அண்ணாவுமக் காலோசனை அணுவுமிலை
என்றறிந்தேன்

சீதைதனை எடுக்குமுன்னே செய்தீரோ
யோசனையைப்
பாதகத்தை நெஞ்சில்கொண்டு பதுங்கிச்செய்தீர்
துரோகத்தனைத்

தருமமெல்லா நடப்பவர்கள் தரணியிலே சுகப்படுவார்
மருமந்தனை அறிந்துசெய்வோர் மயங்கார்கள்
பயமுமிலை

அதிக்கிரமித்துச் செய்வதெல்லாம் ஆபத்தாய்
முடியுமண்ணா
மதியிழந்து செய்வதெல்லாம் மகிமைதனைக்
கெடுக்குமண்ணா

உத்தமரை வருத்துவதில் உபத்திரவங்கள் நேருமண்ணா
இத்தரையில் நீதிகெட எதுவுஞ்செய்ய லாகாதண்ணா

நம்முடைய பிரதாபமெல்லாம் நாடெங்கும்
அறிந்திருக்க
நம்மைவந்து மனிதரிப்போ நாடியுத்தஞ் செய்வதற்குக்

1515. கடலிலணை கட்டிக்கொண்டு கடல்தாண்டி
வந்திருக்கும்
நடவடிக்கை தனைநோக்கில் நாராயணன் ராமனாக

அவதரித்து வந்திருப்பான் அரக்கருக்கு அவனெமனே
எவருமவன் முன்நின்று எதிர்த்துயுத்தஞ்
செய்யமாட்டார்

எதிரிகளை ழையென்று எண்ணுவது அறிவீனம்
அதிபலவான் ராமனண்ணா ஆதியே புருவனவன்

நமதுகொட்டம் அடக்குதற்கு நாட்டிலவன்
அவதரித்தான்
சமுசியமே வேண்டாமண்ணா சண்டைசெய்ய
வேண்டாமண்ணா

ஜானகியா ளாரெனிலோ ஜகன்மாதா அவளேயாம்
தீனரட்ச சன்ராமன் ஜகதீசன் அவனேயாம்

1520. வானவர்கள் வானரர்கள் வையகத்தில் வந்தவர்கள்
தானென்று அகங்காரிக்கும் தானவரை ஒழிக்கவந்தார்

வனவாசஞ் செய்யராமன் வந்தசேதி அறியாமல்
வினைவசத்தால் அவனுடைய விரோதத்தைத்
தேடிக்கொண்டீர்

உறங்குமென்னை எழுப்பினக்கால் உயிரொழியும்
எனக்கென்று
குறித்துத்தேவன் வாக்கொன்றுண்டு கூடிற்றிப்போ
அந்தவேளை

போங்காலம் அடுத்திருந்தால் போர்செய்யத்
துணிந்திடலாம்
பாங்கடைய மனமிருந்தால் பரந்தாமனைப்
பணிந்திடலாம்

இனியாகிலும் அறிவுகொண்டு என்வாக்கைக்
கேட்டிடுவீர்
மனமுவந்து ஜானகியை மாதவன்ஸ்ரீ ராமனிடம்

1525. விபீஷணன்முன் ஒுரைத்தபடி விடுவதுவே
ட்சேமமண்ணா
சுபம்பெருகும் நமக்கதினால்
சொன்னேன்சொன்னேன் இனியுமது

இஷ்டப்படிச் செய்திடலாம் எனக்கெதுவுஞ் சம்மதமே
கஷ்டம்வரும் கண்டுகொள்வீர் காலதேசங்
கண்டுசெய்வீர்

எத்தனையோ ராட்சதர்கள் எமபுரியை
அடைந்துவிட்டார்
இத்தரையில் மற்றுமுள்ளோர் இழந்திடுவார்
உயிரையண்ணா

எடுத்திடுங்கை மடங்குமாயின் எதிர்ப்பதிலே
பயனுண்டோ?
நடந்தயுத்தங் களில்நமக்கு நன்மையுண்டோ
அதையும்பாரீர்

காலங்கண்டு காரியஞ்செய்தால் கனப்படுவோம்
மனமகிழ்வோம்
நாலுங்கண்டு செய்யாவிடில் நாமடைவோம்
நஷ்டகஷ்டம்

1530. இதுவரையில் எடுத்தகாரியம் இணங்கிவந்த
காரணத்தால்
மதிமயங்கி ராமனையும் மனிதனென்றே
எண்ணிக்கொண்டு

மமதைகொண்டு துணிகின்றீர் மார்க்கந்தப்பி
நடக்கின்றீர்
நமதுகுலப் பெருமையெல்லாம் நஷ்டப்படச்
செய்கின்றீர்

அமர்புரியப் பின்னடைந்து அலப்புகிறே
னென்றுமக்குச்
சமுசியமே வேண்டாமெண்ணா சண்டைசெய்வேன்
சகாயமின்றிப்

போவேனிதோ அஞ்சமாட்டேன் போருஞ்செய்வேன்
மிஞ்சமாட்டேன்
ஆவலோட அமர்புரிவேன் அனுகூலந் தனையடைவேன்

ஆலோசித்துப் பாருமென்றான் அரக்கர்மன்னன்
கேட்டதற்குக்
காலோசிதம் அறியாமல் கருத்துரைப்பான்
வருத்தத்தோடு

1535. உபதேசஞ் செய்வதற்கு உன்னைநான்
அழைக்கவில்லை
உபகாரஞ் செய்வதற்கே உள்ளந்துணிந்
திடவழைத்தேன்

என்னுடைய மனமறிந்து எனக்குதவி செய்வதுவே
உன்னுடைய கடமையாகும் உளறவேண்டாம்
அஞ்சம்படி

உன்னாலே பகைவரெல்லாம் ஒருநொடியில்
மடிந்திடுவார்
என்னைக்கனப் படுத்துதற்கு எண்ணியுத்தஞ்
செய்திடுவாய்

எவரானாலும் உன்னைவந்து எதிர்த்திடவே
ஆகாதடா
கவலைப்பட வேண்டாமடா கடவுள்ராம னாகானடா

கடவுளரா யவனிருந்தால் கவிகளுந்தான்
வேண்டுமோபார்
அடவிருரங் குகளைநம்பி அவன்வந்ததை
யோசியடா

1540. நாராயணன் அவனானால் நமக்குக்கதி
தவானடா
வாராது குறைநமக்கு வாழ்வுகை மாறுமடா

மகன்விட்டான் நாகபாசம் மயங்கிக்கீழே
விழுந்தாரடா
வகையறிந்து யுத்தஞ்செய்தால் வதைத்திடலாம்
மனிதரைநீ

அஞ்சவேண்டாம் மிஞ்சிநிற்பாய் அனுகூலம்
நீயடைவாய்
நெஞ்சுறுதி கொண்டுபோவாய் நிச்சயமாய் நீஜயிப்பாய்

நீதிகெட்டுச் செய்ததெல்லாம் நீயெனக்குச்
சொல்லவேண்டாம்
பாதகத்தைச் செய்துவிட்டேன் பாபமென்றே
அறிந்துசெய்தேன்

நினைத்ததனைப் பின்னடைதல் நேரான காரியமன்று
உனதுதவி இருக்குமொரு உறுதிகொண்டே
நானடந்தேன்

1545. ஆனமட்டும் பார்ப்பதன்றி அதைரியப்பட
லாகாதடா
மானயீனந் தனைமறந்து மனிதருக்கு வணங்கலாமோ?

இந்தவேளை ஆதரித்து எனைக்காப்பா
யென்றுரைத்தான்
அந்தவேளை மகோதரனாம் மந்திப்பயல்
சொல்லுகிறான்

கும்பகர்ணா புத்தியுனக்குக் கொஞ்சமுந்தா
னில்லையடா
அம்புவியில் உனைஜயிப்போர் ஆருமிலை இதுநிஜமே

ஆதியிலே நமதரசர் அமாத்தியரோ டாலோசித்து
நீதிதனை யனுசரித்து நினைத்தெடுத்தார் ஜானகியை

அரக்கருக்குத் தருமமன்றோ அக்கிரமங்கள்
செய்வதுவே
தருமவிதிப் படிநடந்தால் தப்பிதமா யாகுமோபார்

1550. நானுங்கூட அமோதித்தேன் நடந்ததெல்லாம்
குறையன்று
ஏனுனக்குப் பிரமைவேண்டாம் எதிர்த்துயுத்தஞ்
செய்திடுவாய்

அஞ்சும்வேளை அல்லவிது அகந்துணியும் வேளையிது
மிஞ்சமாட்டார் எதிரிகள்தான் மீறியுத்தஞ்
செய்திடுவாய்

பஞ்சைகளைக் கண்டடங்கிப் பணிவதிலே
மகிமையுண்டோ?
கொஞ்சமுந்தான் யோசியாமல் குணங்கெட்டேன்
பிதற்றுகிறாய்

பயந்திருக்கும் அரசர்முன்னே பலவிதமாய்
பிரட்டுகிறாய்
நயந்தவரி னிஷ்டப்படி நடப்பதற்குத் தடுக்கின்றாய்

உன்னைநம்பி அழைத்ததற்கு உபகாரம் இதுதானோ
மன்னவரை மயக்கவேண்டாம் மனந்துணிந்தே
யுத்தஞ்செய்வாய்

1555. பூனையைக்கண் டானைமிகப் புலம்பியோடு
மென்பதுண்டோ?
ஏனிந்தப் பேதைமதி என்றுரைத்துப்
பின்னுஞ்சொல்வான்

உதவியின்றி யுத்தஞ்செய்ய ஒருக்காலும் ஆகாதடா
அதிபலவான் ராமன்முன்னே அலைந்துபோவாய்
பலவிதமாய்

ஜனஸ்தானந் தனில்ராமன் செய்தயுத்தந்
தனைநினைத்தால்
மனம்வருமோ அவனுடனே மற்றவர்கள் உதவியின்றி

யுத்தஞ்செய்யப் போகாதடா யோக்யமன்று
ஒருவனாகச்
சித்தந்துணிந் தேகினக்கால் சீரழிவாய் சிரமப்படுவாய்

அவனெதிரில் போனவர்கள் ஜீவிதப்பி வந்ததில்லை
இவடந்தனி லிருந்துபோன எத்தனையோ
பேரொழிந்தார்

1560. மாண்டதெல்லாம் நமதுபடை மனிதர்படைக்
கழிவில்லை
தூண்டிநம்மை இழுக்கின்றார் தோரணையாய்ச்
சத்துருக்கள்

ஆகையினால் தனியாக அமர்புரியப் போகவேண்டாம்
தேகந்தனைப் பாதுகாக்கத் திரண்டபடை
வேண்டுமென்று

சொல்லியப்பால் ராவணனைச் சுவாமியெந்தன்
வாக்கைக்கேளீர்
அல்லும்பக லேங்கவேண்டாம் ஐந்துபோர்கள்
நாலுங்கூடிக்

கும்பகர்ணன் கூடப்போவோம் குரூரமாக
யுத்தஞ்செய்வோம்
தம்பியுடன் காயத்தோடு தப்பியிங்கு
வருவோமப்பால்

எதிரிகளை வென்றதாக இலங்கைநகர் அறியும்படி
சதியறிக்கை செய்திடுவீர் சகலப்பேரும் நம்புவார்கள்

1565. மனிதர்மாண்டா ரெனுஞ்சேதி மாதரசாம் சீதைகேட்டு
மனதில்ராமன் ஆசைவிட்டு மனமுவந்தே
உமைச்சேருவாள்

அந்தப்படிச் செய்வோமென்று அகம்பாவித
மாயுரைத்தான்
இந்தமுட்டாள் பேச்சைக்கேட்டால் இழிவடைவோ
மென்றரக்கன்

எண்ணித்தம்பி தனைவேண்டி என்னசெய்வோ
மென்றுகேட்கக்
கண்ணில் பொரி சிதறத்தம்பி சாதகனாம்
மகோதரனைப்

பார்த்துனக்குப் புத்தியில்லை பாதகனே
குடிகெடுத்தாய்
வார்த்தைசொல்லச் சபைதனிலே வந்தாயே
நாணமின்றி

முன்னுக்குப்பின் விரோதமாக மொழிகின்றாய்
படுபாவி
என்னைமிகப் புகழுகிறாய் எனக்குங்கேடு தேடுகிறாய்

1570. சீருடனே இருந்தலங்கை சீரழியச் செய்ததோடு
தாறுமாறா யாகும்படி தலைகொழுத்துப் பேசுகிறாய்

உனக்குங்கேடு வந்திடுமே ஒருவருமே மிஞ்சமாட்டார்
இனங்களோடு அரக்கருக்கு இவ்வுலக வாழ்வொழியும்

அரசர்தனை அடுத்திருப்போர் அனுகூலஞ்
செய்பவராய்
இருக்கவேண்டும் நீயோவெனில் இம்சைதர
இருக்கின்றாய்

ஆதரிக்கும் அரசருக்கு ஆபத்து விளைந்திடவே
பாதகனே உபதேசித்தாய் படுநரகில் விழுந்திடுவாய்

கடமையெல்லாம் மறந்துவிட்டாய் கண்மூடித் தனமாக
மடயனேநீ அரசரிட மனங்கலைத்துத் தீங்குதந்தாய்

1575. உன்னைப்போ லுள்ளோரெல்லாம் ஒருக்காலுங்
கதியடையார்
என்னைநிந்தை செய்யுமுந்தன் ஈனப்புத்தி
தனையறிந்தேன்

எதிரில்நிற்க வேண்டாமடா எரியுதடா
உனைக்கண்டால்
சதிசெய்யும் பாதகனே சகிக்கலையே உனதுசெய்கை

அனர்த்தமாகப் பலித்ததடா ஆபத்தும் நேர்ந்ததடா
கன்மெல்லாம் ஒழிந்ததடா கஷ்டமிக வந்துதடா

துஷ்கிருத்தியஞ் செய்துவிட்டுத் துணிந்துசபை
தனில்வந்து
இஷ்டப்பட்டுப் பேசினது இழிவன்றோ
துரோகியென்று

கடிந்துமிகப் பேசிவிட்டுக் கண்கலங்கி
இருக்குமண்ணன்
அடிவணங்கிச் சொல்லுகிறான் அண்ணாயினிக்
கலங்கவேண்டாம்

1570. அமர்புரியப் போவேனிப்போ அனைவரையும்
வெல்வேனிப்போ
எமன்வந்தாலும் எதிர்த்திடுவேன் ஏனுமக்கு
மனவருத்தம்

அமர்புரியப் போவனேிப்போ அனைவரையும்
வெல்வேனிப்போ
எமன்வந்தாலும் எதிர்த்திடுவேன் ஏனுமக்கு
மனவருத்தம்

ஆசையெல்லாம் நானொழித்தேன் அமர்புரியத்
துணிந்துவிட்டேன்
நேசன்ஈசன் பாதந்தனில் நிலையாக
நிறுத்திக்கொண்டேன்

இருப்பதிலே இனியணுவும் இல்லையண்ணா
சுகம்நமக்கு
உரியகனம் போனதன்மேல் உலகவாழ்வு பெருமையல்ல

ஒழிவதுவே நலம்நமக்கு உயிர்தரித்துப் பயனில்லை
வழிகொள்வோம் பரகதியின் வையகத்தை
வெறுப்போமண்ணா

அனுமதியைத் தந்திடுவீர் அமர்புரியப்
போவதற்கு
இனிநிமிஷம் இருக்கப்போகா தென்றுரைத்து
விடைபெற்று

1585. புறப்பட்டான் சேனையோடு பெரும்பூதம்
போலவந்தான்
வரும்போது அட்டகாசம் வாயில்மிகச்
செய்துவந்தான்

வடவாசல் தாண்டிவந்தான் வருங்கோலங்
கண்டவுடன்
எடுத்தாரோட்டம் வானரர்கள் எமனிவனே
வதைப்பானென்று

அவனைக்கண்டு விபீஷணனார் அவன்மீதி
லிரக்கங்கொண்டு
தவப்பொருளாம் ஸ்ரீராமனைத் தண்டனிட்டு
எழுந்தார்ன்று

அருள்பரனே ஆண்டவனே ஆதரிக்கும் ராகவனே
வருமெந்தன் அண்ணனென்மேல் வாஞ்சைமிக
உள்ளவனே

அவருடைய மனமறிய அவரிடத்துப் போய்வரவே
அவகாசந் தந்திடுவீர் அன்புடனே என்றுகேட்டான்

1590. கிருபையுடனே அனுமதித்தார் கேசவனா ரதன்பிறகு
அருமையண்ணன் கும்பகர்ணன் அவனைவந்து
விபீஷணனார்

வணங்கிநின்றார் கும்பகர்ணன் மனமுவந்து
தழுவிக்கட்டிக்
குணமுள்ள என்பிறப்பே குசலமாக வாழ்ந்திருப்பாய்

உனைப்பிரிய அண்ணன்செய்த உசிதமற்ற
செய்கையினால்
மனம்வருந்திக் கஷ்டப்பட்டேன் வந்தகாரியஞ்
சொல்வாயெந்தன்

வணங்கியண்ணன் தனைப்பார்த்து வல்லபரே
அண்ணாவே
குணமுடனே உமதுஷேமம் கோரிவந்தேன் கேட்டிடுவீர்

அறிவுள்ள தமயனாரே அண்ணன்தூண்ட வந்திருப்பீர்
குறித்துயுத்தஞ் செய்வதற்குக் கொஞ்சமுமே
துணியமாட்டீர்

1595. பணிநின்றேன் போர்புரிதல் பாதகமாய்
முடியுமண்ணா
வணங்கிராம னிடஞ்சேரல் வாழ்வாமே தாழ்விலையே

என்வாக்கின் படிநடப்பீர் என்னையும்நீ
ராதரிப்பீர்
அன்புடனே சொல்லுகிறேன் அண்ணாவென்
றழுதுரைத்தான்

கும்பகர்ணன் விபீஷணரைக் குணமுடனே
வாரிக்கட்டி
அம்புவியி லுன்னைப்போல ஆருமில்லை
உடன்பிறப்பு

விளைப்பட வேண்டாமடா விபரீதம் விளைந்துதடா
விஷமஞ்செய்யும் மந்திரிகளால் விவேகமெல்லாம்
இழந்தாணண்ணன்

நாகமண்ணா ராமனென்று நாலுரைத்தேன்
மதிமிகவும்
தேருவுளங் கொண்டுன்னைத் தேறியுத்தரஞ்
செய்யச்சொன்னான்

1600. அம்புவியின் ஆசைவிட்டென் அண்ணலுக்காய்
வந்துவிட்டேன்
தம்பிநாம் குலத்துக்கெல்லாம் தங்கியெள்ளுந்
தண்ணீரிறைத்து

கதிதருவோன் நீயென்றறி காதகனால் பிரிந்துவந்தாய்
விதிவசத்தை வெல்வதுண்டோ விபீஷணாநீ
ஸ்ரீராமனைச்

சேர்ந்ததெனக் கஷ்டமடா சேஷசாயி பதம்பணிதல்
ஆர்சுருந்தானே கிடைத்திடுமோ அடைந்ததுந்தன்
பாக்கியமே

உன்வாக்கின் படிநடப்பேன் உறுதியண்ணன்
கொண்டனுப்ப
என்வாக்குத் தந்துவந்தேன் ஏததனை மீறப்போமோ?

போர்செய்வேன் வென்றிடுவேன் போரில்ராமன்
வென்றிடிலோ
சோர்வேனந்தப் பரம்பொருளை ஜென்மம்நல்ல
சபலமாகும்

1605. எனக்குக்கதி தருவதற்கே இராமன்வந்து அவதரித்தான்
நினைத்தவனோ டமர்புரிந்து நிர்மலமாம்
கதியடைவேன்

ஜென்மபந்தந் தொலையுமடா ஸ்ரீராமன் கைனாலே
இன்பநிலை கூடுமடா எனக்கதுவே போதுமடா

ஆதியிலே அருள்வாக்கு அண்ணலுக்கும் எனக்குமுண்டு
நாதன்றனை எதிர்ப்பதுவே நற்கதியை அமைவதற்கு

காரணமாம் என்றுள்ள காலமது நெருங்கியதால்
நாரணனை நான்வணங்கில் நற்கதியை அடையேனடா

பரகதியில் சுகமடையப் பரந்தாமன்
தனையெதிர்ப்பேன்
அருமைத்தம்பி நீயதற்கு அகம்வருந்த வேண்டாமென்று

1610. ஆறுதலை மிகவுரைத்து அனுப்பித்தந்தான்
கும்பகர்ணன்
காருண்ய முள்ளதம்பி கண்கலங்கித் திரும்பிவந்தான்

அதன்பிறகு கும்பகர்ணன் அட்டகாசஞ் செய்திடவே
அதஞ்செய்வா னிவனென்று அச்சங்கொண்டு
வானரர்கள்

எடுத்தாரோட்டம் அதைக்கண்டு இளவரசன்
அங்குதன்றான்
தடுத்தவரை நிறுத்திமிகத் தைரியங்கள்
உரைத்துத்தேற்ற

அழைத்துவந்தான் அதன்பிறகு அரக்கர்களும்
வானரரும்
ஒழுங்காக யுத்தஞ்செய்தார் ஊகமுள்ள கும்பகர்ணன்

வானரர்கள் கையெடுத்து வதைத்தான்வெகு
போர்மடிந்தார்
சேனைமிக அரக்கனாலே சேதப்படக் கண்டங்குதன்

1615. மலைகளையும் மரங்களையும் மளமளவென்
றேயெறிந்து
தலைகுனிந்து ரத்தஞ்சிந்தித் தத்தளிக்கச் செய்திடவே

அரக்கன்மிக அசந்தானம்மா அதன்பிறகு
துணிந்தானம்மா
பறக்கும்படி அங்கதன்மேல் பலமாக இடித்தானம்மா

அந்தவுடன் ஐந்துபோர்கள் அனுமார்முதல் வீரர்வந்து
தந்தஇடி பொறுக்காமலே தலைசுத்தி வீழ்ந்தெழுந்து

அந்தைந்து போர்களையும் அறைந்தானம்மா
கும்பகர்ணன்
சிந்திரத்தம் பெருகஅவர் சிரமமடைந்து
மயங்கிவிட்டார்

மறுபடியும் அங்கதன்வந் தரக்கன்மார்பி லிடித்திடவே
குறுகியவன் வருந்தியப்பால் கொழுப்புள்ள
குரங்கேயென்று

1620. எதிர்த்துவந்து இடித்தானந்த இராட்சதனாம்
கும்பகர்ணன்
மதிமயங்கி அங்கதனும் மண்ணில்சற்று
வீழ்ந்திருந்தான்

அந்தவேளை சுக்கிரீவன் அரக்கன்முன்னே
எதிர்த்துவந்தான்
எந்தனைநீ எதிர்த்துச்சண்டை எவ்விதமாய்ச்
செய்திடுவாய்

பார்த்திடுவா யென்றரக்கன் பரபரப்பு
மிகவுங்கொண்டான்
வார்த்தைசொல்வான் அவனைப்பார்த்து
வானரனாம் சுக்கிரீவன்

வானரரை அடக்கினதாய் வாய்மிரட்டேன்
பேசுகிறாய்
தானென்றகர்வ்கொள்ளுமுந்தன் தலைக்கொழுப்பை
அடக்குவேன்பார்

உனதுகொட்டம் அடங்குமிப்போ உனதுயிரும்
ஒழியுமிப்போ
எனதுகையில் கொண்டிருக்கும் இந்தமலை
தனைப்போடுவேன்

1625. வகையிதற்குச் சொல்வதென்ன வாய்திறந்து
மொழிவாயென்று
அகந்துணிந்தே சொல்லியதை அரக்கன்மீ
தெறிந்தானம்மா

அரக்கன்மார்பில் மலைவிழவும் அனுவளவாய்
மலைசிதறி
உருப்படியே மிஞ்சாமல் உதிர்ந்ததம்மா
பொடிப்பொடியாய்ச்

சூலாயுத மொன்றெடுத்துச் சுற்றியதை
அரக்கனெய்தான்
நாலுபுறம் பொறிபறக்க நாடியதுவருகையிலே

ஓடிவந்து வாயுசுதம் ஒடித்தெறிந்தான் கும்பகர்ணன்
தேடியொரு மலைகொணர்ந்து திடீரென்று
சுக்கிரீவன்மேல்

பொட்டுவிட்டான் அதுவிழவும் பூமியிலே சுக்கிரீவன்
சேட்டையின்றி மூர்ச்சையுற்றான் சீக்கிரமாய்க்
கும்பகர்ணன்

1630. எடுத்தவனைக் கொண்டுபோனான் இராட்சதர்கள்
மலர்பெய்தார்
கடமறந்த சுக்கிரீவன் கலங்கிமித்துக் கும்பகர்ணன்

காதுமூக்கு களைக்கடித்துக் கைகளினால் பிச்செறிந்து
வேதனையை மிகத்தந்தான் விட்டெறிந்தான்
அரக்கனப்போ

சுக்கிரீவன் எழும்பிவிண்ணில் சுவாமியிடம் வந்தவரைத்
தக்கபடி பணிந்துரைத்தான் தன்செயலை விவரமாக

அனைவர்களும் மனங்களித்து அன்புடனே
ஸ்துதித்தாரம்மா
கனமடைந்தான் சுக்கிரீவன் கபிகளெல்லாம்
ஆர்ப்பரித்தார்

மானங்கெட்ட ரூபத்தோடு மறுபடியும் நகரடைதல்
ஈனமென்ற கும்பகர்ணன் எண்ணியப்பால்
எதிர்த்துவர

1635. அங்கதன்போய் முன்னின்றான் அவன்மீது
சூலமெய்தான்
அங்கமதிற் படாமலதற்கங்கதனுந் தப்பிக்கொண்டான்

இராமனோடு யுத்தஞ்செய்ய இராட்சசந்தா
னோடிவந்தான்
சாமிதம்பி எதிர்த்துவந்து சரந்தொடுத்தான்
அரக்கனதைச்

சண்டைசெய்யா தெதிர்த்துவந்து சாமிமுன்னே
நின்றிடவும்
எட்டுத்திக்கும் அதிரும்படி இருபுறமும் நடந்தயுத்தம்

என்னசொல்வேன் ராமன்சரம் இம்சைசெய்யக்
கும்பகர்ணன்
உன்னைவிடே னென்றுரைத்து ஓடியொரு ஆயுதத்தை

எடுத்துக்கொண்டு வருகையிலே இராமனெய்தான்
அஸ்திரத்தை
துடித்துவிழ அரக்கன்கைகள் துண்டந்துண்ட
மாயிற்றம்மா

1640. கையறுந்து விழவரக்கன் கண்சிவந்தே ஓடிவந்து
செய்வேலுனைக் கொடுமையென்றான் ஸ்ரீராமன்
பார்த்தவன்மேல்

கோபங்கொண்டு மற்றுமொரு சூரரமுள்ள
அஸ்திரமெய்தான்
தாபந்தருஞ் சுவாலையொடு தட்சணமே வந்ததுதான்

அரக்கனிரு துடைகள்தம்மை அறுத்தெறிந்து
பின்னமது
ஒருநொடியில் தலையறுத்து உருளச்செய்து
முண்டந்தனை

சுடலில்விழச் செய்ததது கர்த்தன்ராமன்
தனக்குத்தேவர்
உடனேமலர் மாரிபெய்து உளங்களித்தார் அளவின்றி

மரணகாலச் சமயமதில் புனமெல்லாம் கும்பகர்ணன்
பரம்பொருளாம் ஸ்ரீராமன் பாதந்தனில் வைத்துநல்ல

1645. கதியடைந்தான் விதியொழிந்தான் காயபந்தம்
விட்டொழிந்தான்
ஒதுங்கிற்றெல்லாக் குறைகளுமே உண்மையாக
அவனைவிட்டு

அரக்கர்படை களிலநேகர் அதமானோர்
போகமற்றோர்
அரக்கர்மன்ன னிடத்தில்வந்து ஆதியோ டந்தமாக

நடந்ததெல்லா முரைத்திடவே நவ்டமானான்
தம்பியுமே
கொடுமைசெய்ய மனிதர்நம்மைக் கூடுங்காலம்
வாய்த்ததிப்போ

எடுத்ததெல்லாம் மடங்கிவந்தால் எப்படித்தான்
வெல்வோம்நாம்
கடவுளருள் நமக்கிருந்தால் கஷ்டநஷ்டம்
வருவதுண்டோ?

அருமைத்தம்பி அதமானால் ஆரினிமேல்
நமைக்காப்பார்
தருமங்கெட்டு நடந்ததினால் தத்தளிக்க
நேர்ந்ததிப்போ

1650. நீதிசொன்னான் விபீஷணனும் நிராகரித்தோம்
அவன்வாக்கைச்
சோதரனாம் விபீஷணனின் சொல்படியே
முடிந்ததிப்போ

பிரியத்தோடு சொன்னவனைப் பேதமெண்ணித்
துரத்தினோமே
தருமபுத்தி உள்ளஅவன் தயவுடனே மிக்குரைத்தான்

அலுசூலஞ் சொன்னவனை ஆக்ரகத்தோ டவமதித்து
மனக்குறையைத் தேடிக்கொண்டோம் மகிமை
யெல்லாம் போக்கிக்கொண்டோம்

என்றும்நம்மை அடுத்திருந்து இஷ்டப்படி நடந்தஅவன்
நன்றன்றி நமக்கணுவும் நாடித்தீங்கு செய்யவில்லை

எத்தனையோ குணமுடையோன் எவர்க்குந்தீங்கு
செய்யாதவன்
உத்தமர்க்கு உதவிசெய்வோன் உண்மையாக
நடப்பவனே

1655. எதிர்த்துநம்மைப் பேசறியான் இணங்கிநம்மைப்
பணிந்திடுவான்
மதியுள்ள சோதரனே மனதில்கள்ள மில்லாதவனே

அறிவுமிக வுள்ளவனே ஆதியந்தங் கண்டவனே
மருமமெல்லாந் தெரிந்தவனே மகிமைமிக உள்ளவனே

வேதவழி நடப்பவனே வினயமிக உள்ளவனே
சோதரனும் அவனைப்போலச் சொல்லுதற்கு
யாருமுண்டோ?

அருள்பரனை அடுத்தானவன் அரசாண்டு
வாழ்வானவன்
கருணையுள்ள ராமனாலே கனப்படுவான்
மனமகிழ்வான்

ஜகதீசனை நம்பியுள்ள சித்தசுத்தி மிகவுமுள்ள
அகந்தையென்ப தணுவுமில்லா அழிவில்லாப் புகழுள்ள

1660. சிறியதம்பி ஜன்மமது சீராகும் நேராகும்
அறிவுள்ள அவனாலே அரக்கர்குலம் கதியடையும்

சீரழிந்தோம் கூறழிந்தோம் ஜெகத்தில்மிகப்
பேரழிந்தோம்
தாறுமாறா யாகும்படி தடந்தேடி மதியிழந்தோம்

ஆருங்கண்டு அவமதிக்க அகங்கொழுப்புச்
சுகமிழந்தோம்
கோரிச்செய்தோம் குற்றமிகக் குடிலமாகப்
பலித்ததிப்போ

சீரிபெறவே சொன்னவனைச் சினங்கொண்டு
துரத்திவிட்டோம்
வேருடனே குலமொழிய வினைசெய்தோம்
நினைவுகெட்டுக்

கேடுவரு முன்னேமதி கெடுமென்பார் அதுபோலத
தேடிக்கொண்டோம் நமக்குநாமே தீங்குமிகச்
சொல்லியென்ன?

எடுத்ததெல்லாம் இணங்கிவந்த ஏதுவையே
எண்ணிச்செய்தோம்
தொடுத்ததெல்லாம் மடங்குதிப்போ சொற்கலையுந்தா
னடைந்தோமிப்போ

அமரி புரியப் போவோரெல்லாம் அதமன்றி அனுகூலம்
நமக்கணுவும் இதுவரையில் நாமறியோம்
என்னசெய்வோம்

அறியாமல் செய்துவிட்டு அலங்கோல மானோமே
தெரியாமல் செய்துவிட்டுத் தீங்கடைய ஆனோமே

அதிபலவான் ராமனென்று அறிந்தேதான்
ஜானகியைச்
சதிசெய்து கொண்டுவந்தோம் சாமர்த்திய
மில்லாமலே

பிரதாபலங்கே சுரனென்று பெயரெடுத்த
பிரக்யாதியைத்
திரணமாக எண்ணிச்சென்று திருடிவந்த காரியத்தை

1670. நினைக்கையிலே நமக்கினிமேல் நிலத்தில்வாழ்வு
வேண்டாமென்று
மனத்துணிவு மீறுதேநான் மனஞ்சகியேன்
என்னசெய்வேன்

சிட்சைசெய்யும் ராமன்பத்னி சீதையின்மே
லாசைகொண்டு
கட்சியவன் மீதெடுத்துக் கஷ்டநஷ்டம்
மிகவடைந்தோம்

வல்லடனே சும்பகர்ணா வாழ்வுனக்கும் ஒழிந்ததோடா
எல்லையில்லாப் பலமுடைய என்பிறப்பே
எங்குபோனாய்

அடக்கியாளும் தீரனேநீ அதமான காரணத்தால்
உடம்பினிமேல் வைத்திருக்கேன் உன்பின்னே
நான்வருவேன்

நீமாண்ட இடந்தனிலே நினைத்தெந்தன்
உயிர்விடுவேன்
ராமாஸ்தரந் தனக்குயிரை ராவணனாம்
நான்தருவேன்

1675. நீபோன மேலனைக்கு நிகிலஜக ஆசைவேண்டாம்
சாபாதிகள் மிகவடைந்தேன் சகலபாக்கியங்
களைத்துறந்தேன்

சீதைமேலும் ஆசையிலை ஜெகத்திலினி வாழ்வில்லை
பாதகனாய்ப் பவித்ததோடு பரிதபிக்க ஆகவிட்டேன்

பெண்ணாசை கொள்வோர்க்குக் கண்ணிருளா
மெனும்வாக்கு
மன்னுலகில் எனக்காயிற்று மகிமையெல்லாம்
வீணாயிற்று

சிற்றின்பம் சீர்கெடுக்கும் சித்தசுத்தி தனையொழிக்கும்
குற்றமிகச் செய்யத்தூண்டும் குலத்தையெலாம்
அழிக்குமெனும்

பழமொழியை மறந்துசெய்தேன் பரமார்த்த
வழிகடந்தேன்
குழந்தைகளும் இகழ்ந்திடவே குணமிழந்து
நானடந்தேன்

1680. வானரர்கள் இனிநகரில் வந்துமிகக் கொட்டமிட்டு
மானமிகச் செய்திடுவார் மகத்தான
கொடுமைசெய்வார்

அரக்கர்களும் மிகநிந்தித்து அவமதிக்க நேரும்போல
இருக்குதிந்தச் சமயமென்று எண்ணமுந்தா
லுண்டாகுதே

இனியுந்தேகம் வைத்திருந்தால் என்னபய னேதுமிலை
மன்வெறுப்பு மிகவடைந்தோம் மட்டில்லாக்
குறையடைந்தோம்

சகிக்கவுண்டோ விசனமதை வகிக்கவுண்டோ
தைரியமதைத்
தகிக்குதெந்தன் தேகமெல்லாம் தம்பியேநீ
போனதினால்

இப்பொழுதே உயிரொழிக்க எண்ணுகிறே
னென்றுரைத்து
அப்பனேஎன் கண்மணியே அருமைத்தம்பி
கும்பகர்ணா

1685. அசுரர்களும் தேவர்களும் அலறியோடும் படிசெய்து
ரௌஸடைந்த தம்பியேநீ இராமன்கையால்
மாண்டதென்ன?

என்றழுது மூர்ச்சையுற்றான் எல்லோரும்
புரண்டழுதார்
நன்றுசெய்ய உள்ளமக்கள் நால்வர்களும் சிறியதந்தை

போனதற்காய்ப் புலம்பிவிட்டுப் பொறுக்காமல்
அசந்ததந்தை
யானஇலங் கேசனையும் தடுத்தவனை ஆதரித்து

உபசரிக்க உணர்வடைந்தான் ஒருமுறையும்
படவேண்டாம்
அபயரெஸு வார் மேல அமர்புரிந்து வென்றிடுவோம்

அனுப்பித்தாரும் எங்களைநீர் அரைநொடியில்
ஜயமடைவோம்
மனவருத்தம் வேண்டாமையா மனிதருக்காய்
மயங்கலாமோ?

1690. நாங்களிரும் துமக்கிப்போ நன்மைசெய்யும்
சமயமிது
ஓங்கில்கையைத் தாங்காராரும் உலகிலெங்கள்
முன்னெவரும்

வருவதுண்டோ எங்களிட வல்லமையை அறியீரோ
உரியபடி உம்முடைய உள்ளமது மகிழச்செய்வோம்

ஆகையினால் ஆக்ஞைதாரும் ஐயாவென் றந்தநால்வர்
மிகவுறுதி யுடன்கேட்க மிதமீறித் தைரியங்கொண்டு

அரக்கன்மன்னன் தன்னுடைய அன்புள்ள தம்பிகளாம்
இருவரான மகோதரனும் இவன்தம்பி மகாபார்சுவனும்

மக்களுக்குச் சகாயமாக மனிந்துணிந்து யுத்தஞ்செய்ய
அரக்கரையோ டனுப்பித்தந்து அநேகவித் மாகவுள்ள

1695. சேனைகளுஞ் சேர்த்தனுப்பிச் சீருடனே
அனுக்கிரகித்தான்
ஆனைரத முதலாக ஆடம்பரத் தோடரக்கர்

யுத்தகளம் வந்துசேர்ந்தர் யோசனையோ டமர்புரியச்
சித்தமானார் அவர்களிலே சிறியவனாம்
நராந்தகன்றான்

வானரராம் படைகளிலே வாகனமாம்
குதிரையின்மேல்
தானிருந்து சுற்றிவந்து தன்கையின் அம்புகொண்டு

பாணங்களை மிகச்சொரிந்து படைகளெல்லாம்
நடுங்கும்படி
ஆணவத்தோ டமர் புரிந்தான் அநேகமாக வானரரை

அதஞ்செய்தான் அப்பொழுது அங்கதன்கண்
டவன்முன்னே
எதிர்த்துவந்தான் குதிரைதனை இடித்தான்கையால்
மடிந்ததது

1700. அரக்கனான நராந்தகனோ அங்கதன்முன்
குதித்துக்கொண்டு
வருகையிலே முஷ்டிகொண்டு வல்லரக்கன்
றலையைநோக்கிக்

கொடுத்தானோரு குத்தினால் குடங்குடமாய்
ரத்தங்கக்கிப்
படுத்துவிட்டான் நராந்தகன்றான் பிராணந்தனை
இழந்துமண்ணில்

அவன்போக மீதியுள்ள ஐவர்களாம் அரக்கர்களில்
விவரஞ்சொல்வேன் மகோதரனும் வெகுபலவான்
மகாபார்சுவனும்

அரக்கர்மன்னன் தம்பிமார்கள் அவர்தவிர மற்றமூவர்
திருதசிரசும் அதிகாயனும் தேவாந்தகன்
அரக்கன்மக்கள்

அந்தமூவர் சகோதரனாம் அதிபலவான் நராந்தகனை
வந்தங்கதன் கொன்றானென்று வைரமிகக்
கொண்டடையும்

1705. வானரரை அடுத்துவந்து வாணங்களை
மிகச்சொரிந்து
ஆனமட்டும் நொறுக்கிவிட்டார் அனுமார்நீலன்
அங்கதனும்

சேனாபதி ரிஷபனுமாய்ச் சேர்ந்துவந்து
எதிர்த்துநின்று
நானாவித மரமலைகள் நாலுபேரும் மிகச்சொரிந்தார்

எங்கும்பாணம் எங்குமலை எதிர்த்தெதிர்த்து
நஷ்டமாகப்
பங்கமின்றி இருபுறமும் பலமாக யுத்தமது

நடக்கையிலே திருசிரசும் நடுங்கத்தேவர்களைமிகவும்
கொடுமைசெய்த தேவாந்தகனும் கொல்லப்பட்டார்
அனுமான்கையால்

போகமற்ற மூவர்களும் போர்புரிந்தார் கூறறிந்து
தேகந்தனை மறந்தவர்கள் சிம்மம்போல்
எதிர்த்தெதிர்த்து

1710. மகோதரனை நீலன்கொன்றான் மகாபார்சுவனை
ரிஷபன் கொன்றான்
சகாயமின்றி ஒருவனாகச் சண்டைசெய்ய அதிகாயன்

மாச்சரிய மிகவுங்கொண்டு மதத்தோடவ
னெதிர்த்துவந்து
ஆச்சரியமாய் அமர்புரிய அழகான ரதத்தின்மீது

வருகையிலே வானரர்கள் வருமவனைக் கண்டவுடன்
அரக்கன்கும்ப கர்ணன்பின்னும் ஆவிகொண்டு
மறுபடியும்

வந்துவிட்டா னென்றலறி வடக்குத்திக்கி
லெடுத்தாரோட்டம்
முந்திவரும் அதிகாயன் முகக்குறியைப் பார்த்தனுமான்

அங்கதன்நீ லன்முதலாய் அநேகச்சேனா பதிகளுமாய்த்
தங்கிநின்று எதிர்த்தாரம்மா தானவனாம் அதிகாயன்

1715. கோபங்கொண் டவர்மீது கொட்டிவிட்டான் சரமாரி
தாபமது சகியாமல் தத்தளித்தார் அவர்களெல்லாம்

அரக்கர்களில் அதிகாயன் அதிபலவான்
மதியுமுள்ளோன
அரிதவனை வெல்லுவது ஆருங்கண் டஞ்சுவார்கள்

வானரசே னாதிபரை மதியாமல் அதிகாயன்
ஏனிவரை எதிர்க்கவேண்டும் என்றிரக்கங்
கொண்டவரை

விட்டுவிட்டு எட்டிவந்து வீரன்ராமன் தனையடுத்துச்
சுட்டிவந்தான் அவன்வரவைச் சுவாமிகண்டு
விபீஷணரை

வருமிவனா ரென்றுகேட்டார் வாய்திறந்து
விபீஷணனார்
அரக்கனெந்தன் அண்ணனுக்கு அருமைமகன்
அதிகாயன்

1720. இவனேயாம் இவனைவெல்வோர் எங்குமில்லை
மிகப்பலவான்
கவலைப்படான் எதற்குமையா கஷ்டமென்ப
தறியானிவன்

பிரமனாலே வரமடைந்தோன் பிரபலமான
அஸ்தரம்பெற்றோன்
அருமையான கவசமுள்ளோன் ஆர்க்குமிவன்
அஞ்சானையா

இவனுடைய கைப்பலத்தை இலங்கைதனி
லுள்ளோர்நம்பி
அவரவரும் தைரியங்கொண்டு அஞ்சாம
லிருக்கிறார்கள்

ஜாக்கிரதையா யிவனுடனே சண்டைசெய்ய
நீக்கவேண்டுமையா
நீக்குப்போக்கு களையறிந்து நிக்கரிக்க வேண்டுமையா

என்றுசிபீ வுணருரைத்தார் இராமர்முன்னே
ரதத்தில்வந்து
இன்றென்னோடு யுத்தஞ்செய்ய ஏற்றவரை
விடுவாயென்றான்

1725. அந்தவார்த்தை தனைக்கேட்டு அனுஜனான
லட்சுமணன்
வந்தெதிரில் நின்றுகொண்டு வலதுகையில்
வில்லுங்கொண்டு

இருப்பவனைப் பார்த்தரக்கன் இந்தப்பயல்
நம்மெதிரில்
வருவதுண்டோ யுத்தத்திற்கு வாலிபனாம் இவனுடனே

அமர்புரிதல் அனுசிதமே அறியாப்பிள்ளை
இவனிடத்து
நமதுபலங் காட்டுவது நமக்கணுவும் அழகல்ல

வில்லுங்கையில் கொண்டுவந்து வெகுமூருக்காய்
நிற்கின்றான்
சொல்லுவோம்நாம் புத்திதனைச் சூட்சமங்கொண்டு
ஒதுங்கும்படி

என்றரக்கன் எண்ணிச்சொல்வான் இலட்சுமணா
குழந்தைகேளாய்
நன்றடைய மாட்டாயடா நாடாம லோடிப்போவாய்

1723. நிக்கரிக்க - நிஷ்காரிக்க - நீக்க

1730. என்னைவந்து எதிர்த்தவர்க்கு எமபுரியே
பிராப்தமாகும்
உன்னைமீறி வந்துவிட்டாய் உயிருனக்கு மிஞ்சாதடா

ஒருசரத்தா லுனைக்கொல்வேன் உணர்வின்றி
வந்துவிட்டாய்
பாதகப்பாய் பிராணன்போகும் பட்சங்கொண்டு
சொல்லுகிறேன்

சிறுபிள்ளை நீயாதலால் செப்புகிறேன் தயவுடனே
அறிவுகொண்டு அம்பெறிந்து அப்புறத்தி
லோடிப்போவாய்

ஓடிப்போதல் நன்மையடா உன்னாலே ஆகாதடா
தேடியென்முன் ஏன்வந்தால் தேகம்மிஞ்ச
மாட்டாதடா

வருங்கேடு தெரியாமல் வல்லவன்போல் நிற்கின்றாய்
பெருமலையும் பொடியாகுமே பிடித்தஎன்கைச்
சரத்தினாலே

1735. எதிர்க்கவேண்டா மென்றுரைத்தான் இலட்சுமணன்
கேட்டுரைப்பான்
மதிகெட்ட மூடனேநீ மமதைகொள்ள வேண்டாமடா

குலைக்கும்நாய் கடித்திடுமோ கொகவும்சிம்மந்
தனைவெல்லுமோ?
பலவிதமா யுளறுகிறாய் பரமார்த்தம் அறியாமல்

வாமனனா யவதரித்து வையகத்தை ஓரடியில்
தாமளந்து தரணிதனைத் தயவுடனே காத்தவராம்

நாராயணன் போலவென்னை நாடியேநீ
அறிந்துகொள்வாய்
போராத வேளையுன்னைப் பொருந்தயென்முன்
வந்தாயடா

எந்தன்முன்னே வந்துவிட்டு எங்குபோவாய்
பார்ப்போமடா
அந்தரங்கம் அறியாமலே அலப்புகிறாய் அறிவிழந்து

1740. வாயடக்கி வல்லமையை வகையுடனே காட்டுவாயே
ஆயுளுனக் கில்லையினி அறிந்துகொள்வா
யென்றுரைத்தான்

அரக்கன்கேட்டு ஆத்திரங்கொண்டு அம்புகொண்டு
பாணங்களை
வருவித்தான் அனுஜன்மீது பதில்பாணம்
போட்டவனை

தம்பியறுத் தெறிந்தானம்மா தானவனும் தம்பியுமாய்
அம்புகளி லிருந்துபாணம் அநேகமாக விட்டெதிர்த்து

அமர்புரியும் வேளையிலே அரக்கன்மீது தம்பியொரு
இமைப்பொழுதில் விட்டபாணம் இம்சைமிகச்
செய்யக்கண்டு

மதிமயங்கி லட்சுமணனை மதித்துமிக ஸ்துதித்துவிட்டு
அதிககோபங் கொண்டரக்கன் அனுஜன்மீ
தொருபாணத்தை

1745. விட்டுவிட்டான் நெத்தியிலே பட்டுரத்தங்
கொட்டத்தம்பி
தட்டுத்தடு மாறியப்பால் தைரியத்தை மிகவடைந்து

உற்றபடி இனியிவன்மேல் ஓங்கச்சர மாகாதென்று
வெற்றிதரும் அஸ்திரங்களை விடுவோமென்
றாலோசித்து

எதிர்த்தெதிர்த்து இருவருமாய் எத்தனையோ
அஸ்திரமெய்தார்
அதித்வரையாய் அவைகளினால் அபஜயமே
இருபுறமும்

இல்லையப்பால் அரக்கனிடம் எய்வதற்கு
அஸ்திரமிலை
வல்லமையைக் காட்டுதற்கு வகையுமிலை அவனிடத்து

அதன்பிறகு அவன்மீதில் அபரிமித அஸ்திராதிகள்
மதியுடனே அனுஜன்விட்டான் மகிமையுள்ள
அவனுடைய

1750. கவசத்தின்மேல் விழுந்தவுடன் கணிசமின்றி
மழுங்கிக்கீழே
அவசரமாய் விழுந்துவர அப்பொழுது வாயுதேவர்

அனுஜனுக்குப் பிரத்தியட்சமாய் அசையாது கவசமது
மனந்துணிந்து பிரம்மாஸ்திர மந்திரபலங்
கொண்டடிப்பாய்

ஜயமடைவா யென்றுரைத்த சேதிதனைக்
கேட்டனுஜன்
நயந்தந்த அஸ்திரத்தை நாடிவிட்டான் அதுஜ்வலித்து

வருகையிலே அரக்கன்பார்த்து வாரிவாரிப்
பாணாதிகள்
சொரிந்துவந்தான் அவைகளெல்லாம் சுட்டிவரும்
அஸ்திரத்தின்

1747. அதித்வரை - வேகம்

பக்கமதில் வந்தவுடன் பட்டீலென்று வெடித்துக்கீழே
சுக்குச்சுக்காய் விழுந்துமண்டி சரனந்த அதிகாயன்

1755. பிரமித்துநின்று அஸ்திரம்போய்ப் பேதித்துக்
கவசந்தனைத்
திரணந்திரணமா யறுத்துத்தள்ளித் தீயவனாம்
அதிகாயன்

கழுத்தையுந்தா னறுத்துத்தள்ளிக் கரகரென்று
சுற்றியவன்
விழுந்திடவுஞ் செய்தது விளையாட்டாய் லட்சுமணன்

சண்டைசெய்து ஜயித்துவந்து சாமளனாம்
லட்சுமணனை
அண்டிநமஸ் கரிக்கஅவன் ஆலிங்கனஞ்
செய்துகொண்டு

மிகமகிழ்ந்தான் வானரர்கள் மிகப்புகழ்ந்து
களிப்படைந்தார்
அகங்குளிர்ந்தார் தேவாதிகள் அரக்கனிந்தச்
சேதிகேட்டான்

அலறிக்கீழே விழுந்துமூர்ச்சை அவனடைந்தான்
மிகவருந்தி
இலங்கைநகர் கெட்டுதென்று எல்லோருங்
கதறினார்கள்

1760. நினைவுகொண்டான் அரக்கனப்பால் நினைத்துப்
பார்த்தான் நடந்ததெல்லாம்
மனக்குறைகள் மிகவடைந்தான் மகத்தான
விசனங்கொண்டான்

எண்ணுகிறான் இவ்விதமாய் என்னசெய்வோம்
நம்முடைய
கண்ணின்முன்னே எத்தனையோ கஷ்டங்கள்
விளைந்ததிப்போ

அமர் புரியப் போனவர்கள் ஆவியுடன் வந்ததில்லை
எமபுரியை அடைவதன்றி என்னைவந்து கண்டதில்லை

ஜயமனுவும் நமக்கில்லை ஸ்ரீராமன் பட்சத்திலோ
பயமென்ப தேதுமில்லை படைகளான வானரர்கள்

கொழுப்பையுந்தா னென்னசொல்ல கோபமுந்தா
னென்னசொல்ல
இழுத்துநம்ம சேனைகளை இம்சைசெய்வ
தென்னசொல்ல?

1765. ஸ்ரீராமன் பலமேபலம் செப்புவுண்டோ
அவனைப்போல
ஆராகிலும் வல்லபர்கள் அவன்மனித னாகமாட்டான்

அவனுடைய தேகத்தின்மேல் அஸ்திராதிகள்
எய்வோமானால்
சுவஸ்தமாக இருக்கிறானே சோகப்படா திருக்கிறானே

எத்தனையோ அஸ்தரங்களும் எடுத்துவிடும்
பாணங்களும்
கொத்திக்கொல்லும் மற்றுமுள்ள கோடான
கோடியான

ஆயுதங்கள் அனைத்தையுமே அபரிமித மாகவேநாம்
மாயவித்தை யோடெய்து மகிமைபெற
நடப்பதெல்லாம்

வீணாகப் போவதன்றி வெற்றிதனைத் தருவதில்லை
கோணாமல் ஸ்ரீராமன் குணமடைந்தே மகிழுகிறான்

1770. தேசுபல முள்ளராமன் தேவதேவ னாகுவானே
நாசுபாச கட்டொழிந்து நரமனிதன்
பிழைப்பதுண்டோ?

ஆகையினால் விஷ்ணுவேதான் அவதரித்து
வந்திருப்பார்
போகமினி நமக்கில்லை பூமிவாழ்வு மிலைநமக்கு

மன்னவனா மென்றெண்ணி மகிழ்ந்திருந்தோம்
மதமடைந்தோம்
சொன்னபடி யாருங்கேட்டார் சோகமென்ப
தடைந்ததில்லை

ஈசனருள் குறைந்ததினால் இந்தக்கஷ்டம் வந்ததன்றிப்
பேசவுண்டோ குறையணுவும் பெருமையெல்லாம்
இகழ்ந்தோமிப்போ

அதிகாயன் படுவதுண்டோ அவனையாரும்
வெல்வாருண்டோ
விதிவசமு மிவ்விதமாய் விளைவதுண்டோ
நாமறியோம்

1775. பழுதாக்குறைக் கழுவதினால் வழுவொழிந்து
பழுத்திடுமோ?
விழித்தணுவும் அறியாமல் கொழுத்துச்செய்தோம்
இழிவடைய

விதிவசத்தை நோவதிலும் விளைவதுண்டோ
பயனணுவும்
மதியிழந்து நடந்ததினால் மகத்தான கஷ்டங்களை

அடைந்தோமென்று அழுதுமிக அகம்நொந்து
வாடியபின்
சடுதியாக ஒழித்தானம்மா சஞ்சலத்தை
விட்டெழுந்தான்

சகலமான அரக்கரையும் தட்சணமே வரவழைத்து
வெகுவாக ஆலோசித்தான் வேறொன்றும்
புரியவில்லை

பட்டணத்தைப் பாதுகாக்கப் பலமாகக்
காவல்வைத்துக்
கொட்டமெல்லாம் அடங்கியவன் காரிக்கிரகந்
தனையடைந்து

1780. சோகக்கிரகந் தனில்படுத்துச் சுவாசமதை மீறவிட்டுத்
தாகமோகங் களையொழித்துத் தத்தளித்து
வாடுகையில்

மண்டோதரி முதலாக மற்றுமுள்ள போர்களெல்லாம்
கண்டுமிகக் கலங்கினார்கள் கஷ்டமதை எண்ணிமிகத்

தந்தைமுதல் சகலருமாய்ச் சஞ்சலத்தால் வருந்துகிற
அந்தச்சேதி தனைக்கேட்டு அரக்கனிட மகனான

இந்திரஜித்தன் ஓடிவந்து இராவணனைத்
தழுவிக்கொண்டு
சிந்தைநோக வேண்டாமையா செப்புகிறேன்
கேளுமையா

ஐயாநீர் வருந்தவேண்டாம் ஆருக்கும் அஞ்சவேண்டாம்
கையால்நான் எதிரிகளைக் கதறடித்து
வதைத்திடுவேன்

1785. நானிருக்கும் போ தமக்கு நாடவுண்டோ கஷ்டமையா
ஆனமட்டும் பார்த்திடுவேன் அபஜயமே நானடையேன்

ஒருநொடியில் எதிரிகளை ஒழித்திடுவேன்
அழித்திடுவேன்
வருவதுண்டோ குறையினியும் வல்லவனா
னிருக்கையிலே

அஞ்சுவது அழகாகா ஆறுதலை அடைந்திடுவீர்
பஞ்சபஞ்சாய்ப் பறக்கடித்துப் பாங்காக
ஜயமடைவேன்

சோகம்விடும் ஊகங்கொள்ளும் சொல்லுமெந்தன்
வாக்கைநம்பும்
மோகதாகங் களைவெறுத்து முகம்வாட
வேண்டாமென்று

சொல்லிமனந் தனைத்தேற்றிச் சுகமடைவீர்
அகங்குளிர்வீர்
இல்லையினி குறையுமக்கு என்றுரைத்த
மகனைப்பார்த்து

1790. அமிருதவாக்கு நீயுரைத்தாய் ஆரும்உன்போல்
இந்தவொரு
சகந்தனில் தைரியஞ்சொல்வோர் ஜகத்திலெனக்
கில்லையடா

மனமகிழ மகிமைதரும் மகனேநீ அமர்புரிந்தால்
மனிதர்களும் வானரரும் மடங்குவார்கள்
அடங்குவார்கள்

ஆனாலவர் அறிவுடையோர் அந்தரங்கம்
மிகவறிந்தோர்
நானாவிதச் சூதுகொண்டு நாமவரை வெல்லவேண்டும்

ஆகையினால் ஜாக்கிரதையாய் அமர்புரிய
வேண்டுமென்று
தாகமுடன் அனுப்பித்தந்தான் தசகண்டன்
இந்திரஜித்தை

சொல்லுகிறான் படைகளுடன் சீராக ரணகளத்தை
வல்லபனாம் இந்திரஜித்தன் வந்தடைந்து
பிரம்மாஸ்திர

இரண்டாந்தரம் இந்திரஜித்தன் வந்து மறைந்திருந்து பிரம்மாஸ்தரப் பிரயோகஞ் செய்ததும், இராமலட்சுமணாள் முதல் யாவரும் பிரக்ஞை தப்பிக் கிடந்ததும், அனுமார் சஞ்சீவிக் கொடுமுடியைக் கொண்டுவந்ததும், சகலரும் சுகமா யெழுந்ததும், சுக்கிரீவ னாக்ஞைப்படி வானரர் இலங்கையைச் சுட்டதும் இராமர் பாணப் பிரயோகஞ் செய்ததும்

1795. மந்திரவோமம் விதிப்படியே மனப்பூர்வ மாகச்செய்து
தந்திரமாய் எழும்பிவிண்ணில் தலைக்காட்டாமல்
மறைந்திருந்து

வானரராம் படைகள்மீது வாரிவாரிப் பாணங்களை
ஈனனிந்திர ஜித்தன்விட்டான் எல்லோரும்
பிரமித்தாரம்மா

சூரியனப்போ அஸ்தமித்தான் சூழ்ந்திருளும்
பரவிற்றம்மா
ஆருமஞ்ச இந்திரஜித்தன் அடித்தானம்மா
பாணங்களைப்

பிரமனிட அஸ்திரத்தைப் பேயரக்கன்
கணைகள்தோறும்
உருப்செய்து விட்டுவந்தான் உக்கிரமாக
அஸ்திரம்வந்து

சுக்கிரீவன் முதலாகச் சூரரையும் மற்றுமுள்ள
தக்கவெகு போர்களையும் தலைமயக்கங்
கொள்ளச்செய்து

1800. விழுந்திடவே செய்ததம்மா வீரரெல்லாம்
படுத்தாரம்மா
எழுந்திருக்க மாட்டாமல் எல்லோரும் கிடந்தாரம்மா

பிரம்மாஸ்த பந்தமது பிரபலமாக வரக்கண்டு
தர்மசீலன் ராமனப்போ தம்பிதனைப்
பார்த்துரைப்பான்

இந்திரஜித்தன் வஞ்சகமாய் எய்துவிட்டான்
அஸ்திரத்தை
வந்துநம்மைக் கட்டுதற்கு வலவந்தஞ் செய்குதிப்போ

நான்முகனார் அஸ்தரத்தை நாம்கூடக்கப் போகாதடா
ஏனதனை எதிர்க்கவேண்டும் இணங்கியதற்
கடங்குவதே

தருமமடா கூடந்தாலது தப்பிதமா யாகுமடா
மருமந்தனை அறிந்துகொண்டு மவுனமாக இருப்பதுவே

1805. கடமையடா என்றுரைக்குக் கண்ணசந்தா ரிருவருமாய்
மடயனிந்திர ஜித்தனிப்போ மமதையோடு
நகரடைந்து

தந்தைதனைப் போய்வணங்கித் தைரியத்தை
மிகவுந்தந்து
சிந்தைமகிழ்ந் திருந்தானம்மா ஜெயமடைந்தோ
மென்றுதானே

உத்தமராம் விபீஷணனார் உள்ளமிக நொந்ததன்மேல்
சித்தந்துணிந் தெழுந்துவந்து ஸ்ரீராமன் படைகளிலே

அஸ்தரக்கட்டுக் ககப்படாத அநேகர்களாம்
வானரர்க்கு
விஸ்தரித்துத் தைரியஞ்சொல்லி வெல்லுவோம்நா
மென்றுமிக

உறுதிவாக்குத் தந்துவந்தார் ஒருமுகூர்த்த
மாயிற்றம்மா
மறுநிமிஷம் அஸ்தரக்கட்டு மாருதியை விட்டுதம்மா

1810. எழுந்துவரும் விபீஷணரோ டிணங்கியெல்லா
மாலோசித்துச்
சுளுந்துக்கட்டைக் கையிற்கொண்டு சுத்திப்பார்த்தார்
ரணகளத்தைக்

காரணகா ரியமறிந்த காலங்கண்ட ஜாம்புவானைக்
கோரியெங்கும் தேடிவந்தார் குரூரனம்பால்
தேகமெல்லாம்

இரணமா யாகியவர் வெருகஷ்டப் பட்டுக்கொண்டு
வருமிவர்கள் காணும்படி வழிதனிலே இருந்தாரம்மா

பிரம்மன்புத்திரர் அவராதலால் பிரம்மாஸ்தரக்
கட்டவரை
வருத்தாமல் விலகிநிற்கும் வாஸ்தவமுங் கண்டறிந்தார்

அபக்கன்கணை ஜாம்புவந்தன் அட்சிகளைப்
பட்சித்ததால்
கருதிவந்த இருவர்களைக் கண்ணில்காணக்
கூடவில்லை

1815. அவரைப்பார்த்து விபீஷணனார் ஐயாநீர்
சுகமாவென்றார்
எவரெவ்வாறு போனாலுமே இருக்கின்றாரா
உயிருடனே

அஞ்மாரென்று கேட்கையிலே அவரைமட்டில்
கேட்பதென்ன?
கனமுள்ள வீரரெல்லாம் கணக்கின்றி இருக்கின்றாரே

என்றுவிபீ ஷணர்கேட்க இருந்தாலென்ன எல்லோரும்
இன்றுவந்த கஷ்டந்தனை எவராலும் ஒழிக்கப்போகா

அனுமார்மட்டும் இருப்பாராயின் ஆவிப்பிட்சை
அனைவர்க்கும்
தனதுசக்தி யால்தருவார் தடையின்றி நிச்சயமாய்

அவரிருந்தால் போதுமென்று அபிப்பிராயந்தனை
தனையுரைத்தார்
சுவலையெல்லாம் விட்டனுமான் கால்தொழுது
ஜாம்புவந்தர்

1820. கா துகேட்க அடியேன்வந்தேன் கஷ்டம்நீக்க
வழியுரைப்பீர்
மாதவனார் அனுக்கிரகத்தால் மனந்துணிந்தே
செய்வேனதைச்

செய்யாத சாயியுஞ்செய்வேன் ஜெயமடைய
வழியுரைப்பீர்
ஐயாவும்ம கருத்தறிந்தால் அப்படியே
செய்வேனென்றான்

அந்தவார்த்தை தனைக்கேட்டு ஆறுதலை மிகவடைந்து
தொந்தரைகள் நேரும்போது துணைசெய்து
ஆதரிக்கும்

ஆபத்பந்து நீரேயல்லால் ஆராவார் எனப்புகழ்ந்து
பாவிஇந்திர ஜித்தனெய்த பிரம்மாஸ்தர பந்தாதிகள்

ஒழிந்திடவே வடதிசையில் உள்ளகைலை மலையருகில்
அழகான மலையொன்றுண்டு அதிலரிதாம்
மூலிகைகள்

1825. மிகவுமுண்டு அவைகளிலே மேலான நான்குவகைச்
சுகத்தைத்தரும் மூலிகைகள் சொல்லுகிறேன்
கேளுமையா

சஞ்சீவிக் கரணியொன்று சாவர்ணியக் கரணியொன்று
நஞ்சொழித்து நன்மைதரும் நல்லதொன்று
விசல்யகரணி

சந்தான கரணியொன்று சாவின்றிச் செய்பவையாம்
வந்தாலந்த மூலிகைகள் வருமுயிர்கள் அனைவருக்கும்

ஆகையினால் அவைகளைநீர் அங்குசென்று
கொண்டுவரத்
தாகங்கொண்டு போவீரென்றார் தட்சணமே
விசுவரூபம்

கொண்டலுமான் மின்டனைப்போல்
அண்டமெல்லாங் சுண்டதிர
வண்டிசையும் பறக்குத்தூளி எழும்பிவிண்ணில்
மனோவேகமாய்ச்

1830. சென்றலுமான் அந்தமலைச் சிகரமதில்
போய்க்குதித்தான்
அன்றந்த சிகரந்தனை ஆதித்தன்போல் கண்டானம்மா

ஔவதிகள் எடுக்கப்போனான் ஒளிந்ததம்மா
ஔவதிகள்
தேசமெல்லாம் இருளாயிற்றுத் தெரியவில்லை
மூலிகைகள்

1831. ஔவதி - மருந்து

ஜகதீசன் ராமனுக்குச் சகாயஞ்செய்ய மனமின்றி
அகங்கொண்டு மறைந்தீரோ அரிதான ஔஷதிகள்

பரம்பொருளாம் ஸ்ரீராமன் பக்தனான
என்திருஷ்டியில்
தெரியாம லொளிந்தீர்கள் திருடனைப்போ
லாகையினால்

கொண்டுபோவே னுங்களை நான் கொஞ்சமுநான்
மிஞ்சவிடேன்
அண்டமெல்லாம் புரட்டுமென்னை அலக்கழிக்கப்
போவோமென்று

1835. சொல்லிவிட்டுக் கொடுமுடியைச் சுவாமிதனை
ஸ்மரித்துக்கொண்டு
அல்லகல்லோ லஞ்செய்து அரைநொடியில்
பிடுங்கிக்கொண்டு

வருத்தமின்றி வந்துசேர்ந்தான் வாயுவேக மாகவேதான்
அறுந்துருண்டு படைகிடக்கும் அந்தரண களமத்தியில்

மூலிகையின் வாசமது மூக்கின்வழி சென்றிடவும்
காலைவிழித் தெழுவதுபோல் சுவிமுதலா யாவருடன்

சாமிதம்பி சகலருமே சவுக்கியமா யெழுந்ததோடு
க்ஷேமமாக எழுந்தாரம்மா சேனைகளில்
முன்மடிந்தோர்

அரக்கர்படை களில்மடிந்தோர் அந்தப்படி
உயிர்தரிக்க
இருக்கவில்லை அவருடல்கள் எடுத்தெடுத்துக்
கடல்தனிலே

1840. எறிந்துவிட்டா ரானதினால் இந்தவொரு
காரணத்தால்
மறுபடியும் பிழைப்பதற்கு மார்க்கமில்லை அரக்கருக்கு

வானவர்பூ மழைபொழிந்தார் வாயுசுதன் மீதுமிகத்
தானவர்கள் ஒழிவாரென்று தயிரியமும்
மிகவடைந்தார்

நேசரென்றால் அனுமார்போல் நேசரெங்கும்
கிடையாதம்மா
தாசனுமாய்க் சுவர்டம்வில் தன்னுயிரைப் பாராமல்

நம்பினோரைக் காப்பாற்றுவார் நலஞ்சிறந்தோர்
பலமுதிர்ந்தோர்
அம்புவியில் அவருக்கொப்பாய் ஆருமிலை தரணியிலே

உத்தமரும் உபகாரியும் உண்மையாக உழைப்பவரும்
சித்தமிகக் குளிரும்படி சீராகச் செய்பவரும்

1845. என்றும்புகழ் பெறுபவரும் எடுத்ததெல்லாஞ்
சாதிப்போரும்
நன்றுசெய்ய உதித்தவரும் நான்முகனார் அம்சமும்

மாருதியே ஆகையினால் மனதொப்பி அனுமாரைக்
கோபியாரா தனைசெய்தால் கூடுமெல்லாம்
பாக்கியங்கள்

அவர்பெருமை ஆறறிவார் அவர்சக்தி யாருக்குண்டு
புவலயத்தில் அவருடைய குணங்கள்சொல்ல
வாக்குமுண்டோ?

சலிப்பலுப்பு அவருக்குமுண்டோ சாதுக்களும்
அவர்போலுண்டோ?
உலகிலந்த உத்தமரை உண்மையாக உபாசிப்போர்

அருளடைவார் பொருளடைவார் ஆனந்தந்
தனையடைவார்
இருளொதுங்கும் கருமபந்த இருவினைபோம்
கதியடைவார்

1850. சகலசித்தி களைப்பெறுவார் சாந்திதனை
மிகவடைவார்
சகஜலையைச் சுட்டிக்காண்பார் கருதிமுடிவா
கவமிருப்பார்

அனுமாரை ஆதரித்து அடையும்பலன் மிகவுமுண்டு
நினைத்துரைக்கில் பெருகுமம்மா நேரான பக்தர்களை

அன்னைபிதா போலக்காப்பார் ஆபத்து
களையொழிப்பார்
தன்னைநம்பும் பேர்களின்மெல் தயவுவைப்பார்
பயமொழிப்பார்

இஷ்டப்படி பலனிப்பார் என்றுங்காப்பார் குறைவின்றி
அஷ்டபாக்கியங் களைக்கொடுப்பார் அனுமாரம்மா
பக்தருக்கு

ஊரிலுள்ள துரிதங்களை ஒழிப்பாரம்மா வழுவின்றிக்
காரியங்கை கூடுமம்மா கவியனுமார் அனுக்கிரகத்தால்

1855. அவர் நினைவு சொப்பனத்தும் ஆருமறிந்
திடப்போமோ?
சவரணையாய்க் காக்கவந்த சத்பொருளை
எல்லாவாழ்க

அமிருதஞ்சீ விவரமும் ஆரோக்யம்
அடைந்தெல்லோரும்
இனமப்பொழுதி லெழுந்துவந்து எல்லோரும்
அடுத்தடுத்து

அனுமாரை வந்தனைத்து ஆலிங்கனஞ்
செய்துகொண்டு
மனமகிழ்ந்தார் மாதவரோ? மாருதியை அருகழைத்துப்

பிரேமையுடன் சொல்லுகிறார் பெருமையுள்ள
அனுமாரே
சிரேயஸ்ஸெண்ணி எனக்காகச் சிரமப்படுமென்
கண்மணியே

அன்றுபெற்றோர் அன்னைபிதா அவரிலும்நீ
ஏரிதையா
இன்றெங்கட்கு உயிர்தந்தீர் இந்தநன்றி மறவோமையா

1860. எவரிருந்தும் உம்மைப்போல எனக்கானோ ராருமிலை
கவலையெல்லாம் ஒழித்தென்னைக் கனப்படுத்தச்
செய்யுமும்ம

முயற்சிதனை என்னசொல்வேன் மூவுலகும்
பிழைக்குமும்மால்
பயமொழிந்து என்றுமும்மைப் பக்திசெய்யும்
நித்தியமாய்

உம்மைவந்து சேர்ந்தன்மேல் உம்முடைய
உழைப்புகளைச்
செம்மையாய்நா னறிந்தேனையா செய்யவுண்டோ
பதிலுமக்கு

எங்குமிலை உமதுசக்தி என்னசொல்வேன்
அபாரமையா
மங்களங்கள் பெருகுமும்மால் மகிமையுள்ள மாருதியே

சித்திபெறும் காயத்தோடு சிரஞ்சீவி யாயிருந்து
உத்தமரே உமைப்புகழ உபகாரி யாயிருப்பீர்

1865. உம்மைவந்து ஆராதிப்போர் ஒருகுறையுந்
தானடையார்
இம்மையிலும் மறுமையிலும் இன்பமேதா
னடைந்திடுவார்

இந்தவாக்கு நிச்சயமாம் என்றுரைத்துப் புகழுகையில்
வந்தனனான் ஏருபதியை வணங்கிநின்றான்
கண்டுராமன்

மோகங்கொண்டு வாரிக்கட்டி முத்தமிட்டுத் தம்பியேநீ.
மேகநாதன் அஸ்திரத்தால் மெய்மறந்தே
இருந்தனையோ?

என்னிமித்தம் உனக்குவரும் எத்தனையோ
கஷ்டமெல்லாம்
இன்னமுந்தா னொழிந்ததில்லை என்னசெய்வேன்
சகிக்கிலையே

அன்னைபிதாக் களைமறந்து ஆசையெந்தன்
மீதுவைத்துச்
சொன்னபடி உழைக்கும்உன்போல் சோதரரும்
உலகிலுண்டோ

1870. ஆவிபிட்சை அனுமார்தந்தார் அவரைப்போல்
அன்புடையோர்
எவருமிலை நமக்கிவரால் எல்லாங்கை கூடுமென்று

சொல்லிமிக மகிழ்ந்திருந்தார் சுக்கிரீவன் ஓடிவந்து
எல்லையில்லாக் கோபத்தோடு எண்ணச்சொல்வான்
அனுமானிடம்

சீக்கிரமாய் வானரரைச் சித்தஞ்செய்வாய்
இலங்கைதனில்
ஆக்கிரகமாய் எல்லோரும்போய் அந்தநகர்
முழுவதையும்

எரித்துவிடச் செய்வதோடு இராட்சதரை
ஒழித்துவிட்டே
அரைநொடியி லழைப்பச்சொன்னான் அவ்விதமா
யனுமார்செய்தார்

சுக்கிரீவன் ஆக்ஞையென்று சுவாமியதை
அனுமதித்தார்
இக்கருத்தை ஆலோசித்தால் எல்லோர்க்கும்
பொருள்விளங்கும்

1875. சஞ்சீவிக் கொடுமுடியைச் சடுதியாக இருந்துவிடம்
ஆஞ்சநேயர் சேர்த்தாரம்மா அப்பொழுது அஸ்தமித்து

ஒருஜாம நேரமுண்டு உதிக்கமூன்று ஜாமமுண்டு
துரிதமாக வானரர்கள் தோரணையாய்க்
கூடிக்கொண்டு

கொள்ளிக்கட்டை கையிற்கொண்டு கோட்டைவாசல்
கதவுகளைத்
தள்ளியுள்ளே வந்துவிட்டார் தானவர்கள் கண்டஞ்சி

ஓட்டமிட்டார் வானரர்கள் ஊரெங்கும்
சூழ்ந்துகொண்டு
சேட்டையுங்கொண் டாட்டத்தோடு தீயிட்டார்
வீடுதோறும்

படுத்துறித்திரை செய்திருந்த பால்வித்தாள் யாவருமே
துடிதுடித்தே எழும்தோடினார் தன்பங்களைச்
சகியாமலே

1880. சூழந்தைகளை எடுத்துக்கொண்டு கூக்குரல்கள்
மிகவுமிட்டு
அழுதுகொண்டு பெண்களெல்லாம் அரைத்துணிகள்
தனைவிட்டுத்

தெருவெங்கும் ஓடிவந்தார் தீக்கொடுமை சகியாமல்
வருமவர்கள் கோலங்கண்டு வானரர்கள் பரிகசிப்பார்

வெந்தவஸ்திரத் தோடநேகர் வெளியில்வந்து
கதறினார்கள்
இந்தக்கஷ்டம் வருவதற்கு இராவணனே காரணமென்

றவனைமிக நொந்துகொள்வார் ஆத்திரத்தோ
டுஞ்சபிப்பார்
கவலைகொண்டு மயங்கிடுவார் கஷ்டநஷ்ட
மென்றழுவார்

அரக்கர்சிலர் வானரரை அதட்டிவந்து
மிரட்டுவார்கள்
தெருக்களிலே வரவொட்டாமல் தீயைக்கொண்டே
வானரர்கள்

1885. முகங்களெல்வாஞ் சுட்டெரிப்பார் மோரையெல்லாம்
பங்குஞ்செய்வார்
புகையும்வீட்டில் துரத்திடுவார் புடைத்துயிரைப்
போக்கிடுவார்

இந்தவிதம் எத்தனையோ இம்சைசெய்து அதன்பிறகு
வந்தரக்கர் அரண்மனைக்கும் வைத்தார்கள்
அக்கினியைச்

சேனையுள்ள விடங்கள்சுட்டார் சிங்கம்யாளி
குதிரைகளும்
ஆனைபுலி முதலாக அடைத்திருந்த விடங்கள்சுட்டார்

அவைகளெல்வாம் சுட்டவிழ்ந்து அலறிக்கொண்டு
விழுந்தோடி
எவருங்கண்டு நடுங்கும்படி இலங்கையெங்குந்
திரிந்ததம்மா

அப்பொழுது அரக்கரெல்லாம் அலறிமிகக்
கூச்சலிட்டார்
தப்பமாட்டோம் உயிருடனே தலையெழுத்து
முடிந்ததென்று

1890. இந்தச்சத்தம் கேட்டுராமன் எதிர்த்தரக்கர்
யுத்தஞ்செய்ய
வந்திடுவா ரென்றெண்ணி வகையுடனே
கோதண்டத்தை

எடுத்துக்கையில் பிடித்துக்கொண்டு வெய்தார்பாணங்
களைமிகவும்
தொடுத்தகணை லங்கைவந்து துரோகிகளாம்
அரக்கர்களை

வதைக்கக்கண்டு தசகண்டன் வாய்வறண்டு
மிகமிரண்டு
உதவிசெய்வோ ரினியாரென்று உள்மனதி
லாலோசித்து

கும்பினிகும்பன், யூபாட்சன், சோணிதாட்சன்,
கும்பனன், பிர்ஜங்கனன் இவர்களுடைய வதமும்
மகாரட்சன் வதமும் அப்பால் இந்திரஜித்தன்
மறுபடிவந்து மறைந்து யுத்தஞ்செய்து,
இளைத்தோடுவதும் மாயாசீதையை அவன்
வெட்டுவதும் அந்தச்சேதி அனுமான் வந்து
சொல்ல ஸ்ரீராமன் முதலானோர் புலம்புவதும்
இந்திரஜித்தன் நிகும்பல யாகம் செய்வதும்

கும்பகர்ணன் மக்களான கும்பினிகும் பன்முதலாய்
அம்புவியில் யூபாட்சன் அரக்கன்சோணி
தாட்சனுமாய்ச்

கும்பனனும் பிரஜங்கனனும் கணக்கில்லாப் பலமுடைய
வம்புச்சண்டை செய்வோர்களை வரவழைத்து
ஆக்ஞைசெய்தான்

1895. சேனைகளை அழைத்துக்கொண்டு சீக்கிரமாய்ப்
போய்நீங்கள்
வானரரை மனிதரோடு வதைபுரிந்து வந்திடுவீர்

சத்ருதனை மீறியுத்தம் சமத்காச் செய்வீரென்றான்
பக்தியொடு கேட்டவர்கள் பரிவாரங்கள் சூழ்ந்துவர

வானரரை எதிர்த்துவந்து வல்லமையை
மிகவுங்காட்டிச்
சேனைகளை எதிர்க்கவிட்டுச் செய்தார்கள் யுத்தமம்மா

இருபடைகள் கைகலந்து இடித்திடுவார் குடித்திடுவார்
அரக்கர்கையில் பிடித்திருக்கும் ஆயுதத்தை
வானரர்கள்

பிடுங்கியந்த ஆயுதத்தால் பிடரிமுறிந் திடவடிப்பார்
அடிஉபாறுக்கா மலரக்கர் அங்குயிங்கும் ஓடுவார்கள்

1900. அரக்கனான கும்பனன்வந் தங்கதனைக் கதையினாலே
பறக்கும்படிமார்புத்லில் பலமாக அடித்தானம்மா

துள்ளிமிக மூர்ச்சையாகித் துணிந்தப்பால்
எழுந்தங்கதன்
கள்ளனந்தக் கும்பனன்மேல் கையிலொரு
மலையைக்கொண்டு

அடித்திடவே யரக்கன்மாண்டான் அதன்பிறகு
சோணிதாட்சன்
கடுகிவந்தே அங்கதனைக் கையிலுள்ள கத்திகொண்டு

வெட்டிவிட்டான் அரக்கனுயிர் விடாமல்தானே
மறுபடியும்
ஒட்டிவந்தான் அவனுடனே உதவியாக யூபாட்சனும்

1905. பிர்ஜங்கனுங் கூடிவந்தார் பெருமையுள்ள
தவிவிதன்மைந்தன்
கிரமந்தப்பும் அரக்கரின்மேல் கிரமமாகக்
கையெடுத்தார்

அங்கதனுந் சேர்ந்துகொண்டு அமர்புரிந்தார்
அகோரமாக
அங்கதனோர் கத்திகொண்டு அடிக்கப்பிரஜங்
கன்மடிந்தான்

தவிவிதன்கையால் சோணிதாட்சன் தீங்கடைந்து
மடிந்தானம்மா
த்வரிதமாக மைந்தன்கையால் துரோகியூபாட்
சன்மடிந்தான்

அதன்பிறகு கும்பன்வந்து அந்தமூன்று வானரரை
மதத்தோடே எதிர்த்துநின்று மட்டில்லாப்
பாணங்களை

விட்டுமிகக் கஷ்டந்தந்தான் தட்டுத்தடு மாறும்படி
நட்டம்வரும் போலக்கண்டு நாதன்ஸ்ரீ ராமனப்போ

1910. ஜாம்புநந்தர் முதலாகச் சக்தியுள்ள சூரர்களைத்
தேம்பிமனம் நோகாமல் திடப்படவே மூவருக்கும்

உதவியாக அனுப்பித்தந்தார் உள்ளந்துணிந்
தவர்கள்வந்தார்
மதிமொழிய அவர்கள்மீதும் மாட்டிவிட்டான்
அரக்கவம்பு

சுக்கிரீவன் அதைக்கண்டு சருக்கெனவே ஓடிவரத்
தக்கபாணம் கணையெய்து தடுத்தானதை மதிக்காமலே

அரக்கன்முன்னே வந்துநிற்க அவனைக்கண்டு
அரக்கன்மிகப்
பரபரப்புக் கொண்டுதானே பாணங்களை
மிகவும்விட்டான்

அதற்குச்சற்றும் மயங்காமல் அவனுடைய தேர்குதிரை
அதமாக்கிச் சுக்கிரீவன் அவன்வில்லை
ஒடித்தெறிந்தான்

1915. அரக்கனப்பால் சுக்கிரீவனை அசங்காமல்
கட்டிக்கொண்டான்
பெருமலைபோ லுள்ளவனாம் பேயரக்கன்
தனைச்சுக்கிரீவன்

தானுங்கட்டித் தரையில்வீழ்ந்து தாறுமாறாய்ப்
புரண்டுருண்டு
மானயீனம் பாராமல் மல்லயுத்தஞ் செய்தாரம்மா

அந்தயுத்தந் தனைக்கண்டோர் அஞ்சியோடி
மறைந்தாரம்மா
விந்தையந்த யுத்தமம்மா வெருநேரஞ் செய்தாரம்மா

கும்பன்சக்தி பின்னடையக் கோபங்கொண்டு
சுக்கிரீவன்
வம்புசெய்ய வந்தவனாம் கும்பன்றனைப்
பிடித்துக்சுட்டி

வீசிக்கடல் தனிலெறிந்தான் வீறிட்டுக் கதறியவன்
நாசமது வந்ததென்று நடுக்கடலில் போய்விழுந்தான்

1920. கடலடியைக் கண்டரக்கன் கஷ்டமிகப் பட்டுவந்து
அடுத்துநிற்கச் சுக்கிரீவன் அவன்தலையில்
முஷ்டிகொண்டு

கொடுத்தானிடி துடித்தரக்கன் படுத்துவிட்டான்
ஆவிவிட்டு
கடுத்தமுகங் கொண்டுவந்தான் காதகனாம்
நிகும்பனம்மா

வானரர்மேல் சரமாறி வருவித்துச் சுக்கிரீவனைத்
தானெதிர்த்து வந்தானம்மா தடுத்தவனை
எதிர்த்தனுமான்

நிற்கவொரு பரிகங்கொண்டு நிகும்பனந்த அனுமாரை
பற்சுள்தம்மைக் கடித்துக்கொண்டு பட்டரென்று
அடித்தான்மார்பில்

பரிகமது சுக்குச்சுக்காய்ப் பறந்துகீழே விழுந்ததம்மா
அரைநிமிஷம் அசந்தனுமான் அகந்துணிந்தே
அரக்கன்மார்பில்

1925. ஓங்கிக்கையால் குத்தொன்று உறுதியாகக்
கொடுத்திடவும்
ஏங்கிவீங்கி இம்சைப்பட்டு ஈரக்குலை மிகஅசந்து

அதன்பிறகு ஆலோசித்து ஆக்கிரகத்தை
மிகவுங்கொண்டு
மதியிலெண்ணி எழுந்துவந்து மாருதியைக்
கைகளினால்

எடுத்துக்கொண்டு ஓடிப்போனான் எண்ணிமுஷ்டி
தொண்டனுமான்
கொடுத்தானிடி மண்டையிலே கொடியவனாம்
அரக்கனப்பால்

மாருதியை விட்டெறிந்து மண்ணில்வீழ்ந்து
புரண்டானவன்
சீறியவன் மீதிலேறிச் செம்மையாக மிதித்தவன்கால்

இரண்டுகையைப் பிடித்துச்சுற்றி எண்ணிக்கீழே
அறைந்திடவும்
நுரைதள்ளி மடிந்தானம்மா நொடிக்குள்ளே
திரும்பனம்மா

1930. இந்தப்படி போனவர்கள் எல்லோரும் மாண்டசேதி
அந்தவுடன் தசகண்டன் அறிந்துமிக வருந்தியப்பால்

என்னசெய்வேன் போனவர்கள் இவ்விதமாய்
மடிகின்றாரே
என்னெழுத்து மிவ்விதமாய் இருக்குமென்று
நானறியேன்

நானினைத்து நடந்ததொன்று நாதன்செயல்
முடிவதொன்று
ஈனஸ்திதி அடைந்துவிட்டோம் இனிநமக்கு ஆருதவி?

ஆவரென்று மிகவழுதான் அவனெதிரில் கரன்மகனாம்
ஏவும்வேலை இணங்கிச்செய்யும் எதற்குமஞ்சாத்
தீரனுமாம்

மகராட்சன் தனைப்பார்த்து மகனேநீ மனிதர்களை
வகையுடனே வென்றிடுவாய் வல்லமையை
மிகக்காட்டுவாய்

1935. ஆகையினால் அமர்புரிந்து அனுகூலந் தனையடைந்து
வேகமாக வருவாயென்றான் வீரனான மகராட்சன்

மட்டில்லா மகிழ்ச்சியுடன் மமதைமிகக்
கொண்டவன்றான்
அட்டியின்றி இங்கிருந்து அநேகச்சேனை சூழ்ந்துவர

ரதத்திலேறி நகர்கடந்து ரணகளத்தை வந்தடைந்து
மதத்தோடு எதிர்த்துநின்று மாதவனார் முன்னின்று

எனதுதந்தை கருனென்போரை எமபுரிக்கு அனுப்பியநீ
மனந்துணிந்தே என்னுடனும் மயங்காமல்
யுத்தஞ்செய்வாய்

உன்னுடனே அமர்புரிய உன்னெனக்கு ஆசைமிக
என்னெதிரில் வந்துவிட்டாய் எமலோகம்
உனைச்சேர்ப்பேன்

1940. சிறுமனிதப் பூச்சியுன்னை ஜெயிக்காவிடில்
ஜகஞ்சிரிக்கும்
அறிந்துகொள்வாய் ஒருநொடியில் அதஞ்செய்வே
னுன்னையென்றான்

அதைக்கேட்டு ஸ்ரீராமன் அமரிக்கையோ
டவனைப்பார்த்து
மதியிழந்த மூடனேநீ மமதைகொள்ள வேண்டாமடா

வாய்ப்பேச்சு யுத்தமாமோ வல்லமைக்கு அழகாமோ?
நாய்போல ஊளையிட்டால் நன்மையுண்டோ
வில்லெடுத்து

உனதுசக்தி தனைக்காட்ட உறுதிகொள்வா
யென்றுரைக்க
மனதில்மிகக் கோபங்கொண்டு மாதவன்மேல்
பாணங்களை

வருவித்தான் அரக்கனம்மா வதில்பாணங் களைவிட்டு
அறுத்தெறிந்தான் ஸ்ரீராமன் அந்தப்படி இருவருமாய்

1945. யுத்தஞ்செய்து வருகையிலே யோக்யமல்ல
இவனையினி
மொத்தியதஞ் செய்வதுவே முடிவான காரியமென்று

நினைத்துச்சில பாணங்களால் நீசன்ரதம் சாரதியும்
சினங்கொண்டு குதிரையையும் சின்னாபின்ன
மாய்மடித்தான்

பிடித்தவில்லும் ஒடித்தெறிந்தான் பேயரக்கன்
ஓடிவந்து
அடித்துமல்லுக் கட்டவந்தான் ஆக்னேயா
ஸ்திரங்கொண்டு

அவன்கழுத்தை அறுத்தெறிந்தான் ஐயன்சக்தி
தனைக்கண்டு
வேறுமிக மகிழ்ந்தார்கள் இந்திராதி தேவரெல்லாம்

அகங்குளிர்ந்து ராமன்மீது அன்புடனே புஷ்பமாரி
வகைவகையாய் மிகச்சொரிந்தார் வானரர்கள்
மிகக்குதித்தார்

1950. மகராட்சன் இராமன்கையால் மடிந்தானென்று
சிலவரக்கர்
அகம்வாடி உரைத்திடவே அரக்கர்மன்னன்
கடகடென்று

கடித்துப்பல்லை நெரித்துக்கொண்டு கண்ணில்பொறி
சிதறக்கோபம்
அடைந்தவனாய் மதியிழந்து அவன்மகனாம்
இந்திரஜித்தைப்

பார்த்துரைப்பான் மகனேகேளாய் பாரில்நமக்
கெசஸமுண்டோ?
வார்த்தைசொல்ல வாயுமுண்டோ வல்லபராம
மனிதர்களை

இனியும்வெல்லா திருக்கின்றாயே ஏனுனக்குப்
பொறுப்பில்லை
கனங்குறைந்து மனம்வருந்தக் காட்டியென்னைக்
கொடுத்துவிட்டாய்

உன்னைநம்பி உளங்களித்தேன் உன்பலத்தால்
பெருமைபெற்றேன்
என்னையனா தரணையாக ஏன்செய்தா யிப்பொழுது

1955. சித்தந்துணிந் தினியாகிலும் யுத்தஞ்செய்து எதிரிகளை
அத்தனைபோ களுமடிய அசுந்துணிவாய்
மகனேயென்று

மனக்குறையோ டழுதுரைத்தான் மகன்கேட்டுத்
தந்தைதனை
வணங்கிமிக உபசரித்து வார்த்தைசொல்வான்
இவ்வாறு

அஞ்சவேண்டாம் எனதையா அரைநொடியில்
மனிதர்களை
வஞ்சகத்தால் வென்றிடவேன் வல்லமையை
நான்காட்டுவேன்

எதிரிகளைக் கதறடிப்பேன் எத்தனையோ
முயற்சிசெய்வேன்
மதியுடனே யுத்தஞ்செய்வேன் மனிதருக்கு நானஞ்சேன்

மர்மமெல்லாம் நானறியேன் மாயங்கள்
மிகச்செய்வேன்
தர்மாதர்மம் பார்க்கமாட்டேன் தந்திரங்கள்
மிகச்செய்வேன்

1960. பகலைக்கண்டு புலிபயந்தால் பரிகசிக்கும்
உலகமெங்கும்
எசலடைந்த பெருமையும்போம் இழிவடைவோம்
ஆகையினால்

வருந்தவேண்டாம் தைரியங்கொள்வீர் வல்லபனா
னிருக்கையிலே
வருவதுண்டோ குறையுமக்கு வாழ்ந்திடுவீர் சுகமாகவே

கண்ணில்தாரை பெருகவிட்டால் கண்டவர்கள்
நகைத்திடுவார்
எண்ணியெண்ணிப் புலம்பவேண்டாம் துயரங்குறை
வராதுமக்குக்

கண்கலங்கும் உம்மைப்பார்த்துக் கருத்துமிக
வருந்துதையா
மண்ணுலகில் மனிதருக்கு மயங்குவதால்
மகிமைபோமோ

இந்திராதி களைவென்ற என்சக்தி அறியீரோ?
வந்ததெல்லாம் வரட்டுமையா வல்லமைவீ
ணாகாதையா

1965. விட்டுவிடும் விசனன்றனை வென்றிடுவே
னென்றுரைத்தான்
கட்டமெல்லாம் ஒழிப்பானென்று கருத்தில்மிக
உறுதிகொண்டு

மகனையுத்தஞ் செய்வதற்கு மனந்துணிந்து
அனுப்பித்தந்தான்
தருதியுள்ள சேனையோடு தட்சணமே இந்திரஜித்தன்

அம்புரிய வரும்வழியில் ஆகமத்தின் விதிப்படியே
நமஸ்கரித்து ஓமாதிகள் நன்றாகச் செய்துகொண்டு

ஜெயம்பெறுவோ மென்றுநம்பிச் சீக்கிரமாய்
ரதத்தோடு
பயந்தருண மேலிட்டுப் பறந்துவிண்ணில்
மறைந்துகொண்டு

பாணங்களை மிகச்சொரிந்தான் பாவியவன்
யாருக்குமே
காணக்கண்ணில் விளங்காமல் சுதறும்படி
செய்கையிலே

1970.. ரகுபதிசுண் டதிசயித்து ராட்சதனாம் இந்திரஜித்தன்
வகைமோசம் செய்துநம்மை வஞ்சகத்தால் வெல்லுதற்கு

வந்துவிட்டா னென்றறிந்து வதில்பாணங்
களைவிட்டுத்
தந்திரமாய் யுத்தஞ்செய்தார் தம்பியொடு
சேர்ந்துகொண்டு

இருபுறமும் பாணங்கள் எதிர்த்தெதிர்த்து
வியர்த்தமாகும்
கருதிச்சில பாணங்களால் சுாயப்பட இருவரையும்

அரக்கன்செய்தான் அவனொளிந்த அந்தத்திக்கை
யருள்கொண்டு
பரந்தாமன் பார்த்தறிந்து பாதகனாம் இந்திரஜித்தைப்

பற்றும்படி தம்பியொடு பாணங்களை மிகச்சொரிந்து
சற்றுமவன் மீறாமல் சாமர்த்தியமாய் யுத்தஞ்செய்ய

1975. அரக்கன்தேகந் தனைத்துளைத்தார் அதன்பிறகு
ஆலோசித்துக்
கருதிராமன் அஸ்திரத்தைக் கையிற்கொண்டான்
பார்த்தரக்கன்

உயிரொழியும் இங்கிருந்தால் ஓடுவதே நன்மையென்று
பயந்தரக்கன் இலங்கைநகர் பாததனைப் பற்றினனே

என்னசெய்வோ மென்றவன்றான் எண்ணிச்சற்று
ஆலோசித்து
அன்னைசீதை போலொருபெண் அப்பொழுதே
மாய்கையினால்

சிருஷ்டிசெய்து ரதத்தில்வைத்து சேனையெல்லாம்
சூழ்ந்துவரக்
கருதிமேற்குத் திசையில்வந்தான் கண்டவனை
அனுமாரப்போ

ஓடிவந்து பார்க்கையிலே உருகிமனம் நொந்தவளாம்
வாடிக்கண்ணீர் சொறிந்துகொண்டு வைதேகி
போலவேதான்

1980. இருக்கும்பெண்ணைப் பார்த்தனுமான் என்னசெய்வா
னோவரக்கன்
தருமந்தயை இல்லாமல் தரணியிலே நீதிகெட்டுச்

செய்யுமிந்தப் பாதகனும் சீரழிந்து மடியானோ?
ஐயன்பத்னி சீதைக்கென்ன ஆபத்து வருமோவென்று

அனுமார்மிகப் பயந்திருந்தார் அவரைப்பார்த்து
அரக்கன்சொல்வான்
உனதுமுன்னே ஜானகியை உயிரொழிய
வெட்டுவேன்பார்

பட்டபாடு வியர்த்தமாகும் பரிதவிப்பீரினிநீங்கள்
இட்டம்போகக் கட்டந்தர இவளையிப்போ
கொல்வேனென்று

கூந்தலதனைக் கையில்கொண்டான் கூர்மையுள்ள
வாளுங்கொண்டான்
ஆந்தரியம் அறியாத அணுமார்முன் மாயாசீதை

1985. கூவென்று கதறிக்கொண்டு கொடுமையென்னைச்
செய்கின்றானே
பாவியிவ னென்றுசொல்லிப் பரந்தாமன்
பேரைச்சொல்லிக்

கதறியழும் வேளையிலே காதகனைப் பார்த்தனுமான்
மதிமிழந்த மாபாவி மாயாதை கெட்டவேலை

செய்யவேண்டாம் சீரழிவாய் ஸ்ரீராமர் உன்னைவிடார்
வையகத்தில் பழிநிலைக்கும் வைதேகியாம்
பெண்ணைக்கொன்றால்

குரோதமதால் ஸ்திரீயைநீ கொலைபுரிதல்
பெருமையன்று
திராணியுள்ளோன் இவ்வாறு தரணிதனில்
செய்யமாட்டான்

துணியாதே என்றுரைத்துத் துள்ளிநிற்கும்
அனுமார்முன்
வணங்காமுடி இந்திரஜித்தன் வாளைக்கொண்டு
மாய்கையாளை

1990. அந்தப்பெண்ணை உபவிதமாய் அகந்துணிந்து
வெட்டிவிட்டான்
சிந்தைமிக நொந்தனுமான் செய்வதினி என்னவென்று

ஆலோசிக்கும் வேளையிலே அவரைப்பார்த்து
அரக்கன்சொல்வான்
காலங்கண்டு காரியஞ்செய்தேன் கண்ணில்தாரை
விடவேநீங்கள்

கஷ்டமெல்லாம் நஷ்டமாகிக் கதறியழச்
செய்துவிட்டேன்
இஷ்டமெல்லாம் ஒழிந்ததடா என்னசெய்வி
ரினிநீங்கள்

இந்திரஜித்தன் இந்தவிதம் இறுமாந்து பேசுகையில்
முந்திநிற்கும் அவன்ரதத்தை முறித்தெறியக்
கோபங்கொண்டு

பெரியபாறை ஒன்றெடுத்துக் கருதியதை
விட்டெறிந்தான்
தூரிதமாக அரக்கன்ரதம் தூரமாகக்
கொண்டுபோனான்

1995. அரக்கன்படை களிலேநேர் அந்தப்பாறை வந்துவிழ
அரைநொடியி லாவிவிட்டு அதமானார் அதன்பிறகு

அரக்கன்சொல்வான் ராமனையும் அனுஜனையும்
வானரராம்
திரியுமெல்லாப் படைகளையும் திரணமாக
மதித்துநானே

அதஞ்செய்வேன் அயோத்திபோவேன் அங்குள்ள
யாவரையும்
வதைபுரிவேன் நிச்சயமாய் வந்திடுவேன்
லங்கைக்கப்பால்

இனியெதற்கும் அஞ்சேனடா என்றுரைத்தான்
இந்திரஜித்தன்
மனங்கொதிக்க இவனுடனே மல்லுக்கட்டி
யுத்தஞ்செய்தல்

உபயோக மற்றதென்று உள்ளமதில் நிச்சயித்து
விபரீதம் விளைந்ததென்று வெறுப்படைந்து
ராமனிடம்

2000. வானரரை அழைத்துக்கொண்டு வந்துசேர்ந்தான்
அனுமானம்மா
ஈனனிந்திர ஜித்தனப்பால் எத்தனையோ களிப்புடனே

நிகும்பலையில் யாகஞ்செய்ய நினைத்துச்சென்று
சீருடனே
மகிமையுள்ள மகமதனை மத்தியிலோர்
விக்கினமின்றிச்

செய்துசித்தி பெறத்தொடங்கிச் செய்தானே
யத்தனங்கள்
கைபலத்த அரக்கர்களைக் காவல்வைத்து ரகசியமாய்

மகம்நடந்து வருகுதம்மா மாதவனைக் கண்டனுமான்
அகம்நொந்து முகம்வாடி அன்னைதனை
இந்திரஜித்தன்

கொன்றுவிட்டா னென்றுரைத்தார் கோவென்றே
அலறிராமன்
இன்றிந்த வார்த்தைகேட்க எழுத்தெனக்கு
இருந்ததன்றோ?

2005. எண்ணமெல்லாம் வீணாயிற்று ஏங்கியேங்கி
அழலாயிற்று
பெண்ணரசாம் ஜானகியைப் பிரிந்திடவே
ஆயிற்றென்று

விசனப்பட்டு மூர்ச்சைபோனார் வெகுபோர்கள்
வானரரும்
விசனப்பட்டார் லட்சுமணனும் வெகுசோகங்
கொண்டானம்மா

அண்ணனைவந் தடுத்தணைத்து அரவிதம்
உபசரித்து
கண்ணீரைத் துடைத்தானம்மா கண்திறந்தான்
ராமனம்மா

அவரைப்பார்த்த அனுஜன்சொல்வான் ஆவதினி
ஏதுமிலை
குவலயத்தில் தருமந்தனைக் கொள்வோர்க்குச்
சுகமில்லை

தருமமிலை அதர்மமிலை தயவுமில்லை பயமில்லை
வருங்குறைவுக் காதாரம் வல்லமையை அடக்குவதே

2010. பலமுள்ள போக்குப் பலகுறைகள் அணுகவுண்டோ?
குலநடையைக் கொண்டுவீணாய்க் கூடுஞ்சுகம்
உபேட்சித்ததால்

கஷ்டமது வந்ததிப்போ கண்கலங்க லாயிற்றிப்போ
இஷ்டப்படி நடப்போமானால் எல்லாங்கை
கூடுமண்ணா

ஒருவரைநாம் குறையுரைத்தல் ஒருக்கா லு
மாகாதண்ணா
தருமமென்று நம்புவோர்க்குத் தரணியிலே
கஷ்டமுண்டாம்

தருமாதர்மம் நிஜமாயின் தடித்துக்கண்ணில்
விளங்கலாமே
மருமமறி யாமலந்தத் தருமாதர்மங் களைநம்பியே

காலமதைப் போக்குவதில் கஷ்டமன்றச் சுகம்வருமோ?
சீலமது காலம்வரை சிந்தித்து நடக்கும்வரை

2015. குறையணுவும் அணுகாது கொஞ்சமுமே
அஞ்சவேண்டாம்
சிறுமைவந்து தழுவுதற்குச் செய்யுங்காரியம்
காரணமே

எதிர்காணா திருக்குமந்த இரண்டாடும்
தருமாதர்மம்
விதிவிலக்கு கட்கடங்கி விளங்கபலம் தருமென்பது

நிஜமாயின் தருமந்தனை நீர்நம்பி இருப்பதினால்
இசைந்துமக்குத் தந்தபலன் இந்தக்கஷ்டம்
தானோசொல்வீர்

அரக்கர்செய்யும் அதர்மத்திற்கு அவர்பெருமை
அடையலாமோ?
உரியபலன் இல்லாமல் திருந்துபலன் தருவதென்ன?

தருமத்தைக்கொண் டதர்மபலன் தாமடைந்தீர்
அதர்மங்கொண்டு
தருமபந் தனையரக்கர் தரணியிலே
அடைந்தாரிப்போ

2020. இருப்பதாக வைத்துக்கொள்வோம் எண்ணில்
பார்க்கில் தருமாதருமம்
அருவருப்புக் கிடமின்றி அனுகூல மில்லையண்ணா

வேதசாஸ்திர விதிகள்விட்டு விலகிப்பலன்
தருமவைகள்
ஆதரவாய் நம்புவதில் அனர்த்தங்கள்
விளையுமண்ணா

குணங்கள்கெட்ட தருமாதருமம் குற்றமுள்ள
தாகையினால்
துணையாமோ உலகிலவை தூவணைக்கே
ஏதுவன்றோ?

இதுவுமன்றி இவ்வுலகேளீர் இந்திரண்டும்
இப்போது
மதிமயக்கும் கதியொழிக்கும் மகத்தான
கவ்டந்தரும்

அர்த்தமன்றித் தருமத்திற்கு ஆதார
முண்டோசொல்வீர்
அர்த்தமிலா விடில்வியர்த்தமே அனுசரிக்கும்
தருமமெல்லாம்

2025. போகம்விட்டுப் பாசயம்விட்டுப் பூமியிலே
தருமங்கொண்டு
சோகப்பட வானீரல்லால் சொல்லவுண்டோ
சுகமுமக்கு

காலோசிதங் கண்டுசெய்தால் சுனப்படுவோம்
சுகப்படுவோம்
ஆலோசித்துப் பாருமண்ணா அதர்மந்தரும்
நன்மையினை

அர்த்தமில்லா திருப்பவர்கள் அதர்மந்தனி
லிறங்காவிடில்
வருத்தப்பட நேருமல்லால் வருவதில்லை
அணுவும்நன்மை

தருமங்கொண்டு நடப்போரிடம் தருமந்தனைப்
பாராட்டலாம்
தருமம்விட்டு அதருமமாம் தடத்தில்செல்லும்
போரிடத்து

தருமமெண்ணி நடப்பவர்கள் தத்தளிக்க
நேருமல்லால்
பெருவதுண்டோ பெருமைதனைப் பேசிலிது
பெருகுமன்றோ?

போதுமினி தருமம்வேண்டாம் பொழங்குவோம்நாம்
கைபலத்தை
மாதரசாம் ஜானகியை மாபாவி கொன்றதற்காய்

அரக்கர்குலம் யாவையுமே அதஞ்செய்யத்
துணிந்துவிட்டேன்
இருக்குமும்ம பலத்தைச்சற்று ஏனறிய
வில்லையண்ணா

கருணையெண்ணிப் பார்க்கவேண்டாம் காதகரை
ஒழித்திடுவோம்
அரைநொடியும் அட்டிவேண்டாம் அஸ்திரங்கை
கொள்ளுமென்றான்

தம்பிசொன்ன வார்த்தைகளைத் தயாபரன்ஸ்ரீ
ராமன்கேட்டுச்
சம்பவித்த விசனமதின் சங்கடத்தைச் சகியாமல்

பேசுகிறான் தம்பியென்று பிராதாவைப்
பார்த்துரைப்பான்
மோசமடா பேசும்வார்த்தை முறைதப்பிப்
பேசுகிறாய்

தருமந்தனில் வெறுப்படையத் தம்பியினி
பேசவேண்டாம்
சுருமபலன் அனுபவிப்போம் கடவுளாக்ஞை
தப்பாதடா

வினைவசத்தை அனுசரித்த விசனசுகம் தழுவுமடா
மனவருத்தம் படுவதிலே வருவதில்லை பலனணுவும்

ஆசையினால் ஆக்கிரகத்தை அடியோடு
விட்டொழிப்பாய்
ரோசம்வரும் வேளையிலே பாசந்தப்ப மனந்துணியும்

உன்னுடைய துணிவறிந்தேன் உசிதமல்ல தம்பிகேளாய்
என்னுடைய மார்க்கப்படி இணங்குவாயென்
றேயுரைத்து

முகம்வாடி இருந்தானம்மா முறையாகச்
சைன்யங்களை
வகைவகையாய்ச் சீர்ப்படுத்தி வந்துசேர்ந்தார்
விபீஷணனார்

மாயாசீதை வதையைக் கேட்டுச் சீதையை
இழந்தோமென்று எல்லோரும் வருந்துகையில்
விபீஷணரும் வந்து கேட்டு எல்லோரும் நம்பும்படி
விசனத்தை நீக்கிச் சீதையைப் போய்ப் பார்த்து,
இந்திரஜித்தன் நிகும்பலையில் யாகஞ்செய்வதையும்
அறிந்து வந்து சொல்லி லட்சுமணன்
முதலியவர்களை யழைத்துப்போய் யாக பங்கஞ்
செய்வது

2040. எல்லோரும் விசனத்தோடு இருக்கக்கண்டு மனமருண்டு
உல்லாசமாயிருக்கும்ராமன் உருகிமனம் நோவதென்ன?

சகலருமே விசனத்தோடு சலிப்படைந்து
மிருப்பதென்ன?
வகையறிய விளங்கும்படி வாஸ்தவத்தைச்
சொல்லுமென்றான்

அனுஜனப்போ அவரைப்பார்த்து ஐயாநா
னென்னசொல்வேன்
மனந்துணிந்து இந்திரஜித்தன் மாருதிமுன் ஜானகியை

வெட்டிவிட்டா னந்தச்சேதி விவரப்பட மாருதியால்
எட்டினதால் விசனமதில் எல்லோரும் மூழ்கிவிட்டோம்

ஆவதினி இல்லையென்று அனுஜன்சொல்ல
விபீஷணனார்
பாவிசெய்யும் வஞ்சகத்தின் பரமார்த்தம் அறியாமலே

2045. எல்லோரும் விசனப்பட்டு ஏங்குகிறார் என்றெண்ணிச்
சொல்லுகிறார் சாமிமுன்னே சோகப்பட
வேண்டாமையா

தன்னுயிரைப் பலிகொடுப்பான் தசகண்டன்
ஜானகியாம்
அன்னைக்கஞ்சித் தீங்குவரில் அவன்சகியான்
இதுநிஜமே

கண்ணீர்சொரிவான் ஜானகியின்
கண்ணீரைக்கண்டால் தசகண்டன்
எண்ணங்கொண்டு மிகவுங்காப்பான் இம்சைசெய்யத்
துணியமாட்டான்

அப்பன்மனம் வருந்தமகன் அதிக்கிரமித்து
நடக்கமாட்டான்
செப்புமெந்தன் வாக்கைநம்பும் சீதைக்கேதும்
ஆனியில்லை

ஜானகியை இந்திரஜித்தன் சற்றுந்தான்
காணவுண்டோ?
தானன்றி யாரையுந்தான் தாயினிடம் ராவணன்றான்

2050. போகவிடான் அதுவுமன்றிப் பூமகளைக் கொல்லமனம்
ஆகுமோசற் றாகிலுமே அரக்கர்மன்னன் சீதைமீது

வைத்திருக்கும் அன்பறிவேன் வைதேகிமேல்
கையெடுக்கார்
பைத்தியத்தை மிருத்தனாவான் பாதகனாம்
இந்திரஜித்தன்

அயோத்திநகர் போவேனென்று அவனுரைத்த
வாக்கைநம்பி
அயோத்திக்கெல்லோர் போய்விடுவார் அலுப்புற்று
இருப்போமென்று

கலகந்தனை உண்டுசெய்து கண்கலங்கச் செய்துவிட்டு
நலங்கருதிக் காரியஞ்செய்வான் நானறிந்து
வருவேனுண்மை

அஞ்சவேண்டாம் அழுகவேண்டாம் அரைநொடியில்
வருவேனென்றும்
சஞ்சலத்தை ஒழிப்பேனென்றும் சகலருடன்
சொல்லிவிட்டு

2055. வண்டுருவ மெடுத்துக்கொண்டு வைதேகி
இருக்கும்வனம்
கண்டதிலே ஜானகியைக் கண்ணாலே
பார்த்துக்கொண்டு

இந்திரஜித்தன் நிகும்பலையில் இயற்றும்யாக
ரகசியமும்
தந்திரமா யறிந்துகொண்டு தட்சணமே பறந்துவந்து

இருக்கின்றான் தேவியையா ஏதுங்குறை இல்லாமல்
அரக்கனிந்திர ஜித்தனிப்போ ஆரம்பித்து
நிகும்பலையில்

யாகமதைச் செய்கின்றான் யாரும்வெல்லா
திருக்கும்படி
வேகமாகத் தம்பியோடும் வீரர்களாம் சேனையோடும்

போவேனான் அனுப்புமென்று பொறுப்புடனே
சொல்லக்கேட்டு
ஆவலோடு தம்பியையும் அனுமார்முதல் சூரரையும்

2060. சேனைகளோ டனைவரையும் ஸ்ரீராமன்
அனுப்பித்தந்தான்
மோனமுடன் இந்திரஜித்தன் முறையாக
நிகும்பலையில்

மகஞ்செய்யும் வேலையிலே மாகடல்போல்
சேனையோடு
அகந்துணிந்து அனுமன்வந்து அம்புகையில்
கொண்டுநின்றான்

காவலுள்ள அரக்கர்படை கடிந்துவந்து
எதிர்த்தாரம்மா
பாவிகளாம் அவர்கள்மீது பாணங்களை
மிகச்சொரிந்து

சிதறடித்தான் லட்சுமணன் கவித்தலைவர் களுமிகவே
உரைத்தடித்து மிரட்டினார்கள் ஓடிற்றம்மா
அரக்கர்படை

பறந்தோடிப் படைகள்போகப் பாதகனாம்
இந்திரஜித்தன்
குறித்துயாகஞ் செயுமிடத்துக் கூட்டமுடன்
அனுமார்வந்து

2065. நிகும்பலையில் மனஞ்செலுத்தி நேமமுடன்
இருப்பவனை
அகமழிய இகழ்ந்தனுமான் அலசுகிறார் அடபேயா

வீரனைப்போல் பேசிவெரு வீம்புடனே போனரண
சூரனவன் நீதானோ சூதுசெய்யச் சீதையைப்போல்

மாய்கையினால் ஒருபெண்ணை மனந்துணிந்து
கொண்டுவந்து
காயவனென் றெண்ணைநம்பத் தடமடுத்துத்
தந்தரஞ்செய்து

கொன்றெண்ணி மயக்கினையே கொஞ்சமுந்தான்
அஞ்சாமலே
வென்றிடவே யாகமிப்போ வெகுமுறுக்காய்ச்
செய்கிறாயே

முகத்திலின்னம் மீசையோடா முண்டைக்கின்னம்
கொண்டையோடா
ஜகத்தோரெல்லாம் சிரிப்பாரடா சண்டாளப்
பாவிபோடா

2070. அப்பனைப்போல் திருட்டுச்செய்கை அகந்துணிந்தே
நீயுஞ்செய்தாய்
தப்பிப்போக மாட்டாயினி தம்பிமுன்னே
கொழுப்படங்கும்

இதுவரையில் பிரதாபம்பெற்று இறுமாந்து
இருந்தவுந்தன்
மதமடக்க வந்துவிட்டோம் வல்லமையைக்
காட்டுவாயே

நிகும்பலையின் யாகமது நிறைவேறாமல்
பங்கஞ்செய்யும்
மகிமையுள்ள புருஷனாலே மரணமுனக் கென்றடைந்த

வரத்தின்பயன் நேர்ந்ததிப்போ வந்திடுவாய்
சண்டைசெய்யத்
திரும்பியென்னைப் பார்த்திடுவாய் தியானநிஷ்டை
போதுமடா

வேள்விசெய்யத் தொடங்கினையே வெட்கமில்லாக்
கர்த்தவமே
ஆள்பகட்டி லாவதில்லை அறிவுகெட்ட பரமமூடா

கள்ளனைப்போல் பசபசென்று கண்விழித்தா
லாவதுண்டோ?
துள்ளுமுனைக் கிள்ளியெம தூதனுமே வந்துவிட்டான்

சண்டையிலுன் தண்டுகளைக் கண்டதுண்டஞ்
செய்வதோடு
விண்டெறிய உன்னையிப்போ அண்டிவந்தார்
அனுஜரடா

சண்டித்தனம் உதவாதடா சண்டனுன்னைக்
கண்டதன்மேல்
உண்டோஉந்தன் உயிர்நிலைக்க மண்டைவிதி
தீர்ந்ததடா

நிட்டையினி ஏதுக்கடா கட்டமது நேர்ந்ததடா
தட்டுவாணிப் பயலேயுந்தன் கொட்டமெல்லாம்
அடங்குமடா

உத்தமரைப் பகைத்துக்கொண்டு இத்தலத்தில்
வாழ்வதுண்டோ?
எத்தனையோ கொடுமைசெய்தாய் பத்தன்கெட்ட
துரோகியேநீ

இந்திரனை ஜயித்தேனென்று இறுமாந்து இருப்பவனே
வந்தெதிரில் நிற்காமல் வஞ்சகமாய் மறைந்துயுத்தம்

செய்தாயே பயந்தாயே ஜெகத்தில்பழி கமந்தாயே
கைபலத்தோன் இவ்விதமாய்க் காரியஞ்செய்தல்
பெருமையாமோ?

ஒளியுங்குண முள்ளவர்கள் உலகில்யுத்தஞ்
செய்யவந்தால்
எளிதிலவர் மாண்டிடுவார் என்னுஞ்சேதி
அறியாயோடா

தர்மவழி தனைக்கடந்து தாட்டிகஞ் செய்துவீணாய்ச்
சிரமமடைந்தேன்? அழிகின்றாய் ஸ்ரீராமன்
பகையாகுமோ?

சீசீஉன் ஜென்மம்வியர்த்தம் சீரழியா என்றேச
நீசன்பெரு மூச்செறிந்து நிரும்பலையை விட்டெழுந்து

2085. பார்த்தானம்மா யாககுண்டம் பரிசுத்த மின்றிச்சிறு
நீர்விட்டுச் சீர்கெடுத்த நிலைமையாக இருந்ததம்மா

ஆலகால விஷம்போல அவன்மிகவும் கோபங்கொண்டு
கோலங்கெட மகமழித்த குரங்கேயுனை
அதஞ்செய்வேன்

ஓமகுண்டந் தனில்வந்து உசிதமற்ற வேலைசெய்து
கோமத்திற்கு ஆனிதந்து சீரழித்தா யுன்னைவிடேன்

பாரென்று ரதத்தின்மீது பாதகனாம் இந்திரஜித்தன்
ஏறிவந்து எதிர்த்துநின்று எய்தானம்மா சரமாரியாய்

அந்தவேளை விபீஷணனார் அனுஜனோடு சீக்கிரமாய்
வந்துசேர்ந்தார் யாககுண்டம் வடவிருட்சத் தடிதனிலே

2090. இருப்பதைத்தம் வசத்தில்கொண்டு இந்திரஜித்தை
எதிர்த்துநின்றார்
அரக்கனந்த மேகநாதன் அவனெதிரில் நிற்பவனாம்

விபீஷணரைப் பார்த்தவுடன் வெருகோபங்
கொண்டுதானே
அபயெசலை அடைந்தவனே அப்பனோடு பிறந்தவனே

நிகும்பலையில் யாகஞ்செய்ததைக் கெடுத்ததற்காய்
இந்திரஜித்தன் விபீஷணரைப் பழிப்பதும், அவனை
விபீஷணர் இகழ்வதும், அப்பால் லட்சுமணனால்
இந்திரஜித்தன் யுத்தத்தில் தோர்வையடைந்து
ஓடிப்போய்த் தந்தையினிடம் முறையிடுவதும்,
அவனை மிகச் சலித்துக்கொண்டு இராவணன்
கோபிப்பதும்

உன்மகனா மென்னைக்கொல்ல உள்ளந்துணிந்
திந்தவிடம்
வன்மங்கொண்டு பகைவனோடு வந்தாயே படுபாவி

உன்னையன்றிச் சத்துருக்கள் உண்டோயிந்த
ஸ்தலமறிய
மன்னவ னென்னையன் மகிழ்ந்திடவே
தொடங்கியதாம்

அருமையாகந் தனையழிக்க அகந்துணிந்தாய்
வகையறிந்து
தருணந்தனில் மோசஞ்செய்தாய் தயவுனக்கேன்
இல்லையடா

2095. ஞாதியாகப் பிறந்துவந்து கருதிப்பகை கொண்டாயே
ஆதிமுதல் அடைந்தன்றி அணுவுனக் கில்லையடா

உடன்பிறந்தோர்க் கிடரெண்ணி உபத்திரவிப்போர்க்
குண்டோகதி?
சடுதியிலே உம்மையுமே சாமனனாம்
ராமன்கொல்வான்

2095. ஞாதி - பங்காளி

சோதரரை ஒழித்துவிட்டுச் சுகப்படவே
நினைப்பவர்க்கு
வேதனைகள் மிகவுமுண்டாம் வெகுகொடிய
நரகில்வீழ்வார்

பிராதாவுக்குப் பாதகத்தைப் பண்ணயென்னும்
பாபிகட்கு
ஸ்ரேபயஸ்ஸுண்டோ எங்குந்தானே சீரழிந்தே
சிரமப்படுவார்

பால்யமுதல் உன்னைமிகப் பாதுகாத்துப் பரிபாலித்த
சீலமுள்ள தமயனுக்குச் செய்யுமுப காரமிதோ?

2100. வானவர்களும் மனிதர்களும் வருத்தப்படச்
செய்வதற்குத்
தானுமுண்டு தருமமடா தானவர்க்கு ஜகந்தனிலே

வம்சருனந் தனைவிட்டு வழிதப்பி நடக்கிறாயே
அம்சஞ்சற்றும் வேண்டாமோடா அரக்கனென்றே
லுதித்தாயடா?

ஐயலுனக் கேதுசெய்தார் அவர்வழியைத் தடுப்பதற்கு
வையகத்தில் உன்னைப்போல வஞ்சகனைக்
கண்டதில்லை

எத்தனையோ நன்மைசெய்த எந்தன்பிதா
தனைப்பகைத்துச்
சுத்தங்கெட்டுச் சத்துருவாகிச் சூன்யஞ்செய்யத்
தொடங்கினையே

மோகங்கொண்டோர் பெண்ணைக்கொண்ட
மூத்தவராம் தமயனைத்தான்
சோகப்படச் செய்வதிலே சுகமுனக்கு லேசமுண்டோ?

2098. பிராதா - சகோதரர்; ஸ்ரேயஸ் - நன்மை

2105. எத்தனையோ ஸ்திரீகளைத்தான் எடுத்துவந்து
இலங்கைவேந்தன்.
அத்தனைபோர் களைக்கூடி அனுபவிக்குஞ்
சேதியெல்லாம்

அறிந்தவனா யிருக்கும்நீ அவைகளையேன்
மறுக்கவில்லை
குறித்துச்சீதை தனைக்கொணர்ந்தால் குற்றமென்று
சொல்வதென்ன?

அண்ணன்மன்ன னாயிருந்து அரசாளும்
பெருமையிலே
எண்ணமில்லா தசூயைகொண்டு எதிர்த்தவனைப்
பகைத்தாயோடா?

குலமழிந்து போனதன்மேல் குணமடைவோ
ருண்டோசொல்வாய்
உலகவாழ்வில் உனக்கணுவும் உண்டோசுகம்
நாங்கள்போனால்

தருவனாக இருந்துகொண்டு உலமகிழ
நினைப்பவர்கள்
இருப்பதுண்டோ எங்காயினும் இரக்கமில்லாப்
பாதகனே

2110. கோடாலிக் காம்பெனவே குலநாசஞ்
செயத்துணிந்தாய்
தேடாத பழியுலகில் தேடிக்கொண்டாய் அறிவிழந்து

அன்னமிட்டோர் நமக்குலகில் கன்னமிகு
முன்னையன்றிப்
பின்னையுண்டோ சாண்வயிறு பிழைக்கத்துரோகம்
செய்யலாமோ?

தந்தைபோல் வளர்த்துவந்த தமயனைக்கொன்
றுலகையாளச்
சிந்தையாமோ பிடுங்கிநாவைச் செத்தல்நன்றாம்
சிற்றப்பனே

அடிமையாகத் திரிகிறாயே அறிவிழந்து
வெட்கங்கெட்டு
மடயனுனைப் போலுமுண்டோ மானயீனம்
வேண்டாமோடா?

2115. சுவர்வம்போய் வாழ்வதிலே சுகமுண்டோ
சுகமுண்டோ
குலயத்தோர் சிரித்திடுவார் குறைவாயெண்ணிப்
பார்த்திடுவாய்

இந்தவிதம் அநேகமாக இந்திரஜித்தன் பழிக்கக்கேட்டு
அந்தப்பாவி தனைப்பார்த்து அப்பொழுது
விபீஷணனார்

துட்டனாகத் தோன்றிவந்த துன்மார்க்கப் பயலேயுன்
கொட்டமெல்லாம் அடங்கியதால் கூறவந்தாய்
ஞானமிப்போ

உடல்தனிலே கழலைவந்தால் உடனேயதை
அறுத்தெறியத்
திடப்படுதல் போலுங்களைத் தியஜித்துவிட்டு
வந்தேனடா

உத்தமியாம் ஜானகியை உள்ளம்நோகச் செய்தபாபம்
சத்தியுங்கள் குலமழிக்கத் தோன்றிற்றடா காதகனே

2120. நமதுகுலப் பெருமைதனை நாயேநீ அறியிலையே
நமசென்னும் குணமனுவும் தங்கவுண்டோ
நம்மால் பாராய்

பிரமன்குலந் தனிலுதித்துப் பிரபஞ்சதர்மங்
களையுணர்ந்து
அருமையான வேதசாஸ்திரம் அறிந்தவனா
யிருந்தமுந்தன்

தந்தைசெய்த அக்காமத்தைத் தடுத்துவெரு நீதிசொல்லி
முந்திப்பிந்தி உள்ளதையும் மோசம்வரு மென்பதையும்

வெருவிதமா யுரைத்ததற்கு வெருண்டென்னைத்
துரத்தினானே
அகநொந்துங் களைத்துறந்து ஆண்டவரைப்
பணிந்தேனடா

நல்லகதி அடைவதற்கு நானவரை அடுத்தேனல்லால்
வல்லபராம் அவருக்கென்னால் வருவதுண்டோ
பலனுமுவும்

2125. உங்களிடம் இருப்பேனானால் ஒருசுதியும்
நானடையேன்
பங்கப்பட்டு மடிவதோடு பாபியாவும் பவிப்பேனடா

ஜன்மந்தனை எடுப்பதெல்லாம் ஜகத்தில்நன்மை
செய்ததினால்
இவ்பமுள்ள பரகதியின் இருப்பறிந்து சாஸ்வதமாம்

சுதிதன்னை அடைவதற்காம் கடவுளரை மறந்தசுத்தை
மறியிழந்து கொள்ளுமுங்கள் மார்க்கந்தனை
அனுசரித்தல்

அனுசிதமென் றேயறிந்து ஆதிமுதல் மனிதரைப்போல்
மனப்பிரவிருத்தி தனைக்கொண்டு மகிமையுள்ள
ஜகதீசனை

2125. பவிப்பேன் - ஆவேன்

நம்பிமிகப் பக்திசெய்து நானவரை ஆராதித்து
அம்புவியில் அவரே துணை யாவரென்று நடந்துவரும்

2130. உண்மையெல்லாம் உலகறியும் உங்களுக்குந்
தான்விளங்கும்
கண்ணிருக்கக் கிணத்தில்விழும் கதைபோல
நடக்கின்றீரே

சகலத்திற்கும் மனங்காரணம் சரீரத்தினா லாவதில்லை
இகத்திலெந்தன் சரீரங்கொண்டு எனக்குநீங்கள்
பந்துவானீர்

சரீரமது போனபின்பு சற்றுமுண்டோ சம்பந்தம்
கருதிப்பாராய் காயபந்தம் சுழியும்நாளை
அதையொட்டியே

சிற்றப்ப னெனுமுறையைச் செப்புகிறா யிப்பொழுது
உற்றபடி பார்ப்போமானால் உனக்கெனக்கும்
ஏதுமிலை

இருப்பதாக வைத்துக்கொள்வோம் எண்ணியென்னை
நிந்தித்ததால்
இருப்பதுந்தா னில்லையென்று ஏனினைக்கப்
போகாதடா

2135. உறவுகொண்டு தானுரைக்க உனக்கனுவும்
பாத்தியமிலை
சிறிதுமிலை உனக்கெனக்கும் சித்தமதில் ஐக்கியமடா

மனப்பொருத்த மில்லாத மாபாவி உன்னுடனை
தினங்கழித்தா லணுவுமுண்டோ திருப்தியது
இல்லையடா

2129. பிரவிர்த்தி - செயல்பாடு

உற்றபந்து ராமனென்னும் உண்மைதனை
அறிந்தேயந்தக்
குற்றமற்ற புருஷரைநான் கூடிவாழ வந்தேனடா

இகபரத்தில் சுதியளிக்கும் இன்பக்கடல் ராமனாலே
அகமகிழ்வேன் சுகமடைவேன் ஆராலெனக்
காவதென்ன?

குற்றமுள்ள போகளோடு கூடியுள்ள போகளுக்கு
வெற்றியில்லை விவேகமில்லை வெருகஷ்டம் நேருமடா

2140. ரவுரவாதி நரகபாதை ராப்பகலுங் கூடுமடா
குவலயத்தோர் பழித்திடவே கூடுமடா மானங்கெடும்

உங்களுடன் சேர்ந்தவர்கள் உலகாசை தனைவிட்டு
எங்குபோனா ரென்றுசற்று எண்ணியுந்தான்
பார்த்திடுவாய்

ஏழைகளை எதிர்த்துவென்று எடுத்துவந்த
பெண்களைப்போல்
வாழும்நல்ல உத்தமியாம் வலுத்தராமர் பத்தினியை

தஸ்கரித்தா னுன்னுடைய தந்தைசெய
லெண்ணிப்பாராய்
விஸ்தரித்துச் சொல்வதென்ன வெல்லமாட்டோ
மென்றறிந்து

திருடினதா யாகுமல்லால் தீரனென்று
சொல்வதுண்டோ?
மறைந்திருந்து சூதுசெய்தோர் மமதைகொள்ள
நியாயமுண்டோ?

2145. வானவரை எதிர்த்துவென்ற வல்லபரா யிருக்கையிலே
ஏனதனை மறந்துவிட்டு எவருமில்லா வேளையிலே

ஞானகியை எடுத்தாளுந்தன் சக்தியுள்ள
தந்தைசொல்வாய்
மானயீனங் களைமறந்த மதியீனரே உங்களுக்கு

இல்லையினி வாழ்வணுவும் இப்பொழுதே
நீயொழிவாய்
நல்லவார்த்தை மிகவுரைத்தேன் நாய்போலக்
குலைத்தீர்களே

வஞ்சகமே நெஞ்சிலின்றி வருங்கேடு தனையறிந்து
அஞ்சிமிகக் கெஞ்சிச்சொன்னேன் ஆசைகொண்டு
நேசத்தோடு

உள்ளதுநா வுரைத்தேனடா ஒப்பமன மில்லாவிடில்
எள்ளளவும் பேதையெண்ணம் எனக்கில்லை
அதினாலே

2150. கடிந்துரைத்துத் துரத்துவதேன் கண்சிவந்து
மிரட்டுவதேன்
அடிநுனியை அறியாமல் அலப்புவதேன் மதியிழந்து

நீதிகெட்ட வேலைசெய்தால் நோவழியை
நானுரைப்பேன்
பாதகத்தை மிகத்தடுப்பேன் பாதுகாப்பேன்
தருமஞ்சொல்லி

உன்வாக்கை மீறாமலே எத்தனையோ சமயங்களில்
தன்மனத்தைத் தடுத்துவந்த தமயனிப்போ உங்களிட

உபதேசங் களைக்கேட்டு உறுமியென்னை
யோட்டினாளே
தபசிகளின் சாபமெல்லாம் தானவர்க்குப்
பலித்ததிப்போ

உத்தமரை யுபத்திரவித்து உளங்களிக்கும் உனதுதந்தை
சித்தந்துணிந் தெத்தனையோ செய்கைசெய்த
பாவபலன்

2155. விட்டுப்போக மாட்டாதடா எட்டுநாளில் தெரியுமடா
கட்டம்வந்து சேர்ந்ததடா காலமுந்தான்
நெருங்கிற்றடா

கருமவசத் தாலேசில காலமுங்க ளிடமிருந்தேன்
மருமாமெல்லாம் அறிந்துகொண்டேன் மாதவரை
வந்தடைந்தேன்

நிமிஷமொரு யுகமாக நினைத்துங்களோ டிருந்தேனடா
இமைப்பொழுது மினியுங்களோ டிருக்கமன மில்லாமல்

விட்டுதடா பற்றுதல்தான் வீண்வார்த்தை
பேசவதேன்?
அட்டலட்சமிக் கதிகாரியாம் ஆண்டவர்ஸ்ரீ
ராமரென்னை

அருள்கொண்டு காப்பாரன்றி அவரெனக்குத்
தீங்குசெய்யார்
தருமங்களைக் காக்கவந்த தயாபரரே ஸ்ரீராமர்

2160. என்னுடைய நற்கருமம் என்னுடைய சோக்கையுமே
உன்னதமாம் நிலைமையிலே உங்களெல்லோர்
களையும்வைத்து

ஆதரித்த உண்மையைநீ அறியாமல் பிதற்றுகிறாய்
நீதிகெட்ட உங்களிட நேசமினி எனக்கிருந்தால்

எனதுசீலங் கூடகெடும் எனக்குந்தீங்கு விளைந்திடுமே
கனமழிவேன் மனந்தளர்வேன் கஷ்டநஷ்டம்
மிகவடைவேன்

எனதுசோர்க்கை விட்டவுடன் இராட்சதர்கள்
படும்பாடு
மனதிலெண்ணிப் பார்ப்பாயாயின் மதியடைவாய்
குறையுரையாய்

போகுங்காலம் நெருங்கியதால் புலம்புகிறாய்
என்னையுமே
வேகங்கொண்டு வெறியனைப்போல் வீணாக
நிந்தனையாய்

2165. இஷ்டப்படி திட்டலெனக் கேதுமிலை குறையறிவாய்
துஷ்டனுந்தன் வாய்புழுக்கும் துரோகியுந்தன்
வாழ்வொழியும்

அருள்பரனை ஆராதிக்க அகிலந்தனில் நாலுநித்தேன்
பரமகுரு ஸ்ரீராமன் பாதமேதான் கதியெனக்கு

உங்களுக்குக் கதியளிக்க உதித்தவனா னென்றறிவாய்
பங்கமிப்போ அடைந்தாலும் பரகதியில் உங்களுக்குக்

கிடைக்குமடா என்னுடைய கிரமமான கிரியையினால்
கடவுளது அருள்மிகவும் கதியடைவீர் இதுநிஜமே

என்னைக்குறை கூறினக்கால் என்றுமில்லை உங்களுக்கு
உன்னதமாம் கதியென்று உள்ளமதில்
தெரிந்துகொள்வாய்

2162. சீலம் - ஒழுக்கம்

இந்தவிதம் விபீஷணனார் இந்திரஜித்தைப்
பார்த்துரைத்தார்—
அந்தப்பாவி கேட்டதன்மேல் அனுஜரைப்பார்த்
தகங்காரித்து

என்னைவெல்வோர் ஓருமிலை எந்தன்முன்னே
வந்துவிட்டாய்
உன்னையிப்போ ஒழித்திடுவேன் ஒருநொடியில்
பார்ப்பாயென்றான்

வாயுடக்கிக் கர்ரியத்தில் வல்லமையைக் காட்டிடுவாய்
பேயண்ணீப்போல் பிதற்றுகிறாய் பிடித்துவில்லை
அடுத்துயுத்தம்

செய்துபாரா யுன்னையிப்போ சீக்கிரத்தில்
வென்றிடுவேன்
கைபலத்தை விட்டுவிட்டுக் கண்டபடி உளறவேண்டாம்

இந்தவிதம் அனுஜன்சொல்ல இந்திரஜித்தன்
கோபங்கொண்டு
வந்துவிட்டான் யுத்தஞ்செய்ய வாயுசுதன் மீதில்தம்பி

ஏறிவந்தார் இருவருமாய் எங்குந்தானே கத்திச்சுத்தித்
தேறியுத்தஞ் செய்ததைநான் தெரிந்துரைக்கச்
சக்தியுண்டோ?

இந்திரஜித்தன் ரதத்துடனே எழும்பிவிண்ணில்
நின்றிடுவான்
அந்தவேளை அனுமார்வந்து அவன்முன்னே
விளங்கிநிற்பார்

ஆகாய வீதியெல்லாம் அரக்கன்ரதம் பறக்குமம்மா
மாகாய அனுமாரும் மகிமையுடன் மிகச்சுற்றுவார்

துளிபிழும் வானத்திலும் புவனமெல்லாம் நடுங்கும்படி
காமங்கொண்டு இருவருமாய்க் கைப்பலத்தை
மிகவுங்காட்டி

செய்தயுத்தம் என்னசொல்வேன் ஜெயாபஜய
மில்லாமலே
வையகத்தோர் கண்டவரின் வல்லமையை
மெச்சினார்கள்

2180. அனுஜன்மீது கணைகள்விட்டு அங்குந்தனில்
ரத்தக்காயம்
தனதுசக்தி தனைக்காட்டித் தசகண்டன்
மகன்செய்தான்

ஐயன்தம்பி அதன்பிறகு ஆக்கிரகத்தை மிகக்கொண்டு
கைபலத்தைக் காட்டினரே காதகன்கை இளைத்திடவே

நெஞ்சில்தன்னை இரண்டுமுறை நினைத்துச்செய்த
மோசமெண்ணி
வஞ்சகனைப் பழுக்கப்பார்த்தார் வாய்வறண்டு
பிரமிக்கும்படி

விபீஷணர்மேல் உடம்பையெல்லாம் சல்லடைக்கண்
போல்துளைத்து
அடித்தானவன் தேர்குதிரை அத்தனையும்
பொடியாகவே

2185. அரக்கர்படை முழுவதையும் அழஞ்செய்தான்
அனுஜனம்மா
ஒருவனாக இந்திரஜித்தன் உள்ளம்நொந்து
வாடிநின்றான்

2179. அபஜயம் - தோல்வி

கூடவுள்ள சேனைகள்போய் கொட்டுமுழக்
கிட்டதும்போய்
வாடிநிற்கும் இந்திரஜித்தன் வழியினிமே
லென்னவென்று

ஆலோசித்து பார்த்தானம்மா அச்சமிகக்
கொண்டானம்மா
வாலாட்ட லாகாதினி வந்திடுமே உயிர்ச்சேதம்

அரைநொடியு மிங்கிருந்தால் ஆபத்தாய் முடிமென்று
கருதியோட்ட மெடுத்தானம்மா கண்கலங்கி
லங்கைநகர்

அரக்கர்மன்னன் முன்னேவந்து அவனடியில்
வீழ்ந்துரைப்பான்
பரிதபிக்கு ஆனேனையா பட்டபாடு போதுமையா

2190. ஐயாவே மெய்யாகவே ஆவியொன்று தப்பிவந்தேன்
மெய்யெல்லாம் துளைக்கப்பட்டு மெலிந்துபோனேன்
மனிதன்கையால்

ஐயா அவர் மனிதரல்ல அவர் நமக்கு மாகாதையா
மதியுடன்வஞ் சனையில்வெல்ல மாயங்கள்
பலவுஞ்செய்தேன்

வறுத்தபயறு முளைப்பதுண்டோ வதையான
வானரர்கள்
திரும்பியுயிர் தரிக்கின்றாரே தெரியலையே
அதன்மருமம்

எதிரிபலங் கண்டறிந்து எதிர்த்தாலன்றி
வெல்லப்போமோ?
அதிபலவான் ராமனையா அவனைநாம்
வெல்லப்போகா

2195. மீறியுள்ள பேருடனே மிஞ்சியுத்தஞ் செய்வோமானால்
கோரிநம்மை ஜயித்திடுவார் கொடுமைமிகச்
செய்திடுவார்

அமர் புரிய லாகாதையா அவரைவெல்ல முடியாதயா
நமஸ்கரித்து வணங்குவது நமதுகடன்
சொன்னோனையா

சித்தப்பன் அருகிருந்து செய்கிறானே அவர்க்குதவி
எத்தனையோ பாடுபட்டு என்னசெய்தும் பயனிலையே

அந்தவொரு லட்சுமணனோ டமர் புரிந்து
ஜயிப்பதுதான்
எந்தரமோ சிறுபயலா யிருந்தாலும் அவன்கையம்பு

ஆவிதனைக் கொள்ளையிடும் ஜயாவினி அமர் புரிய
ஏவிடிலிலோ ஆவியுடன் என்னைநீர் காணமாட்டீர்

2200. ஆழமறி யாமல்வீணாய் அவர்மீது கையெடுத்தோம்
ஏழையந்த ஜானகியை இப்பவேவிட் டவர்பகையை

ஒழித்துக்கொள்ளல் உத்தமமே உமதாக்ஞைப்
படிநடப்பேன்
வழியேதும் புரியாமல் வந்தேனையா நொந்துமிக

இவளைத்துவந்தேன் லட்சுமணன் வெளுத்துவிட்டான்
பழுக்கவெண்ணைக்
களைத்துவந்தேன் உடம்பையெல்லாம் கண்கொண்டு
பாருமையா

எத்தனையோ சவுரியங்கள் எண்ணிச்சொன்னோம்
மண்ணுலகில்
அத்தனையும் மனிதர்முன்னே அவமாகப்
போயிற்றையா

எடுத்தேன்ரு எத்தனையோ எதிரிகளை
இளைப்பதில்லை
தடுத்துநம்ம அஸ்திரா திகள் தவிடுபொடி
செய்கின்றாரே

அஸ்திரத்தின் மகிமையெல்லாம் அவர் முன்னே
அடங்குதையா
விஸ்தரித்துச் சொல்வதென்ன விளங்குமன்றோ
உமக்குநேராய்

ஜயிப்பவர்கள் ளாருமிலை ஜகங்களிலே என்னையென்று
பயமின்றித் தயிரியத்தைப் பலமாகக்
கொண்டிருந்தேன்

நெஞ்சுறுதி கஞ்சியாகிப் பஞ்சையாக அஞ்சிவிட்டேன்
மிஞ்சும்வழி கொஞ்சமிலை சஞ்சலமே வெஞ்சரங்கள்

எதிர்த்துவரும் பாவனையே என்முன்னே
தோற்றுதையா
அதிபலவான் ராமனைநாம் அதிக்கிரமிக்கப்
போகாதையா

போதும்போதும் மனிதரோடு போராடிப்
பட்டதெல்லாம்
மீதியேதும் ஆகாதையா சேதப்படும் உள்ளதுமே

இருக்குமொரு நிலைமையினால் எள்ளளவும்
ஜயமடையோம்
வருவதெல்லாம் கஷ்டமென்றே வாஸ்தவமாய்க்
காணுதையா

அடங்கும்வேளை தானிதுவே ஆபத்தில்
அழுந்துகிறோம்
இடம்பொருளே வல்கலெல்லாம் இழந்திழந்தே
போகின்றோமே

அனுகூல ஆசனையோ அணுவுமில்லை நமக்கையா
தினந்தினமும் நாமிகவும் சீர்கெட்டே... வருகின்றோம்

தாங்கும்வேளை தானுமல்ல தடுக்கும்வேளை
தானுமல்ல
ஓங்கும்வேளை தானுமல்ல ஒதுங்கும்வேளை தானிதுவே

மடங்கவுள்ள சமயந்தனில் மமதைகொள்வ
லாகாதையா
நடுநிலைமை தனிலிருந்து நாடிப்பாரீர் தேடிப்பாரீர்

2215. உலகிலுள்ள போர்களெல்லாம் உதாசீனஞ் செய்திடவே
பலவிதமாய் நொந்ததையா பரிகார மில்லையையா

அருள்செய்வோன் அவமதித்தான் ஆசையெல்லாம்
ஒழிந்திடவே
பரமனரு ளில்லாமல் பாங்கடைய நியாயமுண்டோ?

அருள்பரனை மீறியேநாம் அகங்கரித்தோம்
மிகக்கொழுத்தோம்
பரம்பொருளைப் பகைத்ததற்குப் பலனடைந்தோம்
நலமிழந்தோம்

ஆதரிக்குஞ் சகுதீசனை அவமதித்தால்
அடைவதெல்லாம்
வேதனையென் றேயுரைக்கும் விதியைவிட்டுச்
சதியைத்தொட்டோம்

நேருவழி தன்னைவிட்டு நெஞ்சுறுதி கொண்டதினால்
தாறுமாறாய்ப் பலித்துதையா தலைக்கொழுப்பும்
அடங்கிற்றையா

நமக்குவரும் குறையறியேன் நஷ்டகஷ்டம் நானறியேன்
இஷ்டப்படி இணங்குமெல்லாம் என்றிருந்தேன்
இறுமாந்து

அனுசரித்த காரியமெல்லாம் அணுவுங்குறை
இல்லாமல்
மனதின்படி நடந்ததினால் மமதைகொண்டோம்
மதமிருந்து

அனுபவங்கள் மிகவுமுள்ள அறிவுமுள்ள
போகுளெல்லாம்
நினைத்துரைத்த கருத்துகளை நிக்ரகித்தோம்
நேசம்விட்டு

மூடர்மதி தனைக்கேட்டோம் மூலமுடி வறியாமல்
தேடிச்செய்தோம் பாதகங்கள் தெய்வத்தையும்
மறந்தோமையா

நாடிச்செய்த காரியங்கள் நமக்குத்தீங்காய்ப்
பலித்துதையா
கூடிச்செய்த காரியங்கள் கொடுமையாகப்
பலித்துதையா

போதுமினிச் சண்டைவேண்டாம் பொல்லாத
வேளையிது
நீதிதனை அனுசரிப்போம் நேராக வாழ்ந்திருப்போம்

இந்தவிதம் அநேகமாக இதமுரைத்தான் இந்திரஜித்தன்
தந்தைகேட்டு வெந்துசிந்தை இந்திரஜித்தைப்
பார்த்துரைப்பான்

விரணந்தனில் ஊசியிடும் விதமதுபோல் பேசிவிட்டாய்
பொறிபறக்க மீறுதடா பொல்லாத கோபமிப்போ

இப்படிநீ அஞ்சுவாயென் றெப்பொழுதுமெண்ணவிலை
இப்புவியில் மனிதர்வந்து இராட்சதரை
வெல்வாரெனில்

2230. ஜெகமெங்கும் சிரித்திடுமே சீருடனே வாழ்ந்துமிகச்
சுகமடைந்த பெருமையெல்லாம் சொல்லாமல்
ஓடுமன்றோ?

கண்டவர்கள் பரிகசிக்கக் கவுரவம்போய் வாழ்வதிலும்
சண்டையிலே உயிரைமாய்ந்தால் சத்கதியை
அடையலாமே

மூலபலம் மிகவுமுண்டு முதல்வன்கைலா சகிரியை
மேலெழும்ப அசைத்தபலம் மிகவுமுண்டு நீயொருவன்

இருந்தாலென்ன போனாலென்ன எனக்கதினால்
நஷ்டமென்ன?
வருந்தியென்முன் அழவேண்டாம் வல்லமையை
அறிந்தேனடா

தேவாசுரர் களைவென்ற தீரனென்று பெயரெடுத்துக்
கோவென்றே புலம்புகிறாய் கொஞ்சமுமே
ரோஷமின்றி

2235. என்மகனா இருந்தும்நீ இப்படியும் பின்னடைந்தால்
நன்மையுன்னால் விளையுமென்று நம்புதற்கு
நியாயமுண்டோ?

2231. சத்கதி - நற்கதி

கையெடுத்துக் காரியஞ்செய்தால் சுனவிலுமே
உறுதிவேண்டும்
தைரியத்தை விட்டுப்பேசல் தானவர்க்கு அழகல்லவே

தான்போகாக் காரியங்கள் தரணியிலே சீர்படுமோ?
நான்போவேன் போரிலந்த நரரையதஞ் செய்திடுவேன்

சிறுபயல்நீ சொன்னபடி சீதையைநான்
விடுவதுண்டோ?
குறித்தவளைக் கொண்டுவந்தேன் கூடிவாழ
வேண்டுமென்று

உயிருடனே விடஅவளை உபதேசஞ் செய்கிறாயே
பயமின்றி என்முன்னே பலவிதமாய்ச் சொல்கின்றாயே

2240. பஞ்சையைப்போல் நெஞ்சுகிறாய் அஞ்சியுமே
நஞ்சுகிறாய்
சஞ்சலத்தைக் கொள்ளுகிறாய் இஞ்சிதின்றோன்
போலாகிறாய்

நம்பியுனைப் பயனில்லை நாவுதிலை உனக்கில்லை
தம்பிமார்க ளிருவருமே தப்பாதவர் வாக்குறுதி

எப்பொழுதும் ஓர்மனதாய் என்முன்னே பேசியவர்
ஒப்பும்படி நடந்தாயடா உலகமெல்லாம் புகழும்படி

மனம்வெறுத்து விலகினவன் மனிதரிடம்
போய்ச்சேர்ந்தான்
இனங்களோடு இருக்கையிலும் எண்ணம்வேறு
கொண்டிருந்தான்

2237. நரர் - மனிதர்

அவனைக்குறை உரைப்பதற்கு அணுவுமுண்டோ
அவனிடத்துப்
பவமொழிக்க அவனெனக்குப் ப்ராதாவாய்
வந்தானடா

2245. இகபரத்தில் எனக்குநல்ல இன்பந்தருந் தம்பியவன்
மகிமையுள்ள புருஷனவன் மாதவனைச் சேர்ந்தானவன்

அஞ்சுகலச் சத்துருவாய் அடுத்தெனக்குத் தீங்குசெய்ய
மனமுடையோ ரதிநூறுண்டு எனினீ அதிலொருவன்

சுட்டுப்பட்டுத் துணிந்துவிட்டால் ஓட்டியதின்
படிநடக்க
எட்டிக்காலை வைப்பதுவே கெட்டிக்காரன்
காரியமாம்

சத்தியாசத்திய மென்றுசிலர் ஜகந்தனிலே
சொல்வதுண்டு
மத்தியையடா அக்கொள்கை மிஞ்சினதாம்
நிலைதனிலே

உபநிஷத்தை அறிந்தவர்கள் உண்மையென்று
நம்பார்கள்
அபயெசஸாம் காரியத்தை அதுவுமித்தை என்பார்கள்

2250. இருக்குமட்டும் இஷ்டப்படி இருப்பதுவே சுகமாகும்
அருவருப்புக் கொள்வதெல்லாம் அறிவீன மாகுமடா

எடுத்தகையை இழுத்தெடுக்க ஏனுரைத்தாய்
மதியெனக்குத்
தொடுத்தகாரியம் விடுத்தாலது தொல்லுலகில்
இழிவாகுமே

தோல்வடைந்தோ மென்றுசற்றும் தோரணையை
விடலாகா
மால்பிளக்க வானாலுமே மமதைதனை விடவுமாகா

எத்தனையோ குறைவடைந்து இருப்பதிலே
சுகமுண்டோ?
இத்தலத்தை விட்டொழிதல் ஏற்குமடா நமக்குமிக

போதுமினி போதனையாம் பெட்டிதனைக் கட்டிவிடு
வேதனையைத் தருமவனே வேண்டாமடா உன்னுதவி

2255. என்முன்னே நிற்கவேண்டாம் எனக்குன்மே
லன்பில்லை
என்றிவ்வாறு சீறிச்சொன்னான் இலங்கேசன்
கோபத்தோடு

இந்திரஜித்தன் கேட்டுமிக இருதயத்தில் குறையடைந்து
வந்துதிப்போ கஷ்டமிக வாழ்வெல்லாம் ஒழிந்ததென்று

தந்தைபாதந் தனைப்பணிந்து தாகாதி களைத்துறந்து
சிந்தையிலே வெறுப்படைந்து சீக்கிரமாய்
எழுந்துவந்து

அப்பொழுதே ரதமேறி அதேகப்படை சூழவந்து
அப்பனோப்ப யுத்தஞ்செய்ய ஆரம்பித்தான்
அனுமனோடு

2252. தோர்வு - தோல்வி

கடைசிச் சண்டையில் இந்திரஜித்தன் மடிந்ததும் அதைக்கேட்டு ராவணன் விசனப்பட்டு அப்பால் கோபங்கொண்டு சீதையை வெட்டப்போவதும், மந்திரி சுபார்சுவன் வந்து நீதியாதிகள் சொல்லித் தடுப்பதும், பிறகு இலங்கேசன் இரக்கங்கொண்டு திரும்பிப் போவதும்

ஆறுமுக வேலவரை அசுரன்சூர பத்மன்வந்து
நேரில்நின்று யுத்தஞ்செய்த நேர்மையைப்போ
லிந்திரஜித்தன்

2260. அனுஜன்றனை அடுத்துநின்று ஆமோகமாகப்
பாணமெய்து
மனந்துணிந்து யுத்தஞ்செய்தான் மாருதிமேல்
சுவரவமாய்

இருந்துகொண்டான் லட்சுமணன் இராமனிட
அனுக்கிரகத்தை
உரியபடி தானடைந்து உள்ளமிகத் துணிவடைந்து

கருதியப்பால் இருவருமாய்க் கலங்காமல் அற்புதமாய்
அருமையான அஸ்திரங்கள் அனேகவிதப்
பாணங்களும்

எடுத்துவிடும் சரவேகம் என்னசொல்வேன் லாகவத்தை
அடுத்திருந்த போர்களெல்லாம் அகோரமென்றே
அதிசயித்தார்

பாணங்களும் அஸ்தரங்களும் பரஸ்பரமும்
எதிர்த்தெதிர்த்து
ஆணவத்தை மிகக்காட்டி அதன்பிறகு அடங்குமம்மா

2265. எங்கும்அஸ்தரம் எங்கும்பாணம் எரிமலைபோல்
குவியலாக
அங்கங்கு நிறைந்திருக்க அந்தக்காட்சி தன்னைக்கண்டு

அதிசயித்தா ரிப்படியும் அமர்புரிவோ
ருலகிலுண்டோ? _
மதியென்ன மர்மமென்ன மகிமையென்ன சக்தியென்ன

இவர்களுக்கு ஒப்பிடவே எங்குமில்லை வல்லபர்கள்
குவலயத்தில் இவர்களிட ருணங்கள்மிக அதிசயமே

என்றெவரும் பிரமித்துவிட்டார் இந்திரஜித்தை
லட்சுமணன்
வென்றிடவே தேவாதிகள் வெளிதனிலே
இருந்துகொண்டு

அணுக்கிரகித்தார் அப்பொழுது அனுஜன்சற்று
இளைப்பாற
மனதிலெண்ணி இந்திரஜித்தை மறித்துக்கொண்டு
விபீஷணனார்

2270. அம்புசையில் கொண்டுநின்று அதேகப்பாணங்
களைச்சொரிந்து
வம்பனிந்திர ஜித்தனிடம் வல்லமையை மிகவுங்காட்டி

அமர்புரிந்தா ரிந்திரஜித்தன் ஆனமட்டும்
அவனும்பார்த்தான்
சமபலமாய் இருந்தாரவர் சற்றுவிபீ ஷணர்தம்மில்

உதிரப்பற்று மனதிலொட்டி உபத்திரவிக்கத்
துணிவின்றி
மதிமயங்கி இருக்கக்கண்டு மறுபடியும் லட்சுமணனை

இந்திரஜித்தன் எதிர்த்துவந்தான் இலட்சுமலான்
நுணிந்தெதிர்த்தான்
அந்தபுரத்தில் இருவுடைய அம்புமழை
மிகவும்பெய்தார்

இவர்தேகங் களில்ரத்தம் எவருங்கண்டு
இரக்கங்கொள்ள
பெருகிற்றம்மா பிரவாகம்போலப் பிரமாதமாகப்
போர்புரிந்தார்

2275. தம்பிவிடும் கொடுங்கணைகள் தானவன்மெய்
எங்கும்இரணம்
சம்பவிக்க மரணமது சடுதியிலே நேருமென்று

திகிலடைந்தான் மிகப்பயந்தான் தேறுதலை
அடைவதற்கு
வகையுமில்லை என்னசெய்வோம் வல்லபன்முன்
நாமிகவும்

கையிளைத்தோம் மெய்யிளைத்தோம் கவுரவத்தை
விட்டழித்தோம்
செய்வதினி ஏதுமிலை ஜெகத்தில்மிக இழிவடைந்தோம்

சத்ருவை அடுத்திருந்து சகலவித முயற்சிசெய்யும்
சித்தப்பனை வதைபுரிந்தால் சித்தஞ்சற்று ஆறுமென்று

2280. எடுத்தெறிந்தான் சக்தியொன்றை எரிந்ததுதான்
வரக்கண்டு
உடலேசில பாணங்களால் ஒடித்தந்தச் சக்திதனை

எறிந்துவிட்டு எரிகணைகள் எத்தனையோ
அனுஜன்விட்டு
அரக்கருடல் தனைத்துளைத்தான் ஆவிநொந்து
மூர்ச்சையாகி

உதிரங்கக்கி வீழ்ந்தானம்மா உடனேழுந்து
திடமனதாய்
அதிகக்கோபம் கொண்டரக்கன் அம்புகையில்
கொண்டுநின்று

சரமாரி யெய்தானம்மா சமத்துடனே
அவைகளெல்லாம்
அறுத்தெறிந்து அவன்மீது அடித்தான்வெகு
பாணங்களை

அதனால்மிக அவஸ்தைப்பட்டு அங்குமெல்லாம்
சித்தரவதை
சதிகாரன் அடைந்துமிகச் சங்கடத்தை அனுபவித்தான்

புதசாரதி தலைதன்னை ராமன்தம்பி அறுத்தெறிந்தான்
மதியுள்ள குதிரைகளும் மாறாமல் அதுகளாக

2285. ஒழுங்காக ஓடிவந்து ஒருகுறையும் அரக்கனுக்கு
வழங்காத படிரதத்தை வயணமாக நடத்திற்றம்மா

விபீஷணனார் மீதரக்கன் வெகுபாணங்
களைப்பின்னும்
குபுகுபென்று அக்கினிகக்கக் கொட்டிவிட்டான்
அவைகளெல்லாம்

பொடிப்பொடியாய் ஆகும்படி புத்தியுள்ள
அனுஜன்செய்தான்
துடிதுடித்துக் குதிரையெல்லாம் துஷ்டன்பாரிக்கக்
கதைகைக்கொண்டு

அதஞ்செய்தார் விபீஷணனார் அதன்பிறகு
ரதத்தைவிட்டு
குதித்தரக்கன் மறுபடியும் குரூரமாக யுத்தஞ்செய்தான்

படைகளெல்லாந் தொலைந்தாரம்மா பரந்தாமன்
தம்பியாலே
அடுத்ததனைக் கண்டரக்கன் அதிகோபங்
கொண்டுவந்தான்

2290. அரக்கன்கை அம்புதனை அனுஜனொரு
கணைகொண்டு
அறுத்தெறிந்தான் மறுபடியும் அரக்கன்வேறு
வில்லுக்கொண்டு

வந்துநின்றான் அதையும்தம்பி வானத்தினா
லறுத்தெறிந்தான்
இந்திரஜித்தன் வில்லுகளை எத்தனையோ
விர்த்தியாக்கி

பாணங்களை மிகவும்விட்டுப் பலமாக
யுத்தஞ்செய்தான்
காணமந்தப் பாணங்களைக் கத்தரித்து எறிந்தனுஜன்

ஆனவத்தோ டிருக்குமந்த அரக்கன்கொழுப்
படக்கியப்பால்
நாணங்கெட்ட அவனையினி நமனிடத்தி
லொப்புவிக்கச்

சரமொன்றை வில்லில்வைத்துச் சாரமுள்ள
ஐந்திராஸ்தரம்
உருச்செய்து நாணேற்றி உரைக்கின்றான்
இவ்விதமாய்த்

2295. தருமாத்மா ராமராயும் தரணியிலே மிகவுமவர்
மருமமெல்லாம் அறிந்துயுத்தம் மயங்காமல்
செய்வோராயும்

சத்தியசிந்த ரென்பதோடு சர்வக்ஞராம் ஸ்ரீராமர்
உத்தமரா யுமிருந்தால் ஒருநொடியில் சரமேயிப்போ

இந்திரஜித்தன் தலையறுத்து எந்தன்முன்னே
அவன்முடிய
உந்தன்சக்தி தனைக்காட்ட உண்மையாக
வேண்டுகிறேன்

என்றுரைத்து விட்டுவிட்டான் எறிந்தஸ்தரம்
இந்திரஜித்தை
வென்றவனைக் கழுத்தறுத்து விழுத்திடவே
செய்ததம்மா

இராவணனாம் அரக்கன்மாண்டான் இராட்சதரும்
மிகமாண்டார்
ஆவலோடு முனிவர்களும் அருள்செய்யும் தேவர்களும்

2300. மலர்மாரி மிகப்பொழிந்தார் மனமகிழ்ந்தார்
வானவரும்
நிலந்தனிலே கிடக்குமந்த நீசனிந்திர ஜித்தன்தலை

தனையங்கதன் எடுத்துக்கொண்டான் தமயனிடம்
லட்சுமணன்
அனைவருடன் வந்துசேர்ந்தான் ஐயன்மிக
ஆனந்தித்தான்
சண்டையிலே நடந்ததெல்லாம் சரிவரவே
சொல்லக்கேட்டுக்
கொண்டடங்கா மகிழ்ச்சியோடு கோதண்ட
பாணியப்போ

தம்பிதனை மடியில்வைத்துத் தலைமுதலாய்த்
தடவித்தந்து
உம்பர்துய ரொழித்தவனே உன்னாலே
பெருமைபெற்றேன்

தசகண்டனை ஜயித்தேனினி ஜானகியை
அடைந்தேனிவி
ராஸமுதந்தாய் எனக்கினிமேல் ஈதுத்துங் கவலையிலை

2305. அசாத்தியமான காரியத்தை அனுமனே! சாதித்தாய்
நிசாசரர்கள் யாவரையும் நிமிஷத்தனி
லொழித்திடுவேன்

என்றுமிகப் புகழ்ந்துகொல்லு இரக்தக்காயங்
களைப்போர்த்து
நன்றடைய சுஷேணன்றனை நாதனழைத்
தாக்ஞைசெய்தான்

அனுமன்தேகந் தனிலேயுள்ள அநேகரக்தக்
காயமெல்லாம்
உனதுவைத்தியப் பிகாரத்தால் ஒருநொடியி
லாறவேண்டும்
அனுமார்முதல் சிலபேருக்கும் அவ்விதமாய்ச்
செய்வாயென்றான்
மனமுவந்து சுஷேணனொரு மருந்துத்தழை
தனைக்கொணர்ந்து

நாசித்துவாரந் தனில்காட்ட நன்றாகச்
சுகமடைந்தான்
நேசத்தோடு அனைவர்களும் நெஞ்சுமிகக்
குளிர்ந்திருந்தார்

2310. அரக்கர்படை களில்மிருந்த அரக்கர்சிலர் ஓடிவந்து
பரிதபித்து முறையிடுவார் பாதகனாம் ராவணன்முன்

உயிர்தப்பி வந்தோமையா உமதுமகன் ஒழிந்தானையா
பயமிகவுந் தோற்றுதையா பாணவேகந்
தனைநினைத்தால்

2305. நிசாசரர் - அரக்கர்

இந்திரஜித்தன் மிகத்துணிந்து எத்தனையோ
ஜாக்கிரதையாய்த்
தந்திரங்கள் மிகவுஞ்செய்து தப்பிக்கொண்டு
யுத்தஞ்செய்தான்

செய்தயுத்த கோரமதைச் செப்புதற்கு ஆகாதையா
கைபலத்தை மிகவுங்காட்டிக் கஷ்டப்பட்டான்
இஷ்டப்பட்டே

வெருநேரம் யுத்தஞ்செய்தான் வேணமட்டும்
அஸ்தராதிகள்
மிகத்துணிந்தே விட்டானையா மிச்சமின்றி
மெச்சும்படி

2315. அத்தனையும் வியர்த்தமாக்கி அனுஜனான
லட்சுமணன்
மொத்திவிட்டான் சுத்தும்படி மோரையெல்லாம்
பொசுக்கிவிட்டான்

தானுமிகக் கஷ்டப்பட்டான் தபிக்கும்படி
இந்திரஜித்தை
மானங்கெட மிகவடித்தான் மசக்குமாகத்
தான்பாவித்தான்

தேகபல மிகக்குறைந்தான் தேம்பித்தேம்பி மிகவழுதான்
சோகப்பட்ட நிலைமைதனைச் சொல்லப்போமோ
எல்லையுண்டோ?

கடைசியாக அஸ்தரமொன்றைக் கைனாலே
லட்சுமணன்
தொடுத்தானையா அதைக்கண்டு துள்ளிமிகப்
பரிதபிக்கும்

அவஸ்தையிலே இந்திரஜித்தை அஸ்தரம்வந்து
அதஞ்செய்த
விவரமதைச் சொல்லக்கேட்டால் வெகுகஷ்டப்
படுவீரையா

2320. இந்திரஜித்தன் மடிந்தானெனும் இந்தச்சேதி
தனைக்கேட்டுச்
சிந்தைநொந்து தசகண்டன் சிம்மாசனந் தனில்விருந்து

மூர்ச்சையாகி வீழ்ந்தானம்மா முகூர்த்தக்கால
மானதன்மேல்
மூர்ச்சைதெளிந் தெழுந்தரக்கன் முடிவில்லா
விசனத்தோடு

மகனேஎந்தன் கண்மணியே மடிந்தாயோ
வாழ்வொழிந்து
அகமகிழச் செய்தென்னை ஆதரிப்பா யென்றிருந்தேன்

எண்ணமெல்லாம் வீணாயிற்று என்னையிப்போ
எதிரிகளின்
கண்ணெதிரில் காட்டித்தந்து கண்மறைந்தேன்
போனாயடா

சத்துருக்களின் பயமெனக்குச் சற்றுமுண்டோ
நீயிருந்தால்
இத்தரையி லுன்னைவெல்வோர் எவருமில்லை
என்றிருந்தேன்

2325. என்னைவிடப் பராக்கிரமத்தில் எத்தனையோ
மீறியுள்ள
உன்னைப்பரி கொடுத்துவிட்டு உலகிலெனக்
காசையுண்டோ?

நிரும்பலையின் யாகமது நிறைவேறத் தடைப்படவும்
இகவாழ்வுனக் கொழியுமென்று எண்ணிவிட்டேன்
அதன்படியே

ஆயிற்றிப்போ ஆபத்துகள் அநேகம்வந்து நேரலாச்சு
காயமெனை நானுமினி கண்டிப்பா யொழித்திடுவேன்

வீரகவர்க்கம் நீயடைந்தாய் வேண்டிநானும்
அவ்விதமாய்க்
கோரியுன்னை வந்திடுவேன் குவலயத்தை
வெறுத்தேனடா

மகனேயென் றனேகவிதம் மனஞ்சகியா தழுதடங்கி
முகந்தனிலே ரக்தஞ்சிந்த முன்கோப மிகவுங்கொண்டு

2330. வந்திருக்குங் கஷ்டங்கட்கு வைதேகி காரணமாம்
இந்தட்சணம் அவளைக்கொல்வேன்
இரக்கங்கொள்ளே னென்றுவாளை

உருவிக்கொண்டே அசோகவனம் உடனேசென்றான்
இலங்கேசன்
வருமவனைச் சீதைகண்டு வாளுடனே வருகிறானே

இந்திரஜித்தன் மடிந்தவொரு துவினால்
கோபங்கொண்டு
வந்துநம்மை வதைபுரிய வஞ்சகன்றான் வந்துவிட்டான்

கைப்பலத்தை நாதரிடம் காட்டாமல் பெண்ணான
தெய்வமேயென் றிருக்குமென்னைத் தீங்குசெய்யத்
துணியலாமோ?

உயிர்மிஞ்ச மாட்டாதினி உரைத்தபடி அனுமாருடன்
நயந்துபிராண நாதரிடம் நாம்போகா திருந்ததான்

மதியீன மென்றுமிக மனந்துடிக்கக் கதறிக்கொண்டு
சதிகாரனைப் பார்த்துப்பார்த்துச் சங்கடத்தோ
டிருந்தாளம்மா

வேகமாக அரக்கன்வந்தான் வேண்டாமென்
றநேகர்வந்து
சோகப்பட்ட வேளையிது சொல்லும்வாக்கைக்
கேளுமையா

ஸ்திரீவதைதான் செய்வதுண்டோ சிரித்திடுவார்
ஜகத்திலுள்ளோர்
ரூபாதஞ்சீதை மீதில்வேண்டாம் கொல்வதற்குத்
துணியவேண்டாம்

ஆக்கிரகத்தைக் காட்டுவது அஞ்சும்பெண்மே
லெங்குமுண்டோ?
நீக்குப்போக்கு தனையறிந்து நீர் துணியு
மென்றுரைத்தார்

அவர்கள்வாக்கை அவமதித்து ஆத்திரமாய்
அரக்கன்வந்தான்
விவரப்படச் சுடாரிசுவனெனும் வினையமுள்ள
மந்திரிவந்து

முன்னின்று மறித்துக்கொண்டு முறையல்ல
எனதுரையே
மன்னவர்கள் இவ்விதமாய் மனந்துணிதல் தருமமல்ல

சீதையைக்கொன் றாவதென்ன சிந்தித்துப் பாருமையா
ஆதரித்தே அபிமானிக்க ஆனவளே சீதையையா

ஜானகிபோ லெங்குமுண்டோ சர்வாங்க சுந்தரியே
வானுலகின் பெண்கள்கூட வைதேகி விழலுக்கிணை

சொல்லப்போமோ ஆசையெல்லாம் சுந்தரிமேல்
வைத்தீரன்றோ
கொல்லுவேனென் றிப்பொழுது சூரரெஞ்சங்
கொள்ளலாமோ?

எதிரிகளை வென்றவுடன் இணங்கும்பெண்மே
லணுவளவும்
உதிக்கப்போமோ குரோதமையா உம்மில்சற்று
ஆலோசிப்பீர்

2345. சத்துருக்களை வென்றிடலாம் ஜானகியைக்
கொன்றுவிட்டால்
இத்தலத்தில் அவளையப்பால் எப்படிநீ ரடையக்கூடும்?

ஆசையெல்லாம் வீணாகுமே அகமெலிந்து மிகஅழுவீர்
மோசம்போக வேண்டாமையா முன்னும்பின்னும்
எண்ணிப்பாரீர்

பெற்றமக்கள் தனைமறந்தீர் பிறந்தபிராதாக்
களைமறந்தீர்
மற்றகதங் களைமறந்தீர் மாதுபசாம் சீதையின்மேல்

தாகந்தனை மிகவும்வைத்தீர் தவறாமல் அதைக்காத்தீர்
மோகந்தனை வன்விடுத்தீர் முன்கோபம் வன்வகித்தீர்

ஆவிதனை ஒழித்திடலாம் அற்புதசுந் தரிசீதை
பாவமேதும் அறியாமல் பயந்தவளாய் இருப்பவர்மேல்

2350. கையெடுக்கப் போகாதையா கண்கலங்கி வாடும்படி
செய்திடவும் ஆகாதையா செப்புமெந்தன்
வாக்கைக்கேளீர்

வதைபுரிய எண்ணிவந்து வைதேகியைக் கண்டவுடன்
மதிமயங்கிச் சினமடங்கி மலர்கொண்டு பூஜிப்பரே

அந்தப்படி நீருஞ்செய்வீர் அதிலெனக்கு ஐயமிலை
இந்தவேளை எந்தன்கடன் என்னியும்மைத்
தடுப்பதையா

என்கடமை தனைச்சொன்னேன் என்மீதுவருத்தம்
வேண்டாம்
அன்புகொள்ளுஞ் சீதையின்மேல் ஆத்திரத்தை
விட்டொழியும்

அரும்பொருளை அழிப்பதுண்டோ ஆசைதனை
ஒழிப்பதுண்டோ?
வருஞ்சுகத்தை மறுப்பதுண்டோ வதைபுரிந்தால்
வருவதுண்டோ?

2355. நாமெல்லாம் கூடிக்கொண்டு நாசஞ்செய்வோம்
எதிரிகளைத்
தாமதமே வேண்டாமையா தருந்தசதுர் சரசியாகிய

இன்றுயுத்தஞ் செய்வோமானால் இழிவடையோம்
வென்றிடுவோம்
சென்றிடுவோம் போர்புரியச் சீக்கிரமாய்
வாருமென்றான்

மந்திரிவாக்கைத் தசகண்டன் மனதில்கொண்டு
ஆலோசித்தான்
அந்தரங்கப் பிரியமுள்ள அமாத்தியனென் றேமதித்து

மனக்கொதிப்பை விட்டொழித்தான் மாதரசைக்
கண்ணில்கண்டான்
தனதுநெஞ்சை மிகவும்நொந்தான் தப்பிதமென்
றஞ்சிநின்றான்

அடுத்துச் சீதை முன்னிலையில் அசங்காமல்
நின்றானம்மா
சுடினெஞ்சங் கொண்ட அந்தக் காதகனாம்
இலங்கேசன்

கொலைபுரிய ஜானகியைக் கொஞ்சமுந்தான்
மனந்துணிய
உலகிலெந்தப் பாபிக்குமே ஒருக்காலும் உண்டாகுமோ?

இரக்கமிகக் கொண்டரக்கன் ஏனிந்தப்
புத்திகொண்டோம்
கருணைகொள்ள உள்ளவள்மேல் கையெடுக்க
வந்ததுந்தம்

அறிவீன மென்றெண்ணி அநேகவிதஞ் சிந்தித்துக்
குறித்துத்தன்னி லாலோசித்துக் குணமுரைத்த
மந்திரியோடு

திருப்பிப்போனால் சபைதனிலே சிம்மாசனந்
தனிலிருந்தான்
கருகிப்பார்த்தான் அமரபுரியக் காவலனைப்போ
லக்கரமுள்ள

மூலபல யுத்தமும் அந்தச் சேனைகள் மடிந்ததும் மாயா ஜனகன் சீதைமுன் வருவதும், அவனைக் கண்டு சீதை புலம்புவதும், அப்பால் சூதென்று அறிந்து அவமதிப்பதும், மூலபல படைகளொழிந்தது கேட்டு இராவணன் விசனப்படுவதும், ஸ்ரீராமனையும் லட்சுமணனையும் மைராவணன் கொண்டுபோவதும் அவனை வென்று அனுமார் திரும்பக் கொண்டு வருவதும்

மூலபலச் சைன்யங்காள் முடிவுபெற லாகுமென்று
காலதேசா திகளையெண்ணிக் கால்நொடியில்
அழைத்துவர

அரக்கர்மன்ன னாக்ஞைசெய்தான் அவ்விதமாய்க் கிங்கரர்கள்
துரிதமாகப் போயழைக்கத் தோரணையாய் மூலபலப்

படைகளெல்லாம் வந்துசேர்ந்தார் படைத்தலைவன் வன்னிதனைத்
திடப்படுத்தி அனுப்பித்தந்தான் தீவிரமாய் யுத்தஞ்செய்யப்

புத்திலிருந் தீசல்வரும் புதுமையைப்போல் படைகளெல்லாம்
சுத்தியெங்கும் கொக்கரித்தார் தோள்கள்தட்டி எதிர்த்துவந்தார்

மலைபோலப் பருத்ததலை மரங்கள்போன்ற வளர்ந்தமயிர்
புலிகள்போலப் பாயுங்குணம் பொதிகள்போல வயிறுகளும்

கோபுரம்போல் பல்லுகளும் கோணவாயக்கால் போலுதடும்
கூபங்கள்போல் காதுகளும் கோணமாக முகங்களுமே

கோட்டைவாசல் போல்வாயும் கொடுமுடிபோல் மூக்குகளும்
காட்டுத்தீப்போ லெரியுங்கண்கள் காளமேகம் போலுடலும்

பாக்குமரம் போலக்கைகள் பனைமரம்போ லுயர்ந்தகால்கள்
வாக்குத்தொளி இடியையொக்கும் வந்தவர்கள் முகமோவெனில்

ஆனைமுகம் ஆவிமுகம் ஆட்டின்முகம் மாட்டின்முகம்
பூனைமுகம் சுரடிமுகம் பொல்லாத புலிமுகங்கள்

கழுதைமுகம் குதிரைமுகம் காட்டெருமை
முசுமுதலாய்ப்
பழுதுடைய முகவிகாரம் பலப்பலவா யிருந்தாரம்மா

ஒருதலையர் பலதலையர் ஒருகையர் பலகையர்
பெருதலையர் சிறுதலையர் பேய்த்தலையர்
நாய்த்தலையர்

2375. பேய்கள் மீதும் புலிகள் மீதும் பெரும்பூதங் களின்மீதும்
பாயுஞ்சிங்கம் யாளிமீதும் பலவிதமாம்
மிருகங்கள் மீதும்

ரதத்தின்மீதும் வந்தாரவர் ரணகளத்தை நாடியம்மா
மதத்துடனே பலகோடி மாபாவி ராட்சதர்கள்

ஆட்டிறைச்சி மாட்டிறைச்சி அடவிப்பன்றி
கழுதைஇணம்
வாட்டிப்பல பேய்கள்தர வாங்கிபுசிப்பார்
சிலஅரக்கர்

குடங்குடமாய் ரத்தங்களும் கொப்பளையில்
கள்ளுகளும்
இடையிடையே பேய்கள்தர எல்லாங்கொண்டு
வெறிகொள்வார்

வெறியேறி வாய்வறண்டு மேகங்களைப் பிழிந்துண்பார்
அறியாமல் நரன்வலிமை அவனெங்கே எங்கேயென்று

2377. இணம் - கொழுப்பு; அடவிப்பன்றி - காட்டுப் பன்றி

2380. தேடியெங்கும் கருங்கடல்போல் திரண்டுவரும்
படைகள் தம்மை
நாடிக்கண்டார் வானரரில் நடுங்கிச்சில
படைகளெல்லாம்

எடுத்தாரோட்டம் இவர்முன்னே எதிர்த்துநின்றால்
காலனையும்
கொடுப்பாரடி இடுப்பொடியக் கொடுமைசெய்வார்
இவருடனே

சண்டைசெய்ய லாகாதென்று சகலருமாய்ப்
பயந்துகொண்டு
மண்டைபிளந் திடுமென்று மனதிலெண்ணிச்
சீக்கிரமாய்

வாருமென்று கூவிக்கொண்டு வானரர்கள் ஓடுகையில்
தீரனான வாலிமகன் திருவுடிகொண்டு
பார்த்தானதைக்

கிளம்பியவர் முன்நுதித்தான் கேலிசெய்ய
நடக்கின்றீரே
தளங்களெல்லாங் களைந்திடவே தருணந்தனில்
மோசஞ்செய்தீர்

2385. நம்பியுள்ள மன்னர்களை நட்டாற்றில் விழுங்கினைத்தீர்
அம்புவியில் உயிரைவைத்து ஆவதுண்டோ
அதைநினைப்பீர்

நடுவழியில் விடுவதிலும் நாவுதனைப்
பிடுங்கிக்கொள்ளத்
திடப்படுதல் உத்தமமே தெரிந்துடனே திரும்புவீரே

அடுத்துதவி செய்யவந்து அலறியோடும் பேடிகளாம்
மடயர்களே வராவிடிலோ மகத்தான கஷ்டம்வரும்

உயிருடனே சுக்கிரீவர் உங்களைத்தான்
விடுவதுண்டோ
பயந்தேஎண்ணித் திரும்பிவந்து பக்திசெய்வீர்
இராமருக்கு

இதுவரையில் அரக்கர்களில் எத்தனையோ
வீரரெல்லாம்
அதமான சேதியெல்லாம் அறியீரோ மறந்தீரோ

2390. மடிந்தவெல்லாம் அரக்கர்களே மாதவனார்
படையிலேதும்
இடமுண்டோ சேதம்பாரீர் இறந்தவரும்
எழுந்தனரே

விழுந்தவர்கள் எழுந்துவந்தால் வெல்லுதற்குத்
தடையுண்டோ?
வழுவேதும் வருவதில்லை வந்திடுங்கள் எந்தன்கூட

உங்களிட பலத்தைநம்பி உதவிபெற ஸ்ரீராமர்
இங்குவந்தா ரென்றுநீங்கள் எண்ணவேண்டாம்
நிச்சயமே

அவருடைய ஒருகணையே அண்டமெல்லாம்
அழிக்கும்பாரீர்
குவலயத்தில் அவர்சக்தி கொஞ்சமுந்தான்
அறிவாருண்டோ?

மூலபலப் படைகளெல்லாம் முகூர்த்தநேரந்
தனில்மடியும்
நீலவர்ணன் வல்லமையை நீங்களிப்போ
பார்த்திடுவீர்

விலகியொரு புறமிருப்பீர் வேடிக்கையைக்
கண்டறிவீர்
வருத்தமூலப் படைகளெல்லாம் வதையாகும்
இப்பொழுது

வாருமென்று வானரரை வலுவந்தஞ் செய்கையிலே
கோரிவந்து மறிக்கின்றான் கொன்றிடுவான்
சுக்கிரீவனும்

உயிரிழந்து பிழைக்குமொரு உண்மையெல்லாம்
இவனறியான்
பயந்தவரைப் பிடித்திழுத்தால் பண்ணவுண்டோ
மீறியேதும்

வந்ததெல்லாம் அனுபவிப்போம் வாருங்களென்
றெல்லோரும்
சிந்தைதனில் அச்சங்கொண்டு ஸ்ரீராமரை
அடுத்துவந்தார்

மூலபலச் சேனையெல்லாம் மும்முரமா
எதிர்த்துவந்தார்
காலதேசா திகளறிந்து கர்த்தன்ஸ்ரீ ராமச்சந்திரன்

அந்தமூலப் படைகளெல்லாம் அதமாக்க
நிச்சயித்து
விந்தையாக அமர்புரிய வேண்டுமென்று
ஆலோசித்துத்

தம்பியையும் சுக்கிரீவரையும் தகுந்தமற்ற வீரரையும்
நன்மையுள்ள வீபீஷணரோ டெல்லோர்க்கும்
நன்மையெண்ணிப்

பார்த்துரைப்பார் நீங்களெல்லாம் படைகளோடு
சுகமாகவே
சேர்ந்திருப்பீர் என்னைவிட்டுச் செய்யும்யுத்தம்
பார்ப்பீரென்று

சகலரையு மோரிடத்தில் தங்கும்படி வைத்துவிட்டு
அகந்துணிந்து வில்லுடனே அரக்கர்களை
எதிர்த்துவந்து

கவுரவமாய் நின்றுகொண்டான் கருகிவரும்
அரக்கர்களை
எவருங்கண்டு பயந்துவிட்டார் இராமர்மிக
அலட்சியமாய்

2405. இருக்கையிலே பார்த்தரக்கர் இவனைவெல்லப்
படைவேண்டுமோ
அரைநொடியில் இவனைநாம் அதங்செய்வோ
மென்றுவந்து

சூழ்ந்துகொண்டார் அப்பொழுது கவாமிமிகத்
துணிந்திருந்தார்
ஆழ்ந்தநல்ல யோசனையோ டச்சமின்றி நிச்சயமாய்

ரகுராமனைப் பார்த்தரக்கர் ரணவீர சிங்கம்போல
அகந்துணிந்து நிற்பதுதான் அதிசயமென்
றெண்ணிச்சொல்வார்

பித்தனென்பா ருன்மத்தனென்பார் இத்தனைபோர்
கத்திநிற்கச்
சித்தமதில் மெத்தத்தைரியம் வைத்ததென்ன
சொல்லுமென்பார்

அடியுமென்பார் கடியுமென்பார் பிடியுமென்பார்
இடியுமென்பார்
மடியில்கைபோட் டிழுங்குவென்பார் துடிதுடிக்கப்
புடையுமென்பார்

2410. சுட்டுமென்பார் இட்டுமென்பார் அட்டியின்றி
வெட்டுமென்பார்
சுட்டிச்சென்றே எட்டுமென்பார் தொட்டிவனை
மெட்டுமென்பார்

குள்ளனென்பார் கள்ளனென்பார் துள்ளிவிழக்
கிள்ளுமென்பார்
தள்ளுமென்பார் பள்ளந்தனில் மெள்ளக்கையில்
கொள்ளுமென்பார்

வாருமென்பார் பாருமென்பார் நேருமென்பார்
தேருமென்பார்
சூரனென்பார் தீரனென்பார் கோரிவந்தா
னொடுவனென்பார்

கையைப்பிடித் திழுங்குவென்பார் மெய்வருந்தக்
கொடுங்குவென்பார்
பய்யனிவன் மிண்டனென்பார் கொய்யுமிவன்
தலையையென்பார்

வல்லபன்போல் காணுதென்பார் சொல்லுமிப்போ
கொல்வேனென்பார்
மல்லயுத்தஞ் செய்வேனென்பார் நில்லிவனைப்
பார்ப்போமென்பார்

2415. அச்சமணு வில்லையென்பார் மிச்சமின்று
உண்போமென்பார்
மச்சங்கொண்டு போவோமென்பார் துச்சனிவன்
வெல்வோமென்பார்

அழகுள்ள புருஷனென்பார் மழலைச்சொல்
குழந்தையென்பார்
இழுத்தெறிவோம் வாருமென்பார் கழுத்தில்கை
போடுமென்பார்

இராமனிவன் தானோவென்பார் கோமளனாம்
தொடாதேயென்பார்
கேமமிவ னடையானென்பார் ஆமிவனை
விடாதேயென்பார்

மனத்துணிவு மிகவுமென்பார் நினைவுநிலை
கொள்வோனென்பார்
சினமறிந்து செய்வானென்பார் வினைவசத்தால்
வந்தானென்பார்

உத்தமன்போல் காணுதென்பார் சத்தமின்றிப்
பிடியுமென்பார்
சுத்தமுடன் ராமனென்பார் வித்தைகாட்ட
வந்தானென்பார்

2420. குணமுள்ளோன்போல் காணுதென்பார் உணர்விழந்து
வந்தானென்பார்
வணங்காமுடி யாவனென்பார் துணையின்றித்
துணிந்தானென்பார்

அஞ்சுங்குண மில்லையென்பார் வஞ்சகன்போல்
காணுதென்பார்
நெஞ்சுறுதி மிகவுமென்பார் கொஞ்சம்பொறும்
பார்ப்போமென்பார்

அங்குசத்தி பாருமென்பார் டங்குமில்லாப்
புருஷனென்பார்
சங்கையிலாத் தீரனென்பார் தங்கள்கையால்
மடிவானென்பார்

மந்தப்புத்தி ராமனென்பார் சிந்தரத்தஞ்
செய்வோமென்பார்
தந்திரமாய்ப் பிடியுமென்பார் வந்துவிட்டான்
முந்துமென்பார்

மன்னவன்போல் காணுதென்பார் அன்னைபிதா
புண்யரென்பார்
என்னைவெல்ல மாட்டானென்பார் சின்னப்பயல்
ராமனென்பார்

2425. வகையறிந்த சீலனென்பார் அகந்தையுள்ள
வீரனென்பார்
மகிமையுள்ள புருஷனென்பார் திகிலடைய
மாட்டானென்பார்

எளிதில்வெல்வோம் இவனையென்பார்
பிளந்தெறிவோம் உடலையென்பார்
கனலில்வசங் கொள்வோமென்பார் வெளியில்விட
மாட்டோமென்பார்

பயமின்றி வந்தானென்பார் தயவிவன்மே
லாகாதென்பார்
நயந்திவனை அழையுமென்பார் வயணமாக
உதையுமென்பார்

துஷ்டனிவன் விடாதேயென்பார் கஷ்டப்படச்
செய்வோமென்பார்
துஷ்டனைப்போ லொட்டுமென்பார் முஷ்டியுத்தஞ்
செய்வோமென்பார்

கட்சிகொண்டு வந்தானென்பார் லட்சியமில்லாச்
சூரனென்பார்
பட்சிபோல இவனென்பார் சிட்சைசெய்தால்
போதுமென்பார்

தபசிகள்போல் காணுதென்பார் விபரீதம்
வினையுமென்பார்
சுபமொழியும் நமக்கென்பார் உபத்திரவிக்க
வேண்டாமென்பார்

வதைபுரிய வேண்டுமென்பார் மதமொழியச்
செய்வோமென்பார்
சதைபிடுங்கித் தின்போமென்பார் சதிசெய்து
வெல்வோமென்பார்

கடவுளர்போல் காணுதென்பார் அடிவணங்கிப்
பணிவோமென்பார்
கொடுமைசெய்ய வேண்டாமென்பார்
தடுப்போமென்பார் அடுப்போர்களை

இந்தவிதம் பலவாறாய் எல்லோருஞ்
சொல்லிக்கொண்டு
வந்துபக்கம் நெருங்குகையில் வாமிலிவா
றுரைக்கின்றார்கள்

தீரனென்றால் இவனுடைய தீரமதே தீரம்வெரு
சூரனும்நம் மெதிரில்வந்து சுதந்தரமாய்
நிற்பதுண்டோ?

ஆகையினால் ஜாக்கிரையாய் அமர்புரிய
வேண்டுமென்று
மோகமுடன் பேசிக்கொண்டே
மொய்த்துக்கொண்டார் ராகவனைச்

சேனாபதி ஆக்ஞைப்படி சிலபடைகள் விலகுகின்றார்
நானாவித அரக்கர்களாம் நாடிவந்த
படைகள்சொல்வேன்

இருநூறு வெள்ளங்கொண்ட இராட்சதர்கள்
சூழ்ந்தாரெம்மா
கருதியவர் ஆயுதங்கள் கணக்கின்றிச்
சொரிந்தாரம்மா

அரக்கர்விட்ட ஆயுதங்கள் அனைத்தையும்
அறுத்தெறிந்து
சரங்கள்நூறா யிரங்கள்விட்டுச் சுவாமியந்த
அரக்கர்களைப்

புகைத்துவிட்டார் அதன்பிறகு புத்தியுள்ள
வன்னிபார்த்து
அகம்நொந்து ஆலோசித்து ஆனாலும்
பார்ப்போமென்று

2440. பின்னுமுன்னூறு வெள்ளச்சேனை பேயரக்கர்
களையேவ
வன்னியாக்களைப் படியவர்கள் வந்துரகு
ராமன்றனை

வளைத்துக்கொண்டு சக்கரஞ்சூலம் வாளுடனே
அஸ்திரங்கள்
அளவில்லாமல் ராமன்மீது அரக்கரெல்லாம்
எடுத்துவிட்டார்

அவைகளெல்லாம் பொடிபடவே அம்புமாரி
ராமன்செய்து
புவனமெல்லாம் நடுங்கும்படி போதங்கொண்டு
கோதண்டத்தை

வளைத்துச்செய்தார் டங்காரம் வல்லரக்க
ரோடிவந்தார்
மளமளவென் றேராமன் மாட்டிவிட்டான்
கோடிசரம்

சரங்கள்போய்ப் பாதகரைச் சடுதியாகச்
சிரமறுத்தும்
கரமறுத்துங் காலறுத்தும் கண்டகண்ட
மாகச்செய்து

2445. அத்தனைபோ அரக்கர்களை அதமாக்கி
யொழித்திடவும்
மெத்தவன்னி மனமருண்டு மேதினியில்
மனிதன்முன்னே

அரக்கரிந்த விதமொழிந்தால் அனுகூலம்
அடைவதுண்டோ
இருக்கும்படை யாலுந்தானே ஈசுத்தும்
அனுகூலத்தை

அடையமாட்டோ மென்னசெய்வோம்
அரக்கர்மன்ன னிடந்தனிலே
துடித்துவிழ ராமனைநாம் தொலைத்திடுவோ
மென்றுரைத்து

வாக்குந்தத்தம் வீணாகுமே வல்லபனென்
றிருந்தோமே
நாக்குறுதி போயிற்றிப்போ நாணப்பட
லாயிற்றிப்போ

அனுகூலம் அடையாமல் அரக்கர்மன்ன
னிடம்போனால்
கனங்குறையும் மனந்தளரும் காயமினி வைப்பதிலே

2450. பெருமையில்லை என்றுமிகப் பித்தனைப்போல்
பிரமித்திருந்து
கருதியப்பால் துணிந்துநின்றான் காதகனும்
வன்னியப்போ

சிறுமனிதர்க் கஞ்சிவிட்டால் சிரித்திடுமே
ஜகமெங்கும்
குறித்துயுத்தஞ் செய்திடுவோம் கொன்றிடுவோம்
ராமனைநாம்

அஞ்சவேண்டா மென்றெண்ணி ஐநூறு
வெள்ளஞ்சேனை
மிஞ்சினதா யுள்ளதெல்லாம் மேல்விழுந்து
யுத்தஞ்செய்ய

அலைப்பித்தந்து தாஞும்போனான் அட்டகாசஞ்
செய்துகொண்டு
மனந்துணிந்து ராகவனை மாகடல்போல்
எதிர்த்து வந்து

வளைத்துக்கொண்டு வாளிகளை வருஷம்போல்
சிலர் பொழிந்தார்
எளிதில்வெல்வோ மென்றுசொல்லி எத்தனையோ
பேரடுத்தார்

2455. வாங்குவளை தடியுலக்கை வாள்வேலா யுதம்பிண்டி
தீங்குசெய்யுஞ் சூலங்கண்ட கோடாலி தெண்டுமுதல்

சொல்லும்பல ஆயுதங்கள் தூவிவந்தார்
சிலர் நெருங்கி
கொல்லுங்கொல்லு மென்பார்சிலர்
கொய்யுங்கொய்யு மென்பார்சிலர்

எதிரியைப்போல் வாய்திறந்து எடுத்துவிழுங்
கவருவார்
கோரப்பல்லைக் காட்டிக்கொண்டு கொன்றுகடித்
திடவருவார்

உதையுமென்பார் சிதையுமென்பார் உதட்டைக்கடித்
துதட்டிவந்து
கதையைக்கொண்டே வதையுமென்பார்
சுட்டுமென்பார் கிட்டுமென்பார்

குட்டுமென்பார் தட்டுமென்பார் மட்டுப்பட
நெட்டுமென்பார்
வெட்டுமென்பார் முட்டுமென்பார் விட்டுவிட்டால்
நட்டமென்பார்

2460. மசக்கமிவன் வசப்படுவான் கசக்கிக்கையால்
நசுக்குமென்பார்
புஜபலவான் நிஜமாயென்பார் அசந்தால்பொசிக்
கிடுவாளென்பார்

இவ்விதமாய்ச் சூரியனை இருள்மேகம்
மறைப்பதுபோல்
அவ்வரக்கர் ராகவனை அடுத்துவந்து சூழ்ந்திடவும்

செங்கமலக் கண்ணன்கண்டு சிரித்துக்கொண்டு
கோதண்டத்தை
மங்களமாய்ப் பிடித்துக்கொண்டு மடித்திடவே
தானவரை

வருணாஸ்தரம் வாயுவாஸ்தரம் மருமாஸ்தரம்
மந்தராஸ்தரம்
அருணாஸ்தரம் மரணாஸ்தரம் அயனாஸ்தரம்
மயனாஸ்தரம்

இந்தராஸ்தரம் சந்தராஸ்தரம் இருக்கும்பல
அஸ்திரங்கள்
மூந்திக்கொல்லும் பாணங்களும் முறையறிந்து
அநேகம்விட்டார்

தேஜஸுள்ள பாகபதம் திபியாஸ்தரம்
சூரியாஸ்தரம்
கேசவனார் அஸ்திரமும் கிரமமாக எடுத்தெடுத்து

விட்டுவிட்டான் கட்டுக்கட்டாய் எட்டுத்திக்கும்
உஷ்ணமாகி
வெட்டிவெட்டித் துட்டர்விட்ட அத்தனையும்
அறுத்தெறிந்து

சரத்காலம் போலராமன் சரமாரி பொழிந்துவிடும்
கரவேகம் ஆறநிவார் கர்த்தன்சிவன்
தானநிவார்

எங்கெங்கும் ராமபத்தரன் என்றுசொல்லும்
படிதிரிந்து
அங்கங்கு அரக்கர்களை அடித்துச்சரங்
கூடங்கட்டி

ஒருவரையும் தப்பிவெளி ஓடாமல் உள்நிறுத்திச்
சரவருஷம் கொண்டுராமன் தானவரை மாட்டுகையில்

சிரமறுந்தார் உரமறுந்தார் சீறுமையன் கூறுமம்பால்
கரமறுந்தார் வரமழிந்தார் காலறுந்தார்
தோலுரிந்தார்

வாய்கிழிந்தே வீழ்வார்சிலர் வயிறுபிதுங்கி
வீழ்வார்சிலர்
போய்த்குடித்தே வீழ்வார்சிலர் புரண்டழுது
மடிவார்சிலர்

ஆடுகள்போல் இவ்விதமாய் அழிந்திடவே
ராமன்விளை
யாடியபின் மோகனஞ்செய் அஸ்திரத்தை
எடுத்துவிட்டான்

அந்தஅஸ்திர மகிமையினால் அரக்கருக்குள்
பரஸ்பரமும்
வந்துராமன் நிற்பதுபோல் மாயமுண்டாய்
அரக்கர்களே

ஒருவன்றனை மற்றொருவன் உண்மைபோல
ராமனென்றே
கருதிச்சண்டை செய்துகொண்டு சால்நொடியில்
யாவருமே

2475. மடிந்துபோனார் அப்பொழுது மாயவனார்
வல்லமையைப்
படித்தாரம்மா தேவர்களும் பரிகத்த முனிவர்களும்

வானரரும் மற்றவரும் வந்தமூல பலங்களெல்லாம்
சேனையேதும் மிச்சமின்றி ஸ்ரீராமன் கைனாலே

ஒழிந்தவொரு காட்சிதனை உற்றறிந்து பார்த்தவர்கள்
உழைப்பதுண்டோ ஸ்ரீராமன்போல் உலகுதனில்
எவராயினும்

அற்புதமாம் சக்தியென்று அவர்மிகவும்
மனமகிழ்ந்து
வற்புறுத்திப் புகழ்ந்தாரம்மா வானவர்கள்
தேன்மலரை

வெகுவாக ராமன்மீது விழும்படியாய்ப் பெய்தார்கள்
அகமகிழ்ந்தான் ஸ்ரீராமன் அனுஜனுமே
மகிழ்ந்தானம்மா

2480. சுக்கிரீவரும் விபீஷணரும் சுவாமிதனை வணங்கிநின்று
உக்கிரமாக அமர்புரிந்த உமதுசக்தி
அறிவோருண்டோ?

எத்தனையோ படுபாவிகள் இமைப்பொழுதில்
மடியச்செய்த
உத்தமனே புத்தியனே உளமகிழ்ந்தோம்
மிகக்குளிர்ந்தும்

மூலபலப் படைகள்தம்மை முக்கியபல மாகவெண்ணிக்
காலமெல்லாம் நம்பிக்கொண்டு கர்வங்கொண்டான்
இலங்கேசன்

கர்வபங்கஞ் செய்தீரையா கைமெலிந்தான்
அரக்கனினி
வர்மங்கொண்டு செய்வதென்ன வணங்காமுடி
ஒழிவானென்றான்

மூலபலச் சேனையெல்லாம் முகூர்த்தமொன்றில்
வதைத்துராமன்
காலனுக்கு வேலையிட்டார் காளிகட்கும்
விருந்திட்டார்

2485. உலகிலுள்ள கழுகுமுதல் உணவுக்காகத் திரிந்தலைந்து
குலங்களோடு பறந்துவந்து குவியலாகக் கிடக்கும்பிரேத

கூட்டங்களைக் கண்டுமிகக் கொண்டாட்ட
மிகக்கொண்டு
ஆட்டபாட்டங் கொண்டுபசி அடங்குமட்டும்
உண்டதுகள்

பாணமொன்று கிளம்புமம்மா பலகோடி
அதில்விளையும்
காணுமந்தப் பாலங்களின் ஆணவத்தை யாரறிவார்

கல்லில்காணும் சருங்களம்மா கண்டதுண்டஞ்
செய்யுமம்மா
எண்ணியதன் தோரணையை இவ்விதமென்
றுரைக்கப்போகா

ஒருசரத்தால் பலஅரக்கர் உயிரிழப்பார்
உதிரஞ்சிந்திப்
பெருங்காற்றுப் போலெழும்பும் பேயரக்கர்
களையொழிக்கும்

2490. கோதண்டத்தின் மணியதுதான் குணமாக
ஒருமூகூர்த்தம்
மோதிநன்றா யடித்ததம்மா மூலபலக் கணக்கறிய

வந்தமூல சைன்யங்களின் வாஸ்தவமாம்
சங்கியைதனை
அந்தமணி நாதங்கொண்டு அறிந்திடவே வால்மீகர்

கணக்குரைப்பா ரிணக்கமாகக் கண்டுகொள்வீர்
அதைக்கொண்டு
உணர்வுள்ள மங்கையரே உரைப்பதென்ன
நானதனை

போர்புரிய மூலபலம் போனதன்மேல் ராவணப்பேய்
பார்த்துத்தள்ளி லாலோசித்துப் பாதகனாம்
மகோதரனை

வரவழைத்துச் சொன்னபடி வஞ்சகமாய்
மாய்கையினால்
தருமசீலர் ஜனகர்போலத் தட்சணத்தில்
உருவுண்டாக்கி

2495. அந்தமாயா ஜனகன்றனை அரக்கன்மகோ
தரன்றானே
பந்தித்துக் கயிறுடனே பார்க்கும்படி
சீதைமுன்னே

2491. சங்கியை - எண்ணிக்கை
2495. பந்தித்து - கட்டி

இழுத்துவந்தான் அப்பொழுது ஏங்கியேங்கி
மாயாரூடா
அழுதுவந்தான் கண்ணீர்சொரிய அன்னைசீதை
கண்டுமிக

விசனங்கொண்டு புலம்புகிறான் விதிவசத்தால்
அரக்கரிட
வசமாகி நானொருவள் வருந்துவது போதாதென்று

நீருமிப்போ கட்டுப்பட்டு நேரிலென்முன்
வரலாயிற்றே
ஆரிந்தக் கஷ்டந்தனை அனுபவிக்கப்
போமையா

சீருடனே அயோத்தியிலே ஸ்ரீராம ருடன்வாழக்
கோரியென்னைத் தந்ததன்மேல் குணமாக அங்கேநான்

2500. இருக்கையிலே வராமலிப்போ இருவருமாய்ச்
சிறையிருந்து
பரிதபிக்கும் படியாகப் பார்த்திடவே
ஆனோமையா

உம்மையுமே அரக்கரிப்போ உபத்திரவிக்கும்
கஷ்டந்தனைச்
செம்மையாக அறிந்தேனையா சித்தமிக
நொந்தேனையா

எனதுபாதரிடந்தனிலே இந்தச்சேதி தனையுரைக்க
அனுமாரு மிங்கிலையே என்றழுதாள் பரிதபித்து

மாயாரூப ஜனகனப்போ மனந்துணிந்து
புலம்பிக்கொண்டு
வாயால்சொன்னான் வல்லரக்கன் வசப்படுவாய்
பெண்ணேயென்று

கேட்டுச்சீதை மிகப்பயந்து கெடுத்தானே அடுத்துவந்து
மூட்டிவிட்டான் வயிற்றிலக்கினி மோசம்போனோம்
தந்தையென்று

2505. தந்தையிது வல்லநம்ம தலையில்கல்லைப் போடவந்த
விந்தைரூபி என்றுநம்பி வெருவிதமாய்
நிந்தைசெய்தான்

சீதைமனங் கலைப்பதற்குச் செய்தரூது வீணாயிற்று
மதியுள்ள பெண்ணிவளை மாய்கையினால்
வெல்லப்போமோ?

ஆகாதென்று மகோதரன்றான் அரக்கர்மன்ன
னிடஞ்சென்று
தேகாதி ஜகத்தையெல்லாம் தியஜித்திடுவான்
சீதையும்ம

வசப்படவே மாட்டாளென்றும் வரலாறைச்
சொல்லுகையில்
விசனப்பட்டு வெருப்போக்கள் விறிட்டுக்
கதறக்கேட்டான்

மூவுலப் படைகளுக்கு முக்கியமா யுதவிசெய்யும்
வேலைக்காகப் போனவராம் வெருப்போக்கள்
அரக்கர்களும்

2510. அதுமானா ரென்றசேதி அவரவரின் வீடுகளில்
இதுமுள்ள ஸ்திரீகளுக்கு எட்டினதால்
இறந்தவர்கள்

மனைவிகளும் தாய்மார்களும் மற்றமுள்ள
பிறந்தோரும்
என்வசெய்வோ மினிநமக்கு எவருமில்லை
அழுதிப்போர்

அரக்கரிட அழிம்பொழிக்க ஆதிபர சிவனிடத்துக்
கருதித்தேவர் யாவரும்போய்க் கதறிமுறை
சொல்லுகையில்

சீதையெனும் பெண்ணொருவள் சீக்கிரமாய்
ஜகந்தலிலே
மாதரசாம் அவதரித்து மாதவனாம் ஸ்ரீராமனை

மனம்புரிந்து வாழ்ந்திருப்பாள் மாபாவி
ராவணன்போய்க்
குணங்கெட்டே அபகரிப்பான் குரூரமுள்ள
அரக்கரெல்லாம்

2515. அந்தவொரு காரணத்தால் அதமாகப் போவாரென்று
சந்தஷ்டி அடையச்சொன்னார் சர்வபரி
பூரணர்தான்

அரனுடைய வாக்குப்படி அரக்கர்மன்னன்
சீதையைப்போய்த்
திருடிவந்த காரணத்தால் தீங்கடைந்தோம்
யாவருமே

செய்தவினை பழிதொடரும் ஜெகத்தில்நாமும்
பழிதொடரச்
செய்தவிதி என்னசொல்வோம் ஸ்ரீராமன்
பகையாமோ?

ஜகதீசன் ராமனாக ஜனித்துவந்தான் என்பதற்கு
மிகவுமுண்டு காரணங்கள் மேதினியில் அவனுடைய

மகிமைதனை அறிவாருண்டோ மாதவனே
—அவனன்றோ
இகபரத்தில் அவனையன்றி இல்லைசுகம்
எவருக்குமே

குழந்தையாக இருக்கையிலும் குசலந்தர முனிவருக்கு
அழுக்குடைய தாடகியாம் அரக்கிமுதல் கொடியவரை

அதஞ்செய்தான் அதன்பிறகு அரண்யவாசம்
செய்யவந்து
மதமுள்ள விராதனையும் மாரீசன் கபந்தனையும்

கரதூஷணாள் முதலாகக் கணக்கில்லா தரக்கரையும்
பரதபித்து மாண்டிடவே பண்ணினவோர்
சக்தியென்ன

சுடலிலணை சுட்டிவந்து கதறும்படி அரக்கர்களை
மடிந்திடவே செய்துவரும் மகிமையென்ன
வலுவென்ன?

வானரரும் மனிதருமாய் வந்துதன்னை
வெல்லாரென்று
ஈனனிலங் கேசனெண்ணி இந்தயிரு வகுப்பார்களை

விட்டுவிட்டு வரமடைந்தான் வினையாகப்
பவித்ததது
வெட்டுணியாம் ராவணனும் வெருகஷ்டம்
அடைந்தானிப்போ

நமக்குந்தந்தான் சீரழிய நஷ்டகஷ்டங் களைமிகவும்
எமபுரிக்கு அரக்கர்களை இறையாக்கிக்
கனமழிந்தான்

எத்தனையோ பெண்களெல்லாம் இருக்கையிலே
ஜானகியாம்
உத்தமிமே லாசைகொண்டு ஒன்றுமிச்ச மில்லாமலே

பாக்யங்களும் பதவிகளும் பறந்தோடச் செய்துவிட்டுப்
போக்கிக்கொள்ளத் தனிவுயிரைப் புத்திகெட்டே
நடக்கின்றானே

புண்யசாலி விபீஷணனே புத்தியுள்ள சத்தியனே
உண்மையாக ராமனிடம் உறுதியான பக்திகொண்டு

2530. பிறந்தவனை ஆதரிக்கப் பிரேமையுடன்
புத்திசொன்னான்
மறுத்தவனைத் துரத்தியதால் மாதவனே
சுதியென்றவன்

போய்வணங்கிப் புனிதனானான் புகழ்மிகவும்
அவனடைவான்
நாய்போல அலையும்படி நம்மைச்செய்தான்
தசகண்டன்

குலத்துக்கொரு நிலைவிளக்காய்க் குணமாக
வாழுபவன்
உலகில்விபீ ஷணனேயன்றி ஒருவருண்டோ
அரக்கரிலே

பாதகனாம் ராவணனால் பரிதபிக்க ஆனோமிப்போ
வேதனையை என்னசொல்வோம் என்றுமிகப்
புலம்பக்கேட்டு

என்னவென்று அறிந்துவர இலங்கேசன் சொல்லிவிட
மன்னவனே மூலபலம் மடிந்ததையா
முகூர்த்தமொன்றில்

2535. ஒருவருமே மிச்சமில்லை உதவிக்காகப்
போனவரும்
திரும்பிவர வில்லையையா ஸ்ரீராமன் ஒருவன்கையால்

அத்தனைபோர் களுமடிந்த அந்தச்சேதி
தனைக்கேட்கில்
சித்தமிகப் பதைக்குதையா சேதமிக வாயிற்றையா

உருகிமன மிகவும்நொந்து ஓலமிட்டு நகைஒங்கும்
பரிதபித்தே புலம்புகிறார் பந்துக்களை
இழந்தோரெல்லாம்

என்றுரைக்கும் கேட்டவரக்கன் எண்ணமிக
மனம்வருந்திக்
கன்றிழந்த பசுவைப்போலக் கதறிமிகப்
புலம்பியப்போல்

ஆச்சரிய மிகவடைந்தான் அபஜயமே வருவதினால்
மாச்சரியங் கொள்வதிலே மனச்சுகமே ஏதுமிலை

2540. வன்னிதனைப் பார்த்துமம்ம வாஞ்சையுள்ள
மாலியவான்
சொன்னபடி யாயிற்றிப்போ சோகப்பட
நேர்ந்ததிப்போ

அனுபவத்தில் முதிர்ந்தவர்கள் அனுமானித்துச்
சொன்னதெல்லாம்
மனதில்கொள்ளா தெதிர்த்ததுதான் மதியீன
மென்றழுதான்

அரன்வில்லை ஒடித்தான்ராமன் அணைகட்டி
வந்தானவன்
வரவழைத்தான் சஞ்சீவிமலை வல்லபன்மா
ருதிலங்கையில்

செய்தகொட்டம் கொஞ்சமல்ல சீரழித்தான்
பேரழித்தான்
கைபலவான் அவனாலே கஷ்டநஷ்ட மிகவடைந்தோம்

அரக்கர்களைக் குரங்கெதிர்த்தால் அனுகூலம்
நமக்குண்டோ?
சிறிதும்வேண்டாம் யுத்தமென்று செப்பினனே
மாலியவான்

2545. அவன்வாக்கை மதிக்காமல் அமர்புரிவே
னென்றுபோன
குவலயத்தில் மிகச்சூரன் சூரனான வன்னியுமே

மடிந்துபோனா னென்றுகேட்க மனமிகவும்
அஞ்சுதையோ
தடமேதும் புரியலையே தாகமுந்தா னொழியலையே

இருக்கமனம் அணுவுமிலை இறக்கவென்றால்
துணிவுமிலை
பெருவதெல்லாம் பெருமையிலை பித்தனைப்போ
லானோமென்று

வெகுவிதமாய்க் கவலைகொண்டு விசனமதில்
மூழ்கியவன்
அசும்நொந்து கஷ்டப்பட்டான் அவனிலைமை
எவ்வாறெனில்

சுடன்பட்டோர் நெஞ்சம்போலக் கண்கலங்கி
மிகுமயங்கித்
தடுமாறித் தத்தளித்தான் தசகண்டன் மிகவுமம்மா

2550. பாதாள லங்கைதனைப் பரிபாலிக்கும் மைராவணன்
ஆதாரமாய் வந்துதவ அழைப்பித்தான் வந்தானவன்

சேதியெல்லாம் அவன்கேட்டு ஸ்ரீராமனை
அனுஜனோடு
பாதாளங் கொண்டுபோகப் பாபியவன்
பிரதிக்ஞைசெய்தான்

அந்தராமன் அனுஜனையும் அவனுடைய காளிமுன்னே
தந்திடவே பலியாகத் தன்னில்மிக நிச்சயித்தான்

அசந்துழித்திரை செய்தானந்த அனுஜனோடு ஸ்ரீராமன்
இசைந்தஅனு மானவரை இட்சித்தார்
கோட்டைகொண்டு

சூதுசெய்து மைராவணன் சுவாமியையும்
அனுஜனையும்
கா துவழி கொண்டுவந்து கைவசமே செய்துகொண்டு

2555. மைராவணன் போனானம்மா மாருதியும் அதன்பிறகு
கைபலத்தை மிகவுங்காட்டிக் கா தகனைப்
போய்வென்று

கொண்டுவந்தான் ஸ்ரீராமனைக் குணமுள்ள
தம்பியோடு
சுண்டெல்லோரும் அதிசயித்தார் கலியனுமா
னைப்புகழ்ந்தார்

சுகமாக ஸ்ரீராமன் சுத்தமுள்ள தம்பியோடு
அகமகிழ்ந்தே இருந்தானம்மா அந்தச்சேதி
அரக்கன்கேட்டுச்

சூரர்களில் மிகச்சூரன் சொர்க்காதி லோகமெல்லாம்
கோபிவல்லச் சக்தியுள்ளோன் குவலயத்தை
விட்டொழிந்தான்

இனிநமக்கு உதவிசெய்வார் எவரென்று மிகவருந்தித்
தனக்கிதங்கள் செய்பவராம் தந்தைக்கொப்பா
யுள்ளவராம்

**சுக்கிராசாரியரை இராவண னடுத்து வேண்ட,
அவர் மந்தரோபதேசஞ் செய்து, ஓர் ஓமஞ் செய்து,
அஸ்தராதிகளை யடைந்து வெல்லும்படி
சொல்வதும், அந்தப்படிக்கு அரக்கன் செய்வதை
யறிந்து வானரர் வந்து விக்கினஞ் செய்து
மண்டோதரியை மானபங்கஞ் செய்வதும்,
அரக்கன எழுந்து கையெடுப்பதும், வானரர்
ஓடிப்போவதும் மண்டோதரிக்கும் ராவணனுக்கும்
சம்பாஷணையும்**

2560. சுக்கிராசார் தமையடுத்துச் சுகம்பெறவே
வேண்டுமென்று
அக்கருத்தைக் கொண்டரக்கன் அவரிடத்து
வந்துசேர்ந்தான்

வந்தவரை வணங்கிநின்று வந்தகஷ்டந் தனையுரைத்து
எத்தனைநீ ராதரிப்பீர் என்றுமிகப் பிரார்த்தித்தான்

மூன்றுகால நிலைமையெல்லாம் முடிவாகக் கண்டறிந்த
சான்றோரான சுக்கிராச்சார் தம்மில்சற்று
ஆலோசித்தார்

ஒழியுங்காலம் அரக்கனுக்கு உதித்திருக்கும்
உண்மைகண்டார்
பழிசெய்த பாபியிவன் வழியடையா னென்றறிந்தார்

சொந்தங்கொண்டு நம்மிடத்து வந்தவனாம்
இவனிடத்து
அந்தரங்க கருத்துரைத்தல் உண்மையையும்
நினைத்தாரப்போ

அசத்தாக உள்ளவர்க்கு அகநிலையைச் சொல்லுவது
உசிதமல்ல என்னும்விதி உண்மையையும்
நினைத்தாரப்போ

சொல்லும்முறை தனைக்கொண்டு வெல்லும்வழி
இருந்தாலும்
வல்லபனாம் ராமனந்த சொல்லுமுறைப் படிநடக்க

ஒட்டாமல் தடுத்திடுவான் உறுதியாக வரும்பலனோ?
எட்டாது அரக்கனுக்கு இவன்கோரி வந்ததினால்

நமதுகுடன் சொல்லுவது நன்மைதீமை விதிப்படியே
மமதையுள்ள அரக்கனுக்கு மார்க்கமொன்று
சொல்வோமென்று

சுக்கிராச்சார் அபிமானித்துச் சொல்லுகிறார்
மன்னவனே
தக்கவொரு காரியமுண்டு தகுந்தபடி அதைச்செய்வாய்

பாதாள சதிர்சமான பாங்குள்ள நிலவறையில்
நாதாந்தக் கடவுளரை நன்மையெண்ணி
ஓமஞ்செய்வாய்

அபாயமிய அஸ்தராதிகள் அநேகங்களோ
டொருபதந்தான்
சமயமேம இல்லாமல் சகலபலங் குடன்வரும்

அதிலிருந்து யுத்தஞ்செய்தால் ஆருமுன்னை
வெல்லமாட்டார்
மதியுடனே விக்கினமின்றி மகிமையுள்ள ஓமஞ்செய்து

வல்லமையை மிகவடைவாய் வருந்தவேண்டா
மென்றுமிக
நல்லவார்த்தை களையுரைத்து நன்மந்திரம்
உபதேசித்தார்

அரக்கர் மன்னன் அதன்பிறகு அசரகுரு உரைத்தபடி
கருதியோமந் செய்திடவே சாரியங்கள்
செயத்தொடங்கி

2575. நிலவறையில் போயிருந்து நெருங்கியாரும் வராதபடி
வலுவாகக் கல்கவினால் வாசல்தனை
யடைத்துக்கொண்டு

நேமமுடன் ஓமஞ்செய்து நிஷ்டையிலே இருந்தானம்மா
சாமனெனாம் ராமனிடம் சத்பக்தி யுள்ளநல்ல

உத்தமராம் விபீஷணனார் உளவறிந்து ராமரிடம்
சித்தந்துணிந் துரைத்தாரந்தச் சேதிதனை விவரப்பட

அதன்பிறகு ஆலோசித்து அநேகருடன் சுக்கிரீவன்
மதியுள்ள அங்கதனும் மற்றுமுள்ள வீரருமாய்

வானரராம் படைகள்தம்மை வகையுடனே
அனுப்பித்தந்தார்
ஈனன்ஓமஞ் செயுமிடத்தின் இரகசியத்தை
விபீஷணனார்

2580. பத்தினியாம் சரமாசெய்த பாங்குள்ள ஜாடையினால்
இத்தலமென் றறிந்துகொண்டு எல்லோரும் அங்குவந்து

அங்கதன்கால் கொண்டுதைக்க அடைத்தவாசல்
கல்பொடியாய்த்
தங்குதடை ஏதுமின்றித் தாராளமாய் யாவருமே

உள்புகுந்து பார்க்கையிலே ஓமருண்டம்
வளர்த்துக்கொண்டு
கள்வனிலங் கேசனிஷ்டை கலங்கவெல்லாம்
மூடிக்கொண்டு

குண்டத்தின்முன் விருக்கக்கண்டார் கோபங்கொண்டு
மிகவடித்தார்
பண்டனவன் எழுந்திராமல் பக்திகொண்டு
நினைவுதனைச்

சலிக்கவிடா மல்நிஷ்டை சரியாகச் செய்திருந்தான்
அலங்கோல மிகவுஞ்செய்தார் அவனைசயா
திருந்தானம்மா

2585. ஜானகியை எடுத்தயிந்தச் சண்டாளன் பத்தினியை
மானபங்கஞ் செய்தாலன்றி மனஞ்சலியா
திருப்பானிவன்

மண்டோதரி தனைக்கொணர்ந்து மானபங்கஞ்
செய்திடவே
மிண்டர்சிலர் ஆலோசித்து மீறிவிட்டார்
கோரிச்சென்று

அந்தப்புரந் தனிலிருந்த அரக்கன்பத்னி
மண்டோதரியை
வந்தங்கதன் கூந்தல்தனை வலுவந்தமாய்ப்
பிடித்திழுத்து

கொண்டுவந்தான் அரக்கன்முன்னே கோவென்றே
யவளலறித்
துண்டத்தனந் செய்தபலன் தொடர்ந்தென்னையும்
பிடித்ததிப்போ

பார்த்தாசெய்த பாபத்திற்குப் பத்னிபல
னடைவதுண்டோ
கர்த்தனிட்ட கட்டளையாம் கனமான
வேதசாஸ்திரம்

2590. சொல்வதெல்லாம் இத்தையாமோ சூரனான
என்மகனாம்
வெல்லுமித்திர ஜித்தனிந்த வேளையிலே
இருப்பானானால்

என்னையிந்தக் கொடுமைசெய்து இழுத்துவரச்
சகிப்பதுண்டோ?
அன்னையென்று என்னையவன் ஆதரிப்பான்
அவனும்போனான்

மன்னவரே மனமடங்கி மானங்கெட்டே ஓமஞ்செய்து
என்னையிந்தக் கோலமாக இம்சிக்கக் காட்டித்தந்து

நீரடைட்யும் பலனுமுண்டோ நிஷ்டையினிப்
போதுமையா
தாறுமாறாய்ப் பலித்துதையா தலையெடுத்துப்
பாருமையா

வழிகடந்தீர் பழிசுமந்தீர் குழியடைந்தீர் ஒழிவடைந்தீர்
அழிவடைந்தீர் இழிவடைந்தீர் பழிக்குப்பழி
நானடைந்தேன்

2595. ஒருவர்பெண்டைக் கைப்பிடித்தால் உலகிலந்தப்
பாபமது
திரும்பப்பலன் உடனேதரும் திருவ்டாந்தம்
கண்டேனிப்போ

வாடிவாடி வருகையிலே வலுவடைய ஓமஞ்செய்யத்
தேடிவந்தீர் நாடியிங்கு கூடிவந்தோர் ஓடிவந்து

என்சுந்தல் தனைப்பிடித்து இழுத்துவந்து என்னைமிக
வன்மங்கொண்டு வருத்துகிறார் வாய்திறக்கா
திருக்கின்றீரே

போதுமையா நிஷ்டைவேண்டாம் பொல்லாத
வேளையிது
ஆதரிப்போ ராருமிலை அபிமானிக்க வேண்டுமென்று

முறையிட்டுப் புலம்புகையில் மோசமது வந்ததென்று
குறித்தெழுந்தா னிலங்கேசன் குறையிகவும்
மனதில்கொண்டு

2600. யோசுநிஷ்டை தனிலிருக்கும் யோகிகளும் பெண்களதில்
வேகமாக வெளிப்படுவார் வேண்டாம்நிஷ்டை
என்றொழிப்பார்

அதுபோல அரக்கனுமே அலறும்பத்னி குரல்கேட்டு
மதிமயங்கி நிஷ்டைவிட மனந்துணிந்தான்
அப்பொழுது

சுதரியமும் பத்தினியைக் கண்டுமிகக் கண்சிவந்து
வதைபுரிவே னென்றுவந்தான் வானரர்மேல்
சீறிக்கொண்டு

வில்லெடுத்து யுத்தஞ்செய்தான் வெகுநேரம் அதன்பிறகு
வல்லபனாம் அவனைவிட்டு வானரங்க
ளோடிப்போனார்

அந்தப்புரம் அரக்கன்வந்தான் அவலுடனே
பத்னிவந்தாள்
சிந்தைமிக நொந்துபத்னி செப்புகிறா ளிப்படியே

2605. விதிவசத்தை என்னசொல்வேன் வேண்டாமையா
ராமன்பகை
மதியிழந்தீர் சுதியிழந்தீர் மமதையினி வேண்டாமையா

புத்திரமித்திரா திகளொழிந்தள் பொருந்துங்ககங்
களுமொழிந்து
எத்தனையோ கஷ்டப்பட்டோம் ஏதுமிச்ச மில்லையினி

உம்மைக்கண்ணால் கண்கொண்டு உளமகிழ்ந்தால்
போதுமென்று
தம்மைமிக வேண்டுகிறேன் தயவுகொள்வீர்
நடந்துரைக்கும்

எந்தன்வாக்கை மீறவேண்டாம் என்துரையே
கண்மணியே
வந்தகஸ்டம் போதுமையா வைதேகியை விட்டுவிடும்

ஜகதீசன் ராமனையா சீதைமக லட்சுமியையா
மகிமையுள்ள மகான்களையா மாச்சரியம்
வேண்டாமையா

2610. என்பிராண நாதரேயென் றிவ்வாறு பதனிசொல்ல
உன்வாக்கின் கருத்தறிந்தேன் உண்மையெல்லாம்
நானறிவேன்

உலகவாழ்வை ஒழித்துநல்ல உத்தமமாம் கதியடையும்
நலங்கருதி நானடக்கும் நன்மையைநீ அறியவில்லை

போதுமினி வாழ்வெனக்குப் புண்ணியனாம்
ராமன்பாத
ஆதரவை அடைந்திடவே அகந்துணிந்தேன்
மிகவும்பெண்ணே

என்னைத்தடை செய்யவேண்டாம் எந்தன்முன்
னழவேண்டாம்
உன்னைத்தம்பி தாயைப்போல உள்ளமதி
லெண்ணிமிக

ஆதரிப்பான் அவன்மனதும் அறிந்தவள்நீ
யாகையினால்
வேதனையேன் விட்டுவிடு விவேகங்கொண்டு
பார்த்தறிவாய்

2615. ஸ்தூலதேகந் தனையொழித்துச் சுகமடைய
நேர்ந்துள்ள
காலமதில் ராமன்கையால் காயமதை ஒழித்திடுவேன்

எத்தனைநா ளிருந்தாலுமே இவ்வுலக வாழ்வொழியும்
தத்துவத்தை அறியாமலே தயங்குகிறாய் மயங்குகிறாய்

ஜானகியின் அருளாலே ஜகத்தின்பந்தம் ஒழிப்பதற்கு
ஆனவனா னென்றறிவாய் ஆஷேபிக்க
வேண்டாமடி

போதும்போதும் உலகவாழ்வு போதுமிலை
தான்வேண்டும்
ஆதரிக்கும் அந்தமிலை அடைவதைநீ தடுக்கவேண்டாம்

எனதுவாக்கை மீறியேதும் எனக்குறைக்கத்
துணிந்திடவே
உனக்குத்தர்ம மில்லையடி உணர்ந்தறிவாய்
ரகசியத்தை

2620. பதிமனதை அனுசரித்தால் பத்தினியின் கடனாகும்
இதைமறந்தேன் பேசுகிறாய் என்னையாரும்
வெல்வாரில்லை

ஸ்ரீராமனை நான்ஜயிப்பேன் சீதையுடன்
வாழ்ந்திடுவேன்
தாராளமாய்ச் சுகமடைவேன் தப்பிப்போனால்
கதியடைவேன்

என்னைபாரான் ஜயித்துவிடில் இரக்குமின்றி
ஜானகியை
எண்ணியெண்ணி வதைபுரிவாய் எனக்குரியே
திருப்தியுண்டு

இந்தவிதம் அவலுரைக்க என்னசெய்வோ
மென்றுபத்னி
முந்திப்பிந்தி விரோதமாக மொழியும்பர்த்தா
அவிவேகத்தை

நினைத்துமிக வருத்தங்கொண்டு நிலத்தின்வாழ்வை
வெறுத்தவனாம்
மனக்குறையை மிகவடைந்தான் தனதுவிதிப்
பயனைநொந்தாள்

2625. செய்வதினி யுதுமிலை சிவனாக்ஞைப் படிமுடியும்
கைவிடுவார் கணவரென்று கண்கலங்கி
இருந்தாளம்மா

மகோதரன் முதலியவர்களுடன் இராவணன்
யுத்தத்துக்கு வருவதும் விரூபாட்சனும்
மகோதரனும் சுக்கிரீவனாலும், மகாபார்சுவன்
அங்கதனாலும் மடிந்ததும், அரக்கர்படை
வானரரால் மடியக்கண்டு இராவணன் கலங்கி
இராமர்முன் யுத்தத்திற்கு வர லட்சுமணன்
எதிர்த்து யுத்தஞ் செய்ய அரக்கன் சக்தியால்
லட்சுமணன் அசந்துவிழ இராமர் பாணத்தால்
கஷ்டப்பட்டு இராவணன் ஓட லட்சுமணனைப்
பார்த்துக் கலங்க சுஷேனன் தைரியப்படுத்தல்

அரக்கர்மன்னன் அதன்பிறகு ஆக்கிரகமா
யெழுந்துடனே
வரவழைத்தான் படைகளையும் வாத்தியங்கள்
முழுவதையும்

மகோதரனும் மற்றுமுள்ள மந்திரிகள் யாவரோடு
மகாப்பெருமை அடைந்தவன்போல் மமதைகொண்டு
ஜயிப்பேனென்று

போரிலுதல் வாத்தியங்கள் பிரபலமாக முழங்கிடவே
தேரின்மீ தேறிவந்தான் தீங்கடையும் சகுனங்காண

அபசகுனங் கலைக்கண்டு அலட்சியமா
யெண்ணிக்கொண்டு
சுபமடைவோ மென்றுநம்பிச் சுவாமியிடம்
யுத்தஞ்செய்ய

2630. வந்துரண களத்தில்நின்று வானரர்மேல் சரமாரி
சிந்தியுத்தஞ் செயத்தொடங்கிச் சேனைகளை
மிகமடித்தான்

அந்தப்படி வானரரை அரக்கன்சேதஞ் செய்கையிலே
வந்துவிட்டார் சுக்கிரீவர் வஞ்சகனை
எதிர்த்துநின்றார்

சூரன்விரூ பாட்சன்வந்து சுக்கிரீவனைத் தடுத்துநின்று
கோரியுத்தஞ் செயத்தொடங்கிக் குரூரமாக
இருவருமாய்

வெகுநேரம் போர்புரிந்தார் விடாமலவர் கைகலந்து
அகம்நொந்து அரக்கன்சற்று அசந்தவேளை
பார்த்தவனை

இருப்புலக்கை கொண்டோங்கி இறுக்கிவிட்டார்
சுக்கிரீவர்
அரக்கன்மண்டை சிதறிக்கீழே அறுமாகி
வீழ்ந்தானம்மா

அதன்பிறகு மகோதரனாம் அமாத்தியன்வந்
தெதிர்த்தானம்மா
மதமுள்ள அவனுடனே மடங்காமல் சுக்கிரீவர்

அமர்புரிந்து வருகையிலே அதிரூமேபார் நிலமதுதான்
சமபலமாய்ச் சண்டைசெய்தார் சாமர்த்தியம்
மிகக்காட்டி

அடித்துக்கொள்வார் இடித்துக்கொள்வார்
அடுத்துவந்து தொடுத்துக்கொள்வார்
பிடித்துமிகச் சுடித்துக்கொள்வார் துடித்துச்சற்று
படுத்துக்கொள்வார்

இந்தவிதம் கைகலந்து இருவருமா யுத்தஞ்செய்து
வந்ததன்மேல் அவ்விருவர் வாளைக்கையிற்
கொண்டெதிர்த்து

இடம்வலமாய்ச் சுழன்றுவந்து இணைக்கப்படச்
சமயம்பார்த்து
அடங்கிமிக ஒடுங்கிவரும் அந்தவேளை
அபக்ரன்வாளை

முனைபிடித்தான் அப்பொழுது மோசம்போவா
னென்றறிந்து
தனதுகையின் வாளைக்கொண்டு தந்திரமாய்ச்
சுக்கிரீவன்

அபக்ரன்றலை அறுத்தெறிந்தார் அதன்பிறகு
மகாபார்சுவன்
துரிதமாக ஓடிவந்து தோரணையாகச் சுக்கிரீவர்முன்

நின்றிடவே வந்தங்கதன் நீசன்றனை
எதிர்த்துக்கொண்டான்
வென்றிடவே இருவருமாய் வெகுநேரம் மல்லயுத்தம்

செய்துவரும் வேளையிலே சிரமமடைந்தான்
மகாபார்சுவன்
கையமுவ்டி கொண்டங்கதன் கடினமாய்
இடிகொடுக்க

மண்டைபிளந் திறந்தானந்த மகாபார்சுவன்
அதன்பிறகுதண்டுகளால் அரக்கர்படை தத்தளிக்க
வானரரரம்

2645. வீரரெல்லாம் மேல்விழுந்து வெருபேரை
மடித்துவிட்டார்
கோபமாகச் சைனியங்களைக் குரங்குகள்போய்
வதைக்கண்டு

அரக்கர்மன்னன் மிகப்பயந்து அகம்நொந்து
வாடிமிகப்
பரிதபித்துச் சிந்திக்கிறான் பாரில்நம்ம
பெருமையெல்லாம்

போகுங்காலம் நேர்ந்ததிப்போ பூமியிலே குரங்குகளும்
தாகங்கொண்டு நம்முடைய தண்டுகள்மேல்
கையெடுக்க

ஆனதோடு கொடுமைதனை ஆலோசித்துப்
பார்க்கையிலே
தீனதயா பரனான தெய்வபலம் நமக்கணுவும்

இல்லையென்றே விளங்குதிப்போ என்னசொல்வோம்
மனக்கவலை
வல்லபலை மென்றுபெயர் வையகத்தில் படுத்தவொரு

2650. பிரதாபமெல்லாம் ஒழிந்துமிகப் பேதைபோ
லானோமே
திரணமாக உள்ளவர்முன் தேம்பியழ லாயிற்றிப்போ

என்னசெய்வோ மென்றுமிக வல்லரியெய்ணி
மனஞ்சலித்துத்
தன்னிலப்பால் உறுதிகொண்டு தாவடிகுமா
யுத்தஞ்செய்ய

ஸ்ரீராமனை எதிர்த்துவந்து சிம்மநாதஞ் செய்தானந்த
இராவணனை லட்சுமணன் எதிர்த்துவந்து
நின்றுகொண்டு

இருவருமாய் ரோஷத்தோடு இரணகளத்தைக்
கணைகளினால்
மறைத்துயுத்தஞ் செய்தாரம்மா மடங்காமல்
அதன்பிறகு

ஜயனிடம் அமர்புரிய அரக்கன்வந்தான் அவனுடனே
சைபலத்தை மிகவுங்காட்டிக் கர்த்தன்ராமன்
யுத்தஞ்செய்தான்

2655. அந்தகார அஸ்திரத்தை அரக்கனெய்தான்
அதைத்தடுத்து
முந்துங்கணை மிகவும்விட்டு மொத்திவிட்டான்
ஸ்ரீராமன்

அரக்கன்மிகத் துடித்ததன்மேல் அநேகவித
அஸ்திரங்கள்
குறித்துவிட்டான் அவைகளெல்லாம் குணமறிந்து
விழவடித்துத்

தேகமெல்லாம்துளைக்கும்படி திருவாளன்
அரக்கன்மீது
ஏகங்கொண் டடிகணைகள் ஒன்றுபத்தா
யிரக்கணக்காய்

எடுத்தெடுத்து விட்டவனை இம்சைமிகச் செய்கையிலே
கொடுமைசெய்யும் பாணங்களைக் குரூரனுந்தா
னெய்தானப்போ

குங்குமம்போல் இருவர்தேகம் குணமாறி ரக்தவெள்ளம்
அங்கமெங்கும் பெருகிற்றம்மா அனுஜனப்போ
எதிர்த்துவந்து

2660. அரக்கன்தவஜந் தனையறுத்து அவன்சாரதி
சுழுத்தறுத்துக்
குறித்தகணை ஒன்றுகொண்டு குரூரன்கை வில்லதனை

அறுத்தெறிந்தான் அப்பொழுது அரக்கன்ரதக்
குரிஞ்சாகளைத்
கருதிவந்து விபீஷணனார் கையிலுள்ள
கதையைக்கொண்டு

அதமாக்கினார் அதைக்கண்டு அதிகோலங்
கொண்டரக்கன்
தூரிதமாகச் சக்தியொன்று தேரணையா
யெடுத்ததனை

வீசிவிட்டான் விபீஷணர்மேல் வெகுகொடிய சக்தியது
திசைகளெல்லாந் தகித்துக்கொண்டு தீவிரமா
யோடிவர

கண்டனுஜன் சுடுங்கணையால் சுடுகிவரும் சக்திதனைத்
துண்டுதுண்டா யறுத்துத்தள்ளத் துரோகியதைப்
பார்த்துப்பின்னும்

2665. தடுப்பதற்கு முடியாத தருந்தசக்தி வேறொன்றை
யெடுத்துவிட்டான் விபீஷணர்மேல் இலட்சுமணன்
அதையெதிர்த்து

நின்றுகொண்டு பாணங்களை நினைத்துவிட்டுத்
தடுத்துப்பார்த்தான்
வென்றிடவே யாகாமல் விரைவாகச் சக்தியது

ஓடிவரும் வேகங்கண்டு உபத்திரவிக்கா திருக்கும்படி
நாடியதைத் திருஷ்டிகொண்டு நாதன்பார்த்தான்
அருளுடனே

கொல்லவுள்ள சக்தியது குறித்தையன் பார்த்ததினால்
வல்லமையைக் குறைத்துக்கொண்டு வந்தினையோன்
மார்பில்பாய

நினைவுதப்பி லட்சுமணன் நிலந்தனிலே
வீழ்ந்தானம்மா
மனமுருகி ஸ்ரீராமன் மனக்கருத்தை அடக்கிக்கொண்டு

2670. அனுமார் முதலநேகர் களை அனுஜன்றனைப்
பாதுகாக்க
நினைத்துக்காவல் வைத்துவிட்டு நீசன்றனை
வெல்லுதற்கு

எதிர்த்துவரும் வேளையிலே இவ்விதமாய் ஸ்ரீராமன்
மதியிலெண்ணி நிச்சயித்தான் மாயாவி ராவணனை

ஒழித்திடுவேனில்லாவிடில் உலகில்ஸ்ரீ ராமனுக்கு
எழுத்தினிமேலில்லையென்று எண்ணலாமென்
றுறுதிகொண்டு

கோதண்டத்தை வளைத்துநன்றாய்க் குணத்வனிடை
மிகச்செய்து
போதமுள்ள ஸ்ரீராமன் புத்திகெட்ட தசகண்டன்மேல்

பதமுள்ள பாணங்களைப் பலவிதமா யெடுத்துவிடச்
சதிகாரன் ஆனமட்டும் சாமர்த்தியந் தனைக்காட்டி

2675. எதிர்த்துச்சண்டை செய்துவந்து எதிர்ப்பதற்கு
முடியாமல்
மதிமயங்கிக் கையினைத்தான் மாதவனார்
நொறுக்கிவிட்டார்

பாணஞ்செய்யுங் கொடுமையினால் பாபிமிகத்
தத்தளித்து
ஆணவமே யழுவுமின்றி அழுதழுது மெலிந்தானம்மா

இனியிருந்தா லுயிரொழியும் என்றரக்கன் மிகப்பயந்து
தன துலங்கை தனைநாடித் தட்சணமே ஓடிவிட்டான்

உயிரைக்கொள்ளை கொள்ளுநாமன் ஒருவன்முன்னே
நிற்பதற்குத்
தயிரியமே இல்லாமல் தசகண்டன் மிகத்தவித்தான்

அரக்கனோடிப் போனபின்பு அனுஜன்தனை
ராமன்பார்க்க
இருக்குமவன் நிலைமைகண்டு எண்ணியெண்ணிப்
புலம்புகிறான்

2680. என்பிறப்பே லட்சுமணா ஏனிந்தக் கோலமாகி
அன்பணுவு மில்லாமல் அறுந்துகீழே கிடக்கிறாயே

அரக்கன்சக்தி டினைக்கிளைத்து அணுவளவும்
பிரக்ஞையின்றி
இருக்குமுன்னைப் பார்த்தமனம் எப்படிநான்
சகிப்பேனடா

அடைந்திடலாம் இவடப்படி அனுகூல பத்தினியையும்
இடம்பொரு ளேவல்களையும் இணக்குமுள்ள
பந்துவையும்

கிடைப்பதுண்டோ பிராதாக்கள் கீர்த்தியுள்ள
லட்சுமணன்
அடுத்தெனக்குச் செய்தநன்மை அளவுண்டோ
மதிப்பதற்கு

உயிர்த்துணைவன் லட்சுமணன் உயிரிழந்தால்
நானுங்கூட
உயிரிழப்பேனன்றியிலே ஒருநொடியும் உயிர் தரியேன்

2685. சீதையைநான் அடைந்தினிமேல் ஜெகத்திலேதும்
ஆவதில்லை
வேதனையில் மூழ்கிவிட்டேன் விதிவசமிவ்
வாறாயிற்றே

என்னசெய்வே னென்றுராமன் இவ்விதமாய்
வருந்துகையில்
என்னையனே ஏங்குவேண்டாம் இளையவரின்
தேகந்தனை

முறைப்படிநான் பரிசோதித்தேன் மூன்றுநாடி
சுளுங்கிரமமாய்க்
குறித்தவிதிப் படியமையக் கூடியெல்லாத் தத்துவங்கள்

அணுவளவும் பேதமின்றி அனுகூல மாகவேதான்
குணந்தரவே இருக்குதையா கொஞ்சமுமே
அஞ்சவேண்டாம்

முகக்குறியைப் பாருமையா மோசம்வர ஏதுவின்றி
மிகக்களையா யிருக்கையிலே மெலிந்துவாட
நியாயமில்லை

2690. ஆசையினால் தைரியங்கொள்வீர் அனுகூல
மாகுமென்று
வெகுவிதமாய்ச் சுஷேணன்சொல்ல வேதனையைச்
சற்றொழித்து

ஸ்ரீராம னிருந்தானம்மா சீக்கிரமாய் மாருதியை
வாரீரையா வென்றழைத்து வார்த்தைசொல்வான்
சுஷேணனம்மா

**ஔஷதி கொண்டுவர மறுபடி அனுமார்
போவதும், அதை விக்கினஞ் செய்யக் காலநேமியை
இராவணன் அனுப்புவதும் காலநேமியின் சூதறிந்து,
அவனை அனுமார் வதைத்து ஔஷதிகளைக்
கொண்டுவருவதும், அதனால் லட்சுமணன்
ஆரோக்ய மடைவதும் இராவணன் கேட்டு மறுபடி
யுத்தஞ் செய்யச் சித்தமாவதும்**

ஔஷதிகள் வேண்டுமையா ஒருநொடியில்
கொணர்ந்திடுவீர்
வீசநொடி தனிலனுஜர் வேதனைபோ யெழுந்திடுவார்

இந்தப்படி சொல்லக்கேட்டு என்பெருமான்
ராமன்பாதம்
வந்துநமஸ் கரித்தனுமான் வாயுவேகந் தனைமீறி

வடதிசையை நோக்கிச்சென்றான் வஞ்சகன்ரா
வணனறிந்து
தடபுடலா யோடிவந்தான் தானவனாம் காலநேமி

2695. எனுமரக்கன் தனைக்கண்டு இப்பொழுதே மாருதியை
உனதுசக்தி தனைக்கொண்டு உபாயமாகத்
தடுத்திடுவாய்

இந்தவேளை இவ்விதமாய் எனக்குதவி செய்வாயென்று
அந்தரங்க மாயுரைத்தான் அதைக்கேட்டுக் காலநேமி

மாரீசன் அடைந்ததுபோல் மரணமது வந்திடுமே
கோரிச்செல்வோம் அரசனுக்குக் குணமடையும்
மார்க்கமென்று

வெண்ணிச்சொல்வா னிவ்விதமாய் என்னரசே கே
ளுமையா
மண்ணுலகில் ராமன்பகை மகத்தான கஷ்டந்தரும்

சகலரையும் இழந்தீரையா ஜானகியின் மோகமதால்
மிகவுங்கஷ்டம் வந்ததையா வேண்டாமையா கே
ளுமையா

2700. ஜகத்தில்மிகச் சுகப்படுவீர் ஜானகியை விட்டுவிடும்
தகுந்ததம்பி விபீஷணர்க்குத் தரிப்பீர்முடி அதன்பிறகு

வனவாசஞ் செய்யுமையா வாட்டமில்லாக்
கதியடைவீர்
மனதுநிலை கொண்டுதவும் மகிமைபெறச்
செய்யுமையா

சாசுவதமாய்க் கதியடையச் சஞ்சலத்தை
விட்டொழியும்
ஆசையீசன் மீதில்வையும் அறிவாக மஞ்சுமென்றான்

அரக்கன்கேட் டாத்திரங்கொண்டு அடபேயா
உனதுவாக்கைப்
பிரியப்படக் கேட்போனென்னும் பிரமையுனக்கு
வேண்டாமடா

என்னுடைய சேவகனாய் இருந்தும்நீ ராமன்பக்கம்
உன்னுடைய மனஞ்செலுத்தி உரைக்கவந்தாய்
உபதேசம்

2705. உன்னையிப்போ கொல்வேனென்று உருவிநின்றான்
வாலையம்மா
மன்னவனே கோபம்வேண்டாம் மனதின்படி
செய்வேனென்று

அப்பொழுதே காலநேமி அங்கிருந்தே கிளம்பிவந்து
ஒப்பும்படி உருவங்கொண்டு உயர்ந்தநல்ல இமயமலை

அருகிலொரு ஆச்சிரமத்தை அமைத்துக்கொண்டு
சிஷியரோடு
தூரவியைப்போ லிருந்தானம்மா தோஷமான
நினைவுகொண்டு

அனுமார்வரும் வழியிலந்த ஆசிரமத்தை அவர்கண்டு
மனதிலெண்ணிப் பார்த்தாரிந்த மார்க்கம்வேறாய்க்
காணுதென்று

ஆலோசித்து அதன்பிறகு ஆசிரமத்தில்
போய்ப்பார்க்கக்
காலமெல்லாம் அறிந்தநல்ல கனமுனிவர் போலந்த

2710. அரக்கன்றனைக் கண்டுமிக அரும்பக்தி மிகக்கொண்டு
இருகரங்கள் குவித்தனுமான் வணங்கிநமஸ்
கரித்தானம்மா

தாகமிக வென்றுரைத்துத் தாகந்தீர்க்க வகையுரையும்
ஊகமுள்ள தூரவியேயென் றுரைத்தானம்மா
அந்தவாக்கை

கேட்டரக்கன் சொல்லுகிறான் கிருபாகரனாம்
ராமன்தம்பி
வாட்டமின்றிச் சுகமாக வலுவுடனே எழுந்துவிட்டான்

அவசரமே இல்லையையா அபேட்சைப்படி
கனிகளுண்டு
இவிடத்திற் கருத்தவொரு இடந்தனிலே இருக்கும்நல்ல

ருளத்தில்ஜல பானஞ்செய்து குறைவின்றி
நித்திரைசெய்து
அவிப்போனல்ல மந்திரமும் அதையும்நீ
ருணர்ந்துகொண்டு

2715. தயவுசெய்வி யென்றுரைத்தான் தானவன்றான்
கபடமாக
நயமாகக் கேட்டவ்வாறு நாடியந்தக் குளத்தில்சென்று

அருக்கன்சொன்ன படியனுமான் அந்தக்குளந்
தனிலிறங்கி
இருகண்களை மூடிக்கொண்டு எடுத்துத்தண்ணீர்
குடிக்கையிலே

முதலையொன்று அனுமான்காலை மோகங்கொண்டு
பிடித்துதம்மா
அதையுதறிக் கொடுத்தானடி ஆவிவிட் டதனாத்துமம்

ஆகாயத்தில் திவியரூபம் அதிசயமா
யெடுத்துக்கொண்டு
போகாதிகு ளுடனேவந்த புஷ்பகமொன் றிவிருந்து

அனுமாரை மிகஸ்துதித்து அப்ஸரசின் வர்க்கந்தனில்
எனதுஜன்மம் எடுத்துவந்தேன் என்னைத்தான்ய
மாலையென்பார்

2720. பெண்ணாக நான்பிறந்து பிழைசெய்த காரணத்தால்
எண்ணியென்னைச் சபித்தபடி இந்தக்குளந்
தனில்முதலை

உருவெடுத்து நானிருந்தேன் உம்மாலே சுதியடைந்தேன்
அரக்கன்கால நேமிவந்து அருந்துவத்தோன்
போலிருந்து

மோசமும்மைச் செய்வதற்கு மொழிந்திடுவான் சுபடமிக
லேசமும்நீர் நம்பவேண்டாம் நீசனவன் றனைவதைத்து

வந்தகாரியம் தனைச்செய்வீர் வாயுசுத ரேயென்று
சிந்தைமகிழ்ந் துரைத்துவிட்டுச் சென்றானவள்
சுவர்க்கலோகம்

அதன்பிறகு அரக்கனிடம் அனுமார்வர
அவரைப்பார்த்துட்
சதிகாரன் சொல்லுகிறான் சத்பக்தனே
உபதேசிப்பேன்

2725. குருதட்சணை தருவாயென்றான் கொடுப்பேனென்று
மூவ்டிகொண்டு
கருதியொடு இடிகொடுத்தான் காதகனாம்
அரக்கனப்போ

நிஜரூபங் கொண்டெதிர்க்க நினைத்தவனைப்
புடைத்திடவே
அசைவின்றி உயிரிழந்து அவனிறந்தான் அதன்பிறகு

சடுதியாக மாருதிபோய்ச் சஞ்சீவிக் கொடுமுடியை
எடுத்துவந்து சாமிமுன்னே எல்லோரும்
பார்க்கவைத்தான்

ஸ்ரீராமனை வணங்கிநின்றான் சீக்கிரமாய்ச்
சுஷேணன்வந்து
கோரிநல்ல மூலிகைகள் கொடுமுடியில் கண்டெடுத்து

கசக்கியதை அனுஜனிட கண்துடைத்து நாசிதனில்
உசுவாசங் கொள்ளத்தந்தான் உட்சென்று நாடிகளை

2730. முறைப்படியே நடக்கும்படி மூலாதாரந் தனிலூன்றிய
இரண்டுவித நாடிகளை எழுப்பவுமே எழுந்தனுஜன்

சகமடைந்தான் அதன்பிறகு சுவாமிவந்து
லட்சுமணனை
அகமகிழ்ந்து கட்டிக்கொண்டு அழுதார்சற்றுப்
பரிதபித்துத்

தமயன்மனம் வருந்தக்கண்டு தம்பிமிக
ஆத்திரங்கொண்டு
நிமிஷமதில் இராவணனை நிக்கரிக்கத்
துணிந்துரைப்பான்

அண்ணாயினி கிலேசம்வேண்டாம் அம்புகையில்
கொள்ளுமிப்போ
எண்ணங்கொண்டு தசகண்டனை இப்பொழுதே
வதைபுரிவீர்

அரைநொடியும் அட்டிசெய்தால் அனர்த்தங்கள்
விளையுமண்ணா
துரிதமாக யுத்தஞ்செய்து துரோகியைநீ
ரொழிப்பீரென்று

2735. அனுஜன்சொன்ன வாக்கைக்கேட்டு அப்பொழுதே
கோதண்டத்தைத்
தனதுகையி லெடுத்துக்கொண்டு தரணியெங்கும்
அதிரும்படி

குணத்வனியைச் செய்தான்ராமன் குரங்குகளும்
சிம்மநாதம்
சுணகணவென் றேசெய்தார் காதகன்ரா வணன்கேட்டு

வருவாவினி யுத்தத்திற்கு வல்லமையைக் காட்டிநாடும்
வறுத்தகொள்ளு முலைத்ததுபோல் வாய்த்ததிப்போ
ராமன்பக்கம்

யுத்தஞ்செய்வோ மெனத்துணிந்து யோக்கியதையை
மிகுனைத்துச்
சித்தந்தனி லெண்ணுகிறான் ஜெகவாழ்வு
ஒழிந்ததென்று

நம்மைவிட்டால் யுத்தஞ்செய்ய நகரிலாரு
மில்லையிப்போ
செம்மையாக நாமறிந்தோம் ஸ்ரீராமனை வெல்வதற்கு

2740. முடியாதென்று தோற்றினாலும் முன்னின்று
யுத்தஞ்செய்யத்
தொடங்குவதே நன்மையென்று தூரதிருஷ்டி
கொண்டறிந்து

நிச்சயித்த படிநடந்தால் நேர்ந்தபடி அனுபவிப்போம்
இச்சகத்தின் வாழ்வெல்லாம் இப்பொழுதே
தீர்ப்போமென்று

போகமெல்லாம் அனுபவித்தான் போர்க்கோலம்
பூண்டுவந்தான்
காகளங்கள் நாகசுரம் கனபோரி வேண்டைமுதல்

வாத்தியங்கள் மிகமுழங்க மடமாடர் நடமாடத்
தோத்திரங்கள் மிகச்செய்யத் தோரணையாய்ப்
படைகள் சூழ

அரக்கர்மன்னன் அமர்புரிய அகந்துணிந்து
புறப்பட்டுமுன்
கருதியெல்லா மனைகளையும் கண்டானம்மா
அண்டிச்சென்று

2745. மோசம்வரும் காரியத்தை மும்முரமாய்ச்
செய்வதுண்டோ?
ஆசையெல்லாம் ஒழிந்திடவே அநாதரனை
செய்வதுண்டோ

போகவேண்டாம் அமர்புரியப் பொல்லாத
வேளையிது
தாகங்கொள்ளலாகாதையா தப்பாது பிராணனையா

உம்முடைய ஆதரவில் உண்மையாகக் கூடிவாழ்ந்தோம்
செம்மையாக மனமகிழ்ந்தோம் சீதையினால்
சீரழிந்தோம்

அடங்காப்பெண்மேலாசைகொண்டு அனுபவித்த தே
துமிலை
கொடுமைமிக அனுபவித்தீர் கொஞ்சமுமே மிஞ்சலையே

எல்லோரும் மாண்டாரையா இனியுமக்கும்
ஆனியுண்டாம்
வல்லாளன் ராமனையா வணங்குவதே நன்மையையா

2750. அன்புடனே சொல்லுகிறோம் அந்தப்படி
கேளுமென்று
நன்மையெண்ணி மிகவுரைத்தார் நாயகிகள்
அதைக்கேட்டு

வருந்தவேண்டாம் மனைவிகளே வல்லபனா
னென்றறிவீர்
வருவதில்லை எனக்கணுவும் வருத்தமின்றி
வென்றிடுவேன்

உங்களுடன் சீதையையும் உளமகிழ அனுபவிப்பேன்
பங்கமில்லை சங்கையில்லை பங்கும்புகும்
தங்கச்செய்வேன்

போய்வருவே னென்றுமிகப் புந்திவந்தன் போலுரைத்த
வாய்ப்பேச்சைக் கேட்டுமிக வருந்தினார்
மனைவியர்கள்

**கடைசித் தடவை இராவணன் ஸ்ரீராமனிடத்துப்
படைகளோடு வந்து யுத்தஞ் செய்வதும்
இந்திரனுடைய ரதத்தின்பேரிலேறி ஸ்ரீராமன்
யுத்தஞ் செய்வதும் அரக்கன் அசந்ததினால் அவ
னுடைய ரதம் திரும்பிப்போய் மறுபடியும்
வருவதும் ஸ்ரீராமனுக்கு ஆதித்திய இருதயம்
உபதேசமும் அப்பால் இராவணனைச் சித்திரவதை
செய்வதும் அங்கங்கள் மறுபடி முளைப்பதும்**

*சருவாடம் பரங்களுடன் தசகண்டன் வேகமுள்ள
புரவிகளோ டாயிரங்கள் பூண்டபெரும் ரதமேறி*

2755. *இலங்கேசன் யுத்தஞ்செய்ய இறுமாந்து வருகையிலே
பலவிதமாய் அபசகுணம் பார்க்கும்படி கண்டுதம்மா*

*கருமவினை நீங்கிமுன்போல் கதியடைய
அதித்வரையாய்
வருகின்றான் தசகண்டன் வாழ்வெல்லாம் ஒழிந்திடவே*

*சமயம்வந்து வாய்த்ததினால் சாமியுடன் போர்புரிய
நிமித்தமாக வந்துசேர்ந்தான் நீசனம்மா கோசம்விட*

*யுத்தகளம் வந்துசேர்ந்து யோசித்துப்
படைகளெல்லாம்
சித்தந்துணிந் தெதிர்த்திடவே செய்தானாக்ஷ
அரக்கனப்போ*

*வானரரும் ராட்சதரும் மலைசிலையும்
கொலைச்சரமும்
கானவிருட்சம் ஆயுதங்கள் கணக்கில்லா
தெடுத்துவிட்டு*

2760. அகோரயுத்தம் செய்துபின மாசுவெங்கும்
நிறைத்துவிட்டார்
மகாத்துமாக்க ளானோர்கள் மயங்கிவிட்டார்
சுண்டதனை

இவங்கேசன் புதல்வன்னை இராமர் முன்னே
கொண்டுவந்து
நிலத்திலையன் நிற்கையிலே நீசன்புதல் வனிலிருந்து

பாணங்களை மிகச்சொரிந்தான் பார்த்தார்கள்
தேவரெல்லாம்
கோணலிது முறையல்ல கோதண்ட பாணியுமே

குரங்கரசன் தனிலிருந்து தசகண்டனை வெல்லுவது
சகஜமென்று நிச்சயித்தார் சடுதியாகத் தேவேந்திரன்

அழகுள்ள அவனுடைய அருமையான புதல்வனை
அழைப்பிவித்து ராமனிடம் அனுப்பித்தந்த படிசாரதி

2765. மாதலிவந் தடிபணிந்து மாதவனைப்
பார்த்துரைப்பான்
நீதியுள்ள தேவேந்திரர் நிர்மலமாம் ரதமீதிலே

இருந்துகொண்டு யுத்தஞ்செய்ய என்வசமா
யனுப்பித்தந்தார்
அருமையான அஸ்தராதிகள் அநேகமிதி லிருக்குதையா

சாபத்தியம் நான்செய்வேன் சாமியிதி
லிருந்துகொண்டு
கோரியுத்தஞ் செய்வீரென்று குணமுடனே
வேண்டிக்கொண்டு

மாதவிநா னென்றுரைத்தான் மாதவனார்
மிகமகிழ்ந்து
போதமுள்ள சாரதியே ஆதரவாய் வந்ததற்குத்

திருப்திமிகக் கொண்டேனையா தேவர்களும்
சுகமடையக்
கிருபையுடனே அமர் புரிவேன் சீர்த்தியுடன்
வெல்வேனென்று

2770. அங்கீகரித் ததிலிருந்து அபக்கனோடு அமர்புரிய
எங்களையன் ஸ்ரீராமன் ஏறினான் தேரியம்மா

மலைக்குமலை மோதிப்போல் மாதவனும் ராவணனும்
புலங்களிலே மனஞ்செலுத்திப் புத்திமிகப் போதமுடன்

நலம்பெறவே இருவர்களும் நாடியவ
ரெதிர்த்துக்கொண்டு
நிலைகலங்கத் தலங்ளுலுங்க நெடியவில்லை
வளைத்துநின்றார்

பத்துக்கையா லெடுத்துவில்லைப் பத்துக்கையால்
தொடுத்துவரும்
எத்தனையோ பாணங்களை என்னசொல்வேன்
அபரிமிதம்

ஐயனுக்கோர் கையில்வில்லே அதில்நாடிச் சதகோடி
வையகத்தோர் நடுநடுங்க வாரிவாரி விட்டானம்மா

2775. நீசன்விடும் கணைகளெல்லாம் நிமலனறுத்
தெறிந்திடுவான்
ஈசன்விடும் பாணங்களை இலங்கேசன்
அறுத்தெறிவான்

கடல்மேலும் திடல்மேலும் காடுமலை நாடுலவுங்கை
கடர்மாடம் வனங்கள்மேலும் சுற்றியெங்கும்
போர்புரிந்தார்

மாலாஸ்தரம் அரக்கன்விட்டான் மணிவண்ணன்
அதனையொருஆலாயுதம் விட்டறுத்தான் துட்டனங்கி
கணைதொடுத்தான்

அதனையங்கி கணைவிடுத்து ஐயனறுத்திட வரக்கன்
கதையைலகுப் பார்த்துவிட்டான் கேசவனார்
அறுத்தாரதை

நாகாஸ்தரம் அரக்கன்விட்டான் நாதன்கரு
டாஸ்தரம்விட்டான்
மோகாஸ்தரம் பாபிவிட்டான் முதல்வன்ஞானா
ஸ்திரம்விட்டான்

2780. அரக்கன்விடுங்கணைகளையும் அஸ்தராதி யாவையுமே
தருமசீலன் ஸ்ரீராமன் தடுத்தந்த அரக்கன்மீது

இடிபோலுள்ள கணைகளையும் எமனைக்கொல்லும்
கணைகளையும்
பொடிப்பொடியாய் அண்டங்களைப் போக்குங்கணை
களைவிடுவான்

இருதேரும் கடலோடும் இடஞ்சுற்றும் வலஞ்சுற்றும்
அரணியத்தைப் போயடையும் அரணவத்தைத்
தாண்டிவரும்

எங்கெங்கும் ராமாஸ்தரம் எவ்விடமும் ராவணன்கை
பொங்குங்கணை யாகநின்று புவிவானங் களைமூடும்

மண்ணதிர விண்ணதிர மலையதிர நிலையதிர
எண்ணுமெல்லாக் கடலதிர இருக்கும்நாக ருலகதிரச்

2785. சந்திர சூரியரதிரச் சத்தியலோ சுமுமதிர
இந்திர்லோகா திகனதிர ஈரேழுலகுந் தானதிர

பிரளயந்தானோ ஜகமுடிவோ என்றெவரும்
பீதிகொள்ள
இருவரும்போர் புரிகையிலே இலங்கேசன் மீறிவில்லில்

எண்ணிறந்த சுணைகள்விட்டு இராகவன்தேர்
த்வஜமறுத்துப்
புண்ணடையச் செய்துவிட்டான் புத்தியுள்ள
மாதவியை

ஐயன்றதக் குதிரைகளும் அலறும்படி அடித்தானம்மா
பெய்யன்ராமன் கண்டதனை மிகவுங்கோபங்
கொண்டுநின்று

அரக்கனைப்பார்த்த துரைக்கின்றான் அடபேயா
உனதுதீரம்
அறிந்தேனடா ஜானகியை ஆருமில்லா வேளையிலே

2790. திருடினையே படுபாவி தேசமெங்கும் அறந்திடவே
வெறிபிடித்த நாய்போல விவேகமற்று திரிகிறாயே

உதவியில்லாப் பெண்ணைவந்து உளந்துணிந்தே
எடுத்தாயே
மதியுள்ள சூரனுக்கு மரியாதை தானோவிது

முகத்தின்மீசை முறுக்கென்னடா மூதேவிக்கு
அலுக்கென்னடா
மகிமையெல்லாம் ஒழிந்ததடா மமதைபின்னும்
வேண்டுமோடா

உன்னையினி விடுவதில்லை உயிர்வாங்கி
உனையொழிப்பேன்
என்னுடைய வல்லமையை ஏனறிய வில்லையென்று

பலவிதமா யிகழ்ந்துரைத்துப் பாதகனைக்
குரூரங்கொண்டு
புலங்களிலே பொறிபறக்கப் பூபாலன்
ராமன்பார்த்தான்

2795. அந்தப்பார்வை யுக்ரமதை அரக்கன்பார்த்து
மிகப்பயந்து
வந்திடுமே கஷ்டமென்று வாடிமனம் நொந்ததோடு

முப்புரத்தை யெரித்தவனாம் முக்கண்ணன்
போல்விளங்கிச்
செப்பும்வாக்கைக் கேட்கையிலே சித்தமிகக்
கலங்குதையோ

கையெடுப்பான் ராமனிப்போ சுதறடிப்பான்
நம்மையிப்போ
மெய்வருந்தித் துள்ளும்படி மிகவுஞ்செய்வான்
அகம்நோகவே

காலனைப்போல் சுழல்கிறானே கண்சிவந்து
பார்க்கிறானே
ஆலகால விஷமதுபோல் அவன்பாணம் வதைத்திடுமே

செய்வதினி யென்னவென்று சித்தமிக நொந்தரக்கன்
தெய்வச்செய லென்றெண்ணித் திகலடைந்து
நின்றானம்மா

2800. பதமுள்ள பாணங்களைப் பரந்தாமன் அமோகமாகச்
சதிகாரன் ராவணன்மேல் சரமாரி யாய்விடவே

திப்பிரமை கொண்டரக்கன் திக்குகளுந் தெரியாமலே
தப்பியவன் பாணமெல்லாம் தன்படையே மடியும்படி

மதிகெட்டுத் தொடுக்கையிலே மாதவனார்
கொடுத்தார் நன்றாய்
அதிகசிரமம் அடைந்தானம்மா அரக்கனப்போ
அவன்சாரதி

இந்தவேளை ராமன்முன்னே இராவணனை
றிறுத்தினக்காய்
வந்துவிடும் பிராணசேதம் வழியுடனே
ஒதுங்கவெண்ண

வெருதூரம் ரதந்தன்னை வேகமாகக்
கொண்டுபோனான்
வகையறிந்த சாரதிதான் மன்னவனைக்
காப்போமென்று

2805. ஆபத்தை விலக்குதற்கு அறிந்துசெய்த சாரதிமேல்
கோபங்கொண்டான் பிறகரக்கன் குற்றஞ்செய்தா
யென்றவனைப்

பார்த்துரைப்பேன் சாரதியே பாதகமேன்
றினைத்துச்செய்தாய்
வார்த்தைக்கிட மாயிற்றடா வையகத்தி லெனதெசமா

குறைவுபடக் கருதிச்செய்தாய் குவலயத்தில்
மனிதர்நம்மை
அறிந்துபாராய் வெல்வதுண்டோ அநுசிதமாங்
காரியஞ்செய்தாய்

அரக்கர்களில் என்னைப்போல அதிவீரன்
எங்குமுண்டோ
வருவதுண்டோ தீங்கெனக்கு வையகமே கதறுமன்றோ?

எனதுமனம் அறியாமலே ஏன்ரதத்தைக்
கொண்டுவந்தாய்
கனங்குறையச் செய்துவிட்டாய் காலோசிதம்
அறியாமல்

2810. எதிரிகளுக் கிணங்கியென்னை இகழ்ந்திடவே
செய்தவுந்தன்
சதிமோசந் தனைநினைக்கச் சங்கடமே பெருகுதடா

இந்தவிதம் அநேகமாக இழிவாகப் பேசக்கேட்டுச்
சிந்தைமிக நொந்தவனாய்ச் செப்புகிறான் சாரதியும்

பாவமேதும் நானறியேன் பரமபக்தி யும்மிடத்து
ஆவலோடு கொண்டுமக்கு அடிமைசெய்து
வருமென்னை

நன்றிகெட்டோ னென்றெண்ணி நாவுதனில் குரூரமாக
இன்றுரைத்த வார்த்தையினால் என்மனது
துள்ளுதையா

நீரிருக்கும் நிலைமைகண்டு நினைத்தும்மைக்
காப்பதற்கே
கோரியிங்கு ரதந்தன்னைக் கொண்டுவந்தேன்
குணமடைய

2815. அனுகூலந் தனைநாடி ஆதரிக்கச் செய்தேனல்லால்
கனங்குறைய உமக்கணுவும் காரியம்நான்
செய்யவில்லை

எதிரிகட்கு இணங்கியும்மை இழிவுசெய்யும்
பாவியென்று
மதித்துவிட்டீர் மிகவுமையா மனவருத்தஞ்
சகிக்கலையே

உண்மையாக நானடக்க உதாசீனஞ் செய்தீரே
மண்ணுலகி லும்மைநம்பி மனம்நொந்தேன் நா
னுமையா

வஞ்சகமே அறியேனையா வருங்கவ்ட மென்றறிந்தேன்
அஞ்சிநடு நடுங்கொண்டுவந்தேன் அபசாரி அல்லவையா

இந்தவிதம் சாரதியும் இராவணனைப் பார்த்துரைக்க
அந்தவார்த்தை களைக்கேட்டு அவன்மீது
அன்புகொண்டு

2820. வெகுவிதமாய் ஸ்தோத்தரஞ்செய்துவெகுமதியு
மிகத்தந்து
அகமகிழ்ச் செய்ததன்மேல் அமர்புரிய ராமன்முன்னெ

ரதத்தையவன் கொண்டுவந்தான் ராமராவ ணரிருவர்
மதியுடனே மறுபடியும் மகத்தான யுத்தஞ்செய்தார்

இவ்விதமா யிளைக்காமல் இடம்வலமாய்ச்
சுழன்றுகண்டோர்
எவ்வெவரும் நடுங்கயுத்தம் இருவருமாய்ச் செய்தாரதை

ஆறறிந்து சொல்லவல்லோர் அண்டர்பயங்
கொண்டுயர்ந்தார்
தேருடனே விண்ணில்செல்வார் திக்குத்திசை
யடிவெல்வார்

சாரதிகள் இருவருமாய்ச் சங்கத்வனி யெங்கும்கேட்கச்
சாரமாகச் செய்தாரம்மா சகலருங்கேட்
டானந்தித்தார்

2825. இருபுறமுந் தோர்வையின்றி இருக்குமொரு
காரணத்தைக்
கருதிராமன் ஆலோசித்தான் கண்டுதேவர்
அகஸ்தியரை

அனுப்பித்தந்தார் ராமனிடம் அவர்வந்து பாலுதேவர்
அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு அருமையான
மந்திரமாம்

ஆதித்திய ஹிருதயமெனும் அனுகூல மந்திரத்தை
நாதன் ஸ்ரீ ராமனுக்கு நன்மைதர அனுக்கிரகித்து

உபதேசஞ் செய்தாரம்மா உண்மையுடன்
அதைக்கிரகித்துச்
சகம்பெறவே மனனஞ்செய்தான் சுவாமிமுன்னே
சூரியன்வந்து

அனுக்கிரகித்துத் தூண்டிவிட்டார் அமர்புரிவாய்
ஜயமடைவாய்
இனியரக்கன் வாழ்வொழியும் ஏனனக்குக்
கவலைவேண்டாம்

2830. மனமகிழ்வாய் கனமடைவாய் மாதவனே
யென்றுரைத்தார்
அனுக்கிரகித்த அவரைராமன் அடிபணிந்தான்
மிகத்தெளிந்தான்

தேவரெல்லாம் ராமனுக்குச் செய்யும்நல்ல உதவிகளைப்
பாவியிலங் கோன்கண்டு பற்கடிப்பான் பழையவொரு

சபதத்தை எண்ணியவன் சக்தியெல்லா
மொழிந்ததினால்
பயமனத்தைப் பாராட்டிப் பலனேது மில்லையம்மா

அம்புகையில் ராமன்கொண்டான் அனுகூலச்
சகுனங்கண்டான்
சம்பவிக்க அரக்கன்கண்டான் சகுனமவன்
வாழ்வொழிய

அதன்பிறகு ராமச்சந்திரன் அர்த்தச்சந்திர
பாணமதாம்
உதவிசெய்யுங் கணைதொடுத்தான் உடனேயது
சீறிவந்து

2835. தூட்டன்தலை பத்தும்விழத் துண்டமாகக்
கண்டருந்செய்து
வெட்டித்துள்ள மறுபடியும் முட்டித்தலை
முளைத்துதம்மா

நாறுதரம் மறுபடியும் நொருங்கஅவன் தலையறுத்தான்
தேறிப்பின்னும் தலைகளெல்லாம் திரும்பவுமே
முளைத்துதம்மா

பனங்குலைபோல் அறுந்துருளும் பாவிதலை
நாய்நரிகள்
கனமழியக் கவ்வுமந்தக் காட்சிகண்டு மனந்தளர்வான்

முளைத்துமுளைத் தெழுந்தலைகள் முழுவதையும்
அறுத்தெறியக்
களைத்திடுவான் களைதெரிவான் கைகளுமே
அறுந்திடுவான்

அறுந்தகைகள் பிறந்துவர அம்புமழை மாதலிமேல்
சொரிந்தவனை அங்கமெல்லாம் துளைத்துப்பின்னு
மிலங்கேசன்

2840. தோமரமொன் றெடுத்துவிட்டான் துண்டுதுண்டா
யதையறுத்துப்
பாமரன்தேர்ச் சாரதியைப் பரமபதஞ்
சேர்த்தான்ராமன்

இருவர்களின் பதத்வஜங்கள் இருந்தவிடந் தெரியாமல்
அறுத்தெறிந்தார் பரஸ்பரமும் அதன்பிறகு ஸ்ரீராமன்

ஆதித்திய ஹிருதயமெனும் அருமையான மந்திரத்தின்
சோதிமய ஆதாரத்தால் சொரிந்தானம்மா
வெகுசனைகள்

சொரிந்தபாணம் யாவும்வந்து துளைத்திடவே
அரக்கன்மிகப்
பரிதவித்தான் பிராணன்துள்ளிப் பாதுகாப்போ
ராருமிலை

2840. தோமரம் - எறிபடை

ஸ்ரீராமர் கையால் இராவணன் மடிந்ததும்,
விபீஷணர் தமயன் போனதற்காக விசனப்படுவதும்
அவரை ஸ்ரீராமர் தேற்றுவதும், இராவணன்
பத்தினிகள் வந்து பிரலாபிப்பதும், அவர்களை
விபீஷணர் ஆதரவோடு ஆற்றுவதும், பிறகு அவர்
தன் தமயனுக்குத் தகனவினை செய்ய மறுப்பதும்
சாமியாக்ஞைப்படி அந்த வினைகள் செய்வதும்

மூண்டெழுமோர் அக்கினிபோல் மூடனிட
தேகமெல்லாம்
ஆண்டவன்ஸ்ரீ ராமனிட அஸ்திராதிகள்
எரித்ததம்மா

2845. கொளுத்துமக்கினிப் பாதையினால் கோசமெல்லாம்
வேகவேக
ஆளவனா மிலங்கேசன் அங்கமது மறுபடியும்

உண்டாய்க்கொண்டே வருவதினால் உபத்திரவங்கள்
சகியாமல்
சண்டாளன் அடைந்தவரச் சக்திதனை
நொந்தானம்மா

அறுத்தெறியும் அங்கமெல்லாம் அடிக்கடியே
முளைக்குமொரு
அரிதான மகிமையுள்ள அரக்கனைநாம் வெல்வதற்குச்

செய்வதினி என்னவென்று ஸ்ரீராமன் நினைக்கையிலே
ஐயம்வேண்டாம் ராமச்சந்திரா அந்தச்சூட்சுமம்
அறியச்சொல்வேன்

அரக்கன்மார்பி லுண்டவனை ஆதரிக்கும்
அமிர்தமையா
கருதியதை உடைத்தெறிந்தால் காதகன்வாழ்
வொழியுமென்று

2850. மாதலிதா னெடுத்துரைத்தான் மாதவனார்
அதைக்கேட்டுப்
போதமுள்ள மாதலிசொல் புத்திதனில்
கிரகித்துக்கொண்டான்

தேவர்கள்தம் பயமொழியச் சீதைசிறை விட்டொழியச்
பூவுலகோர் மனஞ்செழிக்கப் பூசுரர்கள் தவங்கொழிக்க

ராமலட்க மணரெசஸூ ஜகம்படிக்க ராவணன்பேர்
தீமையுடன் உலகஞ்சொல்லத் தேவாதி தேவன்கையில்

பிரசண்டகோ தண்டந்தனில் பிரம்மாஸ்தரம்
தனைத்தொடுத்துச்
சுதண்டஞ்செய் இலங்கேசன் துள்விழிவீழ நேர்பிடித்து

அபிமந்தரம் செய்துவிட்டார் அண்டகடா கம்பிளக்கக்
குபுகுபென்றே எரிச்சலுடன் கோடிசூரியன்
போல்ஜ்வலித்து

2855. வந்துலங்கா புரிவேந்தன் மார்பைப்பிளந் தமுதகடம்
சிந்தியவன் முடிகள்பத்தும் சிதறிவிழக்
கொய்ததன்மேல்

கூரம்பதி தனில்மூழ்கி ஸ்ரீராம னிடஞ்சேரத்
தீராத கவலையெல்லாம் தீர்ந்ததம்மா மூவுலகில்

சூரருலெஞ்ச முடையநல்ல கோடிகோடி ராட்சதர்கள்
ஸ்ரீராமர் கையெடுக்க ஜகத்தைவிட்டு மடிந்தாரம்மா

2854. அபிமந்தரம் - வணக்கம்

2856. கூரம்பதி - பாற்கடல்

எடுத்தான்ராமன் அவதாரம் இராட்சதரை
ஒழித்திடவே
தொடுத்தான்யுத்தம் விந்தையாகத் தொலைந்தார்கள்
அரக்கரெல்லாம்

மங்களவாழ்த் துகள்பாடி மாதவனை மிகத்துதித்து
எங்குமலர் மாரிபெய்தார் எண்டிசையோர்
மிகமகிழ்ந்தார்

2860. கைகள்தட்டி வானரர்கள் கடலொலிபோல் கர்ஜித்து
மெய்மறந்தே ஆனந்தித்தார் மிதமீறி மதமடைந்தார்

வைகுந்த வாசியிடம் வாசக்காவ லாயிருந்து
தெய்வச்செய லாகவிரு சேவகர்கள் சாபம்பெற்றார்

அந்தச்சாபம் ஒழிவதற்கு அருள்பரனை அவர்வேண்டத்
தந்தபரம் சொல்வேனதைத் தாகமுடன் கேளுமம்மா

என்னிடத்துப் பக்திசெய்ய எடுத்தாறு ஜன்மமட்டும்
சொன்னபடி நடப்பீராயின் தொலையுமந்தச் சாபமது

அந்தப்படி இல்லாவிடில் ஆறில்பாதி ஜன்மங்கொண்டு
எந்தனைநீர் பகைப்பீராயின் இந்தச்சாபம்
ஒழியுமென்றார்

2865. பகைவராக இருந்துகொண்டு பாதிஜன்மம்
மூன்றெடுத்துப்
பகவானே உம்முடைய பாதந்தனை
அடைவோமென்றார்

அந்தப்படி கும்பகர்ணன் அவன்தம்பி இராவணனும்
வந்துதித்தார் இரண்டாவதாய் வையகத்தில்
ராட்சதராய்

அந்தஜன்மம் தொலைவதற்கு அகந்துணிந்து
ஜானகியை
வந்தெடுத்து ஸ்ரீராமனாம் வைகுந்த நாதன்றனைப்

பகைத்துக்குதி யடைந்தானம்மா பாபியாக
உலகில்தோன்றி
மகிமைபெறத் தேகம்விட்டு மாதவனால்
கதியடைந்தான்

பரமபக்தன் தசகண்டன் பாபமெண்ணி
நடந்ததெல்லாம்
மறுமையிலே கதியடையும் மர்மமென்றே அறிந்திடுவீர்

2870. ஐயனப்பால் கீழிறங்கி அற்புதமாய் தேவரதம்
வையகத்தில் உதவியாக வந்ததற்கு மாதலியை

மிகப்புகழ்ந்து உபசரித்து விசுவாசமா
யனுப்பித்தந்தார்
அகமகிழ்ந்து மாதலியும் அவனுலகைப்
போயடைந்தான்

அரக்கன்தேகம் நிலைந்தனிலே அசைவின்றிக்
கிடக்குக்கண்டு
கருதிவந்து பார்த்தாரம்மா கமலாட்சன் ஸ்ரீராமன்

இலங்கேசன் தேகந்தனில் இருந்ததம்மா கையடியால்
சிலகாயக் குறிகளாக ஸ்ரீராமன் கண்டதனை

இந்தக்குறி வந்ததென்ன எனக்குதனைச்
சொல்லுமென்று
முந்திநிற்கும் விபீஷணரை மொழிந்திடவே
கேட்டாரம்மா

2875. எந்தனிட தமயனிவர் எண்ணியலு மாருடனே
வந்துயுத்தஞ் செயத்தொடங்கி வாக்குறுதி
செய்துகொண்டு

பரஸ்பரமும் முஷ்டிகொண்டு பலமாகக் குத்தியதால்
பரிதபித்துக் கஷ்டப்படப் பவித்ததையா
காயமென்றார்

அதைக்கேட்டு அதிசயித்து அனுமாரை மிகப்புகழ்ந்து
சதிகாரன் ராவணன்மேல் சலிப்படைந்து விலகுகையில்

மன்னவனாம் தமயன்கீழே மரணமாகிக்
கிடக்கக்கண்டு
தன்னைமீறி விபீஷணர்க்குத் தாரைகண்ணில்
பெருகிற்றம்மா

கண்டதனை ஸ்ரீராமர் கருணைமிகக் கொண்டவரை
அண்டுமையா விசனமது அதையடக்கப்
போகாதென்றார்

2880. சொன்னவாக்கைக் கேட்டுடனே சோகத்தோடு
விபீஷணனார்
மன்னவனாம் அண்ணன்மீது மரம்போல வீழ்ந்தலறி

புலம்புகிறார் மிகவுமம்மா புரண்டுருண்டு மிகஅரண்டு
கலங்கலமாய்க் கண்ணீர்சொரிந்து கதறிவிபீ
ஷணருரைப்பார்

கொடியவனா யிருந்தாலுமே உடன்பிறந்தோ
னாகையினால்
விடுவதில்லை பாசமென்னை வேதனையை
என்சொல்வேன்

அண்ணாவுன்னை வெல்லுதற்கு அகிலந்தனி
லாருமுண்டோ
ஒண்ணான ஈசனன்றி ஒருவர்நிகருனக்குமுண்டோ?

எடுத்தாயே கைலாசத்தை எட்டானைக் கொம்புகளை
ஒடித்தாலே தேவாதிகள் ஓடும்படி அடித்தாயே

2885. மட்டில்லா வல்லமையும் வரங்களும்ஸ்ரீ ராமர்முன்னே
கெட்டுதேபார் சொன்னமதி கேளாமல் ஏனழிந்தாய்

உண்டவரைக் கொல்லும்விஷம் உத்தமிஜானகி
விஷமோ
கண்டவரைக் கொல்லுமென்றேன் கடிந்துரைத்துத்
துரத்தினையே

கொடுத்தவரம் மிகவுண்டு குவலயத்தில்
அவைகளெல்லாம்
அடக்குமின்றேல் அழியுமென்றேன் அதட்டியென்னை
மிரட்டினையே

நீதிகெட்டோர் மேதினியில் நிலைகுலைவா
ரென்றசொல்லை
ஊதிவிட்டோர் பாதகத்தோர் உரைத்தவாக்கைச்
சிரசில்கொண்டார்

காமனெய்த பூங்கணையைக் கண்டித்து வெல்லாமல்
ராமனெய்த அஸ்திரத்தால் ரணகளத்தில்
விழுந்தனையே

2890. நான்சொன்ன படியேதான் நடந்துதண்ணா முடிவாக
ஏன்வீணாய் ராமன்பகை ஏற்றுக்கொண்டு
வாழ்வொழிந்தாய்

தருமமொன்றே வெல்லுமெனும் தனிமொழியே
நிலைத்ததிப்போ
கருமமுனைக் கியற்றவினை காட்டித்தந்தெங்
கேகினையே

பெண்ணைக்கூட்டி மகிழ்ந்துசுகம் பெறுமெந்தன்
அண்ணாவே
மண்ணைக்கூட்டி மெய்மறந்து மகுடங்களோ
டருளுத்தலை

கிடக்கின்ற கோலங்கண்டு கிலேசப்பட
மன்னைவைத்து
நடந்தெங்கு போனாயண்ணா நானெவ்வாறு
சகிப்பேனண்ணா

உடம்பிறந்தோர் முதலாக உள்ளவந்து
மித்தரரெல்லாம்
உடம்பிழந்து ஒழிந்ததன்மேல் உலகில்நான்
இருப்பதிலே

2895. சுகமனுவு மில்லையண்ணா சோகமொன்றே
மீறுதண்ணா
அகம்வருந்தி இருப்பதிலும் ஆவியொழித் திடுதல்நன்றே

கூட்டத்தோடு வாழ்ந்திருந்து கொள்ளையாக
எல்லோரைத்தந்து
வாட்டத்தோடு மனம்நொந்து வாழுமன
மில்லையண்ணா

துர்புத்தி தனையுரைத்த துரோகிகளை நம்பினையே
அற்பபுத்தி கேட்கலாமோ ஆவிதனைப்
போக்கலாமோ

2893. கிலேசம் – வருத்தம்

சொன்னவரு முன்னொழிந்தார் சோகமேதா
னுனக்குந்தந்தார்
உன்னையுமே மடியச்செய்தார் உருரும்படி
என்னைச்செய்தார்

மந்தரையாலோ சனைசெய்கையில் மந்திரிகளாம்
படுபாவிகள்
உந்தனுக்குக் கேடுவர உபதேசஞ் செய்கையிலே

2900. பலவிதமாய்த் தடுத்துரைத்தேன் பட்சங்கொண்டு
பிராதவென்றேன்
நலங்கருதிச் சொன்னதற்காய் நாவிலுதா
சீனஞ்செய்தாயே

காலதேசா திகளறிந்து காரியங்கள் செய்துநல்ல
கோலமுடன் வாழ்ந்துவந்து குற்றஞ்செய்து மடிந்தாயே

பிறர்நடக்கப் புத்திசொல்லும் பெருமையுள்ள
னெதண்ணா
அறிவிழந்தே மோசம்போனீர் அனேககஷ்ட
நஷ்டப்பட்டீர்

எதிரிகளை புழையென்று எண்ணிவீணாய்க்
கெட்டுப்போனாய்
அதிபலவான் ராமனென்று அநேகவிதம்
நானுரைத்தேன்

எந்தன்வாக்கைத் தள்ளிவிட்டு எதிர்த்துயுத்தஞ்
செய்தாயே
வந்ததென்ன பலனுனக்கு வாழ்விழந்த தொன்றுதானே

2905. தக்கும்பொருள்தனிலல்லவோதாகங்கொள்ள
லறிவாகும்
துக்கந்தரும் பொருளடையத் துணிவதெல்லாம் அறிவா
குமோ?

நீயொழிந்த காரணத்தை நினைத்துமிக நானிப்போ
பேயனைப்போ லாகிவிட்டேன் பிறப்பேநா
னென்னசெய்வேன்

சிற்றின்பத்தை நாடிவீணாய்ச் சீரழிந்தாய் கூறழிந்தாய்
உற்றபடி வரம்பெரும் ஒழிந்ததுபார் ஒருநொடியில்

இந்தவிதம் அநேகமாக வென்னியென்னிப்
புலம்புகையில்
வந்துயாமன் தேற்றுகிறான் வாஞ்சையொடு
விபீஷணரை

வாய்திறந்தேன் பதறுகிறீர் வருவதுண்டோ அதினாலே
போய்விட்ட பொருளுக்காகப் புலம்பவேண்டாம்
சொல்லக்கேளீர்

2910. எடுத்ததேகம் அழியுமையா எவர்களுமே
நிலைப்பதில்லை
அடுத்துவரும் காலமது அதைத்தடுக்கப் போகாதையா

சுடமொழித்துச் சுதியடையச் சுடவுளராம்
அருள்பரனைத்
தடமறிந்தே ஆராதிக்குத் தரணிதனி லுதித்தோமையா

ஜடப்பொருளாம் தேகமது சத்பொருளாய்ப்
பவிப்பதுண்டோ
தொடர்ந்துவரும் ஜன்மமதின் தோரணையை
நம்பவேண்டாம்

ஐம்பொறிகள் அறியவுள்ள அங்கமது பங்கமாடும்
மெய்யறிவைக் கொள்வீரா யின் மேதினியும்
மிஞ்சாதையா

பொறிகளெல்லாம் பொய்யாகவே போகுமையா
மனம்நினைத்தால்
கருமபந்தம் ஒழியுமையா காட்சியெல்லாம்
சாட்சியையா

2915. ஜன்மாந்தரக் கருமபலன் ஜகந்தனிலே யாருக்குமே
நன்மைதீமைக் குள்ளாகும் நாடியதை அறிந்துபாரீர்

சகுனவித்தி உள்ளநல்ல சத்பக்தரா யிருப்பவர்க்கு
மகிமையுள்ள லோகாந்தரம் அகமகிழக்
கிடைக்குமையா

போக்குமுள்ள லோகங்கள்தான் பகுவிதமாய்
நம்பவுண்டு
தாகங்கொண்டு சத்கரும தருமங்களைச் செய்பவர்கள்

படிப்படியாய் உள்ளநல்ல பாங்கான யோகங்களை
அடுத்தடைவார் சுகப்படுவார் அழியுமந்த அனுபவமும்

ஒளியுலகங் களையடைந்து ஒளித்தேகம் வசித்தாலும்
வெளிமுதலாம் பூதப்பற்று விளங்குமையா
சுலிங்கத்தோடு

2920. ஸ்திரிபுருஷ பேதமது சித்திபெறும் லோகங்களில்
பிரேமைகொள்ளும் தேகமதில் போரின்பம் ஆகாதது

அகண்டாகார விருத்திகொண்டு ஆராயும்
பேர்களுக்குஇகபரமென் றுரைப்பதெல்லாம் ஈஷத்தும்
விளங்காதையா

இருப்பிடத்தே மோட்சமது இருக்குதையா
எண்ணிப்பார்க்கில்
வருவதில்லை போவதில்லை இருபொருளா
யிருப்பதில்லை

மனதிலிச்சை தனைவிட்டு மலமொழிந்து மர்மங்கண்டு
தினந்தினமும் உழைப்பவர்க்குத் தெளிவாக
விளங்குமையா

சுகதுக்கங் களைவெறுத்துச் சோகந்தரும் மோகம்விட்டு
புகவெளி யாகிநின்றால் இந்தக்கவ்ட முண்டோபாரீர்!

2925. சமபாவங் கொள்ளுமையா சாந்திதனை அடையுமையா
மமதையெல்லா மொழியுமையா மனதைவசங்
கொள்ளுமையா

சூத்திரிய தருமமதில் சகஜமையா ஜயாபஜயம்
உத்தமமாம் கதியடைந்தார் உமதண்ணன்
புலம்பவேண்டாம்

எங்குமுண்டு யுத்தமதில் எதிர்த்துநின்று
கடமொழித்துக்
கங்குகரை இல்லாத சுகமடைவோர் சுகமடைவோர்

உள்ளமட்டும் சுகமடைந்து உலகுதனில் யசஸடைந்து
வள்ளலவும் பின்னடையா இலங்கேசன் சூரனையா

விசனப்பட லாகாதையா வீரசொர்க்கம் அடை
வானையா
நசகண்டன் கதியடையத் தகனவினை களைத்தொடங்கி

2930. வேதசாஸ்திரம் படிநடத்தும் வேதனையை
விட்டொழியும்
ஆதரவோ டரசுபெற்று அகிலமுள்ள மட்டும்வாழும்

ஒருவருக்குப் புத்திசொல்லும் உத்தமரே நீருங்கூடப்
பரிதபிக்க லாமோபாரீர் பார்த்துச்செய்யுங்
காரியமென்றார்

2926. ஜயாபஜயம் - வெற்றி தோல்வி

சோகமதை விட்டொழித்துச் சுவாமிவாக்கின்
படிநடக்கத்
தாகங்கொண்டு விபீஷணனார் தட்சணமே
துணிந்தெழுந்தார்

அந்தவேளை தசகண்டன் அந்தப்புர ஸ்திரீகளெல்லாம்
வந்துவிட்டார் கதறிக்கொண்டு வாயறைந்து
மேல்விழுந்து

கடகடவென் றுருண்டுமிகக் கண்ணில்தாரை
பெருகக்கூந்தல்
தடுமாறி புழுதிபடத் தரைதனிலே புரண்டலைய

2935. நவரத்ன மயமான நகைகளெல்லாம் சிதறிவிழ
அவரவரும் எண்ணியெண்ணி அகம்வருந்திப்
புலம்பினரே

பட்டஸ்திரி மண்டோதரி பர்த்தாவின் மேல்விழுந்து
தட்டுத்தடு மாறிமிகத் தத்தளித்துப் புலம்புகிறாள்

என்னரசே இலங்கேசா எங்குபோனீர் மெய்மறந்து
என்னைத்தனி யாகவிட எண்ணலாமோ மண்ணுலகில்

உமதுபலம் கொண்டுமிக உலமகிழ்ந்தேன்
அகங்குளிர்ந்தேன்
சமமில்லை எனக்காரும் ஜகந்தனிலே என்றிருந்தேன்

பெருமையுடன் ஏசஸுபெற்றுப் பிரதாபத்தோடு
திசைகளெங்கும்
பரிதபிக்க அடக்கியாண்டு பலகாலம் வாழ்ந்திருந்து

2940. எனதுமனதுக் கேதுங்குறை இல்லாமல் இன்பந்நந்த
மனமதனை மீறியுள்ள மனவாளரே மறந்தீரே

பிரானுனந்தன் மீதில்வைத்துப் பெருமையாகப்
பாரிபாலித்த
பிரேமையெங்கு போயிற்றிப்போ பேசுமையா
பிரானேசரே

எத்தனையோ ஸ்திரிகளிலே என்னையொரு
பெண்மணியாய்ச்
சித்தந்தனில் எண்ணிமிகச் சீருடனே ஆதரித்த

அந்தவொரு நேசமின்றி ஆவிதனை விட்டுவிட்டு
இந்தக்கோல மாசுமண்ணில் இருக்கவும்மைக்
காணும்படி

என்னெழுத்து நேர்ந்ததிப்போ ஏதுசெய்வேன்
வேதனையே
என்னைமீறி வருத்துதையோ எவருடனே
முறையிடுவேன்

2945. உம்முடனே வாழ்ந்துவிட்டு உலகினினி
இருப்பதென்றால்
சம்மதந்தா னுண்டாடுமோ சற்றுந்தானே
பெண்களுக்குக்

கண்டவுடன் என்னைவந்து காதலுடன் தழுவிக்கட்டிக்
கொண்டாடங்கா மகிழ்ச்சிகொள்ளும் குணமுடைய
னெதரசே

கதறுமெந்தன் கண்துடைத்துக் காப்பதும்ம
கடனன்றோ
இதமுள்ள வந்தன்மீதும் ஏதுமக்குக் கருணையில்லை

சுந்தரிகள் பிரியங்கொண்டு சுகப்படவே வந்தணையும்
அந்தமுள்ள உமதுமார்பை அம்புதுளைத்
திடலாயிற்றே

ஒருவருக்கும் வணங்காமல் உயர்ந்துநிற்கும்
தலைகளெல்லாம்
அறுந்தருண்டு கழுகுகொத்த ஆனதென்ன அதிசயமே

2950. தேவாசுரர் முதலாகத் திரண்டுவந்து
உமையெதிர்த்தால்
ஆவலோடு அடித்தவரை அலறியோடச்
செய்யுங்கைகள்

அறுந்துதீமே விழுந்துநாய்கள் அசுமகிழப் புசிக்கும்படி
கருமவினை நேர்ந்ததுதான் கஸ்டங்கஸ்டம்
சகிக்கவுண்டோ

வெட்டுண்ட கைகால்கள் வெருதலைகள் கணக்கின்றி
வெட்டிவெட்டித் தள்ளுகையில் கட்டமிகப்
பட்டிருப்பீர்

சாவுமக்கு வருமென்று சற்றும்நான் எண்ணவில்லை
பாவபல னாலேவீணாய்ப் பட்டீரையா கெட்டீரையா

இணங்கும்பெண்மே லாவல்கொள்ளல் ஏற்குமல்லால்
சம்மதியாக்
குணமுடைய பெண்மீது கொஞ்சமுந்தா
னாசையாமோ?

2955. கைபலத்தால் எடுத்தபெண்கள் கணக்கில்லை
அவர்களும்மைக்
கைகலந்து வாழ்ந்திருந்த காரியம்போல்
நினைத்துக்கொண்டு

பதிமுகமே காட்சியென்று பக்திகொண்டு மகிழும்நல்ல
பதிவிரதையாம் ஜானகியைப் பதுங்கிப்போய்
எடுத்ததினால்

சீதையுனக் கடங்கா வென்று செப்பினேனான்
மிகவுமக்குந்திமொழி அவைகளை நீர் நிராகரித்தே
பராக்கிரமமே

மிகவுமுள்ளோர் போல்நடித்து மேதினியில் சீரழிந்தீர்
சுகமிழந்தீர் சோகப்பட்டீர் சுத்தவீரர் ராமர்கையால்

உயிரிழந்து படுகளத்தில் ஒருவராக வீழ்ந்தென்மேல்
தயவசைவு மில்லாமல் தரைதனிலே கிடக்கின்றீரே

2960. கனவ்ராக உமையடைந்து காலமெல்லாஞ்
சுகமடைந்து
இணைபிரியா திருந்தேனே ஏன்பிரிந்தீர் நான்கதற

நலமொழியும் குலமொழியும் நானாவிதக் கஸ்டம்வரும்
உலகறிந்தை தானுமுண்டாம் உத்தமிசீ தையைவிடுவீர்

தேவதேவன் தேவியவன் திருமகளாம் அவள்மீதில்
ஆவல்கொண்டா லாபத்தென்று அநேகவிதம்
விபீஸணரும்

பரிந்துமக்குத் தருமஞ்சொல்லிப் பக்தியொடு
வேண்டினரே
அருமைத்தம்பி அவர்போல ஆருரைப்பீர் இதமுமக்கு

உமதுமனப் போக்கறிந்து உரைப்பார்க ளெல்லோரும்
தமதுகருத் தெடுத்துரைத்துத் தடுப்பவரே தம்பியாவர்

2965. மதியில்லா மந்திரிகளும் மமதைகொண்டு
தூண்டினார்கள்
அதமானார் அவர்களுமே ஆருமிச்ச மில்லையிபோ

கும்பகர்ணர் குணமுரைத்தார் கோபங்கொண்டீர்
உமையடுத்தார்
அம்புவியை அவரும்விட்டார் அண்ணன்மனப்
படிநடந்து

பெற்றபிள்ளை இந்திரஜித்தன் பிரதாபத்தோடு
ஏசஸடைந்தான்
உற்றபடி உமக்குழைத்தான் உயிரிழந்தான்
அருமைமகன்

மக்கள்களும் அநேகர்போனார் மற்றுமுள்ள
பேர்கள்போனார்
தக்கபிராதாக்களும்போனார் தானவர்பூண்
டொழிந்ததிப்போ

இப்படியும் துணிவதுண்டோ என்னைவிட்டுப்
பிரிவதுண்டோ
இப்புவியில் எனக்கினிமேல் ஏதுமிலை வாழ்வென்பது

2970. கணவர் துணை தனையிழந்து காலம்போக்கும்
பெண்களுக்கு
அனுவுமுண்டோ சுகமதுதான் ஆறுதல்தான்
அடையவுண்டோ

உம்மைவிட்டுப் பிரிந்தறியேன் ஒருமுறையும்
நானறியேன்
செம்மையாக வாழ்ந்தவள்நான் சீரழிந்தே
னிப்பொழுது

உயிரொழிக்க வகையறியேன் உமையடையும்
தடையறியேன்
தயிரியத்திற்கு முறையறியேன் தத்தளித்தே
வாடுகிறேன்

சூர்ப்பணகி செய்தவினை சொல்வதற்கோ வாயில்லை
ஆர்சகிப்பார் இந்தக்கஸ்டம் அயியாயம் செய்தாளவள்

குட்டிநடை உள்ளவளாம் மொட்டைமுண்டை
சூர்ப்பணகி
பட்டணத்தைச் சுட்டெரித்தாள் சுட்டமிக
எனக்குத்தந்தான்

2975. இலங்கைநாச மாவதற்கு எண்ணிச்செய்தான்
துரோகியவள்
அலங்கோல மாயிற்றிப்போ அவள்வாக்கைக்
கேட்கலாமோ

அவ்டலட்சுமி தனையொழித்து அமங்களத்தைத்
தருமவளின்
இவ்டப்படி இணங்குவோர்க்கு எல்லாக்கவ்டம்
வந்திடுமே

மூவுலகைக் கட்டியாண்டீர் மூதேவி வாக்கைக்கேட்டுப்
பாவஞ்செய்த காரணத்தால் பறந்துவிட்டீர்
உலகைவிட்டுக்

குலங்கொடுக்கும் கோடாலிக்காம்பாய்க் குவலயத்தி
லவளுதித்து
அலங்கோல மாக்கியெல்லாம் அழித்துவிட்டாள்
பாதகியே

என்னபய னடைந்தாளவள் ஏனிந்தக்
கொடுமைசெய்தாள்
மன்னவரே அவளுடைய மனவழியைப் பற்றலாமோ?

2980. பெண்மதியைக் கேட்பதெல்லாம் பிரமாதமாக
முடியுமென்பார்
கன்மணியா யிருந்தாலுமே காதில்பெண்வாக்
கேற்கலாமோ?

எத்தனையோ காலமாக இசைந்தபெண்கள்
சுகமடைந்த
அத்தனையும் போதாதென்று அன்னைசீதை
தனையடையக்

சூதுமூக்கு கலுமறுத்துக் சுபடமாக வந்துரைத்த
சாதகியின் செயலறிந்து சண்டியாமல் பண்டர்போல

ஆவிவீணாய் அலைந்துகெட்டீர் அடுத்தவரும்
துடிக்கச்செய்தீர்
சோகப்பட என்னையவைத்தீர் சொர்க்கபோகம்
நீயடைந்தீர்

பாதகத்தோ டுரைக்கும்வாக்கைப் பரிபாலிக்கும்
பேர்களுக்கு ஆதரவும் ஐசுவரியமும் ஆவியுந்தான்
ஒழியுமென்பார்

2985. மாதரசாம் ஜானகியை மனந்துணிந்தே எடுத்துவந்து
சேர்ந்தபட்டீர் வாதப்பட்டீர் ஜெகத்திலென்றும்
பழிசுமந்தீர்

எத்தனையோ சுவர்டப்பட்டீர் இடையில்சற்றும்
தோன்றாமல்
சித்தந்துணிந் திங்குவந்து ஸ்ரீராமனா லுயிரிழந்தீர்

மகிதரென்று அலட்சியமென்னி மமதைகொண்டீ
ராசையினால்
கனமழிந்தீர் இனமழிந்தீர் சுடத்தைவிட்டுத்
தான்பறந்தீர்

சோகப்பாதை பொறுக்காமல் சொன்னேனையா
மனக்குறையைப்
பாகந்தப்பிச் சொல்லவில்லை பர்த்தாவே வமித்திடுவீர்

நேவர்களைப் பறக்கடிப்பீர் நெஞ்சிக்கவும்மை
யாருமில்லை
நாவசைத்தால் நாடசையும் நான்முகமும்
உமதுவாக்கை

2990. மீறியேதும் செய்வதுண்டோ மேதினியில் மனிதரைநீர்
கோரிவரம் பெறாத்தொரு குணத்தாலே
குறைவடைந்தீர்

திருமணமுமே ஒருசமயம் தீங்குசெய்ய ஓங்குமதால்
வரும்பெரிய கஷ்டமென்று வரம்பெறுதல் அறிவாகுமே

விதியைப்போல மதியிசைந்து வினைசெய்யும்
என்பதுபோல்
சதியாக வரந்தனிலே சத்துருவாய் மனிதர்வந்தார்

ராமரைநீ ரேழையென்று ராகத்வேஷந் தனையடைந்து
சாமளர்கை அஸ்திரத்தால் சக்கதியை
அடைந்துவிட்டீர்

பேசியினி ஆவதில்லை பெருமையெனக் கேதுமிலை
ஆசையெல்லாம் விட்டொழித்தேன் ஆவலும்ம
மீதில்வைத்தேன்

2995. புழையாக ஆகிவிட்டேன் ஓங்கியோங்கி அழுவானேன்
வாழும்பாக்யந் தனையிழந்தேன் வைத்வயம்
நானடைந்தேன்

மன்னவரே உம்முடைய மலையவளாம் என்னுடைய
இன்னமுள்ள வாழ்நாளை இப்பொழுதே
ஒழிப்பேனையா

2993. ராகம் - ஆசை; த்வேஷம் - பொறாமை

தருமமல்ல எனைப்பிரிதல் தாகங்கொண்டு
நான்வருவேன்
வரவழைத்தே என்னுடனே வாழுமையா
சொர்க்கத்திலும்

அந்தவொரு சகந்தரவே ஆசையோடு வேண்டுகின்றேன்
இந்தவேளை எந்தன்மீது இரக்கங்கொண்டு
அருளுமென்று

சொல்லியப்பால் மறுபடியும் சோகப்பாவதைகியாமல்
வல்லபரே உம்முடைய வாழ்வுந்தானே ஒழிந்திடுமோ?

3000. உலகமுள்ள மட்டுமுமக் கொருகுறையும் வருவதில்லை
குலம்மிக விருத்தியுண்டாம் கோரியும்மை யாரும்வந்து

ஜயிப்பவர்க ளில்லையென்று சித்தமதில்
உறுதிகொண்டு
பயமின்றி இருந்தேனே பரதேசி யானேனே

என்னைப்போல் உமக்கனுவும் இன்பந்தரும்
பெண்களுண்டோ
அன்னைசீதை யானாலுமே அழகிலெனக்
கிணையாவரோ?

மோகமவன் மீதிலென்ன முறைதப்பி நடந்ததென்ன
தேகந்தன்னை ஒழித்ததென்ன தெருவிலென்னை
விட்டதென்ன

நமனைவென்றீர் நடுங்கியவன் நாமுமது
பேரெடுத்தால்
மமதைகொன்னான் உம்முடைய மனதின்படி
தானடப்பான்

3005. லோகமெல்லாம் உமக்கஞ்சி நொந்துமனம்
வருந்துவதைத்
தாகமுடன் தேவர்சொல்லத் தண்டித்திட விஷ்ணுவந்து

மனிதரைப்போல் உருவெடுத்து மாதேவி சீதையுடன்
ஜனஸ்தானந் தனிலிருந்தார் தஸ்கரித்தீர்
அணைகட்டியே

வானரங்க ளுடனேவந்து வலைத்துக்கொண்டு
இலங்கைநகர்
சேனையுடன் யுத்தஞ்செய்யச் சீக்கிரமாய்
வரவழைத்தார்

இந்தவொரு ரகசியத்தை எடுத்துரைத்த பேர்களைநீர்
சிந்தைவருந் திடஅதட்டிச் சீறினீரே கோரமாக

அந்தவொரு தோரணையும் அடங்கிமுகம் புழுதிபட
இந்தவிடந் தனில்படுத்து ஏன்கிடக்க வேண்டுமையா

3010. அந்தப்புரந் தனிலிருந்து ஆவிதுள்ள ஓடிவந்த
எந்தன்மீது தயவிலையோ எந்நேரம் புலம்பியும்நாம்

மவுனமாக இருப்பதென்ன மானமும் மறந்ததென்ன
சிவனருளும் பெற்றவரே செப்புமென்று பலவிதமாய்ச்

சொல்லியழும் போதந்தச் சோகப்படும் நிலைமைதனை
எல்லோரும் கண்டுமிக இரக்கங்கொண்டார்
விபீஷணனார்

அருகில்வந்து அன்புடனே ஆதரவாய் அருமொழியால்
பாதபிக்க வேண்டாமம்மா பாசுத்ந் தன்றாயே

மன்னவரை இழந்தகுறை மனதைவிட்டுப் போகாதம்மா
என்னையுமே பரதேசியாய் இங்குவிட்டுப்
போனாரம்மா

அவருடைய சுவரு வமும் அவருடைய வல்லமையும்
வெவ றிவார் ஜகந்தனிலே வெல்லா மிப்போ
மறைந்துதம்மா

அண்ணனைநான் பகைத்திடவே ஆனதொரு
காரணத்தை
எண்ணியெண்ணி நாளுமம்மா ஏங்குகிறேன்
தாங்காமலே

விதிவசமே அண்ணனுக்கு விவேகந்தனை ஒழித்ததுவே
சதியாக வந்துதம்மா சங்கடத்தைத் தந்துதம்மா

போனதெல்லா மெண்ணியினி பொருந்தா து
முன்னிலைமை
நானுமும்மை மகளைப்போல நாளுங்காப்பேன்
கேளுமம்மா

அண்ணனிட ஆக்ஞைபோல அம்மாவும்ம
ஆக்ஞைப்படி
எண்ணிச்செய்வேன் பணிவிடைகள் எப்போதுங்
குறைவின்றி

விசனமதை விட்டுவிடும்விவேகங்கொண்டு
தேறுமென்று
சொல்லி விபீஷணனார்
சித்தனையோ சொன்னாரம்மா

மற்றுமுள்ள பத்னிகட்கும் மாலியவான் முதலாகச்
சுற்றத்தார் யாவருக்கும் சொன்னாரம்மா ஆறுதல்கள்

அன்புமிகும் விபீஷணனார் அனைவருக்கும்
இதமுரைக்க
நன்மைசெய்யும் அவர்வாக்கை நம்பியெல்லோர்
தெளிந்தாரம்மா

தேறுதல்கள் மிகவுரைத்துத் தேவிகளை
அரண்மனைக்கு ஆறுதலோ டனுப்பித்தந்து
ஆலோசித்தார் விபீஷணனார்

அகிருத்தியஞ்செய்த அண்ணனுக்கு அபரக்கிரியை
செய்வது
தகுநியல்ல வென்றெண்ணித் தள்ளியந்தக்
கருத்துரைத்தார்

3025. பூரீராமன் அதைக்கேட்டுச் சித்தம்நொந்த
விபீஷணரைக்
குரோதபுத்தி ஆகாதையா குணமறிந்து செய்யுமையா

பாவியென்றும் பகைவரென்றும் பாவிப்பது
இருக்குமட்டும்
ஆவிபோனால் அதன்பிறகு அந்தக்கொள்கை
கொள்ளப்போகா

சுடத்தைவிட்ட பேர்களுக்குக் கதிதரவே இருப்பவர்கள்
கொடுக்கும்பிண்டா திகளைக்கொண்டு குணமடைய
வேண்டுமையா

பாவியாக இருந்தவர்க்கும் பரகதியில் சுகமடைய
ஆலோடு செய்யவேண்டும் அபரக்கிரியை
விடப்போகா

போனவர்க்கு இருப்பவர்கள் புனிதவினை
களைச்செய்து
வானுலகை அடைந்துநன்றாய் வாழ்விக்க
வேண்டுமையா

3030. இறப்பவர்க்கு இருப்பவர்கள் எண்ணிச்செய்யக்
கருமங்களைக்
குறித்துரைக்கும் மநுஸ்மிருதியைக் குவலயத்தில்
தப்பப்போகா

செய்யத்தக்க கார்யத்தைச் செய்யாமல் விடுபவரும்
செய்யலாகாக் கார்யத்தைச் செய்பவரும்
பாபியாவார்

அபரக்ரியை செய்வதெல்லாம் அயலாருக்கென்
றெண்ணவேண்டாம்
சுபமடையத் தனக்காகவே தொடங்கிச்செய்ய
வேண்டுமையா

கருமந்தனை விடுபவர்க்குக் கதியுமில்லை சுகமுமில்லை
தருமவதி சுடப்படுதெல்லாம் தப்பிதமாய் முடியுமையா

சோகம்விட்டுச் சுபமடையச் சொல்லும்வேத
சாஸ்திரங்கள்
ஆகமத்தின் படியடைந்து அபிவிருத்தி அடையுமையா

3035. மரணாந்த மட்டுமேதான் மாச்சரியம் அதற்குப்பால்
வருவதுண்டோ குரோதமதால் வழியறிந்து
நடவுமையா

எனக்குச்செய்தான் துரோகமிக இலங்கேசன்
அதையினிமேல்
நினைக்கப்போமோ நானும்பாரீர் நிஷ்பலமாய்
முடியுமன்றோ?

கருமபிடிவிட மில்லாமலே கருத்துடனே கருமஞ்செய்து
பரிகதிதரு மாவீரென்று பரந்தாமன்
சொன்னானம்மா

அதன்பிறகு விபீஷணனார் அண்ணனுக்கும்
மற்றவர்க்கும்
கதிதரவே புனிதவினை கைனாலே செய்தாரம்மா

பரீரதன் பிதுருக்களுக்குப் பரமபதம் அளித்ததுபோல்
மகிமையுள்ள விபீஷணரும் மனமுவந்து சென்றவராம்

3040. அரக்கரெல்லாம் கதியடைய ஆகமாதி முறைப்படியே
கருதிச்செய்தார் சகலவிதக் காரியங்கள் ஜகம்புகழத்

தகனவினை முழுதுஞ்செய்து தர்ப்பணாதி ஓமங்களும்
வெகுநேராய் நடத்தியபின் விதிப்படியே
அதிசிறப்பாய்

**விபீஷணர் சுபசுவீகாரஞ்செய்து கொள்வதும்,
பிறகு அவரை ஸ்ரீராமன் புகழ்வதும், விபீஷணருக்கு
மகுடாபிஷேகஞ் செய்து முடி தரிப்பதும்,
அதன்பிறகு சீருடனே ஸ்ரீராமனை வந்து
விபீஷணர் காண்பதும், ஸ்ரீராமன் மகிழ்ந்து
சீதைக்குச் சுப சந்தோஷஞ் சொல்வி யனுப்புவதும்**

சோபனமாம் வினைகள் செய்து சுத்தனாகிச்
சுபசுவீகாரம்
தீபமுதல் சகலவிதத் திரவியங்களால் செய்துகொண்டு

புனிதனானான் அதன்பிறகு பூபாலன் ராமனிடம்
சனமாக வந்துநின்று கால்தொழுது கைநீட்டியே

அமிர்கையோ டிருந்தாரம்மா அவரைப்பார்த்து
ஸ்ரீராமன்
சமங்களத்தை மிகவடைந்தீர் சோபனங்கள்
மிகப்பெருகும்

3045. விதிப்படியே ஜகந்துதிக்க வேதசாஸ்திரப் படியாவும்
அதிசீராய் நடப்பித்தீர் ஆரிவ்வாறு செய்பவர்கள்

படுகளத்தில் வீழ்ந்தவர்க்குப் பரமபதம் பிராப்தமாக
நடத்தினீரே நல்லினைகள் நன்றாக வாழ்ந்திடுவீர்

அரசுமுடி தரித்துக்கொள்வீர் அரக்கர்சுளை
ஆண்டிடுவீர்
பரமபக்த ரும்மைப்போலப் பார்த்ததில்லை
என்றுரைத்தார்

அரசுமுடி தரிப்பதற்கு ஆவல்கொண்டு ஸ்ரீராமன்
அருகழைத்து லட்சுமணனை அவனுடனே சுக்கிரீவனை

அனுமாருடன் மற்றவரை அனுப்பித்தந்த படியவர்கள்
மனமுவந்தே போனாரம்மா மகிடஞ்சூட்டி
மகிழ்ந்தாரம்மா

3050. சம்பரமமாய் முடிசூட்டிச் சகலவிதச் சீர்கள்செய்தார்
உம்பர்சுளு மிகமகிழ்ந்து உசிதமாக அனுக்கிரகித்தார்

பட்டங்கட்டி ஆனதன்மேல் அட்டலட்சுமி
சுளும்விளங்க
எட்டுத்திக்கும் எசஸடைய இராஜவைபோ கங்சுளுடன்

சுகமடைந்தார் விபீஷணனார் சுவாமிகேட்டு
மிகமகிழ்ந்தார்
அகங்குளிர்ந்தார் அனைவர்சுளும் அதன்பிறகு
விபீஷணனார்

பொருகடலை முதலாகப் புசிக்கும்நல்ல பட்சணங்கள்
பிரியத்தோடு எடுத்துக்கொண்டு போமிம்தங்
காதியுடன்

பரந்தாமன் முன்னேவந்து பத்தநியோ டங்குவைத்துப்
பரமபக்தி கொண்டுதானே பணிந்தவரை
எழுந்துநின்று

3055. குளிர்ந்ததண்ணீர் பெருகுமிகக் குணமுடனே
சொல்லுகிறார்
அளித்தீர்பாக்ய மைந்தனுக்கு ஆண்டவரே அருளுடனே

உம்முடைய அனுக்கிரகத்தால் உயர்வடைந்தேன்
பயமொழிந்தேன்
இம்மையிலும் மறுமையிலும் என்னைநன்றாய்க்
காப்பீரென்று

மகிழ்ந்துரைத்தார் ஆதைக்கேட்டு மாதவரும்
மிகமகிழ்ந்தார்
அகங்குளிர ஞானகிரு அதன்பிறகு அனுமாரிடம்

ஜயமடைந்த சேதிதனைச் செப்புதற்கு
அனுப்பித்தந்தார்
வயணமாக அந்தச்சேதி வைதேகி அறிந்திடவே

தேவிபாதம் போய்ப்பணிந்து செப்புகிறார் என்தாயே
பாவியான தசகண்டன் பரமபதஞ் சேர்ந்தானம்மா

3060. ஸ்ரீராமர் ஜயித்தாரம்மா சிறையுமக்கு ஒழிந்ததம்மா
பிரேமையுட னிந்தச்சேதிபெருமாளுமக்
குரைக்கச்சொன்னார்

மனக்குறைகள் விட்டொழிந்து மனங்குளிர்வீர்
அகமகிழ்வீர்
சுகமடைந்தீர் இனமடைந்தீர் எனதபீஷ்டம்
நிறைவேறிற்று

இந்தச்சேதி சொல்வதற்கே இங்குவந்தேன்
தாயேயென்றார்
அந்தவாக்கைச் சீதைகேட்டு அசங்காமல்
நின்றிருந்தாள்

எனதுவாக்கைக் கேட்டதற்கு ஏதும்பதில் சொல்லாமல்
மனமடக்கி இருக்குமொரு மர்மமென்ன
சொல்லுமென்று

அனுமார்கேட்கச் சீதையப்பா ஆனந்தக் கடல்தனிலே
மனம்படிந்து மகிழ்ந்தேனையா மாருதியே
உமதுவாக்கின்

3065. அமிருதமொழி கேட்டதினால் ஆகையினால்
மெய்மறந்த
நிமித்தமென்று சொன்னதோடு நெடுநேரம் மாருதியை

மிகப்புகழ்ந்து அனுக்கிரகித்து மேன்மையுள்ள
மாருதியே
சுகமடைந்தேன் அகமகிழ்ந்தேன் சுவாமிபாதந்
தனைப்பணிந்தேன்

மங்களமாம் சேதிதனை மகிமையுடன் வந்துரைத்தீர்
அங்குமெங்கும் குளிர்ந்துதையா அகமிகவே
மகிழ்ந்துதையா

கல்லணையிமை காப்பதுபோல் கனவானே அனுமானே
மண்ணுலகில் எங்களுக்காய் மனமுவந்து மிகவுழைத்து

ஆவிபிட்சை தந்தீரையா ஆதரித்தே காத்தீரையா
பூவுலகில் உயித்தொடுக்கும் புண்யருமம
போலுமுண்டோ?

3070. கஷ்டம்வரும் போதுமனம் கலங்காமல் கஷ்டமுற்றீர்
இஷ்டதெய்வம் போலடுத்தீர் என்றுஞ்சிரஞ் சீவியாவீர்

செய்யவுண்டோ உபகாரம் சீமானே நீரெங்கள்
தெய்வமென்றே கைதொழுவோம் திடமனதாய்ச்
சொல்லுகிறேன்

சாமிபாதச் சேவைசெய்யச் சம்மதியா தென்றெண்ணிச்
சேமமெனக் கில்லையென்று சித்தமதில் பலதடவை

நம்பியுயிர் விடத்துணிந்தேன் நாயகர்க்காய்ப்
பயந்துநின்றேன்
அம்புவியி லென்னைப்போல ஆருமிலை பாபியென்று

காலம்போக்கி வந்தேனையா கன்கள்புனலாய்
நொந்தேனையா
நீலவர்ணர் தனைநினைத்து நிர்வகித்து வந்தேனையா

3075. இத்தனைநாள் பிரிந்திருக்க எழுத்தெனக்கு
மிருந்ததையா
பத்துமாதம் பலயுகமாய்ப் பாவிக்க நேர்ந்ததையா

சர்வசக்தி உள்ளநாதர் ஜயிக்கமாட்டா ரென்பதற்குத்
தருமங்கெட்ட அரக்கன்செய்த தந்திரங்க
ளென்னசொல்வேன்

உலகங்களை உண்டுசெய்து ஒழிக்குஞ்சக்தி உள்ளமிகப்
பலமுடைய பிராணநாதர் பாரிலப ஜயமடைய

நியாயமில்லை என்றறிந்த நானுங்கூட மிகப்பிரமித்து
வியாகுலத்தை அடைந்தேனையா வல்லரக்கன்
செய்கையெல்லாம்

நிமிஷமொரு யுகமாக நினைத்திங்கு வசித்திருந்தேன்
உமக்குமது தெரியுமையா உத்தமரே மாருதியே

3080. கிரகச்சார பலனெனக்குக் கிலேசந்தனை மிகுத்தந்து
பரிதபிக்கச் செய்ததையா பாபபலன் அனுபவித்தேன்

பாக்கியங்கள் மிகவுமுண்டு பந்துக்களோ அநேகருண்டு
ஆக்கினைக்கு அடங்கிவந்தோம் அனைத்தையும்
விட்டுவிட்டுத்

தருமமெண்ணி வந்தோமையா தயாபரரோ
பரணியத்தில்
பரமபக்தி கொண்டிருந்தேன் பாபமேதும் நானறியேன்

பாபியென்னைப் பதுங்கிவந்து பாதபிக்கச்
சிறையெடுத்தான்
ஆபத்திலே அகப்பட்டு அலைந்துபோனேன்
ஆவிநொந்து

எனதுகவ்டந் தனக்கிறங்கி ஈசன்மிகக்
கருணைகொண்டு
மனங்குளிர அனுக்கிரகித்தார் மட்டில்லா
மகிழ்ச்சிகொண்டேன்

3085. கானகத்தில் கவ்டம்வரும் கண்கலங்க நேருமென்று
ஆனமட்டும் சாமிசொன்னார் அவரைமிக
நொந்துகொண்டு

பிடிவாதஞ் செய்தேனையா பின்றொடர்ந்து
வருவதற்கு
சிடுத்துரைக்க மாட்டாமலே ஸ்ரீராமர்
அழைத்துவந்தார்

வனத்தில்வந்து எனைப்பிரிந்து வருத்தமிக
அவரடைந்தார்
நினைத்துரைத்த வாக்குப்படி நேர்ந்ததையா சிரம
மிகவே

வாக்கிலவர் உரைத்தபடி வந்துதையா கவ்டமிக
நாக்கிலுண்டு குளிகனையா நாயகர்க்கு என்றுரைத்துக்

கண்தாரை பெருகவிட்டாள் சுமலாட்சி ஜானகியாள்
எண்ணியெண்ணிக் கவ்டந்தன்னை இவ்வாறு
வாக்கில்சொல்லிப்

போனதெல்லாம் இனியெண்ணிப் புலம்புவது
வீணேயாம்
புனமக்குக் கஷ்டமினி யுதுமிலை மனமகிழ்வீர்

மங்களத்தை அடைந்துபின்னும் மனவருத்த
மாமோபாபீர்
கங்குகரை இல்லாத களிப்படையும் காலமிது

மனக்குறையை விட்டொழித்து மனமகிழ்ந்து
இருப்பீரென்று
அனுமான்சொல்லி மறுபடியும் அன்னைதனைப்
பார்த்துரைப்பான்

உமக்குழைக்க உதித்தேனம்மா உபசாரம்
வேண்டாமம்மா
நமஸ்கரித்துப் பணிந்தமது நளினபதம்
போற்றுமென்னைப்

புகழுவதேன் பேதமெண்ணிப் பூமகளே என்தாயே
அகமகிழ்ந்து அனுக்கிரகித்தால் அதுவேபோது
மென்றுரைத்துத்

தேவர் துயர் நீங்கினதும் ஜெகம்பிழைத்து ஓங்கினதும்
தேவியும்மா லெனவுலகம் தெரிந்துதுதி செய்யுமம்மா

உலகநலங் கருதிநல்ல உத்தமர்கள் துயர்சகிப்பார்
நிலத்தில்பெரும் கீர்த்திபெற்றார் நீலவர்ணர்
ஆகையினால்

நடந்ததெல்லாம் மூவுலகும் நன்மைபெற்று வாழுதற்கே
கொடுமைசெய்யும் அரக்கர்களைக் குலநாசம்
செய்வதற்கே

உலகுக்கெல்லாம் மாதாவாக உள்ளவுமக்
கொருகுறையும்
இல்லையென்றே நம்புகிறேன் என்றுரைக்கும்
வேளையிலே

ஜானகியைச் சூழ்ந்திருந்து சகலவித இம்சைசெய்த
தானவராம் அரக்கியர்கள் தயங்கியங்கோர்
புறமிருக்கக்

3100. கண்டுவிட்டார் .அனுமாரம்மா கண்கள்மிகச்
சிவந்தாரம்மா
மண்டிபோட்டுக் குறித்துநின்று மாதேவியைப்
பார்த்துக்கேட்டார்

உம்மைமிக உபத்திரவித்து உளங்களித்த
இவர்களைநான்
செம்மையாகப் புடைத்துவதை செய்யத்தாகம்
இருப்பதினால்

அனுமதியைத் தாருமென்று அனுமார்கேட்க
அரக்கியர்கள்
மனமருண்டு மாருதியால் மரணமது நேருமென்று

நடுங்கிமிகப் பாதபித்தார் நகக்கிவிட அனுமார்கை
படபடவென் றேதுடிக்கப் பார்த்துச்சீதை
இரக்கங்கொண்டு

அனுமாரோ வேண்டாமையா அரக்கியர்மேல்
கையெடுக்க
நினைக்கவேண்டாம் எனக்காக நில்லுமையா
சினமடக்கி

3105. அம்புதனை நோவதுண்டோ அதையெய்தோர்
தனைநோதல்
அம்புவியில் ஒப்புமையா னகையினால்
இவரைக்கொன்று

ஆவதொன்று மில்லையையா அரக்கனாக்ருைப்
படிநடந்தார்
பாவிகளா யிவரையெண்ணிப் பாதிப்பது நாமமல்ல

விட்டுவிடு மென்றுரைத்து வேண்டிக்கொண்டாள்
சீதையம்மா
தட்டிப்பேச மாட்டாமல் தலைவணங்கி
அனுமாரப்பால்

ஸ்ரீராமனாக்ஞைப்படி அனுமார்போய்
ஜயமடைந்த சேதியைச் சீதைக்குச் சொல்லத்
திரும்பிவருவதும் பிறகு விபீஷணர் மூலமாய்
முறைப்படி சீதையை ஸ்ரீராமர் அழைப்பித்து
நீயெனக்காகாதென்றொதுக்குவதும், அதைக்கேட்டு
அநேக நியாயங்கள் சொல்லி வாதிப்பதும்
அவைகளைக் கேட்டும் கருணை கொள்ளாத
ராமர்முன்னே அக்கினிப் பிரவேசஞ் செய்யச் சீதை
நிச்சயிப்பதும்

சாமியிடம் வருவீரம்மா சடுதியிலே என்றுரைத்துத்
தாமதியா மலெழும்பித் தயாபரனாம் ராமனிடம்

வந்துசேர்ந்து பக்தியோடு வணங்கிநின்று
சுவாமிமுன்னே
எந்தன்தாயாம் ஜானகிக்கு எல்லாஞ்சொன்னேன்
மங்களமாய்

3110. அன்னைகேட்டு மிகமகிழ்ந்து அரக்கனாலே
பட்டகஷ்டம்
இன்னமுமே நினைத்துக்கொண்டு ஏங்கிமனம்
நொந்தானையா

ஆறுதலை மிகவுரைத்தேன் அதன்பிறகு
மனந்தெளிந்தாள்
காருண்ய முள்ளவும்மைக் காணுதற்கு மிகவும்பிரியம்

இருக்குதையா என்றுரைக்க இராமன்கேட்டு
அந்தவுடன்
வரவழைத்து விபீஷணரை வாஞ்சையுடன்
சொல்லுகிறார்

ஜானகியைப் பார்ப்பதற்குத் தாகமெனக் கிருக்குதையா
ஆனதினால் உம்முடைய அந்தப்புர ஸ்தீரிகளுடன்

சீதையைப்போய் அழைத்துவரும் சிரமம்வகிக்க
வேண்டுமென்று
ஆதரவோ டுரைக்கக்கேட்டு அடிபணிந்த
விபீஷணனார்

3115. இலங்கைசேர்ந்து மனைவிமுதல் இதமுள்ள
ஸ்திரீகளெல்லாம்
நலங்கொழிக்கும் விபவமுடன் நயந்துவந்து
சீதைமுன்னே

அடிபணிந்து சொல்லுகிறார் அடியேன்வந்தேன்
விபீஷணனார்
சுடவுளரும் உமதுபத்தா சுட்டளையின் படிவந்தேன்

தாகங்கொண்டு அழைத்துவரச் சாமியெனக்
கட்டளைசெய்தார்
போகபாக்யம் உலகுக்கெல்லாம் பொருந்தத்தரும்
லட்சுமியே

தயவுசெய்ய வேண்டுமம்மா தயாபரரைப் பார்ப்பதற்கு
உயர்வுள்ள மாதாவே உத்தமியே என்றுரைத்தார்

சுபசுரமாய் முகமலர்ந்த சுமங்கலிகள் வெருபேர்கள்
உபசரிக்க அடுத்தாரம்மா உண்மையான அன்புடனே

3120. நமஸ்கரித்து விபீஷணனார் நாதரிடம் எழுந்தருளச்
சமயமிது என்றுரைத்த சந்தோஷ வாக்கைக்கேட்டு

மயிர்க்கூச்சல் தனையடைந்தாள் மனதிலச்சம்
நாணங்கொண்டாள்
தயவுடனே அழைத்துவரத் தாகங்கொண்டு
விபீஷணரை

அனுப்பித்தந்த அன்புக்காக ஆனந்தக் கடல்படிந்தாள்
மனதிலுள்ள முன்குறையை மாதேவி நினைத்தழுதாள்

பெண்களெல்லாம் ஜானகியைப் பிரேமையுடன்
முகந்துடைத்துக்
கண்மணியே பெண்ணரசே சுலங்கலாகா திப்பொழுது

மங்களங்கள் கூடியுள்ள மகோச்சவமாம் வேளையிது
கங்குகரை இல்லாத களிப்படையும் சமயமிது

3125. முந்தவேளை மனம்வருந்தல் ஈஷத்து மாகாதென்று
சொந்தங்கொண்டு ஆறுதல்கள் சொன்னார்கள்
அதைக்கேட்டு

தேறுதலை மிகவடைந்தாள் திருமகளாம் ஜானகியாள்
கோபிச்சாமி முன்சொல்லக் கோலமது உள்ளபடி

கால்நடையாய்ப் போவதற்குக் கருதிச்சீதை
நடக்கப்பார்த்தாள்
வேல்விழியாள் துணிவைக்கண்டு வேண்டாமம்மா
அவ்விதமாய்ப்

பற்றாமுன் போகலாகா பரிசுத்தமாம் கோலத்தோடு
கர்த்தரைப்போய்க் காணவேண்டும் கல்மஷமாம்
வேஷத்தோடு

பதியின்முன்னே போகும்பெண்ணைப் பாவமது
அணுசரிக்கும்
விதிவிலக்கி லிதைக்குறித்து வெகுவாகச் சொல்லுதம்மா

3130. ஆடைமுதல் சகலவித அலங்காரங் களைக்கொண்டு
நாடுவதே நன்மையம்மா நாதன்முன்னே கேளுமம்மா

பட்டகஷ்டந் தனையறியப் பர்த்தாமுன் இவ்விதமாய்ச்
சுட்டிப்போவே னென்பதெல்லாம் சுபகரமே
அல்லவம்மா

சகலமும்தீ ரறிவீரம்மா சலிப்பினிமேல்
வேண்டாமம்மா
அகமகிழ்ந்து அலங்கரித்து ஆசையோடு நாதரிடம்

சொல்லுமென்று சொல்லுகையில் சீதையதைக்
கேட்டுமிக
நல்லவாக்குப் போலவெண்ணி நாடித்தண்ணில்
ஆலோசித்தரன்

நாதரிடம் இவ்விதமாய் நாம்போவோ மாகிலவர்
வேதனையை மிகவடைவார் வெகுகஷ்டம் நேருமதால்

3135. பரிசுத்தமாய் ஸ்நானஞ்செய்து பலவிதமாய்
அலங்கரித்துப்
பிரியப்படுங் கோலத்தோடு பெருமாள்முன்
போவதுவே

உசிதமென்று நிச்சயித்தாள் உபசரித்துப்
பெண்களெல்லாம்
இசைந்தபடி அலங்காரங்கள் எத்தனையோ
விமரிசையாய்ப்

பரிசுத்தமாய்ச் செய்துவைத்தார் பார்த்தவர்கள்
அதிசயிக்க
அருமையான வஸ்திராதிகள் அலங்காரத்தை
என்னசொல்வேன்

தேவிதனை அப்பொழுது திருஷ்டிகொண்டு
பார்ப்பவர்கள்
ஆவியெல்லாம் ஜானகியின் அருள்பாதங்
களைப்பற்றும்

அழகான பல்லாக்கு அற்புதமா யுள்ளதது
விழிசுளொளி தமைப்பறிக்கும் விபீஷணர்
வரவழைத்தார்

3140. அந்தவொரு பல்லக்கில் அன்னைசீதை அமர்ந்திருந்தாள்
சுந்தரமாம் பல்லக்குதைச் சுமந்துவந்தார்
ஸ்திரீகளம்மா

வாத்தியங்கள் மிகமுழங்க வருங்கோலந்
தனைப்பார்த்து
ஆத்திரமா யோடிவந்து அன்னைசீதை தனைப்பார்க்க

வானரரும் மற்றவரும் வந்துசூழ்ந்தார் நெருக்குமதால்
ஜானகியைக் காணுதற்குச் சக்தியில்லாமல்
வெகுபேர்கள்

கஷ்டப்படக் கண்டான்ராமன் கட்டளையைச்
செய்தான்ராமன்
இஷ்டப்படி யாவர்களும் என்மனைவி தனைப்பார்க்கத்

தடையில்லை ஆகையினால் ஜானகியை நடந்துவரக்
கொடுத்தானம்மா ஆக்ஞைதனைக் கூட்டமதில்
ஜானகியாள்

3145. பல்லக்கை விட்டிறங்கிப் பார்ப்பவர்கள் கண்குளிர
எல்லோரும் காணும்படி இராமரிடம் நடந்துவந்தாள்

பணிந்தவரை எழுந்துநின்று பாதமுதல்
மேனியெல்லாம்
ருணமுடனே பார்த்தாளம்மா குளிர்ந்தகண்ணீர்
சொரிந்தாளம்மா

அந்தவேளை அதற்குமுந்தி அனுபவித்த கஷ்டமெல்லாம்
சிந்தையிலே நினைந்துகொண்டு சீதைமிகச்
சோகங்கொண்டு

தலப்பைமுகப் போர்வைகொண்டு தாரைதாரை
யாகக்கண்ணீர்
நிலம்படியச் சொரிந்துகொண்டு நெடுநேரம்
விம்மிவிம்மி

விசனப்படக் கண்டுராமன் வெகுவாக மனம்வருந்தி
இசைந்தபத்னி தனைப்பார்த்து இவ்விதமாய்ச்
சொல்லுகிறான்

3150. என்னசெய்வேன் பெண்ணரசே என்னுடைய
கருத்துதனை
உன்னிடத்துச் சொல்வேனாகில் உருகிமனம்
நொந்திடுவாய்

உன்னைமீட்டு உன்னுடனே ஒத்துவாழ
வேண்டுமென்று
எண்ணங்கொண்டு அரக்கர்களை இலங்கைவந்து
வெல்லவில்லை

என்பொருளை எடுத்தவனை எதிர்த்துயுத்தஞ்
செய்தவனைக்
கொன்றிடாமல் விட்டுவிட்டால் குவலயத்தோர்
பழித்திடுவார்

ஆண்மைதனைக் காட்டுதற்கு ஆசைகொண்டு
வந்தேனிங்கு
காண்பிவித்தேன் பராக்கிரமத்தைக் கருத்தின்படி
முடித்துக்கொண்டேன்

பலவந்தமாய்த் தசகண்டன் பிரிந்துன்னை வடுத்திந்த
இலங்கையிலே பத்துமாதம் இருக்கும்படி வைத்திருந்த

3155. உன்னையங்கே காித்தாலென்னை உலகமெல்லாம்
பழித்திடுமே
என்னசெய்வே னேதுசெய்வேன் இன்னுமுன்னைப்
பிரிந்தேதான்

இருக்கும்படி யாகிவிட்டேன் எண்ணியினி ஆவதில்லை
அருமையான ஜானகியே அகம்நோக வேண்டாமடி

நலங்கருதி என்னுடனே நாடிவனம் வந்ததற்குப்
பலவிதமாய் நொந்ததோடு பரித்தியாகஞ்
செய்யவானாய்

ஆயுளுள்ள மட்டுமுன்னை ஆதரிப்பே னானாலுமே
வாயில்பல விதமுரைப்பார் வையகத்தோ
ராகையினால்

பரமபக்த ராகவுள்ள பாதலட்சு மணர்சுக்கிரீவர்
தருமசீலர் விபீஷனனார் தருந்தயிவர் களிலொருவர்

3160. ஆதரித்துப் பூஜைசெய்வார் அவர்களிட மிருந்திடுவாய்
வேதனையை விட்டுவிடு வீணாயேன் புலம்புகிறாய்

பத்னிகமம் நாலிழந்தேன் பத்திருகமம் நீயிழந்தாய்
இத்தரையில் நாமிருவர் இனியுமொத்து
வாழ்வதுண்டோ?

பெண்மணியே கண்மணியே பேசுதற்கு வாயுமுண்டோ?
உண்மைதனை யாரறிவார் உலகறிந்தை பொறிதெனக்கு

ஆகையினால் அபிப்பிராயம் அறிந்திடவே
சொன்னேனென்றான்
சோகமிகப் பெருகும்படி சொன்னவாக்கைக்
கேட்டுச்சீதை

தன்னில்சற்று ஆலோசித்தாள் தருணமதில்
எல்லோரும்
என்னகஷ்டம் வந்ததென்று ஏங்கிமிகப் பரிதபித்தார்

3165. பதிமனதில் நம்மையவர் பாபியென்று
நினைத்தொதுக்க
விதியிருக்கும் போதுதுதான் விட்டுப்போக
நியாயமென்ன?

சுணவுவாக்கால் நம்மையவர் கண்டிப்பாய்த்
தள்ளிவிட்டார்
இனங்கமாட்டா ரானாலுமே எடுத்துரைப்போம்
மனக்கருத்தை

அதன்பிறகு அவருடைய ஆக்ஞைப்படி
நடப்போமென்று
பதியின்பாதம் நமஸ்கரித்துப் பக்தியோடு
நின்றுகொண்டு

நாதரேநான் பட்டகஷ்டம் நாளுமெனக் காறாதையா
போதாதென்று நீரும்பிப்போ பொறிபறக்கப்
பேசிவிட்டீர்

நானறியேன் பாவமேதும் நாயகரே உமைப்பிரிந்து
ஈனனிட காவலிலே இருந்தவரை ஒருநொடியும்

3170. ராமாராமா வென்றிருந்தேன் ராப்பகலும்
மறந்தறியேன்
பிராதரவா யிருந்தாலுமே நிர்த்தோஷி யாயிருந்தேன்

தோஷம்வர இடமிருந்தால் தொலைத்திருப்பேன்
ஆவியையுநான்
ஆசையுனக் கொள்ளனையா அகிலந்தனி
லிருப்பதற்குப்

பொசுக்குவேனான் அரக்கன்றனைப் பொறுத்தேனுமக்
காகவேதான்
அசைக்கவுண்டோ என்மனதை ஆராகிலும்
அணுவாகிலும்

கற்புநிலை கதறச் செய்து காதகனை ஒழித்திடுமே
அற்பரைப்போ லென்னையெண்ணி அவமதித்தீர்
இப்பொழுது

குலஸ்திரீமே லாசைகொண்டு கொடுமைசெய்யும்
ராட்சதந்தான்
பலவந்தமாய் வந்தெடுத்துப் பாவியவன்
சிறையில்வைத்தால்

3175. செய்வதுநா மென்னசொல்லும் சீலமதால்
கெடுவதுண்டோ
ஐயங்கொள்ளல் நியாயாமோ அறியீரோ
உண்மைதனை

ஸ்திரிகள் மத்தி தனிலிருந்து சித்தமுமூ மீறிவைத்து
பிரேமையுள்ள உம்முடைய பெருமையெல்லாம்
எண்ணியெண்ணி

காலமதைக் கழித்துவந்தேன் சற்புநிலை தவறாமல்
நீலமேகச் சாமளமே நேராக நடந்துவந்தேன்

அதையறியா துறைத்தலினால் ஆவிமிகத்
தவிக்குதையா
விதிவசத்தை நோவதிலும் விளைவதில்லை சுகமெனக்கு

பிரிந்ததெல்லாந் தேகமையா பிரித்ததுண்டோ
மனமறவும்
இருந்ததெல்லாம் நீரறிவீர் எவ்விதமாய்ப் பிரியக்கூடும்

3180. பரஸ்பரமும் மனமேசாட்சி பார்த்துரையும் உமதுமனம்
பிரிந்திருந்த காலமதில் பேதமுண்டோ என்னிடத்து

உமதுமன மிருந்ததுபோல் உள்ளமெனக் கிருந்துதையா
நிமிஷமுமே என்றறிந்து நேசங்கொள்வீர் ஆசையோடு

நானினங்கா தெனைக்கொடுக்க நாடுவனோ
அரக்கனையா
மானங்கெட்ட அவனுடைய மண்டைகுக்காய்ச்
சிதறிடுமே

எனதுசீலம் எனதுமுகம் எடுத்தக்காட்டும்
பளிங்கைப்போல
மனதிலையம் ஆகாதையா மனந்தெளிந்து பாருமையா

புருஷருக்கு மனஞ்சலிக்கும் பொறுப்புடைய பத்தினிக்கு
அரைநொடியும் மனமசைய ஆய்விடுமோ
அறிந்துபாரீர்

3185. ஏழையான எனையரக்கன் எடுத்துவந்த காரணத்தால்
ஆழமறியா தவர்போல் அவமதித்தல் நியாயமன்று

எனக்குவரும் கனக்குறைவில் ஏனுமக்குப் பங்கிலையோ
மனதிலதை எண்ணிப்பாரீர் மனக்குறையை
விட்டொழிப்பீர்

இருவர்களி லெவரிடத்தும் இருந்தால்குறை அதற்கந்த
இருவரையுங் குறையுரைப்பார் எங்குந்தானே
சங்கையின்றிப்

பெண்ணைநன்றாய் ஆதரிக்கும் பெருமையுள்ள
புருஷரெல்லாம்
எண்ணிச்செய்வார் காரியங்கள் இணைபிரியா
திருப்பார்கள்

நீரசந்து செய்ததற்கு நினைத்தென்னைத் தள்ளுவது
ஆருமொப்பா ருலகுதனில் அதையும்நீர் அறிந்துபாரீர்

3190. பெண்ணென்றால் மனமிரங்கும் பேயுங்கூடக்
கருணைகொள்ளும்
எண்ணம்என்மேல் கடினமாக இருப்பதென்ன
சொல்லுமையா

வருகையிலே இருவருக்கும் வாக்குவதை மிகநடத்து
தருமபத்னி தனைப்பிரிந்து தனித்திவனம்
போவீரானால்

பராக்கிரமமே இல்லையென்று பாவிப்பே
னென்றுரைத்தேன்
வராதேயென்று நிச்சயமாய் வாக்குரைத்தால்
வருவேனோநான்

என்னைத்தனி யாயிருக்க ஏன்பிரிந்தீர் வனந்தனிலே
தன்னைப்போல நானிருந்தேன் தானவன்வந்
தெடுத்தானென்னைப்

பெண்மையைக் கேட்பதுண்டோ பெண்ணைவிட்டுப்
பிரிவதுண்ண
கண்மணியா யாதரித்துக் காட்டிநந்தீர்
அறக்கனுக்குச்

3195. செய்தபிழை யாரிடத்துச் சித்திக்கு மென்றறிந்தால்
ஐயமின்றி விளங்குமையா ஆண்டவரே கருணைபுரிவீர்

காப்பவரே கைவிடுத்தால் கணிசங்கொள்ள
நியாயமுண்டோ
தாபப்பட நடத்துவது தருமமல்ல சுவாமிபாரீர்

அவதரித்தோம் இருவருமாய் ஆதரிக்க உலகங்களைத்
தவமுனிவர் வானவர்கள் தத்துவத்தைச்
சொல்வாரையா

தத்துவத்தை அறிந்துபாரீர் தங்கியும்மில் நானின்றி
எத்திரத்தில் வென்றீரையா இராட்சதரை
என்றுரைப்பீர்

பேச்சுமில்லை மூச்சுமில்லை போஜ்பமாய்ப்
பரவியுள்ள
காட்சியேநீ ரென்மனது கலங்கச்செய்ய லாகாதையா

3200. உம்மைவிட்டு நான்பிரிய ஒருக்காலு மாகாதையா
செம்மையாக ஆலோசித்துச் செப்புமையா ஒப்பும்படி

ரோஸுக்கு வருவதற்கு ஏதுவான என்னையும்ம
வசத்தில்கொள்ளே னென்பதைத்தான் வையகத்தார்
ஒப்புவரோ?

மூவுலகும் பிழைத்திடநான் மூலமாக இருக்கையிலே
நாவுதனில் குறையுரைப்போர் நன்றிகெட்டோ
ராகுவரே

துஷ்டர்களை நிக்கிரகித்துச் சிஷ்டர்களைப்
பரிபாலிக்க
இஷ்டங்கொண்டே உதித்தீரென்று வெருமம்மைப்
புகழ்கிறாரே

சிஷ்டர்களார் துஷ்டர்களார் சிஷ்டர்களில்
எனைச்சேர்க்க
இஷ்டமில்லா விடிவதற்கு இசைந்தநியாயந்
சொல்வீரையா

3205. உத்தமர்க்கே உதவிசெய்வேன் உண்மையெல்லாம்
அறிந்துசெய்வேன்
சித்தசுத்தி உள்ளவரைச் சீருடனே ஆதரிப்பேன்

ஒதுக்கித்தள்ளே னென்றுதானே உள்ளமதி
லுறுதிகொண்டு
இதஞ்செய்ய வந்தவராய் இருப்பீராயின் எனைத்துறக்க

எண்ணுவதேன் நானுமக்கு என்னசெய்தேன்
குறையுரையும்
கண்ணைப்பாது காக்கும்இமை கண்ணைப்பொட்டை
ஆக்கிடுமோ?

சுணவர்தம்மை விட்டுவிட்டுக் காலமதைக்
கழிப்பவர்க்குத்
துணையில்லை தோஷமுண்டு துணியவேண்டாம்
விட்டொழிக்க

ஆண்டவன்மனம் கோணும்படி அடிமைகள்தான்
நடப்பதுண்டோ
தாண்டார்சுமதாக்ஷை தரணியிலே எவருமையா

3210. நீர்நடத்துங் காரியத்தை நிராகரிப்போ ரெங்குமில்லை
சேர்ந்தினக்கால் பழிப்பவர்கள் ஜெகத்திலில்லை
நிச்சயமே

நீரெதுதான் செய்தாலுமே நேராக ஆகுமது
காருண்யங் கொள்ளுமையா காத்தென்னை
ஆளுமையா

தனதுநிழல் தனையொழிக்கத் தானுங்கொள்வோர்
ஓலவோ
எனைப்பிரிய எண்ணுவது ஏற்காது ஜகத்திலுமே

மூன்றவஸ்தை களையொழித்து முக்திபெறும்
நிலைமையிலும்
தோன்றுமன விர்த்திகொண்டு துரதீதித்தள்ளப்
போமோவென்னைப்

பத்னிசுகம் உமக்குமுண்டு பர்த்திருசுகம் எனக்குமுண்டு
இத்தரையில் என்னைவிட்டு ஏதுமிலை செயலுமக்குப்

3215. பேதபுத்தி தனைவிடுவீர் பெருமையுடன்
எனைச்சேர்ப்பீர்
வாதஞ்சொன்னே னென்றென்மேல் வருத்தங்கொள்ள
வேண்டாமையா

அடைந்திடுவேன் மறுபடியும் அகமகிழ்வேன்
உம்முடனே
கடமொழிக்கு வேண்டாமென்று காத்தேனிந்தத்
தேகந்தனை

ஆகையினால் இரக்கங்கொண்டு ஆதரிக்க
வேண்டுமென்று
சோகப்பாதை சகியாமலே சொன்னாள்சீதை
பலவிதமாய்

அந்தரியாயங் களையெல்லாம் அனைவர்களுங்
கேட்டுமிகச்
சிந்தைமகிழ்ந் ததிசயித்தார் ஸ்ரீராமர் ஜானகியை

அங்கீராஞ் செய்வரென்று அவரெங்கும்
நம்பிவிட்டார்
எங்களையன் ஸ்ரீராமன் எதும்பேசா திருந்துவிட்டனர்

3220. கவலைமிகச் சீதைகொண்டு கண்ணில்நீரை
பெருகிடவே
சிவன்செயலை யெல்லாமிகச் சிரமமடைந்து
சோர்ந்திருந்தாள்

கஷ்டமெல்லாம் ஒழிந்ததென்று களித்தோமே வீணாக
இஷ்டங்கை கூடிற்றென்று எத்தனையோ
மகிழ்ந்தோமே

வியத்தமாகப் பலித்ததெல்லாம் விதிவசத்தை
என்சொல்லத்
தியஜித்துநம்மை ஆதரிப்போர் தயவின்றி
இருக்கிறாரே

மான்பிடிக்கக் கோரியதால் மகத்தான கஷ்டங்கள்
தான்விளைந்த தென்றெண்ணித் தள்ளினரோ
சாமிநம்மைத்

தம்பியைநாம் போகச்சொல்லித் தனியாக
இருந்துகஷ்டம்
சம்பவிக்கச் செய்தோமென்று சாமிநம்மைத்
தள்ளினரோ?

3225. நகர்தனிலே வாழுகையில் நமதெண்ணப் படிசாமி
சுகந்தன்னை விட்டுவிட்டுச் சொன்னபடி நம்முடனே

அநுராகக் கலகஞ்செய்த அவ்வாறே இப்பொழுதும்
நினைத்துச்செய்யும் பிரணயம்தானோ நிச்சயமாய்த்
தெரியலையே

வாயுசுதர் வந்துரைத்த வார்த்தைதனை
நம்பிக்கொண்டு
ஆயுள்தனைப் போக்காமல் ஆதரித்தோம் மதியிழந்து

3226. அநுராகம் - சித்திரிப்பம்; பிரணயம் - கலவி

நாதரைநாம் பிரிந்தவுடன் நமதுயிரை ஒழித்திடாமல்
ஆதரித்த தறிவீனம் ஆகையினால் வந்ததெல்லாம்

அனுபவித்தே தீரவேண்டும் அதைத்தடுக்க நம்பலாமோ
சுனமழிந்தோம் இனமழிந்தோம் கதியிழந்தோம்
மதியிழந்தோம்

3230. இப்படியுஞ் செய்வதற்கு ஏதுமக்குச் சோபனமாய்
ஒப்பும்படி அனுமாரிடம் உளமகிழச் சேதிதந்தார்

அலங்காரத்தோ டாசைகொண்டு அருமையான
சுணவரிடம்
நலஞ்சருதி வந்ததற்கு நம்மையவர் பிரித்துவிட்டார்

பதிமனது திருப்தியாகிப் பாரில்நம்மைப் புகழ்ந்திடவே
ஏதுசெய்வோ மென்றுசீதை எண்ணியப்பால்
மனந்துணிந்து

சோகமதை விட்டொழிந்தாள் சுவாமிமனக்
குறிப்பறிந்தாள்
பாசமுள்ள பத்தினியென்று பார்புகழக் காரணத்தை

சற்புநிலை தனைக்கொண்டு காட்டுவோம்நா
மென்றெண்ணி
வற்புறுத்தித் தீர்மானத்தாள் வைதேகி அறிவுகொண்டு

3235. அனுஜர்தம்மை அருகழைத்து அன்புடனே
சொல்லுகிறாள்
எனதுவிதிப் படியெனக்கு வல்லாக்கவ்டம் வந்துறப்பா

கடைசியாகத் தலைவரென்னைக் கைவிடவும்
ஆயிற்றிப்போ
உடம்பைபாயி வைப்பதிலே ஒன்றுமில்லை
டயனென்ரு

ஆகையினால் அக்கினியில் அங்கமதை அழித்திடவே
தாகங்கொண்டேன் இப்பொழுதே தணல்மூட்டிக்
குண்டமருஞ்செய்வாய்

சாமிமுன்னே கடமொழித்தால் சதிலகுத
முண்டெனக்குப்
பாமரத்வம் பறந்திடுமே பரிசுத்தம் அடைந்திடுவேன்

நாரிகட்கு நாயகியின் நட்பொழிந்தால்
பெருமையில்லை
காரணகாரியமறிந்து கண்டிப்பாய்ச்
சொல்லுமெந்தன்

3240. வாக்கின்படி நடப்பதுவே வழியாகும் வழுவவேண்டாம்
பாக்கியமில்லாப் பெண் ணெனக்குப் பாரினாதை
போதுமப்பா

ஆகையினால் அக்கினிக்குண்டம் அரைநொடியில்
அமைத்திடுவாய்
தேகசுத்தி கண்டறிந்து திருவாளர் திருப்திகொள்வார்

அவர்மனதைத் திருப்திசெய்து அவரருளைப்
பெறுவேனானால்
கவலையெல்லா மொழியும்நல்ல கதியடைவேன்
பதியெனக்குக்

கஷ்டந்தந்தா ரென்றெண்ணிக் கண்கலங்க
வேண்டாமப்பா
இஷ்டசித்தி கூடுமப்பா ஏங்கவேண்டாம்
துணிவாயென்றாள்

இந்தவிதம் சீதைசொல்ல இளையவனாம் லட்சுமணன்
சிந்தைமிக நொந்தமுதான் சீதையின்னுஞ்
சொல்லுகிறான்

3245. எத்தனைநா ளிருந்தாலுமே இத்தத்தேகம் நிலையாமோ
உத்தமர்க்குச் சித்தசுத்தி ஒன்றேதான் போதுமப்பா

மற்றெதையும் பாராட்டி மனங்களித்தல் அழகல்ல
குற்றங்குறை ஒழிப்பவர்க்குக் கூடுமப்பா
பாக்கியமெல்லாம்

உத்தமியாய் நானிருந்தால் ஒருகுறையும் வருவதில்லை
நித்தியசுகம் பொருந்துமப்பா நேராக வாழ்வேனப்பா

நடந்திருக்கும் சரியத்தால் நானினிமே
லொருநொடியும்
உடலைக்கொண் டிருப்பதற்கு உள்மனதில்
ஆசையில்லை

மனதைத்திடஞ் செய்துகொள்வாய் மனவருத்தம்
தனைவிடுவாய்
ஞானதிஷ்டப் படிநடப்பாய் இலட்சுமணா
என்றுரைத்தாள்

3250. உருமிமனம் நொந்தானம்மா உத்தமனாம் லட்சுமணன்
பரிதவித்தார் மற்றவரும் பரந்தாமன் கருத்தறியார்

உத்தமியின் மகிமையிந்த உலகறிய வேண்டுமென்றே
அத்தன்சும்மா இருந்துவிட்டார் அதன்பிறகு
லட்சுமணன்

சீதை அக்கினிப் பிரவேசம் செய்ததும்
அக்கினிபகவான் ஜானகியின் பதிவிரதாக்னி
அனல் தாக்கிக் கஷ்டமடைந்து சீதையை
ஸ்ரீராமனிடங் கொண்டுவந்து விடுவதும் சீதையைச்
சுவாமி அங்கீகரித்து அக்கினி பகவானை
உபசரித்தனுப்பிச் சீதைக்கு
உபசாரஞ்சொல்லுவதும் சீதை பதிலுரைப்பதும்

சாமிமுகம் பார்த்திடவும் ஜாடையவர் செய்தாரம்மா
தாமதமே செய்யாமல் தம்பிதனல் மூட்டிவிட்டான்

பரமபக்தர் வாடிசுதர் பரிதபித்து மிகவழுதார்
அருமையான ஜானகிக்கு ஆபத்து விளைந்ததிப்போ

பாடுகளும் பட்டதெல்லாம் பலனின்றிப் பாழாயிற்று
தேடும்பொருள் கிடைத்தமது தீக்கிரையாய்த்
தரலாயிற்று

3255. அடியாயம் இதுபோலும் அகிலத்தனில் பலித்திடுமோ
வினையினது பயனிதுவோ விசனனிவ்வா
றுண்டாருமோ

என்னசெய்வோ மென்றனுமார் ஏங்கியேங்கி
மிகவழுதார்
அன்னலுடை உள்ளசீதை அதன்பிறகு திடமனதாய்

மங்கையர்க்கோர் மணிவிளக்காம் மகலட்சுமி
ஜகந்துதிக்க
மங்களமாம் கோலத்தோடு மாதவரை நமஸ்கரித்து

அக்கினிகுண்டந் தனையடுத்தாள் அனைவர்களும்
பரிதவித்தார்
உக்கிரமுள்ள அக்கினியை உசிதமாக வலஞ்செய்து

பூர்வமுக மாகநின்று பொறிபறக்கும் அக்கினியைப்
பார்த்திதிற்கும் நயன்களித்துப் பரிசுத்த நினைவுடனே

3260. நாமரபதம மனதில்கொண்டு ராமமந்திரம்
நாவில்கொண்டு
பூமியில்தான் புகழ்பரவும் புகுந்தாள்செந் தீநடுவில்

புகுந்துமறைந் திருந்தெழுந்தாள் பூங்குழல்மேல்
மலரலரத்
தகுந்தமஞ்சள் காப்பவரத் தரித்திருக்கும்
பட்டாடைமின்ன

சுந்தபரி மளம்வீசக் கனநகைகள் ஒளிவீச
இந்துவைத்தன் முகமேச எல்லோருந் துதிபேசச்

சாமிமுக மிகுமலரச் சகலருமே மனமகிழ
நேமமுடன் தேவர்விண்ணில் நின்றுபனி மலர் தூவச்

சந்திரனும் அழகியசெந் தாமரையும் நாணொளிந்த
சுந்தரமா முகத்தில்சிறு நகைதுலங்கத் தோன்றினளே

3265. அவ்வாறு வைதேகி அழலின்மேல் இருந்ததுதான்
செவ்வியதா மரைமலர்மேல் திருவிருந்தாப்
போல்விளங்கும்

அக்கினியின் ஒளியடக்கி அம்மன்தேக ஒளிவிளங்கப்
பக்குமதி லுள்ளோரெல்லாம் பார்த்துப்பார்த்து
மகிழ்ந்தாரம்மா

கைகூப்பி யாவருமே கடலொலிபோல்
வாழ்த்தினார்கள்
மைக்கண்கு ளுள்ளசீதை மகிமையுடன் விளங்கினளே

அக்கினிதேவர் ஜானகியை அழகியபொன் தட்டுதனில்
தக்கபடி வைத்தவரின் தலைமீது கொண்டெழுந்து

ஐயர்முன்னே வைத்தவரை அடிபணிந்து
சொல்லுகிறார்
மெய்யரேநீர் இவ்விதமாய் மின்கொடியாள் ஜானகியை

3270. நினைக்கலாமோ வைதேகியின் நேரான கற்புநிலை
எனைமிகவும் தகித்துதையா என்சொல்வேன் மகிமை
தனை

மகமேரு கரியசையும் மகலட்சுமி மனமசையாள்
அகநிலைநீர் அறிந்திருந்தும் ஐயங்கொண்டேன்
கைவிடுத்தீர்

அங்கீகரித் தருளுமையர் ஆண்டவரே என்றுவேண்டச்
சங்கையின்றி ஜானகியைச் சாமியங்கீ
கரித்துக்கொண்டு

தேவனான அக்கினிக்குத் திருப்திவர உபசரித்து
ஆவலோடு ஜானகியை ஆலிங்கனஞ் செய்துகொண்டு

மடிதனிலே வைத்துக்கொண்டு மனமகிழ்ந்து
சொல்லுகிறார்
கொடுமைசெய்தே னென்றுனக்குக் கோபமென்மே
லிருக்குமடி

3275. சித்தசுத்தி உள்ளவளே சீரான பெண்கிளியே
உத்தமியே உனக்குவமை உலகிலில்லை ஆனாலுமே

உன்மகிமை உலகுமெல்லாம் உணர்ந்திடவே
உரைத்தேனான்
நன்மையெண்ணிச் சொன்னதைநீ தாடியந்தப்
படிநடந்து

என்னைவிட எஸமடந்தாய் என்மனது
குளிர்ந்ததிப்போ
சொன்னதற்கா யென்மீது சமத்தவேண்டாம் குற்றமது.

சீதையேநீ பத்துமாதம் சிரமமிகவும் அடைந்திருந்து
வேதனையைச் சகித்துக்கொண்டு வேண்டியது
வரையிலுயிர்

தரித்திருந்தா யென்றறிந்தும் தயவின்றி
நடத்தினதாய்க்
கருத்திலுனக் குறுத்துமென்று வருத்துதெந்தன்
மனமென்றான்

3280. நமஸ்கரித்துச் சீதைசொல்வாள் நாலுமக்கு
அடைக்கலமே
உபதெண்ணம் உள்ளபடி உடன்படுதல் என்கடனே

உமதுதேகந் தனில்பாதி உள்ளதெந்தன் தேகமென்று
சமீதி உரைக்கும்நல்ல சத்பிரமாணப் படிக்குமக்கு

இல்லாத நஷ்டமெனக் கேதுமிலை அதைமறந்தால்
பொல்லாத பேரடைந்து பூமியிலே சீரழிவேன்

அக்கினிதனைச் சாட்சிவைத்து அகம்பொருந்தி
ஆயுள்மட்டும்
விசுவாசமின்றி உமதுசித்த விர்த்திதனை அனுசரித்து

நடந்திடவே உமக்குத்தந்த நட்பின்படி நானடைந்தேன்
உடன்படிக்கை பொதன்றி உயிரெனக்குப் பொதல்ல

3285. இதைமீறி நடந்துகொண்டால் எனக்குக்கதி
கிடைத்திடுமோ?
சதியாக வந்திடுமே சற்றுநெறி தப்பினக்கால்

அறிந்துசெய்தேன் முறைப்படியே அதிலெனக்குத்
திருப்தியின்றிச்
சிறிதுமில்லை வருத்தமையா செப்புகிறேன்
சத்தியமாய்ப்

பட்சபாதம் உமைத்தழுவும் பாரிலெனைக் குறைதழுவும்
கட்சிக்கிட மாகாதென்று காலதேச மறிந்துஜாடை

காட்டினதால் கனமடைந்தேன் கடவுளரும்
கிருபையுடனே
கூட்டிவந்து சன்னிதியில் கொடுத்தெந்தன் பாக்கியமே

எனக்குநீர்தான் உபகாரம் எனுரைக்க,
வேண்டுமெந்தன்
மனக்குறையைத் தீர்ப்பவரே மாதவரே
போதுமென்றாள்

சிவபெருமான், நான்முகனார், இந்திராதிதேவர் தசரதர் முதலியவர்கள் வந்து, இராமலட்சுமணாதி களை யனுக்கிரகித்தும், புகழ்ந்தும் இறந்துபோன வானரர்கள் மறுபடியும் பிழைக்க இந்திரன் வரந்தந்ததும், சகல தேவர்களும் அவரவர் இருப்பிடஞ் சேர்ந்ததும்

3290. அந்தவேளை வந்துவிட்டார் அஷ்டதிக்குப் பாலகரும்
இந்திரனார் முதலாக இருக்குமெல்லாத் தேவர்களும்

நான்முகனார் தானுமவ்தார் நயந்துசிவ
பெருமான்வந்தார்
வானவர்கு தனிலிருந்து வந்தாரையா தரநரும்

சீதையிடை மகிமையையும் ஸ்ரீராமர் பெருமையையும்
மேதினியோர் நிந்திடவே மிகப்புகழ்ந்தார்
தேவரெல்லாம்

தன்னுடைய மகத்துவத்தைத் தானறியா
திருப்பதுபோல்
மன்னவன்ஸ்ரீ ராமனப்போ மாயஞ்செய்தார்
பிரம்மதேவன்

ஆதிமூலப் பொருளேநீர் அகிலஜகக் காரணர்நீர்
மேதினியில் அரக்கரெல்லாம் மிகக்கொடுமை
செய்ததற்காய்

3295. பங்கமிட பிரார்த்தனையை ஈடேற்ற வேண்டுமென்று
மங்களமாய் வாக்குத்தந்து மனிதராக அவதரித்தீர்

ஆரறிவார் உம்முடைய அந்தரங்க மகிமையெல்லாம
கோரிவந்து லோகமெல்லாம் குணமாக வாழும்படி

அரக்கர்கள் பூண் டொழித்ததற்கு ஆனந்தக்
கடல்படிந்தோம்
ஜெமினித் தழைக்குமையா தரணியிலே வெகுவிதமாய்

வந்தகாரிய மானதினால் வைகுந்த மினிவருவீர்
எந்தன்மனம் குளிர்ந்ததென்று இவ்வாறு
ஸ்துதித்தரைத்தார்

அரக்கர்களை ஒழிப்பதற்கு அனுகூலஞ் செய்தவராம்
பரமபக்தர் விபீஷணர்க்கும் பண்டிதராம்
அனுமாருக்கும்

3300. கவியரசர் முதலாகக் கவித்தலைவர் சகலருக்கும்
சுவிகளுக்கும் உபசாரம் கர்த்தன்சொன்னார்
களிப்படைய

சிவபெருமான் அதன்பிறகு செப்புகிறார் ஸ்ரீராமா
குவலயத்தில் அவதரித்துக் கோதண்ட பாணியாகித்

துஷ்டர்களை நிக்கிரகித்துச் சிஷ்டர்களைப்
பரிபாலித்தீர்
இஷ்டதெய்வம் நீரென்று எல்லோரும் மகிழுகின்றார்

பரதனும்ம வரவைக்கோரிப் பக்தியுடன்
நியமங்கொண்டு
அரிவிநாடியும் மறவாமலே அருந்தவமே
அவன்செய்கிறான்

அவனைமிக ஆதரித்து அன்னையர்கள் யாவர்களும்
குவலயத்தி லுள்ளமட்டும் குறைவின்றிச் சம்ரட்சித்து

3305. ஜகத்தையெல்லாம் பரிபாலிக்கச் சீருடனே முடிதரித்து
அகமகிழ அரசுமுறை ஆதிமனு நீதிப்படி

வெகுகாலம் நடத்திவந்து வெகுவாக யாகாதிகள்
தருதியாகச் செய்துவந்து தானதர்மம் மிகச்செய்து

எங்கும்நல்ல செயலடைந்து இஷ்டப்படி உமதுநிலை
தங்குமிடந் தனில்வந்து தத்பொருளாய் மிஞ்சிடுவீர்

இசைந்தநல்ல விமானமதில் இருப்பவராம் உமதுதந்தை
தசரதரைப் பாருமையா தம்பியோடு வணங்குமையா

அனுக்கிரகித்து ஆதரிக்க அவரிங்கு வந்தாரையா
அனுஜனையும் உம்மைபயுமே ஆவலோடு
பார்க்கின்றாரே

3310. இந்தவிதஞ்சிவனுரைத்துவசஸடைய அனுக்கிரகித்தார்
அந்தச்சிவ பெருமானை அடிவணங்கி ஸ்ரீராமன்

தம்பியையும் சீதையையும் தட்சணமே
அழைத்துக்கொண்டு
வந்துபார்த்தார் விமானமதில் வசித்கின்ற தசரதரை

தேஜோரூபி யாதலினி நேரெதிரே டிருக்குமந்த
ஆஜானுபாகுடைய அருமைத்தந்தை தனையடுத்து

அபிவாதன முறைப்படியே அகமகிழ்ந்து செய்தாரம்மா
சுபம்பெருக அனுக்கிரகித்துச் சுகமடைய
மக்கள்தம்மைக்

கட்டிமிகக் கொஞ்சியப்பால் கால்தொடங்கிச் சிர
சுவரை
இட்டமுடன் தடவித்தந்து இருவரையும் முத்தமிட்டு

3315. மடியில்வைத்து வெகுநேரம் மாதவனை மிகப்புகழ்ந்து
அடுத்ததேவர் முதலானோரை ஆதரிக்க என்மகனாய்

அவதரித்துக் கொடுமைசெய்யும் அரக்கர்பூண்டை
ஒழித்துமிகக்
குவலயத்தை ஆதரித்துக் குணமடைந்தாய்
மணமடைந்தாய்

நற்சுதியை எனக்குத்தந்தாய் நாடெங்கும் வாழ்ந்திடவே
சற்குருவாய் அவதரித்தாய் சாட்சாத்ஸ்ரீ விஷ்ணுவேநீ

உன்மகிமை இப்பொழுது உணர்ந்தேனப்பா
மகிழ்ந்தேனப்பா
சுண்மணியே கடவுளரே சுண்குளிர உன்னையிப்போ

சுண்மணியே காதகியாம் கைகேயி செய்தகுறை
விண்டுதப்பா எனதுவும்சம் வெகுகாலம் விளங்கிடவே

3320. தீர்க்காயுஸா யிருந்துகொண்டு திட்டமாக உலகாண்டு
ஆர்க்கும்இன்பந் தனைத்தந்து ஆதரித்து
வாழ்ந்திடுவாய்

பட்சமுள்ள லட்சுமணா பரந்தாமன் தனையடுத்து
எட்சணமும் மறவாமல் இருப்பவனே என்மகனே

பரம்பொருளை நீயடுத்தாய் பரமசுகம் நீயடைவாய்
அருமையான தம்பியென்று ஆதரிப்பான்
ராமனுன்னைத்

தருமமெண்ணி நீநடப்பாய் தரணியிலே புகழடைவாய்
கருமவினை தனைவெல்வாய் சுர்த்தனருள்
ஒன்றுகொண்டு

இந்தப்படி யனுக்கிரகித்து இந்திரனார் பயமொழித்த
சுந்தரமாம் கையையிரு கண்ணிலொற்றிச் சுகமடைந்து

3325. எதிரில்நிற்கும் ஜானகியை இருகண்ணால்
பார்த்தாரம்மா
மதியுள்ள சீதையப்போ மாமனாரை நமஸ்கரித்தாள்

உத்தமியாம் பெண்ணரசே வலசுமெல்லாம்
பிழைத்திடவே
இத்தனையும் நடந்ததம்மா இதுவுமன்றி
ஜகத்திலுந்தன்

மகிமையெல்லாம் விளங்கிடவே மாதவன்ஸ்ரீ
ராமச்சந்திரன்
வசுசெய்தா னென்றறிந்து வாழ்ந்திடுவா யவனுடனே

அக்கினியி லிறங்கியதால் அகிலமெல்லாம்
உனைப்புகழும்
பக்கம்அக்னி வருவதுண்டோ பாதிவிர்த்தியு
ஜ்வாலைமுன்னே

மகலட்சுமி யாகவுள்ள மாதரசே ஜானகியே
இகபரத்தில் யாவருக்கும் இன்பந்தரும் பராசக்தியே

3330. நித்தியப்பொரு ளுனதுபர்த்தா நிற்விகாரப்
பொருள்ராமன்
சுத்தமுடன் அவனுடனே சுகமாக வாழ்ந்திருப்பாய்

இந்தவிதம் மருமகளை எண்ணிமிக அனுக்கிரகித்துச்
சந்துஷ்டி உடனேயவர் தன்மக்கள் இருவரையும்

சுட்டிக்சுட்டி முத்தமிட்டார் கண்குளிர்ந்து
தாரைவிட்டார்
சுட்டிமுன்னே அனுபவித்த சோகமதை
நினைத்துக்கொண்டார்

அரண்யத்திற்கு அனுப்பிவிட்டு அடைந்தகஷ்டம்
போதும்போதும்
பரிதபித்தேன் பிராணந்துள்விப் பாபபல
னனுபவித்தேன்

கண்மணியா யுள்ளமக்கள் ஞானசுத்தை
அடைவாராயின்
உண்மையாக அந்தக்கஷ்டம் ஒருக்காலும்
சகிக்கப்போகா

3335. அந்தியக்கால மதிலேநான் அனுபவித்த சோகமதைச்
சிந்திக்கையில் என்மனது வெந்துவெந்து உருகுதப்பா

மனைவியினால் வந்துதப்பா மனக்குறைகள்
மிகவுமப்பா
எனதெழுத்தை யெண்ணியெண்ணி ஏங்கினதை
யென்னசொல்வேன்

இந்தவிதம் மனக்குறையை எடுத்துரைக்கும்
வேளையிலே
தந்தைதனைப் பார்த்துராமன் தலைவணங்கிச்
சொல்லுகிறான்

என்னைப்பெற்ற தந்தைகேளீர் எனதிஷ்டப்
படிஎனக்கு
மன்னவரே மனுவொன்றுண்டு மனமுவந்து
கேட்கவேண்டும்

அருமைத்தம்பி பரதனையா அவனெனக்குப்
பிராணனையா
தருமசீலன் அவனையா தாகமல்லாம் அவன்மீதையா

3340. தந்தையாக என்னையெண்ணித் தனிசுக்தை
வெறுத்தானையா
அந்தரங்கப் பக்தனையா அவனுக்கொப்பார்
இல்லையையா

கைகையம்மாள் என்மீது கருணையின்றி நடந்ததற்குத்
தெய்வச்செயல் காரணமே தீங்குசெய்யும் தாயவளோ?

தன்செயலை நினைந்துகைகை தத்தளிக்கும் விதமறிந்து
என்மனது தவிக்குதையா என்னைமிக ஆதரித்தாள்

தேவரெல்லாம் அவள்மனதைத் திரும்பும்படி
செய்ததினால்
நாவுதனில் அவள்சோரினாள்: நான்போக
வனத்திற்கென்று

வனவாசப் பலனதினால் வையகமே பிழைத்துதையா
எனக்கெசஸைத் தந்தவளாம் எனதன்னை
கைகையம்மாள்

3345. எனக்குமிகப் பிரியமுள்ளவள் எப்பொழுதும்
எனைநினைப்பவள்
தனதுமகன் மீதிலுமே தயவில்லை நிச்சயமே

ஆகையினா லிப்பொழுது அடியேனான் கோருகிற
தாகப்படி அனுக்கிரகிக்கத் தயவுசெய்ய வேண்டுமையா

பரதனையும் கைகையையும் பாபிகளா
யெண்ணிக்கொண்டு
பரித்தியாகஞ் செய்தவொரு பிரதிக்ஞைதனை
விட்டொழித்து

அன்புகொள்ள வேண்டுமையா அவர்கள்மீது
மிகவுமென்று
நன்மையெண்ணி ராமன்கேட்டான் நயந்துதந்தை
அனுக்கிரகித்தார்

மறுபடியும் ராமனிடம் மனமுவந்து தந்தைசொல்வார்
அறிவுடைய உன்னுடைய அன்னைமார்கள் மற்றிருவர்

3350. தருமகுணப் பூஷணிகள் தயவுமிகும் பத்தினிகள்
அருமைப்பக்தி உள்ளவர்கள் அவருக்கொப்பாய்ப்
பெண்களில்லை

சுகமனுவும் அறியாதவர் சொன்னபடி நடப்பவர்கள்
மகிமையுள்ள பெண்களவர் மனைவிகுண முள்ளவர்கள்

உனதுசுக வாழ்வைக்கண்டு உளங்களிக்க
வேண்டுமென்று
மனதில்மிக ஆசைகொண்ட மாதாக்கள் அவர்களைநீ

அன்புடனே ஆதரிப்பாய் அவர்க்குங்கதி தந்திடுவாய்
இன்பமது பெற்றவரும் என்னுடனே வாழச்செய்வாய்

இந்தவிதம் அனுக்கிரகித்தார் இந்திரனார் முந்திவந்து
எந்தனாலே வேண்டும்வரம் இப்பொழுதே
கேளுமென்றார்

3355. உயிரிழந்த வானரர்கள் உயிர்கொண்டு எழுந்திடவே
நயவுகொண்டு அருக்கிரகித்த தயாபரனார்
கேட்டாரம்மா

அந்தப்படி அனுக்கிரகித்தார் அந்தவுடன் முன்னிறந்த
அந்தந்த வானரரும் ஆவிகொண் டெழுந்துவந்தார்

சாமிமிக மனங்களித்தார் சகலதேவர் களுஞ்சென்றார்
காமங்கொண்டு விபீஷணனார் சுத்தன்ராமன்
முன்னேவந்து

ஸ்ரீராமரிடம் விபீஷணர்வந்து ஸ்நான வஸ்தராலங்காரதிகள் செய்துகொண்டு விருந்துண்ண அழைப்பதும் சுவாமி அதை மறுத்து வானராதிகளுக்குச் செய்யும்படி சொல்லுவதும், அவ்வாறு அவர் செய்தமேல் விபீஷணர் சுக்கிரீவர் முதலிய எல்லோரையும் அழைத்துக்கொண்டு புஷ்பகத்தில் ஏறிவந்து சேதுகட்டத்தில் ஸ்நானஞ்செய்வதும் சிவாராதனமும்

தண்டனிட்டு வேண்டுகிறார் தயாபரரே
ஸ்நானஞ்செய்து
உண்டுடுத்திச் சுகம்பெறுவீர் உயர்ந்தநல்ல
வஸ்திராதிகள்

வேணமட்டு மிருக்குதென்று விநயமாக
வேண்டிக்கொண்டார்
காணும்பொருள் யாவுமிப்போ கண்ணுக்கித
மாகாதையா

3360. பரதன் ஜடை தரித்துக்கொண்டு பக்தியோடு
சகலசதையம்
கருதாமல் வெறுத்திருக்கும் காலமட்டும் நானெதுவும்

கொள்வதற்குக் கூடாததையா குறைமனதில் மிகவுமையா
எள்ளளவு மிப்பொழுது எனக்குச்சுக மில்லையையா

அவன்முகத்தைப் பார்த்ததன்மேல் ஆறுதலை
அடைவேனய்யா
குவலயத்தில் அதுவரையில் கோலம்வேறு
கொள்ளேனையா

ஆகையினால் சுக்கிரீவர்க்கும் அலுமார்முதல்
சகலருக்கும்
தாகந்தீர வெகுமதிகள் தந்தவரை உபசரித்தால்

எனக்குமிகத் திருப்தியுண்டு என்றராமன்
சொன்னதன்மேல்
அனைவருக்கும் அபரிமித ஆபரணா திகளுடனே

3365. உடுகரைகள் மிகவுந்தந்து உவமகிழச் செய்தாரம்மா
கொடுப்பவர்கள் விபீஷணர்போல் குவலயத்தி
லாருமிலை

வானரர்கள் நகைகள்பூண்டு வஸ்திரங்கள்
இடுப்பில்பூட்டி
ஆனந்தக் கோலத்தோடு ஆடியோடித் திரிந்தாரம்மா

விருந்துசெய்த விபரிசையை விரித்துரைக்கப்
போகாதப்பர
கரும்புருசி சுகப்பென்பாரே கவிவர்க்கா
திகள்புரிந்தோர்

3365. உடுகரை - உடுக்கும் ஆடை

இலேபிபபி பூவந்தி சிரெட்டிலட்டு பேணியுடன்
யிலையுயர்ந்த பட்சியங்கள் யிதம்யிதமாய்ச்
சொரிந்தாரம்மா

அமிர்தபானஞ் செய்பவரி போல் அறுசுவையோ
டன்னாதிகள்
கமகமவென் றுசிமணக்கக் கலத்திலிட மிச்சமின்றி

3370. படுத்தெடுத்துக் கழுத்துமட்டும் எல்லோரும்
பூசித்ததன்றிப்
படுத்துறங்கி யானதன்மேல் பரபரப்பாய்ப்
பானங்கேட்டார்

மதுவகைக ளநேகவிதம் மதுரமாக இருக்குதந்தார்
எதுவுமதற் கொப்பிலையென் றெல்லோரும்
பானஞ்செய்து

தன்னைமறந் தாடுவோரும் தரைதனிலே வீழ்பவரும்
இன்னும்வேண்டு மென்பவரும் இலங்கைவிடே
னென்பவரும்

அம்மணத்தோ டாடுவோரும் அறிவிழந்து திரிபவரும்
சும்மிதட்டிப் பாடுவோரும் சூணந்தப்பில் பேசுவோரும்

ஆனவங்கள் மிகப்பேசி அதட்டிக்கண்
களுருட்டிக்கொண்டு
வீணலச்சல் அலைவோரும் வீம்புமிகப் பேசுவோரும்

3375. இந்தவிதம் வானரர்கள் எத்தனையோ விகாரமாக
மந்தபுத்தி தனையடைந்து மயங்கிவெரு நேரமட்டும்

இருந்ததெல்லோரும் தெளிவடைந்து இராமர்முன்னே
வந்துநின்று
அருமையான விருந்தளித்தார் அன்புடனே
விபீஷணரென்

நேகவிதம் வானரர்கள் அகமகிழ்ந்து புகழ்ந்தாரம்மா
மனோச்சமாக மிகவடைந்தார் மாதவனார்
அதன்பிறகு

பரதனுக்குக் காட்சிதரப் பண்ணியுள்ள வாக்கின்படி
வருஷம்பதி னாலாவதால் வழிபார்ப்பான் நமக்காக

அன்னையரும் மற்றவரும் ஆவலோடு நம்மைப்பார்க்க
எந்நேரமும் வழிநோக்குவார் எப்பொழுது
வருவானென்று

3380. ஆகையினா லினியிவடம் அட்டிசெய்யப்
போகாதென்று
வேகமாக வரவழைத்து விபீஷணரைப்
பார்த்துரைப்பார்

அயோத்திநகர் போவதற்கு அனுகூலப்
பாதைசொல்வீர்
வியாகூலத்தோ டிருக்குமெந்தன் விவேகமுள்ள
தம்பியான

பரதனைப்போய்ப் பார்க்கவேண்டும் பருநாவாய்ப்
பாராமல்
அருமைத்தம்பி மீதில்மிக ஆவலெனக் கிருக்குதென்றார்

புரந்தாமரைப் பார்த்துரைப்பார் பரமபக்தர்
விபீஷணனார்
ஒருபகலில் அயோத்திசேர்த்த உண்டையா புஷ்பகமாம்

விமானமொன்று பாருமென்று விபீஷணனார்
வரவழைத்தார்
அமோகமான திகழ்விக்கும் அதிசயமாய் விமானமதைக்

3385. கண்டுராமன் மிகமகிழ்ந்து கனவிலுமே கண்டதில்லை
உண்டோயிந்த விதம்[illegible]லுலகீ லென்று
அரிதென்றார்

அந்தவிமா னந்தனிலே ஐயன்மிக ஆவலோடு
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளிச் சீதைதனை எடுத்தவரின்

மடிதனிலே வைத்துக்கொண்டார் மகலட்சுமி
வெட்கங்கொண்டு
உடம்பிலையன் கைபடவே உரோமமெங்கும்
கூச்சங்கொண்டாள்

தம்பிலட்சு மணனேறினான் தயாபரராம் ராமரப்போ
நம்பினோரார்ம் விபீஷணர்க்கும் நண்பராகச்
சுக்கிரீவர்க்கும்

உபசாரம் மிகவுஞ்சொல்லி உண்மையாக அவரவரும்
சுபம்பெருக வாழ்ந்திருந்து சுகமுடனே தேசந்தனை

3390. அரசாண்டு புகழடைவீர் அகிலங்களில் உங்களுக்குக்
கருதியிடர் செய்வோரில்லை சாப்பேனான்
எப்பொழுதும்

எப்பொழுது வேண்டினாலும் என்னாலே யானமட்டும்
தப்பமாட்டேன் உதவிசெய்யத் தாருமெனக் கழுமதியை

போய்வருவே னென்றுரைத்தார் பொறுப்புடனே
அவ்விருவர்
தாய்தந்தை யாகவுள்ள தயாபரரே உமைப்பிரிந்து

ஒருநொடியு மிருப்பதற்கு உறுதியில்லை எங்களுக்கு
வருவோம்நாங்க ளும்முடனே வானரர்க்கும்
பிரியமையா

பரதர் முதல் சகலரையும் பார்க்காவல் இருப்பதினால்
அருமையான அயோத்திவந்து அகமகிழ
வேண்டுமென்று

3395. ஆவல்மிக இருக்குதென்று அவர்கள் கோர ஸ்ரீராமர்
நாவசைத்து அனுமதித்தார் நயந்தெல்லா வானரரும்

சுக்கிரீவர் விபீஷணரும் சுத்தவீரர் அனுமாரும்
நக்கவராம் படைத்தலைவர் சத்ருக்தன் அங்கதனும்

ரதக்கார்களில் விபீஷணர்க்கு அவசியமான
போகளுமாய்ப்
பிரியங்கொண்டு விமானமதில் பெருமையுடன்
ஏறினார்கள்

பெண் துணையோ டிங்கிருந்து பெருமையுடன்
போவதற்கு
எண்ணமெனக் கிருக்குதென்று இராமரிடஞ்
சீதைசொன்னாள்

அந்தவொரு இங்கிதத்தை அறிந்துவிபீ ஷணருடனே
வந்திடவே ஆக்ஞைசெய்தார் வைதேகியோ
டயோத்திபோகத்

3400. தனதுபுத்தி மக்களுடன் தளபதியும் மித்திரரும்
மனமகிழ்ந்து சென்றவுடன் மனமுவந்து அவரும்வந்தார்

ஏறுவோர்க ளெல்லோருக்கும் இடந்தரும்நல்
புஷ்பகந்தான்
சூரியன்போ லெழுந்துவிண்ணில் சோதியுடன்
விளங்கிற்றம்மா

விண்ணில்சற்று நின்றதம்மா வெகுநேர்த்தி
யுள்ளலங்கை
கண்ணுற்றுப் பார்க்கும்படி கர்த்தாசொன்னார்
சீதைக்கப்போ

பார்த்துமிக அதிசயித்தாள் பரந்தாமன் அதன்பிறகு
பார்த்திடுவாய் ரணகளத்தைப் பாபிகளாம்
அரக்கரெல்லாம்

மடிந்தவிடம் இதுதானென்று மாதவனார்
சொன்னதன்மேல்
சடுதியாக விமானமது சாமிமனப் படியயோத்தி

3405. போவதற்கு வடதிசையாம் போக்கறிந்து சென்றதம்மா
ஆவலோடு ஸ்ரீராமர் அரணியத்தின் விநோதங்களை

ஜானகிக்குக் காண்பிவித்து ஜகந்தனிலே அற்புதமாய்த்
தானமைத்த சேதுவையும் தருந்தபடி
காட்டிச்சொல்வார்

சுவிகளுடன் நளனென்போன் சுனமலையால்
தினமைந்தில்
விபவமுடன் கட்டியதாம் விசேஷமுள்ள சேதுவிது

வினையொழிக்கும் கதியளிக்கும் வேணபடி
பலன்கள்தரும்
இனமளிக்கும் தனமளிக்கும் எல்லாப்பாக்கியம்
அளிக்குமிது

பஞ்சமகா பாதகங்கள் பறந்திடுமே இதில்படிந்தால்
நஞ்சுதரும் வஞ்சகமும் நம்பிக்கைத் துரோகங்களும்

3410. நேசர்களை மோசஞ்செய்யும் நெஞ்சுறுதி
கொண்டவரையுட்
பசனடிநேசர்களை புசிவம்பு பேசுவதும்

மமதைகொண்டு பொறியோரை மானபங்கஞ்
செயுஞ்செயலும்
தமதுதந்தை தாய்மார்களைத் தடத்தில்விட்
டோர்க்குஞ்சாபமும்

இதுவுமன்றி அநேகவித எண்ணிறந்த தீவினைகள்
இதில்படிந்த உடனொ நுங்கும் இதுநிஜமாய்ச்
சொல்லுகிறேன்

பதியளிக்கும சுதியளிக்கும பரஞான நிலையளிக்கும
மதியளிக்கும் துதியளிக்கும் மகிமையுள்ள சேதுவிது

பெண்ணரசே இன்னமுதே பெருஞ்சேது
மகிமையெல்லாம்
எண்ணிச்சொல்லில் பெருகுமென்று இவ்வாறு
சொல்லிக்கொண்டு

3415. அருணவத்தின் வடகரையை அடைந்தங்கு இறங்கியந்தப்
பெருமையுள்ள சேதுஸ்நானம் பிரியமாக யாவருமாய்ச்

செய்துமிகப் புனிதராகிச் சிவபிரதிஷ்டை
அதற்குமுன்னே
ஜயன்செய்த ஆலயத்தில் அனைவர்களும் வந்துசேர்ந்து

பக்தியோடு சிவப்பொருளைப் பணிந்தவரைக் குண
முடனே
சக்திசிவ பூஜைசெய்து சகலவித உபசாரங்கள்

முறைப்படியே செய்தந்த மூர்த்திசிவப் பொருளருளும்
உறுதியாகப் பெற்றாரம்மா உசிதமாக ஸ்ரீராமர்

எத்தனையோ பிராணிகளை எண்ணிவதை
புரிந்ததினால்
இத்தரையில் தோஷமென்று எண்ணுதற்கு
நியாயமுண்டு

3420. சிவப்பொருளை யாராதித்துச் சிவனருளைப்
பெற்றதினால்
குவலயத்தில் தோஷமென்று கூறுமந்த நியாமமுமே

பறந்துதம்மா பரசிவத்தால் பரிகத்தானாரம்மா
அறிந்ததனை மகிழ்ந்தாரம்மா அனைமிகப்
புகழ்ந்தாரம்மா

அந்தச்சிவப் பிரதிஷ்டைதனை அறிந்திடவே
ஜானகிக்குச்
சிந்தைமகிழ்ந் துரைப்பாரம்மா ஸ்ரீராமரிவ்விதமாய்

அருள் பரனை யாராதித்து அனுக்கிரகத்தை
யடைந்ததன்மேல்
சுருதிச்செய்தால் காரியங்கள் கைகூடுமாலையினால்

அணைகட்டத் தொடங்குமுன்னே அரிவத்தின்
வடகரையில்
ருஷமடைய அருளடையக் கோரிச்சிவப்
பிரதிஷ்டைசெய்தேன்

3425. ஆராதித்தேன் பக்தியோடு ஆண்டவரும்
அருள்செய்தார்
நேராக இஷ்டசித்தி நிறைவேறி மனமகிழ்ந்தோம்

இராமலிங்கக் கடவுளை இராச்சியத்தி லெவரேனும்
நேராரோடும் ஆராதித்தால் நினைத்தகாரியம்
வாய்க்குமே

சேதுஸ்நானம் சிலாபூதனம் செய்பவர்கள்
ஜன்மத்தனிலே
வேதனைகள் ஏதுமின்றி விளங்குவார்கள் இகபரத்தில்

புத்திரபாக்யம் மித்ரபாக்கியம் பூமிபாக்யம்
பொருந்துமிந்த
உத்தமமாம் ஸ்தலத்தனிலே உண்மையாகப்
பக்திசெய்தால்

இராமேசுவரம் என்றுபெயர் இராமனான என்னாலே
ஆமேயிந்த ஸ்தலம்நிலையாய் அகிலமுள்ள
மட்டுமென்றார்

3430. இராமனிட சங்கற்பத்தலால் இராப்பகலும்
இராமேசுவரத்தில்
நேமமுடன் உலகினர்கள் நினைத்துவந்து
புனிதராவார்

இதுநிற்க மறுபடியும் எல்லோரும் விமானமதில்
அதிகமான ஆவலோடு அமர்ந்திருந்தார் அதன்பிறகு

சமுத்திரத்தின் வடகரையிலிருந்து புஷ்பகம் கிளம்பி வருகையில், கிஷ்கிந்தா நகர மாந்தர்களும் வரவேண்டுமென்று சீதை கோரியபடி, அவர்களுஞ் சேர்ந்து வருகையில், சீதைக்கு மார்க்கங்களிலுள்ள விசேஷங்களை இராமர் சொல்லிக்கொண்டு பரத்வாஜ ராசிரமம் வருவதும், அங்கு அமுதுண்ண இருப்பதும் பலங்களுண்டாவதும்

கிளம்பிற்றம்மா விமானமம்மா கிரமமாக ஆகாயத்தில்
மளமளவென் றேயதுதான் வருமுன்னே ஸ்ரீராமர்

ஜானகிக்கு மறுபடியும் சங்கதிகள் தெரியும்படி
தானுரைப்பார் இவ்விதமாய்ச் சம்தோஷப்
படும்படியாய்

முதல்முதலாய் நமதனுமார் மோகங்கொண்டு
லங்கைநகர்
அதிவேகமா யடைவதற்கு அரணவத்தைத் தாண்டுதற்கு

3435. நின்றுகிளம் பியமலைபார் நேராகக் காணுதுபார்
அன்றடங்கிப் படிந்ததிது அதற்குமுந்தி உயரமிது

அந்தவார்த்தை சொன்னதன்மேல் அங்கிருந்து
வருகையிலே
விந்தையாகக் கண்டுதம்மா மேன்மையுள்ள கிஷ்கிந்தை

சுக்கிரீவர் நகரமிது சுந்தரியே பாரென்று
திக்குக்காட்டிச் சொன்னாரம்மா ஸ்ரீராமர்
சீதைகேட்டு

மனமகிழ்ந்து அந்தநகர் மாதர்களும் அயோத்திவர
மனதிலாவ லிருக்குதென்று மாதவரைப்
பார்த்துரைத்தாள்

அந்தவொரு அபிப்பிராயத்தை அறிந்துகொண்டு
சுக்கிரீவர்
வந்திடவே தாரைமுதல் வாழும்பெண்கள் யாவரையும்

3440. அழைத்துவந்தார் அவர்களுடன் அங்கிருந்து
வருகையிலே
அழகான வனங்களையும் அதிசயமாம்
ஸ்தலங்களையும்

நவநவமாய்க் காணுகிற நானாவிதக் காட்சியையும்
அவரவரும் பார்த்துப்பார்த்து ஆனந்தம்
மேற்கொண்டார்

பார்த்தெல்லோரும் போகையிலே பரந்தாமன்
ஞானகிகையப்
பார்ந்துரைப்பான் வழியிலுள்ள பலஸ்தலங்கள்
தம்மையெல்லாம்

சுக்கிரீவர் சக்கியமான சொல்லும்பிரிய மூகமிது
பக்கமாகக் காணுமந்தப் பலமரங்கள் நெருங்கிய ஓர்

சோலையிலே என்னைவந்து கசிருசியாய் வாயுகதர்
கோலம்பிர்ம்ம சாரியாகக் கொண்டுவந்து
கண்டதாமே

3445. சபரியென்னைக் கண்டுமிகச் சற்பக்தி யுடன்கூட
உபசரித்து கனிகள் தந்து உயர்பதவி யடைந்ததிங்கே

கபந்தனைக் கையறுத்துக் கதிதந்த விடமிதுபார்
சுபமடைய மார்க்கஞ்சொல்லிச் சுக்கிரீவரைக்
குறித்தானவன்

அரக்கனாலே சிறகறுத்து அவஸ்தையோடு
ஜடாயுமன்னர்
இருந்தவிடம் இதுவாகும் என்னாலவர் கதியடைந்தார்

அரக்கனுடன் அவர்மிகவே அமர்புரிந்த இடமிதுவே
கருதுயுன்னை யரக்கன்வந்து களவுசெய்த
ஸ்தலமிதுவே

பஞ்சவடித் தீர்மதில் பலமிருகங்கள் கூடிவந்து
சஞ்சரித்துக் கொஞ்சுவதால் சந்துஷ்டி
யடைவாயன்றோ?

3450. மாரீசன் பட்டதிங்கே மகரிஷியாம் அகஸ்தியரின்
நேரான பிரதேசமிது நிலையாயவர் இருக்கும்நல்ல

ஆசிரமம் இதுவேயாம் அநேகம்போர் முனிவரெல்லாம்
வாசஞ்செய்யு மிடமாகிய வனந்தண்டகா ரண்யமிது

குடிரமாக ஓடிவந்து கொடுமைசெய்யத் துணிந்தவனாம்
விராதன்பட்ட விடமிதுவே வேதமுனி அத்திரியின்

ஆசிரமம் இதுவேயாம் அனுசூயை யுணைக்கண்டு
தேவரம்நீங்க அனுக்கிரகித்துத் துணைசெய்த
ஸ்தலமிதுபார்

சித்திரகூட மலையிதுபார் கோமளமாக நாமிதிலே
சித்தமகிழ்ந் திருந்தோமன்றோ சீலமுள்ள பரதனம்மை

3455. அடுத்துவந்து நகர்வரவே அழைத்தவிட மாமிதிலே
கொடுத்தவாக்குப் படியவனும் குறையுடனே
திரும்பிப்போன

விடமிதுவே யமுனைநதி விளங்கிவரும் தீரமிதில்
மடமொன்று காணுதுபார் மகிமையுள்ள பரத்வாஜர்

வசிக்கும்நல்ல ஆசிரமமாம் வனந்தனிலே இவருடைய
உசிதமான மகிமையினால் உண்டாகும் பலகுகங்கள்

குகவடியான் நகரும்பார் குணமுடைய
அயோத்தியைப்பார்
வெகுதூரந் தனிலதுதான் விநோதமாகக் காணுதுபார்

இந்தப்படி சொல்லிக்கொண்டு இறங்கிவந்தார்
முனிவரிட
அந்தமுள்ள ஆசிரமத்தில் அவரைக்கண்டு
வணங்கினார்கள்

3460. குசலப்பிரசனம் இருபுறமும் குணமுடனே வினவியபின்
தீர்த்தண்டன் காரியமும் தானவரை யொமித்தகவும்

ஞானவிழி கொண்டறிந்தேன் ஆனதெல்லாம்
ஜகம்பிழைக்கத்
தானென்று மிகப்புகழ்ந்து தன்னில்மிக
மகிழ்ந்தாரம்மா

ஆதித்தியஞ் செய்வதற்கு ஆவல்மிக இருக்குதென்று
வேதமுனி வேண்டிக்கொண்டார் வெகுவிதமாய்
ஸ்ரீராமரை

இன்றிருந்து விருந்துண்டு எல்லோரும் மறுகாலை
சென்றிடுவீர் அயோத்தியென்று செப்புமுனி
ஆக்ஞைதனைக்

கூடந்துபோக வாகாதென்று கூட்டுப்பாடு ஸ்ரீராமர்
கொடுத்தாக்ஞைப் படிநடப்பேன் குருமொழியாம்
உமதுவாக்கை

3465. அருந்ததந்து அனுக்கிரகிக்க அருள்தவத்தோர்
ஆசைகொண்டு
இருந்திடவே கேட்டபடி எல்லோருடன்
இருந்தான்ராமன்

மகரிஷியை ஸ்ரீராமர் மனமுவந்து பிரார்த்தித்தார்
அகமகிழ்ந்து மகரிஷியே அபீஷ்டமொன்று
சொல்வேன்கேளீர்

எனக்காக வானரர்கள் எத்தனையோ சிரமமடைந்தார்
அனைவர்களும் திருப்திகொள்ள அயோத்திமட்டும்
இங்கிருந்து

பங்குங்கனி வர்க்கங்களும் எதேஷ்டமாகப்
புஷ்பாதிகளும்
மங்களமாய் அமைந்திடவே மகிரிஷியே அனுக்கிரகிக்க

வேண்டுமென்று கேட்டுக்கொண்டார் வேதமுனி
கேட்டதனை
ஆண்டவன்ஸ்ரீ ராமனிட அபீஷ்டப்படி
யனுக்கிரகித்தார்

3470. பலவிதமாம் பழவர்க்கங்கள் பலித்தெங்கும் குலையாய்
அலங்காரமாய் அமைந்ததம்மா அயோத்திமட்டும்
அற்புதமாய்ப்

புஷ்பஜாதி எத்தனையோ புசிக்குமது அமோகமம்மா
அஷ்டதிக்கும் நவநிதிகள் அங்கங்கு நவநவமாய்

அமைந்ததம்மா அந்தவொரு அதிசயத்தை
யறிந்துரைக்க
உமையவளின் பதியாகிய ஒருவராலே யாகுமம்மா

அபீஷ்டப்படி அனுக்கிரகித்த அந்தவொரு
காரணத்தால்
சுபகாரமாய் விபவமாகச் சுட்டிராமன் நினைத்தபடி

கொடுக்குமம்மா சுகப்படவே கோடானுகோடியாக
அடுக்கடுக்கா யெங்குமம்மா அருந்திமனங்
களிக்கயெல்லாம்

3475. வேம்புதனில் மாம்பழங்கள் விளையுமம்மா வெகுவாகச்
சாம்பசிவ னுலகுவன சதிர்சமென்றே நம்புமம்மா

விறகுக்காகும் மரங்களிலும் வெகுருசியாம்
பழங்களுண்டாம்
அருமையாக விளையுமம்மா அருந்துநல்ல
பண்டங்களே

3475. சதிர்சம் - ஒப்பு

சந்தனமாம் மரந்தனிலே சப்பரதாட்சி பலிக்குமம்மா
வந்தையம்மா அந்தவொரு விசேஷங்களை
யென்னசொல்வேன்

எதிரிடையா யுள்ளகுணம் இருக்கும்நல்ல
பலங்களெல்லாம்
உதிக்குமென்றால் அந்தவொரு உண்மைதனை
யுரைக்கவுண்டோ?

வானவர்கள் சுனிகளுண்டு வாசனையாம்
மலர்கள்பூண்டு
ஆனமட்டும் ஆடுவார்கள் ஆனந்தித்துக் கூடுவார்கள்

ஸ்ரீராமர் பரதனுக்கு அனுமாரிடம் வரவைச் சொல்லி யனுப்புவதும், அக்கினிப் பிரவேசச் சமயத்தில், அதைத்தடுத்து, அனுமார் வரவைச் சொல்லிக் கணையாழி கொடுப்பதும், பரதன் முதலானவர்கள் மகிழ்ந்து ஸ்துதிப்பதும், பிறகு குகனிடம் வந்து சுவாமி வரவை மாருதி சொல்ல அவன் சந்தோஷிப்பதும், அப்பால் சுவாமியிடம் அனுமார் வருவதும்

3480. இந்தவித மிருக்கையிலே ஈரேழு வருஷமெல்லாம்
அந்தத்தினத் தோடாயிற்று ஐயன்வருங் கெடுவதுவே

சித்தரையில் சுக்கலபட்சம் சேர்பஞ்சமி தினந்தனிலே
உத்தமன்ஸ்ரீ ராமச்சந்திரன் உசிதமாக
வனம்போனான்

அந்தப்படி பஞ்சமிதான் அருந்தவத்தோ ராசிரமத்தில்
வந்தறின மாருதிவா வருவதெல்லா மாயிற்றம்மா

அந்தத்தினம் வருவேனென்று அளித்தவாக்கும்
தப்புளாயின்
அந்தவொரு காரணத்தால் ஆவியிழந் திடுவோன்தம்பி

அரும்தமாக முடிந்துவிடும் ஆகையினா
லென்னசெய்வோம்
அனுமாரே இந்தவேளை ஆதரிப்பா யென்றுநம்பி

3485. அவரைப்போகச் சொல்வோமென்று அருகழைத்து
உபசரித்து
இவடந்தனில் வந்திருக்கும் இந்தச்சேதி பரதனுக்குப்

போயுரைப்பீர் அவனுடைய புத்திநிலை கண்டறிவீர்
நேயமென்மே லிருக்குமாயின் நீரெனக்கு வந்துரைப்பீர்

குகனுக்குமே வரவைச்சொல்வீர் கூடியசீக் கிரம்வருவீர்
மகிமையுள்ள மாருதியே மன்னிப்பீ ரென்றவுடன்

அடிபணிந்து கிளம்பிவிட்டார் அனுமாரப்போ
ஆகாயத்தின்
தடமதனைக் கொண்டுசெல்ல தானுமொரு
மனிதன்போலத்

தவமுனிவன் ஆசிரமத்தில் தங்கியையன்
இருந்தாரிப்பால்
அவருடைய வரவைக்கோரி அநேகநாளாய்த்
தபசிருக்கும்

3490. தம்பியான பரதாழ்வான் தாகங்கொண்டு
எதிர்பார்த்து
நம்பும்படி தந்தவாக்கு நஷ்டமாகப் போயிற்றென்று

கவலைமிகக் கொண்டானம்மா கண்ணில்தாரை
விட்டானம்மா
அவசரத்தைக் கொண்டானம்மா ஆவிவிடத்
துணிந்தானம்மா

இனியுயிரை வைப்பதிலே ஏதும்பய னில்லையென்று
மனதிலெண்ணித் தன்னுடைய மனதின்படி
நடப்பவனாம்

சத்குருக்களை யழைப்பிவித்துச் சாமியின்னும்
வரவிலையே
உத்தமனென் றென்னையவர் உள்ளமதில் நினையாத

காரணத்தால் வராமலென்னைக் கண்ணில்காண
மனமின்றிக்
காருண்ய மில்லாமல்செய்தார் கள்வமேதும்
நானறியேன்

3495. உயிரைவிடத் துணிந்துவிட்டேன் உத்தமனே
உலகாழ்வாய்
தயவுடனே அன்னான்வந்து தாங்கியுன்னை
யாதரிப்பார்

இந்தவிதம் உரைத்தற்கு இலையவனாம் சத்குருக்கள்
சிந்தைமிக நொந்துகொண்டு செப்புகிறான்
நமஸ்கரித்துச்

சின்னஞ்சிறு பிள்ளையண்ணா செல்வமுட
னிருந்தேனண்ணா
என்னைத்தவி யாக்கிவிட் டதுநினைக்க
வேண்டுமண்ணா

சோதரனும் பின்னோ தரன்போல் சுகந்தரவு
மாம்மாவென்று
மேதினியில் செல்லுலவே மிகவுமும்மைப்
புகழ்ந்துகொண்டு

அண்ணன்மீது உமக்குள்ள அன்புபோல உமைநானும்
எண்ணிமிக நம்பினவன் என்னைப்பர தேசியாக்கி

3500. உயிரைவிட வேண்டாமண்ணா உண்மைதனை
யறிந்துமக்கு
வியஸனமின்றிச் செய்வேனண்ணா வீணாக
முந்தவேண்டாம்

என்றுரைத்த தம்பிதனை யெடுத்துமுத்தங்
கொடுத்தனைத்து
நன்றுசெய்யும் உனைப்பிரிந்து நானிருந்த
நாளுமுண்டோ?

உனதுபரி தாபந்தனை உள்ளபடி யறிந்தெனக்கு
மனதைமிக நோகுதடா மகனேநான் சொல்வதைநீ

கெட்டுன்னில் யோசனைசெய் கிரமமென்றே
நீயெண்ணித்
தாட்டுவது நியாயமென்று தாபரமாய்ச் சொல்வாயே

உனைப்பிரிய னெக்குமிக உள்ளமது வருந்துதடா
மனக்குறையோ டிருப்பதிலே மகிமையுண்டோ
யோசியடா

3505. அண்ணனைநான் இழந்தவனாம் அநியாயஞ்
செய்தவனாம்
மண்ணுலகில் இருப்பதிலே மனமில்லை நமதண்ணன்

3500. வியஸனம் - குற்றம்

வாக்குறுதி வழுவாதவர் வழிகடந்து நடவாதவர்
நாக்குநிலை மிகவுள்ளவர் நற்சேதி தெரியிலையே

ஆபத்து அவர்க்கேதும் அணுவளவும் அணுகாது
தாபப்பட வர்களையும் தத்தளிக்கச் செய்யுஞ்சக்தி

தாராளமா யுண்டவர்க்குத் தரணியிலே அவரையுமே
நேராக யெதிர்ப்பதற்கு நினைக்கவுண்டோ
யில்லையடா

கூடப்போன தம்பிசக்தி கொஞ்சந்தானோ
குவலயத்தில்
வாடிமனம் நோகும்படி வதைத்திடுவான் சூரரையும்

3510. ஞானகிக்கு ஏதிடரோ சத்குணியாம் அவள்நிமித்தம்
ஊனமுண்டா யதற்காக உயிரையுந்தான்
விட்டனரோ?

தேம்பிநின்ற னையழைத்துத் தேறுதல்கள்
மிகவுரைத்தாள்
வீம்புசற்றும் அவரிடத்து விளங்கவுண்டோ
கபடமேதும்

அறியாத தருமப்பிரபு அவருக்குவமை யாருமிலை
குறித்துரைக்கிப் பெருமுடா கூடாது சொல்லுதற்கு

நிலைகெட்ட தம்பியென்று நினைத்தென்மேல்
சலிப்படைந்து
விலகுமனந் துணிந்தனரோ வேறென்ன காரணமோ?

தேசந்தனை யாளுதற்குத் தினையளவும் எனக்குமன
ஆசையுண்டோ அதையவரும் அறியாரோ
என்னசெய்வேன்

தாபம்செய்த பழிதனக்குத் தண்டனையை நானடைய
வாய்த்துநடா வையகத்தில் வாழ்த்தையுந்தா
னிலைத்துநடா

னெதெண்ணப் படியண்ணன் இணங்காமல
நின்றபோதே
னெதுதேக மொழிந்திடாமல் ஏனிருந்தே னிதுவரையில்

தினத்தையொரு யுகமதாகத் தினந்தினமுங்
கழித்துவந்தேன்
மனமகிழக் காட்சிதனை மகாலுபாவர் தருவாரென்று

மதித்திருந்தேன் மனமசந்தேன் மார்க்கமெனக்
கேதுமிலை
விதிவசத்தை வெல்வதுண்டோ விசனத்திற்குக்
கரையுமுண்டோ

அண்ணனைநான் சொல்லுதற்கு அவரிடத்துக்
குறையில்லை
எண்ணிச்சொல்ல என்னிடத்து எல்லாக்குறை
இருக்குதடா

ஆசையினால் நாஞ்சினிமேல் அங்கம்வைத்துப்
பயனில்லை
தேசுந்தனை யொழிப்பதிலே திருப்திமிக உண்டெனக்கு

நீயிருக்கும் துணிவைப்பார்த்தால் நீயென்னை
மீறியுந்தன்
காயமதை யொழிப்பாயென்போல் காணுதடா
தம்பியென்மேல்

பட்சமுனக் கிருக்குமாயின் பரிதபிக்கும் என்மீதில்
கட்சியுனக் கெதுக்கடா கட்டோடு விட்டொழிப்பாய்

கலந்தெந்தன் இஷ்டப்படி காரியத்தைச் செய்திடுவாய்
ருலந்தனை யெல்லம் துடைத்தமாகக் ருவலயத்தில்
வாழ்ந்திடுவாய்

நாயேனை சேதிகேட்டு நளினாட்சன் நாடுவந்து
தாலிந்தத் தரணியெல்லாம் தாங்கியர சாளுவதே

3525. என் றுரைத்து ஆழுந்தம்பிக் கிதம்பலவுஞ்
சொல்லிவிட்டுக்
ருன்றெனத்தீக் குண்டஞ்செய்தான் கோசலைகேட்
டோடிவந்தாள்

வந்தமகன் தனைத்தழுவி வாரிக்கொண்டென்
கண்மணியே
இந்தப்படி செய்வாயாயின் எம்முயிரு மொழியுமடா

உன்முகத்தைக் கண்டுகொண்டு உயிர்பான
மகனைவிட்டு
என்னுயிரை வைத்திருந்தேன் ஏதுசெய்வேன்
நீபோனால்

மூவருமிங் குயிர்விடுவோம் என்றன்னை முறையிடவும்
பாவமிலா மகன்வணங்கிப் பரிதபித்துச்
சொல்லுகிறாள்

பாவியென்றோ யல் உலகிலொரு பாவியுண்டோ
என்தாயே
தேவியோடும் அண்ணன்வசம் நிர்யவிட்டு
உயிர்தரித்தேன்

3530. புண்ணியமே புருஷனாகப் பூமிதனில் வந்தவரும்
அண்ணன்வரக் காத்திருந்தேன் அவராக்ஞைப்
படிநடந்தேன்

சொன்னகெடு முடிந்ததம்மா சோகமிக மீறுதம்மா
என்னசெய்வேன் அண்ணன்செய்தி ஏதோநான்
அறியேனே

வாக்குத்தப்ப நியாயமிலை வரமைக்குமே யேதுவிலை
ஏக்கப்படும் என்மீது இரக்கமிலை அண்ணனுக்கு

என்குணத்தை அறிந்திருந்தும் இப்படியுஞ்
செய்யலாமோ?
கன்மனினை யனுபவிக்கக் காலம்வந்து வாய்த்ததம்மா

தாய்செய்த கொடுமையினால் தயாபரனை
நான்பிரிந்து
நாய்போல அலைகிறேனே நாதனைநான் காணேனே

3535. தாயின்செயல் தனையனையும் தழுவுதற்கு
நியாயமுண்டோ
காயமினி வைப்பதிலே கனங்குறையும் பாபியானேன்

ராமனுக்குத் தூரோகஞ்செய்தேன் ராகுபதிக்குத்
தூரோகஞ்செய்தேன்
பூமனுக்குத் தூரோகஞ்செய்தேன் புண்ணியர்க்குத்
தூரோகஞ்செய்தேன்

தூரோகியிந்தப் பூமிதனில் தலைங்கிநிற்கப்
போகாதம்மா
உரோகமுள்ள தேகமென்ன உறுதியாமோ நாளுமம்மா

அறுதியில்நான் சொன்னபடி ஆவிதனை விடுவதற்கு
ஏதுந்தடை சொல்வதுண்டோ ஏஸுவண்டோ
எனக்ருந்தாலே

இன்றுடலை நான்விடுவேன் என்தாயே ஸமித்தருளும்
என்றுமகவ் வவர்ந்தனக்கினி இகவாழ்வை
விகவெறுத்தான்

3540. கைகைகேட்டுக் கதறிக்கொண்டு கடுகிவந்தாள்
நடுங்கிநின்றாள்
செய்கைகண்டாள் சிம்மம்போல் சீறுமகன்
குறிப்புக்கண்டாள்

மக்கள்நாலு போகளுமேயா மனதாக இருக்கின்ற
அக்கருத்தை யறிந்திருந்தோம் அரட்டுவேலை
தனைச்செய்தோம்

அண்ணன்சுகம் நன்சுகமாய் ஆலோசித்து
அடிமைசெய்ய
எண்ணமுள்ள பதத்துக்கேன் எண்ணிப்பட்டங்
கட்டச்சொல்லோம்

நமதுசெய்கை நமக்குநம னாகவந்து பலித்துதையா
குமரன்பக்கம் போவோமெனில் கூசுதேயென்
மனமிகவும்

தெரியாமல் பிசகுசெய்தோம் தெய்வமன்றித்
துணையில்லை
அரசரே ஆதரிப்பீர் அபயந்தந்து சுபம்பெருக

3545. எண்டிசையும் கொளுத்துமிந்த எரியுமக்கினி
ஜ்வாலைதனைக்
கண்டவுடன் எந்தனாவி காயம்விட்டுப் பறக்குதையோ

ஸ்ரீராமா காத்திடுவாய் ஜெகதீசா காத்தருள்வாய்
குரூபாவேசங் கொண்டமகன் குணமடையக்
கிருபைபுரிவாய்

என்செயலை யெவர்களுமே இதமென்பா ரென்றுரைத்த
உன்வாக்குச் சத்தியமாகில் உயிர்நிலைக்க
மகனைக்காப்பாய்

என்றுகைகை பரிதபித்து எண்ணமெல்லாம்
ராமன்மீது
நின்றுமனம் உருகிவாட நீதியுள்ள சுமந்தரர்முதல்

மந்திரிகளும் மற்றவரும் மாதவனை
யெண்ணியெண்ணிச்
சிந்தைநொந்து பரிதபித்தார் சீலமுள்ள பரதனும்வான்

3550. வளர்த்தசெந்தீக் குண்டமதை வலஞ்செய்து வந்துநின்று
அளறுமந்த அக்கினியை அம்பிமுகமாய் நமஸ்கரித்து

எழுந்துநின்று இருகைகளை எடுத்துக்கூப்பிச்
சிரசில்வைத்து
வழுவற்ற ஸ்ரீராமரை மனதிலெண்ணி வாக்கில்ராம

நாமந்தனைச் சொல்லிக்கொண்டு நற்கதியைத்
தருவாயென்று
சாமளனை வேண்டியவன் சத்பக்தியோ டதிவேகமாய்க்

குண்டத்தில் குதித்திடவே குறிப்பாகக்
கிளம்பிப்பார்த்தான்
கண்டுதும்மா குண்டமொன்று கவியனுமான்
திருவடியிலே

மோசம்வரு மென்றஞ்சி மொழியைவிட்டார்
முன்னுதாகத்
தாசன்தாசன் வந்துவிட்டேன் தயாநிதியும்
வந்துவிட்டார்

3555. முந்தவேண்டாம் அக்கினியில் மூழ்கவேண்டாம்
புலியேயே
வந்துவிட்டார் ஸ்ரீராமர் வைதேகி முதலோருடன்

கணகணவென் றிவ்விதமாய்க் காதில்கேட்க
அமிர்தமொழி
குணமுடனே விளங்கிற்றம்மா குதிக்கப்போகும்
பரதனுடன்

சகலமான போகளுமாய்ச் சற்றுநேரம் மெய்மறந்தார்
சுகமான வாக்கேதென்று சுற்றிப்பார்த்தார்
நாற்புறமும்

சுவைத்தபயிர் தழைப்பதற்குக் காணுமேகக்
கார்சனைபோல்
அவிக்குமனக் களிப்புண்டாகும் அற்புதமாம்
வாக்கேதென்று

மனதிலெண்ணி மகிழ்ந்துநின்றார் மாருதியோ
மறுபடியும்
தனதுவாக்கால் சொல்லுகிறார் தாரணமாய்க்
கேட்கும்படி

3560. ராமரிதோ வந்துவிட்டார் ரகுபதிதான் வந்துவிட்டார்
நாமனிதோ வந்துவிட்டார் நரேந்திரர்தான்
வந்துவிட்டார்

பொறுத்துக்கொள்வீர் முந்தவேண்டாம் பூபதியா
லஞ்சப்பவந்தேன்
விரித்துரைப்பேன் நிந்தமக்கு விவரமக்கினி
தன்னைவிட்டு

என்றுரைத்த சப்தமெல்லாம் எல்லோரும் கேட்டுடனே
என்றுமில்லாத் திருப்திகொண்டார் எல்லோரும்
தென்திசையைப்

பார்க்கையிலே கேசரியில் பருதியைப்போல்
ஒருமனிதன்
தீர்க்கமான பாகுவோடு தேடியோடி வரக்கண்டார்

நில்லும் நில்லும் ஒபரதா நீலமணி வண்ணன்வந்தான்
செல்வமிகுந் தம்பியோடும் சீதையோடும்
ராமன்வந்தான்

3565. அத்தன்வந்தான் சுத்தன்வந்தான் அமலன்வந்தான்
விமலன்வந்தான்
நித்தன்வந்தான் சுத்தன்வந்தான் நிசாசரர்தன்
வைரிவந்தான்

வந்துவிட்டார் காட்சிதர வைகுந்த நாதரென்று
தந்தானே குதித்தனுமான் தம்பிகையில் மோதிரத்தை

வாங்கியதைக் கண்ணிலொற்றி மனமகிழ்ந்து
முத்தமிட்டுத்
தாங்கவச மில்லாமலே தரைதனிலே மெய்மறந்து

வீழ்ந்தானம்மா பரதனப்போ வெகுநேரங்
கழித்தெழுந்து
வாழ்வுதந்த மாருதியை வந்தணைத்துக்
கட்டிக்கொண்டு

மனக்குறையை ஒழித்தாயல்ல மகானுபாவா நீயெனக்குத்
தினகரன்போ லாவையா நினதுமுன்னைப்
பழிப்பேனையா

3570. ஆவிபிட்சை தந்தீரையா அருள்பரமாம் என்தமையன்
பாவியென்னைப் பார்ப்பதற்குப் பரத்வாஜ
ராசிரமத்தில்

வந்திருக்குஞ் சேதிசொன்னீர் வாழ்வெனக்கு நீர் தந்தீர்
அந்தரங்கப் பிரியத்தோடு அங்கிருந்து பறந்துவந்தீர்

அண்ணனைப்போ லும்மையெண்ணி அச்சிப்பே
னென்றுமையா
லெண்ணங்கொண்டேன் ஆவிவிட வென்னைவந்து
ஆதரித்தீர்

மாதாபிதா குருதெய்வமாய் மதித்தும்மை
வணங்குவேனான்
ஆதாரப் பொருளென்று ஆராதிப்பேன் நன்றியுடன்

அண்ணன்வனந் தனிலிருந்து அவஸ்தைப்படும்
நிலைமைதனை
லெண்ணியெண்ணி மனம்வாடினேன் என்னசொல்வேன்
அந்தக்கஷ்டம்

3575. தேசம்வேண்டாம் பொருள்கள்வேண்டாம் தேறியுள்ள
மோட்சம்வேண்டாம்
ஆசையோடு அண்ணனிட அடிபணியும்
பாக்யம்போதும்

அண்ணனரு சாண்டுவந்து அவர்க்கடங்கி நானிருக்க
லெண்ணமிக லிருக்குமென்னை ஈரேழு வருஷமட்டும்

தாயிழந்த கன்றுபோலத் தவிக்கும்படி விட்டுவிட்டுப்
போயிருந்த அண்ணனிட பொற்பாத பூஜைசெய்யக்

காலமது நேருமென்று காதலோடு நானிருந்தேன்
தூலமாகச் சொல்வதென்ன துணைசெய்யும் பரமகுரு

ஆகியஸ்ரீ ராமன்வரும் அந்தவழி தனைப்பார்த்துத்
தாகமுட னிருந்தேனையா தமயன்சொன்ன
கெடுவதுதான்

3580. தப்பினதால் மனம்வெறுத்துத் தரணிதனை
விட்டொழிய
ஒப்பியக்கினிக் குண்டஞ்செய்தேன் ஓடிவந்தீர்
உயிரைக்காக்கப்

பதினாறு யுவதிகளைப் பரிந்துமக்குத் தருவேனையா
அதிசுமான சுந்தரிகள் அவர்களுடன் வாழ்ந்திடுவீர்

பால்சுரக்கும் பசுக்களையா பத்துநூறு தருவேனையா
கால்கை காட்டுக் காப்பிடுவேன் கழுத்தில்கண்டி
சர்ந்தரிப்பேன்

உயர்ந்தவஸ்தர நிகள் தருவேன் ஒருநூறு
செழித்தநல்ல
நயமான கிராமங்களும் நான்தருவேன் சுகப்படுவீர்

பதினாலு வருஷமட்டும் பரிதபித்து வாடிவந்து
உதிக்குஞ்சுக வேளையிலே உயிர்விடவே துணியும்படி

3585. நேரிட்டதை யொழித்தெனக்கு நேராகக் காட்சிதரக்
காருண்யங் கொண்டுசாமி கருதியும்மை
யனுப்பியவோர்

அன்புக்குசுக மிகமகிழ்ந்தேன் அவரைப்பார்க்க
மிகவுமிப்போ
என்னுடைய சுவாசகள் ரண்டும் என்னைமிகத்
தூண்டுதையா

என்தமயன் தம்பிசீதை எல்லோரும் சீக்கிரமாய்
அன்புகொண்டு வந்திடவே அனுமானிக்க
வேண்டுமென்று

ஆராந்த பாஷ்பத்தினால் அபிஷேகஞ் செய்தானம்மா
ஆனந்த மடைந்தாரம்மா அனுமாரும் அப்போது

சகலபாக்யம்வசமிருந்தும் சற்றுமதி லிச்சையின்றிச்
சகங்களெல்லாம் விட்டுவிட்டுத் துறவியைப்போல்
ஜடைதரித்து

3590. மரவுரியை உடையாய்த்தொண்டு மாதவர்மேல்
மனஞ்செல்லுத்தி
இருக்குமிந்தப் பரதனைப்போல் எங்குமில்லை
யுடன்பிறப்பு

பக்தியென்றால் இவனுடைய பக்தியேதான்
நிலையுனது
சக்தியுள்ளோ னாயிருந்தும் சத்துருகுணம்
என்னசொல்வேன்

சாமியிடம் லெட்சுமணன் சத்பக்தி யுள்ளவனாய்
நாமெண்ணினோம் இவனுடைய நடவடிக்கை
களைப்பார்க்கில்

அவனைமீறிப் பக்திமிக அபரிமிதம் உள்ளவனே
இவனைப்போலக் கண்டதில்லை அவன்மிகவும்
மகிமையுள்ளோன்

பிரதாக்ஷிப்படியும் பற்றுதலுள்ளோர்களுண்டோ
ஸ்ரீராமர் தம்பிகட்குச் செப்பவுண்டோ குறையனைவும்

3595. இந்தவிதம் நினைத்தனுமான் எத்தனையோ மகிழ்ந்து
கொண்டு
அந்தவிடந் தனிலிருந்த அனைவரையும்
பார்த்தாரம்மா

சத்துருக்கன் குணமறிந்து சத்துவுடையதேரோடு
உத்தமராம் பரதன் உண்மையான பக்திகொண்டு

இடுப்பில்மர உரிதரித்து இராமராமா என்றவர்கள்
அடுத்தடுத்துச் சொல்லிக்கொண்டு ஆதேதினைவா
யிருப்பதையும்

அறுமாபார்கண்டு ஆனந்தித்து அதன்பிறகு ஸ்ரீராமர்
வனவாசஞ் செய்கையிலே வல்லரக்கன் தசகண்டன்

சூதுசெய்த காரியமும் சுவாமியந்தப் பாதகனை
நீதியுள்ள சுக்கிரீவரை நேசங்கொண்டு போய்ஜயித்து

3600. சபஸடைந்து வருவதெல்லாம் எடுத்துரைத்தார்
விரித்தெல்லோர்க்கும்
விசனப்பட்டார் களிப்படைந்தார் வென்றுவரும்
பெருமையெண்ணி

மாதவனார் மாதாக்கட்கு மாருதிபோய் நமஸ்கரித்து
ஆதரிக்கும் ஸ்ரீராமன் அனுப்பவந்த தூதனென்று

வரவைச்சொன்னார் கேட்டவரும் மகிழ்ந்தாரம்மா
அப்பொழுது
அருந்திப்பலர் வந்துரைத்தார் அரண்யமெங்கும்
கனிகளோடு

புஷ்பங்களோ அபரிமிதம் பூத்திருக்கும் காட்சிதனை
விஸ்தரித்துச் சொல்லுதற்கு வெகுநேரக்கு
வேண்டுமையா

இங்கிருந்து யமுனைவரை பங்குங்கனி
புஷ்பங்களாய்க்
கங்குரை யில்லாமலே காய்த்திருக்கும் அதிசயத்தை

3605. என்னசொல்வோமென்றுவந்து இருக்கும்ஸ்திதி
களையுரைத்தார்
சொன்னஅந்த வாக்கைக்கேட்டுச் சுகமடைந்து
பரதன்சொல்வான்

அண்ணன்வரும் குறியிதுவே அவருக்காகப் பலித்ததிது
எண்ணிலண்ணன் இவ்விதமாய் எத்தனையோ
பாக்யமுண்டாம்

அவருடைய அருளிருந்தால் அநேகவிதச் சுகமுண்டாம்
சிவனருள்போல் அனுக்கிரகிப்பார் செல்வந்தந்து
ஆதரிப்பார்

இந்தவிதம் புகழ்ந்துகொண்டு இஷ்டமான
அனுமானைச்
சிந்தைமகிழ்ந் துபசரித்துச் செப்புகிறார் அப்பனேநீர்

இப்பொழுதே அண்ணனிடம் இங்கிருந்து சென்றவரை
எப்பொழுதும் நம்பியுள்ள என்நிலைமை
சொல்லுமையா

3610. கனவானே யென்றனுமான் கைகள்ரண்டைப்
பிடித்துக்கொண்டு
மனமுவந்து கேட்டுக்கொண்டான் மகிமையுள்ள
பரதனம்மா

மாருதிகேட் டானந்தித்து மறுபடியும் வருவேனென்று
கோரிவாக்குந் தந்துவிட்டுக் குறித்துவிண்ணில்
கிளம்பிவிட்டார்

வருஷம்பதி னாலாகியும் வரவில்லையே ராமனென்று
கருதிக்ருகன் விசனங்கொண்டு கண்தாரை
பெருகவிட்டு

என்னசெய்வோ மென்றுமிக ஏக்கங்கொண்டு
இக்கையிலே
அன்னைதந்தை போலவந்து அவன்கல்லாடத்
துணைத்தூங்குவார்

வந்துவிட்டார் ஸ்ரீராமர் வனவாசம் ஆயிற்றப்பா
பந்தமெல்லாம் ஒழிந்துள்ள பரத்வாஜர் ஆசிரமத்தில்

3615. இன்றிருந்து நாளை வா இருக்கின்றார் இந்தச்சேதி
சென்றனுக்குச் சொல்லும்படி ஸ்ரீராமர்
சொன்னாரென்றார்

மகிழ்ந்தானம்மா எழுந்தானம்மா மகிமையுள்ள
மாருதியைப்
புகழ்ந்தானம்மா புனிதனானேன் பூபதிஸ்ரீ ராமனிட

வரவைக்கேட்டு வாழ்வடைந்தேன் வையகமே
பிழைத்துதையா
தருமசீலன் ஸ்ரீராமன் தரிசனத்தைக் காணுதற்குப்

பிரியமிக இருக்குதென்று பேசுமவன் வாக்கைக்கேட்டு
அரியபக்த னென்றுநம்பி அவனிடத்தில்
விடைபெற்றுப்

பரத்வாஜ ராசிரமத்தைப் பறந்துவந்து
அடைந்தனுமான்
தருமப்பிரபு ஸ்ரீராமரைத் தண்டனிட்டு எழுந்துநின்று

பரதனைக் கண்டுவந்த வரலாறுகளை
ஸ்ரீராமனிடம் அனுமார் சொல்லுவதும்,
பரத்வாஜராசிரமத்தில் எல்லோரும்
விருந்துண்பதும், மறுநாள் அனுமார் முந்தியும்
பிறகு புஷ்பகத்தில் எல்லோரும் அயோத்தியை
யுத்தேசித்து வருவதும் அனுமார் வந்தமேல் நகரை
யலங்கரிக்கப் பரதன் கட்டளையிட்டதும்

3620. பார்த்தாரம்மா ஸ்ரீராமரைப் பரத்வாஜர்
செய்யுமொரு
நோத்தியான விருந்துண்ணும் நேரமம்மா அப்பொழுது

பரமபக்தர் பரதனைநான் பார்த்தேனையா
அவரைப்போலத்
தருமசீலர் உலகுதனில் தங்கியுள்ளோர் நானறியேன்

அந்தரங்க நிலைமைதனை அறிந்தேனையா
உண்மையாகச்
சிந்தனையிலே யப்பொழுதும் ஸ்ரீராம த்யானமையா

கையும்வாக்கும் மனதைப்பற்றிக் கர்த்தனந்தன்
ஸ்ரீராமன்
தெய்வமெனக் கென்றுசொல்லித் திருவடியை
வணங்குகிறார்

கண்டதில்லை யென்னசொல்வேன் கண்ணில்தாரை
பெருகிடவே
குண்டுஞ்செய்து அக்கினியில் குதித்திடவே
இருந்தாரையா

3625. தடுத்தமது வரவுரைத்தேன் தாங்காத
மகிழ்ச்சிகொண்டு
உடனேயவர் மெய்மறந்தார் உள்ளந்தெளிந்
தெழுந்துநின்றார்

வன்னைமிகப் புகழ்ந்தாரையா வள்ளியெனவே
மகிழ்ந்தாரையா
அன்னைதந்தை குருதெய்வம் ஆண்டவரே நீரென்று

நம்பிக்கொண்டே யெந்நேரமும் நாநெருப்பேபோ
வருவாரென்று
தம்பிலட்சுமணர்நீதம் தாகங்கொண்டே போகின்றார்

அன்னைசீதை தானெங்கே அன்னையென்று
சொல்லுகின்றார்
வன்னவரே யுமதருளை யாகிலுரைப்பீரென்
வன்னசொல்லையன்

நாளுமுன்மை மறவாமலே நாடிநாடி மனமுருகி
ஆளிருக்கும் நிலைமைகண்டால் ஆர்க்குநம்பரி
நாபறைண்டாம்

3630. தேசாதி பொருள் உன்மீது தேட்டமில்லை
நேசட்டமில்லை
ஆசாரியரா யும்மையெண்ணி ஆபாதிக்க ஆசையையா

பாதசேவை செய்வதற்கே பரதருக்குப் பிரியமையா
நீதிநெறி யென்னசொல்வேன் நேமமுந்தா
னென்னசொல்வேன்

உயிரைவிட உமதுமீது உண்மையான பக்தியுள்ளோர்
தயவுமிகப் பெருகியுள்ளோர் தருமபுத்தி மிகவுள்ளோர்

உமதுபாதப் பூஜைசெய்யும் ஒருவாழ்வே போதுமென்று
தமதுமன உறுதிகொண்டு தாகமுடன் பறக்கின்றார்

ஒருநொடியும் அவரைவிட்டு ஒதுங்கமனம் வந்திடுமோ
வருவதிலே பிரிவதற்கு மனமில்லை எனக்கறிவும்

3635. காயம்மனம் வாக்குதனைக் கண்டவுடன் நீரென்றே
மாயமெனைத் தழுவிற்றையா மதிகொண்டு
தோர்ந்தேனையா

அபிஷேக முடிசூட ஆயத்தஞ் செய்கின்றார்
உபசாரம் மிகவுஞ்சொன்னார் ஊரழகு
செய்யச்சொன்னார்

தேவியுடன் நீரிருக்கும் திசைநோக்கிப் பலதடவை
நாவில்சீதா ராமாவென்று நமஸ்கரித்தார் பக்தியோடு

லட்சமணரை எண்ணியெண்ணி லட்சந்தரம்
அனுக்கிரகித்தார்
பட்சமவர் மேலவர்க்குப் படிந்திருப்ப
தென்சொல்வேன்

சுக்கிரீவர் முதலாகச் சூழ்ந்தமற்ற போர்களுக்குத்
தக்கவுப சாரஞ்சொன்னார் தன்னைநிக
ரொந்தகொண்டார்

3640. மனமுருகித் தேகமெல்லாம் மயங்கிவாடி யிருப்பதோடு
தினமுமும்ம ஸ்மரனையென்று தெரிந்தேனையா
நிச்சயமாய்

இந்தநிதம் அனுமாரிசொல்ல வம்பெருமான்
கண்களிலே
வந்ததம்மா கலங்கலமாய்க் கண்ணீர்தான்
வருத்தமதால்

மாருதியின் வாக்கைக்கேட்ட மகிமையுள்ள பரதனிட
நோனை சீலத்திற்கும் நெஞ்சுக்குறை யொழிந்ததற்கும்

அருமையான தவமிருந்து அங்கமெல்லாம்
இளைக்கும்படி
இருந்ததற்கும் ஜானகியும் இளையவானும் கஷ்டகதம்

அடைந்தாயம்மா அவர்களிட அன்பையும்நா
னென்னசொல்வேன்
உடுதியாகப் பயலாமாகச் சாமிதனைக்
கேட்டுக்கொண்டார்

3645. பரதனிட நிலைமையெல்லாம் பரந்தாமன்
மனம்வருந்திக்
கருணையப்பால் மாருதியைக் கனப்படுத்தி யுபசரித்துத்

தம்முடனே விருந்துண்ணத் தயைசெய்வீ
ரென்றுரைத்துச்
செம்மையாக அபிமானித்தார் ஸ்ரீராமர் பக்கமதில்

மாருதியு மிருந்துகொண்டு மனமகிழ விருந்துண்டார்
கோரியெல்லோர் களுமுண்டு குதூகலத்தை
மிகவடைந்தார்

முனிவர்செய்த விருந்தெனை மொழிவதென்றால்
வாக்குமுண்டோ?
நினைத்தாலதை யுண்டவர்கள் நீட்டுவார்கள்
நாக்கைமுழம்

தேவலோகந் தனிலிருக்கும் தேவர்களும் முனிவிருந்தை
ஆவலோடு அருந்துதற்கு அவேட்சைகொள்வார்
அதிசயமே

3650. மறுகாலை யெழுந்ததன்மேல் மாருதியை
அயோத்திசென்று
அறிவித்து அங்கிருக்க அனுப்பிவிட்டுப் புஷ்பகத்தில்

சகலருமா யிருந்துகொண்டு சந்தோஷமாய்க்
கூடிக்கொண்டு
மகரிஷியின் அனுக்கிரகத்தை மிகவும்பெற்று
மகிமையாக

வருகின்றார் அயோத்திநோக்கி வாயுசுதர்
அயோத்திவந்தார்
கருதிநகர் அலங்கரிக்கக் கட்டளையைப்
பரதன்செய்தான்

அயோத்தியை யலங்கரித்துச் சகலருடன் பரதன் எதிர்கொண்டுவந்து ஸ்ரீராமரை வணங்குவதும், பிறகு ஸ்ரீராமன் எல்லோருடன் நந்திக்கிராமம் வந்து புஷ்பகத்தைக் குபேரனிட மனுப்பி ரதாதிகள் மீது அயோத்திநகர் வந்து பவனி வருவதும் பிறகு, சுகுமாய் ராஜக்கிரகம் வந்து சேருவதும் சுபாதிகள் நடப்பதும்

அந்தவித மாகவேதான் அயோத்திநகர் எங்குந்தானே
விந்தையாக அலங்கரிப்பார் இந்திரலோகம்
போலம்மா

நகரமெல்லாம் தோரணங்கள் நவநவமாய்க்
கட்டிவைத்தார்
வெகுவாகக் கோடிகள்கட்டி வீதியெங்கும்
அலங்கரித்தார்

3655. மண்டபங்கள் கோபுரங்கள் மற்றுமுள்ள கட்டடங்கள்
அண்டுமிடம் எங்குமேதான் அலங்கரித்தார்
நலம்பெருக

அரியுலகேர அரனுலகேர் அயோத்தியென்று
ஆருமென்ன
அற்புதமாய்ச் செய்துவைத்தார் அலங்காரம்
என்னசொல்ல

இராஜகிரகம் அலங்கரித்தார் இராப்பகலும்
ஜனங்களெல்லாம்
ஆசைகொண்டு வந்துபார்ப்பார் அணியணியாய்
நின்றுகொண்டு

வரும்வழியெ யச் செப்பனிட்டு வகைவகையா
யலங்கரித்தார்
வருபவரை யழைத்துவர வாகனங்கள்
அனுப்பித்தந்தார்

பட்டணத்தி லுள்ளவரும் பக்கமதில் வசிப்பவரும்
அட்டியின்றி மறுகாலை அழைத்துவர ஸ்ரீராமனை

3660. வந்திடவே விளம்பரங்கள் வாத்யத்தோடு
அறியச்செய்தார்
சந்துவிடி யுடனெல்லோரும் சாமிதனைப்
பார்த்திடவே

மறுகாலை உஷக்காலத்தில் மகோச்சவமென்
றனைவர்களும்
குறித்துஸ்நா னாதிகள்செய்து கோதண்ட பாணிதனை

எதிர்கொண்டு அழைத்துவர வல்லோரும் ரதகஜாதி
அதிசமான விமரிசையாய் அயோத்திதனி
லிருந்துதானே

நந்திக்கிராமம் வந்துசேர்ந்தார் நாடெங்கும்
மிகமகிழ்ந்தார்
வந்திடும்ஸ்ரீ ராமனிட வரவையெண்ணி
மிகப்புகழ்ந்தார்

அன்னையர்க ளெல்லோரும்வந்தார் அமாத்தியரும்
அழகாய்வந்தார்
பல்லுமுள்ள அதிகாரிகள் எல்லோரும் கூடிவந்தார்

3665. துரும்புகளும் சேனைகளும் தோரணையாய் வந்துதம்மா
அருமையான ரதங்களோடு அநேகரும் ரதமதுதான்

என்னசொல்வேன் அதனழகை எத்தனையோ
சுகங்களோடு
மன்னவர்க்கென் றமைத்தது மாணிக்கங்க ளிழைத்தது

தானங்களோடு சேனைகளும் சேர்ந்தமற்ற சகலமுமே
கனமுடனே நந்திக்கிராமம் மனமகிழ வந்ததன்மேல்

குலகுருவாம் வசிஷ்டர்வந்தார் கோரிப்பல
முனிவர்வந்தார்
அலங்காரமா யெல்லோரும்வந்தார் அந்தக்காட்சி
என்னசொல்வேன்

பஞ்சபஞ்ச உயக்காலத்தில் பரதன்ஸ்நானா
திகள்செய்து
நெஞ்சுமிகக் குளிர்ந்தவனாய் நிர்மலனா
யிருந்தானம்மா

3670. அன்னையர்க்கும் வசிஷ்டருக்கும் அடிப்பணிந்து
பரதனப்பால்
மன்னவரான் ஸ்ரீராமரை மனமுவந்து அழைத்துவர

எதிர்கொண்டு வருகின்றான் இதுநிற்க விமானமது
அதித்வரையாய்க் கங்கைக்கரை அடைந்ததம்மா
அங்கெல்லோரும்

இறங்கிக்கங்கை தனில்ஸ்நானம் எல்லோருஞ்
செய்தாரம்மா
பரமபக்தன் குகன்வந்து பரந்தாமனை வணங்கிநின்று

கண்ணில்தாரை கொண்டுநின்றான் கர்த்தன்தேகம்
இளைத்திருக்க
கண்ணில்கண்ட காரணத்தால் கர்த்தனந்தக்
கருத்தறிந்து

கலங்கவேண்டாம் எனக்கினிமேல் கஷ்டமெல்லாம்
ஒழிந்ததினால்
நலம்பெறவே நான்வந்தேன் நகரடைவேன்
சுகம்பெறுவேன்

3675. உனதாளுகை சீராகவே உள்ளதோடு உன்இனத்தார்
அனைவர்களும் சுகமாவென்று ஐயன்கேட்டான்
குகனதற்கு

அகமகிழ விடையுரைத்தான் அவனும்வரப்
பிரார்த்தித்தான்
சுகமாக வருவாயென்று சுவாமிசொன்னார்
அவனுக்குள்ள

பரிவாரங்களுடனேவந்தான் பரிசுத்த விமானமது
வருகுதம்மா அங்கிருந்து வடதிசையை
நோக்கிக்கொண்டு

ஆடவரும் மாதர்களும் அணியணியா யலங்கரித்துத்
தேடும்நம்மை யாளும்ராமன் திருவடியைத் தரிசித்திட

வாருமென்றே பரஸ்பரமும் வருந்தியவர்
அழைத்துக்கொண்டு
கோவிலரும் பெருமைதனைக் குறித்துரைக்கப்
போகாதம்மா

3680. எதிர்பார்த்து வருகையிலே இராமரின்னும்
வரவிலையே
அதற்கென்ன சாபமோ அதையுரையும் அனுமாரே

ஐயதிருணம் என்னிடத்துச் சற்றுங்காட்ட லாகாதையா
வேதனையில் அழுந்தினவன் சோதனைநீர்
செய்யவேண்டாம்

பறக்குதையா ஸ்ரீராமனைப் பார்த்திடவே
மனமிகவும்
அறியச்சொல்லுங் காரணமென் றனுமாரைக்
கேட்டானம்மா

பொய்யுரைக்கும் புத்தியனுவும் பொருந்தாதையா
என்னிடத்து
மெய்யுரைத்தேன் ஸ்ரீராமர் மின்னொளிக்குள்
வந்திடுவார்

ஐயன்மனப் படிமுனிவர் அனுக்கிரகித்த படிவழியில்
மெய்யாகவே சுனிவர்க்கங்கள் மிகவுமுண்டு
அவைகளெல்லாம்

3685. புசித்துக்கொண்டு வானரர்கள் பூமிதனில்
நடந்தவர்கள்
பசிதீர்த்து வருகிறார்கள் பாரும்அவர் வருவதினால்

காணுதிதோ புழுதியையா கர்த்தனுமே வந்துவிட்டார்
காணுதெந்தன் கண்ணுக்கையா சனமான புஷ்பகமே

வானுலகின் விமானமது வருகின்ற காட்சிபாரீர்
ஞானக்ரு விளங்கலையோ இதோபாரு
மென்றுரைத்தார்

பரமன்வரும் கோலங்கண்டு பரதன்மிகப் பரவசமாய்
உரியகுணந் தனைமறப்பான் உன்மத்தன்
போலிருப்பான்

இருகரமும் சிரங்குவிப்பான் எழுந்தெழுந்து
நமஸ்கரிப்பான்
அருமையண்ணா வென்றழைப்பான் அகமகிழ்ந்தே
னென்றுரைப்பான்

3690. தன்னிலைமை தானறியான் தயங்கிப்பித்தன்
போல்நடிப்பான்
மன்னவனென் அண்ணன்வந்தான் மகலட்சுமி
கூடவென்பான்

கரைபுரளும் கடலெனவே கண்களிரண் டிலும்நீர்தான்
திரைதிரையா யொழுகிவிழத் தேடிவரும் தாய்ப்பசுவை

நாடிவரும் கன்றுபோல நாதன்ரகு வீரனிடம்
ஓடிவரும் பரதன்முன்னே நேடிடுதம் வந்துநம்மா

நிலம்படிய விமானமது நின்றதம்மா அப்பொழுது
கலங்கலமாய்க் கண்ணீர்பெருகக் கர்த்தன்முன்னே
பரதன்நின்றான்

இருகரத்தால் பரதன்றனை யெம்பெருமா
னெடுத்தணைத்து
அருமைத்தம்பி யென்றழைத்து அவனுச்சி
முகந்துபார்த்து

3695. ஆனந்த பாஷ்பமது அபரிமித மாய்ப்பெருக
ஏனப்பா மெலிந்துபோனாய் என்னசெய்வேன்
உன்னுடைய

மேனிதனைப் பார்க்கையிலே மிகவுமனம் உருகுதடா
கானகத்தில் நானிருந்த காரணத்தால் இளைத்தாயே

நிமிஷமுமே உன்நினைவு நீங்காம லிருந்ததடா
சமபுத்தி யுள்ளவனே சர்வகுண பூஷணனே

இந்நினைதம் ராமன்சொல்ல ஏங்கியேங்கி
யழுதுகொண்டு
அந்தராமச் சந்நிதனை அடிபணிந்து நின்றுகொண்டு

பாவியேன்னைப் பார்த்திடவே பறந்துவந்த
தயாநிதியே
ஆவிதனை வைத்திருந்தேன் அண்ணாவும்ம
பாதசேவை

3700. பண்ணியேநான் புனிதனாகிப் பரமசுகம்
அடைந்திடவே
எண்ணியிது வரையிலுமே என்னிடத்தில் ஒப்புவித்து

நேசமாளும் பொறுப்பதனைத் திருவடியில்
ஒப்புவிப்பேன்
ஆசையோடு அப்பொறுப்பை அங்கீகாரஞ்
செய்வீரென்று

அநேகவிதம் உபசரித்து ஆலுகையை வகித்துவந்த
சிநேகமுள்ள ராமனிட சீரான பாதுகைகள்

இரண்டையும் சிறுசில்கொண்டு எண்ணிக்கண்ணில்
ஒற்றிக்கொண்டு
தருமசீலன் தமயன்பாதம் தண்டனிட்டுத் தந்தானம்மா

சாமியந்தப் பாதுகையைச் சரஸமாக
வகித்துக்கொண்டு
காபங்கொண்டு அனுக்கிரகித்தார் களிப்படைந்து
பரதனப்பால்

3705. மதியுள்ள லட்சுமணனை மனமுவந்து வந்துகட்டி
இதுவரையி லுனைப்பிரிய வழுந்தெனக்கு இருந்ததடா

கண்மணியே உன்னுடைய காரியங்கள் நானறிந்தேன்
அண்ணல் பணி செய்துகொண்டு அவரருளை
மிகவும்பெற்றாய்

புனிதனானாய் உன்னை ஜகம் புகழ்ந்திடுமே
மகிழ்ந்திடுமே
கனமுடைய உன்னைக்கண்டு கண்ணிரண்டும்
குளிர்ந்ததிப்போ

என்றுரைத்து அணுக்கிரகித்தான் இலட்சுமணன்
பரதன்றனைக்
கன்றுபோலக் கதறிக்கொண்டு கட்டிவெகு நேரமட்டும்

கன்னலீரைச் சொரிந்தானம்மா கருணையுள்ள
ஜானகியை
என்னையப்பால் பரதன்வந்து இருகாலும்
தொழுதானம்மா

3710. சுக்கிரீவரும் விபீஷணரும் சுவாமியுடன் பேசியவர்
பக்கமதில் இருக்கக்கண்டு பரதன்வந்து அவர்களுக்கு

மரியாதை மிகவுஞ்செய்தான் மனமுவந்து
உபசரித்தான்
அருமைத்தம்பி சத்துருக்கன் ஆவலோடு ஓடிவந்து

ஸ்ரீராமன் பாதங்களில் சிரசைவைத்து
நமஸ்கரித்தான்
பிரேமையுடன் ஸ்ரீராமர் பிறப்பேயென்று ஆவலோடு

அவனைக்கட்டி முத்தமிட்டு அறிவுடைய சத்துருக்கனே
எவருமிலை யுனக்குநிகர் என் தமிழக் கொஞ்சினரே

சத்துருக்கன் அடுத்பிறகு சகோதரனாம் லட்சுமணனை
அத்தியந்தம் மோகமுடன் அடுத்துவந்து
பணிந்தானம்மா

3715. தம்பிதனை லட்சுமணன் தழுவிக்கட்டி யபிமானித்துத்
தம்பியையுங் கண்டுமிகத் தளர்குளிர்ந்தே
வென்றுலவுந்தான்

அதன்பிறகு சத்துருக்கன் ஆசையோடு ஜானகியின்
பதமலரைப் பணிந்தானம்மா பார்த்தவளும்
அனுக்கிரகித்தான்

அன்னையரை ஸ்ரீராமன் அடிபணிந்து உபசரித்துத்
தன்னுடைய குலகுருவாம் தவமுனிவர் வசிஷ்டரையும்

வணங்கிடவே அவர்மிகவும் மனமகிழ்ந்து
அனுக்கிரகித்தார்
குணமுடைய மந்திரிகள் கூடிவந்த மற்றவர்கள்

அனைவரையும் அபிமானித்து அவரவர்க்கு
முறைப்படியே
மனஸ்கரித்து ஸ்ரீராமன் மரியாதை செய்தானம்மா

3720. அதன்பிறகு புஷ்பகத்தில் அனைவரையும்
ஏற்றிக்கொண்டு
சுதினமதில் நந்திக்கிராமம் சுட்டிவந்து சேர்ந்தாரம்மா

விபீஷணர் அனுமதியும் விதிதமாகப் பெற்றுக்கொண்டு
குபேரனிடம் போகும்படி கொடுத்தாராக்ஞை
ஸ்ரீராமர்

அந்தப்படி விமானமது அங்கிருந்து குபேரனிடம்
வந்துசேர அவன்பார்த்து மாதவனை மிகப்புகழ்ந்தான்

அதன்பிறகு நந்திக்கிராமம் அரசாட்சி ஸ்தலமுதலாய்
மதியுடைய பரதனிட வாசஸ்தலங் களைப்பார்த்தார்

அரசருக்கு உரியதல்ல அழகான ரதந்தனிலே
திருமகளோர் ஸ்ரீராமன் தன்மனைவி சீதையோடு

3725. ஏறிக்கொண்டார் மற்றவரும் இருக்கும்பல ரதாதிகளில்
கோபியவர் ஏறிக்கொண்டார் கூட்டங்களும்
பாட்டங்களும்

தருப்புகளும் சிறப்புகளும் தெரிவிக்கும் வண்ணமாய்
வாத்தியங்களும்
சரியாக வேதகோஷமும் சந்தனாதி வாசனைகள்

எங்கும்வீசப் பரிமளிக்க எல்லோரும் அங்கிருந்து
மங்களமாய் வந்துசேர்ந்தார் பொங்கும்பாக்கிய
முள்ளதான

பூர்வீகமாம் அயோத்திநகர் பூசமெனும் நட்சத்திரம்
பூர்ணமாக அமைந்துள்ள போநம்மா சுபம்பெருக

நகருக்குள்ளே போனவுடன் நானாவித அதிர்வேட்டு
வெகுவாகத் தீர்த்தாரம்மா வேடிக்கையாயிருந்ததம்மா

3730. பவனிவந்தார் வீதிதோறும் பரிசுத்தமாய்ப்
பெண்களெல்லாம்
அவரவர்கள் வீட்டின்முன்னே அலங்காரமாய்
வந்துநின்று

ஆரத்திகள் எடுத்தாரம்மா அவர்கள்தட்டில்
நவரத்னங்கள்
பூரணமாய்க் கொட்டுவார்கள் புளகாங்கித மாகும்படி

ஸ்ரீராமர் வெகுசிறப்பாய்ச் செல்வமிகும் ராஜகிரகம்
பிரேமையுள்ள சீதையோடும் பிராதாக்கள் மூவரோடும்

சுகமாக வந்துசேர்ந்தார் சுபோத்தியராம் வேதியரும்
மகிமையுள்ள முனிவர்களும் மகதாசீர் வாதஞ்செய்தார்

தேவாலயங் களெல்லாம் செம்மையாக அபிஷேகாதி
நாவாலெல்லோர் ஸ்துதிக்கும்படி நயந்துசெய்தார்
விபவமாகச்

3735. சகலகாதி யாருக்குமே ஷட்ரசத்தோ டன்மிட்டார்
வெகுவிதமாய் உடைகள்தந்தார் வேதியர்க்குப்
பூரிதந்தார்

மங்களமாய் அநேகவிதம் மாதர்களை
அழைத்துத்தந்தார்
கங்குகரை இல்லயம்மா கைதாபாளம் என்சொல்வேன்

இராமன்வந்த பெருமையினால் இராப்பகலும்
அயோத்திநகர்
சாமளனை யெண்ணியெண்ணிச் சந்தோஷிப்பார்
சகலருமே

3735. ஷட்ரசம் – அறுசுவை

கனவான் முதலியவர்கள் ஸ்ரீராமரை
வந்துபார்ப்பதும், அரசுமுடி சூட்டிக்கொள்ளப்
பரதன் கோருவதும், அவ்வாறு சபையில்
நிச்சயித்து வசிஷ்டரும் பரதனும் வந்துரைக்க ராம
னொப்புவதும், சுமித்தரை, கௌசலை, சத்துருக்கன்
வந்து காண்பதும், ஸ்ரீராமர் கைகேயியைப் போய்க்
காண்பதும் அவள் விசனப்படுவதும் அவளை
ஸ்ரீராமன் தேற்றுவதும்

எத்தனையோ கனவான்களும் எத்தனையோ
மகத்துக்களும்
உத்தமனாம் ஸ்ரீராமனை உசிதமாக வந்துபார்ப்பார்

பக்தியோடு பரிசத்தன் பரதன்வந்து ஸ்ரீராமன்
முக்திதரும் பாதங்களை முறையாக நமஸ்கரித்துச்

3740. சிரத்தில்வைப்பான் உரத்தில்வைப்பான்
சித்தங்கொண்டு முத்தங்கொள்வான்
இருகலிலும் ஒற்றிக்கொள்வான் எழுந்தெழுந்து
நமஸ்காரிப்பான்

அண்ணா ஸ்ரீ ராகுபாதா அரசுமுடி தரித்துக்கொள்வீர்
என்னியும்ம பாதசேவை எப்போதும் நான்செய்வேன்

தேன்பொழியும் உம்முடைய திருவடியை நான்காண்டு
நானொழித்தேன் வினைகளெல்லாம் நாளுமென்னை
யாதரிப்பீர்

அனுமதித்து அருள்செய்வீர் அண்ணாவென்
றவன்கோர
மனமகிழ்ந்து ராமன்சொல்வான் மகனேயுன்
மனநிந்தேன்

குலகுருவாம் வசிஷ்டரோடும் குணமுடைய மந்திரிகள்
பலவிதமாய் வசிக்குமிந்தப் பட்டணத்தி லுள்ளவர்கள்

3745. கூடியுள்ள சபைதனிலே குறித்துந்தன் கருத்துரைத்து
நாடியவர் சொல்வதையும்நன்றாகத் தெரிந்துகொண்டு

வந்துரைத்தா லுந்தனிட வழியையுநான் அனுசரித்துச்
சந்துஷ்டி யுண்டாமென்று சாமிசொன்னார்
பரதனப்பால்

அந்தப்படி சபைகூட்டி ஆலோசிக்கும் வேளையிலே
சிந்தைமகிழந் தெல்லோரும் ஸ்ரீராமன் அரசனாக

இருக்கவேண்டு மென்றுரைத்தார் இதைக்கேட்டு
வசிஷ்டரான
பரமகுரு மிகமகிழ்ந்து பரதனோடு சேர்ந்துவந்து

ஆண்டவனைக் கண்டடந்த அபிப்பிராயந்
தனையுரைத்தார்
தாண்டப்போமோ குருமொழியைச் சம்மதித்தார்
அவ்விதமாய்க்

3750. குலகுருவா யுள்ளவெந்தன் குணமுடைய தவமுனியே
நலங்கருதி மதியுரைத்து நாளுமெந்தன் வம்சந்தனை

ஆதரிக்கும் உம்முடைய அனுக்கிரகமே யிருக்கையிலே
வேதசாஸ்திர விதிப்படிநான் மேதினியைப் பரிபாலிக்க

அஞ்சுதற்கு நியாயமில்லை ஆக்ஞைப்படி நானடப்பேன்
வஞ்சகத்தை நெஞ்சறியா மாதாவாம் கைகையம்மாள்

அடிபணிந்து அவருடைய அனுக்கிரகத்தைப்
பெற்றுவந்து
நடந்துகொள்வே னிஷ்டப்படி நான்பிசகே
னென்றுரைத்துப்

பரதன்றனைப் பார்த்துரைப்பார் பரிசுத்த
தம்பியேயுன்
தருமபுத்தி தனையறிந்தேன் தரணியிலே நீயரிதே

3755. அழகுபெறும் உன்முகத்தை ஆசையோடு வந்துகண்டு
ஒழித்தேனடா மனக்குறையை உள்ளமிப்போ
குளிர்ந்ததடா

அகமொழிப்போ ருன்னைப்போலச் சொல்வதற்கே
யில்லையடா
அகமெலிந்து னெக்காக வாசையெல்லாம்
விட்டொழிந்து

மனவுறுதி கொண்டிருந்து மறுவினையைத்
தாங்கிக்கொண்டு
இனங்களோடுஞ் சேராமல் இருந்தாயே கண்மணியே

உன தாமனப் படிநடந்து உனக்குந்திருப்தி தருவதற்கே
மனமுவந்து வந்தேனடா மனக்குறையை இனிவிடுவாய்

உன்மனது போலவேதான் உத்தமியாம் கைகையம்மா
பின்மீது அன்புகொண்டு இருக்கின்றார் அவருடைய

3760. அனுக்கிரகத்தைப் பெற்றுவந்து அப்பனேயுன்
னிஷ்டப்படி
இனிநடப்பேன் தப்பமாட்டேன் என்றுரைத்தான்
ஸ்ரீராமன்

அந்தவேளை சுமித்திரையும் அன்னையான
கௌசலையும்
வந்துவிட்டார் அவர்களுக்கு வந்தனத்தைச்
செய்தான்ராமன்

அருமைமகன் தனைமடியில் அன்னையர்கள்
வைத்துக்கொண்டு
கருமவினை யாலுன்னைக் கண்ணில்காணா
திருந்தோமப்பா

அரைநொடியை அநேகயுக மாகவெண்ணி
இதுவரையில்
பரிதபித்தோம் மகனெயுன்னைப் பாராத
குறையைக்கொண்டு

அங்கமெல்லாம் இளைக்கக்கண்டு ஆவிமிக
வருந்துதப்பா
எங்கள்விதி வசத்தாலுனக் கிந்தக்கஷ்டம் வந்துதப்பா

3765. அரண்யத்தி லிருந்தலைந்து அவஸ்தைப்பட்டு நீவாட
அருமைமகன் உன்னைவிட்டு அகம்நொந்து
நாங்கள்வாட

நேர்ந்ததப்பா போதும்போதும் நெஞ்சுக்குறை
என்னசொல்வோம்
ஆர்சகிப்பார் உன்னைவிட்டு அரைநொடியு
மிருப்பதுண்டோ?

இந்தவிதஞ் சொன்னஉன்னை இருவரையும்
பார்த்துராமன்
சிந்தைமகிழ்ந் திடஅன்பாய்ச் செப்பிமனந்
தனைத்தேற்றினான்

மாமிமாரை வணங்கச்சீதை மகிழ்ந்தவரும் அன்புடனே
பூமகளே கண்மணியே புண்ணியமே வருகவென்று

சீதைதனை அணைத்துக்கொண்டு சீர்கெடுக்க
அரக்கன்மிக
வேதனையைத் தந்ததந்தன் விதிவசமோ
வென்றுரைத்து

3770. மிகவுந்தானே விசனப்பட்டு மின்கொடியை
அனுக்கிரகித்தார்
மகிமையுள்ள சீதையப்போ மாமிகளை உபரித்தாள்

சத்துருக்கன் ராமனிடம் சந்தோஷமாய் வரக்கண்டு
முத்தமிட்டு அணைத்துக்கட்டி மோகமுடன்
பேசுகிறார்

திடமுடனே நேசமெல்லாம் திட்டமாகக் கட்டியாண்ட
அடகுழந்த சத்துருக்களே அறிந்தேனடா
உனதுசக்தி

தீரனேயென் பிராணனேயுன் திறமைக்காக
மிகமகிழ்ந்தேன்
பூரணமா யுனக்கென்றும் போகபாக்யம் வளருமப்பா

இந்தவிதம் ராமர் சொல்ல இரைந்தழப்பா சத்துருக்கன்
அந்தவார்த்தை களைக்கேட்டு அவனுரைப்பா
லிவ்விதமாய்

3775. அண்ணனிட ஆக்ஞைப்படி அரசாட்சி நடத்துதண்ணா
எண்ணியேநான் செய்வதற்கு எனக்கேதும்
தெரியாதண்ணா

அண்ணன்சொல்லும் முறைப்படியே அடியேனான்
நடந்தேனண்ணா
மண்ணுலகில் யாவர்களும் மகிழ்ந்ததையாய்
நடந்ததெல்லாம்

ஸ்ரீராமர் வந்திடுவார் சீலங்கெட நடப்போமானால்
பிரேமையப்பால் கொள்ளுமாட்டார் பிரகாக
முடியுமென்றே

ஆகையினால் நடந்ததெல்லாம் அண்ணாவுமக்
காகவென்றான்
மோகங்கொண்டு தம்பிசொன்ன மொழியைக்கேட்டு
ஆனந்தித்தார்

சத்துருக்கன் மறுபடியும் சாமியிடம் சொல்லுகிறான்
சுத்தமியாம் கைகையம்மாள் உள்ளம்நொந்து
வாடுகிறாள்

3780. உம்மையெண்ணி எந்நேரமும் உருகிமனம் நோவதன்றி
செம்மையாக உண்டறியாள் சீராக இருந்தறியாள்

நினறும்றன்று வேளைசென்று திருப்திகொள்ள
எதுசெய்தாலும்
மனதிலும்மை நினைத்துக்கொண்டு வாக்கிலும்ம
நாமமொன்றே

சொல்லிக்கொண்டு என்மகனாம் சுவாமியெப்போ
வருவானென்று
அல்லும்பகல் அவளுள்ள அருந்தவத்தை
யென்னசொல்வேன்

அவன்மனது குளிரச்செய்ய ஆகாது உம்மையன்றி
எவராலு மென்றுரைத்தான் இராமனதைக்
கேட்டுடனே

கைகையம்மாள் தனைப்பார்க்கக் கர்த்தன்ஸ்ரீ
ராமச்சந்திரன்
கைகையம்மா ளிடம்வந்து கால்தொழுதான்
கருணையோடு

3785. கண்டுமிக ஆவலோடு கட்டிமுத்தங் கொடுத்தனைத்து
அண்டமெல்லாம் ஆளுமெந்தன் அருமையான
மகனேயென்று

மடிதனிலே வைத்துக்கொண்டு மனமுருகிக்
கண்ணீர்சொரிந்து
துடித்துமிக வருத்தப்பட்டுச் சொல்லுகிறாள்
வல்லவனே

பாவியென்னைப் பார்ப்பதற்குப் பரிந்துவந்த
என்மகனே
ஆவல்மிக இருக்குதப்பா அதைக்காட்ட லச்சையப்பா

எத்தனையோ அன்புடனே எனக்குப்பணி
செய்துன்மேல்
சுத்தமாகப் பட்சமின்றிச் சொன்னேனே வனம்போக

உற்றபடி உன்னிடத்து உள்ளமெல்லாம் வைத்திருந்தும்
சற்றுந்தய வில்லாமல் சண்டாளி துரத்தினேனே

3790. மகனைவிட நீயெனக்கு மனச்சுகத்தை மிகத்தந்து
அசுமகிழச் செய்தவனே அந்யாயஞ் செய்தேனே

வனத்துக்குன்னைப் போகச்சொல்லி வாய்திறந்து
உரைத்தென்தன்
மனத்துணிவை நினைக்கையிலே மனமிகவுங்
கொதிக்குதடா

தருமமில்லாக் காரியஞ்செய்தேன் தனையனையும்
தான்பகைத்தேன்
அருமைமகன் உனக்குத்தீங்கு அகந்துணிந்தே
நான்செய்தேன்

எந்தவேளை எதுவேண்டினும் ஈவத்துஞ் சலிப்பின்றித்
தந்துதவி செய்தென்னைத் தாங்கிவந்த கணவர்மிகத்

தருமஞ்சொல்லத் தடுத்தாரப்பா தயங்கிமிக
வெறுத்தாரப்பா
பரமகுரு அவர்வாக்கைப் பாதகிநான்
வெறுத்தேனப்பா

3795. அரசுமுறை தனில்பெண்கள் ஆசைகொண்டு பேசுவது
தருமமல்ல என்றுள்ள தத்துவத்தை மறந்தேனப்பா

மகனளவில் மட்டுமேதான் மனையவளுக்கதிகாரம்
நினைப்பதுண்டோ அதைமீறி நிலமாளும்
ஆதந்தரத்தைப்

புருஷன்றனை மீறும்பெண்கள் புத்தியுள்ளோ
ராகுவரென்னும்
அருந்தமதை அறியாமல் அசட்டுத்தனம்
செய்தேனப்பா

பெண்களுக்கு வரங்கொடுத்தால் பிரியமவர்
கொள்ளத்தகும்
மண்ணுலகி லுள்ளதென்று மனவாதி சாஸ்திரங்கள்

சொல்லுமுறை தனைத்தழுவிச் சுகமளிக்க
வேண்டுமல்லாமல்
வல்லைதனை மீரியவர் ஏன்தந்தார் இஷ்டப்படி

3800. உன்முகத்தைப் பார்த்திருந்தால் ஒருகுறையு
மிலையெனக்கு
நன்மைசெய்யும் மகனன்னை நாளுந்தானே
பிரிவதுண்டோ?

சாதகியாம் எனையாரும் கண்டதுண்டஞ்
செய்திடலாம்
நீதிகெட்டு நானுரைத்தேன் நினைவுகெட்டுப்
பழிசுமந்தேன்

பெற்றமகன் தனைநம்பிப் பெருமையெனக்
கில்லையென்று
உற்றபடி அறிந்துன்னை உண்மையான
மகனாயெண்ணிப்

பெருமையெல்லாம் நீதருவாய் பிரேமையுடன்
ஆதரிப்பாய்
தருமமுறைப் படிநடப்பாய் தாயேநா னென்றிருப்பாய்

ஒருகுறையும் அமையாமல் உள்ளபடி ஆதரித்துச்
கருதியெல்லாம் செய்தெனக்குத் கதிதருவோன்
நீயேதான்

3805. பேதையெண்ணங் கொண்டேனப்பா பிரிந்துபோகச்
செய்தேனப்பா
சூதுமிகச் செய்தேனப்பா சுயபுத்தி மறந்தேனப்பா

போகவுன்னைச் சொல்லிவிட்டுப் புலம்பியப்பால்
மிகவருந்தித்
தாகங்கொண்டு நீவரவே தடம்பார்த்து
இருந்தேனப்பா

ஒருநொடியோர் யுகமதுபோல் உன்வரவை
நாடிக்கொண்டு
அரியதவஞ் செய்பவர்போல் ஆசைகொண்
டிருந்தேனப்பா

பெற்றவளைவிட என்மேல் பிரேமைவைத்த உத்தமனே
குற்றஞ்செய்தேன் மிகவுனக்குக் கொடுமைசெய்தேன்
பாதகிநான்

முறைதப்பி நடந்தேனப்பா மோசமிகப் போனேனப்பா
அறியாமல் செய்தேனப்பா அசட்டுமுண்டை
கெடுத்தாளப்பா

3810. போதனையைக் கேட்டுமிகப் புத்திகெட்டுப்
போனேனப்பா
ஆதரவா யுள்ள உன்மேல் அன்பின்றிச் செய்தேனப்பா

புருஷனையுங் கொன்றேனப்பா புவிபழிக்க
நடந்தேனப்பா
கருமவிதி என்னையிந்தக் கலகஞ்செய்யத்
தூண்டிற்றப்பா

வருங்கேடறி யாமல்செய்தேன் [illegible]
நெஞ்சகொண்டேன்
கருமமெல்லாம் நான்துறந்தேன் தலைகொழுத்து
வழிகடந்தேன்

கணவன்மனப் படிநடவாக் கற்பழிந்த பாவியானேன்
குணந்தப்பித் தும்பமெல்லாம் குலையும்படி
நானடந்தேன்

என்னைநானே கெடுத்துக்கொண்டேன்
எல்லோர்க்குஞ் சோகந்தந்தேன்
மன்னவராம் பிராணநாதர் மனந்துடிக்கப்
பார்த்திருந்தேன்

3815. என்பிழைகளேகமுண்டு எடுத்துரைக்கில்
பெருகுமப்பா
நன்மைசெய்யா மாபரவி நற்கதிதான
னெனக்குமுண்டோ?

என்செயலா லெனக்குக்கதி ஏதுமிலை நிச்சயமே
உன்னருளால் கிடைத்திடுமே உளமகிழ நற்கதியே

இகபரத்தில் கதியளித்து என்னைக்காக்க
வேண்டுமப்பா
அகமிதனே நொந்தேனப்பா ஆதரிக்க வேண்டுமென்று

வெருவிதமாய் முறையிட்டு வேண்டுந்தாயின்
கண்துடைத்து
அகம்வருந்த வேண்டாமம்மா அடியேனா
னிருக்கையிலே

ஏதுமக்குக் குறையுண்டோ இகழ்வோருமை
எவருமுண்டோ?
வேதனையேன் வேண்டாமம்மா வெருகுகங்கள்
அடைவீரம்மா

3820. உமதுமனங் கலங்குமாயின் உலகிலெனக் கின்பமிலை
சமுசியமே வேண்டாமம்மா சத்தியமாய்ச்
சொல்லுகிறேன்

விதிப்படியே மதியுதிக்கும் வெல்வாருண்டோ
ஈசன்செயல்
சதிநினைவே தமக்குமுண்டோ சங்கற்பப் படிநடக்கும்

ஜகம்பிழைக்கச் செய்தீரம்மா செய்கையெல்லாம்
நன்மையம்மா
மகிமையுண்டாம் அதினாலம்மா மனக்குறையே
வேண்டாமம்மா

புகழுடைய வனத்திற்கென்னைப் போகச்சொன்ன
தாகுமம்மா
சுகமுடைய மறவுலகும் சொன்னவாக்காம் உமதுபாக்கில்

சுட்டாளையின் படிநடந்து கானகத்தை விட்டுவந்தேன்
இட்டப்படி நடப்பேனம்மா எனக்காருரை
செய்யுமம்மா

3825. அதன்படியே நடந்தனது அனுக்கிரகத்தைப்
பெறுவதற்கே
இதமென்னி வந்தேனென்று இராமச்சந்திரன்
சொன்னானம்மா

கேட்டுக்கைகை களிப்படைந்து கேசவனைப்
பார்த்துரைப்பாள்
நாட்டுக்குநீ அரசனாகி நன்றாக வாழ்ந்திடுவாய்

உனதுதந்தை பட்டங்கொண்டு உலகைநீ ஆளுவதை
எனதுகண்ணால் காணுதற்கு எனக்குண்டு ஆவல்மிக

ஆகையினால் அரசுமுறை ஆதிமனு சாஸ்திரப்படி
பாகமுடன் நீநடத்திப் பாரதனைப் பரிபாலிப்பாய்

நம்பிதனை ஆதரிப்பாய் தரணியெங்கும் புகழடைவாய்
நம்பியுன்னை இருக்குமென்னை நாளுங்காப்பாய்
கோளறியேன்

3830. மனுகுலமுனன் நீயாவாய் உனக்குமக்கள் மூவராவார்
அனைவருக்கும் நீயேதான் ஆதாரமென்றுரைத்து

இந்தவிதம் அறிவுரைத்தார் இதமாகக்
கைகையம்மாள்
சிந்தைமகிழ்ந் தவளடியை ஸ்ரீராமன் பணிந்ததன்மேல்

அரண்மனைக்கு வந்துசேர்ந்தான் அனுஜனும்போய்க்
கைகையிடம்
பிரியமுடன் அனுக்கிரகத்தைப் பெற்றுவந்தான்
அதன்பிறகு

ஜானகியாள் கைகைதனைச் சரஸமுடன் வந்துகாணத்
தேனொழுகும் மொழியுடைய திருமகளே கண்மணியே

என்னுடைய செய்கையினால் எல்லோருங்
கஷ்டப்பட்டீர்
உன்னுடைய மகிமையெல்லாம் உலகெங்கும்
அறிந்ததம்மா

3835. என்னைப்போலப் பாவியெங்கும் இல்லையென்று
தன்னைநொந்து
சொன்னவாக்கைச் சீதைகேட்டுச் சுகமான
வாக்குரைத்தாள்

அந்தவாக்கைக் கைகைகேட்டு அகமகிழ்ந்து
அனுக்கிரகித்தாள்
வந்துசேர்ந்தாள் அரண்மனைக்கு வைதேகி அதன்பிறகு

மக்கள்வந்து கண்டவொரு மகிழ்ச்சியினால்
கைகையம்மாள்
நிக்கிரகித்தாள் மனக்குறையை நேராகச்
சுகித்திருந்தாள்

பரமார்த்தம் அறிந்தவர்கள் பரமசாது
கைகையென்பார்
மருமமறி யாதவர்கள் மனம்போன படியுரைப்பார்

தேவரொடு தசரதரும் திருப்திகொண்டு லங்கைவந்து
ஆவலோடு மக்கள் தம்மை அனுக்கிரகித்த சமயந்தனில்

3840. கைகையின்மே லன்புகொண்டு கர்த்தன்ராமன்
இவ்டப்படி
செய்தவொரு அனுக்கிரகத்தின் சேதிகேட்டும்
அவள் மகிழ்ந்தாள்

ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேக முகூர்த்தம் நிச்சயித்து லக்னபத்திரிகை அனுப்புவதும் அநேக அரசர் முதலானவர்கள் வருவதும் அவர்களை உபசரித்து விடுதிகள் தருவதும் சிம்மாசன அலங்காரமும் படை முதலியவர்களிட கோலமும் நிலைமையும்

தெருவுதனில் ஜனங்களெல்லாம் திரள்திரளாய்க்
கூடிக்கொண்டு
பிரியமாக ஸ்ரீராமன் பெருமையெல்லாம் பேசுவார்கள்

நகரிலுள்ள பேர்களெல்லாம் நாதன்வந்தான்
ராமனன்று
சுகமகிழ்வார் மனங்குளிர்வார் ஆனந்தமாய்
அவராடுவார்

விதம்விதமாய் வாத்தியங்களும் வெடிகோவங்களும்
அதிகமாய் விளங்கிற்றம்மா அயோத்திநக
ரெங்குமம்மா

ஸ்ரீராமச் சந்திரனுக்குச் சீராக அபிஷேக
ஸ்ரேகள்ள முடிசூடச் சேர்ந்தெல்லா முனிவர்களும்

3845. ஆராய்ந்து பார்த்துவைத்தார் அனுகூல லக்னமம்மா
நேராக உள்ளதம்மா நிர்மலமா யமைந்துதம்மா

நிச்சயித்த தினமதிலே நிறைவேற்றும் முகூர்த்தத்திற்கு
இச்சகத்தி லுள்ளோரெல்லாம் இணங்கிவந்து
சேருதற்கு

எழுதிவிட்டார் ஓலையம்மா எல்லோரும் வந்தாரம்மா
செழித்துள்ள தேசமன்னர் சீருடனே வந்தாரம்மா

செப்புவேனான் அவரையெல்லாம் தெரிந்திடவே
இதனடியில்
இப்புவியின் அரசர்களைத் தப்பின்றி ஒப்பும்படி

மாளவரும் மராடர்களும் மகதர்களும் சுகதர்களும்
சாளுவரும் சீனர்களும் சகமர்களும் சிங்களரும்

3850. அங்கர்களும் வங்கர்களும் அருணமரும் அவந்தியரும்
தெங்கணரும் துளுவர்களும் திராவிடரும் நிஷதர்களும்

கன்னடரும் காசுமீரம் காந்தாரம் காம்போஜம்
பின்னடையாக் கேகயரும் பேர்மிருந்த சேரளரும்

சேரரோடு சோழர்களும் சிந்துவரும் பாண்டியரும்
வீரமிரு வங்காளர் விதர்ப்பர் மச்சர் கோசலரும்

குருகுஇரா டங்குலிந்தம் கூர்ஜரங் தனங்குடகம்
சுருசுஷ்ண டர்ஷ்டரம் கலிங்கரோடு புலிந்தர்களும்

பப்பரரும் துப்புமிகு டாஞ்சாலர் பல்லவரும்
செப்பமிகக் கொங்கணரும் சீர்கொல்லர் ஜோனகரும்

3855. நேபாளம் யுகாந்தரம்சீர் நெடுஞ்சூ சேனங்குரு
பூபாலர் ஒட்டியரும் போடர்களும் பலவகையர்களும்

லாடர்களும் சௌவீரம் நளினமுள்ள தலையினர்
தேடியிவர் முதலாகத் தேசமன்னர் திரண்டுவந்தார்

வந்தமன்னர் தமக்குரிய மரியாதைப் படிக்கவரை
முந்தியழைத் துபசரித்து முறைமுறையாய்
விடுதிவிட்டார்

ஸ்ரீராமர் மருடாபி ஷேகமகோச் சவங்கான
நேராகச் சகலருமே நெருங்கிவந்து நிறைந்தாரம்மா

ஜனகராஜர் பத்னியோடு ஜகதீச னிடம்வரவே
கனஞ்செய்து அவர்களுக்குக் கால்தொழுதார்
அப்பொழுது

3860. துஷ்டர்களை நிக்கிரகிக்கத் தோன்றிவந்த மாதவனே
அஷ்டதிக்கும் புகழ்ந்திடவே அரக்கர் பயம் ஒழித்தவனே

ஆரறிவார் உன்மகிமை அகிலமெல்லாம் ஆதரிக்க
வீரமுள்ள தீரனேநீ வீற்றிருக்கும் சிம்மாசன

கோலமதைக் காணமிகத் தோரியுள்ள ஆசையது
காலமதைத் தேடிவந்து கலந்ததின்று களிப்படைந்தேன்

இந்தவிதம் உரைத்ததன்மேல் இலட்சுமியாம்
ஜானகியை
வந்துபார்த்தார் ஜனகாம்மா வணங்கிச்சீதை
முன்னேநின்றாள்

உலகையெல்லாம் பெற்றவளே ஒருகுறையும்
உனக்கில்லை
நலம்பெறவே மூவுலகும் நடத்துதம்மா வென்றுரைத்து

அனுக்கிரகித்தார் அதன்பிறகு அன்னைதனைக்
காணுதற்கு
மனமுவந்து வந்தாளம்மா மகலட்சுமி சீதாதேவி

ஜானகிதன் தாய்மடியில் தடபுடலா யோடிவந்து.
தேனொழுகுங் குரலோடு தேம்பிக்கொண்டு
வீழ்ந்திடவே

அன்னையவள் அணைத்துக்கட்டி அழவேண்டாம்
கண்மணியே
என்னசொல்வேன் எதுசொல்வேன் ஈசுவரனும்
இரக்கமின்றி

என்மகளை வருந்தச்செய்ய எதுசெய்தேன்
தீவினைநான்
கன்மனதோ கடவுளுக்கு காரியாகாரியந்
தெரியாதோ?

சுத்தமுள்ள என்மகளாம் உத்தமியை உலகிலொரு
பித்தங்கெட்ட பாவிவந்து பரிந்தெடுக்கத்
துணிவதற்கு

அத்தனைதான் கொழுப்புண்டோ சுத்தன்சக்தி
அறியானோ
எத்தனையோ வித்தைசெய்தான் சுத்திச்சித்தம்
நொந்தொழிந்தான்

புருஷர்காப்பு ஒருநொடியும் பொருந்தாமல்
இருக்கும்பெண்கள்
உருகுமனம் நோகிடுமே ஏதோமனம் அறியாமல்

மான்பிடிக்க ஆசைகொண்டு மனந்துணிந்தாய்
நாதன்சொல்ல
என்தம்பி தானும்போக வகுதேச மாகச்சொன்னாய்

தப்பிதம்உன் மீதிருக்கத் தன்றனையே நினையாமல்
இப்படியும் மனம்வருந்தில் என்னலாபம் விடுஇடு

இந்தவிதம் தாயுரைக்க இதுநல்ல புத்தியென்று
சிந்தையிலே எண்ணிமகள் சித்தந்தெளிந் தன்னையடி

3875. பணிந்தன்னை அனுக்கிரகத்தைப் பாங்காகப்
பெற்றுக்கொண்டு
நானமுடனே இருந்தானம்மா கோதண்ட
பாணிக்கப்பால்

மகுடஞ்சூடும் உச்சவத்தை மகிமையுடன் நடத்துதற்கு
வெகுவிதமாய் எத்தனித்தார் விலையுயர்ந்த
பொருள்களெல்லாம்

வந்ததம்மா அதுவுமன்றி வாலிதம்பி சுக்கிரீவரும்
சொந்தமுள்ள விபீஷணரும் சொல்லிவிட்டு
அழைப்பிவித்த

நவரத்னங்கள் மாணிக்கங்கள் சிவனுலகின் ரத்தங்கள்
குவலயத்தில் மேருவிலே கூடிவரும் பொன்வகைகள்

பின்னுமுள்ள வஸ்துக்களும் பிரபலமாக வந்ததம்மா
மன்னவர்கள் எத்தனையோ மலைமலையாய்க்
கொண்டுவந்தார்

3880. சகலவித வஸ்துக்களும் சரியாக வந்ததம்மா
வெகுவாகக் கூடிற்றம்மா விஸ்தரித்துச்
சொல்லப்போமோ?

நகரையல்லாம் மறுபடியும் நன்றாக அலங்கரித்தார்
நிகரதற்கு எங்குமில்லை நேர்த்திவெகு நேர்த்தியம்மா

நடனசாலை நாட்யசாலை படனசாலை பாகசாலை
சுடிமலர்ப்பூஞ் சோலைசாலை காட்சியுள்ள
அநேகசாலை

அமைத்துவைத்தார் அரசமுடி அளிப்பதற்கு
அமைந்தள்ள
விமரிசையாம் மண்டபத்தை வெருவிதமாய்
அலங்கரித்தார்

மாணிக்கங்கள் நவரத்னங்கள் மாத்துள்ள
சுவர்ணங்கள்
ஆணிமுத்து பவழங்கள் அற்புதமாம் வஸ்துக்கள்

3885. இவைகளினால் சீராகவே எத்தனையோ
அலங்காரமாய்
நவநவமாம் விநோதமாக நாடிவெகு
சிறப்பாய்ச்செய்தார்

முடிசூடும் அந்தவொரு மோகனந்தரும் மண்டபந்தான்
படிந்திருக்கும் அழகைக்கண்டு பண்ணிப்பண்ணிப்
புகழ்வாரம்மா

மின்னொளிபோல் எங்குந்தானே விளங்குமம்மா
மண்டபமே
என்னசொல்வேன் அதுபோல இல்லையம்மா
இந்திரசபை

ஓகஞ்சோதி போலவேதான் சிம்மாசனந்
தனையமைத்தார்
வெகுகுடரென் றெவருஞ்சொல்வார் விந்தையிலும்
விந்தையது

எங்கும்பரதனம் எங்கும்வெள்ளி எங்குமாத்து
மிகுந்துள்ள
நங்கமய மாகிநகர் தகதகவென் றேஜ்வலிக்கும்

3890. குறித்தபடி கோலம்பூண்டு குதிரைகள் ஏறிக்கொண்டு
அதிவுடனே அலங்காரமாய் அணியணியா
யிருந்துகொண்டு

கந்திகையிற் பிடித்துக்கொண்டு கண்டவர்கள்
அதிசயிக்க
எத்தனையோ ஒழுங்காக இருந்தார்கள் துருப்புப்படை

சூலாளும் படைகளுமே காணும்நல்ல கோலத்தோடு
நாலுபுறம் கிரமமாக நாடிநிற்பார் கூடியம்மா

ஆயுதங்கள் பிடித்தவர்கள் அதிகாரி ஆக்ஞைப்படி
சாயங்காலை இருவேளை சரியாகக் கடமைசெய்வார்

வேதியரும் மற்றவரும் விதிவிலக்கின் படியவர்கள்
சாதிமுறைப் படிகோலம் சரியாகக் கொண்டுவந்து

3895. அவரவர்க்கு உரியதாக அமைத்துள்ள ஸ்தலங்களிலே
சவரணையா இருப்பாரவர் சத்பக்தி என்சொல்வேன்

அரசுமுறை அதிகாரிகள் அவர்களோடு சேர்ந்தவர்கள்
இருக்குமொரு தர்ப்பமதை என்னசெய்வேன்
சொல்லுமிலை

சுக்கிரீவரும் விபீஷணரும் சூழ்ந்தவரை வந்தவரைத்
தக்கபடி கோலத்தோடு தருந்தநல்ல ஸ்தலங்களிலே

அணியணியாய் வைத்திருக்கும் அழகையும்நான்
என்சொல்வேன்
இணைபிரியா தவ்விருவர் இருப்பதும்நா
னென்சொல்வேன்

நடிக்கவந்த பெண்களிட நாகரீகந் தனைப்பார்த்துப்
படிப்பவர்கள் கூடிக்கூடிப் பரமானந்தங்
கொண்டெவரும்

3900. அஷ்டதிக்குப் பாலர்வந்தார் அரிதான தேவர்வந்தார்
இஷ்டமித்திரா ளெல்லோரும்வந்தார் இருக்குமற்ற
சேர்கள்வந்தார்

முனிவர்களே சிவியரோடு மோகங்கொண்டு
முந்திவந்தார்
அனைவருக்கும் விடுதிகள்தான் அகமகிழச்
சுகமாய்த்தந்தார்

அஷ்டபாக்யம் நிறைந்துள்ள அயோத்தியிலே
வந்தவர்க்கு
இஷ்டப்படி இன்பமுள்ள வல்லாந்தந்து
உபசரித்தார்

ஸ்ரீராமருக்கு மகுடாபிஷேக மகோச்சவரமும்
கிரீடா தாரணமும் அந்த உச்சவத்தின் விமரிசையும்
அஷ்டதிக்குப் பாலகாள் முதலியவர்களுக்குப்
பகுமானம் நடந்ததும், யாவரும் மிகுத்
திர்ப்தியடைந்து புகழ்ந்ததும் தேவர்களும்
அரசர்களும் விடைபெற்றுச் சென்றதும்
வானரருக்கும் அரக்கருக்கும் பகுமானமும்

முடிசூடும் தினமதிலே முறையாக ஓடிவரும்
பாடிந்துள்ள பாபம்போக்கும் பலநதிகள் தீர்த்தங்களும்

நாற்திசைகள் சூழ்ந்துள்ள நாற்கடல்கள் தீர்த்தங்களும்
காற்றதுபோல் பறந்தனும்மல் கடல்களிலே
கொண்டுவந்தார்

3905. எங்களுமே நிறைந்திருக்கும் சபைதனிலே சபகரமாய்
அகமகிழ்ந்து ராமனுக்கு அபிஷேகஞ் செய்யவெண்ணிச

சீதையொடு ஸ்ரீராமனைச் சீருடனே மனையில்வைத்து
வேதவிதிப் படியவர்க்கு வெருமங்களம் பெருகும்படி

அபிஷேகஞ் செய்தாரம்மா அருந்தவத்தோர்
வசிஷ்டர்முதல்
சபையிலுள்ள சந்துக்களும் சார்ந்தியுள்ள மற்றவரும்

மந்திரிகளும் மகந்துக்களும் மரியாதைப் படிமுறையாய்
அந்தமகா உச்சவத்தில் ஆனந்தம் பொங்கிற்றம்மா

அபிஷேக வேளையிலே அனைவர்களும் மனமகிழ்ந்து
சுபம்பெருக ராமனுக்குச் செகன்னாத்கள் ஸ்துதிமிகவே

3910. அதன்பிறகு எழுந்துவந்து ஆசனைப் படிநடந்து
விதிப்படியே தரிக்கவுள்ள விலைமதிப்புக் கெட்டாத

பளபளென்றே ஒளிவீசும் பட்டாடை களைத்தரித்துக்
கிளிகொஞ்சும் அவர்களுக்குக் கேசாதி பாதமட்டும்

விதம்விதமா யுள்ளபல விலையுயர்ந்த நகைகளெல்லாம்
இதமுடனே எடுத்தெடுத்து இன்பமுடன்
அணிந்தார்கள்

வாசிக்கின்ற மலர்களினால் வகைவகையாய்
அலங்கரித்து
ஆசையோடு ஐயனுக்கும் அம்மனுக்கும் நெற்றியிலே

முறைப்படியே திலகாதிகள் மோகங்கொள்ள
அலங்காரமாய்த்
தரித்தார்கள் முகக்களைதான் தகதகவென்
றிருந்ததம்மா

3915. ஸ்ரேசுள்ள அற்புதமாய் சிங்காரச் சிம்மாசனத்தில்
ஸ்ரீராமன் சீதையொடு சீராக வீற்றிருந்தான்

நவ கிரகங்கள் அந்தவொரு நாளதனை
எதிர் பார்த்துத்
தவஞ்செய்து வந்தாரம்மா தங்கள் வினை
யொழிப்பதற்கு

ஸ்ரீராமன் முடிசூடிச் சீமையெல்லாம் சுகம்பெறவே
பிரேமையுடன் ஆண்டுவரும் பெருமைதனைப்
பார்ப்பதற்குக்

கிரகங்களெல்லாம் ஆலோசித்துக் கிரமமான
நிலைதனிலே
இருந்தவைகள் வந்ததம்மா என்னசொல்வேன் கிரக
ஒழுங்கைப்

பெண்ணுலகு மாதர்களும் புத்திதனில் லச்சைகொள்ள
அன்னநடை மாதர்களே அநேகர்வந்து சூழ்ந்தாரம்மா

3920. சந்திரனைச் சூழ்ந்திருக்கும் சகஸ்ரகோடி
உடுக்கணம்போல்
விந்தையாக விளங்கியொளி வீசிச்சீதை விளங்கினமேல்

இராஜாதி ராஜனான ரகுபதியைச் சூழ்ந்துகொண்டு
இராஜரெல்லாம் இருந்ததுவோ ரவியைச்சூழ்ந்த
கிரகங்களொக்கும்

சிந்திரகூடை சத்துருக்கன் சீருடனே பிடித்துநிற்கச்
சத்தமுள்ள வெண்சாமரங்கள் சுக்கிரீவரும்
விபீஷணரும்

வீசிக்கொண்டே நிற்கஅவர் வினயமுள்ள லட்சுமணன்
ஆசையொடு அருகிருந்து அழகியவோர்
விசிறிகொண்டு

உபசரித்து அவனிற்க உளமகிழ்ந்து பரதனப்போ
சுபசுபமாம் காரியங்கள் சுறுசுறுப்பாய்ச்
செய்தானம்மா

3925. சுமலமலர் பாதங்களை சுனஅனுமான் தாங்கிநின்றார்
அமலன்ஸ்ரீ ராமனப்போ ஆனந்தங் கொண்டிருந்தான்

சுமந்தபரப்போ வச்சரிக்கை சொல்லிக்கொண்டே
யுலாவிவந்தார்
நமஸ்கரிக்கும் வேந்தரெல்லாம் நாதன்சுட்சி
பார்த்திருந்தார்

ஜயவீர பராக்குரு ஜயராமா பராக்கெனவே
நயவீர சுட்டியத்தோர் நாடிச்சொன்னார் சுட்டியங்கள்

பூசுரரும் ஈசுரரும் பூதகண நாதர்பிரமன்
ஆசையொடு வாசவனும் அஷ்டதிக்குப் பாலகரும்

கிவ்னரர்கிம் புருஷர்சித்தர் கிரமமாக வித்தியாதரரும்
இன்னமுள்ள தேவமுனி கல்லோரும் நிறைந்திருந்தார்

3930. மன்னர்மன்னர் மகுடர்பட்ட வர்த்தனர்கள் மந்திரிகள்
பின்னிவந்து நிறையத்தெய்வப் பெண்கள்ரம்பை
ஊர்வசிகள்

தேனகைவிரித் தாடுமயில் போல்நடனம்
துலங்கச்செய்ய
வானகையுடன் லட்சுமிக்கொப்பாம் மங்கையர்கள்
கூடிநின்று

பட்டாபிராமனுக்கும் பனிபெண்டு நாமனுக்கும்
பட்டெழுத்து சூபனுக்கும் ஏசனுக்கும் ஜயமங்களம

இந்துமுக சுந்தரிக்கும் ஈரேழுவகைப் பெற்றவர்க்கும்
சந்தியமில்லா சுந்தரிக்கும் அமலைக்குஞ் சயமங்களம

பத்தர்கள் தம் சகாயனுக்கும் பவழச்செங் வாயனுக்கும்
மூத்தர்க்ஷ்ணத் தேவனுக்கும் முதல்வனுக்கும் மங்களமே

3935. சதுர்மறைசொல் னகவரிக்கும் சர்வபரி பூரணிக்கும்
பதமருளுங் காரணிக்கும் பைங்கிளிக்கும் மங்களமே

தானவர்தம் காலனுக்கும் தரணியுண்ட சீலனுக்கும்
ஜானகிதன் லோலனுக்கும் சத்தியனுக்குஞ் சயமங்களம்

கமலமலர் மாமுகிக்கும் கல்யாண ஜானகிக்கும்
அமலன்மகிழ் தேன்மொழிக்கும் அன்னைக்குஞ்
சயமங்களம்

புன்னிய சொரூபனுக்கும் புகழ்பத்ம நாபனுக்கும்
மன்னரசர் தீபனுக்கும் மாதவற்கும் மங்களமே

அரக்கர்பயம் ஒழிப்பதற்கு அவதரித்த ஆதிமூலப்
பிரகிருதியான ஜானகிக்குப் பெருமைவர மங்களமே

3940. ஆதார வஸ்துவாகி அனைத்துக்கும் காரணமாய்
வேதாந்தப் பொருளாகி மிஞ்சுபரமற் குமங்களம்

ஒருபொருளே யுள்ளதெனும் ஜகமாக
மிஞ்சும்பெண்ணாம்
அருமையான ஜானகிக்கும் அனந்தசுக மங்களமே

இந்நவிதம் மங்களங்கள் இசைந்துபாடிச் சோடனமும்
சத்தமுடன் பாடினார்கள் சபைரசிக்கச் சோபிதமாய்

அந்தரத்தில் தமிமுழங்க அழகுசங்கு தவனிமுழங்க
விந்தையுடன் மங்களமாய் வெகுவாதியந் தான்முழங்கத்

3935. சதுர்மறை - நால்வேதம்

தும்புருநா ரதர்கீதம் சுருதிநயத் தோடுபாடத்
தும்புதல்வன் சோலங்கண்டு தாய்யார்கள் பூரிக்கச்

3945. கண்டோர்கள் ஆனந்தக் காட்சியிது போலெங்கும்
உண்டோவென் றதிசயிக்க உச்சாகமாய் கைகுவிக்கச்

சுபலக்னந் தனில்மறையோர் சுருதிவிதிப் படியோமம்
விபவத்தோடு கலசவகை விதம்விதமாய்த்
தானமைத்துப்

புவித்தமறை மந்திரத்தால் பொறியுடனே
நெய்சொரிந்து
இனிதுயிய மகவினைகள் எல்லாமுஞ் செய்தாரம்மா

அக்கினிவலங் கொழுந்தெழுந்து அழகாக விளங்கிவரப்
பக்குவகாலம் மீறுமென்று பலருமுகங் கடுத்துரைக்க

வேதங்கள் கோஷிக்க வேதியர்கள் பூஷிக்க
ஓதுபல வாத்தியங்கள் தாம்தாமென் றொலித்திடவே

3950. மங்களசோ பனம்பாடி மாதரெல்லாம் சுபமுரைக்க
வங்கலையன் முகுவீர இராஜாதி ராஜனுக்கு

அதிசயமா யுள்ளநல்ல அணிமகுடந் தனையெடுத்து
வசிஸ்டமகா முனிதரித்தார் வானவர்பூ
மழைபொழிந்தார்

அந்தவொரு கீரிடமது ஐயனிட சிரசதனில்
சுந்தரமாய் விளங்கியதைச் சொல்லப்போமோ
எல்லையில்லை

திவ்டிபரி காபரஞ்செய்தார் திருவாரத்தி கவெடுத்தார்
அவ்டதிக்குப் பாலர்வந்து அணிமணிகள்
நன்றி கொடுத்தார்

மன்னவெல்லாம் நதிர்கொடுத்து மலரடியில்
பணிந்துறின்றார்
இன்னவுள்ள குடிகளெல்லாம்வத்தனையோ சீர்கள்
செய்தார்

3955. ஆசையோடு பூசுரரும் அருந்தவத்தோர் அனைவர்களும்
ஆசீர்வதித் தன்புடனே அட்சதைகள் தூவினார்கள்

ஸ்ரீராமர் சீதையுடன் சீராகக் கொலுவிருந்து
நேராக யாவருக்கும் நிகரில்லாக் காட்சிதந்தார்

கண்டெவரும் கண்குளிர்ந்தார் கர்த்தன்றனை
மிகஸ்துதித்தார்
கண்டதில்லை இந்தக்காட்சி கர்த்தனுக்கே
தகுமென்றார்

கோதானம் பூதானம் குடைதானம் நடைதானம்
மாதானம் பூதானம் மலிசொர்ண தானமுதல்

சகலவிதத் தானங்களும் சதுர்மறையோர் தமக்கும்வந்த
மிகவறியோர் தமக்குமம்மா வேணமட்டும்
வழங்கினார்கள்

3960. மற்றுமுள்ள பேர்களுக்கு மியாதைப் படிதந்தார்
சற்றுங்குறை வில்லாமல் சகலவிதப் பகுமானங்கள்

சந்தனமும் பன்னீரும் சமமாகக் கலந்ததுவும்
அத்திபகலெந்நேரமும் அனைவருக்கும்
பொழிந்தாரம்மா

முறைப்படியே தாம்பூலம் மோசுமுடன் தந்தாரம்மா
குறித்துச்செய்தார் யாவருக்கும் குறைவின்றித்
திருப்தியம்மா

3958. கோ - பசு; மா - குதிரை; சொர்ணம் - தங்கம்

ஸுதுவத்தி வாசனையோ ஊரெங்கும் பரிமளிக்கும்
ஜாதிமுல்லை மல்லிகையாம் சகலஜாதிப் புஷ்பங்களும்

எங்கும்வாரி இறைத்ததோடு எல்லோர்க்கும்
மாலைகட்டி
அங்கமெங்கும் அணிந்தார்கள் அபரிமித மாகவம்மா

3965. வெகுசிறப்பாய் நடந்தமா மேன்மையுள்ள ஸ்ரீராமன்
மகுடாபிஷேகமது மகோச்சவமாய் மங்களமாய்

வந்திருந்த தேவருக்கும் மற்றுமுள்ள சகலருக்கும்
தந்தவொரு உலாவதனைத் தலையாயிய
முன்னோன்சொல்வான்

வந்ததேவர் யாவர்களும் வாழ்த்திவிடை
பெற்றுக்கொண்டார்
மந்திரிகளோ டரசர்களும் மாதவனார் தயவுபெற்று

அவரவர்கள் தேசஞ்சென்றார் ஐயனப்பால்
அன்புடனே
கவிராஜன் முதலாகக் கவிவீரர் யாவருக்கும்

கவிகளுக்கும் விபீஷணர்க்கும் கருதிவந்த அரக்கருக்கும்
சவரணையாய் வெகுமானம் சந்தோஷித்துக்
தந்தாரம்மா

3970. அங்கதனை அருகழைத்து அன்புடனே உபசரித்து
மங்களமாய் வெகுமதிகள் மாதவரே தந்தாரம்மா

வானரராம மாதர்கட்கும் வந்தலங்கை மாதர்கட்கும்
தானேதந்தான் ஜானகியாள் சந்தோஷித்துத்

மாருதிக்குப் பிரம்மப்பட்டம் மனமுவந்து தந்ததோடு
காருண்யத்தோ டம்மன் தந்தாள் சுழுத்திலுள்ள
சுண்டசரம்

ஸ்ரீராமரும் மனமுருகி சீதையதைத் தந்தாளம்மா
பிரேமையுடன் மாருதிக்குப் பெருமைமிகச்
செய்தாரம்மா

தமயன்தம்பி மார்களுக்குள் தடித்திருக்கும்
அன்பையெண்ணிக்
தமதுபிராதாக் களைநினைத்துத் தம்மைமிக
நொந்துகொள்ளும்

3975. விபீஷணர்க்கும் சுக்கிரீவர்க்கும் விரித்துரைப்பார்
ஸ்ரீராமர்
விபரீத மெண்ணாமது விட்டொழிக்க வேண்டுமென்று

பேருலகில் ராமனுக்குப் பிராதாக்கள்
அமைந்ததுபோல்
ஆருக்குமே இல்லையம்மா அவருலகில் அரிதாவரே

விபீஷணரின் பத்னி முதலியவர்களை ஜானகி உபசரித்துரைப்பதும், பிறகு விபீஷணாதிகளை அனுப்பித் தருவதும், பரதனுக்கு இளவரசுப் பட்டமும், லட்சுமணனுக்கும் சத்துருக்கனனுக்கும் தகுந்த அதிகாரமும் தருவதும் இராமருடைய அரசுமுறை விமரிசையும் இந்தக் கிரந்தத்தாலடையக்கூடிய பயனும் வாழியும்

விபீஷணரின் பத்தினிக்கும் விவேகமுள்ள
அவர் பெண்கள்
சுபமுணர்த்தி ஆதரித்த துணைவருக்கும் வெகுவிதமாய்

[illegible] சொன்னாளம்மா உண்மையாக
ஜானகியாள்
கபந்தையெனினி அவர்களுமே சொன்னாரம்மா
உபசாரம்

[illegible]மா னந்தன்னை ரகுராமர் விபீஷணர்க்கு
[illegible]ங்களமாய்த் தந்தாரம்மா மனமுவந்து
கனமாகவே

3980. அடுத்தடுத்து வந்துகொண்டு அபிமானம் பாராட்டி
நடந்துவர ஸ்ரீராமர் நண்பரான சுக்கிரீவர்

விபீஷணர் முதலாக மேன்மையுள்ள யாவரையும்
உபகாரிகள் நீங்களென்று உபசரித்துக்
கேட்டுக்கொண்டார்

நம்பிமார்கள் மூவர்களும் தாங்களிங்க உபசரித்து
நம்பிநீங்கள் அண்ணனிடம் நடந்துகொண்ட
நன்றிக்காக

ஆயுளுள்ள மட்டும்நாங்கள் அடிமைகள்போல்
நடப்போமென்று
வாயில்மிக உறுதிசொன்னார் வாஞ்சையொடு
அதன்பிறகு

ஐயன்பாதம் பணிந்தெல்லோரும் அனுமதியைப்
பெற்றுக்கொண்டு
மெய்யன்போ டேகினார்கள் விளங்குமவர் தேசமம்மா

3985. அந்த ஜனாவன லட்சுமனனை அருகழைத்து ஸ்ரீராமன்
மனமுவந்து சொல்லுகிறார் மனமொத்த தம்பிக்காகவே

மலைந்தில்லாந்து என்னுடனே வருத்தமிக அனுபவித்தாய்
இலங்காபுரிலாம் சுகப்படவே என்னிடத்தில் இளவரசப்

பட்டங்கட்டும் பாரையாள அட்டியென்ன
என்றுகேட்கத்
தட்டிச்சொன்னேன் என்றென்மேல் தப்பித்தச்
சொல்லவேண்டாம்

தமயன்றனை விட்டுவிட்டுத் தாங்கியிந்த உலகையாளத்
தமதிடத்து இளவரசு தரிக்கவுண்டோ
எனக்குப்பாத்தியம்

ஊட்சேபித்துச் சொல்வதற்கு அடியேனுக்குச்
சக்தியில்லை
மாட்சிமையோ மண்ணனுக்கு மகுடஞ்சூட்டி
மகிழுமென்று

3990. அனுஜன்சொன்ன வாக்கைக்கேட்டு ஆனந்தங்
கொண்டுராமன்
கனமுடைய வசிஷ்டரிடம் சுருத்துரைத்து
ஆலோசித்தான்

இளவரசை வகிப்பதற்கு இசைந்தவனே பரதனாவன்
தளங்களெல்லாம் சீர்ப்படுத்தித் தாங்குதற்கு
லட்சுமணனே

மனுநீதி வழுவாமல் வழக்குகளைத் தீர்ப்பதற்கு
நினனவுநிலை உள்ளவனோ சேரான
சத்துருக்கனே

ஆகையினால் அவ்விதமாய் ஆக்கலுஞ்செய்ய
வேண்டுமென்று
தாங்கொண்டார் இருவருமாய்த் தட்சணமே
அந்தப்படி

நீர்மானித்துக் குறித்தநல்ல தினந்தனிலே
முறைப்படியே
நேர்மையாக மூவருக்கும் நிலைத்துத்தந்தான்
ஸ்ரீராமன்

3995. அவரவரின் கடமைகளை அடிபணிந்து தம்பிமார்கள்
சவரணையாய் நடத்துதற்குச் சங்கற்பஞ்
செய்துகொண்டு

சமநீதிப் படியவர்கள் சரியாக நடந்துவந்தார்
அமைதியுடன் தேசமெல்லாம் ஆண்டுவந்தான்
ஸ்ரீராமன்

அரசுமுறை சொல்வேனம்மா ஆவலோடு கேளுமம்மா
வரிசைமிகும் சுபகரமே வளரும்ராம ராச்சியத்தில்

ஆறிலொரு கூறுவாங்கி அன்புடனே குடிகள்தம்மை
நேருடனே காப்பதுவே நீதிராம ராச்சியத்தில்

வேதத்தொனி வளருமெங்கும் வேதியரா குதிவளரும்
சாதுஜன மதிகரிக்கும் சாமிராம ராச்சியத்தில்

4000. தருமமெல்லாம் தழைக்குமெங்கும் சத்தியமே
வளருமம்மா
திருவிழாவும் மங்களமும் தினந்தினமும் பெருகுமம்மா

சரியைகிரி யாயோகச் சாதனங்கள் பெருகியெங்கும்
அரியபர ஞானமுண்டாம் ஐயன்ராம ராச்சியத்தில்

பெருமையுடன் அகமகிழப் பிரஜைகள்தம்மைக்
காப்பதினால்
ஸ்ரீராமா வென்றுலகம் ஜபிக்கும்ராம ராஜியத்தில்

புலிபசுக்க ளோர் துறையில் புனலருந்து
மெனிலதனைச்
சொலிமுடியுந் தன்மையதோ சுத்தன்ராம ராச்சியமே

அறியாய வரிகளில்லை அலக்கழிக்கும் விதிகளில்லை
நினைத்துச்செய்யுங் கொடுமையில்லை நீதிகெட
வுதுவில்லை

4005. பஞ்சமில்லை லஞ்சமில்லை பாபமில்லை சாபமில்லை
வஞ்சகமே நெஞ்சிலில்லை வழிதப்பி நடப்பதில்லை

பாரபட்ச மென்பதில்லை பகைதுரோகங் களுமில்லை
சோரபய மென்பதில்லை சோகமில்லை துக்கமில்லை

கொலையில்லை கோபமில்லை கொடுமோச
நாசமில்லை
நிலைதவறும் பேச்சில்லை நிந்தையில்லை பழிகளில்லை

வெறியேறும் பானமில்லை வெளியில்வந்து
அழிவதில்லை
அறிவழிந்து திரிவதில்லை அகம்வருந்தச் செய்வதில்லை

கலகமில்லை கள்ளமில்லை சுற்பழிக்கும் கஷ்டமில்லை
குலநடையை விடுவதில்லை குற்றமில்லை கொஞ்சமுமே

4010. அகங்குளிக்கும் குணமில்லை அனர்த்தங்கள்
அணுவில்லை
சுகங்குறைவு வதுமில்லை சூதுவா துபேதமில்லை

காலந்தப்பிக் காரியமில்லை கனங்குறைய
நடப்பதில்லை
மாலைவந்தால் மத்தியானம் மறப்பதில்லை
கருமங்களை

தாய்தந்தை குருமொழிகள் தம்மியாரும் நடப்பாரில்லை
காயமுள்ள மட்டுமவர் கருத்தின்படி நடப்பாரும்

வணக்கமன்றி இணக்கமில்லா வழிபற்றும்
வழக்கமில்லை
ஊணந்தப்பி நடப்பதில்லை கோளுரைப்போர்
தானுமில்லை

மதவைரங் கொள்வதில்லை மதியீன ரங்குமில்லை
நிதமும்ஐக்கிய பாவமின்றி நிஷ்டூரப் படுவோரில்லை

4015. துர்மரண மென்பதில்லை தொந்தரைகள் ஏதுமல்லை
கருதிமோட்சம் அடையுமட்டும் கடமொழிப்போர்
தானுமில்லை

மறவர்களும் குறவர்களும் மார்க்கந்தனில்
பறிப்பதில்லை
சிறிதுமில்லை ட்சாமம்மா செழித்திருக்கும்
தேசமெங்கும்

மனைவிதனைக் கைவிடுத்து மகிமைதனை
இழப்போரில்லை
சுத்தமின்றி இருப்போரில்லை சொறிசிரங்குக்
காளுமில்லை

கணவன்சொல்லைக் கடப்பதில்லை காதலியாம்
பெண்களில்லை
உணர்விழந்த ஸ்திரீகளில்லை உண்மையற்ற
பெண்களில்லை

4020. மாமியாரை மனம்வருத்தும் மருமகளாம் பாபியில்லை
காமமீறிக் கடமைதனைக் கைவிடுவோர் தானுமிலை

4016. ட்சாமம் - பஞ்சம்

புருஷன்முன்னே உறங்குகிற புத்திகெட்ட பத்னியில்லை
அருமையான கணவன்றனை அவமதிக்கும்
பெண்களில்லை

கைநிறையக் காசுவேண்டும் காம்ட்சைகொண்டு
கணவனைத்தான்
வைதிடவே வாய்திறந்து வம்புசெய்யும் பெண்களில்லை

நீலித்தனஞ் செய்கின்ற நிலைகெட்ட பெண்களில்லை
கோலமதைக் குலைத்துக்கொண்டு குற்றஞ்செய்யும்
பெண்களில்லை

கணவன்முக மன்றியிலே காட்சியில்லை
என்றென்னும்
குணமிருந்த பெண்களேதான் குவலயத்தி லெங்குமம்மா

4025. கணவன்வழி கண்டறிந்து கணவன் துணை தனைநம்பி
கணவனுடன் கலந்திருக்கும் கற்புடையோ
ரெங்குமம்மா

உள்ளமட்டில் திருப்திகொண்டு உற்சாக மிகக்கொண்டு
கள்ளமனமே யில்லாமல் கணவனுடன் கலந்திருப்பான்

பிரஜைகளெல்லாம் ராமனுடன் பிரேமையுடன்
பக்திகொள்வார்
சிரத்தையுடன் அவரையெல்லாம் ஸ்ரீராமர்
ஆதரிப்பார்

தன்னுயிர்போல் மன்னுயிரைத் தயவுடனே
காப்பதினால்
என்னசொல்லுவேன் சுபிட்சமம்மா எங்குமாத
ரும்மாரியாய்

மழைபெய்யும் அதினாலே மனங்களிப்பார்
ஜனங்களெல்லாம்
உழவுசெய்து தான்யங்களும் உலகெங்கும்
நிறைந்திருக்கும்

4030. சொர்ணம்வெள்ளிப் பவளங்களும் சொல்லுமற்ற
லோகங்களும்
வர்ணமுள்ள ரத்னங்களும் வைரமுத்துச் சிப்பிகளும்

வெகுவாக வளருமம்மா விதம்விதமாய் நகைகளுமே
தகதகவென் றேவிளங்கத் தகுந்தபடி செய்வோருண்டு

நகையணிந்து அவரவர்கள் நாதனுடன் வாழ்ந்திருந்து
அகமகிழும் பெண்களல்லால் அமங்கலிக
ளொருவரில்லை

வியாபார நிலைமைகளும் வாய்ச்சகத்த முறைகளுந்தான்
தியாகாதி தருமங்களும் தேசமெங்கும் பெருகுமம்மா

தானவர்கள் மனிதரைப்போல் தவஞ்செய்து
பலனடைவார்
ஈனநடை அவர்களிடம் ஈஷத்தும் விளங்காதம்மா

4035. இந்தப்படி ஸ்ரீராமன் இராச்சியபாரஞ்
செய்துகொண்டு
வந்தவரின் தாய்மார்சீரு மகிமையுள்ள கதியளித்தார்

பதினாயிர வருஷகாலம் பார்தன்னை ஆண்டதோடு
அதிகமான தானதர்மம் ஆசையோடு செய்தாரம்மா

அசுவமேதா திகளுஞ்செய்தார் அநேகமாக அதிசயமாய்
அசவில்லாப் புகழடைந்தார் அகிலமுள்ள மட்டுமம்மா

அரசென்றால் அதுபோலும் ஆள்வதல்லோ அரசாகும்
வரிசைகெட்டோர் செயுமரசு வான்கோழி
நடத்தலொக்கும்

இவ்விதமாய் ஸ்ரீராமர் இராச்சியத்தை
ஆண்டுகொண்டு
செவ்வையாக வாழ்ந்திருந்தார் சீதையோடு
மனமகிழ்ந்து

4040. அகிலமுள்ள மட்டுமாமன் அருள்செய்ய ஜகந்தனிலே
சுகமாகச் சீதையோடு சோபிதமாய் விளங்குமொரு

உண்மைதனைக் கண்டறிந்து உபாசிக்கும்
பேர்களுக்குச்
கண்வெளிச்ச முண்டாகும் காரியங்கள் கைகூடும்

பக்தியுள்ள பேர்களுக்குப் பரிந்துவந்து ஸ்ரீராமன்
சக்திதந்து அருள்புரிவான் சந்தேக மில்லையம்மா

ராமாவெனும் பதத்திலே ராவென்பது வாவென்றாகும்
ராமாவெனும் அப்பதத்தில் மாலட்சுமி ரகசியமம்மா

ஸ்ரீராமா வென்றுரைத்தால் சித்தசுத்தி அடைவதோடு
குரோதாதி குணமொழியும் கூடும்நல்ல சுகங்களம்மா

4045. சகுணவிர்த்தி கொண்டிந்தச் சத்கதையைச்
சொல்வதற்கு
அகந்துலிந்து தேவர்களை அடிபலிந்து
ஆரம்பித்தேன்

பதிமூன்று மாதங்களில் பக்தன் ஸ்ரீ கிருஷ்ணன்நால்
மதியுடனே செய்தேனம்மா மகிமையுள்ள கிரந்தமிதை

இராமாயண நலங்கூறுவோரையினும் பக்தியொடு
பாராயணஞ் செய்தாலும் படிக்கக்கேட்டு
மகிழ்ந்தாலும்

சகலவிதப் பாக்யமுண்டாம் சந்தோஷ மிகவுமுண்டாம்
மகிமையுள்ள புத்திரருண்டாம் மாதவனார்
அருளுண்டாம்

சீதையோடு ராமன்வாழி ஸ்ரீகிருஷ்ணன் மித்திரர்வாழி
நாதன்ரகு ராமனிட நண்பர்களெல் லோரும்வாழி

4050. ஜகத்தில்ராமா யணநலங்கு சீருடனே என்றும்வாழி
அகமகிழச் செய்யுமிதில் அன்புடையோர் களும்வாழி

ஈசனடி யார்களுக்கு இதஞ்செய்வோர் கள்வாழி
நேசத்தோடு ராமத்யானம் நெஞ்சில்கொள் வோர்
தானும்வாழி